உ

ஓம் மஹாகணபதயே நம:

ஓம் ஸ்ரீ வாசுதேவாய நம:

ஸ்ரீ பகவத்கீதை மூலமும்

ஸ்ரீ சிற்கணனந்தகிரி சுவாமிகளால்

செய்தருளப்பட்ட

கூடார்த்ததீபிகையென்னும் உரையும்.

இவை

வேதாந்தபாஸ்கரரும் நியாயசந்திரருமாகிய

ஸ்ரீ வீர-சுப்பய்ய சுவாமிகளவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டு,

ஸ்ரீ வீர-மெய்யப்ப சுவாமிகளால்

சென்னை டைம்ஸ் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றன.

1917

[*Copyright Registered.*]

விலை ரூபா. 5—0—0.

ஓம் மகாகணபதயே நம:

ஸ்ரீ வாசுதேவாய நம:

முகவுரை.

அறிவிற்சிறந்த பெரியீர்! சர்வகல்யாண குணகணாலங்கிருத சர்வேசுராரானவர் இவ்வுலகைப்படைத்து அதனை நிலைபெறச்செய்ய அவாவினராய் மரீசி முதலாயினரைப் பிரணிருத்தி தருமத்தின்கண் ணும், சனகாதியரை நிவிருத்தி தருமத்தின் கண் ணும் முயலச்செய்தனர்; இவ்விரண்டுமே யுலகை யொழுங்குபடுத்துவனவாதலின்.

அத்தருமமோ நல்லோர் பல்லோராலும் அநுஷ்டிக்கப்பட்டு வந்ததாம். காலத்திற்கேற்பக் காமமிகவே நன்மதி தேய்ந்து அதர்மம் விளையும், அவ்வதர்ம வினைவால் தர்மம் குலசாயும், சாயவே சகத்தின் நிலைகுலையும், அக்காற் கருணைமூர்த்தியும் ஆதிகர்த்தாவுமாய ஸ்ரீமந் நாராயணர் பிரஹ்மண்யத்தைக் காப்பாற்றும் வாயிலாயுலகை நிலைபெறுத்த அவாவி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியாய் ஸ்ரீ தேவகியார் கிருவுதரத்தி லவதரித்தருளினரென்ப.

அக்கருணையை நிறத்தாற் காண்பிக்குங் கார்வண்ணன் தம்பொருட்டு யாதொருபயனையும் விழையாரேனும், பிராணிகளை ஈடேற்ற வேண்டுமென்னுங் காருண்யத்தால் அர்ச்சுனன் வாயிலாய் வேதவிதித இருதர்மங்களையும் விளக்கும் கீதாமிருத விருஷ்டியைப் பொழிந்தனர்.

அக்கீதாமிருதத்தை, வேதசாகைகளை நான்காய்ப்பகுத்துப் பைலாதிவாயிலாய் விரிப்பித்தும் அதனது சூக்குமத்தன்மையால் அதனையறிய வல்லமையில்லாத அதிகாரிகள் தர்மாதி சர்வ புருஷார்த்தங்களையு மடையவேண்டுமென்னும் கருணையினால், சர்வஜ்ஞ சிகாமணியாகிய ஸ்ரீ வியாசபகவான் நாறாயிரம் கிரந்தவடிவ மகாபாரதமெனப் பெயரிய ஒரு சம்மிதையைச்செய்து உலகுக்குதவே யுவாமதி யொளிர்வதெனப்ப 700-சுலோகவடிவமாக வைத்தனர்.

அதன்கண்ணே, அதிகாரியானவன் பிரதமம் சுவர்க்காதியபினைப் பயக்கும் காமிய கருமத்தை யொழித்து நாகாதினையத்தரும் நித்ய முதலியவற்றை யெரிந்து பயனை விரும்பாதியற்றும் நிட்காம கர்மத்தைப் புரிந்து வரவேண்டுமென்றும், அதனுள்ளும் பரமேசுராராதன ஜபஸ்துதி முதலியன பரமதர்மங்களென்றும், அவ்விரண்டாலும் பாவமற்றுப் பரிசுத்தமான சித்தமுடையவனே ஆராய அருகனென்றும், அவனுக்குகந்தன்பின் முறையே நித்தியாநித்தியவத்து விவேகாதிய நாற்சாதனங்களு முண்டாமென்றும், உண்டானபின் நோனிரியனையடைந்து சிரவணாதியாற்றவேண்டுமென்றும், ஆற்றியதாலருளும் வேதாந்த சாஸ்திரத்தைக் கேட்கவேண்டுமென்றும், கேட்டதைச் சிந்திக்கவேண்டுமென்றும், சிந்தித்ததைத் தெளியவேண்டுமென்றும், அவற்றுள் முறையே பிரமாணைக்க அசம்பாவனை பிரமேயைக்க அசம்பாவனை விபரீத பாவனை யென்பனவை நீங்குமென்றும், அதன்பின்

உ

சிவமயம்.

ஓம் தத்ஸத் பரப்பிரஹ்மணேநமஃ.

ஸ்ரீ பகவற்கீதை மூலமும்

கூடார்த்த தீபிகையென்னுமுரையும்.

ஸ்ரீவிநாயகர் ஸ்துதி.

ஆணை மதிலுறை யகண்ட மாம்பரி
பூரணை சொரூபமெய்ப் பொருளை லாவற்றின்
காரணை மெனப்புகல் கருணை வாரிதி
வாரணை முகன்றனை வணங்கி வாழ்த்துவாம்.

ஸ்ரீபகவத் ஸ்துதி.

கூரிரு ளாமஞ் ஞானக் கூட்டுற வறுத்தங் கான
போரினைப் புரியு மாறு புகலுதற் கரிய தாகுஞ்
சீர்பெருங் கருமம் பத்தி செப்பிய ஞான மூன்றுங்
கார்நிறக் கருணை மேனிக் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்.

ஸ்ரீசங்காசார்ய சுவாமிகள் ஸ்துதி.

பொங்காரப் பிறைமுக் கண்ணனும் புனிதமா மகிமை தங்குங்
கங்கைகோ ரணிவும் வெய்ந்த கடவுளை கருணை கூர்ந்து
இங்குளா ரெவரு முய்ய விறைவனை யவத ரித்த
சங்கரா சார்ய னற்ற டலோபனை யணிகின் றேனை.

ஸ்ரீகுருவணக்கம்.

அன்னைமையி லிருந்திங் கருளெமக் களித்த வாரிய வீரசே கரனைத்
தன்னைமெச்ய் யாரிய தாள்களின் பொருளைத் தந்தருப் பய்யதெ சிகனை
உன்னைமெய் ஞானத்தி லிருத்திமுப் போது முயர்ந்தகூ டார்த்ததீ பிகையை
வன்னைமைத்தமிழி லிசைப்பன்வான் கருணை வழங்கிட வேண்டுமென் றனைக்கே.

அவையடக்கம்.

ஒப்பறு மித்திதன்னி லுனைத்தவிவ் வுரையை யென்ற
னற்பமா மதியிலனே யறைந்தனன் றமிழி லீதிற்
செப்புறும் குணங்க ளெல்லாங் தேசிக ருடைய தாகுங்
தப்புக ளென்ன தாகுந் தவிருக தமிழ்வ லாரே.

ஓம் ஸ்ரீகணேசாயநமஃ ஸ்ரீகாசிவிசுவேசுவராப்யாம்நமஃ
ஸ்ரீகுருப்யோநமஃ ஸ்ரீசங்காசார்யேப்யோநமஃ.

சுலோகம்.

ஶுக்லாம்பரம் ஶுக்லவர்ணாவபூம் வ்யாஸம் நாராயணாத்மகம் ।
வாஸுதேவஸ்ய வை ஸூநுமாணம் பூர்ணசந்த்ரவதாநம் ॥ க ॥

வ்ருகாஸிதிவ்ருஹ்ருதத்வம் வ்ருகூஷ்ஷ மூணஸாமிநம் ।
வ்ருணவவெஹ்ருாவதெஷ்டாரம் வ்ருணேஸ்ரீ நிஸம்மூர்மூம் ॥ உ ॥
ஸ்ரீகூஷ்ணவாணஹ்ரும்ஹ்ரும் வ்ருணிவத்ருவ்ருநஃவ்ருநஃ ।
வ்ராயஃவ்ருத்ருகூஷ்ரம் கூவெஹ்ருீதாமஹ்ருாயஹ்ருஷீவிகாம் ॥ ஈ ॥

பொருளிதுவாம்:— ஸ்ரீ சங்கரவடிவமாகிய ஸ்ரீ சங்கராசாரியரையும், ஸ்ரீ நாராயணவடிவமாகிய ஸ்ரீ வியாசபகவானையும், ஸ்ரீ சரஸ்வதீதேவியையும், ஸ்ரீ சரஸ்வதீதேவியின் பதியாகிய ஸ்ரீபிரஹ்மாவையும் யான் எப்போதும் நமஸ்கரிக்கின்றேன். (1)

எந்தக்குருமூர்த்தியால் எனது ஹ்ருதயத்தின்கண் பிரஹ்ம தத்வம் பிரகாசிப்பிக்கப்பட்டதோ, எந்தக் குருமூர்த்தியானவர் விவேகம் வைராக்கியம் முதலியவுத்தம குணங்களோடுகூடின வரோ, எந்தக் குருமூர்த்தியானவர் அதிகாரிகளாகிய எம்மனோருக்கு ப்பிரணவமந்திரத்தை யுபதேசித்தாரோ, அக்குருமூர்த்திக்குயான் எப்போதும் நமஸ்காரஞ்செய்கின்றேன். (2)

இக்கீதாசாஸ்திரத்தின் கர்த்தாவாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானது இருபாதகமலங்களையும் நமஸ்கரித்து முமுக்ஷுக்களின்பொருட்டு இக்கீதையின் ஒவ்வொரு அக்ஷரங்களின் அர்த்த நிச்சயம்செய்வதற்காக ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகளாலியற்றியபாஷ்யம் ஸ்ரீசங்கரானந்த சுவாமிகளாலியற்றிய * டீகை. ஸ்ரீமதுசூதன சரஸ்வதி சுவாமிகளாலியற்றிய டீகை, ஸ்ரீநீலகண்ட பண்டிதராலியற்றிய டீகை என்னுமிந் நான்கின் அபிப்பிராயங்களைக்கொண்டு கூடார்த்த தீபிகை யென்னும் டீகையை நான் செய்கின்றேன். (3)

இவ்வுலகத்தின்கண் மகத்தாகிய தபம், பலம், தேஜஸ் சக்தி என்னுமிவற்றோடு கூடியவரும் சர்வவித்தை கட்குஞ் சமுத்திரமானவரும், சம்பூர்ண ஸர்வஜ்ஞர்களின் பூஷணவடிவினரும், ஸாக்ஷாத் நாராயண வடிவினரும் பரமகிருபாலுவுமாகிய .ஸ்ரீவியாசபகவான், மேலுண்டாம் அதிகாரிகளின் புத்தியின் மந்தத்தன்மையைப் பார்த்து அவ்வதி காரிகட்குத்தர்ம முதலிய புருஷார்த்தப் பிராப்தி உண்டாம்பொருட்டு அப்புருஷார்த்த சாதனங்களைக்கூறும் வேதராசிகளை இருக், யசுர், ஸாமம், அதர்வணம் என்னும்வேறுபாட்டால் நான்கு விதமாகப் பிரித்தனர். அவ்விருக்காதி நான்குவேதங்களிலுமுள்ள ஐதரேய முதலிய அனேக சாகைகளுள் ஒவ்வொருசாகையையும் பைலர், வைசம்பாயனர் முதலிய தமது சிஷ்ய ப்ரசிஷ்யவாயிலாக விருத்திசெய்தனர். இங்ஙனம் விருத்திசெய்தும் அவ்வேதங்களின்அருத்தம் அதிசூக்குமமும் அத்தியந்தங்கூடமும் அத்தியந்த †துர்விஜ்ஞேயமாயது மாதலால் அவ்வேதார்த்தங்களை யறிவதில் புத்தி சாமர்த்திய மின்றிய அதிகாரிகளினிடத்தே கிருபைகூர்ந்து அவ்வியாசபகவான் அவ்வதிகாரிகட்குத்தர்ம முதலிய ஸர்வபுருஷார்த்தங்களின் பிராப்தியுண்டாம் பொருட்டு அத்தர்ம முதலிய புருஷார்த்தங்களின் ஸாதனங்களைக் கூறுவதாகிய நூறுயிரம் சுலோகங்களடங்கிய பாரதமென்னும் ஒரு சம்ஹிதையைச் செய்தனர். எங்ஙனம் நட்சத்திரமாலையின் மத்தியில் சந்திரமண்டல மிருக்கின்றதோ அங்ஙனம் அப்பாரத மெனப்பெயரிய சம்ஹிதையின் மத்தியில் காரியப்பிரபஞ்ச சஹித அநுதி யவித்தையின் நிவர்த்திவாயிலாய் விதேக கைவல்ய வடிவபலத்தின்,பிராப்தியின்பொருட்டுச் ஜீவப்பிரஹ்மங்களின் அபேதத்தைப் பிரதிபாதிப்பதும் ஸ்ரீகிருஷ்ண அருச்சுன சம்வாத ரூபமாயதும் அத்வைதவடிவ அமிர்த வருஷத்தைப்பொழிவதும் எழுநூறு

* டீகை = உரை. † துர்விஜ்ஞேயம் = அறியத்தகாதது.

சுலோகவடிவதுமாகிய கீதா உபநிஷத் தெனப்பெயரிய பிரஹ்ம வித்தையைக் கேவலம் முழுகூடி ஜனங்களின்பொருட்டு ஸ்ரீவியாசபகவான் ஸ்தாபனம் செய்தனர் அந்நான சுகதசர்வப் பிரபஞ்சத்தின் அபாவவடிவமும் சச்சிதானந்த ஸ்வரூபமும் ஜீவனின் அபின்னமாய அத்விதீயப் பிரஹ்மவடிவமுமாகிய மோகூடமே அக்கீதை வடிவப் பிரஹ்மவித்தையின் பரமப் பிரயோஜனமாம்.

அவ்வத்விதீயப் பிரஹ்ம வடிவமோகூடத்தைச் சாஸ்திரங்களில் விஷ்ணுவின் பரமபதம் என்றறையப்பட்டுளது. அவ்வத்விதீயப் பிரஹ்மவடிவ மோகூடத்தின் பிராப்தியின் பொருட்டு, சிருஷ்டியின் ஆதிகாலத்தில் சர்வஜ்ஞராகிய ஈச்வரனால் கர்மம் உபாஸனை ஞானம் என்னும் மூன்று காண்டங்களோடுகூடிய இருக்காதி வேதங்கள் உற்பத்திசெய்யப்பட்டன. இப்பதினெட்டத்தியாய வடிவமாகிய பகவத்கீதையும் இருக்காதி வேதவடிவமாம்; ஆகையினலிஃதவ்வாறத்தியாய வடிவமூன்று ஷட்கங்களால் முறையே கர்மம், உபாஸனை, ஞானம் என்னும் மூன்று காண்டவடிவமாம். ஆண்டு ஆறத்தியாய வடிவ முதல் ஷட்கத்தின்கண் கர்ம நிஷ்டையும், ஆறத்தியாய வடிவ இரண்டாவது ஷட்கத்தின்கண் பகவத்பக்தி நிஷ்டாரூப உபாஸனையும், ஆறத்தியாயவடிவ மூன்றாவது ஷட்கத்தின்கண் ஞான நிஷ்டையும் கூறப்பெற்றிருக்கின்றன. அவற்றுள் மத்திய ஷட்கத்திலுள்ள பகவத்பக்தி நிஷ்டையானது கர்மநிஷ்டையினையுவிலும் ஞான நிஷ்டையினையுவிலும் பிரதிபந்தகமாகியயாதொரு பாபவடிவ விக்கினமுண்டோ அவ்விக்கினங்களனைத்தையும் நாசஞ்செய்வதாமாதலின் அப்பகவத்பக்தி நிஷ்டையானது கர்மநிஷ்டை ஞான நிஷ்டை யென்னுமிரண்டின் கண்ணும் * அநுகதமாம். அக்காரணத்தானே அப்பகவத்பக்தி நிஷ்டையானது கர்மமிசிரம் சுத்தம் ஞானமிசிரம் என்னும் பேதத்தால் மூவகைப்படும். ஆண்டு இக்கீதையின் பிரதம ஷட்கத்தின்கண்ணிராநின்ற பகவத்பக்தி நிஷ்டை கர்மமிசிர மெனப்படும் துவிதீய ஷட்கத்திலிராநின்ற பகவத்பக்தி நிஷ்டை சுத்தமெனப்படும் திருதீய ஷட்கத்திலிராநின்ற பகவத்பக்தி நிஷ்டை ஞானமிசிரமெனப்படும்; ஆண்டுக்கர்ம நிஷ்டையோடு கூடிய பகவத்பக்தி நிஷ்டைக்குக் கர்மமிசிரமென்றும், ஞான நிஷ்டையோடுகூடிய பகவத்பக்தி நிஷ்டைக்கு ஞானமிசிரமென்றும், கேவலம் பகவத்பக்தி நிஷ்டைக்குச் சுத்தமென்றும் பெயராம்; இவ்வாறு இப்பகவத் கீதையானது இருக்காதி வேதங்களைப்போன்று மூன்றுகாண்டவடிவமாம். அவற்றுள் இக்கீதையின் பிரதம ஷட்கவடிவகர்ம காண்டத்தின்கண் கர்மம் கர்மத்தின்றியாகம் என்னு மிவைகளின் நிரூபணவாயிலாய் அநேகவித்தியுக்திகளால் துவம்பதார்த்த வடிவ கூடஸ்த சுத்தாத்மாவின் நிரூபணஞ் செய்யப்பட்டிருக்கின்றது. இரண்டாவது ஷட்கவடிவ உபாஸனை காண்டத்தின்கண் பகவத்பக்தி நிஷ்டையின் வர்ணனை வாயிலாய்த் தத்பதார்த்த வடிவ பரமாத்மாவின் நிரூபணஞ்செய்யப்பட்டிருக்கின்றது. மூன்றாவது ஷட்க வடிவ ஞானகாண்டத்தின்கண் அந்தச் சோதிதகதத்துவம் பதார்த்தங்களின் அபேதவடிவ மகாவாக்கியங்களினர்த்தம் நிரூபணஞ்செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாற்றால் மூன்று ஷட்க வடிவ மூக்காண்டங்களின் பரஸ்பர ஸம்பந்தம் சம்பவிக்கின்றது. மூன்று அத்தியாயத்தின் அர்த்தத்திற்குப் பின் பின் அத்தியாயத்தின் அர்த்தத்தோடு எவ்வெப் பிரகாரம் சம்பந்தம் சம்பவிக்குமோ அவ்வச் சம்பந்தங்களை அவ்வவ்வத்தியாயத்தின் நிரூபணகாலத்திற் கூறுவாம்.

இப்போது இப்பதினெட்டத்தியாய வடிவ பகவத் கீதையின்கண் எவ்வெம் மோகூடசாதனங்கள் விஸ்தாரமாய் நிரூபணஞ்செய்யப்பட்டுளவோ அவ்வெல்லாச் சாதனங்களையும் முதலில் சுருக்கமாக நிரூபிப்பாம்.

---

* அநுகதம் = தொடர்ந்து நிற்பதாம்.

இவ்வதிகாரி புருஷன் முதலிற்சொர்க்காதி பலத்தினடைவையுண்டு பண்ணுவதாகிய காமிய கர்மத்தின் பரித்தியாகத்தானும் நரகம் முதலிய துக்கங்களையுண்டுபண்ணுவதாகிய இம்சை முதலிய நிஷித்த கர்மத்தின் நீக்கத்தானும் பலத்தினிச்சையின்றிக் கேவலம் நிஷ்காமகர்மங்களைச் செய்கின்றான். அந்நிஷ்காமகர்மங்களினும் பரமேசுவர நாமங்களின் ஜபம் ஸ்துதிமுதலியன பரதர்ம ரூபங்களாம். அந்நிஷ்காம கர்மங்களாலும் பரமேஸ்வரஜபஸ்துதி முதலியவற்றாலும் இவ்வதிகாரி புருஷனது சித்தமானது பிரதிபந்தகவடிவ சர்வபாபங்களுமின்றியதாய் விசாரஞ்செய்ய யோக்யமாகின்றது. அதன் பின்னர் இவ்வதிகாரி புருஷனிடத்து நித்தியா நித்தியவஸ்து விவேகம் உற்பன்னமாகின்றது அவ்விவேகத்தின் பின்னர் இவ்வுலகத்திலும் சுவர்க்காதிலோகங்களிலுமுள்ள விஷய சுகங்களினிடத்துத் தோஷதிருஷ்டி பூர்வகமாய் வசீகாரமெனப் பெயரிய வைராக்கியம் உற்பன்னமாகின்றது. அவ்வைராக்கிய அடைவின் பின்னர் சமம், தமம், சிரத்தை, சமாதானம், உபரதி, திதிக்கை என்னும் ஷட்சம்பத்தியின் பிராப்தியால் ஸர்வத்தின் பரித்தியாக வடிவ சந்நியாசத்தினடை வுண்டாம் அச்சந்நியாசத்தினனந்தரம் இவ்வதிகாரி புருஷனுக்கு மோக்ஷப்பிராப்தியின் இச்சை வடிவ முமுக்ஷுத்தன்மையினடைவுண்டாம் அம்முமுக்ஷுத்தன்மையை யடைந்ததன் பின்னர் இவ்வதிகாரி புருஷன் அசேஷ சாஸ்திர பாண்டித்தியமும் பிரஹ்ம நிஷ்டையுமுடைய குருவின் பாற்செல்வன் அதனனந்தரம் இவ்வதிகாரி புருஷன் பிரஹ்மவேத்தாவாகிய அக்குரு முகத்தால் வேதாந்த சாஸ்திரத்தின் சிரவணஞ்செய்வன் அங்ஙனமே அச்சிரவணித்தபொருளை மனனஞ் செய்வன் அச்சிரவண மனனத்தின் கண்ணேயே எல்லாவுத்தர மீமாம்சா சாஸ்திரத்தினுபயோகமாம். அச்சிரவண மனனத்தின்பரிபக்குவம் வந்தபின்னர் இவ்வதிகாரி புருஷன் நிதித்தியாசனத்தையடைவன், அந்நிதித்தியாசனத்தின் கண்ணேயே சர்வயோக சாஸ்திரத்தினுபயோகமாம், ஆண்டுச் சிரவணத்தானே வேதாந்த சாஸ்திரவடிவப் பிரமாணகத அசம்பாவனையின் நிவர்த்தியும் மனனத்தால் ஆத்ம வடிவப் பிரமேயகத அசம்பாவனையின் நிவர்த்தியும், நிதித்தியாசனத்தால் தேகாதிகளினிடத்தே ஆன்ம புத்தி வடிவ விபரீத பாவனையின் நிவர்த்தியு முண்டாகின்றன. அதனனந்தரம் அவ்வசம் பாவனை முதலிய தோஷங்களின்றிய சித்தத்தின்கண் குரு உபதேசித்த மஹாவாக்கியத்தால் பிரஹ்மாத்மாவின் சாக்ஷாத்காரம் உற்பன்ன மாகின்றது. அந்தப் பிரஹ்மாத்ம சாக்ஷாத்கார முற்பன்னமாகவே இவ்வதிகாரிக்கு அவித்தையின் நிவர்த்தியுண்டாகின்றது. அவ்வாவரண சக்திப்பிரதான அவித்தையின் நிவர்த்தியுண்டாகவே இவ்வதிகாரி புருஷனுக்குப் பிரமம் சம்சயம் என்னும் இரண்டின் நிவர்த்தியுண்டாகின்றது. வரும்பிறப்பை யடைவிப்பனவாகிய சர்வசஞ்சித கர்மங்களும் நாசத்தை யடைகின்றன. அவ்வான்ம சாக்ஷாத்காரத்தின் பிரபாவத்தால் (மகிமையால்) ஆகாமிய கர்மங்கள் உற்பத்தியாவதேயின்றும். மற்றுபிராரப்த கர்மவடிவ விக்ஷேபத்தின் வசத்தால் இவ்வதிகாரி புருஷனது வாசனை நிவர்த்தியாவதின்றும். அவ்வாசனையானது யாவற்றினின்றும் பலவானும், அத்தகையபலவானுகிய வாசனையும் சம்யமரூப (அடக்கும்வடிவ) உபாயத்தால் நிவர்த்தியாகின்றது. ஆண்டுத்தாரணை தியானம் சமாதியென்னும் வேறுபாட்டால் அச்சம்யமமானது மூவகைப்படும். அச்சம்யமத்தினடைவின் பொருட்டே முதலில் இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம் என்னும் ஐந்தின் உபயோகமாம் ஈசுவரவழி பாட்டால் இவ்வதிகாரி புருஷனுக்கு அச்சமாதி யானது விரைவாகவே கிடைக்கும். அச்சமாதி யாலிவ்வதிகாரி புருஷனுக்கு மோக்ஷமும் வாசனாக்ஷயமுமுண்டாம். தத்துவஞானம் மோக்ஷம் வாசனாக்ஷயமென்னு மிம்மூன்றையும் ஏககாலத்தில் அப்பியாசஞ் செய்தலால் இவ்வதிகாரி புருஷனுக்குச் சீவன்முத்தியினடை வுண்டாம். இத்தகைய ஜீவன் முத்தி

யினடைவின் பொருட்டுச் சுருதியின்கண் விக்துவத்சன்னி யாசங்கூறப்பட்டுளது. பூர்வம் சுவிகற்ப சமாதியால் நிரோதத்தையடைந்த சித்தத்தின்கண் மூப்பூமியையுடைய நிர்விகற்ப சமாதியுற் பன்னமாகின்றது. அவற்றுள் மூதற்பூமியின் கண்ணே இவ்விச்சையுதிய புருஷன் தனதிச்சையால் * உத்தானத்தையடைவன், இரண்டாவது பூமியின் கண்ணே அன்னியமாக ஒணர்த்தப்பட்ட சித்தானத்தையடைவன் மூன்றாம் பூமியிலேதனதிச்சையாலும் அன்னியமாலும் உத்தானத்தையடையான்; ஆதலால் அவனுக்கு எப்போதாயும் பிரற்மாகாரவிருத்தியிருக்கின்றது.

இத்தகைய நிருவிகற்ப சமாதியையுடைய புருஷனே சாஸ்திரத்தின்கண், பிரமற்மனனென்னவும், பிரற்ம விற்வானென்னவும், முனிவனென்னவும், ஸ்திதப்பிரஞ்ஞனென்னவும், விசித்தனுடக்கனென்னவும், அநிவாணசமாதியனென்னவும், ஜீவன் முக்தனென்னவும், ஆன்மாராமனென்னவும், கூறப்படுவன். இத்தகைய ஜீவன் முக்தபுருஷன் நிருகநிருத்திய பாவத்தையடைந்தானதலால் சாஸ்திரமுடம் இவனிடத்தினின்றும் நிவர்த்தியாகின்றது. சுருத்திதானும் சாஸ்திரத்தின் விதிநிஷேதங்களாகிய யெனையும் அறிவனன் முத்த புருஷனிடத்தின்றும். அல்லது,

யஸ்யநிஷேதவிதாஸ்திபுயாதநிஷேதயாமரூளா ।
தவிஸ்யதிகயிதாமையயுதஸ பூகாமரூதிதஜஹாதநஸ ॥
8

பொருளிதுவாம்:—எவ்வதிகாரி புருஷனுக்குப் பரமாத்மாவினிடத்துப் பரமபக்தியிருக்கின்றதோ அங்ஙனமோ குருவினிடத்தும் பரமபக்தியிருக்கின்றதோ அவ்வதிகாரி புருஷனையே புத்தியின்கண்ணே இச்சாஸ்திரத்திற்கூறப்பட்ட பொருள் பிரகாசிக்கும். இச்சுருதிப்பிரமாணத்தால் சரீரமனவாக்குகளாற்செய்யப்பட்ட பகவத்பக்தியினுடையதாகும் சர்வ அவஸ்தைகளினிடத்தும் மூளதனப்பெறப்பட்டது. ஆண்டிப்பூர்வபூர்வ பூமியின்கண்ணே செய்யப்பட்ட பகவத்பக்தியானது உத்தரோத்தரபூமியினனையைச் செய்விக்கின்றது. அப்பகவத்பக்தியாலன்றி விக்ஞானத்தின் மிருதிப்பாட்டால் பலத்தின் பிராப்தி அத்தியந்தம் துர்லபமாம் இவ்வார்த்தை.

வேவயுாஸ்யாவைஷதெதவிதெஷவ ஹ்ரியதெத்ஹ்ரயவ
ஸோவிவஸ், ” “ ஸாதெஷஜ்ஜநஸம்ஸஹிஜஸ் ॥
8

(இதன்பொருள்.) அப்பூர்வாப்பியாசத்தால், முயல்வினாலேனும் அவன் முயல்விக்கப்பெற்றுப் பரமாத்மாநுபவன், அனேகம் பிறப்புகளில் அனுஷ்டிக்கப்பெற்ற சுத்தசத்ஸ்காரத்தையுற் பூர்வமிருதிவையுடையற்றவனவன். என்பனமுதலிய பகவத்வசனங்களாலிது பெறப்படுகின்றது. அல்லது, பூர்வபூர்வஜன்மங்களில் உற்பன்னமாகிய அதிசயசக்திவையுடைய ஸம்ஸ்காரங்களின் பிராபல்யத்தால் சில புருஷர் ஆகாசபலமிழ்ந்திபோலப் பூர்வமோக்ஷருகருத்தியபாவத்தையடைவர். அப்புருஷரின்பொருட்டுச் சாஸ்திரத்தின் ஆரம்பஞ்செய்யப்படுவதின்றும், எதனால் பூர்வசித்தசாதனங்களினப்பியாசத்தால் பகவத்கிருபை அத்தியந்தம் துர்விஜ்ஞேயமாகிறதோ. இங்ஙனம் பூர்வபூமிகளின் சித்தியுண்டாயினும் உத்தரவுத்தர பூமிகளின் பிராப்தியின்பொருட்டு இவ்வதிகாரி புருஷன் பகவத்பக்தியை யவசியம் செய்தல்வேண்டும். என்னை? அப்பகவத்பக்தியினலன்றி அவ்வுத்தரபூமிகளின் சித்தியுண்டாவதின்றுமன்றே. எங்ஙனம் பூர்வ அவஸ்தையின்கண் பகவத்பக்தியின் பலத்தின் கற்பனையுண்டாதோ அங்ஙனம் ஜீவன் முக்திதசையில் அப்பகவத்பக்தியின் பலத்தின் கற்பனையுண்டாவதின்றும், மற்றே

* உத்தானம் = வெளிக்கிளம்புதல்.

அச்சீவன் முக்தனுகிய வித்வானிடத்து * அத்வேஷ்ட்ருத்துவம், அதம்பித்துவ முதலிய தர்மங்கள் இயல்பாகவேயிருப்பதுபோன்று பகவத்பக்தியும் இயல்பாக வேயிருக்கின்றது. இவ்வார்த்தை.

" தெஷாம்ஜ்ஞாநிநித்யயுக்தவனகாஹக்தி விஶிஷ்யதெ "

(இதன் பொருள்.) அவர்தம்முள் ஞானியானவன் சிறப்புடையவனுவன், எதனல் ஸ்ரீபகவானிடத்தே ஒருமை பெறுமுளனுடையனுவனே அதனனேயே ஸ்ரீபகவானெருவனிடத்திலேயே பிரியமுடையவனுவன். என்பதாதி வசனங் களால் ஸ்ரீபகவான் பிரதிபாதனம் செய்துளார். இக்காரணத்தினனேயே அச் சீவன் முக்தவித்துவானே முக்கியப்பிரமையுடைய பக்தனுமெனக் கூறப் பெறுவன். என்றிவை முதலிய எல்லா மோக்ஷஸாதனங்களும் ஸ்ரீ கிருஷ்ணபக வானல் இக்கீதாசாஸ்திரத்தின்கண்ணே கூறப்பட்டுள. அம்மோக்ஷ ஸாதனங் களைப்பார்த்து. ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளும், ஸ்ரீ சங்கரானந்த சுவாமிகளும், ஸ்ரீமது சூதன சுவாமிகளும், ஸ்ரீ நீலகண்ட பண்டிதரும் மிகுந்த உற்சாகத்துடன் இக்கீதாசாஸ்திரத்தின்மேல் ஸம்ஸ்கிருத வியாக்யானங்களைச்செய்தனர். அச் சம்ஸ்கிருத வியாக்கியானங்களால் வியாகரணம் முதலிய சாதன சம்பன்னர்க ளாகிய அதிகாரிகட்கு இக்கீதாசாஸ்திரத்தின் அர்த்தபோதமுண்டாமாயினும் வியாகரணம் முதலிய சாதனங்களின்றிக் கேவலம்பாஷை படிப்பவர்களாகிய முமுக்ஷுக்களுக்கு இக்கீதாசாஸ்திரத்தின் அர்த்தபோதமுண்டாதலரிதாகலின், அம்முமுக்ஷு ஜனங்களுக்கு இக்கீதாசாஸ்திரத்தின் அர்த்தத்தைத் தெரிவித்தற் பொருட்டு அச்சம்ஸ்கிருத வியாக்யானங்களின் கருத்தைக்கொண்டு கூடார்த்த தீபிகையெனப் பெயரிய இப்பிராகிருத வியாக்கியானத்தை யான் ஆரம்பிக்கின் றேன்.

ஆண்டு நிஷ்காமகர்மங்களி னநுஷ்டானத்தையே சாஸ்திரத்தில் மோக்ஷத் தின் மூலரூபமெனக் கூறப்பட்டிருக்கின்றது. சோக மோக முதலிய பாபவடிவ அசுரத்தன்மைகள் மோக்ஷப்பிராப்தியின் பிரதிபந்தகங்களாம். ஏனெனின்? அச் சோகமோகாதி அசுரத்தன்மையினடைவினலேயிப்புருஷன் தனது வருணாசிரம தருமங்களினின்றும் பிரஷ்டனுகின்றன். சாஸ்திரநிஷித்த கருமங்களைச் செய்ய முயல்கின்றன். அங்ஙனமே பலத்தின் இச்சைவாயிலாய் அகங்காரத்தோடு நானுப் பிரகார கருமங்களையுஞ்செய்கின்றன். இவ்வாறு சோகமோகாதிபாபவடிவ அசுர த்தன்மையோடுற்ற இப்புருஷன் மோக்ஷவடிவ புருஷார்த்தத்தையடையாமல் ஜன் மமரணாதி அநேக துக்கங்களை யடைகின்றனன். அத்துக்கம் இயல்பாகவே சர்வப் பிராணிகட்கும் துவேஷத்தின் விஷயமாமாகலின் அதன் நிவர்த்தியின்பொருட்டு அத்துக்கசாதனவடிவ சோகமோகாதிகள் அவசியம் தியாகஞ்செய்ய யோக்கியங் களாம். இவ்வனாதி சம்சாரத்தின்கண் அநேக ஜன்மங்களால் அச்சோகமோகாதி துக்கசாதனங்கள் திடத்தன்மையை யடைந்திருக்கின்றனவாகலின் அவற்றைத் தியாகம்செய்தல் அத்தியந்தம் கடினமாம். ஆனல் அச்சோகமோகாதிகளின் நீக்கத்தானன்றி மோக்ஷத்தின் பிராப்தியுண்டாவதின்றும். ஆகையினல் எனது சோகமோகாதிகள் எவ்வுபாயத்தால் நாசத்தையடையுமென்றிவ்வாறு மிகுந்த இச்சையையுடைய முமுக்ஷுக்கட்கு அறிவுறுத்தற்பொருட்டு ஸ்ரீ கிருஷ்ணபக வான் இக்கீதாசாஸ்திரத்தைக் கூறியருளினர். இக்கீதையின்கண் "கௌஶா வ்யாநநுஶோசவஸ்ம " என்பனவாதி சுலோகங்களால் சோகமோகாதி அசுரத் தன்மையின் நிவர்த்தி யுபாயத்தை யுபதேசித்து உனது வர்ணாசிரம தர்மங்களி

---

* அத்வேஷ்ட்ருத்துவம் = துவேஷமின்மை.

னனுஷ்டானத்தால் நீ மோக்ஷரூப புருஷார்த்தத்தையடைவாய் என்றிவ்வாறுகிய பகவானதுபதேசம் சர்வமுமுக்ஷுக்கட்கும் சாதாரணமாம். கேவலம் அர்ஜுனன் ஒருவன் பொருட்டாகிய வுபதேசமன்றும்.

சங்கை: ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஒருக்கால் சர்வ முமுக்ஷுக்களின்பொருட்டுச் சாதாரணமாகவே யுபதேசித்தாரெனின் இக்கீதாசாஸ்திரத்தின்கண் ஸ்ரீகிருஷ்ண பகவான் அருச்சுனசம்வாதவடிவ * ஆக்கியாயிகை எதன்பொருட்டு வைத்தல் வேண்டும்.

சமாதானம்:—எங்ஙனம் உபநிஷத்துக்களி னுபதேசமானது சாதாரணமாய்ச் சர்வ முமுக்ஷுக்களின்பொருட்டாயினும் அவ்வுபநிடதங்களி லுள்ள சனகயாஞ்ஞவற்கியாதிகளின் சம்வாதவடிவ ஆக்கியாயிகைகள் அவ்வவ் வுபநிஷத்வடிவ பிரஹ்மவித்தையின் ஸ்துதியின்பொருட்டாமோ, அங்ஙனமே யிக்கீதாசாஸ்திரத்தின்கண்ணுள்ள ஸ்ரீ கிருஷ்ண அருச்சுனசம்வாதரூப ஆக்கியாயிகையும் இக்கீதை வடிவ பிரஹ்மவித்தையின் ஸ்துதியின்பொருட்டாம். அத்துதியின் பிரகாரம் இதுவாம்:—சர்வலோகப்பிரசித்தனும் மஹாநுபாவனுமாகிய அர்ச்சுனன் இராச்சியம், குரு, புத்திரன், மித்திரன் முதலிய பதார்த்தங்களினிடத்தே யானிவற்றினன் இவை என்னுடையன, என்றிவ்வாறுகிய புத்தியிலுல் சிநேகத்தையடைந்தனன்; அச்சிநேகத்தாலுற்பன்னமாகிய சோகமோகங்களால் நஷ்டமாகிய விவேக விஞ்ஞானங்களோடுற்ற அருச்சுனன் பூர்வசுபாவத்தாலேயே க்ஷத்திரிய தர்மவடிவயுத்தத்தின்கண் பிரவர்த்தனுகியும் அச்சோகமோகங்களின் பிரபாவத்தால் அத்தர்மயுத்தத்தினின்றும் உபராமத்தையடைந்தனன். சங்கியாதிகளின் தருமமாகிய பிக்ஷாவிருத்தி ஜீவனமானது க்ஷத்திரிய வரசர்கட்குச் சாஸ்திரத்தால் நிஷேதிக்கப்பட்டிருப்பினும் அவ்வருச்சுனன் சோகமோகவபத்தால் அப்பிக்ஷாஜீவனவடிவ பரதர்மத்தைச் செய்தற்பொருட்டு முயன்றனன். இவ்வாறு அவ்வருச்சுனன் சோகமோகங்களின் வயத்தான் மகா அநர்த்தத்தின்கண் மூழ்கினன். இத்தகைய அருச்சுனன் ஸ்ரீ கிருஷ்ணபகவானதுபதேசத்தால் இக்கீதைவடிவ பிரஹ்மவித்தையையடைந்து அச்சோகமோகங்களின்றியவனுய்ப் மீண்டும் தனது யுத்தவடிவ தர்மத்தின்கண் முயன்றனன். அதனலவ்வருச்சுனன் கிருதகிருத்தியபாவத்தையடைந்தனன். இத்தகைய மகத்தாகியபயனை யடைவிக்கச்செய்தது இக்கீதைவடிவப் பிரஹ்மவித்தையாம். ஆகையினு லிஃ்தத்தியாந்தந்த சிரேஷ்டமாம். இவ்வாறு இக்கீதைவடிவப் பிரஹ்மவித்தையின் ஸ்துதியின்பொருட்டு ஸ்ரீ கிருஷ்ண அருச்சுனசம்வாதவடிவ ஆக்யாயிகை இக்கீதாசாஸ்திரத்தின்கண்ணுள்ளது. ஆகையினுல் அருச்சுன சப்தத்தாலிக்கீதாசாஸ்திர வுபதேசத்தின் அதிகாரி மாத்திரத்தைக் கூறியதாம். இக்காரணத்தாலே யுத்தரூப சுவதர்மத்தின்கண், முன்னர் அருச்சுனனுக்குப் பிரவிர்த்தியுண்டாகியும் அந்த யுத்தவடிவ தருமத்தின் நிவர்த்தியின் காரணவடிவ சோகமோகங்களை “ கார்பண்யதோஷோபஹத ” என்பன முதலிய வசனங்களால் அருச்சுனன் காண்பித்துளான், அதை மேற்கூறுவாம்.

ஆண்டுயுத்தரூப சுவதர்மத்தின்கண் விவேகமின்றியே அருச்சுனனது பிரவிர்த்தி எந்நிமித்தத்தாலுண்டாயதென்னும் ஜிஞ்ஞாசையுண்டாய் “ ஏஷாதவாப்யுக்தா நீகம் ” என்பது முதலிய வசனங்களால் அன்னிய சேஷனகளின் சேஷ்டையே அப்பிரவிர்த்தியின் நிமித்தமெனக் கூறப்பட்டுளது. அவ்வர்த்த சித்தியின் பொருட்டு “ யஜ்ஞார்த்தாத் ” என்பது முதலிய சுலோகங்கள், திருதராஷ்டிரர்

* ஆக்கியாயிகை = உண்மையான பொருளுள்ள சரித்திரம்.

சஞ்சயரை விஞவியவாம் "ய்ருதராஷ்ட்ர உவாச." என்னும் வைசம்பாயனர் வசனம் ஜனமேஜயனைப்பார்த்துக் கூறியதாம்.

ஆண்டு முன்னர் பாண்டவர்களது ஜயத்தின் அநேகவிதகாரணங்களைக் கேட்டலால் தமது புத்திரர்கள் இராச்சியத்தினின்றும் பிரஷ்டராக்கப்படுவார்களென்று பயத்தையடைந்த அத்திருதராஷ்டிரர் தமது புத்திரர்களின் ஜயத்தையிச்சித்து இவ்வாறு சஞ்சயரை வினவுவாராயினர்.

ய்ருதராஷ்ட்ர உவாச.

யதீ்க்ஷேத்ரே குரீ்க்ஷேத்ரே ஸமவேதா யீ்யுத்ஸவஃ।
மாமகாஃ பாண்டவாஷ்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய ॥ க ॥

பதச்சேதம். யதீ்க்ஷேத்ரே, குரீ்க்ஷேத்ரே, ஸமவேதா, யீ்யுத்ஸவஃ,
மாமகாஃ, பாண்டவாஷ்சைவ, கிம், அகுர்வத, ஸஞ்ஜய.

(இதன் பொருள்.) ஹேஸஞ்சய! தர்மக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரத்தின்கண் யுத்தத்தின் இச்சையுடையவர்களாய் ஒருங்குகூடிய நமது புத்திரர்களும் பாண்டு அரசரின் மைந்தர்களும் என்ன செய்தனர்.

(வியாக்கியானம்.) உத்தமபூமிவடிவ க்ஷேத்திரமானது நெற் கோதுமை முதலிய அன்னங்களி னுற்பத்திக்கும் விருத்திக்கும் காரணமாவதேபோல முன்னில்லாத தருமத்தினுற்பத்திக்கும் முன்னுள்ள தருமத்தின் விருத்திக்கும் எது காரணமாமோ அல்லது தருமத்தின் க்ஷயத்தின்நின்றும் ரக்ஷையை (காப்பை) எது செய்யுமோ அதனைத் தருமக்ஷேத்திரமென்பர். குருதேசத்தினுள்ளிருப்பதாலதற்குக் குருக்ஷேத்திரமென்றும் பெயராம். இவ்வாறு நிவாசமாத்திரஞ் செய்வதால் தர்மம் அதன்பலம், என்னுமிவற்றினடைவைச் செய்வதாகிய தர்மக்ஷேத்திரவடிவ குருக்ஷேத்திரமானது சுருதிஸ்மிருதியாதி சர்வ சாஸ்திரங்களிலும் பிரசித்தமாம். ஆண்டுச்சுருதி "யஜ்ஞக்ரதூ்க்ஷேத்ரꣳஔவாஹாம் ஔவ யஜ்ஞம் ஸவெஷ்டாம் ஸ்ருதாஹாம் வ்ரஹ்மஸஜ்ஞம்;

பொருளிதுவாம்:—குருக்ஷேத்திரமானது சர்வதேவதைகட்கும் தேவயஜனரூபமும் ஸர்வபூதப்பிராணிகட்கும் பிரஹ்மவடிவ மோக்ஷப்பிராப்தியின் ஸ்தானமுமாம். இச்சுருதி ஜாபால வுபநிஷத்தின்கண் பிரஹஸ்பதியால் யாஞ்ஞவற்கியரின்பொருட்டுக் கூறியதாம். க்ரதூ்க்ஷேத்ரꣳஔவயஜ்ஞம், என்னுமிச்சுருதியானது சதபதப் பிராமணத்தில் கூறப்பட்டுளது. இவைமுதலிய சுருதிஸ்மிருதிப் பிரமாணத்தாற் பெறப்பட்ட அத்தர்மக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரத்தில் யுத்தத்தின் வேட்கையுடையராய் ஒருங்குகூடிய துரியோதனாதி நமது புத்திரர்களும் யுதிஷ்டிராதி பாண்டவர்களும் ஆகிய அவ்வனைவரும் எக்காரியத்தைச் செய்தனர்.

சுகை :—(யீ்யுத்ஸவஃ) என்னும் விசேஷணத்தால் திருதராஷ்டிராரால் தமது புத்திரர்களிடத்தும் பாண்டவர்களிடத்தும் யுத்தத்தின்வேட்கை கூறப்பட்டது. ஆகுல் இவ்வுலகத்தின்கண்ணிதுநியமமாம்:—எப்புருஷனுக்கு எக்காரியம் செய்வதில் முன்னர் வேட்கையிருக்கின்றதோ அப்புருஷன் அவ்வேட்கையினனுசாரமாகவே அக்காரியத்தின்கண்ணே முயல்வன். வேறு காரியத்தின்கண்

முயல்வதின்றும். ஆகலின் அப்பூர்வ யுத்தத்தினது இச்சையினுசாரமாய் அத் துரியோதனுதியர் யுத்தவடிவ காரியத்தின்கண்ணேயே பிரவிர்த்தித்தல்வேண்டும். அந்நிய எக்காரியத்தின்கண்ணும் அவர்களின் பிரவிர்த்தியுண்டாகலாகாது. ஆகை யிஞல் அவர்கள் பரஸ்பரம் எவ்வாறு யுத்தஞ்செய்தார்கள் என்றிவ்வாறுகிய கேள் வியே அத்திருதராஷ்டிரர் கேட்பது உசிதமாம். அக்கேள்வியைவிட்டு எமது புத்திரர்களும் பாண்டவர்களும் எக்காரியத்தைச் செய்தனர் என்னுமத்திருதாஷ் டிரரின் கேள்வியானது அசங்கதமாம்.

சமாதானம் :— அத்திருதராஷ்டிரரின் கேள்விக்கிது கருத்தாம் :— அத்துரி யோதனுதியராகிய எமது புத்திரரும் யுதிஷ்டிராதிபாண்டவர்களும் முன்ன ருண்டாயயுத்தத்தில் வேட்கையினுசாரமாய் யுத்தத்தையே செய்தனரா ? அல்லது வேறெக்காரணத்தாலேனும் அந்த யுத்தத்தின் வேட்கையைவிடுத்து மற்றெக்காரியத்தையேனுஞ்செய்தனரா ? அவற்றுள் யுத்தவேட்கையின் நிவிர்த்தி யில் இருவகையாகிய காரணங்கள் சம்பவிக்கின்றன. ஒன்றே திருஷ்டபயமாம். மற்றொன்று அதிருஷ்டபயமாம். அவற்றுள் பீஷ்ம அருச்சுனுதி மகாசூரவீரர் களின் நரிசனத்தாலுண்டாகிய திருஷ்டரூபபயம் யுத்தத்தின் நிவர்த்தியின் காரணமாமென்பது பிரசித்தமேயாம். ஆகையிஞல் அத்திருஷ்டபயவடிவ நிமித் தம் அத்திருதராஷ்டிராரால் கூறப்பட்டதன்றும். மற்றே அத்திருஷ்டபயரூபகாரண த்தைக் கூறுதற்பொருட்டு அத்திருதராஷ்டிராரால் குருக்ஷேத்திரத்திற்குத் தர்ம க்ஷேத்திரமாகிய என்னும் விசேஷணங்கொடுத்ததாம். இத்தகைய தருமக்ஷேத் திரவடிவ குருக்ஷேத்திரத்தையடைந்த யுதிஷ்டிராதி பாண்டவர்கள் முன்னோ தர் மாத்மாக்களாயிருத்தலால் ஒருக்கால் இருசார்புகளிலுமுண்டாவதாகிய இம்சா ஜன்னிய அதர்மத்தாற் பயபீதர்களாய் அப்போரினின்றும் நிவர்த்தியடைவார்க ளேயாயின் எமது புத்திரர்களாகிய துரியோதனுதியர் அவசியம் இராச்சியத்தை யடைவர் அல்லது பூர்வசுபாவத்தாலேயே பாபான் மாக்களாகிய துரியோதனுதிய எமது புத்திரர்கள் அத்தர்ம க்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரத்தின் பிரபாவத்தால் ஒருகால் அந்தக்கரண சுத்தராகியிருத்தல் வேண்டும், அச்சித்தசுத்தியால் பச்சாத் தாபத்தையடைந்து முன்கபடத்தால் அபகரித்த இராச்சியத்தை ஒருகால் பாண் டவர்கட்குக் கொடுத்து விடுவார்களேயாயின் நமது புத்திரர்கள் யுத்தமின்றியே நாசத்தையடைவர் என்றிவ்வாறு தமது புத்திரர்களி னிராச்சிய ப்ராப்தியிலும் பாண்டவர்களது அப்பிராப்தியிலும் நிடவுபாயத்தை யத்தியந்தந் தெரியாதவரா கிய அத்திருதராஷ்டிரரது மகத்தாகிய கிளர்ச்சியே அக்கேள்வியின் பீஜமாம் அவற்றுள் "ஹேசஞ்சய" என்னுஞ் சம்போதனத்தால் அத்திருதராஷ்டிராலிப் பொருள் தெரிவிக்கப்பட்டது. இராகத்துவேஷங்களே நன்றுகவென்றவனுக்குச் சஞ்சயனெனப் பெயராம். இங்ஙனந் தாங்கள் இராகத்துவேஷமற்றவராயிருத்த லின் பக்ஷபாதமின்றி எனக்கு எல்லா விருத்தாந்தங்களையுங் கூறுவீர்கள் என்ப தாம். ஈண்டு (ரிகூ—வஞ்த) "நம்மவர்கள் என்ன செய்தார்கள்" என் னும் வசனமாத்திரத்தாலே அத்திருதராஷ்டிரரது கேள்வி பெறப்படும் எனி னின் ? அந்த யுதிஷ்டிராதி பாண்டவரும் அத்திருதராஷ்டிரரது சம்பந்திகளேயா மாகலின் (வாஂஜவா:) பாண்டவர்கள் எனக்கூறியது பயனற்றதாமாயினும் "பாண் டவர்கள்" என்னுஞ் சுத்தத்தை வேறுகக்கூறியதால் அத்திருதராஷ்டிராரால் அப் பாண்டவர்களிடத்து மமத்துவமின்மையைக் காண்பித்துத் தமது துரோகஞ் சூசிப்பிக்கப்பட்டது.

(1)

அவதாரிகை.

ஹே ஜனமேஜய ! இவ்வாறு திருதராவடிவ நேத்திரமும் உலகப்பிரசித்த நேத் திரமும் இன்றியவரும் தமது புத்திரரிடத்தின் மாத்திரமும் சிநேகமுடையவரு

மாகிய அத்திருதராஷ்டிரரின் கேள்வியைக்கேட்டு அத்திருதராஷ்டிரரது அபிப் பிராயத்தைத் தெரிந்து அத்தர்மாத்மாவாகிய சஞ்சயர் அத்திருதராஷ்டிரரின் பொருட்டு இவ்வாறு கூறுவாராயினர்.

ஸஂஜய உவாச.

சு - ம். ஏவ்ஷாம்தூ வாம்பவாநீகம் வ்யூடம்ஹ்ரயோதயந்ஸ்யா,
கபயாஜ்ஞவல்க்யவஸம்ஜ்ஞ ராஜாவபநஜ் ஜ்யேஷ்ட ॥ உ ॥

(ப - ம்.) ஏவ்ஷ்டா - தூ - வாம்பவாநீகம் - வ்யூடம் - ஹ்ரயோதய.
தஹ - கபயாஜ்ஞ, உவஸம்ஜ்ஞ - ராஜா - வசநம் - கஜ்ஞ்ய.

(அ - ம்.) ஹே திருதராஷ்டிரரே! அந்தயுத்தத்தின் ஆரம்ப காலத்தில் இராஜா வாகிய துரியோதனன் அணிவகுத்து நிறுத்தப்பட்ட பாண்டவர்களின்படைகளைப் பார்த்துத் துரோணாசாரியரின் சமீபத்திற்சென்று இவ்வாறு கூறினன்.

(வி - ம்.) ஆண்டு யுதிஷ்டிராதி பாண்டவர்களிடத்துப் பீஷ்மாதி வீர புருஷரால் திருஷ்டத்யும்நாதி பாஞ்சாலர்களால் அணிவகுத்து நிறுத்தப்பட்ட பாண்டவர்களின் சேனைகளைப் பார்த்து துரியோதனன் தனது குருவாகிய துரோணாசாரியரிடம் சென்று இவ்வாறு கூறினன் என்பது கருத்து. ஆண்டு துரியோதனன் பாண்டவர்களிடத்துப் பீஷ்மாதி வீர புருஷரால் திருஷ்டத்யும்நாதி பாஞ்சாலர்களினிம் சையாலுண்டாம்பாபவடிவ அதிர்ஷ்டத்தால் அருச்சுனன் எப்பயத்தையடைந்தனனே அதுகேவலம் பிராந்தியினாலுண்டாயதாம் அவ்வருச்சுனனது அதிர்ஷ்ட பயமும் ஸ்ரீபகவானாலுபதேசிக்கப்பட்ட பிரஹ்ம வித்தையால் நிவர்த்தியாய் விட்டது என்றிவ்வாறு பாண்டவர்களின் உத்கிருஷ்டத் தன்மையைத் தெரிவித்தற் பொருட்டுச் சஞ்சயனால் (ஏவ்ஷ்யதூ) "பார்த்து" என்னுஞ் சப்தங் கூறப்பட்டதாம். ஆண்டுத் துரியோதனாதியராகிய நமது புத்திரர்கள் தருமக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரத்தின் பிரபாவத்தால் சுபபுத்தியுடையவர்களாய்ப் பாண்டவர்கட்கு இராச்சியத்தைக்கொடுத்து விடுவார்களென்னும் சங்கையால் நீதான்புறுதேயென அத்திருதராஷ்டிரரைச் சந்தோஷிப்பிக்கும் பொருட்டு முன்னர் அச்சஞ்சயர் துரியோதனனுடைய துஷ்டகுணங்களை வர்ணிக்கின்றார். (ஏவ்ஷ்தி) ஹே திருதராஷ்டிரரே! திருஷ்டத்யும்நன் முதலிய சூரவீர புருஷர்களால் அணிவகுத்து நிறுத்தப்பட்ட பாண்டவர்களின் படையை அத்துரியோதனராசன் தனது நேத்திரத்தாற் பிரத்தியக்ஷமாகப் பார்த்து வில்வித்தையின் சம்பிரதாயத்தைப் பிரவர்த்திப்பவராகிய துரோணாசாரியரிடம் தானே சென்று முற்கூறிய வசனங்களைக் கூறுவாராயினர். ஆண்டு அத்துரோணாசாரியரைத் தன்னிடத்தில் வரவழைத்து அவ்வசனங்களைக் கூறுமலத் துரியோதனராசன் தானே அவரிடஞ்சென்று இது கூறியதாலத்துரியோதனனிடத்துப் பாண்டவர்களின் சைன்னியத்தைப் பார்த்தலாலுண்டாகியபய மிருந்ததெனச் சூசிப்பித்ததாம். ஆண்டுஅத் துரியோதனன் பயத்தாற்றனது ரக்ஷகயின் பொருட்டு அத் துரோணாசாரியரிடஞ் சென்றாலுயினும் அவன் இராசநீதியில் மகாகுசலனதலால் ஆசாரியரிடம் சிஷ்யன்றானே செல்லுதல் வேண்டும் என்னும் ஆசாரியரது கௌரவத்தன்மையின். * வியாஜத்தாற்றனது பயத்தைக் கூடமாய் மறைத்துவைத்தனன் இவ்வாறுகிய அர்த்தத்தைத் தெரிவித்தற் பொருட்டுச் சஞ்சயாற்றுரியோதனனுக்கு "ராஜா" என்னும் விசேஷணங் கொடுக்கப்பட்டதாம். "துரோணாசாரியரிடம் துரியோதனன் கூறினன்" என்னுமிவ்வளவு கூறுவது மாத்திரத்தானேயே நிர்வாக முண்டாம் "வசனம்" என்னும் பதங்கூறப் பட்டதாலியாதொரு பயனு மின்றாமாயினும் "வசனம்" என்

* வியாஜம் = கபடம்.

னும் பதத்தைக் கூறியதால் அவ்வாக்கியத்தின்கண் சுருக்கிய தாந்தன்மை ஆகாக அர்த்தபபிரதி பாதகத்தன்மை முதலிய வகாக குணமுடைமை கூறப்பட்டதாம் அல்லது அத்துரியோதனராசன் கேவலம் வசனமாத்திரத்தையே கூறினன் சிறிது மாத்திரமும் அர்த்தத்தைக் கூறவில்லை என்னு மிப்பொருள் வசன பதத்தால சூசிப்பிததாம்.

(2)

(அ - கை.) ஆண்டு எவ்வசனம் அத்துரியோதனற் றுரோணசாரிய ரிடஞ் சென்று கூறபபட்டதோ அவ்வசனம் (வழிஸூதாம) என்பதுமுதல (தவஸ்யஸம ஜநயநுஹவஷம்) என்பதன்முன்னுள்ளகிரந்தங்களால விஸ்தாரமாய் நிரூபிக்கப் பட்டுளது. ஆண்டு இத்துரோணசாரியரின் அத்தியந்தம் பிரிய சிஷ்யராகியபாண் டவர்களிடத்து இத்துரோணசாரியருக்கு அத்தியந்தம் சிநேகமாமாதலின் இவர் நமது பக்ஷத்திலிருந்துகொண்டு அப்பாண்டவர்களோடு யுத்தஞ்செய்யார், எனறிவ் வாறுகியகருத்தைத் தனது மனத்தில்வைத்து அத்துரியோதனராஜன் அப்பாண் டவர்களிடத்து அத்துரோணசாரியருக்குக் கோபமுண்டாம்பொருட்டு அத்துரோ ணசாரியரிடம் அப்பாண்டவர்களின் அவஞ்ஞையை (அலக்ஷியத்தை) கூறக்கருதி இவ்வாறுகியவசனத்தைக்கூறினன்.

வழிஸூதாம வாம்பூவூதாணாம சூவாயஜஸஹதிம்வஜிம் ।
வ்யூடாம்த்ரவத வாதிதாண தவஸ்மிஷ்ணயோஜதா ॥ ஈ ॥

ப - ம். வஸூ[6], வாதாம[3], வாம்பூவூதாணாம[2], சூவாயஜ[1], ஸஹதீம[4], வஜிம[5], வ்யூடாம், த்ரவத்வாதாண[10], தவ[11], ஸ்மிஷ்ணு[7], யோஜதா[9]-[8].

(அ - ம்.) ஹே ஆசாரியரே? தங்களுடையசிஷ்யனுகியபுத்திமானுயுள்ள துரு பதபுதிரனை அணிவகுத்து நிறுத்தப்பட்ட இப்பாண்டவர்களின் மகத்தாகிய சேனையைத தாங்கள் பார்ப்பீர்களாக.

(வி - ம்.) ஹே ஆசாரியரே? தங்களைப்போன்ற மஹாநுபாவர்களையும் மதி யாமல அத்தியந்தஞ் சம்பிதது நிற்கும் இப்பாண்டவர்களின் சேனையானது ஆகாக *அக்ஷௌஹிணி எண்ணிக்கையுடையனவாயிருத்தலின் மிகப்பெரியதாம். இக் காரணதாலேயே அச்சேனைகளைத்தடுப்பது அசக்கியமாம் (முடியாததாம்.) இத் தகைய பாண்டவர்களின் சேனையைத் தாங்கள் நேத்திரத்தாற பிரத்தியக்ஷமாகப் பார்ப்பீர்களாக யான் தங்களுடைய சிஷ்யனுயிருக்கின்றனதலின் மிகவலந்தங்க ளைப் பிரார்த்திக்கின்றேன் தங்களுக்கு யாதொரு ஆக்ஞையையும் செய்ய வில்லை. ஆதலாலிவ்வினது பிரார்த்தனையை யங்கீகரிததுத தாங்கள அப் பாண்டவாக ளின் சேனையைப் பார்ப்பீர்களாயின் அப்போது அப் பாண்டவர்களிடத்துள்ள அலக்ஷியத்தன்மையைத் தாங்களே நிச்சயஞ்செய்வீர்கள்.

அப்பாண்டவர்களாற் செய்யப்பட்ட எனதவமதிப்பு நீக்க முடியாத தாற் பொறுப்பதேயெனக்குத்தகுதியாம், என்றிவ்வாறுகிய துரோணசாரியரின சங்கைக்கு, அவ்வவமரியாதையை நீக்குதற்குள்ளவுபாயந்தங்களுக்கு அத்தியந்தம எளிதாம், என்றிவ்வாறுகியவிடையை அத்துரோணசாரியரிடங்கூறுதற் பொருட்டு, "வ்யூடாம்தவஸ்மிஷ்ணு" "உமதுசிஷ்யனுலணிவகுக்கப்பட்ட" எனக்கூறி யதாம். ஹேதுரோணசாரியரே? தங்களிடமிருந்து தனுர்வித்தையைக் கற்றுக்

* அக்ஷௌஹிணி = சேனைகளின் ஒருவகைப் பிரிவு.

கொண்ட அத்துருபதாஜரின் புத்திரன், திருஷ்டத்யும்னன்எனப்பெயரிய உமது புத்திமானுகிய சிஷ்யனும், அத்திருஷ்டத்யும்நனு லிப்பாண்டவர்களின் சேனை சகடாகாரமாயும் பத்மாகாரமாயுஞ் செய்யப்பட்டுளது. இன்னும் சிஷ்யனையபேக்ஷித்துக் குருவினிடத்து அதிகத்தன்மையேயுளது. இவ்வார்தையுலகத்திலும் சாஸ்திரத்திலும் பிரசித்தமாம். ஆகையினல் தங்களுக்கு அவர்களின் அவஞ்ஞையை நீக்குதற்குள்ளவுபாயம் அத்தியந்தம் சுகமமாம் (எளிதாம்.)

ஈண்டு "த்திருஷ்டத்யும்னனு லணிவகுக்கப்பட்ட அப்பாண்டவர்களின் சேனை" யெனக்கூறுது துருபதபுத்திரனுலணிவகுக்கப்பட்ட பாண்டவர்களின் சேனையென அத்துரியோதனன் கூறியது துரோணுசாரியருக்குத்துருபதாசனேடு முன்னுள்ளவைரத்தை (துவேஷத்தைச்) சூசிப்பித்துக் குரோதத்தையுண்டபணணும்பொருட்டாம். அத்துருபதபுத்திரனுக்கு "புத்திமான" என்னும் விசேஷணம் துரியோதனனுற் கூறப்பட்டது, அது அத்துருபதபுத்திரனைத் தாங்கள் ஒருக்காலும் உபேக்ஷைசெய்யாதீர், என்னும் அவனது உபேக்ஷையின் அபாவத்தைத் தெரிவித்தற்பொருட்டுக்கொடுத்ததாம் ஆகையினல் ஹேஆசாரியரே! தாங்கள் மற்றெல்லாக்காரியததையும் விட்டுச்சிக்கிரம் சென்று அப்படைகளைப்பார்ப்பீர்களாக. அல்லது இச்சுலோகத்தின் பதங்கட்கு இவ்வாறுகிய சம்பந்தஞ்செய்க. (வாக்யவிசாரணாம்) "பாண்டுபுத்ரர்களின்" என்னும் பதத்தை. (கூவாய-ந்) "ஆசாரியர்" என்னும்பதத்தோடும். (ஸந்நி) "சைன்னியத்தை" என்னும்பதத்தோடுமசேர்க்குக. அவ்வாறு அப்பதங்களைச் சேர்ப்பதால் இவ்வாறுகிய பொருள் துணியப்படுகின்றது. ஹேபாண்டுபுத்ரரின்ஆசாரியரே அப்பாண்டவர்களின் சைன்னியத்தை நீவிர் பார்ப்பீராக. அப்பாண்டவர்களிடத்தில்லேயேயுமக்கு அத்தியந்தம் சிநேகமாம். ஆகையினு லப்பாண்டவர்கட்கே நீவிர் ஆசாரியராம. எனக்கு நீவிர் ஆசாரியரன்றும். உமது சிஷ்யனுகிய துருபதபுத்திரனு லிச்சேனையணிவகுக்கப்படடது எனக் கூறியதாலத் துரியோதனனுலிப்பொருள் குறிப்பிக்கப்பட்டதாம், நினதுநாசத்தின்பொருட்டு உற்பன்னனுயும் இத்துருபதபுத்திரன் உன்னுலேயேதனுர்வித்தை யப்பியசிக்கப்பட்டான். ஆகையினுலனது இம்மூடத்தன்மையே எனது அனர்த்தத்தின் காரணமாம். இன்னமும் அத்துருபத புத்திரன் புத்திமான் எனக்கூறியதால் அத்துரியோதனனுல் இப்பொருள குறிப்பிடப்பட்டதாம், இத்துருபதபுத்திரனுல் தனது சத்துருக்களிடமிருந்தே அச்சத்துருக்களைக் கொல்லுதற்கு உபாயவடிவ தனுர்வித்தை கிரகிக்கப்பட்ட இத்துருபதபுத்திரன் அத்தியந்தம் புத்திமான் என்பதாம்.

ஹேஆசாரியரே? இத்தகைய தங்களுடைய சிஷ்யர்களின் சேனையைப்பார்ப்பதனுற்றங்களுக்கே ஆநந்தமுண்டாம். எக்காரணத்தால் தாங்கள் பிராந்தியடைந்திருக்கின்றீர்களோ பிராந்தியின்றிய மற்றெவருக்கும் அச்சைன்யத்தின் றரிசனத்தாலானந்தமுண்டாகமாட்டாது. எதற்காக இபபாண்டவர்களின் சைன்னியத்தையான்காண்பிக்கவேண்டும்; ஆகையினுல் தாங்களே சென்று அப்பாண்டவர்களின் சேனையைப் பார்ப்பீர்களாக இவ்வாறு அத்துரோணுசாரியருக்குப் பாண்டவர்களின் சைந்நியத்தைக்காண்பிக்குந் தன்மையனுய் அதுரியோதனன் அவ்வாசாரியரிடந் தனதுகூடமாகிய துவேஷத்தைத் தெரிவித்தனன்.

அத்திருதராஷ்டிரரிடம் இவ்வளவு கூறியதால் அச்சஞ் சயாால் இப்பொருள் தெரிவிக்கப்பட்டது:—தர்மகேஷத்திரத்தையடைந்தும் உனது துரியோதனுதிய ராகியமைந்தர்கட்குத் தமது ஆசாரியரிடத்திலும் இத்தகையத் துவேஷபுத்தியுண்டாயது. அத்துரியோதனுதியர் தருமகேஷத்திரத்தின் பிரபாவத்தால் பச்சாத்தா

பத்தையடைந்து அப்பாண்டவர்கட்கு யுத்தமின்றியே ராச்சியத்தைக் கொடுப்பார்கள் என்னும் சம்பாவனை (கருத்து) உன்னால் ஒருக்காலும் செய்யத்தக்கதன்றென்பதாம்.

(அ - கை.) சர்வசூரவீரர்களிலும் அப்பிரசித்தமுகிய துருபதபுத்திரனுகவு மணிவகுத்து நிறுத்தப்பட்ட இப்பாண்டவர்களின் சேனையை நம்மனிருக்குள் ஒருசாதாரண வீரசூர புருஷனும் ஜயித்துவிடுவான். நீ அப்பாண்டவர்களின் சைந்நியத்தால் எதன்பொருட்டுப் பயத்தையடைகின்றாய், என்று துரோணாசாரியருக்குச் சங்கையுண்டாக அத்துரியோதனராஜன் "கதஸுரா" ஆண்டுச்சூரர்கள், என்பனமுதலிய மூன்று சுலோகங்களால் அப்பாண்டவர்களின் சைந்நியத்தின் கண்ணுள்ளசூரவீராகளின் பெயரை வர்ணிக்கின்றான்.

சு - ம். கதஸுராமஹஷ்வாஸா பீமார்ஜுநஸமாயுதி
யுயுதாநோவிராடஸ்ச த்ருபதஸ்சமஹாரதஃ ॥ ச ॥
த்ருஷ்டகேதுஸ்சேகிதாநஃ காஸிராஜஸ்சவீர்யவாந் ।
புருஜித்குந்திபோஜஸ்ச சைப்யஸ்சநரபுங்கவஃ ॥ ஞ ॥
யுதாமந்யுஸ்சவிக்ராந்த உத்தமௌஜாஸ்சவீர்யவாந் ।
ஸௌபத்ரோத்ரௌபதேயாஸ்சஸர்வ ஏவமஹாரதாஃ ॥ சு ॥

1 5 4 3 2
(ப - ம்.) கத - ஸுராஃ - மஹஷ்வாஸாஃ - பீமார்ஜுநஸமாஃ - யுயி -
7 9 8 11 10 6 14 15
தாநஃ - விராடஃ - ச - த்ருபதஃ - ச - மஹாரதஃ த்ருஷ்டகேதுஃ சேகி
16 12 13 18 20 19
தாநஃ - காஸிராஜஃ - ச - வீர்யவாந் - புருஜித் - குந்திபோஜஃ - ச -
22 21 17 25 23 24 28
சைப்யஃ - ச - நரபுங்கவஃ - யுதாமந்யுஃ - ச - ச - விக்ராந்தஃ - உத்த
26 27 30 31 29 32
மௌஜாஃ - ச - வீர்யவாந் - ஸௌபத்ரஃ - த்ரௌபதேயாஃ - ச - ஸர்வே -
வாவ - மஹாரதாஃ (6)

(அ - ம்.) இப்பாண்டவர்களின்சைந்நியத்தின்கண், போர் புரிவதில் பீமனுக்கும் அருச்சுனனுக்கும் சமானமாயவரும், மகாவில்லாளிகளும் ஆகிய அநேகமசூரவீர்களிருக்கின்றார்கள அவர்களின் பெயர் இதுவாம்:— மஹாரதனுகிய யுயுதானராசன் - விராடராஜன் துருபதராசன் - (4) விசிஷ்டபராக்ரமமுடைய திருஷ்டகேது வென்னும் அரசன் சேகிதானனென்னுமரசன் காசிராசன், சர்வமனுடரிலும் சிறந்தாகிய புருஜித்தெனப பெயரியவரசன் குந்திபோஜனென்னும் அரசன் சைப்பியனென்னும அரசன் (5) விசிஷ்ட பராக்ரமசாலியாகிய யுதாமன்யு வென்னுமரசன் வீரியவானுகிய உத்தமௌஜாவெனப் பெயரிய அரசன் ஸௌபத்ரன் என்னுமரசன் துரோபதியின ஐந்து புத்திரர்கள் என்னுமிவ் வனைவருமே மகாரதர்கள். (5)

(வி - ம்.) ஈஹ ஆசாரியரே ? பாண்டவர்களின் படைகளில் சேகவலம் திருஷ்டத்யும்நனெனப் பெயரிய துருபதபுத்திர னொருவனே சூரவீரனன்றும் எதனாலிப் பாண்டவர்களின் சைனியத்தை யாமூம்பைக்ஷமசெய்யலாம்மா ; மற்றும், இப்பாண்டவர்களின் சேனையில் மேலும் அநேக சூரவீர்களுளர். ஆகையினால் அவர்களை

ஜயித்தற்பொருட்டு நாம் பிரயத்தினம் அவசியம் செய்தல் வேண்டும். அவர்களை யுபேக்ஷிப்பது தகுதியன்றும். இப்போது அச்சூரவீரர்களின் விசேஷணங்களைக் கூறுவாம். (மஹஷ்வாஸ:) "மகாவில்லாளியாகிய" இஷ்வா என்பது பாணத்திற் காம் அப்பாணவடிவ இஷ்வச்செலுத்தப்பெறுவது எதனலோ அதற்கு "இஷ்வாஸா" எனப்பெயராம அத்தகையது தனுஷ்டாம் அத்தகையதனுஷ்வடிவ இஷ்வாஸா பெரிதாக எச்சூரவீரபுருஷரிட மிருக்கின்றமீதா அப்புருஷருக்கு மஹஷ்வாஸா எனப்பெயராம் கருததிஃதாம்:— அச்சூரவீரர் பாணங்களாற் சேய்மையினின்மேற அங்கியசேஷ்னையை மீயாடசசெய்வதிற குசலராம். அச்சூரவீரர் மஹாதனுஷை யுடையவராயினுமை அவரிடத்தில் யுத்தனு செய்வதிற் குசலத்தன்மையின்றுமை என்னுந துரோணசாரியரின் சங்கைக்கு அத் துரியோதனன் விடையளிக்கின்றான். (ஹீராஜ்ஞந்ஸராய்) "யுத்தததிற் பீமனுக்கும் அருச்சுனனுக்குஞ் சமானமானவர்கள்" என? மஹாசாரியரே! சர்வலோகததிலும் பிரசித்திபெற்ற பராக்கிரமசாலிகளாகிய பீமார்ச்சுனர்க்குச் சமானமாகமீவ இச்சூரவீரர்களும் யுத்ததத்திற் பராக்ரமசாலிகளாம். அத்தகைய பராக்கிரமசாலிகள எவரெவர்கள் என்னுந துரோணசாரியரது சங்கைகக அத்துரியோதனராஜன் அச்சூரவீரர்களின் பெயரைத் துரோணசாரியரிடங் கூறுகின்றான். (ப்ரப்யாநஜ்ஞ) "யுயுதான னென" அதிசயமாய் எவன் யுத்தஞ்செய்கின்றானை அவன் யுயுதானனெனப்படுவன் அத்தகையன் "சாதயகி" எனப்பெயரிய அரசனும் சத்துருக்களை விசேஷமாய்ச் சுற்றச்செய்பவன் எவனை அவனை விராடன் என்பர்.(ஊ)என்பது விருகூஷத்திற்காம் பதம் என்பது சின்ன (அடையாள)த்திற்காம் விருகூஷத்தின் சினனத்தைக் கொடியிலுடையவன் எவனை அவனுக்குத் துருபதன் எனப் பெயராம் இமமூவரும் மஹாரதாகளாம். (4)

சத்துருக்களுக்குப் பயத்தை யடைவிப்பது எதுவோ அதற்கு "ஶ்ருஷ்டம்" எனப்பெயராம "கேது" என்பது கொடிக்காம்பயத்தின் காரணமாகிய கொடியையுடையவன் எவனை அவன் "திருஷ்டகேது" எனப்படுவன் சிகிதானனெனனும அரசரின் புதரானுகக "சேகிதானன" எனப்பெயராம். காசிகேதசத்திறகு அரசனுயிருபபவனுக்குக் "காசிராஜன" எனப்பெயராம். அம்மூன்றரசாகளுமை ஶ்ரியவானகளாம. சேதிஜஸ், பலம, என்னுமிவற்றையுடைற்ற சத்துருக்களையுமை வென நாலுப்பிகாரமாக சேவாடச்செய்கின்றானை அவன ஶ்ரேனென்னப்படுவன அவவீர புருஷனுடைய செய்கையை வீரியமென்பா இத்தகைய வீரியம் எவனிடததிருக்கினறானை அவனுக்கு "வீரியவான்" எனபபெயராம "புரு" எனபது அம்நகத்திற்காம் அவவம்நக சூராகளை எவன் வெல்கின்றானை அவனுக்குப "புருஜித்" எனபபெயராகும. குநதியின் பிதாவிற்குக் "குந்திபோஜன்" எனப்பெயராம (ஶிவி) "சிபி" எனனும் அரசனது குலத்திலுற்பன்னமானவனுகக(மஹஷ்வ:) "சைப்யன்" எனப்பெயராம். இம்மூன்றரசர்களும் நரபுங்கவாகளாம எல்லாமனிதர்களிலுஞ் சிறந்தவர்கட்கு "நரபுங்கவர்" எனப்பெயராம். (5)

(வி - ம்.) 'யுதா' என்பது யுத்ததத்திற்காம் 'மன்யு' என்பது குரோதத்திற்காம் யுத்ததத்திற்குரோதம வேகமாய் அவனுக்கு உண்டாமேமா அவனுக்கு "யுதாமன்யு" எனபபெயராம. இந்த யுதாமனயு பாஞ்சாலதேசத்திற்கு அரசனும் விக்ராந்தனுமாம. விசேஷமாகிய பராக்ரமம் எவனிடத்துளமீதா அவனுக்கு விக்ராந்தமெனனப் பெயராம. ஓஜஸ் என்பது பலத்திற்காம. உத்தமமாக ஓஜஸ் எவனிடத்துளமீதா அவனை உததமௌஜா என்பர். அவ் வுத்தமௌஜாவென்னு மரசனும் பாஞ்சால தேசத்தரசனும். அவவுத்தமௌஜாவென்னுமரசன் எத்தகைய னெனின்

வீரியவானும் அல்லது வீரியவான், நரபுங்கவன், விக்ராந்தன், என்னும் மூன்று விசேஷணங்களும் யுயுதானன் முதலிய எல்லாராஜாக்கட்கு மாமென்றறிக. சுபத்திரையின் புத்திரனுக்குச் சௌபத்ரன், எனப்பெயராம் அத்தகையன் அபிமன்யுவாம். திரௌபதியின் பிரதிவிந்தியர் முதலிய ஐந்து புத்திரர்கட்கும், திரௌபதேயர் எனப்பெயராம். (ஔளவஔயாஸு) 'திரௌபதேயரும், என்னும் பதத்தின்கண்ணுள்ள உம்மையால் முற்கூறிய அரசர்கட்கு வேறாகிய பாண்டியவரசன் கடோத்கசன் முதலிய எல்லா அரசர்களையும் கொள்க. யுதிஷ்டிரர் முதலிய பஞ்ச பாண்டவர்கள் அத்தியந்தம் பிரசித்தர்களாகையால் தரியோதனனுலப்பாண்டவர்கள் கணிக்கப்படவில்லை. அல்லது, (ஹிராஜ-நஸோய-யீ) 'யுத்தத்திற் பீமனுக்கும் அருச்சுனனுக்கும் சமானமானவர்கள்' என்னும் வசனத்தால் யுயுதானன் முதலிய யாவரிடத்தும் பீமார்ச்சுன உவமை துரியோதனனுற் கொடுக்கப்பட்டதாம்; ஆகையினல் பீமார்ச்சுன என்னும்பதம் பஞ்சபாண்டவர்களின் உபலக்ஷகமாம். இவ்வாறு யுயுதானராஜனே முதற்கொண்டு திரௌபதியின் ஐந்து புத்திரர்கள் பரியந்தங்கூறிய பதினேழு அரசர்கட்கு வேறாயும் அவர்களது சம்பந்திகளாகிய அநேக சூரர்கள் உளர். அவ்வனைவர்களும் மஹாரதர்களாம். இவர்களில் ரதி அல்லது அர்த்தரதி ஒருவருமின்றும். ஈண்டு மஹாரதர்கள் என்னும் சப்தத்தால் அதிரதியையுங்கொள்க. அவற்றுள் மஹாரதி, அதிரதி, ரதி, அர்த்தரதி என்னும் நால்வருக்கும் சாஸ்திரத்தில்இவ்வாறுகிய லக்ஷணங் கூறப்பட்டுளது.

சு - ம். வனகொஉஸவஹஷ்ரணீ ருயாயயெஒ)ஸ்ரூயநிநாம ।
ஸஷ ஸாஷ வ்ரவீணஸு ச ஹராயஉதிஷ்ய-தஃ ॥
கூதிதாநெ)ாயயெஒ)ஸ்ரு வம்வ்ரூதொsதிராயஷ்ரூஷஃ
ராயஷ்ரெகூநயாயொஉதநெ)ஸ்ரூயஷ்ரு-தஃ ॥

(இ - ள்.) எப்புருஷன் எகனைகரவே வில்லையுடைய பதினாயிரம் சூரவீர்களோடு போர்புரிகின்றானே அங்ஙனமே சஸ்திர சாஸ்திரத்திலும் அத்தியந்தங் குசலனே அப்புருஷனை மஹாரதி என்பர். எப்புருஷன் ஒருவனைகரவே சங்கையில்லாத சூரவீர்களோடு யுத்தஞ்செய்கின்றானே அங்ஙனமே சஸ்திரசாஸ்திரத்தில் அத்தியந்தங் குசலனே அப்புருஷனை 'அதிரதி' என்பர். எப்புருஷன் ஒரு சூரவீரனேடே யுத்தஞ்செய்கின்றானே அவனை ரதி என்பர், ரதியினுங்குறைந்த பலமுடையவனை அர்த்தரதி என்பர். (6)

(அ - கை.) ஹேதுரியோதன! இப்பாண்டவர்களின் சேனையிலுள்ள மஹாசூரவீர்களைப்பார்த்து ஒருகால் உனக்குப் பயமுண்டாகுமாயின் இப்பாண்டவர்களோடுள்ள சத்துருத்தன்மையைவிட்டு நீ மித்திரத்தன்மையை யடைவாய், என்றிவ்வாறுகிய துரோணசாரியரது அபிப்பிராயத்தின் ஆசங்கையைக்கொண்டு அத்துரியோதனன் றனது சைந்தியத்திலுள்ள சூரவீர்களின் பெயர்களை வர்ணிக்கின்றான்.

சு - ம். கூஷ்ணாகூம-தஃவிஶிஷ்டாயெதாந்நிவொாயஶ்ரிஜாதஃ ।
நாயகாஃஉஹெநூஷு ஸம்க்ராயஷ்யம்தாநுப்ரவீமிதெ ॥ ள ॥

(ப - ம்.) 2 கூஷ்ணாகூம - 4 தஃ - 3 விஶிஷ்டாஃ - 5 யெ - 6 தாநு - நிவொாய - 9 7 8 1 10 13 12 ஶ்ரிஜாதஃ - நாயகாஃ - ஃஃ - உஹெநூஷு - ஸம்க்ராயஷ்யம் - தாநு ப்ரவீமி - தெ

(அ - ம்.) ஹே! சர்வப்பிராமணர்களிலுஞ் சிறந்தோராகிய ஆசாரியரே எம்மனவருள்ளுஞ் சிறந்தோராகிய எனது சேனையிலுள்ள யுத்தசாலிகளைத் தாங்கள் நிச்சயஞ்செய்க. அச்சேனையிற் பிரதானமாயுள்ள சில சேனைத்தலைவர்களை நாமவுச்சாரணத்தாற்றங்கள் பொருட்டு நான் கூறுகின்றேன்.

(லி - ம்.) ஹே ஆசாரியரே? எனதுசேனையிலுள்ள வித்தை பலம் பௌருஷம் குலம் சீலம் என்பவற்றாற் சிறந்தவரும் எனது சைந்நியத்தை யவ்வவ்விடங்களிற் செலுத்துவதில் முக்கிய தலைவர்களுமாகிய யுத்தவீரர்கள் எண்ணிறந்தவர்களாயினும், அவ்வனைவருள்ளுஞ் சிலயுத்தவீரர்களை நாமவுச்சாரணத்தால் அவர்களினும் வேறாகிய எல்லாயுத்த வீரர்களையும் சுறிப்பிக்கும் பொருட்டு நான் தங்களுக்குக் கூறுகின்றேன். அவ்வெல்லாயுத்த வீரர்களையுந் தாங்கள் முன்னமே தெரிந்திருக்கின்றீர்களாதலால் தெரியாத சிலயுத்த வீரர்களைத் தெரிவித்தற் பொருட்டு நான் தங்களிடம் அவர்களின் பெயரைக் கூறுவதன்றும் மற்றுமுன்னமே தெரிந்திருக்கப்பட்ட யுத்தவீரர்களின் ஸ்மாணஞ் செய்யும் பொருட்டு அவர் நாமங்களைக் கூறுகின்றேன்.

ஈண்டு (ஊஹாகாந்ர) என்னும் பதத்தின் கண்ணுள்ள தூ என்னுஞ் சத்தத்தால் அத்துரியோதனன் உள்ளே உற்பன்னமாகிய பயத்தை வெளிப்படுத்தாமல் தனது தைரியத்தன்மையைத் தெரிவித்ததாம். (ஹ்ருஜோதஸி) என்னும் விசேஷணத்தைக் கூறியதால் அத்துரியோதனன் துரோணசாரியரை ஸ்துதித்துத் தனது யுத்தவடிவ காரியத்தில் அத்துரோணசாரியரின் பிரவர்த்தியைச் சம்பாதிப்பதற்காம். இன்னமும் அத்துரோணசாரியரின் துவேஷ பக்ஷத்திலோ அத்துரியோதனன் (ஹ்ருஜோதஸி) என்னும் விசேஷணத்தால் இவ்வர்த்தத்தைத் தெரிவித்தனன் நீர் பிராமணராதலின் யுத்தத்திற் குசலத்தன்மையுமக்கின்றும். ஆகையினல்நீரொருகால் எம்மைவிட்டுப்பாண்டவர்களின் பக்ஷத்திற் செல்லினும் பீஷ்மர்முதலிய சிறந்த க்ஷத்திரியர் எமது பக்ஷத்தின்கண்ணுளர், ஆகையினல் நீரில்லாததனல் எமக்குச் சிறிதும் ஹானியுண்டாவ தின்றும். (ஸர்வ யுத்தாநு ப்ர வீதித) எனக்கூறியதால் அத்துரியோதனனல் இப்பொருள் குறிப்பிக்கப்பட்டது உமது பிரியசிஷ்யர்களாகிய பாண்டவர்களின் சேனையைப் பார்த்து ஹர்ஷத்தால் வியாகுலமனத்தையுடையவுமக்கு எனது பீஷ்மர் முதலிய சூரபுருஷரின் மறதியுண்டாகாமல் அவர்களின் ஸ்மிருதியை யுண்டுபண்ணும் பொருட்டு அவர்களிற் சில சூரவீரர்களின் பெயரையுமக்குக் கூறுகின்றேன். (7)

(அ - கை.) இப்பொழுது அத்துரியோதனராஜன் துரோணசாரியரிடஞ் சென்று தன் சேனையிலுள்ள சூரவீரர்களின் பெயரைக் கணிக்கின்றன்.

சு – மீ. ஹவாநுலீஷ்டஸுகுணாஸ்து கூ்யவஸ்தி்திம்ஜயஃ ।
ஸுஸ்தாரோவிகுணாஸ்து வை்யஸ்ய ஸைந்யஸ்ய நாயகாஃ ॥ அ ॥

I 3 2 5 4 8 6 7
(ப - மீ.) ஹவாநு - லீஷ்டஃ - ச - குணாஃ - ச - கூ்யவஃ - ச - ஸ்தி்திம்ஜயஃ
9 11 10 12 13
ஸுஸ்தாரோ - விகுணாஃ - ச - ஸைந்யஸ்ய - நாயகாஃ

(அ - ம்.) துரோணசாரியராகிய தாங்களும் * பிதாமஹருகிய பீஷ்மரும் கர்ணனும் யுத்தத்திற் சயமுடையவராகிய கிருபாசாரியரும் அசுவத்தாமாவும் விகர்ணனும் சௌமதத்தியும் ஜயத்ரதனும்.

(வி - ம்.) ஹே ஆசாரியரே! எனது சேனையின்கண் முதன்மையாய் மஹாசூர வீராய தாங்களிருக்கின்றீர்கள் அங்ஙனமே பீஷ்மபிதாமகரும் கர்ணனும்போரிற் சயம்புரிபவராகிய கிருபாசாரியருமுளர். துரோணசாரியரின் புத்திரருகிய அசுவத்தாமாவைக் கர்ணனின் பின்னர் †கணித்ததால் அத்துரோணசாரியரின் மனத்திற் கோபமுண்டாமென்னும் ஆசங்கையால் அக்குரோதத்தை நிவர்த்தித்தற் பொருட்டு அத்துரியோதனன் இவ்வசுவத்தாமா முதலியநால்வருமே எனது சேனையிலுள்ள எல்லாச் சூரவீர்களிலும் சிறந்ததலைவர்களாம் என்றிவ்வாறுகிய வபிப்பிராயத்தால் அந்நால்வரையும் கணித்ததாம், (கஶ்ஶதாஶஉதி) "அசுவத்தாமா எனை. ஹே ஆசாரியரே தங்கள் புத்திரருகிய அசுவத்தாமாவும் எனது இளைய சகோதரருகிய விகர்ணனும், சோமதத்த அரசரின் மைந்தருகிய சௌமதத்தியும் இவரை (ஹமிஸ்ரவாஃ) என்பர்" சிந்துதேசத்தினரசருகிய ஜயத்ரதனும் ஆகிய இந்நால்வரும் மகாசூர வீர்களாம். ஈண்டு, எங்ஙனந் துரியோதனனால் பீஷ்மாதிகளையபேக்ஷித்துத் துரோணசாரியரைப் பிரதமத்திற் கணிக்கப்பட்டது அத்துரோணசாரியரின் சந்தோஷத்தின் பொருட்டாமோ அங்ஙனமே விகர்ணன் முதலியோரை யபேக்ஷித்து அத்துரோணசாரியரின் புத்திரராகிய அசுவத்தாமாவை முன்னர்க்கணித்ததும் அத்துரோணசாரியரின் சந்தோஷத்தின் பொருட்டாம்; இவ்வுலகத்தில் தனது மேன்மையையும் தனது புத்திரனது மேன்மையையுங் கேட்பதனால் சர்வலோகர்கட்குஞ் சந்தோஷமுண்டாகின்றது. ஈண்டு (ஜயத்ரதஃ) என்னும் பதத்தின் ஸ்தானத்தில் (தஎயெவஅ) என்னும் பாடமுஞ் சில புஸ்தகங்களிலுளது. (8)

(அ - கை.) ஹே துரியோதன! நினது சேனையின் கண்ணென்ன இவ்வளவு தாரு சூரவீர்கள்? என்னுந் துரோணசாரியரின் சங்கைக்கு அத்துரியோதனன் எனது சேனையில் வேறு மனேக சூரவீர்களுளர் என்றிவ்வாறுகிய விடை கூறுகின்றான்.

(சு - ம்.) கஉநயவஎஹவஃஸுரா உஉயெதுதுகுஜீவிதா।
நாநாஸஹஎதுஹரணாஃ ஸவெதுயுஜ்ஞவிஸாரதாஃ ॥ கூ ॥

1 2 3 4 5 6
(ப - ம்.) கஉந - ய - எஹவஃ - ஸுராஃ - உஉயெது - துகுஜீவிதாஃ - நாநா
7 8 9
ஸஹஎதுஹரணாஃ - ஸவெது . யுஜ்ஞவிஸாரதாஃ.

(அ - ம்.) ஹே ஆசாரியரே! எனது சேனையின்கண் முற்கூறிய சூரவீர்களன்றிமற்றும் அநேக சூரவீர்களுளர், அவர் எத்தகையரெனின்? எனது ஜயரூபப்பிரயோஜனத்தின் பொருட்டுத் தங்கள் ஜீவனத்திலுள்ள ஆசையை விட்டிருப்பவரும் யுத்தசாதனங்களாய நாணுவித சஸ்திரங்களையுடையவரும் யுத்தத்தில் அத்தியந்தங்குசலர்களுமாவர்.

(வி - ம்.) ஹே ஆசாரியரே! கேவலம் முற் கூறிய பீஷ்மாதிகளே எனது சைந்நியத்தின் கண்ணின்றும் மற்றை அப்பீஷ்மாதிகளின் வேறுயும் சல்யன், கிரு

* பிதாமஹன் = பாட்டன். † கணித்தல் = எண்ணல்.

தவர்மா, பகதத்தன் முதலிய அநேக சூரவீரர்களுளர். அவர்களைத்தகைய சூரவீரர்களெனின் தமது பிராணன்களைப் பரித்தியாகஞ் செய்தேனும் இத்துரியோதனனது ஜயத்தை நாம் சம்பாதித்தல் வேண்டும் என்றிவ்வாறுகிய நிச்சயமுடையவரும்,யுத்தசாதனங்களாகிய சூலம், சக்கிரம், கதை, கட்கம் முதலியசஸ்திரங்களையுடையவருமாவார். இக்காரணத்தாலேயே அவ்வெல்லாச் சூரவீரர்களுரும் யுத்தத்தில் மிகு குசலர்களாவர். ஈண்டு "சூரர்கள்" என்பனமுதலிய விசேஷணங்களால் அத்துரியோதனன் தனது சேனையில் பாண்டவர்களது சேனையினின்றும் அதிகத்தன்மையுள தெனக் கூறியதாம்; தன்னிடத்து அச்சேனைகளின் அனன்னிய பக்தியையுங் கூறப்பட்டதாம்; அங்ஙனமே தனது சைந்நியத்தின் சௌரியத்தன்மை யுத்தத்தில் அத்தியந்தம் பிரயத்தனம் அத்தியந்தங் குசலத்தன்மை முதலியனவும் கூறப்பட்டதாம். இத்தகைய எனது சேனைகள் இப்பாண்டவர்களின் சேனையினுமதிக பலவான்களாம். (9)

(அ - கை.) ஹே துரியோதன ! எங்ஙனம் நினதுசைந்நியத்தின்கண் சஸ்திராஸ்திரவித்தைகளிற் குசலர்களாகிய பீஷ்மர் முதலிய வநேக சூரவீரர்களுளரோ அங்ஙனமே பாண்டவர்களது சேனையிலும் அஸ்திரசஸ்திரவித்தையிற் குசலர்களாகிய அநேகம் சூரவீரர்களுளர். ஆகையினால் இவ்விரண்டு சேனைகளும் சமானமேயாம் என்னுந் துரோணாசாரியரின் சங்கையுண்டாக அத்துரியோதனராஜன் வேறு விதத்தானும் அப்பாண்டவர்களின் சேனையினின்றுந் தனது சேனையில் அதிகத்தன்மையுள தென வர்ணிக்கின்றான்.

(சு - ம்.) கூவயூவம தஹூராகூம வீமம்ஹீஷாஹிரகூஷிதம் ।
வயூவம திஹூதெஷாம வீமம்ஹீரா ஹிரகூஷிதம் ॥ கo ॥

(ப - ம்.) கூவயூவம - தகூ - கூஹூராகூம - வீமம்-ஹீஷாஹிரகூஷிதம்.வயூ
வம - தூ - ஹூம - வநெதஷாம - வீமம் ஹீராஹிரகூஷிதம் .

(அ - ம்.) ஹே ஆசாரியரே ! எமது சேனை அநந்தமும் பீஷ்மரால் எல்லாப்பக்கங்களிலும் பாதுகாக்கப்பட்டதுமாம் இப்பாண்டவர்களின் சேனை குறைந்ததும் பீமரற் பாதுகாக்கப்பட்டதுமாம். (10)

(வி - ம்.) ஹே ஆசாரியரே ! இவ்வெனது சேனைகள் பதினோக்ரோணி சங்கையுடையதும், சர்வலோகத்திலும் பிரசித்திபெற்ற மகிமையும் அத்தியந்தஞ் சூக்ஷ்மபுத்தியுமுடையவராகிய பீஷ்மரால் நாற்புறமும் பாதுகாக்கப்பட்டதுமாம்; ஆகையினால் இவ்வெனது சேனைபாண்டவர்களது சேனையினும் பிரபலமாம். இப்பாண்டவர்களின் சேனையோ ஏழு அக்குரோணி சங்கையையுடைத்தாதலால் எமது சேனையினுங் குறைந்ததும் அத்தியந்தஞ் சபலபுத்தியுடையவனும் துர்ப்பலனுமாகிய பீமசேனரற் பாதுகாக்கப்பட்டதுமாம்; ஆகையினால் இப்பாண்டவர்களின் சேனை யெனது சேனையினும் அத்தியந்தந் துர்ப்பலமாம். அல்லது கூவயூவம தகூ கூஹூராகூம வீமம் ஹிஷாஹிரகூஷிதம் வயூவம தூ ஹூம வநெதஷாம வீமம்ஹீஷாஹிரகூஷிதம் என்னும் சுலோக பதங்களை இவ்வாறு கூட்டுக. அப்பாண்டவர்களின் சேனை என்னைப் பராஜயஞ்செய்வதிற் சமர்த்துடையதன்றும் எதனால் அப்பாண்டவர்களின் சேனை பீஷ்மரினின்றுங் காக்கப்பட்டதாமோ என்னை, மகாபராக்கிரமசாலியும் சூக்குமபுத்தியுடையவருமாகிய பீஷ்ம

பிதாமகன் என்னுல் ஸ்தாபிக்கப்பட்டார் அது பாண்டவர்களின் சேனையை நீக்கும்பொருட்டாம் இக்காரணத்தால் அப்பாண்டவர்களின் சேனை பீஷ்மரினின்றுங் காக்கப்பட்டதாம். அன்றியும் இவ்வெனதுசேனையோ, பாண்டவர்களைப் * பராஜயஞ்செய்வதிற் சமர்த்துடையதாம். எதனுல் இவ்வெனது சேனை பீமனினின்றுங் காக்கப்பட்டதாமோ, என்னை? அத்தியந்தம் தைரியமற்றவனும் மிகத்தூலபுத்தியுடையவனும் ஆகிய பீமசேனன் எனது சேனையை நீக்கும்பொருட்டு இவர்களால் ஸ்தாபனஞ்செய்யப்பட்டான். இக்காரணத்தாலிவ்வெனது சேனை பீமனினின்றுங் காக்கப்பட்டதாம். ஆகையினுலித்தகைய பாண்டவர்களிடத்தினின்றும் எனக்குச் சற்றும்பயமுண்டாவதின்றும். ஈண்டு முதல் வியாக்யானத்திலோ, பீஷ்மராற்காக்கப்பட்டது பீஷ்மா பிரகூஷிதம் பீமனுற்காக்கப்பட்டது பீமா பிரகூஷிதம் என மூன்றும் வேற்றுமைத்தொகையால் (ஹீஷ்டாஹிரகூஷிதம்) என்பது துரியோதனனது சேனைக்கு விசேஷணமாம் (ஹீராஹிரகூஷிதம்) என்பது பாண்டவர்களின் சேனைக்கு விசேஷணமாம். இரண்டாவது வியாக்கியானத்தில் பீஷ்மர்காக்கப்பட்டார் எதன்பொருட்டாய் அது பீஷ்மா பிரகூஷிதமாம் பீமன் காக்கப்பட்டான் எதன்பொருட்டாய் அது பீமா பிரகூஷிதமாம் என்றிவ்வாறு அன்மொழித்தொகையால் பீஷ்மாபிரகூஷிதமென்பது பாண்டவர்களின் சேனைக்கும் பீமா பிரகூஷித மென்பது துரியோதனனது சேனைக்கும் விசேஷணமாம். (10)

(அ - கை.) ஹே துரியோதன! இப்பாண்டவர்களின் சேனையை யபேக்ஷித்து உனது சேனைபிரபல மெனமதித்து அதனுல் நீ பயமின்றியவனுயின் எதன்பொருட்டு அநேக கற்பனைகளைச்செய்கின்றாய் என்னுமாசங்கையுண்டாகத் துரியோதனராஜன் கூறுகின்றான்.

(சு - ம்.) கூயதெநஷ்டீவ ஸைவ்ருஷ்டீ யுராஹமஜிவ்ஹ்மிதாஃ।
ஹீஷ்டிஜிவாஹிரகூஷதேஷ்டவதஃ ஸவ்ருணவஹி ॥ ககூ ॥

5 4 6 7 8
ப - ம்.) கூயதெநஷ்டீ - வ - ஸைவ்ருஷ்டீ யுராஹாஹம் - கூவ்ஹ்மிதாஃ ஹீஷ்டம்.
9 10 2 3 1
வணவ - கூஹிரகூஷதேஷ்டீ - ஹவம்தஃ - ஸைவ்ரு, வணவ - ஹி.

(அ - ம்.) துரோணசாரியராகிய தாங்கள் முதலியயாவரும்அணிவகுக்கப்பட்ட சேனையைத் தத்தம்ஸ்தானங்களாகிய பிரவேசமார்க்கத்தில் நிறுத்தி இப்பீஷ்ம பிதாமகரையே எல்லாப் புறமுங் காத்தல்வேண்டும்.

(வி - ம்.) (கூயதெநஷ்டீவ) என்னும் பதத்தின்கண்ணுள்ள சகாரமானது (உம்மையானது) முற்கர்த்தவ்யத்தின் அபேக்ஷையால் கர்த்தவ்ய விசேஷத்தின் போதகமாம். யுத்தத்தின் ஆரம்பகாலத்தில் யுத்தபுருஷர்களை முறையே யுத்தபூமிக்கண் கிழக்கு வடக்குமுதலிய திசைகளில் வகுத்து நிறுத்தி நியமஞ் செய்யுமிடத்திற்கு அயனமெனப்பெயராம். எல்லாச்சேனைகட்குந் தலைவனே அச்சேனைகளைத் தமது ஆசிரிதத்தில்வைத்து அவ்வெல்லாச்சேனைகளின் மத்தியிலிருத்தல்வேண்டும் அத்தகையசேனாபதி யெனது பீஷ்மபிதாமகராம் அப்பீஷ்மபிதாமகர் யுத்தத்திலத்தியந்தமபிநிவேசமுடையராதலால் தமதுமுன்னிலும் பின்னிலும் வலப்புறமும் இடப்புறமும் நோக்கார் ஆகையினுல் துரோணசாரியராகிய தாங்கள் முதலிய எல்லா யுத்தவீரர்களுந் தங்கள் பின்ன பின்ன இரணபூமியை விடாமலே தங்கள் தங்கள்

* பராஜயம் = தோல்வி.

யதாஸ்தானங்களிலிருந்துகொண்டு இப்பீஷ்மபிதாமகரையே எல்லாப்பக்கங்களி லுங் காத்தல்வேண்டும் அங்ஙனஞ் செய்வதனல் அந்நியசேனையிலுள்ள எச்சத் துருவும் எவ்வழியாயேனும் வந்து இப்பீஷ்மபிதாமகரைக் கொல்லான் இவ்வாறு சாவதானமாய்ப் பாதுகாத்துக்கொள்க. தாங்களனைவரு மிப்பீஷ்மபிதாமகரைப் பாதுகாப்பீராயின் அப்போது அவரது கருணையால் நாமெல்லோரும் காக்கப்படு வோம். (11)

(அ - கை.) ஹே சஞ்சய? இவ்வாறுகிய வசனங்களை அத்துரியோதனராஜன் கூறிய பின்னர் அப்பீஷ்மாதி யுத்தவீரர்கள் எக்காரியத்தைச் செய்தனர்? என்றிவ் வாறு திருதராஷ்டிரரின் ஆசங்கையுண்டாக "சிலர் என்னை ஸ்துதிக்குக அல்லது சிலர் என்னை நிந்திக்குக இத்துரியோதனன் பொருட்டு இவ்வெனது சரீரம் அவ சியம் வீழவேண்டும் என்றிவ்வாறுகிய கருத்தால் அப்பீஷ்மபிதாமகர் அத்துரி யோதனனது சித்தத்திற் சந்தோஷமுண்டாம் பொருட்டுச் சிம்மநாதத்தைச் செய்து உரக்கச் சங்கத்தொனியை முழக்கினர், என்றிவ்வாறுகிய விடையை அச்சஞ்சயர் அத்திருதராஷ்டிரரின் பொருட்டுக் கூறலுற்றார்.

(கு - ம்.) தஸ்ய ஸஂஜநயந்ஹர்ஷம்-குரவ்ருத்³த⁴꞉ பிதாமஹ꞉ ।
ஸிꣳஹநாத³ம்விநத்³யோச்சை꞉ ஶஂக²ம்தத்⁴மௌ ப்ரதாபவாந் ॥

(ப - ம்) 4 தஸ்ய - 6 ஸஂஜநயந் - 5 ஹர்ஷம் - 2 குரவ்ருத்³த⁴꞉ - 3 பிதாமஹ꞉ -
12 8 9 10 11 1
ஸிꣳஹநாத³ம் - விநத்³ய - உச்சை꞉ - ஶஂக²ம் - தத்⁴மௌ - ப்ரதாபவாந்.

(அ - ம்.) ஹே திருதராஷ்டிரரே! மஹா பிரதாபவானும் குருவம்சத்தில் வயோதிகரும் ஆகிய பீஷ்மபிதாமகர் அத்துரியோதன ராஜனைச் சந்தோஷிப் பித்தற் பொருட்டுச் சிம்ஹநாதஞ்செய்து சங்கையுரக்க வூதினர்.

(வி - ம்.) ஹே திருதராஷ்டிரரே! துரியோதனன் பாண்டவர்களின் சேனை யைப்பார்த்து அதனலுண்டாகிய பயத்தை நிவிர்த்திசெய்தற்பொருட்டு அத் துரோணசாரியரைக் கபடமாய்ச் சரணடைந்தனன்; இக்காலத்திலும் இத்துரியோ தனன் என்னிடத்திற் கபடஞ்செய்கின்றனன், என்றிவ்வாறுகிய அசந்தோஷத் தால் வாக்குமாத்திரத்தானும் அவன் ஆசாரியரால் ஆதரஞ்செய்யப்பட்டானில்லை. அங்ஙனமாய துரோணசாரியரின் உபேக்ஷையைத்தெரிந்து (கயதெஷுஅ) (ஸவெஷு) என்பனவாதி வசனங்களால் பீஷ்மபிதாமகரின் ஸ்துதியைச்செய் தனன். இத்தகைய துரியோதன ராஜனது பயத்தைநிவர்த்தி செய்வதும் அவனது ஜயத்தைச் சூசிப்பிப்பதும் ஆய புத்தியின்கண்ணுள்ள வல்லாசலுபஹர்ஷத்தை வெளிப்படுத்துபவராய் அப்பீஷ்மபிதாமகர் மஹாசிம்ஹநாதத்தைச்செய்து உச்ச சுரத்தாற் சங்கத்தை முழக்கினர். ஈண்டுச் சஞ்சயரால் பீஷ்மருக்குக் குருவிருத் தர் பிதாமஹன் பிரதாபவான் என மூன்று விசேஷணங்கள் கொடுக்கப்பட்டன. அவற்றுள் குருவிருத்தர் என்னுமுதல் விசேஷணத்தாலோ பீஷ்மாசாரியரிடத் தில் துரோணசாரிய துரியோதனரின் அபிப்பிராயஞானம் சூசிப்பித்ததாம். என்னை? உலகத்தின்கண் விருத்த புருஷரிடத்தே புத்திராதிகளி னபிப்பிராய ஞானமுண்டாமாதலின்.

பிதாமஹன் என்னும் இரண்டாவது விசேஷணத்தால் துரோணசாரியரால் துரியோதனரியர் உபேக்ஷிக்கப்பட்டதேபோல் நான் இவரை யுபேக்ஷைசெய்வது யோக்கியமன்றும், என்றிவ்வாறுகிய அபிப்பிராயத்தைத் தெரிவித்ததாம். பிரதாப வான், என்னும் மூன்றுவது விசேஷணத்தால் இப்பொருள் சூசிப்பிக்கப்பட்டது **உச்சஸ்வரத்தால்** ஸிம்ஹநாதபூர்வகமாய்ச் சங்கம் பீஷ்மரால் ஊதப்பட்டது. அப்

பீஷ்மரின் சங்கத்தொனியானது பாண்டவர்களின் சேனைக்கு அவசியம் பயத்தை விளைவிக்கும் என்பதாம்.

(12)

(அ - கை.) இப்போது சேனாதிபதியாகிய பீஷ்மரின் பிரவிர்த்தியின் பின்னர் எல்லா யுத்த வீரர்களுக்கும் எவ்வகையாய பிரவிருத்தியுண்டாயது என்பதைச் சஞ்சயர் வர்ணிக்கின்றார்.

(சு - ம்.) ததஃ ஶம்வாஶ்ச பேர்யஶ்ச வணவாநக மொசி-வாஃ ।
ஸஹஸைவாப்யஹந்யந்த ஸஶப்தஸ்-தும்-லொஹவஃ ॥ கந ॥

(ப - ம்.) ததஃ - ஶம்வாஃ - ச - பேர்யஃ - ச - வணவாநகமொசி-வாஃ
ஸஹஸாஃ - வந - அப்யஹந்யந்த - ஸஃ - ஶப்தஃ - தும்-லஃ அபவத்.

(அ - ம்.) ஹே திருதராஷ்டிரரே! அச்சேனாதிபதியாகிய பீஷ்மரின் பிரவிர்த்தியின் பின்னர் அத்துரியோதனனது சேனையினிடத்தே அநேக சங்கங்களும், அநேகபேரிகளும், அநேக பணவங்களும் அநேக ஆநகங்களும், அநேக கோமுகங்களும் ஆகிய வாத்தியங்கள் அதிவேகமாகவே முழங்கின அச்சங்கத்தொனி முதலிய வொலிகள் நிரம்பிநின்றன.

(வி - ம்.) ஹேதிருதராஷ்டிரரே! அந்தச் சேனாதிபதியாகிய பீஷ்மரின் சங்கநாதத்தைக் கேட்டலாலுற்பன்னமாகிய சந்தோஷத்துடன் துரோணாசாரியர் முதலிய எல்லா யுத்தவீரர்களும் தங்கள் தங்கள் சங்குகளை வேகமாகவே முழக்கினர் உடனே வனைய யுத்தபுருஷரும் பேரி, பணவம், ஆநகம், கோமுகம் முதலிய வாத்தியங்களை விரைவாகவே முழக்கினர்கள் அச்சங்கம்பேரி முதலியவற்றின் தொனிரூப சத்தங்கள் மகத்தா யிருந்தன. அம்மஹத்தாகிய சத்தங்களைக் கேட்டும் அப்பாண்டவர்கட்குச் சற்றுங்கலக்கமுண்டாக வில்லை. ஈண்டு, பணவ மென்பது மிருதங்கத்திற்காம், ஆநக மென்பது நகாராவிற்காம், கோமுக மென்பது ரணசிம்ஹத்திற்காம்.

(13)

(அ - கை.) இவ்வாறு துரியோதனராஜனது சேனைகளின் பிரவிர்த்தியைக் கூறியிப்போது பாண்டவர்களது சேனையின் பிரவிர்த்தியை யச்சஞ்சயர் கூறுகின்றார்.

(சு - ம்.) ததஃ ஶ்வேதைர்ஹயைர்யுக்தே மஹதி ஸ்யந்தநே ஸ்திதௌ ।
மாதவஃ பாண்டவஶ்சைவ திவ்யௌ ஶம்வௌ ப்ரதத்மதுஃ ॥

(ப - ம்.) ததஃ - ஶ்வேதைஃ - ஹயைஃ - யுக்தே - மஹதி - ஸ்யந்தநே
ஸ்திதௌ - மாதவஃ - பாண்டவஃ ச - வந - திவ்யௌ - ஶம்வௌ ப்ரதத்மதுஃ

(அ - ம்.) இச்சுலோகத்தின் அக்ஷரங்களின் அர்த்தம் ஸ்பஷ்டமேயாம்.

(அதன் பின்னர் மாதவனும் அர்ச்சுனனும் வெண்குதிரைகள் பூட்டிய அற்புதமாய தேரிலாரோஹணித்துத் திவ்யமாய சங்கை முழக்கினர்.

(வி - ம்.) பாண்டவர்களின் சேனையில் அர்ச்சுனனைப்போலும் கிருஷ்ண பகவானைப்போலும் மற்று மநேகயுத்த வீரர்கள் தங்கள் தங்கள் தேரிலேயேயிருந்த

---

* ரணசிம்ஹம் = ஊதுகொம்பு.

னாதலால் கேவலம் அருச்சுனனுக்கும் கிருஷ்ணபகவானுக்குமே தேரின்மேலிருத்தலாகியவிசேஷணம் பொருந்தாதாயினும்(ததஃஶ்வேதைர்ஹயைர்யுக்தே) "வெண்குதிரைகள் பூட்டிய" என்பனவாதி விசேஷணத்தோடுற்ற தேரில் அருச்சுனனும் பகவானும் இருந்தார்களெனக்கூறப்பட்டதன்று அது ஏனையதேர்க்களினின்றும் அருச்சுனனது தேரின் மேம்பாட்டைத்தெரிவிக்கும் பொருட்டுக்கூறியதாம் ஆகையினால் அக்கினிதேவதையால் கொடுக்கப்பட்ட அந்தத்தேரானது எந்தச்சத்துருவாலும் அசைக்கப்படமாட்டாததாம் இத்தகைய மஹாரதத்தின்கண்ணிருப்பவர் அருச்சுனனும் கிருஷ்ணபகவானுமாம் அவ்விருவரும் எச்சத்துருவாலும் ஜயிக்கப்படமாட்டார்கள். (14)

(அ - கை.) இப்போது அவ்வர்ச்சுனனும் பகவானும் எச்சங்குகளை முழக்கினரோ அவைகளின் பெயரையும் பீமாதிகளின் சங்குகளின் பெயரையும் இரண்டு சுலோகங்களால் வர்ணிக்கின்றார்.

(சு - மி.) பாஂசஜந்யம் ஹ்ருஷீகேஶஃ தேவதத்தம் தனஂஜயஃ ।
பௌண்ட்ரம் தத்மௌ மஹாஶஂகம் பீமகர்மா வ்ருகோதரஃ ॥ கரு ॥

(ப - மி.) பாஂசஜந்யம் - ஹ்ருஷீகேஶஃ - தேவதத்தம் - தனஂஜயஃ - பௌண்ட்ரம் - தத்மௌ - மஹாஶஂகம் - பீமகர்மா - வ்ருகோதரஃ.

(அ - மி.) ஸ்ரீகிருஷ்ணபகவான் பாஞ்சஜந்தியமெனப் பெயரிய சங்கத்தையும், அர்ச்சுனன் தேவதத்தமெனப் பெயரிய சங்கத்தையும், உலகருக்குப் பயத்தை விளைவிப்பதாகிய தொழிலையும் விருகத்தை (நரியைப்) போன்றவயிற்றையுமுடைய பீமசேனன் பௌண்டரமெனப் பெயரிய மஹாசங்கத்தையும் முழக்கினர்.

(வி - மி) பஞ்ச (ஐந்து) ஜனங்களில்நின்றும் உற்பன்னமானதாலதற்குப் பாஞ்சஜன்யமெனப் பெயராம், அப்பாஞ்சஜன்யத்தை ஹ்ருஷீகேசனும் தேவதைகளாற் கொடுக்கப்பட்டதனாலதற்குத் தேவதத்தமெனப்பெயராம், அத்தேவதத்தமெனப் பெயரிய சங்கைத் தனஞ்சயனும் ஊதினர்கள். ஈண்டுச்சஞ்சயர் ஸ்ரீ கிருஷ்ணபகவானை ஹ்ருஷீகேசனென்னும் பெயராற்கூறினர். அதன் கருத்திதுவாம்:—ஹ்ருஷீகேச, என்னும் நாமத்தின்கண். ஹ்ருஷீக, ஈச, என்னுமிரண்டு பதங்களுள - அவற்றுள் ஹ்ருஷீக, என்பது இந்திரியங்கட்காம்; ஈச, என்பது பிரேரகத்திற்காம். (ஏவுதற்காம்) அவ்விருபதங்களுமொருங்குகூடிச் சர்வ இந்திரியங்களையுந் தத்தம் காரியங்களிற் செலுத்துபவரும் அந்தரியாமியுமாகிய ஈசுவரனைக்கூறியதாம். இத்தகைய யாவற்றிற்கு மந்தரியாமியாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான். பாண்டவர்கட்குச் சகாயஞ் செய்யுந்தன்மையிலிருக்கின்றனர், அப்பாண்டவர்களை உனது துரியோதனாதியர் ஜயிப்பதின்றும்.

இன்னமும் அச்சஞ்சயரால் அருச்சுனனுக்குத் தனஞ்சயனென்னும் பெயர் கூறப்பட்டது. அதற்கிது கருத்தாம். அர்ச்சுனன் சர்வதிசைகளையுஞ் சயித்தகாலத்தில் எல்லா அரசர்களையும் வென்று தனங்களைச் சேகரித்துவந்தனன்; அக்காரணத்தால் அவ்வர்ச்சுனனைத் தனஞ்சயனென்பர். அத்தகைய மஹாபராக்கிரமசாலியாகிய அர்ச்சுனனை உனது புத்திரர்கள் ஜயிக்கமாட்டார்.

அன்றியும் அச்சஞ்சயரால் பீமசேனனுக்கு. விருகோதரன் என்னும் விசேஷணங் கொடுக்கப்பட்டது. அதன்கருத்திதுவாம்:—வ்ருகத்தைப்போன்று அப்பீமசேனனிடம் மிகுதியாகிய அன்னங்களைப்பசனம் (ஜீரணம்) செய்வதாகிய சாமர்த்தியம் உளது ஆகையினாலப்பீமசேனன் அத்தியந்தம் பலவானும். (15)

(சு - ம்.) கூநதெவிஜயம்ராஜா கூம்தீவ்ரெதாய்யிஷ்டிர: ।
நகூல்ஸ்ஸஹதெவஸ்ச வ்ரொஷ்ணிவ்ருஷ்கெள ॥ கசு ॥

(ப - ம்.) கூநதெவிஜயம் - ராஜா - கூம்தீவ்ரதி:- ய்யிஷ்டிர: - நகூல்ஸ்
ஸஹதெவ: - ச - வ்ரொஷ்ணி வ்ருஷ்கெள.

(அ - ம்.) குந்தி புத்திரனாகிய யுதிஷ்டிராராஜன் அநந்தவிஜயமெனப் பெயரிய சங்கத்தையும் நகுலன் ஸஹதேவனென்னுமிருவரும் முறையே சுகோஷம் மணி புஷ்பகம் என்னு மிரண்டு சங்கங்களையும் ஊதினர்.

(வி - ம்.) நாசமின்றிய விஜயத்தை யடைவிப்பது எதுவோ அதற்கு அநந்த விஜயமெனப்பெயராம் அத்தகைய அநந்த விஜயமென்னும் சங்கத்தைக் குந்தியின் புத்திரனாகிய யுதிஷ்டிராராஜன் ஊதினன். ஈண்டு குந்திமாதாவானவள் மகத்தாகிய தபசால் தருமராஜனை யாராதித்தனள் அத்தர்மராஜாவால் குந்திதேவிக்கு யுதிஷ்டிரனென்னும் புத்திரப்பிராப்தி யுண்டாயது ஆகையினால் இந்த யுதிஷ்டிராராஜன் மஹாபலவானும் இவ்வாறு அந்த யுதிஷ்டிரனது பிரபாவத்தை யுணர்த்தும் பொருட்டுச் சஞ்சயரால் யுதிஷ்டிரனுக்குக் குந்திபுத்திரனென்னும் விசேஷணங் கொடுக்கப்பட்டதாம் அந்த யுதிஷ்டிரன் ராஜஸூயயாகத்தின் கர்த்தாவாம் ஆகையினால் அரசன் என்னும் சப்தத்தின் முக்கிய அர்த்தத்தன்மை இந்த யுதிஷ்டிரனிடத்தே பொருந்தும், என்றிவ்வாறுகிய அர்த்தத்தை தெரிவித்தற் பொருட்டுச் சஞ்சயரால் யுதிஷ்டிரனுக்கு ராஜா, என்னும் விசேஷணங் கொடுக்கப்பட்டதாம். யுத்தத்தின் கண் ஜயரூபபலத்தின் சேவிதனு (அனுபவியா) யிருப்பவனே யுதிஷ்டிரனென்பர் அந்தயுதிஷ்டிர பதத்தால் சஞ்சயர் இபபொருளை சூசிப்பித்தனர். இந்த யுத்தத்தில் ஜயரூபபலத்தின் பாகியாய் (அனுபவியாய்) இந்த யுதிஷ்டிரனே யிருப்பன் இவனது எதிர்க்கக்ஷிகளாகிய துரியோதனாதியர் ஜயரூபபலத்தின் பாகிகளாய் இச்சங்கிராம (யுத்த)த்தின் கண் இரார் என்பதாம். ஈண்டிரண்டு சுலோகங்களால் பாஞ்சஜன்யம், தேவதத்தம், பௌண்ட்ரம், அநந்தவிஜயம், சுகோஷம், மணிபுஷ்பகம் என்னும் ஆறுசங்கங்களின் பெயர்கள் கூறப்பட்டன. அதனால் சஞ்சயர் இப்பொருளைத் தெரிவித்தனர்:—இப்பாண்டவர்களின் சேனையில் தத்தம் நாமங்களால் பிரசித்தமாகிய இவ்வளவு சங்கங்களிருக்கின்றன. ஆனால் துரியோதனனது சைந்நியத்திலோ தனது நாமத்தாற் பிரசித்தமாகிய வொருசங்கமுமின்றும் ஆகையினாலிப்பாண்டவர்களின் சேனை நினது துரியோதனாதி மைந்தரின் சேனையினின்றும் அத்தியந்தம் பிரபலமாம்.

(அ - கை.) இப்போது திருதராஷ்டிராருக்குத் தமது புத்திரர்களின் ஜயத்திலுள்ள ஆசையை நிவர்த்தி செய்யும்பொருட்டு அச்சஞ்சயர் பாண்டவர்களின் பக்ஷத்திலுள்ள வேறு ராஜாக்களின் ஒரு மதிப்பை இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

(சு = ம்.) காஸ்யஸ்சபரமேஷ்வாஸ: ஸிவண்ஜீசமஹாரத:।
த்ருஷ்டத்யும்நோவிராடஸ்ச ஸாத்யகிஸ்சாபராஜித:॥ கள ॥
த்ருபதொத்ரளவதெயாஸ்ச ஸர்வஸ: பாண்டவீவதெ।
ஸௌபத்ரஸ்ச மஹாபாஹு: ஸங்வாத்யாந்:பாண்யக்பாண்யக் ॥கழ॥

(பி – மி.) 3 காஸ்ய: - ச - 2 வாசிஷ்டாவ: - 6 ஸிவேண்யீ - 4 ச - 5 மஹாரதா: -
7 த்ருஷ்டத்யும்ந: - 9 விராட: - 8 ச 12 ஸாத்யகி: - 10 ச - 11 சைவாஜித: - 13 பூர்வ: - 15 பௌண்ட்ர:
19 14 1 18 16 17
தௌ: - ஸுகோ: - ச - வ்யதிஷீவதே - ஸௌபத்ர: - ச - 22 23 20 21
மஹாவாஹு: - ஶங்கான் - தத்ர - தத்ர.

(அ - மி.) ஹே பிருதுவியின் பதியாகிய திருதராஷ்டிரரே? மஹாதனுஸ்ஸை யுடைய காசிராஜனும் மஹாரதியாகிய சிகண்டியும், திருஷ்டத்யும்நனும், விராட ராஜனும், சத்துருக்களால் ஜயிக்கப்படாதவனாகிய சாத்யகிராஜனும். (17).

துருபதராஜனும், திரௌபதியின் ஐந்து புத்திரர்களும். மஹாபாஹுவை யுடைய சுபத்திரையின் புத்திரனும் ஆகிய இவ்வெல்லா யுத்தவீரர்களும் வேறு வேறுகத் தத்தம் சங்குகளை யூதினர். (18)

(வி - மி.) ஹே திருதராஷ்டிரரே! ஸ்ரீ கிருஷ்ணபகவானேடு அருச்சுனன் முதலிய பாண்டவர்களின் பிரவிர்த்தியைப்பார்த்து அப்பாண்டவர்களின் பக்ஷபாதி களாகிய, காசிராஜன், சிகண்டி, திருஷ்டத்யும்நன், விராடராஜன், ஸாத்யகிராஜன், துருபதராஜன், துரௌபதியின் பிரதிவிந்தியாதி யைந்துபுத்திரர்கள் சுபத்திரை யின் புத்திரனாகிய அபிமன்யு ஆகிய இவ்வெல்லா யுத்தவீரர்களும், வேறு வேறுகத் தத்தம் சங்குகளை முழக்கினர். ஈண்டு முகத்தின்கண் மீசை தாடியுடைமையில் லாததன் பெயர் சிகண்டமாம். அத்தகைய சிகண்டம் எவனிடத்துளதோ அவனுக்குச் சிகண்டியெனப் பெயராம். அச்சிகண்டி பாஞ்சாலதேசத் தாசனும். (த்ருஷ்டத்யும்ந) என்னும் பெயரின்கண் த்ருஷ் ஔ த்யும்ந என இரண்டு பதங்களுள அவற்றுள் சத்துருக்கட்குப் பீடையை யுண்டுபண்ணுவதுதானோ அதற்கு த்ருஷ் மெனப்பெயராம். ஔ த்யும்ந என்பது பலத்திற்காம், சத்துருக்களை பீடிப்பதில் பலம் எவனிடமுளதோ அவனைத் திருஷ்டத்யும்நனென்பர். ஸாத்யக னென்னு மாசனது மைந்தனுக்குச் சாத்யகியெனப்பெயராம். முழந்தாள்வரையிலும் எவனது கைகள் நீண்டிருக்கின்றனவோ அவனை மஹாபாஹுவென்பர்.

அவற்றுள் பரமேஷ்வாஸ: என்னும் விசேஷணம் காசிராஜனுக்காம் மஹாரத: என்னும் விசேஷணம் சிகண்டிராஜனுக்காம், அபராஜித: என்னும் விசேஷணம் ஸாத்யகி ராஜனுக்காம், மஹாபாகு என்னும் விசேஷணம் சுபத்திரையின் புத்திரனுக்காம் அல்லது பரமேஷ்வாஸ: மஹாரத: அபராஜித: மஹாபாகு என்னுமிந் நான்கு விசேஷணங்களும் காசிராஜன் முதற்கொண்டு எல்லா ராஜாக்கட்குமாமெனினுமமையும். (18)

(அ - கை.) அவ்வர்ச்சுனாதி பாண்டவர்களின் சங்கத்தானியைக் கேட்டவுடன் அத்துரியோதனாதிகளின் ஸ்திதி யெவ்வாறாயது என்னுந் திருதராஷ்டிரரின் ஆசங்கைக்குச் சஞ்சயர் விடைகூறுகின்றார்.

(சு - மி.) ஸவைர்வ்யாபாதுமாஷாணாம் ஹ்ருஷீகேஸோ மஹீபதே!
ஸேநயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய மேऽச்யுத! ॥ கக ॥

(ப – மி.) 1 3 8 9 10
ஸ: - வைர்வ்யாபாதுமாஷாணாம் - ஹ்ருஷீகேஸோ - மஹீபதே -
4 5 6 2 7
ஸேநயோ: - உ பயோ: - மத்யே - ரதம் - ஸ்தாபய - மே - அச்யுத.

(அ-ம்.) அம்மஹா சங்கத்தொனியானது தனது பிரதித்வனிரூப சத்தத்தால் ஆகாசத்தையும் பூமியையும் வியாபித்துத் திருதராஷ்டிரரின் புத்திரபௌத்தராதிகளாய பந்துக்களின் நெஞ்சுகளைப் பிளந்தது.

(வி-ம்.) ஹே திருதராஷ்டிரரே! உமது துரியோதனாதியரின் சேனைகளிடத்தும் மஹத்தாகிய சங்கத்தொனி உண்டாயது. ஆயினும், அச்சங்கத்தொனியானது பாண்டவர்களைச் சற்றேனுங் கலங்கச்செய்யவில்லை. ஆனால் பாண்டவர்களின் சேனையிலுள்ள பாஞ்சஜன்யம் தேவதத்தம் பௌண்டரம் முதலிய சங்கங்களை யூதியதானுண்டாய மகத்தாகிய சத்தமானது தனது பிரதித்தொனி ரூப சத்தத்தால் ஆகாசம் பிருதுவி கிழக்கு முதலிய் திசைகள் பர்வதங்களின் குகைகள் என்பவையுனைத்தையும் வியாபித்து உமது சம்பந்தியராகிய துரியோதனாதியரின் சேனாதிபதியாகிய பீஷ்மாதியரின் ஹ்ருதயங்களைப் பிளந்தது. கருத்திதுவாம்:— எங்ஙனம் சஸ்திரங்கொண்டு ஹ்ருதயதேசத்தைப் * பேதனஞ் செய்தால் துக்கமுண்டாமோ அங்ஙனமே அந்தச் சப்தமுந் துக்கத்தை விளைவித்தது என்பதாம். ஈண்டு (வ்யதிவீம்பெயெவ) என்னும் மூலசுலோகத்தின் பதத்தின்கண்ணுள்ள (ய) காரத்தால் (உம்மையால்) கிழக்கு முதலிய எல்லாத் திசைகளையும் பர்வதங்களின் குகைகளையுங் கொள்ளப்பட்டது. "வஸவ" என்னும் சத்தம் சுலோகத்தின் பாதபூரணத்தின் பொருட்டாம். (19)

(அ-கை.) பூர்வசுலோகத்தில் திருதராஷ்டிரரின் புத்திரபௌத்திராதிகளாய சம்பந்திகளிடத்துப் பயத்தின் பிராப்தி கூறப்பட்டது. இப்போது அத்துரியோதனாதியரினின்றும் பாண்டவர்களிடத்தில் மாறுய நிர்ப்பயத் தன்மையின் நிரூபணஞ்செய்கின்றார்.

சு-ம். ஈயவ்யவஸ்தாந்ப்ரேக்ஷ்ய யாதத்ராஷ்ட்ராந்கபித்வஜ: ।
ப்ரவ்ருத்தேசஸ்த்ரஸம்பாதேதநுருத்யம்யபாண்டவ: ॥ உ0 ॥
ஹ்ருஷீகேசம்ததோவாக்யமிதமாஹமஹீபதே ।

ப-ம். ஈய - வ்யவஸ்தாந் - ப்ரேக்ஷ்ய - யாதத்ராஷ்ட்ராந் - கபித்வஜ: -
ப்ரவ்ருத்தே - ஸஸ்த்ர ஸம்பாதே தநுருத்யம்ய பாண்டவ: ॥ உ0 ॥
ஹ்ருஷீகேசம் - ததோ - வாக்யம் - இதம் - ஆஹ - மஹீபதே.

(அ-ம்.) ஹே பிருதுவியின் பதியாகிய திருதராஷ்டிரரே! அப்பயமுண்டாயதின் பின்னரும் யுத்தத்தில் முயற்சியுடையராய் ஆயுதங்களை வழங்கத்தலைப்பட்டு நிற்கும் திருதராஷ்டிரரின் சம்பந்திகளைப் பார்த்து, அநுமத் கொடியையுடைய அர்ச்சுனன் காண்டீவமெனப் பெயரிய தனுஷைக் கையிலெடுத்துக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் மேற்கூறப்படும் வசனங்களைச் சொல்லுவானாயினன்.

(வி-ம்.) ஹே திருதராஷ்டிரரே! பாண்டவர்களின் சங்கங்களின் மகத்தாகிய சப்தங்களைக் கேட்டதால் உமது துரியோதனாதிகளின் சித்தத்தின்கண்ணுண்டாய பயத்தால் அவர்கட்கு அந்த யுத்தத்தில் நின்றும் ஓடிவிடுதலே

* பேதனம்=பிரித்தல்.

கூடுமாயினும் அவர்கள் தங்களது தைரிய சுபாவத்தால் அந்த யுத்தத்தினின் றும் பின்வாங்கவில்லை, மாறுய் யுத்தத்தில் முயற்சியுடையவர்களாய் யுத்த பூமி யின்கண்ணே நின்றனர். இத்தகைய துரியோதனுதிகளை நேத்திரத்தாற் பார்த் தவுடன் * அக்கபித்துவஜனுகிய அர்ச்சுனன் யுத்தஞ் செய்தற்பொருட்டுக் காண்டீவமெனப் பெயரிய வில்லைக் கையிலெடுத்துக்கொண்டு தனது சாரதியாகிய பகவானிடம் இவ்வாறுகிய வசனங்களைக் கூறலுற்றன். ஈண்டு சர்வலோகப் பிர சித்தரும் பராக்கிரமசாலியுமாகிய ஹநுமாரைக் கபி என்னப்பட்டது. அத்தகைய அநுமாராகிய கபியைத் துவஜத்தி (கொடியி) லுடையவ னுகையாலவனைக் கபித்வஜ னென்பர். அக்கபித்வஜன் என்னும் விசேஷணத்தைக் கூறியதால் சஞ்சயரா லிப் பொருள் குறிப்பிக்கப்பட்டது :—எந்த அநுமாரின் சகாயத்தைக்கொண்டு ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியால் இராவணுதி அசுரர்கள் கொல்லப்பட்டனரோ, அத்தகைய அநுமார் அர்ச்சுனனது கொடியின்கண்ணே இருக்கின்றனர். ஆகையினுல் அவ்வர்ச்சுனனுக்கு எந்த யுத்த வீரரினின்றும் பயமுண்டாவ தின்றும். நேத்தி ராதி ஸர்வ இந்திரியங்களையும் பிரவர்த்திப்பவனுய்ச் சர்வ அந்தக்கரண விர்த்தி கட்குஞ் சாக்ஷியாயிருப்பவனை ஹ்ருஷீகேசனென்பர். அத்தகைய அந்தரியாமி யாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் அவ்வர்ச்சுனன் இவ்வாறுகிய வசனங்களைக் கூறுவானுயினன். அக்கிருஷ்ணபகவானது சம்மதமின்றி அர்ச்சுனன் அக்கால் சிறிது காரியத்தையுஞ் சுதந்திரமாய்ச் செய்யவில்லை என்பதாம். ஈண்டு ஹே ஹ்ருஷீகேச ! என்னுஞ் சம்போதனத்தால், சஞ்சயரால் இப்பொருள் குறிப்பிக்கப்பட் டது :—இவ்வர்ச்சுனுதி பாண்டவர்கள் எவ்வெக்காரியத்தில் முயல்கின்றனரோ அதை முன்னர் விசாரித்தே செய்வர், விசாரித்தாலன்றி எக்காரியத்திலும் பிர வர்த்தியார் ? ஆகையினு லிப்பாண்டவர்கள் ராஜநீதியிலும் தர்மத்திலும் அத்தி யந்தங் குசலர்களாம். உம்மால் இப்பாண்டவர்களின் ராச்சியங் கவரப்பட்டது, அது விசாரமின்றியே கவரப்பட்டதாம், ஆகையினுல் உம்மிடத்தில் ராஜநீதி, தர்மம் என்னு மிரண்டுமின்றும். ஆகையினுல் உமக்கு ஒருக்காலும் ஜயமுண் டாகமாட்டாது, மற்றோ நீதி, தர்மங்களையுடைய இப்பாண்டவர்கட்கே ஜயமுண் டாம் என்பதாம். (20)

(அ-கை.) இப்போது இரண்டரைச் சுலோகத்தால் அர்ச்சுனனது வசனத் தை நிரூபிக்கின்றனர்.

ஸஞ்ஜய உவாச.

சு-ம். ஹ்ருஷீகேசம் தததோ ஹ்ருஷீகேசம் ஸ்ருஷ்டாவசோவாச ॥ உக ॥

ப-ம். ஹ்ருஷீகேசம் 3 - தததோ 2 - ஹ்ருஷீகேசம் 4 - ஸ்ருஷ்டா 6 - வசோ 7 - வாச 5 - ஹ 1 ஸ்ருஷீகேச.

(அ-ம்.) ஹே அச்சுத ! இரண்டு சேனைகளின் மத்தியில் எனது தேரை நிறுத்துக.

(வி-ம்.) ஹே ஸ்ரீ கிருஷ்ணபகவன் ! இஃதெனது சேனையாம். எனது எதிர்க்கக்ஷிகளாகிய துரியோதனுதியரின் சேனை யிதுவாம். அவ்விருசேனையின் மத்திய தேசத்தில் எனது ரதத்தைத் தாங்கள் நிறுத்துங்கள் என இவ்வாறுகிய ஆக்ஞையை அர்ச்சுனன் கிருஷ்ணபகவானுக்குச் செய்தனன். இத்துணை கூறி யதா லிப்பொருள் குறிப்பிக்கப்பட்டதாம் :—பரமேஸ்வரனது அநன்னிய பக்தர் கட்கு இவ்வுலகத்தின்கண் முடியாத காரியம் யாதொன்றுமின்றும். ஸாக்ஷாத் பரமேஸ்வரனும் அப்பக்தர்களின் ஆக்ஞையை அங்கீகரிக்கின்றனராதலினென்க.

---

* கபித்வஜன் = குரங்குக் கொடியோன்.

ஆகையினால் இப்பாண்டவர்கட்கு நிச்சயமாக ஜயமுண்டாம் என்பதாம். ஹே அர்ச்சுன! இவ்விரு சேனைகளின் மத்தியில் நான் உனது தேரை நிறுத்துவனேயாயின், இத்துரியோதனாதி சத்துருக்கள் என்னை ரதத்தினின்றுங் கீழே தள்ளுவர், என்றிவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணபகவானது சங்கையுண்டாக அர்ச்சுனன் கூறுகின்றான், "ஹே அச்யுத! என; ஹே பகவன்! ஸர்வதேசத்திலும், சர்வகாலத்திலும், சர்வ வஸ்துவிலும் நாசத்தை யடையாமலிருப்பதை அச்சுதமென்பர். அத்தகைய அச்சுதனையிருக்குந் தங்களைக் கீழேதள்ள எப்புருஷன் ஸமர்த்தனுவன்? மற்றே ஒருவனும் சமர்த்தனுகான். ஈண்டு "ஹே அச்யுத!" என்னுஞ் சம்போதனத்தால் அர்ச்சுனன் ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் நிர்விகாரத்தன்மையைப் போதிப்பித்தனன். நிர்விகாரத்திற் குரோதமுதலிய விகாரங்களுண்டாகாவாகலின் எனதுரதத்தைத் தாங்கள் நிறுத்துங்கள் என்றிவ்வாறு ஆக்ஞை செய்ததால் பகவானிடத்திற் கருதப்பட்ட அர்ச்சுனன் பேரிலுள்ள கோபத்தையும் அச்யுத, என்னும் சம்போதனத்தால் அர்ச்சுனன் நிவர்த்திசெய்தனன். (21)

(அ-கை.) ஹே அர்ச்சுன! இவ்விருசேனைகளின் மத்தியிலோ உனது தேரை நான் செலுத்துகின்றேன், ஆனல் அவ்விடத்தில் ரதத்தைச்செலுத்துவதால் உனக்கு என்ன பிரயோஜனம் உண்டாம்:—அந்தப் பிரயோஜனத்தை யென்னிடம் கூறுதி:—எதன்பொருட்டினின்? பிரயோஜனமின்றி மந்த புருஷனும் பிரவர்த்திப்ப தில்லையாயின் புத்திமானுகிய புருஷனுக்குப் பிரயோஜனமின்றி எக்காரியத்திற் பிரவிர்த்தியுண்டாம்? மற்றே உண்டாகாதென்னும் இத்தகைய ஸ்ரீ கிருஷ்ணபகவானது சங்கைக்கு அர்ச்சுனன் அதன் பிரயோஜனத்தைக் கூறுகின்றனன்.

சு-ம். யாவதெதாந்நிரீக்ஷேஹம் யொத்³தூகாமானவஸ்தி²தான்
கைர்மயாஸஹயொத்தவ்யமஸ்மிந் ரணஸமுத்³யமே ॥ உஉ ।

1 5 6 2 3 4
ப-ம். யாவத் - ஏதான் - நிரீக்ஷே - அஹம் - யொத்³தூகாமான் - அவஸ்தி²தான்

10 9 11 12 7 8
தான் கைர் - மயா - ஸஹ - யொத்தவ்யம் - அஸ்மிந் - ரணஸமுத்³யமே.

(அ-ம்.) ஹே பகவன்! போர் செய்ய இச்சையுடையராய் இந்த * ரணபூமியில் நிற்கும் பீஷ்மர் முதலிய யுத்தவீரர்களை எவ்வளவு சென்று நின்ற இடத்தே நன்றுகப்பார்க்கலாமோ; அவ்விடத்தே எனது தேரை நிறுத்துவீராக. இந்தப் போர் வடிவவியாபாரத்தில் நான் எவருடன் போர்செய்வது யோக்கியமாம்?

(வி-ம்.) ஹே பகவன்! என்னோடு யுத்தஞ்செய்வதில் இச்சையுடையராய் இந்த ரணபூமியிலிரா நின்ற பீஷ்மத்துரோணுதி வீரபுருஷர்களை நன்றுகப் பார்த்த லெவ்விடத்திற் சென்றுற்கூடுமோ அவ்விடத்தே எனது ரதத்தைத் தாங்கள் நிறுத்துங்கள். அல்லது (யாவத்) என்னும் பதம் காலவாசகமாம், ஆகவே எதுகாலபரியந்தம் இப்பீஷ்மாதியெல்லா யுத்த வீரர்களையும் நான் நன்றுகப் பார்ப்பேனே அதுவரையிலும் எனது ரதத்தை இருசேனைகளின் மத்தியில் தாங்கள் நிறுத்துங்கள் என்பதாம். ஈண்டு (யொத்³தூகாமான்) "யுத்தத்தில் இச்சையுடையராய், என்னும் விசேஷணத்தால் அர்ச்சுனன் இப்பொருளைக் குறிப்பித்தனன்:—இப்பீஷ்மத் துரோணுதியர் கேவலம் யுத்தத்திலேயே இச்சையுடையர். ஆகையினால் என்னோடு இவர் ஒருகாலும் மித்திரபாவத்தைச் செய்

* ரணபூமி = யுத்தபூமி, (போர்க்களம்.)

யார். (கவஷ்டிதாந) "நிற்கப்பட்ட" என்னும் விசேஷணத்தால் அர்ச்சுனன் இப்பொருளைச் சூசிப்பித்தனன்:—எனக்குப் பயந்து இந்தப் பீஷ்மத் துரோணதியர் இந்த ரணபூமியினின்றும் ஒருகாலும் ஓடமாட்டார்கள் என்பதாம். ஹே அர்ச்சுன! நீயோ யுத்தஞ்செய்பவனும் யுத்தத்தைப் பார்ப்பவன் நீயன்றும்; ஆகையினல் பீஷ்மத்துரோணதியரைப் பார்ப்பதனல் உனக்கு யாது பிரயோஜனத்தின் சித்தியுண்டாம்? என்னும் பகவானது சங்கைக்கு அர்ச்சுனன் அவர்களைப்பார்ப்பதன் பிரயோஜனத்தைக் கூறுகின்றனன். (கெஉயாஸஹயொஷவ்ஃ) "எவர்களோடு நான் (என்னோடு எவர்) யுத்தஞ் செய்யத்தக்கது என; இவற்றுள் (ஸஹ) "கூட" என்னும் பதத்திற்கு (கெஃ) "எவர்களோடு" (ஆ) "என்னோடு" என்னுமிரண்டுபதத்துடனும் சம்பந்தம் சம்பவிக்கின்றது. அதனலிப்பொருள் பெறப்பட்டதாம்:—பந்துக்கட்கே பரஸ்பரம் யுத்தத்திற் பிரவர்த்தியுண்டாய இந்த ரணபூமியிலிருக்கும், எனது எதிர்க்கக்ஷிகளாகிய பீஷ்மத் துரோணதிகளில் எந்த யுத்தவீரரோடு யான் போர் செய்வது உசிதம்? அங்ஙனமே அப்பீஷ்மத் துரோணதியுத்தவீரருள் எவர் என்னோடு யுத்தஞ் செய்வது உசிதம்? என்றிவ்வாறுகிய ஒருமகத்தாகிய கௌதுக (சந்தேகஷ)த்தின் ஞானமே இவ்விரு சேனைகளின் மத்தியில் தேரை நிறுத்துவதன் பிரயோஜனமாம்.

(அ-கை.) ஹே அர்ச்சுன! இப்பீஷ்மத்துரோணதி பந்துக்களே யுத்தத்தின் சங்கற்பத்தைப் பரித்தியாகம் செய்து உங்களிருவருக்கும் ஒன்றற்கொன்று மித்திர பாவத்தைச் செய்துவைப்பர்; எதன்பொருட்டு நீ யுத்தத்தின் சங்கற்பத்தைச் செய்கின்றாய் என்னும் ஸ்ரீ கிருஷ்ணபகவானது ஆசங்கைக்கு அவ்வர்ச்சுனன் கூறுகின்றான்:—

சு-ம். யொஹ்யுதி நாநவெக்ஷேஹம் யஹமெதே தி ஸமாகதாஃ।
யாதி ராஷ்ட்ரஸ்ய துர்பு த்தேஃ யுத்தே ப்ரியசிகீர்ஷவஃ॥ உ-க-॥

ப-ம். யொத்ஸ்யமாநாந் - அவெக்ஷே - அஹம் - யெ - வஹெத - அத்ர -
ஸமாகதாஃ யாதி ராஷ்ட்ரஸ்ய - துர்பு த்தேஃ - ப்ரியசிகீர்ஷவஃ.

(அ-ம்.) துர்ப்புத்தியையுடைய இத்திருதராஷ்டிர புத்திரனகிய துரியோதனனை யுத்தத்திற் பிரியப்படுத்த இச்சையுள்ள இப்பீஷ்மத் துரோணதியர் இக்குருக்ஷேத்திரத்தின்கண்வந்துளார் யுத்தத்தில் இச்சையுடைய இவரை அர்ச்சுனனகிய யான் நன்றுகக்காணல் வேண்டும்.

(வி-ம்.) ஹே பகவன்! தன்னைக்காப்பாற்றும் உபாயமறியாததுர்ப்புத்தியோடு கூடிய இத்திருதராஷ்டிர புத்திரனகிய துரியோதனனைக் கேவலம்போரிலேயே பிரியப்படுத்த இச்சையுற்ற இப்பீஷ்மத் துரோணதியுத்தவீரர்கள் தர்மக்ஷேத்தரமாய குருக்ஷேத்திரத்தை யடைந்துளார். யுத்தத்தில் இச்சையுடையராகிய இப்பீஷ்மத்துரோணதிகளை நான் நன்றுகப் பார்க்கும்பொருட்டு எனதுரதத்தைத் தாங்கள் நிறுத்துங்கள். ஈண்டு (யுத்ஸ்யமாநாந்) "யுத்தத்திற் பிரியத்தையுடையவர்களாய்" என்னும் விசேஷணத்தை அர்ச்சுனன் கூறியதால் இப்பொருள் குறிப்பிக்கப்பட்டது:—இந்தப் பீஷ்மத்துரோணதி விருத்த புருஷரும் கேவலம் யுத்தத்தானேயே இத்துரியோதனனது ஹிதத்தை இச்சிக்கின்றனரேயன்றி அந்தத் துரியோதனனது துர்ப்புத்தியாதிகளை விலக்கி அவனது

ஹிதத்தை இச்சிக்கவில்லை. இத்தகைய பீஷ்மத்துரோணதிகள் எம்மிருவருக்கும் மித்திரத்தன்மையைச் செய்வித்தலெங்ஙன்கூடும். (பொதுஸோநாது) "யுத்தத்திலிச்சையுடையவர்" என்னும் விசேஷணத்தைக் கூறியதால் இப்பொருள் அர்ச்சுனனுற் குறிப்பிக்கப்பட்டது :—இப்பீஷ்மத்துரோணதியர்க்குக் கேவலம் என்மேலுடு யுத்தஞ்செய்வதிலே யிச்சையாம், இவர்கட்கு என்மேலுடு மித்திரபாவம் செய்வதில் இச்சையின்றும். ஆகையினல், இவர்களோடு யுத்தஞ்செய்யும்பொருட்டு முதலில் இவர்களைப் பார்ப்பதே உசிதம். (23)

(அ-கை.) இவ்வாறு அர்ச்சுனனுல் பிரேரணைசெய்யப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவான் அஹிம்ஸாவடிவ பரமதர்மத்தை யாசிரயித்தும் அவ்வர்ச்சுனனை அவசியம் அந்த யுத்தத்தினின்றும் நிவர்த்திப்பிக்கலாமே, என்றிவ்வாறுகிய திருதராஷ்டிரரின் அபிப்பிராயத்தின் ஆசங்கையைக்கொண்டு, அச்சங்கையை நிவர்த்திசெய்வதில் இச்சையுடையவராகிய சஞ்சயர் அத்திருதராஷ்டிரரிடம் இவ்வாறுகிய வசனங்களைக் கூறுவாராயினர். என்றிவ்வாறுகிய வசனம் வைசம்பாயனர் ஜனமேஜயருக்குக் கூறியதாம்.

ஸஂஜய உவாச.

சு-ம். வஸுதே³வகு³ஹ்யஸ்ய கோ³விந்த³ஸ்ய மஹாத்மந꞉ ।
ஸஂவாத³மிமமஶ்ரௌஷமத்³பு⁴தம் ரோமஹர்ஷணம் ॥ உச ॥
ஹ்ருஷீகேஶ ஜக³ந்நாத² வாஸுதே³வ ஸுரேஶ்வர ।
உவாச வசனம் பார்த² ஸ்ரீவத்ஸாங்க ஸுதாம் ॥ உரு ॥

ப-ம். வஸுதே³வ - உக்த - ஹ்ருஷீகேஶ - மஹாத்மந - ஸஂவாத³ - இமம் - அஶ்ரௌஷம் - அத்³பு⁴தம் - ரோமஹர்ஷணம் - ஹ்ருஷீகேஶ - உவாச - வசனம் - பார்த² - ஸ்ரீவத்ஸாங்க - ஸுதாம் - ஜக³ந்நாத² - வாஸுதே³வ - ஸுரேஶ்வர.

சஞ்சயர் கூறல்.

(அ-ம்.) ஹே திருதராஷ்டிரரே! இவ்வாறு குடாகேசனுகிய அர்ச்சுனனுல் கூறப்பெற்ற ஹ்ருஷீகேசனுகிய பகவான் இருசேனைகளின் மத்தியில் பீஷ்மத்துரோணதிகளின் எதிராய் அவ்வுத்தமமாகிய ரதத்தை நிறுத்தி, ஹே பார்த்த! இங்கு ஒருங்குகூடிய கௌரவர்களை நீ பார்ப்பாயாக என்றிவ்வாறுகிய வசனத்தைக்கூறினர்.

(வி-ம்.) "ஹே பாரத" என்பது திருதராஷ்டிரரின் சம்போதனையாம். அச்சம்போதனத்தால் சஞ்சயர் இப்பொருளைக் குறிப்பித்தனர் :—நீ பரதராஜ குலத்தில் ஜனித்தவனும், உனது அந்தப் பரதவம்சத்தின் மரியாதையை விசாரித்தேனும் உனது சம்பந்திகட்குச் செய்த துரோகத்தை யொழிப்பதே உனக்குத் தகுதியாம். ஈண்டு அர்ச்சுனனைக் குடாகேசனென்னு நாமத்தாற் கூறப்பட்டது, அந்தக் குடாகேச சத்தத்தின் பொருளிதுவாம் :—(மு²வாகாயா꞉ ஈஶ꞉) மு²வாகேஶ꞉) பொருளிதுவாம். குடாகா என்பது நித்திரைக்காம் அந்த நித்திரையின் ஈசன், எவனுல் நித்திரை வசம்பண்ணப்பட்டதோ அவனுக்குக் குடா

கேசனெனப் பெயராம். அல்லது (முஂவாவ கூகெஶாஃ-ப்ரஷ்ந-ஸமுஂவாகெஶஃ) பொருளிதுவாம்—(கஂமுஂஷ்டதஜ்ஞு நீயொமொ முஂவாநாஜ்ஞு திஂஶிஂஜ்ஞி கா) என்னும் சாஸ்திர வசனத்தால் கையின் *அங்குஷ்டத்திற்குத் †தர்ஜனி விரலோடுள்ள சம்பந்தம் குடாமுத்திரை யெனப்படும். அந்தக் குடா முத்திரையைப் போன்ற அளவு நுனித் தலைமயிர் எவனுக்குளதோ அவனுக்குக் குடாகேசனெனப் பெயராம். அல்லது (முஂவம், கூகதி வ்யாவ்ருதீதி, முஂவாகஃ ஶிவஃ, ஸஶிவஃ ஈஶொஃப்ரஷ்ந ஸ முஂவாகெஶஃ) பொருளிதுவாம் :—(முஂவெவாமொ லெகூஷ்வாகுயொஃ) என்னும் கோசவசனத்தால் (முஂவ) என்னும் சுத்தம் கோளத்தி (உருண்டையி)ன் வாசகமாம். லோகப்பிரசித்த வெல்லத்தின் வாசகமுமாம். ஆண்டு அக்கினியால் தகிக்கப்பட்ட அயப்பிண்டத்தை அவ்வக்கினியானது உள்ளிலும் புறம்பிலும் எங்ஙனம் வியாபித்திருக்கின்றதோ அங்ஙனமே இப்பிரஹ்மாண்ட வடிவகோளத்தை உள்ளிலும் வெளியிலும் வியாபித்திருப்பவனுக்குக் குடாகன் எனப் பெயராம் அத்தகையன் பரமேஶ்வரனும். ஆண்டுச் சுருதி :—(விஶ்வமெவேகூம வாரிவெஷ்டிதாரூம் ஜ்ஞாத்வாஶிவஃ) பொருளிதுவாம் :—சர்வ விசுவத்தையும் வியாபித்திருப்பவனுய பரமசிவத்தை தனது ஆத்மாவாகத் தெரிந்த இப்புருஷன் மோகூத்தை யடைகின்றனன். இத்தகைய குடாகனெனப் பெயரிய பரமேஶ்வரன் எவனுக்கு ஈசனுயிருக்கின்றனனே அவனுக்குக் குடாகேசனெனப்பெயராம், அல்லது (முஂவவநு ஶயாஂஸ்யநுஹகாநு கூகதிவ்யாவ்ருதீதி முஂவாகஃ ஶிவஃ ஸஶிவஃ ஈஶொஃப்ரஷ்ந முஂவாகெஶஃ) பொருளிதுவாம் :—எங்ஙனம் உலகத்தில் பிரசித்தமாகிய (முஂவம்) (வெல்லம்) மதுரமோ அங்ஙனம் மதுரமாகிய பக்தஜனங்களை யடைபவனுக்குக் குடாகனெனப் பெயராம். அத்தகையன் பரமேஶ்வரனும். ஆண்டுச்சுருதி :—"ஸாஹஂவஷிஜாயம ஶஂபோஜஂ தாயம்" என, அத்தகைய பரமேஶ்வரன் எவனுக்கு ஈசனுயிருக்கின்றனனோ அவனுக்குக் குடாகேசனெனப்பெயராம்.

ஹ்ருஷீகமென்பது இந்திரியத்திற்காம் அவ்வெல்லா இந்திரியங்களையும் தத்தங்காரியத்திற் பிரவர்த்திக்கச் செய்பவனுக்கு ஹ்ருஷீகேசனெனப்பெயராம். அத்தகைய ஹ்ருஷீகேசனுகிய பகவானிடம் அக்குடா கேசனுகிய அர்ச்சுனன் இரண்டு சேனைகளின் மத்தியில் ரதத்தை நிறுத்தும்படி ஆக்ஞை செய்ததோடு, ஸ்ரீ கிருஷ்ணபகவான், இவ்வர்ச்சுனன் எனது தாசனும் எஜமானுகிய என்னை நீசத்தொழிலாகிய சாரதித் தன்மையில் ஏவினன் என்றிவ்வாறுதோஷ ஆரோபணத்தால் அவ்வர்ச்சுனன்மேல் குரோதம் வைக்கவில்லை ; என்னே ? அந்தக்கிருஷ்ணபகவான் எப்போதும் பக்தர்கட்கு அதீனராகவே யிருக்கின்றனரன்றே, அவ்வர்ச்சுனனே யுத்தத்தில் நின்றும் நிவர்த்திக்கவுஞ் செய்திலரன்றே, மற்றே அவ்வர்ச்சுனனது வசனத்தை யங்கீகரித்து அவ்விருசேனைகளின் மத்தியில் பீஷ்மத்துரோணர் ஏனைய அரசர்கள் என்னுமிவர்களின் எதிரில் அர்ச்சுனனது உத்தமமாகிய ரதத்தை நிறுத்துவாராயினர். ஈண்டுச்சர்வ அரசர்களின் மத்தியில் ரதத்தை நிறுத்தினர் என்றிவ்வளவு மாத்திரங் கூறுவதானே பீஷ்மத்துரோணதி யெல்லா அரசர்களின் கிரகணமாகையால், பீஷ்மத்துரோணர் என்னுமிவரைத் தனித்துக்கூறல் அநுசிதமாமாயினும் எல்லா அரசர்களினும் அப்பீஷ்மத் துரோணர்கட்கு அத்தியந்தம் பிரதானத்தன்மையைத் தெரிவித்தற்பொருட்டு

* அங்குஷ்டம்=பெருவிரல். † தர்ஜனி=ஆட்காட்டிவிரல்.

அவ்விருவரையும் தனித்துக் கிரகித்ததாம். ஆண்டு ரதத்தை நிறுத்தினர் என்றிவ்வளவு கூறுவதாலேயே நிர்வாகமுண்டாகின்றதாயினும் மற்றெல்லா ரதங்களினின்றும் அந்த ரதத்தில் மேலம்பாட்டைத் தெரிவித்தற்பொருட்டு அதற்கு உத்தமமென்னும் விசேஷணங் கொடுத்ததாம். அந்த ரதத்தின் உத்கிருஷ்டத் தன்மையில் இது காரணமாம் :—ஒன்றே அந்த ரதம் அக்கினிதேவரால் கொடுக்கப்பட்டதாம். மற்றொன்றே ஸாக்ஷாத் கிருஷ்ணபகவான் அவ்விரதத்தின்கண் சாரதியாயிருந்து ஓட்டுவதாம், மற்றொன்றே ஸாக்ஷாத் அர்ச்சுனன் அத்தேரில் இருப்பதாம், மற்றொன்றே, அநுமார் அவ்விரதத்தின் கொடியிலிருப்பதாம் இவ்வளவு தேவதைகளால் அந்த ரதத்தில் சர்வ ரதங்களினின்றும் உத்கிருஷ்டத் தன்மையுளது. அத்தகைய உத்தம ரதத்தை இருசேனைகளின் மத்தியில் நிறுத்தி, சர்வ ஜனங்களின் உள்ளிலுள்ள ரகஸ்யமான அபிப்பிராயங்களைத் தெரிந்தவராகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் இவ்வர்ச்சுனன் இப்படைத்தலைகளின் தரிசனத்தால் சோகமோகத்தை யடைந்திருக்கின்றனன் என்று தெரிந்து துக்கத்தோடுற்ற அவ்வர்ச்சுனனிடம் இவ்வாறுகிய வசனங்களைக் கூறுவாராயினர்.—தேவ பார்த்த! குருவம்சத்திற் சனித்த இந்தப் பீஷ்மாதியர் ஒருங்குகூடியிருக்கின்றனர் இவர்களை நீ நன்றுகட்டாய்ப்பாயாக. ஈண்டு "தேவ பார்த்த! என்னும் சப்தோதனத்தால் ஸ்ரீ கிருஷ்ணபகவான் இப்பொருளைக் குறிப்பித்தனர்—பிருதை யெனப் பெயரியதாயின் மைந்தனைகையால் அவனுக்குப் பார்த்தனெனப் பெயராம். அந்தப்பிருதை தனது ஸ்திரீ சுபாவத்தால் எப்போதும் சோகமோக மூடையவளாம் அந்தப் பிருதைக்கு நீ மைந்தனைகையால் உன்னிடத்தும் சோகமோகங்கள் அடைந்திருக்கின்றன; என்றிவ்வாறு அர்ச்சுனனது பாரிகாசத்தைத் "பார்த்த", என்னுஞ் சப்தத்தால் குறிப்பித்து ஸ்ரீ கிருஷ்ணபகவான் தம்மிடத்தில் ஹ்ருஷிகேச சத்தத்தின் அர்த்தரூப அந்தரியாமித் தன்மையையும் தெரிவித்தனர். அல்லது, தேவ பார்த்த! என்னுஞ் சப்தோதனத்தால் அர்ச்சுனனுக்குப் பகவானால் இப்பொருள் குறிப்பிக்கப்பட்டது—எனது பிதாவின் சகோதரி பிருதையாம், அந்தப் பிருதைக்கு நீ புத்திரனும், ஆகையினால் நீ எனது சப்தார்தியாமாதவின் இக்கிருஷ்ணபகவான் எனது சாரதித்தன்மையை விட்டுத் தூரியோதனனது பக்ஷத்திற் செல்வர் என்னும் சிந்தனைய நீ ஒருகாலுஞ் செய்யவேண்டாம். மற்றோர் எனது ஸாரதித்தன்மையில் நீ யாதொரு சிந்தையுமின்றியவனுய் இப்பீஷ்மத்துரோணாதியரைச் சந்தேகமின்றிப் பார்ப்பாயாக. ஈண்டு, இப்பீஷ்மத்துரோணாதிகளை நீ பார்ப்பாயாக என்னும் வசனபரியந்தம் பகவான் கூறியதாம் அதன் அபிப்பிராயம் இதுவாம்—யான் உனது சாரதித்தன்மையில் அத்தியந்தம் சாவதானமுடையவனை யிருக்கின்றேன், நீயோ இப்போதே சோகமோகவயத்தால் ரதத்திலிருக்குந் தன்மையை விட்டுவிட இச்சிக்கின்றாய்; ஆகையினால் இச்சேனையின் தரிசனத்தால் உனக்கு யாது பிரயோஜனம் சித்தமாம் என்றிவ்வாறு அவ்வர்ச்சுனனுக்குத் தைரியத்தை யுண்டுபண்ணும்பொருட்டு அவ்வசனம் பகவானுற் கூறப்பட்டது. அன்றியும் அப்பகவான் இருசேனைகளின் மத்தியில் ரதத்தை நிறுத்துவாராயினர் என்றிவ்வளவே கூறுவது உசிதமாம். (24–25)

(அ-கை.) அவ்விருசேனைகளின் மத்தியிலிருக்கும் அவ்வர்ச்சுனன் எதைப் பார்த்தனன் எனத்திருதராஷ்டிரரின் சங்கையுண்டாகச் சஞ்சயர் கூறுகின்றார்.

அ-ம். தத்ராபஶ்யத் ஸ்தி²தான்பார்த²꞉ பித்ரூனத²பிதாமஹான்।
ஆசார்யான்மாதுலான்ப்⁴ராத்ரூன்புத்ரான்பௌத்ரான்ஸகீ²ம்ஸ்ததா² ॥
ஶ்வஶுரான்ஸுஹ்ருத³ஶ்சைவ ஸேனயோருப⁴யோரபி ॥ உக ॥

1 20 5 2 6 7 8
ப-ம். ததை - சுவஜுஷ்டிதாந்-வாயுர்விதூந்-சுய-விதாஉஹாந்

9 10 11 12 13 15 14
சுவாயாநந்-சாதாமாந்-ஹ்ராதூந் வாதந்-வளதாந்-லவீந்-தயா

16 18 17 19 4 3
ஸஸுராந் லாஹ்யஉ . ய - வன - லெநயொ உஹயொ சுவி.

(அம்.) இச்சேனையைப் பார்ப்பாயாக என்னும் பகவானது ஆக்ஞையின் பின்னர் அவ்வர்ச்சுனன் இருசேனைகளிலுமுள்ள, தந்தையர், பாட்டன், ஆசாரியர்கள், *மாதுலர்கள், சகோதரர்கள், புத்திரர்கள், †பௌத்திரர்கள், தோழர்கள், மாமன்மார்கள், மித்திரர்கள் என்னுமிவர்களையே காணலுற்றான்.

(வி-ம்.) ஹே திருதராஷ்டிரரே! அக்கிருஷ்ணபகவான் யுத்தத்தின் ஆரம்பஞ் செய்விக்கும்பொருட்டு அவ்வர்ச்சுனனிடம் சேனைகளைநோக்க ஆக்ஞாபித்தவுடன் அவ்வர்ச்சுனன் இருசேனைகளிலுமுள்ள யுத்தவீரர்களை நோக்குவானாயினன்.

ஆண்டு அந்நிய சைந்நியத்துள், அவ்வர்ச்சுனன் தனது தந்தைமாராகிய பூரிசிரவாதியரையும், பீஷ்மர், ஸோமதத்தர் முதலிய பாட்டனரையும் துரோணர், கிருபர் முதலிய ஆசாரியரையும், சல்யன் சகுனி முதலிய மாதுலர்களையும், துரியோதனன் முதலிய சகோதரரையும், லக்ஷ்மணன் முதலிய புத்திரரையும், அந்த லக்ஷ்மணனுதி புத்திரரின் புத்திரராகிய பௌத்திரரையும், தனது சமான அவஸ்தையையுடைய அசுவத்தாமா, ஜயத்ரதன் முதலிய தோழர்களையும், கிருதவர்மா, பகதத்தன் முதலிய மித்திரர்களையும், காண்பானாயினன்.

ஜயிப்பதற்கு ஈண்டு மித்திரர் என்னுஞ் சத்தத்தால் வேறெயும் உபகாரம் செய்பவராயிராநின்ற எம்மாதாமஹர் முதலியருளரோ அவ்வனைவரையுங் கொள்க. இவ்வாறு அந்நிய சேனையிலுள்ள தனது பிதிர்வ்யாதி சம்பந்திகளைப் பார்த்தபோல தனது சேனையின்கண்ணும் அப்பிதிர்வ்யாதி சம்பந்திகளையே பார்த்தனன்.

இவற்றுள், தனது பிதாவின் சஹோதரனுக்கு பிதிர்வ்யன் எனப் பெயராம். தனது மாதாவின் சஹோதரனுக்கு மாதுலனெனப் பெயராம், மாதாவின் பிதாவிற்கு மாதாமஹன் எனப் பெயராம். (26)

(அ-கை.) இவ்வாறு எல்லாச் சம்பந்திகளின் றரிசனத்தின் பின்னர் இச்சம்பந்திகளின் ஹிம்சை மகா அதர்மரூபமாம் என்றிவ்வாறுய மோகவடிவ விபரீத புத்தியால் விவேகமின்றியவனும், இந்த யுத்தத்தின்கண்ணுள்ள ஹிம்சையானது சாஸ்திர விஹிதமாதலால் தர்மரூபமாம் என்னும் யதார்த்தஞானத்தைப் பிரதிபந்தஞ்செய்வதும் மமத்துவ புத்தியைக் காரணமாயுடையதுமாய சோக மோஹ வடிவ சித்தக்கலக்கத்தால் நிவிர்த்தியாகிய விவேகத்தையுடையவனுமாகிய அர்ச்சுனனுக்குமுன் ஆரம்பித்த யுத்தவடிவ ஸ்வதர்மத்தினின்றும் உபாரமத்தையுண்டுபண்ணுவதாகிய இச்சையானது மஹா அனர்த்தத்தைக் கொடுப்பதாய் உற்பன்னமாயது. இப்பொருளை இப்போது நிரூபிக்கின்றனர்.

சு-ம். தாவந்ஹீக்ஷ்யுஹகூளஜ்ஞெயஃ லவாந்ந் லெய-ஞநவஸ்டிதாந் ।
க்ஷயாவரயாவிஷ்டோஃ விஷீந்நிஉஉவ்ய வீக்ஷ ॥ உ_எ ॥

4 7 1 5 6
ப-ம். தாந் - ஹீக்ஷ்யு - ல - கூளஜ்ஞெயஃ லவாந்-லெய-ந்-ஈவ

3 9 8 10 11 12 13
ஸ்டிதாந் (27) க்ஷயா . வரயா சுவிஷ்டோஃ - விஷீ உந் - ஐஉம் ஈவ்ய வீக்ஷ.

* மாதுலன் = அம்மான். † பௌத்திரன் = பேரன்.

(அ-ம்.) அக்குந்தியின் புத்திரனாகிய அர்ச்சுனன் அப்போர்க்களத்துள்ள அவ்வெல்லாப் பந்துக்களையும் நன்றாகப் பார்த்து, மிகுந்த இரக்கத்தால் வியாபித்தவனாய்த் துக்கத்தை யடைந்து இவ்வாறாகிய வசனங்களைக் கூறுவானாயினன்.

(வி-ம்.) ஹே திருதராஷ்டிரனே! அவ்வெல்லாப் பந்துக்களையும் பார்த்து இயல்பாயுள்ள இரக்கத்தால் வியாபிக்கப்பட்டவனாய அவ்வர்ச்சுனன் தாபவடிவ விஷாதத்தை யடைந்து இவ்வாறாகிய வசனங்களை ஸ்ரீ பகவானிடங் கூறுவானாயினன், ஈண்டு அவ்வர்ச்சுனனிடத்துள்ள இயல்பாய இரக்கத்தைத் தெரிவித்தற் பொருட்டு அந்தக் கிருபைக்கு பரா என்னும் விசேஷணங் கொடுத்ததாம். அல்லது (கூபயாவிஷ்டோ) என்னும் வசனத்தில். (கூபயா கவிஷ்டோ கூவிஷீடோ) என்றிவ்வாறு பதச்சேதஞ் செய்க இப்படிபக்ஷத்தில் அவ்வசனத்திற்கு இங்ஙனம் பொருள் கொள்க:—

தனது சேனையினிடத்தே முன்னரங் கிருபையிருந்தது. ஆனால் அக்காலத்திலோ அவ்வர்ச்சுனனுக்குக் கௌரவர்களின் சேனையிலும் அபரிமிதமாப் பெயரிய வேறுகிருபை புண்டாயது என்பதாம். இவற்றுள் (விஷீதந்நிதமுவாச) என்னும் வசனத்தால் விஷாதம் வசனவுச்சாரணம், என்னுமிரண்டிற்கும் சமானகாலத்தன்மை கூறப்பட்டது. அதனால் அவ்வசன உச்சாரண காலத்தில் தழுதழுத்த வாக்கு, கண்ணீர்பொழிதல் முதலிய விஷாதத்தின் காரியங்களின் இருப்பைப் போதிப்பித்ததாம். எனினின், இவ்வுலகத்தில் விஷாதமுடைய புருஷர்களின் வசனத்தில் இவ்வார்த்தை பிரசித்தமாய்க் காணப்படும். கௌந்தேய, என்னும் பதத்தின் அபிப்பிராயமோ முற்சுலோகத்தில் கூறியபார்த்த என்னும் பதத்தின் அபிப்பிராயம் போலென்றறிக, குந்திதேவியையே பிருதை யென்னும் நாமத்தாற் கூறப்பட்டதாம். (27)

(அ-கை.) இப்போது, ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் அர்ச்சுனன் கூறிய வசனத்தை (ஸஜு-ந உவாச) என்பது முதற்கொண்டு (வஷ-கூவ ஸம்வை)) என்னும் வாக்கியத்தின் முன்னுள்ள சுலோகங்களால் சஞ்சயர் கூறுகின்றார்:—

ஆண்டு சுவதர்மப் பிரவிர்த்தியின் காரணமாகிய தத்துவஞானத்தைப் பிரதிபந்திப்பது தனது சரீரத்திலும், பிறர் சரீரத்திலும், எனதென்னுமபிமானமாம் அவ்வபிமானத்தோற்றுக் கேவலம் அனாத்ம பதார்த்தத்தைத் தெரிபவனும், இந்த யுத்தத்தால் எனக்கும் பந்துக்கட்கும் அவசியம் நாசமுண்டாம் என்றிவ்வாறு காண்போனுமாகிய அவ்வர்ச்சுனனுக்கு மிகுதியாய சோகமுண்டாயது, அவ்வர்ச்சுனனது சோகத்தை, அச்சோகத்தால் வியாப்தமாய லிங்கங்களைக் கூறும் வாயிலாய் மூன்று சுலோகங்களால் நிரூபிக்கின்றார்:—

ஈஜு-ந உவாச.

சு-ம். த்ருஷ்ட்வேமம்ஸ்வஜநம்கூ ஷ்ண யுயுத்ஸும்ஸமுபஸ்திதம் ॥ உ.அ ॥
ஸீதம்கி33மாத்ருணி ச-வம்வபரிஶு-ஷ்யதி ।
வேபது-ஶ்ஶரீரேமே ரோமஹர்ஷஶ்சஜாயதே ॥

ப-ம். 6 4 5 1 3 2
த்ருஷ்ட்வா - இமம் - ஸ்வஜநம் க்ருஷ்ண - யுயுத்ஸும் - ஸமுபஸ்திதம்.
9 7 8 11 10 12 16 13
ஸீதம்கி - 33 - மாத்ருணி - ச-வம் - ம - பரிஶு-ஷ்யதி - வேபது-ச - ம -
15 14 19 18 17
ஶரீரே - மே . ரோமஹர்ஷஶ்ச - ம - ஜாயதே. (29)

(அ-ம்.) ஹே கிருஷ்ண! போர்புரிய எண்ணங்கொண்டவராய் இப்போர்க் களத்தை யடைந்திருக்கும் எனது பந்துக்களைப் பார்ப்பதனால், என் கால் கை முதலிய அவயவங்கள் சோர்கின்றன. என் முகமுங் காய்கின்றது, என் சரீரத்தில் நடுக்கமும் மயிர்க்கூச்சு முண்டாகின்றன.

(வி-ம்.) ஹே ஸ்ரீ கிருஷ்ண பகவன்! போர்புரியு மெண்ணமுடையவராய் இந்த யுத்தபூமியை யடைந்திருக்கும் பீஷ்மாதியராய எனது பந்துக்களைக் காணுதலால், எனது சித்தத்தின்கண் ணுண்டாம் சோகத்தால் எனது ஹஸ்தபாதாதி அவயவங்கள் மிகுந்த தளர்ச்சியை யடைகின்றன. அங்ஙனமே முகமும் உலர்கின்றது. எனது சரீரத்தில் மயிர்க்கூச்சும் நடுக்கமுமுண்டாகின்றன.

ஈண்டு, (சுவம்ப ஸுஷ்யதி) என்றிவ்வளவு கூறுவதானே நிர்வாகமுண்டாயினும், சிரமமுதலிய நிமித்தத்தால் முகத்திற்கு உலர்ச்சி யுண்டாகின்றது. அதன் அபேக்ஷையால் சோகஜன்ய முகத்தின் உலர்ச்சியில் அதிகத்தன்மையைக் கூறும் பொருட்டு, (வரிஸுஷ்யதி) என்னும் வசனத்தில் பரி என்னுஞ் சப்தங்கூறப் பட்டது. (28-29)

(அன்றியும்.)

சு-ம். மாணீவம் ஸ்ரம்ஸ்தெ ஹவஹாஸு தெகெவ வரிஷுஹ்யதெ ।
நவஸுகொஸ்ரீவஹாதாம் ஹ்ரஸ்தீவவதெஸ்ரநஃ ॥ ஈ0 ॥
நிஸ்தாநிவவஸ்ரயாஸி விவரீதாநி கெஸவ ।

17.

3 4 2 6 5 7
ப-ம். மாணீவம், ஸ்ரம்ஸதெ - ஹவஹாஸ - தகு - வ . ஹவ . வரிஷுஹ்யதெ.
14 12 15 13 11 8 9 10
ந - வ - ஸுகொஸ்ரீ - ஸவஹாதாம் - ஹ்ரஸ்தி - வ . தெ - ஸ்ரநஃ - (30) நிஸ்தி
18 16 19 17 1
தாநி - வ - வஸ்ரயாஸி - விவரீதாநி - கெஸவ.

(அ-ம்.) ஹே கேசவ! எனது கையினின்றும் காண்டீவ வில் நழுவுகின்றது, சரீரம் எரிகின்றது, மனமும் சுழல்கின்றது. ஆகையினால், எனது சரீரத்தை நிலை நிறுத்தவும் எனக்குச் சாமர்த்தியமின்று (30) அங்ஙனமே விபரீத சகுனங்களையுங் காண்கின்றேன்.

(வி-ம்.) ஹே பகவன்! அச்சோகத்தால் இக்காண்டீவ தனுசும் எனது கையினின்று கீழே நழுவுகின்றது, எனது சரீரம் மிகவும் எரிகின்றது. இவற்றுள் எனது தனுசு கீழே நழுவுகின்றது, என்னும் வசனத்தைக் கூறியதால் அர்ச்சுனன் தனது அதைரியவடிவ துர்ப்பலத் தன்மையைத் தெரிவித்ததாம். எனது சரீரம் எரிகின்றது, எனக் கூறியதால் அர்ச்சுனன் தனது உள்ளிலுள்ள சந்தாபத்தைச் சூசிப்பித்ததாம். இக்காலத்தில் எனது சரீரத்தை நிலைநிறுத்தவும் சமர்த்துடையனன்றும். இவ்வளவு கூறியதால் அர்ச்சுனன் தனது மூர்ச்சையவஸ்தையைத் தெரிவித்ததாம். எக்காரணத்தானெனின், மூர்ச்சை யவஸ்தையின் கண்ணே இப்புருஷன் தனது சரீரத்தை நிறுத்துவதில் சாமர்த்தியமின்றியவனிருப்பனென்க. இப்போது அம்மூர்ச்சை அவஸ்தையின் அடையில் வேறு தலைக் கூறப்படும்:—(ஹ்ரஸ்தீவவதெஸ்ரநஃ) இவ்வெனது மனமானது சுழலாநின்றவனைப் போலச் சுழல்கின்றது. அச்சுழல்வோனுக்குச் சமானமாய் மனத்தின் யாதொரு விகார விசேஷமுளதோ, எதனை (இவ) என்னுஞ் சப்தத்தாற் கூறப்பட்டு

எதோ, அவ்விகார விசேஷமே மூர்ச்சையின் முன்னுண்டாம் அவஸ்தையாம். (நவஸுகோதி) என்னும் பதத்தின்கண்ணுள்ள சகாரம் ஹேதுவின் வாசகமாம். அதற்கு இதுபோருளாம்:—எனது மனமானது மூர்ச்சையின்முன் அவஸ்தை யையடைந்ததனால், நான் இப்போது எனது சரீரத்தைத் தாங்கச் சமர்த்தனல்லேன் என்பதாம். இப்போது சரீரத்தை நிலைநிறுத்தச் சாமர்த்திய மின்மையில் வேறு நிமித்தமுங்கூறப்படுகின்றது:—(ஹிதாநி) ஹே பகவன்! சிறிதுகாலத்தில் துக்கத்தினை துக்கத்தினைச் சூசிப்பதாகிய இடது நேத்திரம் துடித்தல் முதலிய விபரீத சகுனங்களையும் நான் அனுபவிக்கின்றேன், இக்காரணத்தாலும் யான் நிலைநிறுத்தச் சாமர்த்தியமின்றியவனும். ஈண்டு, இருபத்திரட்டாவது சுலோகத்தில் (ரூபிஷ்வ ஷ்வஜநாரூஷ) என்னும் வசனத்தின் கண்ணுள்ள (ரூஷ) என்னும் சம்போதனையால் அர்ச்சுனன் இவ்வர்த்தத்தைச் சூசிப்பித்தனன்:—அர்ச்சுனனுகிய நான் அநுத்தம ஹேதுவாதலால் துக்கியாயிருக்கின்றேன், இக்காரணத்தால் நான் சோகஜன்ய கிலேசத்தை யனுபவிக்கின்றேன்.

சுடம். கூஷிஹ்ருஷிவாயகூ ஸரைவாணுஸ்ரு நிவ்ருத்திவாயகூ।
கயொரிரிகூர்வொரம்வ்ருஹ ரூஷஜ கர்ஹியேயதெ ॥

(பொருள்) (ரூஷ) என்னும் * தாது, சத்தையின் வாசகமாம்(ணை); என்னும் †பிரத்தியயம் ஆனந்தத்தின் வாசகமாம், சத்தை ஆனந்தம் என்னும் இரண்டினது வகுத்தன்மை வடிவ பரப்பிரஹ்மம் கிருஷ்ண என்னும் நாமத்தால் கூறப்படும் என்னும் சாஸ்திரத்தின் வசனத்தால் தாங்கள் சத்து ஆனந்த வடிவினராயிருத்தலின் சோகமோஹாதி விகாரங்களின்றியவரா யிருக்கின்றீர். கருத்திதுவாம்:—பந்துக்களின் தரிசனம் எனக்குண்டாயதுபோலத் தங்களுக்கும் அப்பந்துக்களின் தரிசனமுண்டாயது. ஆனால், என்னைப்போல் தங்களுக்குச் சோகமோஹாதி விகாரங்களுண்டாகவில்லை; இது தங்களிடத்துள்ள மஹா விசேஷத்தன்மையாம். ஆகையினால், தங்களைப் போன்று என்னையும் சோகமோஹ மின்றியவனைச் செய்வீராக என்னு மிவ்விவல்லாப்பொருளையும், "ஹே கிருஷ்ண," என்னும் சம்போதனத்தால் அர்ச்சுனன் குறிப்பித்தனன். அவற்றுள் நினது சோகத்தை நிவிர்த்தி செய்வதற்கு என்னிடத்தில் சாமர்த்தியமின்றும் என்னும் பகவானது ஆசங்கையை நிவிர்த்தி செய்யும்பொருட்டு, அவ்வர்ச்சுனன் "ஹே கேசவ" என்னுஞ் சம்போதனத்தால் பகவானிடத்தில் தனது சோகமோஹத்தை நிவிர்த்தி செய்யக்கூடிய சாமர்த்தியம் உண்டென்பதைச் சூசிப்பித்தனன். அவற்றுள், (கேஸவாதி நாமாநி தத்ராபி ஹரிவம்ஸாதௌ பொருளிதுவாம்:—ஜகத்தை உற்பத்திசெய்யும் பிரமதேவனிற்கு க, எனப்பெயராம். ஜகத்தைச் சம்ஹாரஞ் செய்யும் உருத்திர மூர்த்திக்கு ஈசன் எனப்பெயராம். அவ்விருவரையும் தமது அனுக்கிரகத்தின் பாத்திரமாமென யாவரிடைவரோ அவர் கேசவனெனப்படுவர். அத்தகைய தங்களுக்கு எனது சோகமோஹத்தை நிவிர்த்திசெய்வதிற் சற்றும் பிரயத்தனமின்றும். அல்லது, கிருஷ்ண என்னுஞ் சம்போதனத்தால் ஸ்ரீ பகவானிடத்தில் பக்தஜனங்களின் துக்கத்தின் நிவர்த்தகத்தன்மையை அர்ச்சுனன் தெரிவித்தனன். கேசவ என்னுஞ் சம்போதனத்தால் கேசி முதலிய துஷ்ட அசுரர்களை நிவிர்த்தி செய்து, எப்போதும் பக்தஜனங்களை இரக்ஷிக்குந் தன்மையுளதென் பதைச் சூசிப்பித்தனன். இத்தகைய தங்கள் சுபாவத்தால் என்னையும், சோகமோஹத்தை நிவிர்த்தித்து அவசியம் ரக்ஷித்தல் வேண்டும் என்பதாம். (30)

---

* தாது=பகுதி. † பிரத்யயம்=விகுதி.

(அ-கை.) ஆண்டு, நற்றொழிலின் காரணவடிவ தத்வஞானத்தின் பிரதி பந்தகமாகிய சோகத்தை முன்னர் முகவுலர்ச்சி முதலிய லிங்கத்வாரா மூன்று சுலோகங்களால் நிரூபித்தனர். இப்போது அச்சோகத்தாலுண்டாகிய விபரீதப் பிரவிர்த்தியின் காரணவடிவ விபரீத புத்தியை நிரூபிக்கின்றனர் :—

சு-ம். நவஸ்ரூயொந²வஸ்ரூயாஶி ஹதாவஜ²நஶோஹவெ ॥ நக ॥
(வ வ)

5 4 6 3 2 1

ப-ம். நவ - ஸ்ரூயஃ - ந²வஸ்ரூயாஶி - ஹதா - வஜ²நம் - ஶோஹவெ.
(வ வ)

(அ-ம்.) இந்த யுத்தத்தில் எனது பந்துக்களைக் கொல்வதால், யான் நன்மையைக் காண்கின்றேனில்லை.

(வி-ம்.) ஹே பகவன்! இப்போரின்கண் பீஷ்மாதி பந்துக்களின் மரணத்தால் நான் எனது சிரேயசைப் பார்க்கின்றேனில்லை. ஈண்டு, சிரேயசு என்றது புருஷார்த்தத்திற்காம். இப்புருஷன் எப்பதார்த்தத்தின் அடைவைவேண்டுகின்றனனோ, அப்பதார்த்தம் புருஷார்த்த மெனப்படும். அந்தப் புருஷார்த்தவடிவ சிரேயசு இருவகையாம் :—ஒன்றே திருஷ்ட சிரேயசும் மற்றொன்றே அதிர்ஷ்ட சிரேயசுமாம். அவற்றுள் இவ்வுலகத்தின்கண்ணுள்ள ராச்சியமுதலிய சுகங்கட்குத் திருஷ்ட சிரேயசெனப் பெயராம். சுவர்க்காதி சுகங்கட்கு அதிர்ஷ்ட சிரேயசெனப் பெயராம், அவ்விரு வகையாய சிரேயசின் பிராப்தியை இப்பந்துக்களின் மரணத்தால் நான் பார்க்கின்றேனில்லை. ஹே அர்ச்சுன! இப்போரின்கண்ணே தன்னவரைக் கொல்லுதலால் சிரேயசின் அடைவோ உண்டாம்; ஆனால் இந்த சிரேயசு வடிவபலத்தின் பிராப்தி நன்றாய் விசாரஞ்செய்ததின் பின்னர்ப் பிரதீதியாம்; சிறிது விசாரத்தாற் பிரதீதியாவதின்றும் என்னும் பகவானது ஆசங்கையை நிவிர்த்தி செய்தற்பொருட்டு, அர்ச்சுனனுல் அநுபஶ்யாமி, என்னும் வசனத்தில் அது என்னும் சத்தங்கூறப்பட்டது. அவ்வது என்னுஞ் சத்தத்திற்கு 'பின்னர்' என்னும் பொருள் பெறப்படுகின்றது. மூன்றிருத் தாந்தங்களை யபேக்ஷித்தே 'பின்னர்' எனக்கூறல்வேண்டும். ஆகையினுல் இப் பொருள் துணியப்பெறும் :—மிகுதியாய் விசாரஞ்செய்த பின்னரும் நான் பந்துக்களின் மரணத்தால் எனது சிரேயசைப் பார்க்கின்றேனில்லை என்பதாம். (வஜ²நம்) எனக்கூறியதால் அர்ச்சுனன் இப்பொருளைச் சூசிப்பித்தனன் :— எனது சம்பந்திகளன்றியவரை யுத்தத்திற் கொல்வதாலும் நான் சிரேயசைக் காண்கின்றேனில்லை; ஏனெனின், சாஸ்திரத்தில் இது கூறப்பட்டுளது :—

சு-ம். ஏவமேவம்ரூபஃ ஶக்ய அஹம்ரூணைவம் * வித்⁴ரூநேந ।
(வ) (த)
வரிஷ்ரூடோ³யொமயாரூகூஶ்ரூரணைவாஹி ஶ²ரூவொஹந்ரூ ॥ ந ॥
(த உ)

(பொருள்) இவ்வுலகத்தின்கண் இருவிதமாகிய புருஷர்களை சூரிய மண்டலத்திற் செல்கின்றனர்; ஒருவரோ யோகத்தோடுற்ற சந்நியாசியர், மற்றவரோ யுத்தத்தில் எதிர்த்து நின்று மரணத்தை யடைந்தவர் என்பது முதலிய சாஸ்திர வசனத்தால் போரில் இறக்கும் புருஷனுக்கே சுவர்க்காதி சிரேயசின் அடைவு கூறப்பட்டுளது. கொல்பவனுகிய புருஷனுக்குக் கிஞ்சித்தேனும் சிரேயசின் அடைவு சாஸ்திரத்தாற் கூறப்படவில்லை. ஆகையினுல் எனது பந்துக்களல்லாத ஜனங்களைக்கொல்வதாலும், எனக்குச் சிரேயசின் அடைவுண்டாகாதபோது எனது பந்துக்களைக் கொல்வதால் எனக்குச் சிரேயசினடைவு யாங்ஙனமுண்டாம்; மற்றே

* (ஹநி²நஃ)=பேதிப்பவர்.

உண்டாகாதென்பதே; இவ்விவ்வெல்லாப் பொருள்களையும் அர்ச்சுனன் (வஜ்ஜநம்) என்னுஞ் சத்தத்தாற் சூசிப்பித்தனன். சித்தசாதனவடிவ தோஷத்தை நிவிர்த்தித்தற் பொருட்டு அர்ச்சுனனுல் (சூஹவெ) என்னும் பதங்கூறப்பட்டது. ஏனெனின், (சூஹவெ) என்னும் யுத்தத்தின் வாசக பதத்தைக் கூறிவிடின், யுத்தமின்றிப் பந்துக்களின் ஹிம்சையால் சிரேயசின்பிராப்தி ஒரு சாஸ்திர முணர்ந்த புருஷனும் அங்கீகரிப்பதில்லை. அவ்வர்த்தத்தை அர்ச்சுனனுலுஞ் சித்தஞ் செய்யப்பட்டது. ஆகையினுல், சித்தித்த அர்த்தத்தின் சாதனவடிவ சித்த சாதன தோஷம் அவ்வர்ச்சுனனுக்குண்டாம். அத்தோஷத்தை நிவிர்த்தி செய்யும் பொருட்டு, அர்ச்சுனனுல் (சூஹவெ) என்னும் பதங்கூறப்பட்டது; கருத்து தவாம் :—யுத்தமின்றிச் சம்பந்திகளைக் கொல்லுதலால், சிரேயசின் பிராப்தியை ஒருபுருஷனும் அங்கீகரியார். யாதேனு யுத்தத்திலும் சம்பந்திகளைக் கொல்லுதலால் சிரேயசின் அடைவைப் பார்க்கின்றேனில்லை என்பதாம். (31)

(அ-கை.) ஹே அர்ச்சுன! யுத்தத்தில் நினது பந்துக்களைக்கொல்லுதலால் சுவர்க்கரூப அதிஷ்டப் பிரயோஜனத்தின் பிராப்தியோ உண்டாகவேண்டாம். ஆனுல் உனக்கு அந்த சுவஜனங்களின் கொல்கையால் வெற்றி, ராஜ்யம், விஷயசுகமென்னும் திருஷ்டப் பிரயோஜனத்தின் பிராப்தியோ * நிர்விவாதமாம். என்னும் பகவானது ஆசங்கைக்கு அர்ச்சுனன் கூறுகின்றன் :—

சு-ம். நகாரஷேவிஜயம் கூஷ்ணநவராஜ்ய லவாநிய ।
கிம்நாராஜ்ய மொவிந ஜீவிதநவா ॥ கூ ॥

			3	4	2	1	7	5	6			9	8		
ப-ம்.			ந	காரஷே	விஜய	கூஷ்ண	ந	ய	ராஜ்ய			லவாநி	ய		
13	11	12			13	15	14		17		16				
கிம்	நஃ	ராஜ்ய	ந		மொவிந	கிம்	மொஜீவி		தந		வா.				

(அ-ம்.) ஹே கிருஷ்ண! எனக்கு வெற்றியும் வேண்டாம், ராஜ்யமும்வேண்டாம், சுகமும் வேண்டாம். ஹே கோவிந்த! எனக்கு ராஜ்யத்தாலும், விஷயசுகத்தாலும், வெற்றியாலும் என்ன பயனுண்டாம். மற்றே அவற்றின் பிராப்தியால் கிஞ்சின்மாத்திரமும் பயனுண்டாகாதென்பதாம்.

(வி-ம்.) ஹே கிருஷ்ணபகவன்! எனது பந்துக்களின் ஹிம்சையாலுண்டாம் வெற்றியை யான் விரும்பேன், அந்த வெற்றியின் அனந்தரமுண்டாவதாகிய ராஜ்யத்தின் அடைவையும் விரும்பேன். அங்ஙனமே ராஜ்யத்தினடைவின் பின்னருண்டாம் விஷயசுகத்தினடைவையும் யான் விரும்பேன். இவ்வளவு கூறியதால் அர்ச்சுனன் இப்பொருளைக் குறிப்பித்தனன் :—இவ்வுலகத்தில் அவ்வப்பயனின் வேட்கையுடைய புருஷரே அவ்வப்பலத்தின் உபாயத்தில் முயல்வர்; பலத்தில் இச்சையின்றிய புருஷர் அப்பலத்தின் உபாயத்தில் பிரவிர்த்தியார். எங்ஙனம் போஜனவடிவ பலத்தினடைவில் வேட்கையையுடைய புருஷனே போஜனவடிவ பலப்பிராப்தியின் உபாயவடிவ அன்னம் சமைத்தலாகிய பிரவிர்த்தியின்கண் முயல்வன். போஜனத்தின் இச்சையின்றிய புருஷன் அன்னத்தைப் பாகஞ்செய்வதில் பிரவிர்த்தியான். அங்ஙனம் வெற்றி, ராஜ்யம், விஷயசுகம் என்னுமிவற்றின் பலத்தினடைவில் எப்புருஷனுக்கு வேட்கையுண்டாமோ, அப்புருஷன் அவ்வெற்றிமுதலிய பலப்பிராப்தியின் உபாயவடிவ யுத்தத்தில் பிரவர்த்தனுவன்.

* நிர்விவாதம் = விவாதமற்றது.

ஆனல், எனக்கோ அவ்விஜயம் ராஜ்யம் முதலிய பலங்களை யடைவதில் இச்சை யின்றும். ஆகையினல், இந்த யுத்தவடிவ உபாயத்தில் எனது பிரவிர்த்தி சம்பவியாது. ஹே அர்ச்சுன! அந்நிய துரியோதனுதிகளின் இச்சையின் விஷயவடிவமாய இந்த வெற்றி, ராஜ்யம், சுகம் என்னுமிவற்றில் நினது இச்சை யின்மையின் காரணமென்னை கொலோ என்னும் பகவானது சங்கைக்கு அர்ச்சு னன் கூறுகின்றன். (கிம்நோராஜ்யே) என, ஹே கோவிந்த! தர்மாதர்மத்தின் ஸ்வரூபத்தைத் தெரியாதவராகிய இத்துரியோதனுதியர்க்கு இந்த ராஜ்யம் சுகம் முதலிய விஷயங்களில் இச்சையுண்டாகுக. ஆனல், தர்மாதர்மங்களின் ஸ்வ ரூபத்தைத் தெரிந்த எனக்கு இப்பிரசித்த ராச்சியத்தாலும் விஷயசுகங்களாலும் ஜீவனத்தின் சாதனவடிவ வெற்றியாலும் எப்பயனின் அடைவுண்டாம்; மற்றோ அந்த ராஜ்ய முதலியவற்றல் எனக்குக் கிஞ்சின்மாத்திரப் பிரயோசன சித்தியு முண்டாகாது. கருத்திதுவாம்:—வெற்றி, ராஜ்யம், போகம் என்னும் இம்மூன்ற னடைவின்றியே வனத்தில் வாசஞ்செய்யும் எனக்கு அந்தச் சுந்தராதித்தானை, இவ்வுலகத்தின்கண் கீர்த்தியோடுகூடிய ஜீவனமுண்டாம். ஆகையினல் இந்த ராஜ் யாதிகளின் பிராப்தியில் எனக்கு இச்சையின்றும். ஈண்டு, ஹே கோவிந்த! என்னுஞ் சம்போதனத்தால் அர்ச்சுனன் இப்பொருளைக் குறிப்பித்தனன்:—(மோ) என்பது இந்திரியத்திற்காம். அவ்விந்திரியங்கட்கு அதிஷ்டான ரூபத்தால் நித் தியமாகவே இருப்போனுக்கு, கோவிந்தனெனப் பெயராம், இத்தகைய அந்த ரியாமி வடிவமாகிய தாங்கள் எனக்கு இவ்வுலகத்திலுள்ள ராச்சிய முதலியவற் றின் பலங்களினின்றும் வைராக்கிய மிருத்தலை நன்றாக உணர்ந்துள்ளீர் என்பதாம். (32)

(அ-கை.) ஹே அர்ச்சுன! தர்ம சாஸ்திரத்தின்கண் இது கூறப்பட் டுளது:—

சு-ம். மூஜளஉ ஸாதாவிதரள ஹாயபூஹவாயஷ்விஸிஸுஷு வஷ்க ।
கூவுகூாயபூஸதம்கூபூதா ஹதபூவுாஅநுரவுவீஸ ॥

(பொருள்) தனது வயோதிகமாகிய தாய் தந்தையரும் பதிவிரதையாகிய ஸ்திரீயும், பால்ய அவஸ்தையையுடைய புத்திரரும் ஆகிய எல்லாப்பற்றுக்களையும், இப்புருஷன் செய்யத்தகுதியல்லாத அனேக காரியங்களைச் செய்தும் இரகூஷித்து வளர்ப்பதே தகுதியாம், என்னுமிவ்வார்த்தை மநுபகவான் கூறியிருக்கின்றனர். இது முதலியசாஸ்திரங்களின் வசனத்தால் வயோதிக மாதா பிதா முதலிய சம் பந்திகளை ரகூஷித்தற்பொருட்டு, அதர்மத்தைச் செய்யினும் அது இப்புருஷனுக்குத் தோஷத்தின்பொருட்டாவதின்றும். ஆகையினல் ஒருக்கால் உனக்கு இந்த ராஜ்ய சுகாதிகளினின்றும் வைராக்கியமுண்டாயினும், இந்த நினது சம்பந்திகட்கு ராஜ் யாதி சுகத்தின் பொருட்டு நீ யுத்தத்திற் பிரவிர்த்திக்கல்வேண்டும் என்னும் பகவானது ஆசங்கைக்கு அர்ச்சுனன் கூறுகின்றன்:—

சு-ம். யெஷாஅயுகூாங்கூதிதம் நோராஜ்யம்ஹொமாஃ வஷ்வாநிவ ।
தஇஉ5வஹ்லிதாயஷ்டெ வுராணாஅவ்யுகூாயநாநிவ ॥ ஈக ॥

2 3 8 1 4 5
ப-ம். யெஷாம் - கூயுது - காங்கூதிதம் - நஃ - ராஜ்யம் - ஹொமாஃ - வஷ்
7 6 9 10 16 15 11 14 13 12
வாநிவ - நத - இஉ - கூவஹ்லிதாஃ - யஷ்டெ - வுராணாஅ - தயுகூாயநாநிவ.

(அ-ம்.) ஹே பகவன் எச்சம்பந்திகளின் பொருட்டு ராஜ்யம், விஷயம், சுகம், என்னுமிவற்றை யபேக்ஷிக்கின்றிலேமோ, அவர்கள் தமது உயிர்பொருள் என்னுமிவற்றிலுள்ள ஆசையைவிடத் துணிந்து இப்போரின் முன்வந்து நிற்கின்றனர்.

(வி-ம்.) ஹே பகவன்! வகாங்கியாகிய புருஷனுக்கோ இந்த ராச்சியமுதலி யவற்றில் அபேக்ஷையுண்டாவதின்றும், மற்ஹே பந்துக்களின் பொருட்டு இந்த ராஜ்யம் சுகசாதனரூபவிஷயம், விஷயஜன்யசுகம் என்னுமிவற்றினபேக்ஷை யெனக்குண்டாகின்றது. அத்தகைய இவ்வெனது பந்துக்கள் தங்களது உயிர்பொருளென்னுமிவற்றிலுள்ள ஆசையைவிடுத்து, மரணத்தின் பொருட்டு இப்போர்க்களத்தில் நிற்கின்றனர். ஆகையினால் என்பொருட்டும் எனது சம்பந்திகளின் பொருட்டும் நான் யுத்தவடிவ காரியத்திற் பிரவிர்த்தியேன். ஈண்டு, மூன் சுலோகத்தில் போகசாதனத்தால் விஷயஜன்யசுகம் கொள்ளப்பட்டது. ஆயினும் இச் சுலோகத்தில் போகத்தினின்றும் சுகத்தை வேறுகக் கொள்ளப்பட்டது. ஆகையினால் ஈண்டு போகசாதனத்தின் இலக்கணைவிருத்தியால் சுகத்தின் சாதனவடிவ பரிசமுதலிய விஷயங்களைக்கொள்க. (ஆராணாஞ் தூகூய நாஹிய) என்னும் வசனத்தில், பிராணத்தியாகம், தனத்தியாகம் என்னுமிவை கூறப்பட்டன. ஜீவித அவஸ்தையில் பிராணத்தியாகம், தனத்தியாகம் என்னுமிவை சம்பவியாவாதலால், பிராணசாதனத்தின் இலக்கணை விருத்தியால் பிராணனிடத்துள்ள ஆசையையும், தனசாதனத்தினிலக்கணை விருத்தியால் தனத்தின் ஆசையையுங்கொள்க. அப்பிராணாதிகளின் ஆசையைப்பரித்தியாகஞ் செய்வது ஜீவித அவஸ்தையின்கண்ணும் சம்பவிக்கின்றது. ஆண்டுத் தனது பிராணனைத்தியாகஞ்செய்தும் தனது பந்துக்களின் சுகத்தின் பொருட்டுத் தனத்தின் ஆசையுண்டாமென்னுஞ் சங்கையை நிவிர்த்தித்தற் பொருட்டுப் பிராணனின் வேறுய்த்தனங்கிரகிக்கப்பட்டது. (33)

(அ-கை.) ஹே அர்ச்சுன! எப்பந்துக்களின் சுகத்தின் பொருட்டு நினக்கு இந்த இராஜ்யமுதலியவற்றில் இச்சையுண்டாயதோ அந்த உனது பந்துக்கள் இப்போரின்கண் வரவில்லையென்னும் பகவானது ஆசங்கையை நீக்குவான், அவ்வர்ச்சுனன் அப்பந்துக்களை விசேஷமாய் வர்ணிக்கின்றனன்.

கு-ம். ஆசார்யாஃ பிதரஃ புத்ராஸ்தாதாஸ்ததைவச பிதாமஹாஃ
மாதுலாஃ ஶ்வஶுராஃ பௌத்ராஃ ஶ்யாலாஃ ஸம்பந்திநஸ்ததா ॥ஈச॥

ப-மீ. 1 2 4 3 5 6
ஆசார்யாஃ - பிதரஃ . புத்ராஃ - ததா - ச - பிதாமஹாஃ
7 8 9 10 12 11
மாதுலாஃ - ஶ்வஶுராஃ - பௌத்ராஃ ஶ்யாலா - ஸம்பந்திநஃ - ததா.

(அ-ம்.) ஹே பகவன்! இப்போர்க்களத்தி லுள்ளவர்களிற் சிலர் எமது ஆசார்யராம், சிலர் தந்தையராம், சிலர் புத்திராம், சிலர் பாட்டனாராம், சிலர் மாதுலராம், சிலர் மாமனாராம், சிலர் பௌத்ரர்களாம், சிலர் மைத்துனர்களாம், சிலர் சம்பந்திகளாம்.

(வி-ம்.) இச்சுலோகத்தின் பொருள் வெளிப்படையாம், இதனபிப்பிராயமிதுவாம்:—இப்போர்க்களத்தில் எவ்வளவு யுத்த வீரர்கள் ஒருங்குகூடியிருக்கின்றனரோ, அவ்வனைவரும் எனது சம்பந்திகளாம். அச்சம்பந்திகளின் வேறுய் ஒருவருமின்றும், அவ்வெல்லாச் சம்பந்திகளும் இப்போது மரணத்தை யுடையத்

தலைப்பட்டிருக்கின்றனர். ஆகையினால் எச்சம்பந்திகளின் ராஜ்ய சுகாதிகளின் பொருட்டு யான் யுத்தத்தில் பிரவிர்த்திப்பது என்பதாம். (34)

(அ-கை.) ஹே அர்ச்சுன! நீ ஒருகால் கிருபையினால் இப்பீஷ்மத்துரோணதியரைக் கொல்லாவிடினும், இப்பீஷ்மத்துரோணதியர் ராஜ்யத்தின் லோபத்தால் உன்னை யவசியங்கொல்வர்; ஆகையினால் நீயே இப்பீஷ்மத்துரோணதியரைக் கொன்று இராச்சியத்தை அநுபவித்துக்கொள், என்னும் பகவானது ஆசங்கைக்கு அர்ச்சுனன் கூறுகின்றான்.

சு-ம். ஹதாநஹஞ்ஜிஹ்வாதி வதொவியோஷ்டுந ।
கவிமெத்ரைலொக்யராஜ்யஸ்ய ஹெதோஃ கிந்நுமஹீக்ருதெ ॥ந-ரு॥

ப-ம். 4 9 8 10 2 3 1
ஹதாந்ந - ந - ஹதான்ம - ஜிஹ்வாதி - வதஃ - கவி யோஷ்டுந -
7 5 6 12 11
கவி - மெத்ரைலொக்யராஜ்யஸ்ய - ஹெதோஃ கிந்நு - மஹீக்ருதெ.

(அ-ம்.) ஹே மதுசூதன! என்னைக் கொல்லினும் இவ்வாசாரியர்களை மூவுலகுங் கிடைப்பதாயிருப்பினுங் கொல்ல இச்சியேன், எனின் இம்மண்ணுலகினைடவின் பொருட்டு, இவர்களைக் கொல்வதில் எனக்கு எங்ஙனம் இச்சையுண்டாம்.

(வி-ம்.) ஹே மதுசூதன பகவான்! கூர்மையுள்ள ஆயுதங்களால் என்னைக் கொல்பவராயினும், முற்கூறிய ஆசாரியர்களைக் கொல்வதில் எனக்கு இச்சை மாத்திரமுமுண்டாகாதாயின், அவ்வாசாரியர்களைக் கூர்மையாகிய சஸ்திரங்களால் யான் எவ்வாறு கொல்வேன், மற்றே கொல்லேன். அல்லது, அவ்வாசாரியர் முதலியோரைக் கொல்வதால் ஒருகால் பூமி, சுவர்க்கம், பாதாளம் என்னும் மூவுலகுங் கிடைப்பதாயிருப்பினும், இவ்வாசாரியர் முதலியோரைக் கொல்ல இச்சியேனையின் இம்மண்ணுலகினைடவின் பொருட்டு இவர்களைக் கொல்லேனென்பதில் யாது கூறவேண்டும். ஈண்டு, (ஹெயோஷ்டுந) என்னுஞ் சம்போதனத்தால், அர்ச்சுனன் ஸ்ரீ பகவானிடத்து வைதீகமார்க்கத்தின் பிரவர்த்தகத் தன்மையைச் சூசிப்பித்ததாம். இத்தகைய வைதீகமார்க்கத்தின் பிரவர்த்தகராய தாங்கள் ஆசாரியர் முதலியோரைக் கொல்வதில் என்னை எதன்பொருட்டுப் பிரவிர்த்திக்கச் செய்கின்றீர்கள் என்பதாம். (35)

(அ-கை.) ஹே அர்ச்சுன! ஆசாரியர் முதலியோரின் மரணத்தில் நீ தோஷத்தை யங்கீகரிக்கிலை, அவர்களைவிட்டு வேறு திருதராஷ்டிரரின் புத்திரராகிய துரியோதனாதியரைக் கொல்வாய். எனெனின், இத்துரியோதனாதியர் உன்னை அரக்குமாளிகையில் அக்கினி முதலியவற்றால், அநேகவிதமாய்க் கோரமான துக்கத்தை யடையச்செய்தனர். ஆகையினால் அத்துரியோதனாதிகளைக் கொல்வதில் உனக்கு விருப்பமுண்டாம் என்னும் பகவானது ஆசங்கைக்கு அர்ச்சுனன் கூறுகின்றான் :—

சு-ம். நிஹத்ய தார்தராஷ்ட்ராந்நஃ கா ப்ரீதிஃ ஸ்யாஜ்ஜநார்தந ।
பாபமெவாஸ்ரயெதஸ்மாந் ஹத்வைதாநாததாயிநஃ ॥ந-சு॥

ப-ம். 3 2 4 5 6 7 1
நிஹத்ய - தார்தராஷ்ட்ராந் - நஃ - கா ப்ரீதிஃ - ஸ்யாத் - ஜநார்தந -
12 13 14 11 10 8 9
தந - பாபம் - ஏவ - ஆஸ்ரயெத் - அஸ்மாந் - ஹத்வா - ஏதாந் - ஆததாயிநஃ.

(அ-ம்.) ஹே ஜநார்த்தன! இத்துரியோதனுதியரைக் கொல்வதால் எனக்கு என்ன பிரீதியுண்டாம்; மற்றே ஒரு பிரீதியு முண்டாகாது. மாறாய் இவ்வாத தாயிகளைக் கொல்வதால் யாங்கள் பாபமே யாசிரயிக்கும்படி நேரிடும்.

(வி-ம்.) ஹே ஜநார்த்தன! திருதராஷ்டிரரின் புத்திரராகிய இத்துரியோத னுதியர் எனது சகோதரர்களாம்; அச்சகோதரர்களைக் கொல்வதால் எங்கட்கு யாது சுகமுண்டாம். மற்றே அவர்களைக் கொல்வதால் எங்கட்குச் சிறிதுமாத் திரமும் சுகத்தின் பிராப்தியுண்டாகாது. கருத்துவாம்:—மூட ஜனங்களது பிரியவிஷயமாகிய க்ஷணமாத்ர மிருப்பதாய சுகாபாசத்தின் லோபத்தால் பகு கால பரியந்தம் நரகப் பிராப்தியின் ஹேதுவாகிய இப்பந்துக்களது ஹிம்சையைச் செய்வது எங்கட்குத் தகுதியன்றும். ஈண்டு, சுகரூபத்தன்மையற்றதும் சுகத் தைப்போன்று பிரதீதியாவது மெதுவோ அதைச் சுகாபாசமென்பர். அத் தகையது விஷயஜன்ய சுகமாம். ஹே ஜநார்த்தன! என்னுஞ் சம்போதனத்தால் அர்ச்சுனன் இப்பொருளைக் குறிப்பித்தனன்:—ஹே பகவன்! இத்துரியோதனு தியர் ஒருகால் கொல்லவே யோக்கியராயினும் தாங்களே இவர்களைக் கொல்லு வீராக. ஏனெனின், பிரளயகாலத்தில் சர்வ ஜனங்களைக் கொல்வதாலும், தங் களைப் பாபங் கிஞ்சித்தேனும் பரிசியாதன்றே.

ஹே அர்ச்சுன! சாஸ்திரத்தில் இது கூறப்பட்டுளது.

சு-ம். ஸுஹ்ருதொஹ்ரஹ்ருதெஸ்வஸ்ரவாணியுநாவஹ: ।
கேஷாந்து ஹாராவஹாரீஹ ஷபெதெ கூதகாயிந: ॥

(பொருள்.) நெருப்பை வைப்பவனும், விஷங்கொடுப்பவனும், ஆயுதங் கையி லுடையவனும், பாதனத்தைக் கவர்பவனும், பாரக்ஷேத்ரத்தைக் கவர்பவனும், பாஸ்திரீயை யபகரிப்பவனும் ஆகிய இவ்வறுவருந் * ஆதகாயிகளெனப்படுவர். ஆனால், இத்துரியோதனுதிகளிடத்தோ அவ்வறுவகையாகவே ஆதகாயித்தன்மை யுளது. அன்றியும் வேறு சாஸ்திரத்தின்கண் இது கூறப்பட்டுளது:—

சு-ம். கூதகாயிநமாயாந்தம் ஹந்நாதெவா விசாரயந் ।
நாதகாயிவதெநாஸ்தி ஹந்தாரம் முச்யதெ ஹதை: ॥

(பொருள்.) அகஸ்மாத்தாய் எதிரில்வந்த ஆதகாயி புருஷனை அக்காலத்தி லேயே புத்திமானுகிய புருஷன் கொல்லல்வேண்டும். அவனைக் கொல்வதில் குற் சித்தேனும் விசாரஞ்செய்ய வேண்டுவதில்லை. எக்காரணத்தானெனின், அவ் வாதகாயி புருஷனைக் கொல்வதில் அவனைக் கொல்பவனுகிய புருஷனுக்குக் குற் சித்தேனும் தோஷமுண்டாவதின்றும். இச்சாஸ்திர வசனத்தால் ஆதகாயி புருஷனது மரணத்தால் தோஷத்தின் அபாவம் பிரதீதியாகின்றது. ஆகையினால் உன்னால் இத்துரியோதனுதி ஆதகாயிகள் அவசியங் கொல்லத் தகுதியுடையவராம். என்னும் பகவானது ஆசங்கைக்கு அர்ச்சுனன் கூறுகின்றனன். (வாவஷிஹ) என, இத்துரியோதனுதி ஆதகாயிகளையும் கொல்பவனுகிய நான் அவசியம் பாவத் தைச்செய்தவனுவேன், அல்லது இவர்களைக் கொல்வதால் எனக்குப் பாபமே யுண்டாவதன்றி வேறுதிருஷ்டப் பிரயோஜனம் அதிர்ஷ்டப் பிரயோஜனம் என்னு மிவற்றினிடை வுண்டாவதின்றும். (கூதகாயிநமாயாந்தம் ஹந்நாஸ்) என முன்னர்த் தாங்கள் கூறியவசனம் ஆதகாயி புருஷர்களைக்கொல்ல விதானஞ் செய்கின்ற

* ஆதகாயிகள்=கொடும்பாவியர்.

தாயினும், அவ்வசனம் அர்த்த சாஸ்திரத்தினதாம், தர்ம சாஸ்திரத்தின் வசன மன்றும்; அவ்வர்த்த சாஸ்திரத்தினும் தர்மசாஸ்திரம் பலவானும். ஆனால், தர்மசாஸ்திரமோ பிராணி மாத்திரத்தின் ஹிம்சையை நிஷேதஞ்செய்கின்றது. அத்தர்மசாஸ்திரம் :—(ஸவனவவாவிஷ்தசோயஃ கூயஂாஃ கூஉநாஸஂ) எனவும், (நஹிம்ஸ்யாஃ ஸவபூாஹஂதாநி) எனவுமாம்; பொருள் :—எப்புருஷன் தனது குலத்தை நாசஞ்செய்கின்றானே, அவனே அத்தியந்தம் பாபிஷ்டனென்றறிக, இப்புத்திமானாகிய புருஷன் சர்வபூதப் பிராணிகளையுங் கொல்லற்க என்பதாம். இத்தர்மசாஸ்திரம் முற்கூறிய அர்த்த சாஸ்திரத்தினின்றும் பலவானும். ஆகையினு லிப்பந்துக்களைக் கொல்வது எனக்குத் தகுதியன்றும்.

அல்லது (வாவசேவாஸ்ரயெஸ) என்பது முதலிய பாதிச்சுலோகத்திற்கு இவ்வாறு வேறு வியாக்கியானஞ் செய்க; ஹே அர்ச்சுன! இத்துரியோதனாதிகளைக் கொல்வதில் உனக்குப் பிரீதியுண்டாகாவிடினும் உன்னைக் கொல்வதில் இத்துரியோதனாதியர்க்குப் பிரீதியுண்டாம். ஆகையினால், இத்துரியோதனாதியர் உன்னை அவசியங் கொல்வர் என்னும் பகவானது ஆசங்கைக்கு அர்ச்சுனன் கூறுகின்றான் :—

(வாவசேவ) என வாவம் 5, வைவ 6, கூஸ்ரயெஸ 7, சுஷ்ருஷு 1, ஹதா 2, வதாரு 3, கூததாயிநஃ 4.

(பொருள்.) என்னைக் கொல்லவந்து நிற்கும் இத்துரியோதனாதி ஆததாயிகட்குக் கேவலம் பாவமேயுண்டாவதன்றி, வேறொரு சுகத்தை இவர்களடையார். கருத்துவாம் :—இத்துரியோதனாதியர் முன்னோர, ஆததாயிகளாகவேயிருக்கின்றனர்; யுத்தஞ் செய்யாதவனாகிய என்னைக்கொல்வதால் இப்போதும் இவர் பாபியரேயாவர் இதில் யாதொரு பாபமும் என்னைப்பற்றாது. ஆகையால் எனக்குக் கிஞ்சித்தேனும் கேடுண்டாகாது. (36)

(அ-கை.) ஆண்டு அந்நியப்பிராணிகளை ஹிம்சிப்பதில் யாதொரு பலமுமின்றும், மாறாய் அநர்த்தத்தினடைவே யுண்டாம். ஆகையினால், எந்தப்பிராணியையுங் கொல்வது தகுதியன்றும். இவ்வார்த்தை (நஉஸ்ரயொநுவ்ஸ்யாதி) என்பதுமுதல் இதுபரியந்தம் அர்ச்சுனனுற் கூறப்பட்டது; இப்போது இவ்வார்த்தையைச் சமாப்தி செய்கின்றான்.

சு-ம். தஹ்யாநாஹுரவயம்ஹதாந் யாதாயுஷாந ஸ்வைாம்யவாந ।
ஸ்வஜநம்ஹிகயம்ஹத்வாஸுகிநஃ ஸ்யாமமாயவ ॥

ப-ம். தஹ்யாஸ் 2, நு 7, கஹுரஃ 8, வயம் 3, ஹதாந் 6, யாதாயுஷாந 5, ஸ்வைாம்யவாந 4, ஸ்வஜநம் 10, ஹி 9, கயம்12, ஹத்வா 11, ஸுகிநஃ13, ஸ்யாம 14, மாயவ1.

(அ-ம்.) ஹே மாதவ! அவ்வாற்றல் எனது பந்துக்களாகிய திருதராஷ்டிரரது துரியோதனாதி மைந்தரையான்கொல்வது தகுதியன்றும். என்னை? எனது பந்துக்களைக் கொல்வதால், யான் எங்ஙனம் சுகியாவேன், மற்றே சுகியாகேன் என்பது ஒருதலையேயன்றே.

(வி-ம்.) ஈண்டு, (தவ்ராஹ்) என்னும் தத், சப்தத்தால் முற்கூறிய பந்துக்களின் ஹிம்சையில் அதிர்ஷ்ட ரூபபலத்தின் அபாவம் அனர்த்தத்தின் பிராப்தி என்னு மிரண்டையுங் கொள்க, அதனுலிப்பொருள் துணியப்பெறும் :—எக்காரணத்தால் பந்துக்களின் ஹிம்சையால் சுவர்க்காதிவடிவ அதிர்ஷ்ட பலத்தின் பிராப்தியுண்டாகாதோ மாறுய் மகா அனர்த்தத்தின் பிராப்தியுண்டாமோ, அக்காரணத்தால் யான் எனது தாரியோதனாதி பந்துக்களைக் கொல்லவிரும்பேன். ஹே அர்ச்சுன! பந்துக்களைக் கொல்வதால் சுவர்க்காதிவடிவ அதிர்ஷ்ட சுகத்தின் பிராப்தியுண்டாகாவிடினும் இவ்வுலகத்தின் திருஷ்ட சுகத்தினடைவு உனக்கு அவசியமுண்டாம் என்னும் பகவானது ஆசங்கைக்கு அர்ச்சுனன் கூறுகின்றன்:—(வுஜூம்ஹீ தி) ஹே மாதவ! சிரேஷ்ட புருஷர்கட்குத் தமது சம்பந்திகளின் சுகத்தின் பொருட்டே பிரவர்த்தியுண்டாம். ஆகையினுல் எனது சம்பந்திகளையே கொல்வதால் எனக்கு எவ்வாறு சுகத்தின் பிராப்தியுண்டாம்; மற்றோர மாறுய்த் துக்கத்தினடைவேயுண்டாம், ஈண்டு, (வுஜூம்ஹீ) என்னுஞ் சம்போதனத்தால் அர்ச்சுனன் இப்பொருளைக் குறிப்பித்தனன் :—(ஹ) என்பது லகூஷ்மிக்காம். (ய்வ) என்பது பதிக்காம். இலகூஷ்மியின் பதியாவரோ அவரை மாதவன் என்பர். அத்தகைய இலகூஷ்மியின் பதியாகிய தாங்கள் என்னை இலகூஷ்மியின்றிய பந்துக்களின் ஹிம்சைவடிவ நிந்திதகருமத்தில் பிரவிர்த்திக்கச்செய்வது யோக்கியமன்றன்றோ: (37)

(அ-கை.) ஹே அர்ச்சுன! யுத்தத்தில் தனது பந்துக்களைக் கொல்வதால் ஒருக்கால் யாதாமொரு திருஷ்ட அதிர்ஷ்ட சுகத்தின் பிராப்தியுண்டாகாமல் தோஷத்தினடைவேயுண்டாமாயின், இப்பீஷ்மர் முதலிய மகாபுருஷர்கள் தங்கள் குலத்தை கூடியழ்செய்வதிலும், சுவஜனங்களை ஹிம்சிப்பதிலும் எதன்பொருட்டுப் பிரவிர்த்திக்கின்றனர் என்னும் பகவானது ஆசங்கைக்கு அர்ச்சுனன் கூறுகின்றனன் :—

அ-ம். யதூவெவ்ருதெதநவஶ்யம்கி யொஹொவஹ்ஹதவெதகஸ்ஃ ।
கூயுகூஷ்யகூஷ்யதம்தொஷம் ப்ரதிதூஷ்டுமர்ஹவ வாதகூர ॥

ப-ம். யதூவி 3, வ்ருதெத 2, நு 9, வஶ்யம்கி 10, யொஹொவஹ்ஹ தவெதகஸ்ஃ 1, கூயுகூஷ்யகூஷ்யதம் 4, தொஷம் 5, ப்ரதிதூஷ்டுமர்ஹ 7, வ 9, வாதகூர.8.

(அ-ம்.) ஹே பகவன்! லோபத்தால் விழுங்கப்பட்ட மனத்தினரான இப்பீஷ்மாதியர் குலநாசத்தாலான தீங்கையும், மித்ரத் துரோகத்திலுண்டாம் பாதகத்தையும் நோக்காராயினும் நான் அவைகளை நோக்குகின்றேன்.

(வி-ம்.) ஹே பகவன்! கிடைத்த பதார்த்தத்தின் றியாகத்தைச் சகிக்கொணுமையை லோபமென்பர் அத்தகைய லோபத்தால் இப்பீஷ்மாதியரின் சித்தம் விழுங்கப்பட்டிருக்கின்றது. இக்காரணத்தால் இப்பீஷ்மாதியர் குலத்தை நாசஞ்செய்வதாலுண்டாம் பாபத்தையும், தமது மித்ரர்களைத் துரோகஞ்செய்வதாலுண்டாம் பாதகத்தையும் விசாரித்துப் பார்த்திலராயினும் நான் அதிதோஷத்தையும் பாதகத்தையும் நன்றுகத் தெரிந்திருக்கின்றேன். ஆகையினுல், இப்பீஷ்மாதியரிடத்தே யுத்தத்தின்கண் பிரவிர்த்தி சம்பவிக்குமாயினும், அந்த யுத்தத்தில் எனது பிரவிர்த்தி சம்பவியாது. இவ்வளவு கூறியதால் அர்ச்சுனன் இச்சங்கையை நிவர்த்தித்தனன். அச்சங்கையிதுவாம் :—ஹே அர்ச்சுன! இப்பீஷ்

மாதியர் சிஷ்டபுருஷர்களாம். அவர்களிடத்தோ தமது பந்துக்களைக் கொல்வ தில் பிரவிர்த்தி காணப்படுகின்றது. யாது யாது சிஷ்டபுருஷர்களின் ஆசார மாமோ அஃதது வேதமூலகமேயாம், சிராத்தாதி கர்மங்களில் பிரவிர்த்திவடிவ சிஷ்ட புருஷர்களின் ஆசாரம் வேதமூலகமாவதேபோல. அச்சிஷ்ட புருஷரின் ஆசாரத்தின் அனுசாரமாகவே வேறு புருஷர்கட்கும் பிரவிர்த்தியுண்டாம், ஆகையி னல், இப்பீஷ்மாதி புருஷர்கள் தமதுபந்துக்களைக் கொல்வதிற் பிரவிர்த்திப்ப தைப்பார்த்து, நீயும் அதன்கண் பிரவிர்த்தித்தல்வேண்டும் என்னும் பகவானது சங்கையை அர்ச்சுனனல், (ஶொலொவஹ தவெதவஸ்) என்னும் விசேஷணத் தைக்கொண்டு நிவிர்த்திசெய்யப்பட்டது. ஏனெனின், எச்சிஷ்ட புருஷரின் ஆசாரத்தில் லோபாதிதோஷங் காரணமன்றுமோ, மற்றுக் கேவலந் தர்மபுத் தியே காரணமாமோ அவ்வாசாரத்தின் கண்வேத மூலகத்தன்மையின் நற்பணை செய்யத்தக்கதாம். அதே சிஷ்டபுருஷரின் ஆசாரம் இதர ஜீவர்கள் அங்கீகரிப் பதற்கும் யோக்கியமாம். எச்சிஷ்ட புருஷரின் ஆசாரத்தில் கேவலம் லோபா தி தோஷமே காரணமாமோ, அச்சிஷ்ட புருஷரின் ஆசாரத்தில் வேத மூலகத்தன் மையின் கற்பணை செய்யப்படுவதின்றும் மேலும் அந்த லோபாதிகளோடுகூடிய சிஷ்டபுருஷரின் ஆசாரம் இதர புருஷர்கள் அங்கீகரித்தற்கு யோக்கியமுமன்றும். இப்பீஷ்மாதிகளின் கேவலம் லோபமுதலிய தோஷமே பந்துக்களைக் கொல்வதின் பிரவிர்த்திவடிவ ஆசாரத்திற் காரணமாம். ஆகையினல் இப்பீஷ்மாதியரின் ஆசாரம் வேதமூலகமன்றும்; இத்தகைய பீஷ்மாதியரின் லோபமூலக ஆசாரத் தைக் கிரகணஞ்செய்து யான் இப்பந்துக்களைக் கொல்வதில் எங்ஙனம் முயல் வேன் மற்றே யான் அதில் ஒருக்காலும் முயலேன். (38)

(அ-கை.) ஹே அர்ச்சுன! இப்பீஷ்மாதியர் லோபத்தால் யுத்தத்திற் பிர வர்த்தித்தவராயினுந் தர்ம சாஸ்திரத்தில், (சூஹ ஙெதாநிவதூத ஒ ஙெதா உவிரணாஉவி) என்றும் (விஜிதம்கூத்தியஸ்) என்றும் கூறப்பட்டுளது; பொரு ளிதுவாம்:—கூத்திரிய அரசனை எவனேனும், சூதாடும்பொருட்டேனும், யுத்தத் தின்பொருட்டேனும் அழைக்கின், கூத்திரியன் அச்சூதினின்றும் அந்த யுத்தத்தி னின்றும் நிவர்த்தனுகாமல் அப்புருஷனோடு சூதும் யுத்தமும் அவசியஞ் செய்தல் வேண்டும். யுத்தத்தா லொருங்குகூட்டிய யாதொரு தனமுண்டோ, அத்தனமே கூத்திரியரின் தர்ம்ய தனமாம் என்பன முதலிய தர்ம சாஸ்திரத்தின் வசனங்க ளால் கூத்திரிய வரசர்கட்கு யுத்தம் தர்மமென்பதும், யுத்தத்தாற் கிடைத்த தனமே தர்ம்மிய தனமென்பதும் பெறப்படும். உன்னை இப்பீஷ்மாதியர் யுத்தஞ் செய்தற்பொருட்டு அழைக்கின்றனர், ஆதலால் நீ இந்த யுத்தத்தில் அவசியம் பிரவிர்த்தித்தல் வேண்டும் என்னும் பகவானது ஆசங்கைக்கு அர்ச்சுனன் கூறு கின்றனன்:—

சு-ம். கூயம நஜெயஹோஹிஃ வாவாஹுஹோநிவதிூதாஂ ।
கூஊகூஷபகூூதம்தொஷம் வூவஶுஹ்ஜூநாஹூூந ॥ ஈக ॥

ப ம். கூயம 9, நந 10, ஜெயம 11, கூஹோஹிஃ 5, வாவாஸு 6, கூஹோஸு 7, நிவதிூதாஂ 8, கூஊகூஷபகூூதம 2, தொஷம 3, வூவஶுஹ்ஹிஃ 4, ஜநாஹூூந 1.

(அ-ம்.) ஹே ஜநார்த்தன! குலநாசஞ்செய்யுந் தோஷத்தைத் தெரிந்திருக் கும் யாங்கள் பாப காரணவடிவ இந்த யுத்தத்தினின்றும் நிவிர்த்தியாகும் பொருட்டு, விசாரஞ்செய்ய எங்ஙனந் தகுதியற்றவராவோம்; மற்றே அவசியம் விசாரஞ்செய்யத் தகுதியரேயாவோம்.

(வி-ம்.) வேற ஜநார்த்தன! எமது குலத்தை நாசஞ்செய்வதா லுண்டாகுந் தோஷத்தை நன்றுகத் தெரிந்தவர்களாகிய நாங்கள் பாபத்தை யடைவிப்பதாகிய இந்த யுத்தத்தினின்றும் நிவர்த்தியாதற் பொருட்டு ஏன் விசாரஞ்செய்வது தகுதி யன்றும், மற்றே இந்த யுத்தத்தினின்றும் நிவர்த்தியாம்பொருட்டு அவசியம் விசாரஞ்செய்வதே எங்கட்குத் தகுதியாம், அன்றியும் (கிஶகாயஂ ஔரஸாத்மநாஂ) தராத்மாவாகிய புருஷர்கட்கு எக்காரியந்தான் செய்வது யோக்கியமன்று, மற்றே தராத்ம புருஷர்கட்கு எல்லாஞ் செய்வது தகுதியாம் என்னும் நியாயத்தை அங்கீகரித்து, இத்துரியோதனாதியர் எங்ஙனம் ராஜ்யலோபத்தால் தமது குல நாசத்தையும், தமது மித்திரர் துரோகத்தையுஞ் செய்கின்றனரோ, அங்ஙனஞ் செய்வது எங்களுக்குத் தகுதியன்றும். அன்றியும, (கூஹ-ஏதாந்நிவிதழ்த) என்னுந் தர்ம சாஸ்திரத்தின் வசனம் முன்னர்த் தங்களாற் கூறப்பட்டது அவ் வசனம் கேவலம் லோப மூலகமாம் ஆகையினால் அவ்வசனம் (ஸ்வனவவாவிஷ்ட தெரயஂ கூயஂரூஸ் கூயநாஸநம்) (பொருள்) எவன் குலநாசத்தைச் செய்வனே அவனே பாபிஷ்டதமனும். என்னும் வசனத்தாற் பாதிக்கப்படுகின்றது. ஆகை யினால் அந்தலோப மூலவசனத்தை யங்கீகரித்து எனக்கு யுத்தத்தின் பிரவர்த்தி யுண்டாகாது. எண்டிது கருத்தாம் :—எப்புருஷனுக்கு எக்காரியத்தின்கண் இக்காரியம் எனது சிரேயசின் சாதனமாமென்று இவ்வாறு ஞானமுண்டாமோ, அப்புருஷனே அக்காரியத்திற் பிரவர்த்திப்பன். ஆகையினால், இஃதறியப்படுகின் றது :—சிரேயசின் சாதனத்தன்மை ஞானமே புருஷரின் பிரவர்த்தகமாம்; எதனோடு ஒருக்காலும் அப்சிரேயசின் சம்பந்தமின்றே அதற்குச் சிரேயசெனப் பெயராம் இங்ஙனம் அங்கீகரியாவிடினே, சத்துருவின் மரணத்தின் பொருட்டுச் செய்யும் சேனையாகத்திற்குந் தர்மரூபத்தன்மை யுண்டாதல்வேண்டும், எனினின், சத்துருவின் மரணரூபசிரேயசின் சாதனத்தன்மை அந்தச் சேனையாக த்திலுமுளது, ஆனால் அச்சத்துருவின் மரணரூப சிரேயசு, அப்சிரேயசின் அசம் பந்தியன்றும். மற்றே, சேனையாகத்தாற் சத்துருவைக் கொல்லும் புருஷ னுக்கு நரக வடிவ அசிரேயசின் பிராப்தியுண்டாகின்றது. ஆகையினால், அச்சத்து ருவின் மரண வடிவசிரேயசு, நரகவடிவ அப்சிரேயசின் சம்பந்தமுடையதேயாம் ஆகையினால், அச்சேனையாகத்தில் தர்மரூபத்தன்மை சம்பவியாது. இவ்வார்த்தை வேறு சாஸ்திரத்திலுங் கூறியுளது ஆண்டுச்சுலோகம் :—

ஸஸுகிகாவிஜயஸ்கூடிஂநாநயேஂ நாந்வயஂகெ ;
கெவலஸ்ரீதிஹேதுதாஸ் தஜ்டிஂ ஜதிகுயஂகெ ॥

(பொருள்.) எக்கர்மமானது தனது பலத்தின் பிராப்தியினாலும் அநர்த்தத் தோடு சம்பந்தமுடையதன்றோ, மற்றுக்கேவலம் சுகத்திற்கே காரணமாமோ அக்கர்மத்தைத் தர்மமென்னும் நாமத்தாற் கூறப்படும் என்பதாம். ஆகையி னால் சேனையாகமானது, (ஸ்ரூநெநாஹிவாநுயஜெத) என்பன முதலிய சாஸ்தி ரங்களால் விதானஞ் செய்யப்படுகின்றதாயினும் அச்சேனத்திற்குச் சத்துருவின் மரணரூபபலம், நரகவடிவ அப்சிரேயசின் சம்பந்தமுடையதாம். ஆகையினால் சிரேஷ்ட புருஷர்கட்கு அச்சேன யாகத்திற் பிரவர்த்தி யுண்டாகாததேபோல் இந்த யுத்தத்தின்கண்ணும் (கூஹ-ஏதாந்நிவிதழ்த) (பொருள்) அழைப் பின் மறுக்கொணை, என்பன முதலிய சாஸ்திரங்களால் விதானஞ் செய்யப்பட்டிருப் பினும், அந்தயுத்தத்தின் வெற்றி, ராஜ்யம் முதலியபலங்கள், (ஸ்வனவ வாவிஷ் கதெரயஂகூயஂரூஸ் கூயநாஸநம்) என்பன வாதிவசனங்களாற் கூறப்பட்ட குல நாசத்தின் பாபவடிவ அப்சிரேயசின் சம்பந்த முடையதேயாம். ஆதலின் அவ்

வெற்றி, ராஜ்யமுதலியபலங்கள் சிரேயசுவடிவ மன்றும். இத்தகைய வெற்றி, ராஜ்யமுதலியவற்றினடைவின் பொருட்டு, இந்த யுத்தத்திற் பிரவிர்த்திப்பது எனக்குத் தகுதியன்றும். (39)

(அ-கை.) ஆண்டு யுத்தத்தின் பலவடிவ வெற்றி ராஜ்யமுதலியவைகள் அஸ்ரேயசுவடிவமாதலால், எனது இச்சையின் விஷயமன்றுமாதலின் அவ்வெற்றி, ராஜ்யமுதலியவற்றின் பிராப்தியின் பொருட்டு, இந்த யுத்தத்திற் பிரவிர்த்திப் பது எனக்குத் தகுதியன்றும். என்னு மர்த்தம் மூற்சுலோகத்தின்கண் கூறப் பட்டது; இப்போது அவ்வர்த்தத்தை மீண்டுந் திடஞ்செய்தற்பொருட்டு, அவ் வெற்றி, ராஜ்யமுதலியவற்றில் அநர்த்தத்தின் சம்பந்தித் தன்மையைக்கூறி அஸ்ரேயசு வடிவத்தன்மையை ஐந்து சுலோகங்களால் அர்ச்சுனன் கூறு கின்றான் :—

சு-ம். கிமுகூயெவுணர்தி கோயதிநாஃ வநாதநாஃ ।
யதிநஷ்டகோயம்குலதம் கயதிநாஹிஹவதோத ॥ சஎ ॥

ப-ம். கோகூயெ 1, வுணர்தி 4, கோயதிநாஃ 3, வநாதநாஃ 2, யதிந 5, நஷ்ட 6, கோயம் 9, குலதம் 7, கயதிநாஃ 10, கஹிஹவதி 11, உத 8.

(அ-ம்.) ஹே பகவன்! குலத்திற்கு நாசமாங்கால் பரம்பரையாயடைந்துள்ள குலத்தின் சர்வ தர்மங்களும் நாசத்தை யடைகின்றன. தர்மத்தின் நாசமுண்டா கச் சேஷித்துள்ள குலமுழுவதையும் அதர்மந் தன்வயப்படுத்திக்கொள்ளும்.

(வி-ம்.) தமது வம்சபரம்பரையா யடைந்துள்ளதும், தமது குலாநுசார மாயும், ஜாதியினனுசாரமாயும், செய்யத்தகுந்ததுமாகிய, அக்கினிஹோத்ராதி தர் மங்களின் பிரவிர்த்திசெய்பவராகிய விருத்த புருஷர்கள் நாசத்தையடையுங்கால், அந்தக் கர்த்தாக்களின் அபாவத்தால் அக்நிஹோத்ர முதலிய எல்லாக் குலதர் மங்களும் நாசத்தை யடைகின்றன. அவ்விருத்த புருஷரின் நாசத்தால், அவ் வெல்லாத் தர்மங்களும் நஷ்டத்தபின்னர் சிக்ஷிப்பவராகிய விருத்த புருஷரின் அபா வத்தால் சேஷித்துள்ள ஸ்திரீ பாலகர் முதலிய வடிவினதாகிய குலத்தை அநா சாரரூப அதர்மம் தன் வயப்படுத்திக்கொள்ளும். (40)

அன்றியும்.

சு-ம். கயதிகாஹிஹவாசு கூணஷவுஷ்யம்தி கோவர்ணஸியஃ ।
ஸ்த்ரீஷுதுஷ்டாஸுவார்ஷ்ணேய ஜாயதெ வர்ணஸம்கராஃ ॥ சச ॥

சு-ம். கயதிகாஹிஹவாசு 2, கூணஷ 1, வுஷ்யம்தி 4, கோவர்ணஸியஃ 3, ஸ்த்ரீஷு 7, துஷ்டாஸு 6, வார்ஷ்ணேய 5, ஜாயதெ 9, வர்ணஸம்கராஃ 8.

(அ-ம்.) ஹே கிருஷ்ண! அவ்வதர்மத்தின் வசத்தன்மையால் எல்லாக்குல ஸ்திரீகளும் வியபிசாரிகளாகின்றனர். ஹே வார்ஷ்ணேய! அந்த வியபிசாரி களாய ஸ்திரீகளிடத்தில் ஜாதிக்கலப்பான புத்திரர்கள் உற்பன்னமாகின்றனர்.

(வி-ம்.) ஹே கிருஷ்ண! அவ்வதர்மம் அதிகரித்த பின்னர் "எமது பதி தர்மத்தை யுல்லங்கனஞ் செய்து குலநாசஞ்செய்யின், எமக்குப்பதிவிரதா தர்மத்தை யுல்லங்கனஞ்செய்து, வியபிசாரஞ் செய்வதில் எத்தோஷமுளது." என்றிவ்வாறுய குதர்க்கத்தோடுகூடிய குலஸ்திரீகள் வியபிசார கர்மத்திற் பிரவிர்த்திப்பவராவர். அல்லது தர்மசாஸ்திரத்தில், பதியின் தர்மா தர்மங்களின் பலம் ஸ்திரீக்குங் கூறியிருக்கின்றது. ஆகையினல், குலத்தை நாசஞ்செய்து பாபத்தையடைந்து* பதிதனையபதியின் சம்பந்தத்தால், அந்த ஸ்திரீக்கும் வியபிசார கர்மத்திற் பிரவர்த்தியுண்டாம். அந்த வியபிசாரிகளாய ஸ்திரீகளிடத்தே உயர்ந்த ஜாதியையுடைய புருஷரின் சம்பந்தத்தாலேனும், அல்லது நீச ஜாதியையுடைய புருஷரின் சம்பந்தத்தாலேனும் ஜாதிக்கலப்பாய புத்திரர்கள் உற்பன்னமாவர். (41)

அன்றியும்.

சு-ம். ஸம்கூரோ நரகாயைவ கூலஹானாம் கூலஸ்ய ।
பதந்தி பிதரோஹ்யேஷாம் லுப்தபிண்டோதகக்ரியாஃ ॥ சஉ ॥

ப-ம். ஸம்கரஃ 3, நரகாய 5, ஏவ 6, கூலஹானாம் 4, கூலஸ்ய 2, ச 1, பதந்தி 10, பிதரஃ 8, ஹி 7, ஏஷாம் லுப்தபிண்டோதகக்ரியாஃ 9,

(அ-ம்.) ஜாதிக்கலப்பானது குலத்தை நாசஞ் செய்பவனுகிய புருஷனுக்கு நரகத்தின்பொருட்டேயாம். அங்ஙனமே இக்குலநாசஞ்செய்யும் புருஷனது பிதுர்க்களும் பிண்டஜலக்கிரியை யின்றியவராய் நரகத்தில் வீழ்கின்றனர்.

(வி-ம்.) ஹே பகவன்! குலத்தின் கண்ணுண்டாஞ் சாதிக்கலப்பானது குலத்தை நாசஞ்செய்பவனுகிய புருஷனுக்கு நரகத்தினடைவின் பொருட்டேயுண்டாகின்றது. அல்லது, அச்சாதிக்கலப்பானது கேவலம் குலத்தை நாசஞ் செய்யும் புருஷனது நரகத்தின் பொருட்டு மாத்திரமன்றும். மற்றேரு, அவ்வருண சங்கரத்தால் அவர்களது பிதுர்க்கட்கும் நரகத்தின் பிராப்தியுண்டா மென்னும் இப்பொருளைக் கூறுகின்றன் :—(பதந்தீதி) தமது பிதுர்க்களின் பொருட்டுப் பிண்டக்கிரியையுஞ் சலக்கிரியையுஞ் செய்பவனுகிய புத்திரன் பின்னரிருப்பதின்று மாகையினல், பிண்டோதகக் கிரியையின்றியவராய குலநாசஞ் செய்பவரின் பிதுர்க்கள் நரகத்தை யடையும்பொருட்டுச் சுவர்க்கத்தினின்றுங் கீழே வீழ்வர். ஈண்டு, இதிஹாச புராணங்களில் இவ்வார்த்தை கூறப்பட்டுளது :—ஏககாலத்தில் பரசுராமர் சர்வக்ஷத்திரியர்களையுங் கொன்றனர்; அதன்பின்னர் அந்த க்ஷத்திரிய ஸ்திரீகள் பிராஹ்மணரினின்றும் புத்திரர்களை யுற்பத்திசெய்தனர். ஒருகால் அன்னிய புருஷரினின்றும் உற்பன்னராகிய புத்திரர்கள் கொடுக்கும் பிண்டோதகம் பிதுர்க்களை யடையாதாயின், அந்த க்ஷத்திரிய அரசர்களின் ஸ்திரீகள் பிராஹ்மணர்களினின்றும் புத்திரரை எதன்பொருட்டு உற்பத்திசெய்தனர்; ஆதலால் இம்மந்திரியப்படுகின்றது :—எங்ஙனம் ஸ்திரீவடிவ க்ஷேத்திரத்தில் வீரியரூப பீஜத்தை யடையச்செய்யும் பீஜபதியாகிய புருஷனை அப்புத்திரன் கொடுக்கும் பிண்டோதகங்கள் அடைகின்றனவோ, அங்ஙனமே அந்த ஸ்திரீ வடிவக்ஷேத்திரத்தின் பதியாகிய புருஷனையும் அப்பிண்டோதகங்கள் அடைகின்றன; என்றுமாம், சுருதியில் அப்புத்திரன் கொடுக்கும் பிண்டோதகங்கள் பீஜபதி புருஷனையே அடையுமெனக் கூறப்பட்டுளது; க்ஷேத்திரபதி புருஷனை அப்புத்திரர்கள் ஈயும் பிண்டோதி

* பதிதன்=தாழ்ந்தோன்.

கள் அடையுமெனக் கூறப்படவில்லை. ஆண்டுச்சுருதி :—(நமெஸவெஷாஸவெ ஹ ஸநு ஜாதஶஷ்டி) (பொருள்) ஹே அக்நியே! எனது ஸ்திரீயினிடத்தே அங்நிய புருஷரினின்றும் உற்பன்னமாகும் புத்திரன் புத்திரனுகான், அல்லது இவ்வார்த்தை யாஸ்க முனிவராலுங் கூறப்பட்டுளது:—(கூவெநு)ஆஉயெடாஉபஸாஉஸஸாவிந ஜதெவெநு)ஆ ஶயம்வாதந) பொருளிதுவாம், தனது ஸ்திரீயினிடத்தே அங்நிய புருஷரினின்று முற்பன்னனுய புத்திரனே க்ஷேத்திர பதியாகிய புருஷன் இவனெனது புத்திரனென மனதிலுறும் நினையற்க. அல்லது சுருதியில் தனது வர்த்தமான பிதாவின் சம்சயமுங் கூறப்பட்டுளது, ஆண்டுச்சுருதி :—(யெயஜாஶமெஹ ஜ்ஞதி யொஹஶஷ்மிஸஸ்மாந்யஜெஜ்ஞதி) பொருளிதுவாம். யாணியாவனு யிருக்கின்றேனே, அந்த யான் யஜிக்கின்றேன். யான் பிராஹ்மணனே அல்லது அப்பிராஹ்மணனே என்பதைத் தெரிந்திலேன்; ஏனெனின், லோகப்பிரசித்தமாயிருக்கு மிக்கப் பிதாவினின்றும் யான் உற்பன்னமானேனே அல்லது வேறு பிதாவினின்று முற்பன்னமானேனே என்னும் சம்சயத்தால் வியாபித்திருக்கின்றனுகலால் இவரே எனது பிதா என்னும் நிச்சயம் சம்பவியாது. ஆகையினுல் யாணியாவனுயிருக்கின்றேனே, அந்த யான் யாகஞ்செய்கின்றேன் என்னுமிது முதலிய சுருதிவசனங்களாற் பீஜபதியாய பிதாவிற்கே பிண்டாதிகளின் பிராப்தியுண்டாம். க்ஷேத்திரபதியாய பிதாவிற்குப் பிண்டாதிகளின் பிராப்தியுண்டாகாது எனப்பெற்றது. அன்றியும் ஸ்திரீ வடிவக்ஷேத்திரத்தில் அன்னிய புருஷரினின்றும் புத்திர உற்பத்தியைக் கூறுவதாகிய ஸ்மிருதி முதலிய சாஸ்திரவசனத்திற்கு, இவ்வுலகத்திலுள்ள வம்சத்தை நிலைநிறுத்துவதிற் தாற்பரியமாம். எவனேனும் ஒரு க்ஷேத்திரபதியாகிய புருஷனே அப்புத்திரன் கொடுக்கும் பிண்டாதிகளுண்டையுமென்பதில், அவ்வசனத்திற்குத் தாற்பரியமின்றும். ஆகையினுல், ஜாதிக்கலப்பாய புத்திரர்கள் உற்பன்னமாயின், அந்தக்குலநாசஞ்செய்த புருஷனது பிதுர்க்கள் பிண்டாதிக்கிரியை யின்றியவராய் அவசியம் நரகத்தில் வீழ்வர் என்பது முதலிய எல்லா அர்த்தங்களையும், (வதந்தீ வி நரொஹிவனஷாந) என்னும் வசனத்தின்கண்ணுள்ள ஹி என்னும் சப்தத்தால், அர்ச்சுனன் சூசிப்பித்தனன். (42)

அன்றியும்.

சு-ம். ஒஎவெஷஎரெவெதஅ கூஉவாநாம வணுஹாகர காரவெகஅ।
உதாஹரணெஜாதியஉாஅ கூயஉாஸஸாஸ்வ காஅ ॥ சுக ॥

ப-ம். ஒஎவெஷஅ 4, வஎவெதஅ 8, கூஉவாநாம 1, வணுஹாகரகாரவெகஅ 2, உதாஹரணெஜெ 9, ஜாதியஉாஅ 6, கூயஉாஅ 8, வ 7, ஸாஸ்வ காஅ. 5.

(அ-ம்.) ஹே பகவன்! குலநாசஞ் செய்பவர்களுடைய ஜாதிக் கலப்பைச் செய்யுமிந்தத் தோஷத்தால் பரம்பரையா யடைந்துள்ள ஜாதிதர்மமுங் குலதர்மமும் நாசத்தையடைகின்றன.

(வி-ம்.) ஹே பகவன்! எப்புருஷர் எனக்கு இக்காரியஞ் செய்வது தகுதியாம், இக்காரியஞ் செய்வது தகுதியன்றும் என்றிவ்வாறுள்ள விசாரத்தையிட்டுக் காமக்குரோத லோபாதிகளின் வயத்தராய்க் குலதர்மத்தைச் செய்பவராகிய புருஷரைக் கொல்கின்றரோ அப்புருஷரைக் குலக்னர் என்பர், அந்தக் குலக்ன புருஷருடைய முற்கூறிய ஜாதிக்கலப்பை யுண்டுபண்ணுவதாகிய தோஷங்களால்

சுருதி ஸ்மிருதி மூலகமாயும் பரம்பரையா யடைந்ததாயுமுள்ள சுஷித்திரியத் துவாதி ஜாதிப்பிரயுக்த தர்மங்களும், குலத்தின் அசாதாரண தர்மங்களுமாய எல்லாத்தர்மங்களும் நாசத்தையடைகின்றன. (43)

அன்றியும்.

சு-ம். உதிரகூடியஷரானாம உரஷியாணாம ஜராஉஜாக ।
ரபகெநியதம்வாலொ லவகீதய ரபபபுஜஷ ॥

ப-ம். உதிரகூடியஷரானாம 2 உரஷியாணாம 3 ஜராஉஜாக 1 ரபகெ சநியதம 5 வாலஷ 6 லவகி 7 ஜகி 8 சுரபபபுஜஷ 9.

(அ-ம்.) ஹே ஜநார்த்தன! குலம் ஜாதி முதலிய தர்மங்களை நஷ்டமாக்கிய ஜனங்கட்கு, நரகத்தின்கண் ணவதியின்றி வாஸமுளதாம். என ஆசாரியர்கள் வாயிலாய் நான் கேட்டிருக்கின்றேன்.

(வி-ம்) ஹே ஜநார்த்தன! எப்புருஷன் லோபவசத்தால் தனது குலத்தைக் கொன்று தனது குலதர்மங்களையும், தனது ஜாதி தர்மங்களையும் நஷ்டஞ் செய்கின்றனரோ, அப்புருஷனுக்கு யுகம், மன்வந்தரம் முதலிய அவதியின்றி இரௌரவாதி நரகத்தின்கண் நிவாஸமுளதாம். இவ்வார்த்தையை நான் கேவலம் எனது புத்தியின் கற்பனையாற் கூறியதன்றும்; மற்றோரு, பூர்வாசாரியர்களின் வாயிலாகவும், மறை இருஷிகளின் வாயிலாகவும் இவ்வார்த்தையை நான் கேட்டிருக்கின்றேன்.

சு-ம். யோயம்ருதிஹகூவ-ஷாணாஷ வாலெஷஹிர தாகராஷ
சலம்ருதாதிரிஷ வாவாஹிரியாஸுயாகிஷாஸ்ஷாணாஸு॥

(பொ-ள்.) எப்புருஷன் பாவத்திற் பிரீதியுடையவனையும், அந்தப் பாவத்தின் நிவிருத்தியின்பொருட்டுப் பிராயச்சித்தத்தைச் செய்யாதவனையும், பச்சாத்தாபத்தை யடையாதவனையும் இருக்கின்றனரோ, அப்புருஷன் அந்தப் பாவத்தின் வசத்தால் * தாருண நரகத்தை யடைகின்றனன். என்னும் இது முதலிய அநேக வசனங்கள் பாவிகளுக்கு நரகத்தின் பிராப்தியைக் கூறியிருக்கின்றன; ஈண்டு (நரகெநிய கர) என்னும் வசனத்தின் கண்ணுள்ள ககாரத்தின் பின்னுள்ள அகாரத்தை லோபமென அங்கீகரித்து, அநியதம் எனப்பதச்சேதஞ் செய்யப்பட்டது; அவ்வநியத பதத்தின் அர்த்தம் முற்கூறப்பட்டது. அவ்வகாரலோபத்தை ஆண்டங்கீகரியாவிடினோ, நியதமெனப் பதச்சேதஞ் செய்து, அந்த நியதபதத்திற்கு அவசியமாய் எனப்பொருள்கொள்க. என்னை? இத்தகைய ஜனங்கட்கு நரகத்தில் அவசியம் நிவாஸமுளதாமென்க. (44)

(அ-கை.) ஆண்டித் தனது பந்துக்களை ஹிம்சிப்பதிற் † பரியவசானமாய யுத்தஞ்செய்யும் நிச்சயமும், சர்வப்பிரகாரத்தானும் அத்தியந்தம் பாபிஷ்டமாமாயின், இந்த யுத்த வடிவ கர்மம் அத்தியந்தம் பாபிஷ்டமாமென்பதிற்கூற என்ன இருக்கின்றது; என்னுமிவ்வர்த்தத்தைக் கூறும்பொருட்டு, அந்த யுத்தத்தின் நிச்சயஞ் செய்வதால் தன்னைத் திக்காரஞ்செய்து அவ்வர்ச்சுனன் கூறுகின்றனன்:—

சு-ம். சுலொபாபதஹதோதாவம் குதஷ்ம்வய வஸிதாவயம ।
யதாஜயாஸுவொலொஹத ஹதஷ்ம்வஜநமாஸுயதாஷ ॥

ப-ம். சுலொபா 1 பாத 2 ஹதோதாவம 4 குதஷ்ம 5 வயவஸிதாஷ 6 வயம 8 யகி 7 ராஜயாஸுவொலொஹத 8 ஹதஷ்ம 10 வஜநம 9 உயதாஷ 11.

* தாருணம்=கோரம். †பரியவசானம்=முடிபு.

(அ-ம்.) மஹா ஆச்சர்யம்! மஹா துக்கம்!— நான் மஹா பாவத்தைச் செய்ய நிச்சயமுடையனுய் ராஜ்ய சுகலோபத்தால் எனது பந்துக்களைக் கொல்லத் துணிந்துவிட்டேன் அதுவே மஹா பாதகமாம்.

(வி-ம்.) ஹே பகவன்! இது எனக்கு மஹா ஆச்சரியத்தையும் துக்கத்தையு முண்டுபண்ணுகின்றது. நான் விசாரவானுயிருந்தும் இம்மஹா பாவத்தைச் செய்யும்பொருட்டுப் பிரயத்தினப்பட்டேனன்ரே? எதைச்செய்யும் பொருட்டு நீ பிரயத்தினப்பட்டனையோ, அது எத்தகைய பாவமாம்? என்னும் பகவானது ஆசங்கைக்கு அர்ச்சுனன்கூறுகின்ருன்:—(யதி) ராஜ்யத்தின் பிராப்தியால் அடையப்படும் க்ஷணபங்குரமாய விஷய சுகத்திலுள்ள லம்படத்தன்மை வடிவ லோபத்தால் நான் எனது சகோதரபுத்திராதி பந்துக்களைக் கூர்மையான சஸ்திரங்களால் கொல்ல முயன்றனனன்ரே, அஃதே மஹாபாவமாம்; இதனினும் மேலாய் வேருருபாவமுமின்ரும். கருத்திதுவாம்:—உனக்கு இத்தகைய புத்தியிருப்பின் யுத்தத்தினபினிவேசத்தால் நீ ஈண்டெதன் பொருட்டு வந்தாய் என்றிவ்வாருகிய வசனத்தைத் தாங்கள் கூறலாகாது; ஏனெனின், விசாரமின்றியே காரியத்தை நான் செய்பவனுயிருக்கின்றேன், அத்தகைய என்னுல் இப்பெரிய கிளம்புகைத்தன்மை செய்யப்பட்டது. (45)

(அ-கை.) ஹே அர்ச்சுன! உனக்கு இந்த யுத்தத்தினின்றும் வைராக்ய முண்டாயினும், பீமசேனதியருக்கு இந்த யுத்தத்தில் மஹாதீவிர இச்சையுளது; ஆதலினல் பந்துக்களின் நாசமோ அவசியமுண்டாம்; பின்னர் உனக்கு எக்காரியஞ் செய்வது தகுதியாம்? என்னும் பகவானது சங்கைக்கு அர்ச்சுனன் கூறுகின்ருன்:-

சு-ம். யதிஹ்யவ்ருதீகாரு ஸ்ருஹ்ம்ஸ்ருஹ்வாணயஃ।
தர் தர்
யாதக்ருஷ்ணாருனைஹ்நய்ரு ஹ்ருதெஷூ ஸ்தாம்ஹ்வெகூ ॥

ப-ம். யதி 1 ஸ்ம 4 ஸ்வ்ருதீகாரும் 2 ஸ்ருஹ்ரும் 3 ஸ்ருஹ்வாணயஃ 5 யாதக்ருஷ்ணாஃ 6 ருனை 7 ஹ்நய்ரூஃ 8 தகூ 9 ஸ்ர 10 ஷூஸ்தாம் 11 ஹ்வெகூ 12.
தர் தர்

(அ-ம்.) எப்போது எதிர்க்காமலும் சஸ்திரங்களின்றியும் நிற்கப்பட்ட என்னை இந்தச் சஸ்திரமுடைய திருதராஷ்டிர புத்திராதிகள் இப்போர்க்களத்திற் கொல்வார்களேயாயின், அது எனக்கு அத்தியந்தம் க்ஷேமருபமாம்.

(வி-ம்.) ஹே பகவன்! தனது பிராண ரக்ஷணயின் பொருட்டுச் செய்யும் பிரதிக்கிரியைக்குப் பிரதீகாரமெனப் பெயராம்; தனது பிராணரக்ஷணயின் பொருட்டு அடிப்பவனுகிய புருஷனை யடித்தல் பிரதீகாரமாம்; அந்தப்பிரதீகாரமின்றியிருத்தற்கு அப்பிரதீகார மெனப்பெயராம். அல்லது இப்பந்துக்களை யான் கொல்வேன் என்றிவ்வாறு நிச்சயமாத்திரத்தானே யுண்டாவதாகிய யாதொருபாவமுண்டோ, அப்பாவத்தை நிவிருத்திக்குஞ் சரீரநாசமின்றிய அந்நியப் பிராயச்சித்தத்திற்குப் பிரதீகார மெனப்பெயராம். அந்தப் பிரதீகாரமின்றியிருத்தற்கு அப்பிரதீகார மெனப்பெயராம். அத்தகைய அப்பிரதீகாரனுய்நானிருக்கின்றேன். அக்காரணத்தாலே நான் சஸ்திரமின்றியவனுயிருக்கின்றேன். அத்தகைய பிரதீகாரமும் சஸ்திரமுமின்றிய என்னை ஒருகால் கரத்திலாயுதத்தையுடைய இத்திருதராஷ்டிரரின் துரியோதனுதி புத்திரர்கள் யுத்தபூமிக்கண் கொல்வார்களேயாயின், அது எனக்கு அத்தியந்தம் ஹிதவடிவமாம். ஏனெனின், (ஈஹிம்ஸா வ்ரதீரய8ஃ) என்றற்றொடக்கத்து வசனங்களால் கூறப்பட்ட யாதொரு சர்வபூதப்பிராணிகளின் அஹிம்சைவடிவ தர்மமுண்டோ,

அத்தர்மமானது தனது பிராணனிலுமேலானதாம். எனெனின், இப்பிராணதாரணத்தால் அநேகவித பாவங்களுற்பத்தி யாகின்றன. ஆனால் அவ்வஹிம்சை வடிவதர்மத்தால் யாதொரு பாவமுமுண்டாவதின்றும். மாறுப் மகத்தாகிய புண்ணியமேமி யுண்டாம். ஆகையினால், இச்சீவனத்தை யபேக்ஷித்து எனது மரணமே அத்தியந்தம் ஹிதமாம். அன்றியும் எனது பந்துக்களின் மரணத்தைச் சங்கற்பித்தலால் உண்டாய பாவத்தை நிவிருத்திக்கும் மற்றொருபிராயச்சித்தமின்றும். மற்றே, இவ்வினது மரணமே அப்பாவ நிவிருத்தியின் பிராயச்சித்தமாம். இக்காரணத்தாலும் எனது மரணமே எனக்கு அத்தியந்தம் ஹிதமாம். ஈண்டுச் சில புஸ்தகங்களில் (தெநவீயதராஸ்மவெஸ) என்றிவ்வாறு பாடமுளது. அப்பாடத்திற்கும் முற்கூறிய பொருளேயாமென்றறிக. அல்லது, (தெநவெஸதி தராஸ்மவெஸ) என்னும் வசனத்திற்கு இவ்வாறு பொருள்கொள்க :— அம்மரணம் எனது சேஷமத்தின் பொருட்டேயாம். எனெனின், சேஷமத்தின் ஸ்வரூபம் சாஸ்திரத்தில் இவ்வாறு கூறப்பட்டுளது :—

ஸவ்ரூப வ்ராவணாயொ4தி சேஷத்வேநோதி ஸசேஷணம் ।

(பொருள்.) அப்பிராப்த வஸ்துவின் பிராப்திக்கு யோகமெனப் பெயராம்; முன்னுள்ள வஸ்துவின் ஸசேஷணக்கு சேஷமமெனப் பெயராம். சேஷமத்தினுமதிக சேஷமத்திற்கு சேஷதரமெனப் பெயராம். ஈண்டுப் பிரசங்கத்திலுள்ளது சேஷதரமாம்; தனது முலநாசத்தாலுண்டாந் தோஷமும், அத்தோஷத்தாலுண்டாம் நரகப் பிராப்தியும், அங்ஙனமே இவ்வுலகத்திலடையப்படும் அபகீர்த்தியும் ஆகிய இவ்வெல்லா அநர்த்தங்களின் நிவிருத்திவாயிலாய் யாதொரு முன்செய்துள்ள புண்ணிய கர்மத்தினது நாசத்தின் அபாவமுளதோ, அதுவே சேஷதரமாம்; அந்த சேஷதரம் எனக்கு இம்மரணத்தாலே பிராப்தமாம். ஆகையினால், இப்பந்துக்களோடு யுத்தஞ் செய்வதினின்றும் எனது மரணமே சிரேஷ்டமாம்.

(அ-கை.) அதன் பின்னர் என்ன விருத்தாந்தமுண்டாயதெனத் திருதராஷ்டிரர் ஆசங்கிப்பச் சஞ்சயர் கூறுகின்றார் :—

ஸஞ்ஜய உவாச

சு-ம். ஸதஸ்ததா கூ2ருʼ-ரூʼக3 ஸம்வைʼ ஸ்ரியாவஸ்ரு உவாசிபக3 ।

விஸ்ரஜ்ய ஸஸபா4ரம் பெபாக ஸம்நிஷ்ரூʼகஸ்ரு ॥

ப-ம். ஸரம 1 உ-கூ 6 ஸஜ-ரூʼக3 2 ஸம்வைʼ 3 ஸ்ரியாவஸ்ரு 9 உவாசிபக3 10

விஸ்ரஜ்ய 8 ஸஸபா4 6 ரம 7 பெபாகஸம்நிஷ்ரூʼகஸ்ரு 1.

(அ-ம்.) ஹே திருதராஷ்டிரரே! சோகத்தாற் பீடிக்கப்பட்ட மனத்தையுடைய அர்ச்சுனன் போர்க்களத்தில் இவ்வாறுகிய வசனங்களைக் கூறிச் சரத்தோடு வில்லைப் பரித்தியாகஞ் செய்து தேர்த்தட்டில் இருந்தனன்.

(வி-ம்.) ஹே திருதராஷ்டிரரே! தனது பந்துக்களின் விஞ்சூரூப நிமித்தத்தாலுண்டாய சோகத்தாற் பீடிக்கப்பட்ட மனத்தையுடைய அர்ச்சுனன் அப்போர்க்களத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் முற்கூறிய வசனங்களைக்கூறி அம்போடு வில்லை யெறிந்து அத்தேரின்மேல் வீற்றிருந்தனன். (47)

ஸ்ரீ பரமஹம்ஸ பரிவிராஜகாசார்ய ஸ்ரீமத் உத்தவானந்தகிரி சுவாமிகளது பூஜ்யசிஷ்யராகிய ஸ்ரீ சித்கணனந்தகிரி சுவாமிகளாலியற்றி யருளிய பிரகிருத கூடார்த்த தீபிகையெனப் பெயரிய வியாக்கியானத்தின் முதலத்தியாயமுற்றிற்று.

சுபம்.

இரண்டாவது அத்தியாயம்.

ஓம் ஸ்ரீ கணேசாயநம: ஸ்ரீ குருப்யோநம: ஸ்ரீ சங்கராசார்யேப்யோநம:
ஸ்ரீ காசிவிச்வேச்வராப்யாம்நம:

(அ-கை.) ஆண்டு, சர்வப் பிராணிகளின் அஹிம்சை பிக்ஷாந்ன போஜனம் என்னு மிரண்டுமே எனது பரமதர்மமாம் என்றிவ்வாறுகிய புத்தியோடு அர்ச்சுனன் யுத்தத்தினின்றும் விமுகத்தன்மை யடைந்ததைக்கேட்டுத் தமது துரியோதனுதி புத்திரர்களி னிராஜ்யத்தின் சலனமின்மையை நிச்சயித்து ஸ்வஸ்த சித்தத்தை யடைந்த திருதராஷ்டிரருக்குச் சந்தோஷத்தா லுண்டாய "அதன் பின்னர் என்ன விருத்தாந்தமுண்டாயது" என்னும் ஆகாங்க்ஷையை நிவிருத்தி செய்யு மிச்சையையுடைய சஞ்சயர் அத்திருதராஷ்டிரரிடம் இவ்வாறுகிய வசனங் களைக் கூறுவாராயினர்:— இவ்வார்த்தை வைசம்பாயனர் ஜனமேஜயருக்குக் கூறியதாம்.

சு-ம். தம்தயாகூரவயாவிஷ உஸ்ரூவோணஸாகூ மெக்ஷணம்।
விஷீதந்த மிதம்வாக்ய முவாசமது ஸூதந:॥

ப-ம். தம் 6 தயா 1 கூரவயா 2 சுவிஷம் 3 சுஸ்ரூவோணஸாகூமெக்ஷணம் விஷீதந்தம் 5 இதம் 8 வாக்யம் 9 உவாச 10 மதுஸூதந:

(அ-ம்.) ஹே திருதராஷ்டிரரே! முற்கூறிய இரக்கத்தால் வியாபிக்கப்பட்டவனும், நீர்த்ததும்பி ஆகுலப்பட்ட நேத்திரத்தையுடையவனும், துக்கத்தை யடைந்திருப்பவனுமாகிய அர்ச்சுனனிடம் ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஈண்டு கூறப் படும் வசனங்களைக் கூறுவாராயினர்.

(வி-ம்.) இப்பீஷ்மர் துரியோதனன் முதலியோர் எனது சம்பந்திகளா மென்னும் மோகத்தைக் காரணமாயுற்ற சிநேக விசேஷத்தின் பெயர் கிருபை யாம். அந்தக் கிருபையால் வியாபிக்கப்பட்டவன் அர்ச்சுனனும். ஈண்டு, கூரவ யாவிஷ்ட:, என்னுமிவ்வளவு கூறியதால் அர்ச்சுனனிடத்து வியாப்தி ரூபக்கிரியை யின் கர்மத்தன்மை கூறப்பட்டது. அந்தச் சிநேகரூபக் கிருபையில் அந்த வியாப்தி ரூபக்கிரியையின் கர்த்தாத்தன்மை கூறப்பட்டது. அது கூறியதால் அக்கிருபை யின்கண் ஆகந்துகத்தன்மை நிவிருத்திசெய்யப்பட்டது. இத்தகைய ஸ்வபாவ சித்த கிருபையால் அர்ச்சுனன் வியாபிக்கப்பட்டவனுவன். இக்காரணத்தாலேயே அர்ச்சுனன் விஷாதத்தையடைந்தனன். ஆண்டுச் சிநேகத்தின் விஷயரூபமாய தனது பந்துக்களினது நாசத்தின் எண்ணத்தைக் காரணமாகவுடைய சோகவடிவ சித்தத்தின் வியாகுல பாவத்திற்கு விஷாதமெனப் பெயராம். ஈண்டு விஷீதந்தம் என்னுஞ் சத்தத்தால் அந்த விஷாதத்தின்கண் பிராப்திவடிவக் கிரியையின் கர்மத்தன்மை கூறப்பட்டது. அர்ச்சுனனிடத்து அந்தப்பிராப்தி வடிவக்கிரியை யின் கர்த்தாத்தன்மை கூறப்பட்டது. அது கூறியதால் அவ்விஷாதத்தில் ஆகந் துகத்தன்மை சூசிக்கப்பட்டது. ஒருகாலுற்பன்னமாய பதார்த்தத்தை ஆகந்துக

மென்பர். இத்தகைய ஆகந்துக விஷாதத்தின் வசத்தால் *அசுரு ரூப ஜலம் நிறையப்பெற்று அதனுல் வஸ்துக்களைப் பார்க்க வல்லமையின்றி ஆகுலத்தன்மையோடுற்ற கண்களையுடைய அர்ச்சுனனிடம் அம்மதுசூதனபகவான் அநேகவித யுக்திகளோடு மேற்கூறப்படும் வசனங்களைக் கூறுவாராயினர். அவ்வர்ச்சுனனை ஸ்ரீ பகவான் உபேக்ஷைசெய்யவில்லை. ஈண்டுச் சஞ்சயரால் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு மதுசூதனன் என்னும் பெயர் கூறப்பட்டதன்று. அதனுல் சஞ்சயர் திருதராஷ்டிரரிடம் இப்பொருளைக் குறிப்பித்தனர்:—மதுவெனப் பெயரிய அசுரனை நாசஞ் செய்தவரை மதுசூதனனென்பர். அத்தகைய துஷ்டரைச் சம்ஹரிப்பவராகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் தனது ஸ்வபாவத்தினநுசாரமாக அவ்வர்ச்சுனனிடமும், உனது துரியோதனுதி துஷ்ட புத்திரரைக் கொல்லும் பொருட்டே யுபதேசஞ்செய்வர் என்பதாம். அல்லது தனது மதுசூதனனென்னும் பெயரை பயனுடையதாக்கும் பொருட்டு, அக்கிருஷ்ண பகவான் அர்ச்சுனனை நிமித்த மாத்திரமாகக்கொண்டு, தாமே உனது துஷ்டபுத்திரரைக் கொல்வர். ஆகையினுல், நீ தினது புத்திரர்களின் ஜயத்தைப் பற்றிய ஆசையை யொருகாலுஞ் செய்யவேண்டாம். (1)

(அ-கை.) இப்போது அக்கிருஷ்ண பகவானது வசனத்தை இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

ஸ்ரீ ஹயவதநவாக்யம்.

சு-ம். கஸ்தவாகஸ்மலமிதம் விஷமே ஸமுபஸ்தி தம்।
அநார்யஜுஷ்டமஸ்வர்க்யம் அகீர்திகரமர்ஜுந ॥

ப-ம். கஸ்த 6 கஸ்வா 3 கஸ்மலம் 5 இதம் 4 விஷமே 2 ஸமுபஸ்தி தம் 7 அநார்ய-ஜுஷ்டம் 8 அஸ்வர்க்ய-மயம் 9 அகீர்தி-கரம் 10 அர்ஜுந 1.

(அ-ம்.) ஏஅர்ச்சுன! இந்தப் பயத்தோடு கூடிய ஸ்தானத்தில், உன்னை இந்தக்கஷ்மலமா (மனநொய்ம்மையா)னது எக்காரணத்தால் அடைந்தது, அஃது எதத்தகைய கஷ்மலமெனின், சிரேஷ்ட புருஷர்கள் கைக்கொள்ளாததாதலும், சுவர்க்கத்தையடைய வொட்டாமற் றடுப்பதாதலும், அகீர்த்தியை யுண்டுபண்ணக் கூடியதாதலுமாமென்க.

(வி-ம்.) ஸ்ரீ ஹயவதநவாக்ய என்னும் வசனத்தின்கண் உள்ள ஹயவாநு என்னும் பதத்திற்குச் சாஸ்திரத்தில் இவ்வாறு பொருள் கூறப்பட்டிருக்கின்றது.

சு-ம். வைஷ்ணவ-மஸ்ய யஜ்ஞஸ்ய யத்-மஸ்ய யபஸ்விந:।
வைவஸ்வதோ மநுஸ்தஸ்ய ஸோமஸ்ய ஹயவாஹந: ॥

(பொ-ள்.) (1) சம்பூர்ண ஐச்வரியம் (2) சம்பூர்ண தர்மம் (3) சம்பூர்ண கீர்த்தி (4) சம்பூர்ண ஸ்ரீ (5) சம்பூர்ண வைராக்கியம் (6) சம்பூர்ண ஞானம் என்னும் இவ்வாறும் பகவனெனப்படும். இத்தகைய ஐச்வரியாதி ஆறு பகமும் பிரதிபந்த மின்றி நித்தியமாகவே எவரிடம் இருக்கின்றதோ, அவருக்குப் பகவானெனப்பெயராம். அல்லது பகவானென்னுஞ் சத்தத்திற்கு இதுபொருளாம்:—

உத்பத்திஞ்ச விநாசஞ்ச பூதாநாம் மாமதிம்மதிம்।
வேத்தி வித்யா மவித்யாஞ்ச ஸவாவை யஸ்ய ஹயவாநிதி ॥

---

* அசுரு = கண்ணினீர்.

(போ-ள்.) எந்தச் சர்வஞ்ஞ புருஷர் சர்வ பூதங்களின் உற்பத்தியையும், அவ் வுற்பத்தியின் காரணத்தையும் தெரிவரோ, அங்ஙனமே அவ்வெல்லாப் பூதங்களின் நாசத்தையும், நாசகாரணத்தையுந் தெரிவரோ, அங்ஙனமே சர்வ பூதங்களின் சம் பத்துவடிவ ஆகதியையும் ஆபத்துவடிவ கதியையுந் தெரிவரோ, அங்ஙனமே வித் தையையும் அவித்தையையுந் தெரிவரோ, அந்தச்சர்வஞ்ஞ புருஷர் பகவானென்னு நாமத்தாற் கூறப்பட யோக்யராவர். அத்தகைய ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச் சுனனிடம் இவ்வாறுகிய வசனங்களைக் கூறுவாராயினர் :—ஹே அர்ச்சுன! நிதே கவடிவ கிருபை, முற்கூறிய விஷாதம், கண்ணினீரொழுகுதல் என்னு மூன்றையுங் காரணமாக வுடையதும், அங்ஙனமே சிட்ட புருஷர்களால் நிந்திதமாதலால் அத் தியந்த மலினவ்டிவத்தை யுடையதும் ஆகிய இந்த யுத்தவடிவ ஸ்வதர்மத்தினின் றும் நிவிருத்திவடிவ கல்மலமானது, இந்தயுத்த பூமிக்கண் சர்வ க்ஷத்திரியர்களி லுஞ் சிறந்தவனுகிய உன்னை எவ்வேதுவால் அடைவுற்றது? கருத்திதுவாம் :— அந்த யுத்தவடிவ ஸ்வதர்மத்தினின்றும் நிவிருத்திரூப கல்மலமானது உன்னை மோக்ஷத்தின் இச்சைவடிவ ஹேதுவாலடைவுற்றதா? அல்லது சுவர்க்கத்தின் இச்சைவடிவ ஹேதுவாலடைவுற்றதா? அல்லது கீர்த்தியின் இச்சைவடிவ ஹேதுவாலடைவுற்றதா? இப்போதம்மூன்று ஹேதுக்களையு முறையே. க்ஷதாயஃ ஜுஷ்டம் க்ஷுத்ரஃயம் அகீர்த்திகரம் என்னு மூன்று விசேஷணங் களால் ஸ்ரீ பகவான் நிஷேதஞ் செய்கின்றனர், க்ஷதாயஃஜுஷ்டம் என்றற் றொடக்கத்துப் பாதிச் சுலோகத்தால், ஹே அர்ச்சுன! தனது வர்ணச்சிரம தர் மங்களால் அந்தக்கரண சுத்தியின் வாயிலாய் மோக்ஷத்தை இச்சிப்பவராகிய அசுத்த அந்தக்கரணமுடைய முமுக்ஷுஜனங்களாலோ இந்த ஸ்வதர்மத்தினின் றும் நிவிருத்திவடிவ கல்மலம் ஒருகாலுங் கைக்கொள்ள யோக்கியமன்றும். சர்வ கர்மங்களின் சந்நியாசத்தினது அதிகாரியோ சுத்த அந்தக் கரணமுடையவனே யாதல்வேண்டும், இவ்வார்த்தையை மேற்கூறுவாம்; ஆகையினால் மோக்ஷத்தி னிச்சைவடிவ ஹேதுவால் அந்தக் கல்மலத்தினடைவு பொருந்தாது. இந்த ஸ்வ தர்மத்தின் நிவிருத்திவடிவ கல்மலம் சுவர்க்கத்தினடைவைச் செய்வதாகிய தர் மத்தின் விரோதியாமாதலின், சுவர்க்கத்தி னிச்சையுடைய புருஷனுலும் கைக் கொள்ளப்படுவது தகுதியன்றும். அக்கல்மலம் இவ்வுலகத்தில் கீர்த்தியினை பா வத்தைச் செய்வதாம். அல்லது அபகீர்த்தியைச் செய்வதாமாதலின், இவ்வுல கத்தின் கீர்த்தியை இச்சிப்பவனுகிய புருஷனுலும் அக்கல்மலம் கொள்ளத்தக்க தன்றும். ஆகையினால் இப்பொருள் துணியப்பெற்றது :—மோக்ஷத்தி னிச்சை யுடைய புருஷனுலும், சுவர்க்கத்தி னிச்சையுடைய புருஷனுலும், கீர்த்தியி னிச்சை யுடைய புருஷனுலும், இந்த ஸ்வதர்மத்தினின்றும் நிவிருத்திவடிவ கல்மலம் எப் போதும் பரித்தியாகஞ் செய்யத்தகுதியாம். நீயோ மோக்ஷம், சுவர்க்கம், கீர்த்தி யென்னுமிவற்றின் இச்சையுடையவனுயிருந்தும் இக்கல்மலத்தைச் சேவிக்கின் றாய். ஆகையினால் உனது இவ்வியவகாரம் அத்தியந்தம் அநுசிதமாம். (2)

(அ-கை.) ஹே பகவன்! எனது பந்துக்களின் சேனையைப் பார்த்தலால் உற்பன்னமாகிய அதைரியத்தின் வசத்தால் வில்மாத்திரமுந் தாங்க வல்லமை யில்லாத நான் இப்போது எதைச்செய்வது தகுதியாம். என்னும் அர்ச்சுனனது சங்கைக்கு ஸ்ரீ பகவான் கூறுகின்றார்.

சு-ம். க்லைப்யம்மாஸ்மகமஃ பார்த² நைதத்த்வய்யுபபத்³யதே ।
க்ஷுத்³ரம்ஹ்ருத³யதௌ³ர்ப³ல்யம்த்யக்த்வோத்திஷ்ட²பரந்தப ॥

ப-ம். க்லைப்யம் 2 மாஸ்மகமஃ 3 பார்த² 1 ந 6 நைதத் 5 த்வயி 4 உப
பத்³யதே 7 க்ஷுத்³ரம் 9 ஹ்ருத³யதௌ³ர்ப³ல்யம் 10 த்யக்த்வா 11 உத்திஷ்ட² 12 பரந்தப 8

(அ-ம்.) ஹே பிருதையின் புத்ர! நீ இவ்வாண்மையற்ற தன்மையை படையாதே, அர்ச்சுனனுகிய உன்னிடத்து இவ்வாண்மையற்றதன்மை பொருந்தாது. ஹே பரந்தப! இவ்விழிவான மனதின் தூர்ப்பலத்தைவிட்டு நீ யுத்தத்தின் பொருட்டு எழுந்திரு.

(வி-ம்.) ஹே பிருதையின் புத்ர! * ஓஜஸ் தேஜஸ் என்பன முதலியவற்றின் நாசவழிவ அதைரியமாய ஆண்மையற்ற தன்மையை நீ படையாதொழிக. ஈண்டு, ஹே பார்த்த என்னுஞ் சம்போதனத்தால் பகவான் அர்ச்சுனனிடம் இப்பொருளைக் குறிப்பித்தனர்:—பிருதை மாதா தேவதைகளை ஆராதித்து, அத் தேவதைகளின் பிரசாதத்தால் உன்னைப் பெற்றனள். ஆகையினால் உன்னிடத்தில் பலத்தின் அதிகத்தன்மை மிகப்பிரகித்தமாம். இத்தகைய பிருதையின் புத்திரனுகிய நீ இவ்வாண்மையற்ற தன்மையை யடைவது தகுதியன்றும். இப்போது அர்ச்சுனத்தன்மை யானும் அவ்வாண்மையற்ற தன்மையின் அயோக்யத் தன்மையை நிரூபிக்கின்றனர். மெதுதிதி சாகூதாத் மஹேறப்வசேஜுடும் யுத்தஞ் செய்பவனும், அங்ஙனமே சர்வலோகப் பிரசித்த மறாப் பிரபாவமுடையவனும் அர்ச்சுனனுய நீயாம், அவ்வுன்னிடத்து இவ்வதைரிய வடிவ ஆண்மையற்றதன்மை ஒருகாலும் பொருந்காது.

ஹே பகவன்! கதயமிஷுபி ரஹம் ப்ரதியோத்ஸ்யாமி பூஜார்ஹாவரிஸூதன 8

(பொ ள்.) எனது மனந்சுழல்கின்றது. ஆகையால் எனது சரீரத்தைத் தாங்கவும் வல்லமை யின்றியடைகிருக்கின்றேன், என்னுமென்னது விருத்தாந்தம் முன்னமே தங்களிடத்து என்றுற் கூறப்பட்டதன்று. ஆகையினால் இப்போது தாங்கள் அடிக்கடி யெனக்கு எதன்பொருட்டுக் கூறுகின்றீர்கள். என்னும் அர்ச்சுனனது சங்கைக்கு ஸ்ரீ பகவான் கூறுகின்றார்:-கதம் ஹ்ய ஹம் ஹே அர்ச்சுன! மனதின் தூர்ப்பலத்தன்மை யெனப்படும் மனதின் சுழல்கை முதலிய வடிவ அதைரியமானது தன்னை யாசிரித்த புருஷனுடைய இழிவின்தன்மைக்குக் காரணமாயிருத்தலின் இழிவு வடிவமாம், அல்லது அச்சலனதிவடிவ அதைரியம் எனிதாகவே நிவிருத்தி செய்யப்படும். ஆகையினால் இழிவு வடிவமாம், இத்தகைய இழிவாகிய அதைரியத்தை விசாரத்தின் பலத்தால் வினாவிலே பரித்தியாகஞ்செய்து இந்த ஸ்வதர்ம வடிவ யுத்தஞ் செய்யும்பொருட்டுத் திண்ணமுடையவனுகுதி ஈண்டு, ஹே வரூதினி என அர்ச்சுனனது சம்போதனங் கூறியதால் பகவான் அர்ச்சுனனிடமிப்பொருளைக் குறிப்பித்தனர்:—கதம பீஷ்மமஹம் ஸங்கயே மதுஸூதன 8

(பொ-ள்.) தனது சத்துருக்கட்குச் சந்தாபத்தை யடைவிப்பவனுக்குப் பார்த்த பனெனப் பெயராம். இத்தகைய பரந்தபனுயிருந்தும் அத்தியந்தம் இழிவாகிய அதைரியவடிவ சத்துருவை நாசஞ்செய்யாமலிருப்பது மிகு ஆச்சரியமானவார்த்தையாம். ஆகையினால் நினது பரந்தப நாமத்தைப் பயனுடையதாக்கும்பொருட்டு, நீயிவ்வதைரிய வடிவ சத்துருவை அவசியம் நாசஞ்செய்வது தகுதியாம். (4)

(அ-கை.) ஹே பகவன்! யாதேதனுஞ் சில சோக மோகாதிகளின் வசத்தால் நான் இந்த யுத்தத்தைப் பரித்தியாகஞ் செய்கின்றேனில்லை, மற்றோர் இந்த யுத்தத்தில் தர்மநாபத்தன்மையின்றும், மாறாய் அதர்மநாபத்தன்மை யுளது, இக்காரணத்தால் நான் இந்த யுத்தத்தைப் பரித்தியாகஞ் செய்கின்றேன் என்னும் அர்ச்சுனனது அபிப்பிராயத்தைச் சஞ்சயர் கூறுகின்றார்:—

ஸஞ்ஜய உவாச.

ஏவமுக்த்வார்ஜுநஃ ஸங்க்யே ரதோபஸ்த உபாவிஸத் 1
விஸ்ருஜ்ய ஸஸரம் சாபம் ஸோகஸம்விக்நமாநஸஃ 2

---

* ஓஜஸ் தேஜஸ்=பலம் காந்தி.

கயம் 10 ஹீஷம் 6 சுஹம் 4 ஸம்வெய 3 தெரோணம் அ 7 உயுஷெமுக 1 உஷுஹிக 9 வ்ரதியொதன்யாதி 11 வமுஜாஹமுள 5 சுரிஷெமுக 2.

(அ-ம்.) ஹே மதுசூதன! ஹே அரிசூதன! இப்போர்க் களத்தின்கண் அர்ச்சனைகிய என்னற் பூஜிக்கப்படுபவராகிய பீஷ்மரையுந் துரோணரையும் நான் எவ்வாறு பாணங்களாற் கொல்வேன் மற்றே! கொல்லேன்.

(வி-ம்.) ஹே பகவன்! எமது குலத்தில் விருத்தரும் அங்ஙனமே குணங்களால் விருத்தரும் இப்பீஷ்ம பிதாமகராவர், அங்ஙனமே தனுர்வித்தையின் குரு இத்துரோணாசாரியராவர், இவ்விருவரும் எனது பிதாவைப் போன்று புஷ்டம், சந்தனம், அக்ஷதை என்னுமிவற்றுல் பூஜிக்கத்தகுந்தவராம். இத்தகைய பீஷ்மத்துரோணதி விருத்தர்களோடுவினையாடுமிடத்தில் ஆநந்தத்தின்பொருட்டு லீலையாகயுத்தஞ்செய்வதும் எனக்குத் தகுதியன்றுமாயின் இந்தப் போர்க்களத்திற் கூர்மையாகிய சஸ்திரங்களால் அப்பீஷ்மத்துரோணதியரைக் கொல்வது எனக்கு எவ்வாறுதகுதியாம்? மற்றே, அவர்களைக்கொல்வது எனக்குத் தகுதியன்றும். ஈண்டிது கருத்தாம்:— இந்தத் துரியோதனதியர், பீஷ்மபிதா மஹரையும், துரோணசாரியரையும் விட்டொழித்தோ என்னோடு யுத்தஞ்செய்யார்; மற்றே, பீஷ்மத்துரோணதியரை எதிரில் வைத்தே என்னோடு யுத்தஞ்செய்வர். ஆனல் பீஷ்மத்துரோணசாரியர்களோடு யுத்தஞ்செய்வது தர்மமோ அன்றும்; ஏனெனின், வேதத்தில் விதிக்கப்பட்ட பலமுடைய பொருளைத் தர்மமென்பர். இவ்வாறுகிய தர்மத்தினிலக்கணம் பீஷ்மத்துரோணதியரைப் பூஜிப்பதில் பொருந்துவதேபோல அவர்களோடு யுத்தஞ் செய்வதிற் பொருந்துவதின்றும். ஆகையினுலந்த யுத்தந் தர்மவடிவமனறும.

சங்கை:—ஹே அர்ச்சுன! எங்ஙனம் விருத்த புருஷர்களோடு யுத்தஞ்செய்வது சாஸ்திரத்தின்கண் விதிக்கப்படாமையால் அதன்கண் தர்மரூபத்தன்மை பொருந்தாதோ, அங்ஙனமே அந்த யுத்தத்திற்குச் சாஸ்திரத்தில் நிஷேதமுங் கூறப்படவில்லை. ஆகையினுல் அதன்கண் அதர்மரூபத்தன்மையும் பொருந்தாது, சாஸ்திரத்தால் நிஷேதிக்கப்பட்டதுவே அதர்மமாம்.

சமாதானம்:—ஹே பகவன்! சாஸ்திரத்தில் இது கூறப்பட்டுளது:—

மரூஹுங்காயதன்யாதன்யாய விவ்ராநிஜிக்ஷயவாக்ஷதம் ।
ஸஸாதெஜாயதெவ்ருக்ஷம் கங்கமயெராவஸெவிதம் ॥

(போ-ள்.) எப்புருஷன் தனது குருமூர்த்தியிடம் ஹுங்கார சத்தத்தையேனும் துங்காரசத்தத்தையேனுங் கூறுகின்றனனேனு, அங்ஙனமே சாதுப்பிரமாற்ற மணரை விவாதத்தால் ஜயிப்பனேனு, அப்புருஷன் மரித்து ஸ்மசானபூமியில் பருந்து கழுகு முதலிய பக்ஷிகளால் சேவிக்கப்பட்ட விருக்ஷ சரீரத்தை யடைவன் என்பதாம். இது முதலிய சாஸ்திரங்களின் வசனங்களால் சத்தமாத்திரத்தாலுங் குருவின் துரோகம் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது. சத்தமாத்திரத்தாலும் குருத்துரோகம் அதர்மமாயின் அப்பீஷ்மத்துரோணதி குருமார்களோடு கூர்மையான சஸ்திரங்களால் யுத்தஞ்செய்வது அதர்மரூபமாமென்பதில் யாது கூறவேண்டியுளது. ஈண்டு "ஹெயுஹுக, ஹெசுரிஹுக" என்னுமிரண்டு சம்போதனங்கள் பகவானுக்கு அர்ச்சுனனுற் கூறப்பட்டன; அவ்விரண்டிற்கும் பொருளொன்றேயாம். ஏனெனின், மதுவெனப் பெயரிய அசுரனைக் கொல்வதால் மதுசூதன னெனப்படும், மேலும் சத்துருக்களென்னும் அரிகளைக் கொல்வதால் அரிசூதன னெனப்படும். ஆகையினுல் ஒருதரங் கூறவேண்டிய அர்த்தத்தை மீண்டுங் கூறுவதில் அர்ச்சுனனுக்குப்*புனருக்திதோஷமே பிராப்தமாமாயினும் அவன் அக்காலத்திற் சோகத்தால் வியாகுலமுற்றவனுதலால் முன்பின் அர்த்தங்களின் நினை

* புனருக்தி=கூறியது கூறல்.

வின்றுமாகலின் *புனருக்தி தோஷத்தினடைவுண்டாகாது. சலனமின்றிய சித்த முடைய புருஷனிடத்தில்தான் புனருக்தி தோஷங் கொடுக்கப்படும். அல்லது மதுசூதன அரிசூதன என்னுமிரண்டு சம்போதனங்களால் அர்ச்சுனன் பகவானிடம் இப்பொருளைக் குறிப்பித்ததாம்:—ஹே பகவன்! தாங்களோ மதுவசுரன்முதலிய சத்துருக்களையே கொல்வீர். தங்களது மித்திரர்களைக் கொல்லீராகலின் பூஜிக்கத் தகுந்தவராய இப்பீஷ்மத்துரோணாதி குருமாரை நீ கொல்லுதியெனக்கூறிய வசனந் தங்களுக்குத் தகுதியன்றும். (4)

(அ-கை.) ஹே அர்ச்சுன! பீஷ்மபிதாமஹர் துரோணசாரியர் கிருபாசாரியர் என்னு மிவர்களிடத்துப் பூஜிக்கப்படுந் தன்மையுளது, அந்தப் பூஜிக்கப்படுந்தன்மையில் குருத்தன்மையானன்றி மற்றொரு காரணமுமின்றும். அந்தக் குருத்தன்மை பூர்வகாலத்தில் அப்பீஷ்மத் துரோணாதிகளிடத் திருந்ததாயினும், இக்காலத்தில் அப்பீஷ்மத் துரோணாதியரைக் குருரூபமாயங்கீகரிப்பது உனக்குத் தகுதியன்றும். எனெனின், தர்மசாஸ்திரத்தின்கண் இது கூறப்பட்டுளது:—

சு-ம். ஸுபொஷயவுஷ்டவஸ்ய காயஸ்ய காயஸ்ய ஜராகதஸ்ய।
உத்யம் ப்ரதிவதஸ்ய பரிதஸ்யாரிமாவிசீயதே॥

(பொ-ள்.) எந்தக் குருவானவர் அறங்காரா தி தோஷங்களால் உன்மத்தபாவத்தை யடைந்துளரோ அங்ஙனமே சாஸ்திரத்தில் விதித்துள்ள செய்ய யோக்கியமாய பொருளையும், அங்ஙனமே சாஸ்திரத்தில் நிஷேதித்துள்ள செய்யக் கூடாதனவாய பொருளையுந் தெரியாதவரோ, அங்ஙனமே சாஸ்திர நிஷித்தமார்க்கத்தில் பிரவர்த்திப்பவரோ, அக்குருவைச் சீடன் பரித்தியாகமே செய்தல்வேண்டும் என்பதாம். இவ்வெல்லா லக்ஷணமும் இப்பீஷ்மத் துரோணாதியரிடத்தே பொருந்தும். எனெனின், இப்பீஷ்மத் துரோணாதியர் யுத்தத்தின் கர்வத்தால் மிருதியாசிய உன்மத்தபாவத்தை யடைந்திருக்கின்றனர்; அன்றியும் இப்பீஷ்மத் துரோணாதியர் கபடத்தால் ராஜ்யத்தை யபகரித்தனர், தமது சிஷ்யர்களோடு துரோகஞ்செய்கின்றனர். ஆகையினால் இவர் காரியாகாரியங்களின் ஞானமின்றியவருமாவர், இக்காரணத்தானே சாஸ்திர நிஷித்தமார்க்கத்தில் பிரவிருத்திப்பவராம். இத்தகைய பீஷ்மத் துரோணாதியரைக் கொல்வதே மேன்மையாம் என்னும் பகவானது சங்கைக்கு அர்ச்சுனன் கூறுகின்றான்:—

சு-ம். ஸுஹ்ருதஸகாகுவாஹ்ருதி ஸுஹாருஹாவாஹு
பெபுயொலொகூம் விஹைகுதி ஸுரீஹமிஹொகெ।
ஹகுவாய ஜுகாஸாஹ்ருஹு ஸுஹ்ருதிஹைவ
ஹுஹுஜீயலொஹாஹு ஸுயிஸவ்ருதிஷ்டாஹு॥

ப-ம். ஸுஹ்ருஹு 3 சுஹாகுவா 4 ஹ்ருதி 1 ஸுஹாருஹாவாஹு 2 பெபுயொ 10 லொகூம் 8 விஹைகுதம் 7 சுஹ்ருதி 9 ஜ ஹ 5 லொகெ 6 ஹகுவா 14 சுயிஜுகாஸாஹு 11 தை 12 ஸுஹ்ருஹு 13 ஜ ஹ 15 ஹவை 16 ஹுஹுஜீய 19 லொஹாஹு 18 ஸுயிஸவ்ருதிஷ்டாஹு 17.

(அ-ம்.) ஹே பகவன்! மாட்சிமைதங்கிய குருமார்களைக் கொல்வதிலும் இவ்வுலகத்தில் பிக்ஷாந்நபுஜனத்தை யுண்பதும் மேன்மையாம். இப்பொருளில் இச்சையுடையவனையும் யான் குருமார்களைக் கொல்வதால், இவ்வுலகத்திலேயே உதிரந் தோய்ந்த விஷயங்களைப் போகிப்பவனாவேன்.

---

* புனருக்தி = கூறியதுகூறல்.

(வி-ம்) ஹே பகவன்! பீஷ்மத்துரோணதி ஆசார்யர்களைக் கொல்லாதொழி யின் எனக்குப் பரலோகமோ அவசியம் சித்தமாம். ஆனல் இவ்வுலகத்தின் கண்ணே அவர்களைக் கொல்லாததால் இராஜ்ய மின்றியவனுய் அரசர்கட்குச் சாஸ் திரத்தில் நிஷேதிக்கப்பட்டுள்ள பிக்ஷான்னத்தையும் புஜிப்பது எனக்கு அத்தி யந்தஞ் சிரேஷ்டமாம். ஆனல் இப்பீஷ்மத் துரோணதி ஆசாரியரைக் கொல்வ தால் எனக்கு இவ்வரசும் உயர்வன்ரும். எனெனின், சாஸ்திரத்திலிது கூறப் பட்டுளது :—

சு-ம். ஸுகூ கூவாவஹஞ்வ உமகூவா வ(ஓஂஹிஸ்ரம் ।
ஸுகூபயிகூவா அர்தாநம் யஉ(ஓ உவித்தவ்ஹ ॥

(பொ-ள்.) அந்நியப் பிராணிகட்குத் துக்கத்தைச் செய்யாமலும், வேத விருத்த நாஸ்திகரின் ஆலயங்கட்குச் செல்லாமலும் தனது ஆன்மாவிற்குத் துக் கத்தை யடைவிக்காமலும் இருக்கின்ற புருஷனுக்கு அற்ப பதார்த்தத்தின் பிராப்தி யுண்டாயினும் அதை யவன் மிகுதியாக அங்கீகரித்தல்வேண்டும். ஆகையினல் இப்பீஷ்மத்துரோணதியரைக் கொல்வதால் உண்டாவதாகிய ராஜ்யத்தைவிட இவர்களைக் கொல்லாததாலுண்டாம் பிக்ஷான்னத்தையே மிகுதியா யெண்ணு கின்றேன் என்னும் இப்பொருளை அர்ச்சுனன், ஹி, என்னுஞ் சப்தத்தாற் குறிப் பித்தனன்.

ஹே அர்ச்சுன! ம்ரொரவ்யவஹ்ரஸ்ய என முற்கூறிய வசனங்களால் இப்பீஷ்மத்துரோணதியரிடத்துக் குருத்தன்மையி னபாவத்தை யான் கூறி யுள்ளேனன்ரு? ஆதலின் அடிக்கடி நீ இவர்களிடத்தே குருபுத்தியை எதன் பொருட்டுச் செய்கின்ருய். என்னும் பகவானது சங்கைக்கு அர்ச்சுனன் கூறு கின்ருன் :—உஹாந்ஹாவாந்ந என. ஹே பகவன்! சிரவணம், அத்தியயனம், தபசு, ஆசாரம் என்றற் றொடக்கத்தனவாய உந்நத குணங்களால் மஹாப் பிரபாவத்தையுடைய இப்பீஷ்மத்துரோணதியர் காலகாமாதிகளையுந் தங்கள் வசப்படுத்துவர்; இத்தகைய மஹா புண்யவான்களாய பீஷ்மத் துரோணதி யரை முற்கூறிய இழிவாகிய பாவகர்மங்கள் பரிசமாத்திரமுஞ் செய்யமாட்டாவா தலின், இம்மஹாநுபாவ புருஷரிடத்து யாதோசில அற்பமாய அநுசிதகர்மங்களைப் பார்த்துக் குருத்துவ புத்தியை விடுவது எனக்குத் தகுதியன்ரும். அல்லது, ஹிம ஹாந்ஹாவாந்ந என்னும் இது ஓரேபதமாம் இதற்கு இவ்வாறு பொருள்கொள்க :—

"ஹிஸ்ஜாத்யஸ்வஹஞ்தி ஹிஸ்ஹா சூஜிதெய்ரா ஸ்மிவ்ஹாதவைஸ்வை ஸ்மந் ஹாவஸ் ஹாஸ்யஸ்ரம் யெஷாம் தெஹிஸ்ஹாந்ஹாவாஸ் தாந்.

(பொ-ள்.) ஜடத்தன்மை வடிவ ஹிமத்தை (பனியை) நாசஞ் செய்பவரெ வரோ, அவருக்கு "ஹிமஹா" எனப் பெயராம் அத்தகையர். சூரிய பகவானும், அக்கினியுமாவர், அத்தகைய சூரியன் அக்கினியென்னுமிவரைப் போன்ற சாமர்த் தியம் எவரிடமுளதோ, அத்தகையருக்கு ஹிமஹானுபாவர், எனப் பெய ராம்; அத்தகைய மிகுகாந்தி யுடையராய பீஷ்மத் துரோணதியருக்கு முற்கூ றிய இழிவாய பாவதோஷத்தின் அடைவுண்டாவதின்ரும்; இவ்வார்த்தை வேறு சாஸ்திரத்திலுங் கூறப்பட்டுளது :—

சு-ம். யஉ்வ்யதீ கூரொஉ்ரஷ ஈஷ்வராணாம்அ ஸாஹஸம் ।
தெஜீயஸாம்நதொஷாய வஹ்நேஸ் ஸுவ்ருஹ்ஜோயதா ॥

(பொ-ள்) ஈச்வர புருஷர்களிடத்து விசைவிலேயே தர்ம மரியாதையின் உல்லங்கனங் காணப்படுகின்றது, காணப்படினும் எங்ஙனம் சுத்தா சுத்தங்களாய

எல்லாப் பொருள்களையும் புஜிப்பதாகிய அக்கினிக்கு அசுத்த வஸ்துவைப் புஜிப்பதால் தோஷத்தி னடைவுண்டாகாததேபோல, அத்தர்ம மரியாதையின் உல்லங்கனமான து தேஜசுடைய புருஷருக்குத் தோஷத்தின் பொருட்டாவதின்றே அங்ஙனமே இப்பீஷ்மத்துரோணதி தேஜசுடைய புருஷருக்கு முற்கூறிய அநுசித கர்மங்கள் தோஷத்தின் பொருட்டாவதின்றும்.

சங்கை :—றே அர்ச்சுன! இப்பீஷ்மத்துரோணதியர் எப்போது தனத்தின் லோபத்தால் இந்த யுத்தத்தில் முயன்றனரோ, அப்போதே தங்களது ஆத்மாவை விற்றவர்களாவர்; இத்தகைய பீஷ்மத்துரோணதியரிடத்து முற்கூறிய மஹாத்மத்தன்மை யெவ்வாறு பொருந்தும்? இவ்வார்த்தையைப் பீஷ்ம பிதாமகர், தாமே யுதிஷ்டிரரிடங் கூறியிருக்கின்றனர்.

சுயூ-ஸெயூவாரு-ஷொஹூவொஹூவொலுகூயெ-ஹ நகூலெயுஸ ।
உதி லெதயூ ஸஹாரராஜ வெஜோலுயெ-ஹநகூளரு-வெஷ ॥

(பொ-ள்.) றே யுதிஷ்டிரவரசனே! இப்புருஷன் பொருளிற்கே தாஸனாகின்றானேயன்றி அப்பொருள் எப்புருஷனுக்கும் அடிமையாவதின்றும். சாஸ்திரத்திற் கூறப்பட்ட இவ்வார்த்தை சத்தியமாம். இக்காரணத்தாலே அர்த்தத்தின் லோபத்தால் இக்கௌரவர்களாற் கட்டுப்பட்டிருக்கின்றேன் என்பதாம். ஆகையினால் தனத்தின் லோபத்தையுடைய இப்பீஷ்மத்துரோணதியரிடத்து முற்கூறிய மஹாத்மத்தன்மை சம்பவியாது என்னும் பகவானது ஆசங்கைக்கு அர்ச்சுனன் கூறுகின்றான். ஹகூவா என றே பகவன்! அப்பீஷ்மத்துரோணதியர் தனத்தில் இச்சை யுடையவர்களாமாயினும், என்னை யபேக்ஷித்து அப்பீஷ்மத்துரோணதியர் குருரேவ யாவரென்னு மிப்பொருளைப் பின்னருங் குரு சப்தத்தைக் கூறி அர்ச்சுனன் குறிப்பித்தனன். அங்ஙனம் பொருளினிச்சை யுடையராயிருப்பினும் குருமார்களைக் கொல்வதால் நான் கேவலம் விஷயபோகத்தையே அநுபவிப்பேனன்றி மோக்ஷத்தையா அடைவேன். அவ்விஷய போகமும் கேவலம் இவ்வுலகின்கண்ணே யெனக்குண்டாம்; பரலோகத்திலோ அது கிடைக்கமாட்டாது; இவ்வுலகத்திலும் சிரேஷ்ட புருஷரால் நிந்திக்கப்படாத விஷயபோக மெனக் குண்டாவதின்றும். மற்றே, * யசஸின்மைவடிவ ரத்தத்தால் தோயப்பெற்றதால் அத்தியந்தம் நிந்திதமாய விஷயபோகங்களினடைவு எனக்குண்டாம். கருத்திதுவாம் :—இப்பீஷ்மத்துரோணதி ஆசார்யர்களைக் கொல்வதால் இவ்வுலகத்திலும் எனக்கிவ்வாறுகிய துக்கமுண்டாவதாயின், பரலோகத்திலுள்ள துக்கத்தை யாவனெவ்வாறு வர்ணிப்பேன். அல்லது சுயூ-ஸகாஜாரு என்பது விஷயரூப போகங்கட்கு விசேஷணமென்றறிக. அப்பக்ஷத்தில் இப்பொருள்கொள்க :—இப்பீஷ்மத்துரோணதி ஆசாரியர்களைக் கொல்வதால் நான் கேவலம் அர்த்த காமவடிவ விஷயங்களையே போகிப்பேன். ஆனால் அவர்களைக் கொல்வதால் எனக்கு யாதொரு தர்மமும் மோக்ஷமும் உண்டாகாது. (5)

(அ-கை.) றே அர்ச்சுன! க்ஷத்திரியர்கட்குப் பிக்ஷாந்ன புண்பது சாஸ்திரத்தில் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் யுத்தஞ்செய்வதோ, விதிக்கப்பட்டுளது. ஆகையினால் சுவதர்மமாயிருக்கும் யுத்தமே யுனக்கு மேன்மையை யுண்டுபண்ணு நிற்கும் என்னும் பகவானது ஆசங்கைக்கு அர்ச்சுனன் கூறுகின்றான் :—

சு-ம். நலெஅதஜிஜ கூதாரதொமரீயொ
யஜூராஜயெஅயஜிவா தொராஜயெய-ஹ ।

* யசஸு = கீர்த்தி.

யாதெவஹகூவாநஜி ஜீவிஷாஃ
ஹெவஹ்லிதாஃவ்ரஜுவெ யாதஃராஷ்ட்ராஃ ॥

ப-ம். நஅ 5 வஅதஃ 4 விஜுஃ 6 கூதராஃ 2 நஃ 1 மஸீயஃ 3 யஜூ 7 ஜயெஃ 8 யதிவா 9 நஃ 10 ஜயெயுஃ 11 யாந 12 வஅவ 18 ஹகூவா 13 நஃ 15 ஜிஜீவிஷாஃஃ 14 தெ 16 சுவ ஹ்லிதாஃ 20 வ்ரஜுவெ 19 யாதஃராஷ்ட்ராஃ 17.

(அ-ம்.) ஹே பகவன்! பிகூஷை யுத்தமென்னும் இரண்டு தர்மங்களுள் எனக்கு எது சிரேஷ்டமோ, அதை யானறிகின்றிலேன் போர்புரியினுமென்? யான் அவர்களை வெல்வனே? அல்லது, இக்கௌரவர்கள் என்னை வெல்வரோ? அல்லது எந்தப் பீஷ்மத்ரோணாதி பந்துக்களைக் கொல்வதால், யாங்கள் உயிர் வாழ்க்கையி னிச்சையையும் செய்யேமோ அப்பீஷ்மத் ரோணாதி பந்துக் களை எங்கள் எதிரில் நிற்கின்றனர்.

(வி-ம்.) ஹே பகவன்! பிகூஷையூண், யுத்தம் என்னுமிரண்டு தர்மங்களுள் எனக்கு எத்தர்மம் சிரேஷ்டமாம். ஹிம்சையின்றி யிருத்தலால் பிகூஷான்னமே சிரேஷ்டமா? அல்லது சுவதர்மமாதலின் யுத்தமே சிரேஷ்டமா? இவ்விஷயத்தை யானறிந்திலேன். ஹே அர்ச்சுன! பயிக்கவுணவு, போர் என்னுமிரு தர்மத்தின் கண் சுவதர்மமாதலின் போரே யுனக்கு மேன்மையதாம் என்னும் பகவானது சங் கைக்கு அர்ச்சுனன் கூறுகின்றான்:—யத்ஏவ ஹே பகவன்! ஒருகால் யான் போர்புரியினும் யானே இப்பீஷ்மாதியரை வெல்வனே? அல்லது இப்பீஷ்மாதியரே என்னை வெல்வரோ? என்னுமிவ்விஷயத்தையும் யானறிந்திலேன்; ஒருகால் இப்பீ ஷ்மத்ரோணாதியரே யென்னை வெல்லின் முடிவில் யான் பிகூஷாவாங்கியே போஜ னம் செய்யவேண்டிவரும், அல்லது யான் மரிக்கவேண்டிவரும் என்னு மிவ் விரண்டு விஷயங்களுள் ஒன்றே அவசியமுண்டாம் ஆகையினால் அந்த யுத்தத் தின் முதலிலேயே பிகூஷையேற்றுப் போஜனஞ்செய்வது எனக்கு உபர்வாம். ஹே அர்ச்சுன! எனக்கு வெற்றியுண்டாமோ? அல்லது இப்பீஷ்மத் ரோணாதி யருக்கு வெற்றியுண்டாமோ? என்றிவ்வாறுகிய ஐயத்தை நீ யெதன்பொருட்டுச் செய்கின்றாய்? கிருஷ்ணபகவானைய யான் நினது சகாயமாக விருக்கின்றனதலால் நினக்கே அவசியம் வெற்றியுண்டாம் என்னும் பகவானது சங்கைக்கு அர்ச்சுனன் கூறுகின்றான்:—யாநெவ ஹி ஹே பகவன்! ஒருகால் தங்கள் சகாயத்தால் எனக்கு வெற்றிவரினும் அந்தவெற்றி யானது முடிவாய் எனக்குத் தோல்வியே யாம், ஏனெனின், எந்தப் பீஷ்மத்ரோணாதியரைக் கொல்வதால் யான் எனது உயிர் வாழ்க்கையை மாத்திரமும் இச்சியேனோ அவர்களைக்கொன்று யான் விஷய போகங்களை யெவ்வாறு விரும்புவேன்? மற்றை, விரும்பேன். அப்பீஷ்மத் ரோணாதியரே யாம் யுத்தத்திற் சாவேமென்னும் நிச்சயத்தோடு எனது எதிரில் நிற்கின்றனர். அத்தகைய பிரிய பந்துக்களை நாசஞ்செய்வதாலுண்டாம் வெற் றியும் தோல்வி வடிவமேயாம். ஆகையினால், பிகூஷான்னத்தைப் புஜிப்பதிலும் சிரேஷ்டத்தன்மை இப்போரின்கண்ணின்றும்.

ஈண்டு எவரோ ஒரு உரையாசிரியர் நஹ்யெதத்விஜ்மஃ கூதரந்நோ குர்யாத் என்னும் முதற்பாதத்திற்கு இவ்வாறு பொருள் கூறியிருக்கின்றார்:—எம்முள் எச் சேனை மிகுதியாமென்பதை யான் உணர்ந்திலேன் என்பதாம். அப்பொருள் சம் பவியாது, ஏனெனின், இச்சுலோகத்தின் மேற்சுலோகத்தின்கண் வ்ரஜ்ஹாம யஜ்ஜீவந்ஜ்ஜிஜீவிஷாமஃ என்னும் வசனத்தால் அர்ச்சுனன் தர்மத்தின் ஐயத்தையே காண்பித்துளான்; அவ்வசனத்தினநுசாரமாக இச்சுலோகத்திலும் பிகூஷான்னம்

யுத்தம் என்னுமிரண்டு தர்மங்களிலேயே அர்ச்சுனனது சம்சயம் சம்பவிக்கும்; சேனையின் அதிகத்தன்மையில் சம்சயம் சம்பவியாது. அல்லது நலெதஹி உ என்னும் வசனத்திற்குச் சேனையின் அதிகத்தன்மையின் ஐயத்தை யங்கீகரிக்கிறை, அச்சேனையினது அதிகத்தன்மையின் ஐயத்தாலே வெற்றியினயம் துணியப்படுமென்பது. ஆகையினால் யதாஜயெ யதிவாநாஜயெயுஃ என்னுமிரண்டாவது பாதத்திற் கூறப்பட்ட வெற்றியின் ஐயம் பயனற்றதாதல் வேண்டும் இக்காரணத்தால் முதலுரையே அநேக வரையாசிரியர்களது சம்மதமாம்.

அ-கை. ஈண்டுமுற்கிரந்தத்தாற் சம்சாரதோஷங்களின் நிரூபணஞ்செய்யப்பட்டது; அதனால் அதிகாரிபுருஷனது விசேஷணங் கூறப்பட்டதாயது. ஆண்டு நஅபெயொநு வபயாதிஹகூவாபவுஜநஉஹவெஃ சு. (31) என்னும் வசனத்தில் போரில் மரித்த சூரவீர புருஷனுக்கு யோகமுற்ற சந்நியாசிக்கொப்பாய் யோகசேஷமத்தினடைவு கூறப்பட்டுளது. அது கூறியதால் சுநயஃபெயொஉயஒதெவவெயஃ என்னுங் கடவல்லி சுருதியால் பெறப்பட்ட மோகூஷவடிவ சிரேயசும் அம்மோகூஷவடிவ சிரேயசின் வேறுய பதார்த்தங்களிடத்தே அப்ரேயசு வடிவத்தன்மையுங் கூறப்பட்டதாயிற்று. அது கூறியதால் நித்தியா நித்தியவஸ்து விவேகங் காண்பிக்கப்பட்டது. மேலும் நகாமகூஷவிஷயம்கூஷ (32) சுலோகத்தால் இவ்வுலகத்தின் விஷயஜன்னிய சுகத்தினின்றும் வைராக்கியம் காண்பிக்கப்பட்டது. சவிதெதரொகூயாஜ்ய லயஹெதாஃ (35) என்னும் வசனத்தால் சுவர்க்காதிலோகங்களின் விஷயஜன்னிய சுகத்தினின்றும் வைராக்கியங் காண்பிக்கப்பட்டது. நஈகெநியதம்வாலொ லவதி (44) என்னும் வசனத்தால் இத்நூலசரீரத்தின் வேறுய் ஆன்மாவின் சொரூபங் காண்பிக்கப்பட்டது. கிம்நாஈஜ்யநமொவிந (32) என்னும் வசனத்தால் மனத்தின் நிக்கிரகரூப சமை காட்டப்பட்டது. கிம்ஹொதெமஜ்ஞவிதெநவா (32) என்னும் வசனத்தால் இந்திரிய நிக்கிரஹவடிவ தமங் காட்டப்பட்டது யதஃபெயுதெநபபயுஞ்ஜி (38) என்னும் வசனத்தால் லோபமின்மை காட்டப்பட்டது நதெநகூஷதாம்ஹவெஃ (46) என்னும் வசனத்தால் நிக்கிரஹங் காண்பிக்கப்பட்டது. இவ்வாறு இக்கீதா சாஸ்திரத்தின் முதலத்தியாயத்தினது பொருள் சந்நியாசத்தின் சாதனங்களைக் குறிப்பிக்கின்றது.

இவ்விரண்டாவது தத்தியாயத்தின்கண்ணே பெயொஹாகூம் தெஹகூஷவீஹரெயுரொகெ (5) என்னும் வசனத்தால் பிகூஷான்ன போஜனத்தாலுயலகூஷிதமாய சந்நியாசத்தின் நிரூபணஞ் செய்யப்பட்டது. இப்போது பிரஹ்மசாகூஷாத்காரத்தின்பொருட்டுச் சுருதியிற் கூறப்பட்டுள்ள பிரஹ்மவித்தாவாய குருவினது சமீபத்தே சீடனது செல்கை நிரூபிக்கப்படும்:—எனெனின், எப்புருஷன் சம்சாரத்திலுள்ள சர்வ தோஷங்களையுந் தெரிந்து இவ்வுலகத்திலும் பரலோகங்களிலுமுள்ள விஷயஜன்னிய சுகங்களினின்றும் அத்தியந்தம் வைராக்கியத்தையடைந்து அதன்பின்னர் விதிப்படி பிரஹ்மவித்தா குருவைச் சரணடைவதை, அத்தகைய சாதனசம்பன்ன புருஷனுக்கே பிரஹ்மவித்தையைக் கிரகணஞ் செய்வதில் அதிகாரமுள தாதலினென்க.

ஆண்டு முற்சுலோகத்தின்கண் பிஷ்மத்துரோணாதிகளது துக்கத்தின் வசத்தால் வயூதாயாஉயஹிகூஷாயாஃயுஜ்யமாநே என்னுஞ் சுருதிமூலமாய்ப் பெறப்பட்ட பிகூஷாசரியத்தில் அர்ச்சுனனது அபிலாஷை காண்பிக்கப்பட்டது. இப்போது விதிப்படி பிரஹ்மவித்தாவாய குருவிடம் அர்ச்சுனனது செல்கையையும் அப்பிஷ்மத்துரோணாதியரின் துக்கத்தின் வியாஜத்தாலே நிரூபிக்கின்றார்:—

சு-ம். காவபுணயுதொஷொ வபஹ தவுஹாவஃ
வயூஹாதிகூவாம்யஃபுஸம்ஃபூபெதாஃ ।

யதெ யஃ ஸ்யாந்நிஶ்சிதம் ப்ரூஹி தந்மே
ஶ்ரே
ஶிஷ்யஸ்தெஹம் ஶாயி ஸாம் த்வாம் ப்ரபந்நம் ॥

ப-ம். காவாணை 3 தொஷொவ ஹதஹ்வ ஹாவஃ 4 வ்ருத்தாசி 3 த்வாம் 3 ய2-ச2ஸ்ய2ஸ்ய
ஶ்ரெதாஃ 5 யத் 7 ஸ்ரெயஃ 8 ஸ்யாத் 6 நிஶ்சிதம் 11 ப்ரூஹி 9 தத் 10 மெ 14
ஶிஷ்யஃ 13 தெ 12 சுஹம் 18 ஶாயி 17 ஸாம் 15 த்வாம் 16 ப்ரபந்நம்

(அ-ம்.) ஹே பகவன்! *கார்ப்பண்யதோஷத்தால் †திரஸ்காரத்தையடைந்த சுபாவவானும் தர்மத்தின் ஐயத்தால் வியாபிக்கப்பட்ட மனத்தினனும் ஆய அர்ச்சுனனுகிய யான் தங்களிடத்தே மேன்மையை வினவுகின்றேன்; ஆதலின், எது உறுதியான மேன்மையோ, அதைத் தாங்கள் என்பொருட்டுக் கூறுவீர்களாக. அடியேன் தங்களுடைய சீடனுயிருக்கின்றேனதலால் தங்களைச் சரணுகதியாக அடைந்திருக்கும் என்னைத் தாங்கள் சிக்ஷித்தருள்வீராக.

(வி-ம்.) இவ்வுலகத்தில் எப்புருஷன் யாதெனும் அற்பதனத்தினுலையும் பொறுக்கின்றுனில்லையோ, அப்புருஷனைக் கிருபணனென்பர். மோக்ஷருட புருஷார்த்தத்தின் அடைவின்றிய எல்லா அநாத்ம வேத்தாக்களாய அஞ்ஞானிகளும் அக்கிருபண புருஷனுக்குச் சமானராதலால் கிருபணர்களாம்.

யொவாஹ தஉக்ஷ்ஶம் மாமஃயவிஜிகுவாஃ।
ஹாஉயொகாக் வைதிஹகுயவணஃ ॥

(போ-ள்.) ஹே கார்க்கியே! அதிகாரியாய மனுடசரீரத்தை யடைந்த எப்புருஷன் இவ்வக்ஷர ஆன்மாவை அறியாமல் இவ்வுலகத்தினின்றுஞ் செல்வனே, அப்புருஷன் கிருபணனே யாவன் என்பதாம்.

கூயவணொஃஜிதெந்த்ரியஃ ॥

(போ-ள்.) எப்புருஷன் தனது இந்திரியங்களை வெல்கின்றுனில்லையோ, அப்புருஷன் கிருபணனே யாவன் என்றற் றொடக்கத்தனவாய சுருதி ஸ்மிருதிகளின் பிரமாணத்தால் அஞ்ஞானி புருஷரிடத்தே கிருபண ரூபத்தன்மை பெறப்படுகின்றது. அத்தகைய கிருபண புருஷரிடத் திராநின்ற எத்தேகாதி அநாத்ம பதார்த்தங்களின் அத்தியாசமுண்டோ, அதற்குக் கார்ப்பண்யமெனப் பெயராம். அக்கார்ப்பண்யத்தாலுண்டாய, இஜ்ஜன்மத்தின்கண் இவரே யெனது பந்துக்கள் அவர்கள் நாசமுற்று யான் ஜீவித்திருப்பதிலென் பயன்? என்றிவ்வாறுகிய அபிநிவேசவடிவ மமதையாகிய தோஷத்தால் திரஸ்காரத்தை யடைந்துள்ள யுத்தத்தின் முயற்சிவடிவ சுபாவத்தோடு கூடியவனும், அங்ஙனே தர்மத்தில் நிர்ணயஞ் செய்வதாகிய பிரமாணத்தின் அதர்சனத்தால் இப்பீஷ்மாதியரைக் கொல்வதே யெனது தர்மமா? அல்லதென்? இப்பீஷ்மாதியரை ரக்ஷிப்பது எனது தர்மமா? அல்லதென்? பூமியைப் பரிபாலனஞ்செய்வது எனது தர்மமா? அல்லதென்? முன்னடைந்த வனத்தில் வாசஞ்செய்வதே யெனது தர்மமா? என்னுமிவை முதலிய அநேக சம்சயங்களால் வியாபிக்கப்பட்ட சித்தமுடையவனும் ஆகிய அத்தகைய யான் தங்களிடம் எனது மேன்மையை வினவுகின்றேன். ஆகையினுல், எந்தப் பரம புருஷார்த்தமான சிரேயசு, ஏகாந்திக வடிவமும் ஆத்தியந்திக வடிவமும் நிச்சயமாயாமோ, அத்தகைய சிரேயசைத் தாங்கள் எனக்குக் கூறுவீர்களாக. அவற்றுள், தனது சாதனங்களின் பின்னர் அவசியம் உண்டாகுந் தன்மைக்கு ஏகாந்திகத்தன்மை யெனப்பெயராம். ஒருதரமுற்பன்னமாயதற்கு மீண்டொருக்காலும்

* கார்ப்பண்யம் = கிருபணத்தன்மை (லோபம்) † திரஸ்காரம் = நிந்தை.

நாசமுண்டாகாதிருத்தற்கு ஆத்தியந்திகத் தன்மையெனப் பெயராம். எங்ஙனம் உலகத்தில் ஔஷதங்கொண்ட பின்னர் ஒருகால் ரோகத்தின் நிவிருத்தி யுண்டாவதுமின்றும். ஒரொருக்கால் அவ்வௌஷதத்தால் ரோகத்தின் நிவிர்த்தி யுண்டாகியும் விடும். ஆயினும், மீண்டும் ரோகத்தினுற்பத்தியால் அந்த ரோகத்தின் நிவிருத்தி நாசமடைந்துவிடும். இவ்வாறு யாகஞ்செய்தும் ஏதாவது பிரதிபந்தகத்தின் வயத்தால் சுவர்க்கப்பிராப்தியு முண்டாவதுமின்றும். அந்த யாகத்தாலடையப்பெறினும், சுவர்க்கம் துக்கங்களால் * மிசிரிதமாகவே யுண்டாம்; அங்ஙனமே நாசத்தையுமடையும். ஆகையினால், ரோகநிவிருத்தியிலும் சுவர்க்கப் பிராப்தியிலும் அவ்வேகாந்திகத் தன்மையும் ஆத்தியந்திகத் தன்மையுஞ் சம்பவியாது. பிரஹ்மான்ம சாக்ஷாத்காரத்தின் பின்னர் அப்பரம புருஷார்த்த வடிவ சிரேயசானது அவசியம் பிராப்தமாம். ஆகையினால், அந்தச் சிரேயசில் வகாந்திகத் தன்மையுமுளது. ஒருதரம் அடையப்பெற்ற அந்தச் சிரேயசு ஒருக்காலும் நாசத்தையடைவதின்றுமாதலின், அதனிடத்து ஆத்தியந்திகத் தன்மையுமுளது. அத்தகைய சிரேயசைத் தாங்கள் எனக்கு உபதேசிப்பீராக.

ஹே அர்ச்சுன! சுருதியில் இஃதறையப்பட்டுளது:—

நாவை தூராயாயபிஷ்யாயவைவை நஃ ॥

(பொ-ள்.) எப்புருஷன் புத்திரபாவமும் சிஷ்யபாவமு மின்றியவனே, அவனுக்குப் பிரஹ்மவித்தையி னுபதேசஞ்ந செய்யற்க என்பதாம். ஆனல், நீயோ எனது சிநேகிதனும். எனது சிஷ்யன் நீயென்றும். ஆகையினல், உன்பொருட்டு யானெவ்வாறு சிரேயசை யுபதேசிப்பேன்னனப்பகவானது சங்கையுண்டாக அர்ச்சுனன் கூறுகின்றான்:—பரிஷ்யஹ்யஹம் "உமது சிடனையிருக்கின்றேன்" ஹே பகவன்! தங்களது சிகைஷைக்குத்தகுதி யுடையனதலால் யான் தங்களுடைய சிஷ்யனேயாம்; தங்களுடைய சிநேகிதனன்றும். வெனினின், சமானஞானமுடைய புருஷர்கட்கே பரஸ்பரம் சிநேகித பாவமுண்டாம். ஏற்றத்தாழ்வாய ஞானமுடைய புருஷர்கட்குப்பரஸ்பரம் சிநேகிதபாவ முண்டாவதின்றும்; ஆனல், யானே தங்களை யபேக்ஷித்து அத்தியந்தங் குறைந்த ஞானமுடையவனை யிருக்கின்றேன். ஆகையினல், யான் தங்களுடைய சினேகிதனன்றும்; மற்றோர் சிஷ்யனும். ஆகையினல், தங்களைச் சரணகதியாக வடைந்திருக்கும் சிஷ்யனகிய எனக்குத் தாங்கள் கிருபையால் சிரேயசை யுபதேசஞ்ந செய்வீர்களாக. சிஷ்யபாவமின்மையினைணத்தால் தாங்கள் என்னை யுபேக்ஷைசெய்து விடக்கூடாது; இவ்வளவால் பிரஹ்மவேத்தாவாய குருவின் சமீபத்தே தனது செல்கையைத் தெரிவிப்பதாகிய இரண்டு சுருதிகளின் பொருள் நிரூபிக்கப்பட்டது. அவ்விரண்டு சுருதிகளுமாம்:—

தத்விஜ்ஞானார்த²ம் ஸ கு³ருமேவாபி⁴க³ச்ச²தே³த் ஸமித்பாணி꞉

ப்ரோத்ரியம் ப்³ரஹ்மநிஷ்ட²ம் தஸ்மை ஸ வித்³வாநுபஸந்நாய

ஸம்யக்ப்ரஶாந்தசித்தாய ஶமதா³நிதாய தே⁴தாய

யேநாக்ஷரம் புருஷம் வேத³ ஸத்யப்ரோவாச தாம் தத்வதோ ப்³ரஹ்மவித்³யாம்

ஸ போ⁴ ந்ரூஹி ப⁴க³வோ இதி ஸ ஹ தஸ்மை ஸ வித்³வாநுபஸந்நாய

ஸம்யக்ப்ரஶாந்தசித்தாய ஶமதா³நிதாய தே⁴தாய

ப்ரோவாச தாம் தத்வதோ ப்³ரஹ்மவித்³யாம் ॥ எனவுமாம்.

(பொ-ள்.) பிரஹ்ம சாக்ஷாத்காரத்தின் பொருட்டு இவ்வதிகாரி புருஷன் தனதுகையில் சமித்து முதலிய தக்ஷிணையைக் கவர்ந்துகொண்டு அசேஷசாஸ்திரபாண்டித்தியமும், பிரஹ்ம ஸாக்ஷாத்காரமுமுடைய குருவின்பாற் செல்க. வருணனது புத்திரராகிய பிருகு இருஷியென்பவர் பிரஹ்ம ஞானத்தையடையும் பொருட்டுத் தனது வருண பிதாவின் சமீபத்திற் சென்று. ஹே பகவன்!

---

* மிசிரிதம் = கலப்புற்றது.

என்பொருட்டுப் பிரஹ்மத்தின் உபதேசசத்தைச் செய்யுங்கள் என்றிவ்வாறு வினவினர். இவ்வருண பிருகுவின் சம்வாதம் ஆத்ம புராணத்தின் பத்தாவதத்தியாயத்தில் யாம் விஸ்தாரமாய் நிரூபணஞ் செய்துளேம். (7)

(அ-கை.) ஹே அர்ச்சுன! நீ சர்வ சாஸ்திரங்களையும் உணர்ந்தபண்டிதனும். ஆகையினால், நீயே சிரேயசைவிசாரஞ் செய்தி, எதன் பொருட்டு எனக்குச் சிஷ்யனாகின்றாய்? எனப்பகவானது சங்கை யுண்டாக, அர்ச்சுனன் கூறுகின்றான் :—

சு-ம். நஹிப்ரபஶ்யாமி மமாபநுத்யா
யச்சோகமுச்சோஷண மிந்த்ரியாணாம் ॥
அவாப்யபூமாவமஸபத்நமृத்தம்
ராஜ்யம்ஸுராணாமபிசாதிபத்யம் ॥

ப-ம். நஹி 7 ப்ரபஶ்யாமி 8 மம 2 அபநுத்யாத் 6 யத் 1 சொகம் 5 உச்சோஷணம் 4 இந்த்ரியாணாம் 12 அவாப்ய 9 பூமௌ 10 அஸபத்நமृத்தம் 11 ராஜ்யம் 14 ஸுராணாம் 16 அபி 13 ச 15 ஆதிபத்யம்

(அ-ம்.) ஹே பகவன்! இவ்வுலகத்தில் பகைவரற்றுத் தனதான்யாதிகளோடு கூடிய ராஜ்யமும், தேவர்கட்குத் தலைவனாயிருத்தலுங் கிடைக்கப் பெறினும், இந்திரியங்களைச் சந்தாபப்படுத்தும் என்துயரத்தை நீக்குவதாகிய சிரேயசையான் அறிகின்றிலேன்.

(வி-ம்.) ஹே பகவன்! எந்தச் சிரேயசினைடவு எனது சோகத்தை நிவிர்த்தி செய்யுமோ அந்தச் சிரேயசையான் உணர்கின்றிலேன், அதனால்தாங்கள் என் பொருட்டு அந்தச் சிரேயசையுபதேசியுங்கள். இத்தனை கூறியதால் அர்ச்சுனன் இச்சுருதியின் பொருளைக் குறிப்பித்தனன் :—

சுருதி. யொஹம் ஹமவஃ பொஆசிதம்ஶாம் ஹமவாநுபொகஷ்ய।
வாரம்தாரயத॥ என

(பொ-ள்.) ஹே சனற்குமார பகவானே! ஆத்மாவை யுணர்ந்தோன் * சோகத்தைக் கடப்பன் என்னும் இவ்வார்த்தையை யான் தங்களைப் போன்ற வித்துவான்களாய புருஷர் வாயிலாய்க் கேட்டுளேன்; ஆனால், நாரதனுகிய யாதே சோகத்தை யடைகின்றேன். ஆகையினால், யான் ஆன்மவேத்தாவல்லேன், இத்தகைய நாரதனுகிய என்னைச் சோகத்தின் கரைசேருமாறு செய்யுங்கள். கருத்திதுவாம் :—பிரஹ்ம வித்தையின் உபதேசத்தால் எனது சோகத்தைநாசஞ் செய்வீர்களாக என்பதாம். இச்சனற்குமார நாரதரின் சம்வாதத்தை ஆன்மபுராணத்தின் பதின்மூன்றும் அத்தியாயத்தின்கண் யாம் விரிவாய் நிரூபித்திருக்கின்றோம்.

ஹே அர்ச்சுன! அந்தச் சோகத்தை நிவிருத்தி செய்யாவிடினும் உனக்கு வரும் ஹானியென்? எனப்பகவானுக்கு ஆசங்கையுண்டாக, அர்ச்சுனன் அச்சோகத்திற்கு விசேஷணங் கூறுகின்றான் இந்த்ரியாணாமுச்சோஷணம் என. ஹே பகவன்! அச்சோகமானது எக்காலத்திலும் எனது இந்திரியங்கட்குச் சோகத்தை யுண்டுபண்ணுவதாம்; அத்தகைய சோகமிருப்பதால் எனக்கு மிகுதி

---

* சோகம்=துக்கம்.

யாயஹானியுளது. ஆகையினால் அச்சோகத்தை அவசியம் நிவிருத்திசெய்தல்வேண்டும். ஹே அர்ச்சுன! நீயுத்தத்திற் பிரவிர்த்திக்கிறை, உனக்குச் சோகத்தின் நிவிருத்தியவசியமுண்டாம். ஆண்டு யுத்தத்தில் நீ வெற்றியை யடையிறை, ராஜ்யத்தினடைவாலுனக்குச் சோகத்தின் நிவிருத்தியுண்டாம். அன்றியும் யுத்தத்தில் நீ மரணத்தை யடையிறை, சுவர்க்கத்தின் பிராப்தியால் உனக்குச் சோகத்தின் நிவிருத்தியுண்டாம். ஆகையினால், சோக நிவிருத்தியின்பொருட்டு நீ யுத்தத்தை விட்டு வேறுபாயத்தை எதன்பொருட்டுத் தேடுகின்றாய்? எனப் பகவானது சங்கையுண்டாக அர்ச்சுனன் கூறுகின்றான் :—சுவாவயஹமிஉள என, ஹே பகவன்! இப்பூமியில் பகைவரின்றித் தனதான்யாதி பதார்த்தங்களோடுற்ற ராஜ்யத்தையடையினும், அங்ஙனமே இந்திரனே முதற்கொண்டு ஹிரண்யகர்ப்பபரியந்தமுள்ள எல்லாத் தேவதைகளின் ஐசுவரியத்தை ஒருகால் யானடையப்பெற்றிடினும், எந்தச் சிரேயசு எனது சோகத்தை நிவிருத்திசெய்யுமோ, அதையானறிகின்றிலேன். ஆகையினால், அந்தச்சோகத்தை நிவிருத்திசெய்வதாகிய சிரேயச்சானது இந்த யுத்தத்திலும் வேறுய ஒன்றேயாம். கருத்திதுவாம் :—இவ்வுலகத்தின் விஷயபோகத்திலும், அங்ஙனமே சுவர்க்காதி உலகங்களின் விஷயபோகத்திலும், சுருதிப்பிரமாணத்தாலும், யுக்திவடிவ அநுமானப் பிரமாணத்தாலும், அநித்தியத்தன்மையே பெறப்படுகின்றது. ஆகையினால், அவ்வநித்திய போகங்களாற் சோகத்தின் நிவிருத்தி சம்பவியாது. மாறுய் அப்போகங்கள் மூக்காலத்திலும் இப்புருஷனுக்குச் சோகத்தையே விளைவிப்பனவாம். ஆண்டு அடையப்படாத போகத்தின் இச்சையால் இப்புருஷனுக்குச் சோகத்தினடைவுண்டாம். அன்றியும் அப்போகங்கள் அடையப்படுங்கால் பாதீனத் தன்மையாலும் நாசத்தின் பயத்தாலும் இப்புருஷனுக்குச் சோகத்தினடைவுண்டாம். அன்றியும் அப்போகங்கள் நாசமாகுங்கால் அவற்றின் வியோகத்தால் இப்புருஷனுக்குச் சோகத்தினடைவுண்டாம்; இத்தகைய சோகத்தைச் செய்வனவாகிய அநித்திய போகங்களால் சோகத்தின் நிவிருத்தி சம்பவியாது.

சு-ம். தஉயெஹ கஉஉவிதொ யொகஃ கூயதெ।
ஹவவெவாஉதர வாணயவிதொயொகஃ கூயதெ ॥ என

(போ-ள்.) எங்ஙனங் கர்மத்தாலடையப்படுதலின், இவ்வுலகத்துள்ள பதார்த்தங்கள் நாசத்தை யடைகின்றனவோ, அங்ஙனமே புண்யகர்மத்தாலடையப்படுதலின், சுவர்க்காதி யுலகங்களிலுள்ள பதார்த்தங்களும் நாசத்தையடைவனவாம் என்பதாம். இச்சுருதியால் சர்வ போகங்களிடத்தும் அநித்தியத்தன்மையே பெறப்படுகின்றது. அன்றியும் இவ்வுலகத்தினவும் பரலோகத்தினவுமாய சர்வ பதார்த்தங்களும் அநித்தியமாதற்குரியனவாம், காரியமாயிருத்தலின், யாதுயாது காரியமாமோ அஃதஃதநித்தியமேயாம். எங்ஙனம் பிரசித்த கடாதிகளைப்போலும். என்றிவ்வாறுகிய அநுமானவடிவ யுக்தியினாலும், அவ்வெல்லாப் போகங்களிலும் அநித்தியத் தன்மையே பெறப்படுகின்றது. ஆனால் இவ்வுலகத்துள பதார்த்தங்களின் நாசமோ, எல்லா வுலகருக்கும் பிரத்தியக்ஷமாகவே பிரதீதியாகின்றது. இத்தகைய அநித்திய பதார்த்தத்தினடைவால் சோகத்தின் நிவிருத்தி சம்பவியாது. ஆகையினால் சோகத்தின் நிவிருத்தியின் பொருட்டு யுத்தஞ்செய்வது எனக்குத்தகுதியன்றும். இவ்வளவால் இகலோக பரலோக போகங்களின் வைராக்கியம் அதிகாரியின் விசேஷணரூபமாய் வர்ணிக்கப்பட்டது.

(அ-கை.) ஹே சஞ்சயரே! இவ்வாறுகிய வசனங்களைக் கூறி அவ்வர்ச்சுனன் யாது செய்தனன்? எனத் திருதராஷ்டிரரின் ஆகாங்ஷையுண்டாகச் சஞ்சயர் கூறுகின்றார் :—

சு-ம். ஸவஷீகூ ஹ்ருஷீகேஶம் மதுகேஶஃ வார்ஷ்ணேயஃ ।
பஸ்யன்னஹம் உதிஷ்டேயம் ஏவமுக்த்வா ஹ்ருஷீகேஶம் பரந்தபஃ ॥

ப-ம். ஸவம் 4 ஷீகூ 5 ஹ்ருஷீகேஶம் 3 மதுகேஶஃ 2 வார்ஷ்ணேயஃ 1 ப 6 யன் பஸ்ய 7 உதி 8 ஷ்டேயம் 9 ஷீகூ 10 ஷ்ணேம் 11 பரந்தபஃ 12

(அ-ம்.) ஹே திருதராஷ்டிரரே! பகைவருக்குத் துயரைச் செய்பவனும் துயிலெவென்றவனுமாகிய அர்ச்சுனன் இருஷீகேசராகிய பகவானிடம் இவ்வாறுகிய வசனங்களைக்கூறி முடிவில் பின்னர் யான் போர்புரியேன் எனக் கோவிந்தனிடங் கூறிவிட்டுத் தூஷ்ணீம் பாவத்தை யடைந்தனன்:

(வி-ம்.) குடாகமென்பது நித்திரைக்காம், அந்த நித்திரையைத் தன்வயப் படுத்துபவனைக் குடாகேசனென்பர். குடாகேச சத்தத்திற்கு வேறுபொருள் முதலத்தியாயத்திற் கூறியுள்ளேம். அத்தகைய நித்திரைவடிவ * ஆலஸ்யமின்றிய வனும், தனது சத்துருக்கட்குத் துக்கத்தினடைவைச் செய்பவனுமாகிய அர்ச்சு னன், இருஷீகமெனப் பெயரிய இந்திரியங்களின் பிரவர்த்தக அந்தர்யாமியாகிய கிருஷ்ண பகவானிடம் அம்முற்கூறிய வசனத்தைக் கூறியபின்னர் யான்இப்பீஷ் மத்துரோணாதியரோடு ஒருகாலும் போர்புரியேன், என்றிவ்வாறுகிய வசனத்தை அக்கோவிந்தனிடங் கூறிவிட்டுத் தூஷ்ணீம்பாவத்தை யடைந்தனன். ஈண்டு, கோவிந்தனென்னும் பதத்திற்குச் சாஸ்திரத்தில் இவ்வாறுகிய பொருள் கூறப் பட்டுளது.

மொஹிவெ ஜூஹ வாகெ்யஸெவவிம்ஹ
தெஜுஹ்யதெ உதிமொவிஹ:

(பொ-ள்.) கோ சப்தம், தத்துவமஸி, அஹம்பிரஹ்மாஸ்மி இவை முதலிய வேதாந்த வாக்கியங்களின் வாசகமாம். அவ்வேதாந்த வாக்கியங்களாலே அடை யப்படுபவனைக் கோவிந்தனென்பர். அல்லது,

மாம்வெஹ ஜுகூஷணாம்வாணீம் விம்ஹதீதி மொவிஹ:

(பொ-ள்.) இருக்கு, யஜுர், ஸாமம், அதர்வணம் என்னும் நான்கு வேத வடிவமாய †வாணிகளை எவன் நன்முகத்தெரிந்தவனே அவனைக் கோவிந்தனென் பர். இவ்வளவுகூறியதால் சர்வ வேதங்களின் உபாதான காரணத்தன்மை வடி வத்தாற் கிருஷ்ண பகவானிடத்துச் சர்வஞ்ஞத்தன்மை குறிப்பிக்கப்பட்டது. இச்சுலோகத்தின் ஆதியில் ஸவஹூகூ என்னும் வசனத்தால் அவ்வர்ச்சுனன் கயம்ஹீஷஹ்ருஷீகேஶம்ஹம்வெ என்றற் றொடக்கத்து வசனங்களைக்கொண்டு யுத்தத் தின் ஸ்வரூபத்தினது அயோக்கியத் தன்மையைக் கூறினன். அதன்பின்னர் பஸயொதெஷ்யே என்னும் வசனத்தால் அவ்வர்ச்சுனன் அப்போரின் பலாபாவத்தைக் கூறினன்:—அதன்பின்னர் அவ்வர்ச்சுனன் தூஷ்ணீம் பாவத்தை யடைந்தனன். கருத்திதுவாம்:—யுத்தத்தின் பொருட்டு அர்ச்சுனனுல் முன்னர் நேத்திராதி பாஹ்ய இந்திரியங்களின் தர்சனாதிவடிவ வியாபாரஞ் செய்யப்பட்டது. அவ் வெல்லா வியாபாரத்தின் நிவிருத்தியால் நிர்வியாபாரமுண்டாயது. இதுவே அர்ச் சுனனது தூஷ்ணீம் பாவமென்க. கேவலம் வாக்குமாத்திரத்தின் நிரோதம் தூஷ்ணீம் பாவமன்றென்றுணர்க. ஈண்டு பரந்தபஃ என்னும் வசனத்தின் கண்ணுள்ள 'ஹ' என்னுஞ் சத்தத்தால் இப்பொருள் குறிப்பிக்கப்பட்டது:— இயல்பாகவே ஆலஸ்யமின்றியவனும் எல்லாப் பகைவரையுந் துன்புறுத்துவோனு மாகிய அர்ச்சுனனிடத்தே ஆகந்துக ஆலஸ்யமும், அங்ஙனமே பகைவரைத்

* ஆலஸ்யம்=சோம்பல். † வாணி=வாக்கு.

துன்புறுத்தாமையும் ஒருகாலு மிருத்தல் கூடாதென்பதாம். சர்வஞ்ஞத்தன்மையைக் குறிப்பிப்பதாகிய 'கோவிந்த' பதம், சர்வசக்தி சம்பன்னத் தன்மையைக் குறிப்பிப்பதாகிய 'இருஷீகேசபதம்' என்னும் இவ்விரு பதங்களால் அக்கிருஷ்ணபகவானிடம் அர்ச்சுனனது சோகமோகத்தை நிவிருத்தி செய்வதில் ஆயாசமின்மையைச் சூசிப்பித்ததாம். சர்வ சக்தி சம்பன்னரும் சர்வஞ்ஞருமாகிய கிருஷ்ண பகவானுக்கு அத்தியந்தம் அற்பமாகிய சோகமோகத்தை நிவிருத்தி செய்வதில் என்னபரிசிரம முளது? என்பது கருத்தாம். (9)

(அ-கை.) ஆண்டு யுத்தத்தில் உபேக்ஷையுடைய அர்ச்சுனனைப் பகவானும் உபேக்ஷையே செய்தல் வேண்டுமெனவுண்டாம் துராசையை நிவிருத்தி செய்தற் பொருட்டு, யுத்தத்தில் அர்ச்சுனனது உபேக்ஷையைப் பார்த்தும் அக்கிருஷ்ண பகவான் அர்ச்சுனனை யுபேக்ஷை செய்யவில்லை என்னும் இவ்வசனத்தைச் சஞ்சயர் திருதராஷ்டிரரிடங் கூறலுற்றார்.

சு-ம். தஉ॰வாஅ ஹ்ரஷீகெஸஃ வ்ரஹஸ்திவ ஹாஸ்த !
ஹெநயொஸ்॰ஹயொஉஃயெ விஷீஂதஶிஂ வசஃ ॥

ப-ம். தம் 7 உவாஅ 12 ஹ்ரஷீகெஸஃ 2 வ்ரஹஸ்து 8 உவ 9 ஹாஸ்த 1 ஹெந யொஃ 4 உஹயொஃ 3 உயெ 5 விஷீஂதம் 6 ஊஂ 10 வசஃ 11

(அ-ம்.) ஹே திருதராஷ்டிரரே! அக்கிருஷ்ண பகவான் இருசேனைகளின் மத்தியில் துக்கத்தை யடைந்து நிற்கும் அவ்வர்ச்சுனனிடம் புன்னகை செய்கிறவர்போன்று இவ்வார்த்தையைக் கூறலாயினர்.

(வி-ம்.) ஹே பரதகுலத்தில் உற்பன்னராய திருதராஷ்டிரரே! முன்யுத்தத்தின் முயற்சியோடு அவ்விருசேனைகளின் மத்தியில்வந்து, அந்தமுயற்சியின் விரோதியாகிய மோகவடிவ விஷாதத்தை யடைந்த அவ்வர்ச்சுனனது அயோக்ய ஆசரணத்தைப் பிரகடஞ்செய்து லச்சைவடிவசமுத்திரத்தில் மூழ்குவித்தலொப்ப, அவ்வந்தரியாமியாகிய பகவான் அவ்வர்ச்சுனன் பொருட்டுப் பரம கம்பீரமாய பொருளையுடையதும், அங்ஙனமே அயோக்கிய ஆசரணத்தைப் பிரகாசிப்பிப்பதுமாகிய, சுஶொசஸ்யாந்ந என்பன முதலிய மேற் கூறப்படும் வசனங்களைக் கூறலாயினர். ஈண்டு வ்ரஹஸ்து ஊவ என்னும் வசனத்தின்கண் உள்ள ஊவ, என்னுஞ் சத்தத்திற்கு இஃதபிப் பிராயமாம்:—அந்திய புருஷனது அயோக்ய ஆசரணத்தை வெளிப்படுத்தி அவனுக்கு லச்சையை (நாணத்தை) யுண்டு பண்ணுவதற்கு வ்ரஹாஸம் எனப் பெயராம். ஆனால் அந்தலச்சை துக்கவடிவமேயாம். ஆகையினால் எப்புருஷன் எவனது துவேஷத்தின் விஷயனுவனோ, அப்புருஷனே அவனது பிரஹாஸத்தின் முக்கிய விஷயனுவன். அர்ச்சுனனே, பகவானது துவேஷத்தின் விஷயனன்றும்; மற்றே, பகவானது கிருபைக்கு விஷயனும். அவ்வர்ச்சுனனது அயோக்கிய ஆசரணத்தைப் பிரகாசஞ் செய்வதுவும், அவனது லச்சையினுற்பத்திக்குக் காரணமன்றும்; மற்றே, அர்ச்சுனனது விவேகத்தி னுற்பத்திக்குக் காரணமாம். ஆகையினால் அர்ச்சுனனிடத்து அந்தப் பிரஹாஸம் (புன்னகை) கௌணமாம், முக்கியமன்றும். கருத்திதுவாம்:—எங்ஙனஞ் சிலபுருஷர் தமது பகைவர்கட்கு லச்சையை யுண்டுபண்ணும்பொருட்டு அவரது அயோக்ய ஆசரணத்தைப் பிரகாசஞ் செய்வரோ, அங்ஙனமே அக்கிருஷ்ண பகவானும் அர்ச்சுனனுக்கு விவேகத்தை யுற்பத்தி செய்தற்பொருட்டு அவனது அயோக்ய ஆசரணத்தைப் பிரகாசஞ்செய்தனர். ஆனால் இலச்சையினுற்பத்தியோ, அயோக்கிய ஆசரணத்தின் பிரகாசானந்தரம் அவசியமேயுண்டாம். ஆகையினால் அந்த லச்சையினுற்பத்தி ஆகுக; அல்லது ஆகாதொழிக. ஆனால் அந்த லச்சையை யுற்பத்தி

செய்வதிற் பகவானுக்குக் கருத்தின்றும். கேவலம் விவேகத்தின் உற்பத்தியின் கண்ணே பகவானது தாற்பரியமாம். இவ்வெல்லாப் பொருள்களையும் ஊவ என் னுஞ் சத்தத்தாற் குறிப்பிக்கப்பட்டது. ஹெநயொஊஹயொஉயெஎவிஷீஉஞம் என அர்ச்சுனனுக்கு விசேஷணங் கூறப்பெற்றதன்று அதனபிப்பிராயமிஃதாம்:— யுத்தமாரம்பிப்பதன் முன்னரே நினது கிருகத்திலிருந்தே ஒருகால் யுத்தத்தை யுபேக்ஷை செய்திருப்பையாயின், இவ்வுனது அயோக்யாசரணத்தைக் கூறு தொழிவேம்; ஆலல், நீயோ மிகுந்த சந்தோஷத்துடன் இப்போர்க்களத்தில் வந்து யுத்தத்தை யுபேக்ஷித்தனையாதலின், இவ்வுனது அத்தியந்தம் அயோக்கிய மாய ஆசரணம் கூறப்பட்டதாம். இவ்வார்த்தை சுஎஹஅயாஉ என்பது முதலிய வசனங்களில் மேல்வெளியாம். (10)

மங்கலம்.

செந்தா மரை புரை வீரநற் சேகரன் செய்ய பொற்ரு
ளிந்தா வென வெனக் கீந்த பொற் சீர்த்தியை யெண்ணி யெண்ணித்
தந்தோ மென நிதம் பாடி நின் ரூடி நற் சாரதி யாய்
வந்தே யருளரி கீதையைச் சேர்ந்தினி வாழ்கு வனே.

(அ-கை.) ஆண்டு அர்ச்சுனனுக்குப் போர்வடிவ சுவதர்மத்தின்கண்ணே முன்னமியல்பானே முயல்வுற்பன்னமாயினும் இருவகையாய மோகத்தானும், அம் மோகத்தானுற்ற சோகத்தானும் தடையுற்றதாதலின் மீண்டு மப்போர்வடிவ சுவ தர்மத்தின்கண் அர்ச்சுனனை முயல்விக்குமாறு அவனதிருவகையாய மோகத்தை யொருதலைபாய்ச் சேய்மைத்தாக்குதலே தகுதியாம். அவற்றுள், சர்வ சம்சார தர்மமற்ற ஸ்வப்பிரகாச பரமாநந்தசொரூப ஆன்மாவின்கண்ணே ஸ்தூலசூக்ஷ்ம தேகங்கள் அவற்றின் காரணமாய அவித்தை யென்னும் மூன்றுபாதிகளின் விவேகமின்மையாற் பொய்த்தன்மைச் சம்சாரத்தின்கண் மெய்த்தன்மை ஆன்ம தர்மத்தன்மையே முதலாய தோற்றப்பாடே முதன்மோகமாம். அம்மோகமெல் லாப் பிராணிமாத்திரத்தே யுளதாமாதலின் அது சாதாரணமாம். போர்வடிவ சுவதர்மத்தின்கண்ணே ஹிம்சாதிகளின் மிகுதிப்பாட்டைக் கண்டு, அதன்மத்தன் மைத் தோற்றப்பாடே இரண்டாவது மோகமாம்; இம்மோகங் கருணைதிதாக்ஷத் தாற் கேவலம் அர்ச்சுனனுக்கே உண்டாயதாதலின், இஃதசாதாரணமாம். ஆண்டு ஸ்தூலசூக்ஷ்ம காரணமென்னும் மூன்றுபாதிகளின் விவேகத்தாலுண் டாய சுத்தான்ம சொரூப போதமே முதன்மோக மோசகமாமாதலின், அஃதெல் லாப் பிராணிகட்குமே சாதாரணமாம். போரின்கண் ஹிம்சாதிகள் பொருந்தினும் அவை க்ஷத்திரிய மன்னர்கட்குத் தந்தர்மமாமாதலின், அவற்றின்கண் அதன்ம ரூபத்தன்மை யின்ரூமென்னும் போதமே இரண்டாவது மோகத்தை யிரிப்பதாம். இப்போதமோ, கேவலம் அர்ச்சுனன் பொருட்டேயாமாதலின் அசாதாரணமாம். இவ்வண்ணம் இருவகையாய போதத்தால் இருவகையாய மோகமிரிக்கப்பெறவே அம்மோகரூப காரணங் கெட்டதால் அவனது சோகரூப காரியமும் தானே கெட் டுப்போம். அச்சோக நீக்கத்தில் வேறொரு சாதனாபேக்ஷை யின்ரூமென்னுங் கருத்தால் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவ்விருவகையாய மோகத்தையுங் கூறியரு ளுபவராய் அர்ச்சுனனுக்கு உபதேசித்தருளத் தொடங்கி யருள்கின்றார்:—

ஸ்ரீ ஹமவாஙு உவாச.

சு-ம். சுஎஹஅயாநஙுஎஹஅஹ்ஹம் வஜ்ஞாவாஊம்ஸு ஹாஷஹெ ।
மதாஹ்ஹிநமதாஹ்ஹிம்ஸு நாநுஎஹஅம்தி வுஜ்ஞிதாஃ ॥ (11)

ப-ம். 1 சுபொஅயாஞ 3 சுஞபொஅஃ 2 கூம 5 வ்ரஜ்ஞாவாஹாஞ 4 அ 6 ஹாஷஹெ
8 மதாஹுஞ 10 சுமதாஹுஞ 9 அ 11 ந 12 சுந்ரபொஅஜி 7 வணிதாஃ॥

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சோகித்தற்குரியரல்லாத பீஷ்மத்துரோணாதி யரைக் குறித்து நீ சோகிக்கின்றனை. அங்ஙனே மதிமான்களால் மொழியத் தகாத மொழிகளை நீ மொழிகின்றனை; பண்டித புருஷரோ, உயிரற்ற உறவினரையும் உயிருற்ற உறவினரையும் பற்றிச் சோகியார்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஆன்ம திருஷ்டியினும், சரீர திருஷ்டியினும் சோகித்தற்குரியரல்லாத இப்பீஷ்மத்துரோணாதியரைப் பற்றி நீ பண்டிதனுயிருந் தும் சோகிக்கின்றனை. இவர் என் நிமித்தமாய் மரணமுறுகின்றனர், என்றும் இவரின்றி யான் இராஜ்ஜிய சுகாதிகளை என்செய்வேன் என்றும் சோகத்தை ஊஷ்மாணம்ஹ்ருதயம்ஶோஷயந்தி என்பதாதி வசனங்களாற்செய்தனை. அவ்வாறு சோகித் தல் தகுதியன்றும்; எனெனின், சோகித்தற் கருகமல்லாத பொருளிற் சோகித் தல் தன்மைப் புத்திரூப மயலானது பசு பக்ஷிபாதி சர்வப் பிராணி மாத்திரத்தின் கண்ணும் சாதாரணமாம். நீயோ, அத்தியந்தம் பண்டிதனுகியும், அம்மயலை யடைந்தனையாதலின், நினக்கு அம்மயலாதலத்தியந்தம் அனுசிதமாம். மேலும் கூதஸ்த்வாகஶ்மலமிதம் என்பதாதி எனது வசனத்தால் நினக்கு இஃதென்னல் மிக வும் அனுசிதமாய்ச் செய்யப்பெற்றதென்னும், விசாரத்தினடைவுண்டாக வேண் டியதாயுமன்றே விருந்தது; அன்றியும், நீ சுயமே புத்திமானுயிருந்தும், புத்தி மான்களால் புகலத்தகாத க்லைம்ஹீஷ்யம் சுஹ்ருன்ஹ்ருன்வை என்பதாதி வசனங்களையும் புகன்றனை. ஆனல் இலஜ்ஜையால் மௌனத்தை யுற்றிலை; இதனினும், மேலாய் வேறென்ன அனுசித விவகாரமுளதாம். ஆகையினல், அமரினின்று மகலுவதாய அதர்மத்தின்கண்ணே தன்மத்தன்மைப் புத்திரூப அசாதாரணமயலும், சம ராகிய தன்மத்தின்கண் அதன்மத்தன்மைப் புத்திரூப அசாதாரணமயலும், அத்தியந்தம் பண்டிதனுகிய நினக் குசிதமன்றும். அல்லது வ்ருஜினாவாஹாம்ஶ்ச ஹாஷஹெ என்னும் வசனத்திற் கிப்பொருள் கொள்ளுக:—ஆகத்தின் வேறு யான்மாவையறிந்த பிரஞ்ஞாவான்களுடைய நரகெநியதம்வாஸ: வதஞ்சிவித மொஹெஷ்யஷாம் என்பதாதி வசனங்களை மாத்திரமே நீ கூறுகின்றனையேயன்றி, அவரைப்போல அவ்வசனங்களின் உண்மையாய கருத்தை நீ யறிந்தாயில்லை, அறிவையேற் சோகமோகத்தை யடையாயன்றே?

சங்கை:—ஹே பகவன்! வசிஷ்டாதி மகாபுருஷரும் தமது மைந்தர் முத லாகிய உறவினரின் மரணத்தால் மகாசோகத்தை யெய்தினராதலின், எனது உற வினரின் மரணத்தைப் பற்றிச்சோகித்தல் அனுசிதமன்றும்; மற்றே, சிஷ்டா சாரத்தாற் பெறலினுசிதமேயாம்.

சமாதானம்:—ஸ்ரீ பகவான் கூறியருள்கின்றார். மதாஹுநிதி ஹே அர்ச்சுன! விசாரத்தாலுதயமாய ஆன்மாவின் வாஸ்தவ சொரூப ஞானமுற்ற பண்டிதர் உயிரற்ற உறவினருடற்களைப் பற்றியும் உயிருற்ற உறவினருடற்களைப் பற்றியும் சோகியார். கருத்திதுவாம்:—மரணத்தை யடைந்த இவ்வெனது உற வினர் எல்லாப் பொருள்களையும் விட்டுவிட்டுச் சென்றனர். அவரிஞ்ஞான்றென்ன செய்கின்றனரோ, எத்தானத்துளரோ, இவ்வுயிர்வாழாநின்ற எனது உறவினர் மரித்த அவரை யொழித்தெங்ஙனம் உயிர்வாழ்வர், என்னும் வியாமோகத்தை அப்பண்டிதரடையார்; ஏனெனின், அந்தப் பிரஹ்ம வேத்தாக்களாய பண்டித ருக்குச் சமாதி காலத்திலோ, அவ்வுறவினரின் பிரதீதி யுண்டாகமாட்டாது; சமாதியினின்றும் வெளிக்கிளம்பிய காலத்திற் பந்துக்களின் பிரதீதியாயினும்,

அவர் அவரைப் பொய்யெனக் காண்பர். இரஜ்ஜுவடிவ அதிஷ்டான சாக்ஷாத் காரத்தாற் சர்ப்பமயல் நீங்கியபின் அதனல் ஜனித்த பயகம்பாதிகள் சுயமே நீங்குவபோலவும், பித்த தோஷத்தோடுற்ற இரசனேந்திரியவானுக் கொருகால் வெல்லத்தின்கண்ணே கைப்பு ரசத்தோற்ற முளதேனும், அதன்கண் மதுர ரசத் துணிவு பலவாறுதலின், கைப்பிரசேச்சையால் அதன்கண் முயல்வுண்டாகாததே போலவும், சோகவிஷயமல்லாப் பொருளிற் சோகித்தற்றன்மைப்புத்திரூப மயலும், அதிஷ்டானமாய ஆன்மாஞ்ஞானத்தால் ஆக்கப்பெற்றதாம். அதிஷ்டான ஆன்ம சாக்ஷாத்காரத்தால் அவ்வஞ்ஞான நிவிருத்தியுண்டாயின், அவ்வஞ்ஞானத்தின் காரியரூப சோகித்தற்றன்மை மயல் சுயமே நீங்கிவிடும். வசிஷ்டாதி மகாபுருஷர் நுகர்வினையின் முதிர்ச்சியாற் சோகமோகாதி யுற்றனர்; அவற்றைச் சிஷ்டாசாரமெனக் கோடலேலாதாம். என்னே, சிஷ்டபுருஷர் தர்மபுத்தியால் அனுஷ்டியாநின்ற அலௌகிக வியவகாரமே சிஷ்டாசாரமெனக் கூறப்பெறுதலினென்க. இச்சிஷ்டாசார இலக்கணம் அவ்வசிஷ்டாதியரின் சோகமோகாதிகளிற் பொருந்தாதாம். என்னே, அச்சோக மோகாதிகள் பசு பக்ஷி முதலிய எல்லாப் பிராணிகளிடத்தேயும் இயல்பானே யுளவாதலின், அவற்றில் அலௌகிக ரூபத்தன்மை சம்பவியாமையினென்க. அவ்வசிஷ்டாதியர் யாதேனுமொரு தர்மமதியாற் சோகமோகாதிகளைச் செய்திலராதலின், அவற்றின்கண்ணே சிஷ்டாசார ரூபத்தன்மை சம்பவியாது. இவ்வகையாய சிஷ்டாசார விலக்கணத்தைப் பரித்தியாகம் செய்து சாமானியமாய்ச் சிஷ்டபுருஷரின் வியவகார மாத்திரத்தையே பிரமாணமென அங்கீகரிக்கிலே, அவர் தம் மல மூத்திராதி பரித்தியாகரூப இயல்பாய சேஷ்டையையும், சிஷ்டாசார ரூபமாய்க் கவரவேண்டும். ஆனல், அச்சேஷ்டையை எம்மதிமானுய புருஷனும் சிஷ்டாசார ரூபமாய்க் கவராதலின், வசிஷ்டாதியரின் சோகமோகத்தைக் கண்டு நீயும் சோகமோக முறல் யோக்கியமன்றும

(அ-கை.) இப்போது நவ்வவாஹம் என்பதாதிய பத்திதான்பது சுலோகங்களால் ஸுபொஅயாநவ்வபொஅஹம் என்னும் வசனப்பொருளை விஸ்தாரமாய் நிரூபித்து அதன்பின் வுயஉழவிஆவெக்ஷ்யு என்பதாதி எட்டுச் சுலோகங்களால் வ்ரஜ்ஜுவாவூாம்ஸுஹாஷஹெ என்னும் வசனப் பொருளை விஸ்தாரமாய் நிரூபிப்பாம். என்னே, சாதாரண அசாதாரணமென முன்னம் புகன்ற இருவகையாய மோகங்களும் வேறுவேறான முயல்வானே நீங்குமன்றி ஒருமுயல்வால் நீங்காமையினென்க; ஆண்டுத் தூல சரீரத்தினின்றும் ஆன்மாவின் பேதத்தைத் துணிவு செய்தருளும்பொருட்டு, முதலில் ஆன்மாவின்கண் நித்தியத்தன்மையைத் துணிந்தருள்கின்றார்:—

சு-ம். நவெவவாஹம் ஜாதுநாஸம் நவ்வம்நெஉெஜநாயிவாஃ।
நவெவ நவவிஷ்யாஃஃ ஸுவெழவயஉதஃ வாழ்ழ ॥

ப-ம். 7 நதுவனவ 1 ஸுஹம் 2 ஜாது 3 ந 4 சூஹம் 8 ந 6 க்ஷம் 7 ந 9 ஹுஉெ 10 ஜநாயிவாஃ 11 ந 12 அ 17 ஸனவந 18 ஹவிஷ்யாஃஃ 16 ஸுவெழ 15 வயம் 13 ஸுதஃ 14 வாழ்ம் ॥

(அ-ம்.) ஹே அர்ச்சுன! கிருஷ்ண பகவானுகிய யாம் இதன் முன்னம் ஒருகாலும் இல்லாதிருந்தேமெனக் கூறலடாதாம்; அங்ஙனமே அர்ச்சுனனுய நீ இதன் முன்னம் ஒருகாலும் இல்லாதிருந்தா யெனவுங் கூறலேலாதாம்; அங்ஙனே இவ்வெல்லாவிறைவரும் இதன்முன்னம் ஒருகாலும் இல்லாதிருந்தாரெனவுங் கூறல் கூடாதாம்; மற்றேரு, யாமும் நீயும் இவ்விறைவர் யாவரும் முன்னமிருந்தேயுளேம்;

அங்ஙனே இனிமேலும் நாம் யாவரும் இல்லாதிருப்பே மெனவுமியம்ப வேலாதாம். மற்றே, நாம் யாவரும் இனிமேலும் இருப்போமென்றுணர்க.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எல்லாவுலகிற்குங் காரணமாய கிருஷ்ண பகவானுயாம் இதற்குமுன்னம் ஒருகாலும் இல்லாதிருந்தே மென்பதா யியம்பொணுதாம்; மற்றே, இதற்கு முன்னமும் யாமிருந்தேதம். அவ்வாறே அர்ச்சுனனுயும் இப்பீஷ்மத்துரோணுதியாய இறைவரியாவரும் இதற்குமுன்னம் ஒருகாலும் இல்லாதிருந்தேதம் எனப்புகலப் போகாதாம். மற்றே அர்ச்சுனனுய நீயும் இப்பீஷ்மத்துரோணுதி இறைவரியாவரும் இதற்குமுன்பு மிருந்தேதம். இத்துணையியம்பியதாலான்மாவின்கண் முன்னின்மையின் எதிர்மறைத்தன்மையின்மை காண்பிக்கப்பெற்றதாமென்க. கிருஷ்ணபகவானுய யாமும், அர்ச்சுனனுய நீயும், இப்பீஷ்மத்துரோணுதி யெல்லாவிறைவரும் இனிமேல் ஒருகாலும் இல்லாதிருப்பேம் எனச் சாற்றல் தகாதாம்; மற்றே, இனிமேலும் நாமியாவருமிருப்பவே யிருப்பேம். இத்துணையிம்பியதாலே, ஆன்மாவின்கண்ணே பின்னின்மையின் எதிர்மறைத்தன்மையைக் காண்பிக்கப் பெற்றதென்றுணர்க. இஃதியியம்பியதால் இப்பொருள்துணியப் பெற்றதாம் :—இறந்தகாலத்தின்கண்ணும் எதிர்காலத்தின்கண்ணும் நிகழ்காலத்தின்கண்ணும் யாதுளதாமோ, அஃதை நித்தியமென்பர். இந்நித்திய இலக்கணமும் ஆன்மாவின்கண்ணே பொருந்துமன்றி, ஸ்தூலவாகத்துட்பொருந்தாதாதலின் இவ்வான்மாவே நித்தியமாம்; நித்தியமாதலினிவ்வான்மா ஸ்தூலசரீரத்தினின்றும் விலக்ஷணமே யெனத் துணியப்பெறும். இவ்விலக்ஷணத்தன்மையை அதேவாஹம் என்னும் இவ்வசனத்தின்கண் இராநின்ற "தா" என்னுஞ் சத்தத்தாற் குறிப்பிக்கப்பெற்றதா மென்றறிக. (12)

(அ-கை.) ஹே பகவன்! சேதனத்தன்மைத் தன்மத்தாற் சிறப்புற்ற இத்தூலவாக்கையே ஆன்மாவாமெனச் சார்வாகராய நாஸ்திகரங்கீகரித்துளார், இங்ஙனம் அங்கீகரித்தலின் அவர் தம்மதத்தே யான்ஸ்தூலன், யான் கௌரன் (வெள்ளையன்) யான் நடப்போன் என்பவாதி ஞானங்கட்குப் பிராமாண்யத் தன்மையும் பாதமின்றியே துணியப் பெறுமென்ப. இத்தேகத்தினும் வேறுயான்மாவையுடன்படிலே இவ்விவ்வா ஞானங்களுரும் அப்பிரமை ரூபங்களாமாதலின், இத்தூலவாகத்தினும் ஆன்மா வேறன்றும்; மற்றே, ஸ்தூலத்தன்மை கௌரத்தன்மை முதலிய தர்மங்களோடு கூடிய இத்தூல தேகமே யான்மாவாம். அல்லது, இத்தூல சரீரத்தினும் ஆன்மாவை வேறென அங்கீகரிப்பினும், அவ்வான்மாவின்கண்ணே பிறப்பிறப்பின்மை சம்பவியாதாம். எனெனின், தேவதத்தன் எனப்பெயரிய புருஷன் பிறப்பை யடைந்தனன், இறப்பை யடைந்தனன் என்னுந்தோற்றம் யாவருக்கும் நிகழ்கின்றதாதலின் *ஆகப்பிறப்போடு ஆன்மாவும் பிறக்கும், ஆகவிறப்போடு ஆன்மாவுமிறக்கும் என அர்ச்சுனனுக்குச் சங்கையுண்டாக அதற்குத்தாம் ஸ்ரீ பகவான் அருளிச் செய்கின்றார் :—

சு-ம். தெஹிநோஷ்மிந்யயாதெஹெ கௌமாரம் யௌவநம்ஜரா।
தயாதெஹாந்தரப்ராப்திர்தத்ர நமுஹ்யதி ॥

ப-ம். 2 தெஹிநஃ 3 ஸுஷ்மிந 1 யயா 4 தெஹெ 5 கௌமாரம் 6 யௌவநம் 7 ஜரா
8 தயா 9 தெஹாந்தரப்ராப்திஃ 11 யீரஃ 10 தத்ர 12 ந 13 முஹ்யதி ॥

(அ-ம்.) ஹே அர்ச்சுன! தேஹியாய ஆன்மாவிற்கு இத்தேகத்தின்கண்ணே கௌமாரம் யௌவனம் ஜரையென்னும் மூன்றவஸ்தைகள் அடைவுறு மாறே போல, வேறு தேகவடைவு முண்டாம். அதன்கண்ணே தீரனெவன் மோகத்தை யடைவுறான்.

---

* ஆகம்=சரீரம்.

(வி-ம்.) பூத பவிஷ்யத் வர்த்தமான மென்னும் மூன்றுகாலங்களில் இரா நின்ற எத்துணைச் சகத்மண்டலத்துள்ள தேகங்களோ, அவையாவும் எவர்க் காமோ, அவரைத் தேகியென்பர். அவ்வொரே தேகியாய ஆன்மா விபுவாதலிற் சர்வ சரீரங்களோடுஞ் சம்பந்த வாணுமாதலின், அவ்வொரு சேதனமாய ஆன்மா வானே சர்வ சரீரங்களிற் பல்வகையாய சேஷ்டைகள் சித்தமாதல் கூடுமென் றறிக. ஆகந்தோறும் ஆன்மாவின் வேற்றுமையை யங்கீகரிப்பதிற் சிறிது மாத் திரையும் பிரமாணமின்றும். இப்பொருளைக் குறிப்பிக்கும் பொருட்டே ஒஹிகஃ என்னும் பதத்தின்கண் ஒருமை மொழி மொழியப் பெற்றது. முற் சுலோகத் தின்கண்ணே ஸவெஷுவயம் என்னும் பன்மை மொழி கூறப்பட்டதன்று, அதற்கோ சரீரங்களின் வேற்றுமையின்கண்ணே தாற்பரியமேயன்றி ஆன்மாவின் வேற்றுமையின்கண்ணே தாற்பரியமன்றும். ஆதலின் முன்பின் மொழிகட்கு முரணின்றுமென்க. இத்தகைய ஒரு தேகியாய ஆன்மாவிற்கு, இத்தேகத்தின் கண்ணே பாலியம், யௌவனம், விருத்தம் என்னும் ஒன்றற்கொன்று முரணைய மூன்றவஸ்தைகளுளவாம். அப்பாலியாதி மூன்றவஸ்தைகளின் பேதத்தால் அத் தேகியாய ஆன்மாவிற்குப் பேதமுளதாகாது. ஏனெனின், முன்னம் பாலிய அவஸ் தையின்கண், எனது தாய்தந்தையரை யனுபவித்த யானே, இப்போது விருத் தாவஸ்தையின்கண் எனது புத்திர பௌத்திராதிகளை யனுபவிக்கின்றேன் என வுளதாம் பிரத்தியபிஞ்ஞை ஞானத்தின் பலத்தால் பாலிய அவஸ்தையி னன்மா விற்கும் விருத்தாவஸ்தையின் ஆன்மாவிற்கும் அபேதமேதுணியப்பெறும். பாலிய அவஸ்தையின் சரீரத்திற்கும், விருத்த அவஸ்தையின் சரீரத்திற்கும் உளதாய பேதமோ யாவருக்கும் கண் கூடாயே புலப்படும். ஆகையினல், ஆகபேதத்தால் ஆன்மாவின் பேதமுளதாகாது. இங்ஙனம் ஜன்மாதி விகாரமற்ற ஆன்மாவிற்கு இச்சரீரத்தினின்றும் அத்தியந்தம் விலக்ஷணமாய சரீரத்தின் அடைவு கனவின் கண்ணும் யோகவைபவத்தால் உண்டாய ஐசுவரியத்தின் கண்ணும் உண்டாம். ஆண்டு, அவ்வத்தேதகங்கட்கு வேற்றுமை புலப்படினும் அவனே யான் என்னும் பிரத்தியபிஞ்ஞை யுணர்ச்சியின் வலுவால் ஆன்மாவின் ஒருமையே துணியப் பெறும். ஒருகால் இத்தூல தேகமே ஆன்மாவாயின் பாலிய யௌவனாதி யவஸ் தைகளின் வேற்றுமையால் ஆகவேற்றுமை துணியப்பெறவே, அவனே யான், என் னும் பிரத்தியபிஞ்ஞை யுணர்ச்சியுண்டாகலாகாது. ஏனெனின், அந்நியனிடத் திருக்கும் சமஸ்காரமானது அந்நியனுடைய பிரத்தியபிஞ்ஞை யுணர்ச்சிக்குக் காரணமன்றும்; மற்றே ஒரு நிலைக்களத்துற்ற சமஸ்காரத்திற்கும் பிரத்திய பிஞ்ஞை ஞானத்திற்கும் பரஸ்பரம் காரண காரிய பாவமுண்டாம். அல்லது பாலி யம், யௌவனம், விருத்தம் என்னும் மூன்றவஸ்தைகளும் வேற்றுமையுடையன வாயினும், அவ்வவஸ்தா ரூப தர்மங்களின் ஆசிரயமாய ஆகமானது பாலிய அவஸ்தை தொடங்கி விருத்த அவஸ்தைவரை ஒன்றேயுளது. அத்தேகத்தின் ஒருமையையே அந்தப் பிரத்தியபிஞ்ஞை ஞானம் விஷயம் செய்கிறது. ஆன்மா வின் ஒருமையை அது விஷயம் செய்வதின்றும் என அச்சார்வாகன் சாற்றுவானு யின், அது சம்பவியாது. ஏனெனின், கனவின்கண்ணே நனைத்தேகத்திலும் வேறுயே தேகமுண்டாம்; யோகமகிமையால் யோகியானவன் ஆகங்களனே கத்தை யாக்குவன். ஆண்டுத் தன்மிகளாகிய ஆகங்கட்கே பேதமாம். ஆதலின் ஆண்டு அவனே யான் என்னும் பிரத்தியபிஞ்ஞை ஞான முண்டாகலாகாது; ஆனல் அவனே யானென்னும் பிரத்தியபிஞ்ஞைஞானமோ கனக்காண்போனுக்கும் யோகி க்கும் உண்டாம். ஆகையினல் ஆகங்களின் ஒருமையை அந்தப் பிரத்தியபிஞ்ஞை ஞானம் விஷயம் செய்யமாட்டாது. இக்கருத்தேதபற்றி பாலியாதி யவஸ்தைக ளும், கனக்காண்போன் யோகியென்னும் இருவரின் தேகங்களும் திருஷ்டாந்த மாய்க் கொடுக்கப்பட்டன. ஆகையினல் எங்ஙனம் கானல் முதலியவற்றில் நீர்

முதலிய மதிமயல்வடிவமாமோ, அங்ஙனம் யான் றூலன், யான் கௌரன், (வெள்ளை யன்) யான் நடப்போன் என்பன முதலியவாய மதிகளும் மயல்வடிவமேயாம்; ஏனெனின், அதிஷ்டான வஸ்துவின் ஞானத்தால் அவ்விருமதிகளும் பாதமுடையனவே யாமாதலினென்க; அதிஷ்டான ஞானத்தா லெதற்குப் பாதமுளதாமோ அதுமயலேயாம். இவ்விஷயம் 'அஜாயதே' என்பதாதி வசனங்களில் மேல் வெளியாம். இத்துணை யியம்பியதால், ஆன்மா ஆகத்தின் வேறுயினும் ஆகம்பிறக்கின் ஆகத்தோடு பிறக்கும், ஆகமிறக்கின் ஆகத்தோடிறக்கும் என்னும் வாதியின் பக்கமும் கண்டனமாயதெனக் காண்க. ஏனெனின், அப்பக்ஷத்தில் பாலிய யௌவனாதி அவஸ்தைகள் வேற்றுமையோடுற்றதாயினும், அவனே யான் என்னும் பிரத்தியபிஞ்ஞைஞானம் தன்மியாகிய யாக்கையி லொருமையைக் கொண்டு சம்பவிக்கும்; அங்ஙனம் சம்பவிப்பதேயாயினும், தன்மிகளாய தேகங்கட்கே வேற்றுமையுறும் க்னவின்கண்ணும், யோகஜன்னிய ஐஸ்வரியத்தின்கண்ணும் அவனே யான் என்னும் பிரத்தியபிஞ்ஞை ஞானம் அவ்வாதியின் மதத்திற் சம்பவியாது; ஆனல், ஆண்டும் அந்தப் பிரத்தியபிஞ்ஞை ஞானமோ உண்டாம். ஆகையினல் ஆகத்தின் உற்பத்தி நாசத்தோடு ஆன்மாவின் உற்பத்தி நாசம் அங்கீகரித்தல் முற்றும் முரணும். அல்லது "ஒஹிஹொஷிஷு" என்னும் சுலோகத்திற்கு இவ்விரண்டாவது பொருட் கொள்க:—எங்ஙனம் ஜன்மாதி விகாரங்களற்ற ஓரே யான்மாவிற்குக் கௌமாராதி மூன்றவஸ்தைகளி னடைவுண்டாமோ, அங்ஙனம் இத்தேகத்தினின்றும் பிராணன் வெளிக்கிளம்பிய பின்னர் மற்றொரு தேகத்தினடைவுண்டாம். ஆண்டெங்ஙனம் பாலியாதி யவஸ்தைகளடையுங்கால் அவனே யான் என்னும் பிரத்தியபிஞ்ஞைஞானம் உண்டாமோ; அங்ஙனம், மரணத்தினனந்தரம் (பின்னர்) மற்றொரு சரீரத்தினடைவுண்டாகவே அவனே யானென்னும் பிரத்தியபிஞ்ஞைஞானம் உண்டாகாததலின், அவனே யானென்னும் பிரத்தியபிஞ்ஞை ஞானத்தால் ஆண்டு முன்பின்தேகங்களில் ஆத்மாவி லொருமை துணியப் பெறுதனினும், ஊகத்தால் அது துணியப்பெறுமென்க. அவ்வூகமிஃதாம்:—மாதாவி னுதரத்தினின்றும் வெளிப்போந்த பாலகனுக்கு அக்கால் மகிழ்ச்சி, வாட்டம், அச்சம் முதலியன உண்டாம். அம்மகிழ்ச்சி வாட்டம் முதலியவற்றினடைவில் வேறெக்காரணமும் சம்பவிப்பதின்றும்; மற்றே, கேவலம் முற்பிறப்பின் சமஸ்காரமே அவற்றின் காரணமாம். ஒருகால் முற்பிறப்பின் சமஸ்காரத்தையுடன்படாவிடினே, தாயின்உதரத்தினின்றும் வெளிப்போந்த தனயனுக்கு அக்காலத்தே அன்னையின் றனபானாதியில் முயல்வுண்டாதல் தகாதென வுணர்க. ஏனெனின், சேதனப் பிராணிகட்கு எவ்வெப்பிரவிருத்தியுளவாமோ, அவ்வப்பிரவிருத்தி இப்பொருள் எனதிஷ்டசாதனமாம், என்னும் இஷ்டசாதனத்தன்மை ஞானத்தானே யுற்பன்னமாம். இஷ்டசாதனஞானமின்றி எப்பிரவிருத்தியு முண்டாகாது. ஆகையினல் பாலகனுக்குத் தாயின் ஸ்தன்னியபானத்தின்கண் முதற் பிரவிருத்தியின் முன்னம், இத்தனபானம் எனதிஷ்ட சாதனமாமென்னும் இஷ்டசாதனத்தன்மை ஞானம் அப்பாலகனுக்கு அவசிய மங்கீகரித்தல் வேண்டும். பிறந்தகாலையில் அக்குமாரனுக்கு அவ்விஷ்டசாதனத் தன்மை ஞானம் அனுபவரூபமாயோ சம்பவியாது; மற்றே, ஸ்மிருதிரூபமா யங்கீகரித்தல்வேண்டும். வேண்டவே யாது யாது ஸ்மிருதிரூப ஞானமாமோ, அஃதது பூர்வ அனுபவஜன்னிய சமஸ்காரத்தினின்றேயுண்டாம், சமஸ்காரத்தினலன்றி யுண்டாகாதாம். ஆகையினல், அப்பாலகனுக்கு முற்பிறப்பின்கண் இத்தாயின் ஸ்தன்னியபானம் எனது பசிநிவிருத்திரூப இஷ்டசாதனமாம், என்னுமனுபவம் அநந்தவாரமுண்டாயுளது; அவ்வனுபவஜன்னிய சமஸ்காரத்தானே அப்பாலகனுக்கு அந்தஸ்மரணரூப இஷ்டசாதனத்தன்மைஞானம் பிறந்தகாலையி லுண்டாம் என அங்கீகரித்தல்வேண்டும். அச்சமஸ்காரமும் அனுபற்புத்தமாயிருந்து ஸ்மிருதி ஞானத்தை

யுற்பன்னஞ் செய்வியாது ; மற்றே, உற்புத்தமாகியே செய்விக்கும். அனுற்புத்த சமஸ்காரத்தானும் வஸ்துவின் ஸ்மிருதியுண்டாமாயின், எப்போதும் அவ்வஸ்துவின் ஸ்மிருதியுண்டாதல் வேண்டுமாதலின், பிறந்தகாலையில் அப்பாலகனது முற்பிறப்பின் சமஸ்காரத்தை உற்போதனஞ் செய்வதாய்ப் புண்ணியபாவரூப அதிருஷ்டமன்றி வேறெதுவும் சம்பவியாது ; மற்றே, முற்பிறப்பின் எப்புண்ணியபாவங்கள் இந்நிகழ்கால சரீரத்தைக் கொடுத்தனவோ, அவையே பிறந்தகாலையில் முற்பிறப்பின் சமஸ்காரத்தை யுற்புத்தஞ் செய்விக்கும். அம்முற்பிறப்பின் சமஸ்காரமும் புண்ணியபாவரூப அதிருஷ்டமும் ஆன்மரூப ஆசிரயமின்றிச் சுதந்திரமாயிராவாதலின், முற்பிறப்பின்கண் ஆன்மாவினிருப்புண்மை யங்கீகரித்தல் வேண்டுமென்னும் ஊகத்தினுனே, முன்பின்சரீரத்தின்கண் ஆன்மாவினெருமை துணியப்பெறுமென்க. அல்லது 'ஒஹிதொஷ்டு' என்னும் சுலோகத்திற்கு இம் மூன்றுவது பொருள்கொள்க : எங்ஙனம் நின் ஒரே யான்மாவிற்கு முறையே தேகத்தின் பாலியாதி யவஸ்தைகள் உற்பத்தி நாசமுற்றிடினும், நித்தியமாதலிற் பேதமின்றுமோ ? அங்ஙனம், விபுவாதலின் நின் ஒரே ஆன்மாவிற்கு ஒரே காலத்தில் சர்வதேதகங்களி னடைவுண்டாம். ஆண்டு ஆன்மாவை யாக்கை முதலியவற்றைப்போல மத்யமப்பரிமாணவானென உடன்படிலே, ஆன்மாவின்கண் ஆகாதிகட்கொப்ப அநித்தியத் தன்மையினடைவுண்டாம். ஆன்மாவை அணுப்பரிமாணவானென உடன்படிலே, சர்வசரீரத்தின்கண்ணும் வியாபக சுகதுக்கங்களின் பிரதீதியுண்டாகலாகாது; அவ்விருதோஷங்களையும் நீக்கும்பொருட்டு ஆன்மாவை விபுவென வுடன்படல் வேண்டும். மேலும் சர்வ சரீரத்தின்கண்ணும் யானுளன், யானுளன் என்னும் ஏகாகாரப் பிரதீதி காணவருகின்றதாதலின், சர்வசரீரத்தின்கண்ணும் நின் ஒரேயான்மா வியாபகமாம். இவ்வாறு சர்வசரீரத்தின்கண்ணும் ஆன்மாவினெருமை துணியப்பெறினும், இப்பீஷ்மத் துரோணதியர் கொல்லப்படுபவர் ; அர்ச்சுனனை யான் கொல்பவன் என்னும் பேதகற்பனையைச் செய்து நீ மோகத்தையடைந்தனை, அதன் கண் நினது அவித்வத்தன்மையே ஏதுவாம். சர்வசரீரத்தின்கண்ணும் ஆன்மாவினெருமையை யுணர்ந்த வித்வானுகியதீரன் அதன்கண் மோகத்தையடையான் ; ஏனெனின், யானிவரைக் கொல்பவன், இவரென்னுற் கொல்லப்படுபவர் என்னும் பேததரிசனம் அவர்க்குண்டாகாது. இது கூறியதால் ஸ்ரீ பகவான் இவ்வனுமானத்தைக் குறிப்பித்தருளினர் :—வாதிகளின் விவாதவிஷயங்களாய இப்பீஷ்மத் துரோணாதி சரீரங்களெல்லாம், ஒரு போக்தான்மாவையுடையனவாம்; தேகத்தன்மைத் தன்மவான்களாதலின், நினது பாலியயௌவனாதி தேகங்களைப் போலவென்க. ஆண்டு "வனகொஹெவஃ வவ-ஃ ஹூதெஷ்-மூஜிஃ வவ-ஃவ்யாவீ வவ-ஃஹூதாஜாதா" எனச் சுருதியுமுளது. பொருளிதுவாம் :—ஒரே யான்மா சர்வபூதப் பிராணிகளிடத்தும் வியாபகமாம், அவ்வண்ணமே காஷ்டத்தின்கண்ணே கனலைப்போன்று குகியமாம், அவ்வண்ணமே சர்வபூதப் பிராணிகளின் அந்தரான்மாவாம். இத்துணையியம்பியதால் ஆன்மாவின்கண் நித்தியத்தன்மையும், விபுத்தன்மையும் துணியப்பெற்றதாம். ஆதலினுல் இவ்வளவு மதங்கள் கண்டிக்கப்பட்டனவாம் :—ஆண்டுச் சார்வாக நாஸ்திகனே, இத்தூலதேகத்தையே யான்மாவென அங்கீகரித்துளான். அச்சார்வாகரின் ஏகதேசியரிற் சிலரோ, இந்திரியங்களையே யான்மாவென இடர்ப்படுவர் ; சிலரோ, மனத்தையே யான்மாவென மயங்காநிற்பர் ; சிலரோ, பிராணனையே யான்மாவெனப் பிறழாநிற்பர் ; சௌகதரோ, க்ஷணிகவிஞ்ஞானத்தையே யான்மாவெனச் சாற்றுநிற்பர் ; திகம்பரரோ, தேகத்தின் வேறதாய், திரவியற்கையதாய், தேகசமவளவுற்றதாயதே யான்மாவெனத் திகையாநிற்பர் ; திகம்பரரின் ஏகதேசியரோ, மத்யமபரிமாணவானிடத்தே நித்தியத்தன்மை சம்பவியா

தாதலின், நித்திய அணுப்பரிமாணவானே ஆன்மாவென நிகழ்த்தாநிற்பர். சித் தாந்தத்தில் ஆன்மாவை நித்தியவிபுவென வுடன்படவே, அவ்வெல்லா மதங்களும் கண்டிக்கப்பட்டனவா மென்றுணர்க. (13)

(அ-கை.) ஹே பகவன்! ஆன்மா நித்தியம் விபு என்னும் பொருளிலோ, யான் விவாதித்திலேன்; ஆனால், எல்லாத் தேகங்களிடத்தும் ஆன்மா ஏக மென்னும் பொருளே யான் சங்கிக்க வல்லேனல்லேன். ஏனெனின், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்னம், தர்மம், அதர்மம், சமஸ்காரம் என்னும் இவ்வொன்பது குணங்களோடுற்ற நித்திய விபு, ஆன்மாவாம்; அவ்வான்மா சரீரந் தோறும் வேறுவேறும், என வைசேடிகர் அங்கீகரித்துளார். இப்பக்ஷத்தையே வேறு தார்க்கிகர், மீமாம்சகர் முதலியோரும் அங்கீகரித்துளார். ஆன்மாவை நிர்க்குணமென வுடன்படும் சாங்கிய சாஸ்திரவான்களோ, ஆன்மா சுகதுக்காதி குணங்களுடைய தென்னும் பொருளில் விவாதிப்பவரேனும், சரீரந்தோறும் ஆன்மா வேறுவேறென்னும் பொருளில் விவாதியார். ஒருகால் சர்வ சரீரத்தின் கண்ணும் ஒரே ஆன்மாவை அங்கீகரிக்கிலோ, ஒரு சரீரத்தின்கண் இன்பத்தின் அடைவுறவே, சர்வ சரீரத்தின்கண்ணும் இன்பத்தினடைவுண்டாதல் வேண்டும். ஒரு சரீரத்தின்கண் துன்பின்னடைவுறவே, சர்வ சரீரத்தின்கண்ணும் துன்பின் அடைவுண்டாதல்வேண்டும். ஆனால், ஒருசரீரத்தின்கண் இன்பத்துன்பங்களுறவே, சர்வ சரீரத்தின்கண்ணும் இன்பத்துன்பங்களுறல் காண வருவதின்றும். ஆகையினால், ஆகந்தோறும் வேறு வேறான்மா வுடன்படல்வேண்டும். இன்னணம் ஆன்மாவின் பேதந்துணியப்பெறவே, பீஷ்மத்துரோணாதிகளின் வேறாய என தான்மா நித்திய விபுவாயினும், சுகதுக்காதி குணங்களோடுற்றதா மாதலின், அப்பீஷ்மத் துரோணாதி யுறவினரின் தேகங்கள் நாசமுறின், என்னிடத்தே சுகவியோகமும் (நீக்கமும்) துக்க சம்பந்தமும் அவசியம் உண்டாம். ஆகையினால், யான் சோகமோகப்படல் அனுசிதமன்றும்; மற்றே, உசிதமேயாம் என்னும் அர்ச்சுனனது கருத்தின் சங்கையைப்பற்றி ஸ்ரீ பகவான் இலிங்கதேக விவேகம் செய்யும்பொருட்டுக் கூறத்தொடங்கியருளுகின்றார்:—

சு-ம். ஶாதராவுபபாஹ்ரு கௌந்தெய பீதோஷ்ண ஸுகது:க வதா:
ஆகமாபாயிநோ(அ)நித்யாஸ் தாம்ஸ்திதிக்ஷஸ்வ பாரத 2-16-17

ப-ம். 4 ஶாதராவுபபாஹ்ரு:தா 1 கௌந்தெய 6 பீதோஷ்ண ஸுகது:கவதா:5 ஆகமாபாயிநோ 3 (அ)நித்யாஸ் 7 தாந் 8 திதிக்ஷஸ்வ 2 பாரத ॥

(அ-ம்.) ஹே குந்திமைந்த! ஹே பரத வம்சத்தின் கண்ணுதித்த அர்ச்சுன! நியதமற்ற இயற்கையனவாய பொறிகட்குப் புலன்களோடுள்ள ஒற்றுமைகள், பிறந்திறக்கும் அந்தக்காணத்திற்கே குளிர் வெப்ப அடைவின் வாயிலாய் இன்பத்துன்பங்களைச் செய்விப்பனவாம்; அவற்றை நீ சகிப்பாயாக.

வி-ம். எவற்றால் விஷய மறியப் பெறுமோ அவற்றை மாத்திரைகளென்பர். அத்தகையன ஞாத்ராதிகளாம். ஞாத்ராதி இந்திரியங்களாலே ரூபாதிவிஷயங்களறியப்பெறுகின்றனவாம். அந்ஞாத்ராதி இந்திரியங்கட்கு ரூபாதிவிஷயங்களோடுள்ள தகுதியாய ஒற்றுமைகளையே மாத்ரா ஸ்பர்ஶங்களென்பர். அல்லது, ஞாத்ராதி இந்திரியங்களால் ஜனித்த அவ்வவ் விஷயாகார அந்தக்கரணத்தின் பரிணாமவடிவ விருத்திகளே மாத்ரா ஸ்பர்ஶங்களென்பர். அல்லது, கௌஷீதகி உபநிஷத்தின்கண் வாக்கு முதலிய பத்து இந்திரியங்களும் பிரஜ்ஞா மாத்திரைகளெனவும் நாமாதிய பத்து விஷயங்களும் பூதமாத்திரைகளெனவும் கூறப்பெற்றுள்ளன. அவ்வாக்காதிய பத்து இந்திரியங்களையும், நாமாதிய பத்து விஷயங்களையும் ஈண்டு

மாத்திரைச் சத்தத்தாற் கவர்ந்துகொள்க. அவ்விந்திரிய விஷயரூப மாத்திரை கட்குப் பரஸ்பரம் விஷய விஷயீபாவசம்பந்தங்களுள ; அவற்றையே மாத்ரா ஸ்பர்ஶமென்பர். அல்லது மாத்ரா என்பது மூன்றும் வேற்றுமை முடிபாய பிரமாதாவின் வாசகமாம் பின்னபதமெனவறிக. அப் பிரமாதாவோடுள்ள விஷய இந்திரியங்களின் சம்பந்தங்களே மாத்ரா ஸ்பர்ஶங்க ளென்பர். ஆகமமென்பது பிறப்பிற்காம், அபாயமென்பது அழிவிற்காம். அவ்வாகமமும் அபாயமும் எதற் காமோ, அஃதாகமாபாயியெனப் பெயர் பெறும். அத்தகைய ஆகமாபாயியாய அந்தக்கரணத்திற்கே அம்மாத்ரா ஸ்பர்ஶங்கள் குளிர்வெப்பங்களே யடைவிக்கும் வாயிலா யின்பத்துன்பங்களே யடைவிக்கும். யாண்டும் நிறைந்த நித்திய ஆன்மா விற்கு அவை யவற்றை யடைவியா ; ஏனெனின், அந்நித்திய ஆன்மா நிர்க்குண மும்நிர்விகாரமுமாதலினென்க. ஆண்டு "ஸாக்ஷீசேதாகேவலொ நிர்-ுணஶ்ச" என்னும் மறையுமுளது. பொருளிஃதாம் :—இவ்வான்மசேதவர் சர்வசாக்ஷியும், சேதனமும், அத்விதீயமும், நிர்க்குணமும், நிஷ்கிரியமுமாவர். இத்தகைய நிர் விகார நித்திய ஆன்மாவிற்கு, அநித்திய அந்தக்கரணத்தின் சுகதுக்காதிதர்மங்களி ஞ்சிரயத்தன்மை சம்பவியாது. ஏனெனின், தர்மதர்மியிரண்டிற்கும் அபேத மேயாம், அபேதமின்றி வேறுயாதொரு சம்பந்தமும் அவற்றிற்குச் சம்பவியாது. அந்நித்திய அநித்தியங்கட்கபேதங் கூறல் முற்றினும் முரணுமன்றே ? ஆகையி னல், அச்சுகதுக்காதிகள் ஆன்மாவின் தன்மமன்றும். சுகதுக்காதிரூப சாக்ஷிய பதார்த்தங்களிடத்தே சாக்ஷியான்மாவின்றன்மத் தன்மை யொருகாலுஞ் சம்ப வியாதாதலின் இப்பொருள் துணியப்பெறும் :—சுகதுக்காதி தர்மங்களிஞ்சிரயம் கேவலம் அந்தக்கரணமேயாமன்றி ஆன்மாவன்றும். அவ்வந்தக்கரணமும் சரீ ரந்தோறும் வேறுவேறும், அதன்பேதத்தைக்கொண்டே சிலர்சுகிகள், சிலர்துக்கி கள் என்பனமுதலிய விவஸ்தை சம்பவித்தல் கூடும். ஆகையினால், சுகதுக்காதி களின் விவஸ்தை கூடாமையின் சரீரந்தோறும் ஆன்மாவின் பேதமுடன்படல் அத்தியந்தம் அசங்கதமாம். அல்லது எல்லாவுலகையு மிலக்கிவைப்பதும், பிறப்பு முதலிய விகாரங்களற்றதுமாய ஆன்மா சத்துருவமாயும், ஸ்புரணரூபமாயும் எல் லாப் பதார்த்தங்களிடத்துந் தொடர்ந்திலங்குமாதலின், அச்சத்தாஸ்புரணரூப ஆன்மாவின் பேதத்தில் யாதொரு அளவையுமின்றும். மாறுப் "ஸனகோஒவஃ ஸவ-ுஹ்மதெஷ்-ுமஃ" என்பதாதி அநேக மறைகள் ஆன்மாவின் அபேதத் தின்கண்ணே பிரமாணமாம். அல்லது, சுகதுக்காதிகளின் உற்பத்தியின்கண் அந் தக்கரணத்திற்குக் காரணத்தன்மையுளதென்னு மிவ்விஷயம் நையாயிகர்கட்கும் சித்தாந்திகட்கும் உடன்பாடாம். அவற்றுள், நையாயிகரோ, மனரூப அந்தக்கர ணத்தைச் சுகதுக்காதி தர்மங்களின் நிமித்த காரணமெனவும், ஆன்மாவைச் சம வாயிகாரணமெனவும் உடன்பட்டுளார். சித்தாந்தத்தின்கண்ணே, அந்தக்கரணத் தையே சுகதுக்காதிகளி னுபாதான காரணமென வுடன்பட்டுளது. ஆண்டு "ஸாக்ஷீசேதா கேவலொ நிர்-ுணஶ்ச" என்பதாதி சுருதிகள் ஆன்மாவை நிர்க்குணமெனக் கூறுநிற்கும். ஆகையினால் நிர்க்குண ஆன்மாவின்கண் குணத் தின் சமவாயி காரணத்தன்மை கூறல் மறைக்கு முரணும். அந்தக்கரணத்திற் கன்றி வேறெப் பதார்த்தத்திடத்தும் சுகதுக்காதிகளின் சமவாயிகாரணத் தன் மை சம்பவியாது ; மேலும் நிமித்தகாரணத் தன்மையை யபேக்ஷித்துச் சமவாயி காரணத்தன்மை சிரேஷ்டமுமாம். ஆகையினால், நையாயிகரும் அந்தக்கரணத் தையே சுகதுக்காதிகளின் சமவாயிகாரணமென வுடன்படல் நலமாம். அல்லது கேவலம்யுக்தியினாலே அந்தக்கரணத்தின்கண் சுகதுக்காதிதர்மங்களின் உபாதான காரணத்தன்மை துணியப்பெறுவதன்றும் ; மற்றோர் மறைமானத்தானுந் துணியப் பெறுமென்றறிக. ஆண்டு "காஃ ஸ்மைதஸ்யை விஜிகிதாஸாயா சுஸ்யாஸ்யாதி ஸ்யாதிஹிரண்யமிஹிரண்யிதஸ்ய ஹஸ்தம் உதஸ்வ" என்னும் மறைமானமாம்

பொருளிஃதாம் :—இச்சை, சங்கற்பம், சம்சயம், சிரத்தை, அசிரத்தை, தைரியம், அதைரியம், இலஜ்ஜை, விருத்திஞானம், பயம் என்னுமிவையாவும் மனரூபமேயாம். இம்மறையானது காமாதிவிகாரங்களை மனத்தோடு அபேதப்படுத்திக் கூறுவதாய்மனத்தை அக்காமாதி விகாரங்கட்கு உபாதானகாரணமெனக் கூறுகின்றது. அச்சுருதியின்கண்ணே காமாதி விகாரம் சுகதுக்காதி தர்மங்கட்கும் உபலக்ஷகமாம். ஆன்மாவையோ, ஸ்வப்பிரகாச ஞான ஆநந்த ரூபத்தன்மையானே அநேகஞ் சுருதிகளறைகின்றன. ஆகையினால், ஆன்மாவிற்கு அச்சுகதுக்காதி தர்மங்களின் ஆசிரயத்தன்மை சம்பவியாதாதலின், நையாயிகாதியர் ஆன்மாவின்கண்ணே கேவலம் மயலிலானே விகாரித்தன்மையையும், பேதத்தையும் அங்கீகரித்துளார். ஹே அர்ச்சுன! ஆகமாபாயி யாதலினாலும், திருசியமாதலினாலும் நித்திய திருஷ்டாவான ஆன்மாவின் வேறுய இவ்வந்தக்கரணத்தின்கண் இன்பத்துன்பங்களை யியற்றும் மாத்ராஸ்பர்ஶங்கள் நியதமாய வியற்கையனவன்றும்; மற்றே அநியத (நியதமற்ற) இயற்கையனவாம். என்னே? ஒருகாலத்திற் சுகத்தை யுதிப்பிப்பனவாய சீதோஷ்ணாதிகளே, மற்றொருகாலத்தே துக்கத்தையே யுதிப்பிக்கும், இவ்வாறே ஒருகாலத்தில் துக்கத்தை யுதிப்பிப்பனவாய சீதோஷ்ணாதிகளே, மற்றொரு காலத்தே சுகத்தையே யுதிப்பிக்கும். ஆகையினால், அம்மாத்ராஸ்பர்ஶங்கள் அநியதமாய இயற்கையனவாமென்றறிக. ஈண்டுச் சீதோஷ்ணக் கிரகணம் ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதைவிகமென்னும் மூன்று வகையாய சுகதுக்கக்கிரகண உபலக்ஷகமுமாம். ஆண்டுச் சுரம் முதலிய வியாதிகளால் அந்தக் காரணத்தின்கண் உற்பன்னமாய துக்கத்தை ஆத்யாத்மிக துக்கமென்பர். சிங்க சர்ப்பாதி பூதங்களா லுற்பன்னமாய துக்கத்தை ஆதிபௌதிக துக்கமென்பர். நீர் நெருப்புக் கிரகாதிகளால் உற்பன்னமாய துக்கத்தை ஆதிதைவிக துக்கமென்பர். இவ்வண்ணம் சுகத்திற்கும், முப்பேதமுணர்ந்துகொள்க. ஆகையினால் ஹே அர்ச்சுன! முற்றிலும் நிலையற்ற வியற்கையதும், நினது நிர்விகார ஆன்மாவினும் வேறுய் விகாரியாயதுமான அந்தக்காரணத்திற்குச் சுகதுக்கங்களை யடைவிப்பனவாய பீஷ்மத்துரோணாதிகளின் சையோகவியோகரூப மாத்ரா ஸ்பர்ஶங்களை நீ பொறுத்துக்கொள். இம்மாத்ராஸ்பர்ஶங்கள் அவிகாரியாய எனதான்மாவைச் சிறிதுமாத்திரையும் கேடுசெய்யாவென விவேகித்து நீ யவற்றையுபேக்ஷாசெய்தி; துக்காதி தர்மங்களோடுகூடிய அந்தக்காரணத்தின்றுதான்மிய அத்தியாசத்தால் நீ நினதான்மாவைத் துக்கியாய் மதியாதிருத்தி; என்னுமிவையே அம்மாத்ரா ஸ்பர்ஶங்களின் பொறுக்கையாமென்பது கருத்தாம். ஈண்டு ஹெ கௌந்தெய! ஹெ ஹாரத! என்னும் இவ்விரண்டு விளிகளால் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்கு இப்பொருளைக் குறிப்பித்தருளினர் :—தாய் தந்தையர்தங் குலங்களால் முற்றினுந் தூயனுய நினக்கு இவ்வகையாய அஞ்ஞானம் உசிதமன்றுமென்பதே, ஓருரையின்கண் சூமஶா வாயிநஃ என்னும் விசேஷணம் மாத்ரா ஸ்பர்ஶங்கட்கே கூறப்பெற்றுளது. ஆகமாபாயியாதலின், அம்மாத்ரா ஸ்பர்ஶங்கள் அநித்தியங்களாம் என அர்த்தமும் செய்யப்பெற்றுளது. ஆனால், இவ்வுரையின்கண் ‘‘ஸீதோஷ்ண ஸுவதுஃக வதாஃ’’ என்னும் மொழியான்மொழிந்த இன்பத்துன்பங்களை அம்மாத்ரா ஸ்பர்ஶங்கள் எதற்காற்றுமென அறியும் வேட்கையணுக, அந்தக்காரணத்திற்குச் சுகதுக்கங்களை யடைவிக்கும் எனப் பொருள் விரித்தலால் அந்தக்காரணத்தின் கவர்ச்சியுண்டாம். முன்னுரையில் சூமஶா வாயிநஃ என்னுஞ்சத்தம் அந்தக் காரணத்தின் வாசகமேயாமாதலின், அச்சத்தத்தானே அந்தக்காரணத்தின் அடைவுண்டாமெனவுணர்க. (14)

(அ-கை.) ஹே பகவன்! அந்தக்காரணத்தைச் சுகதுக்க ஆசிரயமென அங்கீகாரம் செய்யிலோ, அவ்வந்தக் காரணத்திற்கே கர்த்துரு போத்துருத்தன்மை

களின் அடைவுறச் சேதனத்தன்மை யங்கீகரிக்கவேண்டிவரும்; வரவே, அந்தக் காரணத்திற்கே சேதனரூபத்தன்மை துணியப்பெறவரும்; வந்த அஞ்ஞான்று, அந்தக்காரணத்தின் வேறுய் அதனை யொளிர்விக்கும் போக்தாவாய ஆன்மாவின் கண் யாதொரு பிரமாணமு மின்றுய் விடுமாதலின், கேவலம் நாமமாத்திரத்தில் விவாதஞ் சித்திக்கும்; அந்நாமங்கட்கு அர்த்தத்தின்கண் யாதொரு விவாதமுமுண்டாகமாட்டாது. சிலவாதியர் அதனை அந்தக்காரணமென்னும் பெயரால் அழைப்பர், மற்றுஞ் சிலவாதியரோ அதனை ஆன்மாவென்னும் பெயரால் அழைப்பர். மேலும், அவ்வந்தக்காரணத்தின் அயலாய்ச்சேதனமாய ஆன்மாவை யங்கீகரிக்கிலை, வேதாந்த சித்தாந்தத்தின்கண் அங்கீகரிக்கப்பட்ட பந்த மோக்ஷங்களின் ஒரு நிலைக்களத்தன்மை துணியப் பெறமாட்டாது. மற்றை, அப்பந்த மோக்ஷங்கட்கு வேறு வேறு நிலைக்களமே துணியப்பெறும். அவற்றுள் இன்பத்துன்பங்களின் பற்றுக்கோடாயிருத்தலின் அந்தக்காரணமோ, பந்தத்தின் நிலைக்களமாம்; அதனின் வேறுய ஆன்மா, மோக்ஷத்தின் நிலைக்களமாம் என்னும் அர்ச்சுனனது சங்கையை நீக்கும் பொருட்டு ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்:—

சு-ம். யம்ஹி ந வ்யதயந்த்யேதே புருஷம் புருஷர்ஷப ।
ஸமதுக்கஸுகம் தீரம் ஸோ(அ)ம்ருதத்வாய கல்பதே ॥

ப-ம். 3 யம் 7 ஹி 8 ந 9 வ்யதயந்தி 6 ஏதே 5 புருஷம் 1 புருஷர்ஷப 2 ஸமதுக்கஸுகம் 4 தீரம் 10 ஸஃ 11 அம்ருதத்வாய 12 கல்பதே ॥

(அ-ம்.) ஹே புருஷருக்குள் மேன்மையுற்ற அர்ச்சுன! துக்க சுகங்களைச் சமமாய்க் காணும் தீர புருஷரை இம்மாத்ரா ஸ்பர்சங்கள் துன் புறுத்தாத காரணத்தால் அத்தீர புருஷர் மோக்ஷ அடைவின் பொருட்டு யோக்கியராவர்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! "சுத்தாயம் புருஷஃ ஸ்வயம்ஜ்யோதிஸ்வதிஃ" பொருளிதுவாம்:—இக்கலுவவஸ்தையின்கண் ஆதித்தன் முதலிய ஒளிகளிலவாக இவ்வான்ம புருஷனை சுயஞ்சோதியாவன். என்னும் சுருதிப் பிரமாணத்தால் ஸ்வப்பிரகாசரூபமாய்ச் சித்தமாய சேதன ஆன்மாத் தனது பரிபூரண ரூபத்தால் சர்வ சரீர ரூப புரிகளின்கண் நிவாசம்செய்யும். இக்காரணம்பற்றியே அருமறையன்னையானவள் அச்சேதன ஆன்மாவைப் புருஷனென்னும் பெயரிட்டு அழைத்தனள். அல்லது அஷ்டபுரங்களில் நிவாசம்செய்பவனைப் புருஷனென்பர். அவ்வஷ்டபுரங்களிவையாம்.

சு-ம். கஸ்த்ரயாணி வஸ்த்ரவம்ஸ்தயாவஸ்த்ராணி
ஜ்ஞாநேந்த்ரியாணிந கர்மேந்த்ரியாணி ।
ப்ராணாதிவம்ஸ்ததயோ வியதாதி கம்ஸ
காரஸ்ஸ கஸ்த்ரதஸஃ புருஷோ(அ)ஷ்டவஸ்த்ரஃ ॥

(பொ-ள்.) வாக்காதி ஐந்து கர்மேந்திரியங்கள் (1) சுரோத்ராதி ஐந்து ஞானேந்திரியங்கள் (2) மனாதி நான்கு அந்தக்காரணங்கள் (3) பிராணாதி ஐந்து பிராணன்கள் (4) ஆகாசாதி பஞ்சபூதங்கள் (5) காமம் (6) கர்மம் (7) தமம் (8) என்னும் இவ்வெட்டிற்கும் புரமெனப் பெயராம். ஈண்டுத் தம சத்தத்தாற் காரண அஞ்ஞானத்தைக் கவர்ந்துகொள்க. ஆண்டு "ஸ்வாயம் புருஷஃ ஸ்வாக்ஸ்வேஷ்வாநிவாஸயஃ" என்னுஞ் சுருதியுளது. பொருளிதுவாம்:—இச்சேதனான்மா சரீராதிரூப சர்வ புரிகளிடத்தும் நிவாசம் செய்வதாய்ப் புருஷ நாமத்தையடையும். இத்தகைய சுயஞ்சோதி ஆன்மாவிற்கு அனான்ம அந்தக்காரணத்தின் தர்மரூபத்தாலும், திருசிய ரூபத்தாலும் இத்துக்க

சுகம் சமானமேயாம். இக்காரணம் பற்றியே அவ்வான்மாவிற்குச் சமதுக்க சுகஞ் சாற்றப் பெற்றது. ஈண்டுத் துக்க சுகத்தைக் கவர்ந்தது முன் மொழிந்த அந்தக்காரணத்தின் காம சங்கற்பாதி சர்வ தர்மங்களின் உபலக்ஷகமாம். ஆண்டு "வஷ்டிதெயாஉஹிஉ ஬்யாஹரணஷ்ய கவய-ஃதெ கூ-ஃணாதொகூநீயாஹு" என்னுஞ் சுருதிப்பிரமாணமாம். பொருளிதுவாம்:—பிரஹ்மரூபப் பிராஹ்மணனுக்கு இஃதோர் நித்திய மகிமையாம்; யாதெனின் புண்ணியகருமத்தாற் சுகரூப விருத்தியை யடையாமையும், பாவகர்மத்தால் துக்கரூப கநிஷ்டத்தன்மையை (தாழ்வை) யடையாமையுமேயாம். இம்மறையானது ஆன்மாவின்கண் இன்பத்துன்ப தர்மங்களை நிஷேதிக்கின்றது. இதனாற் காமசங்கற்பாதி சர்வ தர்மங்களின் நிஷேதத்தையும் உணர்ந்துகொள்க. அச்சயஞ் சேதனாயய ஆன்மாத் தனது சிற்போலி வாயிலாய் மதியோடு தாதாத்மிய அத்தியாசத்தை யடைந்து அம்மதியைச் சுபாசுபகாரியத்தின்கண்ணே பிரேரிப்பிக்குமாதலின் பிரேரகசாக்ஷியாய ஆன்மாவைத் தீரநாமத்தாலழைப்பர். "யியஃயபதீதியஃ" (மதியை யேவுவது தீரமாம்) ஆண்டு "வெயஃ வைவொ ஹ்ரூதெஉம்றொகூஉதிகூராஉதி" என்னுஞ் சுருதியுளது. பொருளிதுவாம்:—மதிரூப உபாதியையுடைய இவ்வான்ம தேவர் கனவையடைந்து இந்நனவை விடுப்பர். இத்துஷ்டியியம்பியதாலான்மாவின்கண்ணே பந்தத்தின் பிரசக்தி காண்பிக்கப்பட்டது. எந்நிலைக் களத்தின்கண் எப்பொருள் இயல்பாயே உண்டாகாதோ அந்நிலைக்களத்தின்கண் அப்பொருளிருதோடஞ் செய்தலைப் பிரசக்தியென்பர். இவ்விஷயம் வேறு நூலிலும் நுதலப்பெற்றுளது: ஆண்டு அவ்வேறுநூலிஃதாம்:—

சு-ம். யதொஉகாரிஸிஉயஞ்கி ஜாமயூஹிகயம்தயா।
ஹாவாஹாவ விஹாமபுபவொவ்ய ஊராஸீதி வொயயுதெ ॥ பொருளிஃதாம்:—

எச்சயஞ்சேதனாயய ஆன்மாவால் பிரத்தியகூஹாதி சர்வப்பிரமாணங்களுந் துணியப்பெறுமோ, நரைமுதலிய மூன்றவஸ்தைகள் துணியப்பெறுமோ, இதுபாவபதார்த்தமாம் இஃதபாவபதார்த்தமா மென்பதாதி வேற்றுமை துணியப்பெறுமோ, அச்சாகூஷியாய ஆன்மாவே பிரஹ்மாஸ்மி என்பதாதி மகாவாக்கியங்களாற் போதிக்கப் பெறுகின்றதாம். இத்தகைய சமதுக்கசுகதீரபுருஷனுக்கு மூன்மொழிந்த சுகதுக்கத்தைக் கொடுப்பனவாய மாத்ரா ஸ்பர்சங்கள் உண்மையாய்த் துன்பத்தையடைவியாவாம். ஏனெனின், அச்சயம்சேதனாயய புருஷன் விகாரங்களியாவற்றையும் விளக்கிவைப்பவனுதலின் அவ்விகாரங்கட் கருகனன்றுமாதலினென்க. ஆண்டருமறையு மிவ்வாறுளது:—

வொயெ-ஃயயா வெவ-ஃயொகவொஸ் அகூஹ-
ரஃயிவெஸ்தெஅகூஹ-ரெஷெவா-ஃஉஸ்தொவெஷெஃ।
வொகவொஸ்யாவெவ-ஃ ஹ்ரூதாஹ்ரூதா
ரஸ்யிவெஸ்தெயொக உ-ஃவெநவொஹஸ் ॥

(பொ-ள்.) எவ்வண்ணம் எல்லாவுலகிற்கும் நேத்திரமாய சூரியபகவானவர் நேத்திரவிஷயமாகிய தோஷத்தாற் பற்றுறாரோ, அவ்வண்ணம் வக அத்விதீய ரூப சர்வபூதங்களினந்தராத்மா, பாகியலோக துக்கங்களாற் பற்றுறாது. இக்காரணத்தாலதீரபுருஷன் தனது சொரூபபூத பிரஹ்மான்மாவின் ஒருமை ஞானத்தாற் சர்வதுக்கங்களினுபாதானகாரணரூப அஞ்ஞான நிவிருத்திவாயிலாய் அத்விதீய ஸ்வப்பிரகாச பரமானந்தரூப மோகூஷப் பிராப்தியின்பொருட்டு யோக்கியனவன். ஒருகால் இச்சயஞ் சேதனாயய ஆன்மா ஆரோபித பந்தத்திற் காசிரயமாகாமல் இயல்பாயபந்தத்திற்காசிரயமாயினை தன்மியின் நீக்கமின்றி இயற்கையாய

தன்மங்களின் நீக்கம் கூடாதெனக்கொள்க. தழல் வடிவத்தன்மியின் நீக்கமின்றி அதனது வெம்மைமுதலிய இயற்கையாய தன்மங்களின் நீக்கம் உளதாகாததே போல, ஆன்மரூபத்தன்மியின் நீக்கமின்றி யதனது இயற்கையாய பந்தரூபதன்ம நீக்கம் ஒருகாலுமுளதாகாதென்பதொருதலையேயாம். ஆன்மாவோ நித்தியமாதலின் அதற்கொருகாலும் நீக்கம் சம்பவியாதாகவே அஃதெக்காலும் முக்தமாவதேயின்ற மென்றுணர்க. இவ்வார்த்தை

சு-ம். சூதாகதுரு-ழாஜிஸ்வஜ்ஞாகாம் கூஹ்வஹி-ழுஜுகுதாம் ।
நஹிவ்வஹாவொஹாவாநாம் வ்யாவதெ-ழுதளஷ்ணை வ்ருவெ ॥

என வேறு நூலின்கண்ணுங் கூறப்பெற்றுளது. இதன்பொருளோ :—ஆன்மாவொருகாலியல்பாயே கர்த்துருத்வ போத்துருத்வாதிரூப பந்தவாணையின் வேறமைந்த! நீ முத்தத்தன்மையை விழையாதொழிதி. எனெனின், பாவபதார்த்தமுடைத்தான இயல்பாய தர்மமானது அப்பாவபதார்த்த ரூபதர்மியின் நிவிருத்தியின்றி யொருகாலும் நிவிருத்த மாவதன்றுமன்றே; சூரியனது ஸ்வாபாவிகதர்மமாய உஷ்ணத்தை சூரியரூப தர்மியின் நிவிருத்தியிலுனன்றி நிவிருத்தமாகாதென யாவரே யுணராதார் என்பதாம். அல்லது ஆன்மாவின்கண் இயற்கையாய பந்தத்தை யங்கீகரிப்பிலே, எவருக்கும் மோக்ஷப் பிராப்தி யுண்டாகாது. அன்றியு மிவ்வார்த்தை "விஜ்ஞாதாரமரே கேன விஜானீயாத்" என்பன முதலிய, ஞானத்தால் மோக்ஷத்தின் அடைவைக் கூறுநிற்கும் அநேக சுருதிகட்கும் முரணும்.

சங்கை :—ஆன்மாவின்கண் இயல்பாய பந்தத்தை ஒருகால் யான் அங்கீகரிக்கின், இம்மூற்கூறிய தோஷம் என்னைப் பற்றுநிற்கும். ஆனால், ஆன்மாவின்கண்ணுள்ள பந்தத்தை இயல்பென அங்கீகரித்திலேன்; மற்றே, அவ்வான்மாவின் கண்ணுள்ள பந்தம் புத்தி முதலிய உபாதிகளாலாக்கப்பெற்றதாம். ஆண்டுச் சுருதியுமுளது :— "சூதேந்ரியமநோயுக்தம் பொக்தேத்யாஹுர்மநீஷிண:" பொருளிதுவாம் :—இந்திரிய மனரூப உபாதியோடுகூடிய ஆன்மாப் போக்தாவாம்; என்று புத்திமான்களாய புருஷர் கூறுவர். இவ்வண்ணம் ஆன்மாவின்கண் உபாதியாலாற்றப்பெற்ற பந்தத்தை யங்கீகரிக்கின், ஆன்மரூப தர்மியிருப்பினும், ஔபாதிக பந்த நிவிருத்தியால் முக்தியின் அடைவுண்டாகியே விடுமன்றே?

சமாதானம் :—ஹே வாதியே! நீ இங்ஙனம் கூறியதால் இப்பொருளன்றே துணியப்பெறுகின்றது :—எவ்வஸ்துவானது தனது தர்மத்தை அந்நிய வஸ்துவின்கண் இருக்குமாறு தோற்றுவிக்குமோ, அவ்வஸ்து உபாதியாம்; சிவப்பு வர்ணமுடைய ஜபாகுசுமமானது தனது சிவப்பு வர்ணத்தைச் சமீபித்துள்ள ஸ்படிகமணியின்கண் இருக்குமாறு தோற்றுவிக்குமாதலின், அந்த ஜபாகுசுமத்தை யுபாதியென்பது போலவாம். அங்ஙனமே, இப்புத்தி முதலியவையும், தமது சுகதுக்கமுதலிய தர்மங்களை ஆன்மாவின்கண் இருக்குமாறு தோற்றுவிக்கும் ஆதலின், இப்புத்தி முதலியவையும் உபாதிகளாம். எத்தர்மம் உபாதியால் ஆக்கப் பெற்றதாமோ அத்தர்மம் அசத்தியமேயாம். எவ்வண்ணம் ஜபாகுசுமரூப உபாதியால் ஆக்கப்பெற்ற ஸ்படிகமணியின்கண் இராநின்ற இரக்தத்தன்மையானது அசத்தியமேயாமோ, அவ்வண்ணம் புத்திமுதலிய உபாதிகளால் ஆக்கப்பெற்ற ஆன்மாவின்கண்ணுள்ள கர்த்துருத்தன்மை போத்துருத்தன்மை முதலிய பந்தமும் அசத்தியமேயாம். இங்ஙனம் பந்தத்தின்கண் ஔபாதிகத் தன்மையை அங்கீகரித்து அசத்தியரூபத் தன்மையை அங்கீகாரம்

செய்யும் வாதியாய நீ எமது சித்தாந்தரூப மார்க்கத்தின்கண்ணே அடைவுற்றனை ; ஆதலின், நீ எமது அநுகூலனேயன்றிப் பிரதி கூலனன்றுயினை. ஆகையினால் இப்பொருள் துணியப் பெற்றதாம் :—உண்மையாய்க் கர்த்துருத்துவ போத் துருத்துவம் முதலிய சர்வ சம்சார தர்மங்களின் சம்பந்தமின்றிய ஆன்மாவின் கண்ணும் அந்தக்கரணாதி உபாதிவசத்தால் அச்சம்சார தர்மங்களின் சம்பந்தப் பிரதிதியே ஆன்மாவின்கண் பந்தமாம். தனது வாஸ்தவஸ்வரூப ஞானத்தால் எக்கால் தனது சொரூப அஞ்ஞான நிவிருத்தியாமோ, அஞ்ஞான காரியரூபபுத்தி யாதி உபாதிகளின் நிவிருத்தியாமோ, அவ்வுபாதிகளாற்றிய மயக்கம் யாவும் நிவி ருத்தியாமோ, அக்கால் சர்வ திருசியப் பிரபஞ்சத்தின் சம்பந்த மற்றிருத்தலின் சுத்தரூப ஸ்வப்பிரகாச பரமாநந்தரூபமாய் யாண்டும், நிறைந்துள்ள ஆன்ம தேவருக்குச் சுயமாகவே கைவல்ய ரூபமோக்ஷமுண்டாம். ஆகையினால், பந்த மோக்ஷம் இரண்டினுக்கும் பின்னபின்ன அதிகரணமின்றும் ; மற்றோர், ஓர் ஆன்மா இரண்டினுக்கு மதிகரணமாம். இதுகூறியதால், அந்தக்கரணம் ஆன்மா என நாமமாத்திரத்தின்கண்ணே விவாதமாம், அவ்விரண்டு நாமங்கட்கும் பொரு ளொன்றே யாம் ; என முன்னர் வாதிகூறியதும் கண்டிக்கப்பெற்றதென வுணர்க. ஏனெனின், பிரகாசியம் பிரகாசகமென்னும் இரண்டினுக்கும் ஒருமை சம்ப வியாது. எங்ஙனம் பிரகாசியங்களாய கட முதலிய பதார்த்தங்களும், பிரகாச கங்களாய தீபமுதலிய பதார்த்தங்களும், ஒருமையைப் பெறுவனவன்றோமா ஆங்ஙனம், பிரகாசியங்களாய அந்தக்கரணாதிகளும், பிரகாசகமாய சாக்ஷியான் மாவும் ஒருமையைப்பெறு. மற்றோர், பிரகாசியப்பொருள் பிரகாசகத்தினும், வேறே யாம். ஒருகால் ஓரே பொருட்குப் பிரகாசியத் தன்மையையும் பிரகாசகத் தன்மையையும் அங்கீகரிக்கின், ஓரே பதார்த்தத்தின்கண் பிரகாச ரூபக்கிரியை யின் கர்த்துருத்தன்மையும், கர்மத்தன்மையும் அடையும். அஃதத்தியந்தம் விருத்தமாம். ஓரே வஸ்துவின்கண் ரெண்டுகிரியையால் நிரூபிக்கப்பட்ட கர்த் துருத்தன்மையும், கர்மத்தன்மையும் யாண்டும் கண்டிடவாராவென்றுணர்க.

சங்கை :—ஓரே வஸ்துவின்கண் பிரகாசியத்தன்மையும் பிரகாசகத்தன்மை யும் உண்டாகாதாயின், ஆன்மாவின்கண்ணுந்தான் அவ்விரண்டும் எங்ஙனந் சம்பவிக்கும் ?

சமாதானம் :—சுயஞ்ஜோதியாய ஆன்மாவின்கண் யாம் கேவலம் பிரகாசகத் தன்மையையே அங்கீகரிக்கின்றோம். கடாதிய பதார்த்தங்கட்கேபோல, ஆன் மாவின்கண்ணே பிரகாசியத்தன்மையை அங்கீகரிப்பதின்றும். மேலும், ஆன் மாவின்கண்ணுள்ள அந்தக் கரணாதிகளின் பிரகாசகத் தன்மையும் ஸ்வப்பிரகாச ஞானரூபத்தன்மையினும் பின்னமன்றும் ; மற்றோர், அந்தப் பிரகாசகத்தன்மை ஸ்வப்பிரகாச ஞானரூபத் தன்மையேயாம். இத்தகைய பிரகாசகத்தன்மை ஆன்மாவினும் வேறாய அந்தக் கரணாதிகளிடத்தே சம்பவியாது.

சங்கை :—புத்தி விருத்திகளினும் வேறாய் யாதொரு ஞானமுமின்றும் ; ஆகையினால், புத்தி விருத்திகளே ஞானரூபங்களாம்.

சமாதானம் :—ஞானம் சர்வ தேசத்தினும், சர்வ காலத்தினும் தொடர்ந்து நிற்பதாம். பேதம் செய்வனவாய தர்மங்களற்றதாம் ; ஆகையினால், அந்த ஞானம் விபுவாம், நித்தியமாம், ஏகமாம். புத்தியின் பரிணாமரூப விருத்திகளோ பரிச் சின்னங்களாம், அநித்தியங்களாம், அநேகங்களாம். விபுவாய் நித்தியமாய ஏக ஞானத்திற்குக் கூறியவகையாய பரிச்சின்ன அநித்திய அநேக விருத்தி ரூபத் தன்மை சம்பவியாது.

சங்கை :—ஞானத்தை நித்தியமெனவும், ஏகமெனவும், அங்கீகாரம் செய்யிலே, என்னிடத்தே முன்னர் கடஞானமழிந்தது. இப்போது படஞானம் உண்டாகியிருக்கின்றது, என்னுமித்தோற்றம் ஞானத்தின் உற்பத்தி நாசத்தையும், பேதத்தையும் விஷயஞ்செய்வது அசங்கதமாம்.

சமாதானம் :— அத்தோற்றம் ஞானத்தின் உற்பத்தி நாசங்களை விஷயம் செய்வதின்றும் ; மற்றே, அச்சாக்ஷியாய ஆன்மரூப ஞானத்திற்குக் கடாதி விஷயங்களோடு விருத்திவாயிலாயுள்ள சம்பந்தத்தின் உற்பத்தி நாசங்களை அத்தோற்றம் விஷயஞ்செய்யும். அங்ஙனம் அங்கீகரியாவிடின், அந்த அந்த ஞானத்தினுற்பத்தி நாசம் பேதம் முதலியவற்றைக் கற்பனை செய்வதில் அத்தியந்தம் கௌரவதோஷப் பிராப்தியுண்டாம். ஆகையினால், அந்தச் சாக்ஷியாய ஆன்மரூப ஞானம் நித்தியமாம், விபுவாம், ஏக அத்விதீயரூபமாம்.

சு-ம். "நஹிஜ்ஞஷ்ஜ்ஞஷ்யவிஷ் வர்ஷிலொவொவிஜ்யதெ சுவிகாபரிக்ஷாக்ஷ
க்ஷகாபவக் ஷவக்ஷமதஜ்ஞநிதயஃ
ஊஹஜ்ஞ்மதஜநந்த ஊவாஜ்ஞம் விஜ்ஞாநவநஹவ [நஜ்ஞஃ."
தஜெவஜ்ஞாவஜ்ஞவக் ஜநவஜ்ஞநஜ்ஞஜ்ஞவாஹய் ஜயஜாதாஜ்ஞாஜ்ஞவக்ஷ

இதன்பொருள் :—திருஷ்டாவாய ஆன்மாவின் வடிவமாய ஞானரூப திருஷ்டி நாசமற்றதாம். ஆகையினால், அத்திருஷ்டியினுக்கு எவ்வவஸ்தையிலும், அபாவ முண்டாகமாட்டாது. இந்த ஞானசொரூப ஆன்மா, ஆகாசம்போலயாண்டும் வியாபகமும் நித்தியமுமாம் ; இந்த ஞானசொரூப ஆன்மா, மகத்வடிவத்தை யுடையதும், அநந்தமாயதும், அபாரமாயதும், விஞ்ஞான கனமாயதும் ஆம் ; இந்த ஞானசொரூப ஆன்மாவாய பிரஹ்மம் காரணமற்றதும், காரியமற்றதும், உட்டன்மையற்றதும், வெளித்தன்மை யற்றதும் ஆம் ; இந்த ஞானசொரூப ஆன்மாப் பிரஹ்மரூபமாம். என்பவை முதலிய அநேகம் சுருதிகள் ஆன்மாவை விபுநித்திய ஸ்வப்பிரகாச ஞானரூபமாய்க் கூறுகின்றன. இத்துணை கூறியதால், அவித்யாரூப காரண உபாதியினின்றும் ஆன்மாவிற்கு வேற்றுமை துணியப்பெறுமென்க. ஸ்தூலசூக்ஷ்மகாரணவடிவ அசத்திய உபாதிகளாலாக்கிய ஆன்மாவின் கண்ணுள்ள பந்தமயலின் நீக்கம் ஆன்மஞானத்தாலாம்போது இச்சுயஞ்சோதிப் புருஷனுக்கு மோக்ஷ அடைவுண்டாம். எனத் துணியப்பெறும். இத்துணிவின்கண் முன்மொழிந்த சிறிதுமாத்திரைத்தோடமுமடைவுறுதென் றுணர்ந்துகொள்க. ஈண்டு 'ஹெவஜ்ஞாஷஷ்ஷ்ஜ்ஞஹ' என்னும் விளியால் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்கு இப்பொருளைக் குறிப்பித்தருளினர் :— ஸ்வப்பிரகாச சைதன்யரூபத் தன்மையாலே உன்னிடத்தே புருஷத்தன்மையுளது, பரமானந்தரூபத்தன்மையாலே உன்னிடத்தே சர்வ த்வைதப் பிரபஞ்சத்தின் அபேக்ஷையால், மேன்மைவடிவ இருஷபத்தன்மையுளது உனது புருஷத்தன்மையையும், இருஷபத்தன்மையையும் அறியாமலே நீ சோகத்தையடைந்தனை. ஆதலின் அச்சோக நிவிருத்திக்கு வேறு யாதொரு உபாயமுமின்றும் ; மற்றே, உனது சொரூப ஞானத்தாலே உனது சோகநீக்கமுண்டாம். ஆண்டிது சுருதியாம் :—" தஜ்ஜிபொஜாகுஶோதவிக் " பொருளிதுவாம் :—ஆன்மாவையுணர்ந்தவன் சோகத்தைக் கடக்கின்றான். இச்சுலோகத்தின்கண் வாஸுதேவம் என்னும் ஏகவசனத்தால் (ஒருமையால்) சாங்கிய நூலுடையார் மதம் கண்டிக்கப்பெற்றதாம். ஏனெனின், அச்சாங்கிய நூலுடையார் அநேக புருஷரை யங்கீகரித்தலினென் றறிந்துகொள்க.

(அ-கை.) ஹே பகவன்! சேதன ஆன்மபுருஷன் ஒருவனே யாவன் எனினும், அப்புருஷனிடத்தே சத்தியரூப ஜடபதார்த்தங்களைக் காணுந் தன்மைவடிவ சம்சாரம் அசத்தியமன்றும்; மற்றே, அச்சம்சாரம் சத்தியமாம்; அச்சம்சாரம் சத்தியமாகவே, சீத உஷ்ணம் முதலிய சுகதுக்கங்களின் காரணங்கள் நிகழும் நிகழவே சுகதுக்கமோகமும் அவசியமுண்டாம். அன்றியும் சத்தியவத்துவின் நீக்கம் ஞானத்தாலுண்டாகாது; சத்தியவத்துவிற்கும் ஞானத்தால் நீக்கமுண்டாமாயின், சத்திய ஆன்மாவிற்கும் ஞானத்தால் நீக்கமுண்டாதல்வேண்டும். ஆகையினால் முன்னர்க்கூறிய மாத்ராஸ்பரிசங்களின் நிதிகை யெங்ஙனஞ் சம்பவிக்கும்? அங்ஙனமே இப்புருஷன் மோகக்ஷத்தையடையும்பொருட்டு எங்ஙனந் தகுதியுடையவனவன்? என அர்ச்சுனன் சங்கிப்ப ஸ்ரீபகவான் அருளிச்செய்வதாவது:— ஹே அர்ச்சுன! இப்பியின்கண் கற்பிதமாய வெள்ளிக்கு இப்பிரூப அதிஷ்டான ஞானத்தால் நீக்கமுண்டாவதேபோல, இவ்வெல்லாத்வைதப் பிரபஞ்சமும் ஆன்மாவின்கண் கற்பிதமாதலின், அவ்வதிஷ்டான ஆன்மஞானத்தால் அக்கற்பிதப் பிரபஞ்சத்தின் நீக்கம் உண்டாமென்றுணர்க. ஹே பகவன்! ஆன்மாவின் பிரதியாவதேபோல அனன்மப் பிரபஞ்சத்தின் பிரதியும் உண்டாமாதலின், ஆன்மாவிற்கும் அனன்மாவிற்கும் சமானப் பிரதியிருப்ப ஆன்மாவைப்போல அனன்மஜகத்தும் சத்தியமேனகமாட்டாது? அங்ஙனமே அனன்மஜகத்தைப்போல ஆன்மாவும் அசத்தியமேனகாது? என வண்டாம் அர்ச்சுனன் சங்கைக்குத்தரம் அருளிச்செய்வான், ஸ்ரீ கண்ணபிரான் அவ்விரண்டினுள்ளும் விசேஷத்தன்மையை வருணித்தருளுகின்றார்:—

சு-ம். நாஸதோவித்யதே பாவோ நாபாவோவித்யதேஸதஃ।
உபயோரபிதிர்த்ருஷ்டோ த்வனயோஸ்தத்த்வதர்ஸிபிஃ॥ 2-16

ப-ம். 3 ந 1 ஸது 4 வித்யதே 2 பாவ 7 ந 6 ஸுபாவ 8 வித்யதே 5 ஸதஃ 10 உபயோ 11 ஸபி 14 த்ருஷ்டஃ 12 ஸந்தஃ 9 த, ஸ்தயோ 13 தத்வதர்ஸிபிஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அசத்வஸ்துவிற்குச் சத்தை சம்பவியாது, அங்ஙனமே சத்வஸ்துவிற்கு அபாவம் சம்பவியாது; இச்சத்த சத்து என்னும் இரண்டு வஸ்துக்களின் மரியாதையையும் தத்துவ தரிசிகள் கண்டு கொண்டிருக்கின்றனர். (16)

(வி-ம்.) காலபரிச்சேதம், தேசபரிச்சேதம், வஸ்து பரிச்சேதம் என்னும் மூன்றுவித பரிச்சேதங்களையும் உடைய பதார்த்தம் அசத்தென்னப்படும். அத்தகையன கடாதியசத்பதார்த்தங்களாம். அவற்றுள், முன்னின்மை பின்னின்மைகளின் எதிர்மறைத் தன்மையைக் கால பரிச்சேதமென்பர்; கடத்தின் உற்பத்தியின் முன்னர் கடத்திற்கு மண்ணின்கண் முன்னின்மையுளது; அம்முன்னின்மையின் எதிர் மறைத்தன்மை அக்கடத்தின்கண்ணேயுளது. அக்கடத்தின் அழிவின்பின் அதன் பின்னின்மை அக்கடத்தின் கபாலங்களிலுளது, அப்பின்னின்மையின் எதிர் மறைத்தன்மை அக்கடத்தின்கண்ணேயுளது. ஆகையால் அக்கடம் காலத்தாலாக்கிய பரிச்சேத முடையதாம். கடமழிந்ததன் பின்னர் இராநின்ற ஓடுகள் யாவையோ அவையே கபால நாமத்தையினையும். முற்றுமின்மையின் எதிர்மறைத் தன்மையைத் தேசபரிச்சேதமென்பர், எவ்விடத்திற் கடமுளதோ அவ்விடத்தை யொழித்து, மற்றெல்லாவிடத்தும் அக்கடத்தின் அத்தியந்தா பாவமிருக்கும், அவ்வத்தியந்தா பாவத்தின் பிரதி யோகித்தன்மை (எதிர் மறைத்தன்மை) அக்கடத்தின்கண்ணே யிருக்கும். ஆகையினால் அக்கடம் தேசத்தாலாக்கிய பரிச்சேத முடையதாம். ஆண்டு வேதாந்த சித்தாந்

தத்தின்கண் எப்பதார்த்தம் காலத்தால் ஆக்கிய பரிச்சேத முடையதாமோ, அப் பதார்த்தம் நியமமாய்த் தேசத்தாலாக்கிய பரிச்சேத முடையதுமாம்; ஆகை யினால், காலத்தாலாக்கிய பரிச்சேதத்தைக் கவர்தலினாலேயே தேசத்தா லாக்கிய பரிச்சேதத்தைக் கவர்தலுமாம், அத்தேசத்தாலாக்கிய பரிச்சேதத்தை வேறாய்க் கவர்தல் சம்பவியாது. ஆயினும் நையாயிகர் பிருதுவி, ஜலம், தேயு, வாயு என்னும் நான்கின் பரமாணுக்களையும், மனத்தையும், மூர்த்த திரவியமென வும், நித்தியமெனவும் அங்கீகரித்துளார். ஆகையினால், அந்நையாயிகர் அந்தப் பரமாணுக்களிடத்தும், மனத்தின்கண்ணும் கேவலம் தேசகாலத்தாலாக்கிய பரிச்சேதத்தையே அங்கீகாரம் செய்துளார், காலத்தாலாக்கிய பரிச்சேதத்தை யங்கீகரித்திலர். ஆகையால் ஈண்டுக் காலத்தாலாக்கிய பரிச்சேதத்தினும் தேசத்தாலாக்கிய பரிச்சேதம் வேறாய்க் கவரப்பட்டுளது. சஜாதீய, விஜா தீய, சுவகதபேத மென்னும் மூன்றையும் வஸ்து பரிச்சேத மென்பர். ஒரு தருவிற்கு மற்றொரு தருவினின்றும் உண்டாம் பேதத்தைச் சஜாதீய பேத மென்பர். அத்தருவிற்குக் கற்களினின்றும் உண்டாம் பேதத்தை விஜாதீய பேதமென்பர். அத்தருவிற்குத் தனது இலை, மலர், பலம் முதலியவற்றினின் றும் உண்டாம் பேதத்தைச் சுவகத பேதமென்பர். அல்லது, (1) ஜீவேஸ்வ வர்களின் பேதம். (2) ஜீவஜகத்தின் பேதம். (3) ஜீவர்களின் பரஸ்பரபேதம். (4) ஈஸ்வர ஜகத்தின் பேதம். (5) ஜகத்தின் பரஸ்பரபேதம். இவ்வைந்து வகையாய பேதத்தின் பெயர் வஸ்து பரிச்சேதமாம். வேதாந்த சித்தாந்தத் தின்கண் எப்பொருள் காலத்தாலாக்கிய பரிச்சேத முடையதும், தேசத்தா லாக்கிய பரிச்சேத முடையதுமாமோ, அப்பொருள் நியமமாய் வஸ்து பரிச்சேத முடையதுமாம். ஆகையினால் காலத்தாலாக்கிய தேசத்தாலாக்கிய பரிச்சே தங்களைக் கவர்தலினாலே வஸ்துவாலாக்கிய பரிச்சேத்தத்தைக் கவர்தலுமாம், அவ்வஸ்துவாலாக்கிய பரிச்சேதத்தை வேறாய்க்கவர்தல் உசிதமன்று மாயினும், நையாயிகர் மதத்தில் ஆகாசம், காலம், திசை யென்னும் மூன்றும் நித்தியங் களாம் அங்ஙனமே விபுக்களாம். ஆகையினால் அவ்வாகாசாதிகளின்கண் அந்நை யாயிகர் காலத்தாலாக்கிய பரிச்சேதத்தையும் தேசத்தாலாக்கிய பரிச்சேதத் தையும் உடன்படுகின்றாரில்லை; ஆனால் அவ்வாகாசாதிகளிடத்தே அந்நையாயிகர் வஸ்து பரிச்சேதமோ அங்கீகரித்துளார். ஆதலின் காலத்தாலாக்கிய பரிச்சே தம் தேசத்தாலாக்கிய பரிச்சேதம் என்னும் இரண்டினும் வஸ்துவாலாக்கிய பரிச்சேதம் வேறாய்க் கவரலாயது. இன்னணம் மூப்பரிச் சேதங்களையும் உடை யனவாதலின், அசத்துருவ சிதாஷ்ணதிகளை யுடைய, சர்வப் பிரபஞ்சங்கட் கும் சத்தைவடிவ பாவம் சம்பவியாது. ஈண்டுச் சத்தைச் சத்தத்தால் மூப் பரிச்சேத மற்ற தன்மையதாய பாரமார்த்திகத் தன்மை யதைக் கவர்க. கடத் தன்மையும், கடத்தன்மையின்மையும் ஆய இரண்டு தர்மங்களும் பரஸ்பரம் விரோத முடையன வாதலின் ஒரு நிலைக்களத்தின்கண் ஒருகாலுமிரா. அங்ங னமே பரிச்சின்னத் தன்மைவடிவ சத்துவமும், அபரிச்சின்னத் தன்மைவடிவ சத்துவமும் ஆய இரண்டு தர்மங்களும் பரஸ்பரம் விரோதிகளாதலின் ஒரு நிலைக்களத்தின்கண் ஒருகாலுமிரா. கருத்திதுவாம்:—அனன்மவடிவ எத் தனைத் திருசியப் பிரபஞ்ச மூளவோ அவை யாண்டுந் தொடர்ந்து நிற்பவன்றும். ஆகையால், ஒருகாலத்தே ஒரு தேயத்தே ஒரு வத்துவின்கண் அத்திருசியப் பிரபஞ்சத்திற்கு நிஷேதியாமை யுண்டாகாது; மற்றோர், அதற்கு எல்லாத் தேசகால வத்துவின்கண்ணும் நிஷேதமேயாம். கடத்திற்குத் தனது உற்பத்தி யின் முன்னரும், நாசத்தின் பின்னரும், தனது நிலைக்களத்தை யொழித்துப் பிற வெல்லா விடங்களிலும், படமுதலிய வஸ்துக்களிடத்தும், கடமின்றென்னும் நிஷேதமேயாம். சத்வஸ்துவோ யாண்டுந் தொடர்ந்து நிற்பதாம்; ஆகையினால்

சத்வஸ்துவிற்கு எக்காலத்திலும், எத்தேயத்திலும், எவ்வஸ்துவிலும் ஒருகாலும் நிஷேத முண்டாவதில்லை. ஆகையால், ஒரே இரஜ்ஜுவின்கண் தோற்றுநின்ற சர்ப்பம், தண்டம், ஜலதாரை, மாலை முதலியவற்றில் அந்த இரஜ்ஜுவானது இது சர்ப்பம், இது தண்டம், என இது வென்னும் வடிவத்தால் தொடர்ந்து பிரதீதியாம். ஆகையினால் அந்த இரஜ்ஜுவானது அக்கற்பித சர்ப்பதண்டாதிகளிடத்தே தொடர்ந்திருப்பதாம், அச்சர்ப்பத் தோற்றத்தில் தண்டத் தோற்ற முண்டாவதில்லை. அத்தண்டத் தோற்றத்தில் சர்ப்பத்தோற்ற முண்டாவதில்லை. ஆகையால், அக்கற்பித சர்ப்ப தண்டாதிகள் பரஸ்பரம் வியபிசாரியாயிருத்தலின் தொடர்ந் திருப்பனவன்றும். அதனாலே அத்தொடர்ந்திராச் சர்ப்பதண்டாதிகள் அத்தொடர்ந்திருக்கும் இரஜ்ஜுவின்கண்ணே கற்பிதமாம். அங்ஙனமே கடமிருக்கின்றது, படமிருக்கின்றது என எல்லாவஸ்துக்களிலும் சத்வஸ்துவே தொடர்ந்திலங்கும்; அதனால் அச்சத்வஸ்துயாண்டுந் தொடர்ந்திருப்பதாம். கடம் படமன்று, படங்கடமன்று எனக் கடபடாதி பதார்த்தங்கள் பரஸ்பரம் வியபிசாரியாதலின் தொடர்ந்திருப்பன வன்றும். ஆகையால், இத்தொடர்ந்திராக் கடபடாதிப் பிரபஞ்சம் தொடர்ந்திருக்கும் சத்வஸ்துவின்கண்ணே கற்பிதமாம்.

சங்கை :—ஈறை பகவன்! தொடர்ந்திருக்குந் தன்மையற்ற வியபிசாரி வஸ்துவைக் கற்பிதமென உடன்படின் சத்வஸ்துவும் கற்பிதமாம். என்னை? அச்சத்வஸ்துவும், மூபற்கோடு, மலடிமைந்தன் முதலிய துச்சபதார்த்தங்களினின்றும் நீங்கியிருத்தலின் பிறழ்ச்சியுடையதே தாமன்றோ? என அர்ச்சுனன் சங்கிப்ப ஸ்ரீ பகவான் உத்தர மருளிச் செய்கின்றார் :—

சமாதானம் :—நாஹாவொவிஉயிதவ்வதஃ உதி. ஈறை அர்ச்சுன! சத்தாய நிலைக்களத்தின்கண் இருப்பதாய தேசத்தின் பிரதீயோகித் தன்மையின் பெயரே வஸ்து பரிச்சேதமாம். கடாதிய சத்வஸ்துவின்கண் இராநின்ற படத்தின் தேச எதிர்மறைத்தன்மை படத்தின்கண்ணுளது. இதுவே அப்படத்தின்கண்ணே வஸ்து பரிச்சேதமாம். மூபற்கோடு மலடிமைந்தன் முதலான அசத்பதார்த்தங்களில் சத்தாயதத்தன்மையின்றும்; ஆகையால், அம்மூபற்கோடு முதலிய அசத்பதார்த்தங்களினின்றும் சத்வஸ்துவின் தேசத்தை அங்கீகரித்திருப்பினும், அச்சத்வஸ்துவின்கண் வஸ்து பரிச்சேதத்தின் அடையண்டாகமாட்டாது. அன்றியும், ஸ்வப்பிரகாசநித்திய விபுரூப ஒரே சத்வஸ்துயாண்டும் வியாபகமாம்; ஆகையால், அச்சத்வஸ்துவின்கண் எச்சத்தியபத்தியின் தேசமும் சம்பவியாது. எனினின், கடமிருக்கின்றது, படமிருக்கின்றது என்பவை முதலிய பிரதீதிகள் யாவருக்கு முண்டாகின்றன; ஆதலின் சத்வஸ்துவின்கண்ணே கடாதி பதார்த்தங்களில் இராநின்ற தேசப்பிரதியோகித்தன்மை சம்பவியாது. இத்தகைய தேசகால வஸ்து பரிச்சேதமற்ற சத்வஸ்துவிற்குத் தேசகால வஸ்து வாக்கிய பரிச்சின்னத்தன்மை வடிவ அபாவம் சம்பவியாது. எனினின், எங்ஙனம் கடத்தன்மை, கடத்தன்மையினின்மை யென்னும் இவ்விரண்டு தர்மங்களுஞ் பரஸ்பரம் விரோதிகளாயிருத்தலின், ஓரதிகரணத்தின்கண் இராவோ; அங்ஙனம், பரிச்சின்னத்தன்மை, அபரிச்சின்னத்தன்மை என்னும் இவ்விரண்டு தர்மங்களுஞ் பரஸ்பரம் விரோதிகளாதலின் ஓரதிகரணத்தின்கண் இரா.

எதன்கண் தேசகாலவஸ்து பரிச்சேதத்தின் நிஷேதம் செய்யப்படுமோ, அத்தகைய ஒரு சத்வஸ்துவேயின்றும். மற்றோர், சத்தை யென்பது ஒரு பரஜாதியாம், அச்சத்தா ஜாதி திரவியம், குணம், கர்மம் என்னும் மூன்று பதார்த்தங்களிலோ, சமவாய சம்பந்தத்தாலிருக்கும், அத்திரவியாதிகளில் இரா

நின்ற சாமானியம், விசேஷம், சமவாயம் என்னும் மூன்று பதார்த்தங்களில் அச் சத்தா ஜாதி சமநிலைக்களத்திலிருத்தற்றன்மைச் சம்பந்தத்தாலிருக்கும். இக் காரணத்தாலே அந்தத் திரவியாதி ஆறு பதார்த்தங்களில் திரவியம் இருக்கின் றது, குணமிருக்கின்றது என்பனவாதி இருப்பு வியவகாரமுண்டாம். ஆகையால், உற்பத்தியின்முன்னர் நிகழாநின்ற முன்னின்மையின் எதிர்மறையாதலின், அசத் துருவமாங் கடாதிகட்கே குலாலதண்டசக்கிராதி காரணங்களின் வியாபாரத்தால் சத்வமுண்டாம்; அச்சத்துருவ கடாதிகட்கே மண்முதலிய காரணங்களின்நாசத் தால் அபாவமுமுண்டாம். ஆகையினால், அசத்பதார்த்தத்திற்குப் *பாவமின்றும்; சத்வஸ்துவிற்கு அபாவமின்றும், எனத் தாங்கள் திருவாய்மலர்ந்தருளிய வசனம் சம்பவியாதென்னும் அர்ச்சுனனது சங்கைக்கு ஸ்ரீ பகவான் உத்தரமருளிச் செய் கின்றார். 'உஹயொஸ்வீதி' வேற அர்ச்சுன! சத்வஸ்துவின் அசத்வஸ்துவின் அந் தத்தை, அஃதாவது:—யாது சத்வஸ்துவாமோ, அது சர்வகாலத்திலும் சத்வஸ் துவேயாம், ஒருகாலும் அசத்தாகாது; யாது அசத்வஸ்துவாமோ, அஃதெப்போ தும் அசத்தேயாம், ஒருகாலும் சத்தாகாது. இவ்வகையாய நியமரூப மரியாதை யாகிய அந்தத்தை, வஸ்துவின் உண்மையுருவுணர்ந்த பிரஹ்ம வேத்தாக்களே விசாரவாயிலாய்ச் சுருதி ஸ்மிருதி யுக்திகளால் துணிந்துளார். குதார்க்கிகராகிய நையாயிகரோ, அம்மரியாதையாகிய அந்தத்தைத் துணியாரென்க. ஈண்டுச்சுருதி ஸ்மிருதிப் பிரமாணங்களினின்றும் விருத்தமாய தர்க்கம் குதர்க்கமெனப்படும். அக்குதர்க்கங்களைக் கூறும் வாதியர் குதார்க்கிகர் எனப்படுவர். அத்தகைய குதார்க்கிக புருஷரிடத்தே முற்புகன்ற விபரீத மயல் சம்பவிக்கும். ஈண்டுச் சுலோகத்தின்கண்ணுள்ள 'சுஂதஹ்ஹ' என்னும் வசனத்தின்கண் இராநின்ற 'தா' என்னும் சப்தத்திற்கு நிச்சயரூபத் தேதற்றம் பொருளாம். அந்த 'தா' என் னும் சப்தத்தை "சுஂதஃ" என்னும் சப்தத்தோடு கொண்டுகூட்டின், இப்பொரு ளுண்டாம்:—சத்தாய வஸ்துச் சத்தாய வஸ்துவேயாம். அசத்தாய வஸ்து அசத்தாய வஸ்துவேயாம். இவ்வண்ணம் சத்து அசத்துக்களின் நியமத்தையே தத்துவதரிசிகளாய புருஷர்கள் கண்டுளார்; அந்தச்சத்து அசத்து வஸ்துக்களின் அநியமத்தைக் கண்டிலர். அந்த "தா" என்னும் சப்தத்தை "தஸ்வுபரி-ஃஹிஃ" என்னும் பதத்தோடு அன்வயம் செய்யின், இப்பொருள் துணியப்பெறும்:—தத் துவதரிசிகளே அந்தச்சத்து அசத்துக்களின் நியமத்தைக் கண்டுளார். அதத் துவதரிசிகள் அந்நியமத்தைக் கண்டிலர்.

சு-ம். "ஸுஜெவஸுளஜ்யூஉஜ்ர சூஸீஜெகுஜெவாஜீவதீயழ."
"ஜெதஜூதூஜ்யஜிஜ்ஂ ஸவ-ஃஂததஸுஹ்யஂஸு சூதூததூஉஸிஜெவதகெகெதா."

(பொ-ள்.) வேற பிரியதரிசனனே! காணப்பட்ட இப்பிரபஞ்சமானது தனது உற்பத்தியின் முன்னர் சத்வஸ்துரூபமாயே இருந்தது, அச்சத்வஸ்து ஏக அத்வி தீயரூபமாகவேயிருந்தது. இவ்வண்ணம், சாந்தோக்கிய உபநிஷத்தின் ஆறுவதத் தியாய முதலிற்கூறி, அதன்முடிவிலும் இது கூறப்பட்டுளது:—இவ்விவல்லாவுலகும் ஆத்மஸ்வரூபமேயாம், அவ்வான்மாவே சத்தியரூபமாம். வேற சுவேதகேதுவே! அச்சத்வஸ்துவாகிய ஆன்மாவே நீயாயிருக்கின்றாய். இச்சுருதியானது சஜாதீய விஜாதீய சுவகதபேதமற்ற ஏக அத்விதீய வஸ்துவையே கூறுகின்றது.

"வாஆரஂஹணஂ விகாரொநாஉயெயஂ ஏதிகெதீயவஸுதீயஂ."

(பொ-ள்.) கடசராவாதி விகாரங்கள் கேவலம் வாக்குமாத்திரமாதலின் மித் தையாம். அக்கடசராவாதி விகாரங்களின் காரணரூப மண்ணே சத்தியமாம்.

---

* பாவம்=இருப்பு.

இச்சுருதியானது, பரஸ்பரம் வியபிசாரிரூப கடசராவாதி விகாரங்களிடத்தே மித்தியாத்தன்மையையே புகல்கின்றது. அங்ஙனமே,

சுஹெகஹளஜ்ய ப்ரஂமெகாவொஜ்யுஜ்நிஅ சுஜ்ஹ:
ஹளஜ்யப்ரஂமெக தெஜொஜ்யுஜ்நிஅ தெஜஹாஹள
ஜ்யப்ரஂமெக ஸஜ்யு ஜ்நிஅஹஜ்யுர: ஹளஜ்யோ:
ஹவ:ர: வ்ரஜர: ஹஜாயதகர: ஹதகிஷ்யா.” பொருளிதுவாம்.

(பொ-ள்.) வேற பிரியதரிசன சுவேதகேதுவே! இப்பிருதிவி ரூபகாரியங் கொண்டு நீ ஜலரூபகாரணத்தை நிச்சயம்செய்தி. அங்ஙனமே ஜலரூபகாரியங் கொண்டு நீ தேயுரூபகாரணத்தை நிச்சயம்செய்தி. அங்ஙனமே தேயுரூபகாரியங்கொண்டு நீ சத்வஸ்து ரூபகாரணத்தை நிச்சயம்செய்தி. வேற சுவேதகேதுவே! இவ்வெல்லாப் பிரஜைகளுநம், அந்தச் சத்வஸ்துவினின்றுமே உண்டாயினர். அங்ஙனமே, அந்தச் சத்வஸ்துவின்கண்ணே யிருப்பர். அங்ஙனமே அச்சத்வஸ்துவின்கண்ணே இலயத்தை யடைவர். இச்சுருதியானது, அச்சத்வஸ்துவின்கண்ணே பிருதிவியாதி சர்வவிகாரங்களின் கற்பிதத்தன்மையைக் கூறியது. “ஹதெவஹளஜ்யேஜமர ரூஸீக” என்பவாதி சர்வ சுருதிகளின் பொருளை ஸ்ரீ ஆன்மபுராணத்தின் பன்னிரண்டாவதத்தியாயத்தின் கண்ணே யாம் விஸ்தாரமாய்க் கூறியிருக்கின்றோம். அல்லது, பொருளிருக்கின்றது, பண்பிருக்கின்றது, என்பனவாதித் தோற்றத்திற்கு விஷயமாயசத்தை பரஜாதிரூபமாம் எனையாயிர்கூறுவர்; அவர் கூற்று மூற்றினும் மூரணும். எனினின், இருக்கின்றது, இருக்கின்றது என்னும் சத்தையை விஷயஞ் செய்யும் தோற்றம் பொருள் முதலிய எல்லாப் பதார்த்த மாத்திரங்களிடத்தும் சமானமாயிருக்கும். கேவலம், பொருள், பண்பு, வினை என்னும் மூன்றுபதார்த்தங்களிடத்தே மாத்திரம் அத்தோற்ற மூண்டாவதின்றும். ஆகையால், இருக்கின்றது, இருக்கின்றது என்னும் தோற்றத்தால், பொருள், பண்பு, வினை மாத்திரத்தில் இராகின்ற சத்தாஜாதியின் கற்பனையுண்டாகாது. ஒருவஸ்துவத்தோற்றம் ஒருவஸ்து விஷயத்தானே துணியப்பெறும். அவ்வொருவஸ்துவத் தோற்றத்தின்கண் சம்பந்தத்தின் வேற்றுமையையும், வஸ்துவத்தின் வேற்றுமையையும் கற்பனைசெய்தல் தகுதியன்றும். அனேக கடங்களிடத்தே இதுகுடம், இதுகுடம் என்னும் ஒருவஸ்துவத்தோற்றம் குடத்தன்மைவஸ்து ஒருவஸ்து விஷயத்தானே துணிதல்கூடும். ஆகையால் கடவஸ்துவங்களிடத்தே கடத்தன்மைத் தன்மத்தின் சம்பந்த வேற்றுமையைக் கற்பித்தல் தகுதியற்றதாம். அதுபோல, இருக்கின்றது, இருக்கின்றது என்னும் ஒருவஸ்துவத்தோற்றம், பொருள், பண்பு, வினை யென்னும் மூன்றுபதார்த்தங்களிடத்தே சமவாய சம்பந்த விசிஷ்ட சத்தையை விஷயம்செய்யும். பொதுமை, சிறப்பு, சமவாயம், என்னும் மூன்றுபதார்த்தங்களிடத்தே ஒரு நிலைக்களத்திருக்குந் தன்மைச் சம்பந்தவிசிஷ்ட சத்தையை விஷயஞ்செய்யும். என இங்ஙனம் சம்பந்தத்தின் பேதகற்பனை செய்தல் தகுதியன்றும்; விஷயத்தின் ஒரு வஸ்துவத்தன்மை யின்றியும், ஒருகால் தோற்றத்தின் ஒரு வஸ்துவத்தன்மையை அங்கீகரிக்கின், உமது மதத்தே எச்சாதியின் சித்தியும் உண்டாகாது. ஆகையால், இப்பொருள் துணியப்பெறும். நையாயிகர் அங்கீகரித்த சத்தா ஜாதியானது கடமிருக்கின்றது, படமிருக்கின்றது என்பதாதி இருப்பு வியவகாரத்தின் சாதகமன்றும். மற்றே, அறியப்பட்ட அறியப்படாத அவஸ்தைகளை யொளிர்விப்பதும், தானே யொளிருவதுமாய ஓரே சத்வஸ்துவானது தனது தாதாத்மிய அத்தியாசத்தால் எல்லாப் பதார்த்தங்களிலும் இருக்கின்றது, இருக்கின்றது என்னும் சத்வியவகாரத்தின்

சாதகமாம். அல்லது, இருக்கின்றது கடம், இருக்கின்றது படம் என்பதாதித் தோற்றம்; கடபடாதி வடிவங்களிடத்தே சத்தைவடிவத்தின் அபேதமாத்திரத்தை விஷயஞ்செய்யும். அக்கடபடாதி வடிவங்களிடத்தே சத்தா ஜாதியின் சமவாயித்தன்மையை அத்தோற்றம் விஷயஞ்செய்யாது. ஏனெனின், அபேதத்தை விஷயஞ்செய்யும் தோற்றத்திற்குப் பேதம்பொருந்திய சமவாய சம்பந்தத்தால் நிர்வாகமுண்டாகமாட்டாது. இங்ஙனம், பொருளிருக்கின்றது, பண்பிருக்கின்றது என்பதாதித் தோற்றத்தால் அவ்வொரு சத்வஸ்துவிற்குப் பொருண்முதலிய எல்லாப் பதார்த்தங்களோடும் அபேதம் துணியப்பெறவே, அவ்வொரு சத்வஸ்துவோடு அபின்னமாதலின், அப்பொருள் பண்பு முதலிய பதார்த்தங்கட்குப் பரஸ்பரமும், பேதம் துணியப்பெறமாட்டாது. அப்பொருள் முதலியவற்றின்பேதம் துணியப்பெறுதாகவே, அப்பொருள் பண்புமுதலிய தருமிகளிடத்தே சத்தாஜாதி ரூபதர்மமும் கற்பிக்க முடியாததாம். ஆகையால், சத்வஸ்து ரூப தருமியின்கண் பொருள் பண்பு முதலிய பதார்த்தங்கட்கு அபேதம் அங்கீகரித்தலே தகுதியாம்; அந்த ஜடசேதனங்களின் அபேதம் உண்மையாயோ சம்பவியாது. மற்றோர், அத்தியாசத்தால் உண்டாம் அபேதமே சம்பவிக்கும். அல்லது, நையாயிகர் விபுரூபக்கால பதார்த்தத்திற்குச் சர்வ பதார்த்தங்களோடு சம்பந்தம் அங்கீகரித்துளார்; அக்கால சம்பந்தத்தைக் கவர்ந்தே கடமிருக்கின்றது, படமிருக்கின்றது என்பதாதி சர்வ வியவகாரமும் சம்பவிக்கும். அக்கால சம்பந்தத்தினும் வேறாய்ச் சத்தா ஜாதிரூப பதார்த்தத்தை யுடன்படுவதில் யாதொரு பிரமாணமுமின்றும்; ஆகையால், இப்பொருள் துணியப்பெறும்:—ஒரு தேசத்தில், ஒருகாலத்தில் கடமல்லாதனவாய படம் முதலிய பதார்த்தங்கட்கு, மற்றிடத்தே, மற்ற காலத்தே கடரூபத்தன்மை யுண்டாகாது. ஓரிடத்தே ஒரு காலத்தே கடரூபமாய் இராநின்ற கடத்திற்கு, மற்றிடத்தே, மற்ற காலத்தே, அகடரூபத்தன்மையை சாகூதாத் இந்திரராலும் துணியப்பெறுத்த முடியாதாம். அங்ஙனமே ஓரிடத்தே, ஒருகாலத்தே அசத்துரூபமாய் இராநின்ற பதார்த்தத்திற்கு மற்றிடத்தே, மற்றகாலத்தே உண்மை துணியப்பெறமாட்டாது. அங்ஙனமே, ஓரிடத்தே, ஒரு காலத்தே சத்துரூபமாய் இராநின்ற பதார்த்தத்திற்கு, மற்றிடத்தே, மற்ற காலத்தே அசத்துத்தன்மை துணியப்பெறமுடியாது. ஆகையால், சத்து, அசத்து என்னுமிரண்டிற்கும் மாறுதவடிவமே உடன்படல் தகுதியாம். ஆகையால், ஓர் சத்வஸ்து மாயையாற் கற்பிக்கப்பட்ட அசத்தை நீக்கி மோகூத ரூப அமிர்தத்தை அடைவிக்க யோக்கியமாம். அங்ஙனமே சத்வஸ்து மாத்திரத்தின் திருஷ்டியால் முற்புகன்ற திதிகூதயும் சம்பவிக்கும். (16)

(அ-கை.) ஹே பகவன்! முற்கூறியருளிய தேசகாலவஸ்து பரிச்சேதமற்ற சத்வஸ்துவானது ஞானரூப விளக்கத்தினின்றும் பின்னமா? அபின்னமா? அவற்றுள், முதலாவது பகூதம் சம்பவியாது. ஏனெனின், அந்தச் சத்வஸ்துவை ஞானரூப விளக்கத்தினின்றும் பின்னமென உடன்படின், அது பேதரூப வஸ்துபரிச்சேத முடையதாம். அத்தோஷத்தை நீக்கும்பொருட்டு, அவ்வஸ்துவை ஞானரூப விளக்கத்தினின்றும் அபின்னமா யொப்பும் இரண்டாவது பகூதத்தை உடன்பட வேண்டிவரும், வரவே இது சர்ப்பம் என்னும் தோற்றத்தால் ரஜ்ஜுவின்கண் உண்டாம் சர்ப்பத்தின் அபேதம் உண்மையாயின்றும்; மற்றோர், அது அத்தியாசத்தால் உண்டாயதாம். அங்ஙனமே சத்வஸ்துவின்கண் ஞானரூப விளக்கத்திற்கு அத்தியாசத்தால் பெறும் அபேதத்தை அங்கீகரிக்கின், அந்த ஞானவிளக்கத்தினின்றும் உண்மையாய்ப் பின்னமாய அச்சத்வஸ்து, கடாதி பதார்த்தங்களைப்போல ஜடமாம். ஆகையால், அச்சடத்தன்மைத் தோஷத்தை நீக்கும்பொருட்டு, அச்சத்வஸ்துவின்கண் ஞானரூப விளக்கத்திற்கு வாஸ்தவ

அபேதத்தை அங்கீகரிக்கவேண்டிவரும். அங்கீகரிப்பின் அச்சத்வஸ்துவின்கண் மீண்டும் தேச கால வஸ்து பரிச்சேதப் பிராப்தி உண்டாம். ஏனெனின், என்னிடத்தே முன்னரிருந்த கடஜ்ஞானமழிந்து, இப்போது படஜ்ஞானமுண்டாயிருக்கிறது என்னுந் தோற்றம் எல்லாருக்கும் உண்டாம். அத்தோற்றத்தால் ஜ்ஞானரூப விளக்கத்திற்குத் தோற்றமும் அழிவும் துணியப்பெறும். யான் கடத்தை புணர்கின்றேன் என்னுந் தோற்றமும் யாவருக்கும் உண்டாகின்றது; இத்தோற்றத்தால் யான் என்னும் சப்தார்த்தத்தின்கண் அந்த ஜ்ஞானரூப விளக்கத்திற்கு ஆச்ரயத்தன்மை சித்தமாம். கடத்தின்கண் அந்த ஜ்ஞானரூப விளக்கத்திற்கு விஷயத்தன்மை சித்தமாம். ஆகையால், அந்த ஜ்ஞானரூப விளக்கம் தேச கால வஸ்து பரிச்சேதமுடையதாயே துணியப்பெறும். அத்தகைய பரிச்சின்ன ஜ்ஞானரூப விளக்கத்தோடு அச்சத் வஸ்துவிற்கு உண்மையாய் அபேதமாமேல், அச்சத்வஸ்துவின்கண்ணும் அத்தேச கால வஸ்து பரிச்சேத அடைவு உண்டாம். ஆகையால், அச்சத்வஸ்து, தேசகால வஸ்து பரிச்சேதமற்றதெனத் தாங்கள் கூறியருளியது பொருந்தாது. என்று அர்ச்சுனன் சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் அருளிச் செய்கின்றார் :—

சு-ம். ஸவிகாபரி தா தரிதியெக வை ழிஷ்டம்.
விகாபஸ்ய யஸ்யாஸ்ய கபரித்தா ஜ்ஞா ழதி ॥

ப-ம். 6 ஸவிகாபரி 7 தா 5 தக் 8 விதி 1 யெக 3 வை ழ 2 ஷ்ட 4 தம் 11
விகாபம் 10 ஸ்யாயஸ்ய 9 ஸாஸ்ய 14 க 12 கபரிக் 13 கா ழ் 15 ஜ்ஞா ழதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எந்தச் சுத்தரூப விளக்கம் இவ்விவல்லாத் திருஷியப் பிரபஞ்சத்தையும் வியாபித்து நிற்குமோ, அச்சுத்தரூப விளக்கத்தைப் பரிச்சேத ரூப விநாசமற்றதென்றே நீ அறிந்தி. ஆதலின், இந்த அபரிச்சின்ன சுத்தரூப விளக்கத்திற்குப் பரிச்சின்னத் தன்மைவடிவ விநாசத்தை எவரும் செய்ய வல்லரல்லர். (17)

(வி-ம்.) தேசத்தாலாம் பரிச்சேதம், காலத்தாலாம் பரிச்சேதம், வஸ்துவாலாம் பரிச்சேதம் என்னும் இம்மூன்றிற்கும் விநாசமெனப் பெயராம். அந்த விநாசத்தை உடையது யாதோ அது விநாசியெனப்படும். அத்தகையது பரிச்சின்ன பதார்த்தமாம். அதனின் வேறாயது அவிநாசியெனப்படும். படமீவ மூவகையாய பரிச்சேதமற்ற வஸ்து அவிநாசியாயதென்றறிந்துகொள்க. ஹே அர்ச்சுன! அந்தச் சத்வஸ்துரூப விளக்கத்தை நீ இவ்வகையாய அவிநாசியென அறிந்துகொள்ளுதி. அந்தச் சத்வஸ்துரூப விளக்கமானது எங்ஙனமிருக்கின்றதென்னின், அந்த வக அத்விதீய நித்திய விபுரூப விளக்கமானது, சுயமாக இருப்பு விளக்கங்களற்ற இவ்விவல்லாத் திருஷியப்பிரபஞ்சத்தையும் வியாபித்திருக்கின்றது. ரஜ்ஜுரூப அதிஷ்டானமானதனது இருவென்னும் அம்சத்தால் கற்பித, சர்ப்ப, தண்டஜலதாரை முதலியவற்றை வியாபித்து நிற்பதேபோல, சத்வஸ்துரூப விளக்கமும் தனது இருப்புவிளக்கங்களின் அத்தியாசத்தால் இவ்விவல்லாத் திருஷியப்பிரபஞ்சத்தையும் வியாபித்து நிற்கும்; அத்தகைய சத்வஸ்துரூப விளக்கத்தை நீ பரிச்சின்னத் தன்மைவடிவ விநாசமற்றதாயே அறிந்தி. ஏனெனின், பரிச்சேதரூப நாசமற்றதும், எப்போதும் அபாதரூபமாயதும், யாண்டும் நிறைந்ததும், சத்துரூப விளக்கமாம். அச்சத்வஸ்துரூப விளக்கத்திற்குப் பரிச்சின்னத் தன்மைவடிவ விநாசத்தின் ஆச்ரயத்தையேனும், விஷயத்தையேனும், இந்திரியார்த்தங்களின் சம்பந்தரூப வ்யாபாரத்தையேனும் செய்ய எவர்க்கும் சமர்த்தின்றாம். என்னை? கற்பித வஸ்துவானது, அகற்பித வஸ்துவின் பரிச்சேதத்தைச் செய்யமாட்டா

தன்றே? இரஜ்ஜுவின்கண்ணே கற்பிதமாய சர்ப்பதண்டாதிகள், அகற்பித ரஜ்ஜுவின் பரிச்சேதத்தை எங்ஙனம் செய்யமுடியார்வோ? அங்ஙனம் சத்வஸ்துரூப விளக்கத்தின்கண்ணே கற்பிதமாய விஷய இந்திரியாதிகள், அக்கற்பிதமற்ற விளக்கத்தின் பரிச்சேதத்தைச் செய்யமுடியா. வாதியானவன் சத்வஸ்துரூப விளக்கத்தின்கண்ணே பரிச்சின்னத்தன்மையின் ஆரோபத்தை அங்கீகரிக்கின், உபாதியாலுற்ற அந்தப் பரிச்சின்னத்தன்மை நமக்கும் அங்கீகாரமாம். ஆனால், அந்த விளக்கத்தின்பால் உண்மையாய்ப் பரிச்சின்னத்தன்மையின்றும். அல்லது, யான் கடத்தை உணர்கின்றேன் என்னும் ஞானத்தின்கண் அகங்காரமோ ஆசிரயரூபமாய்த் தோற்றும். கடமோ விஷயரூபமாய்த் தோற்றும். உற்பத்தி நாசமுடைய அந்தக்கரண விருத்தியோ, யாண்டும் வியாபகமாயிராநின்ற சத்துருவ விளக்கத்தின் அபிவியஞ்சகத்தன்மை ரூபமாய்த் தோற்றும். அந்த அபிவியஞ்சக விருத்திரூப உபாதியின் உற்பத்தி நாசங்களாலேயே அந்த விருத்தி உபஹித சத்துருவ விளக்கத்தின்கண் உற்பத்தி நாசத்தோற்றம் உண்டாம்; உண்மையாய் அச்சத்துருவ விளக்கத்திற்கு உற்பத்தி நாசங்களில்லை. அல்லது, ஆன்ம மனங்களின் சையோகம் ஞானத்தின் காரணமாமென நையாயிகரும் அங்கீகரித்துளார். அச்சையோகரூப உபாதியின் உற்பத்தி நாசத்தாலே அச்சையோக உபஹித சத்துருவ விளக்கத்தின்கண் உற்பத்தி நாசங்கள் தோற்றும். உண்மையாய் அவ்விளக்கத்திற்கு உற்பத்தி நாசங்களின்றும். மீமாம்சகரது மதத்தின்கண் இயல்பாமே உற்பத்தி நாசமற்ற வர்ணவடிவ சப்தத்தில் தொனிரூப உபாதியின் உற்பத்தி நாச ஆரோபம் உண்டாவதேபோலும், நையாயிகரது மதத்தின்கண் உண்மையாய் உற்பத்தி நாசமற்ற ஆகாசத்தின்பால் கடரூப உபாதியின் உற்பத்தி நாச ஆரோபம் உண்டாவதேபோலும், வேதாந்த சித்தாந்தத்தின்கண்ணும் உண்மையாய் உற்பத்தி நாசமற்ற ஞானரூப விளக்கத்தின் பால் அந்தக்கரண விருத்திரூப உபாதியின் உற்பத்தி நாச ஆரோபம் உண்டாம். அல்லது, ஆன்ம மன சையோகரூப உபாதியின் உற்பத்தி நாசம் அவ்விளக்கத்தின்கண் ஆரோபமாம், உண்மையாய் அந்தச் சத்வஸ்துரூப விளக்கத்திற்கு உற்பத்தி நாசம் உண்டாகாது. அந்தச் சத்வஸ்துரூப விளக்கத்தின்கண் இவ்வகங்காரம் கற்பிதமாம். ஆதலின், அக்கற்பித அகங்காரத்தின் மாட்டு, அவ்விளக்கத்தின் ஆசிரயத் தன்மை சம்பவியாதாம். ஆயினும், அவ்வகங்காரத்தின் விருத்தியோடு அவ்விளக்கத்திற்குத் தாதாத்மிய அத்தியாசம் இருத்தலின், அவ்விருத்தியின் ஆசிரயரூப அகங்காரத்தின் ஆசிரிதமாய் அவ்விளக்கம் புலப்படும். உண்மையாய் அவ்வகங்காரம் அவ்விளக்கத்தின் ஆசிரயமன்றும். ஏனெனின், துயில் அவஸ்தையின்கண் அவ்வகங்காரம் இன்றேனும், அவ்வகங்காரத்தின் சூக்ஷ்மவாசனையோடு கூடிய அஞ்ஞானத்தை ஒளிர்விப்பதாய சைதன்யம் தானே விளங்கும். ஒருகால் துயில் அவஸ்தையின்கண் அச்சைதன்யம் தானே விளங்காதாயின், இது பரியந்தம் யான் சிறிது மாத்திரையும் அறிந்திலேன் என்பதாய அஞ்ஞான விஷய ஸ்மரணம் துயிலினின்றும் எழுந்த புருஷனுக்கு உண்டாகின்றதன்றே? அஃதுண்டாகலாகாது; இவ்வகையாய ஸ்மரணமே யாவருக்கும் உண்டாகின்றதாதலின், இஃதறிந்து கொள்ளலாமன்றே:—துயில் அவஸ்தையின்கண் அஞ்ஞானத்தை ஒளிர்விப்பதாய சைதன்யம் சுயமாகவே விளக்கரூபமாம். அவ்விளக்கரூப அனுபவத்தாலே நனவின்கண் அவ்வஞ்ஞான விஷயக ஸ்மரணமுண்டாம்; அல்லது, கேவலம் நனவின் ஸ்மரணம் பொருந்தாமையாலே துயிலில் சைதன்யரூப விளக்கத்தின் துணிவு உண்டாவதின்றும். மற்றே, சாக்ஷாத் சுருதிப் பிரமாணத்தாலே அந்த ஞானரூப விளக்கத்தின் துணிவுண்டாம். ஆண்டுச்சுருதி:—

ஆ-சு. "யதெதந்தவபாயதிவபாயது வெதத்வஷ்வயம் தவபாயதி

தஹிதுரஷ்டுஷ்டுரவெஷ்வி்ஷ வரிஷ்ரொவொவிஷ்யதெ விநாபிகூவாக"

(போ-ள்.) துயிலின்கண்ணே இவ்வான்ம தேவர் துவைதப் பிரபஞ்சத்தைக் காணுதது, தமது சைதன்யரூப விளக்கத்தின் அபாவத்தால் காண்பதின்றும் என்னும் வார்த்தை யாண்டுஞ் செல்லாது. மற்றேரு, அத்துயிலின்கண் இவ் வான்ம தேவர் தமது சைதன்யரூப விளக்கத்தாற் காணினும், ஆண்டுத் துவைதப் பிரபஞ்சமின்மையின் அதனைக் காண்பதில்லை. ஏனெனின், அந்தத் திருஷ்டாவாய ஆன்மாவின் சொரூபபூத விளக்கரூப திருஷ்டியானது நாசமற்றதாம். ஆதலின், அவ்விளக்கரூப திருஷ்டி எக்காலத்தும் அபாவமாவதின்றும். இச்சுருதியானது துயிலின்கண் ஸ்வப்பிரகாசரூப விளக்கத்தின் இருப்பையும், நித்தியத்தன்மை யையும் கூறுகின்றது. அல்லது, எங்ஙனம் அகங்காராதிகள் ஞானரூப விளக் கத்தின்கண் கற்பிதங்களாமோ, அங்ஙனம் கடாதி விஷயங்களின் அஞ்ஞாத அவஸ்தையை ஒளிர்விக்கும் சத்வஸ்துரூப விளக்கத்தில் அக்கடாதி விஷயங்களும் கற்பிதங்களாம். ஏனெனின், எக்கடத்தை யான் முன்னர் அறிந்திலேனே, அக்கடத்தையே இப்போது யான் அறிந்தேன் என்னும் அனுபவத்தாலே, அக்கடத்தின் அஞ்ஞாத அவஸ்தை துணியப் பெறும். எந்த ஞானம் அஞ் ஞாத வஸ்துவை ஒளிர்விக்குமோ, அந்த ஞானமே பிரமாஞான மெனப்படும். இவ்வண்ணம் அஞ்ஞாத அர்த்தத்தின் ஞாபகத்தன்மைவடிவ பிரமாஞானத்தின் இலக்கணத்தை எல்லா நூலாசிரியரும் உடன்பட்டுளார். இக்காரணத்தாலே நையாயிகரும் எதார்த்த அனுபவம் "பிரமை" என்னும், பிரமை இலக்கணத்தின் கண் முன்னர் அறியப்பட்ட அர்த்தத்தை விஷயஞ் செய்யும் ஸ்மிருதியை நீக்கும் பொருட்டு "அனுபவம்" என்னும் பதத்தைக்கூறியிருக்கின்றனர். ஆண்டுக்கடாதி விஷயங்களிடத்தே இராநின்ற அஞ்ஞாதத்தன்மை (அறியப்படாத தன்மை) நேத் திராதி இந்திரியங்களால் அறியமுடியாதாம். ஏனெனின், அந்த அஞ்ஞாதத்தன் மையை அறிவதில் நேத்திராதி இந்திரியங்கட்குச் சாமர்த்தியமின்றும். அக்கடாதி களின் அஞ்ஞாதத்தன்மை அனுமானப் பிரமாணத்தாலும் அறியமுடியாது. ஏனெ னின், பர்வதத்தின்கண் இராநின்ற அக்கினியை அறிவிப்பது தூமரூப லிங்கமாம். அதுபோல, அவ்வஞ்ஞாதத்தன்மையை அறிவிக்கும் லிங்கம் யாதொன்றுமின்றும். ஆண்டு வாதியானவன், அஞ்ஞாதத் தன்மையின் பெறுதியின்பொருட்டு இவ்வகை யாய அனுமானஞ் செய்வன்; இக்கடம், முன்னர் அறியப்படாததாம்: இப்போது அறியப்படுதலின்; என்னும் இவ்வனுமானத்தாலும் அக்கடத்தின் அஞ்ஞாதத் தன்மைப் பெறுதி உண்டாகாது. ஏனெனின், யாண்டு ஒரே கடத்தின்கண் தடையின்றி, இதுகடம், இதுகடம் என அநேக ஞானங்களுண்டாகின்றனவோ, ஆண்டு முதன்ஞானத்தை யொழித்து, இரண்டாவது மூன்றுவது முதலிய ஞானங் களின் விஷயமாய கடத்தின்கண் இக்காலத்தே அறியப்படுந் தன்மைவடிவ ஹேதுவோ இருக்கின்றது. ஆதலால், முன்னர் அறியப்படாத்தன்மை வடிவ துணி பொருளின்றும். ஏனெனின், அத்தலத்தில் முன் முன் ஞானங்களால் அறியப் பட்ட கடத்தையே பின் பின் ஞானங்கள் விஷயஞ்செய்யும். ஆகையால், துணி பொருளில்லாத கடத்தின்கண் இராநின்ற ஹேது முறை பிறழ்தலை யுடையதாம். அவ்வேதுவால் முன்னர் அறியப்படாத்தன்மை வடிவ துணிபொருளின் பெறுதி உண்டாகாது. அல்லது இப்போதறியப்படுந் தன்மைவடிவ ஹேதுவிற்கு முன் னர் அறியப்படாத்தன்மை வடிவ துணிபொருளினின்றும், வேற்றுமையின் றுணி புண்டாகாது. ஏனெனின், யாது முன்னர் அறியப்படாததாய் இப்போது அறி யப்படுவதாமோ அதனையே இப்போது அறியப்படுவதெனப்படும். தனது துணி

பொருளினின்றும்வேறுகாத ஹேதுவே துணிந்ததைத்துணிதலென்னுந் தோஷத் தோடு கூடியதாம். இக்காரணத்தாலே, அத்துஷ்ட ஹேதுவால் அறியப்படாத் தன்மை வடிவத் துணிபொருட் பெறுதி யுண்டாகமாட்டாது. அல்லது, கடாதி களின் அஞ்ஞாத அவஸ்தை ஞானமின்றி அக்கடாதிகளினிடத்தே தப்மை விஷ யஞ் செய்யும், பிரத்தியக்ஷ ஞானகாரணத்தன்மை கவாமுடியாது. ஏனெனின், எவ்வஸ்துவின்கண் எக்காரியத்தினின்றும் நியமமாய் முன்னிருப்பின் ஞானமுண் டாமோ, அவ்வஸ்துவின்கண் அக்காரிய காரணத்தன்மை கவர்தலாகும். மண்ணின் கண் கடரூபகாரியத்தினின்றும் முன்னிருப்பின் ஞானம் உண்டான பின்னரே, அம்மண்ணின்கண் கடகாரணத்தன்மையின் ஞானம் உண்டாம். முன்னிருப்பின் ஞானமின்றி, காரணத்தன்மையின் ஞானமுண்டாகாது. ஆகையால், அக்கடப் பிரத்தியக்ஷ ஞானத்தின் முன் அக்கட அஞ்ஞாத அவஸ்தை ஞானம் அவசியம் அங்கீகரிக்கவேண்டும். அல்லது, அக்கட அஞ்ஞாத அவஸ்தையின் ஞானம் உண் டாகாதாயின் யான் கடத்தை அறிந்திலேன் என்னும் எல்லாருடைய அனுபவத் திற்கும் விரோதமாம். ஆகையால், இப்பொருள் துணியப்பெற்றது :—அஞ்ஞாத ரூபவிளக்கம், தனது சுயஞ்ஜோதி ரூபத்தால் ஒளிர்வதாய்த் தன்னிடத்தில் கற்பித மாய கடாதி பதார்த்தங்களையும் ஒளிர்விக்கும். ஆகையால், அவ்வஞ்ஞாத ரூப விளக்கத்தின்கண்ணே அக்கடாதி பதார்த்தங்களின் கற்பிதத்தன்மை சித்தமாம். ஒருகால், அவ்வஞ்ஞாத ரூபவிளக்கம் அக்கடாதி பதார்த்தங்களை ஒளிர்வியாதா யின், அக்கடாதி பதார்த்தங்கள் இயல்பாயே ஜடமாதலின், அவற்றின் அஞ்ஞாதத் தன்மையும், அஞ்ஞாதத்தன்மையின் ஞானமும் சித்தமாகா. அந்தச்சத்வஸ்து ரூபவிளக்கத்தின்கண் உள்ள அஞ்ஞாதத்தன்மை தன்னிடத்தில் கற்பித அஞ்ஞா னத்தாலே ஆம். இவ்வார்த்தையை :—“ஸஜ்ஞாநெநாவ்ருதம் ஜ்ஞாநம் தெந ஸுஹ்யந்தி ஜந்தவஃ” என்னும் இவ்வசனத்தால் ஸ்ரீ பகவான் தாமே மேல் அரு ளிச்செய்வர். இத்துணை கூறியதால், அச்சத்வஸ்து ரூபவிளக்கத்தின்கண் விபுத் தன்மை துணியப் பெற்றதாம்.

ஆ-சு. “ஸஹஜ ஸத்ஸ்வரூபாவாம் விஜ்ஞாநவிக்ரஹாவ
ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம.”

(போ-ள்.) அந்தச் சத்வஸ்து ரூபவிளக்கம் மகாவடிவமாம், அநந்தமாம், அபாரமாம், விஞ்ஞானகனமாம், சத்தியமாம், ஞானரூபமாம், அநந்தமாம். இச் சுருதியானது அந்தச்சத்வஸ்து ரூபவிளக்கத்தின்கண் மகத்தன்மையையும் அநந் தத் தன்மையையும் கூறுகின்றது. ஆண்டு அந்த ஞானரூபவிளக்கத்தின்கண் கற்பிதமாய இவ்வெல்லா உலகோடும், அந்த விளக்கத்தின் கற்பிததாதான்மிய சம் பந்த மிருக்கின்றது ; இதுவே அவ்விளக்கத்தின்கண் மகத்தன்மையாம். தேச காலவஸ்து பரிச்சேதமற்றதன்மையே அவ்விளக்கத்தின்கண் அநந்தத் தன்மை யாம். இத்துணை கூறியதால் சூனியவாதிகளின் மதமும் கண்டிக்கப்பட்டதாம். ஏனெனின், அதிஷ்டானவஸ்துவின்றி எம்மயலும் உண்டாகாது. அதிஷ்டான மின்றி மயலின்பாதமும் உண்டாகாது. சூனியவாதிகளின் மதத்தில் சத்வஸ்து அதிஷ்டானமென்பது ஒன்றின்றும். ஆகையால், அவர்களுடைய மதம் அசங் கதமாம்.

ஆ.சு. “வாங்மநஸாநாவாம் கிம்அபிதாகாஷா ஸாவாராமதி.”

(போ-ள்.) ஸ்வயஞ்ஜோதிரூப புருஷனுக்கு மேலாய் எவ்வஸ்துவும் இன்றும். மற்றே, ஸ்வயஞ்ஜோதி புருஷனே இவ்வெல்லா உலகிற்கும் முடிவுவடிவனும், மேலாய கதிவடிவனும். இச்சுருதி எல்லா உலக பாதத்தின் முடிவுவடிவனுக

அச்சுயஞ்ஜோதிப் புருஷனைக் கூறும். இவ்வார்த்தை ஸ்ரீபகவான் பாடியக்காரரும் கூறியருளியிருக்கின்றார்.

"ஸவை விநஷ்யத்வஜாதம் வஸ்துஜாதம் விநஷ்யதி
வஸ்துஷ்வவிநாஷஹேகு ஹாவாந்ந விநஷ்யதி."

(பொ-ள்.) இத்தூலப் பிரபஞ்ச முதலாக அவ்வியாகிருதம்வரை எத்துணை நாசவஸ்துக்களுளவோ அவையாவும் சைதன்யரூப புருஷபரியந்தம் நாசத்தை யடையும். அப்புருஷனை நாசஞ்செய்யுங் காரணம் யாதொன்றுமின்றும். ஆகையால், அப்புருஷன் நாசத்தையடையான். இத்துணை கூறியதால், க்ஷணிக விஞ்ஞானவாதிகளின் மதமும் கண்டனம் செய்யப்பட்டதாயிற்று. ஏனெனின், ஒருகால் ஆத்மா க்ஷணிகமாயின் பாலிய அவஸ்தையின்கண் எனது மாதாபிதாக்களை அனுபவித்த யானே இப்போது விருத்த அவஸ்தையின்கண் அவர்களை ஸ்மரிக்கின்றேன் என்னும் பிரத்தியபிஞ்ஞை ஞானம் யாவருக்கும் உண்டாகின்றது; அஃதுண்டாகலாகாது. ஏனெனின், எப்புருஷன் எவ்வஸ்துவைக் காண்கின்றானே, அப்புருஷனே மற்றொருகாலத்தே அவ்வஸ்துவை நினைப்பன். வேறொரு புருஷனால் பார்க்கப்பட்ட வஸ்துவை வேறொரு புருஷன் நினைத்தல் முடியாது. ஆகையால், அவ்வாத்மா க்ஷணிகமன்றும். இதனால் இப்பொருள் துணியப்பெற்றது:— யாண்டும் நிறைந்த ஏக அத்விதீயரூப ஸ்வப்பிரகாச விளக்கவடிவ சத்வஸ்து முற்கூறிய தேசகாலாதி சர்வபரிச் சேதங்களுமற்றதாம். ஆகையால், அச்சத்வஸ்துவின் அபாவம் ஒருகாலும் உண்டாகாது. என ஸ்ரீ பகவான் திருவாய் மலர்ந்தருளியது உண்மையேயாம். (17)

(அ-கை.) முன்னர்த் தாங்கள் விளக்கரூப சத்வஸ்துவை அவிநாசியென்றருளினீர்கள் அது சம்பவியாது. ஏனெனின், வெற்றிலை, கத்தைக்காம்பு, சுண்ணாம்பு, பாக்கு என்னும் இந்நான்கின் சமுதாயரூப தாம்பூலத்தில் சிவப்பு உண்டாவதே போல, பிருதிவி, ஜலம், தேயு, வாயு என்னும் இந்நான்கு பூதங்களின் சமுதாயரூப இத்தூலசரீரத்தில் ஒரு சைதன்யத் தன்மைத்தன்மம் உண்டாகின்றது. ஆகையால் அச்சைதன்யரூப விளக்கம் இத்தூலசரீரத்தின் தன்மமேயாம். இத்தூலசரீரமோ கணந்தோறும் நாசத்தையடையும். ஆகையால் சரீரரூபதன்மி அழியவே ஞானரூபவிளக்கமும் அவசியம் அழியும் இவ்வண்ணம் பூதசைதன்யவாதிகளின் சங்கையுண்டாக அவர்களைக் கண்டிக்கும்பொருட்டு ஸ்ரீ பகவான் "நாஸதோவி஦்யதேஸதாவோ" என முன்னர் அருளிய வசனத்தின்பொருளை இப்போது விஸ்தாரமாய் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸுஜ்ஞவஜ்ஞ உஜ்ஞெஜ்ஞஹா நித்யஸ்யோக்தாஸ்ரீரிணஃ।
ஸுநாஸிநோ2 வ்யக்தஸ்யாஸ்ய தஸ்ய யூயுத்யுஷ்வ ஹாரத ॥ (18)

ப-ம். 7 ஸுஜ்ஞவஜ்ஞஃ 6 உஜ்ஞ 8 ஜ்ஞெஜ்ஞாஃ 2 நித்யஸ்ய 9 உக்தாஃ 3 ஸ்ரீரிணஃ 4 ஸுநாஸிநஃ 5 ஸுவ்யக்தஸ்ய 10 தஸ்யாக் 11 யூயுத்யுஷ்வ 1 ஹாரத.

(அ-ம்.) ஹே பாரத! நித்தியமும், சரீரரூப உபாதியுடையதும், நாசமற்றதும், பிரயோஜனமற்றதும் ஆய விளக்கவடிவம் ஆன்மாவாம். அவ்வான்மா ஒன்றனுக்கே, இவ்வறிவுடைய தேகங்கள் முழுவதுங் கூறப்பட்டுள்ளன. அக்காரணத்தால் நீ போர்புரிதி.

(வி-ம்.) விருத்தி, க்ஷயம் உடையதாதலின் சரீர நாமத்தால் பிரசித்தமாயதும், நாசரூப அந்தமுடையதும் பிரத்தியக்ஷமாய இத்தேதகமாம். ஈண்டு "ஜ்ஞெஜ்ஞாஃ"

என்னும் பன்மையால் ஸ்தூல, சூக்ஷ்ம, காரணரூப எத்துணை விராட்சூத்திர அவ்வியாகிருதப்பெயரிய சமஷ்டி வியஷ்டி சரீரங்களுளவோ, அவ்வெல்லாச் சரீரங்களையும் கவர்ந்து கொள்க. நித்தியமும், விநாசமற்றதும் அத்தியாசிகசம்பந்தத்தால் சரீரமுடையதும் ஆபத ஸ்வப்பிரகாச விளக்கரூப ஆன்மாவாம், அவ்வொரே ஆன்மாவிற்கு ஸ்தூல, சூக்ஷ்ம, காரணரூப சர்வசரீரங்களும் திருசியரூபங்களாம், போக்கியரூபங்களாம். ஆகையால், சுருதி பகவதியும், பிரஹ்ம வேத்தாக்களும், சர்வதேகங்களையும் திருசியத்தன்மை ரூபத்தாலும், போக்கியத்தன்மை ரூபத்தாலும், அவ்வொரே ஆன்மாவின் சம்பந்திகளாய்க் கூறியிருக்கின்றனர். ஆண்டு தயித்திரியக சுருதியின்கண் அன்னமயம், பிராணமயம், மநோமயம், விஞ்ஞானமயம், ஆநந்தமயம் என்னும் பஞ்ச கோசங்களின் கற்பனையைச் செய்து, அவ்வெல்லாக் கோசங்களின் அதிஷ்டானரூப அகற்பித புச்சப் பிரதிஷ்டை வடிவ பிரஹ்மம் கூறப்பட்டுளது. ஆண்டு, பஞ்சீகிருதபஞ்ச மகாபூதங்கள், அவற்றின் காரியங்களாய சர்வ மூர்த்த பதார்த்தங்கள் என்பவற்றின் சமுதாய ரூபம் விராட்டாம். அது அன்னமய கோசமாம், ஸ்தூலசமஷ்டியாம். அத்தூல சமஷ்டியின் காரணரூப அபஞ்சீகிருத பஞ்ச மகாபூதங்கள், அவற்றின் காரியரூப சர்வ அமூர்த்த பதார்த்தங்கள் என்பவற்றின் சமுதாய ரூபம் சூத்திரம் என்னும் ஹிரண்ய கர்ப்பமாம்; அது சூக்ஷ்ம சமஷ்டியாம். ஆண்டு :—"தயம்வா ஊஉம்நாஉ ூவம் கூஉஉதி" என்னும் இந்தப் பிருகதாரண்யக உபநிஷத்தாகிய சுருதியானது அந்தச் சூக்ஷ்ம சமஷ்டியை நாமம், ரூபம், கர்மம் என்னும் மூன்று ரூபமாய்க் கூறியிருக்கின்றது. ஆண்டு அச்சூக்ஷ்ம சமஷ்டியானது தன்னிடத்தில் இராநின்ற கருமரூபத்தன்மையால் கிரியா சக்திமாத்திரத்தைக் கவரும்போது, பிராணமயம் என்னும் பெயரைப் பெறும். அச்சூக்ஷ்ம சமஷ்டியானது தன்னிடத்தில் இராநின்ற நாமரூபத்தன்மையால் ஞானசக்திமாத்திரத்தைக் கவரும்போது, மநோமய மென்னும் பெயரை மருவும். அச்சூக்ஷ்ம சமஷ்டியானது தன்னிடத்தில் இராநின்ற ரூபவடிவத்தன்மையால் அக்கிரியை, நாமம் என்னும் இரண்டன் ஆசிரயமாதலின், கர்த்துருத்தன்மை மாத்திரத்தைக் கவரும்போது, விஞ்ஞானமயமென்னும் பெயரை விரவும். இவ்வண்ணம் அவ்வொரே ஹிரண்ய கர்ப்பம் என்னும் லிங்கசரீர ரூபகோசம் பிராணமயம், மநோமயம், விஞ்ஞானமயம் என்னும் மூக்கோச வடிவமாம். அவ்விரண்ய கர்ப்பரூப லிங்க சரீரத்திற்கும் காரண ரூபமும், சர்வப்பிரபஞ்ச வாசனைவடிவ சமஸ்காரங்களின் ஆசிரயரூபமும் ஆய அவ்வியாகிருதமென்னும், மாயோப ஹித சைதன்ய ஆன்மா ஆநந்தமயகோசமாம். அவ்வன்னமயாதியாவும் ஒரே ஆன்மாவின் சரீரமெனச் சுருதிகூறுகின்றது.

ஆ-சு. "தஹைஷவனவஸாரீர சூத்தாயஏவ ூவஉஹை."

(போ-ள்.) முன்னர் அன்னமய கோசத்திற்குச் சத்தியஞான அநந்தரூப சாரீர ஆன்மா யாது கூறப்பட்டதோ, அதுவே பிராணமய கோசத்திற்கும் ஆன்மாவாம். சரீரத்தின்கண்ணே யாது இருப்பதாமோ, அது சாரீர மெனப்படும் என்னும் சுருதிவசனத்தை மநோமயம், விஞ்ஞானமயம், ஆநந்தமயம் என்னும் மூக்கோசங்களிலும் அறிந்துகொள்க. இப்பஞ்ச கோசங்களின் பிரக்கிரியை ஸ்ரீ ஆன்மபுராணத்தின் 10-வது அத்தியாயத்தின்கண் பாம் விஸ்தாரமாய்க் கூறிவந்தேம். அல்லது, "சுஞவஞ உஎஎஹாஃ" என்னும் இச்சுலோகத்தின் பதங்களை இவ்வகையாய் யோசனைசெய்க :— மூன்று லோகத்திலும் இராநின்ற சர்வப்பிராணிகளின் சம்பந்திகளாய ஸ்தாவர, ஜங்கமரூப தேகங்கள் யாவும் ஒரே ஸ்வயஞ்சோதி ஆன்மாவிற்குச் சுருதி கூறியுள்ளது.

ஆ-சு. "வனகொஉவி ஸவ-ழஹிதெஷு-மஹி ஸவ-ழவ்யாவீஸவ-ழஹிதா ஞாதா கூ-ழாயஷ்கூ: ஸவ-ழஹிதாயிவாஸ: ஸாக்ஷீஎதா கெவ லொநிமு-ணஷ்டு."

(பொ-ள்.) ஏக அத்விதீய ஆன்மதேவர் சர்வ சரீரங்களிலும் இரகசியமாய் இருப்பர். சர்வ வியாபியாவர், சர்வ பூதங்களின் அந்தராத்மா ஆவர். புண்ணிய பாவரூப கர்மங்களின் பலதாதா ஆவர். சர்வ பூதங்களின் அதிஷ்டானமாவர். புத்தி முதலிய சர்வ சங்காதங்களின் சாக்ஷியாவர். சைதன்யரூபராவர், அத்வி தீய ரூபராவர், நிர்க்குணராவர், நிஷ்கிரியராவர். இச்சுருதியானது ஸ்தாவர ஜங்-கமரூப சர்வ சரீரங்களின் சம்பந்தமுடைய ஏக நித்திய விபுவாய ஆன்மாவைக் கூறுகின்றது.

ஹே பகவன்! எத்துணை இக்காலம் உளதோ, அத்துணை இருப்பது நித்தி யத்தன்மை எனப்படும். அவ்விந்நித்தியத்தன்மைக் காலத்தோடு ஆன்மாவின் அழிவை அங்கீகாரஞ்செய்யினும், அவித்தை முதலியவற்றைப்போல, ஆன்மா வின்கண்ணே சம்பவிக்கும் என்னும் அர்ச்சுனனது சங்கைக்குப் பகவான் உத்தர மருளிச்செய்கின்றார் :—

(கூநாபிநஃ) என, ஹே அர்ச்சுன! தேசகாலவஸ்து பரிச்சேதங்களையுடைய அவித்தை முதலியன அதிஷ்டான ஆன்மாவின்கண் கற்பிதமாதலின், அநித்தியங்க ளாயினும் அவ்வவித்தை முதலியவற்றின்கண் எவ்வளவுகால இருப்புண்மை வடிவ கௌண நித்தியத்தன்மை தோற்றுநிற்கும். முக்காலத்திலும் பாதிக்கப் படாத் தன்மைவடிவ முக்கிய நித்தியத்தன்மை அவற்றின்கண் இன்றும். தேசகால வஸ்து பரிச்சேதமற்றதாதலின், கற்பிதமற்ற ஆத்மாவின் நாசத்திற்கு யாதொரு காரணமுமின்றும். ஆகையால், அவ்வான்மாவின்கண் முக்கியமேயாய கூடஸ் தஸ்வரூப நித்தியத் தன்மையுளது. அவித்தை முதலியவற்றிற்கேபோலப் பரிணமி ரூப நித்தியத் தன்மையும், எவ்வளவுகால இருப்பு உண்மைவடிவ நித்தியத் தன் மையும் ஆன்மாவின்கண் இன்றும்.

சங்கை :—இங்ஙனம் சர்வ தேகங்களின் சம்பந்தமுடைய சைதன்ய ஆன்மா வின்கண் யாதாவது பிரமாணம் உளதா? அல்லது இல்லையா? அவற்றுள் சைதன்ய ஆன்மாவின்கண் யாதொரு பிரமாணமும் இல்லையென்னும் இரண்டாவது பக்ஷமோ சம்பவியாது. ஏனெனின், எவ்வஸ்து ஒரு பிரமாண ஜன்னிய ஞானத் திற்கு விஷயமாகாதோ, அவ்வஸ்து அசத்தியமேயாகும். மலடிமகன், முயற்கோடு என்பவை ஒரு பிரமாண ஜன்னிய ஞானத்திற்கு விஷயமாகாமையின் அசத்திய மேயாம். அதுபோல, பிரமாண ஜன்னிய ஞானத்திற்கு அவிஷயமாதலின் அந்தச் சைதன்ய ஆன்மாவும் அசத்தியமேயாகும். அங்ஙனம் அவ்வான்மாவின் சாக்ஷாத் காரத்தின் பொருட்டு, சாஸ்திரத்தின் துவக்கமும் பயனற்றதேயாகும் என்பவை முதலிய எல்லாத் தோஷங்களின் நீக்கத்தின் பொருட்டு, அத்தேகியாகிய ஆன்மா வின்கண் பிரமாணம் ஒன்றுளதென்னும் முதற் பக்ஷத்தை அவசியமாய் அங்கீ காரம் செய்யவேண்டிவரும். அல்லது "ஸாஸ்யொநிக்வாக்" என்னும் இச்சூத் தர
திரத்தின் வியாக்கியானத்தின்கண் ஸ்ரீ பகவான் பாடியக்காரரும், ஆன்மாவின் சித்தியின்கண் உபநிஷத்துருவ சாஸ்திரம் ஒன்றே பிரமாணமெனக் கூறி இருக்கின் றார். அங்ஙனமே :—"தம்க்வளவநிஷஹ்ம் வேதாஷம் வதஹ்ஸி" என்னுஞ் சுருதியும் ஆன்மாவின் சித்தியின்கண் உபநிஷத் துருவப் பிரமாணத்தைக் கூறி

இருக்கின்றது. ஆகையால் பிரமாண விஷயமாதலின் சைதன்யரூப ஆன்மாவின் கண் பேதரூப வஸ்து பரிச்சேதம் அவசியம் உண்டாம்.

சமாதானம் :—என அர்ச்சுனனது சங்கை யுண்டாக ஸ்ரீ பகவான் உத்தர மருளிச்செய்கின்றார் :—"சுவரயெவஷ" என, ஹே அர்ச்சுன! கடபடாதி சர்வ பதார்த்தங்களையும் ஒளிர்விக்கும் சூரியபகவான் தம்மை யொளிர்விப்பான் கட படாதி பதார்த்தங்களின் அபேக்ஷை செய்வதில்லை. அங்ஙனம், பிரமாணப் பிரமேயாதி சர்வ ஜகத்தையும் ஒளிர்விக்கும் ஸ்வப்பிரகாச சைதன்யரூப ஆன்மா விற்குத் தன்னை ஒளிர்வித்துக் கொள்ளுவான் பிரமாணாதிகளின் அபேக்ஷை இன்றும். இக்காரணத்தால் அவ்வான்மா அப்பிரமேயமாம்.

ஆ-சு. "ஹகயெவாந ூரஷவ்ய ஜெதஉவ்ரயெம் யூவம் சுவ்ரயெம்
நதத்ரஹ யெஷாஹாதிந அம்ருதாஸ்கம் நெஷாவிஷ்ய
தொஹாதி கதொயஷ்டிஃ தஷெவஹாஜ ஷநாஹாதிஹவஷம்
தஷ்யஹாவா ஹவஷிஷ்ம்விஹாதியெநெஷம் ஹவஷம்விஜாநாதீ
தம்கெநவிஜாநீயாக் விஜ்ஞாதாரமரெகெந விஜாநீயாக்."

(பொ-ள்.) இச்சைதன்ய ஆன்மா ஒரு பிரகாரமாயே பார்க்க யோக்கிய மாம். இவ்வான்மா அப்பிரமேயமாம், கூடஸ்தமாம், அப்பிரமேயமாம். சுவயஞ் ஜோதியாய ஆன்மாவின்கண் சூரியனும் பிரகாசியாது, சந்திரனும், நக்ஷத்திரக் கூட்டங்களும் பிரகாசியா, மின்னலும் பிரகாசியாது, இவ்வக்கினியும் பிரகாசி யாது. அச்சுவயஞ் ஜோதியாய ஆன்மாவின் பிரகாசத்தைப் பற்றியே பின்னர் இச்சூரியனும், சந்திரன் முதலிய சகல பதார்த்தங்களும் தோற்று நிற்கும். அங்ஙனம் அவ்வான்மாவின் சுவயஞ் ஜோதிப் பிரகாசத்தாலே இச்சூரியன் சந்திரன் முதலிய சர்வ ஜகத்தும் ஒளிராநிற்கும். எச்சுவயஞ் ஜோதி ஆத்மா வால் இவ்வுலகர் இவ்வெல்லாப் பதார்த்தங்களையும் உணர்வதோ, எல்லாவற்றின் திருஷ்டாவாயும், விஞ்ஞாதாவாயும் இராநின்ற அந்த ஆன்மாவை இச்சீவன் எப்பிரமாணத்தால் அறிவன். மற்றே, எப்பிரமாணத்தாலும் அறியான் என் பதாம். இத்தகைய ஸ்வயஞ்ஜோதியாகிய ஆன்மாவிற்குத் தனது பிரகாசத்தின் பொருட்டு எப்பிரமாணத்தின் அபேக்ஷையும் இன்றும். மற்றே, தன்னிடத்திற் கற்பிதமாய காரிய சகித அஞ்ஞான நீக்கத்தின் பொருட்டு, அச்சுவயஞ்ஜோதி யாய ஆன்மாவிற்குக் கற்பித விருத்தி விசேஷத்தின் அபேக்ஷை உண்டாம். ஏனெனின், 'இயக்கனுக்கேற்றபலி' யென்னும் சாஸ்திரநியாயத்தால் கற்பிதவஸ்து விற்குக் கற்பிதவஸ்துவே விரோதியாம் எனத்துணியப் பெறும். ஆகையால், கற்பித அந்தக்கரண விருத்தியால் கற்பிதகாரிய சகித அஞ்ஞான நிவிருத்தி சம்பவிக்கும். கற்பித சர்வப் பிரபஞ்சத்தையும் நிவிருத்திசெய்யும் அந்தக்கர ணத்தின் விருத்தி விசேஷம், கேவலம், தத்துவமசி முதலிய வாக்கியமாத்திரை யானே யுண்டாமன்றிப் பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்களால் உண்டாகமாட்டாது. ஆகையால், அவ்விருத்தி விசேஷத்தி னுற்பத்தியின்பொருட்டு நூற்றுவக்கமும் பயனுடையதாம். அந்தச் சைதன்யசொரூப ஆன்மதேவர் எக்காலத்தும் தாமே யொளிர்வர், சர்வ கற்பனையின் அதிஷ்டானமாவர், சர்வ திருசியப்பிரபஞ்சத்தின் பிரகாசகராவர். அத்தகைய ஸ்வப்பிரகாச அதிஷ்டான ஆன்மாவின்கண் மலடி மகன் முயற்கோடு முதலியவற்றிற்கேபோல அசத்திய வடிவத்தன்மை சம்பவி யாது. ஏகமேவாத்விதீயம், சத்யம், ஜ்ஞானம், அநந்தம், பிரஹ்மம் என்பவேதி சாஸ்திரங்கள் அத்விதீயப் பிரஹ்மத்தினும் வேறுய சர்வ ஜகத்தின்கண் ணும் கற்பி தத்தன்மையைக் கூறுபவாய்த் தம்மிடத்துக் கற்பிதரூபத்தன்மையையுணர்த்தும்.

ஒருகால் அச்சாஸ்திரங்கள் தம்மிடத்தே கற்பிதத்தன்மையை உணர்த்தாவாயின், அவை சத்விதீயப் பிரஹ்மத்தை அத்விதீயப் ரூபமாய் உணர்த்துவனவாய்த் தாமே அப்பிரமாணரூபமாம். கற்பிதவஸ்து, அகற்பிதவஸ்துவின் பரிச்சேதத்தைச் செய்யாது என்பதை முன்னரே கூறிவந்தோம். ஆகையால், அச்சுவப்பிரகாச ஆன்மாவின்கண் பேதரூப வஸ்துபரிச்சேதத்தின் அடைவும் உண்டாகாது. அல்லது, எக்காலத்தும் ஆன்மாவின் ஸ்வப்பிரகாசத்தன்மை கேவலம் சுருதிப்பிரமாணத்தானே துணியப்பெறமாட்டாது; மற்றோரு, ஸ்ரீ பகவான் பாடியக்காரர் யுக்தியினாலும் அவ்வான்மாவின் ஸ்வப்பிரகாசத் தன்மையைத் துணிந்துளார். அந்த யுக்தியிதுவாம்:—யாவனுக்கு எதன்கண் ஐயம், திரிபு, வெதிரேகப்பிரமை என்னும் மூன்றன்கண் ஒன்றேனும் இன்றோமா, அவனுக்கு அதன்கண் அவ்வைய முதலியவற்றின் விரோதி யுணர்வவசியமுண்டாம் என்னும் நியமம் யாண்டுங் காணவருகின்றது. யாவனுக்கு எக்கடத்தின்கண் கடமா? அன்று என்னும் ஐயம், கடம் அன்றென்னும் திரிபு, கடம் அன்றென்னும் வெதிரேகப்பிரமை என்னும் மூன்றனுள் ஒன்றேனும் உண்டாகாதா, அவனுக்கு ஆண்டு அவ்வையம் முதலிய மூன்றன் விரோதியாய கடமிருக்கின்றதென்னும் ஞானம் அவசியம் உண்டாம். ஒருகால் அந்த விரோதி ஞானம் ஆண்டுண்டாகாதாயின், அவ்வையம் முதலிய மூன்றனுள் யாதாவதொன்று அவசியமிருக்கவேண்டும். ஆன்மாவின்கண்ணே எவனுக்கும் யான் இருக்கின்றேனு, அல்லதில்லனு என்னும் ஐயம், யான் இலன் என்னும் திரிபு, யான் இலன் என்னும் வெதிரேகப்பிரமை என்னும் மூன்றனுள் ஒன்றேனும் உண்டாகாது. ஆகையால், யாவருக்கும் எக்காலத்தும் ஐயம் முதலியவற்றின்விரோதியாய ஆன்மாவின் உண்மைவடிவ ஞானத்தை யவசியம் கூறவேண்டும். ஒருகால் அவ்வான்மாவின் சொரூபஞானம் உண்டாகாதாமாயின், அவ்வையம் முதலியமூன்றனுள் யாதேனுமொன்று அவசியம் இருக்கவேண்டும். ஆன்மாவின்கண் அவ்வையம் முதலியன உண்டாவதின்றும். ஆகையால், அவ்வான்மா எக்காலத்தும் ஸ்வப்பிரகாசசொரூபமாம். அல்லது, வேதாந்த சித்தாந்தத்தின்கண் அந்த ஸ்வப்பிரகாசஞானம் ஆன்மாவை யாசிரயித்திருக்கமாட்டாது. மற்றோரு, அச்சுவப்பிரகாசஞானரூபமே ஆன்மாவாம். ஒருகால் ஆன்மாவை ஞாஞாசிரயமா யொப்பிதோ, எவ்வஸ்து எஞ்ஞானத்தின் ஆசிரயரூப கர்த்தாவாமோ, அவ்வஸ்துவே அந்த ஞானத்தின் விஷயரூப கர்மமாகமாட்டாது. மற்றோரு, ஞானத்தின் கர்த்தாவும் கர்மமும் வேறு வேறும். ஆதலின், அந்த ஞானத்தா லான்மாவின் துணிவு உண்டாகாது. அல்லது ஆன்மாவை ஞானத்தின் வேறு யுடன்படிதோ, எவ்விவப்பொருள் ஞானத்தினும் வேறுமோ அவ்வப்பொருள் ஜடமேயாம்; ஞானத்தினும் வேறுதலின், கடாதிகள் ஜடரூபமாதலேபோல, ஞானத்தினும் வேறுதலின் ஆன்மாவும் ஜடரூபமாம். எவ்விவப்பொருள் ஜடமாமோ அவ்வப்பொருள் கற்பிதமாம்; ஜடமாதலின் கடாதிகள் கற்பிதங்களாதலேபோல ஜடமாதலின் ஆன்மாவும் கற்பிதமாம். ஆன்மாக்கற்பிதமாயின் சூனிய வாதத்தின் அடைவுண்டாம். ஆகையால், ஆன்மா ஞானத்தினும் பின்னமன்றும். மற்றோரு, ஆன்மா ஸ்வப்பிரகாச ஞானசொரூபமேயாம். அத்தகைய ஸ்வப்பிரகாசஞான சொரூபமாயிருப்பினும், இவ்வான்மா அவித்தைவடிவ உபாதியின் சம்பந்தத்தால் சாக்ஷி என்னப்படும். விருத்தியோடுகூடிய அந்தக்காணரூப உபாதியின் சம்பந்தத்தால் பிரமாதாவென்னப்படும். அந்தப் பிரமாதாவிற்கு இந்தச் சக்ஷு முதலிய இந்திரியங்கள் காரணங்களாம். அப்பிரமாதாவே அச்சக்ஷு முதலிய இந்திரியங்களின் வாயிலாய் அந்தக்காண விருத்திரூப பரிணமத்தோடு வெளியிலுள்ள கடாதி பதார்த்தங்களை வியாபித்து, அக்கடாதிகளின் ஆகாரங்களை யடையும். அவ்வந்தக்காணத்தின் ஓரே விருத்திரூப பரிணமத்தின்கண்ணே கடாவச்சின்ன

சைதன்யமும், அந்தக்காரண வச்சின்ன சைதன்யமும் ஒருமையையடையும். வீட்டின்கண்ணே கடமடையின் வீட்டாகாசத்திற்கும் கடாகாசத்திற்கும் ஒருமை யுண்டாம். அங்ஙனமே விருத்திரூப உபாதியும் கடரூப உபாதியும் ஒரு தேசத் தின்கண்ணே யிருப்பின், அவ்விருத்தி யுபஹித சேதனமும் கடவுபஹித சேதன மும் ஒருமையை யடையும். அதன்பின்னர் அக்கட அவச்சின்ன சைதன்யம் பிரமாதா சைதன்யத்தின் அபேதத்தால், தனது அஞ்ஞானத்தை நாசம் செய்வ தாய் அபரோக்ஷமாம். தனது உபாதிரூப கடத்தை தனது தாதாத்மிய அத்தி யாசத்தால் அச்சைதன்யம் ஒளிர்விக்கும். அத்தியந்தம் நிர்மலமாய அந்தக் காரணத்தின் பரிணமரூப விருத்தியை அவ்விருத்தி யுபஹித சைதன்யம் ஒளிர் விக்கும். இங்ஙனம் அந்தக்காரணம், விருத்தி, கடம் என்னும் மூன்றன் அபரோக்ஷ முண்டாம், யானறிகின்றேன் கடத்தை யென்பதே மூன்றன் அபரோக்ஷ ஆகார மாம். இங்ஙனம், உள்ளும் வெளியும் இராநின்ற சர்வ அனன்ம பதார்த்தங்களைப் பிரகாசிப்பிக்கும் சைதன்யம் ஏகரூப மாயினும் கடாதிபாகிய பதார்த்தங்களை யொளிர்விப்பதில் அச்சைதன்யத்திற்கு அந்தக்கரண விருத்தியின் அபேக்ஷை யுண்டாம். இக்காரணத்தானே அச்சைதன்யத்தின்கண்ணே பிரமாத்ருத் தன் மையாம். அந்தக்கரணத்தையும் அந்தக்கரண விருத்திகளையும் ஒளிர்விப்பதில், அச்சைதன்யத்திற்கு எவ்விருத்தியின் அபேக்ஷையுமின்றும். இக்காரணத்தானே அச்சைதன்யத்தின்கண் சாக்ஷிரூபத்தன்மையாம். ஒருகால் அச்சைதன்யம் அந்தக்கரண விருத்தியைக் கடாதிகளைப்போல வேறு விருத்தியை யபேக்ஷித்து விளக்குமாயின், அவ்விரண்டாவது விருத்தியை மூன்றுவது விருத்தியை யபே க்ஷித்து விளக்கும். அம்மூன்றுவது விருத்தியை நான்காவது விருத்தியை யபே க்ஷித்து விளக்கும். இவ்வண்ணம் விருத்திகளின் தாரையை யுடன்படுவதில் அன வஸ்தா தோஷப் பிராப்தியுண்டாம். ஆகையால், அச்சாக்ஷியாய ஆன்மா தனது சொரூபத்தினானே அந்தக்கரணத்தையும் அதன் விருத்திகளையும் ஒளிர்விக்கும் அவற்றை யொளிர்விப்பான் விருத்தியின் அபேக்ஷையின்றும். ஆகையால், இப் பொருள் துணியப்பெற்றது :—எக்காரணத்தால் முற்கூறிய சுருதியுக்திகளால் இச்சுவப்பிரகாச ஸ்புரணரூப ஆன்மா எப்போதும் நித்தியமாமோ, யாண்டும் வியா பகமாமோ, ஜன்மமரணரூப சம்சாரமற்றதாமோ, எல்லாப்பொருள்களையும் ஒளிர் விப்பதாமோ, எப்போதும் ஏகரூபமாயிருப்பதாமோ, அக்காரணத்தால் இத்தகைய அவிநாசி யான்மாவின் நாச சங்கையால் உனது போர்வடிவ தர்மத்தின்கண் முன் முயன்ற நினக்கு அப்போரினின்றும் உபராமமாதல் தகுதியன்றும். என்னும் வச னத்தை ஸ்ரீ பகவான் அர்ச்சுனனே நோக்கிக் கூறியருளுகின்றார் 'தஹ்ஹாஒ ூஒ்ஹ்வ ஹாஸ்த' என, கருத்திதுவாம் :—ஸ்வப்பிரகாச ஞானரூப ஆன்மாவோ ஒருகாலும் நாசமாகாது, இப்பீஷ்மத் துரோணாதிகளின் சரீரங்களோ பொய்வடிவினவாம், அநித்தியங்களாம். ஆகையால், அத்தேகங்கள் தாமே நஷ்டமடைந்துபோம். அத்த கைய அநித்திய சரீரங்களின் * ஹனனத்தினின்றும் நீங்கி, நீயுன்னுடைய சுவதர் மத்தை நாசஞ்செய்யாதே; ஈண்டு 'யாஒ்ஹ்வ' என்னும் வசனத்தால் ஸ்ரீபகவானை வர் அர்ச்சுனனே நோக்கிப் போர்வடிவகர்மத்தின் விதியைச் செய்தருளினர். மற்றோ அவ்வசனத்தால் ஸ்ரீபகவானைவர் முற்கிடைத்தபோரின் அனுவாதமாத்திரம்செய் தருளினர். ஏனெனின், ஆன்மஞான உபதேசப் பிரசங்கத்தின்கண் அப்போர்வடிவ தர்மவிதி சம்பவியாது. மற்றோ, ஸ்ரீபகவானது உபதேசமின்றியே அவ்வர்ச்சுனன் முன்போரின்கண் முயன்றனன்; ஆனால், சோகமோக வயத்தால் அவ்வர்ச்சுனன் அப்போரினின்றும் நீங்கினன். அச்சோக மோகங்கள் ஸ்ரீ பகவானது உபதேசஜன் னிய ஞானத்தால் நீங்கிவிட்டன. ஆகையால், ''சுவவாஹாஃவவாஎ உஹ்ஸ்ம-ஃஹ்ஸ்ஹ்

* ஹனனம்=கொல்கை.

ஷ்டிதிஃ'' என்னும் நியாயத்தால் 'யுஷ்மீஷு' என்னும் ஸ்ரீ பகவானது வசனம் அனுவாதரூபமேயாம், விதிரூபமன்றும். ஈண்டு முற்கிடைத்த போரினுக்குச் சோகமோகங்கள் அபவாதங்களாம். அச்சோகமோகங்கட்கு விசாரஜன்னிய ஞானம் அபவாதமாம். அச்சோக மோகரூப அபவாதமும் விசாரஜன்னிய ஞானரூப அபவாதமும் இருப்ப ஆண்டு முற்கிடைத்த போர்வடிவ உத்சர்க்கத்தினிருப்பே யுண்டாம். உண்ணமுயன்ற பசியுடையோன் யாதாவது அசுத்தி முதலியவற்றின் சங்கையால் அவ்வுண்ணுதலினின்றும் நீங்குவன். ஒரு தர்மான்மாவானவன் அவன் சங்கையை நிவிருத்தித்து அவனேநோக்கி நீ யுண்ணுதியெனக் கூறுவன். ஈண்டு நீ யுண்ணுதி யென்னும் வசனம் விதிரூபமன்றும். மற்றை, முற்கிடைத்த உணவின் அனுவாதரூபமாம். முன்னர்க்கிடையாத பொருளை யுணர்த்தும் வசனமே விதிரூபமாம். சில நூலாசிரியரோ 'யுஷ்மீஷு' என்னும் வசனத்தை விதிரூபமென நினைந்தே மோகக்ஷய அடைவின்கண் ஞானகர்மங்களின் சமுச்சயத்தை யங்கீகரித்துளார். அவர் கூற்று அசங்கதமாம். ஏனெனின், 'யுஷ்மீஷு' என்னுமிவ் வசனத்தால் மோகக்ஷயத்தினடைவு ஞானகர்மங்களின் சமுச்சயத்தாலுண்டாம் என்னும் பொருள் புலப்படுவதின்றும். ஞானகர்மங்களின் சமுச்சயத்தை மேல்விஸ்தாரமாய்க் கண்டிடப்பாம். (18)

(அ-கை.) ஹே பகவன்! ''சுபாஅசுபாநபவிஷ்யஸி'' என்பது முதலிய வசனங்களால் பீஷ்மத் துரோணாதி பந்துக்களின் நாச ஜன்னிய சோகம் நீங்கினும், அந்தப் பீஷ்மத் துரோணாதிகளை நாசம் செய்வதால் உண்டாம் பாவத்தை நீக்க யாதொரு உபாயமுமின்றும். யாண்டு சோகமின்றுமோ, ஆண்டு பாவமும் இன்றும் என்னும் நியமம் சம்பவியாது. ஏனெனின், ஒருவன் தனது பகைவனாகிய மறையவனைக் கொல்லின் ஆண்டு அப்பகைவனாகிய மறையவனது கொல்கையின்கண் அவனுக்குச் சோகமோ உண்டாகாது. ஆதலின், அவனுக்குப் பிரஹ்மஹத்தியினால் ஜனித்த பாவமும் உண்டாகலாகாது. சோகமுண்டாகாதாயினும் அவனுக்குப் பாவமோ அவசியமுண்டாம். ஆகையால், பீஷ்மத் துரோணாதிகளின் ஹனனகர்த்தாவாய எனக்கும் அக்காரியத்தில் என்னேயவும் தங்களுக்கும் அந்தப் பந்துக்களின் ஹிம்சையினால் உண்டாய பாவமானது அவசியம் உண்டாம். ஆகையால், நீ போர்செய்யென்று முன்னர்த் தாங்கள் பணித்தருளியது அசங்கதமாம் என்னும் அர்ச்சுனனது சங்கை யுண்டாக. ஸ்ரீ பகவான் 'கடவல்லி' உபநிஷத்தின் மந்திரங்களால் அச்சங்கையை நீக்கியருளுகின்றார்:—

சு-ம். யஏனம்வெத்திஹந்தாரம் யச்சைனம் உந்யதெஹதம் ।
உபௌதௌநவிஜாநீதோ நாயம்ஹந்தி நஹந்யதே ॥ (19)

ப-ம். 1 யஃ 2 ஏனம் 4 வெத்தி 3 ஹந்தாரம் 6 யஃ 5 அ 7 ஏனம் 9 உந்யதெ 8 ஹதம் 11 உபௌ 10 தௌ 12 ந 13 விஜாநீதஃ 15 ந 14 சுயம் 16 ஹந்தி 17 ந 18 ஹந்யதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யாவன் இவ்வான்மாவை ஹனனகர்த்தாவென அறிவதேனை, அங்ஙனமே யாவன் இவ்வான்மாவை ஹனனப்படுவதென்றறிவதேனை, அவ்விருவரும் ஆன்மாவை அறிந்திலர். ஏனெனின், இவ்வான்மா எவரையும் ஹனனஞ்செய்யாது. அங்ஙனமே தானும் ஹனனத்தையடையாது. (19)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! முன்னர் யாம் கூறிய அவிநாசியாய் அப்பிரமேயமாகிய தேஹியென்னும் ஆன்மாவை, யாவன் யான் இவ்வஸ்துவை ஹனனம் செய்வன் என ஹனனரூபக் கிரியையின் கர்த்தாவாய் அறிவதேனை, யாவன் இவ்வான்மாவைத் தேகத்தின் ஹனனத்தால் யான் ஹனனமாயினேன் என ஹனனக்கிரியை

யின் கர்மரூபமாயறிவதே, அவ்விருவரும் தேகாபிமானிகளாதலின் அதனின் கர்த்தாவாயும் கர்மமாயுமிராத அவிகாரியாய ஆன்மாவைச் சாஸ்திரப் பிரமாணத்தால் தேகாதிகளினும் வேறாய் அறிந்திலர். என்னே? இவ்வான்மா எப்பிராணியையும் ஹனனம்செய்யாது. தானும் எவற்றாலும் ஹனனமாகாது. இத்தகைய ஹனனக்கிரியையின் கர்த்தாவும் கர்மமும் ஆகாத ஆன்மாவை எம்மூடரானவர் ஹனனக்கிரியையின் கர்த்தாவாயும் கர்மமாயும் எண்ணுவரோ, அம்மூடரானவர் ஆன்மாவின் வாஸ்தவ சொரூபத்தை அறிந்திலர் என்பதில் யாது கொல்லையம். ஈண்டு ‘‘யஹநம்வெத்தி ஹந்தாரம் ஹதம்வா’’ இத்துணை வசனமாத்திரத்தைக் கூறுவதானே முற்புகன்ற அர்த்தத்தின் சித்தியுண்டாம். ஆதலின், ‘‘யஹநம்வெத்தி ஹந்தாரம் யஶ்சைநம் உநயதெஹதம்’’ என இருமுறை பதத்தின் ஆவிருத்தி செய்தல் பயனற்றதாம். ஆயினும், அப்பதத்தின் ஆவிருத்தி வாக்கியத்தின் அலங்காரப் பொருட்டாம். அல்லது, ‘யஹநம்வெத்தி ஹந்தாரம்’ என்னும் இவ்வசனத்தால் நையாயிகர்களைக் கூறியதாம். ஏனெனின், அவர் ஆன்மாவையே ஹனனக்கிரியைகளின் கர்த்தாவாய் அங்கீகரித்துளார். மேலும் ‘‘யஶ்சைநம் உநயதெஹதம்’’ என்னும் இவ்வசனத்தால் சார்வாகர்களைக் கூறியதாம். ஏனெனின், அவர் சரீராதிரூப ஆன்மாவை அழிவுடையதென அங்கீகரித்துளார். அவ்விருவரும் ஆன்மாவின் வாஸ்தவசொரூபத்தை அறிந்திலர். இவ்வண்ணம் அவ்வாதியரின் வேற்றுமையை அறிவிக்கும்பொருட்டு இருமுறை பதத்தின் ஆவிருத்தி செய்யப்பட்டதென்றுணர்க. அல்லது, யாவன் ஆன்மாவை ஹனனகிரியையின் கர்த்தாவென அறிவனே அவன் அத்தியந்தம் சூரவீரனவன். யாவன் ஆன்மாவை ஹனனக்கிரியையின் கர்மமென எண்ணுவனே அவன் அத்தியந்தம் நிந்திதனவன் என்னும் இவ்வகைப் பேதத்தை உணர்த்தும்பொருட்டு இருமுறை பதத்தின் ஆவிருத்தி செய்யப்பெற்றதாமென்றுணர்க. ஈண்டு ‘‘யஹநம்வெத்தி ஹந்தாரம் யஶ்சைநம் உநயதெஹதம்’’ என்னும் இச்சுலோகத்தின் முற்பாதியில் ‘‘ஹந்தாஅநநயதெ ஹந்தாஅஹதஶ்சைநநயதெஹதம்’’ என்னும் கடவல்லி சுருதியின் முற்பாதியின் பொருள் நிரூபிக்கப்பட்டது. சுருதியின் சுலோகத்தின் பிற்பாதிகள் ஒன்றுபட்டனவேயாம். (19)

(அ-கை.) ஹே பகவன்! இவ்வான்மதேவர் ஹனனரூபக்கிரியையின் கர்த்தாவும் கர்மமும் எக்காரணத்தாலல்லாவர்? என்னும் அர்ச்சுனனது சங்கையுண்டாக இவ்வான்மதேவர் ஜன்மமுதலிய விகாரங்கள் யாவும் அற்றவராதலின், ஹனனரூபக்கிரியையின் கர்த்தாவும் கருமமும் ஆகார் என்னும் உத்தரத்தை ஸ்ரீ பகவான் அக் கடவல்லி உபநிஷத்தின் இரண்டாவது மந்திரத்தால் கூறியருளத் தொடங்குகின்றார்.

சு-ம். நஜாயதெ ம்ரியதெவா கதாசிந்நாயம் பூத்வாபவிதாவாந பூயஃ।
அஜோநித்யஃ ஶாஶ்வதோயம் புராணோந ஹந்யதெ ஹந்யமாநெ ஶரீரெ॥

ப-ம். 1 ந 2 ஜாயதெ 4 ம்ரியதெ 3 வா 7 கதாசித் 8 ந 6 அயம் 9 பூத்வா 11 அவிதா 5 வா 12 ந 10 பூயஃ 14 அஜஃ 15 நித்யஃ 16 ஶாஶ்வதஃ 13 அயம் 17 புராணஃ 20 ந 21 ஹந்யதெ 19 ஹந்யமாநெ 18 ஶரீரெ. (20)

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வான்மதேவர் பிறவார். அங்ஙனமே இறவார். அங்ஙனமே ஒருகாலும் முன்னரில்லாதவராய் மீண்டும் உற்பத்தியுடையவராகார். எதனாலெனின், இவ்வான்மதேவர் அஜர், நித்தியர், சாஶ்வதர், புராணர் என்னும் அதனாலென்ப, அத்தகைய ஆன்மதேவர் சரீரம் ஹனனமாயினும் ஹனனமாகார். (20)

(வி-ம்.) பிறத்தல், இருத்தல், வளர்தல், அயலொன்றுய் விளைந்தமைதல், தேய்தல், அறமாய்தல், என்னும் ஆறுபாவ விகாரங்கள் சாஸ்திரங்களின்கண்ணே கூறப் பெற்றுள்ளன. ஆவ்வாறனுள் ஆதியதாய பிறப்புருவ விகாரத்தையும் அந்தத்ததாய அறமாய்தலுருவ விகாரத்தையும் ஸ்ரீ பகவான் கண்டித்தருள்கின்றுர் ''நஜாயதெ ம்ரியதெவா'' என, ஹே அர்ச்சுன! இவ்வான்மதேவர் பிறப்பையடையார்; ஏனெனின், இவ்வான்மதேவர் எக்காலத்தும் முன்னரில்லாதவராய்ப் பின்னர்ப் பிறப்புடையவராயிரார்கள். எப்பொருள் முன்னில்லாததாய்ப் பின்னுண்டாமோ அப்பொருளே பிறப்புருவ விக்கிரியையடையும். கடபடாதி பதார்த்தங்கள் முன்னில்லாதனவாய்ப்பின்னருண்டாம், ஆதலின் அவைபிறப்புருவ விகாரமுடையனவுமாம். இவ்வான்மதேவரோ முற்காலத்தும் உளர். ஆதலின் இவர் பிறப்புருவ விகாரத்தை யடைந்திலர். இக்காரணத்தால் இவர் அஜர். இவ்வான்மதேவர் இறப்புருவ விகாரத்தையு மடையார். ஏனெனின், இவர் முற்காலத்தே யிருந்து ஒருகாலும் பிற்காலத்தே இல்லாதவராகார். எப்பொருள் முற்காலத்திருந்து பிற்காலத்தில்லாததாமோ அப்பொருளே இறப்புருவ விகாரத்தையடையும். கடமுதலிய பதார்த்தங்கள் முற்காலத்திருப்பனவாய்ப் பிற்காலத்தே இல்லாதனவாம். ஆதலின், அவை இறப்புருவ விகாரத்தையும் அடையும். இவ்வான்மதேவரோ, பிற்காலத்தும் இருக்கின்றனர். ஆகையால், இவர் இறப்புருவ விகாரத்தையடையார், இக்காரணத்தால் இவ்வான்மதேவர் நித்தியர்விநாசமாதற்கு யோக்கியரல்லர். ஈண்டு 'நஜாயதெ ம்ரியதெவா' என்னும் வசனத்தால் ஆன்மதேவரின் பிறப்பிறப்பின் அபாவப்பிரதிஞ்ஞை செய்யப்பட்டது. 'கூடஸ்தோ நித்யம் ஹ்யேகூவா ஹவிதாவாநஹ்யயஃ' என்னும் இவ்வசனத்தின்கண் இராநின்ற பதங்களே இருவிதமாய் யோஜனைசெய்து, அந்தப்பிரதிஞ்ஞை விரித்துரைக்கப்பட்டது. 'சுஜோ நித்யஃ' என்னும் வசனத்தால் அந்தப் பிரதிஞ்ஞை உபசம்ஹாரம் செய்யப்பட்டது. ஈண்டுப் பிறப்பு முதலிய ஆறுவிகாரங்களுள் பிறப்புருவ முதல்விகாரமும் இறப்புருவ முடிவுவிகாரமுமாய இரண்டின் நிஷேதத்தானே அவற்றின் இடையிலுள்ளனவும் அவற்றின் வியாப்பியங்களுமாய நான்கு விகாரங்களின் நிஷேதமுண்டாதல் கூடும். என்றுலும், ஈண்டுக் கூறுத போக்குவரவு முதலிய விகாரங்கள் யாவற்றையும் அறிவிக்கும் பொருட்டு, ஸ்ரீ பகவான் தேய்தல், வளர்தல் என்னும் இரண்டு விகாரங்களையும் சாப்வதர், புராணர் என்னும் இரண்டு சப்தங்களால் நிஷேதம் செய்தருளுகின்றுர் 'ஸாஸ்வத' என, ஆண்டு இவ்வான்மதேவர் கூடஸ்தத் தன்மைவடிவ நித்தியத்தன்மையை யுடையவர். ஆகையால், இவ்வான்மதேவர் சொரூபமாய்த் தேய்தலையடையார். இவர் நிர்க்குணர் ஆதலின் இவர் குணத்தானும் தேய்தலையடையார். இக்காரணத்தானே இவ்வான்மதேவர் சாப்வதர். எவ்வஸ்து தேய்தல் விருத்தியற்றதாய் எல்லாக்காலத்தும் இராநிற்குமோ, அவ்வஸ்துவின் பெயர் சாப்வதமாம். அத்தகையர் இவ்வான்மதேவரே யாவர்.

சங்கை :—ஹே பகவன்! இவ்வான்மதேவர் தேய்தலையடைய வேண்டாம், விருத்தியை ஏன் அடையலாகாது? என அர்ச்சுனன் சங்கிப்ப :

சமாதானம் :—ஸ்ரீ பகவானருளிச் செய்கின்றுர் 'வ்ருத்தாணி' ஹே அர்ச்சுன! இவ்வான்மதேவர் இதற்கு முன்னரேயும் நவீனரேயாவர், இப்போது மாத்திரம் இவ்வான்மதேவர் நவீன அவஸ்தையை யடையவில்லை. ஆகையால் இவ்வான்மதேவர்புராணராவர். கருத்திதுவாம் :—எப்போதும் இவ்வான்மதேவர் ஏகரூபர் ஆவர், இவ்வுலகின்கண் எப்பொருள் வளர்தல்வடிவ நவீன அவஸ்தையையடையுமோ அப்பொருளே விருத்தியை யடையாநிற்கும்; சரீராதி பதார்த்தங்களைப்போல, இவ்வான்மதேவரோ எக்காலத்தும் ஏகரூபராதலின் குறைதலேயெனும்

வளர்தலேயனும் அடையார். இக்காரணத்தால் இவ்வான்மதேவர் விருத்தியை யடைவதின்றும். ஈண்டுச் சுரமுதலிய நோய்களால் சரீர அவயவங்களின் கூனைத் தன்மை, அபசய மென்னும் குறைதல் எனப்படும். உண்டி முதலியவற்றை யுண்ணலால் சரீர அவயவங்களின் விருத்தி, உபசய மென்னும் வளர்தல் எனப் படும். ஈண்டு உளவாதல், அயலொன்றுய் விளைந்தமைதல் என்னும் இரண்டு விகாரங்களும் பிறப்பு இறப்பு என்னும் இரண்டு விகாரங்களுக்குள் அடங்கும். ஆகையால், அவ்விரண்டையும் தனித்து நிஷேதிக்கவில்லை; பிறப்பிறப்பின் நிஷேத த்தால் உளவாதல், அயலொன்றுய் விளைந்தமைதல் என்னும் இரண்டின் நிஷேதங் களையும் அறிந்துகொள்க. ஹே அர்ச்சுன! எக்காரணத்தால் இவ்வான்ம தேவர் பிறப்பு முதலிய சர்வ விகாரங்களு மற்றவராவரோ, அக்காரணத்தால் சஸ் திராதி உபாயங்களால் இத்தேகம் கொல்லப்படினும், இச்சரீரத்தோடு கற்பித சம்பந்தத்தை இவ்வான்மதேவர் அடைந்திருப்பினும், இவ்வான்ம தேவர் எவ் வுபாயத்தானும் கொல்லப்படார். கடரூப உபாதி நாச முறினும் ஆகாசம் நாச மாகாததேபோல, தேகாதி யுபாதிகள் நாசமுறினும் ஆன்மாவின் நாசமுண்டாக மாட்டாது.

ஆ-சு. "அவிநாஶீவாऽமேயஸ்ய"

(போ-ள்.) ஹே மைத்திரேயி! இவ்வான்மதேவர் விநாசமற்றவர். (20)

(அ-கை.) முன்னர் 'யஸ்ஸர்வேத்யுஹஜாஸ்ய' என்னும் சுலோகத்தின்கண் 'நாயம்ஹந்தி நஹந்யதே' என்னும் வசனத்தால் ஆன்மா எவரையும் கொல்வது மில்லை, எவராலுங் கொல்லப்படுவதுமில்லை யெனப்பிரதிஜ்ஞை செய்யப்பட்டது. அவற்றுள், ஆன்மா எவராலும் கொல்லப்படுவதில்லை என்னும் பிரதிஜ்ஞையைப் பூர்வ சுலோகத்தின்கண் விஸ்தாரமாய்க் கூறியருளினர். இப்போது ஆன்மா எவரையுங் கொல்வதில்லை யென்னும் பிரதிஜ்ஞையை விரித்தருளுவான்; ஸ்ரீ பகவான் பூர்வப் பிரசங்கத்தை உபசங்காரம் செய்தருளுகின்றார்:—

சு-ம். வெஉவிநாஶி நம் நித்யம்யஸ்ய நஜஉவ்யயம்।
கயம்கஸ்வ ஹந்தி கஸ்ஸ வாயஉகம்வாதயதி ஹந்தி கம்॥ (21)

ப-ம். 8 வெஉ 4 கவிநாஶி நம் 5 நித்யம் 2 யஸ் 3 ஹநம் 6 கஜம் 7 கவ்யயம் 13 கயம் 9 ஹஸ் 10 வேத 1 வாயஉ 14 கம் 15 வாதயதி 12 ஹந்தி 11 கம்.

(அ-ம்.) ஹே பார்த்த! யாவன் இவ்வான்மதேவரை அவிநாசி வடிவமாயும், நித்தியவடிவமாயும், அஜவடிவமாயும், அவ்யயவடிவமாயும் அறிவனே, அவன் யாரைக் கொல்வன், எவ்வகையாற் கொல்வன், அவன் எவரைக் கொல்விப்பன், எவ்வகையாற் கொல்விப்பன்; மற்றே, அவன் யாவரையும் கொல்லான் எவரை யுங் கொல்வியான். (21)

(வி-ம்.) விநாசமாமியற்கையற்றதியாதோ அது அவிநாசி யெனப்படும். அத்தகைய விநாசரூப ஈற்றுவிகாரமற்ற ஆன்மாவின் அவிநாசித் தன்மையில் ஹேது கூறியருளப் படுகின்றது. 'கவ்யயம்' என, எதன்கண்ணே அவயவங் களின் குறைவுவடிவ வியயமும் (நாசமும்) குணங்களின் குறைவுவடிவ வியயமும் இன்றுமோ அது அவ்யயம் எனப்படும். இவ்வுலகின்கண்ணே படம் முதலிய பதார்த்தங்களின் விநாசம் நூன்முதலிய அவயவங்களின் குறைவானும், உருவ முதலிய குணங்களின் குறைவானும் காணவருகின்றது. இவ்வான்மதேவரோ, நிரவயவராதலின், அவயவங்களின் குறைவற்றவராவர், அங்ஙனமே நிர்க்குணராத லின்: குணங்களின் குறைவற்றவராவர். ஆகையால், இவ்வான்மதேவருக்கு ஒரு

காலும் விநாசம் சம்பவியாது. இது கூறியது கொண்டு இவ்வனுமானம் சித்தமாயதாம்:—ஆன்மா, அவிநாசி யாதற்குத் தகுதியாயதாம்; அவ்யயமாதலின், எப்பொருள் அவிநாசியாகாதோ, அப்பொருள் அவ்யயமும் அன்றும், படம் முதலிய பதார்த்தங்களைப் போல.

சங்கை:—ஹே பகவன்! ஆன்மா விநாசியாதற்கு யோக்கியமாம், ஜன்னியமாதலின் கடாதிகளைப்போல என்னும் ஜன்னியத்தன்மை ஹேதுவால் ஆன்மாவின்கண் விநாசித்தன்மையின் அனுமானமும் உண்டாகக் கூடுமன்றே?

சமாதானம்:—என்னும் அர்ச்சுனனது சங்கையை நிவிருத்தித் தருளும் பொருட்டு ஸ்ரீ பகவான் ஆன்மாவின்கண் அந்த ஜன்னியத்தன்மை ஹேதுவின் அசித்தியைக் கூறியருளுகின்றார்:—'அஜம்' என, ஒருகாலும் ஜன்மத்தையடையாதது அஜமாம். அத்தகைய ஜன்மரூப முதல்விகாரமற்றது ஆன்மாவாம். அவ்வஜத் தன்மையின்கண்ணே துவை யருளிச்செய்கின்றார்:—'நித்யம்' என, யாதெக்காலத்து மிருக்குமோ, அது நித்தியமாம். இவ்வுலகின்கண்ணே எப்பொருள் முன்னரிராதோ, அப்பொருட்கே ஜன்மத்தைக்கண்டோம். கடபடாதி பதார்த்தங்கள் தமதுற்பத்தியின் முன்னரில்லாதனவாயே பின்னர் ஜன்மத்தை யடைகின்றன போலவா மென்றுணர்க. இவ்வான்ம தேவரோ, எக்காலத்தும் இருக்கின்றனர். ஆகையால், இவர்க்கு ஒருகாலும் ஜன்மம் சம்பவியாது, இது கூறியதுகொண்டு இவ்வனுமானம் துணியப்பெற்றதாம்:—ஆன்மா, ஜன்மமற்றிருப்ப யோக்கியமாம், நித்தியமாதலின் எப்பொருள் ஜன்மமற்றதன்றோ மோ, அப்பொருள் நித்தியமுமன்றும்; கடாதி பதார்த்தங்களைப் போல, அல்லது அவிநாசி யென்னும் பதத்தால் பாதமற்ற சத்தியவஸ்துவின் கிரகணம் செய்க. நித்திய சப்தத்தால் யாண்டும் வியாபகவஸ்துவின் கிரகணம் செய்க. அதன் கண்ணேதுவைக் கூறியருளுகின்றார். 'அஜம் அவ்யயம்' என, ஈண்டு, ஜன்மமற்ற வஸ்துவின் பெயர் அஜமாம். நாசமற்ற வஸ்துவின் பெயர் அவ்யயமாம். இவ்வுலகின்கண்ணே எப்பொருள் உற்பத்தியுடையதாமோ, நாசமுடையதாமோ, அப்பொருள் சத்தியரூபமும் யாண்டும் வியாபகவடிவமு மாகாது. தோற்றங் கேடுகளையுடைய கடாதிகள் சத்தியரூபமும் யாண்டும் நிறைந்த வடிவமுமன்றும். இவ்வான்ம தேவரோ, தோற்ற மாற்றங்களற்றவர். ஆகையால், இவர் சத்தியரூபரும், யாண்டும் நிறைந்த வடிவினருமாவர். இது கூறியது கொண்டு இவ்வனுமானம் துணியப் பெறும்:—ஆன்மா, அவிநாசியும் நித்தியமாவதற்குத் தகுதியதுமாம், அஜமும் அவ்யயமும் ஆதலின், எப்பொருள் அவிநாசியும் நித்தியமும் அன்றுமோ, அப்பொருள் அஜமும் அவ்யயமும் அன்றும்; கடாதி பதார்த்தங்களைப்போல, இவ்வண்ணம் அவிநாசிரூபமாயும், நித்தியரூபமாயும், அஜரூபமாயும், அவ்யயரூபமாயும் இராநின்ற ஆன்மதேவரை யாவன் குருசாஸ்திரோப தேசத்தால், யான் ஜன்மாதி சர்வ விகாரங்களுமற்றவன், மதிமுதலிய சர்வ பதார்த்தங்களையும் ஒளிர்விப்பவன், எல்லாத்துவைதப் பிரபஞ்சமுமற்றவன், பரமானந்த போதரூபன் எனச் சாக்ஷாத்கரிப்பனோ, அவ்வறிஞன் எவரைக் கொல்வன், எவ்வகையாற் கொல்வன். மற்றோ, அவ்வறிஞன் எவரையும் கொல்லான், எவ்வகையானும் கொல்லான். அவ்வித்துவான் எவரைக் கொல்விப்பன், எவ்வகையாற் கொல்விப்பன். மற்றோ, அவ்வறிஞன் எவரையும் கொல்வியான், எவ்வகையானும் கொல்வியான். ஏனெனின், ஜன்மாதி யெல்லா விகாரங்களுமற்றவனும், கர்த்துருத்தன்மை யற்றவனும் ஆய அறிஞனுக்கு ஹனன ரூபக்கிரியையின்கண் சாக்ஷாத் கர்த்துருத் தன்மையும் பிரயோஜகக் கர்த்துருத் தன்மையும் சம்பவியா.

ஆ-சு. சூதாநம்ஹெஷி ஜாநீயாஹயஸ்ஹீதிவாமஸுஷ்ஃ
கிலிஹுக்ஹுயகாஸாய ஸாரீஸநா வாஜ்ஹுஸெகூ.

(போ-ள்.) இவ்வறிஞன் எப்போது பரிபூரண அத்விதீய பிரஹ்மம் யான் என ஆன்மாவை யறிவதோ, அப்போது எவ்வஸ்துவை இச்சித்து, யாவர்க்கென்ன பயனின் பொருட்டு இச்சரீரத்தைச் சந்தாபப்படுத்துவன்; மற்றோ படுத்தான். என்னுமிச்சுருதியானது சுத்த ஆன்மாவையறியும் வித்துவானிடத்தே கர்த் துருத் தன்மை போத்துருத் தன்மை முதலிய சம்சார அபாவத்தை யுணர்த்தும். கருத்திதுவாம்:—சுத்த ஆத்மாவின் ஞானத்தால் இவ்வறிஞனது அஞ்ஞான நிவிருத்தியுண்டாம். அவ்வஞ்ஞானம் நீங்கவே யான் எனது என்னும் அத்தியா சம் நீங்கும். அவ்வத்தியாசம் நீங்கவே இராகத் துவேஷாதிகள் நீங்கும். அந்த இராகத் துவேஷாதிகள் நீங்கவே, கர்த்துருத்துவ போத்துருத்துவம் முதலியன நீங்கும். இவ்வாறு ஆன்மாவின் ஞானமே சர்வ அனர்த்த நீக்கத்தின் காரண மாம். ஈண்டு இச்சுலோகத்தின்கண் ஸ்ரீ பகவானுடைய கருத்திதுவாம்:—உண் மையாய் விசாரித்துப் பார்க்கிலோ, இவ்வான்மதேவர் சர்வவிகாரமுமற்றவர்; ஆத லின் எவரும் எக்காரியத்தையும் செய்யார் செய்வியார். ஆயினும் இம்மூடர் அஞ் ஞானவயப்பட்டவராய் கலைவிற்போல, தமதான்மாவில் கர்த்துருத்துவாதி தர்மங் களையங்கீகரித்துளார். இவ்வார்த்தை 'உஹளதள நவிஜாநீதஃ' என்னுங் கீதாவச னத்தானே முன்னர்க் கூறிவந்தோம். ஆண்டுச்சுருதியுமுளது:—"யஸ்யாத்மவயேவ யாத்மவ" பொருளிதுவாம்:—உண்மையாய்ச் சர்வ விகாரமுமற்ற இவ்வான்மதேவர் புத்திரூப உபாதி தியானம் செய்யும்போது, தியானம்செய்பவர் போன்றும், புத்தி ரூப உபாதி கலிக்கும்போது, கலிப்பவர் போன்றும் தோற்றுவர். இக்காரணத்தாற் சர்வ சாஸ்திரங்களும் அவித்வானைய அதிகாரியின் பொருட்டே கூறப்பட்டுள்ளன. வித்வானைய புருஷன் பொருட்டு எச்சாஸ்திரமுமின்றும். ஏனெனின், அந்தவித் வானைய புருஷனோ, ஆன்மஞானத்தால் அஞ்ஞானரூப மூலத்தோடு கூடிய அத்தி யாசத்தை நீக்கியுள்ளான். ஆன்மாவின்கண் கர்த்துருத்துவ முதலியவற்றை யுடன்படான். கட்டையின் உண்மைவடிவத்தை யுணர்ந்தவன் அக்கட்டையின் கண் கள்ளத்தன்மையை எண்ணுதோதேபோல, ஆன்மாவின் அகர்த்துருத்தன்மை முதலிய உண்மை வடிவத்தையறிந்த அறிஞன் அவ்வான்மாவின்கண் கர்த்துருத் தன்மையை யுடன்படுவதில்லை. இதனாலிது துணியப்பெறும்:—சர்வ விகாரங் களை மற்றவனதலினாலும், அத்விதீயரூப மாதலினாலும், அறிஞன் ஹனனாதிய செயலைச் செய்யான் செய்வியான்.

ஆ-சு. "சூநம்ஃம வ்ரஹ்மணோவித்வாந நவிஹெதிகூதஶ்சந."

(போ-ள்.) பிரஹ்மத்தின் சொரூபபூத ஆநந்தத்தையறிந்த அறிஞன் எவற் றினின்றும் பயத்தையடையான். ஈண்டு உபாயத்தின் நிஷேதம் சர்வ விகாரங் களின் நிஷேதத்தின் உபலக்ஷகமாம். இவ்வண்ணம் உண்மையாய் ஆன்மாவின் கண் கர்த்துருத்துவாதிகளின் அபாவம் உண்டாயினும், அவ்வர்ச்சுனன் தன் னிடத்தே அவ்வனன ரூபக்கிரியையின் கர்த்துருத்தன்மையை யாரோபித்தும், ஸ்ரீ பகவானிடத்தே அவ்வனன ரூபக்கிரியையின் பிரயோஜக கர்த்துருத்தன் மையை ஆரோபித்தும், தன்னிடத்தும், ஸ்ரீ பகவானிடத்தும், அவ்விம்மையா லுண்டாம் தோஷ சங்கையைச் செய்தனன். ஸ்ரீ பகவானும் அர்ச்சுனனுடைய கருத்தை யறிந்தருளி அவ்வர்ச்சுனனிடத்தே ஹனன ரூபக்கிரியையின் கர்த்து ருத்தன்மையை நிஷேதஞ் செய்தருளினர். தம்மிடத்தேயும் அவ்வனன ரூபக் கிரியையின் பிரயோஜக கர்த்துருத்தன்மையை நிஷேதஞ் செய்தருளினர்.

ஆண்டு எப்புருஷன் தான் அந்தக் கிரியையைச் செய்திலனுய், அந்தக் கிரியையின் கண் பிறரையேவுவனேனு, அப்புருஷன் பிரயோஜகக் கர்த்தாவெனப்படுவன். கருத்திதுவாம் :—இவ்வான்மதேதவர் உண்மையாய்ச் சர்வ விகாரங்களுமற்றவர். ஆதலின், உன்னிடத்தே அவ்வனனரூபக் கிரியையின் கர்த்துருத்தன்மையை யாரோபித்துக்கொண்டு, எம்மிடத்தே ஹனனரூபக் கிரியையின் பிரயோஜகக் கர்த்துருத்தன்மையை ஆரோபித்து, நீ பாவ அடைவின் சங்கையை ஒருகாலும் செய்பற்க. ஈண்டு ஸ்ரீ பகவான் ஆன்மாவின்கண் அவிக்கிரியத்தன்மையைக் காண்பித்தருளிக் கர்த்துருத்தன்மையை நிஷேதித்தருளினர். இதனலிஃதறிந்து கொள்ளலாமன்றே :—ஸ்ரீ பகவானுக்குச் சர்வ கர்மங்களின் நிஷேதத்தில் தாற்பரியமாம். கேவலம் ஹனனரூபக் கிரியையின் நிஷேதத்தின்கண்ணே தாற்பரியமின்றும். ஆகையால், மூல சுலோகத்தின்கண் கேவலம் ஹனனக்கிரியையின் எந்நிஷேதம் செய்யப்பட்டுளதோ, அந்நிஷேதம் எல்லாக் கர்மங்களின் நிஷேத உபலக்ஷகமாம். மூற்பிரசங்கத்தின்கண் ஹனனரூபக் கிரியையே யடையப்பெற்றதாம். அதனல், ஸ்ரீ பகவான் அவ்வனனரூபக் கிரியையின் நிஷேதத்தைச் செய்தருளினர். ஆனல் அவ்வனனரூபக்கிரியையை நிஷேதித்ததால் எல்லாக் கர்மங்களின் நிஷேதமே ஸ்ரீ பகவானுக்குச் சம்மதமாம். ஏனெனின், அவிக்கிரியத்தன்மைரூப ஹேதுவானது ஆன்மாவின்கண் எங்ஙனம் ஹனனரூபக் கிரியையின் நிஷேதத்தைச் செய்ததோ, அங்ஙனம் வேறு சர்வ கர்மங்களையும் நிஷேதஞ்செய்ததாம். கேவலம் ஹனனரூபக் கிரியையின் நிஷேதஞ் செய்யவில்லை. இக்காரணத்தாலே 'தஸ்யகார்ய-ஃ० கவிஜ்யதே' என்னும் வசனத்தால் ஸ்ரீ பகவான் தாமே சர்வ கர்மங்களின் நிஷேதத்தை இனிக் கூறியருளப்போகின்றார். இது கூறியதால், இவ்வகையாய மூடர்களின் சங்கையும் கண்டனமாயதனக்காண்க. அச்சங்கையிதுவாம் :—'கஃவாதயதிஹகிகஃ' என்னும் வசனத்தால் ஸ்ரீ பகவான் கேவலம் ஹனனரூபக் கிரியையை நிஷேதஞ்செய்தருளினர்; வேறுகர்மத்தை நிஷேதஞ்செய்தருளிலர். ஆதலின், அவ்வனனரூபக் கர்மத்தினும் வேறுய கர்மமோ, ஸ்ரீ பகவானுக்கும் செய்யற்பாலதாமென உடன்பாடாம் என்பதே. இவ்வகை கூறும் வாதியின் சங்கை சம்பவியாது :—ஏனெனின், 'தஹாஉ ுஉஹாத' என்னும் வசனத்தால் ஹனனரூபக் கர்மத்தையோ, ஸ்ரீ பகவான் தாமே விதானம் செய்தருளினர். ஆகையால், 'கஃவாதயதிஹகிகஃ' என்னும் இவ்வசனத்திற்கு ஆன்மா உண்மையாய் ஹனனக்கிரியையின் கர்த்தாவன்று என்னும் பொருளே அங்கீகாரஞ் செய்யவேண்டிவரும். ஆன்மாவின்கண் உண்மையாய்க் கர்த்துருத் தன்மையின் அபாவம் ஹனனரூபக் கிரியையின்கண் இருப்பதேபோல, வேறு கர்மத்தின்கண்ணும் சமானமேயாம். (21)

(அ-கை.) ஹே பகவன்! முற்புகன்றருளிய சுருதியுக்திகளால் ஆன்மாவின்கண்ணே, அவிநாசித் தன்மையே துணியப்பெறுமாயினும், இத்தூல சரீரங்களில் அவ்வவிநாசித் தன்மையின்றும். மற்றே, இச்சரீரம் நாசமுடையதாம். இச்சரீரங்களை நாசம் செய்யும் சாதனம் இப்போராம். ஆதலின், அநேக புண்ணிய கர்மங்களின் சாதனரூபமாய இப்பீஷ்மத் துரோணுதியரின் சரீரங்களைப் போர்புரிந்து பொன்றவைத்தல் எனக் கெங்ஙன முசிதமாம். மற்றே, இப்பீஷ்மத் துரோணுதியரின் சரீரத்தை நாசம் செய்தல் எனக்கு உசிதமன்றும் என்னும் அர்ச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் உத்தரமருளிச் செய்கின்றார் :—

சு-மி. வாஹாம்ஸி ஜீணாநி யதாவிஹாய நவாநி க்ருஹ்ணாதி நரோபராணி।
ததா சரீராணி விஹாய ஜீணாந்யந்யாநி ஸம்யாதி நவாநி தெஹீ ॥

ப-ம். 4 வாஹாம்ஸி 3 ஜீர்ணான்யதா 1 யதா 5 விஹாய 7 நவானி 8 மநுஷ்யாணி 2 ததா 6 சுவாநாணி 9 ததா 12 ஸரீராணீ 13 விஹாய 11 ஜீர்ணான்யந்யானி 14 சுபாநி 16 ஸம்யாதி 15 நவானி 10 தேஹீ. (22)

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எங்ஙனம் இப்புருஷன் கிழிந்த வஸ்திரத்தை எறிந்துவிட்டு வேறு புதிய வஸ்திரத்தைக் கவர்வனோ அங்ஙனம், இத்தேகியும் இச்சரணமாய சரீரத்தைப் பரித்தியாகம் செய்து, வேறு நவீன சரீரத்தை யடைவன்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எங்ஙனம் விக்கிரியை யற்றவனுயே இப்புருஷன் முன்னருள்ள தாழ்வாய ஜீர்ண வஸ்திரத்தைப் பரித்தியாகம் செய்து, வேறு உயர்வாய நவீன வஸ்திரத்தைக் கவர்வனோ, அங்ஙனம் உத்தம தர்மங்களைச் செய்யும் இந்தப் பீஷ்மத்துரோணுதி தேகிகளும் அவஸ்தையாலும், தவத்தாலும் இளைத்திருக்கும் இப்பீஷ்மாதி நாமங்கள் வாய்ந்த சரீரங்களைப் பரித்தியாகம் செய்து, முன்னர்ச் சம்பாதித்துள்ள புண்ணிய கர்மங்களின் பலத்தை யனுபவிக் கும்பொருட்டு, யாவற்றினும் மேலாய தேவதை முதலிய சரீரங்களை யடைவர்.

ஆ-சு. "சுநயுநவதரம் கயுர்ணதரம் ரூபவம் கரோதி
விதரயம்வா மாம்யவரம்வா மெவம்வா வ்ராஜாவதயம்வா வ்ராஹ்மம்வா."

(போ-ள்.) இஜ்ஜீவான்மா முற்சரீரத்தைப் பரித்தியாகம்செய்து, புண்ணியகர் மங்களின்வயத்தால்பிதுர்லோகத்தின்கண்ணேனும், கந்தர்வலோகத்தின்கண்ணே னும், தேவலோகத்தின்கண்ணேனும், பிரஜாபதிலோகத்தின்கண்ணேனும், பிரஹ்ம லோகத்தின்கண்ணேனும் வேறுமேலாய தேவதைமுதலிய சரீரங்களையடையும். இது கூறியதுகொண்டு இது துணியப் பெறும்:—ஜீவனகாலம்வரை செய்த தர்ம அனுஷ்டானத்தால் உண்டாய கிலேசத்தால், அத்தியந்தம் மெலிந்த மேனிகளை யுடைய இப்பீஷ்மத் துரோணுதியர் இந்நிகழ்கால சரீர அழிவின்றி, அத்தர் மானுஷ்டான பல மனுபவிப்பதிற் சமர்த்தராகார். மற்றே, அச்சுவர்க்கம் முதலிய சுகங்களின் அடைவின்கண்ணே தடையாய இந்நிகழ்கால சரீரம் நாச மான பின்னரே அந்தப் பீஷ்மத்துரோணுதியர் அச்சுவர்க்கம் முதலிய சுகங்களைப் போகிப்பதிற் சமர்த்தராவர். ஆகையால், தர்மப் போர்புரிந்து நீ இப்பீஷ்மத் துரோணுதியரின் நிகழ்கால சரீரங்களை வீழ்த்தின், இவர் ஜீர்ண சரீரரூபத் தடையற்றவராய்ச் சுவர்க்காதி லோகங்களில் திவ்விய சரீரங்களை யடைந்து, நானுவகையாய சுகங்களையடைவர் இது, அவர்கட்கு நீ பேருபகாரம் செய்ததே யாகும். ஆகையால் அவர்கட்குப் பேருபகாரம் செய்யும் இப்போரின்கண் அபகா ரத்தன்மை மதிவடிவ மயக்கத்தை நீ யடையா தொழிதி, என்னும் இவ்வகையாய ஸ்ரீ பகவானது கருத்தை 'சுவாணி சுநயாநிஸம்யாதி' என்னும் முப்பதங்க ளைக் கூறியருளியதாலறிந்து கொள்ளலாம். ஓருரையின்கண்ணே இச்சுலோகத் திற்கு இவ்வபிப்பிராயம் வர்ணனம் செய்யப்பட்டுளது. இத்தேவதத்தாதி நாம முடைய புருஷர் முன்னுள்ள கந்தைத்துணிகளை எறிந்துவிட்டு, வேறு புதிய வஸ்திரங்களைக் கவர்வர். அதுபோல, இத்தேகியாய ஆன்மாவும் முன்னுள்ள ஜீர்ணசரீரங்களைப் பரித்தியாகம் செய்து, வேறு நவீன சரீரங்களை யடையும். ஆண்டு எங்ஙனம் வருகை, செல்கை, நாமரூபாதிகளின் விசித்திரதை, சிதிலதை முதலிய சர்வவிகாரங்களும் அவ்வஸ்திராதிகளின்கண்ணே யுண்டாமோ, புருஷ னிடத்தே அவ்விகாரங்கள் உண்டாகாவோ, அங்ஙனம் உற்பத்தி நாசாதி சர்வ விகாரங்கள் இச்சரீரத்தின்கண்ணே யுண்டாம். நிரவயவ ஆன்மாவின்கண்ணே அவ்வுற்பத்தி நாசாதி விகாரங்களுண்டாகா. இத்துணை கூறியதால் ஆன்மாவின்

கண் தேக இந்திரியாதிகளினின்றும் வேறாந் தன்மையும், சர்வவிகாரங்களுமற்ற தன்மையும் நித்தியத்தன்மையும் குறிப்பிக்கப்பட்டன. (22)

(அ-கை.) ஹே பகவன்! எங்ஙனம் அக்கினியால் சிருகம் தகிக்கப்படின், அக்கிருகத்தின்கண் அகப்பட்ட புருஷனும் தாகமாய் விடுவனே, அங்ஙனம் இத் தூலதேகம் நாசமுறின், அத்தேகத்துள் இராநின்ற ஆன்மாவிற்கும் நாசமுண்டாம் என்னும் அர்ச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் உத்தரம் கூறியருளுகின்றார் :—

சு-ம். நைநம் சிம்ʼதி ஸஸ்த்ராணி நைநம் தஹதி பாவகः ।
நசைநம் க்லேதயந்த்யாபோ நஸோஷயதி மாருதः ॥ (23)

ப-ம். 3 ந 1 வநம் 4 சிம்ʼதி 2 ஸஸ்த்ராணி 7 ந 5 வநம் 8 தஹதி 6 பாவகः
12 ந 9 ம 10 வநம் 13 க்லேதயந்தி 11 மாபः 15 ந 16 ஸோஷயதி 14 மாருதः.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வான்மாவை வாள் முதலிய சஸ்திரங்களும் வெட்டமாட்டா, இவ்வான்மாவை அக்கினியும் தகிக்கமாட்டாது, இவ்வான்மாவை ஜலமும் நனைக்கக் கரைக்கமாட்டாது, இவ்வான்மாவை வாயுவும் உலர்த்த மாட்டாது.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எங்ஙனம் வாள்முதலிய கூர்மையாய சஸ்திரங்கள் இத்தூல சரீரத்தைச் சேதிக்குமோ, அங்ஙனம் இவ்வான்மாவைக் கூர்மையாய சஸ்திரமும் சேதிக்கமாட்டாது; எங்ஙனம் அத்தியந்தம் ஓங்கி எரியாநின்ற அக்கினியானது இச்சரீரத்தைப் பஸ்மம் செய்யுமோ, அங்ஙனம் அவ்வோங்கி எரியாநின்ற அக்கினியும், இவ்வான்மாவைப் பஸ்மம் செய்யமாட்டாது. எங்ஙனம் அத்தியந்தம் வேகமுடைய நீரானது இச்சரீரத்தை நனைத்துக் கரைக்குமோ, (அவயவங்களைச் சிதிலம் செய்யுமோ) அங்ஙனம் அவ்வத்தியந்தம் வேகமுடைய நீரும் இவ்வான்மாவை நனைக்கக் கரைக்கமாட்டாது. எங்ஙனம் அத்தியந்தம் பிரபலமான வாயுவானது, இச்சரீராதிகளைச் சாரமற்றதா யாகுமாறு உலர்த்துமோ, அங்ஙனம் அவ்வத்தியந்தம் பிரபலமாய வாயுவும், இவ்வான்மாவை உலர்த்தமாட்டாது. ஈண்டு எத்துணை நாசம்செய்யும் பொருள்களுளவோ, அவை யாவுமே ஆன்மாவின்கண்ணே நிஷேதிக்கத் தக்கனவாய் விரும்பப்படுவனவாமாதலின், கேவல சஸ்திராதிகளே நிஷேதித்தல் உசிதமன்றும். ஆயினும், போர்ச்சமயத்தே அச்சஸ்திராதிகளே பிராப்தங்களாம். ஆதலின், ஸ்ரீ பகவான் அச்சஸ்திராதிகளையே நிஷேதம் செய்தருளினர். அந்நிஷேதம் நாசஞ் செய்யும் சர்வ பதார்த்தங்களின் உபலக்ஷகமாம். அல்லது இவ்வுலகின்கண்ணே, பிருதிவி, ஜலம், அக்கினி, வாயு என்னும் நான்கன்கண்ணே நாச காரணத்தன்மை காணவருகின்றது; ஆகாசத்தின்கண்ணே எப்பொருளின் நாசகாரணத்தன்மையும் காணவருவதின்றும். ஆகையால், ஈண்டுப் பிருதிவி, ஜலம், தேயு, வாயு என்னும் நான்கு பூதங்களையே கூறியருளினர்; ஆகாசத்தைக் கூறியருளவில்லை. இவ்வுலகின்கண்ணே எத்துணை நாசகாரணங்களுளவோ, அவை யாவும் பிருதிவி முதலிய நான்கு பூதங்கட்கு உள்ளடங்கியவாம். ஆதலின், பிருதிவி முதலிய நான்கின் நிஷேதத்தால், நாசஞ்செய்யும் எல்லாப் பொருள்களின் நிஷேதமும் துணிதல் கூடும். ஆண்டு வாள் முதலிய சஸ்திரங்கள் பிருதிவி விசேஷத்தின் விகாரரூபமாதலின் பிருதிவி ரூபமேயாம். (23)

(அ-கை.) ஹே பகவன்! ஆன்மாவைச் சஸ்திராதிகள் நாசஞ்செய்யமாட்டா, எனப் பிரதிஞ்ஞை செய்தருளன் மாத்திரையானே அர்த்தத்தின் சித்தியுண்டாக மாட்டாது. மற்றே, யாதாவது ஏதுவிஞ்லே அர்த்தத்தின் சித்தியாம். ஆத வின், ஆன்மாவை அச்சஸ்திராதிகள் நாசஞ்செய்ய முடியாவென்னும் பிரதிஞ் ஞையின்கண்ணே ஹேது யாதாம்? என்று அர்ச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் அச்சஸ்திராதிகள் ஆன்மாவை நாசஞ்செய்யச் சமர்த்தற்றவை என்பதன் கண்ணும் ஆன்மாவிற்கு அவற்றாலுண்டாம் நாச அயோக்கியத் தன்மையின்கண் ணும் ஹேதுவைக் கூறியருளுகின்றார்.

சு-ம். ஈஷ்ஹெஒ்யாயஷூஹெ்யாய ஃக்ஷெஒ்யாஹொஷ்யஷவஅ।
நித்யஃ ஸவ-ழுமதஃ ஸ்தாணு-ஈஅசலொயம்ஹநாதநஃ ॥ (24)

ப-ம். 2 ஈஷ்ஹெஒ்யஃ 1 ஈயம் 4 ஈஷூஹெ்யஃ 3 ஈயம் 5 ஈக்ஷெஒ்யஃ 6 ஈஸொஷ்யஃ, ஸவ, அ 8 நித்யஃ 9 ஸவ-ழுமதஃ 10 ஸ்தாணு-ஃ 11 ஈஅசலஃ 7 ஈயம் 12 ஸநாதநஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வான்மா சேதிக்கத்தகாததாம்; அங்ஙனமே, இவ்வான்மா தகிக்கத்தகாததாம்; அங்ஙனமே, நனைக்கத்தகாததாம்; அங்ஙனமே, உலர்த்தத்தகாததாம்; அங்ஙனமே, இவ்வான்மா நித்தியமாம்; அங்ஙனமே, சர்வ கதமாம்; அங்ஙனமே, ஸ்தாணுவாம்; அங்ஙனமே, அசலமாம்; அங்ஙனமே, சநாத நமாம்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எக்காரணததால் இவ்வான்மா சேதித்தற்குக் கூடாததாமோ, அக்காரணத்தால் இவ்வான்மாவை வாள் முதலிய சஸ்திரங்கள் சேதிக்கமுடியா. எக்காரணத்தால் இவ்வான்மா தகித்தற்குக் கூடாததாமோ, அக்காரணத்தால் இவ்வான்மாவை அக்கினி தகிக்க முடியாதாம். எக்காரணத் தால் இவ்வான்மா நனைக்கக்கூடாததாமோ, அக்காரணத்தால் இவ்வான்மாவை ஜலம் நனைக்க முடியாதாம். எக்காரணத்தால் இவ்வான்மா உலர்த்தற்குக் கூடாத தாமோ, அக்காரணத்தால் இவ்வான்மாவை வாயு உலர்த்த முடியாதாம். இவ் வண்ணம் முறைப்படி சேதிக்கத்தகாதது என்னும் நான்கு ஹேதுக்களை முற் சுலோகத்தின்கண்ணே கூறியருளிய, பிரதிஞ்ஞையின்கண்ணே யோஜனை செய்து கொள்க. ஈண்டு 'ஸவஅ' என்னும் வசனத்தின்கண்ணே இராநின்ற 'ஸவ' என்னும் சப்தமானது அச்சேத்தியாதி நான்கிலேடும் சம்பந்தமுற்றதாய் ஆன்மா வின்கண்ணே சேத்தியத்வாதி தர்மங்களை நீக்கும். அதாவது, ஆன்மா அச்சேத் தியமே யாமன்றிச் சேத்தியமாகாது. இங்ஙனம் அதாஹியத் வாதிதர்மங்களிலும் அறிந்துகொள்க. "அ" என்னும் சப்தம் அவ் வச்சேத்தியத்வாதி நான்கையும், சமுச்சயம் (ஒருங்குகூடல்) செய்விப்பதற்காம். ஹே பகவன்! எவ்வச்சேத்யத் வாதி ஹேதுக்களின் வலிமையால் ஆன்மாவின்கண் சஸ்திராதிகளாக்கும் சேதித் தன் முதலியவற்றின் இன்மையைச் சித்தம் செய்தருளுகின்றீரோ, அவ்வச்சேத் யத்வாதி ஹேதுக்கள் ஆன்மாவின் கண்ணிராவாதலின், அவ்வச்சேத்யத்வாதி ஹேதுக்களால் ஆன்மாவின்கண்ணே சேதித்தன் முதலியவற்றின் இன்மை எங் ஙனம் சித்தமாம், என்னும் அர்ச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் அவ்வச்சேத்தியத்வாதி ஹேதுக்களைச் சித்தியாக்கி யருளும்பொருட்டுச் சுலோ கத்தின் பிற்பாதியால் ஹேதுவைக் கூறியருளுகின்றார். 'நித்யஃ' என. ஹே அர்ச்சுன! எப்பொருள் முற்பிற்றன்மையை யுடையதாமோ, அப்பொ ருள் அநித்தியமேயாம். கடாதியவஸ்துக்கள் முற்பிற் றன்மையுடையனவா மாதலின் அநித்தியங்களாம். இவ்வான்மாவோ, முற்பிற் றன்மையற்றவர் ஆதலின், நித்தியராம். நித்தியராதலினாலே இவ்வான்மாவர் உற்பத்தியற்றவர்.

எப்பொருள் யாண்டும் வியாபகமன்றுமோ, அப்பொருள் அநித்தியமேயாம். கட முதலிய பொருள்கள் யாண்டும் வியாபகமன்றும். ஆதலின், அநித்தியங்களே யாம்; அஃதொப்ப இவ்வான்மதேவரும் ஒருகால் யாண்டும் வியாபகரல்லராயின், அநித்தியரேயாவர். நையாயிகர் பிருதிவிமுதலியவற்றின் பரமாணுக்களை அவ் வியாபகமாக வுடன்பட்டும், நித்தியமாயே வுடன்பட்டுளார்; ஆகையால், யாதவ் வியாபகமாமோ, அஃதநித்தியமேயாம் என்னும் நியமம் சம்பவியாது. ஆயினும் வேதாந்த சித்தாந்தத்தின்கண். அநித்திய பரமாணுவின் உடன்பாடின்றும்; ஆகையால், அந்நியமத்தின் பங்கமாகாதாம். இவ்வான்மதேவரோ, இருப்புவிளக்க இன்பவடிவத்தால் யாண்டும் வியாபகராவர். ஆதலின், இவ்வான்மதேவர் நித்திய ராவர், இதுகூறியதுகொண்டு இவ்வனுமானம் துணியப்பெற்றதாம் :—இவ்வான்மா நித்தியமாதற்கு யோக்கியமாம், யாண்டும் வியாபகமாதலின், எப்பொருள் நித்திய மாகாதோ, அப்பொருள் யாண்டும் வியாபகமுமன்றும்; கடாதிகளைப்போல. யாண் டும் வியாபகராதலின் இவ்வான்மதேவர் அடைவின் விடையருமல்லர். இவ்வுல கின்கண்ணே எவ்வெப்பொருள் விகாரியாமோ, அவ்வப்பொருள் யாண்டும் வியாபக மன்றும். கடமுதலிய பொருள்கள் விகாரிகளாதலின் யாண்டும் வியாபகங்களுமன் றும். அதுபோல, இவ்வான்மதேவரும் ஒருகால் விகாரியாவராயின் யாண்டும் வியாபகரல்லராவர். இவ்வான்மதேவரோ ஸ்தாணுவாவர், அதாவது அவிகாரியா வர். அதனுலிவர் யாண்டும் வியாபகராவர். இது கூறியதால் இவ்வனுமானந் துணி யப்பெறும் :—இவ்வான்மா, யாண்டும் வியாபகமாதற்கு யோக்கியமாம்; அவி காரியாதலின், எவ்வெப்பொருள் யாண்டும் வியாபகமன்றுமோ, அவ்வப்பொருள் அவிகாரியுமன்றும்; கடாதிபதார்த்தங்களே போலும். இத்துணையால் ஆன்மா வின்கண் விகாரியத் தன்மையின் நிஷேதம் செய்யப்பெற்றதாம். இவ்வுலகின்கண் எவ்வெப்பொருள் சலனரூபக்கிரியை யுடையதாமோ, அவ்வப்பொருள் விகாரியே யாம். கடமுதலிய பதார்த்தங்கள் சலனரூபக்கிரியை யுடையனவா மாதலின் விகாரிகளாம். அதுபோல, இவ்வான்மதேவரும் ஒருகால் சலனரூபக்கிரியை யுடையவராமாயின் விகாரியேயாவர். இவ்வான்மதேவரோ, அந்தச் சலனரூபக் கிரியை யற்றவராய அசலராம். அதனுல், இவ்வான்மதேவர் விகாரியுமாகார். இது கூறியதால் இவ்வனுமானந் துணியப்பெற்றதாம் :—இவ்வான்மா, அவி காரியாதற்கு யோக்கியம், அசலமாதலின், எவ்வெப்பொருள் அவிகாரியன்றுமோ, அவ்வப்பொருள் அசலமுமன்றும்; கடாதிபதார்த்தங்களைப் போலும். இத்துணை கூறியதால் ஆன்மாவின்கண் சம்ஸ்கார்யத்தன்மையின் நிஷேதம் செய்யப்பட் டது. ஈண்டு முன்னவஸ்தையைப் பரித்தியாகம் செய்து, வேறு அவஸ்தையை யடைதலே விக்கிரியையாம். அவஸ்தை யொன்றுயினும், இயங்கன் மாத்திரை கிரியையெனப்படும். ஆதலின், அவிக்கிரியத்தன்மைச் சாத்தியத்திற்கும் அசலத் தன்மை யேதுவிற்கும் ஒருமை சித்தியா, எக்காரணத்தால் இவ்வான்மதேவர் நித்திய சர்வகத ஸ்தாணு அசலரூப ராவரோ, அக்காரணத்தால் இவ்வான்ம தேவர் சநாதநர். அதாவது எப்போதுமேகரூபர், எக்கிரியைக்குங் கர்மரூபரல்லர். கருத்திதுவாம் :—எப்பொருள் கிரியையால் உண்டாம் பலமுடையதாமோ, அப் பொருள் கர்மமெனப்படும். அக்கிரியையால் ஜனித்த, பலம், உற்பத்தி, பிராப்தி, விகிருதி, சம்ஸ்க்ருதி என்னும் பேதத்தால் நால்வகைத்தாம். அந்நால்வகைத் தாம் பல யோகத்தால் முறைப்படி அக்கர்மமும் உற்பாத்தியம், பிராப்பியம், விகார்யம், சம்ஸ்கார்யம் என்னும் பேதத்தால் நால்வகைத்தாம். ஆண்டிவ் வான்ம தேவர் நித்தியராதலின் உற்பாத்யரூப கர்மமுமில்லராவர். அநித்திய மாய கடாதிகட்கே உற்பாத்யரூப கர்மமுண்டாம். இவ்வான்மதேவர் யாண்டும் வியாபகராதலின் பிராப்பியரூப கர்மமுமில்லராவர். பரிச்சின்னமாய கிராமாதி

கலை பிராப்பியரூப கர்மத்துடன் கூடும். இவ்வான்மதேவர் ஸ்தாணுரூபாத லின் விகார்ய ரூப கர்மமுமில்லாவர். ஸ்தாணுபாவமற்ற விக்கிரியையுடைய பால் முதலியவே விகார்ய ரூபங்களாம். இவ்வான்மதேவர் சலனரூபக் கிரியை யற்ற அசலர், ஆதலின் சம்ஸ்கார்யரூப கர்மமுமற்றவராவர். கிரியையுடைய தர்ப் பணாதிகளே சம்ஸ்கார்ய ரூபங்களாம்.

ஆ-சு. "சூகாபவத்ஸவ-ஃ மதஶ்சநித்யஃ வ்ரக்ஷ உவஷ்ஷ்லொஷிவி
திஷ்தெத்யகஃ நிஷ்கும் நிஷ்கிய மாஜ்ஞம்."
கூ

(பொ-ள்.) இவ்வான்மதேவர் ஆகாசம்போல யாண்டும் வியாபகர், நித்தியர், பெருமரம்போல அசலமாய் நிற்போர், தமது ஸ்வப்பிரகாச ஸ்வரூபத்தின் கண்ணே இருப்பவர், ஏக அத்விதீயரூபர், நிரவயவர், கிரியையற்றவர், சாந்த சொரூபர் என்பதாதி சுருதிகள் இவ்வான்ம தேவரை நித்திய சர்வகத ஸ்தாணு அசலரூபரெனக் கூறுகின்றன. அங்ஙனமே,

"யஃவ்ரயிவ்யாம்திஷ்ஹ வ்ரயிவ்யாசஞ்ஜொயொஉவ் திஷ்ஹதெ்யாஞ்ஜொ
யஷ்ஜஷிதிஷ்ஹம் ஷ்ஜஷொஞ்ஜொயொ வாயள திஷ்ஹ்வாயொஞ்ஜஃ."

(பொ-ள்.) எவ்வான்ம தேவர் பிருதிவியின்கண்ணே யிருப்பவராய் அப் பிருதிவியினும் உள்ளாவரோ, எவ்வான்மதேவர் ஜலத்தின்கண்ணே இருப்பவ ராய் அஜ்ஜலத்தினும் உள்ளாவரோ, எவ்வான்மதேவர் அக்கினிரூப தேஜசின்கண் இருப்பவராய் அத்தேஜசினும் உள்ளாவரோ, எவ்வான்மதேவர் வாயுவின்கண் இருப்பவராய் அவ்வாயுவினும் உள்ளாவரோ என்பனவாய சுருதிகள் யாண்டும் வியாபக ஆன்மாவைச் சர்வாந்தர்யாமிரூபமாய்க் கூறுவனவாய் அவ்வான்மாவின் கண்ணே சஸ்திர முதலியவற்றுலாக்கும் சேதித்தன் முதலியவற்றின் அவிஷயத் தன்மையைக் கூறுகின்றன. கருத்துவாம் :—எப்பொருள் அச்சஸ்திர முத லிய வற்றுள் இராதோ, அப்பொருட்கே அச்சஸ்திராதிகள் சேதித்தன் முதலிய வற்றைச் செய்யும். இவ்வான்மதேவரோ அச்சஸ்திர முதலிய ஜடபதார்த்தங் கட்குச் சத்தா ஸ்பூர்த்தியை (இருப்புவிளக்கத்தை) கொடுப்பவராதலின், அச்சஸ் திராதிகளையும் ஏவும் அந்தர்யாமியாவர். ஆதலின், இவ்வான்மதேவரை அச்சஸ் திராதிகள் எங்ஙனம் சேதித்தன் முதலியன செய்யும்? மற்றும், செய்யா வென்றுணர்க. இப்பொருளின்கண் "யெநஹமயஷ்ஹவதி தெஜஹெஃ" என்பதாதி சுருதிகளும் பிரமாணமாயுள வென உணர்ந்து கொள்க. இப்பொருளை இக்கீதையின் ஏழாவதத்தியாயத்தில் ஸ்ரீ பகவான் தாமே வெளிப்படுத்தி யருளுவர். (24)

(அ-கை.) அல்லது இவ்வான்மாவின்கண் சேதித்தன்மை, தாஹ்யத் தன்மை முதலியவற்றை விஷயம் செய்யும் பிரமாணம் யாதொன்றுமின்றும். ஆதலினாலும் இவ்வான்மாவின்கண் அந்தச் சேதித்தன்மை தாஹ்யத்தன்மை முதலியவற்றின் அபாவமுளதாம் என்னும் பொருளை 'சுவயுத்தோயம்' என்பதாதி ப்ராதிச் சுலோகத்தால் ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார் :—

சு-ம். சுவயுத்தோயஃ அிஷ்ஹ்யாய உவிகாயெ-ஹாயஃ அயுதெ।
தஷ்ஹாஉவம் விதிதெ்வநம் நாந ொஹி தஃஹ-ஹஷி ॥ (25)

2 சுவயுத்தஃ 1 சுயம் 5 சுஅிஷ்ஹ்யஃ 4 சுயம் 7 சுவிகாய-ஹஃ 6 சுயம் 3 உஅயுதெ 8 தஷ்ஹாக 10 வனவம் 11 விதிதா 9 வனநம் 13 ந 12 சுந ொஹிதஃ 14 சுஹ-ஹஷி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! வேதபகவானனைவர் இவ்வான்மாவை அவ்யக்தமெனக் கூறியுள்ளார், இவ்வான்மாவை அசிந்தியமெனக் கூறியுள்ளார், இவ்வான்மாவை அவிகார்யமெனக் கூறியுள்ளார்; அக்காரணத்தால் நீ இவ்வான்மாவை இவ்வண்ணம் அறிந்துகொண்டு பின்னர்ச் சோகத்தையுற யோக்கியனன்றுகின்றுய்.

(வி-ம்.) எப்பொருள் நேத்திராதி இந்திரியங்களாலுண்டாம் ஞானத்திற்கு விஷயமாமோ, அப்பொருள் பிரத்தியகூஷ மெனப்படும். பிரத்தியகூஷ மாதலின், அப்பொருள் வியக்தமெனப்படும்; ரூபாதி குணங்களையுடைய கடாதி பதார்த்தங்களைப்போல. இவ்வான்மதேவரோ ரூபாதி குணங்களற்றவராவாதலின், நேத்திராதி இந்திரிய ஜன்னிய ஞானவிஷயமல்லர். இக்காரணத்தால் இவ்வான்மதேவர் அப்பிரத்தியகூஷர்; அப்பிரத்தியகூஷாதலின், இவ்வான்மதேவர் அவ்யக்தரெனப்படுவர். ஆதலின், பிரத்தியகூஷப் பிரமாணம் அவ்வான்மாவின் சேதத்தன்மை முதலியவற்றைக் கவராது.

சங்கை :—ஹே பகவன்! ஆன்மாவின்கண் பிரத்தியகூஷப் பிரமாணத்திற்குப் பிரவிருத்தியின்றேனும், அனுமானப் பிரமாணம் பிரவிருத்திக்கும் என்னும் அர்ச்சுனனது சங்கையுண்டாக.

சமாதானம் :—ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றுர். 'கூவிஞ்ஞாயம்' என, எப்பொருள் அனுமானப்பிரமாண ஜன்னிய ஞானவிஷயம்மாமோ, அப்பொருள் சிந்திய மெனப்பெறும். மலை முதலியவற்றின்கண்ணே உள்ள வன்னி முதலிய பதார்த்தங்கள், அனுமான ஜன்னிய ஞானத்திற்கு விஷயமாதலின் சிந்தியமெனப்படும். இவ்வான்மதேவரோ, அவ்வக்கினி முதலிய அனுமேய பதார்த்தங்களினின்றும் விலகூஷணராவர்; அனுமான ஜன்னிய ஞானத்திற்கு விஷயமாகார். ஆகையால், இவ்வான்மதேவர் அசிந்தியரெனப்படுவர். கருத்துவாம் :—எப்பொருள் எவ்விடத்தும் பிரத்தியகூஷமாமோ, அப்பொருட்கே அந்நியஸ்தானத்தின்கண் அனுமானமாம். எவ்வாற்றலும் பிரத்தியகூஷமல்லாத பொருளுக்கு அனுமானமுண்டாகாது. கிருகம் முதலியவிடத்தே பிரத்தியகூஷமாய அக்கினிக்குத் தூமத்தின்கண் வியாப்தி நிச்சயம்செய்து, இப்புருஷன் மலையின்கண்ணே புகையைக் கண்டு இம்மலை தீ யுடைத்து என அனுமானம் செய்வன். எப்பொருள் எவ்விடத்தும் பிரத்தியகூஷமாகாதோ, அப்பொருளின் வியாப்தி ஞானமே சம்பவியாதாதலின், அப்பொருளின் அனுமானமும் உண்டாகாது. இவ்வான்மாவோ, நேத்திராதி இந்திரியங்களால் காட்சிப்படாததா மாதலின், அனுமானப் பிரமாணத்தாலும் ஆன்மாவின் சேதத்தன்மை முதலியவற்றின் கவர்ச்சியுண்டாகாது.

சங்கை :— ஹே பகவன்! எப்பொருள் எவ்விடத்தேனும், பிரத்தியகூஷமாமோ, அப்பொருட்கே அந்நிய இடத்தே அனுமானமுண்டாம். எவ்வாற்றலும் அப்பிரத்தியகூஷப் பதார்த்ததிற்கு அனுமானமுண்டாகாது. எனத் தாங்கள் கூறியருளிய நியமம் சம்பவியாது. ஏனெனின், நேத்திராதி இந்திரியங்கட்குரும், அறம் பாவங்கட்குரும் எவ்விடத்தும் பிரத்தியகூஷம் உண்டாகாது. ஆனல், அவற்றின்கண்ணும், அனுமான விஷயத்தன்மையோ காணவருரும். அவ்வனுமானமாமாறு :— உருவாதிகளின் பிரதீதி, காரணத்தாற் சாதிக்க யோக்கியமாம்; கிரியை ஆதலின், யாது யாது கிரியையாமோ, அஃதது காரணத்தாற் சாதிக்கற்பாலதாம். வெட்டல் வடிவக்கிரியையானது கோடரிரூப காரணத்தாற் சாதிக்கற்பாலதேபோல. இவ்வகையாய அனுமானத்தால் உருவாதித் தோற்றங்களின் காரணரூபத்தால் நேத்திராதி இந்திரியங்களின் சித்தியுண்டாம். அங்ஙனமே இப்புருஷன் தர்மமுடையோன், சுகியாதலின், அங்ஙனமே இப்புருஷன் அதர்ம

மூடையோன்; துக்கியாதலின் என்னும் இவ்வனுமானத்தால் தர்ம அதர்மங்களின் சித்தியுண்டாம். இதுபோல, அப்பிரத்தியகூஷ ஆன்மாவின்கண்ணும், அனுமான விஷயத்தன்மை பொருந்தாது. என அர்ச்சுனனுடைய சங்கை உண்டாக ஸ்ரீ பகவான் உத்தரமருளிச் செய்கின்றார். 'சுவிகாயெ-ஹாயம்' என, ஹே அர்ச்சுன! பலவகையாய விக்கிரியைகளையுடைய இந்திரியாதி பதார்த்தங்களே தமது காரியங் கள் வேறோராற்றாற்பொருந்தாமையின், கற்பிக்கப் பெறுவனவாய் அர்த்தா பத்திப் பிரமாணத்திற்கும் அனுமானப் பிரமாணத்திற்கும் விஷயமாம். இவ் வான்மதேவரோ, சர்வ விக்கிரியைகளுமற்றவர். இக்காரணத்தால் இவ்வான்ம தேவர், அர்த்தாபத்திப் பிரமாணத்திற்கும் அனுமானப் பிரமாணத்திற்கும் விஷய மாகார். அனுமானம்போல லௌகிக சப்தமும் பிரதியகூஷாதிப் பிரமாண பூர்வ கமேயாம். ஆகையால், அந்தப் பிரத்தியகூஷப் பிரமாணம் நிஷேதமாகவே அந்த இலௌகிக சப்தமும் அர்த்தத்தாலே நிஷேதிக்கப்பட்டதாமெனத் துணிக.

சங்கை :—ஹே பகவன்! பிரத்தியகூஷம், அனுமானம், அர்த்தாபத்தி, லௌகிக சப்தம் என்னும் நான்கு பிரமாணங்களும் அவ்வான்மாவின்கண்ணே சேதித்தல் தகித்தல் முதலிய கிரியைகளின் கர்மத்தன்மை தியத்தன்மை, தாஹ்யத்தன்மை முதலியவற்றைக் கிரகியாதொழிக; என்றாலும், வேதப்பிரமாணம் அவற்றைக் கிரகிப்பதில் யாது தடையுளது? என அர்ச்சுனன் வினவ,

சமாதானம் :—ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார் :—'உஅஃதெ' என, ஹே அர்ச்சுன! வேதபகவானே இவ்வான்மதேவரை அச்சேதத்திய அவ்வியக்த ரூபமாய்ப் பிரதிபாதனம் செய்கின்றார். ஆதலின் இலக்கணை விருத்தியால் நிர் விகார ஆன்மாவைப் பிரதிபாதனம் செய்யும் வேதபகவான் ஆன்மாவிற்குச் சேத் தியத் தன்மை முதலிய தர்மங்களை எங்ஙனம் பகர்வர்; மற்றோர் பிரதிபா தனம் செய்யார். ஆதலின், ஆன்மாவின்கண்ணே சேதத்தியத்தன்மை தாஹ்ய யத்தன்மை முதலிய தர்மங்களை விஷயம் செய்யும் பிரமாணம் யாதொன்றுமின் றும். இக்காரணத்தால் இவ்வான்மதேவர் அச்சேதத்திய அதாஹ்ய வடிவினராவர். ஈண்டு 'நைநம்மிந்த்ததி' என்னு மிச்சுலோகத்தால் சஸ்திரம் அக் கினி முதலியவற்றின்கண் ஆன்மாவை நாசம்செய்யும் சாமர்த்திய மின்றெனக் கூறப்பட்டது. 'கூஹுஹெ்யாயஹூஹெ்யாயம்' என்னு மிச்சுலோகத்தால் அவ் வான்மாவின்கண்ணே சேதித்தல் தகித்தல் முதலிய கிரியைகளின் கர்மத்தன்மை யின் அயோக்கியத்தன்மை நிரூபணம் செய்யப்பட்டது: அன்றியும் 'சுவ்யெ்தெ் யஹவிஜ்ஜெ்யாயம்' என்னு மிப்பாதிச் சுலோகத்தால் அவ்வான்மாவின்கண்ணே சேத்தியத்தன்மை முதலியவற்றைக் கவரும் பிரமாணங்களின் அபாவம் கூறப் பட்டது. இக்காரணத்தால் ஈண்டு புனருக்தி (கூறியது கூறல்) என்னும் தோஷப் பிராப்தியுண்டாகாது. அன்றியும் 'வெஹாவிநாபிநம்நித்ய' என்பதாதி சுலோ கங்களில் ஸ்ரீ பகவான் பாடியக்காரர் பொருளாலேனும் சப்தத்தாலேனும் புன ருக்திதோஷ நிவிருத்தியாற்றியுள்ளார். அதன்கண்ணே பாடியக்காரருக்கிஃதபிப் பிராயமாம் :—இவ்வான்மதேவர் அத்தியந்தம் உணர்த்தகாதவர்; ஆதலின், ஸ்ரீ கிருஷ்ண பகவான் அடிக்கடிப் பிரசங்கம் பெற்று இவ்வான்ம தேவரைச் சப்தாந் தரத்தால் நிரூபணஞ் செய்தருளியுள்ளார். ஏனெனின், இவ்வதிகாரிகளின் சம் சார நிவிருத்தியாற்றும்பொருட்டு, இவ்வான்மவஸ்து எவ்வகையாலேனும் இவ்வதி காரி புருஷரின் மதியின்கண் ஆரூடமாயின் மேன்மையாம் என்பதே. ஆதலின் அறிதற்கருமையாய ஆன்மவஸ்துவை மீண்டும் மீண்டும் கூறுவதில் புனருக்தி தோஷப்பிராப்தி யுண்டாகாது. உலகப் பிரசித்த வஸ்துவை மீண்டும் மீண்டுங் கூறுவதாலே புனருக்தி தோஷப் பிராப்தியுண்டாம். ஈண்டு ஓருரையின்கண்

அவ்வியக்த அசிந்திய அவிகாரியமென்னும் முப்பதங்கட்கும் இவ்வகையாய பொருள் செய்யப்பட்டுளது, பிரத்தியகூஷப்பிரமாண விஷயமாய இத்தூலசரீரம் வியக்தமாம். இத்தூலசரீரத்தினும் இப்பிரத்தியக்கான்மா வேறுமாதலின் இப்பிரத்தியக்கான்மா அவ்வியக்தமெனப்படும். ரூபாதிகளின் பிரகாச ரூபகாரியத்தால் அனுமானஞ்செய்ய யோக்கியமாய சக்ஷுராதியவற்றின் சமுதாயரூப லிங்கசரீரம் சிந்தியமெனப்படும். அந்தலிங்க சரீரத்தினும் இவ்வான்மா வேறுமாதலின் இவ்வான்மா அசிந்தியமாம். ஸ்தூலசூக்ஷுமரூப காரியபாவத்தாலிருப்ப யோக்கியமாய மூக்குணன்மகமூலாஞ்ஞான ரூபகாரணசரீரம் கேவலம் சாக்ஷியானே அறியத்தக்கதாம், அதன்பெயரே விகாரியாம். அக்காரணசரீரத்தினும் இவ்வான்மாவேறும், ஆதலின் இவ்வான்மதேவர் அவிகார்யமெனப்படுவர். இவ்வண்ணம் குருசாஸ்திரங்கள் அதிகாரிகளுக்கு ஸ்தூல சூக்ஷுமகாரண சரீரநிஷேதவாயிலாய் இவ்வான்மதேவரையுபதேசிக்கும் ஒருவருக்குங் கோக்கோடுகோடும் நியாயம்பற்றி இவ்வகையதிவ்வான்மாவென விதிவாயிலாய்க் கூறவேலாதாம். ஆண்டு எனது கோ யாது என ஒருவன் கேட்டானுக, மற்றொருவன் அக்கோவின் கோட்டைப் பற்றி இது நினது கோ எனக் கோவைக் காண்பித்தனன். என்னும், இதனைத்தான் "கோக்கோடு கோடும் நியாயம்" என்பர். இவ்வாறு முற்புகன்ற அநேகம் வகையாய யுக்திகளால் ஆன்மாவின் நித்தியத் தன்மையும் நிர்விகாரத் தன்மையும் துணியப்பெறவே நீ சோகித்தல் தகுதியன்றும் என்னும் உபசம்ஹாரத்தை ஸ்ரீ பகவான் செய்தருளுகின்றார் 'தஸ்மாதெவம்' என்பதாதி பாதிச் சுலோகத்தால். ஹே அர்ச்சுன! முன்னர் யாம் கூறிய நித்திய நிர்விகார ஆன்மாவின்வடிவ சாக்ஷாத்காரமே சோக காரணரூப அஞ்ஞான நிவர்த்தகமாம். அத்தகைய ஆன்ம சாக்ஷாத்காரத்தை யடைந்த நீ சோகித்தல் தகுதியன்றும். காரணம் நீங்கின் காரியமும் அவசியமாய் நீங்கும். கருத்திதுவாம் :—அத்தகைய நித்திய நிர்விகார ஆன்மாவை யறியாது நீ முன்னர்ச் சோகித்தனை அஃதுனக்குத் தகுதியேயாம்; ஆனால் இஞ்ஞான்று எமதுபதேசத்தால் ஆன்மாவின் வாஸ்தவ சொரூபத்தை அறிந்த நீ சோகித்தல் தகுதியன்றும்.

ஆ-சு. "தஸ்மாதெவம்விதி" (போ-ள்.) ஆன்மாவின் உண்மை வடிவத்தையறிந்த அறிஞன் எல்லாச் சோகங்களுமற்றவனாவன். (25)

(அ-கை.) முற் பிரசங்கத்தே ஆன்மா ஜன்மமரணாதி விகாரங்களற்றது, ஆதலின் நீ சோகித்தல் தகுதியன்று என்பதை ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்குக் கூறியருளினர்; இப்போது இவ்வான்மாவின்கண்ணே ஜன்மமரணாதி விகாரங்களை யங்கீகரித்தும் நீ சோகித்தற்கு யோக்கியனன்று என்னும் பொருளே ஸ்ரீ பகவான் இரண்டு சுலோகங்களால் பிரதிபாதித்தருளுகின்றார். ஆண்டு ஆன்மா, விஞ்ஞான சொரூபமும் கணந்தோறும் விநாச முறுவதும் ஆம் எனச் சௌகதர் சொல்லா நிற்பர். இத்தூல தேகமே ஆன்மா, ஸ்தூலதேகரூப ஆன்மாத்திரமாயிருப்பினும் கணந்தோறும் பரிணமத்தையடையும், ஜன்மத்தையடையும், நாசத்தையடையும் பிரத்தியகூஷப் பிரமாணத்தாற் சித்தமாம். என இவ்வகை யான்மாவை உலகாயதர் உடன்பட்டுளார். ஆன்மா தேகத்தினும் வேறுயினும் தேகத்தோடே பிறக்கும் தேகத்தோடே யிறக்கும். என இவ்வகை யான்மாவை வேறு சிலரெண்ணுகிற்பர். சிருஷ்டியின் ஆதிகாலத்தே எங்ஙனம் ஆகாசத்தின் உற்பத்தியாமோ அங்ஙனம் ஆன்மாவிற்கும் உற்பத்தியாம். தேகங்கள் வேற்றுமை யுறினும் அவ்வான்மா கற்பபரியந்தம் திரமாயிருக்கும், இக்கற்பாந்தத்தே அவ்வான்மா நாசத்தையடையும், இவ்வகை ஆன்மாவை வேறு சிலருடன்பட்டுளார். ஆன்மா

நித்தியம்; அநித்திபமாய ஆன்மாவே ஜன்மத்தையும் மரணத்தையும் அடையும். என இவ்வகை ஆன்மாவைத் தார்க்கிகர் உடன்பட்டுளார். அந்தத் தார்க்கிகரது தாற்பரியமிதுவாம்:—அபூர்வதேக இந்திரியாதிகளின் சம்பந்தம் ஜன்மமாம். பூர்வதேக இந்திரியாதிகளின் சம்பந்த நீக்கம் மரணமாம். இச்சன்மம் மரண மிரண்டும் தர்ம அதர்மங்களாற் சனித்ததாம். ஆதலின் அந்தத்தர்ம அதர்ம ஆதாரரூப நித்திய வஸ்துவிற்கே இப்பிறப்பிறப்பு முக்கியமாம். சரீராதி அநித்திய வஸ்துவின்கண் தர்ம அதர்மங்களின் ஆதாரத் தன்மையை யங்கீகரிக்கின், ஆசிரய நாசத்தால் தர்ம அதர்மங்களின் நாசமுமுண்டாம். ஆதலின் செய்தகருமத்திற்குப் பலபோக மின்றியே நீக்கமாமென்னும், செய்தற்கின்றென்னுந் தோஷமும், செய் யாக்கர்மத்தின் பலபோகரூபமாம், செயாததற்கொன்றும் என்னுந் தோஷமும் உண்டாம். ஆதலின் அநித்தியவஸ்துவின்கண் அந்தத்தர்மஅதர்மங்களின் ஆதாரத் தன்மை சம்பவியாது. ஆகையால், சரீராதி அநித்தியவஸ்துவிற்குச் சன்மமரணம் முக்கியமன்றும்; மற்றே, கௌணமாம். இவ்வகையான்மாவைத் தார்க்கிகர் அங்கீ கரித்துளர். சில நூலுடையரோ இங்ஙனமங்கீகரித்துளார்:—சுரோத்திரரூப நித் திய ஆகாசத்திற்குக் கரணசட்குலியாகிய உபாதியின் ஜன்மத்தால் ஜன்மமுண்டாம், அவ்வுபாதியின் நாசத்தால் நாசமுண்டாம். அச்சன்மமரண மிரண்டும் ஔபாதிக மாதலின் அமுக்கியமாம். அங்ஙனமே, நித்திய ஆன்மாவிற்கும் தேகரூப உபாதியின் ஜன்மத்தால் ஜன்மமுண்டாம்; தேகரூப உபாதியின் மரணத்தால் மாணமுண்டாம். அச்சன்மமரண மிரண்டும் ஔபாதிகமாதலின் அமுக்கியமாம், முக்கியமன்றும். இங்ஙனம் சில வாதியர் ஆன்மாவை அநித்தியமென அங்கீகரித் துளார்; சில வாதியர் ஆன்மாவை நித்தியமென அங்கீகரித்துளார். ஆண்டு ஆன்மா அநித்தியமாம் என்னும் இப்பக்ஷத்தின்கண்ணும் ஸ்ரீ பகவான் ஆன்மா வின் சோகத்தை நிஷேதித்தருளுகின்றார்.

சு-ம். ஸுயஜ்ஞெநம் நித்யஜாதம் நித்யம்வா உபயஹ்யேதம்।
தயாவிக்ஷும் உஹாவாஹோ நைவம் ஜ்ஞாதாஉஹ்யஸி॥ (26)

ப-ம். 1 ஸுய 2 அ 3 ஹநம் 4 நித்யஜாதம் 6 நித்யம் 5 வா 8 உபயஹ்யெ 7 ஏதம் 9 தயாவி 11 க்ஷும் 10 உஹாவாஹோ 14 ந 12 ஹவம் 13 ஜ்ஞாதாம் 15 ஸுஹ்யஸி.

(அ-ம்.) அநித்திய பக்ஷத்தின்கண்ணும் நீ இவ்வான்மாவை நித்தியமும் ஜனிப்பதாயும், நித்தியமும் மரிப்பதாயும் அங்கீகரிப்பினும், ஹே பொருப்புறழ் புயத்தோய்! ஹே அர்ச்சுன! நீ இங்ஙனம் சோகமுற அருகனன்றுகின்றாய். (26)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வான்மா அத்தியந்தம் அறிதற்கரியது; ஆதலின், அடிக்கடி இவ்வான்மாவைக் கேட்பினும், இவ்வான்மாவை நிச்சயம் செய்ய ஆற்றலில்லாமல் முற்கூறிய எமதுபக்ஷத்தை அங்கீகரியாது, நீ வேறொரு பக்ஷத்தை அங்கீகரிப்பினும், அவ்வேறு பக்ஷத்தின்கண்ணும் ஆன்மா அநித்திய மென்னும் அநித்திய பக்ஷத்தை அங்கீகரித்து நீ இவ்வான்மாவை நித்தியமும் பிறப்பது, நித்தியமும் இறப்பது என உடன்படினும், ஆண்டு விஞ்ஞானரூப ஆன்மா க்ஷணிகமாம் என்னும் இந்த க்ஷணிக பக்ஷத்தின்கண்ணே நித்தியமென் னும் சப்தத்திற்குக் கணந்தோறும் எனப்பொருளுரைக்கினும், அதாவது ஆன்மா வைக்கணத்துக்குக்கணம்பிறப்பதாயும், இறப்பதாயும்அங்கீகரிப்பினும் என்பதாம். அந்த க்ஷணிக பக்ஷத்தினும் வேறுய மற்றப் பக்ஷத்தின்கண்ணே, அந்த நித்திய சப்தத்திற்கு ஆவசியகமாதலின் நியதம் எனப்பொருள் கோடினும், அஃதாவது இத்தேவதத்தன் பிறந்தனன், இத்தேவதத்தன் மரித்தனன் என்னும் இலௌ

கிகப் பிரதீதியின் வசனத்தால் நியமமாய் நீ ஆன்மாவிற்கு ஜன்மமரண கற்பனை செய்வையாயினும், ஹே மஹாபோன்ற புயங்களையுடைய அர்ச்சுன! 'ஊஹோவைத ஊஹூவம் கத்ஷ்ணவ்யவஸிதாவயம்' எனச் சோகித்தற்கு நீ அருகனன்றுகின்றாய். எனெனின், பீஷ்மத்ரோணாதிகளின் ஆன்மா நித்தியமும் ஜன்மமரண முடையதாவதேபோல, நீ தானும் நித்தியமும் ஜனன மரணமுடையவனுகின்றனையன்றே? ஈண்டு 'ஹெஹஹாவாஹா' என்னும் விளியால் ஸ்ரீ பகவானுல் அர்ச்சுனனை நோக்கி நகைத்தருளியதைக் குறிப்பித் தருளியதாம். இவ்வுலகின்கண்ணே எவனேனும், யாதாவதொரு தாழ்மையான தொழிலையாற்றின் அக்கால் அவனது தாய்தந்தையரும், பெரியோரும் அவனைநோக்கி நீ எமது குலத்தே மிகவும் சுபுத்திரனை யுற்பவித்தனை எனக் கூறுநிற்பர். அத்தொழில் அவனை நகுவித்தலையே குறிப்பித்துக்கொண்டு நிற்கும்; அதுபோல, அத்தியந்தம் பகிர்முக புருஷர் அங்கீகரித்த ஆன்மாவின் அநித்தியத் தன்மையை அர்ச்சுனன் அங்கீகரித்தனன். அக்கால் ஸ்ரீ பகவான் 'ஹெ ஊஹாவாஹா' என அர்ச்சுனனுக்கு விளிதந்தனர். ஆகையால், 'ஹெ ஊஹாவாஹா' என்னும் விளியால் ஸ்ரீ பகவான் அர்ச்சுனன்மீது தமது கிருபையைக் குறிப்பித்தருளியதாம். அதாவது, யாவரினும் மேன்மைமிக்க அர்ச்சுனனுடைய உன்னிடத்தே ஆன்மா அநித்திய மென்னும் இவ்வகையாய குதிருஷ்டியானது சம்பவியாது. ஆண்டு விஞ்ஞானரூப ஆன்மா கூஷணிகம் என்னும் பக்ஷத்தின்கண்ணும், இத்தூலதேகமே ஆன்மாவென்னும் பக்ஷத்தின்கண்ணும், தேகத்தோடே ஆன்மா ஜன்மமரணத்தையடையும் என்னுமிப்பக்ஷத்தின்கண்ணு மிரண்டாவது ஜன்மத்திற் கபாவமேயாம். ஆதலின், இம்மூன்று பக்ஷத்தின் கண்ணும் பாவபயம் சம்பவிப்பதின்றும். பாவபயத்தானே நீ சோகத்தை யடைகின்றனை, இம்மூன்றுபக்ஷத்தினுள்ளும் ஆன்மா கூஷணிக மென்னுமிப்பக்ஷத்தின்கண்ணே திருஷ்ட துக்கமும் சம்பவியாது. ஏனெனின், எவ்வுறவினரின் நாசதரிசனத்தால் அத்திருஷ்ட துக்கமாமோ, அவ்வுறவினரின் நாசதரிசனம் அந்தகூஷணிக ஆன்மாவின்கண் சம்பவிக்கவேமாட்டாது. இந்த கூஷணிக பக்ஷத்தின்கண் வேறு பக்ஷங்களினும் அதிகத் தன்மையுளது. இந்த கூஷணிக பக்ஷத்தினும் வேருயமற்றைய பக்ஷங்களிலோ, திருஷ்ட துக்கமும் அதனுல் ஜனித்த சோகமும் சம்பவிக்கும். இப்பொருளையறிவிக்கும் பொருட்டே ஸ்ரீ பகவான் 'வை வம்' என்னும் சப்தத்தைத் திருவாய் மலர்ந்தருளினர். அப்பக்ஷங்களில் திருஷ்ட துக்கஜன்னிய சோகம் சம்பவிப்பினும், அதிருஷ்ட துக்கஜன்னிய சோககாரணத் தன்மை எவ்வகையானும் நினைக்குசிதமன்றும். (26)

(அ-கை.) ஹேபகவன்! முற்கூறியருளிய மூன்று பக்ஷங்களுள்ளும் சோகித்தல் உசிதமன்றென்ப துண்மையேயாயினும், எப்பக்ஷத்தின்கண் சிருஷ்டியின் ஆதிகாலம்முதல் பிரளயபரியந்தம் ஆன்மா ஸ்திரமாமோ, எத்தார்க்கிகரது பக்ஷத்தின்கண் ஆன்மா எப்போதும் நித்தியமாமோ, அவ்விரண்டு பக்ஷத்திலும் திருஷ்ட துக்கமும், அதிருஷ்ட துக்கமும் சம்பவிக்கும். ஆதலின், அந்தத் திருஷ்ட அதிருஷ்ட துக்கபயத்தால் யான் சோகிக்கின்றனன் என்னும் அர்ச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீபகவான் இரண்டாவது சுலோகத்தால் அதற்குத்தரமருளிச் செய்கின்றார்:—

சு-ம். ஜாதஸ்ய ஹி ஧்ருவோ ம்ருத்யு⁻ர்஧ ்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய அ । 2-28
தஸ்மா தபரிஹார்யெ ர்யெ நர்தம் ஶோசிதுமர்ஹஸி ॥ (27)

ப-ம். 2 ஜாதஸ்ய 1 ஹி 3 ்ருவ: 4 ம்ருத்யு: 7 ்ருவம் 8 ஜந்ம 6 ம்ருதஸ்ய 5 அ
9 தஸ்மாத் 10 அபரிஹார்யெ 11 அர்யெ 14 ந 12 அர்தம் 13 ஶோசிதும்
15 அர்ஹஸி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எக்காரணத்தால் ஜன்மத்தையடைந்த ஆன்மாவிற்கு அவசியம் மரணமுண்டாமோ, அங்ஙனமே மரணத்தை யடைந்தது அவசியமாய் ஜன்மத்தையடையுமோ, அக்காரணத்தால் நீக்குதற்கு முடியாததாய ஜன்ம மரணரூப அர்த்தத்தின்கண் நீ சோகிப்பதற்கு யோக்கியனன்றுகின்றனை. (27)

(வி-ம்.) முற்பிறப்பின்கண் முயன்ற புண்ணியபாவரூப கர்ம வசத்தால் சரீர இந்திரியாதிகளின் சம்பந்தரூப ஜன்மத்தை யடைந்துள்ள ஸ்திரவியற்கையதாய ஆன்மாவிற்கு, அந்தப் பிராரப்த கர்மநாசத்தின்பின் அத்தேக இந்திரியாதிகளின் சம்பந்த நிவிருத்தி ரூபமரணம் அவசிய முண்டாம். ஏனெனின், இவ்வுலகின் கண்ணே கர்மவயத்தா லெவ்விவப் பதார்த்தங்களின் சையோகமுண்டாமோ, அவ்வப் பதார்த்தங்கட் கவசியம் முடிவில் வியோகமுண்டாம். எவ்வான்மாவிற்கு அம்மரணமுண்டாமோ, அவ்வான்மாவிற்குப் பூர்வ சரீரத்தின்கண்ணே யாற்றிய புண்ணிய பாவகர்மபலத்தை யனுபவிக்கும் பொருட்டு அவசியம் ஜன்ம முண்டாம். ஈண்டு மரணமடைந்தவனுக் கவசியம் ஜன்மமுண்டா மென்னும் நியமம், ஜீவன் முக்த புருஷனிடத்தே முறை பிறழ்தலை யடையும். ஏனெனின், ஜீவன் முக்த புருஷனுக்கு மரணமோ உண்டாம்; ஆனால் மீண்டும் பிறப்போ உண்டாகாது. ஆயினும் சஞ்சித கர்மமுடைய புருஷனுக்கு மரணத்தின் பின்னர் அவசியம் ஜன்மமுண்டாம். ஜீவன் முக்த புருஷனுக்கு ஞானரூப அக்கினியால் சர்வ சஞ்சித கர்மங்களும் பஸ்மமாய்விடும். ஆகையால், அந்த ஜீவன் முக்தபுருஷனுக்கு மரணத்தின் பின்னர் மீண்டும் ஜன்மப் பிராப்தியுண்டாகாது. அக்காரணத்தால் நீக்குவதற்குக் கூடாததாய ஜன்மமரணரூப அர்த்தத்தின்கண் அறிஞனை நீ சோகித்தல் தகுதியன்றும் என்னும் இவ்வார்த்தையை ஸ்ரீ பகவான் 'ஜிதவிகூவாம,ஹ ஹவிஷ்யஜிவஹவெஃ' என்னும் வசனத்தால் மேற்கூறியருளுவர். கருத்திதுவாம்:—ஒருகால் நீ போர்புரிந்து கொல்லாத இப்பீஷ்மத் துரோணாதிகள் ஜீவித்துக்கொண்டே யிருப்பார்களாயின், அவர்களோடு போர்புரிவதில் நீ சோகித்தலுசிதமாம். ஆனால் இவர்களோ, நினது போரின்றித் தாமே கர்மக்ஷயத்தால் மரணத்தை யடைவர். அவர் மரணத்தை நீக்குவதில் நினக்காற்றலின்றும்; ஆதலின் திருஷ்ட துக்க ஜன்னிய சோகஞ்செய்தல் நினக்குசிதமன்றும். இவ்வண்ணம் அதிருஷ்ட துக்க ஜன்னிய சோகச் சங்கையின்கண்ணும் 'தஹ்ஹாஉவாஜி ஹாயெஃயெஃநகுவம்பொஹித ஊஹஃவி' என்னுமிதுவே உத்தரமென வுணர்ந்து கொள்க. ஈண்டு இவ்வுலகின்கண்ணே உறவினரின் மரண ஜன்னிய துக்கம் திருஷ்ட துக்கமாம். பரலோகத்தின்கண்ணே பாவகர்ம ஜன்னிய துக்கம் அதிருஷ்ட துக்கமாம். அவற்றுள் அதிருஷ்ட துக்க ஜன்னிய சோகபக்ஷத்தின்கண் 'ஈவாஜி ஹாயெஃயெஃ' என்னும் வசனத்திற்கு இப்பொருள் செய்க:—எங்ஙனம் மறையவர்கட்கு அக்கினி ஹோத்திராதி கர்மங்கள் நியமமாய்ச் செய்யத் தக்கனவோ, அங்ஙனம் க்ஷத்திரிய அரசர்கட்கு போர்வடிவ கர்மமும் நியமமாய்ச் செய்யத் தகுதியதாம். எங்ஙனம் ஜோதிட்டோமாதி யாகத்தின்கண்ணே பசுக்களை ஹிம்சிப்பதால் தோஷமுண்டாகாதோ, அங்ஙனம் போரின்கண்ணும் உறவினரை ஹிம்சித்தலால் தோஷமுண்டாகமாட்டாது. ஆண்டுக் கௌதமஸ்மிருதி:—

"நதொஷோ ஹிம்ஸாயாஸாஹவெ."

(போ-ள்.) போரின்கண் ஹிம்சை செய்வதால் தோஷமுண்டாகாது. இவ்வெல்லா விஷயமும் 'ஹ்வயஃஉவிஆவெக்ஷ்ய' என்னும் சுலோகத்தின்கண்ணே மேல்விளியாம். ஆதலின், வேதம் விதித்த அக்கினி ஹோத்திராதி கர்மங்களைச் செய்யாதொழியின், பிராஹ்மணனுக்குப் பிரத்யவாயத்தின் பிராப்தியுண்டாம்,

அதனல் அவற்றைப் பரித்தியாகம் செய்தல் கூடாததேதயாம். அங்ஙனமே வேத விகிதமாதலின் பரித்தியாகம் செய்வதற்குக் கூடாததாய போர் வடிவப் பொருளின்கண் நீ அதிருஷ்ட துக்கபயத்தாற் சோகித்தற்கு யோக்கியனன்று. அல்லது, அக்கினி ஹோத்திராதி நித்தியகர்மங்களைப்போல ஒருகால் போரை நித்திய கர்மமாயங்கீகரியாது கேவலம் காமியகர்மமாயே அங்கீகாரம் செய்வையாயின், ஆண்டு யாஞ்ஞவற்கியஸ்மிருதி :—

“யசூஹவெஷு யூயெஹி உயுக்ஷவராஜூவாஃ ।
சுகூமெடொராயூயெயாஞ்சி தெஷூமஃ யொமிநொயயா ॥

(பொ-ள்.) எப்போர்வீரனனவன் பூவுலகை அடையும்பொருட்டு, போரின் கண்வஞ்சகமின்றியவனுய்ச் சஸ்திரங்களால் அமர்புரிவதை, போரினின்றும் திரும்பாதை, அப்போர்வீரன் யோகிகளைப்போலச் சுவர்க்கத்தை அடைவன். இவ்வசனத்தால் போரின்கண் காமியகர்மரூபத்தன்மை பிரதீதியாகின்றது. அங்ஙனமே, ‘ஹதொவாவ்ராவஸி ஸ்வர்கமஃ ஜிகூவாவாஹொகூஷ்யஸெஹரீஃ’ என்னும் ஸ்ரீ பகவானது வசனத்தாலும், போரின்கண் காமிய கர்மரூபத்தன்மையே பிரதீதியாகின்றது. அங்ஙனமாயினும், ஆரம்பிக்கப்பட்ட காமியகர்மமும் அவசியமாய் முடிவு செய்ய யோக்கியமாமாதலின், நித்தியகர்மத்திற்குச் சமானமாபேயாம். இப்போர் வடிவகர்மமும் முன்னர் உன்னல் ஆரம்பிக்கப்பட்டதாதலின், இப்போரின்கண்காமியகர்மரூபத் தன்மையை அங்கீகரிப்பினும், நித்தியகர்மத்தைப்போல இப்போர் வடிவகர்மத்தை நீ பரித்தியாகம் செய்தல் கூடாதாம். அல்லது, ‘சுயெஷொநஃ நித்யஜாதஃ’ என்னும் இச்சுலோகமும் ‘ஜாதஸ்யஹ்யுரூவொஜ்ஜதூஃ’ என்னும் இச்சுலோகமும் ஆத்மாவின் நித்தியத்தன்மைப் பக்ஷத்தின்கண்ணேயுள. ஆத்மாவின் அநித்தியத்தன்மைப் பக்ஷத்தின்கண் இன்றும். ஏனெனின், பரம ஆஸ்திகனுய அர்ச்சுனனிடத்தே வேதபாகியராய நாஸ்திகரது மதத்தை யங்கீகாரஞ் செய்தல் சம்பவியாது. இப்பக்ஷத்தின்கண், அச்சுலோகங்களின் அக்ஷரங்களை இவ்வண்ணம் யோஜனை செய்க. எவ்வஸ்து உண்மையாய் நித்தியமாயிருந்தே தேதேஹந்திரியாதிகளின் சம்புந்த வசத்தால் பிறந்ததுபோலப் பிரதீதியாமோ, அது நித்திய ஜாதமாம். இவ்வண்ணம் உண்மையாய் நித்தியமாய ஆன்மாவிற்கும் நீ பிறப்பை யங்கீகரிப்பினும், அங்ஙனமே இறப்பை யங்கீகரிப்பினும் நீ சோகித்தற்கு யோக்கியன் அன்றுகின்றுய் என்பதாம். இங்ஙனமாய பிரதிஜ்ஞையை முதற் சுலோகத்தின்கண்ணே செய்தருளி, அந்தப் பிரதிஜ்ஞையைச் சித்தி செய்தருளற்பொருட்டு, இரண்டாவது சுலோகத்தால் ஹேதுவைக் கூறியருளுகின்றுர் :—‘ஜாதஸ்யஹி’ என நித்திய வஸ்துவிற்கு ஜன்மமரணம் சம்பவியாதாயினும், உபாதியின் ஜன்மமரணத்தால் அந்நித்திய வஸ்துவின்கண்ணும் ஜன்மமரண விவகாரம் முன்னர்க் கூறப்பட்டது. மற்றைய எல்லாப் பொருள்களும் வெளிப்படையாம். (27)

(அ-கை.) ஆண்டு, முற் பிரசங்கத்தின்கண் எல்லா வகையாலும் ஆன்மாவின் அசோச்சியத் தன்மை நிரூபணஞ் செய்தருளப்பட்டது. இப்போது, ஆன்மா சோகத்திற்கு அவிஷயமாயினும், பூதங்களின் சமூதாயமாய இந்தப் பீஷ்மத் துரோணுதிகளின் சரீரங்களை உத்தேசித்து, யான் சோகத்தை அடைகின்றனன் என்னும் அர்ச்சுனனது சங்கை உண்டாக ஸ்ரீ பகவான் அச்சங்கையை நீக்கியருளத் தொடங்குகின்றுர்.

சு-ம். ஸுவ்யக்தாதீநி பூதாநிவ்யக்த மத்யாநிபாரத ।
ஸுவ்யக்தநிதநாந்யேவ தத்ரகா பரிதெவநா ॥ (28)

ப-ம். 3 சுவயூதாநீ நி 2 ஹ்ருதாநி 4 வயூஷ்யாநி 1 ஹாரத 5 சுவயூதநியதாநி வன்வ 6 தத்ர 8 கா 7 வரிஷ்வதா.

(அ-ம்.) ஹே பாரத! இச்சரீரம் ஆதிகாலத்தில் அவ்வியக்தமாம். அங்ஙனமே, மத்தியகாலத்தில் வியக்தமாம். அங்ஙனமே, மரணகாலத்திலும் அவ்வியக்தமேயாம். இத்தகைய சரீரத்தின்கண் துக்கத்தாலுண்டாம் புலப்பம் யாது காரணம் பற்றியோ. (28)

(வி-ம்.) ஹே பாரத! பிருதிவி முதலிய பஞ்சபூதங்களின் சமுதாயவடிவ பீஷ்மத் துரோணரெனப் பெயரிய ஸ்தூல சரீரங்கள் தமது உற்பத்தியின் முன்னர்த் தோற்றா, பிறந்தபின்னரும், இறக்கு முன்னருமாய இடைக்காலத்தில் தோற்றாநிற்கும். மரணத்தின் பின்னரும் அவைதோற்றா ஆதலின், அவை ஆதி காலத்திலும், அந்த காலத்திலுமோ அவ்வியக்தமாம்; மத்தியகாலத்தில் வியக்தமாம். தோற்றாமை அவ்வியக்தமென்ப்படும், தோற்றல் வியக்தமெனப்படும். கணப்பதார்த்தங்கள், இந்திர ஜாலபதார்த்தங்கள், இரஜ்ஜு சர்ப்பாதிகள் தமது தோற்ற சமகாலத்திலேயே இருக்கும், தமது தோற்றத்தின் முற்பிற் காலத்தே இரா. அதுபோல, இச்சரீரமும் கேவலம் மத்தியகாலத்தின்கண்ணே தோற்றும், முற்பிற்காலத்தே தோற்றாது.

"சூஷ்ரூவதெ அயந்நாஷ்டி வத்ஸுஷ்ரூவிதத்தயா."

(போ-ள்) எப்பொருள் ஆதிகாலத்திலும், அந்த காலத்திலும் இராதோ, அப்பொருள் மத்தியகாலத்திலும் இராது. கணப்பொருள் முதலியவை ஆதி காலத்திலும், அந்த காலத்திலும் இராவாதலின் மத்தியகாலத்திலும் இரா. அது போல, இச்சரீரமும் ஆதிகாலத்திலும், அந்த காலத்திலும் இன்றுமாதலின், மத்திய காலத்தின்கண்ணும் இன்றும். இத்தகைய மித்தைவடிவ அத்திய்ந்த துச்ச சரீரத்தின்கண்ணே துக்கஜன்னியப் புலப்பம் செய்தல் உனக்குசிதமன்றும். கனவின்கண்ணே தமதுறவினரையும், தனத்தையும் அடைந்து நனவவஸ்தையின்கண் அவற்றைக் கைவிடப் படலால் எம் மூடபுருஷனும் சோகியான். அதுபோல, இவ்வநித்திய பீஷ்மத் துரோணதி சரீரங்களே யுத்தேசித்து, நீ சோகித்தல் யோக்கியமன்றும். அல்லது, பூத சப்தத்தால் ஆகாசாதிப் பஞ்சமகா பூதங்களைக் கவர்ந்துகொள்க. அப்பகுதித்தின்கண் இச்சுலோகங்களின் பதங்களே இங்ஙனம் யோஜனைசெய்க. அவ்வியா கிருதமெனப் பெயரிய அவித்தையுபகித சைதன்யம் அவ்வியக்தம் எனப்படும். அவ்வவ்வியக்தம் பூர்வ அவஸ்தை, எவ்வாகாசாதிய பூதங்கட்கோ, அவ்வாகாசாதி பூதங்கள் அவ்வியக்தாதி யெனப்படும். நாமரூபங்களால் வெளிப்படை வடிவம், ஸ்திதி யவஸ்தை எவ்வாகாசாதி பூதங்கட்கோ, அவை வியக்த மத்தியங்கள் என்னப்படும். கட சராவமுதலிய காரியங்கட்கு மிருத்திகைவடிவ உபாதான காரணத்தின்கண்ணே இலயம் உண்டாம். அதுபோல, அவ்வியக்தரூபமாய தமது காரணத்தின்கண்ணே நிதனம், அதாவது பிரளயம், எவ்வாகாசாதி பூதங்கட்கோ அவை அவ்வியக்த நிதனங்களெனப்படும்.

ஆ-சு. "தத்ரைவம் தஸ்யுஸ்வயா கூதஸாஷீத்தநா
ஸுஸ்வாஹ்யா ஸெவவ்யா க்ரியதெ."

(போ-ள்.) இவ்வாகாசாதிப் பிரபஞ்சங்கள் தமது உற்பத்தியின் முன்னர் அவ்யாகிருத ரூபமாயிருந்தன. அவை சிருஷ்டிகாலத்தே நாமரூபமாய் வெளிப்பட்டன என்பதாதி சுருதிகள் மாயா உபஹித சைதன்யரூப அவ்யக்தத்தையே ஆகாசாதி

சர்வப் பிரபஞ்சத்தின் உபாதானரூபமாயும், ஆதாரரூபமாயும் கூறுகின்றன. அவ்வுபாதானரூப அவ்வியக்கத்திற்கு இவ்வாகாசாதிப் பிரபஞ்சங்களின் இலயஸ்தானரூபத்தன்மையோ, அர்த்தத்தாலே துணியப்பெறும். ஏனெனின், காரியத்திற்குத் தனது உபாதான காரணத்தின்கண்ணே இலயம் காணவருகின்றது. உபாதான காரணத்தை விடுத்து, மற்றைய பதார்த்தத்திடத்தே காரியத்தின் இலயம் உண்டாகமாட்டாது. ஆகையால் இப்பொருள் துணியப்பெற்றது. அஞ்ஞானத்தாற் கற்பிதமாதலின், அத்தியந்தம் துச்சமாய இவ்வாகாசாதிப் பஞ்சபூதங்களை யுத்தேசித்தும் நீ சோகித்தல் உசிதமன்றுமாயின், அவ்வாகாசாதிகளின் காரியவடிவ இப்பீஷ்மத் துரோணாதி சரீரங்களை யுத்தேசித்துச் சோகித்த லுசிதமன்றும் என்பதன்கண்ணே யாது கூற்றல் வேண்டும். அல்லது, ஆகாசாதிப் பஞ்சபூதங்களும், அவற்றின் காரியரூப சரீராதிகளும், தமதவ்வியக்த ரூபத்தால் எப்போதுமிருக்கின்றன. எக்காலத்தும் அவற்றின் நாசமுண்டாகாது. ஆகையால் அவற்றைக் குறித்துப் புலம்பல் உனக்குசிதமன்றும். ஈண்டு ஹே பாரத! என்னும் சம்போதனத்தால் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்கு இப்பொருளைக் குறிப்பித்தருளினர். நீ தூயவம்மிசத்தின்கண்ணே உற்பன்னமாயிருக்கின்றனை, ஆகையால் நீ சாஸ்திரப்பொருளை நிச்சயம் செய்ப போக்கியலுகின்றனை, அங்ஙனமிருந்தும் நீ சாஸ்திரப்பொருளை யேன் நிச்சயித்திலாய்? (28)

(அ-கை.) சங்கை :—ஹே பகவன்! இவ்வுலகின்கண் சாஸ்திரப் பொருளையறியும் அநேக அறிஞரும் சோகப்படலைக் காணுகின்றோம். ஆகையால், நீ யறிஞனுகியும் சோகத்தையன் அடைகின்றனை? என்னுமினிமையற்ற வசனத்தை அடிக்கடி தாங்கள் என்மீது ஏன் பிரயோகித்தருளுகின்றீர்கள். அல்லது சாஸ்திரத்தின் கண்ணிது கூறப்பட்டுளது :—

"வக்தாரமவஹிதஜ்ஞாயம் ஸ்ரோதாரம் நவபூயதே."

(பொ-ள்.) ஆண்டுச் *சுரோதாவானவன் போதத்தை யடையாலே, ஆண்டு †வக்தாவிற்கே ஜடத்தன்மையை யுணர்க. ஆகையால், தங்களுடைய வசனத்தின் பொருளுணராததும் எனது தோஷமன்றும்.

சமாதானம் :—ஹே அர்ச்சுன! உனக்கு ஆன்மாவின் அஞ்ஞானத்தாலே சோகமுண்டாயிருப்பதேபோல, அன்னிய அறிஞர்கட்கும் சோகமுண்டாயின் அதுவும் ஆன்மாவின் அஞ்ஞானத்தாலேயாம். அன்னிய புருஷர்கட்கு ஆன்மப்பிரதிபாதக சாஸ்திரங்களின் பொருள் போதமாகாதிருப்பது தமது அந்தக்கரணத்தின் தோஷத்தானன்றி கூறுபவனது தோஷத்தாலன்றும். அதுபோல, உனக்கு எமது வசனத்தின் அர்த்த போதமாகாமையும், உனது அந்தக்கரணத்தின் தோஷத்தாலேயாம். அதில் எமது தோஷம் சிறிதுமின்றும். ஆகையால், நீ முற்கூறிய இரண்டு தோஷங்களும் சம்பவியா என்னும் கருத்தால் ஸ்ரீ பகவான் ஆன்மாவின் அறியக் கூடாத்தன்மையை நிரூபித்தருளுகின்றார்.

சு-ம். ஶ்ருண்வந்வேவமாத்மானம் கஶ்சிதேனமதீவதி
ஶ்ருண்வந்வேவசசைவைனம் வேதநைவ கஶ்சன ॥ (29)

2-30

*சுரோதா=கேட்போன். †வக்தா=சொல்வோன்.

ப-ம். 3 சூஷ்ம-ருவகீ 4 வஸ்துநி 1 கஸ்மிகீ 2 வர்மம் 7சூஷ்ம-ருவகீ 9 வஸ்துநி, தயா 8 வவ 5 அ 6 கர்தரீ 13 சூஷ்ம-ருவகீ 10 அ 12 வர்மம் 11 கர்தரீ 14 ஸ்ர னோதி 18 ஸ்ரகுவா 19 சுவி I7 வர்மம் 21 வெஸ் 20 ர 15 அ, வவ 16 கஸ்மிகீ. (29)

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சிலபுருஷர் இவ்வான்மாவை ஆச்சரியம்போல் பார்க்கின்றனர். அங்ஙனமே வேறு சில புருஷர் இவ்வான்மாவை ஆச்சரியம் போன்றே கூறுகிற்பர். அங்ஙனமே வேறு சில புருஷர் இவ்வான்மாவை ஆச்சரி யம் போல் கேட்பர். அங்ஙனமே சில புருஷர் இவ்வான்மாவைக் கேட்பினும் அறியார். (29)

(வி-ம்) 'வர்மம்' என்னும் இப்பதத்தால் கூறிய ஆன்மரூபக் கர்மம் அங்ஙனமே 'வஸ்துநி' என்னும் பதத்தாற் கூறிய தரிசனரூபக்கிரியை அங்ஙனமே 'கஸ்மிகீ' என்னும் பதத்தாற்கூறிய அதிகாரிவடிவக் கர்த்தா என்னும் இம்மூன்றற்கே 'சூஷ்ம-ருவகீ' என்னும் விசேஷணமாம். அவற்றுள் முதலாவதாய ஆன்மரூபக் கர்மத்தின்கண் * ஆச்சரிய வத்துருவத்தன்மையை நிரூபணஞ்செய்வாம். ஹே அர்ச்சுன! இவ்வான்மதேவர் ஆச்சரியம்போன்றவராவர். அதாவது, அற்புதப் பொருட்கொப்பாவர். அங்ஙனமே அவித்தையாற் கற்பிதமாய பலவகை விருத்த தர்மங்களுடையவராய்த் தோற்றுவர். அதனால், இவ்வான்மதேவர் உண்மை யாய் எப்போதும் இருப்பவராயினும் இல்லாதவரைப்போற் றோற்றுவர். அங்ங னமே, இவ்வான்மதேவர் உண்மையாய் ஸ்வப்பிரகாச சைதன்ய ரூபராயினும், ஜடரைப்போலத் தோற்றுவர். அங்ஙனமே, இவ்வான்மதேவர் உண்மையாய் ஆநந்த ரூபராயிருப்பினும், துக்கமுடையவரேபோலத் தோற்று நிற்பர். அங்ங னமே, இவ்வான்தேவர் உண்மையாய்ச் சர்வவிகாரமும் அற்றவராயினும், விகார முடையவரைப்போல விளங்காநிற்பர். அங்ஙனமே இவ்வான்மதேவர் உண்மை யாய் நித்தியராயினும், அநித்தியரைப்போலத் தோற்றுநிற்பர். அங்ஙனமே, இவ்வான்மதேவர் உண்மையாய்ப் பிரகாச முடையவராயினும், பிரகாசமின்றிய வரைப் போலப் பிறங்கா நிற்பர். அங்ஙனமே, இவ்வான்மதேவர் உண்மையாய்ப் பிரஹ்மத்தினும் வேறல்லராயினும், வேறுனவர்போல விளங்கா நிற்பர். அங்ங னமே, இவ்வான்மதேவர் உண்மையாய் எப்போதும் முக்தராயினும் கட்டுப்பட்ட வரைப்போலத் தோற்று நிற்பர். அங்ஙனமே, இவ்வான்மதேவர் உண்மையாய் அத்விதீயரா யிருப்பினும் சத்விதீயரைப் போலத்தோற்று நிற்பர். என முதலாக அநேகம் வகையாய ஆச்சரிய வத்துருவத்தன்மை ஆன்மாவின்கண்ணேயுளது. அத்தகைய ஆச்சரியமுடையதுபோன்ற ஆன்மாவை, சமதமாதி சாதன சம்பன் னனும் இனிப்பிறவா முடிவான பிறப்பை யுடையவனும் ஆய பலகோடியில் ஒரு வனே குருசாஸ்த்ர ரோபதேசத்தால், அவித்தையால் ஆக்கிய சர்வ த்வைதப் பிரபஞ்சத்தையும் நிஷேதம் செய்து, பரமான்மாவின் சொரூப மாத்திரத்தைக் கவர்வதும், மகாவாக்கியரூப வேதாந்தத்தாற் ஜனித்ததும், சர்வபுண்ணிய கர்மங் களின் பலரூபமானதும் ஆய அத்தகைய அந்தக்கரண விருத்தியிற் சாக்ஷாத்கரிப் பன். இப்போது தரிசனரூபக் கிரியையின்கண் ஆச்சரியவத் துருவத்தன்மையை நிரூபணம் செய்வாம்:—'வஸ்துநி' என்னுஞ் சப்தத்தின் அர்த்தவடிவ ஆத் மாவின் தரிசனரூபக் கிரியையும் ஆச்சரியம் போன்றதே. ஏனெனின், அந்தக் கரணத்தின் விருத்திரூப ஞானமானது வடிவத்தால் மித்தியா ரூபமாயினும், சத்திய ஆன்மாவின் அபிவியஞ்சகமாம். அங்ஙனமே, ஞானமானது அவித்தை

* ஆச்சரியவத்துருவத்தன்மை = ஆச்சரியம்போன்ற வடிவுடைமை.

பின் காரிய ரூபமாயிருந்த போதினும், அந்த அவித்தையை அழிக்கும் ஞான மானது அவித்தைவடிவ காரணத்தை அழிப்பதாய், அவித்தையின் காரியமாயி ருத்தலின் தன்னையும் அழிக்கும் என முதலாக அநேகம்வகை ஆச்சரிய வத்துரு வத்தன்மை அந்த ஞானரூப தரிசனத்தின்கண் உள. இப்போது, அந்தத் தரிசன ரூபக் கிரியையின் அறிஞுவடிவ கர்த்தாவின்கண் ஆச்சரிய வத்துருவத் தன் மையை நிரூபணஞ் செய்வாம். 'கஶ்சித்' என்னும் சப்தத்தால் கூறியருளிய ஆன்ம சாக்ஷாத்காரமுடைய அறிஞுகிய புருஷனும் ஆச்சரியம் போன்றவனே யாவன். ஏனெனின், இவ்வறிஞன் ஆத்ம சாக்ஷாத் காரத்தால், அவித்தை, அதன் காரியங் கள் அற்றவனேனும், பிராரப்த கர்மத்தின் பிரபலத்தால் அஞ்ஞானிகளைப்போல விவகரிப்பன். அங்ஙனமே, இவ்வறிஞன் எப்போதும் சமாதியின்கண் இருப்ப வஞையினும், எழுதலை அடைவன். அங்ஙனமே, இவ்வறிஞன் எழுதலை அடைந்த வனேனும், மீண்டுஞ் சமாதியை அனுபவிப்பன் என முதலாக அநேகம்வகை ஆச்சரிய வத்துருவத்தன்மை அவ்வறிஞனிடத்தே உள. ஆகையால், இப் பொருள் துணியப் பெற்றதாம். எந்த ஆன்மாவும், ஆன்மாவின் ஞானமும், ஆன் மாவை அறியும் அறிஞனும், ஆச்சரிய ரூபமாமோ, மிகவும் அறிய முடியாத அந்த ஆன்மாவை நீ முயல்வின்றியே எங்ஙனம் அறிவாய்? மற்றோ, முயல்வின்றி அவ் வான்மாவை அறிதல் முற்றினும் கடினமாம். இவ்வண்ணம் உபதேசஞ் செய்யும் பிரஹ்ம வேத்தாப் புருஷரின் அபாவத்தானும் ஆன்மா அறிய முடியாததாம். ஏனெனின், எவ்வறிஞன் ஆன்மாவை தான் அபரோக்ஷமாய் அறிவனோ, அவ்வறி ஞனே மற்றைய அதிகாரிகளின் பொருட்டு அவ்வான்மாவை உபதேசிப்பன். யாவன் ஆன்மாவைத் தானே அறியானோ, அவ்வஞ்ஞானியானவன் மற்றைய எவர்பொருட்டும் ஆன்மாவின் உபதேசம் செய்யக் கூடாதவன் ஆவன். எவ்வறி ஞன் ஆன்மாவை அபரோக்ஷமாய் அறிவனோ, அவ்வறிஞன் விசேஷமாகச் சமாதியோடு கூடியவனே யாவன். ஆகையால், அச்சமாதியின்கண் உறைந் திருக்கும் பிரஹ்ம வேத்தாவானவன் மற்றைய அதிகாரிகளின் பொருட்டு, எங்ஙனம் ஆன்மாவை உபதேசிப்பன்; மற்றோ, உபதேசியான். சித்தத்தின் வெளி விருத்தியின்றி உபதேசஞ் செய்தல் சம்பவியாதன்றோ? எந்தப் பிர ஹ்ம வேத்தாவின் சித்தமானது சமாதியினின்றும் எழுதலை அடையுமோ, அந்தப் பிரஹ்ம வேத்தா அதிகாரிகளின்பொருட்டு ஆன்மோபதேசஞ் செய் வதில் சமர்த்தனையினும், அந்தப் பிரஹ்ம வேத்தாவானவனை அதிகாரிகள் தெரிந்துகொள்வது மிகவும் கடினமாம். ஒருகால் இவ்வதிகாரியானவன் எவ் வகையாலேனும், அந்தப் பிரஹ்ம வேத்தாவை அறியினும், அவன் லாபம், பூஜை, புகழ் முதலிய பிரயோஜனங்களை அபேக்ஷியான். ஆகையால், அந்தப் பிரஹ்ம வேத்தா அதிகாரியின்பொருட்டு, ஆன்மாவின் உபதேசத்தைச் செய்யான். அந்தப் பிரஹ்ம வேத்தாவானவன் ஒருகால் எவ்வகையாலேனும், தயைமாத்திரத்தானே அதிகாரியின்பொருட்டு ஆன்மாவின் உபதேசத்தைச் செய்யினும், அத்தகைய கிருபாளுவாய பிரஹ்ம வேத்தா ஈஶ்வரனைப்போல, அத்தியந்தம் கிடைத்தற்கரி யனே யாவன் என்னுங் கருத்தால் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனை நோக்கி கூறியருளு கின்றார்:—'ஆஶ்சர்யவத்பஶ்யதி கஶ்சிதேனமாஶ்சர்யவத்வததி' ஹே அர்ச்சுன! இவ்வான்ம தேவ தையை மற்றொருவன் ஆச்சரியம்போன்று உரையாடா நிற்பன். ஈண்டு, அந்நியன் என்னுஞ் சப்தத்தால் சர்வ அஞ்ஞானிகளினும் விலக்ஷண புருஷனைக் கொள்ளுக. ஆன்மாவை அறியும் புருஷனினும், வேறொரு புருஷனைக் கொள்ளாதொழிக. ஏனெனின், எப்புருஷன் எவ்வஸ்துவை உணர்வனோ, அப்புருஷனை அவ்வஸ்து வைக் கூறுநிற்பன்; அவ்வஸ்துவின் ஞானத்தாலன்றி அவ்வஸ்துவைக் கூறல் சம் பவியாது. ஆகையால், ஆன்மாவை அறிந்த புருஷனினும், வேறு புருஷனை அந்

நிய சப்தத்தால் கொள்ளின், கூறுபவனுக்கு வியாகாத தோஷத்தின் அடைவுண் டாம். ஈண்டும் 'வசநம்' என்னுஞ் சப்தத்தாற் கூறியருளிய ஆன்மரூபக் கர்மம், அங்ஙனமே, 'வதி' என்னுஞ் சப்தத்தாற் கூறியருளிய சொல்லுதல் வடிவக் கிரியை, அங்ஙனமே, 'ஸ்ருதி' என்னுஞ் சப்தத்தாற் கூறியருளிய அச்சொல்லு தல் வடிவக் கிரியையின் கர்த்தா என்னும் மூன்றனுக்கே, ஆச்சரியம்போன்று என் னும் விசேஷணத்தை அறிக. அவற்றுள், ஆன்மரூபக் கர்மத்தின்கண்ணும், அறிஞ வடிவக் கர்த்தாவின்கண்ணும், ஆச்சரியவத்துருவத் தன்மையை இச்சுலோகத்தில் முற்கூறப்பட்டிருக்கின்றது. அஃதை ஈண்டும் அறிந்துகொள்க. இப்போது சொல்லுதல் வடிவக்கிரியையின்கண் ஆச்சரியவத்துருவத் தன்மையை நிரூபிப் பாம் :—ஹே அர்ச்சுன! சர்வ சப்தங்கட்கும் அவாச்சியமாய ஆன்மதேவரைக் கூறலும் ஆச்சரியம்போன்றதே.

ஆ-சு. "யதோவாசோ நிவர்தந்தே அப்ராப்யமநஸாஸஹ."

(போ-ள்.) மனத்தோடுகூடிய வாணியும் எவ்வான்மாவை யடைந்து கோச ரிக்க முடியாமல் திரும்பிவிடுகின்றதோ. கருத்திதுவாம் :—அவித்தை அந்தக் கரணதிவிசிஷ்ட அர்த்தத்தின்கண்ணே ஆற்றலுடையனவும், பாகத்தியாக இலக் கணையால் கற்பித சம்பந்தத்தை யுடையனவுமாய தத்துவம் ஆதி சப்தங்க ளால், எல்லாத் தர்மங்களுமற்ற சுத்த ஆன்மாவின் நிர்விகற்பக சாக்ஷாத்கார ரூபப் பிரதிபாதனமும், அத்தியந்தம் ஆச்சரிய ரூபமாம். உலகின்கண்ணே யாதாவதொரு ஜாதிகுணங்கள் முதலிய தர்மங்களைக்கொண்டே சப்தம் தனது பொருளை யுணர்த்துமன்றே. ஜாதி குணாதி தர்மத்தாலன்றி எப்பொருளையும் சப்தம் உணர்த்தாது. அல்லது, துயில்பவனை எழுப்புபவன் வசனம்போல, இத்தத்துவமசி வாக்கியம் சக்திரூப சம்பந்தத்தாலன்றியே, இலக்கணைவடிவ சம் பந்தத்தாலன்றியே, மற்றைய வேறு சம்பந்தத்தாலன்றியே, சுத்த ஆன்மாவைப் பிரதிபாதனம் செய்தல் அத்தியந்தம் ஆச்சரியம்போன்றதே. சப்தத்தின் ஆற்றல் எப்புருஷனாலும் சிந்திக்க முடியாததாமன்றே?

சங்கை :—சக்தி, இலக்ஷணாதி சம்பந்தமின்றியே, அச்சப்தம் ஒருகால் தனது பொருளை யுணர்த்துமாயின், அச்சப்தத்தால் பிறிதொரு பொருளும் உணர்த்தப்படவேண்டும். அச்சப்தத்தின் சம்பந்தாபாவம் சர்வ பதார்த்தங்க ளிடத்தும் சமானமேயாமன்றே?

சமாதானம் :—இத்தோஷம் இலக்ஷணையை அங்கிகரித்த பக்ஷத்திலுமாம். ஏனெனின், சக்கியப்பொருளின் சம்பந்தத்தை இலக்ஷணை என்பர். அந்தச் சக் கிய சம்பந்தரூப இலக்ஷணையும் அநேக பதார்த்தங்களிடத்தே யிருக்கும். ஆகை யால், அச்சர்வ பதார்த்தங்களின் உணர்ச்சியும் உண்டாகவேண்டும். கங்கையின் கண்ணே கிராமமிருக்கின்றது என்னும் இத்தொடர்மொழியின்கண்ணே இராநின்ற கங்கை யென்னும் பதத்திற்குத் தீரத்திடத்தே இலக்கணையுண்டாம். ஆண்டு, கங்காபதத்திற்குச் சக்கியப் பொருளாகிய நீரின் பிரவாகத்திற்குத் தீரத்தோடு சையோக சம்பந்த மிருக்கின்றது. அங்ஙனமே, நீரின்கண்ணுள்ள மீனம், ஓடம் முதலிய அநேக பதார்த்தங்களோடும் சையோக சம்பந்தமுளது.

சங்கை :—சக்கியப் பொருளின் சம்பந்தம் அநேக பதார்த்தங்களோடுகூட ஆம், ஆயினும் எப்பொருளை யுணர்த்துவதில் கூறுபவனுக்குக் கருத்திருக்கின் றதோ, அப்பொருளே அச்சப்தத்தாலுணர்த்தப்பெறும்; அதனினும் வேறு பொருளுணர்த்தப்பெறமாட்டாது.

சமாதானம் :—அக்கூறுபவனது கருத்தும் கேட்பவர் யாவருக்கும் சமான மேயாம். ஆகையால், அவர் யாவருக்கும் அக்கூறுபவனது கருத்தால் அப்பொருளின் போதம் உண்டாதல் வேண்டும்; அங்ஙனங் காணவருவதின்றும்.

சங்கை :—அக்கேட்பவர் யாவருள்ளும் ஏகதேச ஒருவனே கூறுபவனது கருத்தின் விசேஷத்தை யுணர்வன். கேட்பவர் யாவரும் தாத்பரியத்தை நிச்சயம் செய்யார்.

சமாதானம் :—நீ கூறுவதால் இப்பொருள் துணியப்பெறும் :—அக்கேட்பவனிடத்தே யிராநின்ற நிர்த்தோஷத் தன்மைரூப விசேஷதர்மமே, அக்கூறுபவனது கருத்தை நிச்சயம் செய்விப்பதாம். அது எமது மதத்தும் ஒருவராலும் நீக்கமுடியாது. ஆகையால், எந்தச் சுத்த அந்தக் கரணமுடைய அதிகாரிக்கு வக்தாவின் தாற்பரிய நிச்சய வாயிலாய்ப் பாகத்தியாக இலக்ஷணையால் தத்துவமசிமுதலிய மகாவாக்கியங்களின் அர்த்தபோதத்தை நீ அங்கீகாரம் செய்கின்றனையோ, அந்தச் சுத்த அந்தக்கரணமுடைய அதிகாரிக்கே தத்துவமசி முதலிய சத்த விசேஷம், சக்தி இலக்ஷணாதிரூப சம்பந்தமின்றியே, அகண்ட சைதன்ய வஸ்துவின் சாக்ஷாத்காரத்தை யுண்டாக்கும். ஆகையால், இவ்விவமது சக்தி இலக்ஷணாதி சம்பந்தத்தை யங்கீகரியாத பக்ஷத்தும் சிறிதுமாத்திரமும் தோஷ வடைவுண்டாகாது. மாறாய், இவ்விவமது பக்ஷத்தின்கண்ணே, "யதோவாஇமானி பூதானி" என்னும் சுருதியின் பொருளும், சங்கோசமின்றியே பொருந்தும். இலக்ஷணை யங்கீகரிக்கும் பக்ஷத்தின்கண்ணே, இச்சுருதியை எவ்வான்மாவைச் சக்தி விருத்தியால் வசனம் உணர்த்தாதோ எனச் சங்கோசம் செய்யவேண்டிவரும். இப்பகவானது அபிப்பிராயத்தையே வார்த்திகக்காராய ஸ்ரீ சுரேச்வர ஆசிரியரும் :—

ஸமஸ்ஹீகெஷு ஸம்பந்ய உஹியாநாஹி யெயயொ: ।
ஹிக்ஷாதி ரூபம் வ்ரவ்யயதெ ஸ்வஷ்வெவொ யிதாஉவதெ: ॥

என்பது முதலிய சுலோகங்களால் வர்ணனம் செய்துளார். அச்சுலோகங்களின் கருத்திதுவாம் :—சப்தத்திற்கு அசிந்தியசத்தி யிருக்கின்றது; ஆதலின், துயிலையடைந்திரா நின்ற புருஷனுக்கு அக்கால் சப்தம் பொருளென்னு மிரண்டன் சக்தி இலக்ஷணாதி சம்பந்தங்களின் ஞானமின்றும். ஆயினும், அந்தத் துயிலும் புருஷன் அந்திய புருஷரால், ஹே தேவதத்த! என்பதாதி சப்தங்களால் உணர்த்தப்பட்டவனுப், அந்தத் துயிலினின்றும் நனவையடைவன். அங்ஙனமே, இச்சுத்த அந்தக் கரணமுடைய அதிகாரியும், சக்தி இலக்ஷணை முதலிய சம்பந்த ஞானமின்றியே தத்துவமசி முதலிய வாக்கியங்களால் அத்விதிய பிரஹ்மத்தைச் சாக்ஷாத்காரம் செய்வன்; என்பன முதலாய் அநேக வகையாய ஆச்சரிய வத்துருவத் தன்மை அச்சொல்லுதல் வடிவக் கிரியையின்கண்ணே யுளது. ஆகையால், இப்பொருள் துணியப்பெற்றது :—வசனத்திற்கு விஷயமாய ஆன்மா, அவ்வசனத்தின் வக்தாவாய வித்துவான், அந்த வசனரூபக்கிரியை யென்னும் மூன்றும் அத்தியந்தம் ஆச்சரியரூபமாம். இக்காரணத்தால் அவ்வான்மதேவர் அத்தியந்தம் அறியத்தகாதவர். இப்போது கேட்பவனது தூர்லபத்தன்மையைக் கூறியும், அவ்வான்மாவின் அறிதற்கரிதாந் தன்மையை நிரூபிப்பாம் :—"ஸுஷுப்த உவவெஷ ஸஉயஃ ஸுஜனொதி ஸுரக்ஷாவெஷ்டம்வெஉ" என, ஹே அர்ச்சுன! ஆன்மாவைச் சாக்ஷாத்கரிக்கும், அங்ஙனமே, ஆன்மாவை உபதேசிக்கும் முக்தபுருஷனினும் வேறுய முமுக்ஷுவானவன், சமிற்பாணியனுய் விதிவாயிலாய்ப் பிரஹ்மவேத்தாவின் சமீபத்தே சென்று இவ்வான்மாவைச் சிரவணம் செய்தலும், அதாவது சர்வவேதாந்த வாக்கியங்களின் தாத்பர்ய விஷயரூபத்தால் நிச்சயம் செய்தலும்,

அத்தியந்தம் ஆச்சரியம் போன்றதேயாம். அந்தப் பிரஹ்ம வேத்தாவ்ய குரு வாயிலாய் ஆன்மாவைக் கேட்டும், மனன நிதித்தியாசனங்களின் பரிபக்குவத் தன்மையானே, ஆன்மாவின் சாக்ஷாத்காரம் செய்தலும் ஆச்சரியம் போன்றதே அதந்தச் சாக்ஷாத்காரத்தின் ஆச்சரிய ரூபத்தன்மை 'சூஜுய-ழவதஜுஸ்தி கஜுஜி ஒநம்' என்னும் வசனத்தால் முன்னர்க் கூறியருளப் பட்டுள்ளது. முன் போன்றே ஈண்டும் சிரவணத்தின் விஷயவான்மா, சிரவண ரூபக்கிரியை, சிரவணஞ் செய்பவன் என்னும் மூன்றற்கே ஆச்சரியவத்தென்னும் விசேஷணத்தை யுணர்க. ஆண்டு ஆன்மாவின்கண்ணும், சிரவண ரூபக் கிரியையின்கண்ணும், முற்கூறிய ஆச்சரிய வத்துருவத் தன்மையே யறிக. சிரவணஞ் செய்யும் புருஷனிடத்தோ இவ்வாச்சரிய ரூபத்தன்மையுளது. முன்னர் அநேக ஜன்மங்களில் அனுஷ்டானம் செய்த புண்ணிய கர்மங்களால், பாவரூப மலம் நீங்கிய மனத்தை யுடையவனும், குரு சாஸ்திர வசனங்களிடத்தே அத்தியந்தம் சிரத்தையுடைய வனும் ஆய உத்தம அதிகாரிக்கு இவ்வுலகத்தின்கண்ணுள்ள துர்லபத்தன் மையே அக்கேட்பவனிடத்துள்ள ஆச்சரிய ரூபத்தன்மையாம். இவ்வார்த்தை ஸ்ரீ பகவான் தாமே,

உத்ருஷ்யாணாம் ஸஹஜ்ரேஷு கஶ்சித்யதிவித்யதே ।
யததாமபிவித்வாநாம் கஶ்சிந்மாம் வெத்திதத்வதஃ ॥

என்னும் சுலோகத்தின்கண் இனிக்கூறியருளுவர்.

ஆ-சு. "ஸ்ரவணாயாபி பஹுபிர்யோ ந லப்யஃ
ஸ்ருண்வந்தோபி பஹவோ யம் ந வித்யுஃ ।
வக்தாசாஸ்யோ பஹுதா யோ ந லப்யோ
நாந்யோ கதிஸ்தத்ர ஹி தஸ்ய ஸித்திஃ ॥

(போ-ள்.) இவ்வான்மதேவர் அநேகருக்குக் கேட்கமாத்திரமும் அடைவுற்றிலர். அநேகர் கேட்டும் இவ்வான்மதேவரையறிந்திலர். இவ்வான்மதேவரைக்கூறுபவரும் மிகவும் ஆச்சரிய ரூபர். இவ்வான்மதேவரை யறையும் புருஷரும் மிகவும் குசலரேயாவர். பிரஹ்ம வேத்தாவாய குசல குருவால் உபதேசம் செய்யப்பட்ட இவ்வான்ம தேவரை யறியும் புருஷனுகிய அறிஞனும் ஆச்சரியரூபனே யாவன்.

சங்கை :—ஹே பகவன்! அதிகாரியானவன் பிரஹ்மவேத்தாவாய குருவாயிலாய் வேதாந்த சாஸ்திர சிரவண மனன நிதித்தியாசனங்களைச் செய்வனுயின், ஆன்மாவை அவசியம் சாக்ஷாத்காரம் செய்வன் என்பதன்கண்ணே யாதாச்சரியம்.

சமாதானம் :—வினவிய அர்ச்சுனனை நோக்கி, ஸ்ரீ பகவான் விடையருளிச் செய்கின்றார். 'நஜெவகஜுஜி' என, இவ்வசனத்தின்கண் இராநின்ற 'அ' காரம், பூர்வ வசனத்தின்கண் இராநின்ற "வநம்வெத" என்னும் இரண்டு பதங்களின் அனுஷங்கத்தின் (சேர்க்கையின்) பொருட்டாம். பூர்வ வசனத்தின்கண் இராநின்ற பதத்தை உத்தர வசனத்தின்கண் சம்பந்தம் செய்வதை அனுஷங்கமென்பர். ஆகையால், இப்பொருள் துணியப்பெற்றதாம். ஒருவன் பிரஹ்ம வேத்தாவாய குருவினிடத்தே பணிவாகச்சென்று, அவர் வாயிலாய்ச் சிரவணாதிகளைச் செய்யினும், சில தடைகளின் வயத்தால் இவ்வான்மாவை யறியமுடியாதவனுவன். சிரவணாதிகளைச் செய்யினும், சில புருஷர் இவ்வான்மாவை யறிந்திலராயின், சிரவணாதிகளைச் செய்யாதவர் இவ்வான்மாவை அறியார் என்பதில் கூறவேண்டியதுயாதிருக்கின்றது. இவ்வார்த்தை ஸ்ரீ பகவான் வார்த்திகக்காரரும் கூறியிருக்கின்றனர்.

ஆ-சு. கூதஷ்ஜூாந ஶிதிஅதஜி ஐம்யவஸிகூஷயாகூ ।
கூஷாவவிஅ ஹூமிதோவா ஹாவீவாவத்ஃதெஉயவா ॥

(பொ-ள்.) அந்த ஆன்மாவின் ஞானமானது எதனாலுண்டாம் எனச் சிடனது சங்கையுண்டாக, அவ்வான்ம ஞானம் தடையின் நாசத்தால் அடையப்பெறும்; அத்தடையும் பூதத்தடை, பாவித்தடை, வர்த்தமானத்தடை என மூவிதமாம். (தடை=பிரதிபந்தம்) அவற்றுள், சிரவணாதி காலத்தின்கண் முன்னர்க் கண்ட அனான்ம பதார்த்தங்களை அடிக்கடி ஸ்மரித்தல் பூதத்தடையாம். பிறப்பு முதலியவற்றைச் செய்விக்கும் பிரபலமாய அதிருஷ்ட விசேஷமே பாவித்தடையாம். விஷயாசக்தி, மந்தபுத்தி, குதர்க்கம், விபரீதப் பொருட்கண்ணே துராக்கிரகம் என்னும் இந்நான்குவகையும் வர்த்தமானத்தடையாம். இம்மூன்று தடைகளினுள் ஒரு தடையேயனும் அதிகாரியிடத்திருக்குமாயின், அவன் சிரவணாதிகளைச் செய்யினும் ஆன்மாவை யறியான். வாமதேவர் பாவித்தடை வயத்தால் சிரவணாதிகளால் அச்சன்மத்தேத ஞானத்தை யடையவில்லை. மற்றோரு, இரண்டாவது ஜன்மத்தின்கண் மாதாவின் உதரத்தில் அத்தடை யுடைபடவே, அவ்வாமதேவருக்கு ஆன்மஞான அடைவுண்டாயது. இவ்வார்த்தை ஸ்ரீ ஆன்மபுராணத்தின் முதலாவதத்தியாயத்தில் யாம் விஸ்தாரமாய்க் கூறியுள்ளோம். "ஜூாநஉூத உயுதெவூாஂவ ாஂகூஷயாகூ வாவஷயு கூஉஃணஃ" என்னும் இந்த ஸ்மிருதியானது பாவகர்ம ரூபத்தடையின் நாசத்தின் அநந்தரமே (பின்னரே) அதிகாரிக்கு ஞான அடைவு கூறுகின்றது; அந்தத் தடைகள் டாவும் நாசமாதல் அத்தியந்தம் துர்லபமாம். இக்காரணத்தால் இவ்வான்மதேவர் அறியமுடியாதவராவர். ஈண்டு, 'ஸ்ரூாகூவாவெயுநஂவெஉந ஜெவகுஷ்டிகூ' இவ்வசனத்திற்கு முற்கூறிய பொருள் செய்யாமல் இவ்வான்மதேவரைச் சிரவணித்தும், எப்புருஷனும் அறியான் என்னும் பொருள் செய்யின், "கூஷ்டியெஃஜூாதா கூஷயுாநஷிஷ்டஃ" என்னும் சுருதியோடு இக்கீதை வசனத்திற்கு ஏகவாக்கியத்தன்மை சித்தமாகாது. "யததாஉவிவிஜ்ஞாநாம் கூஷ்டிநாம் வெதிதகூவதஃ" என்னும் ஸ்ரீ பகவானது வசனத்திற்கும் விரோதமுண்டாம். அல்லது, 'நஜெவகுஷ்டிகூ' என்னும் அந்திய வசனத்தை, "கூஷ்டிகூ வாநஂ நவஷயதி, கூஷ்டிகூ வாநஂநவஉதி, கூஷ்டிகூவாநஂ நஷ்ரணொதி, கூஷ்டிகூ ஸ்ரூாகூவாவி வாநஂ நவெஉ" என யாண்டும் ஓட்டுக. அதனால், இவ்வைவகை துணியப்பெறும்:—சில புருஷர் இவ்வான்மதேவரைக் கேவலம் அறியவே செய்வர், கூறுமாற்றலில்லாதவராவர். (1) சில புருஷரோ, இவ்வான்மதேவரை அறிதலோடு கூறவும் வல்லர். (2) சில புருஷரோ, வசனத்தைச் சிரவணமும் செய்வர்; அங்ஙனமே, அவ்வசனப்பொருளையும் உணர்வர். (3) சில புருஷரோ, வசனத்தைச் சிரவணித்தும் அப்பொருளை அறிந்திலர். (4) சில புருஷரோ, தரிசித்தல், கூறல், கேட்டல் என்னும் யாவற்றினும் வெளிப்பட்டவராவர். (5) ஆண்டு அவித்வானது பகூஷத்தின்கண் அசம்பாவனை விபரீத பாவனையால் தடைப்படலானே அந்தக் காட்சி கூறல் கேட்டலின்கண், ஆச்சரியரூபத்தன்மையுளது; மற்றைய எல்லாப் பொருளும் வெளிப்படையாம். ஒருசையின் கண்ணே, "கூஷ்டியஃவகூ வஷயுதி" இச்சுலோகத்திற்கு இப்பொருள் கூறப்பட்டுளது:—பூர்வ சுலோகத்தின்கண்ணே கூறப்பெற்ற பூதபௌதிகப் பிரபஞ்சத்தை ஒரு பிரஹ்ம வேத்தாவானவர் ஆச்சரியம்போற் காண்பர். கருத்திதுவாம்:—கனவிந்திரஜாலப்பொருட்குச் சமானமாய்க் காண்பர். வேறொரு அறிஞர் இந்தப்பிரபஞ்சத்தை ஆச்சரியம்போற் கூறுவர். கருத்திதுவாம்:—சப்தசத்தினும் விலக்ஷண இப்பிரபஞ்சத்தை லோக அப்பிரசித்த அநிர்வசநீய ரூபமாகக் கூறுவர். அந்திய புருஷர் இப்பிரபஞ்சத்தை ஆச்சரியம்போலக் கேட்பர். கருத்திதுவாம்:—அனான்ம ரூபமாய்ப் பிரசித்தமாய இப்பிரபஞ்சத்தின்கண், "உஜெயொகா உஜெஜெவா

உஹெவெஹா உஹ்ம் ஹவ-ஃம் யஹயஹாதா" என்பதாதி சுருதியால் பிரத்தியக் கான்மரூபத் தன்மையின் சிரவணமும் ஆச்சரிய ரூபமாம். சிலபுருஷரோ, இப் பிரபஞ்சத்தைக் கேட்டும் கனவின் திருட்டாந்தத்தாற் கூறியும், சாக்ஷாத்காரம் செய்தும் உண்மையாய் அறிந்திலர். (29)

(அ-கை.) பூர்வ சுலோகத்தின்கண்ணே கூறியருளிய சர்வப் பிராணிகளின் சாதாரண மயல் நிவிருத்தியின் சாதனரூப விசாரத்தை இப்போது சமாப்தி செய்தருளுகின்றார் :—

சு-ம். தெஹீ நித்யஹவயெ்யாயம் தெஹெஹவ-ஃஹ்ய ஹாஸ்த !
தஹ்ஹாத ஹ்வ-ஃாணி ஹ்ம்தாநி நகூம் பொஹித்ஹ-ஃஹி ॥ (30)

ப-ம். 5 தெஹீ 7 நித்யம் 6 சுவய்ய் 4 சுயம் 3 தெஹெ 2 ஹவ-ஃஹ்ய 1 ஹாஸ்த 8 தஹ்ஹாக் 10 ஹவ-ஃாணி 11 ஹ்ம்தாநி 13 ந 9 கூம் 12 பொஹித்ம் 14 சுஹ-ஃஹி. (30)

(அ-ம்.) ஹே பாரத ! சர்வப் பிராணிகளின் தேகம் நாசமுறினும், இத்தேகி யாய ஆன்மா நாசமாகமாட்டாது என்னும் இவ்வார்த்தை எக்காரணத்தால் நியதமாமோ, அக்காரணத்தால் அர்ச்சுனனை நீ இவ்விவல்லாப் பூதங்களின் பொருட்டுச் சோகிப்பதற்கு யோக்கிய னன்றாகின்றாய். (30)

(வி-ம்.) ஹே அர்ச்சுன ! பிரஹ்மா முதல் பிபீலிகை பரியந்தம் எத்தூணப் பிராணிகளுளவோ, அவற்றின் தேகங்கள் நாசமுறினும், இந்த லிங்க தேகரூப உபாதியையுடைய ஆன்மா நாசத்தையடையாது. கடரூப உபாதிகள் நாசமுறி னும், அக்கடாதிகளின்கண்ணே இராநின்ற ஆகாசமானது நாசமடையமாட்டாத தேபோல, அத்தேகங்கள் நாசமுறினும் இவ்வான்மா நாசமடையாது. எக்கார ணத்தால் இவ்வார்த்தை நியம பூர்வகமாமோ, அக்காரணத்தால் பீஷ்மத் துரோ ணாதி பாவத்தையுற்ற இத்தூல சூக்ஷ்ம ஆகாசாதி சர்வ பூதங்களைக்குறித்து நீ சோகித்தற்கு யோக்கியனன்று. கருத்திதுவாம் :—இத்தூல சரீரத்திற்கோ அவ சியமாய் நாசமுண்டாம். அந்நாசத்தை நீக்குவதில் எவரும் வல்லரல்லர். இக் காரணத்தால் இத்தூல தேகத்தைப்பற்றிச் சோகித்தல் உனக்குசிதமன்றும். சூக்ஷ்ம லிங்கதேகமோ ஆன்மாவைப்போலச் சஸ்திராதிகளால் நாசமாகமாட் டாது. ஆகையால் அந்த லிங்க தேகத்தைப்பற்றிச் சோகித்தலும் உனக்குசித மன்றும். ஆகையால், ஸ்தூல தேகம், லிங்கதேகம், ஆன்மா என்னும் இவற் றைப் பற்றிச் சோகித்தல் சம்பவியாது. (30)

(அ-கை.) இவ்வண்ணம் ஸ்தூல சரீரம், அங்ஙனமே சூக்ஷ்ம சரீரம், அங்ங னமே இவ்விரண்டிற்குங் காரணமாய அவித்தை என்னும் மூன்றுபாதிகளின் அவிவேகத்தால் மித்தியாரூப சம்சாரத்தின்கண்ணே சத்தியத்தன்மை, ஆன்மதர் மத்தன்மை முதலியவற்றின் தோற்றவடிவமும், சர்வப்பிராணிகட்கும் சாதாரண மானதும் ஆய அர்ச்சுனனது மயலை நீக்கியருளும் பொருட்டு, ஸ்ரீ பகவான் அவ் வர்ச்சுனனுக்கு, ஸ்தூல சூக்ஷ்ம காரணம் என்னும் மூன்று உபாதியினும் வேறாய ஆன்ம சொரூபத்தைக் கூறியருளினர். இப்போது போர்வடிவ ஸ்வதர் மத்தின்கண் ஹிம்சாதிகளின் மிகுதியால் அதர்மத்தன்மைப் புத்திவடிவமும், கருணை முதலிய தோஷங்களால் ஜனித்ததும் ஆய அர்ச்சுனனது அசாதாரண மயலை நீக்கியருளும் பொருட்டு, ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்கு அவ்விம்சையை முக்கியமாகவுடைய போரின்கண்ணும் ஸ்வதர்மத் தன்மையால் அதர்மத் தன் மையின்மையை உபதேசித்தருளத் தொடங்குகின்றார் :—

சு-ம். வ்யஉழவி ஆவெக்ஷ்யநவிகம் விதாஉஹழவி ।
யஉய்ழாதி யாஉவாஹ்யொநயக க்ஷத்ரியஹய நவிஉய்தெ ॥ (31)

ப-ம். 1 வ்யஉழம் 3 சுவி, அ 2 சுவெக்ஷ்ய 5 ந 4 விகம்விதாம் 6 சுஹழவி 9 யஉய்ழாக 7 ஹி 10 யாஉவாக 12 ஸ்ரெயஃ 11 சுநயக 8 க்ஷத்ரியஹய 13 ந 14 விஉய்தெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! உனது க்ஷத்திரிய தர்மத்தை நோக்கியேனும், நீ போரினின்றும் நீங்குவதற்கு யோக்கியனன்றுகின்றாய்; எக்காரணத்தால் க்ஷத்திரியர்களாகிய அரசர்களுக்குத் தர்மரூபமாய அமரினும் வேறு சிரேயசின் சாதனம் இருப்பதின்றுமோ. (31)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! முற்கூறிய நெறியே கேவலம் பரமார்த்த தத்துவ விசாரம் செய்தலிஞலே, நீ போரினின்றும் நீங்குவதற்கு யோக்கியனன்று. மற்றேரு, க்ஷத்திரிய அரசர்களின் போரினின்றும் பின் வாங்காமையாய முதுகு கொடாமை யென்னு முனது தர்மத்தைச் சாஸ்திரத்தின்கண்ணே ஆராய்ந்தும், நீ அந்த ஸ்வதர்மரூபப் போரினின்றும் அதர்மத்தன்மைப் பிராந்தியானே நீங்கற்கு யோக்கியனன்றுகின்றாய். ஆகையால், 'யஉயுவெயுதெநவஸ்யஞி' என்பது முதல் 'நஸகெநியதம் வாவொஹவதி' என்பதீறிய வசனங்கள் முழுவதாலும் நீ போரின்கண் பாவகாரணத் தன்மையைக் கூறினாய். 'கயஂஹீஷஉஹம்ஹம்வெய்' என்பதாதி வசனங்களால் நீ போரின்கண் குருக்களை வதம் செய்வதையும், பிராஹ்மணர்களை வதம் செய்வதையும் நிஷேதம் செய்தனை. அவ்வார்த்தை யாவும் நீ தர்ம சாஸ்திர அவிசாரத்தால் கூறினாய். ஏனெனின், எக்காரணத்தால் முதுகு கொடாமை வடிவ தர்மசகித அமரினும், க்ஷத்திரிய ராஜாவிற்கு வேறெருரு சிரேயசின் சாதனமின்றுமோ, மற்றே இப்போரே பிருதிவியின் ஜயவாயிலாய்ப் பிரஜைகளின் காப்பு பிராஹ்மணர்களின் சேவை யென்பதாதி க்ஷத்திரியர் தர்மங்களை நிர்வாகம் செய்வதாம். ஆகையால், க்ஷத்திரியர்கட்குச் சர்வதர்மத்தினும் போரே மேன்மையாய தர்மமாம். இவ்வார்த்தையைப் பராசர இருஷியானவர் கூறியிருக்கின்றனர்:—

க்ஷத்ரியொஹி ப்ரஜாரக்ஷாநு ஸஹவாணிஃ ப்ரஉஜ்ஜவாநு ।
நிஜி-ருத்யவாஸவெஹ்யாநி க்ஷிதிம் யஉ-ருணவாமுயெக ॥

(போ-ள்.) க்ஷத்திரிய அரசன் தனது பிரஜைகளைப் காப்பாற்றுக. சஸ்திரத்தை அஸ்தத்தின்கண்ணே தாரணம் செய்க. துஷ்டஜனங்களைத் தண்டம் செய்க. அந்திய சத்துருக்களின் சைனியங்களை வெற்றிகொண்டு, தர்மமாய்ப் பிருதிவியைப் பாலனம் செய்க. இவ்வார்த்தையை மனுபகவானும் கூறியிருக்கின்றனர்:—

ஹொத்தாயஞெ ராஜாஆஹூதஃ வாமுயநு ப்ரஜாஃ ।
நநிவதெ-ருத ஹம்ராஷ்ட்ரம் க்ஷாத்ரம் யஉ-ருஉந்ஹ்ரநு ॥ (1)
ஹம்ராஞெஷ்வ நிவத்தி-ருக்வம் ப்ரஜாநாம் ஞெவவாமுநம் ।
ஸ்ரூஸ்ரூஷா ப்ராஹ்மணாநாம்அ ராஜ்ஞஃ ஸ்ரெயஷ்கரம்வரம் ॥ (2)

(போ-ள்.) தனது பிரஜைகளைப் பாலனம் செய்துகொண்டு, இந்த க்ஷத்திரிய ராஜாவானவன் தனது சமான ஜாதியையுடைய க்ஷத்திரியனேனும், உத்தம ஜாதியையுடைய பிராஹ்மணனேனும், அதம ஜாதியையுடை வைசியர் முதலியோரே

னும், அமர் புரிவானழைப்பின், தனது க்ஷத்திரிய தர்மத்தை நினைந்து, அவ்வமரி னின்றுட் பின் வாங்கலாகாது. (1). போரினின்றும் புறங்கொடாமை, பிர ஜைகளைக் காப்பாற்றுதல், பிராஹ்மணர்களைச் சேவித்தல் என்னும் மூன்று தர் மங்களும் அரசனுக்குப் பரம மேன்மையைத் தரத்தக்கனவாம். (2) என்பதாதி ஸ்மிருதி வசனங்களால் க்ஷத்திரிய அரசருக்குப் போரே மேன்மையாய தர்ம மெனத் துணியப் பெற்றது. ஈண்டு போரினும் வேறுயு மநேகதர்மங்கள் க்ஷத் திரியர்கட்குச் ஸ்ரேயசின் சாதனங்களாமாதலின், போரினும் வேறுயொரு தர்ம மும் க்ஷத்திரியனுக்குச் ஸ்ரேயசின் சாதனமன்றென்று கூறல் சம்பவியாதாயினும், க்ஷத்திரிய ராஜாவின் சர்வதர்மங்களுக்குள் போர்வடிவ தர்மத்திற்கு மேன்மை பகர்ந்தருளவேண்டி, ஸ்ரீ பகவான் அவ்வசனத்தை யருளிச்செய்தனரே யன்றி, வேறு தர்மங்களை நிஷேதித்தருளும்பொருட்டு, அவ்வசனத்தை ஸ்ரீ பகவானரு ளிச்செய்திலர். இத்துணை கூறியருளியதால் போரினும் அத்தியந்தம் மேன்மை யாய் வேறொரு தர்மமிருக்கின்றது. ஆதலினதை யாற்றுவான், போரினின்றும் நீக்கம் சம்பவிக்கும் என்றுண்டாம் சங்கையும் நிவிருத்தித்தருளப்பட்டதாய தென்க. அங்ஙனமே 'நஅஸ்ரையொ நுவஸ்யாமி ஹத்வாஜ்ஞாஹவே' என்று கூறிய அர்ச்சுனனது வசனத்தையும் கண்டித்தருளியதாயது. (31)

(அ-கை.) ஹே பகவன்! க்ஷத்திரிய ராஜாவின் தர்மமாதலின், அப்போர் அவசியமாய் எனக்குச் செய்ய யோக்கியமேயாம். ஆயினும் பீஷ்மத் துரோணாதி குருக்களோடு போர்செய்தல் எனக்குசிதமன்றும். தனது குருக்களோடு போர் புரிதல் அத்தியந்தம் நிந்தித கர்மமன்றோவாம். என அர்ச்சுனனது சங்கை யுண்டாக ஸ்ரீ பகவான் உத்தரமருளிச் செய்கின்றார்.

சு-ம். யதா ஹ்யாதை²வவந்நம் வ்ரமந்வ்ரவ
வ்ரவிந꞉ க்ஷத்ரியாꣳவாய²வ்ய(ஹவே யாஜ்யீ ஏ²தம் ॥ (32)

ப-ம். 2 யதா ஹ்யா 3 அ 4 உவவந்நம் 6 வ்ரமந்வ்ரம் 5 சுவாவ்ரதம் 11 வ்ரவிந꞉
9 க்ஷத்ரியாꣳ 1 வாய²வ்ய 10 (ஹவே 8 யாஜ்யம் 7 ஏதம் ஏ²தம்.

(அ-ம்.) ஹே பார்த்த! முயல்வின்றியே அடையப் பெற்றதும், தடையின் றிச் சுவர்க்க சாதனமுமாய இவ்விதப்போரை எந்த க்ஷத்திரிய அரசன் அடையப் பெறுவனே, அவன் சுகத்தையே யடைவன். (32)

(வி-ம்.) ஹே பிருதையின் மைந்தனய அர்ச்சுன! நீ என்னோடு போர் புரிதியென்னும் பிரார்த்தனைவடிவப் பிரயத்தின மின்றியே அடைவுற்றது இப் போராம். பீஷ்மத் துரோணாதி வீரபுருஷர் எதிரிகளாய் நின்று அமர் புரிவதி தவாம். கீர்த்தி இராஜ்யத்தின் பிராப்தி என்பவாதி திருஷ்ட பலங்களின் சாதனமாமிது. இத்தகைய போரை க்ஷத்திரிய அரசனடைவனேல், அந்த க்ஷத் திரிய ராஜன் மேலாய சுகத்தையே யடைவன். ஏனெனின், அவ்வமரால் ஒரு கால் வெற்றியுண்டாயின், முயல்வின்றியே இவ்வுலகின்கண்ணே புகழ் இராஜ்ஜியம் இரண்டுமுண்டாம். ஒருகால் யுத்தத்தினின்றும் பராஜயத்தை யடையின், அத்தி யந்தம் விரைவாகவே சுவர்க்க வடைவுண்டாம். இப்பொருளையே ஸ்ரீபகவான் கூறி யருளுகின்றார். 'வ்ரமந்வ்ரவ' என, இப்போரானது தடையறச் சுவர்க் கப் பிராப்தியின் சாதனரூபமாம். அதாவது வியவதான மின்றியே சுவர்க்கத்தின் அடைவைச் செய்விப்பதாம். சோதிட்டோமாதியாகங்களும் சுவர்க்க அடைவைச் செய்விப்பனவாம். என்றாலும், சோதிட்டோ மாதியாகங்கள் ஸ்வர்க்கரூப பலப் பிராப்தியின்கண் வர்த்தமான சரீர நாசத்தையும், தடையின்மையையும் அபேக்ஷி

செய்யும். ஆகையால், அவை நெடுங்காலத்திற்குப் பின்னரே அச்சுவர்க்கரூப பலத்தை யடைவிக்கும் போரைப்போல விரைவிலே அடையியாது. ஈண்டு 'ஷுமஷுஷ்ணஷவாவ்ரதம்' என்னும் வசனத்தால் ஸ்ரீ பகவான் சேனயாகம் செய்யின், எங்ஙனம் பிரத்யவாயமாமோ, அங்ஙனம் இப்போர் புரிவதினுமாம் என்னும் அர்ச்சுனனது சங்கையை நீக்கியருளினர். ஆண்டு "ஸ்யேநாஹி அபஸ்யஜெகூ" என்பதாதி வசனங்களால் அந்தச் சேனயாகம் முதலியன விதானம் செய்யப்பட்டுள்ளன. ஆயினும் அச்சேன யாகாதிகள் தமது பலதோஷத்தாற்றுஷ்டங்களாம். எனெனின், அந்தச் சேனயாக முதலியவற்றின் பலரூப சத்துருமரணம். "நஹிம் ஸ்யாத்வ்ருஹ்மதாநி ப்ராஹ்மணம் நஹநஸ்யாகூ" என்பதாதி சாஸ்திரங்களால் நிஷித்தமாம். ஆகையால், அந்தச் சத்துருவின் ஹனனரூப பலமானது பிரத்யவாயத்தை யுண்டாக்குவதாம். அந்தச் சேனயாகத்தின் பலத்தே யாதொரு விதி வசனமுமின்றும். ஆகையால், விதியோடு கூடிய அர்த்தத்தின்கண் நிஷேத அவகாச முண்டாகாது என்னும் நியாயத்திற்கும் ஆண்டடை வின்றும். போரின் பலமாய சுவர்க்கம், எச்சாஸ்திரங்களாலும் நிஷேதிக்கப்படமாட்டாது. மற்றே, அச்சுவர்க்கம் சாஸ்திரங்களால் விஹிதமாம், (விதிக்கப்பட்டதாம்). இவ்வார்த்தையை மனுபகவானுங் கூறியுள்ளார்:—

ஸுஹவெஷு ஜியொநெஷ்யாநஷ்யம் ஜிவாம்ஹம்தெ ஷஹீக்ஷிதஃ।
யுத்யோநாஃ வாம்யுகூஷ்யாவ்ருமஷ்ம் யாம்தஷ்வாஜ்ஞுவாஃ॥

(போ-ள்.) போரின்கண்ணே பரஸ்பரம் கொல்ல இச்சித்த க்ஷத்திரிய அரசர்கள் தங்கள் சக்தியளவு பரஸ்பரம் போர் செய்பவர்களாய், அப்போரினின்றும் பின்னடையாதவர்களாய்ச் சுவர்க்கத்தையடைவர். அல்லது "ஸுமிஷ்டோஜீயம் வபாஜுஹொமி" என்னும் இவ்வசனமானது விதித்தயாகத்தின்கண் உள்ள பசுவின் ஹிம்சையை "நஹிம்ஸ்யாத்வ்ருஹ்மதாநி" என்னும் நிஷேதம் தீண்டமாட்டாது. அதுபோல, இப்போரும் சாஸ்திரத்தால் விதிக்கப்பட்டுளது. ஆகையால், இப்போரையும் அந்நிஷேதம் தீண்டமாட்டாது. கருத்திதுவாம்:— "நஹிம்ஸ்யாத்வ்ருஹ்மதாநி" என்பதுவோ சாமானிய சாஸ்திரமாம். "ஸுமிஷ்டோஜீயம் வபாஜுஹொமி" என்பது விசேஷ சாஸ்திரமாம். ஆண்டுச் சாமானிய சாஸ்திரத்தைக் குறித்து விசேஷ சாஸ்திரம் பலவானும். ஆதலின், அவ்விசேஷ சாஸ்திரத்தால் சாமானிய சாஸ்திரத்தைச் சங்கோசஞ் செய்து கொள்ளலாம். ஆகையால், சாஸ்திர விஹித அமர்மகம் முதலியவற்றினும் வேற்றிடத்தே எப்பிராணியையும் ஹிம்சை செய்யலாகாது என, அச்சாமானிய சாஸ்திரத்தைச் சங்கோசித்தல் சம்பவிக்கும். ஒருகால், "நஹிம்ஸ்யாத்வ்ருஹ்மதாநி" என்னும் சாமானிய சாஸ்திரப் பொருளை இங்ஙனம் சங்கோசம் செய்யாதொழியின் "ஸுமிஷ்டோஜீயம் வபாஜுஹொமி" என்பதாதி எல்லாவசனங்களும் பயனற்றனவாம். ஆதலின், இப்பொருள் துணியப்பெறும்:—அக்கினி ஷோமீயப் பசுவின் ஹிம்சை சாஸ்திர விஹிதமாதலின் பிரத்யவாய ஜனகமாவதன்றும். அதுபோலப் போரின்கண்ணே யிருக்கும் ஹிம்சையும் சாஸ்திர விஹிதமாதலின் பிரத்யவாய ஜனகமாகாது. போரின்கண்ணும் பீஷ்மத் துரோணாதி ஆசிரியர்களின் ஹனனத்தால் எத்தோஷம் கூறப்பட்டதோ அதுவும் சம்பவியாது. எனெனின், இப்பீஷ்மத் துரோணாதிகள் உனது ஆசிரியர்களாயினும், அவர்கள் ஆததாயிகளாவர்கள். ஆதலின், அவர்களை ஹனனம் செய்வதால் தோஷ முண்டாகாது. இவ்வார்த்தையை மனுபகவானுங் கூறியுள்ளார்.

மாஸ்ராம்வாபாமு வ்ருத்ஸவா ப்ராஹ்மணம்வா பஹுஸ்ருதம்।
ஆததாயி மஸாயாந்ம ஹந்யாத்ஜ்ஞாவிசாரயந்॥
நாததாயி வதெதோஷோ ஹந்துர்ஹ்ருவதி கஸ்சந॥

(போ-ள்.) தனது குருவாயினும், பாலகனாயினும், விருத்தராயினும், சாஸ்திர முணர்ந்த மறையவராயினும், ஆததாயிகளா யிருப்பார்களாயின், எக்காலத்தே தனது எதிரில் அடைவரோ, அக்காலத்தே இம்மதிமானாய புருஷனைவன் விசாரியாமலே அவ்வாததாயிகளைக் கொல்க, அவர்களைக் கொல்வதால் இப்புருஷனுக்குப் பாவம் சம்பவியாது; ஆததாயிகளின் இலக்கணம் முதலத்தியாயத்தின் கண்ணே கூறிவந்தேம். ஆகையால், இப்பீஷ்மத் துரோணாதிகளை ஹனனம் செய்வதால், உனக்குச் சிறிதுமாத்திரமும் தோஷ அடைவு உண்டாகாது. ஈண்டு 'ஹதோவிநஃ ஸ்வர்கதிர்யாஃ' என்னும் வசனத்தால் போர் செய்பவனுக்குச் சுகத்தின் அடைவு கூறப்பட்டிருக்கின்றது அதனால்,

"ஹதோநஃ ஸ்ரிகயம் ஹத்வாஹரவிநஃ ஸ்வர்யதோபவ."

(போ-ள்.) எனது உறவினரைக் கொன்று யான் எங்ஙனம் சுகத்தையடைவேன், என்னும் அர்ச்சுனனது வசனத்தைக் கண்டித் தருளியதாயது. (32)

(அ-கை.) ஹே பகவன்! எப்புருஷனுக்கு எக்கர்ம பலத்தின் இச்சையுண்டாமோ, அப்புருஷனுக்கே அப்பலப்பிராப்தியின் பொருட்டு அக்கர்மத்தின்கண் பிரவிருத்தியுண்டாம். பலத்தின் இச்சையின்றி யெவருக்கும் பிரவிருத்தி யுண்டாகாது; என்னும் இவ்வார்த்தை எல்லாவுலகின்கண்ணும் பிரசித்தமாம். எனக்கு அந்த யுத்தபலத்தின் இச்சையில்லை இக்காரணத்தானே 'நகாங்க்ஷேவிஜயம் கூ ஷ்ண ஸுவிதைதுயொகூயராஜ்யஸுகை' என்னும் வசனத்தை முன்னர் யான் கூறிவந்தேன். ஆகையால், பலத்தின் இச்சையற்ற யான் போர்புரிதல் உசிதமன்றும் என அர்ச்சுனனது சங்கை யுண்டாக, ஸ்ரீ பகவான் அவ்வர்ச்சுனனுக்குப் போர் செய்யாதொழியின் தோஷ அடைவுண்டாம் எனக் கூறியருளுகின்றார்:—

சு-ம். ஸுயதெதுகூவிஉம் யதூ-ழ்ஹம் ஸ்ரஉம் நகரிஷ்யஸி।
ததஃஹ்வயஉழ்ம் கீர்தி-ழ்ம அஹிகூவாவாவ உவாஹ்யஸி॥ (33)

ப-ம். 1 ஸுய, தெகூ 2 கூவம் 3 உஉம் 4 யதூ-ழ்ம் 5 ஹ்ம ஸ்ரஉம் 6 ந 7 கரிஷ்யஸி 8 ததஃ 9 ஹ்யஉழ்ம் 11 கீர்தி-ழ்ம் 10 அ 12 ஹிகூவா 13 வாவம் 14 ஸுவாஹ்யஸி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஒருகால் நீ இந்தத் தர்மரூபப் போரைச் செய்யாதொழிவையேயாயின், அப்போரைச் செய்யாமையால் நீ உனது தர்மத்தையும், கீர்த்தியையும் பரித்தியாகம் செய்து பாவத்தை யடைவாய்.

(வி-ம்.) பூர்வம் போரின் செய்யற் பாலதாந்தன்மை கூறியருளப்பட்டது. அப்போரின் செய்யற் பாலதாந் தன்மைவடிவ முதற்பக்ஷத்தை யபேக்ஷித்துப் போரைச் செய்யாதிருத்தல் இரண்டாவது பக்ஷமாம். அவ்விரண்டாவது பக்ஷத்தை யுணர்த்தியருளும் பொருட்டு, இச்சுலோகத்தின் ஆதியில் 'ஸுய' என்னுஞ் சப்தமியம்பி யருளப்பட்டது. ஆண்டுப் பீஷ்மத் துரோணாதி வீர புருஷர்களை எதிர்மறையாகவுடைய இப்போரானது ஹிம்சாதி தோஷங்களற்றதாம். ஆகையால் தர்மவடிவதாம்; அல்லது, சிரேஷ்ட புருஷர்களின் தர்மத்தினின்றும் மூணற்றதாதலின் தர்மவடிவதாம். சிரேஷ்ட புருஷர்களின் தர்மத்தை மனுபகவான் இங்ஙனங் கூறியிருக்கின்றார்:—இந்த க்ஷத்திரிய அரசனைவன், இரண பூமியின்கண் வஞ்சகமின்றிப் போர்செய்து, ஆயுதங்களாற் சத்துருவைக் கொல்க. அங்ஙனமே, தேரின்றிச் சமானப் பிருதிவியின்கண்ணே இராநின்ற சத்துருவைக் கொல்லாதொழிக. அங்ஙனமே, நடும்சக சத்துருவையும் கொல்லாதொழிக. அங்ஙனமே, எச்சத்துருவானவன் யான் உன்னுடையவன் எனக் கூறுகின்றனனேனும், அவனையும் கொல்லாதொழிக. அங்ஙனமே, எச்சத்துரு நித்திரையுடையவனு

யிருக்கின்றனமே, எச்சத்துரு வஸ்திராதியின்றி நக்கினனுயிருப்பமே, எச்சத்துரு ஆயுதமற்றவனுய் இருப்பமே, யாவன் வேறொருவமேனுடு கேவலம் போர் காணும் பொருட்டு வருவமே, பரீக்ஷை யாவன் செய்வமே, யாவன் ரோகியாயிருப்பமே, யாவன் பயத்தோடு கூடியவனுயிருப்பமே, யாவன் போரினின்றும் பின்றயங்கியோடுவமே, அவ்வித்தகைய சத்துருக்களைப் போர்வீரன் கொல்லாதொழிக. என்பதாதி சிரேஷ்ட புருஷர்களின் தர்மங்களைத் தாண்டி எப்புருஷன் போர் புரிவமே, அப்புருஷன் அப்போரின் சுவர்க்காதி பலத்தை யடையான். மற்றேரு, அப்புருஷன் கேவலம் பாவத்தையே யடைவன். அர்ச்சுனனுய நீயோ துரியோதனுதி சத்துருக்கள் போர்புரிய அழைத்தும், சதர்ம (நற்றர்ம)த்தோடு கூடிய இப்போரைச் செய்யாதொழியின் அதாவது, தர்மத்தினின்றும் லோகத்தினின்றும் பயத்தை யடைந்தவனுய், நீ இப்போரினின்றும் பின் செல்வையேயாயின், "நிஜ-ஃதர்ய வாஸ்வைஸ்யாநி க்ஷத்ரிம் யத்ரு-ணவாஸ்யஸி" என்பதாதி சாஸ்திரத்தால் விதித்த போரைச் செய்யாதொழியின், தனது தர்மத்தைத் தியாகம் செய்து அதாவது, தர்மத்தை யநுஷ்டானம் செய்யாது, இவ்வர்ச்சுனன் சாக்ஷாத் மகாதேவரோடும் போர் புரிந்தனன் ஆதலின், மகா பராக்கிரமமுடையவன் என்னும் கீர்த்தியைப் பரித்தியாகம் செய்து, "நநிவர்த்-ஃதஸ்ய ஸ்ராத்ரு" என்பதாதி சாஸ்திரங்களால் நிஷித்தமாய போரினின்று நிவிருத்தி வடிவ ஆசரண ஜன்னிய பாவத்தையே நீ கேவலம் அடைவாய். எத்தர்மத்தையேனும், எக்கீர்த்தியையேனும் நீ யடையாய். அல்லது, 'வ்ருத்-ஃஹிக்ஷாவாவ உவாவ்ருஹி' என்னும் இவ்வசனத்திற்கு இவ்வேறு பொருள் செய்க:—முன் அநேக ஜன்மங்களில் நீ ஒருங்கு கூட்டிய புண்ணியரூப தர்மத்தைப் பரித்தியாகம் செய்து, நீ கேவலம் இராஜா செய்த பாவத்தையே அடைவாய். கருத்திதுவாம்:—ஒருகால் நீ இப்போரினின்றும் பின்னடைவையேயாயினும், இத்துரியோதனுதி துஷ்டர் அவசியமாய் உன்னைக் கொல்வர். இப்போரினின்றும் பின்தாங்கி நீ இத்துரியோதனுதியர் கையின் மடியின், அநேக ஜன்மங்களில் ஒருங்கு சேர்த்த உனது புண்ணிய கர்மங்களைப் பரித்தியாகம் செய்து, இத்துரியோதனுதிகள் செய்துள்ள பாவகர்மங்களையே நீ யடைவாய். அங்ஙனம் செய்தல் உனக்குசிதமன்றும். இவ்வார்த்தையை மனு பகவானுங் கூறியுள்ளார்:—

"யஜ்ஞார்தாத் வார்யத்ரு-ஃ லோகோ(அ)யம் கர்ம்மபந்தநஃ।
தத-ஃர்த்-ஃம் கர்ம்ம கௌந்தேய முக்தஸங்கஃ ஸமாசர" ॥ (1)

"ய்த்ரு-ஃஹாஸ்ய(அ)ர்த்தம் கிம்சித்ரு-ஃ தர்ய-ஃ உபாஜி-ஃதம்।
தத-ஃர்தத்ரு-ஃஹாத்ரு-ஃ வார்யத்ர ஹதஸ்யத" ॥ (2)

(போ-ள்.) போரின்கண்ணே பயமடைந்தவனுய்ப் பின்தாங்கிய புருஷன் சத்துருக்களாற் கொல்லப்படுவனுயின், அவன் கொல்லும் புருஷனுடைய சர்வ பாவங்களையும் அடைவன். (1) போரினின்றும் பின்தாங்கி ஹனனத்தை யடைந்தவன் சுவர்க்காதியை யடையும்பொருட்டு, எத்துணைப் புண்ணிய கர்மங்களை இயற்றியுள்ளாமே, அவையாவும் ஹனனம் செய்யும் புருஷனையடையும். (2) இவ்வார்த்தையை யாஞ்ஞவற்கிய முனிவருங் கூறியுள்ளார்:—

"ராஜா ஸ்ரு-ஃக்ருதஸ்ரு-ஃதது-ஃஹதாநாம் விவர்ஜயிநாம்."

(போ-ள்.) போரினின்றும் பின்தாங்கி ஹனனத்தை யடைந்த போர் வீரனுடைய ஸர்வ புண்ணியங்களையும் ஹனனம் செய்யும் ராஜா கொள்வன். இத்துணை கூறியருளியதால் பூர்வம் அர்ச்சுனன் "வாவஸ்வாஸ்யஸ்ரு-ஃ ஹாந்ரு-ஃ ஸ்ரு-ஃக்ருதாநாத தாயிநஃ। மநாந்ரு-ஃஹந்ரு-ஃ ஸ்ரு-ஃர்ஜ்ஜாவி ஸ்யாஸ்ரு-ஃ ஸ்ரு-ஃஜ" எனக் கூறிய யாவற்றையும் கண்டித்தருளியதாயிற்று. (33)

(அ-கை.) இவ்வண்ணம் பூர்வ சுலோகத்தின்கண் போரைப் பரித்தியாகித் தலால், அர்ச்சுனனுக்குக் கீர்த்திரூப தர்மரூப இஷ்டத்தின் அடைவின்மை அருளிச் செய்யப்பட்டது. அங்ஙனமே, பாவரூப அநிஷ்ட அடைவும் கூறி யருளப்பட்டது. அவற்றுள், பாவரூப அநிஷ்டமோ, நெடுநாட்குப் பின்னர் பரலோகத்தின்சண்ணே துக்கரூப பலத்தின் அடைவைச் செய்விக்கும். சிஷ்ட புருஷர்கள் செய்யும் நிந்தைவடிவ அநிஷ்டமோ, இப்போதே துக்கரூப பலத்தை யடைவிக்கும். மதிமான்கட்கு அந்த நிந்தையால் உண்டாம் துன்பத்தைச் சகிப் பதும் அசக்கியமேயாம். (கூடாததேயாம்) என ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்குக் கூறியருளத் தொடங்குகின்றார் :—

சு-ம். ஸுகீர்த்தி-ழ்ம் அபி ஹ்ருதாநி கமயிஷ்யந்தி தே அவ்யயாம் ।
ஸம்ஹாவி தஸ்ய அகீர்த்தி-ழ்உ-ழ்ரணாஉ திரி அயுதெ ॥ (34)

ப-ம். 5 ஸுகீர்த்தி-ழ்ம் 1 அ 6 ஸுவி 2 ஹ்ருதாநி 7 கமயிஷ்யந்தி 3 தெ 4 ஸுவ்யயாம்
9 ஸம்ஹாவிதஸ்ய 8 அ 10 ஸுகீர்த்தி-ழ்ஃ 11 உரணாகூ 12 ஸுதிரி அயுதெ. (34)

(அ-ம்.) ஹே அர்ச்சுன ! அங்ஙனமே தேவதைகள், இருஷிகள், மனுஷர்கள் உனது அகீர்த்தியையும் நெடுங்காலம் கூறுநிற்பர். அன்றியும் குணவான்கட்கு அகீர்த்தியானது மரணத்திலும் அதிகமாம்.

(வீ-ம்.) ஹே அர்ச்சுன ! நீ இப்போரினின்றும் நீங்குவையேயாயின், தேவ தைகள், இருஷிகள், மனுஷர்கள் முதலாய யாவரும் பரஸ்பரம் கதைப் பிரசங்கங் களில் இவ்வர்ச்சுனன் தர்மாத்மாவல்லன், சூரவீரனுமல்லன் என உனதகீர்த்தியை நெடுங்காலம்வரை கூறுநிற்பர். ஈண்டு 'அ ஸுவி' என்னும் இரண்டு பதங்களும் முற்கூறிய கீர்த்தியின் நாசத்தையும், தர்மத்தின் நாசத்தையும் சமுச்சயம் செய் விக்கவாம். அதனல் இப்பொருள் துணியப்பட்டது :—இப்போரினின்றும் நீங் குவதால், நீ கீர்த்தி தர்மம் என்னும் இரண்டையும் இழந்து கேவலம் பாவத்தை மாத்திரமடையாய் ; மற்றோ, அகீர்த்தியையும் அடைவாய். அங்ஙனமே, கேவலம் நீ மாத்திரம் அவ்வகீர்த்தியை யடையாய். மற்றோ, தேவதைகள், இருஷிகள், மனுஷர் முதலாகிய யாவரும் உனது அகீர்த்தியைக் கூறுநிற்பர்.

சங்கை :—ஹே பகவன் ! போரின்கண்ணே தனது மரண ஐயமுண்டு, ஆத லின் அம்மரண நீக்கத்தின்பொருட்டுத் தனதகீர்த்தியும் சகிக்க யோக்கியமாம். எக்காரணத்தாலெனின், தனதான்மாவைக் காப்பாற்றல் அத்தியந்தம் அபேக்ஷித மாமன்றோ ? இவ்வார்த்தை மகாபாரதத்திலுள்ள சாந்தி பருவத்தின்கண்ணும் கூறப்பட்டுளது :—

ஸாஉஹாஉநந ஹெஉநந ஸஉஹெ ரணதவாவ்யுகூ ।
விஜெதவ்யம் வ்யதெதாரீந நயேத்ஸ்யத கஉாஅந ॥ (1)
ஸுநீதெர்யாவிஜயொயஹாகூ உபாயதெ யஉ்யுஉாநயொஃ ।
வாஜயஸ்ய ஹம்ராஜெ தஹாஉ்யஉ்யம் விவஜ்ஜயெகூ ॥ (2)
தியாணா உவ்யவாயாநாம் வம்வெழாகூாநா உஸம்ஹவெ ।
தயாயஉ்யத ஸம்யதெதா விஜயெத ரிவம்நயுயா ॥ (3)

(போ-ள்.) சாம தான பேதம் என்னும் மூன்று உபாயங்களாலேனும், அல்லது ஒவ்வொரு உபாயத்தாலேனும், இம்மதிமானுய புருஷன் தனது சத் துருக்களை ஜயம் செய்யும் பொருட்டு முயல்க. (1) எக்காரணத்தால் போர் செய் யும் புருஷருக்குப்போரின்கண் நியமமாய் ஜயம் காண வருவதின்றோ ; மற்றோ, பல

விடத்தும் பராஜயமே காணவருகின்றதோ, அக்காரணத்தால் இம்மதிமாளைய புருஷன் போர்செய்யாதொழிக. (2) முற்கூறிய சாமதானபேதமென்னும் மூன்று உபாயமும் யர்ண்டு சம்பவமாமோ ஆண்டு, இப்புருஷன் சாவதானமாய்ப் போர்புரிக. புரியின் தனது சத்துருக்களை வென்றுவிடலாம். (3) ஆகையால், மரணத்தினின்றும் பயத்தையடைந்த புருஷனை அகீர்த்தி ஜன்னிய துக்கம் யாது செய்யும்?

சமாதானம்:— ஸ்ரீ பகவான் அதை நீக்கியருளுகின்றார்:— 'ஸம்ஹாவிதஷ்ய' என, ஹே அர்ச்சுன! இப்புருஷன் அத்தியந்தம் தர்மாத்மாவாம், அத்தியந்தம் சூரவீரனும், என்பதாதி அநேக குணங்களாலெப்புருஷனை உலகர்மேன்மையனென அங்கீகரித்துளாரோ, அப்புருஷன் சம்பாவிதனுவன். அத்தகைய சம்பாவித புருஷனுக்கு உலகின்கண் அகீர்த்தி மரணத்தினும் அதிகமாம். ஆகையால், அவ்வகீர்த்தியினும் அச்சம்பாவித புருஷனுக்கு மரணமே மேன்மையதாம். அர்ச்சுனனை நீயும் தர்மநிஷ்டையாலும், மகாதேவரோடு போர்புரிந்தமை முதலியவற்றாலும், உலகின்கண்ணை மிகவும் சம்பாவிதனும். ஆகையால், நீ அகீர்த்தி ஜன்னிய துக்கத்தைச் சகிக்க முடியாதவனுகின்றாயன்றே? முற்கூறிய சாந்திபருவவசனமோ அர்த்தசாஸ்திர ரூபமாமாதலின், "அநிவதே-ஃத ஸம்ஹராஜ்ஞ" என்பதாதி தர்ம சாஸ்திரத்தினுந் தர்ப்பலமாம். (34)

(அ-கை) ஹே பகவன்! இவ்வுலகின்கண்ணை சத்துரு மித்துரு பாவமற்ற உதாசீனன், யான் போரினின்றும் திரும்பியதைக்கண்டு என்னை நிந்திப்பனையின் நிந்திக்குக. ஆனல், இப்பீஷ்மத்துரோணாதி மகாரதிகளோ யான் போரினின்றும் நீங்கியதைக்கண்டு, இவ்வர்ச்சுனன் மிகவும் கருணையோடு கூடியவன் என என்னைப் புகழாநிற்பர் என, அர்ச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் உத்தரம் கூறியருளுகின்றார்:—

சு-ம். ஹயாஞ்ஞாஞ் வரதம் ஸம்ஹர்ஷயதெகுவாம்ஸ்ஹாரயாஃ।
யெஷாமகுவம் பஹுமதோ ஹ்யேகுவாயாஹ்யஸி ராவவ ॥ (35) 2-34

ப-ம். 3 ஹயாகூ 4 ரணாகூ 5 உவரதம் 6 ஸம்ஹர்ஷயெ 2 குவாம் 1 ஸ்ஹாரயாஃ 8 யெஷாம் 7 அ 9 குவம் 10 பஹுமதஃ 11 ஹ்யேகுவா 13 யாஹ்யஸி 12 ராவவ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இப்பீஷ்மத்துரோணாதி மகாரதிகர், உன்னைப் பயத்தாற் போரினின்றும் உபாமம் மடைந்தனனென எண்ணுவர். அங்ஙனமே, எப்பீஷ்மாதிகட்கு நீ மேன்மை மிக்ககுணமுடையவனுய்ப் புலப்பட்டிருந்தனையோ, அங்ஙனமிருந்தும் அவர்கட்கே நீ அற்பத்தன்மை யுடையவன்போற் புலப்படும்படி நேரிடும்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! நீ போரைச் செய்யாதொழியின், இப்பீஷ்மத்துரோணாதி மகாரதிகர், இவ்வர்ச்சுனன், கர்ணன் முதலிய சூர வீரர்களின் பயத்தால் இப்போரினின்றும் நீங்கினனேயன்றித் தலை முதலியவற்றல் நீங்கினவனல்லன் என நின்னை எண்ணுவர்.

சங்கை:—ஹே பகவன்! அந்தப் பீஷ்மத்துரோணதியர் முன்னர் என்னைத் தர்மம், பராக்கிரமம், தைரியம் முதலிய குணங்களால் மேன்மையனென எண்ணியுள்ளார். ஆதலின், இப்போது அவர் என்னைக் கர்ணாதி சூர வீரருக்குப் பயந்து போரினின்றும் நீங்கினனென எங்ஙனம் எண்ணுவர்?

சமாதானம்:—ஸ்ரீபகவான் விடையருளுகின்றார்:—'யெஷாமகுவம் பஹுமதஃ' என, ஹே அர்ச்சுன! எப்பீஷ்மத்துரோணதியர் பூர்வம் நின்னை இவ்வர்ச்சுனன் தர்மம், பராக்கிரமம், தைரியம் என்பன முதலிய அநேக குணங்களோடு கூடியவனென எண்ணியிருந்தனரோ, அவரே இப்போது உன்னைக் கர்ணாதிகளின் பயத்

தால் போரினின்றும் உபராமத்தை யடைந்தனனென எண்ணுவர். ஆகையால், எப்பீஷ்மத்துரோணாதியர் பூர்வம் நின்னை மேன்மையாய் எண்ணியிருந்தனரோ, இப்போது இப்போரினின்றும் நீங்கி, நீ அவருக்கே அநாதர ரூபலாகவுமாய்த் தோற்றப்போகின்றாய் (35)

(அ-கை.) ஹே பகவன்! யான் போரினின்றும் நீங்கியதைக் கண்டு, இப்பீஷ்மத்துரோணாதி மகாரதிகள் என்னை மேன்மையுறக எண்ணுவதாழிக. ஆனால், யான் போரினின்றும் நீங்குதல் எனது பகைவராய துரியோதனாதியர்க்கு மிகவும் அநுகூலமேபாகுமாதலின், அப்பகைவரோ யான் போரினின்றும் நீங்கியதைக் கண்டு மேன்மையாய் எண்ணுவர். என, அர்ச்சுனன் சங்கிப்ப ஸ்ரீ பகவான் உத்தாமுரைத் தருளுகின்றார்.

சு-ம். ஸுவாஅயுவாஉாம்பு பஹ முநிஷையகி தவாஅநி தாஃ।
நிம்ஒம் தஷ்வஸாஅயுஷ்ம் தரிதாஉஃவ் தபம்கரிஷ்யதி ॥ (36)

ப-ம். 7 ஸுவாஅயுவாஉாது 3 அ 8 பஹவ்ஸு 9 மஹிஷையகி 1 தவ 2 ஸஅநி தாஃ 6 நிம் ஒம்தஃ 4 தவ 5 ஸாஅயுஷ்ம் 10 தத்தஃ 11 உஃவ் தபம் 12 கரிஷ்யதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! நினது துரியோதனாதி பகைவரும், நினது சாமர்த்தியத்தை நிந்திப்பவராய்க் கூறுவதற்குக்கூடாத அநேகவகை வசனங்களைக் கூறுநிற்பர்; இதனினும் மேலாய் அதிக துக்கம் யாது வேண்டும்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இப்போரினின்றும் நீ நீங்குவையாயாயின், சர்வலோகத்திலும் பிரசித்தமாய உனது சாமர்த்தியத்தை நிந்திப்பவராய், இக்துரியோதனன், கர்ணன், விகர்ணன் முதலிய நினது சத்துருக்களனைவரும் கூறுதற்குத் தகுதியற்ற அநேகம் வகையாய நிக்காச சப்தங்களைக் கூறுநிற்பர்.

சங்கை:—ஹே பகவன்! பீஷ்மத்துரோணாதிகளின் ராகத்தால் உற்பன்னமாகாநின்ற அத்தியந்த கஷ்டரூப துக்கத்தைச் சகியாதவனாய், இப்போரினின்றும் நீங்கிய யான் அப்பகைவரால் செய்யப்பட்ட எனது சாமர்த்திய நிந்தையால் உண்டாம் துக்கத்தைச் சகிப்பேன்.

சமாதானம்:—ஸ்ரீ பகவான் உத்தாமருளுகின்றார்:—கதோஉஃ வ்ருணம் நஷ்யேத் என, ஹே அர்ச்சுன! லோக நிந்தையினால் உண்டாய துன்பத்தைக் காட்டிலும் வேறு அதிக துக்கம் யாது. மற்றோரு, அந்நிந்தையினின்றும் உண்டாய துக்கத்தினும், அதிகமாய் எத்துக்கமும் இன்றுமாதலின், அந்நிந்தையாலுண்டாகும் துக்கத்தைச் சகியாய். (36)

(அ-கை.) ஹே பகவன்! யான் இப்போரின்கண் பீஷ்மத்துரோணாதி ஆசிரியர்களைக் கொல்வனேயாயின், மத்ரியஸ்த புருஷன் என்னை நிந்திப்பன்; யான் இப்போரினின்றும் நீங்கிவிடுவனேயாயின், இத்துரியோதனாதிய பகைவர் என்னை நிந்திப்பர்; ஆதலின், இப்போரைச் செய்யும் பக்ஷத்திலும், செய்யாதபக்ஷத்திலும் அந்த நிந்தையாலுண்டாம் துக்கத்தின் அடைவு சமானமேயாம். என, அர்ச்சுனன் சங்கிப்ப ஸ்ரீ பகவான் *ஜய பக்ஷத்திலும், †பராஜய பக்ஷத்திலும் நினக்கு நிச்சயமாய் இலாபத்தின் அடைவேயுண்டாம். ஆகையால், போரின்பொருட்டே நீ கிளம்பவேண்டும் என்னும் வசனத்தை அர்ச்சுனனுக்குக் கூறியருளத்தொடங்குகின்றார்.

சு-ம். ஹதோவா ப்ராப்ஸ்யஸி ஸ்வர்கம் ஜித்வாவாபோக்ஷ்யஸே மஹீம்।
தஸ்மாதுத்திஷ்ட கௌந்தேய யுத்தாயக்ருதநிஶ்சயஃ ॥ (37)

* ஜயம்=வெற்றி. † பராஜயம்=தோல்வி.

ப-ம். 3 ஹதஃ 2 வா 5 ஸாவஸ்யஸி 4 ஹ்ருஷ்டோ 7 ஜிகுவா 6 வா 9 ஹொக்ஷ்யஸ்யஹ
8 ஸஜீவ 10 தஸ்மாத் 13 உதிஷ்ட 1 சுளஞ்ஜய 12 யுத்ஸ்வ 11 கு தநிஷ்பயஃ.

(அ-ம்.) ஹே ஜநார்தநனைய அர்ச்சுன! ஒருகால் நீ போரின்கண் மாண மடைவையேயாயின், சுவர்க்கத்தை அடைவாய். அல்லது இப்பகைவரை வெற்றி கொண்டு இம்மண் உலகைப் போகிப்பாய்; அக்காரணத்தால் நிச்சயத்தோடு கூடி னவனாய் நீ இப்போரின்பொருட்டுக் கிளம்பி நிற்றி.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இப்போரின்கண் நீ ஒருகால் இக்குரியோதனை பகைவரால் மரணத்தை அடைவையாயின், அவசியம் சுவர்க்கத்தை அடைவாய்; ஒருகால் நீ இவரை வெற்றிகொள்ளின், பகைவர்களாகிய முட்களற்ற இம்மண் உலகைப் போகிப்பாய். எக்காரணத்தால் தோல்விப்பக்கத்தின்கண்ணும், வெற்றிப் பக்கத்தின்கண்ணும் நினக்கு ஊகியத்தின் அடைவே யுண்டாமோ, அக்காரணத் தால் இக்குரியோதனை பகைவரை வெற்றிகொள்வேம்; அல்லது மரணத்தை அடைவேம் என்னும் திடநிச்சயத்தோடு கூட இப்போர் புரியும்பொருட்டுக் கிளம்பி நிற்றி. இக்குணை கூறியருளியதால் "ஸுகதுஃகே ஸமே க்ருத்வா" என்பதாதி அர்ச்சுனனது சர்வ வசனங்களும் கண்டித்தருளப்பட்டனவாயின. ()

(அ-கை.) ஹே பகவன்! ஒருகால் யான் சொர்க்க அடைவின்பொருட்டு இப் போரைச் செய்வனையின், சோதிட்டோமாதி யாகங்களைப்போல இப்போரினுக்கு நித்திய கர்மரூபத்தன்மை சம்பவியாது; மற்றோர், காமிய கர்மரூபத்தன்மை சம்பவிக்கும். ஒருகால் யான் இம்மண்ணுலகை ஆளும்பொருட்டு இப்போரைப் புரிவனையின், போரைவிதிக்கும் சாஸ்திரத்திற்கு அத்த சாஸ்திரரூபத்தன்மை அடையாநிற்கும். ஆகலால், அச்சாஸ்திரத்தின்கண் கர்ம சாஸ்திரத்தைக்குறித்துத் தூர்ப்பலத்தன்மை தோணியப்படுமாம். ஆகையால், காமியகர்மரூபப் போரைச் செய் யாதகால் எனக்கு எங்ஙனம் பாவமுண்டாம்; மற்றோர், உண்டாகமாட்டாது. மண்ணுலகாளும் பிரத்தியக்ஷப் பிரதியோஜனப் பிரயோஜனைப் பிரயத்தியைப் பெறுவிக்கும் குரு பிரஹ்மணர்களின் நிரனவடிவப் போரின்கண் எங்ஙனம் கர்ம ரூபத்தன்மை யுண்டாம்; மற்றோர், உண்டாகமாட்டாது. ஆகையால், "ஸுகதுஃகே ஸமே க்ருத்வா" என்னும் இப்பூர்வ சுலோகத்தின் பொருள் அசங்கதமாம் என, அர்ச்சுனன் சங் கிப்ப பரீ பகவான் உத்தரம் அருளிச்செய்கின்றார்:—

சு-ம். லாபாலாபௌ ஜயாஜயௌ |
ததோ யுத்தாய யுஜ்யஸ்வ நைவம் பாபமவாப்ஸ்யஸி ||

ப-ம். 1 லாபாலாபௌ 4 ஜயே 5 கு கூ 2 யுத்தார்யுத்தௌ 3 ஜயாஜயௌ 6 ததஃ
7 யுத்யஸ்வ 8 யுஜ்யஸ்வ 11 ந 9 வம் 10 பாபம் 12 அவாப்ஸ்யஸி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சுகதுக்கங்கள் இரண்டையும், லாபாலாபங்கள் இரண்டையும், ஜயாஜயங்கள் இரண்டையும் சமானமாக்கி, அதன்பின்னர் நீ போர்புரியும் பொருட்டு முயல்வுடையவனாகுதி. இங்ஙனம் போர்செய்யும் நீ பாவத்தை அடையாய்.

(வி-ம்.) இஷ்ட அநிஷ்ட பதார்த்தங்களின் அடைவில் ராகத்துவேஷங்கள் அற்றிருத்தல் சமதன்மையாம். சுகத்தின்கண்ணும், சுககாரண வடிவலாபத் தின்கண்ணும், லாபகாரணமாகிய ஜயத்தின்கண்ணும் விழைவுறாமல், அங்ஙனமே துக்கத்தின்கண்ணும், துக்ககாரணமாகிய நஷ்டத்தின்கண்ணும், நஷ்டகாரண மாகிய அபஜயத்தின்கண்ணும் வெறுப்புறாமல், நீ இப்போர்புரியும் பொருட்டு முயல்வுடையவனாகுதி. இவ்வண்ணம் சுகவிழைவை ஒழித்து, துக்க நீக்கத்தின்

வினைமுனைவையும் ஒழித்து, கேவலம் சுவதர்ம புத்தியால் நீ இப்போரைப் புரியையாயின், இந்தக் குரு பிராஹ்மணர்களின் ஹனன ஜன்னிய பாவத்தையும், நித்திய கர்மத்தைச் செய்யா தொழிந்ததால் உண்டாம் பாவத்தையும் நீ அடையாய். எப்புருஷன் இவ்வுலக பலத்தையேனும், அவ்வுலக பலத்தையேனும் விரும்பி யுத்தஞ் செய்வனோ, அப்புருஷன் குரு பிராஹ்மணரிகளைக் கொன்றதால் உண்டாம் பாவத்தை அவசியம் அடைவன். எப்புருஷன் அப்போரைப் புரியானோ, அப் புருஷன் அந்த நித்திய கர்மத்தைச் செய்யாததால் உண்டாம் பாவத்தை அடைவன். ஆகையால், பல இச்சையின்றிக் கேவலம் சுவதர்மமென நினைந்து போர் செய்தலால் இப்புருஷன் அவ்விருவகையாய பாவத்தையும் அடையான். 'ஹதோ வாப்ஸ்யஸி ஸ்வர்கம் ஜித்வா வாபோக்ஷ்யஸே மஹீம்' என்னும் வசனத்தால் யாம் முன்னர் போரின்பலத்தைக் கூறியது சேர்க்கை வயத்தாய பலத்தைக் கூறியதாம். ஆகையால், முன்வசனத்திற்கும் மூன்றின்றும், இவ்வார்த்தைபை ஆடஸ்தம்ப இருஷியும் கூறியிருக்கின்றார்.

தத்ரயாத்ரயி ப்ரஹ்மணியே நிஷ்டிதோ ஹாயாகம் யஜதஸ்தத்ரயிதோ வனவம்யஜ்ஞம்அயஜ்ஞாணையஜ்ஞ ஸ்தத்ரயிதோஸ்மிஸ்தத்ரயிதோ யஜ்ஞஹாநிஹ்ஞவதீதி.

(பொ-ள்.) இவ்வுலகின்கண்ணே மாங்கனியடைவான் நட்டானுக்கு, நட்ட மாங்கன்றின் நிழலிடம், நறுநாற்றமும் மவசியம் கிடைக்கும். ஆண்டு நிழல்நறு நாற்ற அடைவு, கன்றின் சேர்க்கைவயத்தாய பயனும். அதுபோல, இத்தர்மம் யானவசியம் செய்யத் தருதியதாம் என சுவதர்ம புத்தியால் செய்த தர்மத்தால் மண்ணுலக விண்ணுலகப் பிரயோஜன அர்த்தங்களும் அவசியமுண்டாம். ஆனால், அவை அந்தத் தர்மத்தின் சேர்க்கைவயத்தாய பலரூபமாம். ஒருகால் அம்மண் விண்ணுலக அர்த்தங்கள் அடையக் கிடையாவாயினும், செய்த தர்மத்திற் கானியுண்டாகமாட்டாது. ஆகையால், போரை விதிக்கும் சாஸ்திரம் அர்த்த சாஸ்திரரூபமன்றும். மற்றது, தர்மசாஸ்திர ரூபமாம். இத்தகண செய்ததால் ஸ்ரீ பகவான்! 'வாவதேவாப்ரயோஜனே' என்பதாதிய அர்ச்சுனனது வசனங்கள் கண்டித்தருளப்பட்டனவாயின. (38)

(அ-கை.) ஹே பகவன்! சுவதர்மபுத்தியால் யுத்தம் செய்யும் புருஷனுக்குத் தாங்கள் பாவத்தின் அபாவத்தைக் கூறியருளினீர்கள், அஃதுண்மையேயாகும்; ஆயினும் எனக்குப் போர்செய்யுமாறு உபதேசித்தருளல் தங்களுக்குசிதமன்றும். எனெனின், முன்னர்த் தாங்கள் 'யதஹம் வெத்தி மஹாந்தம் கயம்வை வைரூஷ்ய வாயுஷ்கம் வாதயதி மஹதிகம்' என்பதாதி வசனங்களால் அநிஷ்டத்தே சர்வகர்மங்களின் நிஷேதத்தைக் கூறியருளினீர்கள். அகர்த்தாவாயும், அபோக்தாவாயும், சுத்த சொரூபனையும் யானிருக்கின்றேன் என்பதும், இப்போரைப் புரிந்து யான் அதன் பலத்தைப் போகிப்பேன் என்னும் ஞானமும் சம்பவியாது. அகர்த்துருக்ஷ புத்திக்கும் கர்த்துருக்ஷ புத்திக்கும், பாஸ்பரவிரோதமாம். ஒரு நிலைக்களத்தின்கண்ணே ஓரேகாலத்தே அவ்விரண்டினார்வுகளுமுண்டாகா. எங்ஙனம் ஒளிக்கும் இருட்கும் சமுச்சய முண்டாகாதோ, அங்ஙனம் ஞானம் கர்மமம் என்னுடம் இரண்டினுக்கும் சமுச்சய முண்டாகாது என்னும் அர்ச்சுனனது அபிப்பிராயம், 'ஜ்யாயஸீசெத்' என்னும் சுலோகத்தின்கண் மேல் வெளியாம். ஆகையால், அர்ச்சுனனிய என் ஒருவன்பொருட்டே ஞானோபதேசமும், கர்மோபதேசமும் சம்பவியா; என்று அர்ச்சுனன் சங்கிப்ப ஸ்ரீ பகவான் அறிந்த அவஸ்தை, அறியாத அவஸ்தைகளின் பேதத்தால் ஓரே புருஷனிடத்தே ஞான உபதேசமும் கர்ம உபதேசமும் சம்பவிக்கல் கூடும் என உத்தரம் அருளிச் செய்கின்றார்:—

சு-ம். ஸஷாதெஹி ஹிதாஸாம்வெ யூ பூஜியெ-ஸாமெ கூ ஸாம்பூ ரணா।
பூஜ்யாயூக்தெ பயாவாய-ஸ் கூ-ஸ்பம்யம் ப்ரூஹாஷ்யூஹி ॥ (39)

ப-ம். 3 ஸஷா 2 தெ 6 ஸஹிஹிதா 5 ஸாம்வெ யூ 4 பூஜி 8 யொமெ 7 தூ 9 ஜ்ஸாம் 10 பூ ரணா 12 பூஜ்யா 13 யூக்தை 11 யயா 1 வாய-ஸ் 14 கூ-ஸ்பம் யம் 15 ப்ரூஹாஷ்யூஹி.

(அ-ம்.) ஹே அர்ச்சன! யாம் நின் பொருட்டு முன் உபதேசித்த இப்புத்தி பிரஹ்மத்தின்கண்ணே கூறினேம்; இப்போது கர்ம யோகத்தின்கண்ணே கூறுமிப்புத்தியை நீ கேட்டி. இப்புத்தியோடு கூடியவன் நீ யாகுதியேல் கர்ம பந்தனைக் கடந்தில் விட்டோழிப்பாய்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! உண்மையாய தாற்பரியம் விசாரிக்கப்படாத சுவர்க்காதி நானாவகையாய பலன்களின் சிரவணத்தால் அடைவுற்ற நானாவகையாய சம்சய விபரீத பாவனைகளால் முன்னர் விக்ஷேபத்தை அடைந்திருக்கும் நினது புத்தி எக்கால் அந்தக்காண சுத்தியால் அடைந்திருக்கும் விவேக ஜன்னிய பதார்த்தத் நிடத்துள்ள தோஷ தரிசனத்தால் அந்த விக்ஷேபத்தைப் பரித்தியாகஞ் செய்து உட்பரமான்ம தேவரிடத்தே நிச்சலத்தை அடைந்து, அதாவது நனக்கனுத்தரிசன ரூப விக்ஷேபமற்ற தன்மையை அடைந்து, அப்பரமான்ம தேவரிடத்தே அசலத்தை அடைந்து, அதாவது துயில் மூர்ச்சை தம்பித்து நிற்றல் என்பனவாதியின் இலய விக்ஷேபரூபமென்னுமிரண்டையும் பரித்தியாகஞ்செய்து, எப்போது அப்பரமான்ம தேவரிடத்தே ஏகாக்கிரத் தன்மையை அடையாநிற்குமோ, அல்லது 'நிஶ்சலா ஸமாதௌ' என்னும் இவ்விரண்டு பதங்கட்கும் இப்பொருள் கொள்க. 'நிஶ்சலா' அசம்பாவனை விபரீத பாவனையற்றதாய், 'ஸமாதௌ' நீள்காலம், ஆதரம், நிரந்தரம், சற்காரம் என்னும் நான்கால் சேவிக்கப்பட்டு விஜாதீய விருத்திகளால் தூஷித மற்றதாய் இலங்கும் அப்புத்தி எக்கால் வாயுவற்ற விடத்துள்ள தீபம்போலும் அப்பரமான்ம தேவரிடத்தே நிலைபெறுமோ, அக்கால் தத்துவமசி முதலிய வாக்கியத்தால் ஜனித்த ஜீவப் பிரஹ்மங்களின் அபேத சாக்ஷாத்காரரூப யோகத்தை நீ அடைவாய். அந்த ஞானகாலத்தே வேறு யாதொரு கர்த்தவ்யமும் இன்றும். ஆகையால், அக்கால் நீ கிருதகிருத்தியனாவாய்; ஸ்திதப்பிரஜ்ஞனாவாய் என்பதாம்.

(அ-கை.) ஆண்டு இவ்வகையாய அவசரத்தை அடைந்து, அவ்வர்ச்சுனன் ஜீவன் முக்தர்களுடைய இலக்கணத்தையே முமுக்ஷுக்களின் மோக்ஷோபாய

ரூபம் என எண்ணியவனுய் அந்த ஸ்திதப் பிரஞ்ஞனுடைய இலக்கணத்தை அறியும்பொருட்டு இவ்வகையாய வினுவை வினவுகின்றனன் :—

சுஜ-ஜுந உவாச.

சு-ம். ஹ்ரிதவ்ரஜ்ஞஸ்ய கா ஹாஷா ஸமாயிஹஸ்ய கெஶவ ।
ஸ்ரிததீஃ கிம் வ்ரஹாஷேத கிமாஸீத வ்ரஜேதகிம் ॥ (54)

ப-ம். 3 ஹ்ரிதவ்ரஜ்ஞஸ்ய 5 கா 4 ஹாஷா 2 ஸமாயிஹஸ்ய 1 கெஶவ 6 ஸ்ரிததீஃ 7 கிம் 8 வ்ரஹாஷேத 9 கிம் 10 ஸுஸீத 12 வ்ரஜேத 11 கிம்.

(அ-ம்.) ஹே கேசவ! சமாதியின்கண்ணேயிருக்கும் ஸ்திதப்பிரஞ்ஞனுக்கு யாது இலக்கணம்? சமாதியினின்றும் எழுந்த ஸ்திதப் பிரஞ்ஞன் எங்ஙனம் பேசுவன்? எங்ஙனம் பாகிய இந்திரியங்களை நிக்கிரகஞ் செய்வன்? எங்ஙனம் விஷயங்களை யடைவன்? (54)

(வி-ம்.) யான் பிரஹ்மமாய் இருக்கின்றேனென நிச்சலத்தை யடைந்த பிரஞ்ஞை உடையவன் ஸ்திதப் பிரஞ்ஞன். அந்த ஸ்திதப் பிரஞ்ஞன் இருவகையாய அவஸ்தைகளை உடையவனுவன். ஒருவகையோ சமாதியின்கண்ணே நிலை பெற்றிருத்தலாம்; மற்றொருவகையோ, அச்சமாதியினின்றும் எழுந்த சித்த முடைத்தாயிருத்தலாம். இக்காரணத்தானே, அந்த ஸ்திதப் பிரஞ்ஞ புருஷனுக்குச் சமாதியின்கண்ணே இருக்கும் என விசேஷணங் கொடுக்கப்பட்டது. இங்ஙனம், சமாதியின்கண்ணே இராநின்ற ஸ்திதப் பிரஞ்ஞனுக்கு யாது இலக்கணம்; அதாவது அச்சமாதியின்கண்ணே இராநின்ற ஸ்திதப்பிரஞ்ஞனை, எவ்விலக்கணத்தால் வேறு புருஷன் அறிவன் என்பது முதல் வினுவாம். 1. அச்சமாதியினின்றும் எழுச்சியை யடைந்த சித்தத்தையுடைய இரண்டாவது அவஸ்தாவானுகிய ஸ்திதப் பிரஞ்ஞன், தனது ஸ்துதியின்கண்ணும் நிந்தையின்கண்ணும் மகிழ்ச்சிவாயிலாய் வாட்டவாயிலாய் வசனங்களை எங்ஙனம் வசனிப்பன் என்பது இரண்டாவது வினுவாம். 2. அச்சமாதியினின்றும் எழுச்சியை யடைந்த சித்தத்தை நிக்கிரகஞ் செய்யும்பொருட்டு அந்த ஸ்திதப் பிரஞ்ஞ புருஷன் நேத்திராதிபாகிய இந்திரியங்களை நிக்கிரகம் எங்ஙனஞ் செய்வனென்பது மூன்றுவது வினுவாம். 3. அந்தப் பாகியேந்திரிய நிக்கிரக அபாவகாலத்தின்கண்ணே, அந்த ஸ்திதப் பிரஞ்ஞ புருஷன் எங்ஙனம் விஷயங்களை யடைவன் என்பது நான்காவது வினுவாம். 4. கருத்திதுவாம் :—அவ்வெழுந்த சித்தத்தையுடைய ஸ்திதப் பிரஞ்ஞனது உரைத்தல், இருத்தல், சரித்தல் என்னும் இம்மூன்றும் அஞ்ஞானிகள் பாலிருப்பதினும் எவ்வகையாய விலக்ஷணமாம். இவ்வண்ணம் அர்ச்சுனனது நான்கு வினுக்கள் சித்தமாம்; ஆண்டு சமாதியின்கண் இராநின்ற ஸ்திதப் பிரஞ்ஞனிடத்தே முதல்வினு ஒன்றும். சமாதியினின்றுங் கிளம்பிய சித்தத்தையுடைய ஸ்திதப் பிரஞ்ஞனிடத்தே மூன்று வினுக்களாம். ஆண்டு 'ஹெ கெஶவ' என இச்சம்போதனத்தைக் கூறியதால் அர்ச்சுனன் இப்பொருளைக் குறிப்பித்தனன். சர்வத்திற்கு மந்தரியாமியாதலின் தாங்களை இந்த இரகசியப் பொருளை இயம்பியருளுவதற்குச் சமர்த்தராவீரென்பதாம். (54)

(அ-கை.) இப்போது ஸ்ரீ பகவான் இந்நான்கு வினுக்கட்கும் முறைப்படி விடைகளை இந்த இரண்டாவது அத்தியாய முடிவு பரியந்தம் கூறியருளுவர். அவற்றுள், ஒரு சுலோகத்தால் முதல் வினுவின் உத்தரத்தை உரைத்தருளுகின்றூர் :—

ஸ்ரீ ஹமவாநு உவாச.

சு-ம். வ்ரஜஹாதி யதா³காமாநு ஸர்வா²நு பார்த²நாமதாநு ।
ஸ்தி²தப்ரஜ்ஞஸ்ததா³ முநிருச்யதே ॥ (55)

ட-ம். 6 வ்ரஜஹாதி 2 யதா³ 5 காமாநு 4 ஸர்வா²நு 1 பார்த² 3 நாமதாநு 7 ஸ்தி²தப்ரஜ்ஞ 9 ஸர 8 ஸ்ததா³ 10 முநி 12 ஸ்தி²தப்ரஜ்ஞ 11 ததா³ 13 உச்யதே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எக்கால் அச்சமாதியிலிருக்கும் புருஷன் தன் மனத்தின்கண் இருக்கும் சர்வ காமங்களையும் பரித்தியாகஞ்செய்வதோ, ஆன்மாவின்கண்ணே ஆன்மாவானே திருப்தனுவதோ, அக்கால் அச்சமாதியிலிருக்கும் புருஷன் ஸ்திதப் பிரஞ்ஞனெனக் கூறப்பெறுவன். (55)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! காம சங்கற்பாதிய மனத்தின் விருத்தி விசேஷங்கள் யாவையுளவோ, எக்காம சங்கற்பாதி விருத்தி விசேஷங்கள் அந்நிய சாஸ்திரத்தின்கண்ணே பிரமாணம், விபர்யயம், விகற்பம், நித்திரை, ஸ்மிருதி என்னும் பேதத்தால் ஐந்து வகையாய்க் கூறப்பெற்றுளவோ, அக்காம சங்கற்பாதிய சர்வ விருத்திகளையும் எக்காலத்தே இவ்வறிஞன் காரணத்தைப் பாதித்துப் பரித்தியாகஞ்செய்வதோ, அதாவது எக்கால் அக்காம சங்கற்பாதி சர்வ விருத்திகளு மற்றவனுவதோ, அக்கால் அச்சமாதியில் இருக்கும் அறிஞன் ஸ்திதப் பிரஞ்ஞனெனப்படுவன். இப்போது அக்காம சங்கற்பாதியின்கண்ணே அனன்மவஸ்துத் தன்மைவடிவத் தன்மையை யறைந்தருளும் வாயிலாய்ப் பரித்தியாகஞ் செய்யத் தகுதியுண்மையை நிரூபித்தருளுகின்றார். 'உபாமதாநு' என ஹே அர்ச்சுன! அக்காம சங்கற்பாதி சர்வ தருமங்களும் மனத்தினவேயாம், ஆன்மாவினவன்றும். ஒருகால் அவை ஆன்மாவி னியற்கையாய தருமங்களாமாயின், அக்கினியின் இயற்கையாய தருமமாமுஷ்ணத்தன்மை அக்கினியிருப்ப ஒருகாலும் நீங்காததே போல, ஆன்மாவிருப்ப அக்காம சங்கற்பாதி தருமங்களும் ஒருகாலும் நீங்கமாட்டா. ஆகையால், அக்காம சங்கற்பாதிகள் ஆன்மாவின் தருமங்களன்றும், மனத்தின் தருமமேயாம். ஆகையால், அக்காரணரூப மனத்தைப் பரித்தியாகஞ்செய்யின், அக்காம சங்கற்பாதிகளைப் பரித்தியாகஞ் செய்தல் கூடும். அக்காம சங்கற்பாதிகள் மனத்தின் தருமங்களேயாம் என்பதன்கண்ணே 'காஸ்ஸங்கஸ்ஸோ விஜி ஹ்ஹா' என்பதாதி சுருதியே பிரமாணரூபமாம். இத்துணை கூறியதால் புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், முயற்சி, தருமம், அதருமம் என்னும் எட்டும் ஆன்மாவின் தருமம் என உடன்படும் நையாயிகமதமும் கண்டிக்கப்பட்டதாயது.

சங்கை :—ஹே பகவன்! அந்தச் சமாதியிலிருக்கும் ஸ்திதப் பிரஞ்ஞ வித்வானுடைய முகம் பிரசன்னமாகப் பிரதீதியாகும். அம்முகத்தின் பிரசன்னத்தன்மை உண்மகிழ்ச்சியின்றி உண்டாகமாட்டாது. ஆகையால், அம்முகத்தின் பிரசன்னத்தன்மைரூப ஹேதுவினுல் அந்த ஸ்திதப் பிரஞ்ஞனுடைய சந்தோஷத்தை அனுமானஞ் செய்துகொள்ளலாம். அச்சந்தோஷ விசேஷம் சர்வ விருத்திகளையும் பரித்தியாகஞ் செய்வதால் எவ்வண்ணஞ் சம்பவிக்கும்?

சமாதானம் :—ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார் 'ஸுதுக்²யே வாநுத்³விக்³நமநா:' என. ஹே அர்ச்சுன! அந்த வித்வானுனவன் பரமாநந்த ஸ்வரூப ஆன்மாவின்கண்ணே பரமபுருஷார்த்தப் பிராப்தியால் திருப்தியை யடைந்துளான். எவ்வனன்ம துச்ச பதார்த்தத்தின்கண்ணும் அந்த அறிஞன் திருப்தியை யடையான். அந்தப் பரமாநந்த ஸ்வரூப ஆன்மாவின்கண்ணும் ஸ்வப்பிரகாச சைதன்யரூபமாய்

இலங்காநின்ற ஆன்மாவாலே திருப்தியை யடைந்துளான். எம்மனுவிருத்தி விசேஷத்தானும் திருப்தியை யடைந்திலான். ஆகையால், அந்த ஸ்திதப் பிரஞ்ஞ புருஷனிடத்தே மனுவிருத்தியின்றியும் மகிழ்ச்சி விசேஷமுண்டாதல் கூடும்.

ஆ-சு. "யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேঽஸ்ய ஹ்ருதி ஸ்ரிதாஃ।
அதர்த்யோঽம்ருதோ பவத்யத்ர ப்ரஹ்ம ஸமச்னுதே."

(பொ-ள்.) இப்புருஷனது மனத்தின்கண்ணே இராநின்ற எக்காம சங்கற்பாதிகளுளவோ, அவை யாவும் எக்கால் எஞ்சுதலின்றி நிவிருத்தியாமோ, அக்கால் இந்தஜீவன் அமிருத பாவத்தை யடைவன். அங்ஙனமே இச்சரீரத்தின் கண்ணே ஆநந்தவடிவப் பிரஹ்மத்தை அனுபவிப்பன். ஆகையால், அச்சமாதியின்கண்ணே இராநின்ற ஸ்திதப் பிரஞ்ஞ புருஷன் இவ்வகையாய இலக்ஷணவாசகசப்தங்களால் கூறப்பெறுவன் என முதல்வினுவின் விடை துணியப்பெற்றது. (55)

(அ-கை.) இப்போது சமாதியினின்றுங் கிளம்புதலே யடைந்த ஸ்திதப் பிரஞ்ஞனுடைய உரைத்தல், இருத்தல், சரித்தல் என்னும் மூன்றன்கண்ணும், மூட புருஷரின் உரைத்தல் முதலியவற்றினும் விலக்ஷணத்தன்மையைக் கூறியருளுபவராய் ஸ்ரீ பகவான் 'க்ம்வ்ருஹாஷேத' என்னும் இரண்டாவது வினுவின் விடையை இரண்டு சுலோகங்களாற் கூறியருளுகின்றார்:—

சு-ம். ப்ரஜஹாதி யதா காமாந் ஸர்வாந் பார்த² மநோகதாந்।
ஆத்மந்யேவாத்மநா துஷ்டஃ ஸ்திதப்ரஜ்ஞஸ்ததோச்யதே ॥ (56)

ப-ம். 1 ப்ரஜஹாதி 2 யதா 3 காமாந் 4 ஸர்வாந், பார்த² 5 மநோகதாந் 6 ஆத்மந்யேவ 7 ஆத்மநா 8 துஷ்டஃ, ஸ்திதப்ரஜ்ஞஸ்ததோ 9 உச்யதே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! துக்கங்களிடத்து உத்வேகத்தை அடையாத மனத்தையுடையவனும், விடயாநந்தங்களிடத்தே இச்சையற்றவனும், இராகம், பயம், குரோதம் அற்றவனும் ஆகிய மனனசீலன் ஸ்திதப்பிரஞ்ஞன் எனப்படுவன்.

(வி-ம்.) ஆத்யாத்மிக துக்கம், ஆதிபௌதிக துக்கம், ஆதிதைவிக துக்கம் என மூவித துக்கமுண்டாம். அவற்றுள், சோகமோகாதி ஆதிகளாற் சனித்த துக்கமும், சுரம் சூலை முதலியவற்றாற் சனித்த துக்கமும், ஆத்தியாத்மிக துக்கம் எனப்படும். புலி, பாம்பு முதலியவற்றாற் சனித்த துக்கம் ஆதிபௌதிக துக்கம் எனப்படும். அதிகக்காற்று, அதிகமழை, அக்கினியாதியாற் சனித்த துக்கம் ஆதிதைவிக துக்கம் எனப்படும். அவ்வெல்லாத் துக்கமும் இரஜோகுணத்தின் பரிணாமரூபமும் சந்தாபரூப அந்தக்கரணத்தின் விருத்தி விசேஷரூபமுமாம். அங்ஙனமே பாவகருமரூபப் பிராரப்தத்தாற் பிராப்தமாயவாம். அத்தகைய துக்கங்களின் அடைவின்கண்ணே, அத்துக்கங்களை நிவிருத்தி செய்வதின் அசாமர்த்தியத் தன்மையால் அடையப்படாத *உத்வேகமனம் எவனுக்கோ அவன் அநுத்விக்ந மனத்தனுவன். அவிவேகி புருஷனுக்கோ அத்துக்க முண்டாங்காலத்தின்கண் இவ்வகையாய உத்வேகமுண்டாம். யான் மிகுந்த பாவான்மாவாய் இருக்கின்றேன், இங்ஙனங் கொடிய துக்கத்தை அனுபவிக்கும் எனக்குத் திக்காரமாம். இத்தகைய எனது துக்கத்தை யாவர் நீக்குவர் என்பதாம். இவ்வகையாய அனுதாபரூப மயல்வடிவ தமோகுண பரிணாமமாகிய அந்தக்கரண விருத்தி விசேஷம் உத்வேகம் எனப்படும். அவ்வுத்வேகம் அவிவேகிகட்குத் துக்கரூப பலத்தை

* உத்வேகம் = புலப்பம்.

அடைவிக்குங்கால் எங்ஙனமாமோ, அங்ஙனம் ஒருகால் அது அவ்வவிவேகி கட்குப் பாவகருமத்தைச் செய்யுங் காலத்தே உண்டாகுமாயின், அப்பாவ கருமப் பிரவிருத்தியின் பிரதிபந்தகமாதலின் அவ்வுத்வேகம் சபலமாகும்; ஆனல் அப்பாவ கருமங்களைச் செய்யுங் காலத்தே அவ்வவிவேகிகட்கு அவ்வுத்வேகம் உண்டாவதின்றும். அப்பாவகருமங்களின் துக்கரூப பல போககாலத்தே அவ் வுத்வேகம் உண்டாயினும், வீட்டில் அக்கினி பற்றியபின் அதனை யணைத்துச் சாந்த மாக்கும் பொருட்டுக் கூபந்தோண்டல் பயனற்றதாமாறுபோலப் பயனற்றதே யாகும். ஏனெனின், பாவவடிவ காரணம் இருப்பின் துக்கரூப காரியம் அவசிய மாய் உற்பன்னமாம். அக்காலத்தே உத்வேக மாத்திரத்தால் அத்துக்கத்தின் நிவிருத்தி உண்டாகமாட்டாது. அத்துக்கத்தின் பாவரூப காரணம் இருப்பினும், எனக்கேன் துக்கமுண்டாம் என்னும் அவிவேகம் மயல்வடிவமாம். ஆகையால், அம்மயல்வடிவ அவிவேகம் அந்த ஸ்திதப் பிரஞ்ஞனிடத்துச் சம்பவிக்கமாட் டாது. அந்த வித்வானுடைய சரீரமும் புண்ணிய பாவகருமங்களால் ஆக்கப் பெற்றதாம். ஆகையால், அந்தப் பிராரப்த பாவகருமம் அவ்வித்வானுக்குக் கேவ லந் துக்கமாத்திரத்தையே அடைவிக்கும்; ஆனல், அத்துக்க அடைவின் பிற்கா லத்தே அவ்வவிவேக ரூபமயலின் அடைவை உண்டாக்கமாட்டாது.

சங்கை :—ஹே பகவன்! துக்க அடைவின் பிற்காலத்தே உண்டாகும் அவி வேகரூப மயலும் வேறு துக்கத்தின் காரணமாகும்; ஆகையால், அவ்வவிவேக ரூப மயலும் வேறு பிராரப்த கருமத்தானே யுண்டாம். ஆகையால், அறிஞனுக் கும் பிராரப்த கருமவயத்தால் அவிவேகரூபப் பிரமம் (மயல்) அவசியமுண்டாம்.

சமாதானம் :—ஹே அர்ச்சுன! அம்மயலின் உபாதான காரணமாய அஞ்ஞா னம் ஸ்திதப் பிரஞ்ஞனுக்கு நாசமே யாகிவிட்டது. ஆகையால், அந்த ஸ்திதப் பிரஞ்ஞனிடத்தே அவ்வவிவேகரூப மயல் சம்பவிப்பதின்றும். அங்ஙனமே அவ் வறிஞனிடத்தே அம்மயலாற் சனித்த துக்கப் பிராப்தியைச் செய்விக்கும் பிராரப்த கருமமும் இன்றும். எவ்வாற்றலேனும் அவ்வறிஞனுடைய தேகயாத்திரை மாத் திரையின் நிர்வாகத்தைச் செய்யும் பிராரப்த கருமபலத்தின் போகம் மயலின்றே னும், பாதிதானு விருத்தியினல் அவ்வறிஞனிடத்தே சம்பவிக்கும் என்னுமிவ் வார்த்தையை மேல்விஸ்தாரமாய் விளம்புவேம். அல்லது, அவ்வறிஞன் எங்ங னந் துக்க அடைவின்கண்ணே உத்வேகமற்றவனுவனே, அங்ஙனம் சுக அடை வின்கண்ணே இச்சையு மற்றவனுவன். ஆண்டுச் சத்துவகுணத்தின் பரிணமரூப அந்தக் காரணத்தின் பிரீதிவடிவ விருத்தி விசேஷஞ் சுகமெனப்படும். அச்சுகமுந் துக்கத்தைப்போல ஆத்தியாத்மிக சுகம், ஆதிபௌதிகசுகம், ஆதிதைவிகசுகம் என்னும் வேறு பாட்டால் மூவகைத்தாம். அவற்றுள், பிரியவஸ்துவின் தியா னத்தானும், பாண்டித்தியாதியின் அபிமானத்தானும் உண்டாய சுகம் ஆத்தியாத் மிக சுகமெனப்படும். ஸ்திரீ புத்திர மித்திராதியரால் உண்டாகிய சுகம் ஆதிபௌ திக சுகமெனப்படும். மந்தமந்தமாய மாருதம் மழை முதலியவற்றலுண்டாஞ் சுகம் ஆதிதைவிக சுகமெனப்படும். அல்லது, இக்கீதா சாஸ்திரத்தின் பதினெட் டாவது அத்தியாயத்தே கூறிய ரீதியாய்ச் சாத்விகம், இராஜசம், தாமசம் என்னும் வேறுபாட்டால் அச்சுகம் மூவகைத்தாம். அல்லது, அந்திய சாஸ்திரரீதியாய், வைஷயிக, ஆபிமானிக, மாநோராதிக, ஆப்யாசிக வேறுபாட்டால் அச்சுகம் நான்கு வகைத்தாம். அவற்றுள் விஷய சம்பந்தத்தால் உண்டாஞ் சுகம் வைஷயிக சுக மெனப்படும். இராஜ்ய பாண்டித்யாதிகளின் அபிமானத்தால் உண்டாகிய சுகம் ஆபிமானிக சுகமெனப்படும். பிரியவிஷயங்களைத் தியானித்தலால் உண்டாஞ் சுகம் மாநோராதிக சுகமெனப்படும். சூரியபகவானுடைய நமஸ்காராதிகளால் உண்டாஞ் சுகம் ஆப்யாசிக சுகமெனப்படும். இங்ஙனம் அநேகம் வகையாய சுகங்களை அறி

விக்கும்பொருட்டு, ஸ்ரீ பகவானுனவர் 'ஹுவெஷு' என்னும் பன்மை வசனத்தைப் பகர்ந்தருளினர். அவ்வெல்லாச் சுகங்களும் புண்ணிய கருமரூபப் பிராரப்பத்தால் பிராப்தமாம். அவ்வெல்லாச் சுகங்களிடத்தும் அவ்வறிஞன் இச்சையற்றவனுவன். ஆண்டு, அவ்வச்சுக அனுபவகாலத்தின்கண்ணே அவ்வச்சுக சமானஜாதியையுடைய வேறு சுகத்தை அடைவிக்கும் தருமத்தை அனுஷ்டானஞ்செய்யாது, அவ்வச்சுக அடைவின் ஆசைவடிவ தாமச அந்தக்கரண விருத்தி விசேஷம் இச்சை எனப்படும். அவ்விச்சை மயல்வடிவமாம். அத்தகைய மயல்வடிவ இச்சை அவிவேகிகளிடத்தே உற்பன்னமாம். விவேகிகளிடத்தே அம்மயல்வடிவ இச்சையுண்டாகமாட்டாது. ஆகையால், இப்பொருள் துணியப்பெற்றதாம் :—எங்ஙனம் பாவகருமரூப காரணமிருப்பினும், துக்கரூப காரியம் எனக்குண்டாகாதொழிக என்னும் பயனற்ற ஆகாங்ஷைவடிவ உத்வேகம் விவேகியினிடத்தே சம்பவிக்கமாட்டாதோ, அங்ஙனம் புண்ணிய கருமரூப காரணம் இல்லாவிடினும், சுகரூபகாரியம் எனக்குண்டாகுக என்னும் பயனற்ற ஆகாங்ஷைவடிவ திருஷ்ணை என்னும் நாமம் படைத்த இச்சையும் அந்த விவேகியினிடத்தே சம்பவிக்கமாட்டாது. பிராரப்த புண்ணிய கருமமோ, அவ்வித்வானுக்குக் கேவலம் சுகமாத்திரத்தையே அடைவிக்கும் அன்றிச் சிறிதும் அம்மயல்வடிவ இச்சையை அடைவிக்கமாட்டாது. அல்லது, மகிழ்ச்சிவடிவ அந்தக்கரணத்தின் விருத்தி விசேஷம், இச்சை எனப்படும். ஆண்டு எவ்வெனக்கு இத்தகைய மேலாய சுகங் கிடைத்தீதா, அவ்வியான் தன்னியனுனேன். மூவுலகத்தின்கண்ணும் எனக்குச் சமான சுகமுடையவர் எவருமின்றும். எவ்வுபாயத்தானும் இவ்வெனது சுகம் அழிவுறுமல் இருக்கவேண்டும், என்பனமுதலிய வடிவமாய் விரிந்த அந்தக்கரணத்தின் தாமசவிருத்தி விசேஷம், மகிழ்ச்சி எனப்படும். அம்மகிழ்ச்சிவடிவ இச்சையும் மயல் வடிவமேயாம். இச்சை சப்தத்தின் இப்பொருளையே ஸ்ரீ பகவான் "ஹவ்ரஹ்ரஷ்யீவ்யம் வ்ராவ்யஹொஷி ஜைவ்ரவ்ய ஸாவ்ரியழ" என்னும் சுலோகத்தின்கண்ணே மீமற் கூறியருளுவர். அம்மகிழ்ச்சிவடிவ மயலும், அவ்வறிஞனிடத்தே சம்பவிக்கமாட்டாது. மீண்டும் அவ்வறிஞன் எத்தகையன் என்னின், இராகபயக் குரோதங்கள் அற்றவனுவன். அவற்றுள், இவ்விஷயம் மிகவும் சுந்தரமாயிருக்கின்றது என்னும் சோபனபுத்திவடிவ அத்தியாசத்தால் உண்டாகிய இரஞ்சனவடிவ அந்தக்கரணத்தின் விருத்தி விசேஷம் இராகமெனப்படும்; இதுவே அத்தியந்தம் அபினிவேசம் எனப்படும். இந்த இராகத்திற்கு விஷயமாய பதார்த்தத்தை நாசஞ்செய்யுங் காரணமொன்றடையின், அதனை நீக்குவதில் தனக்கு ஆற்றலின்றென்று எண்ணுபவனுடைய தீனத்தன்மைவடிவ அந்தக்கரணத்தின் விருத்தி விசேஷம் பயமாம். அந்த இராகத்திற்கு விஷயமாகிய பிரிய வஸ்துவை நாசஞ்செய்யுங் காரணம் ஒன்று அடையுமாயின், அதனை நீக்குவதில் தனக்கு ஆற்றலின்றென்று எண்ணுபவனுடைய பேரொரிச்சல்வடிவ அந்தக்கரணத்தின் விருத்தி விசேஷம், குரோதம் எனப்படும். அந்த இராகம், பயம், குரோதம் என்னும் மூன்றும் மயல் வடிவமேயாம். அத்தகைய மயல்வடிவ இராகம், பயம், குரோதம் என்னும் மூன்றும் எவன்பானின்றும் நீங்கியிருக்கின்றதோ, அவன் வீதராக பயக்குரோதன் எனப்படுவன். இவ்வாறுய மனனசீல சந்யாசி ஸ்திதப்பிரஞ்ஞ னெனப்படுவன். ஆகையால், இப்பொருள் துணியப்பெறும் :—இங்ஙனமாய ஸ்திதப் பிரஞ்ஞன் தனது உள்ளனுபவத்தை வெளிப்படுத்தித் தனது சீடரைச் சிக்ஷிக்கும்பொருட்டு, உத்வேகமற்ற தன்மையையும், இச்சையற்ற தன்மையையும், இராக பயக்குரோதமற்ற தன்மையையும் கூறும் வசனம் யாதுளதோ அதனையே கூறுகின்றன். அதாவது என்னைப்போல வேறு முமுக்ஷுவுங் துக்கத்திடத்தே உத்வேகஞ் செய்யா

தொழிக, சுகத்திடத்தே இச்சைசெய்யாதொழிக, இராக பயக்குரோதமற்றவனு குக வென்பதாம். (56)

(அ-கை.) அன்றியும் :—

சு-ம். யஃஹவ-ழதராநஹிஹ்ஹெஹ ஹுத்ததாவ்ய ஸுஹாஃஸுஹழ ।
நாஹிநந்தி ந ஹெஷ்டி தஹ்ய வ்ரஜ்ஞா வ்ரதிஷ்டிதா ॥ (57)

ப-ம். 1 யஃ 2 ஹவ-ழதர 3 சுநஹிஹ்ஹெஹஃ 4 தஹ் 7வ்ராவ்ய 6 ஸுஹாஸுஹம் 8 ந 9 சுஹிநம்ஹதி 10 ந 11 ஹெஷ்டி 12 தஹ்ய 13 வ்ரஜ்ஞா 14 வ்ரதிஷ்டிதா.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வறிஞன் தேகாதி சர்வ பதார்த்தங்களிடத் தும் நேய மற்றவனுவ்ஞ, அவ்வப்பிரிய அப்பிரிய வஸ்துக்களை யடைந்தும் புக ழாஞ, இகழாஞ, (மகிழாஞ, வாடாஞ) அவ்வறிஞனுடைய பிரஞ்ஞை நிலை பெற்றதாகும். (57)

(வி-ம்.) அறிஞனகிய முனிவனனவன், தனது தேக ஜீவனுதி சர்வ பதார்த் தங்களிடத்தும் நேயமுடையவனுகான். ஈண்டு ஏஃதிருப்பின், அந்நிய வஸ்துவின் ஹானி, விருத்திகள் தன்னிடத்தே ஆரோபணஞ்செய்யப்படுமோ, அத்தகைய அவ்வந்நிய வஸ்துவை விஷயமாகவுடைய அந்தக் காரணத்தின் தாமச விருத்தி விசேஷம் நேயமாம்; அதுவே பிரேமையெனப்படும். அந்நேயவயத்தானே இவ் வுலகர் தமது மனைவி, மைந்தர், தனம் முதலிய பதார்த்தங்களின் ஹானி, விருத்தி யைத் தம்மிடத்தே எண்ணுவர். அந்நேயத்தால் எவ்வாற்றுனுங் கட்டுப்படா தோன் அநபிஸ்நேகன் எனப்படுவன். அத்தகைய அநபிஸ்நேக அறிஞனும், பரமாநந்தவடிவ ஆன்மாவின்கண்ணே எல்லாவகையானும் நேயமுடையவனுவன். ஏனெனின், தேகாதி அனைன்ம பதார்த்தங்களின் நேய பரித்தியாகம் அந்தரான் மாவின் நேயத்தின்பொருட்டேயாம். ஆன்மாவின் நேயமின்றிப் பாகிய பதார்த் தத்தின் நேயத்தைப் பரித்தியாகஞ்செய்தல் பயனற்றதாம். எவ்வறிஞனவன், புண்ணிய கருமவடிவ பிராரப்தம் அடைவித்த சுகாகாரணரூபப் பிரிய விஷயத்தை யடைந்தும், மகிழ்ச்சி விசேஷ வாயிலாய் அவ்விஷயங்களைப் பிரசம்சை செய்வ தின்றே; பாவகருமரூபப் பிராரப்தமடைவித்த துக்காகாரணரூப அப்பிரிய விஷ யங்களையடைந்து, அசூயைவாயிலாய் அவ்வறிஞனவன் அவ்வப்பிரிய விஷயங் களை இகழான். கருத்திதுவாம் :—அஞ்ஞானிகட்குச் சுகரூபது வடிவமான தமது மனைவி, மைந்தர் முதலிய பதார்த்தங்கள் சுபவிஷயங்களாம். அந் தச் சுபவிஷயங்களின் குணத்தைக் கூறுவதின்கண்ணே முயல்விக்கும். அவர் தம் அந்தக்காரணத்தின் பிராந்திரூப தாமசவிருத்தி விசேஷம், அபிநந்தனம் எனப்படும். ஆண்டு அம்மனைவி, மைந்தர் முதலிய பதார்த்தங்களின் குணங் களைக் கூறல், அந்நிய புருஷர்களின் பிரீதியின்பொருட்டன்றும்; ஆகையால், பயனற்றதேயாம். இவ்வண்ணம் அந்நிய புருஷரின் வித்தை, பிரதிஷ்டை முத லிய குணங்கள் ஈரிஷையை உண்டாக்கும் வாயிலாய் அவ்வஞ்ஞர்களின் துக்கத் திற்கே காரணமாம். ஆகையால், அவ்வந்நியரின் வித்தை முதலிய குணங்கள் அவர்களைக்குறித்து அசுப விஷயங்களாம். அவ்வசுப விஷயங்களின் நிந்தை முதலியவற்றின்கண்ணே முபல்விக்கும் அவ்வஞ்ஞானிகளின் அந்தக்கரண மயல் வடிவ விருத்தி விசேஷம், துவேஷம் எனப்படும். அந்தத் துவேஷமும், தமோ குணத்தின் பரிணமமாம். அவ்வஞ்ஞானி செய்த நிந்தை அவ்வந்நிய புருஷரின் வித்தை முதலிய மேலாய தன்மையை நிவாரணஞ் செய்யமாட்டாது. ஆகையால், அந்நிந்தை பயனற்றதேயாம். ஆகையால், அவ்வபிநந்தனமும், துவேஷமும் மயல் வடிவமாம். அங்ஙனமே தமோகுண பரிணமமாம். அத்தகைய அபிநந்த

னம், துரீவஷம் என்னும் இரண்டும் மயலற்ற சுத்த அந்தக்கரணமுடைய ஸ்திதப்பிரஞ்ஞ புருஷனிடத்ரீத எங்ஙனஞ் சம்பவிக்கும்? மற்ரீறு சம்பவிக்கமாட்டா. அந்தத் துரீவஷாதி தாமசவிருத்திகளே, அந்தக்கரணத்தைச் சுழற்றுவிப்பனவாம். அந்தத் துரீவஷாதிகளின்றுயின், அந்த நேயமற்ற மகிழ்ச்சி வாட்டமற்ற வித்துவாணுய முனிவனுக்கு, அந்த ஆன்ம தத்துவத்தை விஷயமாயுடைய பிரஞ்ஞைபானது பிரதிஷ்டிதரீமையாம். (நன்னிலை பெற்றரீதயாம்.) அதாவது, மோகூஷரூப பலத்தின்கண்ரீண இனிது முடிபை உடையதாம்; அம்முனிவனே, ஸ்திதப்பிரஞ்ஞன் எனப்படுவன். இவ்வண்ணம் வேறு முமுகூஷுவும் சர்வ பதார்த்தங்களிலும், நேயமற்றவுய்ப் பிரிய விஷயங்களை அடைந்தும், அவற்றைப் புகழாணுய், அப்பிரிய விஷயங்களை அடைந்தும், அவற்றை இகழாணுய் இருப்பன். ஆதலின், இப்பொருள் துணியப்பெறும்:—அஞ்ஞானியானவன் சுப, அசுப பதார்த்தங்களின் பிராப்தி காலத்தின்கண்ரீண, பிரசம்சை வடிவ வசனங்களையும், நிந்தை வடிவ வசனங்களையும் கூறுவரீதரீபால; அவ்வித்துவாணனவன் அந்தச் சுப, அசுப பதார்த்தங்களின் பிராப்திகாலத்ரீத பிரசம்சா வசனங்களையும் நிந்தை வசனங்களையுங் கூருன். மற்ரீறு, அந்தச் சுபம், அசுபம் என்னும் இரண்டின் பிராப்திகாலத்ரீத, அவ்வறிஞனவன் உதாசீனனுகியே இருப்பன். (57)

(அ-கை.) இப்ரீபாது 'கூஷாவரீத' என்னும் இம்மூன்ருவது விஞவின் விடையை ஸ்ரீ பகவான், ஆறு சுரீலாகங்களாற் கூறியருளுகின்ருர். ஆண்டு, பிராரப்த கருமவசத்தால் சமாதியினின்றுங் கிளம்பி விரீகூஷபத்தை அடைந்த இந்திரியங்களை மீண்டும் உண் முகப்படுத்திச் சமாதியின் பொருட்ரீட, அந்த ஸ்திதப்பிரஞ்ஞனுடைய ஸ்திதி உண்டாம் என்னும் இப்பொருளை நிரூபணஞ் செய்தருளும்பொருட்டு, ஸ்ரீ பகவான், கூறியருளுகின்ருர்:—

சு-ம். யதோ வை²ஹரந்ரீதி புரு²ஷஸ்ரீ²சோ²மாநீவ வை²ஷ²ஸ²꞉ ।
இ²ந்த்³ரியாணீ²ந்த்³ரியார்தே²ப்⁴ய꞉ தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டி²தா ॥ (58)

ப-ம். 5 யதோ 10 வை²ஹரந்ரீதி 9 அ 4 ஸ்²ரயம் 1 புரு²ஷ²꞉ 2 ஸ²மாநி 3 இவ 6 வை²ஷ²ஸ²꞉
7 இ²ந்த்³ரியாணி 8 இ²ந்த்³ரியார்தே²ப்⁴ய꞉ 11 தஸ்ய 12 ப்ரஜ்ஞா 13 ப்ரதிஷ்டி²தா.

(அ-ம்.) ரீஹ அர்ச்சுன! எங்ஙனம், கூர்மம் தனது சிரம், கான் முதலிய அங்கங்களைச் சுருக்கிக்கொள்ளுரீமா; அங்ஙனம் இவ்வறிஞன் எக்காலத்ரீத, தனது எல்லாப் பொறிகளையும் சப்தாதி விஷயங்களினின்றும் மீண்டும் சுருக்கிக்கொள்வரீணு, அக்காலத்ரீத இவ்வறிஞனது பிரஞ்ஞை நிலைபெற்றதாம். (58)

(வி-ம்.) ரீஹ அர்ச்சுன! எங்ஙனம் கூர்மம் அந்தியத்தின் பயத்தால் தனது தலை, கால் முதலிய சர்வ அங்கங்களையும், தனது சரீரத்தின்கண்ரீண சங்கோசஞ் செய்துகொள்ளுரீமா, அங்ஙனம் சமாதியினின்றும் வெளிக்கிளம்பிய இவ்வறிஞன் எக்காலத்ரீத இராகாதி ரீதாஷ அடைவின் பயத்தாலும்; சமாதி விக்கின பயத்தாலும், தனது சுரீரோத்திராதி சர்வ இந்திரியங்களையும் சப்தாதி சர்வ விஷயங்களினின்றும் மீண்டுஞ் சங்கோசஞ் செய்துகொள்வரீணு; அக்காலத்ரீத அவ்வறிஞனுடைய அந்தப் பிரஞ்ஞை, பிரதிஷ்டிதமாம். ஆண்டு, முந்திய இருசுரீலாகங்களால் சமாதியினின்றும், வெளிக்கிளம்பிய தசையின்கண்ணும், அவ்வறிஞனிடத்ரீத சர்வ தாமச விருத்திகளின் அபாவம் அறைந்தருளப்பெற்றது. இப்ரீபாது இச்சுரீலாகத்தால், மீண்டும் சமாதி அவஸ்தையின்கண்ரீண அச்சகல விருத்திகளின் அபாவம் அறைந்தருளப்பெற்றது. இத்துணை முன்னிலும் ஈண்டு விலக்ஷணத் தன்மையுளது. (58)

(அ-கை.) ஹே பகவன்! சப்தாதி விஷயங்களினின்றும் சுரோத்திராதி இந்திரியங்களின் நிவிருத்தியானது; ஒருகால் ஸ்திதப்பிரஜ்ஞத்தன்மைக் கேது வாகுமாயின், ரோகாதி நிமித்த வயத்தால் மூடர்களின் சுரோத்திராதி இந்திரியங்களும், சப்தாதி விஷயங்களினின்றும் நிவிருத்தி அடைதல் காணவருகின்றதாதலின், அந்த ரோகாதிகளையுடைய சர்வ மூடரும், ஸ்திதப்பிரஜ்ஞர் ஆதல் வேண்டும் என அர்ச்சுனன் சங்கிப்ப; ஸ்ரீ பகவான் உத்தரம் அருளுகின்றார்:—

சு-ம். விஷயா விநிவர்த்ததே நிராஹாரஸ்ய தெஹிநஃ।
ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே ॥ (59)

ப-ம். 3 விஷயாஃ 4 விநிவர்த்ததே 1 நிராஹாரஸ்ய 2 தெஹிநஃ 5 ரஸவர்ஜம் 9 ரஸஃ 10 அபி 6 அஸ்ய 7 பரம் 8 த்ருஷ்ட்வா 11 நிவர்த்ததே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இந்திரியங்களால் விஷயங்களைக் கவர்வதில் ஆற்றலின்றிய நோயாளிக்குச் சப்தாதி விஷயங்கள் நீங்கிவிடும்; ஆனல், அவ்விஷயங்களின் இச்சைநீக்கம் உண்டாகமாட்டாது. இந்தஸ்திதப்பிரஜ்ஞ புருஷனுக்கோ, பரப்பிரஹ்ம சாக்ஷாத்காரத்தால் அந்த இராகமும் நீங்கிவிடும். (59)

(வி-ம்.) சுரோத்திராதி இந்திரியங்களால், சப்தாதி விஷயங்களைக் கவர்வதில் ஆற்றலற்ற தேகாபிமானமுடைய நோயாளியாகிய மூட புருஷனுக்கும், காஷ்டத்தைப்போலச் சர்வ இந்திரியங்களின் சேஷ்டையற்ற தவத்தையுடையவனுக்கும், அச்சப்தாதி விஷயங்கள் நீங்கிவிடும்; ஆனல், அவ்வஜ்ஞானிகட்கு அச்சப்தாதி விஷயங்களின் இராகம் நீங்கமாட்டாது; மற்றோ, அந்த விஷயங்களின் இராகம் அக்காலத்தும் அவ்வஜ்ஞானிகட்கு இருந்துகொண்டிருக்கும். இந்த ஸ்திதப்பிரஜ்ஞனுகிய அறிஞனுக்கோ, பரமாநந்த ஸ்வரூபப் பிரஹ்மம் யான் என்னும் சாக்ஷாத்காரத்தால் அச்சப்தாதி விஷயங்களும், அவற்றின் இச்சையும் நீங்கிவிடும்; இவ்வார்த்தை 'யாவாநர்த² உதபாநே' என்னும் சுலோகத்தின் கண்ணே, முன்னர்க் கூறியருளப்பெற்றது. ஆகையால், இராகத்தோடு கூடிய விஷயங்களின் நிவிருத்தியே, அந்த ஸ்திதப்பிரஜ்ஞனுடைய இலக்கணமாம். அவ்விலக்கணத்திற்கு நோய் முதலியவற்றோடு கூடிய மூட புருஷனிடத்தே, அதி வியாப்தி உண்டாகமாட்டாது. ஆதலின், இப்பொருள் துணியப்பெறும்:—எக் காரணத்தால், பரமான்மாவின் உண்மைச் சாக்ஷாத்காரமின்றி இராக சகித விஷயங்களின் நிவிருத்தி உண்டாகமாட்டாதோ, அக்காரணத்தால் இவ்வதிகாரியான வன் அந்த இராக சகித விஷயங்களை நீக்குவதும், உண்மையாய ஞான வடிவினதும் ஆய பிரஜ்ஞையின் திரத்தன்மையை, அவசியமாய்ச் சம்பாதனஞ் செய்தல் வேண்டும். (59)

(அ-கை.) ஆண்டு, அந்தப் பிரஜ்ஞையின் ஸ்திரத்தன்மையின்கண்ணே பாகிய இந்திரியங்களின் நிக்கிரகமும், அந்தர மனத்தின் நிக்கிரகமும் அசாதாரண காரணங்களாம். அவ்விரண்டின் அபாவம் உளதாகவே, அந்தப் பிரஜ்ஞையின் அழிவுண்டாதல் காணவருகின்றது. இப்பொருளைக் கூறியருளும்பொருட்டு முதலில், பாகிய இந்திரியங்களைத் தடைப்படுத்தாதிருப்பதின்கண்ணே தோஷத்தை வருணித்தருளுகின்றார்:—

சு-ம். யததோ ஹ்யவி களஜ்ஞஸ்ய புருஷஸ்ய விபஶ்சிதஃ।
இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மநஃ ॥ (60)

ப-ம். 2 யததஃ, ஹி 6 அபி 1 களஜ்ஞஸ்ய 4 புருஷஸ்ய 3 விபஶ்சிதஃ 8 இந்த்ரியாணி 7 ப்ரமாதீநி 10 ஹரந்தி 9 ப்ரஸபம் 5 மநஃ.

(அ-ம்.) ஹே குந்தியின் மைந்தனுகிய அர்ச்சுன! முயலும் விவேகி புருஷனுடைய மனத்தையும் அத்தியந்தம் பலத்தையுடைய சுரோத்திராதி இந்திரியங்கள் பலாத்காரமாய் விகாரத்தை அடையுமாறு செய்விக்கும். (60)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அடிக்கடி சப்தாதி விஷயங்களிடத்தே தோஷதரிசனவடிவ முயற்சியைச் செய்யும் அத்தியந்த விவேகமுற்ற புருஷனுடைய கணமாத்திரை நிர்விகாரஞ் செய்யப்பட்ட மனத்தையும், இந்தச் சுரோத்திராதி இந்திரியங்கள் நானுவகையாய விகாரங்களை அடையுமாறு செய்விக்கும்.

சங்கை :—ஹே பகவன்! அவ்விகாரத்தின் விரோதியாய விவேகமிருப்பின், அந்த விவேகியின் மனத்தை அவ்விந்திரியம் விகாரம் அடையுமாறு செய்விக்க முடியாதன்றே?

சமாதானம் :—ஸ்ரீ பகவான் அவ்விந்திரியங்களின் மகிமையைக் கூறியருளுகின்றார் :—'வ்ராயீ நி' என. ஹே அர்ச்சுன! இந்தச் சுரோத்திராதி இந்திரியங்கள் அத்தியந்தம் பலமுடையவாம். ஆதலின் இவ்விந்திரியங்கள் அந்த விவேகத்தை வெற்றிகொள்வதில் ஆற்றலுற்றனவாம். ஆகையால், அந்த விசாரமுடைய புருடவடிவ சுவாமி கண்டுகொண்டிருப்பவே, அந்த விவேகரூப இரக்ஷகன் இருந்தபோதினும், யாவரையும் வெற்றிகொண்டு இச்சுரோத்திராதி இந்திரியங்கள்; அந்த விவேக ஜன்னியப் பிரஞ்ஞையின்கண்ணே அடைவுற்ற மனத்தை அந்தப் பிரஞ்ஞையினின்றும் நீக்கித் தமது சப்தாதி விஷயங்களிடத்தே பலாத்காரமாய் அடையுமாறு செய்விக்கும். ஈண்டு :—'யததோஹி' என்னும் இவ்வசனத்தின்கண்ணே இராநின்ற "ஹி" என்னுஞ் சப்தத்தால் ஸ்ரீ பகவானுனவர், இவ்வுலகப் பிரசித்தியையுணர்த்தியருளினர். இவ்வார்த்தை உலகின்கண்ணும் பிரசித்தமாம் :—அதாவது, ஒரு பலவானுகிய பகைவனுனவன் தனிகரையும், தனத்தைக் காப்பாற்றும் புருஷரையும், திரஸ்காரஞ்செய்து அவர்கள் கண்டுகொண்டிருப்பவே பலாத்காரமாய் அவருடைய தனமுதலிய பதார்த்தங்களைக்கொண்டு செல்வன். அதுபோல, இந்தச் சுரோத்திராதி இந்திரியங்களும், சப்தாதி விஷயங்களின் சமீபத்தையடைந்து, அந்த விவேகாதிகளை வெற்றிகொண்டு பலாத்காரமாய் மனத்தை அவ்விஷயங்களிடத்தேதகொண்டு செல்லுமென்பதாம். (60)

(அ-கை.) ஹே பகவன்! அந்தச் சுரோத்திராதி இந்திரியங்கள் இவ்வாறு பலமுடையனவாயின், அவ்விந்திரியங்களின் நிரோதம்என்னுலெங்ஙனங்கூடும்;என அருச்சுனன் சங்கிப்ப, ஸ்ரீ பகவான், அவ்விந்திரியங்களின் நிரோத உபாயத்தை நிகழ்த்தியருளுகின்றார் :—

சு-ம். தானி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பர:।
வஸே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥ (61)

ப-ம். 2 தானி 3 ஸர்வாணி 4 ஸம்யம்ய 5 யுக்த: 6 ஆஸீத 1 மத்பர: 9 வஸே, ஹி 7 யஸ்ய 8 இந்த்ரியாணி 10 தஸ்ய 11 ப்ரஜ்ஞா 12 ப்ரதிஷ்டிதா.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எனது அனன்னிய பக்தன், அவ்வெல்லா இந்திரியங்களையும் வயப்படுத்தி; உண் முகப்படுத்திய மனத்தை யுடையவனுயிருப்பன். எப்புருஷனுக்கு இவ்விந்திரியம் வயமாய் வயங்குமோ, அப்புருஷனுடைய பிரஞ்ஞைநிலையுடையதாகும். (61)

(வி-ம்.) ஞான சாதனரூப சுரோத்திராதி ஐந்து ஞானேந்திரியங்களையும், கிரியா சாதனரூப வாக்காதி ஐந்து கருமேந்திரியங்களையும், தன்வயப்படுத்தி அதாவது, சப்தாதி விஷயங்களினின்றும் அவ்விந்திரியங்களைத் தடைப்படுத்தி,

இவ்விதேவகியானவன் மனோ நிக்கிரகமுடையவனுய் நிலைபெற்றிருப்பன்; அதாவது உள்ளும் வெளியுமுள்ள உலக வியவகாரங்கள் யாவு முறுதவனுயிருப்பன் என்பதாம்.

சங்கை:—ஹே பகவன்! முன்னர்த் தாங்கள் அவ்விந்திரியங்களை மகா பல முடையனவெனக் கூறியருளினீர்கள்; அத்தகைய பல முடைய இந்திரியங்களை தன்வயப்படுத்தல் எங்ஙனம் சம்பவிக்கும்?

சமாதானம்:—ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்:—'ஏதாஃ' என. ஹே அர்ச்சுன! எல்லாப் பிராணிகட்கும் ஆன்மரூபமாயிலங்கும் வாசுதேவனெகிய யானை; யாவரினும் மேலாயவன் என எவன் எண்ணுகின்றனனை, அவன் மத்பாணவன். அத்தகைய எனது அனன்னிய பக்தனை அவ்விந்திரியங்களைத் தன்வயப்படுத்துவன்.

ஆ-சு. நவாஹ ஏவஹகூநா ஏஸ ஹம் விஜ்ஞதெகுஷிகு.

(போ-ள்.) எல்லாப் பிராணிகட்கும், ஆன்மவடிவமாகிய வாசுதேவனுடைய அநந்நிய பக்தர்கட்கு எக்காரியத்தின்கண்ணும் அசுப அடைவுண்டாகமாட்டாது; மற்றும், சருவ காரியமும் அவர்கட்கு விக்கினமின்றிச் சமாப்தமாகும் என்பதாம். இவ்வார்த்தை உலகின்கண்ணும் பிரசித்தமாம்:—இப்புருஷன் எதுவரை ஒரு பல முடைய மகாராஜாவை ஆசிரயஞ் செய்யவில்லையோ, அதுவரையுமே அப்புருஷனுக்கு அந்நிய சத்துரு துக்கத்தையடைவிப்பன். இப்புருஷன் எப்போது அந்தப் பல முடைய மகாராஜாவின் ஆசிரயத்தையடைவனை, அப்போது இப்புருஷன், இப்போது மகாராஜாவின் ஆசிரயத்தைப் பெற்றுளானென வெண்ணி, அச்சத்துருவானவன் தானே இவன் வசம் ஆய்விடுவன். அதுபோல, இவ்வதிகாரி புருஷனும் எதுவரை சர்வாந்தரியாமியாகிய ஈஸ்வரது சரணத்தை அடையவில்லையோ; அதுவரையுமே இந்தச் சுரோத்திராதி இந்திரியங்கள் இவ்வதிகாரி புருஷனைப் பகிர்முகப்படுத்தும். இவன் எப்போது அந்தரியாமியாகிய ஈஸ்வரது சரணத்தையடைவனை, அப்போது, இவ்வதிகாரியானவன் இப்போது அந்தரியாமியாகிய ஈஸ்வரது சரணத்தை அடைந்துளான் என எண்ணி இந்திரியங்கள் தாமே அவ்வதிகாரியின் வசமாய்விடும். இவ்வெல்லாப் பொருளையும் 'வஸுஹி' என்னும் வசனத்தின்கண்ணை இராநின்ற 'ஹி' என்னுஞ் சப்தத்தால் ஸ்ரீ பகவானவர் குறிப்பித்தருளினர். இத்தகைய பகவற் பக்தியின் மகா மகிமையை மேல் விஸ்தாரமாய் நிரூபிப்பாம். இப்போது, ஸ்ரீ பகவான் அவ்விந்திரியங்களின் வசத்தைச் செய்வதாலுண்டாம் பயனைத் திருவாய் மலர்ந்தருளுகின்றார். 'வஸுஹி' என. ஹே அர்ச்சுன! எவ்வறிஞனுக்கு அந்தச் சுரோத்திராதி இந்திரியங்கள் வசமாமோ, அவ்வறிஞனுடைய அந்தச் சாஸ்திர ஜன்னியப் பிரஞ்ஞை நிலைபெற்றதன்மையையடையும். ஆகையால் (கீதா) என்னும் மூன்றுவது விஞவிற்கு இவ்விடை தணியப்பெற்றதாம்:—அவ்வறிஞனவன் சுரோத்திர முதலிய சர்வ இந்திரியங்களையும் தனது வசப்படுத்தி நிலைபெற்றிருப்பன் என்பதாம். (61)

(அ-கை.) ஹே பகவன்! மனத்தின்கண்ணே இருக்கும் அநர்த்த காரணத்தன்மையானது பாகிய இந்திரியங்களின் பிரவிருத்தி வாயிலாகவேயாம். இயல்பாயோ, மனத்தின்கண்ணை அநர்த்த காரணத்தன்மையின்றும். ஆகையால், எப்புருஷன் சுரோத்திராதி பாகிய இந்திரியங்களை நிக்கிரகஞ் செய்கின்றனனை, அப்புருஷனுக்குப் பற்பிடுங்கப்பட்ட பாம்பைப்போல மனத்தை நிக்கிரகஞ்செய்யாவிடினும், எவ்வனர்த்தத்தின் அடைவு முண்டாகமாட்டாது. மற்றும், பாகியப் பிரவிருத்தியின் அபாவத்தானே அப்புருஷன் கிருதகிருத்தியனுவன். ஆகையால், பூர்வ சுலோகத்தின்கண்ணே, 'யுக்த ஆஸீத மத்பராஃ' என்னும் திருவாய்மொழி

களால் தாங்கள் கூறியருளிய மனத்தின் நிக்கிரகம் பயனற்றதேயாம், என அர்ச்சுனன் சங்கிப்ப; ஸ்ரீ பகவான் சர்வஇந்திரியங்களையும் நிக்கிரகஞ்செய்யும் புருஷனுக்கும் மனம் நிக்கிரகப்படாதிருக்குமாயின், சர்வ அநர்த்தத்தினடைவுண்டாவதை இரண்டு சுலோகங்களால் திருவாய் மலர்ந்தருளுகின்றார்:—

சு-ம். ய்யாயதோ விஷயாந்ு வாம்ஸஃ ஸம்மஷ்ஹ ஷூவ ஜாயதெ।
ஸம்மாத்ஹ் ஜாயதெ காமஃ காமாத்ஃ க்ரொயொஹிஜாயதெ ॥ (62)
க்ரொயாத்ஹூவதி ஸம்மொஹஃ ஸம்மொஹாத்ஃ ஸ்ம்ருதிவிப்ரமஃ।
ஸ்ம்ருதிப்ரம்ம்ஸாத்ஃபுத்திநாஸொ புத்திநாஸாத்ஃ ப்ரணஸ்யதி ॥ (63)

ப-ம். 2 ய்யாயதஃ 1 விஷயாந்ு 3 வாம்ஸஃ 5 ஸம்மஃ 4 தெஷாம் 6 உவஜாயதெ 8 காமஃ 10 காமாத்ஃ 11 க்ரொயஃ 12 க்ருஹிஜாயதெ 13 க்ரொயாத்ஃ 15 ஹவதி 14ஸம்மொஹஃ 16 ஸம்மொஹாத்ஃ 17 ஸ்ம்ருதிவிப்ரமஃ 18 ஸ்ம்ருதிப்ரம்ம்ஸாத்ஃ 19 புத்திநாஸஃ 20 புத்திநாஸாத்ஃ 21 ப்ரணஸ்யதி.

(அ-ம்.) சப்தாதி விஷயங்களை மனத்தால் தியானஞ்செய்யும் புருஷனுக்கு அவ்விஷயங்களிடத்தே சங்கம் உண்டாகும்; அச்சங்கத்தாற் காமமுண்டாம், அக்காமத்தாற் குரோதமுண்டாம், அக்குரோதத்தால் சம்மோகமுண்டாம், அச்சம்மோகத்தால் ஸ்மிருதியின் பிறழ்ச்சியுண்டாம், அந்த ஸ்மிருதியின் பிறழ்ச்சியால் புத்தியின் நாசமுண்டாம், அந்தப் புத்தியின் நாசத்தால் அவன் நாசத்தையடைவன். (63)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எப்புருஷன் தனது சுரோத்திராதி பாகிய இந்திரியங்களைச் சப்தாதி விஷயங்களினின்றும் தடைப்படுத்தியும், மனத்தால் அடிக்கடி அச்சப்தாதி விஷயங்களைச் சிந்திக்கின்றனனேனு, அப்புருஷனுக்கு அவ்விஷயங்களிடத்தே அவசியம் சங்கமுண்டாம். ஈண்டு, இவ்விஷயம் எனது சுக சாதனமாம்; என்னுஞ் சோபன அத்தியாசரூபப் பிரீதிவிசேஷஞ் சங்கமாம். அச்சுக சாதனத்தன்மை ஞானரூப சங்கத்தால், அப்புருஷனுக்கு அவ்விஷயங்களிடத்தே காமம் உண்டாம். ஈண்டு, இவ்விஷயம் எனக்கு எப்போது கிடைக்கும் என்னும் திருஷ்ணாவிசேஷம் காமமாம். அந்நிய புருஷரால் ஹனனத்தையடைந்த அந்தத் திருஷ்ணா வடிவக் காமத்தால், ஹனனஞ்செய்யும் அந்நிய புருஷ விஷயகமாய பேரொரிச்சல் வடிவக் குரோத முற்பன்னமாம். அந்தப் பேரொரிச்சல் வடிவக் குரோதத்தால் காரிய அகாரிய விவேகமின்றிய சம்மோக முற்பன்னமாம். அச்சம்மோகத்தால், குரு சாஸ்திரம் உபதேசித்தருளிய பொருளின் அனுசந்தானரூப ஸ்மிருதியின் பிறழ்ச்சி உண்டாம். அந்த ஸ்மிருதியின் பிறழ்ச்சியால் அத்விதீய ஆன்மாவின் ஆகாரமுற்ற மனுஷ்யத்வரூப புத்தி நாசத்தையடையும். கருத்தித்துவாம்:—விபரீத பாவனையின் விருத்திரூப தோஷத்தால் பிரதிபந்தப்படுதலின் அப்புத்தியின் உற்பத்தியே உண்டாகமாட்டாது. உற்பன்னமாயினும் அப்புத்தி பலத்தை அடைவிப்பதில் யோக்கியமற்றதாய் விலயமாய்விடும்; இதுவே அப்புத்தியின் நாசமாம். அந்தப் புத்தியின் நாசத்தால் அப்புருஷன் நாசத்தை அடைவன்; அதாவது சர்வ புருஷார்த்தங்கட்கும் அயோக்கியனாவன். எனெனின், இவ்வுலகின்கண்ணும் எப்புருஷன் புருஷார்த்தத்திற்கு அயோக்கியனாவனேனு, அப்புருஷன், இவன் மரித்துவிட்டனன் என்னும் லோக வியவகார விஷயனாவன். அதுபோலச் சர்வ புருஷார்த்தங்கட்கும் அயோக்கியனாகிய இப்புருஷன் மரித்தவனென்றே யறிக. ஆகையால், இப்பொருள் துணியப் பெற்றது:—எப்புருஷன் மனுஷ நிக்கிரகத்தைச் செய்யாது கேவலம் பாகிய இந்திரியங்களையே நிக்கிரகஞ் செய்வனேனு, அப்புருஷனுக்கும் மகா அநர்த்தமானது உண்டா

குமாயின், மனம் இந்திரியம் என்னும் இரண்டின் நிக்கிரகமற்ற புருஷனுக்கு மகா அநர்த்தம் உண்டாம் என்பதன்கண்ணே யாது கூறவேண்டி இருக்கின்றது. ஆகையால், இவ்வதிகாரி புருஷன் எப்பெரு முயற்சியைச் செய்தேதனும், அம்மனே நிக்கிரகத்தைச் செய்தல்வேண்டும். அம்மனே நிக்கிரகமின்றிக் கேவலம் பாகிய இந்திரியங்களின் நிக்கிரக மாத்திரத்தால் அந்த ஸ்திதப் பிரஞ்ஞத் தன்மை உண்டாக மாட்டாது. (63)

(அ-கை.) ஆண்டு முற் சுலோகத்தின்கண்ணே பாகிய இந்திரியங்களை நிக்கிரகஞ் செய்யினும் மனத்தை நிக்கிரகஞ் செய்யாதொழியின் தோஷ அடைவு கூறி அருளப்பட்டது. இப்போது மனத்தை நிக்கிரகஞ்செய்து பாகிய இந்திரியங்களை நிக்கிரகஞ்செய்யா தொழியினும், தோஷத்தின் அடைவு உண்டாகமாட்டாது என்னும் பொருளைக் கூறி அருளுபவராய் ஸ்ரீ பகவான் 'கிம்வ்ருஜெத' என்னும் நான்காவது வினுவின் விடையை எட்டுச் சுலோகங்களால் இயம்பி அருளுகின்றார் :—

சு-ம். ரூாமஅஷவிய—ஸ்தெஹு— விஷயாந்நிம்ரியெஸ்ரூநு ।
கூத்தவஸ்யெவிதேயாத்மா ப்ரஸாதமதிகச்சதி ॥ (64)

ப-ம். 3 ரூாமஅஷவிய—ஸ்தெஃ 2 து— 6 விஷயாந 5 ஐம்ரியெஃ 7 அரூந 4 கூத்தவஸ்யெஃ 1 விதேயாத்மா 8 ப்ரஸாதம் 9 கச்சதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மனத்தை நிக்கிரகிக்கும் புருஷனே, இராகத்துவேஷமற்ற மனத்தின் அதீனமாய இந்திரியங்களால் விஷயங்களைக் கவரினுஞ் சித்தத்தின் நின்மலத்தன்மையையே அடைவன். (64)

(வி-ம்.) எப்புருஷன் மனத்தின் நிக்கிரகத்தைச் செய்யாமேனே, அப்புருஷன் பாகிய சுரோத்திராதி இந்திரியங்களை நிக்கிரகஞ் செய்யினும், இராகத்துவேஷத்தோடு கூடியமனத்தோடு சப்தாதி விஷயங்களைச் சிந்தித்துக்கொண்டே இருந்து, எங்ஙனம் புருஷார்த்தத்தினின்றும் பிரஷ்டனவனே, அங்ஙனம் மனத்தை நிக்கிரகஞ்செய்த புருஷன் அந்தப் புருஷார்த்தத்தினின்றும் பிரஷ்டனுகான். இவ்வகையாய விலக்ஷணத்தன்மையை உணர்த்திவைத்தருளும்பொருட்டு, ஸ்ரீ பகவானுனவர், 'ரூாமஅஷ வியஸ்தெது' என்னும் வசனத்தின்கண்ணே இராநின்ற 'து' என்னுஞ் சப்தத்தைக் கூறியருளினர். ஹே அர்ச்சுன! எப்புருஷன் தனது மனத்தை நிக்கிரகஞ்செய்துளானே, அப்புருஷன் அந்த வயஞ்செய்த மனத்தின் அதீனமாயிருப்பனவும், இராகத் துவேஷமற்றனவும் ஆய சுரோத்திராதி இந்திரியங்களால் சாஸ்திர விகிதமாய சப்தாதி விஷயங்களைக் கவரினும் பிரசாதத்தையே யடைவன். ஈண்டுப் பரமான்மாவின் சாக்ஷாத்கார யோக்யதை வடிவ சித்தத்தின் தெளிவுடைமை பிரசாதமெனப்படும். எவ்விந்திரியம் இராகத்துவேஷத்தோடு கூடி நிகழுமோ, அவ்விந்திரியமே தோஷகாரணமாம். இவ்வறிஞனவன் மனத்தைத் தன்வயப்படுத்திக் கொள்வானுயின், இராகத்துவேஷமென்னும் இரண்டும் நீங்கிவிடும். அந்த இராகத்துவேஷம் இன்றுகவே, அந்த இராகத்துவேஷத்தின் அதீனமாய இந்திரியங்களின் பிரவிருத்தி உண்டாகமாட்டாது. பிராரப்த கருமமிருப்ப அச் சப்தாதி விஷயங்களின் பிரதீதி நீக்க முடியாததாகும். ஆகையால், சாஸ்திர விகித சப்தாதி விஷயங்களின் பிரதீதி மாத்திரம் அவ்வறிஞனுக்குத் தோஷ அடைவைச் செய்விக்கமாட்டாது. இத்துணே கூறியதால் இச்சங்கையின் நீக்கமுஞ் செய்யப்பட்டதாயது :—அச் சப்தாதி விஷயங்களின் ஸ்மரண மாத்திரமும் அநர்த்த காரணமாகுமாயின், அவ்விஷயங்களின் போகமோ, மகா அநர்த்த காரணமாகும். ஆகையால், தனது பிராணனைக் காப்பாற்றும்பொருட்டு, அவ்விஷ

யங்களைப் போகிப்பவனுய் அவ்வறிஞனவன் அவ்வநர்த்தத்தை ஏன் அடைய மாட்டான்? மற்றே, அவ்வறிஞனும் அவசியமாய் அநர்த்தத்தையடைவன் என் பது சங்கையாமென்றறிக. ஆதலின், 'க்ஷிவ்ரஜேத' என்னும் நான்காவது விஞ விற்கு இவ்விடை துணியப்பெற்றதாம்:—இராகத் துவேஷமற்ற தனது வசத்தி லிருக்கும், சுரோத்திராதி இந்திரியங்களால் அவ்வறிஞனவன் சாஸ்திர விகித சப்தாதி விஷயங்களையடைவன் என்பதேயாம். (64)

(அ-கை.) ஆண்டு முற்சுலோகத்தின்கண்ணே அம்மறை நிக்கிரகத்தை யுடைய புருஷன் பிரசாதத்தை யடைவன் என்னு மிவ்வார்த்தை கூறியருளப்பட் டது. ஆண்டு அச்சித்தத்தின் தெளிவுடைமை வடிவப் பிரசாதத்தை அடையின் யாது பலங்கிட்டும் என அர்ச்சுனன் சங்கிப்ப, ஸ்ரீ பகவான் அந்தப் பிரசாதத்தின் பலத்தைக் கூறியருளுகின்றூர்:—

சு-ம். ரஹாதெ ஸவ-ருஂவாநாம் ஹாநிரஸ்யாவஜாயதெ।
ரஹஸ்யதெதஸ்ய ஹ்யாஸுஂ பு-ஜ்ஞி: வய-ருவதிஷ்ஞதெ॥ (65)

ப-ம். 1 ரஹாதெ 3 ஸவ-ருஂவாநாம் 4 ஹாநிர் 2 அஸ்ய 5 உவஜாயதெ
7 ரஹஸ்யதெதஸ் 6 ஹி 9 சூஸுஂ 8 பு-ஜ்ஞி: 10 வய-ருவதிஷ்ஞதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அந்தப் பிரசாதத்தை அடையின் இவ்வறிஞஞகிய சந்யாசிச்குச் சர்வ துக்கங்களின் நாசமுண்டாம். எக்காரணத்தால் அந்தத் தெளிந்த சித்தமுடைய சந்யாசியின் புத்தி விரைவாகவே ஸ்திரமாமோ என்பதாம்.(65)

(வி-ம்.) அந்தச் சித்தத்தின் தெளிவுடைமை வடிவப் பிரசாதத்தை யடை வுற்ற இவ்வித்வாஞய சந்யாசியினது அஞ்ஞான ஜன்னிய ஆத்யாத்மிக, ஆதிபௌ திக, ஆதிதைவிக சர்வ துக்கங்களின் நாசமுண்டாம். எக்காரணத்தால் அந்தத் தெளிந்த சித்தத்தையுடைய சந்யாசியினுக்குப் பிரஹ்ம ஆத்மாக்களின் அபே தத்தை விஷயஞ்செய்யும் புத்தி விரைவாகவே ஸ்திரமாமோ. ஏனெனின், அசம் பாவனை விபரீதபாவனை என்னும் இரண்டுமே அந்தப் புத்தியின் ஸ்திரத் தன்மை மையின்கண்ணே பிரதிபந்தகமாகும். அவ்விருபாவனைகளும் அவ்வறிஞனிடத்தே இன்றும். ஆகையால், பிரதிபந்தமற்ற அப்புத்தி விரைவாகவே ஸ்திர பாவத்தை யடையும். ஈண்டு சித்தத்தின் தெளிவுடைமை வடிவப் பிரசாதங் கிடைப்பினும் சாக்ஷாத் ஆத்தியாத்மிகாதி துக்கங்களின் நிவிருத்தி உண்டாகமாட்டாது. மற்றே, பரம்பரையாய் அத்துக்கங்களின் நிவிருத்தி உண்டாம். ஆண்டுச் சித் தப் பிரசாதத்தால் புத்தியின் ஸ்திரத் தன்மையுண்டாம், அதனுல் அதன் விரோதி யாய அஞ்ஞான நிவிருத்தி உண்டாம். அதனுல் அதன் காரியமாய சகல துக்கங் களின் ஹானி உண்டாம். இவ்வகையாய பரம்பரையால் அத்துக்கங்களின் நிவி ருத்தி உண்டாம். ஆகையால், சித்தப் பிரசாத முண்டாயின் சர்வ துக்கங்களின் நாசமுண்டாமெனக் கூறல் சம்பவிக்க மாட்டாதாயினும், அந்தச் சித்தப் பிரசா தத்தை அடையும் பொருட்டுப் பெருமுயற்சி வேண்டுமென அறிவிப்பதற்காக அச்சித்தப் பிரசாதத்தின்கண்ணே சர்வ துக்கங்களின் நாசகாரணத் தன்மை கூறப்பட்டது. ஆகையால், சிறிது மாத்திரையும் விரோத அடைவு உண்டாக மாட்டாது. (65)

(அ-கை.) ஆண்டு முற் சுலோகத்தின்கண்ணே அன்வய வாயிலாய்க் கூறி யருளிய பொருளை இப்போது வியதிரேக வாயிலாய்த் திடப்படுத்தி யருளு கின்றூர்:—

சு-ம். நாஸ்தி பு-த்திரயுக்தஸ்ய நாயு-க்தஸ்ய பாவநா।
நசாபாவயதஃ ஶாந்திரஶாந்தஸ்ய குதஃஸுஂ-வம்॥ (66)

ப-ம். 3 ந 4 சுஹ்ரீ 2 ஸ்ரீ 1 சுயுக்தஸ்ய 8 ந 5 அ 6 சுயுக்தஸ்ய 7 ஹாவநா
12 ந 9 அ 10 சுஹாவயதஃ 11 ஸாந்தி 13 சுஸாந்தஸ்ய 15 கு தஃ 14 ஸுவ ம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சித்தஜயமின்றிய அயுக்த புருஷனுக்குப் புத்தி உண்டாகமாட்டாது, அயுக்த புருஷனுக்குப் பாவனை உண்டாகமாட்டாது, பாவனை யற்ற புருஷனுக்குச் சாந்தி உண்டாகமாட்டாது. சாந்தியற்ற புருஷனுக்குச் சுகம் எங்ஙனம் உண்டாம்? (66)

(வி-ம்.) எப்புருஷன் தனது சித்தத்தை வசஞ்செய்கின்றனில்லையோ, அப்புருஷன், அயுக்தன் எனப்படுவன். அத்தகைய அயுக்த புருஷனுக்குச் சிரவணமநநரூப வேதாந்த விசாரத்தால் ஜன்னிய, ஆன்ம விஷயக புத்தி உற்பன்னமாகமாட்டாது. அப்புத்தியின்றுகவே அவ்வயுக்த புருஷனுக்கு, விஜாதீய விருத்திகளின் வியவதானமற்ற (தடையற்ற) சஜாதீய விருத்திகளின் பிரவாஹரூப நிதித்தியாசனமாகிய பாவனை உற்பன்னமாகமாட்டாது. அந்த நிதித்தியாசனரூப பாவனை யற்றவனுக்குக் காரிய சகித அவித்தையை நீக்குவதும், தத்வமசி முதலிய வேதாந்த வாக்கியங்களால் ஜன்னியமும், ஜீவப்பிரஹ்ம அபேதத்தை விஷயஞ்செய்வதும் ஆய சாக்ஷாத்காரரூப சாந்தி உண்டாகமாட்டாது. அவ்வான்ம சாக்ஷாத்காரரூப சாந்தியற்றவனுக்கு, மோக்ஷாநந்தரூப சுகம் உண்டாகமாட்டாது. (66)

(அ-கை.) ஹே பகவன்! அவ்வயுக்த புருஷனிடத்தே அப்புத்தி எக்காரணத்தால் உண்டாகமாட்டாது, என அருச்சுனன் சங்கிப்ப; ஸ்ரீ பகவான் அப்புத்தியின் உற்பத்தி உண்டாகாமையின் கண்ணே காரணத்தைக் கூறி அருளுகின்றார்:—

சு-ம். இம்த்ரியாணாம்ஹி சரதாம் யந்மநோ(அ)நுவிதீயதே।
ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்நாவமிவாம்ஹஸி ॥ (67)

ப-ம். 3 இம்த்ரியாணாம் 1 ஹி 2 சரதாம் 4 யத் 5 மநஃ 6 அநுவிதீயதே 7 தத்
8 ஸுஹ்ய 10 ஹரதி 9 ப்ர ஜ்ஞாம் 14 வாயுஃ 13 நாவம் 11 இவ 12 சும்ஹஸி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எக்காரணத்தால் தத்தம் விடயங்களிடத்தே முயன்ற இந்திரியங்களின் மத்தியில் எவ்வோர் இந்திரியத்தையேனும் இலக்ஷ்யமாக்கி, இம்மனம் பிரவிருத்திக்குமாயின், அவ்வோர் இந்திரியமும் இச்சாதக புருஷனுடைய பிரஞ்ஞையை ஹரணஞ்செய்யும்; நீரின்கண்ணே இருகரும் ஓடத்தைப் பிரதிகூல வாயுவானது ஹரணஞ்செய்வதேபோலும். (67)

(வி-ம்.) தத்தம் சப்தாதி விஷயங்களிடத்தே முயலும் வசஞ் செய்யப்படாத சுரோத்ராதி இந்திரியங்களின் மத்தியில், எவ்வோரிந்திரிய அநுசாரியாயேனும் இம்மனம் முயலுமாயின், அம்மனத்தோடு கூடிய ஓரிந்திரியமும், இச்சாதகபுருஷனுடைய அல்லது அம்மனத்தினுடைய சாஸ்த்ர ஜன்னிய ஆன்ம விஷயகப்பிரஞ்ஞையை நீக்கிவிடும். எங்ஙனம் நீரின்கண்ணே நிற்கும் ஓடத்தைப்பிரதிகூல வாயுவானது இழுத்துக்கொண்டு போய்க் கன் முதலியவற்றின்கண்ணே மோதி நாசமாக்கிவிடுமோ, அங்ஙனம் அவ்வோரிந்திரியமும் இவ்வதிகாரி புருஷனுடைய பிரஞ்ஞையைப் பகிர்முகப்படுத்தி நாசஞ்செய்துவிடும். கருத்துவாம்:— இராகத்துவேஷத்தோடு கூடிய மனத்தின் சகாயத்தைக்கொண்டு தனது விஷயத்தின்கண்ணே முயன்ற ஓரிந்திரியமும் இவ்வதிகாரியின் பிரஞ்ஞையை நாசஞ்செய்யுமாயின், அவ்வெல்லா இந்திரியங்களும் இவ்வதிகாரியின் பிரஞ்ஞையை நாசஞ் செய்யும் என்பதன்கண்ணே யாது கூறவேண்டியிருக்கின்றது. ஆண்டுப் பிரதி

கூல வாயுவிற்குச் சலத்தின்கண்ணேயோடத்தையுடைக்கும் ஆற்றலுளது; பூமியின்கண்ணே நிற்கும் ஓடத்தைஉடைக்கும் ஆற்றலின்றும் என்னும் இப்பொருளைக் குறிப்பித்தருளும் பொருட்டே, திருஷ்டாந்தத்தின்கண்ணே 'ஸம்ஹஸ்' என்னும் பதத்தைத் திருவாய்மலர்ந்தருளியதாம். இவ்வண்ணம், தார்ஷ்டாந்திகத்தின்கண்ணே ஜல சமானமான மனத்தின் சஞ்சலத்தன்மை யிருந்தே அவ்விந்திரியத்திற்கு அந்தப் பிரஞ்ஞையை ஹரணஞ்செய்யும் ஆற்றலுண்டாம். பிருதிவிக்குச் சமானமாய மனத்தின் ஸ்திரத்தன்மையிருப்பின் அவ்விந்திரியத்திற்கு அந்தப் பிரஞ்ஞையை ஹரணஞ்செய்யும் ஆற்றல் உண்டாகமாட்டாது. ஈண்டு மற்றைய உரைகளில் 'யஜ் யஜ்' என்னும் இரண்டு சப்தங்களால் மனத்தைக்கவர்ந்து இப்பொருள் செய்யப்பட்டுளது:—விஷயங்களிடத்தே பிரவிருத்தமாய இந்திரியங்களை இலக்ஷியமாக்கி, அவற்றின் அநுசாரமாயுழலும் மனம் இப்புருஷனது பிரஞ்ஞையை ஹரணஞ் செய்யும் என்பதாம். (67)

சு-ம். தஸ்மாத்³யஸ்ய ஸர்வாணி ஹ்ருʼதா³நி ஸர்வ-ஶஃ।
இந்த்³ரியாணீந்த்³ரியார்தே²-ப்⁴ய꞉ தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டி²தா ॥ (68)

ப-ம். 1 தஸ்மாத் 3 யஸ்ய 2 ஸர்வாணி 7 நிமஹீதாநி 4 ஸர்வ-ஶஃ 5 இந்த்³ரியாணி 6 இந்த்³ரியார்தே²-ப்⁴ய꞉ 8 தஸ்ய 9 ப்ரஜ்ஞா 10 ப்ரதிஷ்டி²தா.

(அ-ம்.) எக்காரணத்தால் இங்ஙனமாமோ, அக்காரணத்தால் மஹாமகாபுய பலவானாகியஅர்ச்சுன! எப்புருஷனுக்கு அவ்விவல்லா இந்திரியங்களும் தமது சப்தாதி விஷயங்களினின்றும் நீங்கியிருக்குமோ, அப்புருஷனுக்கே அந்தப் பிரஞ்ஞை நிலைபெற்று நிற்கும். (68)

(வி-ம்.) மஹாமகாபுயவலிமையையுடையஅர்ச்சுன! எக்காரணத்தால் பகிர்முகத்தை அடைந்த இவ்விந்திரியம் இப்புருஷனுடைய பிரஞ்ஞையை நாசஞ் செய்யுமோ, அக்காரணத்தால் எப்புருஷனுக்கு இம்மனசகிதசோத்ராதிசர்வ இந்திரியங்களும், தத்தமதுசப்தாதிவிஷயங்களினின்றும் நிக்கிரகத்தை அடைந்தனவோ, அந்தத் தத்துவமேத்தாவாகியசித்தபுருஷனுக்கே, அல்லது முமுக்ஷுரூப சாதக புருஷனுக்கே அவ்வான்மவிஷயகப்பிரஞ்ஞை ஸ்திரமாம். இந்திரியங்களின் நிக்கிரகமற்ற புருஷனுடைய அந்தப் பிரஞ்ஞை ஸ்திரமாகமாட்டாது. ஈண்டு 'ஹ்ருʼஷீகாணி' என்னும் சம்போதனத்தால் ஸ்ரீ பகவானுனவர் இப்பொருளைக் குறிப்பித்தருளினர்:—அர்ச்சுனனாகிய நீ சர்வபாகிய சத்துருக்களையும் நிவாரணஞ்செய்வதன்கண்ணே சமர்த்தனுவாயாதலின், அந்தர் இந்திரியரூப சத்துருக்களை நிவிருத்திசெய்வதன்கண்ணும் நீ சமர்த்தனுவாய் என்பதாம். ஆண்டு, மனசகிதஇந்திரியங்களின் சம்யமமானது தத்துவமேத்தாவாகிய ஸ்திதப்பிரஞ்ஞபுருஷனுக்கோ இலக்கணரூபமாம்; முமுக்ஷுக்களைக்குறித்தோ அது அந்தப் பிரஞ்ஞையை அடையச் சாதனரூபமாம். இக்காரணத்தானே 'தஸ்மாத்' என்னுஞ் சப்தத்தால் தத்துவமேத்தாவும், முமுக்ஷுவும் கவரப்பட்டனர். ஆதலின், முமுக்ஷுக்கள் தமதுபிரஞ்ஞையைத்திரஞ்செய்யும்பொருட்டு, மிகுந்த முயல்வோடும் அவ்விந்திரியங்களைச் சம்யமஞ் (அடக்கஞ்) செய்தல்வேண்டும். (68)

(அ-கை.) இப்போது அந்த ஸ்திதப்பிரஞ்ஞனுக்குச் சர்வ இந்திரியங்களின் சம்யமந் தானேசித்தமாம் என்னும்பொருளை ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்:—

சு-ம். யா நிஶா ஸர்வ-ஶ்ரு தா நாம் தஸ்யாம் ஜாக³ர்தி ஸம்யமீ ।
யஸ்யாம் ஜாக்³ரதி பூ⁴தாநி ஸா நிஶா பஶ்யதோ முநே꞉ ॥ (69)

ப-ம். 1 யா 3 நிஶா 2 ஸர்வ-ஶ்ரு தா நாம் 4 தஸ்யாம் 6 ஜாக³ர்தி 5 ஸம்யமீ 7 யஸ்யாம் 9 ஜாக்³ரதி 8 பூ⁴தாநி 10 ஸா 13 நிஶா 11 பஶ்யதோ 12 முநே꞉.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எந்தச் சாக்ஷாத்காரரூபப் பிரஞ்ஞை சர்வஅஞ் ஞானிகட்கும்இரவாமோ, அந்தப் பிரஞ்ஞைவடிவ இரவின்கண்ணே இந்திரியங் களின்சம்யமம்உடையவன் விழித்திருக்கின்றனன்; அன்றியும் இவ்வெல்லா அஞ் ஞானிகளும் எந்த அவித்தைவடிவ நித்திரையின்கண்ணே விழித்திருக்கின்றார் களோ, அந்த அவித்தை, சாக்ஷாத்காரமுடைய ஸ்திதப் பிரஞ்ஞனுக்கு இரவாம்.

(வி-ம்.) வேதாந்த வாக்கியங்களால் ஜனித்த யான் பிரஹ்மமாய் இருக்கின் றேன் என்னும் சாக்ஷாத்காரரூபப் பிரஞ்ஞையானது அஞ்ஞானிகளைக் குறித்து அப்பிரகாசரூபமாம். ஆதலின், அவ்வான்ம சாக்ஷாத்காரரூபப் பிரஞ்ஞை, அவ்வஞ் ஞானிகளைக் குறித்து உலகப் பிரசித்த இரவைப்போல இரவு வடிவமாம். அந்தப் பிரஹ்ம வித்தைவடிவ சர்வ அஞ்ஞானிகளின் இரவின்கண்ணே மனசகித இந்திரி யங்களின் சம்யமம் உடைய ஸ்திதப்பிரஞ்ஞ புருஷன் அஞ்ஞானரூப நித்திரையி னின்றும் விழித்தவனுய்ச் சாவதானமாய் இருப்பன். எந்தத்துவைததரிசனரூப அவித்யா நித்திரையின்கண்ணே உறங்கும் இவ்வஞ்ஞானியானவன் கனவிற்போல நானுவகையாய வியவகாரங்களைச் செய்வதே அவ்வவித்தை, ஆன்ம சாக்ஷாத்காரத் தையுடைய ஸ்திதப் பிரஞ்ஞனுக்கு உலகப்பிரசித்த இரவுபோன்றிரவாம். கருத்தி துவாம்:—எதுவரை இப்புருஷன் நித்திரையினின்றும் விழித்திலனே அதுவரை யுமே நானுவகையாய கனுத்தரிசன முண்டாம். அந்நித்திரையினின்றும் விழித்த பின்னர் அக்கனவின் தரிசனமுண்டாகமாட்டாது. ஏனெனின், பாதம்வரையுமே மயலின் இருப்புண்டாகும்; பாதத்தின்பின்னர் அம்மயல்இராது. எங்ஙனம் இது சர்ப்பமன்று, மற்றே இரஜ்ஜுவாம் என்னும் பாதம்வரையுமே அச்சர்ப்ப மயலின் நிதி உண்டாமோ, அந்தப் பாதமாகவே அச்சர்ப்பமயல் இராதோ, அங்ஙனம், இவ்வதிகாரிக்கு எதுவரை தத்துவஞானத்தின் அடைவுண்டாகவில்லையோ, அது வரையுமேமஇச்சம்சாரமயல்இருக்கும், தத்துவஞானத்தையடையவே இச்சம்சார மயல்நீங்கிவிடும். ஆகையால், அந்த ஞானகாலத்தின்கண்ணே அவ்வறிஞனுக்கு அம்மயலாற் சனித்த வியவகாரம் எதுவும் உண்டாகமாட்டாது என்பதாம். இவ் விஷயத்தை வார்த்திகக்கிரந்தகர்த்தாவாகிய ஸ்ரீசுரேச்வராசிரியரும் கூறி இருக் கின்றார்கள்:—

ஆ-சு. காரகவ்யவஹாரொஹி ஸுஷ்டம் வஸ்து ந வீக்ஷ்யதெ ।
ஸுஷெ வஸ்து நிஷிஜெத காரகவ்யா வ்ருதிஸ்துயா ॥ (1)

காகொலூகு நிஶொவாயம் ஸம்ஸாரொ ஜ்ஞாதவெதிநொ: ।
யாநிஶா ஸவ்ருஷ்தாநா ஸித்யவொதுகு ஸ்வயம்ஹரிஃ ॥ (2)

ஸுஷ்தகவஸ்ய லொகொயம் ஜவொந்ருத்த விஶாதவகு ।
ஸுஷ்தகஸ்ய விலொகஸ்ய ஜவொந்ருத்த விஶாதவகு ॥ (3)

(பொ-ள்.) கர்த்தா, கரணம்என்பனமுதலிய காரகங்களின்வியவகாரம் உண் டாகுமாயின் சுத்தஆன்மவஸ்துவானது காணமுடியாததாகும். அந்தச் சுத்த ஆன்மவஸ்துச்சித்தமாகுமாயின், அச்சர்வ காரகங்களின் நிவிருத்தி உண்டாகி விடும். (1) அல்லது, காகத்திற்குரிய இவ்வுலகப்பிரசித்த இரவானது உலூகத் திற்கு இன்றும். மற்றே, உலூகத்திற்கு அவ்விரவூடு நானுவகையாய உண்ணல் குடித்தன் முதலிய வியவகாரங்கள் உண்டாம். அவ்வுலூகத்தினது இவ்வுலகப்பிர சித்த தினரூப இரவானது அக்காகத்திற் கிரவன்றும்; மற்றே, அத்தினத்தில் காகந் தனது உண்ணல்குடித்தன் முதலிய நானுவகையாய வியவகாரங்களைச் செய் யும். அதுபோன்றே, அஞ்ஞானியினுக்கும் ஆன்மவித்தாவிற்கும் இச்சம்சாரமாம்

என்னுஞ் வார்த்தையை 'யாதிஸா வை புருஷஸ்தாதாம்' என்னுந் திருவாய்மொழி யால் ஸ்ரீகிருஷ்ணபகவான்தாமே திருவாய்மலர்ந் தருளியிருக்கின்றார். (2) அல்லது, எப்புருஷன் தனது உண்மையாய வடிவத்தை யறிந்திருக்கின்றனனோ அவ்வறிஞனுக்கு இவ்வெல்லா வுலகரும் ஜட, உன்மத்த, பிசாசு முதலியவற்றைப்போலத் தோற் றுவர். இவ்வெல்லா உலகருக்கும் அவ்வறிஞன் ஜட, உன்மத்த, பிசாசு முதலியவற் றைப்போலத் தோற்றுவன் (3) ஆகையால், இப்பொருள் துணியப்பெற்றதாம் :— எப்புருஷனுக்கு எவ்வஸ்துவின் விபரீத தரிசனமாமோ, அப்புருஷனுக்கு அவ்வஸ் துவின்சம்யக்தரிசனமுண்டாகமாட்டாது. எனெனின், அவ்வஸ்துவின் விபரீத தரிசனம் அவ்வஸ்துவின்சம்யக்தரிசனத்தை (நற்காக்ஷியை) அபாவப்படுத்தியே ஜனியாநிற்கும். எப்புருஷனுக்குஎவ்வஸ்துவின் சம்யக்தரிசனமாமோ, அப்புருஷ னுக்கு அவ்வஸ்துவின் விபரீத தரிசனமுண்டாகமாட்டாது. ஏனெனின், அவ்விப ரீததரிசனத்தின் காரணரூபஅவ்வஸ்துவின் அதரிசனமானது. அவ்வஸ்துவின் சம் யக்தரிசனத்தால் நிவிருத்தமாய்விடும். எப்புருஷனுக்கு இரஜ்ஜுவின்கண்ணே இது சர்ப்பம் என்னும் விபரீததரிசனம் உண்டாமோ, அப்புருஷனுக்கு அக்கா லத்தே இது இரஜ்ஜுவாமென்னுஞ் சம்யக் தரிசன முண்டாகமாட்டாது. எப் புருஷனுக்கு இது இரஜ்ஜுவாம் என்னுஞ் சம்யக்தரிசனமுண்டாமோ, அப்புருஷ னுக்கு அக்காலத்தே இது சர்ப்பமென்னும் விபரீததரிசன முண்டாகமாட்டாது. அதுபோல, ஆன்மாவின் வாஸ்தவ ஸ்வரூபத்தை அறிந்துள்ள அறிஞனுக்குப் பிர பஞ்சவிஷயகவிபரீததரிசன முண்டாகமாட்டாது. பிரபஞ்ச விஷயக விபரீததரி சனமுடைய அஞ்ஞானிகட்கு ஆன்மாவின் சம்யக்தரிசன முண்டாகமாட்டாது.

ஆ-சு. யதைவா ஸுப்தஜீவஸ்யாதத்தாஸ்ருஷ்டிரூபஜ்ஞத்வம் ।
யதைகஸ்ய ஸவஸ்துனோதத்தத்ஸ்ருஷ்டிரூபகம் வபுஷ்க ॥

(போ-ள்.) எவ்வவித்யாகாலத்தின்கண் இவ்வத்விதீயஆன்மா துவைதத் தைப்போலாமோ, அவ்வவித்யாகாலத்தின்கண்ணே இப்புருஷன் தன்னை அந்நிய ரூகநினைந்து தன்னிற் பின்னமாயஅந்நியங்களைக்காண்பன். எவ்வித்யாகாலத்தின் கண்ணே இவ்வறிஞனுக்கு இவ்வெல்லாஉலகுந்தனதுஆன்மரூபமாகவே ஆய்விடு கின்றதோ, அவ்வித்யாகாலத்தின்கண்ணே இவ்வறிஞன் எக்காரணத்தால் எப் பதார்த்தத்தைத்தன்னிற் பின்னமாய்க்காண்பன் ; மற்றோர், இவ்வறிஞன் தன்னிற் பின்னமாயஎப்பதார்த்தத்தையும்காணன் என்னுமிவ்விரண்டுசுருதிகளும் முறைப் படி அவித்தையின்வியவஸ்தையையும், வித்தையின்வியவஸ்தையையும் கூறுகின் றன. ஆகையால், தத்துவதரிசியாயவித்துவானிடத்தே அவித்தையால்ஆக்கப் பெற்ற கிரியை, காரகம்முதலிபவியவகாரம் ஒருகாலுஞ்சம்பவியாது. ஆகையால், அந்தஸ்திதப்பிரஞ்ஞஅறிஞனுக்கு அவ்விந்திரியங்களின் சம்யமம் இயற்கையாயே சித்தமாம். முமுக்ஷுவைப்போல ஒரு முயற்சியாற் சாதிக்கவேண்டியதின்றும்.

(அ-கை.) ஆண்டு அந்த ஸ்திதப்பிரஞ்ஞஅறிஞனுடைய இந்திரியங்களின் சம்யமம் எங்ஙனம் இயல்பாயே சித்தமாமோ, அங்ஙனம் அந்த ஸ்திதப்பிரஞ்ஞ அறிஞனுடைய சர்வவிஷயங்களின்சாந்தியும் இயல்பாயே சித்தமாம் என்னும் இப்பொருளை ஸ்ரீ பகவான் திருஷ்டாந்தத்தால் நிரூபித்தருளுகின்றார் :—

சு-ம். சூவர்யபுராணமதுவ்ருத்திஷ்டம் வஸுதாரோவர்ஷேண யஜ்வந: ।
தத்தாரா யம் வ்ருஷ்டி வெஷு வபாஜ்ஞிராவ்ருணோதிந காரகாரீ ॥ (70)

ப-ம். 2 சூவர்யபுராணம் 3 மதுவ்ருத்திஷ்டம் 4 வஸுதாரம் 5 சூவர்ஷேண 6 வ்ருஷ்டி 1 யஜ்வந: 7 தத்தாரா 10 காரார்ஷீ 8 யம் 11 வ்ருஷ்டி 9 வெஷு 12 வர்ஷீ 13 பாஜ்ஞிம் 14 சூவ்ருணோதி 16 ந 15 காரகாரீ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வாறு சர்வநதிகளாலும்நிறைவிக்கப்பெற்றதும். அசலப்பிரதிஷ்டையுடையதுமாய சமுத்திரத்தை மழைநீர்அடையுமோ, அவ்வாறே எந்த ஸ்திதப்பிரஞ்ஞ புருஷனைச் சர்வசப்தாதிவிஷயங்களும் அடையுமோ, அந்த ஸ்திதப்பிரஞ்ஞ புருஷனே சர்வவிகேஷபநிவிருத்திரூப சாந்தியை அடைவன். விஷயங்களை இச்சித்தவன் அந்தச் சாந்தியை அடையான். (70)

(வி-ம்.) ஸ்ரீ கங்கை, யமுனை, கோதாவரி, சிந்து, சரஸ்வதீ என்பனவாதி சர்வ நதிகளின் ஜலங்களால் எல்லாப் புறமும் நிறைந்துள்ள சமுத்திரத்தைபே மழை முதலியவற்றினின்றும் உற்பன்னமாய சர்வ ஜலங்களும் அடையும். அவ்வெல்லா ஜலங்களும் அடைந்தபோதினும், அச்சமுத்திரம் அசலப்பிரதிஷ்டமேமயாம். தனது மரியாதையைத் தாண்டாதது யாதோ, அது அசலப் பிரதிஷ்டமாம். அல்லது, மைநாகாதி பர்வதங்களின் நாமம் அசலமாம். அந்த அசலங்களின் ஸ்திதி எதன்கண்ணுமோ, அது அசலப்பிரதிஷ்டமாம். இத்துணை கூறியருளியதால் அச்சமுத்திரத்தின் கம்பீர மிகுதி வருணித்தருளப்பட்டது. அத்தகைய மகா கம்பீர சமுத்திரத்தின்கண்ணே அவ்வெல்லா நீரும் அடையும். ஆனல், அந்நீர்கள் பிரவேசித்தலான் அக்கடல் சிறிது மாத்திரையுங் கலக்கத்தை அடையமாட்டாது என்னும் இவ்விஷயம் யாவருக்கும் அனுபவ சித்தமாம். அதுபோல, நிர்விகாரரூபமாய் இராநின்ற எந்தஸ்திதப்பிரஞ்ஞபுருஷனே இவ்வஞ்ஞானிகளின் இச்சைக்கு விஷயமாய் இராநின்ற சப்தாதி விஷயங்கள் பிராரப்த கருமவயத்தால் அடையா நிற்பினும், அவை விகாரத்தைஅடையுமாறு செய்யமாட்டாவோ, அத்தகைய மகாசமுத்திரத்திற்குச் சமானமான அந்த ஸ்திதப்பிரஞ்ஞஅறிஞனே இலௌகிக வைதிக சர்வகருமங்களின் நிவிருத்திவடிவ காரியசகிதஅவித்தையின் நிவிருத்திவடிவசாந்தியைஅடைவன். எப்புருஷன் அச்சப்தாதிவிஷயங்களையடைய இச்சையுடையவனுவனே, அப்புருஷன் அச்சாந்தியைஅடையமாட்டான்; மற்றோரு, அந்த விஷயாசக்த புருஷன் சர்வகாலத்தின்கண்ணும் அந்த இலௌகிக வைதிக கருமரூப விகேஷபத்தால் மகாகிலேசரூபசமுத்திரத்தின்கண்ணே மூழ்குவன். இத்துணைகூறியருளியதால் இப்பொருள் கூறியருளியதாயது:—எப்புருஷனுக்குக் குரு சாஸ்திர உபதேசத்தால் ஆன்மசாக்ஷாத்கார அடைவுண்டாமோ, அந்த ஞானமுடைய புருஷனுக்கே பலரூப வித்வத்சந்யாசம் கிடைக்கும். அங்ஙனமே அந்த ஞானமுடைய புருஷனுக்கே சர்வவிகேஷபநிவிருத்திரூப ஜீவன்முக்தியுண்டாம். அங்ஙனமே விஷயபோகங்கள் அடைவுறினும், நிர்விகாரத் தன்மையேஉண்டாம்என்பதாம். (70)

(அ-கை.) எக்காரணத்தால் விஷயங்களை இச்சித்தபுருஷன் அந்தச் சாந்தியை அடையாரோ, அக்காரணத்தால் இவ்விவேகியானவன் அடைவுறினும் அவ்விஷயங்களைப் பரித்தியாகம்மசெய்வன் என்னும் பொருளை ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்:—

சு-ம். விஹாய காமாந் யஸ்ஸர்வாந் புமாம்ஸ்சரதி நிஸ்ப்ருஹஃ।
நிர்மமோ நிரஹம்காரஃ ஸ ஶாந்திமதிகச்சதி ॥ (71)

ப-ம். 5 விஹாய 4 காமாந் 1·யஃ 3 ஸர்வாந் 2 புமாந் 9 சரதி 6 நிஸ்ப்ருஹஃ 7 நிர்மமஃ 8 நிரஹம்காரஃ 10 ஸஃ 11 ஶாந்திம் 12 அதிகச்சதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எப்புருஷன் சர்வகாமங்களையும் பரித்தியாகஞ் செய்து, இச்சையின்றியவனும், மமதையற்றவனும், அகங்காரமின்றியவனுஞ்சஞ்சரிப்பனே, அந்த ஸ்திதப்பிரஞ்ஞன் அந்தச்சாந்தியைஅடைவன். (71)

(வி-ம்.) கிருகம், சேஷத்திரம், தனம் முதலிய எத்துணை வெளிக்காமங்களுளவோ, மனோராஜ்பருபஎத்துணை யுட்காமங்களுளவோ,வாசனை மாத்திரவடிவ எத்துணைக் காமங்களுளவோ, அம்மூன்றுவகையாய காமங்களையும் எப்புருஷன் மார்க்கத்திற் செல்லுங்கால் திருணங்களைத் தீண்டுவதேபோலத் துச்சமெனவறிந்து உபேக்ஷை செய்துவிடுவனோ, எப்புருஷன் தனது சரீர ஜீவனமாத்திர இச்சையும் அற்றவனுவனோ, எப்புருஷன் சரீரஇந்திரியம்முதலியசங்காதத்தின் கண்ணை இதுவேயான் என்னும் அபிமானரூபஅகங்காரமற்றவனுவனோ, அல்லது வித்தை, உத்தம ஆசிரமம் முதலியவற்றின்அடைவினால் உண்டாகிய தன்பான் மேலாயதன்மைப்புத்திரூப அகங்காரமற்றவனுவனோ, அகங்காரமற்றிருத்தலின் எப்புருஷன் மமமதையற்றவனுவனோ, அதாவது சரீர நிர்வாகத்தின் பொருட்டுப் பிராரப்தகருமம்அடைவித்த கந்தகௌபீனம் முதலியவற்றின்கண்ணும் இஃதென்னதென்னும் அபிமானம் எப்புருஷனற்றவனுவனோ, இவ்வாறு சர்வ பதார்த்தங்களையும் உபேக்ஷித்து, இச்சையற்று நிரகங்காரத்தையுற்று மமதையற்ற பான்மையை மருவி எப்புருஷன் பிராரப்த கருமவயத்தான் சாஸ்திர விஹித போகங்களைப் போகிப்பனோ, அல்லது தனது இச்சைவாயிலாய்பாண்டாண்டேடனுந் திரிவனோ, இவ்வகையாய அந்த ஸ்திதப்பிரஞ்ஞ புருஷன் சர்வ சம்சார துக்கங்களின் உபராமத்தன்மை வடிவினதும், காரியசகித அவித்தை நிவிருத்தி வடிவினதும் ஆய சாந்தியை ஆன்மஞானபலத்தால் அடைவன். இவ்வகையாய சஞ்சாரம் அந்த ஸ்திதப்பிரஞ்ஞபுருஷனுக்குண்டாம். இத்துணை கூறியருளியதால் 'கிம் வ்ருஜேத' என்னும் நான்காவது வினாவிற்கு விடை சித்தித்தது. (71)

(அ-கை.) ஆண்டுப் பூர்வ கிரந்தத்தே நான்கு வினாக்கள் நான்கு விடைகள் என்பவற்றின் வாயிலாய் ஸ்திதப்பிரஞ்ஞ புருஷனுடைய சர்வ இலக்கணங்களையும், முமுக்ஷு ஜனங்கள் அவசியஞ் சம்பாதிக்கவேண்டும் என்னும் பொருள் அருளிச் செய்யப்பட்டது. இப்போது நிட்காம கரும யோகத்தின் பலவடிவசாங்கிய நிஷ்டையின் பலத்தை நிரூபித்து, துதிசெய்துகொண்டு ஸ்ரீ பகவான் அதனை உபசம்ஹரித் தருளுகின்றார் :—

சு-ம். ஏஷா ப்ராஹ்மீ ஸ்திதிஃ பார்த² நைநாம் ப்ராப்ய விமுஹ்யதி ।
ஸ்தி²த்வாஸ்யா மந்தகாலேபி ப்³ரஹ்மநிர்வாணமருச்ச²தி ॥ (72)

ப-ம். 1 ஸஹயஜ்ஞாஃ 3 ப்ரஜாஃ 2 ஸ்ருஷ்ட்வா 5 புரோவாச 4 ப்ரஜாபதிஃ 7 அனென 8 ப்ரஸவிஷ்யத்வம் 6 ஏஷ 9 வோஸ்து 10 இஷ்டகாமதுக்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அன்னத்தினின்றும் சரீரம் உற்பன்னமாம், அவ்வன்னத்தின் உற்பத்தி ஜலவிருஷ்டியினுலுண்டாம், அந்த நீரின்விருஷ்டி அபூர்வரூபதருமத்தாலுண்டாம், அந்த அபூர்வரூபதருமங் கருமத்தாலுண்டாம். (14)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! போஜனவாயிலாய்ப் புருஷஸ்திரீகளின் சரீரத்தின்கண்ணே புகுந்து சுக்கிலசோணித சொரூபமாய்ப் பரிணமத்தையடைந்த நெற்கோதுமை முதலியனவாய அன்னங்களினின சர்வமனுஷ்யாதி பிராணிகளின் சரீரம் உற்பன்னமாம். அந்நெற்கோதுமை முதலிய அன்னத்தினுற்பத்தி ஜலவிருஷ்டியினுண்டாம் என்னும் வார்த்தை சர்வப்பிராணிகட்கும் பிரத்தியக்ஷசித்தமாம். காரீரீ, இஷ்டி, அக்கினிஹோத்திரம் முதலியவற்றினின்றும் உற்பன்னமாய தருமஞ் சாஸ்திரத்தின்கண்ணே அபூர்வம், அதிருஷ்டம் எனக்கூறப்பெறும். அந்தத்தருமரூப யஜ்ஞத்தினின்றும் ஜலவிருஷ்டியுற்பன்னமாம்.

ஆ.சு. கூழளவ்ராஹ்மணேதிஃ ஸஹ்யமாஹித்ய உவதிஷ்஠தே।
க்ருஹிதஸ்ருஜாயதே வ்ருஷ்டி வ்ருஷ்ட்யன்னம்ததஃ ப்ரஜாஃ।

(பொ-ள்.) வைதிக அக்கினியின்கண்ணே காலையிலும் மாலையிலுஞ் சித்தை பக்திவாயிலாயிடப்பட்ட நெய்முதலிய பதார்த்தங்களின் ஆஹுதிகள் சூக்ஷ்ம ரூபமாய் ஆதித்தியனிடத்தே நிலைபெறும். அவ்வாஹுதி விசிஷ்ட ஆதித்தியனிடத்திருந்தும் மேகவாயிலாய் ஜலவிருஷ்டி உற்பன்னமாம். அந்த ஜலவிருஷ்டியினின்றும் நெற்கோதுமைமுதலிய அன்னங்கள் உற்பன்னமாம். அவ்வன்னத்தினின்றும் இம்மனுஷ்யாதி சரீரங்களுண்டாம். அந்தத் தர்மரூப யஜ்ஞம், அக்கினிஹோத்திரம், காரீரீ, இஷ்டிமுதலிய கருமங்களினின்றும் உற்பன்னமாம். (14)

(அ-கை.) அன்றியும் :—

சு-ம். கூஉ ப்ரஹ்மோத்பவம் வித்தி ப்ரஹ்மாக்ஷரஸமுத்பவம்।
தஸ்மாத்ஸர்வகதம் ப்ரஹ்ம நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்டிதம்॥ (15)

ப-ம். 1 கூஉ 2 ப்ரஹ்மோத்பவம் 3 வித்தி 4 ப்ரஹ்ம 5 அக்ஷரஸமுத்பவம் 6 தஸ்மாத் 7 ஸர்வகதம் 9 ப்ரஹ்ம 8 நித்யம் 10 யஜ்ஞே 11 ப்ரதிஷ்டிதம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அவ்வக்கினிஹோத்ராதி கருமங்கள் நீ வேதத்தினின்றும் உற்பன்னமாயினவென அறிதி. அவ்வேதத்தையும் பரமான்ம தேவரினின்றும் உற்பன்னமானதென அறிதி. அக்காரணத்தினனே சர்வ அர்த்தத்தின்பிரகாசகமாய நாசமற்ற அவ்வேதம் அத் தருமரூபயஜ்ஞத்தின்கண்ணே ஸ்திதமாம். (15)

(வி-ம்.) ப்ரஹ்மமென்பது வேதமாம். அந்த வேதரூபப் ப்ரஹ்மம் எதன்கண்ணே ப்ரமாணமாமோ, அது ப்ரஹ்மோத்பவமாம். அந்த அக்கினிஹோத்ராதி கருமங்களை நீ ப்ரஹ்மோத்பவமென அறிதி. கருத்துவாம் :—வேதம்விதித்த அக்கினிஹோத்ராதி கருமங்களையே நீ அபூர்வரூப தருமத்தின் சாதனமெனவறிதி. வேறுபாஷண்ட சாஸ்திரங்கள் பிரதிபாதித்த கருமங்களை நீ அபூர்வரூப தருமசாதனமென அறியாதொழிதி.

சங்கை :—ஹே பகவன்! அந்தப்பாஷண்ட சாஸ்திரங்களையபேக்ஷித்து வேதத்தின்கண்ணே யாது விலக்ஷணத்தன்மையுளது? எவ்விலக்ஷணத்தன்மையால் வேதப்பிரதிபாதித அர்த்தமே தருமரூபமாமோ; வேறு பாஷண்ட சாஸ்திரப்பிரதிபாதித அருத்தம் தருமரூபம் அன்றுமோ.

சமாதானம் :—ஸ்ரீ பகவான் அவ்வேதத்தின்கண்ணே வேறுபாஷண்ட சாஸ்திரத்தினும விலக்ஷணத்தன்மையைக் கூறியருளுகின்றார். 'ப்ரஹ்மாக்ஷரஸமுத்பவம்' என. ஹே அர்ச்சுன! பிரமம், பிரமாதம், கரணஅபாடவம், விப்ரலிப்சை, என்பனமுதலிய சர்வதோஷங்களற்ற அக்ஷர பரமான்மதேவரிடத்

திருந்தே புருஷனுக்குநிசுவாசமுண்டாவதேபோல, முயல்வின்றியே அந்த இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்னும் வேதங்கள் உற்பன்னமாயின. இக்காரணத்தால், பிரமம், பிரமாதம் முதலிய தோஷங்களின் சங்கையற்று, அவ்வ பௌருஷேயவேதங்களின் வசனமே, தருமரூப அதீந்திரியஅர்த்தவிஷயகப்பிர மையின் ஜனகத்தன்மையால் பிரமாணரூபமாம். பிரமப்பிரமாதமுதலிய தோஷங் களையுடைய புருஷர்களாற்செய்யப்பட்ட பாஷண்டவாக்கியம், அவ்வதீந்திரிய தரும விஷயகப்பிரமையை உற்பன்னஞ்செய்யமாட்டாது. ஆகையால், அப்பாஷண் டசாஸ்திரம் அத்தருமத்தின்கண்ணே பிரமாணரூபமன்றும். ஈண்டு அங்யபதார்த் தத்தின்கண்ணே அங்நிய புத்தியுண்டாதல் பிரமமாம். அவசியஞ் செய்யத்தகுதி யாய அருத்தத்தையுஞ் செய்யாதிருத்தல் பிரமாதமாம். நேத்திராதி காரணங்களி டத்தே வஸ்துவின் பதார்த்தக் கிருகணஞ்செய்யும் ஆற்றலிலாமை காணுபாடவ மாம். அங்நியரை வஞ்சிக்கவேண்டுமென்னுமிச்சை விப்பலிப்சையாம். ஆண்டு அக்ஷாபரமான்மதேவரிடத்திருந்தே வேதங்களின் பிராதுர்ப்பாவம் (உற்பத்தி) உண்டாம் என்னும் வார்த்தை சுருதியின்கண்ணுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. "ꣳꣳꣳ

அபூர்வரூபதரும உற்பத்தியுண்டாம். அந்தத்தரும உற்பத்தியின்பின்னர் ஜலவிருஷ்டியுண்டாம். அந்தஜலவிருஷ்டியால் நெற்கோதுமைமுதலிய அன்னங்கள் உற்பன்னமாம். அவ்வன்னத்தினின்றும்மனுஷ்யாதிபூதங்கள் உற்பன்னமாம். அதன்பின்னர் அம்மனுஷ்யாதிகட்குமீண்டும் கருமத்தின்கண்ணே பிரவிருத்தியுண்டாம். இவ்வண்ணம் சர்வஜகத்தையும் நிர்வாகஞ்செய்யும்பொருட்டுப் பரமேஸ்வரர் பிரவிருத்திப்பித்த இச்சக்கிரத்தை எவ்வதிகாரியங்கீகரிக்கவில்லையோ, அவன்பாவரூப ஜீவனமுடையவனுதலின் வீணுகவேஜீவிக்கின்றனன். அதாவது அப்புருஷன் ஜீவிப்பதினும் மரணமடைவதேமன்மையாம்; ஏனெனின், அச்சரீரத்தைப் பரித்தியாகஞ்செய்து வேறுஜன்மத்தின்கண்ணே அப்புருஷனுக்குமொருகால்தருமத்தின் அனுஷ்டானஞ்சம்பவித்தல்கூடும். அங்ஙனமேம இந்தஜன்மத்தின்கண்ணே வேதவிகிதகருமத்தைச்செய்யாமையால் பாவத்தைச்சேகரித்தலினின்றுந் தப்பித்துக்கொள்வன். ஆகையால், அப்புருஷன் ஜீவிப்பதினும் மரித்தலேமன்மையாம்.

சங்கை :—ஹே பகவன்! முற்கூறியருளிய சக்கிரத்தை அங்கீகரியாத பிரஹ்மத்தையுணர்ந்தபுருஷனுடைய ஜீவனமும் நிஷ்பலமேயாகுமன்றே?

சமாதானம் :—அச்சங்கையை நீக்கியருளும்பொருட்டு ஸ்ரீபகவான் அவ்வஞ்ஞானிகட்கு விசேஷணங்கொடுத்தருளுகின்றார் 'ஹ்ருயாராமஸ' என சுரோத்திராதி இந்திரியங்களால் சப்தாதிவிஷயங்களிடத்தே எப்புருஷன் இரமிக்கின்றனனே, அவன் இந்திரியாராமனுவன். அத்தகையவிஷயலம்பட புருஷன்கேவலங்கருமத்திற்கேயதிகாரியாவன், அங்ஙனமாகியும் எவன்கருமத்தைச் செய்கின்றனில்லையோ, அவன் அவ்விகிதகருமத்தைச்செய்யாமையால்கேவலம் பாவத்தையே சேகரிப்பவனுய் வீணுகவேஜீவிப்பன். ஜீவன்முக்தவித்துவானே இந்திரியாராமனுகாலின் அக்கருமங்களைச்செய்யாமையால் அவ்வித்துவானுனவன் பிரத்தியவாயத்தையடையான். (16)

(அ-கை.) அல்லது எப்புருஷன் இந்திரியாராமனுகானே அங்ஙனமேபரமார்த்தவஸ்துவை எப்போதும் பார்ப்பவனுவனே, அவ்வறிஞன் இச்சகத்துருவச்சக்கிரத்தின் ஹேதுபூதகருமத்தையனுஷ்டியாவிடினும் பிரத்தியவாயத்தையடையான்; என்னை? அவ்வறிஞன்கிருதகிருத்தியபாவத்தையடைந்திருத்தலின்; என்னும் பொருளை ஸ்ரீபகவான் இரண்டுசுலோகங்களாற்கூறியருளுகின்றார் :—

சு-ம். யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யாத் ஆத்மதृப்தஶ்ச மாநவ: ।
ஆத்மந்யேவ ச ஸந்துஷ்டஸ்தஸ்ய கார்யம் ந வித்யதே ॥ (17)

ப-ம். 2 யஃ 1 து 4 ஆத்மரதிஃ 5 ஏவ 6 ஸ்யாத் 8 ஆத்மதृப்தஃ 7 ச 3 மாநவஃ 10 ஆத்மநி 11 ஏவ 9 ச 12 ஸந்துஷ்டஃ 13 தஸ்ய 14 கார்யம் 15 ந 16 வித்யதே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மீண்டும் எம்மனுஷ்யன் ஆன்மாவின்கண்ணே ப்ரீதியுடையவனேயாவனே; அங்ஙனமே, ஆன்மாவாலேதிருப்தனுயுளானே; அங்ஙனமே, ஆன்மாவின்கண்ணே சந்துஷ்டனுவனே; அப்புருஷனுக்குச்சிறிதுமாத்திரையுஞ்செய்யத்தக்ககாரியமொன்றுமின்றும். (17)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எப்புருஷன் இந்திரியாராமனுவனே, அவ்விஷயலம்படபுருஷன் மாலைசந்தனவனிதைமுதலிய விஷயங்களையடைந்தே இரதியையடைவன்; அங்ஙனமே அப்புருஷன்மனேஹர அன்னபானுதி பதார்த்தங்களையடைந்தேதிருப்திபையடைவன்; அங்ஙனமே, அவ்விந்திரியாராமபுருஷன் சுவர்ணம், மைந்தர், பசுக்கள்முதலிய பதார்த்தங்களினடைவாலும், நோய்முதலியவற்றின் அடைவின்மையானுமே சந்தோஷத்தையடைவன். அப்பதார்த்தங்கள்கிடையா

விடின், அவ்விந்திரியாராம இராகிகளிடத்தேதமுறைப்படி ஆதி, அதிருப்தி அதுஷ்டிகளேகாணவரும். ஈண்டு இரதி, திருப்தி, துஷ்டியென்னும்மூன்றும் மனத்தின்விருத்திவிசேஷங்களாம். அம்மூன்றும் சாக்ஷிரூப அனுபவத்தாற் சித்தமாம். எவ்வறிஞனுக்குப்பரமானந்தவடிவமாய பரமான்மதேவரது அடைவுகிடைத்தேதா அவ்வறிஞன், துவைததரிசன அபாவத்தானும், விஷயசுகங்களிடத்தேதுச்சபுத்தியையுடைமையானும் அவ்விஷயசுகங்களினிச்சைபச் செய்வதில்லை. என்னும் இவ்வார்த்தையை 'யாவாநயஃ உதவாநெ' என்னுஞ்சுலோகத்தின்கண்ணே முன்னமேகூறிவந்தேம். இக்காரணத்தால் அந்தப்பிரஹ்மதேவத்தாவாய அறிஞன் ஆநந்தஸ்வரூப ஆன்மாவின்கண்ணே இரதிசெய்வன். ஸ்திரீமுதலிய விஷயங்களிடத்தே இரதி செய்யான்.

சங்கை :—தேஹ பகவன்! ஆநந்தஸ்வரூப ஆன்மாவின்கண்ணே எல்லாப்பிராணிமாத்திரங்கட்கும் நிருபாதிகப்பிரீதியாம். தன்னன்மாவின்பொருட்டேஸ்திரீபுத்திராதிகளிடத்தே பிரீதியுண்டாம். ஆகையால், அவ்வான்மரதியாகிய அறிஞபுருஷனிடத்தே அஞ்ஞானிகளினும் விலக்ஷணத்தன்மை சித்தமாகமாட்டாது.

சமாதானம் :—ஸ்ரீ பகவானருளிச்செய்கின்றார் 'சூத்ரதவஃ' என. தேஹ அர்ச்சுன! அவ்வறிஞனவன் பரமாநந்தவடிவ ஆன்மாவாதேனதிருப்தனுவன். அஞ்ஞானிபைப்போல அவ்வறிஞன்மநோரம்மியமங்கையர்களாலேனும், இனிய அன்னத்தாலேனும்திருப்தனுகான்.

சங்கை :—தேஹ பகவன்! எப்புருஷனுடையஜாடராக்கினி, நோய்முதலியவற்றால் மந்தத்தையடைந்துளதேதா, தாதுக்ஷயமாய்விட்டதேதா, அப்புருஷன் இனிய அன்னத்தாற்றிருப்தனுகான், மநோரம்மியமங்கையரிடத்தும் இரமிக்கமாட்டான். ஆகையால், அந்நோயாளியினும் அவ்வறிஞனிடத்தே விலக்ஷணத்தன்மைசித்தமாகமாட்டாது.

சமாதானம் :—ஸ்ரீ பகவான்கூறியருளுகின்றார் 'சூத்ரஸ்யவ ஸஜாஷ்டிஃ' என. தேஹ அர்ச்சுன! அவ்வறிஞனவன் கேவலம் ஆநந்தவடிவ ஆன்மாவின்கண்ணே சந்தோஷத்தையடைந்துளான். வேறொரு அனன்மபதார்த்தங்களிடத்தே அவ்வறிஞன்சந்தோஷத்தையடையான். நோய்முதலியவற்றால் எப்புருஷனுக்குச்சாடராக்கினிமந்தமாய்விட்டதேதா, தாதுக்ஷயமுண்டாய்விட்டதேதா அப்புருஷனுஜாடராக்கினியோங்கும்பொருட்டும், தாதுவைவிருத்திசெய்யும்பொருட்டும் நானாவகையாய ஔஷதங்களின்பொருட்டுயாண்டாண்டோசுற்றிக்கொண்டோடதிரிவன். ஆனந்தஸ்வரூப ஆன்மாவின்கண்ணே அவ்வஞ்ஞானியானவன் சந்தோஷத்தையடையான். இவ்விலக்ஷணத்தன்மையைபுணர்த்தியருளும்பொருட்டு, ஸ்ரீ பகவானவர் 'யஷ்வாதரதிஃ' என்னும் திருவசனத்தின்கண்ணே 'து' என்னும்சப்தத்தைக்கூறியருளினர்.

ஆ-சு. "சூத்ரஸ்து சூதரதிஃ ஸ்யாவாதெஷ ப்ரஹ்மவிதாம்வரிஷ்டஃ"

(போ-ள்.) பிரஹ்மவித்துக்களுண்மேன்மையுடைய இவ்வறிஞன் ஆநந்தவடிவ ஆன்மாவின்கண்ணே கிரீடிப்பன். ஆன்மாவின்கண்ணே இரதிசெய்வன். ஆன்மாவின்கண்ணே கிரியையுடையவனுவன் என்பதாம். இத்தகையபிரஹ்மத்தையுணர்ந்த வித்துவானிடத்தேதகுமஅதிகாரத்தன்மை இருப்பதற்குயாதொருதேஹதுவுமின்றும். இக்காரணத்தால் அவ்வறிஞனுக்கு யாதொரு இலௌகிகவைதிககாரியமுஞ் செய்யத்தக்கதின்றும்; மற்றேரு, அவ்வறிஞன் கிருதகிருத்தியனேயாவன். ஈண்டு 'ஸாதவஃ' என்னும்பதத்தால் ஸ்ரீ பகவானுனவர் இப்பொருளைக் குறிப்பித்தருளினர் :—இவ்வண்ணம் ஆத்மரதியாய், ஆத்மதிருப்தனுய்

ஆத்மசந்துஷ்டனுப் எம்மனுஷனனுமிருப்பனேயாயின், அம்மனுஷனை கிருத கிருத்திய பாவத்தையடைவன். அந்தக்கிருதகிருத்தியபாவவடைவின்கண்ணே பிராஹ்மணத்தன்மைமுதலிபடித்தமஜாதியினுபயோகஞ்சிறிதுமாத்திரையு மின்றும். (17)

(அ-க.) ஹே பகவன்! ஆன்மசாக்ஷாத்காரமுடையபுருஷனும், துறக்க முதலியவற்றின் இன்பவடைவின்பொருட்டேனும், முத்தியடையும்பொருட்டே னும், பிரத்தியவாயம்நீங்குப்பொருட்டேனும், இன்றியமையாது அக்கருமஞ் செய்தல்தகுதிபாம் என அர்ச்சுனன்சங்கிப்ப, ஸ்ரீ பகவான் விடையருளிச்செய் கின்றார்.

சு-ம். தஸ்ய தஸ்ய கார்யஸ்யாகரணாந்மோஹாத்தஸ்ய பரித்யாக உச்யதே ।
ஸ த்யாகஸ்ய ஸாத்விகஸ்யாதஸ்த்யாகஸ்ய தாமஸஸ்யைவ நிஷ்பாதனம் ॥ (18)

ப-ம். 4 ஸ, ஸஸ்ய 1 தஸ்ய 2 கார்யஸ்ய 3 கரணாத் 8 ஸ 5 ஸாகார்யஸ்ய 6 உச்யதே 7 பரித்யாக
14 ஸ 9 அ 10 ஸாத்விகஸ்ய 11 ஸாத்விகஸ்ய 12 நிஷ்பாதனம் 13 ஸாத்விகஸ்யைவ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அவ்வறிஞனுக்குக் கருமஞ்செய்வதால் யாதொரு பயனுமின்றும்; கருமஞ்செய்யாதிருப்பதாலீண்டு யாதொருஅனர்த்தமுமின்றும்; என்னை? இவ்வறிஞனுக்குச் சர்வபூதங்களிடத்தும் யாதொருபயனுடைச் சம்பந் தமுமின்றுமாதலின். (18)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! யாவன் ஆன்மாதிரியோ, ஆன்மதிருப்தனோ, ஆன்ம சந்துஷ்டனோ, ஆன்மாவையறிந்த அவனுக்கு நித்தியநைமித்திக கருமங்களால் யா தொருதுறக்கமாகிய பயனேனும், மோக்ஷமாகிய பயனேனுமின்றும். ஏனெனின், அவ்வறிஞனுக்குத் துறக்கமுதலியவற்றை யடையவேண்டுமென்னுமெண்ண மாத்திரமுமின்றும். மோக்ஷமோ கருமங்களாற் சாதிக்கத்தக்கதேயன்றும்.

ஆ-சு. "வாரீக்ஷ்யலோகாநு கர்மசிதாநு ப்ராஹ்மணோ ।
நிர்வேதமாயாந்நாஸ்த்யகிருதோ க்ருதேந" ॥

(போ-ள்.) இவ்வதிகாரியாய பிராஹ்மணன் புண்ணியகருமங்களாலாக்கப் பட்டசுவர்க்காதி லோகங்களை, அநித்தியத்தன்மை, அதிசயத்தோடுகூடியதாந் தன்மைமுதலிய தோஷங்களுடையன வெனவறிந்து, அந்தச்சுவர்க்காதி லோகங்க ளினின்றும் வைராக்கியத்தை யடைவன்; என்னை? ஆன்மவடிவ நித்திய மோக்ஷம், நித்தியநைமித்திக கருமங்களால் அடையப்படமாட்டாதாதலினென்க. ஈண்டு 'தஸ்ய தஸ்ய' இவ்வசனத்தின்கண்ணே இராநின்ற 'ஸ்ய' என்னுஞ்சப்தம், அவ்வான்மவடிவ நித்தியமாயமோக்ஷத்தின்கண்ணே ஞானத்தாற்சாதிக்கத்தக்க தாந்தன்மையின்மீக்கத்தையுங் குறிப்பித்ததாமெனக்கொள்க. அதாவது, அவ் வான்மவடிவ நித்தியமோக்ஷம் எங்ஙனங் கருமத்தாற் சாத்தியமன்றுமோ, அங்ங னம் ஞானத்தானுஞ்சாத்தியமன்றும்; ஏனெனின், அவ்வான்மரூபமோக்ஷம் உண் மையாயோ இச்சீவனுக்கு நித்தியமுமே அடையப்பெற்றதாம், ஆயினும் ஆன்மா வின் அஞ்ஞானமே அம்மோக்ஷத்தின் அடைவின்மையாம். அவ்வஞ்ஞானம் தத் துவஞான மாத்திரத்தால் நீங்கும், அத்தத்துவஞானத்தால் அஞ்ஞானம் நீங்கிய பின்னர், அவ்வறிஞனுக்குக் கருமத்தாற் சித்தமாகத்தக்கதும், தத்துவஞானத் தாற் சித்தமாகத்தக்கதும் ஆகிய எப்பயனும் எஞ்சியிராதென்பதே.

சங்கை:—ஹே பகவன்! நித்தியநைமித்திககருமங்களைச் செய்யாதொழித லாற் சாஸ்திரத்தின்கண்ணே பிரத்தியவாயத்தினடைவு கூறப்பட்டுளது; ஆதலின்

அவ்வறிஞனும் பிரத்தியவாயத்தை நீக்கும்பொருட்டு, அக்கருமங்களை அவசியஞ் செய்தல் தகுதியாம்.

சமாதானம் :—ஸ்ரீ பகவானருளிச்செய்கின்றார் :—'ஸாகூதைதைஹைகஸ்ய' என. ஹே அர்ச்சுன! அந்தப்பிரஹ்மவித்தாவாய அறிஞனுக்கு அந்நித்திய நைமித்திககருமங்களைச் செய்யாதொழிதலால் இவ்வுலகின்கண்ணே சிறிதுமாத்திரையும் நிந்தைவடிவ அநர்த்தமும், பிரத்தியவாயத்தின் பிராப்திவடிவ அநர்த்தமும் உண்டாகமாட்டாவென்பதாம். ஆண்டு இந்தச் சுலோகத்தின் முற்பாதியாலருளிச்செய்யப்பட்ட எல்லாப்பொருளின்கண்ணும் 'ஸவாஹ்யஹவ-ஹஸ்ரைதே ஷாகஸ்ரிஷ்யு-ஷவ்யவாஸ்ரயஃ' என்னுமிப்பிற்பாதியால் ஹேதுமருளிச்செய்கின்றார்:— ஹே அர்ச்சுன! எக்காரணத்தால் இந்தப்பிரஹ்மத்தையுணர்ந்த புருஷனுக்குப் பிரஹ்மாமுதல் ஸ்தாவரம்வரையுமுள்ள சர்வபூதங்களிடத்தும் யாதொருபயனுடைச் சம்பந்தமுமின்றுமோ, அதாவது எப்பிராணிவிசேஷத்தையாசிரயித்தேனும் கிரியையாற்சாதிக்கத்தக்கதெப்பொருளுமின்றுமோ, அக்காரணத்தால் இவ்வறிஞனுக்கு அந்நித்தியநைமித்திககருமங்களைச்செய்ததலும், அவற்றைச்செய்யாதிருத்ததலும் பயனற்றனவாம்.

ஆ-சு. "நைஹகம்கூதாஸ கூதேதவதஃ."

(போ-ள்.) இந்தப் பிரஹ்மவித்தாவாய அறிஞனைக் கருமத்தைச் செய்ததலுந் தவிர்ததலுந் தபியாவாம்.

சங்கை :—ஹே பகவன்! அந்தப் பிரஹ்மவித்தாவாய அறிஞனுக்கும் வீடடைவதன்கண்ணே இந்திராதி தேவதைகள் நாலுவகையாய விக்கினங்களைச் செய்வாதலின், அவற்றை நீக்கும்பொருட்டு அவ்வறிஞனும் அத்தேவதைகளின் ஆராதனைவடிவ கருமத்தை அவசியஞ் செய்யவேண்டுமென்றே.

சமாதானம் :—ஹே அர்ச்சுன! ஆன்மஞானத்தினும்முன்னர்த்தான் அத்தேவதைகள் விக்கினஞ்செய்வர். ஆன்மஞான மடைந்தபின்னரோ மோக்ஷ அடைவின்கண்ணே அவர்கள் விக்கினஞ்செய்ய ஆற்றலற்றவராவர்.

ஆ-சு. "தஸ்யஹ மஹைவாஸ்மாஹ்ம தயா ஏஸ்த கூதாஹைஸ்ஷாம்ஹ ஹவதி."

(போ-ள்.) எக்காரணத்தால் அந்தப பிரஹ்மவித்தாவாகிய புருஷன் அந்தத்தேவதைகளின் ஆன்மவடிவனுவமோ, அக்காரணத்தால் அவ்விந்திராதி தேவதைகள் அந்தப்பிரஹ்மவித்தானவை யவமதித்துபத்திரவிப்பதில் ஆற்றலுடையவராகார் என்பதாம். ஆகையால், விக்கினங்களின் நிவிருத்தியின்பொருட்டு, அத்தேவதைகளின் ஆராதனைவடிவ கருமமும் அவ்வறிஞன்செய்யவேண்டுவதின்றும். அத்தகைய பிரஹ்மவித்தாவாகிய புருஷனை ஏழு பூமிகளின்பேதத்தால் ஸ்ரீ வசிஷ்டபகவானும் நிரூபித்தருளியுளார் :—

ஆ-சு. "ஆதஹஸ்ரிஃ ஸுஹைஹாவஸ்ரா வ்ரயோவஸ்ரிகீர்த்திஸ்தா।
விசாரணாஸ்ரிதீயாஸ்ரா தனுதீயாதஸ்ரா ஊதஸ்ரா ॥
ஸத்வாவதிஸ்ரதுர்யீ ச ஸ்ரயாத்தாஸம் ஸத்திகாஸிகா।
வதாயஸ்ராஹாவநீ ஷஷ்ட்டீ ஸுஷுப்தீர்யஸ்ரமாஸ்ரதா" ॥

(போ-ள்.) 1 சுபேச்சை, 2 விசாரணை, 3 தநுமாநசை, 4 சத்துவாபத்தி, 5 அசம்சக்தி, 6 பதார்த்தாபாவநீ, 7 துரீயை (துரியகை) என்னும் ஏழுபூமிகள் ஞானத்திற்காம். அவற்றுள் நித்தியஅநித்தியவஸ்துவின்விசாரம், இகலோக பரலோகவிஷயசுகங்களினின்றும்வைராக்கியம், சமதமாதிஷட்சம்பத்தி என்னும்

மூன்று சாதனவாயிலாய்ப் பலபரியந்தமுள்ள முமுக்ஷுத்தையெனப் பெயரிய மோக்ஷேச்சை சுபேச்சையாம். 1 அதன்பின்னர் அசேஷசாஸ்திரபாண்டித்தியமும் பிரஹ்மநிஷ்டையு முடைய ஆசிரியரின் சமீபத்தைபடைந்து வேதாந்தவாக்கியங்களைச் சிரவணஞ்செய்தலும் அவ்வர்த்தத்தை மனனஞ்செய்தலும் விசாரணையெனப் பெறும். 2 அதன்பின்னர் நிதித்தியாசனரூப அப்யாசத்தாலுண்டா முளத்திணைருமைப்பாட்டால் அம்மனத்தின்கண்ணே சூக்ஷ்மவஸ்துக்ஷவரும்யோக்யதை தனுமானசையாம். 3 இம்மூன்றுபூமிகளும் ஞானஅடைவிற்குச்சாதனரூபமாம். இம்மூன்றுபூமிகளிலும் இவ்வெல்லாவுலகும் பேதத்தோடுகூடியதாய்த் தோற்றும். ஆகையால், இம்மூன்று பூமிகளும் நனவவஸ்தையெனக் கூறப்பெறும். இவ்விஷயமும் ஸ்ரீ வசிஷ்டபகவானல் கூறிபருளப்பெற்றுளது.

ஆ-சு. "ஹ்ருதயக்ரந்தினாஶாத்ஸர்வஸம்ஶயாஃ க்ஷீயந்தே கர்மாணி தஸ்மின்த்ருஷ்டே பராவரே" ॥

(பொ-ள்.) ஹே இராமச்சந்திர! எங்ஙனம் நனவவஸ்தையின்கண்ணே இவ்வுலகம் உள்ளபடியே பேதபுத்தியாற்காணப்பெறுகின்றதோ; அங்ஙனம், இம்முப்பூமியின்கண்ணும் இவ்வெல்லாவுலகும் உள்ளபடியே பேதபுத்தியாற் காணப்பெறும். ஆகையால, சுபேச்சை, விசாரணை, தனுமானசை என்னும் மூன்றுபூமிகள் நனவவஸ்தையெனக் கூறப்பெறும். அதன்பின்னர் இவ்வதிகாரிபுருஷனுக்குத் தத்வமசி முதலியவேதாந்த வாக்கியத்தால் நிர்விகற்பகப் பிரஹ்மான்மைக்கிய விஷயகசாக்ஷாத்காரமுண்டாம்; அதுசத்துவாபத்தியெனப்பெறும். 4 அந்தச்சத்துவாபத்தியெனப் பெயரிய நான்காவது பூமியின்கண்ணே இவ்வெல்லாவுலகும் கனவைப்போலப்பொய்யாய்த் தோற்றும்; ஆதலின் அந்தப் பலவடிவ சத்துவாபத்தி கனவவஸ்தையெனக் கூறப்பெறும். இவ்விஷயமும் ஸ்ரீ வசிஷ்டபகவானற் கூறியருளப்பட்டுளது :—

ஆ-சு. "கதாசித்தேதஸ்யை ஸ்யாத்தேதஸ்சேதே வ்யவஸ்தாமதே।
வஸ்த்வித்யவஸ்துகம் அதாயீ ஸ்ஹ்ருதிகாஸதா" ॥

(பொ-ள்.) எக்கால், அத்வைதஸ்திரத் தன்மையடையப் பெறுமோ, துவைத நிவிருத்தியாமோ, எல்லாவுலகையும் கனவைப்போலப் பொய்யெனக் காண்பனே; அக்கால், நான்காவது பூமியென நவிலப்பெறும். அந்நான்காவது பூமியையடைந்த யோகியானவன் பிரஹ்மவித்தெனப் பேசப்பெறுவன். ஐந்தாவது, ஆறுவது, ஏழாவது, என்னும்மூன்றுபூமிகளோ ஜீவன்முத்தியின் உட்பட்டபேதமேயாம். அவற்றுள், சவிகற்பசமாதியின் அப்யாசத்தால் தடைபடுத்தியமனத்தின்கண்ணேயுண்டாம் நிர்விகற்பக சமாதியவஸ்தையாதுளதோ அது அசம்சக்தியெனப் பெறும். அவ்வசம்சக்தியெனப்பெயரிய ஐந்தாவது பூமியைத்துயிலெனச் சொல்லுவர். அவ்வைந்தாவது பூமியையுடைய யோகியானவன்தானே சமாதியினின்றுங் கிளம்புகையையடைவன். ஆகையால், அவ்வைந்தாவது பூமியையுடைய யோகியானவன் பிரஹ்மவித்வானென்னும் பெயராலழைக்கப் பெறுவன். அதன்பின்னர், அவ்வசம்சக்தியெனப் பெயரிய ஐந்தாவதுபூமியின்பரிபக்குவத்தால் நெடுங்காலம்வரைநிலைபெற்ற அந்நிர்விகற்பகசமாதியவஸ்தை பதார்த்தாபாவநீயெனப்படுகரப்பெறும். 6 அப்பதார்த்தாபாவநீயெனப்பெயரிய ஆறுவதுபூமியைப் பெருந்துயிலெனப்பேசாநிற்பர். அந்தப்பதார்த்தாபாவநீயெனப் பெயரிய ஆறுவது பூமியையடைந்த அந்தயோகியானவன்றானே சமாதியினின்றுங் கிளம்பான்; மற்றோரு, சீடர்முதலிய மற்றையராலே அவன்சமாதியினின்றுங் கிளம்புகையையடைவன், அந்த ஆறுவது பூமியையுடைய யோகியானவன் பிரஹ்ம

வித்வரியான் எனப்பெயர்பெறுவன். இவ்விஷயத்தையும் ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறியருளியிருக்கின்றார் :—

ஆ-சு. வக்ஷ்யே ஹ்யஸிகாயெத்ய ஸுஷுப்திவதுர்யிகாம் ।
ஷஷ்ட்யாம்மாயாஹ்யஷுப்த்யாவ்யாம் க்ருஷ்ணே வதந்திஹ்யஸிகாம் ॥

(பொ-ள்.) இந்தயோகியானவன் துயிலெனப்பெயரிய ஐந்தாவதுபூமியை யடைந்து முறையே பெருந்துயிலெனப்பெயரிய ஆறுவதுபூமியையடைவன் என்பதாம். எச்சமாதியவஸ்தையினின்றும் இந்தயோகியானவன் தாஞ்சுவுங்கிளம்பாமை, சீடர் முதலியமற்றையராலுங் கிளம்பாமை, மற்றை, எவ்வாற்றானும் பேததரிசனமின்மையானை, அவ்வுருவமேயாவமை, தனது முயல்வின்றியே பரமேஸ்வரால் ஏவப்பட்ட பிராணவாயுவயத்தாலும், பிராரப்தகருமவயத்தாலும் எவ்வறிஞனுடைய தேகவியவகாரத்தை மற்றையரே சித்தஞ்செய்வரோ, எவ்வறிஞன் எப்போதும் பரிபூரணபரமாநந்தகனமாய் நிலைபெற்றிருப்பமை, அத்தகைய அவஸ்தையைத்துரீயையென்னும் ஏழாவது பூமியென்பர். 7. அவ்வேழாவது பூமியையடைந்த அந்தயோகியானவன் பிரஹ்மவித்வரிஷ்டன்என்னும் பெயரால் அழைக்கப்பெறுவன். இவ்வேழு பூமிகளின் சங்கிரக சுலோகமிதுவாம் :—

“அதாயே ஹ்யஸி காஜ்ஞானம் திஷ்ரஃஷ்வாஃ ஸாயகம்வாரா ।
ஜீவந்முக்தவஸ்தாஸு வர்தாதிஷ்ரஃ வ்யகீத்தாஃ ॥

(பொ-ள்.) சுபேச்சை, விசாரணை, தநுமாநசை என்னும் இம்மூன்றும் பூமிகளோ சாதனரூபங்களாம். சத்துவாபத்தியெனப்பெயரிய நான்காவது பூமி ஞானவடிவமாம். அசம்சக்தி, பதார்த்தாபாவநீ, துரீயையென்னும் மூன்றும் பூமிகள் ஜீவன்முக்தியின் அவஸ்தைவிசேஷங்களாம். இவ்வேழு பூமிகளையும் கூறுவதற்கீண்டிப் பிரசங்கத்தின்கண்ணேயிதுபயனும் :— எப்புருஷன் சுபேச்சை, விசாரணை, தநுமாநசை என்னுஞ் சாதனரூப முதன்மூன்று பூமிகளையும் அடைந்துளானை, அப்புருஷனுங்கருமங்கட்கதிகாரியல்லனையின் நான்காவது பூமியின் கண்ணேநிலவும் ஞானவானனவனும், மேன்மூன்று பூமியின்கண்ணேநிலவும்ஜீவன்முக்தர்களும் அக்கருமஅதிகாரிகளன்றென்பதன்கண்ணே யாதேதாதற்குளது என்பதாம். (18)

(அ-கை.) எக்காரணத்தால் அர்ச்சுனனுகிய நீ இவ்வகையாய ஞானவானுகவில்லையோ ; மற்றை, கேவலங் கருமங்கட்கேமாத்திரம் நீ அதிகாரியாவையோ ; அக்காரணத்தால், பலஇச்சையற்று நீ நித்தியநைமித்திக கருமங்களையே செய்தி என ஸ்ரீ பகவான் அர்ச்சுனனைநோக்கி யருளுகின்றார் :—

சு-ம். தஸ்மாத்வமர்ஜுந திஷ்டகாம்யம் கர்ம பூர்வம் ஸதா ।
ஸுஹ்ருத்வா ஹ்யர்தஸம்ஸித்திம் ஸமவாப்நோதி விந்தஷஃ ॥ (19)

ப-ம். 1 தஸ்மாத் 2 த்வமர்ஜுந 3 நிஷ்டகாம்யம் 4 கர்ம பூர்வம் 5 ஸதா 6 ஸமாசர 9 ஸுஹ்ருத்வா 7 ஹி 11 ஸம்ஸித்திம் 10 ஸதா 12 வாம் 13 ஸம்வாப்நோதி 8 விந்தஷஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன ! அக்காரணத்தால் நீ பலேச்சையற்றவனுய் எப்போதும் அவசியஞ் செய்யத்தக்கனவாய நித்தியநைமித்திக கருமங்களை நன்றுகச் செய்தி ; எக்காரணத்தால் இப்புருஷன் பலேச்சையற்றவனுய்க் கருமத்தைச்செய்து மோக்ஷத்தையேயடைவமை. (19)

(வி-ம்.) ஹே அர்ச்சுன ! எக்காரணத்தால் நீ ஞானவானன்றை ; மற்றை, கேவலங்கருமத்திற்கேயதிகாரியோ ; அக்காரணத்தால் “யாவஜ்ஜீவமஹிஹோத்ரம்

ಜ್ಞಾನಯಜ್ಞೇನ" ಎಂಬಾದಿ ಶ್ರುತಿಗಳು ವಿಧಿಸಿದವು, "ತದ್ಧೈತದ್ಘೋರಮಾಂಗಿರಸಃ ಕೃಷ್ಣಾಯ ದೇವಕೀಪುತ್ರಾಯೋಕ್ತ್ವೋವಾಚಾಪಿಪಾಸ ಏವ ಸ ಬಭೂವ ಸೋಽನ್ತವೇಲಾಯಾಮೇತತ್ತ್ರಯಂ ಪ್ರತಿಪದ್ಯೇತಾಕ್ಷಿತಮಸಿ ಅಚ್ಯುತಬಲಮಸಿ ಪ್ರಾಣಸಂಶಿತಮಸೀತಿ" ಎಂಬುದಾದಿ ಶ್ರುತಿಯು ಆತ್ಮಜ್ಞಾನಕ್ಕಿಂತ ಕರ್ಮಗಳೇ ನಿತ್ಯನೈಮಿತ್ತಿಕ ಕರ್ಮಗಳನ್ನು ನೀನು ಫಲಾಪೇಕ್ಷೆಯಿಲ್ಲದೆ ನಿರಂತರವೂ ಮಾಡುತ್ತಿರು. ಏಕೆಂದರೆ ಫಲಾಪೇಕ್ಷೆಯಿಲ್ಲದವನಿಗೆ ನಿತ್ಯನೈಮಿತ್ತಿಕ ಕರ್ಮಗಳನ್ನು ನಿರಂತರವೂ ಮಾಡುತ್ತಿರುವುದರಿಂದ ಆತ್ಮಜ್ಞಾನವಾಯಿಲಾಯಿಂ ಮೋಕ್ಷವು ಪ್ರಾಪ್ತವಾಗುವುದು. (19)

(ಅ-ಕೈ.) ಹೇ ಭಗವನ್! ಜ್ಞಾನಕ್ಕಿಂತಲೂ ಇಚ್ಛೆಯುಳ್ಳ ಪುರುಷನಿಗೆ ಕರ್ಮಗಳೇ ಶ್ರೇಷ್ಠವೆಂದು ನೀನು ಹೇಳಿದೆ. ಆದರೆ ಜ್ಞಾನನಿಷ್ಠೆಯನ್ನು ಪಡೆದಿರುವ ಸನ್ಯಾಸಿಗಳಿಗೆ ಕರ್ಮಗಳಿಂದ ಪ್ರಯೋಜನವಿಲ್ಲವೆಂದು ಹೇಳಿರುವೆ. ಆದ್ದರಿಂದ ಜ್ಞಾನ

தொழிந்த மூன்றுசிரமங்கள் க்ஷத்திரியஅரசனுக்குண்டாம். பிரஹ்மசர்யம், கிரு ஹஸ்தம் என்னும் இரண்டாசிரமங்கள் வைசியர்கட்குண்டாம். என்பனமுதலிய அநேக சுருதிஸ்மிருதி வசனங்களில் க்ஷத்திரிய வைசியர்கட்குச் சந்யாசமின்மை கூறப்பெற்றுளது. அந்தச்சுருதிஸ்மிருதிவசனங்களின்கருத்தையுணர்ந்தஜனகன் முதலிய க்ஷத்திரியர்களாகிய அரசர்கள் நித்தியநைமித்திக கருமங்களைச்செய்தே ஞானநிஷ்டையை யடைந்தனர். அக்கருமத்தியாகரூபசந்யாசத்தால் அஜ்ஜனகாதி யர் ஞானநிஷ்டையை யடைந்திலர். அல்லது,

"ஸவை ஜனாஜாயிதாயை ஜனாயை ஹ்யாஜகை."

(பொ-ள்.) சுருதிஸ்மிருதிகளாற் பிரதிபாதிக்கப்பட்ட சர்வதருமங்களும் அரசனைப்பற்றியேநிற்கும். இவ்வரசனே சர்வதருமங்களையுந் தரிப்பவனுவன் என்பதாம். என்னுமிந்த ஸ்மிருதிவசனத்தால் சர்வ வருண ஆசிரமங்களின் தரு மப் பிரவர்த்தகத்தன்மை க்ஷத்திரியஅரசனிடத்தே சித்தமாகும். என்னும் இக் காரணத்தினுலும், இந்த க்ஷத்திரியஅரசன் அவசியமாய்க்கருமத்தையே செய்க வென்னும் பொருளை ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்:—'மொகலோம ரஹஸெ வாவி' என, உலகரைத்தத்தந் தருமத்தின்கண்ணே பிரவிருத்திப்பித்தல், அதரு மத்தினின்றும் நிவிருத்திப்பித்தல் என்பது லோகசங்கிரகமாம். அவ்வுலகசங்கிர கத்தைப் பார்த்தேதனும், அல்லது பூர்வஜனகாதிக்ஷத்திரியஅரசர்களது சிஷ் டாசாரத்தைப் பார்த்தேதனும், அர்ச்சுனனுகிய நீ நித்தியநைமித்திக கருமங்களைச் செய்வதற்கே யோக்கியனுகின்றாய். கருத்தித்துவாம்:— க்ஷத்திரியப்பிறப்பை யடைவிப்பதாயகருமம்ஆரம்பித்த சரீரத்தையுடைய அர்ச்சுனனுகிய நீ அறிவு ளையினும், ஜனகாதியரைப்போலப் பிராரப்தகருமபலத்தால் அவ்வுலகசங்கிரகத் தின்பொருட்டுக் கருமஞ்செய்யவே யோக்கியனுயிருக்கின்றாயேயன்றிக் கரும த்தைத்தியாகஞ்செய்ய யோக்கியனல்லனுகின்றாய். எக்காரணத்தால் கருமங் களைச்சந்யாசஞ்செய்ய யோக்கியமாய பிராஹ்மணசரீரம் நினக்குப்பிராப்தமாக வில்லையோவென்பதாம். இவ்வகையாய ஸ்ரீ பகவானது திருக்கருத்தையறிந்த ஸ்ரீ பகவான் பாடியக்காரர் பிராஹ்மணர்கட்கே சந்யாசத்தின்கண்ணே அதிகார மாம். அந்நியக்ஷத்திரியாதியர்க்குச் சந்யாசத்தின்கண்ணே அதிகாரமின்றும், என நிர்ணயஞ்செய்துளார்.

"ஸவை ஜாயிகாய விஜ்ஞாநம் ஜெஜ்ஞ்யவெயதெ।
கூதொயிகாய நியஜொவ்யூதாநெ க்ரியதெஜவுஜாக்ஷ" ॥

(பொ-ள்.) சர்வஅதிகாரத்தையும் விச்சேதஞ்செய்யும் ஞானத்தை க்ஷத்திரியவைசியர்கட்குடன்படின் சந்யாசத்தின்கண்ணேமறையவர்க்கே அதிகாரமாம். க்ஷத்திரியவைசியர்கட்கின்றும் எனச் சந்யாசஅதிகாரநியமத்தைப் பலாத்காரமாய் யாதின்பொருட்டுடன்படல்வேண்டும்; மற்றேது, இந்நியமமும் உடன்படலாகா தென்பதே. என்பது முதலியவற்றுல் ஸ்ரீ வார்த்திகாசிரியர் க்ஷத்திரிய வைசியர் கட்குஞ் சந்யாச அதிகாரத்தைச் சித்தஞ்செய்துளார்; ஆனுலது பிரௌடிவாதத் தாற் சித்தஞ்செய்ததாம். எவ்வாற்றனும் பொருந்தாத பொருளையும், தனது பிரஞ் ஞையின் பலத்தால் சித்தஞ்செய்தல் பிரௌடிவாதமாம். அல்லது க்ஷத்திரியவைசி யர்கட்குச் சந்யாசத்தைப் பிரதிபாதிக்கும் வசனத்திற்குப் பரதஇருஷபாதியர்க்கே போல அலிங்க வித்வத்சந்யாசத்தின்கண்ணே கருத்தாம். எவ்வாற்றனும் தண் டாதிலிங்கவாயிலாய் விவிதிஷாசந்நியாசத்தின்கண்ணே பிராஹ்மணனெருவ னுக்கே அதிகாரமாம். க்ஷத்திரியாதியர்க்கோ இன்றும். (20)

(அ-கை.) ஹே பகவன்! ஒருகால் அர்ச்சுனனுகிய யான் அக்கருமங்களைச் செய்தபோதினும் மற்றையர் அக்கருமங்களை எவ்வண்ணமியற்றுவர் என அர்ச்

சுனன் சங்கிப்ப ஸ்ரீ பகவான், மற்றையர் மேலோரினஆசாரானுசாரமாயே முயல் வர்எனவிடையளித்தருளுகின்றார் :—

சு-ம். யத்யதாசரதி ஶ்ரேஷ்ஹஸ்தத்தெவெதரொஜநஃ।
ஸ யத்ப்ரமாணம் குருதெ லொகஸ்தத்நுவர்ததெ ॥ (21)

ப-ம். 2 யக் 3 யக் 4 சூஆசரதி 1 ஶ்ரேஷ்ஃ 5 தக் 6 தக் 7 வவ 8 உதரஃ 9 ஜநஃ 10 ஸஃ 11 யக் 12 ப்ரமாணம் 13 குருதெ 15 லொகஃ 14 தக் 16 சுநுவர்ததெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மேலோர் எவ்வெக்கருமத்தைச் செய்வரோ, அவ்வக்கருமத்தையே மற்றையர்களும் செய்வர். அன்றியும் அம்மேலோர் எதனைப் பிரமாணமெனக் கொள்ளுகின்றனரோ, அதனையே மற்றையரும் பிரமாணமெனக் கொள்ளுவர். (21)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! யாவருள்ளும் முக்கியராஇராநின்ற அரசர்முதலியமேன்மையர் எவ்வெச்சுபகருமங்களை அல்லது அசுபகருமங்களைச் செய்வரோ, அவ்வச்சுபகருமங்களையும், அசுபகருமங்களையும் அவ்வரசரின் ஆணைக்குட்பட்டு நடக்கும் மற்றையரும் செய்வர். அவ்வரசர்களினின்றுஞ் சுவதந்திராயிருக்கும் மற்றையரோ, சிறிதுமாத்திரையும் அக்காரியத்தைச் செய்யார்.

சங்கை :—ஹே பகவன்! அம்மற்றையர் சாஸ்திரத்தை நன்காராய்ந்து, சாஸ்திரத்திற்குவிருத்தமாய அரசர்முதலிய மேலோரது ஆசாரத்தைப் பரித்தியாகஞ் செய்து, கேவலஞ் சாஸ்திரவிகித ஆசாரத்தை ஏன் செய்யமாட்டார்?

சமாதானம் :—அம்மற்றையர்க்கு மேலோராசாரத்தைப்போலப் பிரமாணத்தன்மையின் நிச்சயமும், அம்மேலோரின் அனுசாரமாகவே யுண்டாமென, ஸ்ரீ பகவான்றிருவாய் மலர்ந்தருளுகின்றார் :—'ஸ யத்ப்ரமாணம் குருதெ' என. ஹே அர்ச்சுன! அவ்வரசர் முதலிய மேலோர் எவ்விலௌகிக பதார்த்தங்களை அல்லது எவ்வைதிக பதார்த்தங்களைப் பிரமாணரூபமாய் அங்கீகரிக்கின்றனரோ, அவ்விலௌகிக பதார்த்தங்களையும், வைதிகபதார்த்தங்களையுமே மற்றையரும் பிரமாணமாய் அங்கீகரிப்பர். அம்மற்றையர் அவ்வரசர்முதலிய மேலோரினின்றுஞ் சுவதந்திரமா யெப்பதார்த்தத்தையும் பிரமாண ரூபமாயங்கீகரியார்; ஆதலின் ஹே அர்ச்சுன! யாவருள்ளும் முக்கியனுய் அரசனுபிருக்கும் நீ உலகரைக்காப்பாற்றும் பொருட்டு அவசியமாய்க் கருமஞ்செய்ய யோக்கியனுகின்றாய். சுபகருமத்தின்கண்ணே நினது பிரவிருத்தியைக் கண்டு மற்றையரும் அவசியமாய் அந்தச் சுபகருமத்தின் கண்ணே பிரவிருத்திப்பர். எக்காரணத்தால் அரசர்முதலிய முக்கியபுருஷரின் அனுசாரமாகவே மற்றெல்லாருடைய வியவகாரமுமுண்டாமோ. (21)

(அ-கை.) ஹே அர்ச்சுன! மற்றையர்க்குச் சுபகருமத்தின்கண்ணே பிரவிருத்தியுண்டாகும்பொருட்டு அரசர்முதலியமேலோர் அவசியமாய்ச்சுபகருமத்திற் பிரவிருத்திக்கவேண்டுமென்பதன்கண்ணே, ஸ்ரீ கிருஷ்ணபகவானுகியயானே திருஷ்டாந்தமாவேன்னமூன்றுசுலோகங்களால் ஸ்ரீபகவான் திருவாய்மலர்ந்தருளுகின்றார் :—

சு-ம். நமெ வாயுராஹ்ருத்யுவ்யம் க்ரஷ்ண லொகெஷ்ண க்ஷிம்ப நஃ।
நாநவாவுஸவாவுவ்யம் வத்நுஹவ அ கஉணி ॥ (22)

ப-ம். 7 ந 2 ெ 1 வாயுர 8 ஸுஹ்ரி 6 கத்நுவ்யம் 3 க்ரஷ்ண 4 லொகெஷ்ண 5 க்ஷிம் ப ந 11 ந 9 நநவாவ்யம் 10 ஸவாவுவ்யம் 14 வத்நுர 15 வவ 13 அ 12 கஉணி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எனக்கு மூவுலகங்களிலுஞ் சிறிது மாத்திரையும் செய்யத்தக்கதின்றும். எக்காரணத்தால் எனக்கு முன்னர்க்கிடையாத பலஞ் சிறிது மாத்திரையுங் கிடைக்கத்தக்கதாயில்லையோ; ஆயினும், யான் கருமத்தின்கண்ணே பிரசித்தமாய் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றேன். (22)

(வி-ம்.) எங்ஙனம் வீட்டெஜமானனுக்கு அவ்வீட்டின்கண்ணேயிருக்கும் எல்லாப்பொருள்களும் கிடைத்திருப்பனவேயாமோ, அங்ஙனம் சர்வ பிரஹ்மாண்டத்திற்கும் சுவாமியாயிராநின்ற ஸ்ரீ கிருஷ்ணபகவானுகியயான் இந்தப்பிரஹ்மாண்டத்துள்ள சர்வ பதார்த்தங்களையும் அடைந்தேயிருக்கின்றேன்; எப்பதார்த்தமும் எனக்கப்பிராப்தமின்றும். உலகின்கண்ணே முற்கிடையாத வஸ்துக்கிடைக்கும்பொருட்டே முயலுவர்; முற்கிடைத்த வஸ்துக்கிடைக்கும்பொருட்டு எவரும் முயலார். ஆகையால், மூவுலகின்கண்ணும் எப்பதார்த்தத்தினடைவையுத்தேசித்தும் எனக்குச் சிறிதுமாத்திரையுஞ் செய்யத்தக்கதின்றுமாயினும், ஸ்ரீ கிருஷ்ண பகவானுகியயான் வேதவிகிதசுபகருமத்தின்கண்ணே பிரவிருத்தித்துக்கொண்டே இருக்கின்றேன். அந்தச்சுபகருமத்தை யாரெருகாலும் பரித்தியாகஞ்செய்வதில்லை. அந்தச்சுபகருமத்தின்கண்ணே எனது பிரவிருத்தி நினக்கும் பிரத்தியக்ஷமாய்த் தெரிந்ததேயாகும். இந்தப் பிரசித்தியையுணர்த்தும்பொருட்டே ஸ்ரீ பகவானுனவர் 'வதஸ்வனவ' என்னுந் திருமொழியின்கண்ணே இராநின்ற 'அ' என்னுஞ் சப்தத்தைத் திருவாய்மலர்ந்தருளினர். அன்றியும் 'ஹே வாயோ' என்னுஞ் சம்போதனத்தால் ஸ்ரீ பகவானுனவர் இப்பொருளைக் குறிப்பித்தருளினர்:—சுத்தக்ஷத்திரியவம்சத்தின்கண்ணே யுதித்திருத்தலின் அர்ச்சுனனுகிய நீ எனக்குச் சமானமாகவே சூரவீரனுவாய், ஆதலின் என்னைப்போல நீயுஞ் சுபகருமத்தின்கண்ணே பிரவிருத்திப்பதேதகுதியாம். (22)

(அ-கை.) ஹே பகவன்! தாங்கள் சுபகருமத்தின்கண்ணே பிரவிருத்தியுற்றருளி மற்றையரையும் அந்தச் சுபகருமத்தின்கண்ணே பிரவிருத்திப்பிக்கச் செய்தருளுவதாகிய லோகசங்கிரகத்தைச் செய்தருளுவதால் யாதொருபயனுமின்றும். ஆதலின், அவ்வுலகசங்கிரகமும் தேவரீருக்குச் செய்யத்தக்கதன்றும் என அர்ச்சுனன் சங்கிப்ப, ஸ்ரீ பகவான் விடைகூறியருளுகின்றார்:—

சு-ம். யதிஹ்யஹம் ந வர்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரிதஃ।
மம வர்த்மானுவர்தந்தே மநுஷ்யாஃ பார்த ஸர்வஶஃ॥ (23)

ப-ம். 2 யதி, ஹி 4 அஹம் 7 ந 8 வர்தேயம் 3 ஜாது 6 கர்மணி 5 அதந்த்ரிதஃ 10 மம
11 வர்த்ம 13 அநுவர்தந்தே 9 மநுஷ்யாஃ 1 பார்த 12 ஸர்வஶஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஒருகால் ஸ்ரீ கிருஷ்ணபகவானுகிய யான் ஆலசிய மற்றுச் சுபகருமத்தின்கண்ணே பிரவிருத்திக்காமலிருப்பனுயின், கருமத்திற்கதிகாரியாய மனுஷர் எனது மார்க்கத்தையே எல்லாவாற்றானும் அங்கீகரிப்பர். (23)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! யான் இப்போது கிருதார்த்தனுயிருக்கின்றேன், கருமத்தைச் செய்வதால் இப்போது எனக்குச் சிறிதுமாத்திரை அர்த்தமுமில்லாதஞ்செய்யத் தகுதியதாயிருக்கவில்லை. இவ்வகையாய கிருதகிருத்திய புத்தியால் ஒருகால் ஸ்ரீ கிருஷ்ணபகவானுகிய யான் ஆலசியமற்றுச் சுபகருமத்தின்கண்ணே பிரவிருத்திக்காமலிருந்துவிடுவேனுயின், கருமத்திற்கதிகாரிகளாயுள்ள மனுஷர் யாவரும் யான் சுபகருமத்தினின்றும் நழுவியிருப்பதைக்கண்டு, தாமுஞ் சுபகருமமற்றவராவர்; ஏனெனின், இந்த ஸ்ரீ கிருஷ்ணபகவான்சர்வஞ்ஞன் என, என்னிடத்தே சர்வஞ்ஞத்தன்மைப் புத்தியால் இவ்வெல்லாஅதிகாரிமனுஷ்யர்களும் எல்லாவகையானும் எனதுமார்க்கத்தையே அங்கீகரிப்பர். (23)

(அ-கை.) ஹே பகவன்! எல்லாப் புருஷருள்ளும் மேன்மைமிக்கவராய தங்களுடையசுபகருமத்தியாகரூபமார்க்கத்தையங்கீகரித்தல் இவ்வதிகாரிகளாய மனுஷ்யர்கட்கு உசிதமேயாம்; அதனல் இவ்வதிகாரிகட்கு ப்ரது கோதாமென அர்ச்சுனன் சங்கிப்ப, ஸ்ரீ பகவான் விடையருளிச்செய்கின்றார்:—

சு-ம். உத்ஸீதெயுரிமே லொகா ந குர்யாம் கர்ம சேத் அஹம்।
ஸங்கரஸ்ய ச கர்த்தா ஸ்யாமுபஹந்யாமிமாஃ ப்ரஜாஃ॥ (24)

ப-ம். 8 உத்ஸீதெயுஃ 6 இமே 7 லொகாஃ 4 ந 5 குர்யாம் 3 கர்ம 1 சேத் 2 அஹம்
10 ஸங்கரஸ்ய 9 ச 11 கர்த்தா 1 ஸ்யாம் 15 உபஹந்யாம் 13 இமாஃ 14 ப்ரஜாஃ

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஒருகால்ஈச்வரனுகியயான் சுபகருமத்தைச் செய்யேனுயின், இவ்வெல்லாவுலகரும் நாசத்தையடைவர். அங்ஙனம் யானே வருணசங்கரத்திற்குக் கருத்தாவாவேன். அங்ஙனம் இவ்வெல்லாப் பிரஜைகளையும் யானே கொன்றவனுவேன். (24)

(வி-ம்) ஹே அர்ச்சுன! சர்வத்திற்கும் ஈச்வரனுகிய ஸ்ரீகிருஷ்ணபகவானுயையான் ஒருகால் சாஸ்திரவிஹித சுபகருமங்களைச் செய்யாதிருப்பனுயின், எனதனுசாரமாய்நிகழாநிற்கும் மனுமுதலிய மேலோரும், அச்சுபகருமத்தின்கண்ணே பிரவிருத்தராகார். ஆகையால், நீரின் விருஷ்டிவாயிலாய்ச் சர்வலோகங்களின் ஸ்திதியின்காரணரூபயஜ்ஞாதிகருமங்கள்யாவற்றிற்கும் உலோபமுண்டாகும்; அவையாவும் உலோபமாகவே எல்லாவுலகரும் நாசத்தை யடைவர்; நாசத்தின்பின்னர் உண்டாம் வருணசங்கரத்தையும் யானே செய்பவனுவேன். அதனல் யானே இவ்வெல்லாப் பிரஜைகளையுங் கொல்பவனுவேன். இவ்விஷயம் எனக்கத்தியந்தம் அனுசிதமாம்; ஏனெனின், சர்வப்பிரஜைகட்கும் அனுக்கிரகஞ் செய்யும்பொருட்டுப் பிரவிருத்தியுடையவனுயிருக்கின்றேன். அத்தகைய எனக்குத் தருமலோபத்தால் எல்லாப் பிரஜைகளையுங்கொல்லுதல்உசிதமன்றும். அல்லது, 'யதா ஸர்வாணி பூதானி' என்பதாதிநான்குசுலோகங்களுக்கு இவ்வேறு பொருள்கொள்க. ஹே அர்ச்சுன! கேவலம் லோகசங்கிரகத்தைநோக்கிமாத்திரம் நீ கருமஞ் செய்வதற்கு யோக்கியனல்லை; மற்றும், மேலோராசரணத்தினுலும் நீ கருமஞ் செய்ய யோக்கியனுவாயென்னும் பொருளை ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்:—'யதா ஸர்வாணி பூதானி' என. ஆகையால்சர்வப்பிராணிகட்கும்மேலாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானுகிய யான் எவ்வகையாய ஆசாரத்தைக் கொண்டுளனே, அவ்வகையாய ஆசாரத்தை எனதனுசாரமாய்நிகழாநிற்கும்அர்ச்சுனனுகியநீயுஞ்செய்ய யோக்கியனுவாய். என்னினும் சுவதந்திரனுய்ச் சிறிதுமாத்திரையும் வேறுசாரத்தை நீ செய்ய யோக்கியனுகாய். ஹே பகவன்! தங்களுடைய ஆசாரம் எத்தகையதாம். எவ்வாசாரத்தை யான் அவசியமாய் யங்கீகரித்தல் தகுதியாமோ என அர்ச்சுனன் சங்கிப்ப, அதற்குச்சமாதானமாய்ஸ்ரீ பகவான் "ந மே பார்த்தாஸ்தி கர்தவ்யம்" என்பதாதிமூன்றுசுலோகங்களால் அருளிச்செய்தனர். (24)

(அ-கை.) ஹேபகவன்! தாங்கள்ஈச்வரராதலின், உலகசங்கிரகத்தின் பொருட்டுச் சுபகருமங்களைச் செய்தருளியபோதினும், யான் எப்போதும் அகர்த்தாவாவேன்எனக் கருத்திருத்துவஅபிமானமின்மையின் தங்களுக்குச் சிறிதுமாத்திரையும் ஹானியுண்டாகமாட்டாது. அர்ச்சுனனுகிய யானே ஜீவனுதலின், லோகசங்கிரகத்தின்பொருட்டு அச்சுபகருமங்களைச்செய்வதால் யான்கருமங்களின் கருத்தாவாவேன் என்னுங்கருத்திருத்துவ அபிமானத்தால் எனது ஞானத்தின் மறைப்பு அவசியமுண்டாம்என அர்ச்சுனன்சங்கிப்ப, ஸ்ரீ பகவான் விடையருளிச் செய்கின்றார்:—

சு-ம். ஸுகூரி கஉழுணயுவிஆம்ஹொ யயா கூவழுஜி ஹாரத ।
கூயழுஆ ஆம்ஹயாஸுகு ஶ்ரிகீஷழுூலொழுாகஸம்ரஜம் ॥ (25)

ப-ம். 5 ஸுகூரி 4 கஉழுணி 3 சுவிஆம்ஹி 2 யயா 6 கூவழுஜி 1 ஹாரத 12 கூ
யழுாகு 10 விஆரு 7 தயா 11 சுஸுகூரி 9 ஶ்ரிகீஷழுூரி 8 லொகஸம்ரஜம்.

(அ-ம்.) ஹே பாரத! எங்ஙனம் அஞ்ஞானியானவன் கருமத்தின்கண்ணே அபினிவேசமுடையவனுய்க்கருமத்தைச்செய்வனே, அங்ஙனம்லோகசங்கிரத்தைச் செய்யவிச்சித்த அறிஞனவன் அபினிவேசமற்றவனுய்க் கருமத்தைச்செய்வன்.

(வி-ம்.) ஹே பாரத! ஆன்மஞானமற்ற அஞ்ஞானியானவன் யான்கரும கருத்தாவாவேன்னனக்கருத்திருத்துவஅபிமானத்தோடும், சுவர்க்காதிபலஇச்சை யோடும், யஞ்ஞாதிகருமங்களிடத்தே அபினிவேசமுடையவனுய் எங்ஙனஞ் சிரத் தைபக்தியோடு அந்தயஞ்ஞாதிகருமங்களைச்செய்வனே, அங்ஙனம் லோகசங் கிரகஞ் செய்யவிச்சித்த அறிஞனுஞ்சிரத்தைபக்திவாயிலாய் அந்தயஞ்ஞாதி கருமங் களைச்செய்வன். ஆனல் அவ்வறிஞன் கருத்திருத்துவ அபிமானமற்றவனுய், சுவர்க் காதி பலேச்சையற்றவனுய் அச்சுபகருமங்களைச் செய்வன். ஈண்டு 'ஹெ ஹாரத' என்னுஞ் சம்போதனத்தான் ஸ்ரீ பகவான் அருச்சுனனுக்கு இப்பொருளைக்குறிப் பித்தருளினர் :—பாரதவம்சத்தின்கண்ணேயாவன்உதித்தவனே, அவன் பாரத னெனப்படுவன். அல்லதுபாவென்பதுஞானத்திற்காம், அந்தஞானத்தின்கண்ணே பிரீதியையுடையவன்யாவனே, அவன் பாரதனெனப்படுவன். அத்தகைய பாரத னெனப்பெயர்பெற்றவன்நீயாதலின், அஞ்ஞானியைப்போலஅறிஞனும் லோகசங் கிரகத்தின்பொருட்டுச் சுபகருமங்களைச்செய்கவென்னுஞ் சாஸ்திரப்பொருளைத் தாரணஞ்செய்தற்கு, நீ தகுதியுடையவனுகின்றுய். அப்பொருளைத்தாரணஞ்செய் வதானே உன்னிடத்தே அப்பாரதனெனும் பெயர் பொருளுடையதாகும். (25)

(அ-கை.) ஹே பகவன்! அறிஞனவன் சுபகருமத்தையநுஷ்டானஞ் செய்தே லோகசங்கிரகஞ்செய்க, தத்துவஞான உபதேசத்தால் அந்தலோகசங் கிரகத்தைச் செய்யாதொழிக, என்பதன்கண்ணே யாது ஹேதுவாம்? என அர்ச் சுனன் சங்கிப்ப, ஸ்ரீ பகவான் விடையருளிச்செய்கின்றுர் :—

சு-ம். ந பூஜிஹெஉம் ஜநயெ உஜ்ஞாநாம் கஉழுஸம்மிநாம் ।
ஜொஷயெத்ஸவழுகஉழுாணி விஆயுூக்தஃ ஸமாசரந் ॥ (26)

ப-ம். 4 ந 3 பூஜிஹெஉம் 5 ஜநயெ 2 சுஜ்ஞாநாம் 1 கஉழுஸம்மிநாம் 10 ஜொஷ
யெ 8 ஸவழுகஉழுாணி 6 விஆரு 7 யுூக்தஃ 9 ஸமாசரந்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வறிஞனவன் கருமசங்கிகளாயஅவிவேகி புருஷரின் புத்திபேதத்தைச் செய்யாதொழிக மற்றே, அவ்வறிஞன் ஆகரபூர் வகமாய்ச் சர்வகருமங்களையுஞ் செய்பவனுய் அவ்வவிவேகி புருஷரையும் அக்கரு மத்தின்கண்ணே சேர்ப்பன். (26)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! கருத்திருத்துவ அபிமானத்தால் சுவர்க்காதிபல இச்சையினல் யஞ்ஞாதிகருமங்களிடத்தே அபினிவேசத்தையுடைய அஞ்ஞானி புருஷரின், யான்இக்கருமத்தைச்செய்வேன், யான்இப்பலத்தைப்போகிப்பேன், என்பதாய புத்திபேதத்தை இவ்வறிஞன் உண்டாக்காதொழிக. அதாவது, ஆன்ம வடிவமாகிய நீ அகர்த்தாவாவாய், அபோக்தாவாவாய் எனவுபதேசித்து அவ்வஞ் ஞானிகளின் புத்தியை அந்தச்சுபகருமத்தினின்றுந் திருப்பமுயலவேண்டாம்; மற்றே, லோகசங்கிரகத்தைச்செய்ய இச்சையையுடைய அவ்வறிஞன் தான் சிரத்

தைபக்திவாயிலாய் அச்சுபகருமங்களைச் செய்பவனுய் அவ்வஞ்ஞானிகளையும், அச் சுபகருமத்தின்கண்ணே சிரத்தையடையும்படி செய்வித்து, அவரை நிரந்தரம் அதன்கண்ணே சேர்ப்பிப்பன்; எனெனின், சாஸ்திரவிகித சுபகருமானுஷ்டானத் தால் எப்புருஷனுடைய அந்தக்காணம் சுத்தமாமோ, அப்புருஷனே அகர்த்தா வாய ஆன்மாவின் உபதேச அதிகாரியாவன். அசுத்த அந்தக்காணமுடைய புரு ஷர் அகர்த்தாவாய ஆன்மாவினுபதேச அதிகாரியாகார். அத்தகைய அனதி காரிகட்கு அகர்த்தாவாய ஆன்மாவினுபதேசத்தைச்செய்து, அவர்களுடையபுத்தி யைச் சுபகருமத்தினின்றுந் திருப்பிவிடின், அவர்கட்குச் சுபகருமத்தின்கண்ணே சிரத்தை நீங்கிவிடும். ஆகையால் அவ்வஞ்ஞானிகட்குச் சுவர்க்காதியுத்தம லோகப் பிராப்தியுமுண்டாகாது. அசுத்த அந்தக்காணத்தின்கண் ஆன்மஞானமும் உண் டாகமாட்டாது. ஆதலின், அவ்வஞ்ஞானிகள் போகம், மோகூகம் என்னுமிரண்டி னின்றும் பிரஷ்டராவர். இவ்வார்த்தை அந்நிய சாஸ்திரத்தின்கண்ணுங் கூறப் பெற்றுளது :—

ஆ-சு. ஸஜ்ஞஹ்யாஜுவ்ரபாஜஹ்ய லவஷ்ம் ப்ரஹ்மதியொவதெத் ।
உஹாநிரய ஜாமுஷ்ய லதெநவிநியொஜிதஃ ॥

(பொ-ள்.) அந்தக்காண சுத்தியற்றவனும், விஷயங்களிலாசக்தியுடையவ னும், ஆகிய கேவலகருமாதிகாரியும், பாதிதெளிந்தவனுமான அஞ்ஞானியினுக்கு எவ்வறிஞனவன் நீயுநானுமிப்புவியாவும் பிரஹ்மரூபமேயாம் என உபதேசிக் கின்றனனே, அவ்வறிஞனவன் அவ்வஞ்ஞானியை மகாரௌரவ நரகாதிகளி டத்தியடைவித்தவனேயாவன்; என்பதாம். ஆதலின் இவ்வறிஞனவன் தான் சுபகருமத்தின்கண்ணேபிரவிருத்தியுடையவனுய் அவ்வஞ்ஞானியையுஞ்சுபகருமத் தின்கண்ணே பிரவிருத்திப்பன். அச்சுபகருமங்களைச்செய்வதால் அவ்வஞ்ஞானி களின் அந்தக்காணசுத்தியுண்டாகுமாயின், இவ்வறிஞனவன் அவ்வஞ்ஞானிக்கு அகர்த்தாவாய்அபோக்தாவாயிருக்கும்ஆன்மாவினுபதேசத்தைச்செய்யவேண்டும்.

(அ-கை.) ஆண்டஞ்ஞானியும், ஞானியும் சுபகருமானுஷ்டான சமானத் தன்மையுடையவராயினும், கருத்திருத்துவ அபிமானம் அஃதின்மையென்னும் இரண்டேதுக்களால் அஞ்ஞானி, ஞானியென்பவரின் விலக்ஷணத்தன்மையைக் காண்பித்தருளுபவராய் ஸ்ரீ பகவான் 'லஸ்காஃகலுணஸம்மூடாஃலொ' என முற் புகன்றருளிய சுலோகத்தின்பொருளை இரண்டு சுலோகங்களால் வெளிப்படுத்தி யருளுகின்றார்:—

சு-ம். வ்ருக்ஷதெஃ க்ரியலாணாநி மாணெஃ கலுணி லவதிஃ ।
அஹம்காலவிமூடாத்மா கர்தாலமிதி மன்யதெ ॥ (27)

ப-ம். 1 வ்ருக்ஷதெஃ 5 க்ரியலாணாநி 2 மாணெஃ 4 கலுணி 3 லவதிஃ 6 அஹம்காலவிமூடாத்மா 8 கர்தாலம் 7 அஹம் 9 இதி 10 மன்யதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மாயையின்குணங்கள் எல்லாவகையாலும் எல் லாக்கருமங்களையுஞ் செய்கின்றன. அகங்காரத்தால் விசேஷ மூடத்தன்மையை யடைந்த அந்தக்காணத்தையுடைய அஞ்ஞானியானவன் யான் கருமகருத்தாவா வேன் என வெண்ணுகின்றனன். (27)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எம்மாயையானது சத்துவம், இரஜசு, தமசு என் னும் முக்குணரூபமாமோ, பொய்ஞ்ஞானவடிவமாமோ, "தெவாத்மசக்திம் லுமா மெனிகூடம்" என்னுஞ் சுவேதாசுவதர உபநிஷத்தின்கண் எம்மாயை பரமேஸ்வர சக்தியெனக்கூறப்பெற்றுளதோ, அம்மாயை பிரகிருதியெனப்படும்.

ஆ-சு. "ஸாயாஞ் வ்ருக்ருதிம் வித்யாந்நாயிநஞ் மஹேஶ்வரம்."

(போ-ள்.) மாயையை ஜகத்தின்பிரகிருதி யெனவுணர்க; மாயையாகிய உபாதியையுடையவனே மஹேஶ்வரனெனவுணர்க என்பதாம். அத்தகையமாயையாகிய பிரகிருதியின் விகாரரூபங்களாய எத்துணை உடற்பொறியுட்கரணமுதலியனவாகிய காரிய காரணரூப குணங்களுளவோ, அவையேய எல்லாவகையானும் இலௌகிக வைதிக சர்வகருமங்களையுஞ் செய்கின்றன, இவ்வசங்க ஆன்மா அவற்றையாற்றுவதில்லை; ஆயினும் காரியகாரணரூபசங்காதத்தின்கண்ணே, ஆன்மத்தன்மைப் புத்திவடிவஅகங்காரத்தால் விமூடமாகிய, அதாவது துவிவேகஞ் செய்வதன்கண்ணே யாற்றலற்றதாகிய, ஆன்மா, அந்தக்கரணம், யாவனுக்கோ அவன் அகங்காரவிமூடாத்மாவாவன். அத்தகைய அனன்மபதார்த்தங்களிடத்தே ஆன்மத்தன்மையபிமானத்தைச்செய்யும் அஞ்ஞானியானவன், அவ்வாகாதிகளின் அத்தியாசத்தான் அவ்வெல்லாக்கருமங்களையும் யானேசெய்கின்றேன் எனத்தனதான்மாவைவே கருத்தாவெனவெண்ணுவன். அந்தப்பிரகிருதியின்குணங்களைக்கருமகருத்தாவெனவெண்ணுகின்றனில்லை. (27)

(அ-கை.) இப்போது எங்ஙனம் அஞ்ஞானியானவன் அக்கருமத்தின் கருத்தாவாய்த்தன்னன்மாவினையே அங்கீகரித்துளானே, அங்ஙனம் அறிஞனாகியஞானியும் அக்கருமத்தின் கருத்தாத் தனதான்மாவென வங்கீகரித்திலன்; என ஸ்ரீ பகவானருளிச்செய்கின்றார்:—

சு-ம். தத்வவித்து ஹ்ருவாவாஹோ முக்தகுஷ்விஹாமயோஃ।
முக்தா முக்தேஷு வர்த்ததே இதி மத்வா நஜ்ஜதே॥ (28)

ப-ம். 3 தத்வவிஃ 4 து 1 ஹ்ருவாவாஹோ 2 முக்தகுஷ்விஹாமயோஃ 5 முக்தாஃ 6 முக்தேஷு 7 வர்த்ததே 8 இதி 9 மத்வா 10 ந 11 ஸஜ்ஜதே.

(அ-ம்.) ஹே மகாபாகுவையுடைய அர்ச்சுன! குணகருமவிபாகத்தின் உண்மையாய சொரூபத்தையுணர்ந்த அறிஞனே, இந்திரியமுதலிய கரணங்களே உருவமுதலிய விஷயங்களிடத்தேதபிரவிருத்திக்கும்; அசங்க ஆன்மாவன்றும் என எண்ணிக்கருத்திருத்துவாபிமானஞ்செய்யான். (28)

(வி-ம்.) தத்துவமென்பது யதார்த்தஸ்வரூபத்திற்காம், அதனை யாவனறிவனே, அவன்தத்வவித்தாம். ஈண்டு 'தத்வவித்து' என்னும் வசனத்தின்கண்ணே இராநின்ற 'து' என்னுஞ் சப்தமானது முற்சுலோகத்தின்கண்ணே மொழிந்தருளிய அஞ்ஞானியினும் தத்துவவேத்தாவினிடத்தே விலக்ஷணத்தன்மையைக்கூறுகின்றது.

சங்கை:—ஹே பகவன்! அவ்வறிஞனவன் எவ்வஸ்துவைத்தத்துவமென வறிவன்?

சமாதானம்:—ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்:—'முக்தகுஷ்விஹாமயோஃ' என. யாவனன்னுமபிமானத்திற்கு விஷயங்களாய தேதேகந்திரிய அந்தக்கரணங்கள் குணங்களாம். எனதென்னுமபிமானத்திற்குவிஷயங்களாய தேதேகந்திரிய அந்தக்கரணங்களின் விபாபாரங்கள், கருமங்களாம். எவ்வஸ்துவானது சர்வஜடவிகாரங்களின் பிரகாசகமாதலின் அவற்றினின்றும்தனித்ததாமோ அதுவிபாகமெனப்படும். அத்தகையதுஸ்வப்பிரகாசஞானவடிவ அசங்க ஆன்மாவாம். ஆண்டு அக்குணகருமங்களோ பாஸ்யங்களும் ஜடங்களும்விகாரிகளுமாம். இவ்விபாகவடிவ ஆன்மதேவரோ பாஸகரும் சேதனரும் நிர்விகாரருமாவர். இவ்வண்ணங் குணகருமம், விபாகம் என்னுமிரண்டின் உண்மையாயவடிவத்தையுணர்ந்த அறிஞ

னவனே, இவ்விந்திரியாதிகரணங்களெவிகாரியாதலின் தத்தம்ரூபாதிவிஷயங் களிடத்தே பிரவிருத்திக்கும். நிர்விகார ஆன்மா அவ்வுருவாதிவிஷயங்களிடத்தே பிரவிருத்தியாது என நிச்சயஞ்செய்து, அஞ்ஞானியைப்போலத் தனதான்மாவின் கண்ணே கருத்திருத்துவாபிமானஞ்செய்யான். ஓருரையின்கண்ணே, 'தகூவிதூ ஊஹாவாஹொ' என்னுஞ் சுலோகத்திற்கு இவ்வகையாயபொருள்செய்யப்பட்டு ளது :—சகூஷூமுதலிய ஐந்து ஞானேந்திரியங்களும், வாக்குமுதலிய ஐந்து கரு மேந்திரியங்களும், புத்தியும், மனமும் என்னுமிவற்றிற்குக் குணமெனப்பெயராம். இவற்றின்வியாபாரத்திற்குக்கருமமெனப்பெயராம். விபாகமென்னும் பதத்திற்குக் குணபதத்தோடுங் கருமபதத்தோடுஞ் சம்பந்தஞ்செய்வதால் இப்பொருளுண் டாம் :—சகூஷூ சுரோத்ராதி இந்திரியங்கட்கே தரிசன சிரவணாதிக்கிரியைகளாம். வாக்குப்பாணிமுதலிய இந்திரியங்கட்கே வசன ஆதானாதிக்கிரியைகளாம். புத்தி யினுக்கே அகங்காரரூபக்கிரியையாம், மனத்தினுக்கே சங்கற்பரூபக்கிரியையாம். ஆன்மாவிற்கு யாதொருகிரியையுமின்றும். மற்றே, இவ்வான்மதேவர் எப்போ தும் கூடஸ்தஅசங்கசித்துருவமாய் நிலைபெற்றுநிற்பர்; இவ்வண்ணமாய குண விபாகத்தையும், கருமவிபாகத்தையும், ஆன்மாவின்யதார்த்தஸ்வரூபத்தையும் யாவன்நன்றுகவறிந்துளானே அவன்தத்துவவித்தாம். அத்தகைய தத்துவ வேத்தாவாயஅறிஞனே, சர்வகருமங்களிடத்தும் இச்சகூஷூமுதலிய இந்திரி யங்களே உருவமுதலியவிஷயங்களிடத்தே பிரவிருத்திக்கும். வாக்குமுதலிய இந்திரியங்களே வசனாதிகளிடத்தே பிரவிருத்திக்கும், புத்தியே அச்சகூஷூ முதலியஇந்திரியங்களின் கருமங்களிடத்தே யான்கருத்தாவென வபிமானிக்கும், ஆன்மாவாகியயானே சிரவணஞ்செய்வதுமில்லை, காண்பதுமில்லை, பேசுவதுமில்லை, செய்வதுமில்லை, நடப்பதுமில்லை, மற்றே கூடஸ்த அசங்கசேதன ரூபத்தால் எப் போதுஞ் சுகமாகவேயிருப்பேன் எனநிச்சயஞ்செய்து அவ்விந்திரியாதிகளின் கருமங்களிடத்தே யான்எனதுஎன அபிமானஞ் செய்யான் என்பதாம். மற்றே ருரையின்கண்ணே 'தகூவிதூ' என்னும் இச்சுலோகத்தின் பதங்கட்கு இவ் வண்ணம் யோஜனைசெய்து இவ்வகையாய பொருள்கூறப்பட்டுளது :—'யஹூகூ விகூ ஹமணாகூ மணைஷூவதுஷ்ஷெ உதிஉகூமணவிஹாமெ கஉஷ்விஹாமெ அகஹஜ்ஜதெ' என்பது யோஜனையாம். பொருளோ :—ஆன்மா அனான்மா என்னு மிரண்டின் உண்மைவடிவத்தையறிந்த அறிஞனவன் புத்தி சகூஷூ முதலிய குணமே சுகரூபாதிவிஷயங்களிடத்தே பிரவிருத்திக்கும், ஆன்மாவோ எவ்விஷயத் தின்கண்ணும் பிரவிருத்திக்கமாட்டாது என நிச்சயஞ்செய்து குணவிபாகத்தின் கண்ணுங் கருமவிபாகத்தின்கண்ணும், யான் எனதுஎன்னும் அபிமானத்தைச் செய்வதின்றும். ஈண்டு சத்துவம், இரஜசு, தமசுஎன்னும்மூன்றுகுணங்களின் புத்தி அகங்காரஞானேந்திரிய கருமேந்திரிய விஷயரூபத்தால் வேறுவேறுய நிலை பேறேகுணவிபாகமாம். அக்குணவிபாகத்தின்கண்ணே, யான்புத்தி அகங்காராதி ரூபனல்லேன், என்னும் அகமபிமானத்தை அத்தத்துவ வித்தானவன் செய்யான். அந்தப்புத்தியகங்காராதிகளின் வேறுவேறுயகருமமே கருமவிபாகமாம். அக்கரு மவிபாகத்திகண்ணே இக்கருமமென்னுடையது என்னும் மமஅபிமானத்தை அத் தத்துவவேத்தாவானவன் செய்யான். ஈண்டு 'ஹெ ஊஹாவாஹொ' என்னுஞ்சம் போதனத்தால் ஸ்ரீபகவானுனவர் இப்பொருளைக்குறிப்பித்தருளினர் :—முழந்தாள் பரியந்தம்யாவனுக்கு நீண்டகாமுளதோ அவன் மகாபாகுவாவன். சாமுத்திரிக சாஸ்திரத்தின்கண்ணே மகாபாகுத்தன்மை மேலாயபுருஷ விலக்கணமெனக் கூறப்பெற்றுளது? ஆகையால் அத்தகையசிரேஷ்ட புருஷரின் இலக்கணமுடையவ னுகியும் நீ மற்றவரைப்போல அவிவேகியாதற்கு யோக்கியனன்றுவாயென்பதாம்.

(அ-கை.) ஆண்டுப்பூர்வப்பிரசங்கத்தின்கண்ணே அறிஞனிடத்தும் அறியா னிடத்தும் கருமானுஷ்டான சமானத்தன்மையைக் கூறியருளி, அவ்வறிஞனை

வன் அறியானதுபுத்தியைப்பேதிக்கக்கூடாது என்னும்பொருளைக் கூறியருளினர். இப்போது அப்பொருளையுபசம்ஹரித்தருளுகின்றார் :—

சு-ம். வ்ருகூ₃தெமு॒ணஹ₂ம்ஹ₂மபி₂ஃ ஹஜ்ஜெ மு॒ணகு₂ஷு॒ஹ॒ ।
தாநகூ₃கூ₃ஹ்வி₂ஹ்வொ ஸ₂ம்ஹாந கூ₃கூ₃ஹ்வி₂ந்ந விஜாமுயெகூ₃ ॥ (29)

ப-ம். 1 வ்ருகூ₃தெஃ 2 மு॒ணஹ₂ம்ஹ₂மபி₂ஃ 4 ஹஜ்ஜெ 3 மு॒ணகு₂ஷு॒ஹ॒ 5 தாந
6 கூகூ₃கூ₃ஹ்வி₂ஃ 7 ஸ₂ம்ஹாந 8 கூ₃கூ₃ஹ்வி₂கூ₃ 9 ந 10 விஜாமுயெகூ₃.

(அ-ம்.) ஹே அர்ச்சுன ! பிரகிருதியின் குணங்களாற் சம்மூடனைய எவ்வஞ் ஞானியானவன் அக்குணங்களின் கருமங்களிடத்தே ஆசக்திசெய்வதை அவ்வ ஞன்ம வேத்தாவாய அதிகாரிக்குச் சுபகருமத்திருக்கும் சிரத்தையை ஆன்மவே த்தாவானவன் நீக்கான் (29)

(வி-ம்.) ஹே அர்ச்சுன ! முன்மொழிந்த மாயைவடிவப் பிரகிருதியின் காரியமாதலின் தருமரூபமாய தேதேகேந்திரிய அந்தக்கரணாதி விகாரங்களாகிய குணங்களால், சம்மூடனை அதாவது, ஸ்வரூப விளக்கமின்மையால்அத்தேதகாதி களையே ஆன்மரூபமாயபிமானித்தவனை அஞ்ஞானியானவன் அத்தேதேகேந்திரிய அந்தக்கரணாதிகளின் வியாபாரங்களிடத்தே யான் சுவர்க்காதிபலத்தை யடையும் பொருட்டுக் கருமஞ்செய்வேன் என அந்தியந்தந்திடமாய தனதாந்தன்மைப்புத்தி யைச்செய்வன். அவன் அக்கருமங்களின்அதிகாரியும், அனன்மபதார்த்தங்களி னபிமானமுடையவனும், அசுத்தசித்தமுடையவனுமாதலின் ஞானாதிகாரத்தை யடைந்திலன். அத்தகைய அஞ்ஞானியை, இப்பரிபூரண ஆன்மாவையுணர்ந்த அறி ஞனைவன், பலத்தை இச்சித்துக்கருமஞ் செய்யற்கவென்றேனும், அல்லது இக் கருமபலம் அசத்தாமென்றேனும், அல்லது கருமங்களின் கருத்தாமுதலியன பொய்யேயாம், அல்லது, நீ பிரஹ்மரூபம் நினக்குச் சிறிதுமாத்திரையுஞ்செய்யத் தக்கதின்றும், என்பனவாதி உபதேசங்களால் சுபகருமங்களில் வைத்திருக்குஞ் சிரத்தையிலிருந்து திருப்பலாகாது ; மற்றே, மாறுய் அந்தச் சுபகருமங்களின்துதி களால் அவ்வறிஞன் அவ்வஞ்ஞர்களை அச்சுபகருமத்தின்கண்ணே பிரவிருத்திப் பிக்கவேண்டும். எப்புருஷன் சுத்தஅந்தக்கரணமுடையவனுதலின் அதிகாரி யாவனே, அப்புருஷனே உபதேசமின்றியே விவேகத்தினுதயத்தால் தானே திருப்புகையின்றி ஞானாதிகாரத்தையடைவன். ஈண்டு எவ்வஸ்துவின் ஞானமுண் டாகியும், அதனினும் அந்நியவஸ்துவின் ஞானமுண்டாகமாட்டாதோ, எவ்வஸ் துவின் ஞானமுண்டாகாவிடினும், அதனினும் அந்நிய வஸ்துவின் ஞான முண் டாகிவிடுமோ, அது அகிருத்ஸ்நமெனப்படும். ஒரு கடத்தின் ஞானமுண்டாயி னும், அக்கடத்தினும் வேறுய படாதிகளின் ஞானமுண்டாகமாட்டாது. அக்கடத் தின் ஞானமுண்டாகாவிடினும், அக்கடத்தினும் வேறுய படாதிபதார்த்தங்களின் ஞானமுண்டாகிவிடும் என்பதுபோலவாம். ஆகையால், அக்கடாதி சர்வ அனன் மபதார்த்தங்களும் அகிருத்ஸ்நம் என்னும் நாமத்தால் கூறப்பெறும். எவ்வேக வஸ்துவின் ஞானத்தால் சர்வ வஸ்துவின் ஞானமுண்டாகிவிடுமோ, எவ்வேக வஸ்துவின் ஞானமுண்டாகாவிடின், சர்வ வஸ்துவின் ஞானமுண்டாகமாட்டாதோ அவ்வஸ்து கிருத்ஸ்நம் எனப்படும். ஏக அத்விதீய ஆன்மஞானமுண்டாயின், சர்வ அனன்மபதார்த்தங்களின் ஞானமுண்டாகிவிடும். அவ்வத்விதீய ஆன்மாவின் ஞானமுண்டாகாவிடின், அவ்வெல்லா அனன்ம பதார்த்தங்களின் ஞானமுண்டாக மாட்டாது என்பதுபோலவாம். ஆகையால் அவ்வத்விதீய ஆன்மாக்கிருத்ஸ்ந மெனக் கூறப்பெறும்.

ஆ-சு. “கூ₃தெநாவா சுஸ்ரூஷு॒ரநந ஸ்ரவணைரபி ।
ஸர்வோபி நைவ நைஷ்₂ கர்ம்மவித்₃யாத்₃விதி₃தஃ” ॥

(போ-ள்.) ஹே மைத்திரேயி! அதிஷ்டானரூபஆன்மாவின் தரிசனத்தாலும், சிரவணத்தாலும், மனனத்தாலும், விஞ்ஞானத்தாலும், இவ்வெல்லா அனன்மவுலகும்அறியப்பிபறும். இவ்வகையாய அகிருத்ஸ்நம்,கிருத்ஸ்நம் என்னும் இவ்விரண்டுசப்தங்களின்பொருளைவார்த்திகக்கிரந்தத்தின்கண்ணே ஸ்ரீ சுரேஸ்வர ஆசாரியர்கூறியிருக்கின்றனர். ஓருரையின்கண்ணே 'வ்ருகூதெ' என்னும் பதத்தை 'முணகூஹ்வ' என்னும் பதங்களோடு அன்வயஞ்செய்து இப்பொருள்செய்யப்பெற்றுளது:—அகங்காராதிகுணங்களால் சம்மூடனகிய அஞ்ஞானியானவன் பிரகிருதியின் நேகாதிகுணங்களிடத்தேயும்,கமனாதிகருமங்களிடத்தேயும், யான் பிராஹ்மணன், இவையெனது யஜ்ஞாதிகள், எனவிவ்வண்ணம் யான் எனது என்னும் அபிமானத்தைச் செய்வன். (29)

(அ-கை.) முற்பிரசங்கத்தின்கண்ணே அஞ்ஞானி ஞானியென்னுமிருவரிடத்துஞ் சுபகருமங்களின் அனுஷ்டான சமானத்தன்மையிருப்பினும், அஞ்ஞானியினிடத்தோ கருத்திருத்துவத்தின் அபிமானமிருக்கும், ஞானியினிடத்தோ அக்கருத்திருத்துவ அபிமானத்தின் அபாவமிருக்கும், எனவிவ்வண்ணம் இருவரின் விலக்ஷணத்தன்மையுங் கூறியருளப்பட்டது. இப்போது அஞ்ஞானியும் இருவகையாவன், ஒருவனே மோக்ஷ இச்சையுடையவனகிய முமுக்ஷுவாவன், மற்றொருவனே, மோக்ஷ இச்சையற்ற அமுமுக்ஷுவாவன். அவ்விருவருள் அமுமுக்ஷுஅஞ்ஞானியை யபேக்ஷித்து, முமுக்ஷுஅஞ்ஞானியின்கண்ணே சர்வ கருமங்களின் ஸ்ரீ பகவதர்ப்பணம், பல இச்சையினபாவம் என இவ்வகை விலக்ஷணத்தன்மை கூறியருளிக்கொண்டு, ஸ்ரீ பகவான் அர்ச்சுனனிடத்தும் முமுக்ஷு அஞ்ஞானித்தன்மையால் கருமாதிகாரத்தைத் திடப்படுத்தியருளுகின்றார்:—

சு-ம். ஏயி ஸவ-ஜ்ஞாணி கூ2-ஜ்ஞாணி ஸம்-ந்யஸ்ய-ஆத்மாநம்-ஏதத்ஸர்வா ।
நிராஶீர்நிர்-மமோ பூ4த்வா யுத்4ய-ஸ்வ விக3தஜ்வரஃ ॥ (30)

ப-ம். 1 ஏயி 3 ஸவ-ஜ்ஞாணி 4 கூ2-ஜ்ஞாணி 5 ஸம்-ந்யஸ்ய 2 ஆத்மாநம்-ஏதத்ஸர்வா 6 நிராஶீர் 7 நிர்-மமோ 9 பூ4த்வா 10 யுத்4ய-ஸ்வ 8 விக3தஜ்வரஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! நீ பரமேஸ்வரனுய என்னிடத்தே அத்தியாத்மசித்தத்தால் சர்வகருமங்களையுஞ் சமர்ப்பணஞ்செய்து இச்சையற்று, மமதையற்று, சோகமற்று இப்போரைப் புரிதி. (30)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சர்வஞ்ஞனுய்ச் சர்வஜகத்திற்கும் நியந்தாவாய்ச் சர்வான்மவடிவப் பரமேஸ்வர வாசுதேவனகிய என்னிடத்தே நீ சர்வ இலௌகிக வைதிகருமங்களையும், அத்தியாத்மசித்தத்தால் சமர்ப்பணஞ்செய்தி. ஈண்டு ஆன்மாவைப்பிரதிபாதனஞ் செய்யும்பொருட்டு எச்சாஸ்திரம் பிரவிருத்திக்குமோ. அச்சாஸ்திரம் அத்தியாத்மமெனப்படும்; அத்தகையது உபநிஷத்துருவ வேதாந்தசாஸ்திரமாம். அவ்வத்தியாத்ம சாஸ்திர விசாரத்தின்கண்ணே எச்சித்தந் தற்பரமாமோ, அது அத்தியாத்ம சேதஸ் எனப்படும். அதாவது, ஆன்மானன்மவிவேகமுடைய சித்தத்தின்பெயர் அத்தியாத்மசேதஸ் எனப்படும். அத்தகைய அத்தியாத்மசித்தத்தால் நீ சர்வகருமங்களையும் பரமேஸ்வரனுகிய என்னிடத்தே சமர்ப்பணஞ்செய்தி. கருத்திதுவாம்:—அர்ச்சுனனுகிய யான் கருத்தாவடிவ அந்தரியாமியாகிய ஈஸ்வர அதீனன், எங்ஙனஞ் சேவகன் மகாராஜாவின்பொருட்டே சர்வகருமங்களையுஞ்செய்வனே; அங்ஙனம் யானும் அவ்வீஸ்வரன் பொருட்டே சர்வகருமங்களையுஞ் செய்கின்றேன்என்னுமபுத்தியால் அவ்வெல்லாக் கருமங்களையும் ஈஸ்வரனுகிய என்னிடத்தே அர்ப்பணஞ்செய்து, சர்வஆசைகளையும் விட்டொழித்து,தேகபுத்திரசகோதராதிகளிடத்தே மமதைஅபிமானமுமற்று,இவ்வுல

கின்கண்ணே அபகீர்த்தியின் ஹேதுவடிவ பரலோகத்தின்கண்ணே நரக அடைவின் ஹேதுவடிவ சோகரூபஜ்வரமற்று முழுகூ ஞானியாகிய நீ இப்போரைப்புரிதி. அதாவது, சாஸ்திரவிகித சுபகருமத்தைச்செய்தி. ஈண்டு ஸ்ரீ பகவதர்ப்பணமும், நிட்காமத்தன்மையும் போரின்கண்ணே புகன்றருளப்பெற்றது. ஏனெனின், அப்போரினும் வேறுய எக்கருமத்தின்கண்ணும் அவ்வர்ச்சுனனுக்கு மமதை சோகங்களினடைவின்றும்; மற்றே அப்போரின்கண்ணே இருந்ததாம்.

(அ-கை.) ஆண்டுச் சுவர்க்காதி பலஇச்சையற்று, ஸ்ரீ பகவதர்ப்பண புத்தியால் வேதவிகித சுபகருமங்களை யனுஷ்டித்தலே அந்தக்கரண சுத்திவாயிலாயும், ஆன்மஞானவடைவு வாயிலாயும், முக்திரூபபலத்தை யடைவிப்பதாம் என்னும் பொருளை இப்போது ஸ்ரீ பகவான்கூறியருளுகின்றார்:—

3-16

சு-ம். யெஉதஜிஂ நிதயஉஈதிஷ்டி ஊநவாஃ।
ஸ்ரஜாவஞோ நஷ்மயஞோ ஊஅயஞெ தெவி கஉழஹிஃ॥ (31)

ப-ம். 1 யெ 5 உ 8 உதம் 6 ஜஂ 7 நிதயம் 9 சுஈதிஷ்டி 2 ஊநவாஃ 3 ஸ்ரஜா
வஞஃ 4 நஷ்மயஞஃ 13 ஊஅயஞெ 10 தெ 11 சுவி 12 கஉழஹிஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யாவனொருவன் சிரத்தையுடையவனுய் அசூயையற்றவனுய் எனது இந்நித்தியமதத்தை அங்கீகரிக்கின்றனனே, அவனும் புண்ணிய பாவ கருமங்களைப் பரித்தியாகஞ்செய்வன் (31)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பலஇச்சையற்றவனுய் ஸ்ரீ பகவதர்ப்பணபுத்தியால், இவ்வதிகாரியானவன் சாஸ்திரவிகித சுபகருமத்தைச் செய்யவேண்டுமென்பது எனதுமதமாம். இவ்வெனது மதமானது நித்தியமேவதத்தால் உணர்த்தப்பட்டிருத்தலின், அநாதிபரம்பரையால் அடையப்பெற்றதாமாதலின் நித்தியமாம். அல்லது இவ்வெனது மதம் அதிகாரிகள் அவசியமாய்ச் செய்தற்குத் தகுதியதாமாதலின் நித்தியமாம். இத்தகைய எனதுநித்தியமதத்தை எம்மனுஷன் சிரத்தையுடையவனுய் அசூயை யற்றவனுய் அங்கீகரிக்கின்றனனே, அதாவது ஈண்டு சாஸ்திரமும் ஆசிரியரும் உபதேசித்தபொருள் ஒருகால் தனதனுபவத்தின்கண்ணே வாராவிடினும், அப்பொருளின்கண்ணே இப்பொருள் இத்தகையதாம் என்னும் விசுவாசஞ் சிரத்தையெனப்படும். ஒரு புருஷனுடைய குணங்களிடத்தே தோடங்களைப் பிரகடஞ்செய்தல் அசூயையாம். அவ்வசூயை ஈண்டுப் பிரசங்கத்தின்கண்ணே இவ்வண்ணமடைவுற்றதாம். இத்துக்கவடிவமேபார்த்தருமத்தே அர்ச்சுனனுகிய என்னைப் பிரவிருத்திப்பவராயஇந்தஸ்ரீபகவான் கருணையற்றவர் என்பதாம். இத்தகைய அசூயையைச் சர்வப் பிராணிகட்குஞ் சுகிருதவடிவனும், ஆசிரியவடிவனும் ஆய ஸ்ரீபகவான் வாசுதேவனென்னும் என்னிடத்தேதமிசெய்யாதவனுய் எம்மனுஷன் எனதிம்மதத்தைச் சிரத்தைபக்திவாயிலாய் அங்கீகரிக்கின்றனனே, அம்மனுஷனும் அந்தக்காரணத் தூய்மைவாயிலாய், ஞானஅடைவு வாயிலாய் உண்மைஞானியைப்போலப் புண்ணிய பாவகருமங்களைப் பரித்தியாகஞ்செய்வன்; அதாவது புண்ணியபாவங்களற்றவனுவன் என்பதாம். கருத்திதுவாம்:— அந்த ஞானிக்கு வருஞ்சரீரங்களை யடைவிப்பனவாய எத்துணைப் புண்ணிய பாவரூபசஞ்சிதகருமங்களுளவோ அவையேயா, ஞானரூப அக்கினியால் தகிக்கப்பட்டுப்போம், எந்தப் பிராரப்த கருமமானது இச்சரீரத்தைக்கொடுத்ததோ, அது போகத்தால் க்ஷயமாய்விடும். அந்தஞானி இவ்வர்த்தமான சரீரத்தின்கண்ணே செய்யும் புண்ணிய பாவ கருமம்அந்த ஞானிக்குச் சேவைசெய்யும் பக்தர்களும், நிந்திக்கும் துஷ்ட ஜனங்களும் கொண்டு செல்வர்.

ஆ-சு. "தஹ்யவாதராஹாய உவயாஜ்ஞி வாஹ்ரஹ: ।
வாயாகுதயாம் ஜிஷ்ணோவாவகுதயாழ்." ॥

(பொ-ள்.) அந்த ஞானியின் தனதிபதார்த்தங்களையோ புத்திர சிஷ்யாதிகள் கொண்டுசெல்வர். அவ்வறிஞனது புண்ணியகருமங்களையோ சேவைசெய்யும் பக்தர் கொண்டுசெல்வர். அவ்வறிஞனது பாவகருமங்களையோ, நிந்தைசெய்யுந் துஷ்டஜனங்கள் கொண்டுசெல்வர். இவ்வண்ணம் அவ்வறிஞன் ஸர்வபுண்ணிய பாவகருமங்களுமற்றவனுவன். ஈண்டுச் சாஸ்திரவிகித நித்திய நைமித்திக கருமங்களினதிகாரம் மனுஷ்யனுக்கேயாம்; மற்றுருவருக்கு மதிகாரமின்றும். ஆகையால், ஸ்ரீ பகவானுனவர் 'ஊதவாஃ' என்னும் வசனத்தைக் கூறியருளினர். (31)

(அ-கை.) ஆண்டு முற்சுலோகத்தின்கண்ணே ஸ்ரீ பகவதர்ப்பணபுத்தியால் நிட்காமகருமத்தின் அனுஷ்டானரூப ஸ்ரீ பகவானுடைய மதத்தை அங்கீகாரஞ் செய்வதாகிய அன்வயத்தின்கண்ணே அந்தக்காரணத்தூய்மைவாயிலாய் ஞான அடைவுவாயிலாய்ச் சர்வ கருமங்களுமற்ற தன்மைவடிவ குணத்தைக் கூறியருளினர். இப்போது இச்சுலோகத்தின்கண்ணே அந்த ஸ்ரீ பகவானது மதத்தை அங்கீகரியாததாய வியதிரேகத்தின்கண்ணே தோஷஅடைவைக் கூறியருளுகின்றார்:—

சு-ம். யெ ஏவததூஹ்யஸூயயந்தோ நானுதிஷ்டந்தி மேதவ: ।
ஸர்வஜ்ஞாநவிமூடாம்ஸ்தாந்து வித்தி நஷ்டாநசேதஸ: ॥ (32)

ப-ம். 2 யெ 1 தா 5 ஏவதக் 3 சூஹ்யஸூயந்த: 7 ந 8 சுநுதிஷ்டந்தி 4 மே 6 மதம்
12 ஸர்வஜ்ஞாநவிமூடாந் 9 தாந் 11 வித்தி 13 நஷ்டாந் 10 சுசேதஸ:.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மீண்டும் எப்புருஷன் தோடத்தை யாரோபணஞ் செய்பவனுய் முற்கூறிய எனதுமதத்தை யங்கீகரிக்கின்றிலனே, அவனை நீ துஷ்டசித்தமுடையவனென வறிதி, சர்வ ஞானத்தின்கண்ணும் மூடனெனவறிதி, சர்வ புருஷார்த்தங்களினின்றும் பிரஷ்டனுனவனெனவறிதி. (32)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எப்புருஷன் நாஸ்திகத்தன்மையால் குருசாஸ்திரவசனங்களில் சிரத்தையுறுது, குணங்களில் தோஷத்தைக்கூறும் அசூயையையுற்று முன்மொழிந்த எனது மதத்தையங்கீகரித்திலனே, அவனை நீ அத்தியந்தந் துஷ்டசித்தமுடையவனுயறிதி. இக்காரணத்தானே கருமவிஷயக ஞானம், சகுணநிர்க்குணப் பிரஹ்மவிஷயக ஞானம் என்னும் எல்லா ஞானங்களிலும், பிரமாணத்தாற் பிரமேயத்தாற் பிரயோஜனத்தால் அவன் விசேஷமாய் மூடனுயிருப்பனென்றறிதி. கருத்திதுவாம்:—அக்கருமவிஷயக ஞானமும், சகுணநிர்க்குணப் பிரஹ்மவிஷயக ஞானமும் எப்பிரமாணத்தாலுண்டாம், அந்த ஞானங்களின் பிரமேயம் யாதாம். அந்த ஞானங்கட்குப் பிரயோசனம் யாதாம் என்னும் பொருளை அவன் அறியமுடியாதவனுவன். இக்காரணத்தானே அப்புருஷனை நீ யாவரிலும் பிரஷ்டனுனவனெனவறிதி. (32)

(அ-கை.) ஹே பகவன்! இவ்வுலகின்கண்ணே எப்புருஷன் மகாராஜாவின் ஆஞ்ஞையை உல்லங்கனஞ்செய்வனே, அப்புருஷனுக்கு மகாபயத்தின் அடைவுண்டாவதேபோல, ஈஸ்வரராகிய தங்களது ஆஞ்ஞையை யுல்லங்கனஞ் செய்வதன்கண்ணே மகாபயவடைவுண்டாமெனக் கண்டும், அவன் எக்காரணத்தால் அசூயையுற்றவனுய்த் தங்கள் மதத்தை யங்கீகரித்திலன்? எக்காரணத்தால் புருஷார்த்தசாதனங்கள் யாவற்றிலும் பிரதிகூலத்தன்மைப் புத்தியைச் செய்கின்றனன்? என அர்ச்சுனன் சங்கிப்ப, ஸ்ரீ பகவான் விடையருளிச்செய்கின்றார்:—

சு-ம். ஸஹஜம் தெஷ்தெ ஸஹஜாஃ வ்ரகஜதெ ஜஞாநவாநவி ।
வ்ரகஜதிம் யாஞ்தி ஸம்தாநி நிக்ரஹஃ கிம்கரிஷ்யதி ॥ (33)

ப-ம். 5 ஸஹஜம் 6 தெஷ்தெ 3 ஸஹஜாஃ 4 வ்ரகஜதெஃ 1 ஜஞாநவாந் 2 சவி
8 வ்ரகஜதிம் 9 யாஞ்தி 7 ஸம்தாநி 10 நிக்ரஹஃ 1 கிம் 12 கரிஷ்யதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஞானத்தையுடைய புருஷனும், தனது பிரகிருதியையனுசரித்தே சேஷ்டிப்பன், ஆதலின் சர்வப்பிராணிகளும் அந்தப் பிரகிருதியையே அனுசரிப்பர்கள்; ஆண்டெனது நிக்கிரகம் யாது செய்யும். (33)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பூர்வஜன்மத்தின்கண்ணேசெய்ததர்மம், அதர்மம், ஞானம், இச்சைமுதலியவற்றின் சமஸ்காரம் இந்தஜன்மத்தின்கண்ணே அபிவியக்தியையடையும்; அந்த அபிவியக்த சமஸ்காரமே பிரகிருதியாம். அது எல்லாவகையானும் பலமுடையதாம். அத்தகைய பலமுடைய பிரகிருதியின் அனுசாரமாகவே பிரஹ்மத்தையுணர்ந்த புருஷனும் சேஷ்டிப்பன். அல்லது 'ஜ்ஞாநவாந்' என்னும் பதத்தால் கேவலங் குணதோஷத்தையறிந்த புருஷனைக்கொள்க. ஆண்டு ஸ்ரீ வியாச சூத்திரம்.—"வ்யாஹி ஹ்யாவிரொஷாத்"

(பொ-ள்.) உண்ணல் குடித்தல் முதலிய வியவகாரகாலத்தின்கண்ணே அறிஞனுக்குப் பசுவாதிகளோடு துல்லியத்தன்மையுளது என்பதாம். அத்தகைய பிரஹ்மவேத்தாவாய ஞானமுடையவனும், அல்லது குணதோஷத்தையறிந்துள்ள ஞானவானும், தனது சமஸ்காரரூபப் பிரகிருதியின் அனுசாரமாகவே சேஷ்டிப்பனையின், வேறஞ்ஞானி மூர்க்க புருஷன் தனதுபிரகிருதியின் அனுசாரமாகவே சேஷ்டிப்பன் என்பதன்கண்ணே யாது கூறவேண்டியிருக்கின்றது. ஆகையாலந் தப்பிரகிருதி அவிவேகிப் பிராணிகட்குப் புருஷார்த்தத்தினின்றும் பிரஷ்டதன்மையையுண்டாக்குமேனும், அவ்வெல்லாப் பிராணிகளும் அந்தப் பிரகிருதியையே அனுசாரஞ்செய்யும். ஆண்டுப் பரமேஸ்வரனுகிய யான் செய்யும் நிக்கிரகமும், அரசன் செய்யும் நிக்கிரகமும் யாது செய்யும். அதாவது மேலாய இச்சையாற் பாவகருமத்தின்கண்ணே பிரவிருத்திக்கும் புருஷரை அந்நிக்கிரகம் அப்பாவகருமத்தினின்றும் நிவிருத்திசெய்வதன்கண்ணே யாற்றலற்றதாம். கருத்தாவாம்:—எப்புருஷன் பாவகருமத்தின்கண்ணே மகாநரக சாதனத்தன்மையையறிந்தும் துர்வாசனையின் பிரபலத்தன்மையால் மீண்டும், அப்பாவ கருமத்தின்கண்ணே பிரவிருத்திப்பனேனை, அப்புருஷன் எனது ஆஞ்ஞையைத் தாண்டுவதாலுண்டாம் தோஷத்தால் ஒருகாலும் பயத்தையடையான். (33)

(அ-கை.) ஹே பகவன்! ஒருகால் எல்லாப்பிராணிகளுந் தத்தமது பிரகிருதியின் அனுசாரமாகவே நடப்பாயின், இலௌகிக புருஷார்த்தத்திற்கும் வைதிக புருஷார்த்தத்திற்கும் யாதொருவிஷயமும் உண்டாகமாட்டாது. ஆகையால், துறக்ககாமன்வேட்க என்பதாதி விதிவாக்கியங்களின்கண்ணும், பிறர்மனை நாடேடல் என்பதாதி நிஷேதவாக்கியங்களின்கண்ணும் அநர்த்தகத்தன்மையுண்டாம். ஏனெனின், இல்வுலகின்கண்ணே பூர்வசமஸ்காரரூபப் பிரகிருதியற்ற எப்பிராணியுமின்றுகும், இருப்பினன்றே அவ்விதி நிஷேத வாக்கியங்கள் பயனுடையனவாம். என இவ்வண்ணம் அர்ச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் விடையளித்தருளுகின்றார்:—

சு-ம். உம்ரியவெஷ்ம்ரியவெஷ்யாயெ ஸாமவெஷள வ்யவஸ்தித ।
தயொஸ் வயஸோமவெதள ஹ்யஹ்ய வரிவம்யிதள ॥ (34)

ப-ம் 1 ஹ்ருஷீகேச 2 ஹ்ருஷீகேச 3 கேசி 4 நாமதேயாப்ய 5 வ்யவஸ்தித 6 தயோஃ 8 ந 7 வர்ம 9 கூபதேஹ 11 தள 10 ஹி 12 கேஹ்ய 13 வரிவம் யிதள.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இந்திரிய இந்திரியங்களின் சப்தாதி விஷயங்களிடத்தே இராகத்துவேஷமிரண்டும் நியமபூர்வகமாயிருக்கின்றன. அவ்விராகத்து வேஷங்களிரண்டின் வசத்தைப் பிராணிகள் அடையலாகாது; அவ்விராகத்துவேஷமிரண்டும் இப்பிராணியின் சத்துருவேயாம். (34)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, இரசனம், கிராணம் என்னும் ஐந்தும் ஞானேந்திரியங்களாம். வாக்கு, பாணி, பாதம், உபஸ்தம், பாயு என்னு மைந்தும் கருமேந்திரியங்களாம். அவ்விருபஞ்சகங்கட்கும் முறையே சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம், வசனம், ஆதானம், கமனம், ஆநந்தம், மலவிசர்ச்சனம் என்பன பத்தும் விஷயங்களாம். அச்சப்தாதி விஷயங்களிடத்தும், அவ்வசனாதி விஷயங்களிடத்தும், எவ்வெவ்விஷயம் இப்புருஷனுக்கனுகூலமாமோ, அவ்வவ்விஷயம் ஒருகால் சாஸ்திர நிஷித்தமாயினும், அவ்வவ்விஷயத்தின்கண்ணே இப்புருஷனுக்கு இராகமேயுண்டாம். அவ்விஷயங்களிடத்தே எவ்வெவ்விஷயம் இப்புருஷனுக்குப் பிரதிகூலமாமோ, அவ்வவ்விஷயம் ஒருகால் சாஸ்திரவிகிதமாயினும் அவ்வவ்விஷயத்தின்கண்ணே இப்புருஷனுக்குத்துவேஷமேயுண்டாம். இவ்வண்ணம் சுரோத்திராதி சர்வேந்திரியங்களின் சப்தாதி சர்வ விஷயங்களிடத்தே அநுகூலத்தன்மையானும், பிரதிகூலத்தன்மையானும் இராகத்துவேஷங்களிரண்டும் நியம பூர்வகமாகவேயிருக்கின்றனவேயன்றி அநியமமாக இல்லவேயில்லை. ஆண்டிப்புருஷன் அவ்விராகத்துவேஷவயத்தையடையாதிருக்குமிதுவே தனது புருஷார்த்தத்தின் விஷயமுஞ் சாஸ்திரத்தின் விஷயமுமாம். ஈண்டிது தாற்பரியமாம்:—இப்பரஸ்திரீ கமனாதிகருமங்கள் மகாநரகப்பிராப்தியைச் செய்விப்பனவாம் என்னும் பலவத்தநிஷ்டசாதனத்தன்மை ஞானத்தினபாவத்தே தாடுகூடிய இப்பரஸ்திரீ கமனாதிகருமங்கள் எனது விஷ்ணுரூப இஷ்டசாதனமாம் என்னும் இஷ்டசாதனத்தன்மை ஞானத்தால் உண்டாய பரஸ்திரீ கமனாதிகருமங்களிடத்தேயிருக்கும் இராகத்தையங்கீகரித்தே அந்தப் பிரகிருதி இந்தப்புருஷனைப் பரஸ்திரீகமனாதி நிஷித்தகருமத்தின்கண்ணே பிரவிருத்திப்பிக்கும். இவ்வண்ணம் இச்சந்தியா வந்தனாதிகருமங்கள் சுவர்க்காதி பலத்தையுண்டாக்குவனவாம் என்னும் இஷ்டசாதனத்தன்மை ஞானத்தின் அபாவத்தே தாடுகூடிய இச்சந்தியா வந்தனாதிகருமங்கள் எனது துக்கரூப அநிஷ்ட சாதனங்களாம் என்னும் அநிஷ்ட சாதனத்தன்மை ஞானத்தாலுண்டாய அந்தச் சந்தியாவந்தனாதி கருமங்களிடத்தேயிருக்குந் துவேஷத்தையங்கீகரித்தே அப்பிரகிருதி அப்புருஷனை அந்தச் சந்தியாவந்தனாதி விகிதகருமங்களினின்றும் நிவிருத்திப்பிக்கும். ஆண்டு எக்கால் தருமசாஸ்திரம் அந்தப் பரஸ்திரீ கமனாதிகருமங்களின்கண் இப்பரஸ்திரீ கமனமுதலிய கருமங்கள் நரகவடைவைச் செய்விப்பன என்னும் பலவத்தநிஷ்டசாதனத்தன்மையை யுணர்த்துமோ, அக்கால் பலவத்தநிஷ்டசாதனத்தன்மை ஞானத்தின் அபாவமிருக்கமாட்டாது. கடரூபப் பிரதியோகியிருக்குமாயின் கடாபாவமிராதேதேபாலும். அந்தப் பரஸ்திரீகமனாதி நிஷித்தகருமங்களிடத்தே இராகோற்பத்தியுண்டாக்குவதில் இஷ்டசாதனத்தன்மைஞானத்திற்கு, அந்த பலவத்தநிஷ்டசாதனத்தன்மை ஞானத்தின் அபாவமே சககாரிகாரணமாம். அந்தச் சககாரிகாரணமிலதாயின் கேவலம் அவ்விஷ்ட சாதனத்தன்மைஞானம் அந்தப் பரஸ்திரீ கமனாதி நிஷித்த கருமங்களிடத்தே இராகத்தையுண்டாக்கமாட்டாது. மதுவிஷங்கள் சேர்ந்த அன்னத்தின்கண்ணே இவ்வுன்னம் எனது பசிநிவிருத்தியின் சாதனமாம் என்னும் இஷ்டசாதனத்தன்மை

ஞானமுண்டாயினும், எப்புருஷனுக்கவ்வன்னத்தின்கண் இவ்வன்னம் எனதுமரண சாதனம் என்னும் அநிஷ்டசாதனத்தன்மை ஞானமுண்டாமோ, அப்புருஷனுக்குக் கேவலம் இஷ்ட சாதனத்தன்மை ஞானம் அவ்வன்னத்தின்கண்ணே இராகத்தையுண்டாக்கமாட்டாது. இங்ஙனம் எக்காலத்தித தருமசாஸ்திரஞ் சந்தியாவந்தனாதிவிகித கருமங்களின்கண் இவை சுவர்க்காதி சுகஅடைவின் சாதனமாம் என்னும் பலவத்திஷ்டசாதனத்தன்மையை யுணர்த்துமோ, அக்காலத்தித அவற்றின்கண் பலவத்திஷ்டசாதனத்தன்மை ஞானத்தினபாவமிருக்கமாட்டாது; கடஸுபப் பிரதியோகியிருக்குமாயின், கடாபாவமிராததேதேபாலும் அவற்றின்கண்ணே துவேஷத்தினுற்பத்தி செய்வதில் அவ்வநிஷ்டசாதனத்தன்மை ஞானத்திற்கு அந்தப்பலவத்திஷ்ட சாதனத்தன்மை ஞானத்தினபாவமே சககாரி காரணமாம். அந்தச்சககாரிகாரணமின்முயின் கேவலம் அவ்வநிஷ்ட சாதனத்தன்மை ஞானம் அவற்றின்கண்ணே துவேஷ உற்பத்தியைச் செய்விக்கமாட்டாது. ஆகையால் இப்பொருள் துணியப்பெறும்:—பிரதிபந்தமற்ற அந்தச்சாஸ்திரம் இப்புருஷனைச் சந்தியாவந்தனாதி விகிதகருமங்களிலோ பிரவிருத்திப்பிக்கும், பரஸ்திரீகமனாதி நிஷித்த கருமங்களினின்றும் நிவிருத்திப்பிக்கும். இவ்வண்ணம் சாஸ்திர விசார ஜன்னிப ஞானத்தின் பிரபலத்தன்மையால் அவ்வியற்கையாய இராகத்துவேஷ காரணநிவிருத்தியுண்டாமாயின், அக்காரண நிவிருத்தியால் அந்த இயற்கையாய இராகத்துவேஷரூப காரியமும் நீங்கிவிடும். ஆகையால், அந்தப் பிரகிருதி விபரீதமார்க்கத்தின்கண்ணே சாஸ்திர திருஷ்டியையுடைய புருஷனைப் பிரவிருத்திப்பிக்கமாட்டாது. ஆதலின் சாஸ்திரத்திற்கும் புருஷார்த்தத்திற்கும் பயனற்றதாந்தன்மையினடைவுண்டாகமாட்டாது. இவ்வபிப்பிராயத்தால் ஸ்ரீபகவானுவர் 'தயொரஃவஸாமஜ்ஞே' என்னும் வசனத்தைத் திருவாய்மலர்ந்தருளினர். அதாவது, இப்புருஷன் அந்த இராகத்துவேஷாதியின் அதீனஞ்ப் எக்கருமத்தின்கண்ணும் பிரவிருத்தியையேயனும் எக்கருமத்தினின்றும் நிவிருத்தியையேயனுமடையலாகாது. மற்முரு, சாஸ்திர ஜன்னியஞானத்தால் அந்த இராகத்துவேஷங்களின் காரணநாச வாயிலாய் அவற்றை நாசமே செய்யவேண்டும்; இபற்கையாய தோஷ ஜன்னிய அவ்விரண்டும் இந்த மோகரூப சிரேயசினிச்சையையுடைய புருஷனுக்குச் சத்துருவேயாம். கருத்திதுவாம்:—எங்ஙனம் மார்க்கத்தின்கண்ணே நடவாநின்ற புருஷர்கட்குத் துஷ்டசோரர் அநேகம் வகையாய விக்கினங்களைச் செய்வரோ, அங்ஙனம் மோகரூப சிரேயசின் ஆன்மஞானரூபமார்க்கத்தின்கண்ணே பிரவிருத்திக்கும் இவ்வதிகாரி புருஷனுக்கு அவ்விராகத்துவேஷமிரண்டும் அநேகம் வகையாய விக்கினங்களைச்செய்யும். ஆகையால் இவன் அவற்றை அவசியமாய் நாசஞ்செய்யவேண்டுமென்க. (34)

(அ-கை.) ஹே பகவன்! இயற்கையாய இராகத்வேஷத்தால் ஜன்னியமாய பசு மனுஷ்யாதி சர்வப் பிராணிகளின் சாதாரணப் பிரவிருத்தியை நிவிருத்திசெய்து, இப்புருஷன் சாஸ்திரவிகித கருமத்தையே செய்யபோக்கியவுவனுயின், எங்ஙனம் இப்போரின்கண்ணே சாஸ்திரவிகித கருமரூபத்தன்மையாமோ, அங்ஙனம் சந்நியாச பூர்வக பிக்ஷான்ன போஜனத்தின்கண் ணுஞ்சாஸ்திரவிகித கருமரூபத்தன்மையுளதாதலின், அத்தியந்தஞ் சுகமும் ஹிம்சாதிகளற்றதும்ஆய பிக்ஷான்னபோஜனமே எனக்குச் செய்யத்தக்கதாகும். அத்தியந்தந்துக்கரூபமும் ஹிம்சைமுதலியவற்றின் காரணமும்ஆய இப்போர்புரிவதின்கண்ணே எனக்குயாது பிரயோஜனம் எனஅர்ச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் விடையருளிச் செய்கின்றார்:—

சு-ம். ஸ்ரையாநு வ்யஸ்ரோவிமாணஃ வராயஸ்ரூகு வ்ருஜினாநி தாகு।
வ்யஸ்ரஸ்ரநியதம் ஸ்ரையஃ வராயஸ்ரூஹயாவஹஃ॥ (35)

ப-ம். 5 ஸ்ரேயாந 4 வ்யஜ்ஞ: 3 விஜ்ஞான: 2 வாயஜ்ஞாக 1 வ்ரஹ்மஷ்டிதாக 6 வ்ய
யஜ்ஞ 7 நியதம் 8 ஸ்ரேய: 9 வ்ராயஜ்ஞ: 10 ஹயாவஹ:.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சர்வ அங்கங்களின் சம்பூரணத்தன்மைவாயி லாய்ச் செய்யப்பட்ட பரதருமத்தினுஞ் சிறிது அங்கத்தின் குறைவுவாயிலாய்ச் செய்யப்பட்ட தனது தருமம் அத்தியந்தம் மேன்மையுடையதாம். இக்காரணத் தால் அந்தத் தனது தருமத்தின்கண்ணே மரணமும் மேன்மையதாம் பரதர் மமோ பயத்தையேயுண்டாக்குவதாம். (35)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பிராஹ்மணாதி நான்கு வருணங்களின்கண்ணும், பிரஹ்மசரியாதி நான்காசிரமங்களின்கண்ணும், எவ்வெவ்வருணங்களைக்குறித்து, எவ்வெவ்வாசிரமங்களைக் குறித்துத் தருமசாஸ்திரமானது எவ்வெவ்வித்தருமத்தை விதித்துளதோ, அவ்வத்தருமம் அவ்வவ்வருணத்திற்கும், அவ்வவ்வாசிரமத் திற்கும் ஸ்வதருமமெனப்படும். வேறு வருணத்திற்கும் வேறு ஆசிரமத்திற் கும் அவ்வத்தருமம் பரதருமமெனப்படும். பிருஹஸ்பதிஸவ மெனப்பெயரிய யாக த்தைச்சாஸ்திரம் பிராஹ்மணனொருவன்பொருட்டே விதித்திருக்கின்றது, க்ஷத் திரியாதிகளின்பொருட்டு விதிக்கவில்லையாதலின், அந்த யாகம் பிராஹ்மணர் கட்கு ஸ்வதருமமாம். க்ஷத்திரியாதியர்க்கோ பரதருமமாம். இவ்வண்ணம் ராஜ சூயமெனப்பெயரிய யாகத்தை க்ஷத்திரியனொருவனுக்கே சாஸ்திரம் விதித் துளது, பிராஹ்மணாதியரின்பொருட்டு விதிக்கவில்லையாதலின், அந்த யாகம் க்ஷத் திரியனுக்கோ ஸ்வதருமமாம்,பிராஹ்மணாதிகட்கோ பரதருமமாம். இவ்வண்ணம் சர்வ அசாதாரணதருமங்களிலும் ஸ்வதருமத்தன்மையையும் பரதருமத்தன்மை யையும் அறிந்துகொள்க. ஈஸ்வரநாமஸ்மரணாதிகளாகிய சாதாரண தருமங்களி டத்தே சர்வப்பிராணிகட்கும் ஸ்வதருமத்தன்மையேயிருக்கும், எப்பிராணியினுக் கும் பரதருமத்தன்மையிராதாம். இக்காரணத்தாலே சாதாரண தருமமெ னக்கூறப்பட்டது:— ஆண்டு திரவியம், மந்திரம், தேவதை என்பனவாதி சர்வ அங்கங்களின் சம்பூரணத்தன்மையின்றியே எத்தருமஞ்செய்யப்படுமோ, அத்தரு மம் விகுணமெனப்படும். இவ்வகையாய விகுணமாகிய ஸ்வதருமம் அந்தச் சர்வ அங்கங்களின் சம்பூரணத்தன்மைவாயிலாய்ச் செய்யும் பரதருமத்தினும் அத்தியந் தம் மேன்மையுடையதாம். ஏனெனின், வேதப்பிரமாணமொன்றை விடுத்து வேறு பிரமாணமெதுவுந் தருமத்தின்கண்ணேயின்றும்; மற்றோ, தருமத்தின்கண்ணே வேதமொன்றே பிரமாணமாம். இவ்வார்த்தை 'சோதநாலக்ஷணோ(அ)ர்தோ தர்ம:' என்னும் பூர்வ மீமாம்சா சூத்திரத்தின்கண்ணே விஸ்தாரமாய்க் கூறப் பெற்றுளது. ஆகையால், பரதருமமும் அனுஷ்டிக்கற்பாலது, தருமமாதலின்; ஸ்வ தருமத்தைப்போலும் என்னும் அனுமானம் அத்தருமத்தின்கண்ணே பிரமாண மாகவேமாட்டாது. ஆகையால், ஒரு சிறிதங்கங்களின் குறைவால் விகுணபாவத் தையடைந்த ஸ்வதருமத்தின்கண்ணும் நிலைபெற்றிருக்கும் புருஷனுடைய மரண மும், பரதருமத்தின்கண்ணிராநின்ற புருஷனுடைய ஜீவனத்தினும் அத்தியந்தம் மேன்மையுடையதாம். ஏனெனின், ஸ்வதருமத்தின்கண்ணேயிருக்கும் புருஷ னுடைய மரணம் இவ்வுலகின்கண்ணே அப்புருஷனுக்குப் புகழைபடைவிப்பதாம், பரலோகத்தின்கண் ஸ்வர்க்காதிகளினடைவைச் செய்விப்பதாம். ஆகையால், அம் மரணமும் அத்தியந்தம் மேன்மையதாம். பரதருமமோ இப்புருஷனுக்கிகலோகத் தின்கண்ணே அகீர்த்தியையடைவிப்பதாம். பரலோகத்தின்கண்ணே நரகாதிகளை யடைவிப்பதாம். ஆகையால், எங்ஙனம் இராகத்வேஷத்தாலுண்டாய இயல்பாய பிரவிருத்தி இப்புருஷனுக்குப் பரித்தியாகஞ்செய்ய யோக்கியமாமோ, அங்ஙனம் இப்பரதருமமும் பரித்தியாகஞ்செய்யயோக்கியமாம். ஆண்டுப் பூர்வப் பிரசங்கத் தின்கண்ணே ஸ்ரீ பகவானுடைய மதத்தை யங்கீகாரஞ்செய்யும் புருஷர்கட்குச்

சிரேயசின் அடைவு கூறியருளப்பெற்றது. அந்த ஸ்ரீ பகவானது மதத்தை அங்கீகரியாத புருஷர்கட்கு அந்தச் சிரேயசுமார்க்கத்தினின்றும் பிரஷ்டத்தன்மை கூறியருளப்பெற்றது. அந்தச்சிரேயசு மார்க்கத்தினின்றும் பிரஷ்டமாவதன்கண்ணும், பலத்தின் இச்சைவாயிலாய்க் காமியகருமத்தைச் செய்வதன்கண்ணும், கேவலம் பாவ கருமங்களைச் செய்வதன்கண்ணும் 'யெகெதஉஹ்ஹெயஹி' என்பதாதி வசனங்களால் அநேக காரணங்கள் அறையப்பெற்றுள்ளன. அவ்வெல்லாக்காரணங்களையுந் தொகுத்துக்கூறுந் சுலோகமிதுவாம்.

"ஸுஜாஹாநிஹெயா ஹெயாஉஷ்டிதகு உம்பதெ।
வ்ருகூதெவ-ஸுவதி-ருகும் ராமவெஷளது வாஷ்கு।
வராயஉராவிகும் தெத்யாகூா உஉாம-ஸுவாஹகாஃ" ॥

(பொ-ள்) சிரத்தையற்றிருத்தல், அசூயைப்படல், சித்தத்தின் துஷ்டத்தன்மை, மூடத்தன்மை, பிரகிருதியின்வயம் நிகழ்தலாதல், புட்கல இராகத்துவேஷங்கள், பரதருமத்தின்கண்ணே பிரீதிப்படல் என்னுமிவையாவும் துன்மார்க்கத்தை யடைவிப்பனவாம். (35)

(அ-கை.) ஆண்டு இப்புருடனுக்குக் காமியகருமத்தின்கண்ணே பிரீதியைச் செய்விப்பதும், நிஷித்தகருமத்தின்கண்ணே பிரீதியைச்செய்விப்பதும், ஆகிய காரணத்தை நிவிருத்தித்து ஸ்ரீபகவான் பூர்வமருளிய மதத்தைக்கைக்கொள்ளும் பொருட்டு அருச்சுனன் முதலில் அக்காரணத்தின் வடிவத்தைக்கேட்கின்றனன்.

சுஜ-ுர உவாச.

சு-ம். சுயகெந வ்ரயாகொயம் வாவம் அரதி வமராஷஃ।
கூநிஆநவிவாஷ்ணுய ஐராஜிவ நியொஜிதஃ ॥ (36)

ப-ம். சுய 9 கெந 10 வ்ரயாகூஃ 2 சுயம 11 வாவம 12 அரதி 3 வமராஷஃ 4 கூநி ஆந 5 சுவி 1 வாஷ்ணுய 6 ஐராகு 8 உவ 7 நியொஜிதஃ.

(அ-ம்) ஹே வார்ஷ்ணேய! இப்புருடன் பாவஞ்செய்வதற்கிச்சியாவிடினும் பலாத்காரமாய்ப் பிரவிருத்திப்பிக்கப்பட்ட புருடனைப்போல எதனால் பிரவிருத்திப்பிக்கப்பட்டவனைப்பாவகருமத்தைச்செய்கின்றனன்?

(வி-ம்) ஹே பகவன்! "யயாயதொவிஷயாநு வாஃஹஃ" என்பதாதிவசனங்களால் முன்னரும் தாங்கள் அநர்த்தமூலமெனக் கூறியருளினீர்கள். இப்போதுந் தாங்கள் "வ்ருகூதெமஸுணஹஃஉஐஹாஃ" என்பதாதி வசனங்களால் பலவகையாய் அவ்வனர்த்தமூலத்தைக் கூறியருளினீர்கள். ஆண்டு, அவையாவுமே சமானப்பிரதானத்தன்மையால் அநர்த்தகாரணங்களா? அல்லது அவ்வியாவற்றினுள்ளும் ஒன்றே முக்கியகாரணம் மற்றவையாவும் கௌணம் என்பதா? அவற்றுள் முதற்பக்ஷத்தின்கண்ணே? அவ்வெல்லாக்காரணங்களையும் வேறுவேறாய் நிவிருத்திசெய்வதன்கண்ணே மகா பரிசிரமமுண்டாவதாகும். மற்றையபக்ஷத்திலோ அவ்வொரே முக்கியகாரணத்தை நிவிருத்திசெய்துவிடின், இப்புருடனுக்குக்கிருதகிருத்தியபாவ அடைவுண்டாம். ஆகையால், ஹே பகவன்! தாங்களிதனைத் திருவாய்மலர்ந்தருளல்வேண்டும்:—தேவரீரது மதத்தைத்தழுவாதவனுய்ச்சர்வஞான ங்களிலும் மூடனைனவன் எப்பலமுடைக்காரணத்தாலேவப்பட்டவனுய் அநர்த்ததையீயும் பலவகை நிஷித்தகாமியகருமங்களைச்செய்கின்றனன். ஈண்டு, பிறர்மனை தழுவன் முதலியன நிஷித்தங்களாம், சத்துருவைக்கொல்லும் சேனயாக முதலியன காமியங்களாம். இவ்விரண்டும் அநர்த்ததையே அடைவிப்பனவாமாதலின் பாபசப்தத்தாற் கவரப்பெற்றன. ஹே பகவன்! இவன்தான் இப்பாவங்களையியற்ற

இச்சியாஞயினும், பலாத்காரமாய் இவற்றையேசெய்வன். பரமபுருஷார்த்த சாதனமெனத் தாங்கள் உபதேசித்தகருமத்தைச்செய்ய விச்சிப்பினும், அதனைச் செய்கின்றிலனுதலின், இஃதறிந்துகொள்ளக் கிடக்கின்றது:—இவன் பரதந்திரனேயன்றிச் சுதந்திரனல்லன், பரதந்திரத்தன்மையினனன்றி இவ்வார்த்தை சம்பவியாதாமாதலின் மகாராஜாவால் ஒருகாரியத்தே பலாத்காரமாயேவப்பட்ட ஒரு சேவகன் அக்காரியஞ்செய்ய இச்சியானேனும் அதனை யவசியஞ்செய்வதேபோல எப்பலமாய காரணத்தால் ஏவப்பட்டவிவன் தேவரீரது மதவிரோதியாய பாவத்தைச் சர்வாநர்த்த மூலபூதமென வறிந்தும் அதனையேசெய்வன். அவ்வநர்த்தத்தே ஏவும் காரணவடிவத்தைத்தாங்கள் என்பொருட்டுத் திருவாய்மலர்ந்தருள வேண்டும். அதன்வடிவத்தையறியின் அதன் அழிவின்பொருட்டு முயல்வேன். ஈண்டு, "கூநிஹந்தவி" என்னும் வசனத்தால் அர்ச்சுனன் இப்பொருளைக் குறிப்பித்தனன்:—முற்கூறிய இராகத்வேஷத்தின்கண்ணும் பிரவிருத்தி காரணத்தன்மை சம்பவியாதாம்; ஏனெனின், இராகமிருப்பின் இச்சை யவசியமுண்டாமாதலின், இச்சையில்லாதிருப்பின் இராகத்திற்கு அபாவமேநேரும். இராகத்தே அப்பிரவர்த்தகத்தன்மை சித்தமாயபோது இராகஜன்னிய சம்ஸ்காரங்களாலுண்டாய அறம்பாவத்தின்கண்ணும் பிரவர்த்தகத்தன்மை சம்பவியாதாம். அவற்றின்மாட்டு அப்பிரவர்த்தகத்தன்மையுளதாகவே அவற்றையபேக்ஷிக்கும் ஈசுவரரிடத்தும் பிரவர்த்தகத்தன்மை சம்பவியாதாம். 'ஹெவாவெஷ்ய' என்னும் இவ்விளிமொழிதலால் அர்ச்சுனன் இப்பொருளைக் குறிப்பித்தனன்:—எனது மாதாமககுல விருஷ்ணிவம்சத்தே தங்களுடைய பக்தர்களைக் கடத்தேதற்றியருளும்பொருட்டுத் தாங்களவதரித்தருளினீர்கள்; யானும் அவ்வம்சத்தே யுதித்த குந்திதேவியின் மைந்தனுதலின், என்னைத் தங்களுடையவனுய் நினைந்தருளி யுபேக்ஷிக்கலாகாதாம்; மற்றே, எனது விஞவிற்குத் தாங்கள் உண்மையாய விடையைத் தந்தருளல்வேண்டுமென்பதாம். (36)

(அ-கை.) இவ்வாறு அர்ச்சுனனுல் வினவப்பட்ட ஸ்ரீ பகவான் "காஉய வனவாயம்வ்ருஷ்ணூகுதெவெஉமு சூஸீதெகுஉவ வொஉகாஉயத ஜாயாஉவ்யாகு சுயவ்ய ஜாஉவ்யாகு சுயவித்தம் உவ்யாகு சுயகஉழுகுவீழுய" என்பன முதலிய சுருதிகளாலும், "சுகாஉவ்யுக்ரியாகாயிகு ஊரபயதெநஹ கஹிழுயிகு। யஉஜிகுர்ருதெத ஜஞ்ஹுத்தாஉவ்ய வெவ்ரிதிழ" ॥ என்பதாதி ஸ்மிருதிகளாலும் சித்தமாய உத்தரத்தைக்-(பொ-ள்.—இவன் காமமயனேனியாவன் இவ்வுலகுண்டாவதன்முன் ஓரான்மாவேயிருந்தது, அது எனக்கு ஜாயையுண்டாகுக, பிரஜையுண்டாகுக, தனமுண்டாகுக யான் கருமத்தைச் செய்வேன் என இச்சித்தது. இவ்வுலகத்தே இச்சையற்றவனுக்கு எக்கிரியையும் காணவருவதின்றுமாதலின் ஜீவன்செய்யுங் கருமங்களியாவும் காமசேஷ்டையினனேயாம்) கூறியருளுகின்றார்:—

ஸ்ரீபகவாநுவாச.

சு-ம். காஉ வனஷ க்ரோய வனஷ ரஜோகுணஸமுத்பவஃ।
உஹாபநாஉ உஹாவாவ்ருதா விஜ்ஞேயநமிஹ வைரிணம் ॥ (37)

ப-ம். 2 காஉஃ 1 வனஷஃ 4 க்ரோயஃ 3 வனஷஃ 5 ரஜோகுணஸமுத்பவஃ 6 உஹாபநஃ 7 உஹாவாவ்ருதா 11 விஜ்ஞ 9 வனநம் 8 உஹ 10 வைரிணம்.

(அ-ம்.) ஹே அர்ஜுன! அவ்வநர்த்தமார்க்கத்தே யேவுவது இக்காமமேயாம், இஃதே குரோதமாம், இரஜோகுணத்துண்டாயதாம், மகா ஆகாரத்தையுடையதாம், அத்தியந்தம் உக்கிரமாம். ஆதலின், இச்சம்சாரத்தே இக்காமத்தையே நீ வைரியெனவுணர்தி.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இவனைப் பலாத்காரமாய் அநர்த்தமார்க்கத்தே யேவுங்காரணமன்றே நீ கேட்டாய்? அது இக்காமரூப மகாசத்துருவேயாம். இதனை இவ்வுயிர்கட்குச் சர்வ அநர்த்தமுண்டாம்.

சங்கை :—ஹே பகவன்! இக்காமம் உயிர்களை அநர்த்தத்தே யேவுவதே போலக் குரோதமுமேவுமாதலின் கேவலங் காமத்தே யேவுதல் சம்பவியாதாம்.

சமாதானம்:—ஸ்ரீபகவான் கூறியருளுகின்றார் :—'க்ரோதஸ்தத²' என. ஹே அர்ச்சுன! விஷயாபிலாஷை வடிவகாமத்தினும் குரோதம் வேறன்றும்; மற்றே, இதுவே அதுவாம். கருத்திதுவாம் :—ஒருவன் தனமுதவியவற்றை விழைந்து ஒரு தனிகன்பாற்செல்ல முற்பட்ட துட்டனொருவன் விழைவு நிறைவேறவிடாஞ யின், அக்காமமே துட்டன்மேற் குரோதமாய்ப் பரிணமிக்கும். இவ்விஷயம் யாவருக்குமனுபவசித்தமாமாதலின், அக்காமமே குரோதரூபமாம். அக்காமரூபமகாசத்துருவையொழிக்கின் சர்வபுருஷார்த்த அடைவுண்டாம். இப்போது அப்பகையை நீக்குமுபாயத்தை யறிவித்தருளும்பொருட்டு அதன்காரணத்தை யறைந்தருளுகின்றார். 'ரஜோகு³ணஸமுத்³ப⁴வ:' ஹே அர்ச்சுன! துக்கப்பிரவிருத்தி பலரூப ரஜோகுணத்தைக் காரணமாகவுடையது காமமாம். உலகத்தேகாரணசமானவியற்கைத்தாயதே காரியமாகுமாதலின் ரஜோகுணகாரணம் துக்கப்பிரவிருத்தியாதி ரூபமாவதேபோல, அக்காமகாரியமும் துக்கப் பிரவிருத்தியாதி ரூபமேயாம். ரஜோகுணம்போலத் தமோகுணமும் அக்காமகாரணமாகுமாதலின், 'ரஜோகு³ணஸமுத்³ப⁴வ:' என்னும் வசனம்போல 'தமோகு³ணஸமுத்³ப⁴வ:' என்னும் வசனமும் கூறியருள்வது தகுதியாமாயினும் துக்கத்தின்கண்ணும் பிரவிருத்தியின்கண்ணும் ரஜோகுணத்திற்கே பிரதானத்தன்மையாமன்றித் தமோகுணத்திற்கின்றும். ஆதலின், ஈண்டு ரஜோகுணமே கூறியருளப்பெற்றது. இத்துணை கூறியதால் ஸ்ரீபகவானுனவர் இப்பொருளுணர்த்தியருளினர் :—சாத்துவிகவிருத்தியால், ரஜோகுணரூபகாரணம் நீங்கப்பபெறின் காமரூபகாரியம் தானே நீங்குமாதலின் அச்சாத்துவிகவிருத்தியே ரஜோகுணநிவிருத்திவாயிலாய்க் காமநிவிருத்தியின் உபாயமாம். அல்லது ஹே பகவன்! அக்காமத்திற்கு எவ்வாற்றால் அநர்த்தத்தின் கண்ணே பிரவர்த்தகத்தன்மையென அருச்சுனன் வினவ, ஸ்ரீபகவான்கூறியருளுகின்றார். 'ரஜோகு³ணஸமுத்³ப⁴வ:' என. ஹே அர்ச்சுன! துக்கப்பிரவிருத்தியாதி ரூப ரஜோகுணத்திற்குற்பத்தி எதனினின்றுமாமோ அது ரஜோகுண சமுத்பவமாம் அத்தகையது அக்காமமாம். கருத்திதுவாம் :—விடயங்களின் அபிலாஷை வடிவ அக்காமம் வெளிப்பட்டு ரஜோகுணத்தையெவி இப்புருஷனைத் துக்கரூப கருமத்தின்கண்ணே பிரவிருத்திப்பிக்கும். ஆகையால், அதிகாரியாலக்காமசத்துரு அவசியம் ஜயிக்கப்படவேண்டும்.

சங்கை :—ஹே பகவன்! இவ்வுலகத்தே சத்துருவை வெற்றிகொள்ளும் பொருட்டுச் சாமம், தானம், பேதம், தண்டம், என்னும் நான்குபாயங்கள் உள்ளனவாம். அவற்றுண் முதன் மூன்றால் வசமாகாத சத்துருவைவெற்றிகொள்ளத் தண்டோபாயஞ்செய்க; ஆனல் அம்மூவுபாயங்களைச் செய்யாமலே முதலிலேயே அத்தண்டரூப உபாயஞ்செய்தலுசிதமன்றும்.

சமாதானம் :—ஸ்ரீ பகவான் அக்காமரூபசத்துருவை வெற்றிகொள்வதில் முதன் மூவுபாயங்கட்கு அசம்பவங் கூறியருளும்பொருட்டு அச்சத்துருவிற்கு இரண்டு விசேஷணங் கொடுத்தருளுகின்றார். "மஹாஶநோ மஹாபாப்மா" மகாஆகாரம் எதற்கோ, அது மகாசனமெனப்படும்; அத்தகையது காமமாம். கருத்திதுவாம் :—அநேகவகையாய மகாபோகங்களையடைந்தும் இக்காமம் திருப்தியை ஒருகாலும் அடைவதின்றும் இவ்வார்த்தை ஸ்மிருதியின்கண்ணும் கூறப்பட்டுளது.

"நஜாதகாமஃ காமாநாமுபபோகேந சாம்யதி ।
ஹவிஷாகிருஷ்ணவர்த்மேவ பூய ஏவாபிவர்தத ॥
யத்ரயத்ரவ்ரஜேத்காமம் ஹிரண்யம்வாபவாஸ்ரியஃ
தத்ரதத்ரகதஸ்யாபி சுக்ராபசம்வ்ரஜேத் ॥

(போ-ள்.) இக்காமம் பதார்த்தபோகத்தால் ஒருகாலும் சாந்தியையடைவ தின்றும்; மற்றும், அக்கினியானது நெய் காஷ்டம் முதலியவற்றைப் பெய்தலால் விருத்தியடைவதேபோல இக்காமமும் மிகு பதார்த்தபோகத்தால் நாடோறும் விருத்தியையடையும். இப்பிருதிவியின்கண்ணே நெற்கோதுமை முதலிய அன்னங்களும், பொன்முதலிய தனங்களும், கோ அசுவாதி பசுக்களும், சுந்தர ஸ்திரீகளும், மற்றும் பிறவும் இச்சையையுடைய ஒரு புருஷனுக்குக் கிடைப்பினும், அவை யாவும் காமத்தைத் திருப்திசெய்வதில் சமர்த்துடையதாகாவாயின், அற்ப போகங்களால் இக்காமசாந்தியெவ்வாறுகும்? மற்றும், ஆகாதாம்; இவ்வாறாய்ந்து சாந்தியடையக்கடவன். ஆகையால் தானரூப உபாயத்தால் இக்காம சத்துருவசமாகான்; இவ்வாறு சாமபேதமென்னு முபாயங்களாலும் வசமாகான். என்னே? இக்காமசத்துரு 'ஹாவாவா' அதாவது, அத்தியந்தம் உக்கிரதையின்என்க. இக்காரணத்தானே இக்காமத்தாலே ஏவப்பட்டவன் பாவகருமத்தாற் றுக்கரூப பலப்பிராப்தியையறிவானாயினும், மீண்டும் அப்பாவத்தையேசெய்வன். இத்தகைய அத்தியந்த முக்கிரமாய இக்காமரூப சத்துரு சாமபேதமென்னு மிரண்டுபாயங்களால் வசப்படான். என்னே, லோகத்தே நேரான வியற்கையையுடைய சத்துருவே சாமபேதாபாயங்களால் வசமாவன் என்க. ஆகையால், ஹே அர்ச்சுன! இச்சம்சாரத்தே நீயிக்காமத்தையே பகைவடிவமாயறிதி. (37)

(அ-கை.) ஆண்டுப் பூர்வ சுலோகத்தே அத்தியந்தம் உக்கிரரூபமாய் அக்காமத்தே கூறியருளிய சத்துருத்தன்மையை இப்போது மூன்று திருஷ்டாந்தங்களால் வெளிப்படுத்தியருளுகின்றார் :—

சு-ம். யதோதாவ்ரியதே வஹ்நியதோல்பேநாவ்ருதோ மலேந ।
யதோல்பேநாவ்ருதோ கர்ப ஸ்ததாதேநேதமாவ்ருதம் ॥ (38)

ப-ம். 2 யதோத 4 தூவ்ரியதே 3 வஹ்நிஃ 1 யதா 7 தூல்பேந 6 உல்பேந 5 அ 8 யதா 9 உல்பேந 11 தூவ்ருதஃ 10 மலேந 12 ததா 13 தேந 14 இதம் 15 தூவ்ருதம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எங்ஙனந் தூமமானது அக்கினியை மறையாநிற்குமோ இரஜரூபமலம் தர்ப்பணத்தை மறையாநிற்குமோ, ஜராயுசரூபம் கர்ப்பத்தை மறையாநிற்குமோ அங்ஙனம், காமம் ஞானத்தை மறையாநிற்கும். (38)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இத்தூலதேக ஆரம்பத்தின்முன்னர் அந்தக்கரணம் காமாதி விருத்திகளையடையாததலின், இத்தூல முதிப்பதற்குமுன்னந்தக்கரணம் சூக்ஷ்மமெனப்படும். அறம்பாவத்தாலுண்டாய இத்தூலத்தேயிருந்து அந்தக்கரணம் காமாதி விருத்திகளையடையுமாதலின், தூலசரீராவச்சின்ன அந்தக்கரணத்தின்கண்ணபிவியக்தியையடைவுற்ற அக்காமம் தூலமெனப்படும். அதுவே விஷயங்களின் சிந்தன அவஸ்தையின்கண்ணே அடிக்கடி விருத்தியாகி தூலதாமெனப்படும். அதுவே விஷயபோகாவஸ்தையில் அத்தியந்தம் விருத்தியாகி தூலதமம் எனப்படும். ஈண்டு தூலத்திலும் அதிகதூலம் தூலதராமாம், அதனிலும் அதிகதூலம் தூலதமமாம். இவ்வாறவ்வொரேகாமம் கூறிய மூவவஸ்தைகளையெய்தும். ஆண்டதன்றன் முதற்றூலாவஸ்தையின்கண்ணே திருஷ்டாந்தம் கூறியருளப்பெறுகின்றது. "யதோதாவ்ரியதேவஹ்நிஃ" என. ஹே அர்ச்சுன! அக்கினியோ

டுண்டாய அப்பிரகாசரூப ஞமம் பிரகாசரூப அக்கினியை மறைப்பதேபோல இத் தூலகாமம் ஞானத்தைமறைக்கும். இப்போது அதன் றன் இரண்டாவது தூலதர அவஸ்தையின்கண்ணே திருஷ்டாந்தங் கூறியருளப்பெறுகின்றது. ''யயாஉபொஷ உலெகஅ'' என ஹே அர்ச்சுன! கண்ணுடியினின்றும் பின்னருண்டாய இரஜ ரூபமலம் அதனை மறைப்பதேபோல இத்தூலதரகாமமும் ஞானத்தை மறைக்கும். இப்போது அதன்றன் மூன்றுவது தூலதம அவஸ்தையின்கண்ணே திருஷ்டாந் தங் கூறியருளப்பெறுகின்றது. ''யயொஎவ்ஹாவ்ரதம் மஹஃ'' என. ஹே அர்ச் சுன! தாயுதரத்தேயிருக்குங் கர்ப்பத்தை எல்லாப்புறத்தும் மூடிக்கொண்டிருக் கும் ஜராயுசருமம் கர்ப்பத்தைமறைப்பதேபோல இத்தூலதமமும் ஞானத்தை மறைக்கும். ஈண்டிம்முத்திருஷ்டாந்தத்தேதபரஸ்பரம் இத்துணை விசேஷத்தன் மையுளது:—தூமத்தால் மறைபடினும் அக்கினி தாகாதிரூப தனது காரியத்தை யவசியஞ்செய்யும். இரஜரூபமலத்தால் மறைபட்ட தர்ப்பணமோ பிரதிபிம்பக் கிர கணரூபதன் காரியத்தைச் செய்யாதாம். தர்ப்பணத்தின் சுவச்சத்தன்மைமாத் திரம் இரஜரூபமலத்தால் மறைபட்டுநிற்கும்; ஆனால், அது சொரூபமாயோ பிர தீதியாய்க்கொண்டிருக்கும். ஜராயுவென்னும் சருமத்தால் மறைபட்ட கர்ப்பமோ ஹஸ்தபாதாதிகளை யசைத்தல்வடிவ தனது காரியத்தையும் செய்யாது தனது சொரூபமாயும் பிரதீதியாகாது. இவ்வாறு இத்திருஷ்டாந்தங்களின் விலக்ஷணத் தன்மையை யங்கீகரித்தே அக்காமத்தைத் தூலம், தூலதரம், தூலதமம் என்னும் மூன்றவஸ்தைகளில் முறைப்படி மூன்று திருஷ்டாந்தங்கள் மொழியப்பெற்றன.()

(அ-கை.) ஆண்டுப் பூர்வசுலோகத்தில 'தயாதெநஉஆவ்ரதம்' எனக் கூறி யருளப்பட்ட சங்கிரக வசனத்தின் பொருளை இப்போது விஸ்தாரமாய்க் கூறியரு ளுகின்றார்:—

சு-ம். கூவ்ரதம் ஜராயுசெதெந ஜராநிதொ நித்யவைரிணா।
காமரூபெண கௌந்தெய துஷ்பூரெணானலெந அ ॥ (39)

ப-ம். 4 கூவ்ரதம் 3 ஜராயம் 2 வதெதந 5 ஜராநிதஃ 6 நித்யவைரிணா 7 காம
ரூபெண 1 கௌந்தெய 10 துஷ்பூரெண 8 அநலெந 9 அ.

(அ-ம்.) ஹே கௌந்தேய! இக்காமமே ஞானத்தை மறைப்பதாம், இக்கா மம் ஞானிகட்கு நித்தியமும் வைரியாம், இச்சை திருஷ்ணைவடிவமாம், அக்கினி பைப்போலப் பூர்த்தியற்றதாம். (39)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! வஸ்துவையறியும் ஞானமென்னு மந்தக்கரணத் தானே வஸ்துவறியப்பெறும். அல்லது, அந்தக்கரணத்தின் விருத்திவடிவ விவேக விஞ்ஞானமாய ஞானத்தை இக்காமமே மறைத்திருக்கின்றது.

சங்கை:—ஹே பகவன்! இக்காமம் அந்த ஞானத்தை மறைத்திருப்பினும், அவிசாரசித்த சுகதேவதுவாதலின் இக்காமம் கவர யோக்கியமாம்.

சமாதானம்:—ஸ்ரீ பகவானருளிச்செய்கின்றார். 'ஜராநிதொ நித்யவைரிணா' ஹே அர்ச்சுன! இக்காமம் ஞானிகட்கோ நித்தியமும் வைரியாம்; ஏனெனின், அஞ்ஞானியோ விஷயபோககாலத்தே அக்காமத்தை மித்திரனைப்போன்றே யறி கின்றனன்; அக்காமகாரியரூபதுக்கம் வந்து அடைவுறிலோ இக்காமமே எனக் குத் துக்கத்தை யடைவித்ததென அதனைச் சத்துருவாயெண்ணுவதலின், அஞ் ஞானிகட்குக் காமம் நித்தியமும் வைரியன்றும்; மற்றோ, துக்கபரிணாமகாலத்தே வைரியாம் ஞானியோ விஷயபோககாலத்தும் இக்காமமே என்னை இவ்வநர்த்தத் தின்கண்ணே யேவியதெனக் காமத்தை வைரியேயாயெண்ணுவதலின், ஞானி

விடயபோககாலத்தும், துக்கபரிணமகாலத்தும் இக்காமத்தால் துக்கியாயாவன். இக்காரணத்தால் இது ஞானிக்கு நித்தியமும் வைரியாம் வைரியாமிதனை ஞானி அவசியமாய்க் கொல்லல்வேண்டும்.

சங்கை :—ஹே பகவன்! இக்காமவடிவத்தை யறியாது கொல்லல் சம்பவியாதாதலின், இதன் வடிவத்தைக் கூறியருளல்வேண்டும்.

சமாதானம் :—ஸ்ரீபகவான் கூறியருளுகின்றார். 'காமஏவெண' என. ஹே அர்ச்சுன! இச்சை திருஷ்ணவடிவ காமமேமயாயுள்ளது.

சங்கை :—ஹே பகவன்! அக்காமம் விவேகிக்கு நித்தியமும் வைரியாமாதலின் விவேகியோ அதனை யவசியமாய்க் கொல்லல்வேண்டுமாயினும் அவிவேகிக்கது நித்தியவைரியன்றுதலின், அவனே அதனை யவசியம் கவரவேண்டும்.

சமாதானம் :—ஸ்ரீபகவான் அருளுகின்றார். 'ஊஷ்மாஎணாகயெநம' என. ஹே அர்ச்சுன! அக்கினியானது நெய் விறகு முதலியவற்றாற் றிருப்தியடையாததேபோலக் காமமும் பல்வகையாய போகங்களினாலும் திருப்தமாகாதாம்; இக்காரணத்தானே இக்காமம் நிரந்தரம் சந்தாபஹேதுவாமாதலின் விவேகியைப்போலவே அவிவேகியும் அக்காமபரித்தியாகமேமசெய்க. அல்லது,

சங்கை :—ஹே பகவன்! இவ்வுலகத்தே உண்டாமிச்சைகளெல்லாம் விரும்பிய விடயங்கிடைப்பின் நீங்கிவிடும்; இக்காமமும் இச்சைவடிவமேயாதலின் அவ்வவ்விடயபோகத்தால் தானே நீங்கிவிடும்; அதனை நீக்குவான் வேறுபாயத்திற்கு யாதொரு பயனுமின்றும்.

சமாதானம் :—ஸ்ரீபகவானருளிச்செய்கின்றார். 'ஊஷ்மாஎணாகயெநம' என. ஹே அர்ச்சுன! விடய அடைவுகாலத்தே அவ்விச்சை மறைபடினும் காலாந்தரத்தே மீண்டும் அது கிளம்புமாதலின், விடய அடைவு அவ்விச்சையின் நிவர்த்தகமன்றும்; மற்றே, விடயங்களிடத்தே அடிக்கடி தோஷதிருஷ்டியே அவ்விச்சையின் நிவர்த்தகமாம். (39)

(அ-கை) ஹே பகவன்! இவ்வுலகத்தே இடமறியப்பெற்ற சத்துருவே ஜயிக்கப்பெறுவன்; இடமறிந்தாலன்றி ஜயிக்கப்பெறுதலின், இக்காமசத்துருவை ஜயிக்கும்பொருட்டு முதலில் இதனதிஷ்டானத்தை யறிதல்வேண்டும். எவ்வதிஷ்டானத்தைப்பற்றிநின்று இக்காமம் உலகர்க்கு அநர்த்தத்தையியுமோ அவ்வதிஷ்டானம் யாதாம்? என அருச்சுனற்கு ஆசங்கை நிகழ ஸ்ரீ பகவான் அக்காமாதிஷ்டானத்தைக் கூறியருளுகின்றார் :—

சு-ம். இம்த்ரியாணி மநோ புத்திரஸ்யாயிஷ்டாநமுச்யதே।
ஏதைர்விமோஹயத்யேஷ ஜ்ஞாநமாவ்ருத்ய தேஹிநம் ॥ (40)

ப-ம். 1 இம்த்ரியாணி 2 மநஃ 3 புத்திஃ 4 அஸ்ய 5 அயிஷ்டாநம் 6 உச்யதே 7 ஏதைஃ 12 விமோஹயதி 8 ஏஷஃ 9 ஜ்ஞாநம் 10 ஆவ்ருத்ய 11 தேஹிநம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இந்திரியம், மனம், புத்தி, என்னுமிம்மூன்றுமே இக்காமாதிஷ்டானமென வியம்பப்பெறும். இம்மூன்றினுமே இக்காமம் ஞானத்தை மறைத்துத் தேகாபிமானிகட்கு மோகத்தைக்கொடுக்கும்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சப்தாதியைந்தையும் முறைப்படி விஷயஞ்செய்யும் சுரோத்திராதி ஐந்து ஞானேந்திரியம், வசனாதியைந்தையும் முறைப்படி யாற்றும் வாக்காதி ஐந்து கருமேந்திரியம் என்னும்பத்து, சங்கற்பவடிவமனம், நிச்சய

வடிவபுத்தி, என்னுமிம்மூன்றுமே இக்காமாதிஷ்டானமாய்க் கழறப்பெறும். இம் மூன்றினை இது விவேகஞானத்தை மறைத்துத் தேகாபிமானியை நாலுவகை யாய மோகத்தையடையுமாறு செய்யும். (40)

(அ-கை.) அவ்விந்திரியாதிகளைப்பற்றியே இக்காமம் தேகாபிமானியைஅநே கவகை மோகமடையுமாறு செய்யுமாதலின், நீ முதலில் அவ்விந்திரியாதிகளையே வெற்றிகொள். அவை வெற்றிகொள்ளப்படவே அக்காமமும் எளிதாகவே வெற்றி கொள்ளப்படும் என்னும் பொருளை ஸ்ரீபகவான் அருச்சுனனைநோக்கி யறைந்தரு ளுகின்றார் :—

சு-ம். தஸ்மாத்த்வமிந்த்ரியாண்யாதௌ நியம்ய ஹ்யேனம் பாப்மானம் ப்ரஜஹிஹ்யேனம் ஜ்ஞானவிஜ்ஞானநாஶனம் ॥ (41)

ப-ம். 2 தஸ்மாத் 3 த்வம் 5 இந்த்ரியாணி 4 ஆதௌ 6 நியம்ய 1 ஹ்யேனம் 7 பாப்மானம் 11 ப்ரஜஹி 10 ஹி 9 ஏனம் 8 ஜ்ஞானவிஜ்ஞானநாஶனம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அதனால் நீ முதலில் அவ்விந்திரியங்களை வயஞ் செய்து சர்வபாவமூலபூதமும் ஞானவிஞ்ஞான நாசஞ்செய்வதுமாய இக்காமத் தையே நாசமாக்குதி.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஓரரசனுக்குப் பர்வதம் துர்க்கம் முதலன அதிஷ் டானமாயிருப்பதேபோல இக்காமத்திற்குச் சுரோத்திராதியே அதிஷ்டானமா மாதலின், நீ இக்காமமாக்கியமோகத்தின்முன்னேனும், இக்காமநிரோதத்தின் முன்னேனும், அச்சுரோத்திராதிகளை வயஞ்செய்து இக்காமத்தை நாசஞ்செய்தி. அவ்விந்திரியங்களை வயஞ்செய்தாலன்றி இக்காமநாசம்செய்ய வியலாதாம். மூல துர்க்காதியின்கண்ணேயிருக்கும் ஓர் அரசனுடைய அவற்றைத் தன்வயஞ்செய் தே மற்றோரரசன் அவ்வரசனைக்கொல்வன், அவற்றை வயஞ்செய்யாமல் கொல்ல முடியாததேபோல இந்திரியங்களை வயஞ்செய்யாமற் காமநாசமாகாதாம்; அவற் றை வயமாக்கியபின்னர் மனம் புத்தியென்னுமிரண்டும்வயமாதலாம்; எனெனின், சங்கற்பரூபமனமும் நிச்சயரூபபுத்தியும் பாகியேந்திரியஜன்னிய விருத்திகள்வாயி லாயே அநர்த்தகாரணமாம், அவையின்றி அவ்விரண்டின்கண்ணே அத்தன்மை சம்பவியாதாமாதலின் அப்பொறிகள் வயமானபின்னர் அவ்விரண்டும் அவசியமாய் வயமாம். இக்காரணத்தானே பூர்வசுலோகத்தே 'இந்த்ரியாணி ஏதைராஹ' என்னும் வசனத்தால் இந்திரியம், மனம், புத்தி என்னும் மூன்றையும் வேறுவே ரூய்க்கூறியருளியும் இச்சுலோகத்தே 'இந்த்ரியாணி' என்னும் வசனத்தால் கேவலம் சுரோத்திராதி இந்திரியங்களையே கூறியருளினர். அல்லது பாகிய சப்தா திகளின் ஞானத்தே சுரோத்திராதிகட் கிந்திரியரூபத்தன்மை யிருப்பதேபோல உட்சுகதுக்காதிகளின் ஞானத்தே மனபுத்திகட்கும் இந்திரியரூபத்தன்மையாம். ஆதலின், 'இந்த்ரியாணி' என்னும்பதத்தால் மனபுத்திகளின் கவர்ச்சியுமுண் டாம். ஈண்டு 'ஹ்யேனம் பாப்மானம்' இச்சம்போதனத்தைக் கூறியருளலால் ஸ்ரீபக வான் இப்பொருளைக் குறிப்பித்தருளினர் :—மகாபாரதவம்சத்தே நீ யுதித்தனையாத லின் இந்திரியங்களை வயஞ்செய்வதில் வல்லவனுவாய்.

சங்கை :—ஹே பகவன்! இவ்வுலகத்தே மகாஅபராதத்தைச்செய்தவனையே அரசர்முதலாயினோர் அழிப்பர் அபராதமின்றியெவனையும் எவரும் அழியார். அவ்வாறெவ்வபராதத்தையிக்காமம்செய்தது? அபராதமிருப்பினன்றே யானதை நாசஞ்செய்தல்வேண்டும்.

சமாதானம்;—ஸ்ரீபகவான் இக்காமமியற்றிய அபராதத்தை வருணித்தருளு கின்றார். "வாஹ்நம் ஜ்ஞானவிஜ்ஞான நாஶனம்" என. ஹே அர்ச்சுன! இச்

சீவன் இக்காமவசமாயே சர்வபாவங்களையுஞ்செய்வன் ; காமமின்றியவன் எப்பாவத்தையுஞ்செய்யாததலின் அன்வயவியதிரேகத்தால் இக்காமமே எல்லாப்பாவங்கட்கும் மூலரூபமாம். குருசாஸ்திர உபதேசசத்தாலுண்டாய ஆன்மபரோக்ஷஞானம், அதன்பலமாய அபரோக்ஷவிஞ்ஞானம் என்னும் மோக்ஷத்தையடைவிக்குமிசண்டையும் இக்காமம் நாசஞ்செய்வதாம். இத்தகைய மகா அபாதமுடைய காமத்தை யவசியம் நாசஞ்செய்யவேண்டும். (41)

சங்கை :—(அ-கை.) ஹே பகவன்! இக்காமநாசஞ்செய்யும்பொருட்டுப் பூர்வம் தாங்கள் இந்திரியவயஞ்செய்யக் கூறியருளினீர்கள் அஃதொருவாறு பாகிய சுரோத்திராதிகளை வயஞ்செய்தல் கூடுமாயினும் உட்டிருஷ்ணையைத்தியாகித்தல் மிகவும் கூடாததாம்.

சமாதானம் :—ஹே அர்ச்சுன! 'ஸவொவயஷ்யவரம் உஷ்ணாநிவதுஷ்டெ' என்னும் வசனத்தே முன்னர் யாம் பரவஸ்துவின்றரிசனமே இரசரூப திருஷ்ணையின் நிவிருத்தியின்கண்ணே காரணமெனக் கழறிவந்தேம். ஹே பகவன்! எப்பரவஸ்துவின்றரிசனத்தால் அத்திருஷ்ணை நீக்கமாமோ அப்பரவஸ்துயாதாமென அர்ச்சுனனது ஆசங்கை நிகழ, ஸ்ரீ பகவான் அப்பரசப்தத்தின் அர்த்தரூப தூய ஆன்மாவைத் தேகாதிகளினின்றும் வேறுபடுத்தி நிரூபித்தருளுகின்றார் :—

சு-ம். ஹம்த்ரியாணி வராணயாஹுர் ஹிம்த்ரியெப்யஃ வரம் உரஃ।
உரஸஸ்துர் வராபுத்தியெ ரபுஸ்துஃ வரதஸ்துர்ஹஃ॥ (42)

ப-ம். 1 ஹம்த்ரியாணி 2 வராணி 3 சூஹுர்ஃ 4 ஹம்த்ரியெப்யஃ 6 வரம் 5 உரஃ 8 உரஸஃ 7 துர் 10 வரா 9 புத்தஃ 12 யஃ 13 புத்தெஃ 14 வரதஃ 11 துர் 15 ஹஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சுருதிகள். இத்தூலத்திலும் சுரோத்திராதிகள் பரங்கள் எனக் கூறும், இந்திரியங்களிலும் மனம்பரமாம், மனத்திலும் புத்திபரமாம், புத்தியிலும் யாதுபரமாமோ அதுவே பரமான்மாவாம்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தூலமும் ஜடமும் பரிச்சின்னமும் பாகியமும் ஆயதேகாதிகளை யபேக்ஷித்துச் சுரோத்திராதிகள் சூக்ஷுமமும் பிரகாசகமும் வியாபகமும் உட்டிதமும் ஆமாதலின், வேதவேத்தாக்கள் அல்லது சுருதிகள் தேகாதிகளினும் சுரோத்திராதிகள் பரங்கள் அதாவது உற்கிருஷ்டங்கள் எனக் கூறும். இங்ஙனம் மேலுமறிக. சங்கற்ப விகற்பரூபமனமே சுரோத்திராதிகளையேவுவதாம்; மனத்தானன்றி அவற்றின் பிரவிருத்தியுண்டாகாததலினே மனசாவதானத்தானன்றிச் சமீப வஸ்துவிற்கும் நேத்திராதிகளால் கவர்ச்சி யேலாததலின், சுரோத்திராதிகளினும் மனம் பரமாம். நிச்சயரூப புத்திபூர்வகமாயே மனஸ்சங்கற்பமுண்டாம் அஃதின்றியஃதுண்டாகாதாமாதலின் மனத்திலும் புத்திபரமாம். எவ்வான்மாப் புத்தியின் பிரகாசகமாதலின் புத்தியினும் பரத்தேயிருக்குமோ, எத்தேகியாய ஆன்மாவிற்கு இந்திரியாதி யாசரயங்களோடுகூடிய இக்காமம் ஞான ஆவரணவாயிலாய் மோகத்தையடைவிக்குமோ அப்புத்தியைக் காணுஞ் சாக்ஷியான்மாவே பரசப்தத்தின்பொருளாம். ஈண்டு "புத்தெஃ வரதஸ்துர்ஹஃ" என்னும் வசனத்தின்கண்ணேயிருக்கும் 'ஹஃ' என்னும் பதத்தால் வியவதானமற்ற வஸ்துவின் பராமர்சமேயாமன்றி மற்றதாகாதாயினும் சுருதியின் கண்ணே, "சூதெவெஉஉம்ர சூஹீக்ஃ" என்னும் வசனத்தால் ஆன்மாப் பிரதிபாதிக்கப்பட்டு அதன்பின்னர் அநேக பதார்த்தங்கள் பிரதிபாதிக்கப்பட்டு அதன்பின்னர் "ஸவனஷ் ஜஹவ்ரவிஷ்ஃ" என்னும் வசனங்கூறப்பெற்றுளது. இதன்

கண்ணேயிருக்கும் 'ஹி' என்னும் பதத்தால் முன்னர், "சூதெதேவெஉஉறு சூஸீசு" என்னும் வசனத்தின்கண்ணே கூறப்பெற்ற வியவகித ஆன்மாவையும் பராமரிசம் செய்திருப்பதேபோல ஈண்டும் 40-வது சுலோகத்தே. "தெஹிநழி" என்னும் பதத்தால் கூறப்பெற்ற ஆன்மாவின் பராமரிசம் 'ஹி' என்னும் பதத்தாற் சம்பவித்தல்கூடும்.

"ஊஜியெஹ்யீ வராஹ்யுடூ சுயெடூஹ்யீச்சுவராஉநீ ।
உநஹஸ்ஸு வராவைஷிவெடூஜெராத்தா உஹாநராீ ॥
உஹதீவராவ்யக்த உவ்யக்தாத்ஸ்வராஷீ வராீ ।
வராஷாந்த வராங்கிஷிசு ஹாகாஷ்டா ஹாவராமதிீ" ॥

(பொ-ள்.) சுரோத்திராதிகளினும் சப்தாதிகள் பரமாம், அவற்றினும் மனம்பரம், அதனினும் வியஷ்டிபுத்திபரம், அதனினும் ஹிரண்யகர்ப்பரது சமஷ்டி-புத்திபரம், அதனினும் மாயைவடிவ அவ்வியாகிருதம்பரம், அதனினும் சர்வ ஜடங்களையும் ஒளிர்விக்கும் பூரண ஆன்மாப்பரம். இத்தகைய பரிபூரண ஆன்மாவினும் யாதாவது பரமாயுண்டோவென ஆசங்கையுண்டாகச் சாகூஷாத் சுருதி பகவதியானவள் உத்தரங்கூறுகின்றுள்:—'வராஷாந்தவராங்கிஷிசு' என. அப்பரமான்மாவினும் பரமாயெப்பொருளுமின்றும். இதனேன அப்பரமான்மாவே காஷ்டைவடிவமாம், அதாவது சர்வாதிஷ்டானமாதலின் சமாப்தி வடிவமாம். "ஹொஉயுநீ வராஎஹொதிதஷிஷ்ணீ வராஉம்வஉழி" என்பதாதி சுருதிகளாற் சித்தமாய பராகதிரூபமும் அப்பரமான்மாவேயாம். இவ்வெல்லாப்பொருளையும் "யொவைஜெீ வரதஹ்வாஹீ" என்னும் வசனத்தால் ஸ்ரீ பகவான் அருளிச்செய்தனர். ஈண்டுச்சுருதிக்கும் பகவத்வசனத்திற்கும் ஆன்மபரத்வத்திலேயதாற்பரியமாமன்றி இந்திரியாதிகளின் பரத்வத்திற்றுற்பரியமின்றும். சுருதியின் கண்ணே "ஊஜியெஹ்யீ வராஹ்யுடூீ" என்னும் வசனமிருக்குந்தானத்தே ஸ்ரீ பகவானுனவர் "சுயெடூஹ்யீ வராணீஜியாணி" என்னும் வசனத்தைக் கூறியருளினர். ஆண்டுச் சப்தாதிகளில் இந்திரியத்தினும் பரத்வம் சம்பவித்தலேபோல முற்கூறிய ஹேதுவால் இந்திரியங்களிடத்தும் தேகாதிகளினும் பரத்வஞ் சம்பவிக்குமாதலின் அச்சுருதி.வசனத்தோடு ஸ்ரீ பகவானது வசனத்திற்கு மூரணுண்டாகாதாம். இவ்விரு சுருதிகளின்பொருளை ஸ்ரீ ஆத்மபுராணத்தின் ஒன்பதாவது அத்தியாயத்தே யாம் விஸ்தாரமாய்க் கூறியிருக்கின்றேம். (42)

(அ-கை.) இப்போது பூர்வவசனங்களாற் சித்தித்த பலிதார்த்தத்தை ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்:—

சு-ம். வனவம் வைஜெீ வராம் வைஷ்வா ஸம்ஹ்ருஹ்யாதாஉஉதாஉஉதா ।
ஜஹி ஸதராம் உஹாவாஹொ காஉராவம் உராஹழி ॥ (43)

ப-ம். 2 வனவம் 3 வைஜெீ 4 வராம் 5 வைஷ்வா 8 ஸம்ஹ்ருஹ்யீ 6 சூதாஉம் 7 சூதாஉமா
12 ஜஹி 11 ஸதராம் 1 உஹாவாஹொ 9 காஉராவம் 10 உராஹழி.

(அ-ம்.) ஹே மகாபாகுவையுடைய அர்ச்சுன! இவ்வாறு ஆன்மாவைப் புத்தியினும் பரமெனவறிந்து மனத்தை நிச்சயமய புத்தியாற்றிரஞ்செய்து இத்திருஷ்ணவடிவமாய்த் துக்கத்தால் வயமாம் காமசத்துருவை நீ நாசஞ் செய்தி.()

(வி-ம்) ஹே அர்ச்சுன! "ராஹொவயுஹ்யீவராம்உவ்ஷாநிவதாழதெ" என்னும் சுலோகத்தே பாசப்பதத்தாற் கூறப்பெற்ற பரிபூரண ஆன்மாவைப் புத்தியினும் பரமெனச் சாகூஷாத்கரித்து, இச்சாகூஷி புத்தியினும் பரம் என்னும் நிச்சய

புத்தியால் மனத்தை ஸ்திரஞ்செய்து நீ சர்வபுருஷார்த்தத்தையும் நாசஞ்செய்யும் இக்காமசத்துருவை நாசஞ்செய்தி. இது இச்சை திருஷ்ணைவடிவமாம், பரமான்ம சாக்ஷாத்காரமின்றி மிகுந்த துயரானுங் கெடுக்கவொண்ணாததாம். இத்தகைய காமம் நசித்தபின்னர் சர்வ அநர்த்த நிவிருத்தியுண்டாம். இதனழிவின்றி ஜன்மமரணாதி யநர்த்த நிவிருத்தியுண்டாகாதாம். ஈண்டு, 'ஊஸாஸஂ' எனக் காமத்திற்குக்கூறியருளிய விசேஷணம், இதனையழிக்கும்பொருட்டு அதிகாரி அத்தியந்தம் அதிகமாகமுயல்கவென்னும் பொருளைத் தெரிவித்தருளும்பொருட்டாம். ஹே மகாபாஹோ, வென்னும் சம்போதனையால் ஸ்ரீ பகவான் இப்பொருளைக் குறிப்பித்தருளினர் :—மகா பராக்கிரமத்தையுடைய உனக்கு இக்காமசத்துருவை நாசஞ்செய்தல் அத்தியந்தம் சுகமம் என்பதாம். இம்மூன்றாவது அத்தியாயத்தின் சார்வார்த்தங்களையும் சுருக்கிக்கூறுஞ் சுலோகமிதுவாம் :—

"உவாயகூஉநிஷாத்ர வ்ராயாத்ரயநோவஸஂஹ்ரயதா ।
உவெயாஜ்ஞாநநிஷாதா தஜ்ஞாணக்ஷேத்ர கீத்ருதா ॥

(போ-ள்.) ஞானநிஷ்டையின் உபாயவடிவ நிஷ்காம கர்மநிஷ்டை இம்மூன்றாவது அத்தியாயத்தே பிரதானமாய்ப் பிரதிபாதிக்கப்பட்டது, பலரூப ஞானநிஷ்டையோ கௌணரூபமாய்க் கூறப்பெற்றது. (43)

ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமத்உத்தவாநந்தகிரிசுவாமிகளது பூஜ்யபாதசிஷ்யராகிய ஸ்ரீ சித்கணனந்தகிரிசுவாமிகளால் இயற்றியருளிய பிராகிருத கூடார்த்ததீபிகை எனப் பெயரிய வியாக்கியானத்தின்

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

நான்காவது அத்தியாயம்.

ஓம் ஸ்ரீ கணேசாயநமஃ ஸ்ரீ குருப்யோநமஃ ஸ்ரீ காசிவிச்வேச்வராப்யாம்நமஃ
ஸ்ரீ சங்கராசார்யேப்யோநமஃ.

(அ-கை.) ஆண்டுப் பூர்வாத்தியாயத்தே உபாயத்தாலடைய யோக்கியமாய உபேயரூப ஞானயோகம், அதன் உபாயமாய கருமயோகம் என்னுமிரண்டினையும் முறைப்படி உபேயமாகவும் உபாயமாகவும் ஸ்ரீபகவான் கூறியருளினர். ஆயினும், "ஸஂஹாஂவ்யஂயொமஂயஃவஸ்யதிஸ்வஸ்யதி" எனக்கூறியருளும் வசனரீதியாய்ச்சாத்தியரூப ஞானயோகம், அதன் சாதனரூப கருமயோகமென்னும் இரண்டுயோகங்களின் பலவொருமையால் ஒருமையைக் கூறியருளி அவ்விரண்டு யோகத்தையும் அநேகவித குணவிதானத்தின்பொருட்டு ஸ்ரீ பகவான் வித்யாவம்சத்தைக் கூறும்வாயிலாய்த் துதித்தருளுகின்றார் :—

ஸ்ரீஹமவாநு உவாச.

சு-ம். உஏஂ விவஸ்வதே யொமம் ப்ரொக்தவாநஹமவ்யயஂ ।
விவஸ்வாந்மநவே ப்ராஹ மநுரிக்ஷ்வாகவேஃப்ரவீத் ॥ (1)

ப-ம். 2 ஊஉம விவஸ்வதெ 4 யொமம 6 வ்ரோக்தவாநு 1 ஈஹம 3 ஈவர்யம 7 விவ
ஸ்வாநு 8 உதவெ 9 ப்ராஹ 10 உதாஃ 11 ஊக்ஷாகவெ 12 ஈப்ரவீக்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யாம் இந்நாசமற்ற ஞானயோகத்தை முதலில் சூரியனுக்குபதேசித்தனம், அச்சூரியன் தனது மனுவென்னும் புத்திரனுக்குப தேசித்தனன், அம்மனு தன்னிக்ஷ்வாகுவென்னும் மைந்தனுக்கு உபதேசித்தனன். (1)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! துவிதீய திருதீய அத்தியாயங்களாற் கூறப்பெற்ற எஞ்ஞானநிஷ்டையாகிய ஞானயோகம் கருமநிஷ்டையாகிய கருமயோக உபாயத்தால் அடையப்பெறுமோ அதனைச் சர்வசகத்தையுங் காப்பாற்றும் வாசுதேவராகிய யாம் சிருஷ்டியின் ஆதிகாலத்தே சூரியன்பொருட்டு உபதேசித்தனம், அவன் சர்வ க்ஷத்திரியவம்சத்திற்கும் விரையாவன். கருத்துவாம்:—ஞானயோக அடைவுவாயிலாய் அரசர்களிடத்தே பலத்தையுண்டாக்கி அவ்வரசரதீனமாய்ச் சர்வஜகத்தையுங் காக்கும்பொருட்டு யாம் அவர்களுக்கு ஞானயோகத்தைக் கூறினேம். ஹே பகவன்! இந்த ஞானயோகத்தால் அவ்வரசர்கள்பால் எவ்வாறு பலமுண்டாம்என அர்ச்சுனனது ஆசங்கைநிகழ, ஸ்ரீபகவான் இந்தஞானயோகத்தே விசேஷணமாய்ப்பலமுண்டாங்காரணத்தன்மையை நிரூபித்தருளுகின்றார் 'ஈவர்யம்' என. ஹே அர்ச்சுன! நாசமற்ற வேதபகவானே ஞானயோகத்திற்கு மூலரூபமாமாதலின் இது அவ்யய நாமத்தாற்கூறப்பெறும். அல்லது, ஞானயோகபலமாய மோக்ஷம் நாசமற்றதாமாதலினாலும் இது அவ்யயமெனப்பெறும். இவ்வாறு வேதரூபமூலத்தாலும் மோக்ஷபலத்தாலும் நாசமற்ற ஞானயோகத்தே அரசர்கட்குப் பலமுண்டாந்தன்மை சம்பவிக்கும். ஹே அர்ச்சுன! எமதுசீடனாகிய சூரியன் தனது வைவஸ்வதமனுவென்னும் புத்திரன்பொருட்டு இந்த ஞானயோகத்தை யுபதேசித்தனன், அம்மனு தனது இக்ஷ்வாகு மைந்தன்பொருட்டு இதனை யுபதேசித்தனன், அவ்விக்ஷ்வாகு சர்வராஜாக்களினும் ஆதிராஜாவாம். ஸ்ரீபகவானதுபதேசம் மன்வந்தரந்தோறும் ஸ்வாயம்புவமனுவாதி சர்வமனுக்கட்கும் சாதாரணமேயாமாயினும், இப்போதிருக்கும் வைவஸ்வதமன்வந்தர அபிப்பிராயத்தால் ஸ்ரீபகவான் சூரியனிலிருந்து வித்தியா சம்பிரதாயத்தை எண்ணிக்கை செய்தருளினர். (1)

(அ-கை.) அன்றியும்:—

சு-ம். ஹவம வரம்வராவ்ராவ்ருதம ராஜர்ஷ-யொ விது: ।
ஸகாலெநெஹ மஹதா யொகொ நஷ்ட: பரம்தப ॥ (2)

ப-ம். 2 ஹவம 3 வரம்வராவ்ராவ்ரம் 4 உஉம 5 ராஜர்ஷ-யஃ 6 விது: 7 ஸஃ
11 காலெந 9 இஹ 10 மஹதா 8 யொமஃ 12 நஷ்ட: 1 பரம்தப.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வாறு பரம்பரையாய் அடைவுற்ற இந்தஞானயோகத்தை இராஜஇருஷிகள் அறிந்திருந்தனர். இது இப்போது தீர்க்ககாலமாய் நஷ்டமடைந்துவிட்டது. (2)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வாறு சூரியனேமுதலாகக் குருசிஷ்யபரம்பரையாய் அடைவுற்ற இந்த ஞானயோகத்தை நிமி, ஜனகன், அஜாதசத்துரு, கைகேயன் முதலியஇராஜஇருஷிகள் சூக்ஷ்மஅர்த்தத்தையறிந்திருந்த தத்தமது ஆசிரியர் பிதாமுதலியவரிடத்திருந்தறிந்தனர். இராஜாக்களாய் இருஷிகளுமாயிருப்பவர் இராஜஇருஷிகளாவர். அதாவது, க்ஷத்திரிய அரசர்கட்கு இராஜஇருஷிகளெனப்பெயராம். அல்லது 'ராஜர்ஷ-யஃ' என்னும் பதத்தால் அரசர்களையும்

இருஷிகளையும் வேறுவேறுய்க்கவர்க. ஆண்டு இராஜசப்தத்தாலே, நிமிமுதலிய வரைக்கொள்க. இருஷிசப்தத்தாலே, சனக வசிஷ்டாதியரைக் கவர்க என்னும் பொருள் ஓருரையின்கண்ணே கூறப்பெற்றுளது. மற்றோருரையிலோ, 'ராஜ ஷுயஃ' என்னும் பதத்தால் முற்கூறியமுறையே க்ஷத்திரிய இராஜாக்களையே கொண்டுளார், ஆனல் அப்பதத்தைச் சனகவசிஷ்டாதிய ப்ராஹ்மண இருஷிகட்கும் உபலக்ஷகமாயுமங்கீகரித்துளார். ஆதலின் இஞ்ஞானயோகம் அநாதிவேத மூலகமாதலினும், நாசமற்ற மோக்ஷரூப பலஜனகமாதலினும், அநாதிகுரு சீடரின்பரம்பரையாய்ப் ப்ராப்தமாதலினும் கிருத்திரிம சங்கைக்கு விஷயமாகாதாம். கருத்திதுவாம் :—இஞ்ஞானயோகம் முன்னரின்றும்; மற்றே, இப்போது தானுண்டாயது என்னும் கிருத்திரிமசங்கை இதன்கண்ணே சம்பவியாதாம். இத்தகைய மகாமகிமைவாய்ந்தது இந்த ஞானயோகமாம். இங்ஙனம் இதன்பால் முமுக்ஷுக்கட்கு அத்தியந்தம் சிரத்தையுண்டாக்கும்பொருட்டு ஸ்ரீ பகவானுனவர் இதன்றுதியைக் கூறியருளினர். ஹே அர்ச்சுன! இத்தகைய மகாப்பிரயோஜனமுடையதேனும் ஞானயோகம் தருமக்குறைவைச்செய்யும் தீர்க்காலத்தால் இத்துவாபராந்தத்தே எமதினதுவியவகாரகாலத்தே தூர்ப்பல அஜித இந்திரிய அநதிகாரிகளையடைவுற்றுக் காமக்குரோதாதி விகாரங்களால் குன்றுதலையடைந்த தாய் விச் சின்னசம்பிரதாயமுடையதாயது இந்தஞானயோகத்தானன்றி அதிகாரிகட்கு மோக்ஷரூப பரமபுருஷார்த்தப் பிராப்தியுண்டாகாதாதலின், இவ்வுலகர்க்கத்தியந்தம் தூர்ப்பாக்கியமாம். ஈண்டு, 'ஹே வாஸுவ' என்னும் சம்போதனத்தைக்கூறலால் ஸ்ரீபகவானுனவர் இப்பொருளைக் குறிப்பித்தருளினர் : வாஸுதேவாயதீவாஸுதவஃ காமக்குரோதாதி சத்துருக்கள் பரமெனப்படுவர்; அவற்றையாவன்றன்செளரியத்தன்மையினுனேனும்,பலமாயவிவேகத்தானேனும், தவத்தானேனும் சூரியனைப்போலத்தபிப்பிப்பதே அவன் பரந்தபனெனப்படுவன்; அதாவது ஜிதேந்திரிய புருடனுக்குப் பரந்தபனெனப்பெயராம். நினது ஜிதேந்திரித்தன்மை ஊர்வசியாதி தேவாங்கனைகளை யுபேக்ஷித்தலால் பிரசித்தமேயாம் அத்தகையதலின் நீ இஞ்ஞானயோகத்தே அதிகாரியாவாய். (2)

(அ-கை) அன்றியும் :—

சு-ம். ஹ வைவாயம் யோதெஉ யொம வெ்ராகூஃ வாஸாதநஃ।

ப-ம். ஹகொவி ஜெஹவாஎதி ரஹஸ்யம் ஹெயுதஉத்தழ॥ (3)

ப-ம். 1 ஹஃ 2 வைவ 3 சுயம் 7 யோ 8 தெ 6 சுஉ 5 யொமஃ 9 வெ்ராகூஃ 4 வாஸாதநஃ 12 ஹகூஃ 13 சுவி 11 ஜெ 15 வவா 14 அ 10 உதி 19 ரஹஸ்யம் 16 ஹி 17 வைதகி 18 உதத்தழ.

(அ-ம்) ஹே அர்ச்சுன! அவ்விந்த அநாதியாய ஞானயோகமே இக்கால் எம்மால் நின்பொருட்டுபதேசிக்கப்பெற்றது நீ யெனது பக்தனும் தோழனுமாதலின், இந்தஞானயோகம் உத்தமமும் அத்தியந்தம் இரகஸ்யமுமாமாதலின்என்க.

(வி.ம்.) ஹே அர்ச்சுன! ஞானயோகத்தை முன்னர் யாம் சூரியாதி சீடர் பொருட்டுபதேசஞ் செய்தனமாயினும் இக்கால் அதிகாரிகளினபாவத்தால் விச் சின்ன சம்பிரதாயமுடையதாயது. இந்த ஞானயோகமின்றி இப்புருடர்கட்கு மோக்ஷரூப பரமபுருஷார்த்தப்பிராப்தி யுண்டாகாது. இத்தகைய குருசீடபரம்பரையால்அநாதியாய ஞானயோகமே சம்பிரதாயவிச்சேத இக்காலத்தே அதிசிநேகத்தோடுகூடிய யாம் நின்பொருட்டு விஸ்தாரமாய் உபதேசித்தனம். வேறெவனேனும் ஒருவனுக்கு யாமிதனை யுபதேசித்திலம். நீ எமது பக்தனுதலினுனும், அதாவது எமது சரணுகதியையடைந்த நீ எம்மிடத்தே அத்தியந்தம் பிரீதியுடை

யவனுதலினனும், நீயெமது தோழனுதலினனும், அதாவது எமது சமான அவஸ்தையுடையவனுதலினனும், எம்மிடத்தே சிநேகமுடையவனுதலினனும், எமக்குச் சகாயஞ்செய்பவனுதலினனும், இந்த ஞானயோகத்தை யாமுனக்குபதேசித்தனம்.

சங்கை :—ஹே பகவன்! இந்த ஞானயோகத்தை யென்னினும் வேறுயவர்க்குத் தாங்கள் எனுபதேசிக்கவில்லை?

சமாதானம் :—ஸ்ரீபகவானருளிச்செய்கின்றூர். 'ஈஹஸ்யம் ஹ்யேதத்உத்தமம்' என. ஹே அர்ச்சுன! எதனல் இந்த ஞானயோகம் அத்தியந்தமுத்தமமும், அத்தியந்தம் இரகசியமாய்வைக்கத் தகுதியதும் ஆமோ அதனல் யாம் இதனை வேறெவருக்கு முபதேசித்திலம்.

"விஜ்ஞாஹவெ ப்ரஹ்மணோஜமாஉ மொவாயமாமெவயிஷ்யஹ்யஹ்ரி।
சுஷ்மயகூயாஜ்ரஜவெயதாய நமாப்ரயாவீயுவதீதயாஹ்யாழ ॥

(போ-ள்.) ஒருகாலத்தே பிரஹ்மவித்தை பிரஹ்மவேத்தாவாய பிராஹ்மணர்சமீபத்தே சென்று அவர்களைநோக்கி இவ்வாறுகூறினள் :—ஹே பிராஹ்மணர்களே! நீங்கள் என்னை அத்தியந்தம் இரகசியமாய்வையுங்கள், அதனல் யான் உங்கட்குப்போகமோக்ஷமிரண்டையும் கொடுக்கின்றனன், கிருபையோடு கூடியவர்களாய் என்னை இரகசியமாய் வைக்க முடியாதவர்களாவீரேனும் விவேகவைராக்கியாதி சாதனசம்பன்ன அதிகாரிகட்கு என்னையுபதேசியுங்கள். யாவன் அசூயையுடையவனே, நேர்மையற்றவனே, மனசகித இந்திரியங்களை நிக்கிரகஞ் செய்யாதவனே அவ்வதிகாரிக்கு ஒருகாலும் என்னையுபதேசிக்கவேண்டாம்; மற்றே, அதிகாரிகட்கே உபதேசியுங்கள். அங்ஙனஞ்செய்யின் யான் பலகாரணமாவேன். இச்சுருதியின் விரிவாயபொருளை ஆன்மபுராண இரண்டாவது அத்தியாயத்தே யாம் கூறியுள்ளமாதலின் ஈண்டு சுருக்கிக்கூறினேம். (3)

(அ-கை.) சாஸ்திரவிசாரமற்ற மூர்க்கர்கட்கு வசுதேவர் திருக்குமாராய ஸ்ரீபகவானிடத்தே மனுஷ்யத்தன்மை வடிவமே ஹேதுவால் அசர்வஜ்ஞத்தன்மை அநித்தியத்தன்மைச் சங்கையுண்டாதலை நீக்கும்பொருட்டு அச்சங்கையையனுவதித்து அர்ச்சுனன் ஸ்ரீபகவானை வினவுகின்றனன் :—

சுஜ்ஞுந உவாச.

சு-ம். சுவாஸ்ம ஹவதோ ஜந்ம வாஸ்ம ஜந்ம விவஸ்வதஃ।
கயாஎதத்விஜாநீயாம் கூமாதௌள ப்ரோக்தவாநிதி ॥ (4)

ப-ம். 3 சுவாஸ்ம 1 ஹவதஃ 2 ஜந்ம 6 வாஸ்ம 5 ஜந்ம 4 விவஸ்வதஃ 12 கயா 11 வதகூ
13 விஜாநீயாம் 7 கூம் 8 கூமாதௌள 9 ப்ரோக்தவாந் 10 இதி.

(அ-ம்.) ஹே பகவன்! தேவரீருடைய அவதாரமோ இப்போதுண்டாகியிருக்கின்றது, சூரியனது உற்பத்தியோ முன்னருண்டாகியிருக்கின்றது. ஆதலின் தேவரீர் சிருஷ்டியாதியில் சூரியனுக்கு இந்த ஞானயோகத்தைக் கூறியருளினீர்களென்னும் வார்த்தையை யான் எவ்வாறு நிச்சயஞ்செய்வேன்?

(வி-ம்.) ஹே பகவன்! தேவரீருக்குத் திருமேனி கவர்தல்வடிவ அவதாரமோ இந்தத் துவாபராந்தத்தே வசுதேவரது கிருகத்தே உண்டாகியிருக்கின்றது. மனுஷ்யத்தன்மைச்சாதியுடையதாதலின் தாழ்ந்ததாம். சூரியனது ஜன்மமோ சிருஷ்டியாதிகாலத்தே யுண்டாகியிருக்கின்றது தேவத்தன்மைச்சாதியுடையதாதலின் உயர்ந்ததாம். ஈண்டு, 'அஜாயதேதிர்யதேவாகூஹாஸு' என்பதாதி வசனங்

களால் பூர்வம் ஆன்மாவின் ஜன்மாபாவம் விஸ்தாரமாய்க்கூறப்பெற்றதாதலின், ஆன்மாவின் ஜன்மத்தின்கண்ணே அர்ச்சுனன்விஞ்சை சம்பவிக்கமாட்டாது ; மற்றே, தூலதேக ஜன்ம அபிப்பிராயத்தானே சம்பவிக்கும். ஆதலின், இக்காலவதரித்த அசர்வஞ்ஞமனுஷ்யராகிய தேவரீர் முன்னர்ச் சிருஷ்டியாதிகாலத்தே யுற்பன்னமாய சர்வஞ்ஞ சூரியன்பொருட்டு இந்த ஞானயோகத்தை எவ்வாறுகூறியருளினீர்? இப்பொருளே யான்முரண்படாது துணிவுபடுத்திக்கோடல் யாங்ஙனமாம்? மற்றே, தேவரீரது வாக்கியப்பொருள் முற்றினும் முரண்பாடுடையதாய் எனக்குத்தோற்றுகின்றது. ஈண்டார்ச்சுனனதபிப்பிராயமிதுவாம்:—இத்திருமேனியினும் வேறுய திருமேனிகொண்டு சூரியனுக்கு இந்த ஞானயோகத்தை யுபதேசித்தீர்களா? அல்லது இத்திருமேனிகொண்டேயா? முதற்பக்ஷஞ்சம்பவியாது, எனினின், முற்பிறப்பில் அனுபவித்த பொருளின் ஸ்மரணம் பின்வேறுபிறப்பில் அசர்வஞ்ஞர்க்குண்டாகாது ; அவ்வாறுண்டாகுமாயின் எனக்குமங்ஙனுண்டாகவேண்டும், ஆனலுண்டாவதோ இன்றும். தேவரீரிடத்தும் என்னிடத்தும் மனுஷ்யரூபத்தன்மையானே அசர்வஞ்ஞத்தன்மை துல்லியமேயாமாதலின் எனக்கேபோலத் தேவரீருக்கும் முற்பிறப்பிலனுபவித்ததின் ஸ்மரணம் இப்பிறப்பிலுண்டாகமாட்டாது. இரண்டாவது பக்ஷமுஞ்சம்பவியாது ; ஏனெனின், இப்போதுள்ள வசுதேவபிதாவினின்று முண்டாய இத்திருமேனி சிருஷ்டியாதிகாலத்தேயின்றுமாதலின் இதனுனும் சூரியனுக்குத் தேவரீரது உபதேசஞ்சம்பவியாதாம். இதனுலிப்பொருடுணியப்பெறும் :—இத்திருமேனியினுமயலாய் வேறெத்திருமேனியினுலே னும் சிருஷ்டியாதிகாலத்தே தேவரீரது திதி சம்பவிக்குமேனும் அதனுலனுபவித்த அர்த்தஸ்மரணம் இதன்பாற்சம்பவியாதாம். இதனுல் ஸ்மரணசித்தியுண்டாமேனும் சிருஷ்டியாதிகாலத்தே இத்திருமேனியின்றி திதி சம்பவியாதாம். இவ்வாறு அசர்வஞ்ஞத்தன்மை அநித்தியத்தன்மையென்னும் இரண்டேதுவால் அர்ச்சுனனுடைய இரண்டு பூர்வபக்ஷங்களும் சித்தமாம். (4)

(அ-கை.) ஆண்டு ஸ்ரீபகவான் தம்மிடத்தே சர்வஞ்ஞத்தன்மையைக் கூறியருளி முதற்பூர்வபக்ஷத்தின் பரிகாரத்தைக் கூறியருளுகின்றார் :—

ஸ்ரீ ஹ மவாசு உவாச.

சு-ம். பஹூனி மே வ்யதீதானி ஜன்மானி தவ சார்ஜுன !
தான்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வெத்த பரந்தப ॥ (5)

ப-ம். 5 பஹூனி 2 மே 7 வ்யதீதானி 6 ஜன்மானி 4 தவ 3 ச 1 சார்ஜுன 8 தானி 10 சாஹம் 11 வேத 9 ஸர்வாணி 14 ந 13 த்வம் 15 வெத்த 12 பரந்தப.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எமக்கும் உனக்கும் அநேக ஜன்மங்கள் கழிந்தனவாம் அவ்வியாவற்றையும் யாமறிவேம் ஹே பரந்தப! நீயவற்றையறியாய்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வுலகர், எப்போதுமிருக்கும் சூரியனுக்கும் உதயமங்கீகரித்திருப்பதேபோல உண்மையாய் ஜன்மமற்றிருப்பினும் லோகதிருஷ்டியபிப்பிராயங்கொண்டு லீலாமாத்திரமாய்த் தேகக்கிரகணரூப அநேக ஜன்மங்கள் எமக்குக்கழிந்தன. ஆன்மஞானமற்ற நினக்கும் கருமவயத்தால் தேகக்கிரகணவடிவ அநேக ஜன்மங்கள் முன்னருண்டாயின. ஈண்டு 'தவ' என்னும் இவ்வொரு அர்ச்சுனவாசகபதம் வேறு ஜீவர்கட்குமுபலக்ஷகமாம். அல்லது, 'தவ' என்னும் பதம் ஏகஜீவவாத அபிப்பிராயத்தானே கூறியருளியதாம். ஹே அர்ச்சுன! எமது, உனது, மற்றையரது சர்வ ஜன்மங்களையும் சர்வஞ்ஞ சர்வசக்தி சம்பன்ன ஈச்வரராய யாமேயறிவேம். மறைபட்ட ஞானசக்தியையுடைய அஞ்ஞானியாகிய நீ அவ்வியாவற்றையுமறியாய். கருத்திதுவாம் :—நீ அஞ்ஞான

தோஷவசத்தால்முன்னர்க்கழிந்த நினது ஜன்மங்களையுமறியாயெனின் முன்னர்க் கழிந்த எமது ஜன்மங்களையும் மற்றையரது ஜன்மங்களையுங் நீ யெங்ஙனமறிவாய்; மற்றே, நீ யறியாய். ஈண்டு, "ஹெ ஈஜ-ஞ" என்னும் சம்போதனத்தால் ஸ்ரீ பகவானைவர் இப்பொருளைக் குறிப்பித்தருளினர்:—சாஸ்திரத்தின்கண்ணே ஒரு விருக்ஷ விசேஷம் அர்ச்சுனமெனப்பட்டுளது, அதனது ஞானசக்தி மறைபட்டிருப்பதேபோல நினது ஞானசக்தியும் மறைபட்டேயிருக்கின்றதாதலின் நின்பிறப்பையும் எமது ஜன்மத்தையும் நீயறியாய். ஹே பரந்தப! என விளித்தலால் ஸ்ரீ பகவான் இப்பொருளைக் குறிப்பித்தருளினர்:—பரம சத்துருவாம்; அதனைப் பேத திருஷ்டியாற் கற்பித்து, அதனைக்கொல்வதில் நீ முயன்றுளாய்; ஒரு மூடபாலகன் தன்றேகத்தையே பேயெனக் கற்பித்து அதைக்கொல்வதில் முயல்வதேபோலும். ஆகையால் விபரீத தரிசியாதலின் நீ பிராந்தனுவாய். ஈண்டு 'ஹெ ஈஜ-ஞ ஹெ வரஞ்ஜய' என்னுமிரண்டு சம்போதனங்களால் ஸ்ரீ பகவானைவர் ஆவரண விக்ஷேபமென்னுமிரண்டன்கண்ணுஞ்ஞானரூபத்தன்மையைக் கூறியருளினர். (5)

(அ-கை.) ஹே பகவன்! பூர்வங்கழிந்தனவாய தேவரீரது அநேக ஜன்மங்களைத் தாங்கள் ஸ்மரணஞ்செய்தருளுவீர்களாயின் தேவரீரும் ஜாதிஸ்மரரெனப் பெயரிய ஜீவ விசேஷமாவீர்கள்; ஏனெனின், ஜாதிஸ்மரயோகிகட்குச் சர்வான்ம அபிமானத்தால் வேறு ஜன்மங்களின் ஞானமும் சம்பவித்தல்கூடும். வாமதேவருக்குச் சர்வான்ம அபிமானத்தால் பூர்வ அநேக ஜன்மங்களின் ஸ்மரணமுண்டாயது. ஆண்டுஅவர் தாயுதரத்திருந்து இவ்வகை வசனத்தைக்கூறினர்:—ஹே அதிகாரிகளே! வாமதேவனுயயான் ஜீவனுயினும் முன்னர் மனுவாயிருந்தேன், சூரியனுயிருந்தேன், ககூஷீவான் இருஷியாயிருந்தேன். இங்ஙனம் அவர் சர்வான்ம அபிமானத்தால் பூர்வ அநேக ஜன்மங்களை ஸ்மரணஞ்செய்தனர். அதனுல் அவரிடத்தே முக்கிய சர்வஞ்ஞத்தன்மை சித்தமாகாததேபோலப் பூர்வஜன்மங்களின் ஸ்மரணத்தால் தேவரீரிடத்தும் அது சித்தமாகாதாம். ஆதலின், ஈசுவரபாவ மற்ற தேவரீர் பூர்வம் சர்வஞ்ஞ சூரியன்பொருட்டு ஞானயோகத்தை எங்ஙனம் உபதேசித்தீர்கள்; மற்றே, அவ்வுபதேசஞ் சம்பவியாதாம். ஜீவனிடத்தே முக்கிய சர்வஞ்ஞத்தன்மை சம்பவியாதாம்; ஏனெனின், வியஷ்டியுபாதியுடையவன் ஜீவனெனப்படுவன். அவன் பரிச்சின்னனேயாவனுதலின், அவனுக்குப் பூதபவிஷ்யத் வர்த்தமான சர்வ பதார்த்தங்களோடு சம்பந்தமே சம்பவியாதாம்; ஆகவே சர்வபதார்த்த ஞானஞ்சம்பவியாதாம். சமஷ்டியுபாதியையுடைய விராட்டிற்கும் அத்தகைய ஹிரண்யகர்ப்பருக்கும் சர்வபதார்த்த ஞானம் சம்பவியாதாமெனின், வியஷ்டியுபாதிகனுக்கு யாது வார்த்தையுளது? ஏனெனின், விராட்டிற்குத் தூலபூதகாரிய விஷயஞானஞ் சம்பவிக்குமாயினும், சூக்ஷ்மபூத பரிணமவிஷய ஞானமும் மாயாபரிணமவிஷய ஞானமும் சம்பவியாதாம். இவ்வாறே ஹிரண்ய கர்ப்பருக்கு, தூலசூக்ஷ்மபூத பரிணமவிஷய ஞானஞ்சம்பவிக்குமாயினும், அச்சூக்ஷ்மபூதகாரணரூப மாயாபரிணமவடிவ ஆகாசாதி சிருஷ்டிக்கிரமாதிவிஷயக ஞானஞ்சம்பவியாதாம். ஆகையால், விராட்டிரண்ய கர்ப்பர்களிடத்தும் முக்கிய சர்வஞ்ஞத்தன்மை சம்பவியாதாயின், வியஷ்டியுபாதியையுடைய ஜீவனிடத்தே அஃதெங்ஙனஞ் சம்பவிக்கும்; மற்றே, சம்பவியாதாம். ஆகையால், மாயாரூபகாரணோபாதியுடையதாதலின் பூத பவிஷ்யத் வர்த்தமான சர்வபதார்த்த விஷயக ஞானமுடைய ஈச்வரே முக்கிய சர்வஞ்ஞராவர். இத்தகைய ஜன்மமரணமற்ற நித்திய சர்வஞ்ஞ ஈசுவரரிடத்தே புண்ணியபாவ கருமமின்றுமாதலின், அவருக்கு முதலிலோ ஜன்மமாதலே சம்பவியாதாமாயின் முன்கழிந்த அநேக ஜன்மங்கள் அவருக்கு எங்ஙனஞ் சம்பவிக்கும்; மற்றே, சம்பவியாவாம். ஆதலின், இப்பொருள் துணியப்பெறும்:—தேவரீர் ஜீவனுயின் என்போலத் தேவரீரிடத்தும் சர்வஞ்ஞத்தன்மை சம்பவியாதாம். தேவரீரீசுவராயின், தேவரீரிடத்தே தேகக் கவர்ச்சி

வடிவஜன்மஞ் சம்பவியாதாம் எனவுண்டாம் அர்ச்சுனனது இரண்டு சங்கைகளையும் நீக்கியருளுபவராய ஸ்ரீ பகவான் முன்மொழிந்த அநித்தியத்வபக்ஷத்திற்கும் பரிகாரமருளிச்செய்கின்றார் :—

சு-ம். ஸுஜோவி ஸந்ஹவ்யயாத்தா ஸுமதாநாஃப்ஸுஸொவி ஸஹு ।
வ்ருகூதிம் வ்ஹாஃயிஷ்ய ஸம்ஹவாஃயாத்தஃஸாயயா ॥ (6)

ப-ம். 1 ஸுஜஃ 3 ஸுவி 2 ஸஹு 4 ஸுவ்யயாத்தா 5 ஸுமதாநாம் 6 ம்ஸம்ப்ஸுஃ 8 ஸுவி 7 ஸஹு 10 வ்ருகூதிம் 9 வ்ஹாம் 11 ஸுயிஷ்ய 13 ஸம்ஹவாயி 12 க்ருத்தஃஸாயயா.

(அ-ம்.) ஹே அர்ச்சுன ! யாம் ஜன்மமரணமற்றிருப்பினும், சர்வ பூதங்கட்கும் ஈசுவராயினும் எமது மாயையைப்பற்றி எமது மாயையால் ஜன்மமுடையவராவேம்.

(வி-ம்.) அபூர்வ தேதேகேந்திரியாதிகளின் நிரகணம் ஜன்மமாம், முற்கவர்ந்த அவற்றை விஃயோகித்தலாய மரணம் விபயமாம் ; இவ்விரண்டையுமே நையாயிகர் பிரேத்யபாவமென்பர். இவ்விரண்டையும் 'ஜாதஸ்யஹி ஃத்ருவொ ஃத்ருத்யுஃ ஃத்ருவம் ஜந்ஃத்ருதஸ்ய ச' என்னும் வசனத்தால் முற்கூறியருளப்பட்டது. இவ்விரண்டும் ஜீவர்கட்கு அறம்பாவவயத்தால் எய்தும். அவ்வறம்பாவவயத்தன்மை தேகாபிமானிகளாய அஞ்ஞானிகட்குக்கர்மாதிகாரித்தன்மைபினாமாம். சர்வகாரணரூப சர்வஜ்ஞ ஈசுவருக்கு இவ்வாறுகத் தேதகக்நிரகணவடிவ ஜன்மம் சம்பவியாதாமென முன்னர்க்கூறியது உண்மையேயாம் ; ஏனெனின், ஈசுவரது சரீரம் தூலபூதங்களின் காரியரூபமாம், அவ்வாறுகியும் அது விபஷ்டிரூபமாயின் நனவின்கண்ணேயிருக்கும் நம்மனோராய விசுவஜீவ துல்லியரேயாவர். சமஷ்டிரூபமாயின் அவரிடத்தே விராட்டுச் சீவத்தன்மையுண்டாம் ; சமஸ்டிதூல உபாதியையுடையது விராட்டேயாதலின், சூக்ஷ்மபூதங்களின் காரியரூபமாயினும் விபஷ்டிரூபமாயின், அவரிடத்தே கனவின்கண்ணுள்ள தைஜசதுல்லியத்தன்மையுண்டாம் ; சமஷ்டிரூபமாயின், அவரிடத்தே ஹிரண்யகர்ப்ப ஜீவத்தன்மையுண்டாம். சமஷ்டி சூக்ஷ்ம உபாதியையுடையவர் ஹிரண்யகர்ப்பரேயாவராதலின், இப்பொருள் துணிபப்பெறும் :—பௌதிகமாயதும் எஜ்ஜீவனுமாசிரயியாததும் ஆய சரீரம் ஈசுவரர்க்குச்சம்பவியாதாம். ஒரு ஜீவரிணுடுகூடிய பௌதிகசரீரத்தே பூதாவேசம்போல அவ்வீசுவரர் புகுந்துளாரெனக்கூறலுந் சம்பவியாதாம் ; ஏனெனின், எஜ்ஜீவரிணுடுகூடிய பௌதிக சரீரத்தே அவ்வீசுவரர் பிரவேசித்தனரா அச்சரீரத்தால் அச்சீவனுக்குச் சுகதுக்கபோகமுண்டாமா ? அல்லதின்று ? ஆண்டு முதற்பக்ஷத்தை யங்கீகரிககின் அந்தரியாமிரூபத்தால் அவ்வீசுவரது பிரவேசம் சர்வ சரீரங்களிலும இருக்கின்றதாதலின் அவருக்குச்சரீரவிசஷ அங்கீகாரஞ்செய்தல் பயனற்றதாம். இரண்டாவது பக்ஷத்தை யங்கீகரிக்கிணு அச்சரீரம் ஜீவனுக்குச் சம்பவியாதாமாதலின், எவ்வாற்றனும் ஈசுவருக்குப் பௌதிக சரீரம் சம்பவிக்கமாட்டாதாம். என்னுமிவ்விவல்லாப்பொருளையும் ஸ்ரீ பகவான் சுரோகத்தின் பூர்வார்த்தத்தால் அங்கீகரிததருளியுளார் "ஸுஜோவி ஸந்ஹவ்யயாத்தா ஸுமதாநாஃப்ஸுஸொவிஸஹு" என. ஹே அர்ச்சுன! அபூர்வதேகக நிரகணரூப ஜன்மமற்றவர் யாமாவேம். பூர்வதேக பரித்தியாகரூபவியயமாகிய மரணமற்றவரும் யாமாவேம். பிரஹ்மாமுதற் றம்பமீறுகியுள்ள சர்வ பூதங்கட்கும் யாம் ஈசுவராவேம். இத்துணை கூறியருளியதால் ஸ்ரீ பகவானுனவர் தம்மிடத்தே அறம்பாவவயத்தன்மையை நீக்கியருளினர். ஜன்மமரணமுடைய பாதீனஜீவனே அவ்வறம்பாவவசமாவன் சுதந்திராகிய ஈசுவரர் ஆகார்.

சங்கை :—ஹே பகவன் ! இத்தகைய ஜன்மமரணாதி விகாரமற்ற ஈசுவராகிய தேவரீருக்குத் திருமேனிக்நிரகணம் எவ்வாறு சமபவிக்கும் ?

சமாதானம் :—சுலோக உத்தரார்த்தத்தால் ஸ்ரீ பகவானருளிச்செய்கின்றார். "வ்ருகூதிம்ஹாயிஷாயஸம்ஹவாமி" என. ஹே அர்ச்சுன! உண்மையாய் யாம் ஜன்மமரணாதி சர்வ விகார ரகிதரேயாவேம். ஆயினும், எமக்குபாதியும் விசித்திர அசிந்த சக்தியோடுகூடியதும், அகடித கடநா படீயசி யெனப் பெயரியதும், சத்துவ ரஜ தம முக்குணரூபமுற்றதும் ஆய மாயாரூபப் பிரகிருதியை எமது சிதாபாசவாயிலாய் வயப்படுத்தி அம்மாயாபரிணம விசேஷங்களினாலே தேகமுடையவர்போலவும் ஜன்மமுடையவர்போலவும் புலப்படுகின்றோம். கருத்திதுவாம் :—உற்பத்தியற்றதாதலின் அநாதியாய மாயையே எமக்குபாதியாம். அது வியவகார காலபரியந்தம் ஸ்தாயியாதலின் நித்தியமாம். எம்மிடத்தே சர்வ ஜகத்காரணத்தன்மையைச்சர்ப்பாதிப்பது எமசிச்சையினாலே அது பிரவிருத்திக்கும். இத்தகைய அதிதிவ விசுத்த சத்துவரூபமாய எமது மூர்த்தியாம் அம்மூர்த்தி விசிஷ்டஎம்மிடத்தே ஜன்மமரணமற்றதன்மையும் சர்வ பூதங்களின் ஈசுவரத்தன்மையும் சம்பவிக்குமாதலின், அந்தச்சுதச சத்துவப்பிரதான மாயாரூப நித்தியதேகத்தினாலே யாம் சிருஷ்டியாதிகாலத்திலோ, சூரியனுக்குப் இப்போது உனக்கும் இந்த ஞானயோகத்தை யுபதேசித்தனம். இவ்வார்த்தசேக சிறிதுமாத்திரையும் பூர்வோக்ததோஷப் பிராப்தியுண்டாகாதாம். "சுகாயஸரீரம்வை ஹ" ஆகாசமெனப் பெயரிய மாயாரூப அவ்யாகிருத சரீரமுடையது பிரஹ்மமாம், என்பதாதி சுருதிகளின்கண்ணே பிரஹ்மத்திற்கு மாயையே சரீரமெனக் கூறப்பெற்றுளது. அம்மாயைச் சரீரத்தால் ஜகதுற்பத்தி ஸ்திதிப் பிரளயகாலத்தும் எமது ஸ்திதி சம்பவிக்கும்.

சங்கை :—ஹே பகவன்! தேவரீருக்குக் கேவலம் மாயையே சரீரமாம் பௌதிகமன்றுமாயின், பௌதிகசரீர தர்மமாய மனுஷ்யத்வாதி இத்திருமேனியின்கண்ணே ஏன் புலப்படுகின்றது?

சமாதானம் :—ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார் 'சூத்ரயாயயா' என. ஹே அர்ச்சுன! எம்மிடத்தேதோற்றும் மனுஷ்யத்வாதி தருமங்கள் வாஸ்தவமாகவோவின்றும்; மற்றே, உலகர்க்கனுக்கிரகஞ்செய்யும்பொருட்டு எமது மாயையினாலே அவை எம்மாற்புலப்படும். இவ்வார்த்தை மோக்ஷதருமத்தின்கண்ணும் கூறப்பெற்றுளது.

"ஸாயாஹ்யேஷா மயாஸ்ருஷ்டாயந்மாம்பஸ்யஸி நாரத!
ஸர்வபூதகுணைர்யுக்தம் நதுமாம்த்ரஷ்டுமர்ஹஸி" ॥

(பொ-ள்.) ஹே நாரத! எச்சரீரவிசிஷ்ட எம்மை நீ இச்சருமசக்ஷுர்வாற் காண்கின்றனையோ அவ்விதை யாம் மாயையாற்செய்துளேம் காரணமாயாரூப சரீரமுடைய எம்மைச் சருமசக்ஷுர்வால் நீ காணமுடியாய். ஆண்டநேக சக்தியையுடைய மாயையெனப்பெயரிய நித்தியகாரணவுபாதியே பரமேசுவராது திருமேனியாம். இத்தனையால் ஸ்ரீ பகவான் பாடியக்காரதுமதம் நிரூபிக்கப்பெற்றது. வேறொருசாஸ்திரமுடையரோ பரமேசுவரரிடத்தே தேகதேகிபாவத்தை யங்கீகரித்திலர்; மற்றே, சச்சிதானந்தகன பகவான் வாசுதேவ பரிபூரணநிர்க்குண பரமான்மாவே பரமேசுவராது சரீரமாம். வேறொரு பௌதிகமாயிகசரீரம் பரமேசுவரருக்கின்றும். "ஸஹமவஃ கஸ்ரீஷ்டிதஃ ஷ்வேஷஹிஷ்ட" ஹே பகவன்! அப்பரமான்மாயாதின் கண்ணேயிருக்கும் எனச் சங்கையுண்டாக அது தனது சச்சிதானந்தரூபமகிமையின்கண்ணேயிருக்கும் என்பதுமுதலிய சுருதிகளில் அப்பரமான்மாவிற்குத்தமது சொரூபத்தின்கண்ணே ஸ்திதி கூறப்பெற்றுளதேயன்றி மாயிக சரீரத்தின்கண்ணேனும் பௌதிகசரீரத்தின்கண்ணேனும் கூறப்பெறவில்லை. இப்

பக்ஷத்தோ இச்சுலோகத்திற்கு இவ்வாறு யோஜனைசெய்க. ‘‘கூகாஸவத்ஹ வ-ழ்ம தஸ்ரநிதயஃ சுவிநாஸீவா சுரெஷயஸாதாஷ்ரஹ்ஹித்யஷ-ா’’ இப்பரமான்மா ஆகாசத்தைப்போலயாண்டும் வியாபகமும் நித்தியமுமாம். ஹே மைத்திரேயி! இவ்வான்மாச்சொரூபமாகவும் நாசமற்றதாம். தர்மநாசப்பிரயுக்தநாசமுமற்றதாம், என்பன முதலிய சுருதிப்பிரமாணங்களால் பரமான்மாவாய யாம் உண்மையாய் ஜன்ம மரணாதி விகாரமற்றிருப்பினும், சர்வஜகத்தின் பிரகாசமாயினும், சர்வஜகத்தின் காரணரூப மாயையின் அதிஷ்டானமாதலின் சர்வபூதங்கட்கு ஈசுவராராயிருப்பினும், ‘வ்ராம்வ்ரகூத்ரிம்’ எமது ஸ்வரூபபூத சச்சிதானந்தகன ஏகரச ஸ்வபாவரூபப்பிரகிருதியை ‘சுயிஷ்ஷாய’ ஆசிரயித்து, அதாவது அவ்விவேமதுவடிவத்தே ஸ்திதிபெற்றுநின்று ‘ஸம்ஹவாமி’ தேகதேகிபாவமின்றியே உலகப்பிரசித்ததேகமுடைய ஜீவர்கள்போல இப்பரமேசுவரர் தேகமுடையவர் என்னும் விபவகாரத்திற்கு விஷயமாவேம்.

சங்கை :—ஹே பகவன்! மாயிகபௌதிக தேகங்களற்ற சச்சிதானந்தகனத் தேவரீரிடத்தே இம்மனுடதேகதன்மையின் பிரதீதி எனுண்டாகின்றது?

சமாதானம்:—ஸ்ரீபகவான்கூறியருளுகின்றார். ‘கூத்ஷாயயா’ என. ஹே அர்ச்சுன! தேகதேகிபாவமற்ற யாம் நித்திய சுத்த சச்சிதானந்தகன பகவான் வாசுதேவராம். இத்தகைய எம்மிடத்தே தேகதேகிவடிவமாயபிரதீதி மாயாமாத்திரமேயாமன்றி உண்மையாயின்றும். இவ்வார்த்தை அன்னிய சாஸ்திரத்தின்கண்ணும் கூறப்பெற்றுளது :—

‘‘கூ ஜ்ஞெந ஸவெஹிகூ ஸாதாந ஸவிஜ்ஞாதாநாம்।
ஜமஜ்ஜிதாய வொவ்யதே ஸெஹீவாஹாதி ஸாயயா॥
சுஹொஹாமயம் சுஹொஹாமயம் நஜ்மொவவ்யஜளகவாம்।
யந்நித்ரம் வஸாநஜ்ம வ்ரணஸ்ரைஹ வநாதநழ॥

(போ-ள்.) இக்கிருஷ்ணபகவானே நீ சர்வபூதப்பிராணிகளின் ஆன்மரூபமெனவறிதி. அவ்வாறிருப்பினும், அவர் இவ்வுலகத்தே அன்பர் யாவரையு முத்தாரணஞ்செய்யும்பொருட்டுத் தமது மாயையால் தேகமுடைய ஜீவர்களைப்போலப் பிரதீதியாவர் அல்லது விரஜபூமியின்கண்ணே இராநின்ற நந்தகோபகோபியர்க்கு அகோபாக்கியம்! அகோபாக்கியம்!! என்னே? அவ்விரஜவாசிகட்கு இப்பரமானந்த பரிபூர்ண சநாதனப்பிரஹ்மம் கிருஷ்ணரூபமாய் மித்திரபாவத்தை யடைந்ததன்றே! சிலரோ, அப்பரமான்மாவை நித்திய நிரவயவ நிர்விகார பரமானந்த உருவமெனவங்கீகரித்தும் அதனிடத்தே அவயவ அவயவீபாவத்தை வாஸ்தவமாகவே அங்கீகரித்துளார்; அவர்கூற்று அத்தியந்தம் ஊகமற்றதாம். (6)

(அ-கை.) ஹே பகவன்! இவ்வாறு சச்சிதானந்தகனரூபத்தேதவரீருக்கு எக்காலத்தே எப்பிரயோஜனப்பொருட்டுத் தேகமுடைய ஜீவர்களைப்போல வியவகாரமுண்டாம் என அர்ச்சுனனுக்கு ஆசங்கைநிகழ ஸ்ரீபகவான் உத்தரங்கூறியருளுகின்றார் :—

சு-ம். யஷா யஷா ஹி யஃஷ்ய க்லாநிஹ்ரவதி ஹாரத।
சுஹ்யூத்தாநயஃஷ்ய தஷாத்மாநம் ஸ்ரஜாம்யஹழ॥ (7)

ப-ம். 2 யஷா 3 யஷா, ஹி 4 யஃஷ்ய 5 க்லாநிஃ 6 ஹவதி 1 ஹாரத 8 சுஹ்யூத்தாநம் 7 சுயஃஷ்ய 9 தஷா 11 சூத்மாநம், 12 ஸ்ரஜாமி 10 சுஹம்,

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வெக்காலத்தே தர்மஹானியாமோ அதர்ம விருத்தியாமோ அவ்வக்கால் பரமான்மாவாய யாம் தேகோற்பத்தியைச்செய்வேம்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! வேதத்தால் விதிக்கப்பெற்ற பிரவிருத்தி நிவிருத்திரூப தருமம் காமனூபூர்வகமாய்ச் செய்யப்பெற்றதாய்ப் பிராணிகட்குச்சுவர்க்காதிரூப அப்யுதய சாதனமாம்; நிட்காமமாய்ச் செய்யப்பெற்றதாய் மோக்ஷரூப நிஸ்ரேயசின் சாதனமாம்; அத்தருமம் பிராஹ்மணாதி நான்கு வருணங்களின் பிரஹ்மசரியாதி நான்காசிரமங்களின் அபிவியஞ்சகமாம் அதாவது அவற்றை அறிவிப்பதாம். ஆண்டுச் சிரத்தாபக்திவாயிலாய் அக்கினிஹோத்ராதி கருமங்களைச் செய்தல் பிரவிருத்திரூப தருமமாம். பரஸ்திரீகமனாதிகளைச் செய்யாதிருத்தல் நிவிருத்திரூப தருமமாம். இத்தகைய தருமம் எவ்வெக்காலத்தே ஹானியாமோ, வேதத்தால் நிஷேதிக்கப்பட்டதும், நாநாவகைத் துக்கங்கட்குச் சாதானரூபமும், தருமவிரோதியும் ஆய அதர்மமானது எவ்வெக்காலத்தே விருத்தியாமோ அவ்வக்காலத்தே யாம் எமது தேகத்தையுண்டாக்குகின்றேம்; அதாவது, நித்தியசித்தமாய எமது தேகத்தை மாயையால் செய்வதேபோலக் காண்பிப்பேம். ஈண்டு, 'ஹெ ஹாஸ்த' என்னும் சம்போதனத்தைக் கூறியருளலால் ஸ்ரீ பகவானுனவர் இப்பொருளைக் குறிப்பித்தருளினர்:—பரதவம்சத்தே யுற்பன்னமாயவன் பாரதனுவன்; அல்லது, 'ஹா' என்பது ஞானமாம்; அதன்கண்ணே யாவன் ரதனுவனே அதாவது ஞானத்தின்கண்ணே யாவன் பிரீதியுடையவனுவனே அவன் பாரதனுவன். இப்பாரதப்பெயர்வாய்ந்த நீ தருமஹானியைச் சகிக்கச் சமர்த்தனன்றுவாய். (7)

(அ-கை.) ஹே பகவன்! தருமஹானி அதருமவிருத்தியென்னும் இரண்டும் தங்கட்கு மகிழ்ச்சி காரணமாம்; அதனுலன்றே தேவரீர் அக்காலத்தே அவதரிக்கின்றீர்; ஆதலின், தேவரீரது அவதாரம் மாறுய் உலகர்க்கு அநர்த்தப்பிராப்தியை யடைவிப்பதேயாயதாம்; என அர்ச்சுனனது ஆசங்கைநிகழ ஸ்ரீ பகவான் விடை அருளிச்செய்கின்றூர்:—

சு-ம். வரிதராணாய ஸாயூநாம் விநாஸாய அ துஷ்க்ருதாம் ।
யதர்மஸம்ஸ்தாவநார்யாய ஸம்பவாமி யுகெயுகெ ॥ (8)

ப-ம். 2 வரிதராணாய 1 ஸாயூநாம் 5 விநாஸாய 3 அ 4 துஷ்க்ருதாம் 6 யதர்ம
ஸம்ஸ்தாவநார்யாய 9 ஸம்பவாமி 7 யுகெ 8 யுகெ,

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சாதுக்களை ரக்ஷிக்கும்பொருட்டும், பாவியரைச் சிக்ஷிக்கும்பொருட்டும், தருமத்தை இனிது நிலைநிறுத்தற்பொருட்டும் பரமேசுவராய யாம் யுகந்தோறும் அவதரிப்பேம்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தருமஹானியால் ஹானியையடைந்து நிரந்தரம் வேதப்பிரதிபாதிதமார்க்கத்தே நின்று வேதவிகித புண்ணியகருமங்களைச் செய்யும் மேன்மையர் தமது பிராணன் நாசமெய்தினும், தமது தருமத்தைப் பரித்தியாகித்திலர்; அவர்களை சாதுக்களாவர். அவர்களைக் காக்கும்பொருட்டும் அதருமவிருத்தியால் விருத்தியடைந்து வேதமார்க்க விரோதியாய் சரீரமனவாணியால் எப்போதும் வேதநிஷித்த பாவகருமங்களைச்செய்யும் துஷ்டரை அதாவது துஷ்கிருதரை மூலத்தோடு நாசஞ்செய்யும்பொருட்டும் பரமேசுவராராகிய யாம் யுகந்தோறும் அவதரிப்பேம்.

சங்கை:—ஹே பகவன்! சாதுக்களின் காப்பையும் துஷ்டரின் விநாசத்தையும் தேவரீர் எங்ஙனஞ்செய்வீர்?

சமாதானம் :— ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார் 'யதா₂ஸம்ஹரதே சாயம்' என. ஹே அர்ச்சுன! முன்னர் விருத்தியையடைந்த அதருமத்தை நீக்கித் தரு மத்தின் நற்றாபனத்தைச் செய்யும்பொருட்டே யாம் அவதரிப்பேம். வேதமார்க்க பரிரக்ஷணமே தர்ம ஸம்ஸ்தாபனமாம். அதனல் சாதுக்கட்குக் காப்பும் துஷ்டர் கட்கு விநாசமும் அவசியமுண்டாம். ஆகையினல், எனதவதாரம் எவருக்கும் அநர்த்தத்தை யடைவிக்கமாட்டாது. (8)

சு-ம். ஜந்ம கர்ம சை அ தை₂வ்ய மை₂வம் யோ வெத்தி தத்வதः ।
தய்க்வா தே₂ஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜு₂ந ॥ (9)

ப-ம். 5 ஜந்ம 7 கர்ம 6 அ 3 தை 4 வ்யம் 8 ஏவம் 2 யः 10 வெத்தி 9 தத்வதः 13 தய்க்வா 12 தே₂ஹம் 14 புநः 15 ஜந்ம 16 ந 17 ஏதி 18 மாம் 19 ஏதி 11 ஸः 9 அர்ஜு₂ந.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யாவன் எமது திவ்ய ஜன்மத்தையும் கர்மத்தை யும் இவ்வாறு உண்மையாய் அறிவனே, அவன் இத்தேகத்தைப் பரித்தியாகஞ் செய்து மீண்டும் ஜன்மத்தையடையான்; மற்றே, பரமேசுவராகிய எம்மையே யடைவன்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! நித்தியசித்தமாய யாம் சச்சிதானந்தகன்மாம். அத்தகைய எமக்கு எமது லீலமாத்திரத்தால் உலகப்பிரசித்தஜீவர்களின் ஜன்மமே போல ஜன்மானுகரணமாத்திரம் ஜன்மமாம், நித்தியசித்த வெமக்கு வேதவிதித தர்மஸ்தாபனஞ்செய்தலால் ஜகத்பரிபாலனம் கர்மமாம், இவ்விரண்டும் திவ்யமாம். அதாவது, மற்றைய பிராகிருதபுருடர்கள் செய்யமுடியாததாம், கேவலம் எமக்கே சிறந்ததருமமாம். எமது திவ்யமாய இவ்விரண்டையும் யாவன் 'ஸஜோவிஹந்வ யாதா' என்பதாதி வசனங்களிற் கூறியபடியே உண்மையாயறிவனே அதாவது மூடனே ஸ்ரீ பகவானிடத்தே மனுஷ்யத்தன்மைப் பிராந்தியால் வேறு ஜீவர்களைப் போலக் கர்ப்பவாசாதிரூபஜன்ம ஆரோபணஞ்செய்வன். தமது போகார்த்தப்போ ருட்டுக் கர்ம ஆரோபணஞ்செய்வன். அவ்வாரோபித ஜன்மகர்மங்களை உண்மை யாய்ச் சுத்த சச்சிதானந்தரூபஞானத்தால் நிவிருத்தித்து ஜன்மமற்ற பரமேசுவரு க்கும், தமதுமாயையால் லீலாமாத்திரமாய் உலகப்பிரசித்த ஜீவர்களின் ஜன்மமே போல ஜன்மானுகரணமாத்திரம் சம்பவிக்கும், உண்மையாய் அகர்த்தாவாய பர மேசுவாருக்கும் மற்றையர்க்கனுக்கிரகிக்கும்பொருட்டு உலகப்பிரசித்த ஜீவர்களின் கருமமேபோலக் கர்மானுகரணமாத்திரம் சம்பவிக்கும். இவ்வாறு யாவன் எமது ஜன்மகருமங்களை வாஸ்தவமாயறிவனே இவ்வாறு தனது வாஸ்தவஸ்வரூபத்தையு மறிவனே அவன் இவ்வர்த்தமான சரீரத்தைப் பரித்தியாகித்து மீண்டும் வேறு ஜன்மத்தையடையான்; மற்றே, அவன் சச்சிதானந்தகன பகவான்வாசுதேவ ராகியவெம்மையே அடைவன்; அதாவது, சச்சிதானந்தரூப பரமான்மா யான் என்னும் அபேதஞானத்தால் அவன் இச்சம்சாரத்தினின்றும் முக்தனவன். (9)

(அ-கை.) ஆண்டுப் பூர்வசுலோகத்தே 'ஸதே₂ஹமொர்ஜு₂ந' என்னும் வசனம் திருவாய்மலர்ந்தருளப்பட்டது. இப்போது ஸ்ரீபகவான் தமது வாஸ்தவ வடிவத்திற்குச் சர்வமுக்தர்களும் அடையும் பதவடிவத்தாற் பரமபுருஷார்த்தரூப த்தன்மையையும், இம்மோக்ஷமார்க்கத்திற்கு அநாதிபரம்பரையாய்ப் பிராப்தத் தன்மையையும் கூறியருளுகின்றார் :—

சு-ம். வீதராக₃ப₄யக்ரோதா₄ மந்மயா மாமு₃பாஸ்ரிதாः ।
ப₃ஹவோ ஜ்ஞாநதபஸா பூ₄தா மத்₃பா₄வமாக₃தாः ॥ (10)

ப-ம். 1 வீதராகமஹயக்ரோயாஃ 2 உதயாஃ 3 ஸாம 4 உவாஸ்ரிதாஃ 7 பஹவஃ 5 ஜ்ஞாநதவஸா 6 வீததாஃ 8 உல்லாவம் 9 கூமதாஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இராக பயக் குரோதமற்ற எமதிடத்தமுந்திய சித்த முற்று எமதுசரணத்தையடைந்து, ஞானரூபதவத்தாற் பாவமற்று அநேகர் எமது வடிவத்தையடைந்தனர்.

(வி-ம்.) அவ்வச்சுவர்க்காதி பலன்களை யடையும் திருஷ்ணை இராகமாம். ஸ்திரீபுத்திராதனதி சர்வ விஷயங்களையும் பரித்தியாகித்து ஞானமார்க்கத்தே ஸ்திதிபெற்ற எனது ஜீவனம் எவ்வாறு நடைபெறும் என்னும் திராசம் பயமாம். சர்வவிஷயங்களையும் மூலத்தோடு கெடுக்கும் ஞானமார்க்கம் எனக்கெவ்வாறித மாம்; மற்றோரு, ஹிதமாகாதாம் என்னும் துவேஷம் குரோதமாம். இம்மூன்றும் விவேகத்தால் நீக்கிய புருடர்வீதராக பயக்குரோதாதாவர். அதாவது தூயமனமு டையராவர். மீண்டும், அவர் 'உதயாஃ' தற்பதார்த்தரூப எம்மைத்துவம்பதார்த்த ரூப தம்மோடு அபேதமாய்ச் சாக்ஷாத்காரம்புரிந்தவராவர். அல்லது, 'உதயாஃ' பர மான்மாவாய வெம்மிடத்தே சித்தமுடையவராவர். மீண்டுமவர் 'மாமேவாஸ்ரிதாஃ' அநன்யப் பிரேமபக்தியோடுமெம்மையே சரணபடைந்தவராவர். இத்தகைய அநேக சுகவாமதேவாதியர் ஞானரூப தவத்தாற் சர்வ பாவங்களுமற்றவராய், அதாவது காரியசகித அஞ்ஞானரூபமலமற்றவர்களாய் எமது சச்சிதாநந்த ஸ்வரூபபூத மோக்ஷத்தை யடைந்தனர். அல்லது, 'ஜ்ஞாநதவஸாவமதாஃ' ஞானரூபதவத் தால் ஜீவன்முக்திபெபடைந்தவர் 'உல்லாவமாதாஃ' எமது விஷயக ரதியாகிய பிரேமைத்தன்மையையடைந்தனர். இப்பொருளை ஸ்ரீபகவான் தாமே 'தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர்விஷிஷ்யதே' என்னும் வசனத்தால் மேற்கூறி யருளுவர். (10)

(அ.கை.) ஹே பகவன்! யாவர் ஞானரூபதவத்தாற் பவித்திரமாயுளாரோ அந்நிட்காமபுருடரோ, தவரீரது பாவத்தையடைவர்; பவித்திரமாகாத சகாமபு ருடர் அடையார். இவ்வாறு இருவர்க்கும் அடைவு அடைவின்மைகளைச்செய்யும் ஈசுவரராய தங்கட்கு விஷமத்தன்மைத் தோஷ அடைவும் நிர்த்தயைத்தன்மைத் தோஷ அடைவும் அவசிபமுண்டாம் என அர்ச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீபக வான் உத்தரமருளிச்செய்கின்றார் :—

சு-ம். யெ யதா மாம் ப்ரபத்யந்தே தாம் ஸ்ததைவ பஜாம்யஹம் ।
மம வர்த்மாநுவர்த்தந்தே மநுஷ்யாஃ பார்த ஸர்வஶஃ ॥ (11)

ப-ம். 2 யெ 3 யதா 4 மாம் 5 ப்ரபத்யந்தே 6 தாந் 8 ததா 9 ஸைவ 10 பஜாமி 7 அ ஹம் 13 மம 14 வர்த்ம 15 அநுவர்த்தந்தே 11 மநுஷ்யாஃ 1 பார்த 12 ஸர்வ ஶஃ.

(அம்.) ஹே பார்த்த! யாவன் எவ்வகையாய் எம்மைப் பஜிக்கின்றனரோ, அவனுக்கு யாம் அவ்வகையாயே அனுக்கிரகிக்கின்றோம். இக்கருமாதிகாரிகளாய மனுஷ்யர், எல்லாவகையானும் எமது பஜனமார்க்கத்தையே அனுசரிப்பர்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வுலகத்தே துயரடைந்தஆர்த்தன், தனதி களையடையவிச்சித்த அர்த்தார்த்தி, ஆன்மாவையறியவிரும்பும் ஜிஞ்ஞாசு, தத் துவ சாக்ஷாத்காரமுடையஞானி, என்னும் இந்நால்வகைப்புருஷருள் எவ்விவப் புருஷர் சகாமத்தன்மையினனும் நிட்காமத்தன்மையினனும் சர்வ கருமங்களின் பலன்களைக்கொடுக்கும் ஈசுவராராகிய எம்மைப் பஜிக்கின்றனரோ அவர்கட்கு அவ் வவ்வெண்ணிய பலன்களைக்கொடுத்து அனுக்கிரகிப்பேம். அவ்வன்பர்கட்கு யாம்

விபரீதபலத்தைக்கொடேம். அவருள், மோகூஷ இச்சையற்ற ஆர்த்தனுக்கோ உற்ற பீடைபைநீக்கி அனுக்கிரகிப்பேபம். மோகூஷ இச்சையற்ற அர்த்தார்த்திக்கோ தனதிகளைக்கொடுத்து அனுக்கிரகிக்கின்றேறம். "தஜ்ஜதம் வெஜூநாவஅநெந வ்ராஹணைராவிவிதிஷந்தி யஜ்ஞேநதாநெந தவஸாஜநாஶகேந" என்னுஞ் சுருதியானது விதானஞ்செய்த நிட்காமகருமத்தைச்செய்யும் ஜிஞ்ஞாசுக்கட்கோ ஆன்மஞானத்தைக்கொடுத்து அனுக்கிரகிக்கின்றேறம். ஞானவான்கட்கோ மோகூஷத்தைக்கொடுத்து அனுக்கிரகிக்கின்றேறம். ஒரு வஸ்துவை விரும்பிய அன்பர்க்கு மற்றொரு வஸ்துவைக் கொடுப்பதில்லே. ஆகையால், அவர் தம்பாவனுஸாரமாய்ப் பலத்தைக்கொடுக்கும் எம்மிடத்தே விஷமத்தன்மை நிர்த்தயத்தன்மைதோஷப்பிராப்தி சம்பவியாதாம்.

சங்கை :—ஹே பகவன்! தாங்கள் உலகரின் பாவனையின் அனுசாரமாகவே அவ்வப்பலன்களைக் கொடுத்தருள்கின்றீர்களாயினும் தங்களுடைய பக்தர்கட்கே கொடுத்தருள்கின்றீர்களன்றி இந்திராதி தேவதைகளின் பக்தர்கட்குத் தாங்கள் கொடுத்தருள்வதில்லேயாதலின், தங்களிடத்தே அவ்விரு தோஷங்களும் அவ்வாறேயிருக்கும்.

சமாதானம் :—ஸ்ரீ பகவான் கூறியருள்கின்றார் "ஏவந்த்ரயீதர்மமநுப்ரபந்நா கதாகதம் காமகாமா லபந்தே" என. ஹே அர்ச்சுன! எவ்வதிகாரிகள் இந்திரன் அக்கினி சூரியன் என்னும் தேவதைகளேயும் பஜிக்கின்றார்களோ அவர்களும் அந்தர்யாமியாய் வாசுதேவராய எமது ஞான கருமரூப மார்க்கத்தையே அனுசரிக்கின்றனர்; அதாவது, அவர்களும் எம்மையே பஜிக்கின்றனர். அவர்தம் அன்பர்கட்கும் யாமேஅவ்வத்தேவதைவடிவமாய் அவ்வப்பலத்தைக் கொடுக்கின்றேமாதலின், எம்மிடத்தே சிறிதுமாத்திரையும் அவ்விரு தோஷங்களினடைவும் சம்பவியாதாம். இப்பொருளே 'மயுததுவவதேத்' என்னுஞ் சூத்திரத்தால் ஸ்ரீவியாசபகவானுங் கூறியருளியிருக்கின்றார். அங்ஙனமேயிப்பொருளே 'யெவஞ்ஞ தெவதாஹகூதா' என்பது முதலிய வசனங்களால் ஸ்ரீ பகவான், தாமே மேல்வெட்டவெளியாய்க் கூறியருளுவர். அங்ஙனமே இப்பொருளே 'ஊம்தத்ஸத்' வாக்ஸாஹ்ரீ' என்பது முதலிய வேதமந்திரமும் கூறும். (11)

(அ-கை.) ஹே பகவன்! இவ்வாறு தாங்களே இந்திராதிரூபமாய் யாவருக்கும் அவ்வப்பலத்தைக் கொடுத்தருளுவீராயின், அவ்வியாவரும் சாகூஷாத் தேவரீரையே ஏன் பஜிப்பதில்லே? தேவரீரைவிடுத்து இந்திராதிகளே ஏன் பஜிக்கின்றனர்? என அர்ச்சுனனது ஆசங்கைநிகழ ஸ்ரீ பகவான் விடையருளிச்செய்கின்றார் :

சு-ம். காம்க்ஷந்தஃ கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தெவதாஃ ।
க்ஷிப்ரம் ஹிமாநுஷே லொகே ஸித்திர்பவதி கர்மஜா ॥ (12)

ப-ம். 4 காம்க்ஷந்தஃ 2 கர்மணாம் 3 ஸித்திம் 6 யஜந்தெ 1 இஹ 5 தெவதாஃ 12 க்ஷிப்ரம் 7 ஹி 8 மாநுஷே 9 லொகே 11 ஸித்திர் 13 பவதி 10 கர்மஜா.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வுலகத்தே கருமபலத்தை யிச்சித்த சகாமன் இந்திராதி தேவதைகளைப் பூஜைசெய்வன். அதனல் இவ்வுலகத்தே அச்சகாமனுக்குக் கருமஜன்னியபலம் விரைவாகவே வுண்டாம். (12)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! யாவன் இவ்வுலகத்தே யாகாதிகட்குத் தன்மைந்தாதிபலன்களே யிச்சிப்பனே, அவன் இந்திராதி தேவதைகளேயே பூஜிப்பன்; அவன் நிட்காமனுய் ஒருகாலும் எம்மைப் பூஜிப்பதில்லே; ஏனெனின், யாவன் அவ்வப்பலத்தை விழைந்து இந்திராதிகளைப் பூஜிப்பனே, அதாவது யாகாதிக

ளால் இந்திராதி தேவதைகளை மகிழ்விப்பதே, அவனுக்கு அவ்வக்கருமஜன்னிய பலப்பிராப்தி இம்மனுஷலோகத்தே விரைவாகவேயுண்டாம். ஆன்மஞானத்தின் மோக்ஷரூப பலமோ, அந்தக்கரணசுத்தியினென்றி யெய்தாதாம்; மற்றே, அது தன்னடைவில் மனத்தூய்மையின் அபேக்ஷையை அவசியஞ் செய்யும். அத் தூய்மை அநேக ஜன்ம புண்ணியகருமத்தாலாமாதலின், கருமபலத்தைப்போல ஞானபலம விரைவாகவேயடைவுறுதாம். ஈண்டு மநுஷலோகத்தே கருமபலம் விரைவாகவேயடைவுறும் என்னும் வசனத்தைக் கூறியருளிடதால் ஸ்ரீ பகவான் இப்பொருளைக் குறிப்பித்தருளினர்:—இவ்வுலகினும் வேறுள உலகங்களின்மாட்டும் வருண ஆசிரமதருமத்தினும் வேறுள அன்னிய கருமஞ்செய்தலால் பலவடைவு அவசியமுண்டாம் ஆதலின் ஹே அர்ச்சுன! மோக்ஷத்தில் விருப்பமில்லாத சகாமன் அவ்வத் துச்சபலவடைவின்பொருட்டு அன்னிய இந்திராதி தேவதைகளைப் பூஜிக்குங்காரணத்தால் முமுக்ஷுக்கள் சாக்ஷாத்தம்மையே பூஜிப்பதேபோலச் சகாமன் சாக்ஷாத்தம்மைப் பூஜியான். (12)

(அ-கை.) ஆண்டுப் பூர்வசுலோகத்தே சகாமத்தன்மை நிட்காமத்தன்மைப் பேதத்தால் யாவரிடத்தும் சமானவியற்கையினபாவங்கூறியருளப்பெற்றது. இப் போது சரீரத்தை யாரம்பிக்கும் சத்துவாதிகுணங்களின் விஷயத்தன்மையினு மவ்வியாவரிடத்தும் சமானவியற்கையினபாவத்தைக் கூறியருளுகின்றார்:—

சு-ம். ஆதுவுணுஸ்ஸ யா ஹுஷ்ஸ முணகுஸுவிஹாமஸ்ஸ।
தஹ்ய குத்துராஸவி ஸ்ஸ விஜ்யகுத்துராஸவ்யயே ॥ (13)

ப-ம். 3 ஆதுவுணுஸ்ஸ 1 ஸயா 4 ஹுஷ்ஸ, 2 முணகுஸுவிஹாமஸ்ஸ 5 தஹ்ய 6 குத்துராஸ 7 ஸவி 8 ஸ்ஸ 11 விஜி 9 ஸுகுத்துராஸ 10 ஸவ்யயே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுவராய யாம் குணகருமவிபாகத்தால் நான்கு வருணங்களையுண்டாக்கினேம், அவற்றிற்குக் கர்த்தாவாயிருப்பினும் எம்மை நீ அகர்த்தாவாயும் அவ்யயமாயுமறிதி. (13)

(வி-ம்.) ஹே அர்ச்சன! ஈசுவராய யாம் சிருஷ்டியிறுதிகாலத்தே சத்துவாதி குணங்களின் பேதத்தாலும் சமதமாதி கருமங்களின் பேதத்தாலும் பிராஹ்மணாதி நான்கு வருணங்களை வேறு வேறு யுண்டாக்கினேம். சத்துவகுணத்தைப் பிரதானமாகவுடைய பிராஹ்மணர்கட்கோ சத்துவகுண காரியரூப சமதமாதிகளே கருமமாம். சத்துவகுணத்தை அப்பிரதானமாகவும் இராஜோகுணத்தைப் பிரதானமாகவுமுடைய க்ஷத்திரியர்கட்கோ அக்குணகாரியரூப சௌரியம் தேஜசாதிகளேகருமமாம். தமோகுணத்தை அப்பிரதானமாகவும் இராஜோகுணத்தைப் பிரதானமாகவுமுடைய வைசியர்கட்கோ அக்குணகாரியரூப கிருஷிவாணிஜ்யாதிகளே கருமமாம். தமோகுணத்தைப் பிரதானமாகவுடைய சூத்திரர்கட்கோ அக்குணகாரியரூப மூவருணத்தினரின் சேவைமுதலியவையே கருமமாம். இவ்வாறு குணபேதத்தானும் கருமபேதத்தானும் நான்கு வருணங்கள் நிலைபெற்றனவாம்.

சங்கை:—ஹே பகவன்! இங்ஙனம் குணகருமபேதத்தால் விஷம சுபாவத்தையுடைய நால்வருணங்களையுண்டாக்கும் தேவரீரிடத்தே விஷமத்தன்மைத் தோஷவடைவு அவசியமுண்டாமன்றே?

சமாதானம்:—ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்:—'தஹ்யகுத்துராஸவிஸ்ஸ விஜ்யகுத்துராஸவ்யயம்' என. ஹே அர்ச்சுன! யாம் வியவ்காரதிருஷ்டியால் விஷமவியற்கையையுடைய நால்வருணத்தையும் செய்கின்றேமாயினும் பரமார்த்த திரு

ஷ்டியாலே எம்மை அகர்த்தாரூபமாகவேயறிதி. அவ்யயரூபமாயறிதி ; அதாவது, நிரகங்காரத்தன்மையானே அபாதித மகிமையுடையேமென்றறிதி. ஓருரையின் கண்ணே 'மாணகஉழவிஹாமஸி' என்னும் வசனத்தே 'மாணகஉழவிஹாமஸி' என இரண்டு பதங்களை அங்கீகரித்து இப்பொருள் கூறப்பெற்றுளது :—நான்கு வருணங்கட்கும் ஹிதரூபமாயிருப்பது சாதுர்வர்ண்யமாம். அத்தகைய திரவிய தேவதைமுதலிய குணங்கள் அக்கினிஹோத்திராதி கருமங்கள் ஆகிய ஹிதங்களை யாம், 'விஹாமஸி ஸுயஷ்ஂ' சாதாரண அசாதாரண பேதத்தாலுண்டாக்கி னேம். அவற்றுள் தான ஜபாதிகருமங்கள் சர்வவருணங்கட்கும் சாதாரண தரு மங்களாம். அக்கினிஹோத்திரம், வேதாத்தியயனம், சந்தியோபாசனம் என்பன முதலிய கருமங்களோ பிராஹ்மணாதி மூவருக்குமேயாம்; சூத்திரர்க்கின்றும். அம் மூவருணத்துள்ளும் பிருஹஸ்பதி ஸ்மாதிகள் கேவலம் பிராஹ்மணர்கட்கே அசா தாரணதருமமாம், க்ஷத்திரியாதியர்க்கின்றும். இராஜசூயாதிகள் கேவலம் க்ஷத் திரியர்க்கேயசாதாரண தருமமாம், பிராஹ்மணாதிகட்கின்றும். வைசியஸ்தோ மாதிகள் கேவலம் வைசியர்கட்கே யசாதாரண தருமமாம் பிராஹ்மணாதிகட்கின் றும். மூவருணத்தினர்க்கும் சேவைசெய்தல் முதலியவை கேவலம் சூத்திரர்க்கே அசாதாரண தருமமாம். பிராஹ்மணாதிகட்கின்றும். இவ்வாறு அக்கினிஹோத்தி ராதி கருமங்கள் பேதமுறவே அவற்றினங்களூதமாய திரவிய தேவதைமுதலிய குணங்கட்கும் பேதமேயுண்டாம். இங்ஙனம் அந்நான்கு வருணங்களின் குணத் தையும் கருமத்தையும் யாமே சாதாரண அசாதாரணரூபமாயுண்டாக்கினேம். ஆகையால், புத்திரனது பிரசன்னத்தன்மையானே பிதாவிற்குப் பிரசன்னத்தன் மையாமாறு இந்திராதியரின் பிரசன்னத்தன்மையினானே எமக்கும் பிரசன்னத் தன்மையுண்டாம். இவ்வாறு பிரசன்னத்தன்மையையடைந்த யாம் அவர்தமன்பர் கட்கும் அவ்வப் பலத்தைக்கொடுப்பேம். (13)

(அ-கை.) ஹே பகவன்! முன்னர்த் தாங்கள் கர்த்தாரூபமாய எம்மை நீ அகர்த்தாரூபமாயறிதி ; எனக் கூறியருளினீர்களன்றே? அஃதெங்ஙனஞ் சம்பவிக் கும்? என அருச்சுனனது ஆசங்கை நிகழ, ஸ்ரீ பகவான் அப்பொருளை வெளிப் படையாய் நிரூபித்தருளுகின்றார் :—

சு-ம். நஉா கஉழாணி ஙிம்வஞி நஎ கஉழஹெ வ்யூஹா।
உதி உா யொஹிஜாநாதி கஉழஹிநழஹ பவ்யதெ ॥ (14)

ப-ம். 3 ந 1 உா 2 கஉழாணி 4 ஙிம்வஞி 8 ந 5 எ 6 கஉழஹெ 7 வ்யூஹா 9 உதி 11 உா 10 யஃ 12 யொஹிஜாநாதி 14 கஉழஹிஃ 15 ந 13 ஹஃ 16 பவ்யதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எம்மையிக்கருமம் பற்றமாட்டாது ; எமக்கிக் கரும பலத்தே திருஷ்ணையுமின்றும் இவ்வாறு யாவன் எம்மையறிவதே அவனும் கரு மங்களாற் கட்டுப்படான். (14)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! நிரகங்காரத்தன்மையானே கர்த்திருத்துவ அபி மானமற்ற எம்மை இவ்வுலகவுற்பத்தி திதிமுதலிய கருமங்கள் பற்றா ; அதாவது, அன்னிய அஞ்ஞானிகளை இக்கருமம் தேக ஆரம்பத்தானே கட்டுப்படுத்துவதே போல எம்மைக் கட்டுப்படுத்தாதாதலின் வியவகார திருஷ்டியால் யாம் கருமங் களைச் செய்யினும் வாஸ்தவமாய் அகர்த்தாரூபமேயாவேம் இவ்வாறு ஸ்ரீ பகவான் தம்மிடத்தே கருத்தாத்தன்மையை நிஷேதித்தருளி, இப்போது போக்தாத்தன் மையையும் நிஷேதித்தருளுகின்றார்:—'நஎகஉழஹெவ்யூஹா' என. ஹே அர்ச் சுன! அஞ்ஞானிகட்குக் கருமங்களின் சுவர்க்காதிபலன்களிடத்தே இப்பலம் என க்குண்டாகுக என்னும் திருஷ்ணையுண்டாவதேபோல ஆப்தகாமனெமக்குண்டா

காதாம். 'சூதகாஉஹ்யகாஹ்யஹா' சர்வான்மதிருஷ்டியால் சர்வ பதார்த்தங்களின் அடைவுடையயான் ஆப்தகாமனுவன். இத்தகைய ஆப்தகாமனுக்குச் சிறிதுமாத்திரையும் எப்பலத்திருஷ்ணையுமுண்டாகாதாம். கருத்திதுவாம் :—இவ்வுலகத்தே அஞ்ஞானிகளைக் கட்டுப்படுத்தும் கருமமானது, யானிக்கருமங்களின் கருத்தா, இக்கருமபலத்தை யானடைவேன் எனக் கர்த்திருத்துவ அபிமானம், பலத்தின் திருஷ்ணையென்னுமிரண்டினாலே கட்டுப்படுத்தும். இவ்விரண்டினைன்றிக் கருமம் எவரையுங்கட்டாதாம். இவ்விரண்டும் ஆப்தகாம எம்மிடத்தேயின்றுமாதலின், எம்மைக்கட்டுப்படுத்தா. இவ்வாறு கருமத்தைச் செய்தபோதினும் யாம் உண்மையாய் அகர்த்தாவேயாவேம்.

சங்கை :—ஹே பகவன்! இவ்வாறு தங்களிடத்தே அகர்த்தாத்தன்மையும் அபோக்தாத்தன்மையும் சித்தமாயினும் அதனையறிதலால் எம்மனோர்க்கு எப்பலப் பிராப்தியுண்டாம்?

சமாதானம் :—ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார் 'உதிஷாயொஉஹிஜாநாதி' என. ஹே அர்ச்சுன! இங்ஙனம் மற்றையரும் அகர்த்தா அபோக்தாவாய எம்மைத் தமதான்மவடிவமாய் அறியின், அவரும் எம்மைப்போல அக்கருமத்தாற் கட்டுப்படார்; அதாவது, அகர்த்தான்ம ஞானத்தால் அவரும் அக்கருமத்தினின்று விடுபாடையடைவர். (14)

(அ-கை.) யான் கருத்தாவல்லேன், கருமபல திருஷ்ணையும் எனக்கின்று என்னும் ஆன்மஞானத்தால் புருஷன் கருமத்தாற் கட்டுப்படாததலின் பூர்வம் அநேகமகான்கள் ஆன்மாவை அகர்த்தா அபோக்தாவெனவறிந்து கருமத்தையே யனுட்டித்தனர் அவ்வாறே நீயும் கருமத்தையே செய்தி! என்னும் பொருளை இப்போது ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார் :—

சு-ம். வனவம் ஜ்ஞாகுவா கூதம் கஉசு வமிவெஉவி உஉஊக்ஷாஹிஃ।
கூஊ குவெஉவ தஹ்ஹாகுவம் வமிவெசு வமிவசுதஊம் கூதழ। (15)

ப-ம். 1 வனவம் 2 ஜ்ஞாகுவா 7 கூதம் 6 கஉசு 3 வமிவெஉஃ 5 சுவி 4 உஉஊக்ஷா ஹிஃ 15 கூஊ 13 கஉசு 14 வன வ 11 தஹ்ஹாகு 12 குவம் 8 வமிவெஃ 9 வமி வசுதஊம் 10 கூதம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வாறு ஆன்மாவை அகர்த்தா அபோக்தாவென வறிந்து பூர்வமுமுக்ஷுக்களும் கருமத்தையே செய்தனர் அவ்வாறே அவரினும் பூர்வமுமுக்ஷுக்கள் யுகாந்தரத்தே கருமத்தையே செய்தனர் அதனால் நீயும் கருமத்தையே செய்தி! (15)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இத்துவாபரயுகத்தே பூர்வம் மோக்ஷச்சுக்களாய யயாதி, யது முதலிய அரசர்களும் ஆன்மாவை அகர்த்தா அபோக்தாவென வறிந்து தமது வருணாசிரமகருமங்களையே செய்தனரன்றிக் கருமபரித்தியாகஞ் செய்து தூஷ்ணீம் பாவத்தையேனும் சந்யாசத்தையேனும் செய்திலர்; அதனால் நீயும் ஆன்மாவை அகர்த்தா அபோக்தாவென வறிந்து கருமத்தையே செய்தி! தூஷ்ணீம் பாவத்தையேனும் சந்யாசத்தையேனும் நீ செய்யாதொழிதி! நீ தத்துவவேத்தாவல்லாதிருப்பின் மனத்தூய்மையின்பொருட்டுக் கருமஞ்செய்தி. நீ தத்துவவேத்தாவாயிருப்பின் லோகசங்கிரத்தின்பொருட்டுக் கருமத்தைச் செய்தி. எல்லாவகையானும் நினக்குக் கருமஞ்செய்யத் தகுதியதாம்.

சங்கை :—ஹே பகவன்! இத்துவாபரயுகத்தே பூர்வம் யயாதி, யதுமுதலிய அரசர் கருமஞ்செய்தனர் எனத்தாங்கள் கூறினீர்கள். அதனால் கேவலம் இத்

துவாபரயுகத்தேயே அக்கருமஞ்செய்ய அதிகாரமாம். திரேதாயுகங்களில் கருமஞ் செய்ய அதிகாரமின்றுமென அறியலாமன்றே?

சமாதானம்:—ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார் 'வைவஸ்வதம் கூதம்' என. ஹே அர்ச்சுன! கேவலம் இத்துவாபரயுகத்தேமாத்திரம் பூர்வம் யயாதியாதியர் கருமஞ்செய்திலர்; மற்றே, முன் திரேதாயுகங்களில் ஜனகாதியரசரும் ஆன்மாவை அகர்த்தா அபோக்தாவெனவறிந்து கருமத்தையேசெய்தனர். ஆதலின், இப்பொருள் துணியப்பெறும்:—இந்த யுகத்தேயும் வேறு யுகத்தேயும் முமுக்ஷுக்களும் தத்துவவேத்தாக்களும் ஆய அரசர்கள் மனத்தூய்மையின் பொருட்டும் லோகசங்கிரகப்பொருட்டும் தமது வருணாசிரம கருமங்களை அவசிய மாகவேசெய்தனர். ஆகையால், அவர்களைப்போல நீயும் நினது வருணாசிரம கருமத்தை அவசியஞ் செய்யவேண்டும். (15)

(அ-கை.) ஹே பகவன்! அக்கருமத்தே யாதேனும் ஐயமுமுளதோ? எதனால் தாங்கள் 'வைவஸ்வதம் கூதம்' என்னும் வசனத்தால் அத்தியந்தம் திடஞ்செய்தருளுகின்றீர்கள்? என அர்ச்சுனனது ஆசங்கைநிகழ, ஸ்ரீபகவான் அக்கருமத்தே ஐயமுளதாதலினேன அதன்கண் மதிமானும் மோகத்தையடைகின்றனன் என விடைகூறியருளுகின்றார்:—

சு-ம். கிம் கர்ம கிமகர்மேதி கவயோவ்யதர மொஹிதாஃ।
தத்தே கர்ம ப்ரவக்ஷ்யாமி யஜ்ஜ்ஞாத்வா மொக்ஷ்யஸேஸுபாத்॥ (16)

ப-ம். 2 கிம் 1 கர்ம 4 கிம் 3 அகர்ம 5 இதி 7 கவயஃ 8 அபி 6 அத்ர 9 மொஹிதாஃ 10 தத் 11 தே 12 கர்ம 13 ப்ரவக்ஷ்யாமி 14 யத் 15 ஜ்ஞாத்வா 17 மொக்ஷ்யஸே 16 அஸுபாத்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! கருமம் யாது? அகருமம் யாது? என்னும் பொருளில் மதிமானும் மோகத்தையடைகின்றனன்; அதனால் நினக்கு அக்கரும அகருமங்களை யாம் கூறுகின்றேம் அதையுணர்ந்து நீ சம்சாரத்தினின்றும் விடுபடுவாய்? (16)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஓடத்துள்ள புருஷனுக்குத் தீரத்திருக்கும் கமன மற்ற தருவின்மாட்டும் கமனமயல் காணவருகின்றது. கமனமுடைய புருடனிடத்தும் தூரத்தால் கமன அபாவமயல் காணவருகின்றது. ஆகையால், உண்மையாய் அக்கருமம் என்ன வஸ்து? அகருமம் என்னவஸ்து? என்னும் பொருளின்கண் மதிமான்களும் மோகத்தையடைகின்றனர்; அதாவது அவற்றின் வடிவநிர்ணயத்தே அசமர்த்தராவர். ஒருரையின்கண்ணே, 'கிம்கர்ம கிமகர்மேதி கவயோவ்யதர மொஹிதாஃ' என்னுமரைச்சுலோகத்திற்கு இப்பொருள் கூறப்பெற்றுளது:—சுருதிஸ்மிருதிரூப சாஸ்திரத்தால் விதித்த அருத்தம் கருமமாம்; விதியாதது அகருமமாம். என இவ்வாறு சில பண்டிதர் அவற்றின் வடிவத்தைக்கூறுகின்றனர். சில பண்டிதரோ விதித்ததைக் கருமமெனவும் விடுத்ததை அகருமமெனவும் கூறுவர். சில அறிஞரோ காமகாம்யதிக்கிரியை கருமமெனவும், தூஷ்ணீம் ஸ்திதி அகருமமெனவுமறையாநிற்பர். இவ்வாறு அக்கரும, அகருமசொரூபத்தே அநேகம் வகையாய விவாதம் காணவருகின்றதாதலின், கருமசப்தவாச்சியார்த்தம் யாது? அகருமசப்தவாச்சியார்த்தம் யாது? என்னும் பொருளின்கண்ணே நூலுணர்ந்தோரும் மோகத்தையடைகின்றனர்; அதாவது, அவற்றின் வாஸ்தவவடிவ நிர்ணயத்தின்கண்ணே அசமர்த்தராயினர். அதனால் யாம் நினக்கு அவற்றின் சொரூபத்தைச் சம்சய நிவிருத்தி பூர்வகமாய்க் கூறினேம்.

சங்கை :—ஹே பகவன்! அவற்றை யறிதலால் எப்பலப் பிராப்தியுண்டாம்?

சமாதானம் :—அதன் பலத்தை ஸ்ரீ பகவானருளுகின்றார் 'யஜ்ஜாகூ' என. ஹே அர்ச்சுன! அவற்றின் உண்மையாயவடிவத்தையுணர்தியேல் நீ இச்சம் சாரமற்றவனுவாய்! அதாவது, இச்சம்சாரமுத்தியே அவற்றின் ஞானபலமாம் 'தத்தகஉ வ்ரவக்ஷ்யாமி' என்னும் வசனத்தே கேவலம் கருமபதமேயுளதாயி னும் 'தத்தே' என்னும் இப்பதத்தின்முன் அகாரத்தைக் கிளப்பி அகர்மத்தின் கவர்ச்சியுமாதல் கூடும். (16)

(அ-கை.) ஹே பகவன்! கரும அகருமங்களின் சொரூபம் சர்வலோகத் தும் பிரசித்தமேயாமாதலின் யானும் அவற்றின் வடிவத்தையறிவேன். அவற் றுள் உடற்பொறியாதியின் வியாபாரம் கருமமாம். சும்மாவிருத்தல் அகருமமாம். இத்துணைப் பிரசித்தமாய விதன்கண்ணே தாங்கள் வேறு யாதுகூறற்குளது என அர்ச்சுனனது ஆசங்கை நிகழ ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்.

சு-ம். கஉணொஹ்யவி பொஜவ்யம் பொஜ்யவ்யம்ச விகஉணஃ।
ஸகஉணஶ்ச பொஜ்யவ்யம் மஹநா கஉணொ மதிஃ॥ (17)

ப-ம். 1 கஉணஃ 10 ஹி 2 கவி 3 பொஜ்யவ்யம் 6 பொஜவ்யம் 4 அ 5 விகஉணஃ
8 ஸகஉண 7 அ 9 பொஜ்யவ்யம் 13 மஹநா 11 கஉணஃ 12 மதிஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சாஸ்திரவிகித கருமத்தின் தத்துவத்தையும் நிஷி த்தகருமத்தின் தத்துவத்தையும் அகருமத்தின் தத்துவத்தையும் அறிதல் தகுதி யாம். எக்காரணத்தால் கரும விகரும அகருமங்களின் தத்துவம் அத்தியந்தம் துர்ப்போத்தியமாமோ.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சுருதி ஸ்மிருதிகள்விதித்த அருத்தம் கருமமாம், அதனுண்மைவடிவமு முன்னலவசிய மறியத்தகுதியதாம், அதையறியாமல் அத னனுஷ்டானமுண்டாகமாட்டாது. அவை நிஷேதித்த அர்த்தம்விகருமமாம், அதனுண்மைவடிவமு முன்னலவசியமறியத்தகுதியதாம். அதையறியாமல் அத னினின்றும் நீக்கமுண்டாகாதாம். சர்வவியாபாரமுமற்றுச் சும்மாவிருத்தல் அக ருமமாம், அதனுண்மைவடிவமு முன்னலவசியமறியத்தகுதியதாம். எதனுற்கரும விகரும அகருமமென்னும் மூன்றன் உண்மைவடிவம் அத்தியந்தம் துர்விஞ்ஞேய மாமோ. ஈண்டு 'மஹநாகஉணொமதிஃ' என்னும்வசனத்தின்கண்ணே இருக்கும் கர்மசப்தம் விகர்ம அகர்ம மிரண்டற்கும் உபலக்ஷகமாம்; அதாவது, கர்மசப்தத் தால் மூன்றையுங்கவர்க. 'கஉணஃ விகஉணஃ ஸகஉணஃ' என்னும் மூன்றன் பின்னும், தத்துவம், என்னும் பதத்தை அத்தியாகாரஞ்செய்க. 'பொஜவ்யம்' என் னும் மூன்றுபதங்களின்பின்னும் ஜ்ஞாதி என்னும்பதத்தை அத்தியாகாரஞ்செய்க. அதனுல் 'கஉணஜ்ஞாதிதத்வம் பொஜவ்யம் ஜ்ஞாதி' என மூன்றுவாக்கியங்கள் சித்த மாகும். ஆண்டுக் கருமத்தின் உண்மைவடிவமும் நீ யறியத்தக்கதாம்; என அவ் வாக்கியங்களின்பொருள் சித்தமாம். (17)

(அ-கை.) ஹே பகவன்! கரும விகரும அகருமமென்னும் மூன்றன் உண் மைவடிவம் என்னலவசியமறியத்தக்கதேயாம். அவற்றினுண்மைவடிவம் எத்த கையதென அருச்சுனனது சங்கையுண்டாக, ஸ்ரீ பகவான் அவற்றினுண்மைவடி வத்தைக்கூறியருளுகின்றார்.

சு-ம். கஉணையகஉயஃ வபொயுஃ ஸகஉணி அகஉயஃ।
ஸவை ஜிஹாஸு ஸ்ரவஷ்யஷ்ய ஸயுக்தஃ கர்மஜ்ஞ கஉகர்ம॥ (18)

ப-ம். 2 கஉ-ழணி 3 சுகஉ-ழ 1 யஃ 4 வஒய்கூ 7 சுகஉ-ணி 5 அ 8 கஉ-ழ 6 யஃ 9 வஃ
11 பை-ச்சிஉஙு 10 உக-வ்ஷை்ஷ-ா 12 வஃ 13 யா-க்ஷஃ 14 கூ்ஜ்ஞ கஉ-ழகூ்ஜகூ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யாவன் கருமத்தின்கண்ணே அகருமத்தைக்காண் பனே, யாவன் அகருமத்தின்கண் கருமத்தைக்காண்பனே அவனே எல்லாமனுஷ ருள்ளும், மதிமானுவன்; அவனேயோகத்தோடு கூடியவனுவன். சருவகருமங்களை யுஞ் செய்பவனுவன்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சுருதி ஸ்மிருதிவிகித நிஷித்த தேக இந்திரிய புத்தி முதலியவற்றின் வியாபாரம்கருமமாம். அஃதுண்மையாயோ தேகேந்திரி யாதிகளிடத்தேயிருக்கும். அசங்க ஆன்மாவின்கண் அக்கருமமிராதாயினும், யாதுற்றுகின்றேன் என்னுந் தருமாத்தியாசரூபப் பிரதீதியின்பலத்தால் ஆன்மா வின்கண்ணே ஆரோபணஞ் செய்யப்படும். நதிதீரத்திருக்குந் தருவின்கண்ணே உண்மையாய்க் கமனரூபக்கிரியையின்றுமாயினும் ஓடத்திருப்பவன் ஓடமோட லால் தருவின்கட்கமனத்தை யாரோபித்தலேபோலச் சாஸ்திரவிசாரமற்ற மூடன் அக்கிரிய ஆன்மாவில் கருமத்தை யாரோபிப்பன். ஆன்மாவின்கண்ணாரோபித்தகரு மத்தே யாவன் ஆன்மாவின் அகர்த்தாவடிவத்தை விசாரித்து உண்மையாய்க்கர்மா பாவத்தையே காண்பனே, கருத்திதுவாம் :—ஓடத்திருப்பவன் தீரத்தருவின் கண்ணே கமனத்தையாரோபிக்கினும் உண்மையாய் அதன்கண்ணே கமனபாவ மேயிருப்பதுபோல மூடன் அக்கிரிய ஆன்மாவில் கருமத்தை யாரோபிக்கினும்அத ன்கண் ணுண்மையாய்க் கருமத்தின் அபாவமேயுளது. இவ்வாறு யாவன் கருமத் தின்கண்ணே அகருமத்தைக்காண்பனே என்பதாம். முக்குணன்மிக மாயாபரி ணமமாதலின் எக்காலத்தும் கருமத்தையுடைய தேதேகேந்திரியாதிகளிடத்தே உண் மையாய்க் கருமாபாவமிராதாம்; மற்றே அவற்றின்பால் அதனபாவ ஆரோபண மாம். சகூ-சம்பந்தமுற்ற தூரதேசத்திருக்கும் கமனமுடையவனிடத்தே உண் மையாய்க் கமனபாவமின்றேனும் தூரதோஷவயத்தால் அவன்பால் அதன் ஆரோ பணமாம். ககனத்துள்ள மதியுடுக்கணத்தே உண்மையாய்க் கமனபாவமின்றும்; மற்றே, எப்போதும் கமனமேயுளது; எனினும் தூரதோஷவயத்தால் அவற்றின் கண்ணேகமனபாவ ஆரோபணமாம். அதுபோல, எப்போதும் கருமத்தோடுகூடிய தேதேகேந்திரியாதிகளிடத்தே உண்மையாய்க் கர்மாபாவமின்றும். மற்றே, யான் சும் மாவிருக்கின்றேன், சிறிதுமாத்திரையும் கருமஞ்செய்திலன், என்னும் அத்தியாசப் பிரதீதியின் பலத்தால் அவற்றின்கண்ணே அதன் ஆரோபஞ்செய்யப்பெறும். இத்தகைய தேதேகேந்திரியாதிகளிடத்தே ஆரோபிக்கப்பட்ட வியாபார உபரமத் தன்மைவடிவ அகர்மத்தின்கண்ணே யாவன் அவற்றின் சந்ததவியாபாரமுடை மைவடிவ வாஸ்தவரூபத்தை ஆராய்ந்து உண்மையாய்க் கருமத்தைக் காண்ப னே; அதாவது ஆரோபித அகருமத்தே கருமநிவிருத்தியெனப் பெயரிய நிக்கி ரகமென்னும் முபற்சிவடிவ வியாபாரமாகிய கருமத்தை யாவன் காண்பனே, கருத்திதுவாம் :—நேத்திர சம்பந்தமுற்ற தூரதேசத்திருக்கும் கமனமுடை யவனிடத்தும், ககனத்தின்கண்ணிருக்கும்கமனமுடைய உடுக்கணத்தும் தூர தோஷத்தால் கமனபாவப் பிரதீதியுண்டாமாயினும் புருஷனும் உடுவும் உண்மை யாய்க் கமனம்பற்றல் திண்ணமாம். அதுபோலச் சும்மாவிருக்கும் யான் சிறிது மாத்திரையும் ஒன்றையும் செய்வதில்லையென்னும் அத்தியாசரூபப் பிரதீதிபலத் தால், தேதேகேந்திரியாதிகளிடத்தே கருமாபாவம் பிரதீதியாயினும் அவை உண்மை யாய்க் கருமமுடையனவேயாம். உதாசீன அவஸ்தையின்கண்ணும் யான் உதா சீனனாயிருந்தேன் என்னும் அபிமானமே ஒரு கருமமாம். இவ்வாறு கருமத்தே அகருமத்தையும் அகருமத்தே கருமத்தையும் காணும் பரமார்த்த தரிசியானே

னே சர்வ மனுஷருள்ளும் மதிமானுவன்; யோகத்தோடுகூடியவனுவன். சர்வ கருமங்களையுஞ் செய்பவனுவன். ஈண்டுக் கூறியருளிய மூத்தருமங்களால் ஸ்ரீ பகவானுவர் பரமார்த்ததரிசியின் ஸ்துதி கூறியருளினர். ஆண்டு, 'கஉஂணுகஉஂயஃ வஒயுகஃ' என்னும் பிரதமபாதத்தால் ஸ்ரீ பகவானுவர் கருமவிகருமங்களின் வாஸ்தவவடிவத்தை தரிசிப்பித்தருளினர்; எதனற் கருமசப்தம் விகிதகருமம் நிஷித்த கருமம் என்னும் இரண்டினுக்குமே வாசகமாமோ, 'அகஉஂணிஅகஉஂயஃ' என்னும் துவிதீயபாதத்தால் ஸ்ரீ பகவானுவர் அகருமத்தின் வாஸ்தவவடிவத்தைக் காண்பித்தருளினர். ஆகையால் ஹே அர்ச்சுன! நீ இவ்வெல்லாக் கருமங்களும்பந்தஹேதுவாமாதலின், இவை எனக்குச்செய்யயோக்கியமன்றும்; மற்றே, தூஷ்ணீம்பாவமாயே சுகபூர்வகமாயிருத்தல் யோக்கியமாம் என நினைத்தல் மித்தையேயாம். ஏனெனின், யான் கருமகருத்தாவென்னும் கர்த்திருத்துவ அபிமானம்எதுவரை உளதாமோ அதுவரையுமே அவ்விகித நிஷித்தகருமங்கள் பந்தத்தையுண்டாக்கும். அவ் வபிமானமற்றுக் கேவலம் தேக இந்திரியாதிகளின் தருமமெனவெண்ணிச் செய்த அவை பந்தத்தையுண்டாக்கா. இப்பொருளே 'கஉஂ கஉஂணிஇஂவஞி' என்பதாதி வசனங்களாற் பூர்வம் கூறிவந்தேம். ஹே அர்ச்சுன! அக்கர்த்திருத்துவ அபிமானமிருப்ப யான் சும்மாவிருக்கின்றேன் என்னும் உதாசீனத்தன்மையின் அபிமானமாத்திரரூப கருமமும் பந்தத்தின் ஹேதுவேயாகும்; எதனற் கர்த்திருத்வ அபிமானியானவன் வஸ்துவின் வாஸ்தவவடிவத்தையறிந்திலனே? ஆகையால், ஹே அர்ச்சுன! கருமம், விகருமம், அகருமம் என்னும் முன்மொழிந்த மூன்றன் வாஸ்தவவடிவத்தையறிந்து விகருமம அகருமங்களைப் பரித்தியாகஞ்செய்து கர்த்திருத்துவ அபிமானம்விடுத்து பலேச்சையற்று நீ சாஸ்திரவிகித சுபகருமத்தையே செய்தி. அல்லது இச்சுலோகத்திற்கு இவ்வேறுபொருள்கொள்க:—பிரத்தியக்ஷாதிப் பிரமாண ஜன்னியஞான விஷயம் கருமமாம். அத்தகையது இத்திருசிய ஜடரூபப் பிரபஞ்சமாம். கூறிய ஞானவிஷயமன்றுயது அகருமமாம். அத்தகையது ஸ்வப்பிரகாச சர்வப் பிரமாதிஷ்டானரூப சைதன்யமாம். ஆண்டு யாவன் ஜகத்துருவகருமத்தே தனது சத்தாஸ்புரணரூபத்தால் அநுஸ்யூதஸ்வப்பிரகாச அதிஷ்டான சைதன்யரூப அகருமத்தைப் பரமார்த்ததிருஷ்டியாற் காண்பனே? யாவன் அவ்வகருமத்தே அம்மாயாமய திருசியப்பிரபஞ்சரூப கருமத்தைக் கற்பிதமெனக் காண்பனே, அதாவது காண்பானுக்கும் காண்பவற்றிற்கும் யாதொரு சம்பந்தமும் சம்பவிப்பதின்றுமாதலின், இத்திருசியப்பிரபஞ்சம் அத்திருஷ்டாவின்கண்ணே உண்மையாயின்றும் என இவ்வாறு யாவன் காண்பனே?

யஸ்ய ஸர்வ உஂணிஹ மதாஃ க்ருதஸ்யவாஃ வஒயுகஃ।
ஸர்வ உஹ மதேஷு ஆதாஃ ததோஃ விஜிஃவஸ்தே ॥

(போ-ள்.) யாவன் சர்வ பூதங்களையும் அதிஷ்டான ஆன்மாவின்கண்ணே கற்பிதமெனக் காண்பனே, அச்சர்வபூதங்களிடத்தும் சத்தாஸ்புரணரூபத்தால் ஆன்மாவை அநுஸ்யூதமெனக் காண்பனே, அப்பரமார்த்ததரிசியாயவனே யாவரினும் மேன்மையனுவன். இவ்வாறு சைதன்ய ஆன்மாவிற்கும் திருசியஜகத்திற்கும் பரஸ்பரம் அத்தியாசமிருப்பினும் யாவன் உண்மையாய்ச் சுத்தசைதன்யத்தையே காண்பனே, அவ்வித்துவானே சர்வ மனுஷர் மத்தியில் அத்தியந்தம் புத்திமானுவன்; அவனினும் வேறுய எவனும் புத்திமானல்லன்; ஏனெனின், இவ்வுலகத்தும் உண்மையாய் வஸ்துவின் வடிவத்தை அறிபவனே புத்திமானெனப்படுவன்; மற்றையனல்லன். இரஜ்ஜுவை இரஜ்ஜுவடிவத்தால் அறிபவன் மதிமானுவன்; அதனைச் சர்ப்பமென வுணர்பவன் மதிமானல்லன். அதுபோலச் சர்வாதிஷ்டானரூப சுத்த சைதன்யத்தைக் காண்பவனே பரமார்த்ததரிசியாதலின் மதிமானுவன்.

அனன்மப் பிரபஞ்சத்தைக்காணும் அஞ்ஞானியோ, மித்தியாதரிசியாதலின் மதிமானுகான். அப்பரமார்த்ததரிசியே அப்புத்தியின் சாதனரூப யோகத்தோடுகூடியவனுவன். அதாவது, அந்தக்கரணசுத்தியால் ஏகாக்கிரமனமுடையவனுவன். இக்காரணத்தால் அவனேமனத்தூய்மைக்குச் சாதனரூப சர்வகருமங்கட்கும் கருத்தாவாவன். இவ்வாறு மதியுடைமை, யோகமுடைமை, சர்வகருமச்செயலுடைமை என்னும் வாஸ்தவமுத்தருமங்களால் அப்பரமார்த்ததரிசியானவன் துதிக்கப்பெறுவன் ஹே அர்ச்சுன! அப்பரமார்த்ததரிசி இவ்வாறு மகத்தன்மையையடைந்திருத்தலின் நீயும் பரமார்த்ததரிசியாதி! அத்தன்மையினுனே நின்பாற் சர்வ கர்மகர்த்ருத்தகைமைசித்தமாம்; ஆதலின் எக்கருமம் அகருமஸ்வரூபத்தையறிந்து நீ இச்சம்சாரத்தினின்றும் முக்தனுவாயெனப் பூர்வம் யாது அருளினேமோ, கருமாதி மூன்றன்வாஸ்தவஸ்வரூபம் நீயறிதல் தகுதியதாம் எனப்பூர்வம் யாது அருளினேமோ, அவனே மதிமான் என்பது முதலிய ஸ்துதியாது அருளினேமோ, அவையாவும் பரமார்த்த வஸ்துவின்றரிசனமுண்டானபின்னரே சம்பவிக்கும், அன்னிய வஸ்துவின்றரிசனத்தாற் சம்பவியாவாம்; ஏனென்னின், அச்சைதன்யமாகிய பரமார்த்த வஸ்துவினும் வேறுயுள்ள அனன்மபதார்த்தங்களின் ஞானத்தால் அசுபசம்சாரத்தினின்றும் முக்தி சம்பவியாதாம் மாறுய்ப் பந்தத்தின் அடைவேயுண்டாம்; அப்பரமார்த்த வஸ்துவினும் வேறுபயாவும் அதத்வரூபமாதலின் அது அறியத்தகுதியதுமாகாதாம். அவ்வனன்மஞானத்தால் புருஷன்பால் மதிமானுந்தன்மையும் சம்பவியாதாம். ஆகையால், பரமார்த்த தரிசிகட்கு இம்முன்மொழிந்த வியாக்கியானம் பொருத்தமாயதேயாம். ஒருரையின்கண்ணே, 'கூஉஃணஃகூஉஃயஃவஔஜ' என்னும் சுலோகத்திற்கு இப்பொருள் கூறப்பெற்றுளது:—பரமேசுவராது மகிழ்வின்பொருட்டுச் செய்யப்பட்ட அக்கினிஹோத்திர சந்தியா உபாசனாதி நித்தியகருமங்கள் பந்தஹேதுவாகமாட்டாவாதலின் அவற்றில் யாவன் இவை பந்த அஹேதுவாதலின் அகர்மரூபமேயாம் எனக்காண்கின்றனனே நித்திய கருமங்களைச்செய்யாதொழிதல் அகருமமாம், அது பிரத்தியவாய ஹேதுவாம்; ஆதலின் அதன்கண் யாவன் இது பிரத்தியவாய ஹேதுவாதலின் கர்மரூபமேமயாம் எனக்காண்கின்றனனே அவனே யாவருள்ளும் மதிமானுவன். யோகத்தோடு கூடியவனுவன். சர்வகருமங்கட்குங் கருத்தாவாவன். என்பதாம். இப்பொருள் அசங்கதமாம்; ஏனெனின், அந்நித்தியகருமத்தே இஃதகருமமென்னும் ஞானம் தாம்பின் கண்ணே பாம்பின் ஞானம்போல மயல்வடிவமேமயாமாதலின் அம்மயக்கவுணர்வின் கண்ணே 'யஜ ாகுவாஸொகூஃயஸெஉஸஸுஹாகஃ' என்னும் வசனத்தாற் கூறியருளிய அசுபசம்சாரத்தினின்றும் மோகூஃஹேதுதத்தன்மை சம்பவியாதாம்; மற்றேரு, அது மித்தையாதலின், தானே அசுபரூபமாம். அம்மயக்கவுணர்வு 'வொஜவ்யஂ' என்னும் வசனத்தால் கூறியருளிய அறியத்தகுந்த தத்துவரூபமுமன்றும். அம்மயக்கவுணர்வையடையின், மதியுடைமை, யோகமுடைமை முதலிய ஸ்துதியும் சம்பவியாதாம். மாறுய், அம்மயக்கவுணர்வையுடையவன் மித்தியாதரிசியெனக் கூறப்பெறுவன். அந்நித்திய கருமத்தின் அனுஷ்டானமேமா, ஸ்வரூபமாயேமனத்தூய்மைவாயிலாய் ஆன்மஞானத்தின்கண்ணே உபயோகியாம். அந்நித்திய கருமத்தின்கண்ணே அகருமபுத்தியோ எதன்கண்ணும் உபயோகியன்றும்; ஏனெனின், எப்பொருள் சாஸ்திரத்தால் விதிதமாமோ, அப்பொருளே மனத்தூய்மையின்கண்ணும், ஞானத்தின்கண்ணும் உபயோகியாம். நாமம் வாக்கு மனம் முதலியவற்றே சாஸ்திரம் பிரஹ்மதிருஷ்டியை விதித்துளதாதலின் அத்திருஷ்டிக் கந்தக்கரண சுத்திவாயிலாய் ஞானத்தின்கண்ணே உபயோகமாவதேபோல, நித்திய கருமம் அகருமமென்னுந் திருஷ்டியை எந்நாலும் விதிக்கவில்லையாதலின், அத்திருஷ்டிக்கு எவ்வாத்தத்தின்கண்ணும் உபயோகஞ் சம்பவியாது. ஆண்டு 'கூஉஃ

ணயகஉயஃ வஒயகஃ' என்னுங் கீதாவசனமே அக்கருமத்தே அகருமதிருஷ்டி யை விதிக்கின்றது எனக்கூறிற்சம்பவியாதாம் ; ஏனெனின் இக்கீதாவசனத்திற்கு இவ்வகைப் பொருள்கோடலால் பூர்வம் 'யஜ ஈகூவாஹொகூஷ்யஹெஉஹ ஹாகஃ' என் பது முதலிய உபக்கிரமாதி வசனங்களின் விரோதம் கூறப்பெற்றுளது. இவ் வாறு நித்தியங்களைச் செய்யாமை வடிவ அகருமமும் ஸ்வரூபமாயே அந்நித்திய கருமத்தினும் விருத்தகருமத்தின் இலக்ஷகத்தன்மையினாலே உபயோகியாம் அவ் வகருமத்தே கருமதிருஷ்டி எப்பொருளின்கண்ணும் உபயோகியாகமாட்டாது. அந்நித்தியகருமத்தைச் செய்யாமையால் பிரத்தியவாயமுமுண்டாகாதாம் ; ஏனெ னின், அதனைச்செய்யாமை அபாவவடிவமாம், பிரத்தியவாயம்பாவவடிவமாம். அவ் வபாவத்தினின்றும் பாவோற்பத்தி சம்பவியாதாம், அங்ஙனமாகுமாயின், அபாவ மோ, சர்வதேசகாலத்துமிருக்கின்றதாதலின் சர்வதேசகாலங்களில் சர்வகாரி யோற்பத்தியுண்டாதல்வேண்டும் ; ஆனாலவ்வாறு காணுமாதலின் அவ்வாறுடன் படல் முற்றினும் முரணும். அல்லது, பாவரூப அர்த்தமே தர்ம அதர்மரூப அபூ ர்வத்தின் ஜனகமாம். அபாவரூப அர்த்தம் அபூர்வ ஜனகமாகாதாமாதலின், நித்திய கருமாபாவம் பிரத்தியவாய ஜனகமன்றும் ; மற்றோ, அந்நித்தியகரும அனுஷ்டானகாலத்தே அதன் விரோதியாய சயன உபவேசனாதி நித்தியகரும அகரணபலகூஷித பாவரூபகருமமே, அப்பிரத்தியவாய ஹேதுவாம். இது சர்வ வைதிகபுருடரின் சித்தாந்தமாமாதலின் மித்தியாஞானநிவிருத்திப் பிரசங்கத் தே அதன் வியாக்கியானமே செய்தல் முற்றிலும் முரணும். ஸ்ரீபகவத்வசனம் நித்தியகரும அனுஷ்டானபரமென எவனேனுங் கூறின் அதுசம்பவியாதாம். ஏனெனின், இவன் நித்தியகருமத்தைச் செய்கவென்பதனை 'கஉஃணயகஉஃயஃவ ஒயகஃ' என்னும் வசனம் கூறிலது. அப்பொருளை யறிவித்தருளும்பொருட்டு ஸ்ரீபகவான் அவ்வசனத்தைக் கூறியருளியிருப்பாராயின் ஸ்ரீபகவானிடத்தே மித்தியாவாதித்தன்மை சித்தமாகும். ஒருசையின்கண்ணே, 'கஉஃணயகஉஃயஃ வஒயகஃ' என்னும் சுலோகத்திற்கு இப்பொருள் கூறப்பெற்றுளது :—ஆண் டுப்பூர்வம் 'கஉஃணொஹயவிபொஃவயம்' என்னும் சுலோகத்தின்கண்ணே கரு மம் விகருமம் அகருமம் என்னும் மூன்றன்பரியவசானரூபகதி அத்தியந்தங்கன மாமாதலின் அதிகாரியானவன் கருமங்களின்கதியை யவசியம் அறியவேண்டும் என்னுமிப்பொருள் ஸ்ரீபகவானாற் கூறியருளப்பெற்றதாம். அப்பொருளின் வியா க்கியானவடிவமே 'கஉஃணயகஉஃயஃ வஒயகஃ ஸஉஈஷ்யஷ்ட பஃஜீஸாஇ' என் னுமிவ்வசனமாம். அஃதாமாறுகாட்டுதும் :—'கஉஃணி' என்னும்பதத்தால் கரு மம் அகருமம் விகருமம் என்னும் மூன்றையுங்கவர்க. 'ஸகஉஃ' என்னும் பதத் தால் அம்மூன்றினும் விபரீதபாவத்தைக்கொள்க. ஆண்டு யாவன் கருமத்தின் கண்ணே அகருமத்தைக்காண்பனே அதாவது கருமத்தினும் விபரீதபாவத்தைக் காண்பனே ஆண்டு அம்மூன்றன்கண்ணும் அக்கர்மாதிகளினும் விபரீதரூபத்தன் மை சாஸ்திரப்பிரமாணத்தாற்காணவரும். கருமத்தின்கண்ணே சிரத்தையற்றவன் செய்தயாகம் பலகாரணமன்றுதலின் செய்யினும் செய்யாததற்கொப்பேயாமாதலி ன் சிரத்தையற்றவன் செய்தயாககருமம் அகருமத்தின்கண்ணே பரியவசானத்தை யடையும். இடாம்பிகன்செய்த யாககருமம் விகருமத்தின்கண்ணே பரியவசானத் தையடையும். இப்பொருளை ஸ்ரீபகவான் தாமே 'ஸஈரஜ்யாஹு தஃஜ்ஞ தவஹு வஃகூத தஃஅயகஃ । ஸஹஜ்ஞதயு அயுதெவாயஃஜ்ஞ அதகஃவ்ரதயுஜ்ஞொ உஹ' என் னும் சுலோகத்தின்கண்ணே மேற்கூறியருளுவர், இவ்வாறு சர்வவியாபாரமற்ற உதாசீனத்தன்மை அகர்மரூபமாயினும் துக்கிகளைக் காப்பாற்றுவதிற் சமர்த்தன் ஔதாசீனத்தன்மையை யங்கீகரித்துத் துக்கிகளின்காப்பைச் செய்யாதொழியின் அவனது உதாசீனத்தன்மைரூப அகருமம் விகருமத்தின்கண்ணே பரியவசானத் தையடையும். பிதிர்யாகாதி ஐந்தனையுங் குறித்தகாலத்தே செய்யாமை அகர்

மரூபமாயினும் அக்கால் ஈசுவர ஆராதனத்தே அத்தியந்தம் ஆசக்தியுடையவனு க்கு அவ்வைந்தனையும் செய்யாமை வடிவ அகருமமும் கருமத்தின்கண்ணே பரிய வசானத்தையடையும். இவ்வார்த்தையை 'ஸவ-ழயஉ-ழாஹூஸிதயஜயஊ ஜெகுஂஙஸ ணஂவஜஜ' என்னும் சுலோகத்தே ஸ்ரீபகவான் தாமே திருவாய்மலர்ந்தருளியுள் ளார். நித்தியகரும பரித்தியாகத்தால் பாவப்பிராப்திகூறப்பெற்றதும் அதுசெய் யுங்காலத்தே சாஸ்திர நிஷித்தலௌகிக வியவகாரஞ்செய்வதனாலே பாவ அடைவு கூறப்பெற்றுளது. ஆனால், அக்கால் ஈசுவர ஆராதனத்தே பற்றுதலுற்றவன் பிர த்தியவாயத்தையடையான்; இக்காரணத்தானே பூர்வம் நீர்முதலியவற்றின் உள் ளிருந்து தவஞ்செய்யும் இருஷிகள் அக்கால் நித்தியகருமத்தைச் செய்யாமையாற் பிரத்தியவாயத்தை யடைந்திலர். இவ்வாறு ஒருமிருகத்தைக் கொல்லல் விகர்மரூப மெனினும் 'சுஹ்ரிஷோஷீயம் வஸுஊருஹெத' என்னும் வசனத்தால் யாகத்தே செய்யும் ஹிம்சை கருமத்தின்கண்ணே பரியவசானத்தையடையும். வாளா அம்மி ருகம்நஷ்டமாயின் அதனிம்சையினின்றும் தருமரூப அபூர்வம் உற்பன்னமாகாதா மாதலின் அதுகருமரூபமுமன்றும். இச்சையுடையோன் அப்பசுஹிம்சையைச்செய் யாததலின் அது விகர்மரூபமுமன்றும்; மற்றே, எஞ்சியதாய்ச் செய்யப்படினும் அவ்விம்சை செய்யாமைக்கொப்பேயாம். ஆகையினால், அவ்வியர்த்தமாய ஹிம்சை அகருமத்தின்கண்ணே பரியவசானத்தையடையும், இவ்வாறு கள்வனைவிட்டுவிடு தல் அவனைடுகூடியார்க்குக் கருமரூபமேயாயினும் அரசனுக்கு விகருமமேயாகும்; ஏனெனின், 'ஹெதஃவ-ஊகொஸாஜ நி வாவஸாவ்ஷ்-ஃ' என்பதுமுதலிய வசனங்க ளில் கள்வனைவிடுதல் அரசனுக்குப் பாவ அடைவின் ஹேதுவெனக் கூறப்பெற்று ளது. அதேதகள்வன் விடுபாடுநிட்காமசந்நியாசிக்கு உபதேசஃவிஷயமாதலின் அகர்மரூபமேயாம். இவ்வாறு மெய்பேசுதல் கர்மரூபமாயினும் அதனாலொருபிரா ணிக்கிம்சையுண்டாயின் அதுவும் விகருமத்தே பரியவசானத்தையடையும். இவ் வாறு பொய்ம்மொழிபுகலல் விகருமரூபமாயினும் அதனாலொருபிராணியின் காப் புண்டாயின் அதற்குக் கருமத்தின்கண்ணே பரியவசானமுண்டாம். இவ்வாறு யாவன் சாஸ்திரப்பிரமாணத்தால் கருமத்தின்கண்ணே அகருமத்தன்மையையும் விகருமத்தன்மையையும் காண்பனே அகருமத்தின்கண்ணே கருமத்தன்மையை யும் விகருமத்தன்மையையும் காண்பனே, விகருமத்தின்கண்ணே கருமத்தன்மை யையும் அகருமத்தன்மையையும் காண்பனே; காரிய அகாரிய விபாகத்தை யுண ர்ந்தவவன் கருமாதிகளின் வாஸ்தவஸ்வரூப முணர்ந்தவனுதலின் மதிமான் எனப் படுவன் என்பதாம். பூர்வம் 'கஂகுஉ-ழகஉகுஉ-ழதி' என்னும் சுலோகத்தே எக்க ரும அகருமஸ்வரூபத்தே கவிகட்கும் மோகவடைவுகூறப்பெற்றதோ 'யஜ ஜ்ஞாத்வா மொக்ஷ்யஸெ உஸுபா-ஹாசு' என்னும் வசனத்தே எக்கரும அகருமஜ்ஞானம் அசுப சம்சாரத்தினின்றும் மோக்ஷஹேதுவது கூறப்பெற்றதோ அக்கரும அகருமங்களின் ஸ்வரூபத்தன்மை யாம் நினக்குக்கூறுகின்றேம் என ஸ்ரீபகவான் அருச்சுனனுக் குக் கூறியருளினர். அவ்வசனத்தின் வியாக்கியானரூபம் 'சுகுஉ-ழணிஅகுஉ-ழயஃ வஸ்ஸ்ய-ஹுதயா-குஃ' என்னும் வசனமாம். ஆண்டிவ்வசனத்தின்கண்ணேயிருக்கும் 'அ' காரம் கருமத்தின்கண்ணே அகரும தரிசனத்தையும் அகருமத்தின்கண்ணே கருமதரிசனத்தையும் சமுச்சயஞ்செய்விக்கவாம். அதனாலிப்பொருள் தணியப் பெறும்:—யாவன் மதிமானே யுக்தனே அவனே முழுக்கருமஞ் செய்தவனுவன், யாவன் கேவலம் மதிமானேயாவனே யுக்தனல்லனே அவனும் முழுக்கருமஞ்செய் தவனுகான். யாவன் கேவலம்யுக்தனேயாவனே மதிமானல்லனே அவனும் முழுக் கருமஞ்செய்தவனுகான், இப்பொருளே இப்போது வெளிப்படையாய்க் காண்பிப் பாம்:—யாவன் அகருமத்தே கருமத்தைக்காண்பனே அவன் யுக்தனெனப்படு வன். அசைவற்ற கூடஸ்தஆத்மா அகருமமாம். அசைவுற்ற ஆகாசாதிபாகியப் பிர பஞ்சமும் மனோபுத்தியாதி ஆந்தரப்பிரபஞ்சமும் கருமமெனப்படும். அவ்வகரும

த்தே அக்கருமத்தை ஆதார ஆதேய பாவத்தாலேனும் உபாதான உபாதேயபாவத்தாலேனும் அதிஷ்டான அத்தியஸ்தபாவத்தாலேனும் கண்டுகொண்டு நூலுணர்ந்தோன் கருமத்தைச்செய்வன். ஆண்டு முதலிற் சாங்கியசாஸ்திரமுடையோ ஜபாகுசுமத்தின் செம்மை வெண்மணியின்கண்ணே தோற்றுதலேபோலச் சங்காதத்தின் கர்த்திருத்துவாதி தர்மம் அசங்ககூடஸ்த என்னிடத்தே அவிவேகத்தாற்றோற்றுகின்றது எனப்பாவித்து கருமத்தைச்செய்வர் மற்றைய உபநிஷத்துணர்ந்தவரோ பொன்னில்வினைந்த குண்டலகங்கணாதி காரியங்கள் பொன்னேயாவதேபோலப் பிரஹ்மத்தினின்றும் உற்பன்னமாய இச்சர்வஜகத்தும் பிரஹ்மரூபமேயாமாதலின் யாகாதிகருமங்களும் திரவியதேவதைமுதலிய சாதனங்களும் கர்த்தவாய யாமும் பிரஹ்மரூபமேயாம் எனப் பாவித்துக் கருமத்தைச்செய்வர், இவ்விருவரும் யுக்தரெனப்படுவர். ஆண்டு முற்கூறியமுறையே யாவன் மதிமானுயினும் இவ்வகை யுக்தனல்லனோ, அம்மதிமானுப அயுக்தன்செய்யுங் கருமமெல்லாம் அசத்தேதயாகுமாதலின், அவை அவனை அசுப சம்சாரத்தினின்றும் விடுபடுத்தா. "யொவாவேத ஹுக்ஷரம் மாம-ஃயவிஜிகுவாஃவ்ஹிந ரொகெஜ-ஹொதியஜ தெதவஹுவ்யதெ பஹூநிவஷஃஸு ஹஹ்ராணஃஸ்தவதெவாஹ்ய தஹ்வதி" (போ-ள்.) ஹே கார்க்கியே! யாவன் இவ்வக்ஷராஆன்மாவை அறியாது இம்மனுஷலோகத்தே எவ்விவவ்வோமத்தையும் எவ்விவவ்வியாகத்தையும் செய்வனோ, அனேக ஆயிரவருஷபரியந்தம் எவ்விவத்தவத்தையியற்றுவனோ அவையாவுமிவனுக்கு அழிவுடைய பலத்தையேயடைவிக்கும். யாவன் யுக்தனுய்ப் புத்திமானல்லனோ அவன் செய்யத்தகாத தொழிலையும் செய்வன். அதனல் அவன் பிரத்தியவாயத்தையேயடைவன்; எனெனின், பாவந் தீண்டாக்காரணமாய அபரோக்ஷஞானம் அந்நிர்ப்புத்தி யுக்தனுக்கின்றும்; மற்றோ, அவனுக்குக் கேவலம் பரோக்ஷஞானமேயுளது. இக்கருமத்தையும் பரோக்ஷஞானத்தையும் 'விஜ்ஞாமாஃ விஜ்ஞாம' என்னுஞ் சுருதி அவித்தை வித்தை என்னும் இரண்டு சப்தத்தால் கூறி அவ்விரண்டன் சமுச்சயத்தைக் கூறியிருக்கின்றது. அல்லது, அகருமத்தின்கண்ணே கருமதரிசனம், பரோக்ஷ அபரோக்ஷதரிசனம் என விருவகையாம். அவற்றுள் பரோக்ஷதரிசனமுடையவனோ ஞானகரும சமுச்சய அனுஷ்டானஞ்செய்யும் புருஷனோ தகாபிமானி மனுஷருள்ளேமதிமானுவன் ஆகையால், அக்கிராந்ததரிசியாதலின் அவன் அகவியேயாவன். வியாகிருத சாக்ஷாத்காரமுடையவனும் அவ்வியாகிருத சாக்ஷாத்காரமுடையவனும் ஆகிய மத்திய இருவரும் க்ராந்ததரிசிகளாதலின், கவிகளாவாராயினும் தத்துவவஸ்துவின்கண்ணே மூடராதலின், இவ்விருவரும் 'கவயொ

வஸீகரொஹிதாஃ' என்னும் வசனத்தாற் கூறியருளப்பெற்றனர். இவ்விருவருக்கும் வியவதானமாய் அசுபசம்சாரத்தினின்றும் முக்தியுண்டாம். தத்துவ சாகூத்கார உத்தமனே ஜீவிக்குங்காலத்தே அசுபசம்சாரத்தினின்றும் முக்தனுவன். ஈண்டு சூகூஷ்மதரிசிக்குக் கிராந்ததரிசி யெனப் பெயராம். அல்லது, 'கஉஃணயுகஉஃயஃ வஒஃயுகு' என்னும் சுலோகத்திற்கு இப்பொருள் செய்க. பூர்வம் 'தத்தெகஉஃ வ்ரவகூஷ்யாதி' என்னும் வசனத்தே ஸ்ரீ பகவானுனவர் கருமம் அகருமமிரண்டையும் வக்தவ்யரூபமாய்க் கூறியருளினர். 'கஉஃணொஹயவிவொஹயம்' என்னும் வசனத்தே அவ்விரண்டையும் போத்தவ்யரூபமாய்க் கூறியருளினர். அவ்விரண்டின் போதம் இலகூஷணமின்றி யுண்டாகாதாதலின், இச்சுலோகத்தே அவ்விரண்டின் இலகூஷணங் கூறியருளலே உசிதமாம். ஆண்டு, 'கஉஃணயுகஉஃயஃ வஒஃயுகு' என்னும் வசனத்தால் அகருமத்தால் விசேஷிதமாயதே கருமமாம்; அன்னியங் கருமமன்றும் எனக் கரும இலகூஷணம் கூறியருளப்பெற்றுளது. 'சுகஉஃணிஅகஉஃயஃ' என்னும் வசனத்தால் கருமத்தால் விசேஷிதமாயதே அகருமமாம் என அகரும இலகூஷணங் கூறியருளப்பெற்றது. இவ்வியாக்கியானத்தே சுலோகாகூஷரங்களின்பொருள் இவ்வாறு கொள்க. திரவியதேவதாதி சாதனசகித யாகாதிகள் கருமமாம். அசைவற்ற கூடஸ்தப்பிரஹ்மம் அகருமமாம். ஆண்டு, யாவன் சாதனசகித யாகாதிரூப கருமத்தே கூடஸ்தப்பிரஹ்மரூப அகருமத்தைக் காண்பனே; அதாவது, "சுஹமகுர்தாஸ்ரஹம யஜ்ஞியா ஜுஹ்வ ஹஉஹஉளஷயம் । உம்தராஹஉஹமெஉவாஜ்யஉ ஹஉதிராஹமஹுதம்" ॥ என்னும் பகவத் வசனங் கூறியமுறையே அவ்வியாகாதிகருமத்தே அதன் திரவிய தேவதாதி அங்கங்களில் யாவன் பிரஹ்மதிருஷ்டிசெய்வனே, அத்திருஷ்டியினன்றி எக்கருமம் செய்யப்படுமோ அது வியர்த்தசேஷ்டை வடிவமேயாம். இக்காரணத்தால் கருமத்தின் கதி அத்தியந்தம் ஆழ்ந்ததாம்.

சங்கை :—ஹே பகவன்! எவ்வகருமம் கருமத்தின்கண்ணே ஆரோபணஞ் செய்யப்பட்டதோ அஃதென்னவஸ்துவாம்?

சமாதானம் :—ஸ்ரீபகவான் கூறியருளுகின்றார். 'சுகஉஃணிஅகஉஃயஃ' என ஹே அர்ச்சுன! எவ்வஸ்துவின்கண்ணே புண்ணியபாவரூப கருமம் 'வாணைஸாவெவாணைஸுகஉஃணாஹவதி வாவஃவாவெஉ' என்னுஞ் சுருதியின்பலத்தால் பிரதீதியாமோ, எவ்வஸ்துவின்கண்ணே அக்கருமத்தின் சுகதுக்கரூப பலம் யான்சுகி யான்துக்கி என்னும் பிரதீதியின்பலத்தால் பிரதீதியாமோ, அந்தப் பிரத்தியக்குச் சேதனமே அகருமரூபமாம். சர்ப்பபாவமற்ற இரஜ்ஜுவின்கண்ணே சர்ப்பம் அத்தியஸ்தமாவதேபோல அசைவற்ற சேதனரூப அகருமத்தே இவ்வசைவுறுங் கருமம் அத்தியஸ்தமாம். இவ்வாறு யாவன் அகருமத்தே கருமத்தைக்காண்பனே. ஈண்டிது கருத்தாம் :—இரஜ்ஜுவின்கண்ணே அத்தியஸ்த சர்ப்பத்தைக் காண்பவனுக்கு இது சர்ப்பமன்று; மற்றே, இரஜ்ஜுவேயாம் என்னும் ஆப்தவக்தாவின் வசனத்தால் விசேஷிதப் பிரபலத்தால் இரஜ்ஜுத்வஞானம் உண்டாகாதாயின், அவ்வாப்தன் பிராந்தனுக்கு இச்சர்ப்பத்தை நீ இரஜ்ஜுதிருஷ்டியால் உபாசனை செய்தியென வுபதேசித்தபோது அவன் அவ்வுபாசனையின் திடத்தால் அச்சர்ப்பத்தைமறந்து இரஜ்ஜுத்தன்மையையே சாகூத்காரஞ்செய்வன். யாவன் இது சர்ப்பமன்று; மற்றே, இரஜ்ஜுவேயாம் என்னும் வசனத்தினே ரஜ்ஜுவின் வாஸ்தவவடிவத்தை யுணர்வனே அவனுக்கு இச்சர்ப்பம் ரஜ்ஜுவேயாமென்னும் விருத்தியின் நிரந்தரப் பிரவாகரூப உபாசனைசெய்வதற்குச் சிறிதுமாத்திரையும் பிரயோஜனமின்றும். இவ்வாறு கூடஸ்தப் பிரஹ்மரூப அகருமத்தின்கண்ணே அத்தியஸ்தகர்த்தா கிரியாதி பிரபஞ்சரூபகருமத்தைத் தத்வமசியென்னும்

வசனத்தாற் பாதித்து ஞாயமனமுடையவனுக்குக் கூடஸ்தப்பிரஹ்மரூப அகருமத் தின்போதமாதல்கூடும். மனத்தூய்மைபெறுதவன் கருமத்தை அகருமதிருஷ்டி யால் உபாசனைசெய்யின் அதன்றிடத்தால் அவனும் அக்கருமமறைப்பால் அகரும வாஸ்தவஸ்வரூபத்தைச் சாக்ஷாத்கரிப்பன் என விலக்ஷண வியாக்கியானஞ்செய்து அவ்வுரைகாரர் ஸ்ரீபாஷியக்கார பகவானது சந்நிதியில் இவ்வகைப் பிரார்த்தனை செய்துகொள்கின்றார். "வ்யாவ்யாதாரவிசேதாஹி ஹாஷ்யகாரைண தாயதா । மாஹாவஜ்ஞாதிநோ வ்யூஹிகிம் ஜீவஹ்யாகுதாயதா" ॥ (போ-ள்.) இவ்வகையாய விலக்ஷணவியாக்கியானத்தையுஞ்செய்யு மெனக்கு ஸ்ரீ பகவான் பாஷியக்கார துல்லியத்தன்மை யுண்டாகமாட்டாது. குகையின்கண்ணே பிரகா சிக்கும் தீபத்திற்குச் சூரியபகவத்துல்லியத்தன்மை யுண்டாகாததேபோலும்.(18)

(அ-கை.) இப்போது பூர்வங்கூறிய பரமார்த்ததரிசிக்குக் கர்த்திருத்துவ அபிமானமின்மையின் கருமத்தாற் பற்றின்மையை ஸ்ரீபகவான் 'யஜ்ஞார்தாத்' என்னும் வசனமுமுதலாக 'ப்ரஹ்மகர்மஸமாதினா' என்னும் வசனம்வரைவிஸ் தாரமாய்க் கூறியருளுவர் :—

சு-ம். யஜ்ஞ கார்மணோந்யத்ர லோகோயம் கர்மபந்தன: ।
தத³ர்தம் கர்ம கௌந்தேய முக்தஸங்க: ஸமாசர ॥ (19)

ப-ம். 1 யஜ்ஞ 2 கார்மணோந்யத்ர 3 லோகோயம் 4 கர்மபந்தன: 5 தத³ர்தம் கர்ம 6 தம் 9 கௌந்தேய 8 முக்தஸங்க, 7 ஸமாசர.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யாவனுக்குச் சர்வகர்மங்களும் காமசங்கற்பமற்ற வாமோ, ஞானாக்கினியால் தக்தமாயகர்மம் யாவனுக்கோ அவனைப் பிரஹ்மவேத் தாக்கள் பண்டிதனென்பர்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பூர்வசுலோகத்தின்கண்ணே கூறப்பெற்ற எப்பர மார்த்ததரிசிக்குச் சர்வ லௌகிக வைதிக கருமங்கள் காமமற்றவாமோ சங்கற்ப மற்றவாமோ, ஈண்டுச் சுவர்க்காதிபலன்களின் இச்சை காமமெனப்படும். யான் கருமகருத்தாவென்னுமபிமானம் சங்கற்பமாம். எவனதுகருமம் அவ்விரண்டுமற்ற தாமோ ; அதாவது யாவனுக்குச் சர்வகருமங்களும் கேவலம்லோகசங்கிரகத்தின் பொருட்டேனும் சரீரஜீவனமாத்திரப்பொருட்டேனும், பிராரப்த கருமவேகத் தால் வியர்த்தசேஷ்டைவடிவமாமோ பூர்வசுலோகத்தின்கண்ணே கூறியபிரபஞ்ச ரூபகருமத்திற் சத்தாஸ்பூர்த்திரூபமாய்ச் சைதன்ய பிரஹ்மரூப அகருமத்தின்றரி சனமும் அவ்வகருமத்தே கற்பிதரூபமாய்க் கருமதரிசனமும் ஞானமெனப்படும். அது அக்கினியைப்போலச் சர்வகருமங்களின் தாககமாதலின் அக்கினிரூபமாம். அவ்வக்கினியால் தக்தமாயது சுபாசுபகருமமெவனுக்கோ, ஆண்டு ஸ்ரீவியாச சூத்திரம் 'தத³தி⁴கமே உதரவதூ³வதா³வயொரபி⁴லாஷ விதா⁴ரள தத³வ்யவதே³ஹாத்' என்னும்

(போ-ள்.) அந்தப்பரமான்மதேவரது சாக்ஷாத்காரமுண்டாகவே அதன்பி ன்னர்ச்செய்த புண்ணியபாவகருமங்களின் சம்பந்தமேயறிஞனுக்குண்டாகாதாம். அதன்முன்னராற்றிய சஞ்சிதத்தின் நாசம் ஞானாக்கினியாலுண்டாம். இவ்வார்த் தை அநேக சுருதிஸ்மிருதிகளில் காணவருகின்றது. இத்தகையவறிஞனே பிரஹ்ம வேத்தாக்கள் உண்மையாய்ப்பண்டிதனென்பர். ஈண்டு யாண்டும் சைதன்யப்பிரஹ் மமாத்திரத்தை விஷயஞ்செய்யும் அந்தக்கரணவிருத்தி பண்டாவெனப்படும், அது எவனந்தக்கரணத்தேயுண்டாமோ அவன் பண்டிதனாவன். உலகின்கண்ணும் நற் றரிசியே பண்டிதனெனப்படுவன், மயங்கியோன் பண்டதனெனப்படான், அந்நற் றரிசித்தன்மை அறிஞனிடத்தேயுளது அஞ்ஞானியிடத்தே அஃதின்றுமாதலின் அவ்வறிஞனே பண்டிதனாவன். (19)

(அ-கை.) ஹே பகவன்! அந்த ஞானக்கினியால் பூர்வமாரம்பிக்கப்பட்ட பிராரப்தகருமத்தினும் வேறுய கருமதாகமாகுக ஆகாமியவினைவு மூண்டாகாதொழிக; ஆனல், ஞானோற்பத்திகாலத்தே செய்யப்பட்டகருமம் பூர்வகருமத்தூடேனும் உத்தரகருமத்தூடேனும் அந்தர்ப்பூதமாகாதாமாதலின் அதுவோ ஞானவானுக்கு அவசியம்பலவடைவை யுண்டாக்கும் என அர்ச்சுனனது ஆசங்கைநிகழ ஸ்ரீபகவான் அதனைநீக்கி யருளுகின்றூர் :—

சு-ம். தயைகூ கூஉ-ழமுராவம்மம நிதயதயவொ நிராஸ்ரயஃ।
கூஉ-ழணயஹிவ்ரவ்ரதொவி நெவகிம்னிகூ கூஸொதி ஹஃ॥ (20)

ப-ம். 2 தயைகூ 1 கூஉ-ழமுராவம்மம 3 நிதயதயவஃ 4 நிராஸ்ரயஃ 5 கூஉ-ழணி 6 கூஹிவ்ரவ்ரதஃ 7 கூவி 10 ந, வனவ 9 கிம்னிகூ 11 கூஸொதி 8 ஹஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! கர்மபல ஆசங்கத்தைப் பரித்தியாகித்து நித்திய திருப்தனுய் நிராசிரயனுய்க் கருமத்தின்கண்ணே பிரவிருத்தனுகியும் அவ்வறிஞன் சிறிதுமாத்திரையும் செய்யாதவனேயாவன்,

(வி-ம்.) ஹே அர்ச்சுன! நித்தியநைமித்திக கருமத்தின்கண்ணே யான்இவற்றின்கருத்தா என்னும் அபிமானம் கரும ஆசங்கமெனப்படும். அதற்குச் சுவர்க்காதிபலத்தின்கண்ணே போகாபிலாஷை பல ஆசங்கமாம். அவ்விரண்டையும் பரித்தியாகித்து அதாவது அகர்த்தா அபோக்தாவாகிய ஆன்மாவின் யதார்த்தஞானத்தால் அவ்வாசங்கத்தைப் பாதித்து யாவன் நித்தியதிருப்தனவனே அதாவது பரமாநந்த ஸ்வரூபலாபத்தால் யாவன் சர்வபதார்த்தங்களிடத்தும் நிராகாங்ஷையடைவனே, யாவன் நிராசிரயனே, அதாவது அத்வைத ஆத்மதரிசனத்தால் யாவன் தேதேகேந்திரியாதிரூப ஆசிரய அபிமானமற்றவனே, அத்தகைய ஜீவன் முக்தன் சமாதியினின்றும் கிளம்பியதசையில் பிராரப்தகருமவசத்தால் லோகதிருஷ்டியால் லௌகிக வைதிக கருமத்தைச் சாங்கோபாங்கமாய் அனுட்டிக்கும்பொருட்டுப் பிரவிருத்திப்பினும் அவ்வறிஞன் தனது பரமார்த்ததிருஷ்டியாற் சிறிதுமாத்திரையும் கருமத்தைச்செய்திலன். எதனுல் நிஷ்கிரிய ஆன்மாவின் சாகூஷாத்காரத்தால் அவ்வறிஞனது சருவகருமமும் பாதத்தையடையுமோ ஈண்டு, அவ்வறிஞனுக்கு 'நிதயதயவஃ நிராஸ்ரயஃ' என இரண்டு விசேஷணங்கள் கூறியருளப்பெற்றன, அவை யேதுவடிவமாம். பல ஆசங்க நீக்கத்தின்கண்ணே நித்தியதிருப்தன் என்னுமேதுவாம். கரும ஆசங்கநீக்கத்தின்கண்ணே நிராசிரயன் என்னுமேதுவாம். அதனுல் இவ்விரண்டனுமானங்கள் சித்தங்களாம் :—அறிஞன் பல ஆசங்கமற்றவனுவன், நித்தியதிருப்தனுதலின் யாவனவ்வாறுகாணே அவனிவ்வாறுமாகான், அஞ்ஞானியேபோலும். அறிஞன், கரும ஆசங்கமற்றவனுவன்; நிராசிரயனுதலின், யாவனவ்வாறுகாணே அவனிவ்வாறுமாகான், அஞ்ஞானியேபோலும். (20)

(அ-கை) ஆண்டு, அத்தியந்த விசேஷப ஹேதுவாய ஜோதிஷ்டோமாதி கருமமும் நன்ஞானவசத்தால் பந்த ஹேதுவாகாதாயின், சரீர ஸ்திதிமாத்திர ஹேதுவும் விசேஷபத்தையியற்றுத பிக்ஷாடநாதி யதிகருமமும் நற்றரிசனபலத்தால் பந்தஹேதுவாகாதென்பதன்கண்ணே யாது கூறவேண்டியுளது. இவ்வாறுய கைமுதிக நியாயத்தால் ஸ்ரீ பகவான் பிக்ஷாடனுதி கருமத்தே பந்தஹேதுவின் அபாவத்தைக் கூறியருளுகின்றூர் :—

சு-ம். நிராஸீய-ழதமித்தா தயீகூவவ-ழவாநி மரஹஃ।
ஸாஸீஸம் கெவலும் கூஉ-ழ கூவ-ழந்தாவொதி கிஞ்ஞிஷ்டி॥ (21)

ப-ம். 1 ஸாஸீ 2 யதஸித்தாத்மா 3 தஸ்ஸகலவஸ்துபரிக்ரஹீ 5 ஸாரீரம் 4 கெவலம் 6 கரோ 7 கரோவ்ருத்தம் 9 ந 10 ஸுவ்ரொதி 8 கில்விஷம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யாவன் திருஷ்ணையற்றவனே, வெற்றிகொண்ட சித்தாத்மாவையுடையவனே, சர்வ பரிக்கிரகத்தையுந் தியாகஞ்செய்தவனே; அவன் கர்த்திருத்துவ அபிமானமற்ற சரீரஸ்திதியின்கண்ணே உபயோகியாய பிக்ஷாடனாதி கருமத்தைச் செய்பவனுய்க் கில்பிஷத்தையடையான்.

(வி-ம்) ஹே அர்ச்சுன! யாவன் சுவர்க்காதிபல திருஷ்ணையற்றவனே, அந்தக்கரணரூப சித்தத்தையும் பாகிய இந்திரியசகித தேகரூப ஆன்மாவையும் பிரத்யாகாரஞ்செய்து நிக்கிரகஞ்செய்துளானே, எதனுல் அவன் ஜிதேந்திரியனுவனே அதனுனே அவன் திருஷ்ணையற்றவனுதலின் தியக்த சர்வ பரிக்கிரகனுவன். ஈண்டு விஷயபோக சாதனரூப தனாதி யுபகரணம் பரிக்கிரகமாம். அச்சர்வபரிக்கிரகத்தையும் தியாகஞ்செய்தவன் தியக்த சர்வ பரிக்கிரகனுவன். இத்தகைய நிராசியும் யதசித்தாத்மாவும், தியக்த சர்வபரிக்கிரகனும் ஆய சந்நியாசி பிராரப்தகருமவயத்தால் சரீரகருமத்தைச்செய்பவனுய்க் கில்பிஷத்தையடையான். ஈண்டுச் சரீரஸ்திதிமாத்திரம் பிரயோஜனம் யாவனுக்கோ அத்தகைய கந்தைகளபீனமுதலியவற்றின் கவர்ச்சிவடிவ பிக்ஷாடனாதிரூப காயிகவாசிகமானஸ கருமத்தைச் சந்நியாசிக்குச் சாஸ்திரம் விதானஞ்செய்துளது. அது சாரீரகருமமாம். அதனைக் கர்த்திருத்வ அபிமானமற்று அந்நியாரோபித கர்த்திருத்வரூபத்தாற் கர்த்தாவாய் அச்சந்நியாசி தருமாதரும பலபூத அநிஷ்ட சம்சாரரூப கில்பிஷத்தையடையான். பாவத்தையே கில்பிஷமெனப்படுமாயினும், பாவத்தைப்போலச்சகாமபுண்ணியமும் அநிஷ்ட பல வேதுவேயாமாதலின் அதுவும் கில்பிஷரூபமேயாம். ஓருரையின்கண்ணே, 'ஸாரீரம்' என்னும் பதத்திற்கு இப்பொருள் கூறப்பெற்றுளது :— சரீரத்தால் எக்கருமமாமோ அது சாரீரமாம். இவ்வுரையின்கண்ணே, 'கெவலம் கரோவ்ருத்தம்' இத்துணை வசனமாத்திரங் கூறலாற் சித்திப்பதினுமதிக அர்த்தம் சாரீரபதங் கூறலாற் சித்தமாகாதாமாதலின், இதர கருமத்தின் அவ்வியாவர்த்தகமாதலின், அப்பதம் வியர்த்தமேயாகும். வாசிகமானசகரும வியாவிருத்தியின் பொருட்டுச் சாரீரபதமாதலின், அப்பதம் வியர்த்தமாகாதாம் என அவர் கூறின், அதுவும் சம்பவியாது; ஏனெனின், 'ஸாரீரம் கெவலம் கரோ' என்னும் வசனத்தின்கண்ணே ஸ்திதமாய கருமபதம் விகிதகருமவாசகமா? அல்லது, விகிதநிஷித்தசாதாரண கருமமாத்திரவாசகமா? முதற்பக்ஷத்தை யங்கீகரிக்கினே, அதற்கு சாஸ்திரவிகித சாரீரகருமத்தைச்செய்பவனுய் அறிஞன் அக் கில்பிஷத்தை யடையமாட்டான், எனப்பொருளாம். ஆண்டு விகிதகருமத்தே கில்பிஷமேஹ துத்தன்மையாண்டுமுண்டாகாதாம், பிராப்த அருத்தத்திற்கே பிரதிஷேதமாகுமன்றி அப்பிராப்தத்திற்காகாதாமாதலின், அதன் பிரதிஷேதமுறலின் அவ்வசனம் அநர்த்தகமாம். சாஸ்திரவிகித சாரீரகருமத்தைச்செய்பவனுய் அறிஞன் கில்பிஷத்தையடையான். இதுகூறியதால் சாஸ்திரவிகிதவாசிகமானச கருமத்தைச் செய்பவனுய் அவன் அக்கில்பிஷத்தையடைவன் எனத்துணியப்பெறும், இவ்வார்த்தை சாஸ்திரவிருத்தமேயாகும். இரண்டாவது பக்ஷத்தை யங்கீகரிக்கின் அதற்குச் சாஸ்திரவிகித நிஷித்த சாரீரகருமத்தைச்செய்பவனுய் அறிஞன் கில்பிஷத்தையடையானெனப்பொருளாம். இக்கூற்றும் பூர்வம்போலமுற்றினும் மூணுமாதலின் இச் சாரீரபத வியாக்கியானம் அத்தியந்தம் அசங்கதமாம்; மற்றேரு, முற்கூறியவியாக்கியானமே நலமுடையதாமென்க. (21)

(அ-கை.) ஆண்டுப்பூர்வசுலோகத்தே சர்வபரிக்கிரகத்தையும் தியாகம்செய்த சந்நியாசியினுக்குச் சரீரஸ்திதிமாத்திரத்தின்கண்ணே உபயோகியாயகர்மத்

தின் கர்த்தவ்வியத்தன்மை கூறியருளப்பெற்றது; ஆண்டன்னவஸ்திராதிகளின்றி சரீரஸ்திதியே சம்பவியாதாமாதலின் யாசனைமுதலிய தனது பிரயத்தினத்திலும் சந்நியாசியானவன் அவற்றைச்சம்பாதித்தல்வேண்டும் எனப்பொருள்பட ஸ்ரீ பகவான் அதன்கண்ணே நியமத்தை நிகழ்த்தியருளுகின்றார்:—

சு-ம். யதூ ஹாலாஹலமேதத்வோ அம்ருதீபவதோ விதாஸ்யதி।
ஸ்வதி ஸ்வபாவஸ்வபாவ அ கூடஸ்தோவி ந நிபத்யதே॥ (22)

ப-ம். 1 யதூ ஹாலாஹலம்தத்வோ 2 அம்ருதீபதி 3 விதாஸ்யதி 7 ஸ்வதி 4 ஸ்வபாவ 6 சு
ஸ்வபாவ 5 அ 8 கூடஸ்தோ 9 சுவி 10 ந 11 நிபத்யதே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யாவன் யதிருச்சாலாபத்தாற் சந்துஷ்டனே துவந்துவதர்மரகிதனே, மற்சரமற்றவனே, பிராப்தியின்கண்ணும் அப்பிராப்தியின்கண்ணும் சமானனே அவன் பிக்ஷாடனதிகருமங்களைச் செய்தும் பந்தத்தையடையான்,

(வி-ம்.) சந்நியாசிக்குச் சாஸ்திரம்விதித்த சரீரஸ்திதிமாத்திரத்தின்கண்ணே உபயோகியாய சாஸ்திரவிகிதப் பிரயத்தினத்தினும் வேறுய யாசனை கிருஷி சேவை வாணிஜ்யம் முதலிய பிரயத்தினங்களைச் சந்நியாசிக்குச் சாஸ்திரம் நிஷேதித்துளது. அதனைச்செய்யாதிருத்தல் யதிருச்சையாம். அதனற் சாஸ்திரவிகித அன்னவஸ்திராதிபதார்த்தலாபத்தால் எச்சந்நியாசிசந்துஷ்டனே அதாவது, அவற்றினும் அதிகபதார்த்தத் திருஷ்ணையற்றவனேவனே அவன் யதிருச்சாலாப சந்துஷ்டனேவன். ஆண்டுச் சாஸ்திரத்தே 'ஹைக்ஷ்யம்அரெசு' என்னும் வசனத்தால் சந்நியாசிக்குப் பிக்ஷாவிதானஞ்செய்து பின்னரிவ்வசனங் கூறியுள்ளது. 'சுயாவிதஉலம்க்ரூவ ஊவவதூம் யதூ ஹூயா' (பொ-ள்.) பயிக்கமேற்பழுயல்வதன் முன்னே அவனுக்கு மேன்மையாய கிருகஸ்தன் விருந்திட்டபிக்ஷான்னம் அயாசிதமாம்; அதனையும் சந்நியாசிகவரலாம். சங்கற்பமின்றியே 5 அல்லது 7 கிருகங்களினின்றும் மாதுகரிவிருத்தியாற்கிடைத்த அன்னம் அசங்கில்ருப்தமாம்; அதனையும் சந்நியாசிகவரலாம். அவனது பிரயத்தனமின்றியே அவன்சமீபத்தே பக்தஜனங்கள் அடைவித்த பக்குவஅன்னம் உபபன்னமாம்; அவ்வன்னத்தையும் சந்நியாசி கவரலாம். இவ்வார்த்தை அன்னிய சாஸ்திரத்தின்கண்ணும் கூறப்பெற்றுளது. ''ஸாயுகாலஉலம்க்ரூவம் வ்யாகூணீதயாசிதம்। தாதூலி கொவவதூம்அ ஹைக்ஷ்யம் வம்அவியம்க்ரூதம்'' ॥ (பொ-ள்.) மாதுகரம் 1, பிராக்பிரணீதம் 2, அயாசிதம் 3, தாத்காலிகம் 4, உபபன்னம் 5, இவ்வகையாய பிக்ஷான்னம் சந்நியாசியின்பொருட்டாம். ஆண்டு மதினேசங்கற்ப அவிஷயபூத 3 அல்லது 5, அல்லது 7 வீடுகளிற்கிடைத்த அன்னம் மாதுகரமாம். சயனத்தினின்றுங் கிளம்புவதற்குமுன் னெவ்வன்பனது பிரார்த்தனையாலேனும் கிடைத்தபிக்ஷான்னம் பிராக்பிரணீதமாம். பயிக்கமேற்பழுயல்வதன்முன் விருந்தாக எவ்வன்பனேனும் தந்தபிக்ஷான்னம் அயாசிதமாம். பிக்ஷாசரியற்பழுயன்றபின் எவ்வன்பனேனும் பிரார்த்தித்த பிக்ஷான்னம் தாத்காலிகமாம். பிக்ஷாசமயத்தே தன்னுசனசமீபத்தே எவ்வன்பனேனும் பக்குவான்னத்தையுதவின் அது உபபன்னமாம் என்பதுமுதலிய சாஸ்திரவசனம் அச்சந்நியாசிக்குப் பிக்ஷான்னநியமத்தை விதித்து அந்தயாசனைப் பிரயத்தனங்களின் நிவிருத்தியைக்கூறுகின்றது. இவ்வார்த்தையை மனுபகவானுங்கூறியிருக்கின்றார்:—''நவொதாதநிதாஹ்யாம் நநக்ஷேதாராம்மவிஜ்யா। நாநாஸாஹாநவாஹ்யாம் ஹிக்ஷாம்ஸிவைத கஹிஜ்ஞிகே'' ॥ இச்சந்நியாசி உற்பாதத்தானும், நிமித்தத்தானும், நக்ஷத்திரவித்தையினுலும், அங்கவித்தையினுலும், அனுசாசனத்தானும், வாதத்தானும், ஒருகாலேனும் பிக்ஷையைக்கவர

இச்சிக்கலாகாது. ஈண்டுப் பூகம்பாதி சுபாசுபபலங்கூறல் உற்பாதமாம். நேத்திர முதலியவை அசைதலின் சுபாசுபபலங்கூறல் நிமித்தமாம், நக்ஷத்திரங்களின் சுபாசுபபலங்கூறல் நக்ஷத்திரவித்தையாம். கரேகையின் சுபாசுபபலங்கூறல் அங்கவித்தையாம். இந்நீதிமார்க்கம் இவ்வகையாம், இவ்வகை நீ இந்நீதிமார்க்கத்தின் கண்ணே நடவெனவுபதேசித்தல் அநுசாசனமாம். சாஸ்திரார்த்தங்கூறல் வாதமாம் என்பனமுதலிய உபாயங்களால் சந்நியாசியானவன் தனது சரீரநிர்வாகம் ஒருகாலும் செய்யற்க. மற்றேரு, முற்கூறிய முறையே பிக்ஷான்னத்தால் சரீரநிர்வாகஞ்செய்க. 'யதயொஹ்ஷாயுஂ ஸ்ராஉம்வ்யவஸாயி' என்பது முதலிய சாஸ்திரம் விதித்தசந்நியாசியின் பிக்ஷாப்பிரபத்நமோ சந்நியாசி அவசியம் செய்யத்தக்கதாம்; அதனல் அடையத் தகுதியாய அன்னவஸ்திராதி பதார்த்தமும் சாஸ்திரநியதமேயாமாதலின் அம்முயல்வால் அவ்வஸ்துக்களின் லாபம் யதிருச்சாலாபமேயாம். இவ்வார்த்தை யன்னியசாஸ்திரத்தின்கண்ணும் கூறப்பெற்றுளது :—'களவீதயாமயுஂவ்வாஹி கஂயாஂஸீதநிவாஸணீஂ । வாஉகெஆவி ஸ்ரஹீயாஸு கஂயஂஸாதநஸ்ஸ ஸஂஸ்ரஹஂ ॥ (போ-ள்.) இத்துறவி இருகௌபீனம், இரண்டு வஸ்திரம், சீதநீக்கத்திற்காகக் கம்பளாதிகந்தை, பாதுகைகவர்க. இவற்றினும் அதிகமாய் திரவியாதிகளின் சங்கிரகம் செய்யலாகாது. இவ்வாறு வேறுவிதி நிஷேதவசனங்களையு முணர்ந்துகொள்க.

சங்கை :—ஹே பகவன்! யாசனைமுதலான தன்முயல்வின்றியே அன்னவஸ்திராதிகள் கிடையாவிடின் பசி, தாகம், சீதம், உஷ்ணம், முதலியவற்றுற் பீடிக்கப்பட்ட சந்நியாசி எவ்வாறு ஜீவிப்பன்?

சமாதானம் :—ஸ்ரீபகவான் கூறியருளுகின்றார் :—'அஂஆகீதஃ' என. ஹே அர்ச்சுன! பசி, தாகம், சீதோஷ்ணம், மழை, காற்று என்பன முதலிய சர்வதுவந்துவ தர்மங்களினும் சந்நியாசி ரகிதனவன். கருத்திதுவாம் :—சமாதிதசையின்கண்ணே அந்தப் பிரஹ்மவேத்தாச் சந்நியாசிக்கு அத்துவந்துவங்கள்விளங்கவேமாட்டா, கிளம்பியகாலத்தேதா அவைதோற்றுமேனும் பரமாநந்தவடிவ அத்விதீய அகர்த்தா அபோக்தாத்ம சாக்ஷாத்காரத்தால் அவ்வெல்லாவற்றின் பாதமுண்டாமாதலின் அந்தப்பாதிததருமத்தால் கொல்லப்படினும் அச்சந்நியாசி சித்தக்கலக்கமற்றவனேயாவன். அவன் துவந்துவ தருமமற்றவனுதலினனே அன்னியர்க்குஒரு வஸ்துவின் பிராப்தியிலும், தனக்கொருவஸ்துவின் அப்பிராப்தியிலும் மற்சரமற்றவனுவன். ஈண்டு அன்னியன்மேன்மையைச் சகியாமைவாயிலாய்த் தனது மேன்மையினிச்சை மற்சரமாம், அஃதற்றவன் விமற்சரனுவன் அவன் அத்விதீய ஆத்மசாக்ஷாத்காரத்தால் அம்மற்சரமற்றவனுதலினனே அந்த யதிருச்சாலாபப் பிராப்தியின்கண்ணும் அப்பிராப்தியின்கண்ணும் சமானனேயாவன். அதாவது யதிருச்சாலாபப் பிராப்தியின்கண்ணே மகிழ்வற்றவனுவன் அப்பிராப்தியின்கண்ணே வாட்டமற்றவனுவன். இத்தகையவன் தனதனுபவத்தாலே அகர்த்தாவேயாவன், ஆனல் அன்னியர் அவன்பால் ஆரோபித்த கர்த்திருத்துவத்தால் சரீரஸ்திதிமாத்திரத்தே உபயோகியாய பிக்ஷாடனாதி சாஸ்திரவிகிதகருமத்தைச் செய்யினும் பந்தத்தையடையான்; எதனுற் பந்தமேறுவாய அஞ்ஞானசகிதகருமம் ஞானக்கினியால் தகிக்கப்பெற்றதோ. (22)

(அ-கை.) ஹே பகவன்! முன்னர்த்தாங்கள், சர்வபரிக்கிரகத்தையும் தியாகஞ்செய்தவனும். யதிருச்சாலாபத்தாற் சந்துஷ்டசித்தனும் ஆகிய சந்நியாசியின் ஸ்திதிமாத்திரையின்கண்ணே உபயோகியாய பிக்ஷாடனாதி கருமத்தைச்செய்தபோதினும் அவன் பந்தத்தையடையான் என முன்னர்த்தாங்கள் கூறியதால் இப்பொருள் பிரதீதியாகின்றது. இல்லறத்தேயிருக்கும் ஜனக அஜாதசத்துருமுத

லிய பிரஹ்மவேத்தாக்களின் யாகாதிகருமங்கள் அவர்கட்கவசியம் பந்தஹேது வாம் என அருச்சுனனது ஆசங்கைநிகழ அதனை நீக்கியருளும்பொருட்டு ஸ்ரீபகவான் 'தயுக்ஷகஉழஹஜஹஸ்மம்' என்பதாதி வசனத்தால் கூறியருளிய பொருளை இப்போது வெளிப்படையாய் விளம்பியருளுகின்றார்:—

சு-ம். கதஹஸ்மஹ்ய ஊதஹ்ய ஜ்ஞாநாவஸ்லிதசெதஸஃ।
யஜ்ஞாயாசரதஃ கர்மஸமக்ரம் ப்ரவிலீயதெ ॥ (23)

ப-ம். 1 மதஹஸ்மஹ்ய 2 ஊதஹ்ய 3 ஜ்ஞாநாவஸ்லிதசெதஸஃ 4 யஜ்ஞாய 5 சராசரதஃ 6 கர்ம 7 ஸமக்ரம் 8 ப்ரவிலீயதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பலாபிலாஷையற்றவனும், அத்தியாசமற்றவனும், ஞானத்தே ஸ்திதசித்தமுடையவனும், யாகாதிகளின் சம்ரக்ஷணத்தின்பொருட்டு ஆசரிப்பவனும் ஆகிய அறிஞனுடைய யாகாதிகருமங்கள் பலசகிதம் நாசத்தையடையும். (23)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! யாவன் கதசங்கனை அதாவது சுவர்க்காதிபலாபிலாஷையற்றவனை, யாவன் முக்தனை அதாவது யான் கர்த்தா யான் போக்தாவென்னும் கர்த்திருத்துவ போக்திருத்துவ அத்தியாசமற்றவனை, யாவன் ஞானவஸ்திதசேதசனை அதாவது தத்வமஸிமுதலிய மகாவாக்கியத்தாலுண்டாய நிர்விகற்பவடிவ ஜீவப்பிரஹ்ம அபேதஞானத்தே அவஸ்திதமாய சித்தம் யாவனுக்கோ; அத்தகைய ஸ்திதப்பிரஜ்ஞபுருஷன் யாவனை ஈண்டு 'மதஹஸ்மஹ்ய ஊதஹ்ய ஜ்ஞாநாவஸ்லிதசெதஸஃ' என்னும் மூன்று பதங்களால் அவ்வறிஞனுக்கு மூன்றுவிசேஷணம் கூறியருளப்பெற்றது. முன் முன்விசேஷண சித்தியின்கண் பின் பின்விசேஷணம் ஹேதுரூபமாம். அதனால் இவ்விரண்டனுமானங்கள் சித்திக்கும்:—அறிஞன், பலாபிலாஷைவடிவ சங்கமற்றவனுவன், கர்த்திருத்துவ போக்திருத்துவ அத்தியாசமற்றவனுதலின், அவ்வாறல்லாதவன் இவ்வாறுமல்லன், அஞ்ஞானியேபோலும். அறிஞன், அத்தியாசமற்றவனுவன்; ஸ்திதப்பிரஜ்ஞனுதலின், அவ்வாறல்லாதவன், இவ்வாறுமல்லன், அஞ்ஞானியேபோலும். இத்தகைய பிரஹ்மவேத்தாவாயவனும் பிராரப்தகருமவசத்தால் வேதவிகித யாகதாநாதிகளைச் சம்ரக்ஷணைசெய்யும்பொருட்டு அதாவது ஜோதிஷ்டோமாதியாகத்தே சிரேஷ்டாசாரத்தன்மையால் உலகத்தைப் பிரவிருத்திப்பிக்கும்பொருட்டு அல்லது 'யஜ்ஞோவை விஷ்ணுஃ' என்பதாதி வசனங்களில் யாகசப்தத்தாற்கூறிய விஷ்ணுவின் பிரசன்னப்பொருட்டு யாகதாநாதிகளைச்செய்வன். ஆனால், அவனது அத்தொழில்களியாவும் சமக்ரநாசத்தையுறும். ஈண்டு அக்ரம் பலமாம். அஃதாவது கூடியிருப்பது சமக்ரமாம்; அதாவது, தத்துவசாக்ஷாத்காரபலத்தால் அவித்யாரூபகாரணம் நீங்கவே அவனது பலசகிதகருமம் நாசத்தையடையும். 'தஜ்ஜ்யொஷீகாதபம் ஜ்ஞாநாக்நிதக்தகர்மாணம் தமாஹுஃ பண்டிதம் புதாஃ' (போ-ள்.) ஓங்கியெரியாநின்ற அக்கினியின்கண்ணடைவுற்ற ஈஷிகையின் பஞ்சு நாசத்தையடைவதேபோல அறிஞனது அறம்பாவமியாவும் ஞானக்கினியால் நாசத்தையடையும். இப்பொருளை ஸ்ரீபகவான் தாமே 'ஜ்ஞாநாக்நிஃ ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதெதர்ஜுந' என்னும் சுலோகத்தே வெளியிட்டருளுவர். (23)

(அ-கை.) ஹே பகவன்! செய்யப்பெற்றகருமம் பலத்தையுண்டாக்காது எவ்வாறழியும், மற்றை பலங்கொடாதொழியாது; எனெனின், 'நாஹுக்தம்க்ஷீயதெ கர்ஹிகல்பகொடிஸதைரபி' (போ-ள.) பலபோகமின்றி இச்சுப அசுபகருமம் கற்பகோடி சதங்களாலும் நாசமடையமாட்டாது. இதுமுதலிய வசனத்தே பல போகமின்றிக் கருமநாசம் நிஷேதமே செய்யப்பெற்றுளது என அருச்சுனனது

சங்கையுண்டாக ஸ்ரீபகவான் பிரஹ்மசாக்ஷாத்காரத்தால் கருமகாரண நாசமாதலின் அதுவும் நாசத்தையேபடையும் என விடையளித்தருளுகின்றார் .—

சு-ம். ப்ரஹ்மாவக்ஷணம் ப்ரஹ்ம ஹவிர்ப்ரஹ்மாக்ன ப்ரஹ்மணாஹுதம் ।
ப்ரஹ்மைவ தேந மந்தவ்யம் ப்ரஹ்மகர்மஸமாதினா ॥ (42)

ப-ம். 2 ப்ரஹ்ம 1 ஸ்ருவக்ஷணம் 5 ப்ரஹ்ம 4 ஹவிஃ 6 ப்ரஹ்மாக்ன 7 ப்ரஹ்மணா 8 ஹுதம் 9 ப்ரஹ்ம 3 ஸ்ருவ 10 தேந 11 மந்தவ்யம் 12 ப்ரஹ்ம 13 கர்மஸமாதினா.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அர்ப்பணமும் பிரஹ்மமேயாம் அவியும் பிரஹ்மமேயாம், பிரஹ்மரூப அக்கினியின்கண்ணே பிரஹ்மரூபகருத்தாவானவன் செய்த ஹவனமும் பிரஹ்மமேயாம், அதனுற்சித்திக்கும் ஸ்வர்க்காதியும் பிரஹ்மரூபமேயாம். கருமத்தின்கண்ணே பிரஹ்மபுத்தியினையுடைய புருஷனும் அடையத்தக்கது பரமாநந்தவடிவப் பிரஹ்மமேயாம்.

(வி-ம்.) கர்த்தா, கருமம், காரணம், சம்பிரதானம், அதிகரணம் என்னும் இவ்வைவகைபாய காரகங்களால்,யாகாதிரூபக்கிரியை சித்தமாம். ஆண்டிந்திராதிதேவதைகளை யுத்தேசித்து நெய் முதலிய திரவியத்தைத் தியாகஞ்செய்தல் யாகமாம். அதுவே தியாகஞ்செய்ய மேயாக்கியமாய நெய்முதலிய திரவியத்தை அழலின்கண்ணேபெய்தலால் ஹோமமெனப்படும். ஆண்டுத்தேசித்த இந்திராதிதேவதைகளே சம்பிரதானமாம். தியாகஞ்செய்யும் நெய்முதலியவை ஹவிஷ்சப்தத்தாற் கூறப்பெறும். அதுவே தியாகப்பிரதேக்ஷபரூப தாதுவர்த்தத்தின் சாக்ஷாத்கருமரூபமாம். அதன் பல பூதஸ்வர்க்காதிகள் வியவகிதபாவனையின் கருமரூபமாம். அக்கினியின்கண்ணே நெய்முதலிய அவிஷின் பிரதேக்ஷபத்தே (பெய்தலின்கண்ணே) அதன் தாரகமாதலின் ஜுஹுமுதலியவை கரணரூபமாம். இந்திராதிரூப அர்த்தத்தைப் பிரகாசித்தலால் 'ஔஶ்ராயஷாஹா' என்னும் மந்திராதியும் கரணரூபமேயாம். இவ்வாறு காரகஞாபகமேபதத்தால் கரணம் இருவகையாம். இவ்வாறு தேவதையை யுத்தேசித்து நெய்முதலிய திரவியத்தியாகம், அதனை யக்கினியின்கண்ணேபெய்தல், என்பன இருவகைத்தொழிலாம். ஆண்டு முதலில் தியாகரூபகிரியையின்கண்ணே யஜமான னை கருத்தாவாவன். இரண்டாவது பிரதேக்ஷபரூபக்கிரியையின்கண்ணே யஜமானன் தக்ஷிணைகொடுத்து ஸ்தாபித்த அத்வர்யு கர்த்தாவாவன். ஆகவனீயாதி யக்கினி ஹவிஷின்பெய்தற் கதிகரணமாம். இவ்வாறு தேசகாலாதிகளும் சர்வக்கிரியைகட்கும் சாதாரண அதிகரணமெனவறிக. இவ்வாறுகிரியாகாரக வியவகாரங்கள்யாவும் பிரஹ்மஅஞ்ஞானத்தாற் கற்பிதமாமாதலின் இரஜ்ஜுவின் அஞ்ஞானத்தாற் கற்பிதமாய சர்ப்பபம், தண்டம், மாலைமுதலியவை இரஜ்ஜுரூப அதிஷ்டான ஞானத்தால் பாதமாய்விடுவதேபோல அதிஷ்டானப்பிரஹ்ம சாக்ஷாத்காரத்தால் கிரியை காரகாதி சர்வவியவகாரமும் பாதத்தையடையுமாதலின், அவ்வஜ்ஞானிடத்தே பாதிதானுவிருத்தியால் அவ்விவகாராபாசம் தோற்றினும் வெந்த புடவைபோல் எபபல உற்பன்னஞ்செய்வதினும் ஆற்றலுடையதாகாதாம். இப்பொருளையே ஸ்ரீ பகவான் இச்சுலோகத்தாற் கூறியருளினர். பிரஹ்மதிருஷ்டியே சர்வ யாகவடிவம் எனப் பிரஹ்மதிருஷ்டியைத் துதித்தருளினர். இப்போது அவ்வகையைக் காண்பிப்பாம் :—'ஸ்ருவ்யாதி ஸ்ருகாதிகம் ஸ்ருவக்ஷணம்' எதனால் நெய் முதலிய ஹவிஷ் அக்கினியின்கண்ணே அர்ப்பிக்கப்பெறுமோ அஃதர்ப்பணமாம்; என்னுங் கரண வியுற்பத்தியால் அப்பதம் ஜுஹு முதலிய காரணங்களின் மந்திராதி காரணங்களின்வாசகமாம். 'ஸ்ருவ்யாதி ஸ்ருகாதிகம் ஸ்ருவக்ஷணம்' நெய்முதலிய அவிஷ்யாதின்பொருட்டு அர்ப்பிக்கப்பெறுமோ

அது அர்ப்பணமாம்; என்னும் வியுற்பத்தியால் அப்பதம் இந்திராதி தேவதை வடிவ சம்பிரதானவாசகமாம். 'ஸுவஸ்-ஹுத ஸுஹுதஸ் ஸுவ-ஹுணம்' நெய்முதலிய ஹவிஷ் அர்ப்பிக்கப்பெறும் எதன்கண்ணே அது அர்ப்பணமாம்; என்னும் வியுற்பத்தியால் அப்பதம் தேசகாலாதிரூப அதிகரணவாசகமாம். இவ்வாறு ஓரே அர்ப்பணபதம் காணம், சம்பிரதானம், அதிகரணம் என்னும் மூன்று காரகங்களின் வாசகமாமாதலின், ஜ-ஹு-ர மந்திராதிரூப காணகாரகம், தேவதாதிரூப சம்பிரதான காரகம், தேசகாலாதிரூப அதிகரணகாரகம் என்னும் இவ்வியாவும் பிரஹ்மத்தின்கண்ணே கற்பிதமாதலின் பிரஹ்மரூபமேயாம். கருத்திதுவாம்:- இரஜ்ஜுவின்கண்ணே கற்பித சர்ப்ப தண்டாதிகள் அவ்வதிஷ்டானத்திலும் வேறுய் அசத்தேதயாவதேபோல, அவையும் அதிஷ்டானப் பிரஹ்மத்திலும் வேறுய் அசத்தேதயாம். யஜமான கர்த்திருகத்தியாகரூபக்கிரியைக்கும், அத்வர்யு கர்த்திருகப் பிரகூஷரூபக்கிரியைக்கும் சாகூஷாத் கருமரூபம் நெய் முதலியவையாம். அவ்வவிஷ்ரூப கருமகாரகமும் பிரஹ்மரூபமேயாம். எவ்வாகவனீயாதி அக்கினியின்கண்ணே நெய் முதலிய ஹவிஷ் போடப்படுமோ, அவ்வதிகரண காரகமும் பிரஹ்மரூபமேயாம். எந்த யஜமானன் தேவதையையுத்தேசித்து நெய்முதலிய ஹவிஷைத்தியாகஞ்செய்வனே, எவ்வத்வர்யுநெய்முதலிய ஹவிஷை அக்கினியின்கண்ணே பிரகூஷஞ்செய்வனே, அவ்விரண்டு கர்த்திருகாரகங்களும் பிரஹ்மரூபமேயாம். ஹுதம் என்னும் சப்தத்தால் கூறிய தியாக பிரகூஷக்கிரியை வடிவ ஹவனமும் பிரஹ்மரூபமேயாம். ஹவனரூபக்கிரியையாலடைய யோக்கிய மாய சுவர்க்காதிரூப வியவஹித கருமகாரகமும் பிரஹ்மரூபமேயாம். இவ்வாறு அக்கருமத்தே பிரஹ்மதிருஷ்டிரூபசமாதியாவனுக்கோ அவன்கருமசமாதியாவன். இத்தகைய கருமானுஷ்டானரூப பிரஹ்மவேத்தாவும் பரமானந்தவடிவ அத்வி தீயப் பிரஹ்மத்தையேயடைவன். ஈண்டு 'கூ-ஹுஷாயிநா' என்னும் வசனத்தின் பின்னர் 'ப்ரஹ்மகவ்யம்' என்னும் இரண்டு பதங்களையும் பூர்வவாக்கியத்தோடு அனுஷங்கஞ்செய்க. அல்லது, 'ஸுவஸ்-ஹுத ஸுஹெஹுமஹுராயதஸ் ஸுவ-ஹுணம்' எப் பலப்பிராப்தியின்பொருட்டு ஹவிஷ் அர்ப்பிக்கப்பெறுமோ அது அர்ப்பணமாம் என்னும் வியுற்பத்தியால் அப்பதத்தானே அச்சுவர்க்காதிபலத்தையும் கவர்க. 'மகவ்யம்' என்னும் பதத்தாலதனைக் கவராதொழிக. ஆகையால், 'ப்ரஹ்மெவ தேந மகவ்யம் ப்ரஹ்மகூ-ஹுஷாயிநா' என்னும் சுலோகத்தின் பிற்பாதி ஞான பலத்தைக் கூறும்பொருட்டேயாம். இவ்வுரையே நலமுடையதாம். ஆண்டு, இவ்விரண்டாவதுரையின்கண்ணே 'ப்ரஹ்மகூ-ஹுஷாயிநா' இம்மிதாரே சமஸ்தபதமாம். அல்லது, 'ப்ரஹ்மெவதேந' என்னும் வசனத்தேயிருக்கும் பிரஹ்மமென்னும் பதத்தையோ பூர்வ 'ஹுதம்' என்னும் பதத்தோடு அன்வயஞ்செய்க. 'ப்ரஹ்மகூ-ஹுஷாயிநா' என்னும் வசனத்தேயிருக்கும் பிரஹ்மமென்னும் பதத்தையோ 'மகவ்யம்' என்னும் பதத்தோடு அன்வயஞ்செய்க. ஆகையினால், 'ப்ரஹ்மகூ-ஹுஷாயிநா' என்னும் இரண்டு பதங்களும் வேறுவேறேயாம். இவ்விரண்டாவதுரையின்கண்ணே பூர்வ விபாக்யானம்போல 'ப்ரஹ்மகவ்யம்' என்னும் இருபதங்கட்கும் அநுஷங்கரூபக் கிலேசவடைவுண்டாகாதாம். ஈண்டு, 'ப்ரஹ்மெவதேந மகவ்யம் ப்ரஹ்மகூ-ஹுஷாயிநா' என்னும் வசனத்தால் ஸ்ரீ பகவானவர் பிரஹ்மவேத்தாவிற்குப் பிரஹ்மப்பிராப்தி கூறியருளியது யான் பிரஹ்மரூபமாயுள்ளேன் என்னும் அபேதரூபத்தானேயன்றிச் சுவர்க்காதிபோலப் பின்னரூபமாயேனும் அல்லது சுவாமிசேவகபாவமாயேனுமன்றும். 'ப்ரஹ்மெவ ப்ரஹ்மவித்' பிரஹ்மத்தையுணர்ந்த புருஷன் பிரஹ்மரூபமேமயாவன். இக்காரணத்தால் பிரஹ்மவேத்தாவானவன் சுவர்க்காதி துச்சபலத்தையடையான். எதனால் பிரஹ்மவேத்தாவிற்குப் பிரஹ்மவித்தையால் அவித்தையாலாக்கப்பெற்ற சர்வ காரகவியவகாரம் நாசத்தையடைந்துள்ளதோ. இவ்வார்த்தையை வார்த்திக

கிரந்தகர்த்தாவாய ஸ்ரீ சுரேச்வர ஆசாரியருங்கூறியிருக்கின்றனர் :—'காரக வ்யவஹாரெஹி ஸுஜ்ஞம் வஸ்து நவீக்ஷ்யதெ । ஸுஜ்ஞெவஸ்து நிஸ்ரெயஸகாரக வ்யாவ்ருதிகுஸுதஃ' (போ-ள்.) கர்த்தா கருமாதிகாரகங்களின் வியவகாரமிருக்கின், ஆன்மாவாகிய தூயவஸ்துவின் சாக்ஷாத்காரமுண்டாகாதாம் அஃதுண்டாகவே அவற்றின் வியாபாரமுண்டாகாதாம். ஓருரைகாரரோ இச்சுலோகத்திற்கு இவ்வுரை கூறியுள்ளார். நாமம், வாக்கு, மனம் என்பன முதலியவற்றின் ஸ்வரூபத்தைப் பாதியாது அவற்றின்கண்ணே சுருதியானது பிரஹ்மதிருஷ்டியை விதித்துள்ளதேபோல, ஈண்டு ஸ்ரீ பகவானும் அர்ப்பணாதிகாரகங்களின் ஸ்வரூபத்தைப் பாதியாது அவற்றின்மாட்டுப் பிரஹ்மதிருஷ்டியை விதித்தருளியுள்ளார். இவ்வுரையை ஸ்ரீ பகவான் பாடியக்காரர் தாற்பரிய நிச்சயஞ்செய்யும் உபக்கிரமாதிகளின் விரோதத்தானும், பிரஹ்மவித்தைப் பிரகரணத்தின்கண்ணே சம்பத்துபாசனமாத்திரப் பிராப்தியேயின்றும் என்னும் யுக்திகளானும் விஸ்தாரமாய்க் கண்டித்தருளியுளார். (24)

(அ-கை.) ஆண்டுப் பூர்வம் 'ப்ரஹ்மாவ-ஸுணம' என்னும் மந்திரரூப சுலோகத்தின்கண்ணே யாண்டும் பிரஹ்மதிருஷ்டிவிதிவ நற்றரிசனத்தையாகரூபமாய்த் துதித்தருளி இப்போது அதனை மீண்டும் துதித்தருளும்பொருட்டு ஸ்ரீ பகவான் மற்றைய யாகங்களையும் திருவாய்மலர்ந்தருளுகின்றார் :—

சு-ம். ஜெவஜெவாவஜெ யஜ்ஞம் யொநிஸ்ஃ வய-ஸுவாஹெதெ ।
ப்ரஹ்மாஸ்ருவவஜெ யஜ்ஞம் யஜ்ஞெநெவொவஜ-ஹ்வதி ॥ (25)

ப-ம். 3 ஜெவம் 5 ஸவ 1 ஸுவஜெ 4 யஜ்ஞம் 2 யொநிஸ்ஃ 6 வய-ஸுவாஹெதெ,
8 ப்ரஹ்மாஸ்ருள 7 ஸுவஜெ 9 யஜ்ஞம் 10 யஜ்ஞந 11 ஸவ 12 உவஜ-ஹ்வதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன ! வேறு கருமிகளோ தெய்வயாகத்தையே சந்ததம் புரிவர் வேறு தத்துவவேத்தாக்களோ, பிரஹ்மரூப அக்கினியின்கண்ணே ஆன்மாவை யான்மரூபமாயே ஹோமஞ்செய்வர். (25)

(வி-ம்.) ஹே அர்ச்சுன ! இந்திரன், அக்கினி, வாயு முதலிய தேவதைகள் எதனால் மகிழ்வுறுவரோ அது தெய்வமாம். அத்தகைய தரிசபூரணமாச ஜோதிஷ்டோமமுதலியதெய்வயாகங்களையே மற்றையகருமியர் சந்ததம்புரிவர். அவர் ஞானயாகத்தை ஒருகாலும் செய்யார். இவ்வாறு கருமயாகத்தைக் கூறியருளி மனத்தூய்மைவாயிலாய் அக்கருமயாகத்தின் பல பூதஞான யாகத்தை ஸ்ரீ பகவான் திருவாய்மலர்ந்தருளுகின்றார். 'ப்ரஹ்மாஸ்ருள என. ஹே அர்ச்சுன ! சத்தியஞான அநந்த ஆநந்தரூபமாய்ச் சர்வ விசேஷமற்ற தற்பதார்த்தரூபப் பிரஹ்மமே அறியப்பெற்றதாய்ச் சர்வகருமங்களின் தாஹகமாதலின், அக்கினியைப்போல அக்கினிரூபமாம். இத்தகைய தற்பதார்த்தரூபப் பிரஹ்மத்தீயின்கண்ணே மற்றைய தத்துவவேத்தாவாய சந்நியாசி, துவம்பதார்த்தரூபபிரத்தியக்கான்மாவைஅபின்னரூபமாய் ஹோமஞ்செய்வன். அதாவது, தத்துவம் பதார்த்தரூபப் பிரத்தியக்கான்மாவைப் பிரஹ்மரூபமாய்க் காண்பன். ஈண்டு, 'யஜ்ஞெநெவ' என்னும் வசனத்தின்கண்ணேயிருக்கும் 'வஸ' என்னும் சப்தம் ஜீவப்பிரஹ்மங்களின் பேதத்தை நீக்கும்பொருட்டாம். ஈண்டு, ஜீவப்பிரஹ்ம அபேதஞானத்தை யாகரூபத்தால் சம்பாதனஞ்செய்து 'ஸ்ரெயாந்ரவ்யமயாத்ஜ்ஞாநயஜ்ஞாத்' என்பதாதி வசனங்களால் அந்த ஞானயாகத்தைத் துதித்தருளும்பொருட்டு அந்த ஞானயாகத்தின் சாதனரூப யாகங்களின் மத்தியில் ஸ்ரீ பகவானவர் அந்த ஞான யாகத்தைத் திருவாய்மலர்ந்தருளினர். (25)

(அ-கை.) இத்துணை கூறியதால் ஸ்ரீ பகவானுனவர் முக்கியயாகம் கௌண யாகம் என்னுமிரண்டையும் கூறியருளினர். இப்போது வேதத்தே எத்துணைச் சிரேயஸ்சாதனங்கள் கூறப்பட்டுள்ளனவோ அவ்வியாவற்றையும் ஸ்ரீ பகவான் யாகரூபமாய்ப் பிரதிபாதித்தருளுகின்றார் :—

சு-ம். ஸ்ரொதராஂஸீநீம்ஜ்ரியாணாஂயெஅ ஸம்யகாஹுதிஷு ஜுஹ்வதி ।
ஸ்ஹ்ருதீந்த்ரியகர்மாணயெஅ ஜ்ஞானதீபிதே ஜுஹ்வதி ॥ (26)

ப-ம். 2 ஸ்ரொதராஂஸீதி 3 ஜ்ரியாணி 1 சுயெஅ 4 ஸம்யகாஹுதிஷு 5 ஜுஹ்வதி
7 ஸ்ஹ்ருதீந 8 விஷயாந 6 சுயெஅ 9 ஜ்ரியாஹுதிஷு 10 ஜுஹ்வதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மற்றையோர் சுரோத்திராதி இந்திரியங்களைச் சம்யமரூப அக்கினியின்கண்ணே ஹோமஞ்செய்வர். மற்றையோர், சப்தாதி விஷயங்களைச் சுரோத்திராதி இந்திரியரூப அக்கினியின்கண்ணே ஹோமஞ்செய்வர்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! யமநியம ஆசனப்பிராணாயாமமென்னும் நான்கன் சித்திபால் கேவலம் பிரத்யாகார பராயணராய சிலரோ சுரோத்திராதி பஞ்சஞானேந்திரியங்களைத் தத்தமது சப்தாதிவிஷயங்களினின்றும் நிவிருத்தித்து சம்யமரூப அக்கினிபின்கண்ணே ஹோமஞ்செய்வர். ஈண்டு 'தரயஏகுதரஸம்யஃ' என்னும் பதஞ்சலிபகவானது சூத்திரத்தே ஏகவஸ்துவை விஷயஞ்செய்யும் தாரணை, தியானம், சமாதியென்னும் மூன்றும் சம்யமசப்தத்தாற் கூறப்பெறும். ஆண்டிருதயகமலாதி ஸ்தானங்களில் நெடுங்காலம்வரை மனத்தைத் தாபனஞ்செய்தல் தாரணையாம். இவ்வாறு ஏகஸ்தானத்தே தாரணஞ்செய்யப்பெற்ற சித்தத்தின் உத்தர உத்தரவிஜாதீய விருத்திகளாற்றிய வியவதானசகித பகவதாகார சஜாதீயவிருத்திகளின் பிரவாஹம் தியானமாம். அச்சித்தத்தின் விஜாதீய விருத்திகளின் வியவதானமற்ற கேவலம் பகவதாகார சஜாதீயவிருத்திகளின் பிரவாஹம் சமாதியாம். அதுவும் சித்தபூமிகளின் பேதத்தால சவிகற்பம் நிர்விகற்பமென இருவகையாம். க்ஷிப்தம், மூடம், விக்ஷிப்தம், ஏகாக்ரம், நிருத்தம் என்னுமைந்து பூமியும் சித்தத்திற்காம். அவஸ்தாவிசேஷம் பூமியாம். ஆண்டு இராகத்வேஷாதிகளின்வயத்தால் விஷயங்களிடத்தே அத்தியந்த அபிநிவேசமுடைய சித்தம் க்ஷிப்தமெனப்படும். நித்திரையாலசியாதிகளால் கவரப்பட்டசித்தம் மூடமெனப்படும். எப்போதும்விஷயங்களில் ஆசக்தியுடையதேனும் ஒருகாற் றெய்வயோகத்தால் தியானநிஷ்டையையும் அடையும் சித்தம் க்ஷிப்தத்தினும் மேன்மையதாதலின், விக்ஷிப்தமெனப்பெறும். ஆண்டு க்ஷிப்த சித்தத்தின்கண்ணும், மூடசித்தத்தின்கண்ணும் சமாதியுண்டாஞ்சங்கையேயின்றும். விக்ஷிப்தசித்தத்தின்கண்ணே ஒருகாற்சமாதிகூடினும் விரோதிப்பிரதானத்தால் அது யோகபக்ஷத்தே நிலவாதாம். மற்றோர், பெருங்காற்றுலசைவுற்ற தீபமானது தானே நாசமாவதேபோல ஒருகாற்றோற்றிய சமாதியும் தானே நாசத்தையுறும். அச்சித்தத்தே ஏகவஸ்துவை விஷயம்செய்யும் தாராவாகிக விருத்திகளின்சாமர்த்தியம் ஏகாக்கிரமாம். ஆண்டுச்சத்துவகுண விருத்தியால் தமோகுணமாக்கிய ஆலசியாதிரூபலயமிலயமாகவே ஆன்மாகார விருத்தியுண்டாம். அது இரஜோகுணம் விளைத்த சஞ்சலத்தன்மையாகிய விரோதப அபாவத்தால் ஏகவஸ்துவிஷயகமேயாம். இவ்வாறு சுத்தசத்துவகுணத்தையுற்றே அச்சித்தம் ஏகாக்கிரத்தைபடையும், அவ்வொருமைபெறுமுள்ளத்தே அச் சவிகற்பசமாதியுண்டாம். அதன்கண்ணே நிர்வியாகாரவிருத்தியும் தோற்றும். எக்காலதுவும் நிரோதத்தையுறுமேமா அக்காலது நிருத்தமெனப்பெறும். அந்நிருத்த சித்தத்தே நிர்விகற்பசமாதியுண்டாம், இதுவே சர்வசுகங்களினும் விரக்தியாகியின் திடபூமிவடிவமாய்த் தருமமேகம் எனக் கூறப்பெறும். இவ்வாறு அநேக

ரூபமாய்த் தாரணாதி சம்யமமேதமாம். ஆகையாற்ரூன் 'ஸம்யமாத்ஜ்ஞ' என்னும் வசனத்தேத ஸ்ரீ பகவானனவர் பன்மை பகர்ந்தருளியுள்ளார். இத்தகைய சம்யமரூப அக்கினிகளில் சிற்சிலஅதிகாரிகள் சுரோத்திராதியிந்திரியங்களை ஹோமஞ் செய்வர். அதாவது, தாரணை, தியானம், சமாதி என்னும்மூன்றன்சித்தியின்பொருட்டுச் சுரோத்திராதி இந்திரியங்களைத் தத்தம் விஷயங்களினின்றும் பிரத்தியாஹரணஞ்செய்வர், அவ்வாறு விஷயங்களினின்றும் திருப்பியபொறிகள் சித்தரூபமேயாகும். இதுவே சாஸ்திரத்தின்கண்ணே பிரத்தியாகாரம் எனக்கூறப்பெறும். இதன்பின்னர் விசேஷப அபாவத்தால் சித்தம் தாரணாதிகளைச் சம்பாதிக்கும். இத்துணைகூறியதால் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்னும் நான்கங்கள் யோகத்திற்குக் கூறப்பெற்றனவாம். அவற்ரூற் சமாதியவஸ்தையின் கண்ணே சர்வஇந்திரிய ஜன்னியவிருத்திகளின் நிரோதத்தை யாகரூபமாய் வருணித்தருளப்பெற்றது. இப்போது அச்சமாதியினின்றும் கிளம்பியதசையில் இராகத்துவேஷமற்ற சாஸ்திரவிகிதவிஷயபோகமும் ஒரு யாகரூபமேயாம். இப்பொருளை ஸ்ரீ பகவான் கூறியருளுகின்ரூர் :—'ஸவைராகீந்விஷயாநநெஸ்ய ஆத்மியாந் விதேயாத்மா' வேற அர்ச்சுன! அச்சமாதியினின்றும் கிளம்பிய யோகியானவன் இராகத்துவேஷரகிதனுய்ச் சுரோத்திராதி இந்திரியங்களால் சாஸ்திர அவிருத்த சப்தாதிவிஷயங்களைக்கவர்வன். இதுவே சப்தாதிவிஷயங்கட்குச் சுரோத்திராதி இந்திரியங்களின்கண்ணே வேறாமமாம்.

(அ-கை.) ஆண்டிப்பூர்வசுலோகத்தே பாதஞ்சலமதத்தை யனுசரித்து இலயபூர்வக சமாதிரூபவியுத்தான தசைவடிவ இரண்டு யாகங்களும் கூறப்பெற்றன. இப்போது இச்சுலோகத்தே பிரஹ்மவாதிபுருஷரின் மதானுசாரமாய்ச் சர்வ சாதனங்களின் பல ரூபகாரண நாசத்தால் வியுத்தானமற்ற நிரோதபூர்வக சமாதிரூப வேறு யாகத்தை ஸ்ரீபகவான் கூறியருளுகின்ரூர் :—

சு-ம். ஸவஷ்ணீந்ரியகஷ்ணி வ்ராணகஷ்ணி ஆவஸே ।
ஸூத்ஸம்யஷயொமாந்ஸ ஜ்ஹுதி ஜ்ஞாநதீபிதே ॥ (27)

ப-ம். 2 ஸவஷ்ணி 3 உந்ரியகஷ்ணி 5 வ்ராணகஷ்ணி 4 அ 1 ஸுவஸே 7 ஸூத்ஸம்யஷயொமாந்ஸ 8 ஜ்ஹுதி 6 ஜ்ஞாநதீபிதே.

(அ-ம்) வேற அர்ச்சுன! வேறுசில அதிகாரிகளோ சர்வ இந்திரியங்களின் பிராணன்களின் கருமங்களையும் ஞானத்தாற் றீபித ஆத்ம சம்யம யோகரூப அக்கினியின்கண்ணே வேறாமஞ்செய்வர். (27)

(வி-ம்.) ஆண்டுச் சமாதி இலயபூர்வகமெனவும் பாதபூர்வகமெனவும் இருவகையாம். ஆண்டு, 'தஷ்டநஷ்டகூ ஸாம்ஹண ஸ்ஹாஷிஹ்யஃ' என்னும் சூத்திரத்தே ஸ்ரீவியாசபகவானுனவர் காரணத்தினும் வேறுய்க் காரியத்திற் கசத்துவங்கூறி யருளியுள்ளார். ஆகையால், பஞ்சீகிருத பஞ்சபூதங்களின் காரியவியஷ்டிரூபம் சமஷ்டிரூப விராட்டின்காரியமாதலின் அதனினும் வேறன்ரும். அச்சமஷ்டிரூபகாரியமும் அபஞ்சீகிருதபஞ்ச மகாபூதங்களின் காரியமாதலின் அதனினும் வேறன்ரும். அவற்றுள்ளும் சப்தாதி ஐந்துகுணமுடைய பிருதிவி நான்குகுணமுடைய ஜலகாரியமாதலின் அதனினும் வேறன்ரும். அதுவும் மூன்றுகுணமுடைய தேயுவின் காரியமாதலின் அதனினும் வேறன்ரும். அதுவும் இரண்டுகுணமுடைய வாயுவின்காரியமாதலின் அதனினும் வேறன்ரும். அதுவும் ஒருகுணமுடைய ஆகாசத்தின் காரியமாதலின் அதனினும் வேறன்ரும். அதுவும் 'ஸஹஸ்ரஷ்ஷாம்' என்னும் சுருதிகூறிய பரமசுவர சங்கற்பரூப அகங்கார காரியமாதலின் அதனினும் வேறன்ரும். அதுவும் 'தஷ்ஷெஷ்ஷத' என்னுஞ் சுருதிகூறிய மாயையீஷணரூப மகத்தத்துவத்தின் காரியரூபமாதலின் அதனினும் வேறன்

ரும். அதுவும் மாயாரூபபரிணாமமாதலின் அதனினும் வேறன்ரும். அதுவும்ஜட ரூபமாதலின் சைதன்யரூபப் பிரஹ்மத்தின்கண்ணே அத்தியஸ்தமாமாதலின் அத னினும் வேறன்ரும் என நிரந்தரம் சிந்தித்துக் காரியகாரணரூப சர்வப் பிரபஞ்ச மிருப்பினும் சைதன்ய பிரஹ்மமாத்திர விஷயக சமாதி லயபூர்வக சமாதியெ னப்பெறும். அதன்கண்ணே அதிகாரிக்குத் தத்துவமசி முதலிய வேதாந்த மகாவாக்கியங்களின் அர்த்தஞானமின்ருமாதலின் காரியசகித அவித்தையின்நாச முண்டாயதில்லை. மற்ரே, அவ்வவித்தை அந்த இலயசிந்தனகாலத்தீத இருக்கவே யிருக்கின்றது அஃதிருப்ப அதனினின்றும் மீண்டும் சம்சாரரூப காரியோற்பத்தி யுண்டாமாதலின் இவ்விலயபூர்வக சமாதியுமிலப்போலச்சவிகற்ப சமாதியேயாம் முக்கியநிர்விகற்ப சமாதியன்ரும். எக்கால் தத்துவமசிமுதலிய மகாவாக்கியஜன் னிய சாக்ஷாத்காரத்தால் அவித்தையின் நிவிருத்தியாமோ, உற்பத்திக்கிரமமாய் அவ்வவித்தையின் மகத்தத்துவாதி சர்வகாரியங்களின் நிவிருத்தியாமோ, தத்து வசாக்ஷாத்காரத்தால் ஒருமுறை நாசத்தையடைந்த அநாதியவித்தை மீண்டும் ஒருகாலும் கிளம்புகையையடையாதோ, அவ்வவித்தையின்காரியமும் மீண்டும் கிளம்புகையை யடையாதோ; அக்கால் அவ்வறிஞனுக்கு முக்கிய நிர்ப்பீஜ (நிர் விகற்ப) பாதபூர்வக சமாதியுண்டாம். அதுவே இச்சுலோகத்தால் ஸ்ரீபகவான் கூறியருளியதாம். அவ்வகையைக்காட்டுதும் :—ஆண்டுள்வெளிப்போதத்தால் இந் திரியம் இருவகையாம். சுரோத்திராதி ஐந்து ஞானேந்திரியங்கள் வாக்காதிஐந்து கருமேந்திரியங்கள் பாகியேந்திரியமெனப்பெறும். மனமும் புந்தியும் ஆந்தரேந் திரியமெனப்பெறும். இவற்றிற்குள்ள தூலரூப சமஸ்காரரூப கருமமியாவும், அதாவது சப்தாதிகளின் கவர்ச்சிமுறையே சுரோத்திராதிகளின் கருமமாம். வச னித்தன் முதலியவை முறையே வாக்காதிகளின் கருமமாம். சங்கற்பநிச்சயங்கள் மநோபுத்திகளின் கருமங்களாம். இவ்வாறே பஞ்சப்பிராணன்களின் கருமமியா வும்அதாவது மிவளிப்போதல், கீழ்ச்செல்லல், சுருங்கல் விரிதல், அயிலுமன்ரு தியை சமானப்படுத்தல், மேற்கிளப்பல் முறையே பிராண அபான வியான சமான உதானன்களின் கருமமாம். இத்துணையால் பதினேழு தத்துவவடிவ இலிங்கசரீ ரங்கூறப்பெற்றது. அச்சூக்ஷ்மசரீரமும் ஈண்டுச் சூக்ஷ்மபூதங்களின் சமஷ்டி-ரூப ஹிரண்யகர்ப்பமேயென விளம்பும் வேட்கையாம். இப்பொருளை யறிவிக்கும் பொருட்டு ஸ்ரீபகவானுனவர் அவ்விந்திரியப்பிராண கருமங்கட்கு 'ஸவ-ஸாணி' என்னும் விசேஷணத்தைக்கூறியருளினர். இத்தகைய பதினேழின்மயமான இலி ங்கசரீரத்தைச் சில அறிஞர் ஆத்மசம்யம யோகாக்கினியின்கண்ணே ஹோமம் செய்வர். ஆண்டான்மாவை விஷயஞ்செய்யும் தாரணை, தியானம், சவிகற்பசமாதி ரூபசம்யமமாம். அதன்பரிபாகத்தானே சித்தமாயநிரோதசமாதிரூபயோகம் ஆன் மசம்யம யோகமாம். இதனைப் பதஞ்சலிபகவானும் யோகசூத்திரத்தே கூறியரு ளினர் 'வ்ரூதாநநிரொயஸம்ஸார யொரஹிஸவ வ்ராஹ்மஸாவள நிரொய கூக்ஷண விதாரயொ நிரொயவரிணாஉ' என. கூக்ஷிப்தமூடவிக்ஷிப்தமென்னும்மூன் றுபூமிகள் வியுத்தானமெனப்படும் அதன்சமஸ்காரம் சமாதிவிரோதியாம். அது வோ யோகியின்முயல்வால் தினந்தோறும் கணந்தோறும் அபிபவத்தையடையும். அதன்விரோதிபாய நிரோதசமஸ்காரம் தினந்தோறும் கணந்தோறும் உதயமாம். அதன்பின்னர் நிரோதமாத்திர கூக்ஷணத்தோடு சித்தத்தின்சேர்க்கை நிரோதபரி ணாமமெனப்படும். இந்நிரோதசமாதியின் பலத்தையும் ஸ்ரீ பதஞ்சலிபகவான்யோ கசூத்திரத்தே கூறியருளியுள்ளார். 'தஸ்யவ்ரபாதவாஹிதா ஸம்ஸ்காராஉ' நிரோதபரிணமத்தின் பின்னர் நிரோதசமஸ்காரங்களின் றிடத்தன்மையால் அச் சித்தத்திற்குப் பிரசாந்தவாஹித்தன்மையுண்டாம்; அதாவது தமோகுண இர ஜோகுணங்களழிந்தபின்னர் இலயவிக்ஷேபதோஷமற்ற தன்மையால் சுத்த சத் துவ சித்தம் பிரசாந்தமெனப்பெறும் பூர்வ பூர்வப் பிரசமசமஸ்காரங்களின் மிகு

திபைக்குறித்து அதனினும் மிகுதித்தன்மையைப் பிரசாந்தவாஹித்தன்மையென் பர். அங்ஙிரோத சமாதியின் காரணத்தையும் ஸ்ரீ பதஞ்சலிபகவான் யோக சூத் திரத்தே கூறியருளியுள்ளார். 'விராமப்ரத்யயாப்யாஸபூர்வ: சித்தஸ்ய நிரோத:' விருத்தியின் உபராமத்தன்மையாகிய விராமத்தின் பிரத்யயத்தை, அதாவது காரணத்தை, அதாவது விருத்தியின் உபராமத்தன்மையின்பொருட்டுண் டாம் புருஷப் பிரயத்தனத்தை, மீண்டும் மீண்டும் சம்பாதித்தல் வடிவ அப்பியாச த்தாலுளதாய சவிகற்பசமாதியினும் விலக்ஷண நிர்விகற்பசமாதியுண்டாம். இவ்வா ரூப நிரோதசமாதிரூப ஆத்மசம்யமயோகமேஅக்கினிரூபமாம். அது ஞானத்தாற் றீபிதமாம்; அதாவது, வேதாந்தவாக்கியத்தாற் சனித்த பிரஹ்மாத்ம ஐக்கிய சாக்ஷாத்காரத்தால் காரியசகித அவித்தையின் நாசவாயிலாய் அத்தியந்த உஜ்வலி தமாம். இங்ஙனம் ஞானத்தாற்றீபித ஆத்மசம்யமயோகாக்கினிரூப பாதபூர்வக சமாதியின்கண்ணே வேறொரு அறிஞன் சமஷ்டி லிங்கசரீரத்தை ஹோமம் செய் வன்; அதாவது, அச்சமாதியின்கண்ணே லிங்க சரீரத்தைப் பிரவிலாபனம் செய் வன். ஈண்டு, 'ஸவ்ரஹ்மணி க்ருதஜுஹ்வாதயோவிதே' என்னும் மூன்று விசேஷணங்களைக் கூறியருளியதானும் 'சுஹுள' என ஏகவசனங்கூறியருளியதானும் பூர்வங் கூறி யருளிய யாகத்தினும் இவ்வியாகத்தே விலக்ஷணத்தன்மை குறிப்பித்தருளப்பெற் றது. ஆகையினால், ஈண்டுக்கூறியதுகூறலென்னும் தோஷஅடைவுண்டாகாதாம்.()

(அ-கை.) ஆண்டுப் பூர்வம் 'தெவஸவோவமெயஜ்ஞை:' என்பது முதலிய மூன்று சுலோகங்களால் ஸ்ரீபகவானவர் பஞ்சயஜ்ஞங்களைக் கூறியருளினர்; இப்போது இவ்வொரே சுலோகத்தால் ஆறு யாகங்களைக் கூறியருளுகின்றார்:—

சு-ம். த்ரவ்யயஜ்ஞாஸ்தபோயஜ்ஞா: யோகயஜ்ஞாஸ்ததாவரே ।
ஸ்வாத்யாயஜ்ஞானயஜ்ஞாஸ்ச யதய: ஸம்ஸிதவ்ரதா: ॥ (28)

ப-ம். 2 த்ரவ்யயஜ்ஞா: 3 தபோயஜ்ஞா: 5 யோகயஜ்ஞா: 4 ததா 1 சுவரே 7 ஸ்வா
த்யாயஜ்ஞானயஜ்ஞா: 6 ச 8 யதய: 9 ஸம்ஸிதவ்ரதா:.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சில அதிகாரிகள் திரவியத்தியாகரூப யாகத்தை யும், சிலர் தபவடிவ யாகத்தையும், சிலர் யோகரூப யாகத்தையும், சிலர் வேதாப் யாசரூப யாகத்தையும் ஞானரூப யாகத்தையும், சில யத்னசீலர் அத்தியந்தம் திட விரதரூப யாகத்தையும் செய்வர். (28)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சாஸ்திரவிதிப்பிரமாணமாய்த் திரவியத்தியாகமே யாகமெனவுடையார் திரவியயாகர்கள் ஆவர்கள்; அதாவது, பூர்த்தம் தத்தம் ஆகிய ஸ்மார்த்தகருமத்தைச்செய்பவர் திரவியயாகர் எனப்பெறுவர். அவ்விரண்டின் வடி வம் ஸ்மிருதியின்கண்ணே இங்ஙனியம்பப்பெற்றுளது.

"வாபீகூபதடாகாதி தெவதாயதனாதிஷு ।
அன்னப்ரதானமன்னாதேர் விதியஜ்ஞ இதீயதே ॥
ஸ்ரமணாமதஸம்த்ராணம் ஹ்யதானம் அவ்யஹிம்ஸனம் ।
பஹிவெதிஷு யத்தானம் உதவிதியஜ்ஞ இதீயதே" ॥

(போ-ள்.) வாபீ கூப தடாகங்களைச்செய்தல், விஷ்ணு சிவாதியாலயங்கள் செய்தல், பசியுடையார்க்கன்னமுதவல், வழிப்போக்கர் தங்கத் தர்மசாலைசெய்தல் என்னுமிவையாவும் பூர்த்தமாம். சரணாகதர்களைக்காத்தல், எப்பூதப் பிராணிகட் கும் ஹிம்சைசெய்யாதிருத்தல், வேதியினின்றும் பாகியதானம், என்னுமிவை யாவும் தத்தமாம். இவ்விரண்டு ஸ்மார்த்தகருமங்களைச் செய்பவர் திரவியயாகர்

எனப்படுவர். இஷ்டமென்னும் ஸ்ரௌதகருமத்தையோ 'வெஉவஎவாவஎயஜ்ஞ' என்னும் வசனத்தால் முன்னர்க் கூறியருளப்பெற்றது. எத்தானம் வேதிக்குட் கொடுக்கப்படுமோ அதுவும் சிரௌதகரும அந்தர்ப்பூதமேயாம். கிருச்சிரசாந்திராயணதிரூப தவமே யாகரூபமாயுடையவர் தபோயாகர் எனப்படுவர்; அதாவது சில தவத்தோர் கிருச்சிரசாந்திராயணாதி தவரூப யாகத்தையே செய்வர். சித்தவிருத்திநிரோதரூப அஷ்டாங்கயோகத்தையே யாகரூபமாயுடையவர் யோகயாகர் எனப்படுவர்; அதாவது, சிலர் அஷ்டாங்கயோகரூப யாகத்தையே செய்வர். இயமம் 1, நியமம் 2, ஆசனம் 3, பிராணயாமம் 4, பிரத்யாஹாரம் 5, தாரணை 6, தியானம் 7, சமாதி 8, இவை யோக அஷ்டாங்கமாம். பிரத்தியாஹாரஸ்வரூபமோ 'ஸ்ரோத்ராதீநீந்ரியாணிஸம்யமநே' என்னும் வசனத்தே முன்னர்க் கூறியருளப்பெற்றது. தாரணை, தியானம், சமாதி என்னும் மூன்றன்வடிவமோ 'தத்ரைகாக்ரயாயோமாத்ரள' என்னும் வசனத்தே முன்னர்க்கூறியருளப்பெற்றது. பிராணயாமவடிவமோ 'சுவாஸப்ரஸ்வாஸயோர்கதிவிச்சேதாணாம்' இம்மேற்சுலோகத்தே கூறியருளப்பெறும். ஆகையாலிப்போது இயமநியம ஆசனமென்னும் மூன்றன்வடிவத்தைக்கூறுவாம்:— அஹிம்சை 1, சத்தியம் 2, அஸ்தேயம் 3, பிரஹ்மசரியம் 4, அபரிக்கிரகம் 5, இவை இயமமாம்.—சௌசம் 1, சந்தோஷம் 2, தவம் 3, ஸ்வாத்யாயம் 4, ஈஸ்வரப்பிரணிதானம் 5 இவை நியமமாம். ஆசனமோ பத்மம், சுவஸ்திகம், பத்திரம் என்பதாதி பேதத்தால் அநேகவகையாம். ஆண்டுச் சாஸ்திரத்தாற் கூறப்பெறுத ஒரு பிராணியை வதஞ்செய்தல் ஹிம்சையாம். இதுகூறியதால், 'ந ஹிஸ்யாத் ஸர்வபூதாநி வைதாஹுஷ்டிமாலபேத்' என்பதாதி சாஸ்திரம் விதித்தயாகத்தே பசுவதத்தின்கண்ணே ஹிம்சைத்தன்மை நீக்கப்பெற்றதாம். அதுவும், கிருத காரித அநுமோதித பேதத்தால் மூவகையாம். தானே செய்தல் கிருதமாம், பிறர்வாயிலாய்ச் செய்வித்தல் காரிதமாம், செய்ததை மகிழ்தல் அநுமோதிதமாம். இவ்வகையிம்சையினின்றும் நிவிருத்திரூப உபராமம் அஹிம்சையாம். அவ்வாறல்லாததைப் பேசுதல், கொல்லத் தகுதியற்ற பிராணி யிம்சையினனுகூலவுண்மையுசைத்தல் என்பது பொய்பேசுதலாம். இருவகைப் பொய்ம்மொழிதலினின்றும் நிவிருத்திரூப உபராமத்தன்மை சத்தியமாம். சாஸ்திரத்தாற் கூறப்பெறுத மார்க்கத்தால் பிறர் பொருளை வவ்வுதல் ஸ்தேயமாம்; அஃதின்மை அஸ்தேயமாம். சாஸ்திரத்தால் நிஷேதிக்கப்பெற்ற மைதுனமற்றிருத்தல் பிரஹ்மசரியமாம். சாஸ்திரநிஷித்த மார்க்கத்தால் காயக்காப்பின் நிர்வாக போகசாதனத்தினின்றும் மிகுதியைத் தேடல் பரிக்கிரகமாம். அஃதின்மை யபரிக்கிரகமாம். இனி நியமத்தை நிரூபிப்பாம். சௌசம், பாஹ்யம், ஆந்தரமென விருவகையாம். தோயமுமண்ணுங்கொண்டு காயத்தைத் தூயதாக்குதல், ஹித மித மேத்திய (சுத்த) ஆகாராதிகொள்ளல், பாஹ்யமாம். மைத்ரி கருணை முதிதை யுபேக்ஷை யென்பதாதி குணங்களால் சித்தத்தின் மதமாதிரூப மல நிவிருத்திசெய்தல் ஆந்தரமாம். சுகிகள்பான் மித்ரபாவம் மைத்ரி. துக்கிகண்மேற்கிருபைபுரிதல் கருணையாம். புண்ணியவான்களைக்கண்டு மகிழுதல் முதிதையாம். பாவியர் துஷ்டருடன் சேர்க்கையறல் உபேக்ஷையாம். தனக்குக் கிடைத்த போகசாதனங்களினும் அதிகத்தைத்தேடவெழாவிழைவுவடிவ சித்தவிருத்திவிசேஷம் சந்தோஷமாம். பரிதாகம் சீதோஷ்ணம், என்பனமுதலிய துவந்துவ தர்மங்களைச் சகித்தல், காஷ்டமௌனம் ஆகாரமௌனம் என்பனவாதிய விரதங்கள் தவமாம். காமுதலியவற்றின் சேஷ்டையாலும் தனதபிப்பிராயத்தை வெளிப்படுத்தாதிருத்தல் காஷ்டமௌனமாம். முற்கூறியமுறை வெளிப்படுத்துதலோடு வாய்திறந்துபேசாமை ஆகாரமௌனமாம். மோக்ஷப்பிரதிபாதக வேதாந்தசாஸ்திர அத்தியயனம் பிரணவமந்திரஜபம் ஸ்வாத்தியாயமாம். அவ்வப்பல இச்சையற்றுச் சர்வ கருமங்களையும் பரமகுருவாகிய ஈசுவரனிடத்தே அர்ப்பித்தல் ஈசுவரப்பிரணிதானமாம். இது யோக சாஸ்திரமுறையே

ஐவகை இயம நியமங்கள் அறையப்பெற்றன. புராணத்தோ, கள்ளாமை, தயை, ஆர்ச்சவம், சாந்தி, சௌசம், திருதி, மிதாஹாரம், மெய்பேசுதல், அஹிம்சை, பிரஹ்மசரியம் என்னும் பேதத்தால், பத்துவகையாய் இயமம் கூறப்பெற்றுள்ளது. ஆஸ்திகத்தன்மை, மகிழ்வு, தவம், தேவார்ச்சனம், தானம், இலச்சை, உண்மையுணர்வு, ஹோமம், நற்கேள்வி, ஜபம் என்னும் பேதத்தால் பத்துவகையாய் நியமம் நிகழ்த்தப்பெற்றுளது. இவையும் அவ்வைந்தனுள்ளேயடங்கும். இவ்வகையாய இயமநியமாதி எட்டு அங்கங்களைப் பயிலுமதிகாரிகள் யோகயாகரெனப்படுவர். யாவர் விதிபூர்வகமாய்க் குருசமீபத்தேயிருந்து வேதங்களைப் பயில்வரோ அவர் சுவாத்தியாய யாகர் எனப்படுவர்; அதாவது, சிலர் வேதாப்யாசரூபயாகத்தையே செய்வர். யாவர் அநேக யுக்திகளோடு வேதார்த்தத்தை நிச்சயிப்பரோ, அவர் ஞானயாகரெனப்படுவர்; அதாவது, சிலர் வேதார்த்த நிச்சயரூபயாகத்தையேசெய்வர். இப்போது வேறு யாகத்தைக் கூறியருளுகின்றார் 'யதயஃ ஸம்ஸிதவ்ரதாஃ' என. ஹே ஆச்சன! சில யத்தனசிலரோ சம்சித விரதரூபயாகத்தையே செய்வர். நன்றுக அத்தியந்தந் திடமாய அஹிம்சாதி விரதத்தையுடையவர் சம்சிதவிரதரெனப்படுவர். இவ்வார்த்தையை ஸ்ரீ பகவான் பதஞ்சலியாரும் யோகசாஸ்திரத்தே யருளியுள்ளார். 'ஜாதிதெஶகாலஸமயாநவச்சிந்நாஃ ஸார்வபௌமா மஹாவ்ரதம்' என. அஹிம்சைமுதலிய ஐந்துயமமே ஜாதிதேசம் காலம் சமயம் என்னும் நான்கால் அநவச்சின்னமாதலின், அத்தியந்தம் திடபூமிவடிவமாய் மகாவிரதமெனப்பெறும். இப்போதவ்வைந்தன்கண் ஜாதியாதியாலனவச்சின்னத்தன்மையை வெளிப்படுத்தும்பொருட்டு முதலில் அவ்வஹிம்சைமுதலியவற்றே ஜாதியாதியாலவச்சின்னத்தன்மையை நிரூபிப்பாம்:—ஒரு மிருகத்தைவிடுத்து கோமுதலிபவற்றை யொருகாலும் கொல்லேன் என்னும் சங்கற்பத்தை மனத்தேதகொண்டு அவற்றினஹிம்சை ஜாதியவச்சின்னமெனப்படும். தீர்த்தத்தே எவ்வுயிரையும் ஹிம்சியேன் என்னும் சங்கற்பம் மனத்தேதகொண்டு ஆங்கு உயிரைஹிம்சிபாதுற்ற அஹிம்சை தேசாவச்சின்னமெனப்படும். ஏகாதசி முதலிய புனிதகாலத்தே எச்சீவரையும் வதையேன் என்னுமெண்ணத்தை மனத்தேதகொண்டு அக்கால் எவ்வுயிரையும் வதையாமையாகிய அஹிம்சை காலாவச்சின்னமெனப்படும். சுரர் பூசுரர்க்குப் பயன்படுதலன்றிப் போரினன்றி எவ்வுயிரையுங்கொல்லேன் எனவுளங்கொண்டு அப்பயனின்றிக்கொல்லாமை சமயாவச்சின்னமாம். ஈண்டுச் சமயமென்பது பிரயோஜன விசேஷமாம். இவ்வாறே விவாகாதிப் பிரயோஜனமின்றிப் பொய்பேசேன் என்னுமெண்ணத்தை யுட்கொண்டு அப்பயனின்றிப் பொய்பேசலொழித்தலாம் சத்தியம் சமயாவச்சின்னமாம். இவ்வாறு ஆபத்துக்காலத்தானன்றிப் பசிநீக்கும் பொருள்களினும் வேறுய பொருளைத் திருடேன் என்னுமெண்ணத்தை யுள்ளத்தேதகொண்டு திருடாமையாய அஸ்தேயம் காலாவச்சின்னமெனப்படும். இங்ஙனம், இருதுகாலமொழிந்தகாலத்தே என் மனைவியைப் போகியேன் என்னும் எண்ணத்தை மனத்தேதகொண்டு மைதுனமொழித்தலாம்பிரஹ்மசரியம் காலாவச்சின்னமாம். இவ்வாறு குருத்தேவதையாதியரின் பயனுக்கன்றி அதிக பதார்த்த பரிக்கிரகத்தைச் செய்யேன் என்னும் சங்கற்பம் மனங்கொண்டு கொள்ளாமையாம் அபரிக்கிரகம் சமயாவச்சின்னமெனப்படும். இம்முறையே அஹிம்சை முதலியவற்றே தக்கபடி ஜாதியவச்சின்னத்தன்மை முதலியவற்றை யறிந்துகொள்க. ஜாதி முதலிய நான்கு அவச்சேதகங்களை நீக்கி எக்கால் அவை சர்வ ஜாதியாதிகளிலாமோ அதாவது ஓரிடத்தும் ஓர் காலத்தும் ஒரு பிரயோஜனப்பொருட்டும் யாரையும் ஹிம்சியேன்; பொய், களவு, மைதுனம், பரிக்கிரகம், செய்யேன் என்னும் எண்ணத்துடன் அவை நிரவச்சின்னங்களாங்கால் அவை மகாவிரதமெனப்பெறும். இவ்வாறு காஷ்டமௌனாதி விரதங்களையுமறிந்துகொள்க. இங்ஙனம் அஹிம்சாதி விரதம் திடமாகவே நரகத்துவா

பூத காமக் குரோத லோப மோகமென்னும் நான்கன் நீக்கமாம். அகிம்சையானும் பொறுமையானும் குரோத நீக்கமாம். பிரஹ்மசரியத்தானும் வஸ்து விசாரத்தானும் காம நிவிருத்தியாம். அஸ்தேய அபரிக்கிரகரூப சந்தோஷத்தால் லோப நீக்கமாம். சத்தியத்தானும் உண்மை யுணர்வுவடிவ விவேகத்தானும் மோக நீக்கமாம். இவ்வாறு அக்காமக்குரோதாதிகளின் நீக்கமானபின், அவற்றின் காரிய ரூப சர்வ அனர்த்த நீக்கமாம். இவற்றிற்கு அநேக பலம் சகாமர்க்கு யோகசாஸ்திரத்தே கூறப்பெற்றுளது. (28)

(அ-கை.) பிராணயாமரூப யாகத்தை யொன்றரைச்சுலோகத்தால் ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார் :—

சு-ம். ஸுவாதெ ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணேঽபானம் ததாபரெ ।
ப்ராணாபானகதீ ருத்ஸ்ய ப்ராணாயாமபராயணாஃ ॥ (29)
ஸுவரெ நியதாஹாராஃ ப்ராணாந் ப்ராணேஷு ஜுஹ்வதி ।

ப-ம். 2 ஸுவாதெ 4 ஜுஹ்வதி 3 ப்ராணம் 6 ப்ராணெ 7 ஸுவாநம் 5 ததா 1 ஸுவ
ரெ 10 ப்ராணாபானகதி 11 ருத்ஸ்ய 12 ப்ராணாயாமபராயணாஃ 9 ஸுவ
ரெ 8 நியதாஹாராஃ 14 ப்ராணாந் 13 ப்ராணேஷு 15 ஜுஹ்வதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன ! வேறு சிலரோ, அபானனில் பிராணனை ஹோமம் செய்வர், பிராணனில் அபானனை ஹோமஞ்செய்வர். நிய த ஆகாரமுடைய வேறு சிலரோ, பிராண அபானகதியை நிறுவிப் பிராணயாம பராயணராய்ப் பிராணன்களிடத்தே ஞானகரும இந்திரியங்களை ஹோமஞ் செய்வர். (29)

(வி-ம்.) ஹே அர்ச்சுன ! சிற்சிலரோ அபானனது பிரசுவாசரூப விருத்தியின்கண்ணே பிராணனது சுவாசரூப விருத்தியை ஹோமஞ்செய்வர்; அதாவது வெளிவாயுவைத் தேகத்துள்ளே புகுத்திப் பூரகப்பிராணயாமத்தைச் செய்வர்; அவர் பிராணனது சுவாசரூப விருத்தியின்கண் அபானனது பிரசுவாசரூப விருத்தியை ஹோமஞ் செய்வர்; அதாவது தேகத்துள்ளுள்ளவாயுவைப் பாகிய தேசத்தின்கண்ணே வெளிப்படுத்தி ரேசகமென்னும் பிராணயாமத்தைச்செய்வர். ஈண்டுப் பூரகம் ரேசகம் என்னும் இருவகையாய பிராணயாமத்தைக் கூறியருளி, ஸ்ரீ பகவானுனவர் இருவகையாய கும்பகத்தையும் அருத்தத்தானே அறைந்தருளினர்; எதனுனே அப்பூரகரேசகமின்றி அவ்விருவகைக் கும்பகம் சித்தமாகமாட்டாதோ, ஆண்டு ஆந்தர கும்பகம், பாகிய கும்பகம் என்னும் வேற்றுமையுற்று அஃதிருவகையாம். ஆண்டு முடிந்தவளவு வெளிவாயுவை நாசிகை வாயிலாய்த் தேகத்துள்ளே பூரித்துப் பின் சுவாசப் பிரசுவாசங்களைத்தடைப்படுத்தல்ஆந்தர கும்பகமெனப்பெறும்; முடிந்தஅளவுசரீர உள்வாயுவை நாசிகைவாயிலாய்ப் பாகிய பரித்தியாகஞ்செய்து பின் சுவாசப்பிரசுவாசங்களை யடக்கல் பாகிய கும்பகமெனப்பெறும். இப்போது முன்னருளிய பூரகாதி மூவகைப்பிராணயாம அனுவாத பூர்வகம் நான்காவது கும்பகத்தை ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார் 'ப்ராணாபானகதீ ருத்ஸ்ய' என. ஹே அர்ச்சுன ! முகநாசிகைவாயிலாய்ச் சரீர உள்வாயுவை வெளிப்படுத்தல் சுவாசமாம், அதுவோ பிராணனது கதியாம். வெளிப்போந்தவாயுவை வாய் மூக்குவாயிலாய் தேகத்துட்புகுத்தல் பிரசுவாசமாம்; அது அபானனது கதியாம். ஆண்டுப் பூரகத்தின்கண்ணே பிராணனது சுவாசரூப கதி தடைப்படும். ரேசகத்தின்கண்ணே அபானனது பிரசுவாசரூபகதி தடைப்படும். கும்பகத்தின்கண்ணே இருகதியும் தடையாம். இவ்வாறு முறையாயேனும் ஓர்காலத்தேனும் அந்தப் பிராண அபான சுவாசப் பிரசுவாசரூப கதியைத்தடைப்படுத்தி மூவகைப்பிராணயாமபராயணராய், ஆகாரநியமாதி யோக

சாதனங்களோடு கூடியவராய சிலரோ பாகிய ஆந்தரகும்பக அப்யாசத்தால் நிக்கிரகித்த பிராணன்களிடத்தே ஞானகரும இந்திரியரூபப் பிராணன்களை ஹோமஞ்செய்வர்; அதாவது, சதுர்த்தகும்பக அப்யாசத்தால் அவ்விந்திரியங்களை நிக்கிரகித்த பிராணன்களிடத்தே இலயஞ்செய்வர். இவ்வெல்லாப்பொருளையும் ஸ்ரீபகவான் பதஞ்சலியானவர் யோகசூத்திரத்தே சுருக்கமாயும் விஸ்தாரமாயும் கூறியருளியுள்ளார். அச்சம்க்ஷேப சூத்திரமிதுவாம்:—'தஸ்மிந் ஸதி ஶ்வாஸ ப்ரஶ்வாஸயோர்கதி விச்சேத: ப்ராணாயாம:' அவ்வாசனம் திரமுறவே பிராணயாமம் செய்யத்தக்கதாம். அது சுவாசப் பிரசுவாசகதியின் நிரோதரூபமாம்; அதாவது, பிராண அபானன்களின் முறையாய தருமரூப சுவாசப் பிரசுவாசங்களின் புருஷ முயல்வின்றியேயுண்டாம் இயல்பாய சலனரூபகதியை முறையாயேனும் ஒருகாலத்தேயேனும் புருஷப்பிரயத்ந விசேஷத்தால் தடைப்படுத்தும் வடிவதே பிராணயாமமெனப்படும். இச்சுருங்கியபொருளை இப்போது விஸ்தரிப்பாம்:—'பாஹ்யாப்யந்தரஸ்தம்ப வ்ருத்திர்தேஶகாலஸங்க்யாபி: பரிதிருஷ்டோதீர்க்ஷ: ஸூக்ஷ்ம:' அந்தப் பிராணயாமம் பாகியவிருத்தி, அப்யந்தராவிருத்தி, ஸ்தம்பவிருத்தி, துரீயம் என்னும்பேதத்தால் நான்குவகையாம். அவற்றுள், பாகியகதியின் நிரோதரூபமாதலின் பூரகம் பாகிய விருத்தியெனப்பெறும். அந்தர்க்கதியின் நிரோதரூபமாதலின் ரேசகம் ஆந்தரவிருத்தியாம். அல்லது, பாகியவிருத்தி சப்தத்தால் ரேசகத்தைக்கவர்க; அப்யந்தராவிருத்திசப்தத்தால் பூரகத்தைக்கவர்க. ஒரேகாலத்தே அவ்விருகதிகளின் நிரோதம் ஸ்தம்பமாம்; அவ்வுருவமாதலிற் கும்பகம் ஸ்தம்பவிருத்தியெனப்படும்; அதாவது யாண்டுச் சுவாசப்பிரசுவாசங்களின் அபாவம் ஒரேவிதாரகப் பிரயத்னத்தால், ஆமோ பூர்வம்போலப் பூரணத்தின் பிரயத்னவிதாரணமும், ரேசனத்தின் பிரயத்னவிதாரணமும் உண்டாகாதாம்; மற்றும், அக்கினியாற் றபிக்கப்பெற்ற கன்மேலிட்டநீர்வற்றியாண்டும் சங்கோசத்தை யடைவதேபோல எப்போதும் சலனசுபாவத்தையுடைய இப்பிராணவாயுவும் பலமுடை விதாரகப் பிரயத்னத்தால் சலனக்கிரியையற்றதாய் சரீரத்தின்கண்ணே சூக்ஷ்மமாய்த்திதமாம். அக்கால் அச்சூக்ஷ்மப் பிராணவாயு பூரணத்தையு மடையாதாதலின் பூரகமுமாகாதாம்; ரேசனத்தையுமடையாதாதலின் ரேசகமுமாகாதாம்; மற்றும், எஞ்சியதாய்த் தடைப்பட்டவது கும்பகமேயாகும். பூரகரேசககும்பகமென்னும் மூவகையாய பிராணயாமம் தேசத்தானும் காலத்தானும் சங்கியையானும் பரீக்ஷசெய்யப்பெற்றதாய்த் தீர்க்க சூக்ஷ்மப்பெயரையடையும். கனமாய பஞ்சின்பிண்டம் விரிக்கப்பெற்றதாய் விரலத்தன்மையானே தீர்க்கமாகும் சூக்ஷ்மமுமாகும். அதுபோல இப்பிராணவாயுவும் தேசகாலசங்கியைகளின்மிகுதியால் பயிலட்பெற்றதாய்த் தீர்க்கமும் துர்லக்ஷியத்தன்மையானே சூக்ஷ்மமுமாம். அவ்வகையை யிப்போது காட்டுதும்:—பிராணனது கதிரூபசுவாசமோ இதயத்தினின்றுங்கிளம்பி நாசி நுனியின்முன் 12 அங்குலம் வரையுறுமிடஞ்சென்று முடிவுறும்; அபானகதிரூபப் பிரசுவாசமோ சுவாசம்முடிவுற்ற இடத்தினின்றும் மீண்டுந் திரும்பி இதயத்தையுற்று முடிவுறும். இதுயாவருக்குமுற்ற வியற்கையாய பிராண அபானனதுகதியாம். பயில்வாரே அதுமுறைப்படி நாபியினின்றுங்கிளம்பி அல்லது ஆதாரத்தினின்றுங்கிளம்பி நாசி நுனிமுன் 24 அங்குலம் வரையுறுமிடத்தேனும் 36 அங்குலம்வரையுறுமிடத்தேனும் சென்று முடிவுறும். மீண்டும் அம்முடிவுற்ற தேயத்தினின்றுமே திரும்பி அந்நாசிவாயிலாய் நாபியிலேனும் ஆதாரத்திலேனும் சேரும். பாகியதேயத்தே வாயுவின் சம்பந்தமோ வாயுவற்ற தேயத்தே தன் மூக்கின்முன் சூக்ஷ்மமாய பஞ்சைவைத்து அதன் சலனத்தால் அனுமானம் செய்யப்பெறும். தேகத்துள்ளா எறும்பின் பரிச சமான பரிசத்தால் அனுமிக்கப்பெறும் அவ்விதுவே தேயபரீக்ஷ யெனப்பெறும். இமைக்கொட்டலாதே வரைந்துகொண்ட நான்கிலொருபாகம் கூடிணமெ

னப்பெறும். க்ஷணங்கள் இத்துணையென நிச்சயித்தல் காலபரீக்ஷையாம். தனது ஜானுமண்டலத்தைத் தனது அஸ்தத்தால் பிரதக்ஷிணம்போல மும்முறை தீண்டிச் செய்யும் சோடிகா முத்திரையானே வரைந்துகொண்ட காலம் மாத்திரை யெனப் படும். 36 மாத்திரைகளான் முதலுற்காதம் மந்தமாம். அதுவே முன்னினும் இருமடங்காக்கப்பெற்று இரண்டாவதாய மத்தியமாம். அதுவே மும்மடங்காக்கப் பெற்று மூன்றுவதாய தீவிரமெனப்பெறும். நாபியினின்றும் கிளப்பி விரேசனம் செய்யப்பெற்ற பிராணவாயுவானது தலையிற்றுக்கல் உற்காதமாம். இது சங்கியை யின் பரீக்ஷையாம்; அல்லது பிரணவமந்திரஜப ஆவிருத்திபேதத்தால் சங்கியை யின் பரீக்ஷை அறிக. அல்லது சுவாசப்பிரவேசங்களின் கணக்காற் சங்கியை பரீ க்ஷையறிக. இவ்வாறு காலம் சங்கியை என்னும் இரண்டிற்கும் ஒரு சிறிது பேத முடன்பட்டு வேறுவேறுய்க் கூறப்பெற்றது. கும்பகத்தின்கண்ணே பூரகரேசகம் போலத் தேசவியாப்தி பிரதிதியாகாதெனினும் காலவியாப்தியும் சங்கியைவியாப் தியும் அக்கும்பகத்தின்கண்ணும் அறியப்பெறும். மூவகையாய பிராணயாமம் தினந்தோறும் அப்யசிக்கப்பெற்றதாய்த் திவசம், பக்ஷம், மாசம் என்பதாதி முறைப்படி அதிக தேசகாலத்தே வியாபகமாதலின் தீர்க்கமெனப்படும்; பரம நைபுண்ய சமாதியாலறியப்பெறுதலின் சூக்ஷ்மமெனப்படும். இத்துணையால் பூர கரேசக கும்பகமென்னும் மூவகைப் பிராணயாமம் கூறப்பெற்றது. இப்போது பல ரூப சதுர்த்தப் பிராணயாமத்தை நிரூபிப்பாம்:—'ஸ்வாஹ்யா஽ப்யந்தர விஷயா க்ஷேபீ அதஸ்-ருதி' பாகியவிஷய சுவாசம் ரேசகமெனப்படும். ஆந்தாவிஷயப் பிரசுவாசம் பூரகமெனப்படும். அல்லது, பாகியவிஷய சப்தத்தால் பூரகத்தைக் கவர்க. அப்யந்தரவிஷயசப்தத்தால் ரேசகத்தைக்கவர்க. அவ்விரேசக பூரகங்களை யபேக்ஷித்து ஒரேபலமுடைய விதாரகப்பிரயத்ன வயத்தால் வெளியுட்பேதங்கொ ண்டு இருவகை மூன்றுவது கும்பகமாகும். இவ்விரண்டையபேக்ஷியாமல் கேவ லம் கும்பகத்தின் அப்பியாசதிடத்தாற் பன்முறை அவ்வம்முயல்வின் வயத்தால் நான்காவது கும்பகமாகும். அல்லது இச்சூத்திரத்திற்கு இவ்வேறுரைசெய்க. முன்மொழிந்த 12 அங்குலம்வரை, 24 அங்குலம்வரை, 36 அங்குலம்வரை, பிரா ணன்செல்லும் வெளியிடமாம். இதுவே வெளிவிஷய சப்தத்தாற் கவர்க. உள் விஷய சப்தத்தாலே இருதயநாபி சக்கிரமுதலியவற்றைக்கவர்க. இவ்விரண்டுவிஷ யங்களையும் சூக்ஷ்ம திருஷ்டியால் நிச்சயித்துத் தம்பரூபகதியின் விச்சேதம் நான்காவது பிராணயாமமெனப்படும். மூன்றுவது கும்பகமெனப்பெயரிய பிராண யாமமோ வெளியுள் விஷய நிச்சயமின்றியே விரைவாகவேயாம். இத்துணையே மூன்றுவதற்கும் நான்காவதற்கும் சிறப்பாம். இந்நான்குவகையாய பிராணயாமத் தையே ஸ்ரீபகவானுனவர் 'சுவாஸ்ரஜ்ஹதி வ்ராணம்' என்பது முதலிய ஒன் றரைச்சுலோகத்தால் கூறியருளினர். (29)

(அ-கை.) ஆண்டு 'ஸ்வஸ்வாவஸ்ரயஜ்ஞ:' என்பது முதலாக ஐந்தரைச் சுலோகங்களால் 12 யாகங்கள் கூறப்பெற்றன. இப்போது அப்பன்னிருவகையை யறிந்தவர்க்கும் அனுஷ்டிப்பவர்க்கும் கிடைக்கும் பயனை ஸ்ரீ பகவானருளிச்செய் கின்றார்.

சு-ம். ஸவைஷ்வேதே யஜ்ஞவிதோ யஜ்ஞக்ஷபிதகல்மஷாஃ ॥ (30)
யஜ்ஞஶிஷ்டாம்ருதபுஜோ யாந்தி ப்ரஹ்ம ஸநாதநம் ।
நாயம் லோகோஸ்த்ய யஜ்ஞஸ்ய குதோந்ய: குருஸத்தம ॥ (31)

ப-ம். 5 ஸவைஷ் 6 சுவி 4 ஸதே 1 யஜ்ஞவிதஃ 2 யஜ்ஞக்ஷபிதகல்மஷாஃ 3 யஜ்ஞ ஶிஷ்டாம்ருதபுஜஃ 9 யாந்தி 8 ப்ரஹ்ம 7 ஸநாதநம் 14 ந 12 சுயம் 13 லோ கஃ 15 சுஷ்மி 11 சுயஜ்ஞஸ்ய 17 குதஃ 16 சுந்யஃ 10 குருஸத்தம.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யாகஞ்செய்பவரும், அதனற் கன்மக்ஷமற்றவரும், அதன்பின்னர் அமிருதரூப அன்னத்தைப் புஜிப்பவரும், ஆகிய இவர் யாவருமே நித்தியப்பிரஹ்மத்தை யடைவர். அவ்வியாகமற்றவர்க்கு இம்மனுஷ்யலோகமும் கிடைத்தற்கரிதெனின் சுவர்க்காதிலோகமெவ்வாறு கிடைக்கும்? (31)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! முன்மொழிந்த பன்னிருயாகங்களை யாவர் குருசாஸ்திரவாயிலா யுணர்வரோ அல்லது அவற்றையடைவரோ, அதாவது அவற்றை யாவர் சிரத்தையோடும் செய்வரோ, அவர் 'யஜ்ஞவிதஃ' எனப்படுவர். இவ்வாறு யாகங்களை யறிபவரும், அவற்றைச்செய்பவரும், அவற்றால் அழிவுற்ற பாவகருமரூப கன்மக்ஷரும், அவற்றைச்செய்து எஞ்சியிருந்தகாலத்தே, அமிருதரூப அன்னத்தைப் போஜனஞ்செய்பவரும் ஆகியயாவருமே மனத்தூய்மைவாயிலாயும், ஞானவடைவுவாயிலாயும், நித்தியப்பிரஹ்மத்தையே யடைவர்; அதாவது இச்சன்மமரணதிரூப சம்சாரத்தினின்றும் அவர் முக்தராவர். இத்துணை கூறியருளியதால் யாகஞ்செய்பவர்க்குப் பலப்பிராப்தி கூறியருளப்பெற்றது; இப்போது அவற்றைச் செய்யாதவர்க்குத் தோஷ அடைவுகூறியருளப்பெறுகின்றது 'நாயம் லோகோஸ்த்யயஜ்ஞஸ்ய' என. ஹே அர்ச்சுன! முன்மொழிந்த பன்னிரண்டுயாகங்களுள் எவ்வியாகமும் எவருக்கின்றுமோ அவர் அயஜ்ஞர் எனப்படுவர். அத்தகையருக்கு இவ்வற்பசுகத்தையுடைய மனுஷ்யலோகமும் கிடைக்கமாட்டாதெனின் சர்வசிஷ்டபுருஷரால் நிந்திக்கப்பெறுதலின் துக்கியாய அவர் மகாபுண்ணியகருமத்தாலடையத்தக்கனவாய சுவர்க்காதிரூப லோகங்களை எவ்வாறடைவர்; மற்றே எவ்வுலகத்தையுமடையார். (31)

(அ-கை.) ஹே பகவன்! பூர்வம் தாங்கள் கூறியருளிய பலசுதியாகங்கள் கேவலம் தங்கள் கற்பனையேயாகும் அவற்றின்கண் வேறொரு பிரமாணமுமின்றும் என அருச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் சாக்ஷாத் வேதமே பிரமாணமாமென விடையருளிச்செய்கின்றார்:—

சு-ம். ஏவம் பஹுவிதா யஜ்ஞா விததா ப்ரஹ்மணோ முகே।
கர்மஜாந்வித்தி தாந்ஸர்வாநேவம் ஜ்ஞாத்வா விமோக்ஷ்யஸே ॥ (32)

ப-ம். 1 ஏவம் 2 பஹுவிதாஃ 3 யஜ்ஞாஃ 6 விததாஃ 4 ப்ரஹ்மணஃ 5 முகே 9 கர்ம
ஜாந் 10 வித்தி 7 தாந் 8 ஸர்வாந் 11 ஏவம் 12 ஜ்ஞாத்வா 13 விமோக்ஷ்யஸே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வாறு அநேகம்வகை யாகங்கள் வேதமுகத்தே விஸ்தாரமாம். அவ்வெல்லா யாகங்களையும் நீ கருமஜன்னியமேயென வறிதி. இங்ஙனம் உணர்ந்து நீ இச்சம்சாரத்தினின்றும் முக்தனாதி. (32)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! 'ஸ்ரௌதஸ்மார்தவிஹிதோயஜ்ஞ:' என்னும் வசனந்தொடங்கி முற்புகன்ற சர்வவைதிகஸ்ரேயசின் சாதனரூப சர்வயாகங்களும் இருக்காதி வேதமுகத்தே விஸ்தாரமாம், அதாவது இருக்காதி வேதவாயிலாயே அவ்வெல்லாயாகங்களும் மறியப்பெறும். கேவலம் எமது கற்பனையால் யாம் அவற்றைக் கூறவில்லை. அவ்வியாவற்றையும் நீ காயிக வாசிக மானச கருமத்தினின்றே யுண்டானதாயறிதி; அவற்றை ஆன்மாவினின்றும் உண்டானதாய் அறியாதொழிதி. இவ்வான்மாச் சர்வ வியாபாரங்களுமற்றதாமாதலின், அவை ஆன்மாவின் வியாபாரரூபமன்றும்; மற்றே, சர்வ வியாபாரமுமற்ற அசங்க உதாசீனமாம். இவ்வாறு ஆன்மாவை அசங்க உதாசீனமென வறிந்து நீ இச்சம்சார பந்தத்தினின்றும் முக்தனாதி. (32)

(அ-கை.) ஆண்டுப் பூர்வப் பிரசங்கத்தே ஸ்ரீ பகவானவர் சர்வ யாகங்களையும் சமமாகவே கூறியருளினராதலின் கருமயாகமும் ஞானயாகமும் சமான

மேயாகும் என அர்ச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீ பகவானுனவர் அவ்விரண்டின் சமானத்தன்மையை நீக்கும்பொருட்டு ஞானயாகத்தின் மேன்மையைக் கூறியருளுகின்றார்.

சு-ம். ஸ்ரேயாந்ரவ்யமயாத்ஜ்ஞாக் ஜ்ஞாநயஜ்ஞஃ பரந்தப ।
ஸர்வம் கர்மாகிலம் பார்த² ஜ்ஞாநே பரிஸமாப்யதே ॥ (33)

ப-ம். 5 ஸ்ரேயாந் 2 த்ரவ்யமயாத் 3 யஜ்ஞாத் 4 ஜ்ஞாநயஜ்ஞஃ 1 பரந்தப 7 ஸர்வம் 9 கர்மாகி² 8 ஸகலம் 6 பார்த² 10 ஜ்ஞாநே 11 பரிஸமாப்யதே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பொருண்மயயாகத்தினும் ஞானயாகம் முற்றினும் மேன்மையதாம். எதனால் ஹே பார்த்த! சர்வ நிரவசேஷகர்மமும் ஞானத்தின் கண்ணே பரியவசானத்தை யடையாநிற்குமோ. (33)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பொருண்மயயாகமே முதலாகவுள்ள ஞானசூனிய சர்வயாகங்களினும் ஞானயாகம் முற்றினும் மேன்மையதாம்; ஏனெனின், அவையாவுமோ சம்சாரரூப பலத்தையே யடைவிப்பனவாம். ஞானயாகமோ சாக்ஷாத் மோக்ஷரூப பலத்தையே அடைவிப்பதாம். 'ஜ்ஞாநாக்³நி꞉ஸர்வகர்மாணி' அதிகாரிக்கு ஞானத்தானே கைவல்யமோக்ஷத்தினடைவாம். இப்போது ஞானயாக மேன்மையின்கண்ணே ஸ்ரீ பகவான் ஹேதுவைக் கூறியருளுகின்றார் 'ஸர்வம் கர்மாகிலம்' என. ஹே அர்ச்சுன! அக்கினிஹோத்ரம் ஜ்யோதிஷ்டோமம், சோமயாகம், சயனயாகம் என்னும் இவை முதலாகிய சிரௌதகர்மமும், உபாசனரூபஸ்மார்த்தகர்மமும் நிரவசேஷமாய்ப் பிரஹ்மாத்மைக்கிய ஞானத்தின்கண்ணே சமாப்தமாம்; அதாவது அவையாவும் பாவரூபப் பிரதிபந்த நிவிருத்திவாயிலாய் ஆன்மஞானத்தின்கண்ணே பரியவசானத்தையடையும். 'தத்³விஜ்ஞாநார்த²ம் ஸ கு³ரும் ஏவாபி⁴க³ச்சேத் ஸமித்பாணி꞉ ஶ்ரோத்ரியம் ப்³ரஹ்மநிஷ்ட²ம்' இவ்வதிகாரிப் பிராஹ்மணர் வேதாத்தியயனத்தாலும், யாகத்தாலும், தானத்தாலும், தவத்தாலும் ஆன்மாவையறிய இச்சிக்கின்றனர். இவ்வதிகாரிகள் தருமத்தால் பாவத்தை நீக்குகின்றனர். சர்வ சுபகருமங்களும் பிரதிபந்தகப் பாவநீக்கவாயிலாய் ஆன்மஞானத்தின்கண்ணே உபயோகமாம். இப்பொருளை ஸ்ரீ வியாசபகவானும் ஸ்ரீமத் பகவான் பாடியக்காரரும் 'ஸர்வாபே⁴தா³தி³ ஸ்ரு²தேஶ்ச' என்னும் சூத்திரத்தின்கண்ணே விஸ்தாரமாய்க் கூறியருளியிருக்கின்றனராதலின், இந்த ஞானரூபயாகமே சர்வ யாகங்களினும் மேன்மையதாம். (33)

(அ-கை.) ஹே பகவன்! எவ்வான்மஞானத்தே சர்வ சுபகருமங்களும் பரியவசானமாமோ அதனடைவில் அத்தியந்த சமீப உபாயம் யாதாம் என அர்ச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் அவ்வுபாயத்தைக் கூறியருளுகின்றார்:—

சு-ம். தத்³வித்³தி⁴ ப்ரணிபாதே²ந பரிப்ரஶ்நேந ஸேவயா ।
உபதே³க்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்த்வத³ர்ஶிந꞉ ॥ (34)

ப-ம். 1 தத் 5 வித்³தி⁴ 2 ப்ரணிபாதே²ந 3 பரிப்ரஶ்நேந 4 ஸேவயா 10 உபதே³க்ஷ்யந்தி 8 தே 9 ஜ்ஞாநம் 7 ஜ்ஞாநிநஃ 6 தத்த்வத³ர்ஶிநஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அவ்வான்மஞானத்தை நீ பிரஹ்மவேத்தாவாய குருவின் சந்நிதியிற் றண்டம்போல நமஸ்கரித்து வினவிச் சேவித்து அடைதி. அதனால் மகிழ்வெய்திய தத்துவதரிசியாய ஞானசிரியர் நின்பொருட்டு ஞானத்தை யுபதேசிப்பர். (34)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சர்வ சுபகருமங்களின் பலபூதமாய ஆன்மஞானத்தை நீ அவசியமடைதி. அதன்பொருட்டு நீ இவ்வகை யுபாயத்தைச்செய்தி. 'சூ அாய ஃவாஹு வ்ரூ ஷொவெஹ' என்னுஞ்சுருதியானது பிரஹ்மவேத்தாவாய ஆசிரியருபதேசசத்தானே ஞானஅடைவைக் கூறுகின்றது. ஆகையினால், நீயும் பிரஹ்மவேத்தாவாய ஆசிரியரது சமீபத்தே சென்று முதலில் தண்டம்போல நமஸ்கரித்து எல்லாவாற்றினும் ஆசிரியரது அனுகூலத்தன்மையைச்சம்பாதிக்கும் வியாபார விசேஷமாகிய சேவையைச்செய்தி. அதன்பின்னர் ஹே பகவன்! யான் யாவன்? யான் எவ்வகையாய்க் கட்டுப்பட்டுளேன்? எவ்வுபாயத்தால் யான் இச்சம்சாரத்தினின்றும் முக்தனாவேன்? என்னும் வினவை ஆசிரியர்பாற் செய்தி. இவ்வாறு பக்தி சிரத்தை வாயிலாய் நீ செய்த தண்டம்போன்ற நமஸ்காரத்தாலும் சேவையாலும் மகிழ்வுற்ற அத்தத்துவ தரிசியாய ஞானசிரியர் நின்பொருட்டு ஆன்மஞானத்தையுபதேசிப்பர்; அது சாக்ஷாத் மோக்ஷரூப பலத்தையடைவிப்பதாம். ஈண்டு பதஞானத்தீதயும் வாக்கியஞானத்தீதயும் நாலுவகையாயயுக்திகளின் ஞானத்தீதயும் அத்தியந்தங் குசலர் ஞானியெனப்படுவர். யாவருக்குச் சம்சய விபரீத பாவனையின்றி ஆன்மாவின் சாக்ஷாத்காரமுண்டாமோ, அவர் தத்துவதரிசியாவர். இத்தகைய அவர் உபதேசித்த ஆன்மஞானமே மோக்ஷரூப பலத்தை யடைவிக்கும். அத்தத்துவ தரிசித்தன்மையின்றிக் கேவலம் பதவாக்கியயுக்தியாதிகளின் ஞானத்தின்கண்ணே குசலர் உபதேசித்த ஆன்மஞானம் மோக்ஷரூபபலத்தை யடைவியாது. அதாவது, சுரோத்திரியப் பிரஹ்மநிஷ்ட குருவானவர் உபதேசித்த ஆன்மஞானமே மோக்ஷரூபபலத்தை யடைவிக்கும். ஆண்டு, 'ஜூ நிஹி' என்னும் பதத்தால் ஸ்ரீ பகவானவர் சுரோத்திரியனைக் கூறியருளினர். 'தத்வ ஃபி ஃஹி' என்னும் பதத்தால் பிரஹ்மநிஷ்டனைக் கூறியருளினர். இப்பொருளைச் சாக்ஷாத் சுருதி பகவதியும் 'தத்விஜ்ஞானாய ஃபவமே ஹாஸ்ரூ ஷெவாஹி மஹெதத்வித்தாணிஃ ஸ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்' எனக் கூறியுள்ளாள். (பொ-ள்.) பரமான்மாவின் சாக்ஷாத்காரப்பொருட்டு அதிகாரியானவன் சக்திக்கியைந்தவாறு பலாதிகைக்கொண்டு சுரோத்திரியப் பிரஹ்மநிஷ்ட குருவின் சமீபஞ்செல்க. ஈண்டு, 'ஜூ நிஹி, தத்வ ஃபி ஃஹி' என்னும் ஆசிரியவாசக இரண்டு பதங்களிலும் ஸ்ரீ பகவானவர் பன்மைகூறியருளியது ஆசிரியரது பெருமையை யுணர்த்தியருளும்பொருட்டேயாமன்றி, அநேக ஆசிரியரென்பதற்கன்றும்; ஏனெனின், சுரோத்திரியப் பிரஹ்மநிஷ்ட ஒரே ஆசிரியரால் அதிகாரிக்குத் தத்துவசாக்ஷாத்காரப் பிராப்தியாமாதலின், அதன்பொருட்டு அநேக ஆசிரியர் சமீபத்தே செல்வதற்குச் சிறிதுமாத்திரையும் பிரயோஜனமின்றும். (34)

(அ-கை.) ஹே பகவன்! இத்தகைய அத்தியந்த நிடவுபாயத்தால் ஆன்மஞானமுண்டாயிருப்பினும் அதனல் யாது பயன் கிட்டும் என அர்ச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் ஆன்மஞான பலத்தைக் கூறியருளுகின்றார்:—

சு-ம். யஜ் ஜ்ஞாத்வா நவ்ரூநஹெ ஃபூய ஏவம் யாஹ்யஸி வாம்பவ!
யேந ஹ்யசேஷாணி பூதான்யஸ்ஹேண த்ரக்ஷ்யஸ்யாத்மன்யதோ மயி॥ (35)

ப-ம். 2 யத் 3 ஜ்ஞாத்வா 7 ந 4 வ்ரூநஹி 6 ஏவம் 5 ஏவம் 8 யாஹ்யஸி 1 வாம்
பவ 9 யேந 11 ஹ்யசேஷாணி 10 அஸ்ஹேண 15 த்ரக்ஷ்யஸி 12 பூதான்யஹி 13 அ
யோ 14 மயி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எப்பூர்வம் புகன்ற ஞானத்தையடைந்து நீ மீண்டும் இவ்வகையாய மோகத்தையடையாயோ, எதனல், இவ்வெல்லாப் பூதங்களையும் நின்வடிவத்தும் எம்மிடத்தும் அபேதரூபமாய்க் காண்பாயோ.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சுரோத்திரியப் பிரஹ்மநிஷ்ட ஆசிரியர் உபதேசித்த ஆன்மஞானத்தையடைந்து இவ்வுறவினரின் வதமுதலிய நிமித்தத்தாலுண்டாய மயக்கரூப சோகத்தை நீ மீண்டும் அடையமாட்டாய்; ஏனெனின், ஆன்மாவின் அஞ்ஞானத்தாலுண்டாய பிரஹ்மாமுதல் தம்பமீறுயுள்ள பிதாபுத்திராதி பூதப்பிராணிகள் யாவற்றையும் எவ்வான்மஞானத்தால் நீ நினது துவம்பதார்த்த ஆன்மாவின்கண்ணும் வாஸ்தவமாய்ப்பேதமற்ற சர்வாதிஷ்டானபூத தற்பதார்த்த பரமேசுவராய எம்மிடத்தும் அபேதமாய்க் காண்பாயோ, எதனால் அதிஷ்டானத்தினும் வேறுய்க் கற்பிதவஸ்துவின்றுமோ. கருத்துரைவாம்:—பகவான் வாசுதேவராகிய எம்மை நின்ஞன்மரூபமாயறிந்து அஞ்ஞானம் நாசமானபின்னர் அதன் காரியரூப இச்சர்வபூதப்பிராணிகளும் ஸ்திதமாகாதாம். ஈண்டு, ஓருரையின்கண்ணே 'சூத்ரே மயி' என்னும் இவ்விரண்டுபதங்கட்கும் சமாஞாதி காரணத்தை அங்கீகரித்து ஆன்மரூப எம்மிடத்தே சர்வ பூதங்களையும் நீ காண்பாயெனப் பொருள்கூறப்பட்டிருக்கின்றது. (35)

(அ-கை.) ஹே பகவன்! இவ்வகையாய ஆன்மஞானத்தையடைந்தும் யான் பீஷ்மத்துரோணாதியாசிரியரையும், துரியோதனாதி யுறவினரையும் கொல்வதாலுண்டாம் பாவத்தினின்றும் விடுபடேன் என அர்ச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் அவ்வான்மஞானத்தின் பரமமாகாத்மியத்தைக் கூறியருளுகின்றார்:—

சு-ம். ஸுவி தெஉஹி வாவெஹ்யஃ ஸுவெஉஹ்யஃ வாவகூ₃தஃஃ ।
ஸுவ₃ம் ஜ்ஞாநப்லவெநைவ வ்ருஜி₃நம் ஸந்தரிஷ்யஸி ॥ (36)

ப-ம். 5 ஸுவி 1 தெஅ 6 ஸுஹி 3 வாவெஹ்யஃ 2 ஸுவெஉஹ்யஃ 4 வாவகூ₃தஃஃ
7 ஸுவ₃ம் 9 ஜ்ஞாநப்லவெந 10 ஸுவ 8 வ்ருஜி₃நம் 11 ஸந்தரிஷ்யஸி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஒருகால் நீ சர்வ பாவஞ்செய்யும் புருஷர்களினும் அத்தியந்தம் பாவஞ்செய்பவனுயினும், நீ சர்வ பாவரூப சமுத்திரத்தையும் ஞானரூப ஓடத்தானே கடப்பாய். (36)

*(வி-ம்.) ஈண்டு 'ஸுவி தெஅ' என்னுமிரண்டுபதங்களும் அசம்பாவித அர்த்தஉடன்பாட்டின் போதகமாம்; அதாவது சர்வபாவிகளினும் அத்தியந்தம் பாவித்தன்மை அர்ச்சுனனிடத்தே இன்றுயினும், ஞானபலத்தைக் கூறியருளும்பொருட்டு அவன்பால் அத்தியந்த பாவித்தன்மையை அங்கீகரித்தருளி ஸ்ரீபகவான் கூறியருளுகின்றார்:—ஹே அர்ச்சுன! ஒருகால் நீ சர்வபாவிகளினும் அத்தியந்தம் பாவியேயாயினும், சர்வ பாவரூபசமுத்திரத்தை இந்த ஞானரூப ஓடத்தானே தாண்டுவாயன்றி வேறுபாயத்தானே முடியாது. 'ஜ்ஞாநாக்நிர்தா₃ஹ₃தவிக்' ஆன்மவித்தானவன் சர்வ சம்சாரரூப சோகத்தைக்கடக்கின்றான். ஈண்டு 'வ்ருஜி₃நம்' என்னும் சப்தத்தால் சம்சாரரூப பலப்பிராப்தியை யடைவிக்கும் சர்வதருமாதருமரூப கருமங்களைக்கவர்க; ஏனெனின், மோக்ஷ இச்சையையுடையவனுக்குப் பாவகருமத்தைப்போலப் புண்ணியகருமமும் அநிஷ்டமேயாகும். (36)

(அ-கை.) ஹே பகவன்! அதிகாரியானவன் ஆன்மஞானரூப ஓடத்தால் புண்ணிய பாவரூபசமுத்திரத்தைத் தாண்டுவன் என முன்னர்த் தாங்கள்கூறியருளினீர்கள். ஆண்டு ஓடத்தால் கடலைக்கடக்கினும், கடலழியாததேபோல ஆன்மஞானரூப ஓடத்தால் இவ்வறம்பாவவடிவக் கடலைக்கடக்கினும் அதன் நாசமாகமாட்டாது என அருச்சுனனது சங்கையுண்டாக, ஸ்ரீ பகவான் ஆன்மஞானத்தால் அக்கருமநாசத்தே வேறு திருஷ்டாந்தத்தைக் கூறியருளுகின்றார்:—

சு-ம். யதை₂யாம்ஸி ஸமித்₃தோ₄ঽக்₃நிர்ப₄ஸ்மஸாத்குருதே(ঽர்ஜு)ঽர்ஜுந ।
ஜ்ஞாநாக்₃நிஃ ஸர்வகர்மாணி ப₄ஸ்மஸாத்குருதே(ঽர்ஜு)ঽதா₂ ॥ (37)

ப-ம். 2 யயா 5 ஹயாம்ஹி 3 ஹஶிஷ்ஃ 4 கூஹ்மிஃ 6 ஹஹ்ஹஹாக் 7 கூஷ்ஷ்தெ 1 கஜ்ஞ்ஜ்ஞ
9 ஜ்ஞாஹாஹ்மிஃ 10 ஹவ்ஃகஃஃஸாணி 11 ஹஹ்ஹஹாக் 12 கூஷ்ஷ்தெ 8 தயா.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஓங்கியெரியாநின்ற அக்கினி இந்தனங்களைச்சாம் பராக்குவதேபோல ஞானரூப அக்கினி சர்வகருமங்களையும் சாம்பராக்கும் (37)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! மூற்றினும் ஓங்கியெரியாநின்ற அக்கினி அளவிறந்த இந்தனங்களையும் சாம்பராக்கிவிடுவதேபோல யான் பிரஹ்மரூபன் என்னும் ஆன்மஞானரூப அக்கினியும் பிராரப்தகருமத்தினும் வேறுய சர்வ புண்ய பாவகருமங்களையும் சாம்பராக்கிவிடும்; அதாவது ஞாணக்கினியானது கருமங்களின் காரணபூத அஞ்ஞானத்தையழித்துக் கருமத்தையுமழிக்கும் 'ஹிஃயதெ ஹஃயமஃஃஸி ஸ்ரிஃயஃஜெ ஹவ்ஃஹஃஃபயாஃ। கூஃயஜெ ஆஹஃயகஃஃஸாணி தஹ்ஹிஷ்ஷெ வஹாவஹி॥" (போ-ள்.) பிரஹ்மாதிதவதைகளினும் முற்றும் மேன்மையுற்ற பரமான்மாவின் சாக்ஷாத்காரத்தை யடைந்தவனுக்கு ஆத்மாநாத்மாக்களின் அத்திபாசரூப ஹ்ருதயக்கிரந்திநாசமுறும், ஆன்மா தேகாதிகளினும் வேறு, தேகாதிரூபமா? தேகாதிகளினும் வேறுபினும் ஆன்மாப்பிரஹ்மரூபமா, பிரஹ்மத்தினும்வேறு? இவைமுதலாக எத்துணைச்சம்சயங்களுளவோ அவையாவும் நாசத்தைப்படையும்; இத்தேகத்தைக்கொடுத்த பிராரப்தத்தை விடித்து, மற்றைய எல்லாக்கருமங்களும் நாசத்தையடையும். இவ்வார்த்தைபை ஸ்ரீவியாசபகவானும் பிரஹ்மசூத்ரத்தின்கண்ணை திருவாய்மலர்ந்தருளிபுள்ளார். 'தஃயிமஃ உதஃர வமவஃரவயொஃஜ்ஜஷ விநாஃஸ தஃயவதெஃஸாஃ' யான் பிரஹ்மரூபன் என ஆன்ம சாக்ஷாத்காரமுற்ற அறிஞனது பூர்வ சஞ்சிதகருமமெமா நாசமாகும். நீரின் கண்ணுற்ற பதுமபத்திரத்தில நீரின்பரிசம் உறுதலில்லைபோல ஆன்மஞானைந்தரம் செய்யப்பட்டகருமம் அறிஞனைத் தீண்டலெவமாட்டாது என்னும் இவ்வார்த்தை அலெக சுருதிஸ்மிருதிகளில் கூறப்பெற்றிருக்கின்றது. ஆன்மசாக்ஷாத்காரத்தையடையும் சரீரத்தை ஆரம்பிக்கும் அறிஞன் கருமமெமா சரீரநாசகாலத்தில நாசமாம். 'தஹ்யதாவதெவசிஃரம் யாவந்நவிமொக்ஷ்யஃயெ ஸம்வதஃஸ்யெ' அறிஞனுக்கு விலதகமோக்ஷ அடைவின்கண்ணில அத்துணைல்ல தடையாம்; எத்துணைப்பிராரப்தலபாகவாயிலாய் இச்சரீரதீக்கம் உண்டாகாதோ, இது நீங்கியபின்னலா அறிஞன் விலதகமுத்திபையடைவன். இவ்வார்த்தை ஸ்ரீவியாசபகவானும் கூறியருளியுள்ளார். 'ஹொமெநகூஷ்ஷ்தஜெக்ஷ்ஷ வயிக்வாஸம்வஃயஃதெ' சஞ்சித ஆகாமியங்களின் வேறுப பிராரப்தகருமத்தைப் போகத்தாலழித்து அறிஞன் விலதகமோக்ஷத்தையடைவன். வசிஷ்டாதியதிகாரிகட்கோ ஞானமுண்டானபின்னரும் வேறுலதக வடைவு நூற்கட் காணவருகின்றதாதலின், 'யாவஃயிகாஸஃவஹ்ஸ்தி ஸயிகாஸகாணாம்' என்னும் சூத்ர விபாக்கிபானத்தின்கண்ணில ஸ்ரீ பகவான் பாஷ்யக்காரர் இவ்வகை விபவஸ்தைபைக் கூறிபருளியுள்ளார். ஸ்ரீ வசிஷ்டாதிகள் ஆன்மஞான மடைவுற்ற சரீரத்தைபாரம்பிக்கும் பிராரப்தகருமலெம அவர்கட்கு வேறு சரீரத்தையுமாரம்பிக்கும். கருத்திதுவாம்:—அலெக சரீரத்தை ஆரம்பிக்கும் பலமுடைப் பிராரப்தம் அதிகாரமாம். அது வசிஷ்டாதி யுபாசகர்க்லெகயாகும்; ஏனையர்க்கின்றும், அஃதிருக்கும்வரையுலெம அவர்தம் திதியாம். ஆதலினிது துணிவாம்:— தனது பலாரம்பத்தைச் செய்யாத கருமலெம ஆன்மஞாணக்கினியால் நாசமாம், செய்வதோ போகசமாப்தி பரியந்தமிருக்கும். அப் பிராரப்தலபோகம் அறிஞராய நம்மனோரிடத்தோ ஓரோ தேகத்தாலாம். வசிஷ்டாதிகளிடத்தோ அநேகந்தேகத்தாலாம். (37)

(அ-கை.) இவ்வான்ம ஞானத்திற்கு இத்தகைய மகா மகிமையிருத்தலின் இதற்குச் சமானமாய் வேறெப்பொருளுமின்றும் என்னும் பொருளை இப்போது ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்:—

சு-ம். நு ஹி ஜ்ஞாநெந ஸத்ருசம் வவித்ரமிஹ வித்யதெ ।
தத்ஸ்வயம் யொகஸம்ஸித்ஃ காலெநாத்மநி விந்ததி ॥ (38)

ப-ம். 6 நு 1 ஹி 3 ஜ்ஞாநெந 4 ஸத்ருசம் 5 வவித்ரம் 2 இஹ 7 வித்யதெ 8 தத்ஸ்வ
11 யம் 10 யொகஸம்ஸித்ஃ 9 காலெந 12 ஆத்மநி 13விந்ததி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எதனால் இவ்வேதத்தின்கண்ணும் லோகத்தின் கண்ணும் ஞானத்திற்குச் சமானமான பவித்திரம் இன்றேமா, அந்த ஞானத்தை நெடுநாட் பின் கருமயோகத்தாற் சுத்த சித்தத்தையுடையவன் தானே அந்தக் காரணத்தேயடைவன். (38)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! வேதத்தும் உலகவியவகாரத்தும் இவ்வான்ம ஞானத்திற்குச் சமானமாய் வேறொரு பொருள் தூய்மை செய்வதின்றும்; மற்றே, இவ்வொரு ஆன்மஞானமே தூய்மை செய்வதாம். ஏனெனின், இதனினும் வேறுயுள்ள கரும உபாசனாதியுபாயங்கள்யாவும் அஞ்ஞானத்தை நீக்காவாதலின், அவை அஞ்ஞான மூலத்தோடுகூடிய பாவநீக்கத்தைச்செய்யா; மற்றே, ஒரு சிறிது பாவநீக்கத்தைச்செய்யும்பிராயச்சித்தம் ஒரு சிறிது பாவத்தை நீக்குவதுபோலும். சர்வபாவங்களின் மூலகாரணரூப அஞ்ஞானமிருக்கும்வரை பிராயச்சித்தாதியுபாயங்களால் ஒரு பாவமழியினும் மற்றொருபாவம் அவசியம் எழும். ஆன்மஞானத்தாலே அஞ்ஞானமொழியவே மூலத்தோடு சர்வபாவநிவிருத்தியாமாதலின், அதற்குச் சமானமாய்த் தூய்மை செய்வது வேறொன்றும் இல்லையாம்.

சங்கை:—ஹே பகவன்! அவ்வான்மஞானம் யாவருக்கும் விரைவாகவே ஏன் உண்டாவதில்லை?

சமாதானம்:—ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார் 'தத்ஸ்வயம்யொகஸம்ஸித்ஃ' என. ஹே அர்ச்சுன! எவ்வதிகாரியானவன் நெடுநாள்வரை முன்மொழிந்த கருமயோகத்தால் அந்தக்காரணத் தூய்மைவாயிலாய் ஆன்மஞான யோக்யதையையடைவனே, அவனே தன்னந்தக்காரணத்தே தானே ஆன்மஞானத்தையடைவன்; அதனையடையாலே ஆன்மஞானத்தையுமடையான். அன்னியன் கொடுத்தவுணர்வைத்தன்பாலிருப்பதாயும் அடையான்; அன்னியன்பாலிருக்கும் ஞானத்தைத் தன்னதாகவுமடையான்; மற்றே, தூயமனத்தன் தானே தன்மனத்தே அவ்வான்ம ஞானத்தையடைவன். (38)

(அ-கை.) ஆண்டு, எவ்வுபாயத்தால் நியமமாய் ஆன்மஞான அடைவாமோ, அது முன்மொழிந்த நமஸ்காரசேவை முதலிய உபாயங்களை யபேக்ஷித்து அத்தியந்தம் சமீபமாம். அதனை இப்போது ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்:—

சு-ம். ஸ்ரத்தாவாந்ல்லபதெ ஜ்ஞாநம் தத்பரஃ ஸம்யதெந்த்ரியஃ ।
ஜ்ஞாநம் ல்ப்த்வா பராம் ஶாந்திமசிரெணாதிகச்சதி ॥ (39)

ப-ம். 1 ஸ்ரத்தாவாந்ல்லபதெ 5 ல்ப்தஹே 4 ஜ்ஞாநம் 2 தத்பரஃ 3 ஸம்யதெந்த்ரியஃ 6 ஜ்ஞாநம்
7 ல்ப்த்வா 9 பராம் 10 ஶாந்திம் 8 அசிரெண 11 அதிகச்சதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யாவன் சிரத்தையுடையவனே குரு உபாசனையின் கட்டற்பரனே ஜிதேந்திரியனே, அவனே ஆன்மஞானத்தையடைவன்; அதனையடைந்து விரைவாகவே கைவல்லிய முத்தியையடைவன்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பிரஹ்மவித்தாவாய குருவசனத்தே வேதாந்த சாஸ்திரத்தே இம்மொழி உண்மைப்பொருளையே யுரைப்பது என்னும் பிரமை

வடிவ ஆஸ்திக்ய புத்தியே சிரத்தையாம்; அச்சிரத்தையுடையவனே ஆன்மஞானத்தையடைவன்.

சங்கை :—அவ்வகையேனனும் அத்தியந்தம் ஆலசியமுடையவனுயின், அவனுக்கும் ஆன்மஞானவடைவுண்டாதல்வேண்டும் ?

சமாதானம் :—ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றூர் 'தத்தூஃ' என. ஹே அர்ச்சுன ! சிரத்தையுடையவனும், ஆன்மஞான அடைவினுபாயமாய பிரஹ்மவேத்தாவின் உபாசனே முதலியவற்றே ஆலசியமற்றவனுய் அத்தியந்தம் தற்பரனும் ஆய அவனே ஆன்மஞானத்தையடைவன். அத்தற்பரத்தன்மையின்றிக் கேவலம் சிரத்தையை யுடையவன் ஆன்மஞானத்தை யடையான்.

சங்கை :—ஹே பகவன் ! சிரத்தை யுற்றவனுகியும், பிரஹ்மவேத்தாவின் உபாசனேமுதலியவற்றே தற்பரனுகியும் சுரோத்திராதிகளைத் தத்தம் சப்தாதிவிஷயங்களினின்றும் நீக்காதவனுகிய அஜிதேந்திரியனுக்கும் ஆன்மஞான அடைவுண்டாதல்வேண்டும்.

சமாதானம் :—ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றூர் 'ஹ்யதேந்ரியஃ' என. ஹே அர்ச்சுன ! சிரத்தாவானுகியும் தற்பரனுகியும் ஜிதேந்திரியனல்லனுயின் அவனும் ஆன்மஞானத்தை யடையான் ; மற்ரூ, ஜிதேந்திரியத்தன்மையையுங்கூடவுடையவனே ஆன்மஞானத்தை யடைவன். 'தஜ்ஜிவ்ரணிவாதேந' என்னும் சுலோகத்தே நமஸ்காரம், விஞ, சேவை என மூன்றுபாயங்கள் ஆன்மஞானத்திற்குக் கூறியருளப்பெற்றன. பாகியமாய அவை இடாம்பிகமாயாவியின்பாலும் நிகழுமாதலின், அவை நியமமாய் ஆன்மஞான அடைவின்கண் ஏதுவாகாவாம். இச்சுலோகத்தே கூறியருளிய சிரத்தை, தற்பரத்தன்மை, ஜிதேந்திரியத்தன்மை என்னும் ஆந்தர உபாயம் மூன்றுமே நியமமாய் ஆன்மஞானத்தையடைவிக்கும். இவற்றுல் அதிகாரியானவன் ஆன்மஞானத்தையடைந்து காரியசகித அவித்தையின் நிவிருத்திவடிவ கைவல்யமுக்தியைத் தடையின்றியே யடைவன். கருத்திதுவாம் :—தீபமானது தன்னுதயமாத்திரத்தாலே அந்தகாரநீக்கத்தைச் செய்யும் ; அதன்கண்ணே அது எச்சகாயத்தையும் விரும்பாததேபோல இவ்வான்மஞானமும் தன்னுற்பத்திமாத்திரையாலே அஞ்ஞானநீக்கத்தைச் செய்யும், அதன்கண்ணே அது வேறெப்பிரசங்கியாஞதியுபாயத்தையும் விரும்பாதாம். (39)

(அ-கை.) ஆண்டு இம்முன்மொழிந்த பொருளின்கண்ணே நியொருகாலும் ஐயப்படவேண்டியதில்லை ; ஐயமுடையவன்மகாஅநர்த்தத்தையடைவன் என்னுமிப்பொருளை ஸ்ரீபகவானிப்போதியம்பியருளுகின்றூர்.

4-30

சு-ம். அஜ்ஞஶ்சாஶ்ரத்தாநஶ்ச ஸம்ஶயாத்மா விநஶ்யதி ।
நாயம் லோகோஸ்தி ந பரோ நஸுகம் ஸம்ஶயாத்மநஃ ॥ (40)

ப-ம். 1 அஜ்ஞஃ 2 அ 3 அஶ்ரத்தாநஃ 4 அ 5 ஸம்ஶயாத்மா 6 விநஶ்யதி 10 ந 8 அயம் 9 லோகஃ 11 அஸ்தி 13 ந 12 பரஃ 15 ந 14 ஸுகம் 7 ஸம்ஶயாத்மநஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன ! அஞ்ஞானியும் சிரத்தையற்றவனும் ஐயமுற்றவனும் விநாசத்தையே யடைவன். அவ்வையமுற்றவனுக்கு இம்மனுஷ்யலோகமும் சுவர்க்காதிரூப பரலோகமும் சித்தியாவாம் ; போஜனாதியாலுண்டாம் சுகமும் உண்டாகாதாம். (40)

(வி-ம்.) ஹே அர்ச்சுன ! வேதாந்தசாஸ்திர அத்தியயனமின்மையின் ஆன்மஞானசூன்யன் அஞ்ஞனவன். பிரஹ்மவேத்தாவாய ஆசிரியர்கூறியபொருளி

லும் வேதாந்தசாஸ்திரங்கூறிய பொருளிலும் இப்பொருள் இவ்வகையின்றும் என்னும் விபரீதரூப நாஸ்திக்யபுத்தி அசிரத்தையாம். அதனேடுகூடியவன் அசிரத்தானனுவன். இலௌகிக வைதிக சர்வ அர்த்தங்களிலும் இப்பொருள் இவ்வகையா, அல்லது வேறுவகையா? என்னும் ஐயத்தோடு கூடியவன் சம்சயாத்மாவாம்; இம்மூவரும் நாசத்தையேயடைவர். அதாவது தமதர்த்தத்தினின்றும் பிரஷ்டராவர்; ஈண்டு, அச்சம்சயாத்மா உறும் வகையநர்த்தத்தை அஞ்ஞனும் அசிரத்தானனுமடையார்; மற்றோர், குறைவாயடைவர். இவ்வாறு சம்சயாத்மாவினும் அவ்விருவரிடத்தே குறைவை யுணர்த்தும்பொருட்டு அவ்விருவாசக பதங்களின் ஈற்றில் 'அ' காரம் கூறியருளப்பெற்றது.

சங்கை :—ஹே பகவன்! ஐயமுற்றவன் அஞ்ஞபுருஷனினும் சிரத்தையற்றவனினும் அதிக அநர்த்தத்தையடைவன் என எவ்வாறறிதல்கூடும்?

சமாதானம்:—ஸ்ரீபகவான் கூறியருளுகின்றார் 'நாயம்லோகோ' என. ஹே அர்ச்சுன! எப்போதும் ஐயத்தோடுகூடியவன் தனது மித்திரனிடத்தும், இவன் எனதுமித்திரனு, அல்லது சத்துருவா? என ஐயமேயுறுவன். மேலுமவன்தனுதிகளை ஒருங்குசேர்ப்பதிலும் முயலான். ஆகையால், அவனுக்கிம்மனுஷ்யலோகமும் சித்தமாகாதாம். அவனுக்கு வேதத்தின்கண்ணும் எப்போதும் ஐயமுண்டாமாதலின் அவனுல் தருமஞானசம்பாதனமும் முடியாததாம். முடியாததாகவே அவனுக்குச் சுவர்க்கமோகூடதிரூபபரலோகமும் சித்தியாதாம். அவனுக்குப் போஜனதியின்கண்ணும் இவற்றைக்கொள்ளலாமா, அல்லது தள்ளலாமா? என்னும் ஐயம் எப்போதுமிருக்குமாதலின், விஷயசுகமும் உண்டாகாதாம். கருத்திதுவாம்:—அஞ்ஞனுக்கும் சிரத்தையற்றவனுக்கும் பரலோகப்பிராப்தியுண்டாகாதெனினும் இவ்வுலகமும் உணவுமுதலிபவற்றுலுண்டாம் விஷயசுகமும் உண்டாம். இக்காரணத்தாலே நூலுணர்ந்தோர் அஞ்ஞனச்சுசாத்திபமினனவும், சிரத்தையற்றவனைப் பிரயத்தனசாத்தியமினனவும், ஐயுற்றுன அசாத்திபமினனவும் கூறுவர். ஈண்டு, யாவனுக்குச் சுகமாகவே சன்மார்க்கத்தில பிரவிருத்திகூடுமோ அவன் சுசாத்தியமினனப்படுவன். யாவனுக்கு மிதுமுயல்வால் சன்மார்க்கத்தில பிரவிருத்திகூடுமோ அவன் பிரயத்தன சாத்தியமினனப்படுவன். எவ்வாற்றுனும் யாவனுக்குச் சன்மார்க்கத்தில பிரவிருத்தி கூடாதோ அவன் அசாத்தியன் எனப்படுவன். ஆதலின் ஐயப்பாடுடையோன் யாவரினும் அத்தியந்தம் பாபிஷ்டனுவன்.()

(அ-கை.) ஆண்டுச் சர்வானர்த்த மூலபூத சம்சயநீக்கப்பொருட்டு ஆன்ம நிச்சயரூப உபாயத்தைக் கூறியருளுபவராய் ஸ்ரீபகவான் இரண்டத்தியாயங்களால் கூறியருளிய பூர்வ உத்தரபூமிகளின் பேதத்தாலாய கருமஞானமய இருவகைப் பிரஹ்மநிஷ்டையை இப்போது உபசம்ஹரித்தருளுகின்றார் :—

சு-ம். யொமஹம்ந்யஹ்ருதோணம் ஜ்ஞானஹம்ஸமிந்ஹம்ஸயஷ்டி ।
ஸ்ரூத்வஹ்ரம் ந ஸ்ருஷ்ணி நிபத்யஸ்தி யநஸ்ஜய ॥ (41)

ப-ம். 2 யொமஹம்ந்யஹ்ருஷ்ணம், 3 ஜ்ஞானஹம்ஸமிந்ஹம்ஸயம் 4 ஸ்ரூத்வஹ்ரம் 6 ந 5 ஸ்ருஷ்ணி 7 நிபத்யஸ்தி 1 யநஸ்ஜய.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சமத்வபுத்திரூபயோகத்தாற் பகவதர்ப்பணஞ் செய்த கருமியும் ஆன்மஞானத்தால் சேதித்த சம்சயனும் ஆய பிரமாதமற்றவனைக் கருமம் கட்டுப்படுத்தமாட்டாது.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பகவதாராதனரூப சமத்வபுத்தியோகமாம்; அதனுல் ஸ்ரீபகவானிடத்தே கருமத்தைச் சமர்ப்பித்தவனும். அல்லது பரமார்த்த

வஸ்துவின்றரிசனம் யோகமாம்; அதனல் சருவகருமத்தையும் தியாகித்தவனும் ஆயவன் யோகசந்யஸ்த கருமியெனப்படுவன்.

சங்கை:—ஹே பகவன்! அவ்வையமிருப்ப யோகசந்யஸ்த கர்மத்தன்மை தானெங்ஙனம் சம்பவிக்கும்?

சமாதானம்:—ஸ்ரீபகவான் கூறியருளுகின்றார் 'ஜ்ஞாநஸ்ஸமிந்நஸ்ஸம்ஸயஃ' என. ஹே அர்ச்சுன! ஆன்மாவின் நிச்சபரூபஞானத்தால் சம்சயத்தை யறுத்தவன்.

சங்கை:—ஹே பகவன் விஷயங்களின் பரவசத்தன்மைரூபப் பிரமாதமிருப்ப ஞாலேற்பத்தியே சம்பவியாதாம்.

சமாதானம்:—ஸ்ரீபகவான் கூறியருளுகின்றார் 'சூத்ரவத்' என. ஹே அர்ச்சுன! யாவன் பரவசத்தன்மைரூபப்பிரமாதமற்றவனவேனு, அதாவது, யாவன் எப்போதும் சாவதானனேனு, இவ்வாறு யாவன் அப்பிரமாதியாதலின் ஞானவானவனேனு, ஞானசஞ்சின்னசம்சயனுதலின் யோகசந்யஸ்தகருமியாவனேனு, அவ்வறிஞனே லோகசங்கிரகப்பொருட்டு அவனுற்றியகருமமேனும், வியர்த்தசேஷ்டையாகிய கருமமேனும் கட்டுப்படுத்தமாட்டா; அதாவது அவை தேவதாதிரூப இஷ்டசரீரங்களையும் பசு முதலிய அநிஷ்டசரீரங்களையும், மனுடாதி மிசிரசரீரங்களையும் ஆரம்பியா. (41)

(அ-கை.) ஆன்மஞானத்தால் ஐயத்தையறுத்த அறிஞனே லௌகிக வைதிக கருமங்கள் கட்டுப்படுத்தாவாதலின், நீயும் அதனல் சம்சயத்தையறுத்து சுவதருமத்தின்கண்ணே தற்பரனுகுதியென்னும் பொருளேயிப்போது ஸ்ரீபகவான் கூறியருளுகின்றார்:—

சு-ம். தஹ்ஸாத்ஜ்ஞாநஸம்ஹ்ருதம் ஹ்ருத்ஸ்தம் ஜ்ஞாநாஸிநாத்மநஃ।
அபிதைஷ்டிஷ்ட பாரத யுத்யஸ்வ விகதஜ்வரஃ॥ (42)

ப-ம். 2 தத்ஸாத் 3 ஸுஜ்ஞாநஸம்ஹ்ருதம் 4 ஹ்ருத்ஸ்தம் 8 ஜ்ஞாநாஸிநா 7 சேத்மநஃ 9 அபி
ஷ்டா 5 ஷ்டிதம் 6 ஸம்சயம் 10 யுத்யஸ்வ 11 விகதஜ்வரஃ 12 உத்திஷ்ட 1 பாரத.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அதனல் அஞ்ஞானத்தினின்று முண்டாய்ப் புத்தியின்கண்ணேயிருக்கும் இவ்வையத்தை ஆன்மஞானரூபகட்கத்தால் வெட்டி நீ நிட்காம கருமத்தைச்செய்தி. இக்காரணத்தானே நீ யிப்போது போர்புரியும் பொருட்டு எழுந்து நில்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அவிவேகரூப அஞ்ஞானத்தினின்றுமுண்டாய்ப் புத்திரூப இருதயத்தின்கண்ணே யிருக்கும் சர்வ அநர்த்தமூலபூதசம்சயத்தை ஆன்மவிஷயக நிச்சயவடிவ கட்கத்தால்வெட்டி நீ நற்காட்சியுபாயபூத நிட்காம கருமயோகத்தைச்செய்தி. இக்காரணத்தானே நீ இக்கால் போர்புரியும்பொருட்டு எழுந்துநிற்றி. ஈண்டு, 'ஸுஜ்ஞாநஸம்ஹ்ருதம்' என்னும் பதத்தால் ஸ்ரீபகவானவர் அச்சம்சய காரணத்தைக் கூறியருளினர். மேலும் 'ஹ்ருத்ஸ்தம்' என்னும் பதத்தால் அச்சம்சய ஆசிரயத்தைக்கூறியருளினர். அக்கூற்றால் இப்பொருளுணர்த்தியருளியதாயது:—உலகத்தே சத்துருவின் காரணத்தையும் ஆசிரயத்தையும் தெரிந்துகொள்ளின் அச்சத்துருவைச் சுகமாகவே கொல்லலாம். அதுபோல இச்சம்சயரூப சத்துருவின் காரணத்தையும் ஆசிரயத்தையும் தெரிந்துகொண்டபின் இதுவும் காரணிகளின் நீக்கவாயிலாய்ச் சுகமாகவே கொல்லப்பெறும்.

'ஹெ ஹாஷத' என்னும் சம்போதனத்தால் ஸ்ரீ பகவானுனவர் இப்பொருளைக் குறிப்பித்தருளினர் :—பாதவம்சத்தின்கண்ணே உண்டாய உன்னுடைய இப் போர்முயற்சி நிட்பலமாகாதாம் ; மற்றே, அந்தக்காண சுத்திவாயிலாய் ஞான வேதுவாதலின்சபலமாம். இந்நான்காவது அத்தியாயத்தின் சர்வ அர்த்தத் தையும் சுருக்கிக்கூறும் சுலோகமிதுவாம்:—'வஸ்யாநீயகுவாயெந ஹகிஸ்ர ஜெஉஜீகூஜதெ। ஃஜெஹதஃ கஉஃநிஷாஅஹமிணெஹொ வஸஂஹரதா॥ (போ-ள்.) இந்நான்காவது அத்தியாயத்தே ஸ்ரீ பகவானுனவர் தமது அநீசுவரத் தன்மையை நீக்கியருளித் தம்பால் அர்ச்சுனனது பக்திசிரத்தைகளைத் திடஞ்செய் தருளினர் ; அன்றியும் ஆன்மஞான காரணரூப கருமநிஷ்டையை உபசம்ஹரித் தருளினர். (42)

ஸ்ரீ பரமஹம்ஸ பரிவிராஜகாசார்ய ஸ்ரீமத் உத்தவாநந்தகிரி சுவாமிகளது பூஜ்யபாத சிஷ்யராகிய ஸ்ரீ சித்தனைந்தகிரி சுவாமிகளால் இயற்றியருளிய பிரா கிருத கூடார்த்ததீபிகை எனப் பெயரிய வியாக்கியானத்தின்

நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

ஐந்தாவது அத்தியாயம்.

ஓம் ஸ்ரீ கணேசாயநமஃ ஸ்ரீ குருப்யோநமஃ ஸ்ரீ காசிவிஸ்வேஸ்வராப்யாம்நமஃ
ஸ்ரீ சங்கராசார்யேப்யோநமஃ.

(அ-கை.) ஆண்டு முன்னர் மூன்றுவது நான்காவது அத்தியாயங்களால் கருமஞான நிஷ்டைபணஞ்செய்யப்பட்டது ; இப்போது ஐந்தாவது ஆறுவது அத்தி யாயங்களால் கருமம், கருமத்தியாகவடிவ சந்நியாசம் என்னும் இவ்விரண்டின் நிஷ்ட பணஞ் செய்யப்படுகின்றது. ஆண்டு, முன்னர் மூன்றுவது அத்தியாயத்தில் 'ஜ்யாயஸீ செத்கஉஃணஹெ' என்பது முதலிய வாக்கியங்களால் அர்ச்சுனனுல் வினவப்பட்ட ஸ்ரீ பகவான் ஞானகரும விகற்ப சமுச்சயங்கட்கசம்பவங்கூறி யருளி அதிகாரிகளின் பகுப்பால் "இவ்வுலகத்தில்இருவகைநிஷ்டை முன்னம் மாற் கூறப்பட்டது" என்பது முதலிய வாக்கியங்களால் நிச்சயித்தருளினர்; ஆத லின், இப்பொருள் பெறப்பட்டதாம். அஞ்ஞானியைஅதிகாரியாயுடைய கருமம் ஆன்மஞானத்தோடு சமுச்சயத்தையடையாது. ஒளிவடிவ அக்கினிக்கும் அந்த காரவடிவ திமிரத்திற்கும் பரஸ்பரம் சமுச்சயஞ் சம்பவியாததேபோல ஞானகரு மங்கட்கும் பரஸ்பரஞ் சமுச்சயஞ் சம்பவியாது. என்னே ? கருமத்தின் காரணவடிவ பேதபுத்தியை நாசம் பண்ணுவது ஆன்மஞானமாதலின், ஆன்மஞானம் கருமத் திற்கு விரோதியாம். விரோதமுடையவை ஓர் தேசத்திலேனும் ஓர் காலத்திலே னும் கூடி நிற்றல் ஒரு காலத்துஞ் சம்பவியாது ; அக்கருமம் ஞானத்தோடு விகற் பத்தையும் அடையாது என்னே? எவ்விருபதார்த்தங்கள் ஒரே காரியத்தைப் பெறு வித்தற்பொருட்டாகின்றனவோ அவ்விரண்டிற்கே பரஸ்பரம் விகற்பமாம். ஈண்டு ஞானமும் கருமமும் ஒரே காரியத்தைப் பெறுவிப்பனவன்று. என்னே, ஆன்ம

ஞானத்தின் காரியம் அஞ்ஞான நிவிருத்தியாம் அது கருமத்தாலாகாது; மற்றீரு, கேவல ஞானத்தானேயாம். 'தமெவவிதிக்வாதிமிருத்யுமெதி நாந்ய: பன்தா விமுக்தயே' அவ்வான்மதேவனை யுணர்ந்து இவ்வதிகாரி காரியத்தோடு அஞ்ஞானத்தைக்கெடுக்கின்றான். அஞ்ஞான நிவிர்த்திவடிவ மோக்ஷப்பிராப்தியின்பொருட்டு ஆன்மஞான மொழித்து வேறுமார்க்கமின்றும்; மற்றீரு, ஆன்மஞானமொன்றே அம்மோக்ஷப் பிராப்திமார்க்கமாம். அன்றியும், அவ்வான்மஞானந்தோன்றியதன் பின்னர். அக்கருமத்தின்காரியம் சிறிதளவும் அவாவப்பெறமாட்டாது. இப்பொருள் 'யாவாநயமு உதபானே' என்னுமிச்சுலோகத்தில் முன் கூறியருளப்பட்டுளது. இவ்வாறு ஞானமுடைய புருஷரிடத்துக் கருமத்தின் அநதிகாரம் நிச்சயமாகவே பிராரப்த கருமவசத்தால் வியர்த்த சேஷ்டையால் அக்கருமானுஷ்டானமாகுக; அல்லது, சர்வ கருமத்தின் சந்நியாசஞ்செய்குக. என்னும் இவ்வார்த்தை வாதமின்றியதென நான்காவது அத்தியாயத்தில் நிச்சயம்பண்ணப்பட்டது. ஆன்மஞானப் பேறின்றிய அஞ்ஞானியிலை அந்தக்கரண சுத்திவாயிலாக அவ்வான்மஞானம் உண்டாம்பொருட்டு, அக்கருமம் அவசியஞ் செய்யத்தக்கது. 'தமெதம் வெதானுவசனேன ப்ராஹ்மணா விவிதிஷன்தி யஜ்ஞேன தானேன தபஸாகேன' என்னும் இச்சுருதியால் வேதாத்தியயனம், யஜ்ஞம், தானம், தவம், என்பன முதலிய சர்வ கருமங்கட்கும். அந்தக்கரண சுத்திவாயிலாய் ஆன்ம ஞானத்தில் உபயோகம் என்பது கூறப்படுகின்றது. அன்றியும், 'ஸர்வகர்மாகிலம் பார்த² ஜ்ஞானே பரிஸமாப்யதே' என்னும் இவ்வாக்கியத்தில் ஸ்ரீ பகவான் தாமே சர்வ கருமங்கட்கும் ஆன்மஞானத்தில் உபயோகம் என்பதையருளிச் செய்தனர். சுருதியால் ஆன்மஞானப் பிராப்தியின்பொருட்டு சர்வ கருமானுஷ்டானங் கூறப்பட்டதேபோல சர்வ கருமத்தியாகவடிவ சந்நியாசமுங் கூறப்பட்டுளது. ஆண்டுச்சுருதி, 'ஏதமெவ ப்ரவ்ராஜினோ லோகமிச்ச²ன்த: ப்ரவ்ரஜன்தி' ப்ராஜாபத்யா உவா அதஸ்ரிதிக்ஷ²: ஸ்ரேஷ்டா²ஸ்மிந்தோ ஹ்யேவைதாத³ருʼவாதா³நம்வ ஸ்ருʼஜ²' (பொ-ள.) சந்நியாசிகளடையத்தகுந்த ஆன்மவடிவ வுலகமடைதற்கிச்சித்து இவ்வதிகாரிகள் சருவகருமத்தியாகவடிவ சந்நியாசத்தைச் செய்கின்றனர். இவ்வதிகாரி சமம், தமம், உபரதி, திதிக்கை, சிரத்தை, சமாதானம் இவ்வாறையு மடைந்தவனெத் தனது அந்தக்காணதேசத்தில் பிரத்தியக்கான்மாவைப் பார்க்கின்றனன். ஈண்டு, உபரதிசத்தத்தால் சந்நியாசமே கொள்ளப்படுகின்றது என்பது முதலிய சுருதிகளால் சருவகரும சந்நியாசமே ஆன்மஞானத்திற்குக் காரணமெனக் கூறப்படுகின்றது. ஆண்டு, ஞானகருமங்கட்குச் சமுச்சயமமையாதேபோல, கருமம் அதன்றியாகம் என்பவற்றிற்கும் சமுச்சயங் கூடாதாம். என்னை, ஓரேகாலத்தில் கூடிநிற்பனவாய பதார்த்தங்கட்கே பரஸ்பரம் சமுச்சயமாமன்றி வேறு தேசகாலத்திருப்பவற்றிற்குப் பரஸ்பரஞ் சமுச்சயமாகாதாம். கருமம் அதன்றியாகம் என்னுமிரண்டிற்கும் இருளொளிபோலத் தம்முள் மாறுபாடுளதாதலின், ஓரேகாலத்திற் கூடியிருத்தல் பொருந்தாது. இதனினை இவ்விரண்டிற்குஞ் சமுச்சயம் பொருந்தாதாம்.

சங்கை :—இவ்விரண்டிற்கும் ஆன்மஞானமே பலமாதலின், ஓர் பயனுடைமை யுண்மையின் விகற்பங்கூடாதென்பது யாங்ஙனமாம்?

சமாதானம் :—ஆன்மஞானேற்பத்தியாக்கலிற் கரும அதன் றியாகத்துவாரம் வேறுவேறுதலின், இவ்விரண்டின் விகற்பமும் பொருந்தவில்லை. யாண்டு, இரண்டு பதார்த்தத்திற்கு ஒரு காரியத்தைத் தோற்றுவிப்பதில் ஓரவாயிலாமோ, ஆண்டே அவ்விருபதார்த்தத்திற்கும் விகற்பமாம். ஆன்ம ஞானேற்பத்தியில் பிரதிபந்தகமாவது பாபகருமமாம், அதனிவிருத்தி நித்திய நைமித்திக கருமத்தாலேயாமாதலின், அவ்விரண்டற்கும் பாபநிவிர்த்திவடிவ அதிருஷ்டமே துவார

மாம். இலௌகிக வைதிக கருமத்தால் அத்தியந்த விக்ஷிப்த சித்தத்தினர்க்கும் ஆன்மஞானப்பிராப்தியாவதின்மும். அவ்விக்ஷேப நிவிருத்தி சந்நியாசத்தாலேயா கின்றதாதலின், அதற்கோ விட்சேபநிவிருத்தியால் ஆன்மவிசாரத்திற் கிட வடைவு வடிவ திருஷ்டமே துவாரமாம். ஆதலின், ஆன்மஞானப்பிராப்தியின் பொருட்டாமாயினும் கருமமும் அதன்றியாகமும் திருஷ்ட அதிருஷ்ட துவார பேதத்தால் விகற்பமடையாதாமாதலின், சமுச்சயமேனும் விகற்பமேனும் சம் பவியாது. இவ்விரண்டும் கிரமப்படியே அநுஷ்டிக்கத்தக்கன. அந்தக்கிரமபக்ஷத் திலும் சந்நியாசத்தின்பின்னர்க் கருமாநுஷ்டானஞ் செய்பத்தக்கதா? அல்லது, இதன் பின்னரது செய்பத்தக்கதா? முதலாவது சம்பவியாது? என்னை? இவ் வதிகாரி ஒருகால் சந்நியாசத்தின்பின்னர்க் கருமாநுஷ்டானஞ் செய்வாஞகில் பரித்தியாகம்பண்ணிய பூர்வாசிரமத்தின் அங்கீகாரம் மீண்டுமாம். ஆதலின், அத் தியாகியானவன் ஆஸுடபதிதனுவன் அக்கருமத்திற்கதிகாரியுமாகான். ஆதலின், சந்நியாசதாரணஞ்செய்து மீண்டும் கருமஞ்செய்வாஞகில் முன்னர்க் கிரகணம் பண்ணிய சந்நியாசமே அவனுக்குப் பயனில்லதாம். எதனல் அச்சந்நியாசம் கருமம் போல அதிருஷ்டபலனுடையதாவதின்மே; மற்மே, விக்ஷேப நிவிருத்திவடிவ திருஷ்ட பயனுடையதேயாமோ. அன்றியும், முன்னர்ப் பண்ணப்பட்ட சந்நியாசத் தானே அப்புருஷனுக்கு ஞானதிகாரப்பிராப்தி யுண்டாகின்றது. அச்சந்நியாசத் தின்பின்னர்க் கருமாநுஷ்டானஞ்செய்தலும் பயனற்றதேயாம். ஆதலின், சந்நியா சத்தின்பின்னர் இவ்வதிகாரி கர்மாநுஷ்டானம் ஒருபோதும் செய்யத்தக்கதன்று. மற்மே, முன்னர்ப் பகவதர்ப்பணபுத்தியால் நிட்காமகருமஞ்செய்யற்பாலது அத னல் அந்தக்காரணசுத்தியானதின்பின்னர் தீவிர வைராக்கியத்தால் ஆன்மஞான விச்சையுண்டாம். அவ்விச்சை சுருதியில் விவிதிஷாசத்தத்தாற் கூறப்படுகின்றது. அக்காலே வேதாந்தவாக்கிய சிரவண மனனதிவடிவ விசாரஞ்செய்தற்பொருட்டு இவ்வதிகாரி சந்நியாசஞ் செய்யத்தக்கது; இதுவே ஸ்ரீகிருஷ்ணபகவானது திருக் கருத்தாம். அங்ஙனமே சருவவேதத்திற்குமாம். ஸ்ரீபகவான் இத்திருக்கருத்தை 'நகூஉணாஉநாஸ்ஹாவெஷ்டயுஂ வாஸுஷொஸ்ஹுதெ' என்னும்வாக்கியத்தால் முன்னர்க் கூறியருளினர். அன்றியும், இக்கருத்தையே ஸ்ரீபகவான் 'சூஸுஸு வெஷாஉுநெயொுமம் கூஉுஃ காஸணஉுஅயுதெ யொமாஸுஐஷ்வர்யதவைஷ்வ ஸுஃ காஸணஉுஅயுதெ' என்னுஞ்சுலோகத்தால் பின்னர்கூறியருளுவர். ஈண்டு, யோகசப்தத்தால் தீவிர வைராக்கிய பூர்வக விவிதிஷாவின் கிரகணஞ்செய்யத்தக் கது. இது வார்த்திகக்காரராலுங் கூறப்பட்டுளது. 'வ்ரதயுவிவிதிஷாவியெய வெஷாநுவஅநாஷயஃ। ப்ரஹ்மாவாவைய்தகுதத்யாம ஸுவ்ஷ்கீஸுஸுதெவுஃ ஞாகு'' ॥ (பொ-ள்.) 'தஉதம்வெஷாநுவஅநெந' அவ்வான்மாவை வேதவசனத் தால் என்னுஞ்சுருதியால் விதானம்பண்ணப்பட்ட வேதாத்தியயனம், தானம், யக் ஞும், தவம் முதலிய கருமங்களோ பிரத்தியக்கான்மாவை யறியும் வேட்கைவடிவ விவிதிஷாப் பிராப்தியின்பொருட்டாம்; பிரத்தியக்கபின்னப் பிரஹ்மப்பிராப்தியின் பொருட்டோ, 'ஸுதஉவ வ்ரவ்ராஜிநொ ஒகுயிஷ்ஹுஃ வ்ரவ்ரஜுஜி' என்னுஞ் சுருதிகூறியசருவகருமத்தியாகமேயாம்என்க. ஆண்டு ஸ்மிருதியுமிதுவாம் 'கஷா யெகூஉுஹிஃ வஷ்ஹுததொஜ்ஞாநம் வ்ரவத்துஉுதெ' நிஷ்காம கர்மாநுஷ்டானத்தால் அந்தக்காரணஞ் சுத்தியானதின்பின்னர்ச் சருவ கருமத்தியாகத்தால் ஆன்மஞான ப்பிராப்தி யுண்டாகின்றது. ஆண்டு ஆன்மஞானப்பிராப்தியின் காரணவடிவ விவி திஷா சந்நியாசமும் கிரமம் கிரமமற்றது என்னும் வேறுபாட்டால் இருவகைத் தாம். அவற்றுள், முன்னர்ப் பிரமசரியமும், அதன்பின்னர் கிருகஸ்தாசிரமமும், அதன்பின் வானப்பிரஸ்தாசிரமமும், அதன்பின் சந்நியாசாசிரமமுங் கொள்ளத் தக்கது இது கிரமசந்நியாசமாம். சம்சாரத்தில் மிகுந்த தீவிர வைராக்கியத்தை யடைந்து பிரமச்சரிய முதலிய ஆசிரமத்தின்பின்னரே சந்நியாசத்தையடைதல்

கிரமமின்றியதாம். ஆண்டுச்சுருதி, 'ஏவஹ்யயஞ் லோவய்ய ஸஹிஹவெஜ் ஸ ஹாகூ வநீஹமிகூா வ்ரவ்ரஜெகூ யஜிவெதஸ்யா ஏவஹ்யயஞாஜெவ வ்ரவ்ரஜெஜ் ஸஹாஆவதாஆயஜ் ஹஸ்ரவவிஸ்ரஜெத்தஜ் ஹஸ்ரவவ்ரவ்ரஜெகூ' இவ்வதிகாரி பிரமச்சரியத்தை முடித்துக் கிருகஸ்தனாகுக; பின்னர் வானப்பிரஸ்தனாகிச் சந்நியாசத்தையடையத்தக்கது. ஒருகாலிவனுக்குப் பூர்வபுண்ணியகருமப் பிரபாவத்தால் முன்னரே தீவிர வைராக்கியப் பிராப்தியுண்டாகில், பிரமசரியாசிரமத்தின் பின்னரே சந்நியாசாசிரமத்தைத் தாரணஞ்செய்க; அல்லது, கிருகஸ்தாசிரமத்தின் பின்னர்ச்செய்க; அல்லது வானப்பிரஸ்தாசிரமத்தின் பின்னர்ச்செய்க; அதிற்சிறிதுங்கிரமமின்றும். மற்றே, இவ்வதிகாரி தீவிர வைராக்கியத்தையடைந்த அன்றே சந்நியாசஞ்செய்க, இதனால் இப்பொருள்பெறப்பட்டது:—ஓரே முமுக்ஷுவிற்கு வைராக்கியமின்றிய காலத்தில் நிஷ்காமகருமமும் வைராக்கிய காலத்தில் அதின் சந்நியாசமும் அவசியம் செய்யத்தக்கன. அச்சந்நியாசமே சிரவணமனனஞ் செய்தற் கவகாசந்தந்து அவன் ஞானத்திற்கு நிமித்தமாகின்றது. இவ்வாறுய இவ்விரண்டின்பேதத்தால் ஓரே முமுக்ஷுவிற்குக் கருமத்தின் கர்த்தவ்யத்தன்மையும் அதன்றியாகவடிவ சந்நியாசத்தின் கர்த்தவ்யத்தன்மையும் கூறியருளுவான் ஸ்ரீபகவான் இந்த ஐந்தாவது ஆறுவது அத்தியாயங்களை யாரம்பித்தருளினர். அன்றியும் ஆன்மஞானமடைந்ததன் பின்னர் ஜீவன்முத்திச் சுகத்தின்பொருட்டு செய்யத்தக்கது வித்வத்சந்நியாசமாம். அதுவோ, ஆன்மஞானத்தின் பலத்தால் அர்த்தத்தானே பெறப்படுகின்றது; ஆதலின், அதிற் சங்கேதகமின்மையின் அதனை விசாரிக்கவில்லை. மற்றே, விவிதிஷா சந்நியாசமே ஈண்டு விசாரிக்கப்பெற்றது. ஸ்ரீபகவானது இத்திருக்கருத்தையறியாது அருச்சுனன் இவ்வாறு சங்கேதகமடைந்தனன். ஸ்ரீபகவான் ஓரே அஞ்ஞானியாகிய முமுக்ஷுவிற்கு ஆன்மஞானமடைதற்பொருட்டுக் கருமம் அதன்றியாகம் இரண்டையுங்கூறியருளினர். அவ்விரண்டும் இருளொளிபோலத் தம்முள் விரோதியாதலின், ஓரேகாலத்தில் ஓர் அதிகாரியால் அநுஷ்டானஞ்செய்யப்படாது. ஆதலின், முமுக்ஷுவாகிய என்னுல் இப்போது அந்தக்கருமமே செய்யத்தக்கதா? அல்லது அதன்றியாக வடிவ சந்நியாசஞ்செய்யத்தக்கதா? எனச் சங்கேதகமடைந்த அர்ச்சுனன் ஸ்ரீபகவானை விளவுகின்றனன்.

ஸுஜ்ஞுந உவாச.

சு-ம். ஸம்ந்யாஸம் கரூஷ்ணாம் கரூஷ்ண வுநயெஷாமம் அ ஸம்ஹஸி।
யதெய ஹ்ரே வதயொரெகம் தந்நே ப்ரூஹி ஸுநிஷ்சிதம் ॥ (1)

ப-ம். 3 ஸம்ந்யாஸம் 2 கரூஷ்ணாம் 1 கரூஷ்ண 5 வுநஃ 6 யொமம் 4 அ 7 ஸம்ஹஸி 9 யத் 11 ஸ்ரெய்யஃ 8 வதயொஃ 10 வத்கூழ 12 தத் 13 மெ 15 ப்ரூஹி 14 ஸுநிஷ்சிதம்.

(அ-ம்.) ஹே கிருஷ்ண பகவன்! தாங்கள் கருமத்தின் சந்நியாசத்தையுங் கூறுகின்றீர்கள் மீண்டும் கருமயோகத்தையுங் கூறுகின்றீர்கள் இவ்விரண்டனுள் யாதொன்று மேன்மையதோ அதை எனக்கு நிச்சயஞ்செய்து கூறியருளுவீர்களாக. (1)

(வி-ம்.) ஹே பகவன்! ஹே சத்தியவானந்தவடிவ! ஹே பக்தஜனங்களின் துக்கங்களை நிவிருத்திசெய்பவ! 'யாவஜ்ஜீவமிஹோதரம் ஜுஹோதி। கூவ்ருத்தே வெஹகுலாருணி ஜிஜீவிஷேத்தமஸ்ஸுஃ' என்னுஞ்ஸ்ருதிகளாற்கூறப்பட்ட நித்தியநைமித்திக கருமத்தின் தியாகவடிவ சந்நியாசத்தையும் தாங்கள் முமுட்சுவைக்குறித்து, 'வனதெவ ப்ரவ்ராஜிதொயொகுரிஹஸ்ஸுஃ ப்ரவ்ரஜெத்' என்னுஞ் சுருதி

வாக்கியத்தாலும், 'நிராசீர்யதசித்தாத்மா த்யக்தஸர்வபரிக்ரஹஃ। சாரீரம் கேவலம் கர்மகுர்வன்நாப்நோதி கில்பிஷம்' எனக் கூறியருளிய கீதாவாக்கியத்தாலுங் கூறியருளுகின்றீர்கள். அங்ஙனமே கருமத்தின் தியாகவடிவ சந்நியாசத்திற்கு முற்றினும் மாறுய கருமானுஷ்டானவடிவ கருமயோகத்தையும் தாங்கள் அம்முமுக்ஷுவைக்குறித்து 'தஸ்மாத்தமேவாவிதுர்ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேனதானேனதபஸாநாசகேன' என்னுஞ் சுருதியாலும் 'அபிக்ஷுர்யம்சர்ம பரயம்யோமஸாதிஷ்டோதிஷ்ட ஹாரத' என்னும், கூறியருளிய கீதா வாக்கியத்தாலுங் கூறியருளுகின்றீர்கள். ஈண்டு, கருமத்தின் சந்நியாசத்தையும் கருமயோகத்தையும் தாங்கள் இக்கீதாவாக்கியத்தாற் கூறியருளிய இவ்வளவே சம்பவமாம், இச்சுருதிவாக்கியத்தாற் கூறியருளியது சம்பவியாதாயினும், 'வாயுரனிலமம்ருதம்' என்னும் இவ்வாக்கியத்திலுள்ள (வாயுஃ) என்னுஞ் சப்தத்தால் அர்ச்சுனன் இப்பொருளைக் குறிப்பித்தனன் :—இப்போது இக்கீதா வசனத்தால் ஒரே முமுக்ஷுவைக்குறித்துக் கருமத்தையும் அதன் தியாகத்தையும் கூறியருளியதே போலச் சிருட்டியினுதியில் வேதங்கட்குக் கர்த்தாவாகிய தாங்கள் அவ்வேதங்களிலும் இவ்வாறே கூறியருளினீர்கள். ஹே பகவன்! ஒரே முமுக்ஷுவைக்குறித்துக் கருமம் அதன் தியாகம் என்னும் இரண்டையுங் கூறியருளினீர். அவ்விரண்டையும் ஒரு காலத்தே ஓரதிகாரியால் அனுஷ்டானஞ்செய்தல் பொருந்தாது; ஒரு காலத்தில் ஒரு புருஷனிடத்து நிற்றல் நடத்தல் இரண்டுங் கூடாதன்றே; ஆதலின், கருமம் அதன் தியாகவடிவ சந்நியாசம் என்னும் இவ்விரண்டனுள் எதைத் தாங்கள் மிகுந்த மேம்பாடுடையதாய்ச் சம்மதித்தருளுகின்றீரோ, அதை எனக்கருளுவீர். தங்களது நிச்சயமாகியசம்மதத்தையான் மோட்சசாதனமெனக் கருதி அனுஷ்டிக்கின்றேன். (1)

(அ-கை.) இவ்விதமாகிய அர்ச்சுனனுடைய விஞ்ஞாபனைக் கேட்டு ஸ்ரீ பகவான் உத்தரமருளுகின்றனர்.

ஸ்ரீபகவாநுவாச.

சு-ம். லோகேஸ்மின்த்விவிதாநிஷ்டாபுராப்ரோக்தாமயாநக।
ஜ்ஞாநயோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந யோகிநாம் ॥ (2)

ப-ம். 1 லோகேஸ்மின் 3 த்விவிதாநிஷ்டா 2 அ 5 ப்ரோக்தாமயாநக 4 உஹெள 6 ஜ்ஞாநயோகேந 7 ஸாங்க்யாநாம் 8 கர்மயோகேந 9 யோகிநாம் 10 விபிஷ்யதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சந்நியாசமும், கருமயோகமும் மோட்சசாதனமாம். இவ்விரண்டனுள்ளும் கருமசந்நியாசத்தினும் கருமயோகமே சிரேஷ்டமாம்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சாஸ்திரத்தின் விதி பூர்வகமாய்ச் சர்வ கருமங்களின் தியாகவடிவம் சந்நியாசமாம்; தத்தம் வருணாசிரமாநுசார நித்திய நைமித்திக கருமத்தின் அனுஷ்டான வடிவம் கருமயோகமாம். இவ்விரண்டும் ஆன்மஞானோற்பத்திகாரணமானதால் மோக்ஷத்தையே பெறுவிப்பவாமாயினும், இவ்விரண்டில் அந்தக்காரண சுத்தமின்றிய அனதிகாரியாற் செய்யப்பட்ட கருமசந்நியாசத்தினும் கருமயோகமே மேன்மையதாம். என்னை? அசுத்தாந்தக்கரணமுடைய புருஷனாற் செய்யப்பட்ட சந்நியாசம் அவனிடத்தில் ஆன்மஞானத்தின் அதிகாரித்தன்மையையுண்டுபண்ணுவதாகாதாம். நிஷ்காம கருமயோகமோ அவனிடத்து ஆன்மஞானத்தின் அதிகாரித்தன்மையை யுண்டுபண்ணுகின்றது. ஆதலின், அக்கருமயோகம் சந்நியாசத்தினுஞ் சிரேஷ்டமாம். (2)

(அ-கை.) இப்போது அதிகாரிக்கு அதிற் பிரவிருத்தியாம் பொருட்டு மூன்று சுலோகத்தால் ஸ்ரீ பகவான் அந்நிஷ்காம கருமயோகத்தைத் துதித்தருளுகின்றனர்.

சு-ம். ஜ்யாயஃ ஸ நித்யஸம்ந்யாஸீ யொ ந த்வெஷ்டி ந காம்க்ஷதி ।
நிர்த்வம்தொஹி மஹாபாஹொ ஸுகம் பம்யாத் ப்ரமுச்யதெ ॥ (3)

ப-ம். 10 ஜ்யாயஃ 8 ஸஃ 9 நித்யஸந்யாஸீ 2 யஃ 3 ந 4 த்வெஷ்டி 5 ந 6 காம்க்ஷதி 7 நிர்த்வம்த்வஃ 11 ஹி 1 மஹாபாஹொ 12 ஸுகம் 13 பம்யாத் 14 ப்ரமுச்யதெ.

(அ-ம்.) ஹே அருச்சுன! எப்புருஷன் துவேஷிப்பதில்லையோ, சுவர்க்கமுதலிய பலத்தை இச்சிப்பதில்லையோ, இராகத்துவேஷரகிதனோ, அப்புருஷன் நித்திய சந்நியாசியென அறியத்தக்கவனுவன்; எதனுல் அவன் பந்தத்தினின்று சுகபூர்வகமாய் விடுபடுகின்றானோ. (3)

வி-ம்.) ஹே அர்ச்சுன! எவன் பகவதர்ப்பணபுத்தியால் செய்யப்பட்ட நித்திய நைமித்திககருமங்களில் இக்கரும மனித்தும் பயனற்றவைகளே என்னும் நிஷ்பலத்தன்மைச் சங்கையால் துவேஷிப்பதில்லையோ, எவ்வதிகாரி அக்கருமங்கட்குச் சுவர்க்கமுதலிய பலத்தை விரும்புவதில்லையோ, அத்தன்மையன் இராகத்துவேஷரகிதனுவன். அப்புருஷன் நித்திய நைமித்திககருமங்களிற் பிரவிருத்தனுகியும் நித்தியசந்நியாசியாவனென வறிக. நிஷ்காமகருமத்தைச் செய்யுமதிகாரி அந்தக்காரணத்தின் அசுத்திவடிவ ஞானப்பிரதிபந்தத்தினின்றும் நித்தியாநித்தியவஸ்து விவேகத்தால் ஆயாசமின்றியே விடுபடுகின்றன், அதாவது சுத்தாந்தக்காரணமுடையவனுவன் என்பதாம். (3)

(அ-கை.) ஹே பகவன்! தனது நித்திய நைமித்திக கருமங்களிற் பிரவிருத்தன் எவ்வாறு நித்திய சந்நியாசியென அறியப்படுவன். மற்றும், அக்கருமஞ் செய்பவனிடத்துச் சந்நியாசத்தன்மை சம்பவியாது. என்னை? நித்திய நைமித்திக கருமம் அதன்தியாகவடிவ சந்நியாசம் என்னும் இவ்விரண்டும் இருளொளிபோல் உருவத்தானே விரோதியாம், யாண்டுக் கருமித்தன்மையுளதோ ஆண்டுச் சந்நியாசித்தன்மையின்றும்; யாண்டுச் சந்நியாசித்தன்மையுளதோ ஆண்டுக் கருமித்தன்மையிராது. அன்றியும் தாங்கள் இரண்டிற்கும் பலமொன்றேறியாதலின் நிஷ்காமகருமஞ்செய்யும் புருஷனிடத்து அச்சந்நியாசமும் பொருந்தியதாமெனக் கூறியருளுவீரேல் அதுவும் சம்பவியாது; என்னை? வடிவத்தால் மாறுபட்டதாய சாதனங்கள் தம் பலத்தின்கண்ணும் விரோதமேயாம். அவற்றின் பல ஒருமையுண்டாகாதாம். ஆதலின் அவ்விரண்டும் மோக்ஷத்தைப் பெறுவிப்பனவாம் எனக் கூறியருளிய வசனமும் சம்பவியாது என அருச்சுனனது ஆசங்கை நிகழ ஸ்ரீ பகவானருளிச்செய்கின்றார்;—

சு-ம். ஸாம்க்²யயொகௌ ப்ருத²க்³பா³லாஃ ப்ரவத³ம்தி ந பம்டி³தாஃ ।
ஏகமப்யாஸ்தி²தஃ ஸம்யக்³உபயொர்விம்த³தெ பலம். (4)

ப-ம். 2 ஸாம்க்²யயொகௌ 3 ப்ருத²க்³பா³லாஃ 1 பாம்டி³தாஃ 4 ப்ரவத³ம்தி 6 ந 5 பம்டி³தாஃ 7 ஏகம் 8 அபி 10 ஆஸ்தி²தஃ 9 ஸம்யக்³ 11 உபயொஃ 13 விம்த³தெ 12 பலம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! விசாரமின்றிய புருஷர் சந்நியாசம், கருமயோகம் இரண்டையும் விரோதபலமுடையவையெனக் கூறுகின்றனர். விசாரமுடைய பண்டிதர் அவ்வாறு கூறிலர், அவ்விரண்டனுள் ஒன்றை யேனும் நன்று யனுஷ்டிப்பவர் மோக்ஷவடிவமாகிய அவ்விரண்டின் பலத்தையும் அடைவர்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சந்தேகவிபரீத பாவமின்றிய உண்மையாகிய ஆன்மாகார புத்தி சங்கியை, அதைப்பெறுவிப்பது சாங்கியம். ஆன்மஞானத்திற்கு அந்தரங்க சாதனமானதால் அத்தகையது சந்நியாசமேயாம். அவ்விதசாங்கியமாகிய சந்நியாசமும் கூறிப்போந்த கருமயோகமும்வேறுவேறுபலனுடையனவெனச் சாஸ்திரார்த்த விவேகஞானமின்றியவனே கூறுகின்றனன். விவேகஞானமுடைய பண்டிதரோ அங்ஙனம் கூறிலர்.

சங்கை:—ஹே பகவன்! அப்பண்டிதர் அவ்வாறு கூறிலரேல் அவருடைய மதம் யாது?

சமாதானம்:—ஸ்ரீ பகவான் அப்பண்டிதர் மதத்தைக் கூறியருளுகின்றார். ஸகரவயோஷ்டிகஃ' என. ஹே அர்ச்சுன! அப்பண்டிதரின் மதமிதுவாம். நிஷ்காம கருமம் அதன் சந்நியாசம் இரண்டனுள் ஒன்றையே எவன் தனது அதிகாரத்தையநுசரித்து சாஸ்திரவிதி பூர்வகஞ் செய்கின்றானோ. அவன் ஆன்மஞானோத்பத்தி வாயிலாக அவ்விரண்டிற்கும் மோட்சரூபமாகிய ஒரு பலத்தையே அடைகின்றான். ஆதலின், அந்நிஷ்காமகருமகருத்தனுகிய புருஷனிடத்துச் சந்நியாசித்தன்மை சம்பவியாது. (4)

(அ-கை.) ஹே பகவன்! சந்நியாசம் கருமயோகம் என்னும் இவ்விரண்டனுள் ஒன்றை யனுஷ்டிப்பதால் இவ்வதிகாரிபுருஷன் அவ்விரண்டின் பலத்தையும் எவ்வாறடைவன் என்றிவ்வாறு அர்ச்சுனன் சங்கிப்ப ஸ்ரீ பகவானருளுகின்றார்.

சு-ம். யத்ஸாங்க்யைஃ ப்ராப்யதே ஸ்தானம் தத்யோகைரபி கம்யதே।
ஏகம் ஸாங்க்யம் ச யோகம் ச யஃ பஷ்யதி ஸ பஷ்யதி ॥ (5)

ப-ம். 2 யத் 1 ஸாங்க்யைஃ 4 ப்ராப்யதே 3 ஸ்தானம் 5 தத் 6 யோகைரபி 7 கம்யதே 8 கம்யதே 13 ஏகம், 10 ஸாங்க்யம் 11 ச 12 யோகம், ச 9 யஃ 14 பஷ்யதி 15 ஸஃ 16 பஷ்யதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சாங்கிய புருஷன் அடையும் ஸ்தானத்தையே யோகி புருஷனுமடைகின்றான் ஆதலின் சாங்கியத்தையும் யோகத்தையும் ஒரு வடிவமாய்க் காண்பவனே நன்றாய்ப் பார்ப்பவன். (5)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஞான நிஷ்டையோடுகூடிய சந்நியாசி யாவன் இந்த ஜன்மத்தில் கருமானுஷ்டான மில்லாதவனாயினும் பூர்வ ஜன்ம கருமத்தாற் சுத்தாந்தக் காணமுடையவனாவனே அச்சந்நியாசியால் சிரவணமனனாதி பூர்வகமாய் ஞான நிஷ்டையால் எம்மோட்சரூபஸ்தான மடையப்படுகின்றதோ, ஈண்டு எதில் ஸ்திதியடைந்து வித்வான் ஓர்காலும் மீண்டும் வருதல் சம்பவியாதோ அது ஸ்தானமாம். அவ்வித ஸ்தானவடிவ அவித்தியா நிவிருத்தி பூர்வக அத்துவிதீய நிர்க்குணப் பிரஹ்மத்தன்மையின் பிராப்திவடிவ மோக்ஷத்தினின்றும் பின்னமாகிய பிரம,வைகுண்ட,கோ,சுவர்க்கலோகம்முதலியவற்றையடைந்தும் இவன்மீண்டும் பிறப்பிறப்புவடிவச் சுழலேயடைகின்றான். இவ்வார்த்தை ஸ்ரீபகவான்தாமே 'ஆப்³ரஹ்மபு⁴வனால்லோகாஃ புனராவர்திநோ(அ)ர்ஜுன' என்னும் வசனத்தால் நன்குவிளக்கியருளியுள்ளார். ஆதலின், ஈண்டு ஸ்தானசத்தத்தால் அப் பிரமலோகமுதலியவை கொள்ளற்கேலா. அத்தன்மையதாய பிரஹ்மரூபமோக்ஷம் இவ்வதிகாரிக்கு எப்போதும் நித்தியப்பிராப்தமே ஆயினும் அஞ்ஞானத்தின் ஆவரணசத்தியால் பிராப்தமாகாததுபோலானது மகாவாக்கியத்தாலுண்டாம் தத்துவசாக்ஷாத்காரத்தால் எப்போது அவ்வாவரணம் நிவிருத்தியாமோ அப்போது அம்மோக்ஷம் பிராப்தியானதுபோற் சொல்லப்படுகின்றது. எங்ஙனம், கண்டத்தி

லுள்ள மறந்துபோன பூஷணத்தின் ஞானத்தால் மீண்டும் அடையப்பட்டதாய்க் கூறப்படுகின்றதோ, பலஸித்சையிலதாய்க் கேவலம் பகவதர்ப்பணபுத்தியாற் செய்யப்பட்ட சாஸ்திரவிகித நித்திய நைமித்திக கன்மங்கள் யோகமாம். அந்நிஷ்காம யோகத்தையுடையவன் யோகியாவன். அந்தயோகியும் இச்சன்மத்தில் அல்லது முன் ஜன்மத்தில் அந்தக்கரணசுத்தியால் சந்நியாச பூர்வகம் சிரவணாதிகள் செய்தடைந்த ஞானநிஷ்டையால் அம்மோக்ஷவடிவஸ்தானத்தை யடைகின்றான். இவ்வாறு சருவகருமத்தியாகவடிவ சந்நியாசத்திற்கும் நிஷ்காம கருமயோகத்திற்கும் மோக்ஷவடிவபல மொன்றேயாதலின் சாங்கிய சந்நியாசத்தையும் நிஷ்காமகருமயோகத்தையும் ஒரு வடிவமாகக் காண்பவனே உண்மையாய்ப்பார்ப்பவன் அவ்விரண்டையும் வேறுவேறாய்க் காண்பவன் உண்மையாய்ப் பார்ப்பவனெனக் கூறப்படான்; மற்றோ, அவன் விபரீதமாய்க் காண்பவன் எனப்படுகின்றான். ஈண்டு ஸ்ரீபகவானுடைய திருக்கருத்திதுவாம் :—எவ்வதிகாரிபுருஷனிடத்து இப்போது சந்நியாச பூர்வக ஞானநிஷ்டை காணப்படுகின்றதோ கருமநிஷ்டை காணப்படவில்லையோ அப்புருஷனிடத்து அவ்விலிங்கத்தால் பூர்வம் அனேக ஜன்மங்களில் பகவதர்ப்பித கருமநிஷ்டை அனுமானிக்கப்படுகின்றது. என்னே? காரணமின்றிக் காரியோத்பத்தியின்றுமன்றோ. அக்காரணம் ஒருகால் பிரத்தியக்ஷமாய்த் தோற்றப்படவில்லையேற் அக்காரியவடிவ இலிங்கத்தால் அக்காரணத்தின் அனுமானம் பண்ணப்படும். எங்ஙனம் மழைகாலத்தின் காரியவடிவமாகிய ஆற்றுநீரின் பெருக்காகிய காரியத்தால் வேறு தேசத்தில் மழைவடிவ காரணத்தின் அனுமானஞ் செய்யப்படுகின்றதோ, அங்ஙனமே இச்சன்மத்தில் சந்நியாச பூர்வக ஞானநிஷ்டைவடிவ காரியத்தால் முன் ஜன்மத்தில் அக்கருமநிஷ்டை அனுமானிக்கப்படுகின்றது. எவ்வதிகாரி புருஷனிடத்து இப்போது பகவதர்ப்பிதகருமநிஷ்டை காணப்படுகின்றதோ சந்நியாச பூர்வகஞானநிஷ்டை காணப்படுவதில்லையோ அப்புருஷனிடத்து அக்கருமநிஷ்டைவடிவ இலிங்கத்தால் வருங்காலத்தாம் சந்நியாச பூர்வக ஞானநிஷ்டை அனுமிக்கப்படும். என்னே? யாண்டு காரண சாமக்கிரியையுளதோ ஆண்டுக்காரியம் அவசியந்தோன்றற்பாலதாதலின் அக்காரண சாமக்கிரியையால் இனிமேலாம் காரியத்தின் அனுமானம் பண்ணப்படுகின்றது. எங்ஙனம் மேகங்களின் உற்பத்திவிசேஷத்தால் வருங்காலத்துண்டாம் மழையின் அனுமானமாகின்றதோ அங்ஙனமே பகவதர்ப்பித கருமநிஷ்டையால் வருங்காலத்துண்டாம் ஞானநிஷ்டை அனுமிக்கப்படுகின்றது. ஆதலின் அஞ்ஞானிகளாகிய முமுட்சுஜனங்கள் அந்தக்கரண சுத்தியின்பொருட்டு முதலில் நிஷ்காம கருமமே செய்யத்தக்கது சந்நியாசம் முதலிற் செயற்பாலதன்று, அச்சந்நியாசமோ தீவிரவைராக்கியத்தையடைய இயல்பாகவே பெறப்படும். (5)

(அ-கை.) ஹே பகவன்! ஞானநிஷ்டைக்குக் காரணமாதலின் அச்சந்நியாசமோ அவசியஞ் செய்யத்தக்கதாம். ஆதலின், எங்ஙனம் சுத்தாந்தக்கரணமுடைய புருஷன் ஞானநிஷ்டையின் பிராப்தியின்பொருட்டுச் சந்நியாசஞ்செய்கின்றானோ அங்ஙனமே அசுத்தாந்தக்கரணமுடைய புருஷனும் அச்சந்நியாசத்தையே முதலிற் செய்யக்கூடாதென்பதென்னே? மற்றோ, அப்புருஷனும் முன்னர்ச் சந்நியாசமே செய்யத்தக்கது என்றிவ்வாறு அர்ச்சுனஞ்சங்கிப்ப ஸ்ரீபகவானருளிச் செய்கின்றார்.

சு-ம். ஸம்ந்யாஸஸ்து மஹாபாஹோ துஃகமாப்துமயோகதஃ।
யோகயுக்தோ முநிர்ப்ரஹ்ம நசிரேணாதிகச்சதி ॥ (6)

ப-ம். 3 ஸம்ந்யாஸஃ 4 து 1 மஹாபாஹோ 5 துஃகம் 6 ப்ராப்தும் 2 அயோகதஃ
7 யோகயுக்தஃ 8 முநிஃ 9 ப்ரஹ்ம 10 நசிரேண 11 அதிகச்சதி.

(அ-ம்.) ஹே அருச்சுன! கருமயோகமின்றிச் செய்யப்பட்ட சந்நியாசமோ துக்கப்பிராப்தியையே தரும். கருமயோகத்தோடுகூடிய புருஷனே சந்நியாசியாகிப் பரமான்மாவைச் சீக்கிரமே சாக்ஷாத்காரஞ்செய்கின்றான்.

(வி-ம்.) ஹே அருச்சுன! அந்தக்கரணசுத்தியைத்தரும் சாஸ்திரவிகித நித்திய நைமித்திக கருமங்களைச்செய்யாது எப்புருஷன் கேவலம் அடத்தால்முதலில் சந்நியாசஞ்செய்கின்றானோ, அவ்வட பூர்வகஞ் செய்யப்பட்ட சந்நியாசம் அப்புருஷனுக்குக் கேவலந் துக்கப்பிராப்தியையே தரும். அதனல் இவனுக்குச் சிறிதளவும் சுகமாவதின்றும். என்னை, அவனுடைய அந்தக்கரணஞ் சுத்தப்படவில்லையாதலின் சந்நியாசத்தின் பலவடிவமாகியஞானநிஷ்டை அவனுக்கு ஒருபோதும் பெறப்படாது. அன்றியும், நிஷ்காமகருமமோ அந்தக்கரணசுத்திசெய்வது அக்கருமஞ் செய்வதிலோ அச்சந்நியாசிக்கு அதிகாரமின்றும். ஆதலின், கருமநிஷ்டை, ஞானநிஷ்டை என்னுமிவ்விரண்டினுந் தவறினவனுதலின் அவ்வசுத்தாந்தக் கரணமுடைய சந்நியாசி மிகுந்த சங்கடத்தையடைகின்றான், எப்புருஷன் அந்தக்கரணசுத்தியைத் தரும் நிஷ்காமகருமத்தோடு கூடினவனே அவன் சுத்தாந்தக்கரணமுடையனுதலின், மனனசீல சந்நியாசியாகிச் சச்சிதானந்தவடிவப் பிரத்தியக்கபின்னப் பிரஹ்மத்தைச் சீக்கிரமே சாக்ஷாத்கரிக்கின்றான். இவ்வெல்லாப் பொருளையும், 'நகஉணாஉநாஅஂஹாதெஷ்டீயஂ வாஅஷொஅஂதெ। நஅஹஂநயீ ஹநாதெவஹிஷிஂ ஹஉயிமஅஹி' என்னு மிச்சுலோகத்தால் மூன்னரே கூறியருளப்பட்டது. ஆதலின், கருமயோகமும் சந்நியாசமும் ஒரே பலத்திற்குக் காரணமாயினும் அசுத்தாந்தக்கரணமுடைய புருஷனுற் செய்யப்பட்ட சந்நியாசத்தினும் அக்கருமயோகம் மிகுந்த சிறப்புடையதாம் என மூற் கூறியருளியதும் பொருத்தமுடையதேயாம். (6)

(அ-கை.) ஹே பகவன்! 'கருமத்தால் பந்தப்படுகின்றார்கள் ஜனங்கள்' என்பதுமுதலிய வாக்கியங்களில் அக்கருமம்பந்தத்திற்கே காரணமெனக் கூறப்பட்டிருக்கின்றதாதலின், கருமயோகத்தோடுகூடிய புருஷன் பிரஹ்மசாக்ஷாத்காரஞ் செய்கின்றான் எனத் தாங்கள் கூறியருளிய வார்த்தை அசங்கதமாமென்று அர்ச்சுனன் ஆசங்கிப்ப ஸ்ரீ பகவான் அருளுகின்றார்

சு-ம். யொமயாதெ விஜாஅதா விஜிதாதா ஜிதெஂத்ரியஃ।
ஸவ-ஃஹ்மாதாத்மாஹ்மாதாதா குர்வன்னபி ந லிப்யதெ ॥ (7)

ப-ம். 1 யொமயாதெஃ 2 விஜாஅதா 3 விஜிதாதா 4 ஜிதெஂத்ரியஃ 5 ஸவ-ஃஹ்மாதாத்மாஹ்மாதாதா 6 குர்வன்ன் 7 அபி 8 ந 9 லிப்யதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவன் யோகத்தோடுகூடியவனே விசுத்தாத்மாவோ, விஜிதாத்மாவோ, ஜிதேந்திரியனே சர்வபூதங்களின் ஆன்மவடிவத்தை ஆன்மாவாகவுடையவனே அவன் அக்கருமத்தைச்செய்யினும், பற்றையடைவதில்லை.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பகவதர்ப்பணத்தன்மை பலேச்சையின்றியதன்மை முதலிய குணங்களோடுகூடிய சாஸ்திரவிகித நித்திய நைமித்திக கருமங்கள் யோகமாம். அதோடுகூடியவன் யோகயுக்தனுவன் முதலில் விசுத்தாத்மாவாகின்றான். ஈண்டு, விசுத்த இராஜத தாமதகுணமின்றிய ஆத்மா அந்தக்கரணம் எவனுக்குளதோ, அவன் விசுத்தான்மாவாவன். இத்தன்மைத்தாயவனே விஜிதான்மாவாகின்றான். ஈண்டு, ஆன்மாவென்பது தேகத்திற்காம். அது எவனுல் வசம் பண்ணப்பட்டதோ, அவன் விஜிதான்மாவாவன். இத்தன்மைத்தாயவன் ஜிதேந்

திரியணுகின்றுன். ஈண்டு, சர்வ பாகியேந்திரியங்களையும் எவன் தனது வசமாக் கினவனே அவன் ஜிதேந்திரியனுவன். ஈண்டு, விசுத்தான்மா, விஜிதான்மா, ஜிதேந்திரியன் என்னும் மூன்று பதங்களால் ஸ்ரீ பகவான் முறைப்படி மனே தண்டம், காயத்தண்டம், வாக்குத்தண்டம் என்னும் மூன்றுகூடிய திரிதண்டி யைக் கூறியருளினர். இவ்வார்த்தை மனுபகவானுலுங கூறப்பட்டுளது.

"வாதண்டொயஉதொஉண்டோ காயஉண்டஸ்துவெவ அ ।
யவெவ்யதெநியதாஉண்டாோ ஸத்ரிஉண்டீதிகயீயதெ ॥

(பொ-ள்.) வாக்குத்தண்டம், மனேதண்டம், காயத்தண்டம் என்னும் மூன்றும் எப்புருஷனுக்கு நியதபூர்வகமுள்ளனவோ அப்புருஷன் திரிதண்டியென்னும் பெயராற் கூறப்படுவன். ஈண்டு, 'வாக்கு' என்னுஞ் சத்தம் சர்வ பாகியேந்திரியங்களின் உபலக்ஷகமாம். இவ்வித திரிதண்டி புருஷனுக்குச் சர்வான்மஞானம் அவசியமேயாம். இப்பொருளை ஸ்ரீபகவான் 'சர்வ பூதாத்ம பூதாத்மா' என்பதாற் கூறியருளினர். பிரமன்முதல் தம்பமீருய சேதனவடிவ ஆகாயமுதலிய அசேதனவடிவ சர்வ பூதங்களின் சொரூபபூதமாகிய பிரத்தியக்சேதன ஆன்மா எவனுக்கோ அவன் சர்வபூதான்மபூதான்மாவாவன். கருத்திதுவாம்:—குண்டல கங்கணமுதலிய பூஷணங்களுக்குச் சுவர்ணமேயுண்மைவடிவமாவதுபோலச் சர்வசடாசடப் பிரபஞ்சத்திற்கும் யானே உண்மைவடிவமாவேன். என்றிவ்வாறு எவன் சர்வப் பிரபஞ்சத்தையும் தனது ஆன்மவடிவமாய்க் காண்கின்றனே, அப்பரமார்த்ததரிசியாகிய வித்துவான் அன்னியரின் திருஷ்டியால் அக்கருமத்தைச் செய்பவனுயினும் கருத்திருத்துவாபிமானமின்மையின், அக்கருமத்தோடு பற்றுருன். அதாவது, அக்கருமம் அப்புருஷனைப் பந்தப்படுத்துவதின்றும்; தனது திருஷ்டியால் அப்புருஷனிடத்து அக்கருமத்தின் கருத்திருத்தன்மையின்றுமாதலின். ஈண்டு ஒருரையில் சர்வ பூதாத்மபூதாத்மா என்பதற்கு இப்பொருளுரைக்கப்பட்டுளது:—'சர்வம்' என்னுஞ்சத்தம் ஆகாசமுதலிய ஜடப்பிரபஞ்சத்தின் வாசகமாம். 'ஆத்மா' என்னுஞ் சத்தம் அஜடப்பிரபஞ்சத்தின் வாசகமாம். இவ்விரண்டினீற்றிலுள்ள 'பூதம்' என்னுஞ் சப்தம் சொரூபவாசகமாமாதலின், இப்பொருள் பெறப்பட்டது:—சர்வபூதம், ஆன்மபூதம், ஆத்மாவதற்கோ அதன் பெயர் சர்வபூதாத்மபூதாத்மாவாம். இவ்வாறு பொருள்கொள்ளாது சர்வ பூதங்களின் ஆன்மவடிவ ஆத்மா எவனுக்கோ அவன் சர்வ பூதாத்ம பூதாத்மாவாவன் எனப் பொருள்கொள்ளினேனு சர்வ பூதாத்மாவெனக் கூறுவதானே இச்சித்த பொருள் அமைவதால் 'ஆன்மபூதம்' என்னும் பதம் அதிகமாய்க் கூறியதாம். இவ்வாறு முதல் வியாக்கியானத்தில் 'ஆன்மபூதம்' என்னும் பதத்திற்கு அதிகத் தன்மைவடிவ தூஷணங்கொடுத்துப் பொருள்கூறிய வுரையினும் அப்பதத்திற்கு அதிகத் தன்மைவடிவதூஷணம் பிராப்தமாம். என்னை? 'சர்வ' என்னும் பதத்தானே சர்வ ஜடாஜடப் பிரபஞ்சத்தின் கிரகணமாமாதலின், அச்சர்வபதத்தைச் சங்கோசஞ்செய்து கேவல சடப்பிரபஞ்சத்தின் கிரகணஞ் சம்பவியாது. ஆதலின், சர்வபூதாத்மபூதாத்மா என்னும் பதத்திற்கு ஸ்ரீ பாடியக்காரானுசாரமாய முதல் வியாக்கியானமே இனியதாம். (7)

(அ-கை.) இப்போது கூறிப்போந்த இப்பொருளை ஸ்ரீ பகவான் இரண்டு சுலோகங்களால் விளக்கியருளுகின்றுர்.

சு-ம். தெவ கிம்வித்தொஈதி யாகொ உதெயத தகுவிசு ।
வயுசு ஸூஷ்வசு ஷ்வஸுசு ஜிவ்ரசு சுஸுசு மஹசு ஷ்வவசு ஷ்வஹசு ॥ (8)
வ்ரதுவசு விஷ்ணுசு மஜ்ஹசு உருக்ரமஸ்துவி ।
உம்தியாண்டியாயெஷ வதக்ஷ உதி யாஷயசு ॥ (9)

ப-ம். 24 ந 23 ஸவ 22 க்ஷிம்ஷிக் 25 கஸொஶி 26 உதி 1 ய¯க்ஷ: 27 ஸநெய்த 2 தகு வீக் 3 வஶ்யந்து 5 ஶ்ரண்யந்து 6 ஷ்ரஶந்து 7 ஜிவ்ரந்து 8 சுஶ்ரந்து 9 ஶ்ரத்தந்து 10 ஷ்வ வந்து 11 ஶ்ரவஸ்யந்து 12 வ்ரதுவந்து 13 விஷ்ரஜந்து 14 ஶ்ரத்ரணந்து 15 உந்நிஷந்து 16 நி ஶிஷந்து 4 சுவி 17 உம்நியாணி 18 உம்நியாஸெஷு¯ 19 வத்ஸுஸெ 20 உதி 21 யாஶயந்து.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யோகத்தோடுகூடிய பரமார்த்ததரிசி பார்த்தும், சிரவணித்தும், பரிசித்தும், முகர்ந்தும், புசித்தும், நடந்தும், உறங்கியும், பிராணனே யெழுப்பியும், உச்சரித்தும், மலவிசர்ச்சனஞ்செய்தும், கிரகணஞ்செய்தும், கண்திறந்தும், மூடியும், இவ்விந்திரியங்களே தங்கள் தங்கள் ரூபமுதலிய பொருள்களில் பிரவிர்த்திக்கின்றன என்றிவ்வாறு எண்ணிக்கொண்டிருக்கும்; நான் சிறிதளவுஞ் செய்பவனல்லன் என்றிவ்வாறுணர்கின்றனன். (8, 9)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எவன் யுக்தனோ, அதாவது நிரோத சித்தமுடையவனோ, தத்துவவித்தோ, பரமார்த்ததரிசியோ, அல்லது எவன் முன்னர் நிஷ்காமகருமத்தோடு கூடினவனோ, பின்னர் மனத்தூய்மைவாயிலாய்த் தத்துவவித்தாவாயினனோ; அத்தன்மைய பரமார்த்ததரிசி ஐவகை ஞானேந்திரியங்களால் ஐவகைக் கருமேந்திரியங்களால் ஐவகைப் பிராணனுல் நான்கந்தக்கரணத்தால் சாஸ்திரவிகித ரூபாதிவிஷயங்களைக் கிரகணஞ்செய்தும், அந்த ரூபாதி விஷயங்களில் இவ்விந்திரிய முதலியவைகளே பிரவிர்த்திக்கின்றன. அசங்க ஆன்மவடிவமாகிய நான் இவைகளில்ஒருகாலும் பிரவிருத்திப்பவனல்லன் என நிச்சயித்து அசங்கான்மாவாகிய நான் சிறிதளவுஞ் செய்திலேன் எனத் தத்துவவித்தா எப்போதும் நினைக்கின்றான். ஈண்டு, 'வஶ்யந்து, ஶ்ரண்யந்து, ஷ்ரஶந்து, ஜிவ்ரந்து, சுஶ்ரந்து' என்னுமிவ்வைந்து சப்தங்களால் ஸ்ரீ பகவான் முறைப்படி நேத்திரம் முதலிய ஞானேந்திரியங்களின் தொழிலைக்கூறியருளினர். அவற்றுள் உருவமுதலியவைகளைப்பார்த்தல், சப்தத்தைக்கேட்டல், பரிசத்தைக் கிரகணம்பண்ணல், கந்தத்தைக் கிரகணம்பண்ணல், இரசத்தை கிரகணம்பண்ணல் நேத்திராதிகளின் வியாபாரமாம். அவ்வாறே 'மஶ்நந்து, வ்ரதுவந்து, விஷ்ரஜந்து, ஶ்ரத்ரணந்து' என்னும் இந்நான்கு பதங்களால் ஸ்ரீ பகவான் முறைப்படி பாதம் முதலிய கருமேந்திரியங்களின் தொழிலைக் கூறியருளினர். நடத்தல், வசனித்தல், மலநீக்கல், கிரகணம் முதலியனபாதாதிகளினவாம். இந்நான்கும்உபஸ்தேந்திரியத்தின் விஷயாநந்தவடிவ வியாபாரத்திற்கும் உபலக்ஷகங்களாம். 'ஸ்ரவந்து' என்னும் பதத்தால் கூறப்பட்ட பிராணனுடைய சுவாசவடிவ வியாபாரம் பிராணன், அபானன், சமானன், வியானன், உதானன் என்னும் ஐந்து பிராணன்களின் வியாபாரத்திற்கு முபலக்ஷகமாம் 'உந்நிஷந்து நிமிஷந்து' என்னும் பதத்தால் கூறப்பட்ட வியாபாரமானது நாகன், கூர்மன், கிருகலன், தேவதத்தன், தனஞ்சயன் என்னும் ஐந்து பிராணன்களின் வியாபாரத்திற்கும் உபலக்ஷகமாம். 'ஷ்வந்து' என்னும் பதத்தாற் கூறப்பட்ட புத்தியினுடைய நித்திரைவடிவ வியாபாரமானது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு அந்தக்கரணங்களின் வியாபாரத்திற்கும் உபலக்ஷகமாம். இவ்வாறு தத்துவவேத்தாவாகிய புருஷன் சர்வவியாபாரத்தினும் ஆன்மாவை அகர்த்தாவாயே பார்க்கின்றனுதலின், இவ்விந்திரிய முதலியவைகளால் எல்லா வியாபாரத்தையுஞ் செய்யினும் அதனுல் பந்தப்படான். (8, 9)

(அ-கை.) ஹே பகவன்! வித்துவானுகிய புருஷன் கருத்திருத்வாபிமானமின்மையின் எல்லாக் கருமங்களையுஞ்செய்யினும், பந்தப்படுவதில்லை யென்பதை முன்னர்த் தாங்கள் கூறியருளினீர்கள். இதனுல் அவித்துவானுகிய புருஷனை கரு

த்திருத்துவாபிமான வசத்தால் அக்கருமங்களைச்செய்து அவசியம் பந்தப்படுவன் என்பதறியப்படுகின்றது. ஆதலின், அக்கருமத்திற் பிரவிருத்தித்த அவ்வித்துவானுக்கு அந்தச் சந்நியாச பூர்வக ஞானநிஷ்டை எவ்வாறு பிராப்தமாகும். மற்றேரு, பிராப்தமாகாது என்றிவ்வாறு அர்ச்சுனன் ஆசங்கிப்ப ஸ்ரீபகவான் அருளுகின்ரூர்.

சு-ம். ப்ரஹ்மண்யாயாய கரோ்மாணி ஸம்மம் த்யக்த்வாகரொதியஃ।
ஜிவ்யதெ ந ஸ வாவெந வத்ரவ்வத்: ஜிவாம்ஹஸா ॥ (10)

ப-ம். 2 ப்ரஹ்மணி 3 க்ரூயாய 6 கரோ்மாணி 4 ஸம்மம் 5 த்யக்த்வா 7 கரொதி 1 யஃ
4 ஜிவ்யதெ 13 ஸஃ 12 வாவெந 10 வத்ரவ்வத்ரம் 11 ரவ 9 ரும்ஹஸா.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனிடத்திற் சமர்ப்பித்துப் பலேச்சையை விடுத்துக் கருமத்தைச் செய்கின்றவன் தண்ணீரோடு தாமரையிலேபோலக் கருமத்தால் பந்தமடையான். (10)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எப்புருஷன் பரமேசுரனிடத்தில் இலௌகிக வைதிக சர்வகருமங்களையுஞ் சமர்ப்பித்து அங்ஙனமே அக்கருமங்களின் சுவர்க்க முதலிய பலேச்சையைவிட்டு எங்ஙனம் அடிமையாளன் ஆண்டான்பொருட்டு சர்வகருமங்களையுஞ் செய்கின்ரூளே, அங்ஙனமேயானும் கேவலம் பரமேசுரனுடைய பிரீதியின்பொருட்டே எல்லாக் கருமங்களையுஞ் செய்கின்றேன் என்னும் இவ்வித எண்ணத்தோடு அக்கருமங்களனைத்தையுஞ் செய்கின்ரூளே அப்புருஷனும் அவ்வித்துவானைப்போல புண்ணிய பாவ கருமங்களால் பந்தப்படுவதில்லே. எங்ஙனம் தாமரையிலேமல் இருக்கப்பட்ட தண்ணீரால் அத்தாமரையிலே சம்பந்தப்படுவதில்லேயோ, அங்ஙனமே பகவதர்ப்பண புத்தியாற் செய்யப்பட்ட கருமங்களால் இவ்வதிகாரி பந்தத்தை யடைவதில்லே. அதாவது அநிஷ்காமகருமம் இவ்வதிகாரியின் பந்தத்திற் காரணமாவதில்லே. மற்ரூ, அது அந்தக்காரணசுத்திக்கே காரணமாம். (10)

(அ-கை.) இப்போது ஸ்ரீ பகவான் இவ்வர்த்தத்தை விளக்கியருளுகின்ரூர்.

சு-ம். காயெந மநஸா பு³த்³த்⁴யா கெவலைரிம்த்³ரியைரபி।
யொகி³நஃ கர்ம குர்வந்தி ஸம்மம் த்யக்த்வாத்மஶுத்³த⁴யெ ॥ (11)

ப-ம். 6 காயெந 7 மநஸா 8 பு³த்³த்⁴யா 5 கெவலைரஃ 9 இம்த்³ரியைஃ 11 அபி
1 யொகி³நஃ 10 கர்ம 12 குர்வந்தி 2 ஸம்மம் 3 த்யக்த்வா 4 ஆத்மஶுத்³த⁴யெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அதிகாரிகள் பலேச்சையைவிடுத்து அந்தக்காரணசுத்தியின்பொருட்டுக் கேவலம் சரீரத்தால், மனதால், புத்தியால், இந்திரியங்களால் கருமத்தையே செய்கின்றனர். (11)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! மோக்ஷேச்சையுடைய அதிகாரிகள் தமது அந்தக்காரணத்தைச் சுத்திசெய்தற்பொருட்டுச் சுவர்க்கமுதலிய பலேச்சையைப் பரித்தியாகஞ்செய்து கேவலம் சரீரத்தால், கேவலம் மனதால் கேவலம் புத்தியால், கேவலமிந்திரியங்களால் தமது வருணாசிரமானுசார நித்திய நைமித்திக கருமங்களேயே செய்கின்ரூர்கள். ஈண்டு, இக்கருமத்தை யான் ஈசுவரப் பிரீதியின்பொருட்டே செய்கின்றேனேயன்றிச் சுவர்க்கமுதலிய பலப்பிராப்தியின்பொருட்டுச் செய்யவில்லே என்றிவ்வாறு மமதையின்மையே சரீரம் முதலிய நான்கினும் கேவலவடிவத்தன்மையாம். (11)

(அ-கை.) ஹே பகவன்! கருத்திருத்துவாபிமானம் சமமாயினும், அக்கருமத்தால் சிலரோ முத்தர்களாகின்ரூர்கள் சிலர்கள் பந்தப்படுகின்ரூர்கள். இவ்வித

மாகிய விஷமத்தன்மையிற் காரணம் யாது என்று அர்ச்சுனன் சங்கிக்க ஸ்ரீ பகவானருளுகின்றார்.

சு-ம். யுக்தஃ கரோமியம்தயுக்தா ஸாந்திமாப்நோதி நைஷ்டிகீம் ।
அயுக்தஃ காரகோ(அ)ணே ஃபலே ஸக்தோ நிபத்யதே ॥ (12)

ப-ம். 1 யுக்தஃ 2 கரோமியம் 3 தயுக்தா 5 ஸாந்திம் 6 ஆப்நோதி 4 நைஷ்டிகீம் 7 அ
யுக்தஃ 8 காரகோ(அ)ணே 9 ஃபலே 10 ஸக்தஃ 11 நிபத்யதே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யுக்த புருஷன் கருமபலத்தைத் தியாகம்பண்ணிக் கருமத்தைச்செய்து சத்துவ சுத்திக்கிரமமாயுண்டாகிய மோக்ஷவடிவ சாந்தியை யடைகின்றான். அயுக்த புருஷனோ காமத்தால் பலத்தை இச்சித்துப் பந்தப்படுகின்றான். (12)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வெல்லாக்கருமங்களும் பரமேசுரப் பிரீதியின் பொருட்டேயன்றி எனது பலத்தின்பொருட்டன்று என்னும் எண்ணமுடையவன் யுக்தன். இத்தன்மைத்தாய யுக்தன் அக்கருமத்தின் சுவர்க்க முதலிய பலேச்சையை நீக்கி நித்திய நைமித்திக கருமத்தைச்செய்து மோக்ஷவடிவ சாந்தியையடைகின்றான் அது நைஷ்டிகமாம்; அதாவது முன்னர் அந்தக்காணசுத்தி அதன்பின் நித்தியாநித்திய வஸ்து விவேகம் அதன்பின் சந்நியாச பூர்வக ஞானநிஷ்டை என்னுங் கிரமத்தாலுண்டாகிய மோட்சவடிவ சாந்தியை யுக்தன் அடைகின்றான். அயுக்தனோ அதாவது இவ்வெல்லாக்கருமங்களும் பரமேசுரன்பொருட்டேயன்றி எனதுபலத்தின்பொருட்டன்று என்னுமெண்ணமில்லாதோ, காமத்தால் அச்சுவர்க்கமுதலிய பலத்தில் யாசிச் சுவர்க்க முதலிய பல மடைதற்பொருட்டே கருமத்தைச் செய்கின்றேன் என்றிவ்வண்ண மிச்சைசெய்து அவற்றிற் பந்தப்படுகின்றான். அதாவது அதனால் அவன் சம்சாரவடிவ பந்தத்தையே யடைகின்றான். ஆதலின், ஹே அருச்சுன! நீயும் யுக்தனாகி அக்கருமத்தைச் செய்தி. (12)

(அ-கை.) ஆண்டு, அசுத்தாந்தக்காணமுடையவனுக்குக் கேவலஞ் சந்நியாசத்தினும் கருமயோகமே சிறந்தது என முற்கூறியருளப்பட்ட அர்த்தத்தை இது காறும் விஸ்தாரமாய்க் கூறியருளினர். இப்போது சுத்தாந்தக் காணமுடையவனுக்கு அச்சருவகரும சந்நியாசமே சிறந்தது என்னுமர்த்தத்தை ஸ்ரீபகவானருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸர்வகர்மாணி மநஸா ஸந்ந்யஸ்யாஸ்தே ஸுகம் வஸீ ।
நவத்வாரே புரே தேஹீ நைவ குர்வந்ந காரயந் ॥ (13)

ப-ம். 1 ஸர்வகர்மாணி 2 மநஸா 3 ஸந்ந்யஸ்ய 9 ஆஸ்தே 8 ஸுகம் 5 வஸீ
6 நவத்வாரே 7 புரே 4 தேஹீ 10 ந ஏவ 11 குர்வந் 12 ந 13 காரயந்

(அ-ம்.) ஹே அருச்சுன! சருவகருமத்தையு மனதால் பரித்தியாகஞ்செய்து சரீரத்தினும் வேறாகிய ஆன்மாவையுணர்ந்த வசீபுருஷன் ஒன்பது துவாரமுடைய இத்தேகத்தில் சுகபூர்வகமாய் இருக்கின்றான். ஒரு காரியத்தைச் செய்தேனும் செய்வித்தேனுமிருப்பதில்லை.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! நித்தியம், நைமித்திகம், காமியம், பிரதிஷித்தம் எனக் கருமம் நால்வகைத்தாம். இக்கருமங்களை 'குருணைகுருயஃவபௌகீ' என்னுஞ் சுலோகத்திற் கூறப்பட்ட அகர்த்தாவாகிய ஆன்மரூபத்தின் இனிய தரிசனத்தோடுகூடிய மனதால் பரித்தியாகஞ்செய்து பிராரப்த கருமவசத்தால் அச்

சந்நியாசி நிலைத்திருக்கின்றான். ஆண்டு அவன் என்னை? துக்கபூர்வகமாகவாவிருக்கின்றான் என ஆசங்கிப்ப, ஸ்ரீபகவானருளுகின்றார். 'ஸ்வம்' ஹே அருச்சுன! சரீர வாக்காதி இந்திரிய மஃனவியாபாரமே இப்பிராணிகட்குத் துக்கத்தைக்கொடுப்பதாம். துக்க காரணமாகிய அம்மூன்று வியாபாரமும் இச்சந்நியாசியிடத்தின்றுமாதலின், இவன் துக்கமின்றியவனுகியே யிருக்கின்றான்.

சங்கை :—ஹே பகவன்! சந்நியாசியின்சரீரம், இந்திரியம், மனம், என்னும் மூன்றும் சுவதந்திரமாய்த் தத்தம் வியாபாரத்தில் எக்காரணத்தாற் பிரவிருத்திப்பதில்லை?

சமாதானம் :—ஸ்ரீபகவானருளுகின்றார். 'வஷீ' என. ஹே அர்ச்சுன! சந்நியாசி இக்காரிய காரணவடிவ சங்காதத்தைத் தன்வசப்படுத்தியுள்ளானதலின், அம்மூன்றும் சுவதந்திரமாய் ஒரு வியாபாரத்திலும் பிரவிருத்திப்பதில்லை.

சங்கை :—ஹே பகவன்! இவ்வாறு சர்வவியாபாரமுமின்றிய சந்நியாசி எந்தஸ்தானத்தில் ஸ்திதிபெறுவன்?

சமாதானம் :—ஸ்ரீபகவானருளுகின்றார்; 'நவத்வாரே' என. சுரோத்திரம் இரண்டு, நேத்திரமிரண்டு, நாசியிரண்டு, முகமொன்று இவ்வெழுவகைத் துவாரங்களும் மேலாகிய சிரசிலிருக்கின்றன. பாயு, உபஸ்தம் இவ்விரண்டும் கீழிருக்கின்றன. இவ்வொன்பதுவகைத் துவாரத்தோடுகூடிய இத்தூலசரீரத்தில் சந்நியாசி வசிக்கின்றான்.

சங்கை :—ஹே பகவன்! சந்நியாசி, அசந்நியாசி, வித்துவான், அவித்துவான் முதலிய சருவப்பிராணிகளும் இவ்வொன்பதுவகைத் துவாரமுடைய தேகத்தின்கண்ணே வசிக்கின்றனர். கேவலம் இச்சந்நியாசிமாத்திரமே இத்தேகத்தில் வசிப்பதில்லை.

சமாதானம் :—ஸ்ரீபகவானருளுகின்றார். 'ஹம்ஸ' என. ஹே அருச்சுன! அவ்வித்துவான் இவ்வொன்பதுவகைத்துவாரமுடைய தேகத்தின்கண்ணேயிருப்பினும் இத்தேகத்தினும் வேறுப்த் தனது ஆன்மாவைக் காண்கின்றான், தேகவடிவமாக ஆன்மாவைப் பார்ப்பதில்லை. ஆதலின், எங்ஙனம் பிரவாசியாகிய புருஷன் அயலான்வீட்டில் வாசஞ்செய்யினும், அவ்வீட்டின் விருத்திஹானிகளால் அவன் சுகதுக்கங்களை யடைவதில்லையோ அங்ஙனமே வித்துவானுகிய சந்நியாசியும் இச்சரீரத்தின் துதி நிந்தைகளாற் சுகதுக்கங்களை யடைவதில்லை; மற்றோர், அகந்தை மமதையின்றி இத்தேகத்திலிருப்பன். அஞ்ஞானியோ தேகத்தின் தாதாத்மிய அபிமானத்தால் தன்னைத் தேகவடிவமாக அபிமானிக்கின்றனன்றித் தன்னைத் தேகியாக அபிமானிப்பதில்லை. ஆதலின், அவ்வஞ்ஞானி இத்தேகத்தின் இடத்தையே ஆன்மாவின் இடமாயெண்ணி யான் இவ்வீட்டிலிருக்கின்றேன், யான் இப்பூமியிலிருக்கின்றேன், யான் இவ்வாசனத்திலிருக்கின்றேன்; என்றிவ்வாறு தன்னை யெண்ணுகின்றான்; யான் இத்தேகத்திலிருப்பவன் என அஞ்ஞானி தன்னை யுணராமையின் அவன் தேகபின்னமாய் ஆன்மாவை யறிவதில்லை. இக்கூட்டத்தினும் வேறுப் ஆன்மாவையுணர்ந்த சருவ கருமசந்நியாசியாகிய வித்துவான் யான் இத்தேகத்திலிருப்பவன்என்றிவ்வண்ணம் தன்னை எண்ணுகின்றான்; தன்னைத் தேகவடிவமாய் அபிமானிப்பதில்லை. ஆதலின், கிரியையின்றிய ஆன்மாவினிடத்தில் அவித்தையாலாரோபிக்கப்பட்ட தேகாதிகளின் வியாபாரமனைத்தும் தத்துவ சாக்ஷாத்காரத்தால் பாதமாகின்றன. அதுவே சர்வ கருமசந்நியாசமென்று சொல்லப்படுகின்றது. இவ்வாறு அஞ்ஞானி புருஷர்களின் விலக்ஷணத்தன்மையை அங்கீகரித்தருளியே ஸ்ரீ பகவான் அவ்வித்துவானை 'நவத்வாரே புரேதேஹீ' எனச் சிறப்பித்துக் கூறியருளினர்.

சங்கை :—ஹே பகவன்! எங்ஙனம் ஓடத்தின் சலனவடிவமாகிய வியாபாரம் கரையிலுள்ள விருக்ஷத்தில் ஆரோபிக்கப்படுகின்றதோ, அங்ஙனமே ஆன்மாவினிடத்தில் ஆரோபிக்கப்பட்ட தேகாதி வியாபாரங்களுக்கு வித்தையால் பாதமுண்டாயினும் ஆன்மாவினிடத்தில் தனது வியாபாரத்தால் கர்த்தாத்தன்மையும் தேகாதிவியாபாரத்தில் பிரயோசக கர்த்தாத்தன்மையும் உள.

சமாதானம் :—ஸ்ரீபகவானருளுகின்றார். 'நைவகிஞ்சித்கரோமீதி' என. ஹே அர்ச்சுன! இவ்வான்மதேவர் தாம் ஒருகாரியத்தையுஞ் செய்துகொண்டிருப்பவரல்லர். பிரேரித்துத் தேதேகேந்திரியாதிகளால் ஒரு வியாபாரத்தையுஞ் செய்வித்துக்கொண் டிருப்பவருமல்லர். மற்றே, உதாசீனமாயிருப்பவர் ஓர் உரையில் 'நவஆரெவ ரெ' என்னும் வாக்கியத்திற்குச் சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, ரசனம், கிராணம், பிராணன், புத்தி, அகங்காரம், சித்தம் இவ்வொன்பது துவாரங்களுடம் எதனிடத்துளவோ, அத்தன்மைய சரீரவடிவமாகிய புரத்தில் அவ்வித்துவான் ஸ்திதனுகின்றான் எனப்பொருளுரைக்கப்பட்டுளது. கருத்திதுவாம்.—எங்ஙனம் உலகப்பிரசித்தமாகிய புரத்திலுள்ள இராஜனுக்கு அப்புரத்தின் துவாரத்தானே வெளிவிஷயங்கள் கிடைக்கின்றனவோ, அங்ஙனமே இத்தேகவடிவ புரத்திற்கு அதிபதியாகிய சீவான்மவடிவ இராஜனது போகத்தின்பொருட்டு வெளியிலுள்ள சத்தமுதலிய விஷயங்கள் அச்சுரோத்திரமுதலிய துவாரங்களாலே உள்ளே பிரவேசமாகின்றனவாதலின், அச்சுரோத்திரம் முதலியன பிரசித்தியாகிய புரத்தின் துவாரங்களைப்போலத் துவாரங்களா. (13)

(அ-கை.) ஹே பகவன்! எங்ஙனம் தேவதத்தன் என்னும் பெயருடைய புருஷனிடத்தில் உண்மையாயுள்ள கமனவடிவ கிரியையானது அவன்நிலத்திருக்குங்காலத்தில் உண்டாவதில்லையோ, அங்ஙனமே ஆன்மாவினிடத்துண்மையாயுள்ள செய்யுந்தன்மை செய்விக்குந்தன்மையானவை சந்நியாசகாலத்தில் அவ்வான்மாவினிடத்தின்றும் என்பது தாங்கள் கூறியருளிய கருத்தாம். அல்லது ஆகாசத்தில் தலம் மலினம் முதலிய தன்மைகள் உண்மையாயில்லாததேபோல ஆன்மாவினிடத்திலும் செய்யுந்தன்மையும் செய்விக்குந்தன்மையும், உண்மையிலின்றும் என்பது தாங்கள் கூறியருளியதின் கருத்தாம் என்றிவ்வாறுளதாம் அர்ச்சுனன் சந்தேகத்தை நிவிருத்தித்தருளற்பொருட்டு ஸ்ரீ பகவான் அந்தத்திலுள்ள பக்ஷத்தை அங்கீகரித்தருளுகின்றார்.

சு-ம். நாதத்தே ஸுக்ருதம் சைவ நைவாணி லொகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு: ।
அஜ்ஞானேனாவ்ருதம் ஜ்ஞானம் தேன முஹ்யந்தி ஜந்தவ: ॥ (14)

ப-ம். 4 ந 3 காதத்தே ஸுக்ருதம் 7 ந 6 கசைவாணி 2 லொகஸ்ய 5 ஸ்ருஜதி 1 ப்ரபு: 9 ந 8 கஜ்ஞானேனாவ்ருதம் 11 ஜ்ஞானந் 10 தேன 12 முஹ்யந்தி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வான்மதேவர் தேகாதிகளின் கருத்திருத்துவத்தன்மையை உண்டாக்கவில்லை கருமங்களையு முண்டாக்கவில்லை, பல சம்பந்தத்தையுமுண்டாக்கவில்லை. மற்றே, அஞ்ஞானவடிவமாயையே சர்வ காரியமுஞ் செய்வதிற் பிரவிருத்திக்கின்றது. (14)

(வி ம்.) ஹே அர்ச்சுன! தேதேகேந்திரியாதி சர்வ சங்காதத்தின் சுவாமிவடிவ ஆன்மதேவரானவர் அவற்றின் கருத்திருத்தன்மையை உற்பத்திசெய்வதில்லை. அதாவது, நீ இக்காரியத்தைச்செய்வாய்! என்றிவ்வண்ணம் பிரேரித்து ஒரு காரியத்தையுஞ் செய்விப்பதில்லை ஆதலின், இவ்வான்மதேவரிடத்தும் பிரயோஜககர்த்தாத்தன்மைவடிவச் செய்விக்குந்தன்மை சம்பவியாது; தேதேகேந்திரி

யாதிகளுக்கு வேண்டுவனவாய குடமுதலிய கருமங்களையும் இவ்வான்மதேவர் உற்பத்திசெய்வதில்லை. அதாவது, அக்கடாதி பதார்த்தங்கட்கு கருத்தாவுமல்லர் ஆதலின் இவரிடத்துக் கருத்திருத்தன்மையும் இன்றும். கருமத்தைச்செய்பவர்க்கு அவ்வக்கருமத்தின் பலத்தோடு சம்பந்தத்தையும் இவருற்பத்தி செய்யவில்லை. அதாவது இவர் ஒருவருக்கும்பலத்தைப்போகம்பண்ணுவிப்பவருமல்லர்; தாம்போகம்பண்ணுபவருமல்லர். ஆதலின், இவரிடத்தில் உண்ணுவிக்குந்தன்மையும் உண்ணுந்தன்மையும் சம்பவியா என்னுமிவ்வார்த்தத்தை 'ஸாரீரஷ்ரோவி கூளஞ்ஜ்ஞகூஞொதி நமிவ்யதே' என்னும் இக்கீதாவாக்கியமுங் கூறியது.

சங்கை :—ஹே பகவன் இவ்வான்மதேவர் ஒருகாலும் தாம் சிறிதளவும் காரியஞ்செய்பவரல்லர் செய்விப்பவருமல்லரேல் மற்றியார் செய்தும் செய்வித்தும் பிரவிருத்திப்பவர்?

சமாதானம்:—ஸ்ரீபகவான் அருளுகின்றார். 'வ்ஹாவஹ்ஹ்ரவ்யதஃதெ' என. ஹே அர்ச்சுன! அஞ்ஞானவடிவ தெய்வீகமாயை பிருகிருதியென்று கூறப்படுகின்றது; அதுவே காரியஞ்செய்வதில் செய்விப்பதில் பிரவிர்த்திக்கின்றது. ஈண்டோரு ரையில் 'வ்ஹாவஹ்ஹ்ரவ்யதஃதெ' என்னும் வாக்கியத்திற்கு இப்பொருள் கூறப்பட்டிருக்கின்றது :—இச் சைதன்யவடிவ ஆன்மாச்சூரியன்போன்று எல்லாவற்றையும் விளக்குவதுமாத்திரமேயன்றிக் கருமமுதலியவைகளிற் பிரவிருத்தி செய்விப்பதின்று; மற்றோர், எவ்விவ்வஸ்துவிற்கு எவ்விவ்வாறு சுபாவமோ அதுவே அவ்வவ்வண்ணம் பிரவிர்த்திக்கின்றது. ஒரே சூரியனுதிப்பத்தாமரைப்பூக்கள் இயல்பாமே விரிகின்றன; குமுதங்கள் இயல்பாமே சுருங்குகின்றன. அச்சூரியன் ஒன்றையும் விரித்தொடுக்குவதில்லை. அதுபோல ஒரேயான்மாப்பிரகாசிப்பக் கடாதி பதார்த்தங்கள் சேஷ்டிக்கவில்லை மநுஷ்யாதிகளோ பலவகையாய்ச் சேஷ்டிக்கின்றார்கள் அவ்வான்மா ஒரு பொருளையும் பிரவிருத்திப்பதுமில்லை நிவிர்த்திப்பதுமில்லை.

(14)

(அ-கை.) ஹே பகவன்! ஈச்வரனே பிரேரணைசெய்து ஜீவனுக்காகக் கருமங்களைச் செய்விப்பவன்; சீவனே அதனைச்செய்பவன் ஆதலின், ஈசுரனிடத்துச் செய்விக்குந்தன்மையும் ஜீவனிடத்துச் செய்யுந்தன்மையுமுளவாம். இவ்வார்த்தை சுருதியினும் ஸ்மிருதியினுங் கூறப்பட்டுளது. சுருதி யிதுவாம் :—

வஸுஉஹ்ரயவஹாய்ர கஉகாரயதிதம் யஉஹ்ரயாஜொகஹ்ரயஉநிநீஷ
வஸுஉஹ்ரயவாஹாய்ர கஉகாரயதிதம்ய உயொநிநீஷதே ॥ [தை।

(பொ-ள்.) பரமேசுரர் எப்புருஷனை இவ்வுலகத்தின் மேலாகிய சுவர்க்கமுதலிய உலகங்களிற் கொண்டுபோக விச்சிக்கின்றாரோ அவனைப் பிரேரித்துப் புண்ணிய கருமத்தைச் செய்விக்கின்றார். அப்பரமேசுரர் எவனை நாகமுதலிய கீழுலகங்களிற்கொண்டுபோக விச்சிக்கின்றாரோ அப்புருஷனைப் பிரேரித்துப் பாவ கருமத்தைச் செய்விக்கின்றார். என்னுமிச்சுருதி ஈசுரனிடத்துப் புண்ணிபாவ கருமங்களின் காரயித்திருத்தன்மையையும் ஜீவனிடத்துக் கர்த்திருத்தன்மையையுங் கூறுகின்றது. ஸ்மிருதி யிதுவாம் :—

"கஇஜ்ஞாஜம்தர ந்ரீஸ்ராயஸாதாநஃ வர்வஉஃவயொஃ।
ஸம்ஸ்ரர வைரிதெ ரமெஷ்வமஃம் வாஸர்ஹ ஜெவவா" ॥

(பொ-ள்.) இவ்வஞ்ஞானியாகிய ஜீவன் தனது சுகத்திலும், துக்கத்திலும் வலியற்றவன். மற்றோர், ஈசுரனுற் பிரேரிக்கப்பட்டுத் தனது புண்ணியபாவவசத்தால் சுவர்க்க நாக முதலியவைகளை யடைகின்றன். எப்புருஷன் புண்ணிய பாவ

கருமத்தைச் செய்கின்றானே, எவன் பிரோசணபண்ணி அப்புண்ணியபாவ கருமங்களைச் செய்விக்கின்றானே, அவ்விருவர்க்கும் அப்புண்ணியபாவகருமங்களின் சம்பந்தம் அவசியமாய் உண்டாமாதலின், அது சீவனிடத்தே கருத்தாத்தன்மையால் ஈசுரனிடத்தே காரயிதாத்தன்மையாலாம். ஆதலின், இவ்வான்மாவே செய்பவருமல்லர் செய்விப்பவருமல்லர். மற்றே, இப்பிரகிருதி வடிவ சுபாவத்தானே சர்வ காரியங்களிலும் பிரவிர்த்திக்கின்றனன் எனத்தாங்கள்கூறியருளியது சுருதிஸ்மிருதிகட்கு மாறுதலின் அசங்கதமாம் என்றிவ்வாறு அர்ச்சுனன் ஆசங்கிப்ப ஸ்ரீ பகவானருளுகின்றார்.

சு-ம். நாதத்தே கஸ்யசிக் வாவம நதெவ ஸுகுருதிழ விஹுஃ।
ஸுஜுாநெநாவ்ருதம் ஜுாநம் தெந முஹ்யந்தி ஜந்தவஃ॥ (15)

ப-ம். 4 ந 5 சூதத்தே 2 கஸ்யசிக் 3 வாவம 9 ந 6 அ 8 ஸவ 7 ஸுகுருதம 1 விஹுஃ 10 ஸுஜுாநெந 11 சூவ்ருதம 12 ஜுாநம 13 தெந 15 முஹ்யந்தி 14 ஜந்தவஃ.

(அ-ம்) ஹே அர்ச்சுன! பரமேசுரன் எஜ்ஜீவனுடைய பாவத்தையாவது புண்ணியத்தையாவது கிரகிப்பதில்லை. மற்றே, அஞ்ஞானத்தால் மறைக்கப்பட்ட ஞானத்தால் இச்சீவன் மோகத்தையடைகின்றான். (15)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எவ்விடத்தும் வியாபகமாதலின் கிரியையின்றிய பரமேசுரன் எஜ்ஜீவனுடைய புண்ணியத்தையேனும் பாவத்தையேனுங் கிரகணஞ் செய்வதில்லை. என்னே? பரமார்த்த திருஷ்டியால் இச்சீவனிடத்தே அப்புண்ணியபாவ கருமங்களின் கருத்தாத்தன்மையின்றும்; ஈசுரனிடத்தும் அப்புண்ணிய பாவங்களின் காரயிதாத்தன்மையின்றுமாதலின்.

சங்கை:—ஹே பகவன்! ஒருகாலும் பரமேசுரனிடத்து உண்மையாய்க் கருமங்களின் காரயிதாத்தன்மையும்சீவனிடத்து கருத்திருத்தன்மையுமில்லாவிடினே, அவ்விருவரிடத்தும் அவ்விரண்டையுங் கூறும் முற்கூறிய சுருதிஸ்மிருதிகள் அசங்கதமாம். அன்றியும், இவ்வுலகத்திலும் சிஷ்டபுருஷன் பரமேசுரப்பிரீதியின் பொருட்டுப் புண்ணியகருமத்தைச் செய்கின்றான் இன்றெனிலோ பயமடைகின்றான் என்னுமுலகவழக்கும் அசங்கதமாம்.

சமாதானம்:—ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார். 'ஸுஜுாநெநாவ்ருதம் ஜுாநம்தெந முஹ்யந்தி ஜந்தவஃ' என. ஹே அர்ச்சுன! ஆவரண விக்ஷேப சக்தியுடைய மாயாவடிவ மித்தையாகிய அஞ்ஞானதமத்தால் மறைபட்ட சிவஸ்வரூப ஜகத்பேதப் பிராந்தியின் அதிஷ்டானமும் நித்திய சுவப்பிரகாச சச்சிதானந்த அத்துவிதியவடிவமும் பரமார்த்த சத்தியவடிவமுமாகிய ஞானவடிவ ஆன்மாவின் அஞ்ஞானத்தால் தனது உண்மைவடிவத்தையுணராத சம்சாரியாகிய இச்சீவன் மோகத்தையடைகின்றான். அதாவது பிரமாதா, பிரமாணம், பிரமேயம், கருத்தா, கருமம், காரணம், போக்தா, போக்கியம், போகம் என்னுமிவ்வொன்பதுவகையான சம்சாரப் பிராந்திவடிவ விக்ஷேபமாகிய மோஹத்தை இச்சீவனடைகின்றான் என்பதாம். இதனாலிப்பொருள் பெறப்பட்டது:—உண்மையில் அகர்த்தா அபோக்தாவடிவ பரமாநந்த அத்துவிதிய ஆன்மாவின் உண்மைவடிவத்தினுணர்வின்மையால் அவிவேகிக்கு இவன்சீவன் இவனீசுவரன் இதுவுலகம் என்பன முதலிய பேதப்பிராந்தி தோற்றுகின்றது. அதாவது, இச்சீவன் புண்ணிய பாவ கருமத்தைச் செய்பவன் ஈசுரன் அதைச் செய்விப்பவன் என்பன முதலிய பேதம் பிரதீதியாகின்ற தென்பதாம். அவ்வஞ்ஞானியின் பிராந்திஞானத்தையே "இவனே புண்ணியகருமத்தைச் செய்விக்கின்றான்" என்பது முதலிய சுருதிஸ்மிருதி

வாக்கியம் அநுவாதமாத்திரஞ்செய்கின்றதேயன்றி பேதப் பிராந்தியை அறிவிப்ப தின்று. ஆகையால், உண்மையில் அத்துவிதவான்மாவையுணர்த்தும் தத்துவமசி முதலியமகாவாக்கியங்கட்கே அங்கமாம் சுருதிஸ்மிருதிவாக்கியங்கள். ஆகவே அச் சுருதிஸ்மிருதிவாக்கியங்கட்கும் ஈண்டு விரோதமில்லை. ஓருரையில் 'ஸஜூாதெநா வ்ருதம்ஜூாநம் தெந முஹ்யந்தி ஜந்தவ:' என்னும் வாக்கியத்திற்குக் கருத்தி கூறப்பட்டுளது:—எங்ஙனம் சக்கரவர்த்தியாகிய மகாராசனுக்குச் சாக்கிரகாலத்தில் யான் சர்வப்பிரசைகளின் ஈசுரன் என்றுண்டாம் ஞானம் நித்திரைவடிவ அஞ் ஞானத்தாலொருகால் மறைக்கப்படில் அம்மஹாராஜன் அச்சொப்பனவத்தையில் பலவகையான துக்கத்தையடைகின்றானே, யான் அத்தியந்தந்தீனன் யான் அத்தி யந்தந்துக்கி என்றிவ்விதமான மோகத்தையுமடைகின்றானே, அங்ஙனமே இச்சீவ னும் யான் பிரஹ்மமாகின்றேன் என்பது முதலிய வேதவாக்கியங்களால் தனது பிரஹ்மத்தன்மையையுணராது ஈசுரனைத் தனக்கு வேறுயுணர்ந்து அதாவது ஈசு ரனைச் சுவாமியாயெண்ணித் தன்னை அவ்வீசுரரின் சேவகனையெண்ணி அடிக்கடி ஜன்மமரணவடிவ மோகத்தையடைகின்றன். இவ்வார்த்தை சுருதியினும் கூறப் பட்டுளது.

ஆ-சு. ஸுயமொநயாம் தெவதா உவாஹெநயாஹாவநெயா ।
ஹரிதிநஸுவெஷு யயாவபொரெவ ஸுஷெவாநாழு ॥
உஷஸ்தமம் கூரூதெ ஸுயதஸ்யஹயம் ஹவதி ।
ஸுதெயாஸுஹ ஸுதயூரொதிய உஹநாநெவ வஸ்யதி ॥

(பொ-ள்.) எந்தப் புருஷன் இத்தேவதை அன்னியம் யானும் அன்னியன் எனப் பின்னமாய்க்கருதி அத்தேவதையைத் தியானிக்கின்றானே, அப்பேதத்தைக் காண்கின்ற புருஷன் தேவதாவடிவத்தையும் தனது வடிவத்தையும் உண்மையா யுணர்ந்திலன். எங்ஙனம் குதிரை எருமை முதலிய பசுக்கள் சிறிதளவு முணர வில்லையோ அங்ஙனமே அப்பேததரிசியும் அத்தேவதைகளுக்குப்பசுவேயாம். பேத தரிசி தேவதைகளுக்குப் பசுவாம் என்னுமிவ்வார்த்தை ஆத்மபுராணத்தின் நான் காவது அத்தியாயத்தில் தத்தியங் அதர்வண தேவராச விந்திர சம்வாதத்தில் விரி வாய்க்கூறினும். எப்புருஷன் ஈசுரனினின்றுந் தன்னைச் சிறிதளவேனும் பேதமா யொப்புகின்றானே அப்பேததரிசிக்கு மிகுந்த பயப்பிராப்தியுண்டாகின்றது. எவன் இவ்வத்துவிதீய பிரஹ்மத்தினிடத்தில் நானுபாவத்தைக்காண்கின்றானே அப்பேத தரிசி புருஷன் மிருத்துவினின்று மிருத்துவையடைகின்றன், அதாவது அடிக்கடி பிறப்பிறப்பை யடைகின்றன் என்பதாம். (15)

(அ-கை.) ஹே பகவன்! எல்லாச் சீவர்களும் அஜ்ஞானத்தால் மறைக்கப்பட்டவர்களாங்கால் இப்பிறப்பிறப்பு வடிவ சம்சார நிவிருத்தி எவ்வா றுண்டாம்? என அர்ச்சுனன் ஆசங்கிப்ப ஸ்ரீ பகவானருளுகின்றார்.

சு-ம். ஜூாதெந தா தஜ்ஜூாநம் யெஷாம் நாஶிதமாத்மந:।
தெஷாமாதித்யவத் ஜ்ஞாநம் ப்ரகாஶயதி தத்பர ॥ (16)

ப-ம். 6 ஜ்ஞாதெந 1 தா 3 தத் 4 ஸஜ்ஞாநம் 2 யெஷாம் 7 நாஶிதம் 5 ஆத்மந: 8 தெஷாம் 11 ஆதித்யவத் 10 ஜ்ஞாநம் 13 ப்ரகாஶயதி 9 தத் 12 பர.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மீண்டும் எப்புருஷனுக்கு அவ்வஜ்ஞானம் ஆன்ம ஞானத்தால் நாசமாகின்றதோ அப்புருஷனுக்கு அவ்வான்மஞானம் இரவிபோன்று பரமான்மாவைப் பிரகாசஞ்செய்கின்றது. (16)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஆவரண விட்சேப சத்தியுடையதும், அநாதியும் அதாவது உத்பத்தியின்றியதும், அநிர்வசனமும், அதாவது சத்து, அசத்து, சதசத்து இம்மூவகைப் பகூஷ்முமின்றியதும் எல்லாத்துக்கங்கட்குங் காரணமும் தனதாசிரயா பின்ன விஷயமுடையதும் எங்ஙனம் இருள் வீட்டைப்பற்றியிருந்து கொண்டு அவ்வீட்டையே மறைக்கின்றதோ, அங்ஙனமே இவ்வஞ்ஞானமும் அவ் வான்மதேவனைப் பற்றியிருந்து அவ்வான்மதேவனையே மறைப்பதும் சாத்திரத் தில் மாயை, அவித்தை, பிரகிருதி, பிரதானம், அவ்வியக்தம், சக்தி என்பன முத லியபெயராற் கூறப்படுவதுமாகிய அஞ்ஞானம் எவ்வதிகாரியின் ஆன்மவிஷயக ஞானத்தால் நாசமாயதோ அதாவது எந்த ஞானம் பிரஹ்ம முணர்ந்த குருவால் உபதேசிக்கப்பட்டதும், வேதாந்த மகாவாக்கிய சன்னியமும், சிரவணமனன நிதி த்தியாசனங்களின் பரிபாகத்தால் நிருமலமான அந்தக்கரணவிருத்தியும், சோத னைபண்ணிய தத், துவம், பதார்த்தங்களின் அபேதவடிவ சுத்த சச்சிதானந்த அகண்டைகரசவஸ்துவை விஷயஞ்செய்வதுமாமோ, அத்தன்மைய நிருவிகற்ப ஆன்ம சாக்ஷாத்காரத்தால் எவ்வதிகாரிக்கு அவ்வஞ்ஞானம் நாசமடைந் ததோ, கருத்திதுவாம்:—சுத்தியில் ரசதப் பிராந்தியின் பின்னருண்டாகிய இது சுத்தியே, வெள்ளியன்று என்னும் சுத்திஞானமானது அச்சுத்தியினிடத்தில் ரசதத்தின் முக்காலத்தினும் அசத்துவடிவமாகிய பாதத்தைச்செய்கின்றதோபால அவ்வான்மஞானமும் அத்துவிதீயப் பிரஹ்மத்தினிடத்தில் அவ்வஞ்ஞானத்தின் முக்காலத்திலும் அசத்துவடிவாகிய பாதத்தைச்செய்கின்றதேயன்றித் தண்டஅடி யானது கடத்தின் நுண்ணியாவத்தைவடிவ துவம்சம்பண்ணுகின்றதோபால அவ் வான்மஞானம் அவ்வஞ்ஞானத்தின் நுண்ணியாவத்தைவடிவ துவம்சஞ்செய்வதி ல்லை. அத்தன்மைய வதிகாரியின் ஆன்மஞானம் உலகப்பிரசித்த சூரியன்போன்று சத்திய ஞானானந்த அனந்தரூப ஒரே அத்துவிதீயப் பரமான்ம தத்துவத்தைப் பிர காசிக்கின்றது. எங்ஙனம் இச்சூரியன் தனது உதயமாத்திரத்தானே இருளனைத் தையும் நீக்கிக்கடமுதலிய பதார்த்தங்களை விளக்குகின்றனனோ, அவ்விருணிவிருத் தியின்பொருட்டு அச்சூரியன் மற்றொன்றின் உதவியை யபேக்ஷிப்பதில்லையோ அங் ஙனமே சுத்தசத்துவத்தின் பரிணமமாதலின் வியாபகமும் பிரகாசமுமாகிய பிரஹ் மஞானமானது தனதுற்பத்திமாத்திரத்தானே காரியத்தோடு அஞ்ஞானத்தை நா சஞ்செய்து அத்துவிதீயப் பரமான்மதத்துவத்தைப் பிரகாசஞ்செய்கின்றது. காரி யத்தோடு அவ்வஞ்ஞானத்தை நிவிர்த்திப்பதில் மற்றொன்றின் உதவியை யபேக்ஷிக் கின்றதில்லை. ஈண்டு, 'தஸ்ஜ்ஞானம் வஸ்ய வ்யகாபயதி' என்னுமிவ்வசனத்தால் அத்துவிதீய சுயம்பிரகாசப் பிரஹ்மத்திற்கு ஞானத்தாற் செய்யப்பட்ட பிரகாசி யத்தன்மைகூறப்பட்டதும், அஞ்ஞானவடிவ ஆவரணநிவிருத்திபூர்வக பிரஹ்மத்தி னபிவியத்தி (விளக்கம்) மாத்திரமென்றறிக. வேதாந்தசாத்திரத்தில் இதையே விருத்திவியாப்தி என்னும் பெயராற் கூறுப. 'ஸஜ்ஞானநாவ்ய தம்ஜ்ஞானம் ஜ்ஞா நேநதத்தஜ்ஜ்ஞானம் யெஷாம் நாஸ்திதேஷாம்' என்னுமிவ்விரண்டு வாக்கியங்க ளால் ஸ்ரீபகவான் அஞ்ஞானத்திற்கு ஆவரணத்தன்மையும் ஞானத்தாற் கேடாந் தன்மையுங் கூறியருளியதால் அவ்வஞ்ஞானத்திற்கு நியாயமதத்தர்கள் உடன்பட் டிருக்கும் ஞானபாவ வடிவத்தன்மை நிராகரித்தருளப்பட்டதாம். என்னை, அபா வமானது ஒரு வஸ்துவையும் மறைக்காது ஞானபாவம் அந்த ஞானத்தானிவிருத் தியுமாகாது. உள்பொருள்கட்கே தம்மூல் நாசப்படுந்தன்மை நாசப்படுத்துந் தன்மை பொருந்தும். ஆதலின், ஞானபாவம் அஞ்ஞானமென்பதில்லை; மற்றோர், யான் அஞ்ஞானி யான் என்னையு மன்னியரையு மறியேன் என்பன முதலிய சாக்ஷி வடிவப் பிரத்தியக்ஷத்தாற் பெறப்பட்ட உளதாம்வடிவமே அஞ்ஞானமாம். 'யெஷாம் தெஷாம்' என்னுமிப்பன்மை முடிபேய்ந்த சாமானியார்த்த வாசகமா கிய எது அது என்னும் இவ்விரண்டு சொற்களால் ஸ்ரீபகவான் பிராஹ்மணர் முத

லிய உத்தம ஜாதிகளாலும், உத்தமவாசிரமங்களாலுந்தான் அவ்வான்மஞான மடையப்படும். அவர் ஞானத்தாற்றான் அஞ்ஞானநிவிருத்தியுமாம், வேறு ஜாதியாலும் வேறு ஆசிரமிகளாலும் ஆன்மஞானமடையப்பட்டாது. அங்ஙனமே ஞானத்தால் அஞ்ஞானநிவிருத்தியுமாகாது. என்றிவ்வாறுய நியமமின்மையைக் கூறியருளினர். மற்றே, சர்வ ஜாதிகளுக்கும் அங்ஙனமே சர்வ ஆசிரமங்களுக்கும் சிரவணமுதலிய சாதனங்களால் ஆன்மஞானப்பிராப்தியும் அங்ஙனமே ஞானத்தால் அஞ்ஞானநிவிருத்தியும் அமையும். இவ்வார்த்தை சுருதியினுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. தஜ்ஜ்ஞாயொஜ்ஞவாநாம் வ்ரதஜ்ஞபுஜ்ஞயத லஜ்ஞஜ்ஞவ ।
தஜ்ஞஜ்ஞவதஜ்ஞஷீ-ஜ்ணாம் தஜ்ஞாஜ்ஞஷ்யாணாம் ॥

(போ-ள்.) தேவதைகளுக்குள் எவ்வெத்தேவதை இவ்வத்துவிதீயப் பிரஹ்மத்தை யான் பிரஹ்மம் எனத் தனது ஆன்மவடிவமா யறிகிறதோ, அவ்வத்தேவதை அஞ்ஞானநிவிருத்தி பூர்வகமாய் பிரஹ்மவடிவமேயாகின்றது. அங்ஙனமே இருஷிகளுக்குள் எவ்விவவர்கள் இவ்வத்துவிதீயப் பிரஹ்மத்தைத் தமது ஆன்மவடிவமா யறிந்தனர்களோ அவ்வவ்விருஷிகள் அஞ்ஞான நிவிருத்தி பூர்வகமாய்ப் பிரஹ்மவடிவமேயாகின்றார்கள். அங்ஙனமே, மனுஷியர்களுக்குள் எவ்விவம் மனிதர்கள் இவ்வத்விதீயப் பிரஹ்மத்தை தமது ஆன்மவடிவமாயறிந்தனர்களோ அவ்வம் ம்நுஷியர்கள் அஞ்ஞானநிவிருத்தி பூர்வகமாய்ப் பிரஹ்மவடிவமேயாகின்றார்கள். என்பது முதலிய சுருதிகள் மநுஷியமாத்திரத்திற்கே ஆன்மஞானப்பிராப்தியும் அவ்வான்மஞானத்தால் மோக்ஷப்பிராப்தியுமாமென்று கூறுகின்றன. ஆதலின், ஆன்மஞானத்திலும் அவ்வான்மஞானத்தாலாம் மோக்ஷப்பிராப்தியிலும் உத்தமஜாதியாசிரமங்களின் நியமம் சிறிதளவுமில்லை; மற்றே, அவ்வான்மஞான மடைதற்குச் சாதனவடிவமாகிய சிரவணத்திலே நியமமுளது. ஆண்டுப் பிராஹ்மண, க்ஷத்திரிய, வைசியராகிய மூன்று வருணத்தார்களும் வேதவாக்கியங்களின் சிரவணத்தால் ஆன்மஞானஞ் சம்பாதிக்கத்தக்கவர்கள். ஏனைய சூத்திரர் முதலியோர்களோ அத்துவிதீயத்தைக் கூறும் புராண முதலியவைகளின் சிரவணத்தால் அவ்வான்மஞானஞ் சம்பாதிக்கத்தக்கது. இச்சிரவண நியமத்தின் பிரக்கிரியை ஆத்மபுராணத்தின் எழாவது அத்தியாயத்தில் விரிவாய்க் கூறிஞும். ஈண்டு, 'ஸஜ்ஞாஜ்ஞாவ்ருதம் ஜ்ஞாநம்' என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் ஆன்மாவினிடத்தில் அஞ்ஞானத்தாலுளதாய மறைப்பைக் கூறியருளினர். 'ஜ்ஞாஜ்ஞநதஜ்ஞுஜ்ஞாநம் யெஷாம்நாஶிதமாத்மந:' என்னு மிவ்வசனத்தால் ஆன்மஞானத்தால் ஆவரண நிவிருத்தியைக்கூறியருளினர். அவ்வஞ்ஞானத்தாலுண்டாகிய மறைப்புமிருவகைத்தாம். ஒன்றே அசத்துவாபாதக ஆவரணமாம். ஏனையதோ, அபாஜ்ஞபாதக வாவரணமாம். அவ்வாவரணம் இருவகைத்தாவதேபோல அவ்வான்மஞானமுமிருவகைத்தாம். அவற்றுள் ஒன்று பரோக்ஷஞானமாம்; மற்றொன்று, அபரோக்ஷஞானமாம். அவற்றுள் அவாந்தாவாக்கியத்தாலுண்டாவது பரோக்ஷமாம்; மகாவாக்கியத்தாலுண்டாவது அபரோக்ஷமாம். அவற்றுள் தத், துவம், பதார்த்த வடிவமாகிய ஈசுவரர்களின் சொரூபமாத்திரத்தைக் கூறும் வாக்கியம் அவாந்தரவாக்கியமெனப்படும். சத்தியம் ஞானம்அனந்தம் பிரம்மம் என்பது முதலிய வாக்கியங்களேபோலும் ஈசுவரர்களின் அபேதத்தைக் கூறும் வாக்கியம் மகாவாக்கியமெனப்படும். தத்துவமஸி அகம்பிரஹ்மாஸ்மி என்பது முதலிய வாக்கியங்களேபோலும். அவற்றுள், பிரஹ்மமில்லை என்னும் பிராந்தியை யுண்டுபண்ணும் முதலாவதாகிய அசத்துவாபாதக ஆவரணமோ பரோட்சாபரோட்ச சாதாரணப் பிரமாணசந்நிய ஞானத்தானே நிவிருத்தியாம். என்னை, எங்ஙனம் மலையில் புகைவடிவ வதுவைக் காண்பதால் இம்மலை தீயுடைத்து என்னுமித்தன்மைய அநுமிதி வடிவ பரோக்ஷஞானந் தோற்றினும் மலையில் தீயில்லை

என்னும் பிராந்தி நிவிருத்தியாகிறதோ அங்ஙனமே சத்தியஞான மனந்தமாகிய பிரஹ்மமுளது என்னும் வாக்கியத்தால் பிரஹ்மத்தின் பரோக்ஷ நிச்சயமுண்டான போதிலும் பிரஹ்மம் இல்லை என்னும் பிராந்தி நிவிருத்தியாகின்றது. பிரஹ்ம முளதாயினும், அது எனக்குத் தோற்றவில்லை என்னும் பிராந்தியை யுண்டாக்குவது அபாஞபாதகாவரணமாம்; அதுவோ யான் பிரஹ்மஸ்வரூபம் என்னும் அபரோக்ஷஞானத்தானே நிவிர்த்தியாகின்றது. பரோக்ஷஞானத்தால் அபாஞபாதகாவரண நிவர்த்தியாவதில்லை. யான் பிரஹ்மஸ்வரூபம் என்னும் ஞானம் வாக்கியத்தாலுண்டாயினும், பத்தாமவன் நீ யாகின்றாய் என்னும் வாக்கியத்தாலுண்டாகும் ஞானம்போல அபரோக்ஷவடிவமேயாம். இது சர்வ வேதாந்த சாஸ்திரங்களிலும் நிச்சயமானதாம். (16)

(அ-கை.) ஹே பகவன்! அவ்வான்மஞானத்தால் பரமான்ம தத்துவம் பிரகாசமாயின் அடையப்படும் பலன் யாது? என்றர்ச்சுனன் ஆசங்கிப்ப ஸ்ரீபகவான் அவ்வான்மஞானத்திற்கு விதேகமுத்திவடிவபலமாம் எனக் கூறியருளுகின்றார்.

சு-ம். தத³ பு³த்³த⁴யஸ்தத³ாத்மாநஸ் தந்நிஷ்டா²ஸ் தத்பராயணாஸ் ।
க³ச்ச²ந்த்யபுநராவ்ருத்திம் ஜ்ஞாநநிர்தூ⁴தகல்மஷாஸ் ॥ (17)

ப-ம். 1 தத³ பு³த்³தயஸ் 2 தத³ாத்மாநஸ் 3 தந்நிஷ்டா²ஸ் 4 தத்பராயணாஸ் 7 க³ச்ச²ந்தி 6 அபுந-ராவ்ருத்திம் 5 ஜ்ஞாநநிர்தூ⁴தகல்மஷாஸ்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவனுடையபுத்தி பரமான்மாவிலே எவனுடையவான்மாப் பரப்பிரஹ்மமோ எவனுக்குப் பரமான்மாவில் நிஷ்டையோ எவனுக்குப் பரமான்மாவே யடையத்தகுமோ எவனுடைய புண்ணியபாவகருமம் ஞானத்தானிவிருத்தியானதோ அவ்வித்துவாகிய சந்நியாசி மறித்தும் வாராத்தன்மையையடைகின்றான். (17)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஞானத்தாற் பிரகாசிதமாகிய சச்சிதானந்தகனப் பரமான்மதத்துவத்தில் வெளிவிஷயத் தியாகபூர்வகமாய் விவேகமுதலிய சாதனங்களின் பரிபக்குவத்தால் பரியவசானத்தையடைந்த அந்தக்காணத்தின் சாக்ஷாத்காரவடிவ விருத்தியையுடையவன் அப்புத்தியெனப்படுவன். அதாவது, எவன் எப்போதும் நிருவிகற்ப சமாதியுடையவனே என்பதாம்.

சங்கை:—ஹே பகவன்! 'தத³ பு³த்³தயஸ்' என்னும் வாக்கியத்தால் சிவனே விருத்திவடிவ ஞானசிரயன் எனத் தோற்றுகின்றனன். பரப்பிரஹ்மமோ அவ்விருத்திவடிவ ஞானத்தின் விஷயமெனத் தோற்றுகின்றது. ஆதலின், சிவனுக்கும் பிரஹ்மத்திற்கும் தம்முள் அறிவது அறியப்படுவதாகிய பேதம் அவசியமாம். ஆண்டு, ஞானசிரயம் அறிவது ஞானவிஷயம் அறியப்படுவதாம்.

சமாதானம்:—ஸ்ரீபகவானருளுகின்றார். 'தத³ாத்மாநஸ்' என ஹே அர்ச்சுன! அப்பரப்பிரஹ்மமே ஆன்மா எவனுக்கோ அவ்வித்துவான் அவ்வடிவினன் எனப்படுகின்றனன். ஆதலின், மாயையாற் கற்பிக்கப்பட்ட அறிவது அறியப்படுவதாந்தன்மை உண்மையாகிய அபேதத்திற்கு விரோதியாகாதாம்.

சங்கை:—ஹே பகவன்! இவ்வித்துவாகிய புருஷனுக்குத் ததாத்மானன் என்னும் விசேஷணந் தங்களாற் கூறியருளப்பட்டது. அது பயனற்றதாம். வெனினின், எவ்விசேஷணம் இவ்வித்துவத் புருஷனை அஞ்ஞானிபுருஷர்களினின்றும் வேறுபடுத்துமோ அதுவே இவனுக்குப் பயனுடையதாம். அவ்வேறுபடுத்துந்தன்மை 'அவ்வடிவினன்' என்னும் விசேஷணத்திலமையாது உண்மையில் அஞ்ஞானிபுருஷனும் பரமான்மவடிவமேயாதலின்,

சமாதானம்:—ஹே அர்ச்சுன! 'அவ்வடிவினன்' என்னும் விசேஷணத்திற்குத் தேகாதிகளிடத்து ஆன்மபுத்தியை நீக்குவதிற் கருத்தாம். ஈண்டிஃது அபிப்பிராயமாம். அஞ்ஞானியோ உண்மையில் பிரஹ்மரூபமாயினும் அப்பிரஹ்மத்தினிடத்து ஆன்மபுத்தி செய்வதின்றும்; மற்றோ, அஜ்ஞன்மவடிவ தேகாதிகளிடத்திலேயே ஆன்மாபிமானம் பண்ணுகின்றான். ஆதலின், அவ்வஞ்ஞானி அவ்வடிவினன் எனக் கூறப்படான். ஞானமுடையவனோ அவ்வஜ்ஞன்மவடிவதேகாதிகளில் ஆன்மாபிமானஞ்செய்வதில்லை. மற்றோ, அப்பிரஹ்மத்தின்கண்ணே ஆன்மபுத்திசெய்கின்றான் ஆதலின், அந்த ஞானமுடைய புருஷனே அவ்வடிவினன் என்னும் பெயராற் கூறப்படுவான். படவே அவ்வடிவினனென்னும் ஞானியின்விசேஷணம் பயனுடைத்தாம்.

சங்கை:—ஹே பகவன்! இலௌகிக வைதிக கருமங்களின் அனுஷ்டானவடிவ விதேகூபமிருக்கும்போது அத்தேகாதிகளின் அபிமான நிவிருத்தியாவதுயாங்ஙனம் மற்றோ ஆகாதாம்.

சமாதானம்:—ஸ்ரீபகவானருளுகின்றார். 'தந்நிஷ்டாஃ' என ஹே அர்ச்சுன! அச்சர்வகருமங்களின் அநுஷ்டானவடிவ விதேகூபத்தை நிவிருத்தித்து அப்பிரஹ்மத்திலேயே நிலைத்திருத்தல் எவர்கட்கோ அவர்கள் அந்நிஷ்டர்களாவர். அதாவது எவர்கள் அச்சர்வகருமங்களையுந் தியாகம்பண்ணி பிரஹ்ம விசாரமொன்றின் கண்ணே பராயணராகின்றார்களோ என்பதாம்.

சங்கை:—ஹே பகவன்! அந்தவந்தச்சுவர்க்க முதலிய பலவிஷயகராகமுளதாக அவ்வப் பலசாதனவடிவ கருமத்தின் றியாகம் எவ்வாறும் மற்றோ ஆகாதாம்.

சமாதானம்:—ஸ்ரீபகவானருளுகின்றார். 'தத்பராயணாஃ' என ஹே அர்ச்சுன! ஓரே பரப்பிரஹ்மத்தை யடையுந்தகுதி எவர்கட்கோ அவர்கள் அப்பராயணர்கள். அதாவது எவர்கட்கு அச்சுவர்க்கமுதலிய பலேச்சையில்லையோ என்பதாம். ஈண்டு, 'தத்வமஸி' என்னும் பதத்தால் ஸ்ரீபகவான் பிரஹ்மசாக்ஷாத்காரத்தைக் கூறியருளினர். 'தத்தாதாஃ தந்நிஷ்டாஃ தத்பராயணாஃ' என்னும் மூன்று பதங்களால் ஸ்ரீபகவான் அப்பிரஹ்மஞானத்தின் சாதனத்தைக் கூறியருளினர். அவற்றுள், 'தத்தாதாஃ' என்னும் பதத்தால் ஸ்ரீபகவான் தேகமுதலிய அநான்மபதார்த்தங்களில் ஆன்மாபிமானவடிவ விபரீதபாவனையின் நிவிருத்தியைப் பலமாகவுடைய பரிபக்குவமாகிய நிதித்தியாசனத்தைக் கூறியருளினர். 'தந்நிஷ்டாஃ' என்னும் பதத்தால் சர்வகருமங்களின் தியாகபூர்வகப் பிரமாண பிரமேயத்துள்ள அசம்பாவனை நிவிருத்தியைப் பலமாகவுடைய பரிபக்குவ சிரவண மனனவடிவ வேதாந்தவிசாரத்தைக்கூறியருளினர். 'தத்பராயணாஃ' என்னும் பதத்தால் இவ்வுலக பரவுலக விஷயசுகத்தில் தீவிர வைராக்கியத்தைக் கூறியருளினர். அவற்றுள், பின் பின்னுள்ள சாதனத்திற்கு முன் முன்னுள்ள சாதனங் காரணமாம். பிரஹ்மசாக்ஷாத்காரத்திலோ நிதித்தியாசனங் காரணம் அதில் சிரவணமனனவடிவ வேதாந்தவிசாரங் காரணம். அதில் வைராக்கியம் காரணம், இவ்வாறு தத்புத்திகள், தத்வடிவினர்கள், தன்னிஷ்டர்கள், தத்பராயணர்கள் என்னுமிந்நான்கு விசேஷணத்தோடுகூடிய சந்நியாசிகளோ மீண்டுஞ் சரீரசம்பந்தமின்மைவடிவ அபுனராவிருத்தியையடைவர்; அதாவது விதேகமுத்தியை யடைவர் என்பதாம்.

சங்கை:—ஹே பகவன்! ஒருதாம் முக்தரையினும் அவ்வித்வானுக்கு மீண்டும் தேகசம்பந்தமில்லாதிதென்னை?

சமாதானம்:—ஸ்ரீபகவானருளுகின்றார். 'ஜ்ஞானாக்னிதக்தகர்மாணம்' யான் பிரஹ்மஸ்வரூபம் என்னும் ஞானத்தால் மூலத்தோடு நிவிருத்தியடைந்தது மறித்துந் தேகசம்பந்தத்தின் காரணவடிவ புண்ணிய பாவ கல்மிஷம் எவனுக்கோ

அவன் ஞான நிர்த்தூத கல்மிஷனுவன். அத்தன்மைய வித்வத் புருஷன் மறித்துஞ் சரீரத்தையடையான். ஆன்ம சாக்ஷாத்காரத்தால் அவ்வித்துவானுகிய புருஷனுக்கு அனுதியாகிய அஞ்ஞான மொழியவே அஞ்ஞானத்தின் காரியமாகிய புண்ணியபாவமும் நாசமாகின்றது. அதன் வசத்தானே இச்சீவனுக்கு மறித்தும் தேகாந்தரப் பிராப்தியாகின்றது. அது நாசமாகவே அவனுக்கு மறித்தும் வேறு தேகப் பிராப்தியாதல் பாங்ஙனம்? மற்றே, ஆகாதாம் என்பது கருத்தாம். (18)

(அ-கை.) ஆண்டு 'தத்ர ஸ்யஹ்ஹாதாஹ', என்னும் பூர்வ சுலோகத்தில் தேகம் விழுந்ததின்பின்னர் ஆன்மஞானத்திற்கு விதேக கைவல்லிய வடிவபலன் கூறியருளினர். இப்போது ஸ்ரீ பகவான் பிரரப்த கருமவசத்தால் அத்தேக முளபோதும் அவ்வான்மஞானத்திற்குச் சீவன் முத்திவடிவ பலத்தைக் கூறியருளுகின்றார்.

சு-ம். விஜ்ஞாவிநயஸம்வந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்தினி।
ஸுநி சைவ ஸ்வபாகே ச பண்டிதாஃ ஸமதர்ஸிநஃ ।

ப-ம். 2 விஜ்ஞாவிநயஸம்வந்நே 3 ப்ராஹ்மணே 4 கவி 5 ஹஸ்தினி 7 ஸுநி 6 அ 11 வைவ 9 ஸ்வபாகே 8 அ 1 பண்டிதாஃ 10 ஸமதர்ஸிநஃ. (18)

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஞானமுடைய புருஷன் வித்திபாவினயத்தோடு கூடிய பிராஹ்மணனிடத்திலும் கோவின் கண் ணும் யானையிடத்தும் நாயிடத்தும் சண்டாளனிடத்தும் சமபார்வையுடையவனுகின்றான்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! வேதார்த்தத்தின் உண்மைஞான வடிவம் வித்தையாம்; அல்லது, அத்துவிதிய பிரஹ்மப்பிரதிபாதனஞ்செய்யும் பிரஹ்மவித்தைவடிவம் வித்தையாம்; அதையடைந்தும்அகங்காரமின்மை விநயமாம். அவ்விரண்டோடு கூடிய எவரினும்மேலாகிய சாத்துவிகன் பிராஹ்மணன் அவனினும் மத்திமமாய்ச் சமஸ்காரமின்றிய இராஜசமுடையது கோ மிகுந்த தமோகுணமுடையது யானை, நாய், சண்டாளன் அதாவது முறைப்படி உத்தம மத்தியம அதமவடிவ சாத்துவிக முறைப்படி ராசததாமதம் என்னும் மேல் கீழாகிய பிராணிகளை அந்த ஞானி சமமாய்ப் பார்க்கின்றான் என்பதாம். அதாவது, அச்சத்துவாதி குணங்களாலும் அக்குண ஜந்திய சமஸ்காரங்களாலும் பரிசம் பண்ணப்படாத பரப்பிரஹ்மத்தின் பெயர் சமம் அப்பிரஹ்மத்தை வித்துவான் எல்லாவிடத்துங் காண்கின்றான் என்பதாம்; இவ்வார்த்தை ஏனைய நூல்களிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. ஸுஹ்ருந்மித்ரார்யுதாஸீநமத்யஸ்தத்வேஷ்யபந்துஷு ஸாதுஷ்வபி ச பாபேஷு ஸமபுத்திர்விஸிஷ்யதே ॥

(போ-ள்.) சத்து சித்து ஆநந்தம் நாமம் ரூபம் இவ்வைவகை பஞ்சம் யாண்டும்விபாகம், அவற்றுள் முந்தியமூன்றம்சமும் பிரஹ்மரூபமாம்; அந்திய இரண்டம்சமும் உலகரூபமாம். இங்ஙனம் வித்துவான் எவ்விடத்தும் சச்சிதாநந்த வடிப் பிரஹ்மத்தையே பார்க்கின்றான். மிகுந்த சுத்தமாகிய கங்கை நீரிலும், தடாக நீரிலும், மிகுந்த நிஷித்தமாகிய கள்ளின்கண் ணும், மிகுந்த அசுத்தமாகிய மூத்திரத்தும் பிரதிபிம்பித்த சூரியன் அந்நீர் முதலியவைகளின் குணதோஷசம்பந்தமுடையவனுகாததேபோலத் தனது சிதாபாசவாயிலாக மேல் கீழாகிய சர்வ வுபாதிகளிலும் பிரதிபிம்பித்த பிரஹ்மத்தையும் அவ்வுபாதிகளின் குணதோஷங்கள் சம்பந்தியா என்றிவ்வாறு நிரந்தரம் விசாரஞ்செய்து அவ்வித்துவான் யாவற்றிலுஞ் சமபார்வையால் இராகத்துவேஷமின்றிப் பரமாநந்தத்தின் ஸ்பூர்த்தியால் சீவன் முத்திச் சுகத்தையே எப்போது மனுபவிக்கின்றான். (18)

(அ-கை.) ஹே பகவன்! ஒன்றற்கொன்று விஷமசுபாவத்தையுடைய சாத்துவிக ராஜத தாமதர்களாகிய பிராணிகளிடத்தில் சமத்துவபுத்திபண்ணுவதின் நிஷேதம் தருமசாத்திரத்திற் கூறப்பட்டிருக்கின்றது. ஆண்டுக்களதமஸ்மிருதி. 'தஷ்யாந்நஷொஜ்யம்ஹவதி வஷாவஷாஹ்யாம் விஷஷவஷெவஜாதஃ' (பொ-ள்.) நான்கு வேதத்தின் ஞாதவடிவத்தன்மையாலும் சதாசாரப் பிரவிருத்தித்தன்மையாலுஞ் சமமாகிய இரண்டு பிராஹ்மணர்களில் எவன் ஒருவனை வஸ்திராலங்காரம் அன்ன முதலியவைகளின் தான பூர்வகமாய் எவ்வண்ணம் பூசித்தானோ, அவ்வண்ணம் மற்றொரு பிராஹ்மணனுக்குச் செய்யாது குறைத்துச் செய்தனனோ ஒரு பிராஹ்மணன் நான்கு வேதத்தையுங் கூறுபவன் சதாசாரமுடையவன். மற்றொருவன் சிறிது வேதங்கூறுபவன் சதாசாரமின்றியவன். இவர்களை எவன் வஸ்திராலங்காரம் அன்னமுதலிய தான பூர்வகம் சமானமாய்ப் பூசிக்கின்றானோ, அப்பூஜை பண்ணும் புருஷனுடைய அன்னத்தைச் சிஷ்ட புருஷன் போஜனஞ் செய்யக் கூடாது. அன்றியும் சமபுருஷர்களுக்கு விஷமபூஜையும், விஷம புருஷர்களுக்குச் சமபூஜையும் பண்ணுவானுக்குத் தருமசாஸ்திரத்தில் தோஷப்பிராப்தியும் கூறப்பட்டிருக்கிறது. ஆண்டுத் தருமசாஸ்திரம் 'வஜயிதாவ்யதிவதி விஷஷகுவ்ருத யஷ்டாஜுஹோதீயதெ ஜதி' (பொ-ள்.) பூஜைபண்ணும் புருஷன் சமவிஷமத்தன்மையை விசாரியாது தருமம், தனம் இன்றியவனாகின்றான். என எப்போதும் பிராஹ்மணன், பசு, யானை, நாய், சண்டாளன் முதலிய சர்வ மேற்கீழாகிய பதார்த்தங்களிடத்தில் சமபுத்திபண்ணும் பிரஹ்மஞானியாகிய சந்நியாசி திரவியந்தையும் அன்னத்தையும் கிரகணம்பண்ணுதலின், அவனிடத்தில் உண்ணப்படாத அன்னத்தன்மையுந் தனமின்மையும் இயல்பாகவேயுளது. ஆயினும் அச்சமபுத்தியால் அச்சந்நியாசியிடத்தும் தருமத்தின் நாசவடிவதோஷம்அவசியமுளதாம். அன்றியும் உண்மையாய் ஆராய்ந்துபார்க்கிலோ ("அவனுடைய அன்னம் போஜனஞ்செய்யத்தக்கதன்று") என்னும் வசனத்தாற்கூறிய உண்ணத்தகாதவன்னத்தையும் அச்சமபுத்தியுடைய புருஷனிடத்து அசுத்தன்மையால் பாவோற்பத்திக்கே உபலக்ஷகமாம். அப்பாவோற்பத்தி அச்சந்நியாசியிடத்தும் சம்பவித்தல்கூடும். தவமுடையோர்க்குத் தவமே தனமாதலின், அத்தவவடிவ தனத்தின் நாசமும் அவரிடத்துச் சம்பவமாதல்கூடும். கூடவே எல்லாவிடத்தும் சமதரிசியாகிய பண்டிதபுருஷன் சிவன்முத்தனவன் எனத் தாங்கள் கூறியருளியது சம்பவியாது என்று அர்ச்சுனனுசங்கிப்ப ஸ்ரீபகவானருளுகின்றார்.

சு-ம். ஊஹெவ தெஜி-ருதஷுமெ-ரு யெஷாம் வாஜ்ஞெ ஷ்ருிதம்உகஃ।
நிஜெ-ராஷம்ஹி வஉம் ப்ரஹ்ம தஷ்டாஜ் ப்ரஜ்ஞ ஹணி தெஷ்ருிதாஃ॥ (19)

ப-ம். 6 ஊஹ 7 வஅவ 5 தெதஃ 9 ஜிதஃ 8 வஅ-ருஃ 1 யெஷாம் 3 வாஜ்ஞெ 4 ஷ்ருிதம் 2 உகஃ 12 நிஜெ-ராஷம் 10 ஹி 13 வஉம் 11 ப்ரஹ்ம 14 தஷ்டாக் 16 ப்ரஹ்மணி தெ 17 ஷ்ருிதாஃ

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எப்புருஷனுடைய மனம் பிரஹ்மபாவத்தில் நிலைத்திருக்கின்றதோ அப்புருஷன் இச்சீவிதகாலத்திலே இத்துவிதப் பிரபஞ்சத்தைக் கடந்தவனாகின்றான்; எதனால் அப்பிரஹ்மம் நிர்த்தோஷமாமோ சமமோ அதனால் அச்சமத்தைக் காண்பவன் அப்பிரஹ்மத்தின்கண்ணே நிலைக்கின்றான்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஒன்றற்கொன்று விஷமசுபாவமுடைய சர்வபூதங்களிடத்தும் பிரஹ்மம் சச்சிதானந்தவடிவத்தால் சமமாகவேயிருக்கின்றது. அத்தன்மைப் பிரஹ்மபாவத்தில் எவ்வித்துவானுடைய சுத்தமனம் நிலைத்தோ அச்சமதரிசியாகிய பண்டிதன் இச்சீவனகாலத்திலே இத்துவிதப்பிரபஞ்சத்தைக் கடந்தவனாவன். அதாவது, இச்சர்வ துவைதப்பிரபஞ்சத்தையும் பாதம் பண்

ணினவன் என்பதாம். சீவனகாலத்திலே அவ்வித்துவான் இத்துவிதப்பிரபஞ்சத்தைக் கடந்தனனென்னின் இத்தேதகம் விழுந்தபின்னர் அவ்வித்துவான் இத்துவைதப்பிரபஞ்சத்தைக் கடக்கின்றுன் என்பதில் கூறற்பாலதென்னையுளது? எக்காரணத்தால் அப்பரப்பிரஹ்மம் நிர்த்தோஷமும் சமமுமாமோ அதாவது அப்பரப்பிரஹ்மம் ஜன்மமரணமுதலிய விகாரமின்றியதும் கூடத்த நித்தியவேகரச அத்துவிதீயரூபமுமாமோ; அக்காரணத்தால், அவ்வித்துவானுகிய புருஷன் அவ்வத்துவிதீயப் பிரஹ்மத்தினிடத்தில் அபேதரூபமாய் நிலைக்கின்றுன். ஈண்டு ஸ்ரீபகவானுடைய திருக்கருத்திதுவாம்:—வஸ்துவினிடத்தில் துஷ்டத்தன்மையானது இருவகையாலாம் ஒன்ரே இயல்பாய் துஷ்டமின்றிய பொருளாயினும் யாதானுமொரு துஷ்டவஸ்துவின் சேர்க்கையால் துஷ்டத்தன்மையதாகும். இயல்பானே தோஷமின்றிய கங்கைநீர் மூத்திரவிடத்தின்சேர்க்கையால் துஷ்டமாகின்றதேபோலும்; மற்றதோ வஸ்துவினிடத்தில் இயல்பானே துஷ்டத்தன்மையாம். மூத்திரமுதலிய மலினபதார்த்தங்களில் இயல்பானே துஷ்டத்தன்மை யிருப்பதேபோலும் ஆண்டு இயல்பாய்த் தோஷமுடைய நாய் முதலியவைகளைப் பரிசஞ்செய்துகொண்டிருக்கும் பிரஹ்மம் அவைகளின் தோஷங்களால் அவசியந் துஷ்டத்தன்மையையடையும் என விசாரமின்றிய மூடபுருஷர்கள் அவ்வத்துவிதீயப் பிரஹ்மத்தினிடத்தில் அத்துஷ்டத்தன்மையை சம்பாவணைபண்ணினும் அப்பிரஹ்மம் சர்வதோஷங்களுமின்றியதாம் அப்பிரஹ்மம் ஆகாசம்போல அசங்கமாதலின் ஒரு தோஷத்தின் பரிசமுமற்றதாம்.

ஆ-சு. ꣘ꣀꣿꣁꣾꣻꣾꣿꣁꣾꣻꣾꣿꣁꣾꣻꣾ

'ஸஶாஸஶாஹ்யாம் விஷஸஸ்ஜைவ ஜாதஃ' என்னும் வாக்கியங் கூறப்பட்டிருக்கி றது. அதன்பின்னர் பூசிப்பவன் சமத்தன்மை விஷமத்தன்மையை விசாரியாது தனமும் தருமமும் இன்றியவனுகின்றான் என்றிவ்வாறு உபசம்ஹாரம் பண் ணப்பட்டிருக்கின்றது அந்த உபக்ரம உபசம்ஹார வாக்கியங்களால் அவித்துவா னுகிய கிருகஸ்தனே தோற்றப்படுகின்றான். என்னை எவ்வஸ்து யாண்டுப் பிராப்த மாமோ அவ்வஸ்துவிற்கே நிஷேதம் ஆண்டாம்; அப்பிராப்தவஸ்துவின் நிஷேத மின்றும். அந்நம், தனம், இவற்றின் சங்கிரகம் கிருகஸ்த புருஷனிடத்தே பிராப்த மாம் சந்நியாசியினிடத்து அஃதின்று. ஆதலின், சமத்திற்கு விஷமபூஜையும் விஷமத்திற்குச் சமபூஜையும் பண்ணுகின்ற புருஷனுடைய அந்நம் போஜனஞ் செய்யத்தகுதியதன்று. அவ்வாறு பூஜிப்பவன் தனம், தருமம், இன்றியவனுகின்றான் என்னு மிவ்விதமாகிய நிஷேதம் அவித்துவானுகிய கிருகஸ்தனிடத்தே அமை கின்றது அந்தப்பிரஹ்மஞானியாகிய சந்நியாசியினிடத்தின்று. அன்றியும் அன்னம் போச்சியம் என்னும் வாக்கியத்திற்கு முக்கியார்த்தத்தையொழித்து அவ்வாக்கி யத்தால் பூமோபாற்பத்தியைக்கொள்வதும், தனம் என்னுஞ் சத்தத்திற்குச் சுவர்ண முதலிய முக்கியார்த்தத்தையொழித்து அச்சத்தத்தால்தவத்தைக்கொள்வதும்முற் றும் அசங்கதமாம்; இதனுலிப்பொருள்பெறப்பட்டது. எங்ஙனம் சுவர்ணமயமாகிய தேவதைகளின் பிரதிமைகளிடத்தும் அவற்றின் பொற்சிம்மாசனத்தும் சுவர்ண திருஷ்டியுடைய புருஷன் சமானத்தன்மையைக் காண்கின்றானே, சுவர்ண திருஷ் டியின்றிக் கேவலம் ஆகார (வடிவ) திருஷ்டியையுடைய பூஜை பண்ணும் புருஷன் அவ்விரண்டினிடத்து மிகுந்த விஷமத்தன்மையைப் பார்க்கின்றானே அங்ஙனமே பிரஹ்மஞானியாகிய வித்துவான் அந்தப் பிராஹ்மணன் கோ, யாஜை, நாய், சண்டா ளன் இவை முதலிய பதார்த்தங்களில் ஒரே பரிபூரணமாகிய பிரஹ்மத்தையேபார்க் கின்றான். அஞ்ஞானியோ அப்பதார்த்தங்களினிடத்தும் மிகுந்த விஷமத்தன்மை யைப் பார்க்கின்றான். ஆதலின், ஸ்மிருதியானது பிராந்தியாற் செய்யப்பட்ட நியூ னாதிகத்தன்மையை விஷயஞ்செய்கின்றது. 'விஜ்ஞாவிதயஹம்வெத்ர' என்னும் ஸ்ரீ பகவான் வாக்கியமோ பரமார்த்த வஸ்துவை விஷயஞ்செய்வதாதலின், அம்மிரு திக்கு ஈண்டு விரோதமின்றும். (19)

(அ-கை.) எதனுல் அப்பரப்பிரஹ்மம் நிர்த்தோஷமும் யாண்டும் சமமு மாமோ அதனுல் அதனைத் தனது ஆன்மவடிவமாயுணர்ந்து அப்பிரஹ்மஞானியா கிய புருஷன் தானும் இராகத்துவேஷமின்றியிருக்கின்றான் என்னும் அர்த்தத்தை ஸ்ரீபகவான் இப்போது கூறியருளுகின்றார்.

சு-ம். ஈவ்ரஹ்மஷ்யஃ வ்ரியம்வ்ராவ்ய தொ ஜிஜ்ஞே வ்ராவ்ய ஆவ்ரியம் ।
ஷ்டிரபை²ஜிரஹம்ஸ²மோஜஃ ப்ரஹ்வி²ஜ ஹ்ருணி ஷ்டிதஃ ॥ (20)

ப-ம். 3 ஈ 4 வ்ரஹ்மஷ்யஃ 1 வ்ரியம் 2 வ்ராவ்ய 8 ஈ 9 உஜிஜ்ஞே 7 வ்ராவ்ய 5 அ 6 ஊவ்ரியம் 10 ஷ்டிரபை²ஜிஃ 11 ஊஹம்ஸ²மோஜஃ 12 ப்ரஹ்வி²ஜ 13 ப்ரஹ்ருணி 14 ஷ்டிதஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அவ்வித்துவானுகியபுருஷன் பிரியவஸ்துவை யடைந்து சந்தோஷப்படுவதில்லை. அங்ஙனமே அப்பிரியவஸ்துவையடைந்து கிலேசப்படுவதில்லை. எக்காரணத்தால் அவ்வித்துவான் ஸ்திரபுத்தியோ மோக மற்றவனே பிரஹ்மஞானியோ பிரஹ்மத்தினிடத்திலே நிலைபெற்றவனே. (20)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சமதரிசனமுடைய வித்துவானுகிய சந்நியாசி சுக த்தைக்கொடுக்கும் பிரியவஸ்துவையடைந்து சந்தோஷப்படுவதில்லை. துக்கத்தைக் கொடுக்கும் அப்பிரிய வஸ்துவையடைந்து கிலேசப்படுவதில்லை. இவ்விரண்டை

யும் தனது பிராரத்தகருமத்தின் பலவடிவமாயறிந்து எப்போதும் ஏகரசமாக வேயிருப்பன். இவ்வர்த்தமானத்தும், 'ஔவெஷ நாஜிழஉஸ் லுவெஷாவிம தஷ்யஹம்' என்னுஞ் சுலோகத்தில் முன்விரிவாய்க் கூறியருளப்பட்டன. பிரியாப் பிரிய வஸ்துவை யடைந்தும் சந்தோஷ விஷாதமின்மை என்பது முதலிய ஜீவன் முத்த புருஷனுடைய இயல்பாகிய சரிதத்தை முமுட்சு ஜனங்கள் பிரயத்தன பூர்வகமாய்ச் சம்பாதிக்கவேண்டும் என்பதை அறிவுறுத்தி யருளற்பொருட்டே ஸ்ரீ பகவான் 'நவ்யஹ்யஷ்யஸ் நொஜிஜெஸ்' என்னு மிரண்டுபதங்களிலும் விதி வாசகமாகிய லிங் முயற்சியைக் கூறியருளினரன்றி சீவன்முத்தரிடத்து அவ்விதி வசனமின்றும். எல்லாவிடத்தும் அத்துவிதீயமாகிய ஆன்மாவைப்பார்க்கின்ற அறி ஞனுக்குத் தன்னிற் பின்னமாய்ப் பிரியாப்பிரிய வஸ்துப்பிராப்தியில்லை. உலகத் தில் தன்னிற் பின்னமாயறியப்பட்ட வஸ்துவே சந்தோஷ விஷாதத்திற்குக் கார ணமாம். தனதான்மா ஒருவர் சந்தோஷ விஷாதத்திற்குங் காரணமாவதில்லை. ஆத லின், பிரியாப்பிரிய வஸ்துவையடைந்தும் அறிஞன் சந்தோஷ விஷாதத்தையடை வதில்லை என்பது கருத்து. இப்போது எவ்வத்துவிதீய ஞானத்தால் அவ்வித்துவா னகிய புருஷனுக்குச் சந்தோஷ விஷாதமடையப்படுவதில்லையோ சாதன பூர்வகம் அவ்வான்மஞானத்தைக் கூறியருளுகின்றார். 'ஷ்ரிஸவை ஶ்ரிஸஹம் ஔபொ வ்ரஹ விஷ ஹணிஷ்யிதஃ' என. ஸ்திரமாக, சந்நியாச பூர்வகமாக வேதாந்த வாக்கியங் களின் விசார பரிபக்குவத்தால் சம்சயமில்லாமல் பிரஹ்மத்தினிடத்தில் புத்தி எவ னுக்கோ அவன் ஸ்திர புத்தியாம். அதாவது சிரவணத்தின் பலவடிவமாகிய பிர மாணத்திலுள்ள அசம்பாவனை நிவிருத்தி, மனனத்தின் பலவடிவமாகிய பிரமே யத்திலுள்ள அசம்பாவனை நிவிருத்தி என்னும் இவ்விரண்டு பலத்தையுமெவன் அடைகின்றானோ அவன் என்பதாம்.

சங்கை :—ஹே பகவன்! அவ்விரண்டசம்பாவனையுமின்றிய புருஷனுக்கு விபரீதபாவனைவடிவப் பிரதிபந்தத்தால் ஆன்மசாக்ஷாத்காரமுண்டாகாதன்றே?

சமாதானம் :—ஸ்ரீ பகவான் நிதித்தியாசனத்தைக் கூறியருளுகின்றார். 'சு ஹம்ஸஃஔபொ' என. ஆண்டு, அநான்மாகார விஜாதீய விருத்திகளின் வியவதானமின் றிய ஆன்மாகார சஜாதீய விருத்திப் பிரவாஹத்தின் பெயர் நிதித்தியாசனமாம். அதன் பரிபக்குவத்தால் விபரீதபாவனைவடிவ மோகமின்றிய புருஷன் அசம்மூட னைவன். ஈண்டு, வேதாந்தநூல் சீவப்பிரஹ்மங்களின் அபேதத்தைக் கூறு கின்றதா அல்லது, பேதத்தைக் கூறுகின்றதா என்னும் ஐயப்பாட்டின்பெயர் பிரமாணகத அசம்பாவனையாம். இச்சீவான்மாப் பிரஹ்மவடிவமா, அல்லவா என் பது முதலியவையப்பாடுகளின் பெயர் பிரமேயகத அசம்பாவனையாம். தேக முத லியவைகளில் ஆன்ம புத்தியின் பெயர் விபரீதபாவனையாம். இவ்வசம்பாவனை விப ரீதபாவனைகள் ஆன்மஞானத்திற்குத்தடையாம். இவைகள் சிரவண மனன நிதித் தியாசனத்தால் நிவிருத்தியாங்கால் சர்வப் பிரதி பந்தங்களுமின்றியவனுய்ப் பிரஹ் மஞானியாகின்றான். அதாவது யான் பிரஹ்மவடிவம் எனப்பிரஹ்மத்தைத் தன தான்மவடிவமாய்ச் சாக்ஷாத்கரிக்கின்றான் என்பதாம். அதன் பின்னர் சமாதியின் பரிபக்குவத்தால் அவ்வறிஞன் அந்நிர்த்தேதாஷமாகிய சமப்பிரஹ்மத்தின்கண்ணே அபேதமாய் நிலைக்கின்றான். பிரஹ்மபின்னமாகிய பதார்த்தத்தினிலைப்பதில்லை. இவ்வாறு பிரஹ்மத்தின்கண் ணிலைத்த அவன் சீவன்முத்தனெனப்படுகின்றான். திதப்பிரஞ்ஞனெனவும் படுகின்றான். அத்தன்மைய சீவன்முத்தனுக்குத் துவைதப் பிரபஞ்சப் பார்வையின்மையின் பிரியாப் பிரிய வஸ்துவடையப்படினும் சந்தோஷ விஷாதமில்லையெனக் கூறியருளிய தது தகுதியேயாம். சாதக முமுக்ஷுக்கட்கோ துவைததரிசனமுளதேனும் விஷயங்களின் தோஷதிருஷ்டியால் சந்தோஷ விஷா தம் பிரயத்தனத்தால் நீக்கற்பாலதாம்.

(அ-கை.) ஹே பகவன்! சத்தமுதலிய பாகிய விஷயங்களின் பிரீதியானது முன்னர் அநேக ஜன்மங்களில் அனுபவிக்கப்பட்டதாதலால், மிக்க வலியுடையதாதலின் அப்பாகிய விஷயங்களில் மனம் பொருந்திய புருஷனுக்குச் சர்வ திருஷ்ட சுகங்களின்றிய அலௌகிகப் பிரஹ்மத்தில் ஸ்திதமாதல் யாங்ஙனமாம்? மற்றோரு, ஆகாதம் அன்றியும், பிரஹ்மம் பரமாநந்தவடிவமாதலின் பாகிய விஷயங்களின் பிரீதிநீக்கத்தால் அப்பிரஹ்மத்தில் அப்புருஷனுக்கு நிலைத்தல் சம்பவமாதல்கூடும் எனத் தாங்கள் கூறியருளுவதும் அசம்பவமாம். என்னை, அப்பிரஹ்மாநந்தம் அநுபவமாதலின்மையின், அப்பிரமாநந்தத்திற்குச் சித்தநிலைத்தற் கேதுவாந்தன்மை பொருந்தாது. அநுபவித்த ஆநந்தமே சித்தநிலைத்தற்குக் காரணமாம் என்று அர்ச்சுனனது சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் அருளுகின்றார்.

சு-ம். ஬ாஹ்யஸ்பர்ஶேஷ்வஸக்தாத்மா விந்த்யாத்மநி யத்ஸுக²ம் ।
ஸ ப்³ரஹ்மயோக³யுக்தாத்மா ஸுக²மக்ஷயமஶ்நுதே ॥ (21)

ப-ம். 1 ஬ாஹ்யஸ்பர்ஶேஷு 2 ஸுஸக்தாத்மா 6 விந்த்யாதி 3 ஸுக²ம் 4 யத் 5 ஸ்வம்
7 ஸ: 8 ப்³ரஹ்மயோக³யுக்தாத்மா 10 ஸ்வம் 9 அக்ஷயம் 11 அஶ்நுதே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சத்தமுதலிய பாகிய விஷயங்களில் ஆசத்தியின்றிய புருஷன் அந்தக்காரணத்தினுள்ள சுகத்தையடைகின்றான். இச்சையற்ற பிரஹ்மயோகத்தைப்பொருந்திய மனமுடையோன் கேடிலாச் சுகத்தையும் அடைகின்றான். (21)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சுரோத்திரமுதலிய இந்திரியங்களாற் கிரகிக்கத்தக்க சத்தமுதலிய விஷயங்கள் அந்மயஸ்துவின் தருமமானதால் பாகியமெனப்படுகின்றன. அத்தன்மைய சத்தமுதலிய வெளி விஷயங்களில் ஆசத்தியடையாத சித்தமுடைய புருஷன் திருஷ்ணையின்றியவனுதலின் மிக்க விரத்தனுய்த் தனதந்தக்காரணத்தினுள்ள வெளி விஷயங்களின் அபேக்ஷையின்றிய வுபசமவடிவ சுகத்தையே நிருமல அந்தக்காரணவிருத்தியால் அநுபவிக்கின்றான். இவ்வார்த்தை பாரதத்தினுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. யதா³ காமாந்மநோக³தாந் யதா³ த்வ்யம்ஸநாத்³ஹ்ருʼதி³ ।
தத³ாத்மந்யேவ மநோவஶ்யம் ஸ்தி²தப்ரஜ்ஞஸ்ததோ³ ப⁴வேத் ॥

(பொ-ள்.) ஈண்டு, காமசந்நியசுகம் சுவர்க்கமுதலிய உலகங்களினுள்ள மிகுந்த திவ்யசுகம் அனைத்தும் திருஷ்ணைநிவிருத்தியாற் றோன்றுஞ் சுகத்தின் பதினறிலோர்பாகத்திற்குஞ் சமமாகாது. அல்லது, 'ஆன்மாவில்' என்னும் பதத்தால் பிரத்தியக்கான்மாவைக் கொள்ளும்பக்ஷத்தில் அவ்வாக்கியத்திற்கிப்பொருள் செய்யத்தக்கது. துவம்பதார்த்தவடிவப் பிரத்தியக்கான்மாவினிடத்திலுள்ள சொரூபவடிவ சுகமோ சுழுத்தியவஸ்தையில் சர்வப் பிராணிகட்கும் அநுபவமாகின்றது. அச்சுகம் பாகியவிஷயங்களின் ஆசத்திவடிவப் பிரதிபந்தகவசத்தாற் றோற்றுவதில்லை. அச்சொரூபவடிவ சுகத்தை அறிஞன் பாகியவிஷயங்களின் ஆசத்தி அபாவத்தால் அடைகின்றான். அல்லது, அவ்வித்துவான் கேவலம் துவம்பதார்த்த ஆன்மாவின் சுகத்தையேயடைவதில்லை. மற்றோரு, தத்பதார்த்தத்தின் ஏகத்துவாநுபவத்தாற் பூரணசுகத்தையுமநுபவிக்கின்றான். இவ்வர்த்தத்தை ஸ்ரீ பகவான் 'ஸ்ப்ரு²ஹயொ³ய்கா³தா ஸ்வ ஏகா³த்மயோ³கா³தா' எனக் கூறியருளினர். பரமான்மவடிவமாகிய பிரஹ்மத்தினிடத்திலுண்டாஞ் சமாதிவடிவமாகிய யோகத்திற்குப் பிரஹ்மயோகமெனப் பெயர். அதனைநாடுகூடிய ஆத்மா, அந்தக்காரணம் எவனுக்கோ அதாவது அதன்கண்ணே மிகப் பொருந்திய மனமுடையோனுக்கோ

பிரஹ்மயோக யுக்தான்மா எனப் பெயர். அல்லது, பிரஹ்மசத்தத்தால் தத்பதார்த்தங் கொள்ளற்பாலது. அத்தத்பதார்த்தவடிவப் பிரஹ்மத்தினிடத்தில் மகாவாக்கியார்த்தத்தின் அநுபவவடிவ சமாதியோகத்தால் யுக்தமாயது, ஏகத்துவத்தையடைந்தது, துவம்பதார்த்தவடிவ ஆன்மா எவனுக்கோ அவன் பிரஹ்மயோக யுக்த ஆன்மாவாவன். அத்தன்மைய வறிஞன் உத்பத்தி நாசமின்றிய தனது சொரூபவடிவ நித்தியசுகத்தையேயடைகின்றன். அதாவது, அவன் எக்காலத்தும் சுகாநுபவவடிவமேயாகின்றன் என்பதாம். அந்நித்தியசுகம் உண்மையில் தத்துவசாக்ஷாத்காரத்தின்முன்னரும் அடையப்பட்டதேயாதலின், அவற்றின் பிராப்தி பொருந்தாது; முன்னடையப்படாத வஸ்துவே பிராப்தியாம். ஆயினும், தத்துவசாக்ஷாத்காரத்தின்முன்னர் அந்நித்தியசுகம் அவித்தையான் மறைக்கப்பட்டிருந்தது; அதுவே அதனப்பிராப்தியாம். தத்துவ சாக்ஷாத்காரத்தால் அவ்வவித்தை நிவிருத்தியாவதே அதன் பிராப்தியாம். அதாவது, அந்நித்தியசுகத்தை யுணராத்தன்மையே அதனப்பிராப்தியாம். அந்நித்தியசுகத்தை யபரோக்ஷமாயுணர்தலே அதன் பிராப்தியாம். ஆதலின், பிரத்தியக்கான்மாவில் அபேதவடிவமாயுள்ள நித்தியசுகத்தின் அநுபவத்தை யிச்சித்து இவ்வதிகாரிபுருஷன் மிக்க ஸாகத்தைத் தரும் கணிக பாகியவிஷயப் பிரீதியினின்றும் தனது இந்திரியங்களை நிவிருத்தி செய்யவே பிரத்தியக்கபின்னப் பிரஹ்மத்தின்கண் ணிலைக்கின்றன். (21)

(அ-கை.) ஹே பகவன்! பாகிய விஷயங்களின் பிரீதி நிவிருத்தியாகுங்கால் ஆன்மாவின் நித்தியசுகம் அநுபவமாகும். ஆகவே அதன் பிரசாதத்தால், பாகிய விஷயங்களின் பிரீதி நிவிருத்தியாகும். இவ்வாறு நித்திய சுகத்தின் அநுபவமும் பாகிய விஷயங்களின் பிரீதி நிவிருத்தியும் ஒன்றனை யொன்று பற்றுதலாந்தன்மையை யடைகின்றன. எப்பதார்த்தங்களில் ஒன்றனை யொன்று பற்றுந்தன்மையுளதோ அப்பதார்த்தங்களுள் ஒன்றுகினும் பெறப்படாது என்றிவ்வாறு அர்ச்சுனன் ஆசங்கிப்ப, ஸ்ரீ பகவான் விஷயங்களின் தோடதரிசனப்பயில்வானே அவ்விஷயங்களின் பிரீதியொழிகின்றது. ஒழியவே ஒன்றனை யொன்று பற்றுங் குற்றமின்றுமென்று உத்தரமருளுகின்றார்.

சு-ம். யெஹி ஸம்ஸ்பர்ஶஜா போகா துஃக்கயோநய ஏவதே।
ஆத்3யந்தவந்த: கௌந்தேய ந தேஷு ரமதே பு3த:॥ (22)

ப-ம். 3 யெ 2 ஹி 4 ஸம்ஸ்பர்ஶஜாஃ 5 போகாஃ 7 துஃக்கயோநயஃ 8 ஏவ 6 தே
9 ஆத்3யந்தவந்த: 1 கௌந்தேய 12 ந 11 தேஷு 13 ரமதே 10 பு3த:.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எதனுல் விஷயேந்திரியங்களின் சம்பந்தத்தாலுண்டாகிய போகங்களனைத்தும் துக்ககாரணமாமோ, ஆதியந்தமுடையனவோ அதனுல் விவேகியர் அப்போகத்தை இச்சிப்பதில்லை. (22)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சத்தமுதலிய விஷயங்களோடு சுரோத்திரமுதலிய இந்திரியங்களின் சம்பந்தம் சம்ஸ்பரிசமாம். அதனுலுண்டாம் மிகத் தாழ்ந்த லேசமாத்திர சுகத்தின் அநுபவ வடிவமான போகங்களனைத்தும் இவ்வுலகத்தும் பரவுலகத்தும் இராகத்துவேஷங்களால் வியாப்தமானதால் துக்ககாரணமேயாம்; அதாவது இம்மனுஷ்யலோகமே முதலாகப் பிரஹ்மலோகபரியந்தமுமுள்ள சர்வபோகங்களும் முக்காலத்தும் துக்ககாரணமேயாம் இது விஷ்ணுபுராணத்திலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. யாவந்நர: ஸ்த்ரீபதிஜந்துராஶி: ஸம்பை3யாதூ3நவபு: ப்ரயாது।
தாவத்3வபுர்வை நிவ்ருʼயதே ஹ்ருʼ உயெஸோகஸம்ஸ்கவ:॥

(பொ-ள்.) இஜ்ஜீவன் எவ்வளவு மனவேட்கைச் சம்பந்தம்பண்ணுகின்றானே அவ்வளவு சோகவடிவவூசிகள் இவனதுஉள்ளத்தைத் துளைக்கின்றன. இங்ஙனமாய அப்போகமும் ஒரு நிலையற்றதாம்; மற்றோ, ஆதியந்தமுடையதாம். ஈண்டு, விஷயேந்திரியங்களின் சம்பந்தம் ஆதியாம். அவற்றின் வியோகம் அந்தமாம். அவ்விரண்டும் எப்பொருளிலுளவாமோ அது ஆதியந்தமுடையதாம் அதாவது அப்போகம் ஆதிகாலத்திலுமின்று, அந்தகாலத்திலுமின்று. மற்றோ, கனப்பொருள்போல இடைப்பட்டகாலத்தே தோற்றுவதாம். ஆகலின், அப்போகம் கனப்பொருளைப்போல க்ஷணிகமாம், மித்தியாவடிவமாம். இதை ஸ்ரீகௌடபாதாசாரியருங் கூறியிருக்கின்றார் 'ஆதாவந்தநவாஸி வதத்யேதன்நவி தத்யா' (பொ-ள்.) எப்பதார்த்தம் ஆதிகாலத்திலும், அந்தியகாலத்திலுமில்லையோ, அப்பதார்த்தம் வர்த்தமானகாலத்திலும்உண்மையாயில்லை; சுவப்பனபதார்த்தம்போலும். வேற அர்ச்சுன! இவ்விஷயஜந்ய போகமித்தன்மையதாமாதலின், விவேகி இப்போகத்தில் பிரீதியடைதல்கூடாது. அதாவது இதனைப்பிரதிகூலமாயறிந்து விவேகிபிரீதிபண்ணுவதில்லை. இதை ஸ்ரீ பதஞ்சலிபகவானும் யோகசூத்திரங்களிற் கூறியிருக்கின்றார். 'வர்ணாத்மாவஸம்க்லாஸ உர்ஜ்ஜிவெ மாஸுணவ்ரதீவிபொயாஸு உர்ஜ்வெஜவஸவ்ஸம்விவெகிஸ' (பொ-ள்.) கிலேசமுதலியவைகளின் சொரூபத்தைத் திடமாய் நிச்சயம்பண்ணிய விவேகிக்கு இவ்வுலக பரவுலக விஷயசுகங்களனைத்தும் துக்கவடிவமாயேதோற்றும். அவிவேகிக்கு விஷயசுகந் துக்கமாய்த் தோற்றுவதில்லை. அதுபற்றியன்றோ சாஸ்திரங்களில் விவேகி அக்ஷிபாத்திரத்திற்குச் சமமாய்க் கூறப்பட்டிருக்கின்றான். சிலந்திப்பூச்சி யுண்டாக்கிய நூலானது மிக நுண்ணியதாயும் மிருதுவாயுமிருப்பினும் நேத்திரத்திற் படிலோ தனது பரிசத்தால் நேத்திரத்திற்குத் துக்கத்தையே கொடுக்கின்றது. நேத்திரத்தினும் வேறுகிய முகமுதலிய அங்கங்களிற் படிலோ அந்நூல் துக்கப்படுத்துவதில்லை. அதுபோலத் தேனும் விஷமுங்கலந்த அன்னபோஜனம்போல முக்காலத்திலும் கிலேசம் முதலியவைகளோடு கலக்கப்பட்ட விஷயபோகசாதனம் அவ்விவேகிக்கே துக்கத்தையே கொடுக்கின்றது. அதாவது விவேகியே அதைத் துக்கரூபமாயெண்ணுகின்றான் என்பதாம். பகலிரவுகளிற் பலவகைப்பட்ட துக்கங்களைப் பொறுத்துக்கொள்ளும் அவிவேகிக்கு அவ்விஷயபோகசாதனந் துக்கத்தைக் கொடுப்பதில்லை, அதாவது அவன் அப்போகசாதனத்தைத் துக்கரூபமாய் நினைப்பதில்லையென்பதாம். ஆண்டு, அப்பாதஞ்சல சூத்திரத்தில் பரிணாம தாப சமஸ்கார துக்கங்களால் என்னும் பதங்களால் செல்காலம் நிகழ்காலம் வருங்காலமென்னுமூக் காலத்தினுந் துக்கத்தோடுகூடினவாதலின் அவ்விஷய சுகங்களில் ஔபாதிக துக்கத்தன்மை கூறப்பட்டது. குணவிருத்தி விரோதத்தால் என்னும் பதத்தால் அவ்விஷயசுகங்கள் சொரூபத்தானுந் துக்கவடிவங்களாமெனக் கூறப்பட்டன. ஆண்டு, பரிணாமதாப சமஸ்கார துக்கங்களால் என்னும் வாக்கியத்தில் அந்தத்திலுள்ள துக்கமென்னும் பதத்தைப் பரிணாமம், தாபம், சமஸ்காரம் என்னும் மூன்று பதங்களோடுஞ் சேர்த்துக் கொள்க. அதனலிது பெறப்படும் :—பரிணாம துக்கம், தாபதுக்கம், சமஸ்கார துக்கம் என இம்மூன்று வடிவத்தால் அவ்விஷய சுகந்துக்கவடிவமேயாம். அஃதாமாறு தெரிப்பாம் : எத்துணை விஷயசுகமனுபவிக்கப்படுகின்றனவோ அவ்வனைத்தும் இராகத்தோடு கூடியவைகளே இராகமின்றி விஷயசுகாநுபவங்கூடாது என்னை? எப்புருஷனுக்கு எவ்வஸ்துவில் ராகமுளதோ அப்புருஷனே அவ்வஸ்துப் பிராப்தியால் சுகமடைகின்றான். எப்புருஷனுக்கு எவ்வஸ்துவினிடத்தில் ராகமில்லையோ அப்புருஷன் அவ்வஸ்துகிடைத்ததால் சுகமடைவதில்லை. இஃதெல்லா வுலகத்தும் பிரசித்தமாதலின் விஷயங் கிடைப்பதின்முன்னர் வெளிப்பட்ட இராகமே அவ்விஷயத்தை யடைந்தபோது சுகவடிவமாய்ப் பரிணமிக்கின்றது. அது ஒவ்வொருக்ஷணத்தினு மிருதிப்பாட்டையடைகின்றது. அவ்விராக விஷய பதார்த்த

மானது அடையப்படாக்கால் அவசியமாய்த் துக்கப்பிராப்திபாகின்றது. ஆதலின், அவ்விராகந் துக்கவடிவமாம். ஆண்டுப் போகங்களில் இனிய திருப்தியால் இந்திரியங்களினுபசாந்தி சுகமாம். அப்போகங்களில் திருப்தியின்மையால் இந்திரியங்களினுபசாந்தியின்மை துக்கமாம். மிகுந்த போகத்தை யநுபவித்து அவ்விந்திரியங்களைத் திருஷ்ணையின்றியவைகளாய்ச் செய்வதில் சமர்த்த ரொருவருமில்லர். மறுதலையாய் மிகுந்த போகத்தை யநுபவிப்பதால் திருஷ்ணை யதிகப்படுகின்றது. நெய், விறகுகளை யடைவதால் அக்கினி மிகுதிப்படுகின்றதேபோலும். ஆதலின், துக்கவடிவ இராகத்தின் பரிணமமானதால் அவ்விஷயசுகமுந் துக்கவடிவமேயாம். காரிய காரணங்கட் கபேதமாதலினென்க இத்துணைபானே அவ்விஷய சுகத்தில் பரிணம துக்கரூபத்தன்மை கூறப்பெற்றது. இனித் தாபதுக்கத்தைக் கூறுவாம். ஆண்டு, இப்புருஷன் எக்காலத்தில் அவ்விஷய சுகத்தை யநுபவிக்கின்றானோ அக்காலத்தில் அதின்பிரதிகூலமாகிய துக்கசாதனமனத்தையுந் தரிவஷிக்கின்றான். அவற்றைக் கெடுக்காது அஃதனுபவிக்கப்படுவதில்லையாதலின் அதன் பொருட்டு அந்தப் பிரதிகூலவடிவத்தை அவசியமாய்க் கெடுக்கின்றான். ஆண்டு, துக்கசாதனமனத்தும் எனக்குக் கிடைக்காதொழிக, என்னுமித்தன்மைச் சங்கற்ப விசேஷத்தின் பெயர் துரிவஷமாம். அத்துரிவஷ விஷயவடிவ துக்க சாதனமனத்தையும் நிவிர்த்திக்க வொருவரானு முடியாது. ஆதலின், அதையநுபவிக்குங் காலத்தும் அதின் விரோதிவிஷயகமாகிய துரிவஷமிருந்துகொண்டேயிருக்கும். அஃதுளதாகவே அத்தாபதுக்கத்தை நிவிருத்திக்க முடியாதாம். ஈண்டு; தாபமே துரிவஷமெனப்படுகின்றது. இவ்வாறு அத்துக்க சாதனத்தை நீக்கற்கேலாத புருஷன் அப்போது மோகத்தையுமவசியமடைகின்றானாதலின், தாபதுக்கம்போன்றும் மோக துக்கமு நீக்குதற்கேலாததேதயாம். ஆண்டுத் தாபவடிவ துரிவஷத்தால் கர்மாசய முண்டாகின்றது; என்னை, எவன் விஷய சுகத்தின் சாதனத்தை இச்சிக்கின்றானோ அவன் சரீரத்தாலேனும் மனத்தாலேனும் வாக்காலேனும் அவசியம் பிரவிருத்திபண்ணுகின்றான். அதன்பின் தனதனுகூலப் பிராணிகட்கனுக்கிரகம் பண்ணுகின்றான். தனது பிரதிகூலப்பிராணிகளை இம்சிக்கின்றான். அந்த அனுக்கிரக நிக்கிரக மிரண்டும் அவனுக்குப் புண்ணியபாவத்தை யுண்டுபண்ணுகின்றன. அதன் பெயர் கருமாசயமாம். அதுவும் உலோபமோகங்களாலாம் இத்துணையானேவிஷய சுகத்தின் தாபதுக்கங் கூறப்பட்டது. இனிச் சமஸ்கார துக்கத்தைக் கூறுவாம். ஆண்டு, நிகழ்காலத்துண்டாம் விஷய சுகாநுபவமானது தனது நாசகாலத்தில் இப்புருஷனுடைய வுள்ளத்தில் சமஸ்காரத்தை யுண்டுபண்ணுகின்றது. அதற்குமேல் அந்தச்சமஸ்காரம் அவ்விஷயசுக நினைவையுண்டுபண்ணுகின்றது. அதன்பின்னர் அந்நினைவு அதில் ராகத்தை யுண்டுபண்ணுன்கிறது. அதன்பின் அவ்விராகமானது அச்சுகப் பிராப்தியின்பொருட்டு தேகமன வாக்குக்களைச் செலுத்துகின்றது. அதன்பின் தேக முதலியவைகளின் சேஷ்டையானது புண்ணிய பாவவடிவ கருமாசயத்தை யுண்டுபண்ணுகின்றது. அதன்பின் அப்புண்ணிய பாவம் பிறப்பு முதலியவைகளைத் தருகின்றது இதன் பெயர் சமஸ்கார துக்கமாம். இங்ஙனமே தாப மோகங்களின் சமஸ்காரத்தையுமறிந்துகொள்க. இத்துணையான் முக்காலத்தினுந் துக்கத்தோடுகூடியவாதலின் இவ்விஷயசுகமனத்துந் துக்கவடிவமே யெனக் கூறப்பட்டன. இனிக் குணவிருத்தி விரோதத்தால் என்னும் வாக்கியத்தால் அவ்விஷயசுகங்கள் வடிவத்தானுந் துக்கசொரூபமாமெனக் கூறப்படுகின்றன. ஈண்டு, சுகவடிவ சத்துவகுணம் துக்கவடிவ ரசோகுணம் மோகவடிவ தமோகுணம் என்னும் இம்மூன்றும் குணசத்தத்தாற் கொள்ளத்தக்கன. இம்மூன்றும் ஒன்றற்கொன்றுமாறுபட்ட சுபாவமுடையனவாயினும் எண்ணெய், திரி, தீ, மூன்றுங்கூடி தீபவடிவ ஒருகாரியமியற்றியவாறுபோல இப்புருஷன் போகத்தின் பொருட்டு முக்குணவடிவ காரியத்தைச் செய்தனன். அக்காரியத்திலும் ஒரு

குணமோ முக்கியமாம் ஏனையவிரண்டுங்கௌணமாம். அவ்வொரு முக்கிய குணத்தையுடன்பட்டே அம்முக்குணவடிவ காரியமும் சாத்துவிகம் இராசதம் தாமதம் என்றிவ்வாறு ஒவ்வொரு குணமாய்க் கூறப்படுகின்றது. அவற்றுள் சுகத்தின் உபபோகவடிவத்தோற்றம் வெளிப்பட்ட சத்துவகுணத்தின் காரியமேனும் வெளிப்படாத இராசத தாமதங்களின் காரியமுமாம். அப்பிரத்தியயம் கேவலஞ் சத்துவகுணத்தின் காரியமன்றுதலின் அதுவும் முக்குணவடிவமேயாம். ஆகவே அதன் கண்ணே சுகவடிவத்தன்மை துக்கவடிவத்தன்மை விஷாதவடிவத்தன்மை மூன்றுமுளவாதலின், விவேகிக்குச் சர்வ விஷயசுகானுபவங்களும் துக்கவடிவமேயாம். இத்தன்மைய துக்கவடிவ விஷயசுகத்தின் உபபோகவடிவப் பிரத்தியயமும் சிறிதும் நிலையுள்ளதன்று. மற்றும், அது விரைவாகவே நாசமாம். சலமே குணவிருத்தம் என்னும் வாக்கியத்தால் சித்தத்திற்கு விரைவுறு பரிணமத்தன்மை கூறப்பட்டிருத்தலின்.

சங்கை :—ஓரே தோற்றமானது ஓரே காலத்தில் ஒன்றற்கொன்று மாறுபட்ட சுகதுக்கமோக வடிவத்தை எவ்வாறடையும் ?

சமாதானம் :—உற்பூதம் அநுற்பூதம் இவ்விரண்டிற்கும் தம்முள் விரோதமில்லை. மற்றும், சமமாயுள்ள குணங்கட்கே ஒரு காலத்தில் ஒன்றற்கொன்று விரோதப்படும், மாறுபாடாயுள்ள குணங்களுக்கு விரோதமில்லை. இப்புருஷனிடத்தில் அபிவியக்தியையடைந்த தருமம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியமென்னு மிந்நான்கும் தமக்குச் சமமாய் அபிவியக்தியையடைந்த அதருமம் அஞ்ஞானம் அவைராக்கியம் அனைசுவரியம் என்னும் நான்கோடும் முறையாக விரோதப்படும். அபிவியக்தியடையாத அதருமமுதலியவைகளோடு அபிவியக்தியையடைந்த தருமமுதலியவைகள் விரோதப்படா. இவ்வுலகத்தினும் முக்கியமாகிய ஒரு புருஷனுக்கு மற்றொரு முக்கிய புருஷனேடை விரோதமாம். தூப்பல புருஷனோடு அம்முக்கிய புருஷனுக்கு விரோதமாவதின்றும். அதுபோல, சத்துவ ரசசு தமசு என்னும்முக்குணங்களும் ஓரேகாலத்தில் ஒன்றற்கொன்று பிரதானத்தன்மை மாத்திரத்தைப் பொறுப்பதில்லையேயன்றி ஒன்று மற்றொன்றன் சத்பாவமாத்திரத்தைப் பொறுப்பதில்லை யென்பதில்லை. இங்ஙனமே பரிணமதுக்கம் சமஸ்காரதுக்கம் தாபதுக்கம் இம்மூன்றிலும் ஓரேகாலத்தில் ராகம் துவேஷம் மோஹம் இம்மூன்றினிருப்பையுங் கண்டுகொள்க. அவ்விராகத்துவேஷ முதலிய கிலேசங்கள், பிரசுப்தம், தநு, விச்சிந்நம், உதாரம் என்னுமிந்நான்கு வடிவங்களால் நான்கவத்தையுடையனவாகின்றன. இப்போது அக்கிலேச முதலிபவடிவத்தையோ சாத்திரானுசாரமாய்க் கூறுவாம் :—ஆண்டு, யோகசூத்திரங்கள் "அவித்யாஸ்மிதா ராகத்வேஷாபிநிவேசாஃ பஞ்சக்லேசாஃ (1) அவித்யாக்ஷேத்ரமுத்தரேஷாம் ப்ரஸுப்ததநுவிச்சிந்நோதாராணாம் (2) அநித்யாஸுசிது:காநாத்மஸு நித்யஸுசிஸுகாத்மக்யாதிரவித்யா (3) த்ருக்தர்ஸநஸக்த்யோரேகாத்மேவாஸ்மிதா (4) ஸுகாநுஸயீ ராகஃ (5) து:காநுஸயீ த்வேஷஃ (6) ஸுகது:காதிதயாரூபோபாயகௌஸல மிச்சாபிநிவேஸஃ (7) தேவயோநி மநுஷ்யயோநயாஃ ஸகர்மகாஃ (8) யாவதாத்மபாவித்வாத்தயாஃ (9) க்ருஹீதமுக்தஃ கரீஷாத்மயோ ஜாத்யாயுர்போகாஃ புண்யாபுண்ய ஹேதுத்வாத் (10) ஸதிமூலே தத்விபாகோ ஜாத்யாயுர்போகாஃ (11) முறையாய்ப் பதினொரு சூத்திரங்களின் பொருளைக் கூறுவாம். அவித்தை, அஸ்மிதை, இராகம், துவேஷம், அபினிவேசம் என்பன ஐங்கிலேசங்களாம். ஆண்டுக் கருமத்தில் அல்லது கருமபலத்தில் பிரவர்த்தித்த புருஷனுக்குத் துக்கத்தைக்கொடுப்பது கிலேசமாம். இத்தன்மைய இலக்கணம் இவ்வவித்தைமுதலிய ஐந்தினிடத்தும் பொருந்துகின்றதாதலின் இவ்வவித்தைமுதலிய ஐந்தும் கிலேசங்களாயின. (1) இவ்வைந்தனுள் முந்திய கிலேச

வடிவ அவித்தையே பிரசுப்தாதி நான்கவத்தையுடையது. அதுவே அஸ்மிதைமுத லிய நான்கு கிலேசங்களின் காரணவடிவமாம். ஆண்டு அஃதில்லாததின்கண்ணே அஃதுண்டென்னும்புத்தி, விபரியயம், மித்தியாஞானம், அவித்தை என்னுமிந் நான்கும் ஒருபொருட் கிளவிகளாம். (2) அவ்வவித்தை நால்வகைத்தாம். அவற் றுள் அநித்தியபதார்த்தத்தில் நித்தியமென்னும் புத்தியுண்டாக்குவது முதலா வது அவித்தையாம். மண், மதி, இரவி, உடுக்கள், சுவர்க்கம் அமரர் முதலிய அநித் தியபதார்த்தங்களில் இவ்வனைத்தும் நித்தியமென்னும் புத்தியுண்டாக்குவதுபோ லவாம். அசுசியாகிய பதார்த்தங்களில் சுசிபுத்தியுண்டாக்குவது இரண்டாவது அவித்தையாம். அசுசியாகிய மகளிர் ஆக்கையில் சுசிபுத்தி இதை ஸ்ரீ வியாசபக வானுங் கூறியருளியிருக்கின்றார்.

ஆ-சு. ஷாநாஜீவஜாஉ-வஷ்ம ஹாந்ஷ்ம ஊந்ய நாஉவி ।
காயஸாயெய ஸளஅக்வாத்ஷ்ம் பிதாஹ்யஸ-அிம்விஉ-ஃ ॥

(போ-ள்.) சாஸ்திரத்தின் உண்மைக் கருத்தறியும் வித்துவான் இச்சரீரத்தை ஸ்தானம், பீசம், உபஷ்டம்பம், நிஷ்பந்தம், நிதனம், ஆர்த்தய சௌசம், இத்துணை யேதுக்களால் அசுசியேயென்றறிகின்றான். அவற்றுள் மலமூத்திரத்தோடுகூடிய மாதாவினுதரம் ஸ்தானமாம் அத்தானத்தே இச்சரீரத்தினிருப்பாதலின் இச்சரீ ரம் ஸ்தானத்தானு மசுசியேயாம். மாதா பிதாக்களின் சப்தமதாது வடிவாகிய சுக் கிலசு ரோணிதம் பீஜமாம். அதனுண்டாதலின் பீஜத்தானு மசுசியேயாம். அந் நத்தின் பரிணமமாகிய வுதிர முதலியவை உபஷ்டம்பமாம். அதனனும் அசுசியே யாம். முகம் நாசி செவி கண் பாயு உபஸ்தம் இச்சர்வ துவாரங்களால் மலம் வெளிப் படுவது நிஷ்பந்தமாம்; அதனனு மசுசியேயாம். மரணத்தின்பெயர் நிதனமாம். எம் மரணத்தால் வித்துவானகிய பிராஹ்மணன் சரீரமும சுசியாகின்றதோ அதனனு மசுசியேயாம். நீராடல்சந்தனமிடன்முதலியவைகளால் இச்சரீரத்தில் சுசியைச் சம் பாதிப்பது ஆர்தய சௌசமாம் அதனனுமிஃ தசுசியேயாம். இத்தன்மைய அசுத்த முடைய மகளிராக்கையில் சுத்தமுடையதென்னும் புத்தியுண்டாக்குவது இரண் டாவ தவித்தையாம். துக்கவடிவ விஷயபோகத்தில் சுகபுத்தியுண்டாக்குவது மூன்றுவதவித்தையாம். துக்கத்தில் சுக புத்தியோ, 'பரிணம தாபசமஸ்கார துக் கங்களானும் குணவிருத்தி விரோதத்தானும் சர்வமுந் துக்கமே விவேகிகட்கு' என்னுஞ் சூத்திர வுரையில் முன் கூறப்பட்டது. அநான்மவஸ்துவில் ஆன்மபுத்தி பண்ணிவைப்பது நான்காவதவித்தையாம். அநான்மவடிவ இத்தூலசரீரத்தில் நான் மனுஷ்யன் நான் பிராஹ்மணன் என ஆன்மபுத்தி பண்ணுவதுபோலவாம். இவ்வாறு நால்வகைப் பேதத்தோடுகூடிய அவித்தையே, அஸ்மிதை முதலிய சர் வகிலேசங்களின் மூலவடிவமாம். இவ்வவித்தையே சாஸ்திரத்தில் தமமெனக்கூற ப்படுகிறது. (3) திருக்குச் சத்தியாகிய புருஷனும் தரிசன சத்தியாகிய புத்தியும் போக்தா போக்கிய ரூபதத்தால் அத்தியந்தம்வேறும். அத்தன்மைய விரண்டினது அவித்தையாலாகிய அபேதாபிமானம் அஸ்மிதையாம். இதையே பிரஹ்மஞானி கள் இருதயக்கிரந்தியென்பர். இதை வேறுசாஸ்திரத்தில் மோகமெனவுங் கூறப் படுகின்றது. (4) அவ்வச்சுகப்பிராப்தியின் சாதனங்களனைத்துமின்றிய புருஷனு க்கு எவ்வகைச்சுகமு மெனக்குளவாகுக என்றுண்டாம் விபரியய விசேஷத்தின் பெயராகமாம்; இதுவே சாஸ்திரத்தில் மஹாமோகமெனக் கூறப்படுகின்றது. (5) துக்கத்தைக்கொடுக்குஞ் சாதனங்களிருக்குமாயினும் எனக்கோர்வகைத் துக்கமு மின்றுகின்றுகுக என்றுண்டாம் விபரியய விசேஷம் துவேஷமாம்; இதுவே சாஸ் திரத்தில் தாமிசிரமெனக் கூறப்படுகின்றது. (6) சீவனத்தின் காரணமாகிய ஆயு ளிலதேனும் இவ்வநித்தியமாகிய தேகேந்திரிய முதலியவைகளோடு எனக்கோர்

போதும் வியோகமடையாதொழிக என ஞானி யஞ்ஞானி சர்வப்பிராணிக்கும் பொதுவாயுண்டாம் மரணபயவடிவ விபரியயம் அபினிவேசமாம். இதுவே சாஸ்திரத்தில் அந்ததாமிசிரமெனக் கூறப்படுகின்றது. இது புராணத்தினுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. தஸொஸொஹொ ஊஹாஸொஹஹா ஶிஶ்ரூஹய்ம்யஸம்ஜ்ஞிதஃ ।
சுவிஉ்யூவஷு வவெவுஷா வ்ரூஉ்ஹூ-உ்தா ஊஹாதமஃ ॥

(பொ-ள்.) இப்புருஷனதவித்தை தமம், மோகம், மஹாமோகம், தாமிசிரம், அந்ததாமிசிரம் இவ்வைந்துவகைகளால் தோற்றப்படுகின்றது. இவ்வவித்தை முதலிய பஞ்சக்கிலேசங்களும் பிரசுப்தம், தநு, விச்சின்னம், உதாரம் என நான்கவத்தையுடையன, அவற்றுள், அசத்காரிய மொருபோதுந்தோற்றுதாதலின், இவ்வவித்தை முதலிய பஞ்சக்கிலேசத்தின் உற்பத்தியின்முன்னர் வெளிப்படாதடங்கிக்கிடந்தமை பிரசுப்தாவத்தையாம். வெளிப்படினும் அவைகளில் வேறு சககாரி காரணமின்மையால் காரியந்தோற்றுதிருத்தல் தநுவவத்தையாம். அக்கிலேசம் வெளிப்பட்டும் தன் தன்காரியத்தை யுண்டுபண்ணியும் அது மற்றியாதானுமோர் வலியுடைத்தோற்றத்தால் மறைபட்டிருத்தல்விச்சின்னுவத்தையாம். எக்கிலேசம்அபிவியத்தியையுமடைந்து வேறு சககாரிகாரணத்தையும்பெற்றுப் பிரதிபந்தகமின்றியதாய்த் தன் தன் காரியத்தை யுண்டாக்குகின்றதோ அது உதாராவத்தையாம். இத்தன்மைய நான்கவத்தையோடுகூடிய விபரியயபுத்திவடிவ அஸ்மிதை முதலிய நான்குகிலேசங்களுக்குச் சாமான்யவடிவ அவித்தையே கூத்திரவடிவமாம். அது இந்நான்குகிலேங்களு முண்டாவதற்குப் பூமியாம். இச்சர்வக் கிலேசங்களிடத்தும் விபரியயபுத்திவடிவத்தன்மை முன்னர்க் கூறப்பட்டதாதலின், அவ்வவித்தை நிவிருத்தியானே அவ்வஸ்மிதை முதலிய சர்வக்கிலேசங்களும் நிவிருத்தியாம். அவையும் சூட்சுமம், தூலம் என்னும் பேதத்தாலிருவகையாம். அவற்றுள், பிரகிருதியில் இலயமடைந்தவர்களின் பிரசுப்தக்கிலேசமும், விரோதிபாவனையால் தநுச்செய்யப்பட்ட யோகிபுருஷரின் தநுக்கிலேசமும், சூட்சுமமென்று சொல்லப்படுகின்றன. அந்தச் சூட்சுமக்கிலேசங்களோ மனநிரோதவடிவ நிருவிகற்பசமாதியானே நிவிருத்தியாம். இம்மனநிரோதத்தைச் சூத்திரத்தில் பிரதிப்பிரசவமென்னும்பெயராற் கூறினர். (8) அந்தச் சூட்சுமக்கிலேசத்தின் காரியவடிவ விச்சின்ன உதாராவத்தைகளையுடைய இரண்டுகிலேசங்களுந் தூலமெனப்படுகின்றன. இடையில் விச்சேதத்தை யடைந்து அவ்வவ்வடிவத்தால் மறித்து மறித்தும் தோற்றப்படுகின்ற கிலேசங்கள், விச்சின்னமெனப்படுகின்றன. இராகாலத்தில் குரோதமுளதேதனும் தோற்றுவதில்லை; மற்றே, மற்றொருபோது அது தோற்றுகின்றதாதலின் அது விச்சின்னமெனப்படுகின்றது. இவ்வாறு எக்காலத்தில் சைத்திரனென்பவன் ஒருமாதிடத்து இராகமுடையனேனு அக்காலத்தில் வேறுமாதிடத்து விரத்தியை யடைவதில்லை; மற்றே, அக்காலத்தில் அவனுடைய இராகம் அவ்வோர்மாதிடத்தே யிருப்பதாம்; பிறமாதிடத்தினிவாக்கூடும். ஆதலின், அக்காலத்தில் அவ்விராகம் விச்சின்னமெனப்படுகின்றது; இஃதாமாறு மற்றைய கிலேசங்களிடத்து மறிந்துகொள்க. எந்தக்கிலேசம் எக்காலத்தில் விஷயத்திலிருப்பதாகின்றதோ அது அக்காலத்தில்எல்லாவடிவத்தானுந் தோற்றப்பட்டு உதாரமெனப்படுகின்றது. அந்த விச்சின்ன உதாராவத்தைகளையுடைய இருவகைக்கிலேசமும் மிகத் தூலமாமாதலின், சுத்தசத்துவவடிவ பகவத்தியானத்தானே நிவிருத்தியாம். அவ்விரண்டு தூலக்கிலேசங்களும் தமது நிவிருத்தியில் மன நிரோதத்தை யபேக்ஷிப்பதில்லை; சூட்சுமக்கிலேசமேதனது நிவிருத்தியில் மனநிரோதத்தை யபேக்ஷிக்கின்றது. உலகத்தில் வஸ்திரத்தின் தூல அழுக்கானது நீரிற்றோய்த்தலால் நீங்குகின்றது. சூட்சும அழுக்கோ

உவர்மண்ணிடல்முதலியவைகளால் நீங்குகின்றது; அதுபோல, அத்தூலக்கிலேசம் பகவத்தியானத்தால் நீங்குகின்றது. சூட்சுமக்கிலேசம் மனோநிரோதத்தால் நீங்குகின்றது. இதனு ளிப்பொருள் பெறப்பட்டது :—கூறிப்போந்த பரிணமதுக்கம், தாபதுக்கம், சமஸ்காரதுக்கம் என்னும் மூன்றிலும் பிரசுப்தம், தநு, விச்சின்னம் என்னு மூவடிவங்களானும் அக்கிலேசங்கள் எப்போது மூள்ளனவாம். உதாராவத்தையோ யாதானு மோர்போது யாதானுமோர் கிலேசத்திற்கேயாம். இவ்வவித்தைமுதலிய ஐந்தும் பாதவடிவ துக்கங்களை யுண்டுபண்ணிக் கிலேச சத்தவாச்சியமாம். (9) தருமாதருமவடிவ கருமாசயமானது கிலேசகாரணமாகவே யுண்டாகின்றது; அதாவது, அக்கிலேசமே காரணவடிவம் என்பதாம். அக்கிலேசத்தைக் காரணமாகவுடைய கருமாசயமும் இருவகைத்தாம்; ஒன்றே திருஷ்டசன்மவேதநீயமாம், மற்றையதோ அதிருஷ்ட சன்மவேதநீயமாம். அவற்றுள், எந்தேதகத்தால் அத்தருமாதருமவடிவ கருமஞ்செய்யப்படுகின்றதோ அத்தேதகத்தானே அக்கருமபலம் அநுபவிக்கப்படுவதின்பெயர் திருஷ்டசன்மவேதநீயமாம். கருமாசயபல மித்தேதகத்தனுபவிக்கப்படாது மற்றொரு சன்மத்தநுபவிக்கப்படுவது அதிருஷ்டசன்மவேதநீயமாம். (10) ஆண்டு மூலவடிவக்கிலேசங்களுளவாகவே தருமாதருமவடிவக் கருமாசயபலம் அவசியமாயுண்டாம். அப்பலமுஞ் சாதி, ஆயுள், போகம் என்னும் பேதத்தால் மூவ்கைத்தாம்; அவற்றுள், சன்மம் சாதியாம்; அல்லது, பிராஹ்மணத்தன்மை தேவத்தன்மை முதலியவை சாதியாம். தேகம் பிராணனிரண்டினது நீண்டகாலபரியந்தமுள்ள சம்பந்தம் ஆயுளாம். சுரோத்திராமுதலிய விந்திரியங்களால் சத்தமுதலிய விஷயங்களை யநுபவித்தல் போகமாம்; இம்மூன்றனுள்ளும் போகம் முக்கியமாம். சாதி, ஆயுள் இரண்டுமதன்சேடமாம். (11) இவ்வாறு இவ்வவித்தை முதலிய கிலேசங்களின் சந்ததி நிரந்தரம் பிரவிருத்தியாகிக்கொண்டிருக்கின்றது எனக் கூறிப்போந்த எல்லாக் கருத்தையும் திருவுளத்தட்கொண்டவராய் ஸ்ரீ பகவான் 'யெஹிலஂஷுபுஜா ஹொமா ஊஃவியொதயஸனவதெ சூஉஷுஹவஹஃ' என்னும் வாக்கியத்தைக் கூறியருளினர். ஆண்டு அவ்விஷயபோகங்களில் துக்ககாரணத்தன்மை பரிணம தாபசமஸ்கார துக்கங்களானும், குணவிருத்திவிரோதத்தானும், என்னும்வாக்கியத்தால் முன்னர்க் கூறப்பட்டது. ஆதியந்தமுடையதாந்தன்மையோ சலம்ஹி குணவிருத்தம் என்னும் வாக்கியத்தால் முன்னர்க் கூறப்பட்டது. இச்சுருவவுரையும் யோகசாஸ்திரத்தைத் தழுவிப்பண்ணப்பட்டது, வேதாந்தமதந்தழுவியோ இதுபொருளாம்:—பிரஹ்மத்தை யாசிரயித்து பிரஹ்மத்தையே விஷயம்பண்ணும் அநாதிபாவவடிவமான வஞ்ஞானம் அவித்தையாம்; சுகதுக்கமுதலிய தருமங்களோடு ஆன்மாவினிடத்தில் அகங்காரத்தின் அத்தியாசம் அஸ்மிதையாம், இராகத்துவேஷ அபிநிவேசம் இம்மூன்றுமோ அகங்காரத்தின் விருத்திவிசேஷமாம். இவ்வாறு சர்வசம்சாரமும் அவித்தையைக் காரணமாகவுடையதாதலின் அவித்தைவடிவமேயாம். ஆகவே அச்சர்வபோகங்களும் மித்தியாவடிவமாயினும் பழுதையிற் பாம்புபோலத் துக்ககாரணங்களேயாம்; கனப்பொருள்போலத் திருஷ்டிசிருஷ்டிமாத்திரமானதால் ஆதியந்தமுடையதுமாம். எவனுக்கு அதிஷ்டானமாகிய ஆன்மசாக்ஷாத்காரத்தால் அஞ்ஞானத்தோடு பிராந்தி நிவிருத்தியானதோ அவ்வித்துவான் அம்மித்தியாபோகங்களில் பிரீதியடையான். கானனீரின் உண்மைவடிவத்தையுணர்ந்த புருஷன் நீர்வேட்கையால் ஆண்டு முயலாததேபோல, அதிஷ்டானமாகிய வான்மஞானத்தால் சர்வ உலகத்தையும் பொய்யென்றறிந்த வித்துவான் அவ்விஷயபோகங்களிற் பிரீதிபண்ணுவதில்லை; மற்றே, இச்சம்சாரத்தில் சுககந்தங்கூட இல்லை என நிச்சயித்து இதினின்றுஞ் சர்வ இந்திரியங்களையு மடக்கிக்கொள்ளுகின்றான்

(அ-கை.) ஆண்டுச் சர்வ துக்கமடைதற்குக் காரணமும் மோக்ஷமார்க்கத்தின் விரோதியும் சிறிது முயல்வால் ஒழியாததுமாகிய இவ்வத்தியந்தங் கஷ்ட

வடிவதோஷம் மிகுந்த பிரயத்தனத்தால் முமுக்ஷுக்களால் நிவிருத்தி பண்ணத் தகுதியதாம் எனப் பிரயத்தனத்தின் மிகுதித்தன்மையை விதானஞ்செய்தருளற் பொருட்டு ஸ்ரீ பகவான் மீண்டுங் கூறியருளுகின்றார்.

சு-ம் ஸகைகாதீஹைவ யஃ ஹொஜ்ஜு வ்யாகுரீர விஹொக்ஷணாக் ।
காஃகைக்ரோயொஷ்ஹவம் வெமம் ஹ யுக்தஃ ஹ ஹுவீ நரஃ ॥ (23)

ப-ம். 9 ஸகைகாதி 5 ஹஹ 7 ஹவ 1 யஃ 8 ஹொஜ்ஜும் 6 வ்யாகுர 2 ஸரீரவிஹொக்ஷணாக் 3 காஃகைக்ரோயொஷ்ஹவம் 4 வெமம் 10 ஹஃ 11 யுக்தஃ 12 ஹஃ 13 ஹுவி 14 நரஃ

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எந்தத் தீரன் தேகநாசபரியந்த முண்டாகத்தக்க காமக்குரோதத்தால் தோன்றும் வேகத்தைப் பாகியேந்திரியங்களின் பிரவிருத்தியின்முன்னரோ சகனஞ்செய்வதில் வல்லனோ அவனே யுக்தனுவன், சுகியாவன், புருஷனுவன். (23)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பிரத்தியட்சமாய்க்கண்ட, சிரவணஞ்செய்த, ஸ்மரணஞ்செய்த எத்துணை ஆன்மாநுகூல விஷய சுகசாதனங்களுளவோ அவைகளின் செளந்தரியமுதலிய குணங்களை அடிக்கடி சிந்தனைசெய்வதால் அவற்றிலுண்டாகப் பட்ட ராதியென்னு மிச்சை திருஷ்ணை லோபமேகாமமாம்; ஸ்திரீ புருஷர்களுக்குத் தம்முளுண்டாம் விஷய சம்பந்த விச்சையின்கண்ணே காமசத்தம் நிலுடமாம். இக்கருத்திணலன்றே காமக்குரோதம் அங்ஙனமே லோபம் என்னும் வாக்கியத்தில் திரவிசேயிச்சை லோபமெனவும் மாதர்களின் சேர்க்கை வேட்கை காமமெனவும் காமம் லோபம் இரண்டையும் வேறு வேறுய்க் கூறியருளினர். அங்ஙனமாயினும், ஈண்டோ காமம் லோபமிரண்டிலும் பொதுவாயுள்ள திருஷ்ணையைப்பற்றியே கேவல காமசத்தங் கூறியருளப்பட்டது. அதனினும் வேறுய் லோப சத்தங் கூறியருளவில்லை யென்க. பிரத்தியட்சமாய்ப்பார்த்த சிரவணம்பண்ணிய ஸ்மரணஞ்செய்த ஆன்மாவின் பிரதிகூலமாகிய துக்கசாதனங்களில் அடிக்கடி தோஷத்தைச் சிந்திப்பதாலுண்டாகிய தீ வடிவ மந்யுவென்னுந் துவேஷம் குரோதமாம், அக்காமக்குரோதங்களின் உத்கடாவத்தையானது உலக வேதங்களின் விரோதஞானத்திற்குப் பிரதிபந்தகமாதலின், உலகவேதங்களினும் மாறுபட்ட பொருளில் பிரவிருத்தியின் உன்முகத்தன்மைவடிவமாம். அது பிரசித்தமாகிய ஆற்று வேகத்திற் கொப்பாமாதலின் வேகமெனப்படும். நதியின் வேகம், மழைகாலத்தில் மிகுந்த வலியுடையதாமாதலின், உலகவேதங்களின் விரோதிஞானத்தால் பள்ளஞ் சுழல் முதலியவைகளில் விழுவதற்கு இச்சையின்றிய புருஷனையும் பலாத்காரமாய்ப் பள்ள முதலியவைகளில் கொண்டுபோய் அமிழ்த்துவிக்கின்றது. தாழ்ந்த தேசத்திற்குங் கொண்டுபோகின்றது. அதுபோல, அக்காமக்குரோதங்களின் வேகமும் நிரந்தரம் விஷய சிந்தனவடிவ மழைக்காலத்தில் மிக்க வலியுடையதாய் உலகவேதங்களின் விரோத ஞானத்தால் அவ்விஷயத்திலிச்சையின்றிய புருஷனையும் அவ்விஷயவடிவ சுழலிற்கொண்டுபோய்ச் சம்சாரவடிவ சமுத்திரத்தில் அமிழ்த்துவிக்கின்றது. மஹா நரகவடிவ தாழ்ந்த தேசத்திற்குங் கொண்டுபோகின்றது. இவ்வர்த்தங்களனைத்தையும் ஸ்ரீ பகவான் வேகம் என்னுஞ் சத்தத்தாற் குறிப்பித்தருளினர். இவ்வர்த்தமனைத்தும் 'ஸஶகேதவ்ய ாகொயம் வாவ•அரதிவேரஷஃ' என்னுஞ் சுலோகத்தில் முன்னர்க் கூறியருளப்பட்டது. இவ்வாறு அந்தக்காரணத்தின் கலக்கவடிவ காமக்குரோதங்களின் வேகம் பலவகையான பாகிய விகாரவடிவ லிங்கங்களால் அறியப்படுகின்றது. அவற்றுள், மயிர்க் கூச்சுண்டாதல், முகங் கண்கள் பிரசன்னமாயிருத்தல் முதலிய பாகிய

லிங்கங்களால் அக்காமவேகம் அனுமிக்கப்படுகின்றது. தேகம் நடுங்கல் பெருமூச் செறிதல் பற்களால் உதட்டைக்கடித்தல் கண்கள் சிவத்தல் முதலிய பாகிய லிங் கங்களால் அக்குரோதவேகம் அனுமிக்கப்படுகின்றது. எக்காமக்குரோத வேகம் தேகநாசபரியந்தம் பலவகையான காரணவசத்தால் எப்போதும் சம்பாவனை பண் ணப்படுகின்றதோ, உள்ளே யுண்டாகிய அதை எத்தீரஞகிய சந்நியாசி பாகி யேந்திரிய வியாபாரவடிவக் குழியில் வீழ்வதற்குமுன்னரே விஷயங்களில் அடிக் கடி தோஷ சிந்தனத்தாலுண்டாகிய வசீகாரமென்னும் வைராக்கியத்தால் சகனஞ் செய்வதில் சமர்த்தனே, அதாவது திமிங்கிலம் என்னும் மீனைது தனது வலி யால் நதிவேகத்தைத் தடுக்கின்றதேபோலத் தீரஞகிய புருஷன் வைராக்கியத் தின் பலத்தால் அக்காமக்குரோத வேகத்தைத் தடுக்கின்றனே, ஆண்டுக் காமக் குரோதங்களின் வேகத்தால் பாகிய அநர்த்தங்களிற் பிரவிருத்திவடிவகாரியத்தைக் சம்பாதியாது அவ்வேகத்தைப் பலனற்றதாய்ச் செய்தலே அதைச் சகனஞ்செய் தலாம். அப்புருஷனே யோகியாவன் சுகியாவன் அவனே பரமபுருஷார்த்தத்தைச் சம்பாதித்தவனுதலின் புருஷனுவன்; அவனினும் வேறுகிய விஷயேச்சையுடைய புருஷர்களனைவரும் உண்ணல் உறங்கல் வெருளல் முதலிய பசுக்களின் தருமத் தில் பிரவிருத்தியுடையவர்களாதலின் மநுஷவடிவராயினும் பசுவடிவரேயாம். இது பிறநூலினுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. சூஹாஉஊவதாயஹ்யஹ்ஷஷ்வெ ஹவஃஹாகூகிகீ ।
தத்ராவெக்ஷாஹவெஉ்யஹ்ய தஉகூயஃஹ்யாதூஷஃ கயழ ॥

(போ-ள்.) எவ்வான்மதேவனின் ஆநந்தவடிவத்தன்மை சுழுத்தி யவத்தை யில் எல்லாப்பிராணிகளின் அனுபவத்தானும் பெறப்பட்டதோ அவ்வாநந்தவடிவ ஆன்மாவினிடத்தில் எவ்விஷயாசக்த புருஷனுக்குபேட்சையுளதோ? அப்பகிர்முக னினும் வேறுகியதோ பசு? மற்றே, அவனே பசுவாவன். ஓருரையில் 'வ்ராகூஸீஷ விஸொகூஷணாகூ' என்னும் வாக்கியத்திற்கு இப்பொருள் கொள்ளப்பட்டது. எங் ஙனம் மரணத்தின்பின்னர் அழுதுகொண்டிருக்கும் அழகுள்ள மாதராலிங்கனஞ் செய்யினும் புத்திரன் முதலியோர் தீயிற் சுடினும் இப்புருஷன் பிராணனின்றிய வுதலின் அக்காமக்குரோதத்தைச் சகித்துக்கொள்ளுகின்றனே அங்ஙனமே மரணத்தின் முன்னரும் சீவித்திருக்குங்கால் எவன் காமக்குரோத வேகத்தை சகித்துக்கொள்ளுகின்றனே அவனே யுக்தனுவன்; சுகியாவன், இதை ஸ்ரீ வசிட் டபகவானுங் கூறியிருக்கின்றார்.

ஆ-சு. வ்ராணைமதெயஃயாஹெஹஃ ஸஷ்வம்ஹஷ்வம் ஸவிஹுதி ।
தயாஹெதாணயஷ்கோவிஹ கெஹவ்யூஸ்ஸ ஹெவஸ்ஸஹு ॥

(போ-ள்.) பிராணனீங்கியபின்னர் இத்தேகம் எங்ஙனம் சுகதுக்கத்தைய டைவதில்லையோ அங்ஙனமே பிராணனுடுகூடிய புருஷனும் சுகதுக்கத்தையடை யாஞயின் அவனே கைவல்லிய மோகூத்தில் நிலைப்படுகின்றன். ஆனல், இவ்வித மானவுரையும் மரணவத்தையோன்று சீவித்திருக்கும்போதும் காமக்குரோதத் தின் உற்பத்திமாத்திரங்கூட உடன்பாடில்லையேல் சித்தமுடையதாம். ஈண்டு, பிர சங்கத்திலோ அக்காமக்குரோதங்களின் உற்பத்தியின்மைமாத்திரம் பிராப்தி யில்லை; மற்றே, உள்ளே யுண்டாய காமக்குரோதங்களின் வேகசகனமே யீண்டுப் பிராப்தமாமாதலின், அவற்றின் உத்பத்தியின்மைமாத்திரத்திற்குத் திருஷ்டாந்த வடிவத்தன்மை யமையாதாதலின் முற்கூறிய வுரையே இனியதாம். மற்றுருரை யிலோ தேகம் விழுவதன்முன்னர் என்னும் வாக்கியத்திற்கு இவ்வாறு பொருள் கூறப்பட்டுளது. ஈண்டுச் சரீரபதத்தால் சரீரத்திற் காரியமாயுள்ள கிருகத்தாச்

சிரமங் கொள்ளத்தக்கது அவ்வாசிரமத்தின் தியாகவடிவ சந்நியாசத்தின் முன்னரே. எவ்வதிகாரி புருஷன் விவேக வைராக்கியங்களால் அக்காமக்குரோத வேகத்தைச் சகனஞ்செய்வதில் வலியுடையனோ அப்புருஷனே பின்னர்ச் சந்நியாச பூர்வக சிரவணமுதலிய சாதனங்களால் ஆன்மஞானத்தைச் சம்பாதித்துப் பிரஹ்ம யோகமுடையனுதற்கும் பிரஹ்மாநந்தமுடையனுதற்குந் தக்கவனுவன். எவன் சந்நியாசத்தின் முன்னர் அக்காமக்குரோத வேகத்தைச் சகிக்கவில்லையோ, அதாவது அக்காமக்குரோதத்தை ஜயிக்கவில்லையோ அவ்வசுத்தாந்தக்கரணமுடைய புருஷன் சந்நியாசாசிரமத்தோடு சிரவண முதலியவைகளைச் செய்யினும் ஆன்மஞானத்தையும் அதன் பலவடிவ மோக்ஷத்தையுமடையான். (23)

(அ-கை) இவ்வதிகாரி புருஷன் கேவலம் அக்காமக்குரோதங்களின் வேகத்தைச் சகித்துக்கொள்வதனோ மோக்ஷமடையான்; மற்றோ, அதனினதிகமாயும் சிறிது செய்பற்பாலன வுளவாமென்னும் அர்த்தத்தை இப்போது ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்.

சு-ம். யொ²ஹ்ஹ்வொ²ஹ்ராராரா²ஃ தயா²ஹ்ஜ்ஜ்யோ²திரெவயஃ।
ஸ யொ³ ப்³ரஹ்மநிர்வா²ணம் ப்³ரஹ்மஸம்ஸ்தோயமத்⁴யகா³꞉ ॥ (24)

ப-ம். 1 யஃ 2 ஸுக²மஃவ்யஃ 5 ஸுக²ராராரா²ஃ 4 தயா 7 ஸுந்தஜ்ஜோ²திஃ 3 ஸவ
6 யஃ 8 ஸஃ 9 யொ³ஸி 12 ப்³ரஹ்ம 11 நிர்வா²ணம் 10 ப்³ரஹ்மஸம்ஸ்தஃ 13 ஸயி
மத்⁴யகா³꞉.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எப்புருஷன் அந்தர்ச்சுகனேயாவனோ அந்தராராமனேயாவனோ அந்தர்ச்சோதியேயாவனோ அப்புருஷனெய யோகி பிரஹ்மரூபனேயே மோக்ஷவடிவப் பிரஹ்மத்தையடைகின்றான். (24)

(வி-ம்.) பாகிய விஷயங்களின் அபேட்சையின்றியே அந்தர்ச் சொரூபவடிவ சுகப்பிராப்தி எவனுக்கோ அவன் அந்தர்ச்சுகமாவன்; அதாவது பாகியவிஷய சந்நிய சுகமின்றியவன் என்பதாம்.

சங்கை:—ஹே பகவன்! அப்புருஷனுக்குப் பாகிவிஷய சுகானுபவமில்லாதது என் நிமித்தத்தால்?

சமாதானம்:—ஸ்ரீ பகவானருளுகின்றார். (அந்தராராம)என ஹே அர்ச்சுன! எதனால் அப்புருஷன் உட்டிருப்தனோ அதனனே அவன் பாகிய விஷய சுகமிலாதோன் அந்தர் ஆன்மாவினிடத்தில் கிரீடைவடிவ ஆராமமுடையவன். பாகிய விஷய சுகசாதனவடிவ ஸ்திரி புத்திர திரவிய முதலியவைகளில் கிரீடைவடிவ ஆராமமின்றியவன் அந்தராராமனுவன். அதாவது, சர்வ பரிக்கிரகமின்மையின் பாகியவிஷய சுகசாதனமின்றியவனுவன்.

சங்கை:—ஹே பகவன்! சர்வ பரிக்கிரகமுமின்றிய விரத்தியுடைய சந்நியாசிக்கும் ஏவட்கையின்றிக் கிடைத்த குயில் முதலியவைகளின் இனிய குரலைச் சிரவணித்து மிகவினிய தென்றற்காற்றைப் பரிசித்துச் சந்திரனைத் தரிசித்து மயில் நடனத்தைப்பார்த்து மிக்க மதுரந்தண்மையுடைய கங்கைநீரைப் பருகி தாழம்பூ முதலியதின் நறு நாற்றத்தைக்கவர்ந்து சுகந்தோற்றுதல் பொருந்துமாதலின், பாகிய சுகாபாவமும் சுகசாதனாபாவமுங் கூறல் பொருந்தாதாம்?

சமாதானம்:—ஸ்ரீ பகவானருளுகின்றார். 'தயாஹ்ஜ்ஜ்யோதிரெவயஃ' என ஹே அர்ச்சுன! அவ்வித்துவானுக்கு அந்தர் ஆன்மாவினிடத்தில் சுகமாம் பாகிய விஷயங்களாலின்றுவந்தபோல அந்தர் ஆன்மாவினிடத்திலேயே சோதியென்னும் விருத்திவடிவ விஞ்ஞானம் எவனுக்கோ பாகியேந்திரியங்களால் அவ்விஞ்ஞான

வடிவ சோதி எவனுக்கின்ரோ அவன் அந்தர்ச்சோதியாவன். அதாவது சுரோத் திரமுதலிய விந்திரிய சந்நிய சத்தமுதலிய ஞானமின்றியவன் என்பதாம். கருத் திதுவாம்:—அவ்வித்துவானுக்குச் சமாதிகாலத்திலோ அச்சத்த முதலிய விஷ யந் தோன்றுவதில்லை; வெளிக் கிளம்பியகாலத்தில் சத்த முதலியவைகளின் ரோற்ற முளதாமாயினும், அவன் அவைகளைக் கானனீர்போலக் கண்டிருத்தலின் சுகத்தோற்றம் பொருந்தாது. இவ்வாறு எவன் அந்தர்ச்சுகன் அந்தராராமன் அந்தர்ச்சோதி, அவனே மனத்தோடு சர்வ இந்திரியங்களின் நிரோதவடிவ யோகமுடைய யோகியாவன்; அத்தன்மையனே தத்துவ சாக்ஷாத்காரத்தால் அவித்தைவடிவ ஆவரண நிவிருத்தியால் பரமாநந்தவடிவப் பிரஹ்மத்தையடை கின்ரான். அது நிருவாணமாம் அதாவது கற்பிதப் பிரபஞ்சத்தின் நிவிருத்தி வடிவமாம் கற்பித வஸ்துவினபாவம் அதிட்டானவடிவமேயாம்; அதனின் வேற என்றும். இத்துணை கூறியதால் துவைதப்பிரபஞ்சவடிவ துக்கநிவிருத்திபூர்வக பரமாநந்தப் பிராப்திவடிவமோக்ஷங் கூறப்பட்டது. அத்தன்மைய நிருவாணப் பிர ஹ்மத்தை இவ்வித்துவான் தான் பிரஹ்மவடிவமிலனுகியடைவதில்லை; மற்ரோ, எப்போதும் பிரஹ்மவடிவமாயிருந்தே பிரஹ்மத்தையடைகின்ரான். அதாவது, நித்தியப்பிராப்தப் பிரஹ்மமே யடையப்படுகின்றது என்பதாம். 'ப்ரஹ்மவை வாநு ப்ரஹ்மாவேத்' வித்துவானுகிய புருஷன் ஞானத்தின்முன்னரே உண்மை யில் பிரஹ்மவடிவமேயாயினும் அஞ்ஞானத்தால் மறந்தவனுகி ஆன்மஞானத்தி னல் மறித்தும் பிரஹ்மத்தையேயடைகின்ரான். (24)

(அ-கை.) ஆண்டு மோட்சப்பிராப்திக்குக் காரணமாகிய ஆன்மஞானத்திற் குமுன்னர்ப் பலவகைச் சாதனங்கள் கூறியருளப்பட்டன, இப்போது அவ்வான்ம ஞானத்தின் மற்றச் சாதனத்தையும் ஸ்ரீ பகவான் கூறியருளுகின்ரார்.

சு-ம். ரூஹஜ்ஞே ப்ரஹ்மநிவாக்ஷணம் ஜிஷ்யஃ க்ஷீணகல்மஷாஃ।
ஹிந்நத்வைதா யதாத்மாநஃ ஸர்வபூதஹிதே ரதாஃ॥ (25)

ப-ம். 9 ரூஹஜ்ஞே 8 ப்ரஹ்ம 7 நிவாக்ஷணம் 2 ஜிஷ்யஃ 1 க்ஷீணகல்மஷாஃ 3 ஹிந்நத்வை யாஃ 4 யதாத்மாநஃ 5 ஸர்வபூதஹிதே 6 ரதாஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எந்தப்புருஷன் பாபமின்றியவன், சந்நியாசமுடை யோன், சம்சயமிலாதோன், ஒருமைமனத்தோன், எப்பிராணிகளிடத்தும் பிரீ தியு டையோன் ஆவனே அத்தன்மையனே அந்நிருவாணப்பிரஹ்மத்தையடைகின்ரான்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எவன் முன்னர் யக்ஞமுதலிய நிஷ்காம கருமங்க ளால் பாபவடிவதோஷமின்றியவனுவனே அதன்பின் அந்தக்கரணசுத்தியால் எவன் இருஷித்தன்மையை யடைகின்ரானே, அதாவது நுண்ணியபொருளை விவேகம் பண்ணுவதில் வலியுடைய சந்நியாசியோ என்பதாம் அதன்பின் எவன் வேதாந்த சாத்திரத்தின் சிரவண மனனங்களின் பரிபக்குவத்தால் துவைதமற்றவனுவனே, அதாவது பிரமாணகத சம்சயம் பிரமேயகத சம்சயம் முதலியவையின்றியவனே, அதன்பின் நிதித்தியாசனத்தின் பரிபக்குவத்தால் யதாத்மனே அதாவது விப ரீதபாவனையினிவிருத்தி பூர்வகம் ஒரே பரமான்மாவினிடத்தில் ஒருமைப்பட்ட மனமுடையனே அதன்பின் துவைதரிசனமின்மையின் சர்வப் பிராணிகளிடத்தும் பிரீ தியுடையனே, அதாவது சரீரவாக்குமனங்களால் சர்வப் பிராணிகளின் இம் சையின்றியவனே அத்தன்மைய பிரஹ்மஞானியே சர்வத் துவைத நிவிருத்தி வடிவப் பரமாநந்த சொரூபத்தை அபேதமாயடைகின்ரான்.

ஆ-சு. யஸ்ய ஸர்வே ஸமாரம்பாஃ காமஸங்கல்பவர்ஜிதாஃ।
தம் ஜ்ஞாநாக்நிதக்தகர்மாணம் தமாஹுஃ பண்டிதம் புதாஃ॥

(பொ-ள்.) எஞ்ஞானகாலத்தில் இவ்வித்துவானுக்கு இச்சர்வபூதமும் தன தான்மவடிவாகவேயானதோ அந்த ஞானகாலத்தில் ஒரே யத்துவிதீயவான்மாவைப் பார்க்கின்ற பிரஹ்மஞானிக்குத் துவைததரிசனமிலதாகவே, எச்சோக மோகப்பிராப்தியும் எக்காலுமின்றும். (25)

(அ-கை.) ஆண்டுப் பூர்வம் 'ஸஞ்ஜாயதேயவை ஸொஜ்ஞம்' என்னுஞ் சுலோகத்தில் உத்பந்நமாயினும் காமக்குரோதவேகம் இவனுல் சகிக்கற்பாலது என்னுமர்த்தங் கூறியருளப்பட்டது; இப்போது இப்புருஷன் காமக்குரோதங்களின் உற்பத்தியையே தடைப்படுத்தத்தக்கது. அதாவது காமக்குரோத முற்பத்தியாதற்கே யிடங்கொடுக்கற்க என்னு மிவ்வர்த்தத்தை ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்.

சு-ம். காஜெக்ரோயவிய¯காமாம் யதீமாம் யதயெதஹொழி ।
ஸஹிதொ ப்ரஹ்மநிவ¯ாணழி வத¯ுதெ விதிதாத்மநாழி ॥ (26)

ப-ம். 1 காஜெக்ரோயவிய¯காமாம் 4 யதீமாம் 2 யதயெதஹொம் 5 ஸஹித 7 ப்ரஹ்ம 6 நிவா¯ுணம் 8 வத¯ுதெ 3 விதிதாத்மநாம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எப்புருஷன் காமக்குரோதாத்பத்தியின்றியவனே மனத்தினிக்கிரகமுடையனே, ஆன்ம சாக்ஷாத்காரமுடையனே அத்தன்மைய சந்நியாசிக்கு எக்காலத்திலும் அந்நிருவாணவடிவப் பிரஹ்மம் பிராப்தமாம். (26)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வெத்தனமுடைய சந்நியாசி காமக்குரோதமிண்டின் தோற்றமின்மையோடு கூடியவனே அதாவது எவனுக்கு அக்காமக்குரோத முத்பத்தியேயாவதில்லையோ அதனனே எவன் சித்த நிரோதத்தோடு கூடியவனே தத்பதார்த்தவடிவ பரமான்மதேவனைத் தன தான்மவடிவமாய்ச் சாக்ஷாத்காரம்பண்ணியவனே, அத்தன்மைய வித்துவானுகிய சந்நியாசிக்குச் சீவனகால மரணகாலமிரண்டினும் அந்நிருவாணவடிவ மோக்ஷம் சர்வதாப்பிராப்தியாம். எதனுல் அப்பிரஹ்மவடிவ மோக்ஷம் நித்தியமாமோ சுவர்க்கம் போன்றடையப்படுவதில்லையோ அதனுல் அவ்வித்துவானுக்கு அப்பிரஹ்மவடிவ மோக்ஷம் இனிப்பிராப்தமாம் என்னுமித்தன்மைய வருங்கால வியவகாரம் அம்மோக்ஷத்தினுண்டாகாதாம், (26)

(அ-கை.) ஆண்டுப் பூர்வப் பிரசங்கத்தில் இது கூறியருளப்பட்டுளது; சர்வகருமத்தையும் ஈசுவரார்ப்பணம்பண்ணிய அதிகாரியின் அந்தக்கரணம் அந்நிஷ்காமகருமயோகத்தால் சுத்தமானதின்பின்னர்ச் சர்வ கர்ம சந்நியாசமாம்; அதன்பின் சிரவண மனன முதலியவைகளில் தற்பரனுகிய புருஷனுக்கு மோக்ஷ சாதனவடிவ தத்துவஞானம் பிராப்தமாம் என இவ்வியாவும் கூறியருளப்பட்டன. இப்போது 'அந்த யோகி பிரஹ்ம நிருவாணம்' என்னும் பூர்வ வாக்கியத்தில் ஸ்ரீ பகவான் குறிப்பித்தருளிய தியானயோகம் அத்தத்துவ சாக்ஷாத்காரத்திற்கு அந்தரங்க சாதனமாம் என்னுமர்த்தத்தை விரிவாய்க் கூறியருளும்பொருட்டுச் சூத்திரவடிவ மூன்று சுலோகத்தைக் கூறியருளினர். ஆறுவது அத்தியாய முழுதும் அவற்றின் உரைவடிவமாம் அவற்றுள்ளும் முந்திய விரண்டு சுலோகங்களால் சுருக்கமாக யோகத்தைக் கூறியருளினர்; மூன்றுவது சுலோகத்தால் அத்தியானயோக பலத்தைக் கூறியருளினர்.

சு-ம். ஸ்பர்¯ாந்ந் க்ருத்வா பஹிர்பா¯ாம்ஸ்சக்ஷுஸ்சைவாந்தர்ப்ருவொ: ।
ப்ராணாபாநௌ ஸமௌ க்ருத்வா நாஸாப்யந்தரசாரிணௌ ॥ (27)

சு-ம். யதேம் த்ரயஏதாஸ்ஸுஃ ஸுரிஸ்ருஷ்டாஸ்வராயணஃ ।
விமதேஹ்ராஹயக்ரீயஃ யஜ்ஞா ஸுக்ருதே ஜன ஹஃ ॥ (28)

ப-ம். 2 ஹுஸ்ரா-ஸு 4 கூரக்வா 3 பஹிஃ 1 பாஹுஸ்ரீஸு 6 அக்ஷ்-ஃ 5 அ 9 ஜன
8 சுந்தஸே 7 ஹ்ரு-வொஃ 10 வ்ராணாவாநள 11 ஹஉள 13 கூரக்வா 12 நாஹா
ஹ்யஂதஸ ஆஸிணள 14 யதேம் த்ரயஏதாஸ்ஸுஃ 18 ஸுரிஃ 16 ஸ்ருஷ்வராயணஃ 15 விமதேஹ்ராஹயக்ரீயஃ 17 யஃ 20 ஹுஸ்ரா 21 ஸுக்ருஃ 22 ஜன 19 ஹஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பாகியத்திலுள்ள சத்த முதலிய விஷயங்களை மறித்தும் பாகியமாக்கி நேத்திரத்தை இரண்டு புருவத்திற் கிடையிலேயே நிறுத்திப்பிராணபான னிரண்டையும் சமமாய் நாசிக்குள்ளே நிரோதம்பண்ணி எவனிந்திரியமனம் புந்திகளை ஜெயித்தவனே இச்சை பயங் குரோதங்களொழிந்தவனே சர்வ விஷயங்களினின்றும் விரத்தனே அத்தன்மைய மனன சீலனாகிய சந்நியாசி எப்போது முத்தனவன். (27,28)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இயல்பானே வெளித்தேசுத்திருக்கும் சத்த முதலிய விஷயங்கள் பாகியமாயினும் சுரோத்திரமுதலிய விந்திரிய வாயிலாய் அந்த வந்தச் சத்தமுதலிய வாகாரத்தையடைந்த அந்தக்கரண விருத்திவாயிலாய் உள்ளே சித்தத்திற் புகுகின்றது; அத்தன்மைய சத்தமுதலிய விஷயங்களை எவன் மறித்தும் பாகியமாயே செய்வனே, அதாவது எவன் பாவைராக்கியத்தின் பிராபாவத்தால் அவ்வச் சத்தமுதலியவாகாரமாகிய விருத்தியைத் தோற்றுவியானே, ஈண்டு ஸ்ரீ பகவான் சத்தமுதலிய விஷயங்கட்குப் பாகியங்களென்னும் விசேஷணங் கூறியருளியதின்றிருக்கருத்திதுவாம்:—இச்சத்த முதலிய விஷயங்கள் ஒருகால் இயல்பாயே அந்தரமாகிடினே ஆயிர முபாயத்தானும் இவ்விஷயங்கள் மீண்டும் பாகியமாய்ப் பண்ணமுடியா; இயல்பானே அந்தரமாகிய விஷயங்களைப் பாகியமாய்ப் பண்ணினே அவ்விஷயங்களின் இயல்பாந்தன்மைக் கேடாகின்றது. வஸ்துவின் சுபாவமோ கெடுவதில்லையாம். தீயின் உஷ்ண சுபாவம் ஒருகாலுங் கெடுவதில்லாததேபோலும். அவ்விஷயங்கள் இயல்பானே பாகியமெனக் கொள்ளினே இராகவசத்தால் உள்ளே சித்தத்தில் பிரவேசித்த அச்சத்தமுதலிய விஷயங்களைப் பாவைராக்கியவசத்தால் மறித்தும் வெளியிலிழுத்துவரல் கூடும். இயல்பாய்ச் சுத்த வஸ்திரத்தில் பாகியத்தினின்று மடைந்திருந்த மண்ணனது உவர்மண் நீராற் கழுவுதலால் நிவிருத்தியாகின்றதேபோலும்; இத்துணை கூறியதால் ஸ்ரீ பகவான் வைராக்கியத்தைக் கூறியருளினர். இப்போது அப்பியாசத்தைக் கூறியருளுகின்றார். 'அக்ஷ்-ஸ்ருவாம்தஸே ஹ்ரு-வொஃ' என ஹே அர்ச்சுன! இவ்வதிகாரி தனது நேத்திர திருஷ்டியை இரண்டு புருவமத்தியில் நிறுத்துக. அப்புருவமத்தியில் நேத்திர நிலைத்திருத்தல் நேத்திரத்தைப் பாதி மூடலாலாகின்றது, நேத்திரத்தை முழுதும் மூடினாலும் அல்லது முழுதுந்திறந்தாலும் புருவத்திற்கிடையினிலேக்குந்தன்மைகூடாது. கருத்திதுவாம்:—இவ்வப்பியாசம் பண்ணுகின்ற புருஷன் ஒருகால் நேத்திரத்தை முழுதும் மூடினே இவனுக்கு நித்திரைவடிவலயவிருத்தியாய்விடும், முழுதுந்திறக்கினே பிரமாண விபரியய விகற்ப ஸ்மிருதி என்னும் நால்வகை விசேஷ விருத்திகளுள்ளனவாய்விடும். நித்திரை முதலிய அவ்வைந்து விருத்திகளும் யோகாப்பியாசத்தின் விரோதியானதால் இவ்வதிகாரி அவ்வைந்து விருத்திகளையும் நிரோதஞ்செய்யத்தக்கது; அந்த நிரோதம் புருவத்திடை நேத்திரத்தை நிறுத்தலினேனையாம். இவ்வதிகாரி தனது பிராணபானனைச் சமஞ்செய்க அதாவது பிராணனின் மேலோட்டத்தையும் அபானனின் கீழோட்டத்தையும் கும்பகத்தால் விச்சேதஞ்செய்து அப்பிராணபானன்களை இருதயமுதலிய விடங்களில் நிறுத்தல்வேண்டும் என்பதாம். இவ்வித வுபாயத்தால்

நிரோதமுற்ற இந்திரியமன புத்திகளையுடைய மோக்ஷபராயணன், அதாவது சர்வ விஷயங்களினின்றும் விரக்தன் என்பதாம் அப்புருஷனே முனியாவன், அதாவது மனன சீலனுவனென்பதாம். எவன் இச்சை பயம் குரோதங்களின்றியவனே நீங்கிய இச்சை பயக்குரோதம் என்னும் வாக்கியத்தின் அர்த்தம் நீங்கிய ராக பயக்குரோதம் என்னும் வாக்கியத்தினுரையில் முன்விரிவாய்க் கூறப்பட்டது. இத்தன்மைய இலக்கணத்தோடுகூடியவன் எப்போதுஞ் சந்நியாசியாவன் அவன் முத்தனேயாவன். அவனுக்கு மோக்ஷம் செய்யற்பாலதன்று. அல்லது, எப்போதும் என்னும் பதத்தை முத்தனே யென்னும் பதத்தோடு கூட்டத்தக்கது அதனுலிப்பொருள் பெறப்பட்டது. இத்தன்மைய சந்நியாசியானவன் ஜீவித்திருப்பினும் முத்தனேயாவன்.
(27,28)

(அ-கை.) ஹே பகவன்! இத்தன்மைய யோகத்தோடுகூடிய அதிகாரி எப்பொருளையுணர்ந்து முத்தியையடைகின்றன் என்றருச்சுனனுசங்கிப்ப ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்.

சு-ம். ஹொகூரம் யஜ்ஞதவஸாம் ஸவ-ருலொகமஹெஶ்வரம் ।
ஸுஹ்ருதம் ஸவ-ருபூதானாம் ஜ்ஞாத்வா மாம் ம்ருச்சதி ॥ (29)

ப-ம் 2 ஹொகூரம் 1 யஜ்ஞதவஸாம் 3 ஸவ-ருலொகமஹெஶ்வரம் 5 ஸுஹ்ருதம் 4 ஸவ-ருபூதானாம் 7 ஜ்ஞாத்வா 6 மாம் 8 ம்ருச்சதிம் 9 ஜ்ஹதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சர்வயக்ஞ தவங்களின் போக்தாவடிவமும் சர்வலுலகங்களின் மகத்தாகிய ஈசுரவடிவமும் சர்வப் பிராணிகளின் சுகிருதவடிவமுமாகிய ஸ்ரீ பகவானுகிய எம்மை ஆன்மரூபமாயுணர்ந்தே யோகி மோக்ஷத்தையடைகின்றன்.
(29)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! வேதத்திற்கூறிய ஜோதிட்டோம முதலிய யக்ஞங்களின் கிருச்சிர சாந்திராயண முதலிய தவங்களின் எஜமானன்முதலிய கருத்தாவடிவத்தானும் இந்திரன் முதலிய தேவதாவடிவத்தானும் போக்தாவடிவமும் இரட்சிப்பவரும் பரமேஶ்வரராகிய நாமே அங்ஙனமே சர்வ லுலகங்கட்கும் மகத்தாகிய ஈசுரரும் யாமேயாம் அதாவது இரணிய கருப்பன் முதலிய ஈசுரர்களையும் ஆணையில் நடத்துவிப்பவர் யாமே. அங்ஙனமே சர்வப் பிராணிகட்கும் சுகிருதவடிவமும் யாமே அதாவது கைம்மாறபேட்சியாமலே சர்வப்பிராணிகட்கு முதவிசெய்பவர் யாமே என்பதாம். இத்தன்மைய சர்வாந்தரியாமி சர்வப் பிரகாசக பரிபூரண சச்சிதானந்தவடிவ ஏகரச பரம்மார்த்த சத்திய சர்வ ஆன்மவடிவமாகிய நாராயணராகிய வெம்மைத் தனதான்மவடிவமாய்ச் சாக்ஷாத்காரித்தே அந்த யோகத்தோடுகூடிய புருஷன் சர்வசமுசாரத்தினிவிருத்திவடிவ மோக்ஷரூப சாந்தியையடைகின்றன். ஈண்டு, ஹே பகவன்! சங்கு சக்கரம் கதை பத்மம் என்னு மிந்நான்கையுமுடைய சதுர்ப்புஜ வடிவமானது வசுதேவர் தேவகி என்னுமிவர்களிடத்தினின்று முண்டானது, எனது இரதத்திலுமிருக்கின்றது என்னுந்தன்மையதாய தங்களது வடிவத்தை யுணரினும் அர்ச்சுனனுகிய யான் என் மோக்ஷமடையேன்? என்னுமருச்சுனனது சங்கையை நிவிருத்தித்தருள ஸ்ரீ பகவான் தமது சொரூபத்தை 'யஜ்ஞதவஸாம் ஹொகூரம் ஸவ-ருலொகமஹெஶ்வரம் ஸவ-ருஹ்ருதானாம் ஸுஹ்ருதம்' என்னும் மூன்று விசேஷணத்தாற் கூறியருளுகின்றார். இத்தன்மைய எமது சொரூபஞானமே மோக்ஷகாரணம், கேவலம் எமது தூலவியக்தி ஞானமன்றும். இப்போது ஐந்தாவதத்தியாயத்தின் சார்வார்த்தத்தையுஞ் சுருக்கிக் கூறுஞ் சுலோகஞ் சொல்லப்படுகின்றது,

சு-ம். சுதேகஹாயநாஹ்யாஹ நிஷந்நம் ஹரிணெரிதம் ।
வவ்வாஸ்மவவரிஜ்ஞாநம் ஹவெஷாம் உக்திஹாயநம் ॥

(போ-ள்.) பலவகையான சாதனுப்பியாசத்தாலுத்பன்னமும் சர்வ அதிகாரிகளுக்கு மோக்ஷசாதனவடிவமுமாகிய தமது சொரூபஞானத்தை ஸ்ரீ பகவான் இவ்வைந்தாவது அத்தியாயத்தில் கூறியருளினர். (29)

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய ஸ்ரீ உத்தவாநந்தகிரி சுவாமிகளது பூஜ்யபாத சிஷ்யராகிய ஸ்ரீ சித்கணனந்தகிரி சுவாமிகளால் இயற்றியருளிய பிராகிருத கூடார்த்ததீபிகையெனப் பெயரிய வியாக்கியானத்தின்

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

ஆறாவது அத்தியாயம்.

ஓம் ஸ்ரீ கணேசாயநமஃ ஸ்ரீ குருப்யோநமஃ ஸ்ரீ காசிவிச்வேச்வராப்யாம்நமஃ
ஸ்ரீ சங்கராசார்யேப்யோநமஃ.

(அ-கை.) ஆண்டித்தொடக்கச் சுலோகம்.

சு-ம். யொமவஸ்தம் தீர்ஹிஃஸ்ரூகெஃ வஜ்ரஸஞ்ஜெயஜீநிதம் ।
ஷஷ்ஷூரஹ்யதேஷ்யாயஹ்ஹ ஆவ்யாகாய விஹ்ஹராகு ॥

(போ-ள்.) ஐந்தாவது அத்தியாயத்தினீற்றில் மூன்று சுலோகங்களாற் கூறியருளிய யோகசூத்திரங்களை விரிவாயுரைசெய்தருளற்பொருட்டு இவ்வாறுவது அத்தியாயம் ஆரம்பித்தருளப்படுகின்றது. அதில் சருவகருமங்களின் தியாகங் கூறியருளி ஸ்ரீபகவான் யோகவிதானஞ் செய்தருளினர். ஆதலின், அச்சருவகருமங்களும் தியாகம்பண்ணத்தக்கமையின் சந்நியாசத்திலும் யோகத்திலும் மிகக் கீழாமென் றருச்சுனன் ஆசங்கிக்க ஸ்ரீபகவான் இரண்டு சுலோகத்தால் அருச்சுனனை யுத்தவடிவகருமத்தில் பிரவிருத்தித்தருளற்பொருட்டு மீண்டும் அக்கருமயோகத்தைத் துதித்தருளுகின்றனர்.

ஸ்ரீ ஹமவாஞ உவாச.

சு-ம். சுநாஶ்ரிதஃ கரஃமம்ஜம் காயஃம் கரஃ கரொதி யஃ ।
ஸ ஸம்ந்யாஸீ அ யொகீ அ ந நிரக்நிர்ந அக்ரியஃ ॥ (1)

ப-ம். 3 சுநாஶ்ரிதஃ 2 கரஃமம்ஜம் 4 காயஃம் 5 கரஃ 6 கரொதி 1 யஃ 7 ஸஃ 13 ஸந்யாஸீ 14 அ 15 யொகீ 9 அ 16 ந 8 நிரக்நிர்ந 12 ந 10 அ 11 சக்ரியஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! கருமபலத்தை விரும்பாது அவசியஞ் செய்யத்தக்க நித்தியகருமத்தைச் செய்பவன் எப்போதும் அக்கினியற்றவனும் கிரியையற்றவனுமன்றேனும் சந்நியாசியும் யோகியுமாவன். (1)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எவன் சுவர்க்கமுதலிய கருமபலேச்சையின்றிச் சாத்திரத்திற் செய்யற்பாலனவடிவமாய் விதிக்கப்பட்ட அக்கினிஹோத்திரமுதலிய நித்திய நைமித்திக கருமங்களைப் பிரீதியோடுஞ்செய்கின்றானே அவன் கருமியாயினும் சந்நியாசியும் யோகியுமேயாவன் என்றிவ்வாறு கருமி புகழப்படுகிறான். என்னை? தியாகத்தின்பெயர் சந்நியாசமாம்; சித்தவிட்சேபமின்மையின்பெயர் யோகமாம்; இத்தன்மைய சந்நியாசயோகமிரண்டும் இந்நிட்காம புருஷனிடத்துள்ளன; இவன் பலத்தியாகியாதலின் சந்நியாசியாம், பலதிருஷ்ணைவடிவ விக்ஷேபமிலாதவனாதலின் யோகியாம் என்பது பொருள். ஈண்டுச் சகாமபுருஷாபேட்சையால் நிஷ்காமபுருஷனிடத்து மேலாந்தன்மை கூறுதற்பொருட்டு ஸ்ரீபகவான் கௌணியிருத்தியை யங்கீகரித்தருளிச் சந்நியாச சத்தத்தால் கருமபலத்தியாகத்தைக் கூறியருளினர். யோகசத்தத்தால் பலதிருஷ்ணைத்தியாகத்தைக் கூறியருளினர். அன்றியும், சந்நியாசசத்தத்தின் முக்கியப்பொருள் பலத்தோடு சருவகருமங்களின் தியாகவடிவமாம்; யோகசத்தத்திற்கு முக்கியப்பொருள் சருவசித்தவிருத்திநிரோதவடிவமாம்; இவ்விரண்டும் நிஷ்காமபுருஷனுக்கு ஒருதலைபாயுண்டாதற்பாலனவாமாதலின், நிஷ்காம கருமஞ்செய்வோன் எப்போதும் அக்கினியற்றவனல்லன்; அதாவது அக்கினியாற் பெறப்படுவதாகிய அக்கினிஹோத்திரமுதலிய சிரௌதகருமத்தியாகமுடையோனல்லன். அந்தக் கருமிபுருஷன் கிரியையற்றவனுமல்லன் அதாவது அக்கினியை யபேட்சியாத ஸ்மார்த்தக்கிரியாத்தியாகியுமல்லன். அங்ஙனமாயினும் அந்நிஷ்காமகருமியைச் சந்நியாசியென்றும் யோகியென்றுமுணர்க. அல்லது, 'ஸஹயஜ்ஞாஃப்ரஜா யொகீஉ உநிஉத்பி உ-உ ஆகீரயஃ' என்னும் வாக்கியத்திற்கு இப்பொருட்செய்க:—சிரௌதாக்கினியின்றிய புருஷன் சந்நியாசியெனப்படுவதில்லை; கிரியையின்றிய புருஷன் யோகியெனப்படுவதில்லை; மற்றோர், சிரௌதாக்கினியும் கிரியையுமுடையவனுய் நிஷ்காமகருமத்தைச்செய்யுங் கருமியையே சந்நியாசியென்றும் யோகியென்றுமுணர்க. இவ்வண்ணம் நிஷ்காமகருமி புகழப்படுகின்றான். ஈண்டு அக்கிரியன் என்னும் பதத்தானே சர்வ கருமங்களின் சந்நியாசியின் றோற்றமாதல் கூடுமாதலின், நிரக்கினி என்னும் பதம் பயனிலதாம் அங்ஙனமாயினும் அக்கினிசத்தத்தால் சர்வகருமத்தையுங்கொண்டருளி நிரக்கினிசத்தத்தால் சந்நியாசியைக் கூறியருளினர். கிரியாசப்தத்தால் சர்வசித்தவிருத்திகளைக் கவர்ந்தருளி, அக்கிரியாசப்தத்தால் நிருத்தசித்தவிருத்தியையுடைய யோகியைக் கூறியருளினர். ஆதலின், இப்பொருட்பெறப்படுகிறது; அந்நிரக்கினி புருஷன் சந்நியாசியெனப்படுவதில்லை. அங்ஙனமே அக்கிரியபுருஷன் யோகியெனப்படுவதில்லை; மற்றோர், நிஷ்காமகருமஞ்செய்யுங் கருமியே சந்நியாசியென்றும் யோகியென்றுஞ் சொல்லப்படுகின்றனன். (1)

(அ-கை.) எங்ஙனம் சிங்கந் தேவதத்தன் என்னும் வாக்கியத்தில் பசுவடிவ சிங்கத்தின்வேறுகிய மனுஷியவடிவ தேவதத்தனிடத்தில் அச்சிங்கத்தின் ஒப்புமையாகிய சூரத்தன்மை கோரத்தன்மை முதலிய குணங்களைக்கொண்டு அச்சிங்கசத்தம் எழுகின்றதோ அங்ஙனமே சந்நியாசாபாவத்தில் சந்நியாசசப்தம் பிரவிருத்திக்கும்; யோகாபாவத்தில் யோகசத்தம் பிரவிருத்திக்குங் காரணமாகிய ஒப்புமைக்குணத்தை ஸ்ரீபகவான் உபதேசித்தருளுகின்றார்.

சு-ம். யம் ஸம்ந்யாஸமிதி ப்ராஹுர்யொகம் தம் வித்தி பாண்டவ।
ந ஹ்யஸம்ந்யஸ்ய ஸம்கல்பொ யொகீ பவதி கஸ்சந ॥ (2)

ப-ம். 2 யம் 3 ஸம்ந்யாஸம் 4 இதி 5 ப்ராஹுஃ 7 யொகம் 6 தம் 8 வித்தி 1 பாண்டவ 13 ந 9 ஹி 10 அஸம்ந்யஸ்ய ஸம்கல்பொ 12 யொகீ 14 பவதி 11 கஸ்சந.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எது சுருதியிற் சந்நியாசமென்னும் பெயராற்கூறப்படுகின்றதோ அதுவே யோகமென் றுணர்தி; எதனால் சங்கற்பத்தியாகமிலாத எவனும் யோகியாவதின்மே. (2)

(வி-ம்.) 'ந்யாஸஸன்னயாதிரித அயகூ ப்ராஹ்மணாஃ வ்ருத்தெ ரூஷணாயாஸ்ரவி த்தெஷணாயாஸ்ர தொகெஷணாயாஸ்ர வ்ருத்தாயாய ஹிக்ஷாஅய-ழ்oஅரஞ்சி' என் பதுமுதலிய பலசுருதிகளில் பலத்தோடு சர்வ கருமத்தியாகம் சந்நியாசமென் னும்பெயராற்கூறப்படுகின்றது அதையே யோகமென்றுணர்தி. ஈண்டுப் பலவேட் கை கருத்திருத்துவாபிமானங்களை விடுத்து நூல்விதித்த சுபகருமத்தைச் செய் வதன்பெயர் யோகமாம். அச்சந்நியாசத்தை நீ நிட்காமகரும யோகமென்றறிதி. ஹே பகவன்! பிரமதத்தனலாதோனே இவன் பிரமதத்தனெனக்கூறுவதால் இவன் பிரமதத்தனுக்காப்பானென் என்றுணரப்படும். என்னே? வேறுபொருளின் வா சகசத்தமானது மற்றியாதானுமோர் பொருளை யறிவுறுத்தற்பொருட்டுக் கூறிடி னே அச்சத்தம் கௌணிவிருத்திபாலேனும் அத்தன்மையி னாரோபத்தாலேனும் அவ்வந்நியப்பொருளில் தனது வாச்சியார்த்தத்தின் ஒப்புமையையே தெரிவிக்கின் றது. ஈண்டுப் பிரசங்கத்தில் அவ்வொப்புமையாதாம் என்றருச்சுனன் ஆசங்கிக்க ஸ்ரீபகவான் அவ்வொப்புமைத் தருமத்தைக்கூறி யருளுகின்றார் 'ந்ஹ்யஸம்ந்ய ஸ்ஹ்ஸம்கல்பொ யொகீ ஹவதிகஸ்சந ஊதி', எதனால் பல சங்கற்பதியாகமின்றிய எவனும் யோகியாவதில்லை; மற்றே, சர்வ யோகிபுருஷர்களும் பல சங்கற்பத்தி யாகிகளே யாகின்றார்கள். அதனால், பலத்தியாகவடிவ பலதிருஷ்ணைரூபச் சித்த விருத்தி நிரோதவடிவ ஒப்புமைத்தருமங்களினின்றுங் கௌணிவிருத்தியால் அக் கருமிபுருஷனே சந்நியாசியும் யோகியுமாவன். சந்நியாசி சத்தத்தின் முக்கியப் பொருளாகிய பல சகித சர்வ கருமத்தியாகியிடத்தில் சுவர்க்கமுதலிய பலத்தி யாக மிருப்பதேபோல நிஷ்காமகருமி புருஷனிடத்தும் அஃதிருத்தலின் அச்சந் நியாசிசத்தம் கௌணிவிருத்தியால் அக்கருமிபுருஷனிடத்தே பிரவிருத்திக்கின் றது. யோகிசத்தத்தின் முக்கியப்பொருளாகிய சருவ சித்தவிருத்தி நிரோதமு ளோனிடத்தில் பலதிருஷ்ணைவடிவ சித்தவிருத்திநிரோத மிருப்பதுபோன்று, நிஷ்காமகருமியினிடத்தும் அஃதிருத்தலின் யோகிசத்தம் கௌணிவிருத்தியால் அவனிடத்துப் பிரவிர்த்திக்கின்றது என்பதுகருத்து. இவ்வர்த்தத்தை யோகசூத் திரங்களால் விளக்குகின்றார்.

ஆ-சு. யொமஸ்ரித்தவ்யதி நிரொயஃ வ்ருஸாணவிவய-ழய விகூழு நி ஒராஷ்ஸ்ரதயஃ ஊதி. (பொ-ள்.) சித்தவிருத்திகளினது நிரோதத்தின்பெயர் யோகமாம். அவ்வி ருத்திகளும் பிரமாணம், விபரியயம், விகற்பம், நித்திரை, ஸ்மிருதிஎன்னும் வேறு பாட்டால் ஐவகைப்படும். அவற்றுள், பிரமாகரணம் பிரமாணமெனப்படும். அது வும் பிரத்தியட்சம், அனுமானம், சத்தம், உபமானம், அருத்தாபத்தி, அநுபலப்தி என்னும் வேறுபாட்டால் அறுவகைப்படும் என்றிவ்வாறு ஆன்றோர்களுடன்படு கின்றார்கள். பிரத்தியட்சம், அநுமானம், சத்தம் என மூவகைப்பிரமாணமென்று யோகநூலார் கொள்கின்றனர். ஆண்டுச் சில பிரமாணத்திற்குச் சில பிரமாணத்தி லந்தர்ப்பாவமாம். சிலதிற்குச் சிலதினின்றும் பகிர்ப்பாவமாம். இவ்வாறு அப்பிரமா ணங்கட்கு ஒன்றற்கொன்று அந்தர்ப்பாவ பகிர்ப்பாவத்தைக்கொண்டு சில நூலில் அப்பிரமாணங்களைச்சுருக்கினர், சில நூலிற் பெருக்கினர். நியாயமதத்தில் பிரத்தி யட்சம், அநுமானம், உபமானம், சத்தம் இந்நான்கே பிரமாணமாம். அவற்றுள், அருத்தாபத்திப் பிரமாணத்தைக் கேவல வியதிரேகாநுமானத்திலடக்கிக்கொண்ட னர், அநுபலப்திப்பிரமாணத்தைப் பிரத்தியட்சப் பிரமாணத்தி லடக்கிக்கொண்ட னர். இங்ஙனமே பிறமதத்திலும் அப்பிரமாணங்களின் குறைவுமிகுதிகளை யுணர்

ந்துகொள்க. நியாயமதத்தில் பிரத்தியட்சமுதலிய பிரமாவின் காணமாதலின் இந்திரிய முதலியவைகளே பிரத்தியட்சமுதலிய பிரமாணமாமாயினும், யோக நூலார்மதத்தில் இந்திரிய முதலியவைகளாலுண்டாகும் மனோவிருத்திகளே பிரத்தியட்சமுதலிய பிரமாணவடிவங்களாம். அவ்விருத்திகளிடத்துள்ள சேதனப் பிரதிபிம்பங்கள் பிரத்தியட்சாதிப் பிரமாவடிவங்களாமாதலின், பிரத்தியட்ச முதலிய பிரமாணங்களைச் சித்தவிருத்திவடிவமாய்க் கூறினர். (1) மித்தியாஞானம் விபரியயமாம். அதுவும் அவித்தை, அஸ்மிதை, இராகம், துவேஷம், அபினிவேசம் என்னும் வேறுபாட்டால் ஐவகைப்படும்; அவைகளின் வடிவம் ஐந்தாவது அத்தியாயத்தில் விரிவாய்க் கூறப்பட்டுளது. (2) சத்தங்கேட்டதன்பின் தோன்றும் அர்த்தவடிவ வஸ்துவற்ற சித்தவிருத்தி விசேஷத்தின் பெயர் விகற்பமாம். மலடிமகனுளான் மனுடக்கொம்புண்டு என்பனமுதலிய சத்தங்களைக் கேட்போனுக்கு மலடிமகனையும் மனுடக்கொம்பையும் விடயஞ்செய்வதான சித்தவிருத்தி அவசியமாயுண்டாம். அவ்விருத்தியின் விடயவடிவ மலடிமகன் மனுடக்கொம்பு மிக்க வசத்தாமாதலின், அதை விடயம்பண்ணும் விருத்தியும் விகற்பமெனப்படுகின்றது. இவ்விகற்பம் விஷயவடிவ வஸ்துவின்றியதாதலின், பிரமாவடிவமன்றெனவும்படுகின்றது. இவ்விகற்பம் பாதஞானமுளதாயினும் அவசியமாய்த் தோன்றுவதாதலினுலும் வியவகாரத்திற்குக் காரணமாதலாலும் விபரியயவடிவமன்றென்க. சைதன்யமே புருஷனும் எனச் சைதன்ய புருஷர்கட்கு அபேத நிச்சயமுளதாயினும் புருஷனது சைதன்யம் எனக் கேட்போனுக்குச் சைதன்யம் புருஷன் என்பவற்றின் பேதத்தைக் கவரும் விகற்பஞானமுண்டாகின்றதாதலின், அது விபரியயவடிவமன்று. பாதஞானமுளதாகவே அவ்விபரியயஞானந் தோற்றுவதில்லை; மற்றே, விகற்பஞானம், பிரமாஞானம் பிராந்திஞானமிரண்டினும் வேறும். சத்த ஞானானுபாதி வஸ்து சூன்யோவிகல்பம் என்னுஞ் சூத்திரத்தில் ஸ்ரீபதஞ்சலிபகவான் கூறியருளியதே விகல்பவடிவமாம். (3) பிரமாணம், விபரியயம், விகற்பம், ஸ்மிருதி இந்நால்வகைச் சித்தவிருத்திகளின் அபாவத்திற்குக் காரணமாகிய தமோகுணத்தை விஷயஞ்செய்யும் விருத்தி விசேடத்தின்பெயர் நித்திரையாம். இத்துணை கூறியதால் ஞான முதலியவைகளின் அபாவமாத்திரத்திற்கு நித்திரைத்தன்மை கூறும் மதமும் மறுக்கப்பட்டது. அபாவப் பிரத்தியயாலம்பன விருத்தி நித்திரை என்னுஞ் சூத்திரத்தில் ஸ்ரீபதஞ்சலிபகவான் கூறியருளியதே நித்திரையின் வடிவமாம். (4) பூருவானுபவத்தாலுண்டாய சமஸ்காரமாத்திரத்தால் தோன்றுவது ஸ்மிருதியாம். அஃது எல்லா விருத்திகளானுமுண்டாகுமாதலின், பகவான் பதஞ்சலியார் அம்மிருதியைச் சர்வ விருத்திகட்கிடையிற் கூறியருளினர். (5) இலஜ்ஜைமுதலிய பலவகையாயுண்டாகும் விருத்திகட்கு இப்பிரமாணமுதலிய ஐந்து விருத்திகட்குள்ளே அந்தர்ப்பாவமாம். இவ்வாறு சர்வ விருத்திகளின் நிரோதம் யோகமெனவும் சமாதியெனவுங் கூறப்படுகின்றது. கருமபலத்தின் சங்கற்பமும் ஐவகையான விபரியயங்களில் இராகமெனப்பெயரிய மூன்றுவது விபர்யய விசேடமாம். அவ்விராகவடிவ பல சங்கற்ப நிரோதமாத்திரமே ஈண்டு கௌணிவிருத்தியால் யோகமென்னும் பெயரானும் சந்நியாசமென்னும் பெயரானுங் கூறப்படுகின்றது. ஆதலின், ஈண்டுச் சிறிதளவும் விரோதமென்பதின்றும்.

(அ-கை.) ஹே பகவன்! முன்னர்த் தாங்கள் கருமயோகத்தை மேம்பாடுடையதாய்க் கூறியருளினீர்களாதலின் அது மேம்பாடுடையதாம்; ஆகவே இவ்வதிகாரியாற் சீவனகாலபரியந்தம் அதுவே செய்யத்தக்கதென் றுணரப்படுகிறது. யாவஜ்ஜீவ மக்கினிஹோத்திரஞ்ஜுஹோதிச் சுருதியும் அங்ஙனமே கூறுகின்றதென்று அர்ச்சுனன் ஆசங்கிக்க ஸ்ரீ பகவான் அக்கருமயோகத்தின் முடிவைக் கூறியருளுகின்றார்:—

சு-ம். கூஷ்ரு-ஷ்ரு-கெஷ்தாஉ-ழு-நெயெ-ழுாமம் கூஉ-ழு காஷ்ணஉ-ஷ்யுதெ।
யொமாஷ்ரு-ஷ்ஜிஹ்ய தஹ்யைவ ஶமஃ காஷ்ணஉ-ஷ்யுதெ॥ (3)

ப-ம். 2 கூஷ்ரு-ஷ்ரு-கெஷ்தாஃ 3 உ-நெஃ 1 யொமம் 4 கூஉ-ழு 5 காஷ்ணம் 6 உஷ்யுதெ
7 யொமாஷ்ரு-ஷ்ஜிஹ்ய 8 தஹ்ய 10 வை 9 ஶமஃ 11 காஷ்ணம் 12 உஷ்யுதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யோகத்தில் ஆரூடமாவதற்கு இச்சையுடைய முனிக்கு அந்த யோகமடைவதில் நித்தியகருமமே சாதனவடிவமெனக் கூறப்பட்டது. அந்த யோகத்தில் ஆரூடனாகிய புருஷனுக்கு ஞானநிட்டை யடைதற்பொருட்டுச் சந்நியாசமே சாதனவடிவமெனக் கூறப்பட்டது. (3)

(வி-ம்.) அந்தக்கரணசுத்தி பூர்வகம் சர்வ விடய சுகங்களினின்றுந் தீவிரவைராக்கியம் யோகமாம். அவ்வியோகத்தில் ஆருடமாவதற்கு இச்சையையுடைய புருஷன் ஆருருக்ஷுவாம். அவன் அந்தக்கரணசுத்தியின்பின்னர்ப் பின்னுல் சர்வ கருமங்களின் நியாகவடிவ சந்நியாசமுடையவனுதலின், இப்போது அவனே முனியெனப்பட்டது. அல்லது, இப்போதே பல திருஷ்ணையின்றியவனுதலின் முனியெனப்பட்டது. அத்தன்மைய ஆருருக்ஷுவாகிய முனியைக்குறித்து யோகத்தில் ஆரூடமாம்பொருட்டு யோகத்தை யடைதற்பொருட்டு வேதத்தில் விதித்த நிஷ்காமமாகிய அக்கினிஹோத்திர முதலிய நித்திய நைமித்திக கருமமே சாதனவடிவமென எம்மாலும் வேதத்தாலும் விதிக்கப்படுகின்றது. அக்கருமி அந்நிஷ்காமகருமத்தால் அந்தக்கரணசுத்திவடிவ யோகத்தையடைவனேல் யோகாரூடனெனப்படுகின்றன். அத்தன்மைய புருஷனுக்கு மறித்தும் அக்கருமஞ் செய்யற்பாலதன்று; மற்றே, அந்த யோகாரூட புருஷனுக்கு ஞானநிட்டையை யடைதற்பொருட்டுச் சர்வ கரும சந்நியாசவடிவ சமமே சாதனவடிவமாய் விதிக்கப்பட்டது. இது கருத்தாம்:—எவ்வளவு காலபரியந்தம் இவ்வதிகாரி அந்தக்கரண சுத்திபூர்வக வைராக்கியத்தை யடையவில்லையோ அதுகாறும் இவன் அவ்வைராக்கியத்தை யடைதற்பொருட்டுப் பல வேட்கையின்றியவனுய்ச் சாத்திரத்தில் விதித்த நித்திய நைமித்திக கருமங்களையே செய்யவேண்டும். இவனுக்கு அந்நிஷ்காமகருமத்தால் அந்தக்கரண சுத்திபூர்வகம் வைராக்கியமடையப்படில் மறித்தும் அக்கருமஞ் செய்யற்பாலதன்று; மற்றே, அக்காலத்தில் சிரவணமனன முதலிய வாயிலாய் ஞானநிட்டையையடைவன். சர்வ கருமத் நியாகவடிவ சந்நியாசமே செய்யற்பாலது; ஆதலின், அந்தக்கரணசுத்திவரையினுமே அக்கருமஞ் செய்யத்தக்கது; சிவனகாலபரியந்தஞ் செய்யத்தக்கதன்று. சிவனகாலபரியந்தம் என்னுஞ் சுருதியோ வைராக்கியமின்றிய புருஷன்மேற்றுயது, வைராக்கியமுடையன்மேற்றுயதன்று. (3)

(அ-கை.) ஹே பகவன்! எந்த யோகாரூடாவத்தையையடைந்து இவ்வதிகாரி சர்வ கருமத் நியாகம்பண்ணத்தக்கவனுகின்றனே அந்த யோகாரூடாவத்தையை இவனடையுங்காலம் யாது? என்று அர்ச்சுனன் ஆசங்கிக்க அக்காலத்தை ஸ்ரீ பகவான் அருளுகின்றார்:—

சு-ம். யதா ஹிநெம் ஜ்ரியாயெ-ழுஷ்ட கூகூஉ-ழுஷ்ட-ஷ்ஜ்ஜதெ।
ஸவ-ழுஸம்கல்ப ஸம்ந்யாஸீ யொமாஷ்ரு-ஷ்ஜிஹ்ஸதொச்யுதெ॥ (4)

ப-ம். 1 யதாஹி 3 ந 2 ஹ்ஜ்ரியாயெ-ழுஷ்ட 6 ந 5 கூஉ-ழுஸ்ட 4 கூந-ஷ்ஜ்ஜதெ 7
ஸவ-ழு ஸம்கல்ப ஸம்ந்யாஸீ 9 யொமாஷ்ரு-ஷ்ஜிஃ 8 தஉா 10 உச்யுதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எப்போது இவ்வதிகாரி சத்தமுதலிய விடயங்களிலும் கருமத்திலும் இச்சையின்றியவனுகின்றனே, சர்வ சங்கற்பமூலமிலாதானுகின்றனே அப்போது யோகாரூடனெனப்படுகின்றன். (4)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சித்தநிரோதம்பண்ணுங்கால் இவன் சுரோத்திர முதலிய இந்திரியங்களைச் சத்தமுதலிய விடயங்களிடத்தும் நித்திய நைமித்திக காமிய லௌகிக பிரதிஷித்த முதலிய கருமங்களிலும் சம்பந்தப்படுத்துவதில்லை. அச்சத்த முதலிய விஷயங்களிலும் அக்கருமங்களிலும் மித்தியா புத்தியானும் அகர்த்தாவும் அபோக்தாவும் அத்விதீய பரமாநந்த சொரூபமுமாகிய ஆன்ம தரிசனத்தால் விஷயங்களிலும் கருமத்திலும் தனது பயனின்மையை நிச்சயித்து எவன் இக்கருமத்தை யான் செய்கின்றேன் இவ்விஷயமெனது போகத்திற்குரித்து என்னு மித்தன்மைய அபிநிவேசவடிவ சம்பந்தத்தைச் செய்வதில்லையோ, இதனை யாவன் சர்வ சங்கற்பத்தையும் விடுத்தோனுவனை, அதாவது இக்கருமம் என்னல் செய்யத்தக்கது இப்பலம் என்னல் அநுபவிக்கத்தக்கது என்னும் மனோவிருத்தி விசேஷமாகிய சங்கற்பம், அதன் விஷய வடிவமான பலவகைக் காமங்கள் அவற்றின் சாதனவடிவ கருமங்கள் என்னுமனைத்தையும் விடுத்தோனுகிய இச்சையின்றியவனுவனை அவன் அக்காலத்தில் சமாதிவடிவ யோகத்திலாரூடனுதலின், யோகாரூடனெனப்படுகின்றன். சத்த முதலிய விஷயங்களிலுங் கருமத்திலும் அபினிவேசவடிவ அநுஷங்கம் அதன் காரணவடிவ சங்கற்பம் என்னுமிரண்டுமே யோகாரூடமாதற்குத் தடைகளாம் அத்தடைகளொழியும்போது இவ்வதிகாரி புருஷன் யோகாரூடனெனப்படுகிறன் என்பதுகருத்து. (4)

(அ-கை.) அல்லது, இவ்வதிகாரி இத்தன்மைத்தாய யோகாரூடனுகுங்கால் தனதான்மாவை ஆன்மாவினுலே இச்சம்சார சமுத்திரத்தினின்றும் கரையேற்றுவனுதலின், இவன் யோகாரூடனுய்த் தனதான்மாவை இச்சம்சாரத்தினின்றும் அவசியங்கரையேற்றுகின்றன் என்னுமர்த்தத்தையே இப்போது ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்.

சு-ம். உ॥ரொ॒தூ॒மா॒தா॒ம॑ம் ஸா॒தா॒ஸ॑வஹா॒ஒயெ॑ ।
சூ॒தை॒வ ஹ॒யா॒தை॒நா ப॑ம்ய॒ஸ்ரா॒தை॒வ ஸிவ॒ஸ்ரா॒தூ॒ர॑ஃ ।
(5)

ப-ம். 3 உ॥ரொ॒ர॑ 2 சூ॒தூ॒நா 1 சூ॒தூ॒ர॑ம் 5 ர॑ 4 சூ॒தூ॒ர॑ம் 6 சுவஹா॒ஒயெ॑ 8 சூதூ॒நா 9 வஹ 7 ஹி 10 சூ॒தூ॒ர॑ஃ 11 ப॑ம்ய॒ஸ்ரஃ 12 சூ॒தூ॒நா 13 வஹ 15 ஸிவ॒ஸ்ரஃ 14 சூதூ॒ர॑ஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வதிகாரி தனதான்மாவை விவேகத்தோடு கூடியமனதால் இச்சமுசாரத்தினின்றுங் கரையேற்றத்தக்கது; சிவான்மாவைச் சம்சார சமுத்திரத்தில் மூழ்கும்படி செய்யற்க; தனதான்மாவே ஆன்மாவிற்குச் சுற்றமும் சத்துருவுமாமாதலின். (5)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! உலகப்பிரசித்தமாகிய சமுத்திரம்போன்று இச்சம்சாரசமுத்திரமும் தையல், குழவி, தனம், மித்திரன் என்பனமுதலிய பொருள்களை விஷயம்பண்ணும் மகாமோகவடிவ பல சுழல்களுடையது காமம், குரோதம் லோபம், அகங்காரம், மமகாரம், என்பனமுதலிய மனோவிகாரவடிவ பல மகாமுதலைகளையுடையது. பலவகையாய பெருநோய்வடிவ திமிங்கிலங்களோடு கூடியது, பசிதாகாதி மகாதரங்கங்களையுடையது மூத்தாபவடிவவடவானலமுடையது. பிரியப்படும் பொருளின் பிரிவாலுண்டாய பலவகைப்பிரலாபவடிவ பேரொலியுடையது. நாடோறுந் துர்வாசனைவடிவ பாசிப்படலமுடையது. விஷயவடிவ விஷத்தால் நிரம்பியது இத்தன்மைய சம்சாரசாகரத்தில் மூழ்கிய தனது சீவான்மாவை இவ்வதிகாரி விவேகத்தோடுகூடிய மனதால் வெளிப்படுத்தல்வேண்டும் அதாவது விஷயாசத்தியையொழித்து அந்த யோகாரூடத்தைச் சம்பாதிக்கவேண்டும் இதுவே சீவனைப் பவக்கடலின்றும் வெளிப்படுத்துவதாம் இவ்வதிகாரி அவ்விஷயங்களிலுள்ள வேட்கையால் தனதான்மாவைப் பவக்கடலில்மூழ்கச்செய்யற்க. இவ்வான்மாவே

தனக்கினிதுசெய்யுஞ் சுற்றம் அதாவது சம்சாரபந்தத்தினின்று விடுவிப்பதாம், ஆன்மாவின் வேறுன மற்றெச்சுற்றமும் இனிது செய்வதில்லை என்னை ? இவ்வுலகத்திலுள்ள தையல், குழவி, தமையன் முதலிய சுற்றங்களோ தனதிடத்தில் சிநேகத்தை யுண்டுபண்ணும் வாயிலானும், நிறைத்தல் வளர்த்தல்களின் சிந்தனவாயிலானும் இச்சீவனுடைய பந்தனகாரணமே யாதலின், அவர்களிடத்துச் சுற்றத்தன்மை பொருந்தாதாம். கோசகாரக்கிடம் தானே தனது அகிதகாரியாமாறு போல, விடயவடிவ பந்தனவீட்டிற்புகுவதால் இவ்வான்மாத்தானே தனக்கஹிதம் பண்ணுஞ் சத்துருவாகின்றது மற்றெம்மாற்றுருமிதற்கின்று. அன்றியும் உலகத்தில் விளக்கமாகிய பாகியசத்துருவினிடத்தும் இவ்வான்மாவே சத்துருத்தன்மை பண்ணுவதால் இச்சீவான்மாத்தானே தனது சத்துருவென்க. (5)

(அ-கை.) ஹே பகவன்! எவ்விதமாகிய வான்மாத் தனது சுற்றமாம், எவ்விதமாகிய வான்மாத் தனது சத்துருவாமென்றருச்சுனன் ஆசங்கிக்க ஸ்ரீ பகவான் சுற்ற ஆன்மாச் சத்துரு ஆன்மாக்களின் இலக்கணங்கூறியருளுகின்றார்.

சு-ம். பந்⁴வாத்மாத்மநஸ்தஸ்ய யேநாத்மைவாத்மநாஜிதஃ ।
அநாத்மநஸ்து ஶத்ருத்வே வர்தேதாத்மைவ ஶத்ருவத் ॥ (6)

ப-ம். 9 பந்⁴வாஃ 7 ஆத்மா 8 ஆத்மநஃ 6 தஸ்ய 1 யேந 2 ஆத்மா 4 ஏவ 3 ஆத்மநா 5 ஜிதஃ 11 அநாத்மநஃ 10 து 12 ஶத்ருத்வே 16 வர்தே 14 ஆத்மா 15 ஏவ 13 ஶத்ருவத்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வான்மா இச்சங்காதத்தை விவேகத்தோடு கூடிய மனதானே ஜயித்தனோ அவ்வான்மாவிற்கு அவ்வான்மாவே பந்துவாம்; அன்றியும், ஜயிக்காத வான்மாவிற்கு வெளியிலுள்ள சத்துருப்போலத் தனதான்மாவே சத்துருத்தன்மைபுதாயிருக்கின்றது. (6)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வான்மா இத்தேகமுதலிய வடிவ சங்காதத்தைக்கேவலம் விவேகயுக்த சுத்தமனத்தானே தனது வசப்படுத்தினதோ, மற்றோர் சாஸ்திரமுதலியதினுலன்றே; அவ்வான்மாவிற்குத் தனதான்மாவே பந்துவாம். என்னை ? விலங்குவடிவ பந்தனமுடைய புருஷன் தனதிச்சைப்படி பிரவிருத்தித்தற் கேலாவாறு, இவ்வான்மாவும் தனதிச்சைப்படி எவ்விடத்தும் பிரவிருத்திப்பதில்லை; அன்றியும், இவ்வான்மாவிற்கு நேத்திரமுதலிய இந்திரியவாயிலாய் உருவமுதலிய விடயங்களிற் பிரவிருத்தித்தலில பலவகையான துக்ககாரணமாம்; அப்பிரவிருத்தி தேதேந்திரிய முதலியவைகளை வசப்படுத்தலான் நிவிருத்தியாமாதலின் விவேகமுடைய மனதால் அச்சங்காதத்தை வசம்பண்ணிய வான்மாத்தானே தனது பந்துவாம்; அன்றியும், தேதகமுதலிய சங்காதங்களை விவேகத்தோடுகூடிய மனதால் வசம்பண்ணுத வான்மாவிற்குத் தனதான்மாவே வெளிச்சத்துருப்போன்றுச் சத்துருத்தனமையிலிருக்கின்றது விலங்குவடிவ பந்தனமிலாதோன் தனதிச்சைப்படி செல்லுமாறு விவேகமனத்தால் தேகாதிகளை வசம்பண்ணுத வான்மாவும் இச்சைப்படி சத்தமுதலிய விடயங்களிற் செல்லுகின்றது அவ்விடயத்தழுந்திய பிரவிருத்தியால் அவ்வான்மாத்தானே தனது சத்துருவாம் என்பது கருத்து. (6)

தோன்றும்; தோன்றிய சித்தத்தில் பின்னர்க் கருக்குகையில்விட்ட செம்புநீர்போலக் குடதுக்கமுதலிய வடிவத்தன்மை போகத்தின் காரணமாகிய தருமாதருமத்தோடுகூடிய சாமக்கிரிவசத்தால் பிராப்தமாகின்றது. ஆண்டு, யோகாப்பியாசவலியால் அவ்வஹான்மாகாரத்தன்மை நிவிருத்தியாயினும் காரணமின்றியேயுண்டாகிய சித்தத்தின் சிதாகாரத்தன்மை நீங்குவதன்றும். ஆதலின் நிரோத சமாதியிலும் சர்வ விருத்திகளின் ரகிதமும் சமஸ்காரவடிவமாத்திரமுமாதலின் அத்தியந்தஞ் சூட்சுமமாகிய நிருபாதிக சைதன்ய வான்மாவின் அபிமுகமடைந்த நிரோத சித்தத்தால் விருத்திகளின்றியே தடையின்றி யான்மானுபவ மமைதல் கூடும். கூறிப்போந்த இச்சார்வார்த்தங்களையும் ஸ்ரீபகவானருளுகின்றார். 'சூதஷஂஷஂஷ ஸுகூகூஷகஂஂவிஉவிஜ்ஞயெசு' சர்வவுபாதிகளுமற்றபிரத்தியக்கான்மாவில்சம்ஸ்தா என்னும் சமாப்தியடைந்தவன்பெயர் ஆத்மசம்ஸ்தனும். பலவகையான விருத்திகளுமற்றுச் சுபாவசித்த ஆன்மாகாரமாகிய ஆன்மசம்ஸ்தமனத்தை முற்கூறிய தைரியத்தோடுகூடிய புத்தியால் சம்பாதித்து அசம்பிரக்ஞாத சமாதியில் நிலைபெற்றிருக்கும் யோகியானவன் ஒரு பொருளையுஞ் சிந்தனைசெய்யற்க, அதாவது யாதேனுமோர் அனன்மபதார்த்தத்தையேனும் பிரத்தியக்கான்மாவையேனும் விருத்தியால் விஷயஞ்செய்யற்க என்னை, அவ்வசம்பிரக்ஞாத காலத்தில் ஒருபோது அனன்மாகாரவிருத்தி தோன்றிடினே அச்சமாதியினின்று வியுத்தானமே யடையப்படும். ஒருகால் ஆன்மாகார விருத்தியுண்டாயினே சம்பிரக்ஞாத சமாதியாயாம்: அசம்பிரக்ஞாத சமாதியன்று. ஆதலின் யோகியானவன் அசம்பிரக்ஞாத சமாதியை நிலைபண்ணற்பொருட்டு ஓர் ஆன்மாகார விருத்தியையேனும் அனன்மாகார விருத்தியையேனும் உண்டாக்கக்கூடாது. (25)

(அ-கை.) இவ்வணம் நிரோத சமாதியைச்செய்யும் யோகி தனது மனத்தைச் சர்வ விஷயங்களினின்றுந் திருப்பி அந்தரான்மாவில் நிறுத்துக என்னுமர்த்தத்தை இப்போது ஸ்ரீ பகவான் கூறியருளுகின்றார்.

சு-ம். யதொ யதொ நிஷ்சரதி உநஷ்சலமஅஸ்திரம்।
ததஸ்ததொ நியம்யைததாத்மந்யெவ வஷம் நயெசு॥ (26)

ப-ம். 1 யதஃ 2 யதஃ 3 நிஷ்சரதி 5 உநஃ 6 அஂஅஸ்திரஂ 4 சுஸ்திரஂ 7 ததஃ 8 ததஃ 10 நியம்ய 9 வஶம் 11 சூத்மந் 12 வை 13 வஷம் 14 நயெசு.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வெந்நிமித்தத்தால் விட்சேபோன்முகமேனும் இலயோன்முகமேனுமாகி இம்மனம் விஷயாகார விருத்தியைத் தோற்றுவிக்கின்றதோ அவ்வந்நிமித்தத்தினின்றும் மனத்தைத் திருப்பி ஆன்மாவின்கண்ணே நிரோதமாக்குக. (26)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சித்த விட்சேபத்தையுண்டாக்கும் சத்த முதலிய விஷயங்களுக்குள் எவ்வெச்சத்தமுதலிய விஷய நிமித்தத்தானும் ராகத்துவேஷமுதலிய நிமித்தத்தானும் விட்சேபப்பட்டு இம்மன மலைகின்றதோ அதாவது விடயாபிமுகமாய்ப் பிரமாண விபரியய விகற்ப ஸ்மிருதி என்னுஞ் சமாதி விரோதியாகிய நான்கு விருத்தியில் யாதேனுமோர் விருத்தியைத் தோற்றுவிக்கின்றதோ அங்ஙனமே லயத்தின் காரணவடிவ நித்திராசேடம் மிகுந்தான்னமுண்ணல் மிகச்சிரமம் என்பன முதலிய நிமித்தங்களுக்குள் எவ்வெந்நிமித்தத்தால் லயாபிமுகமாய் இம்மனமலைகின்றதோ அதாவது இலயமாகிய சமாதிவிரோதி நித்திரைவடிவ விருத்தியைத் தோற்றுவிக்கின்றதோ அந்தந்த விட்சேப நிமித்தம் இலய நிமித்தங்களினின்றும் இம்மனதை நியமஞ்செய்து அதாவது சர்வ விருத்திகளு

மற்றதாக்கி ஸ்வப்பிரகாச பரமானந்தனை ஆன்மாவின்கண்ணை நிரோதஞ்செய்க; செய்யவே நிரோதமானமனம் விட்சேபத்தையும் லயத்தையுமடைவதின்றும். இவ் வர்த்தமனைத்தும் ஸ்ரீ கௌடபாதா சாரியரால் கூறப்பட்டிருக்கின்றன.

சு-ம். உவாயெந நிமஜ்ஜீயாஜிக்ஷிவ்ம் காஉஹொமயொஃ ।
ஸ்ரூவ்ரஸ்ரூம் ஜுயெஜெவ யயாகாஸொஜுயஜ்ஞயா ॥ (1)

ஊஃவ்ம் ஸவ்ஃஉந்ஜ்ஞ்ரூத்ய் காஉஹொமாந்நிவத்ஃயெகூ ।
கூஜ்ம் ஸவ்ஃஉந்ஜ்ஞ்ரூத்யஜாதம் நெவத்ரூ வஸ்ய்தி ॥ (2)

ஜுயெஹ்ம்வொயயெஜ்ஜித்தம் விக்ஷிவ்ம் ஸுஉயெத்ரூஃஃ ।
ஸகுஷாயம் விஜாநீயாத்தஉ வ்ராவ்ம்நஜாஜுயெகூ ॥ (3)

நாஜ்ஞாஉயெத்ரூவ்ம் தத்ரநிஃ ஸ்ம்ஃஃ வ்ரஜ்ஜுயாஜ்ஞவெகூ ।
நிஸ்ரூஜும் நிஸ்ரூஜ்ஜித்தஉகீ கூர்யாஃதயத்தஃஃ ॥ (4)

யஉாநஜீயதெஜித்தம் நஅவிக்ஷிவ்ய்தெவ்ரூஃஃ ।
கூநிம்ஃநஉநாஜ்ஞாஸ்ம் நிஷ்டம் ப்ரஹ்மதத்தஉா ॥ (5)

(பொ-ள்.) இப்போது யதாக்கிரமமாய் இவ்வைந்து சுலோகார்த்தத்தையும் நிரூபிப்பாம் காமபோகங்களில் விட்சேபப்பட்டமனம் அதாவது பிரமாண விபரியய விகற்ப ஸ்மிருதி என்னும் நான்கு விருத்திகளில் யாதானுமோர் விருத்தி வடிவமாய்ப் பரிணமித்த மனதை இந்த யோகியானவன் மேற்கூறும் வைராக்கியாப்பியாசவடிவ வுபாயத்தால் பிரத்தியக்கான்மாவில் நிறுத்தல்வேண்டும். ஆண்டுச் சத்தமுதலிய விஷயங்கட்கு இருவகை யவத்தையாம்; ஒன்றே சிந்தியமானவவத்தையாம்; மற்றையதோ புஜ்யமானவத்தையாம். அவற்றுள் சத்தமுதலிய விஷயங்களைச் சிந்தனை பண்ணலின் பெயர் சிந்தியமானவத்தையாம்; சத்தமுதலிய விஷயங்களை யநுபவித்தலின்பெயர் புஜ்யமானவத்தையாம். இவ்விரண்டவத்தையுமறிவுறுத்துவான் காமபோகங்களில் என்னும் வசனத்தில் இருமை கூறியருளினர். இவ்விரண்டவத்தையும் மனோவிட்சேபத்திற்கேதுவாம். எதில் லயத்தன்மையையடைகின்றதோ அதன் பெயர் லயம். அத்தன்மையது சுழுத்தியாம்; அச்சுழுத்திவடிவ லயத்தில் இம்மனம் சுப்பிரசன்னமாகின்றது, அதாவது சர்வதுக்கமற்றதாகின்றது; அத்தன்மைய மனத்தையும் யோகி நிக்கிரகிக்கவேண்டும். சுழுத்தியில் சர்வ துக்கமற்றதாயிடின் மனம் அதை நிக்கிரகம்பண்ணல் எதன் பொருட்டெனச் சங்கை நிகழக்கூறுகின்றார். 'யயாகாஸொஜு யஜ்ஞயா ஊதி' எங்ஙனம் காமம், விஷயகோசரமாகிய பிரமாணமுதலிய விருத்திகளைத்தோற்று வித்துச் சமாதியின் விரோதியாகின்றதோ அங்ஙனமே லயமும் நித்திரைவடிவ விருத்தியை யுண்டுபண்ணிச் சமாதி விரோதியாகின்றது. சர்வ விருத்திகளின் நிரோதமே சமாதியெனப்படுவதால் காமமுதலன வாக்கிய விட்சேபத்தினின்று மன நிரோதம் பண்ணத்தக்கதேபோலப் பரிசிரமமுதலிய செய்தலயத்தினின்றும் மன நிரோதஞ் செய்யத்தக்கதாம் (1) ஆண்டு முற்சுலோகத்தில் உபாயத்தால் நிக்கிரகஞ்செய்க என்னும் வசனத்தாற் பொதுவாக வுபாயத்தைக்கூறினர். அம்மனோ நிக்கிரக வுபாயம் யாதென வினவக்கூறுகின்றார். 'ஊஃவ்ம்ஸவ்ஃஉந்ஜ்ஞ்ரூத்யெத்யதி' அவித்தையால் கற்பிக்கப்பட்ட துவைதவுலகமனைத்தும் பரிச்சின்னமானதால் துக்கவடிவமே என்று நிரந்தரஞ் சிந்தித்து அதாவது, 'யொவெஹ்லோ தத்ரூவ்ம் நாஜ்ஞெவ்ரூவஜ்ஞி கூயயஉஜ்ஞ்ம் தந்தயஃஃம்த ஊஃவ்ம் ஊதி' தேசகாலவஸ்து பரிச்சின்னமின்றிய சேதனமே சுகவடிவமாம். பரிச்சின்னப்பொருளில் சுகவடிவத்தன்

மையின்ரும். எவ்வெப்பொருள் பரிச்சின்னமாமோ அவ்வப்பொருள் நாசமுடையதும் தக்கவடிவமுமாம். இது முதலிய சுருதியர்த்தத்தைக் குருவுபதேசத்தின் பின்னர் நிச்சயித்து யோகியானவன் காமபோகங்களைத் தன் மனத்தினின்று நிவிருத்திசெய்க. அதாவது சிந்தியமான வவத்தையையுடைய விஷயங்களையும் புஜ்யமானுவத்தையையுடைய விஷயங்களையும் தன் மனத்தினின்றும் நீக்குக. அல்லது, அக்காமபோகங்களினின்றுந் தன்மனதை நிவிருத்திசெய்க. இத்துணை கூறினதால் துவைத வுலகத்தின் ஸ்மரணகாலத்தில் வைராக்கிய பாவனையின்கண்ணே மநிஞ்நிக்கிரகவுபாயவடிவத்தன்மை சொல்லப்பட்டது. இப்போது சர்வ துவைத வுலகத்தின் விஸ்மரணவடிவ பரம்வுபாயத்தைக் கூறுகின்ரூர். 'ஸுஜ ஸவ-ழுஹ ஷுஜதயு ஊதி' பிறப்பற்றபிரஹ்மவடிவமே யிவ்வுலகம்; அதனின்வேறுய்ச் சிறிதளவு பொருளுமில்லை எனக் குருசாஸ்திரவுபதேசத்தின்பின்னர் விசாரித்து அத்துவிதீய பிரஹ்மத்தினும் மாறுய் இத்துவித மாத்திரத்தைப்பார்ப்பதில்லை. அதிட்டான ஞானத்தால் கற்பிதப் பொருளபாவமாதலின் எங்ஙனம் கயிறுவடிவ அதிட்டானத்தின் ஞானந்தோற்றமே அதிற் கற்பிதமான மாலைதண்ட முதலியன அபாவமாயினமேவா அங்ஙனமே அதிட்டானமாகிய பிரஹ்மசாக்ஷாத்காரமுண்டாகவே அதிற் கற்பிதமான துவைதவுலகம் அபாவமாகின்றது. ஆண்டு முற்கூறிய வைராக்கியபாவனைவடிவ வுபாயாபேட்சையால் துவைத நிவிருத்திவடிவ வுபாயத்தில் விலக்ஷணத்தன்மை தெரிவிப்பான் சுலோகத்தில் 'து' என்னுஞ் சத்தத்தைக் கூறினரென்க. (2) இவ்வாறு வைராக்கிய பாவனை தத்துவதரிசனம் என்னு மிரண்டுபாயங்களாலும் விஷயத்தினின்றும் நிவிருத்திபண்ணிய சித்தமானது நாடோறும் இலயமாக்கும் அப்பியாசவசத்தால் அந்தலயாபிமுகமாயிடினு நித்திராசேடம், மிகுந்தவன்னமுண்ணல், மிகுந்த பரிசிரமம் என்பன முதலிய லயகாரணங்களை நிரோதம்பண்ணி அந்தயோகியானவன் உத்தானத்திற்கு முயற்சிசெய்து மனதை லயத்தினின்றும் விழித்திருக்கும்படிசெய்க. அவ்வாறு செய்தமனம் ஒருகால் அதிலதில் விழித்திருந்த அப்பியாசவசத்தால் மறித்தும் அக்காமபோகத்தில் விக்ஷிப்தமாயிடினு முற்கூறிய வைராக்கிய பாவனையாலும் தத்துவ சாக்ஷாத்காரத்தினாலும் மறித்தும் நித்தத்தை நிரோதித்தல்வேண்டும். இவ்வாறு மறித்து மறித்து அப்பியாசவலியால் லயத்தினின்றுஞ் சாக்கிரத்தையும் சத்தமுதலிய விஷயங்களினின்றும் நிவிருத்தியையும் அடைந்த சித்தமானது அதாவது லயவிட்சேப தோடங்களின்றிய மனமானது ஒருபோதும் பிரஹ்மவடிவ சமபாவத்தையடையாது. மற்ரோ, இடையினிலேத்த அச்சித்தம் ஸ்தப்தமாகின்றது. அதையே கஷாயதோடமெனக்கூறுவர். அத்தோஷம் இராகத்துவேஷாதிகளின் பிரபலவாசனைவடிவ ராகவசத்தாலடையப்படுகிறது. அக்கஷாய தோஷத்தோடுகூடிய மனதைச் சகஷாயமெனக் கூறுவர். அத்தன்மைய சகஷாயசித்தத்தை யோகி சமாகிதசித்தத்தால் விவேகித்துணர்வன். அதன்பின் எனதுசித்தம் இப்போது சமாகிதப்படவில்லை என்று நிச்சயித்து யோகி லயவிட்சேபதோஷங்களினின்றும் மனதை நிரோதம்பண்ணியதுபோலக் கஷாயத்தினின்றும் மனதை நிரோதம்பண்ணல்வேண்டும் அதன்பின் லயவிட்சேப கஷாயதோஷங்களில்லாத மனமானது பரிசேடத்தால் அந்தச்சமவடிவ பிரஹ்மத்தையேயடைகின்றது. அதினிலத்தமனதை யோகிகஷாயலயங்களின் பிராந்தியால் அலையவிடக்கூடாது; மற்ரோ, தைரியாலுக்கிரகம்பண்ணியமனத்தால் இலயகஷாயங்களையடைவதினின்றும் விவேகம்பண்ணிச் சமவடிவப் பிரஹ்மமடைவதின்கண்ணே மிகமுயன்று மனதை நிலைப்படுத்தல்வேண்டும். (3) அல்லது அந்நிரோதசமாதி பரமசுகாபிவியஞ்சகமாயினும் யோகி அதில் அச்சுகத்தை அநுபவிக்கக்கூடாது. அதாவது, இதுகாறும் யான் சுகியாயிருந்தேன் எனசுகாசுவாதனவடிவவிருத்தியை யோகிஉண்டாக்கக்கூடாது. ஒருகாற் சுகாகாரவிருத்தியை யுண்டுபண்ணினேனு அசம்பிரஞ்ஞாதசமாதிக்குக் கேடாம். இது முன்னரே

கூறப்பட்டது. அல்லதுபிரக்ஞையாற்சூன்றுஞ்சுகம் அவித்தையாகற்பிதமாதலின் மித்தையாம் எனப்பாவித்து யோகி சர்வசுகத்திலுஞ் சங்கமற்றவனுதல்வேண்டும்; அதாவது அச்சுகேச்சையற்றவனுதல்வேண்டும்; அல்லது 'நிஸ்ஸம்ஸ வ ஜுயாஹ வெசு' என்னும் வாக்கியத்திற்கு இவ்வேறுபொருளைச்செய்க. சவிகற்பமாகிய சுகாகாரவிருத்திவடிவ பிரஞ்ஞையோடு யோகிபுருஷன் சங்கத்தைவிடவேண்டும். சர்வவிருத்திகளுமற்ற சித்தத்தால் அநுபவிக்கப்படும் சுகாநுபவத்தை யோகிபுருஷனுல் ஒருபோதும் நீக்கமுடியாது. விருத்தியின்றி இயல்பாயடையப்படும் சொரூபசுகாநுபவம் நீக்கற்கேலாதாதலின் இவ்வாறு சர்வ விஷயங்களினின்றுந் திருப்பி முயற்சிவலியால் சலனமற்றசித்தமானது ஒருகால் தனது சஞ்சலசுபாவத்தால் விஷயாபிமுகத்தால் வெளியிற்செல்லினும் யோகி நிரோத முயற்சியால் மீண்டுமதை சமப்பிரஹ்மத்தில் ஒருமைப்படுத்தல்வேண்டும். (4) அச்சமப்பிரஹ்மத்தில் நிலைத்தமனம் எத்தன்மைத்தாமென்றுணரும் வேட்கையுண்டாக அதன்வடிவத்தைக்கூறுகின்றார். 'யதோ நிஸ்சரதி மனஸ்சஞ்சலமஸ்திரம்' சித்தமானது லயத்தையேனும் ஸ்தப்தவடிவகஷாயத்தையேனும் சத்தமுதலிய விஷயாகாரவிருத்திவடிவ விட்சேபத்தையேனுமடையாதகாலத்தில் சமாதிச்சுகமும் விருத்தியாலநுபவிக்கப்படுவதில்லை. சுலோகத்தில் லயவிட்சேப மிரண்டையுங்கூறிக் கஷாயம் சுகாஸ்வாதங்கள் கூறுதொழிந்தனவெனும் லயகஷாயமிரண்டுந் தமோகுணகாரியமாதலின் தமோகுணத்தன்மை பொதுவாயிருத்தல்பற்றி லயசத்தம் கஷாயத்திற்கு முபலட்சகமானது. இவ்வாறு விட்சேப சுகாஸ்வாதமிரண்டும் ரசோகுணகாரியமாதலின் ரசோகுணத்தன்மை பொதுவாயிருத்தல்கொண்டு விக்ஷேபசத்தம் சுகாஸ்வாதத்திற்குமுபலட்சகமாம். இச்சுகாஸ்வாதத்தை யோகநூலில் ரசாஸ்வாதமெனவுங்கூறுவர். லயமுதலியதோஷங்களை நீக்கற்குத் தனித்தனி முயலுதற்பொருட்டு இந்நான்கும் முன்னர் வேறுவேறுய்க்கூறப்பட்டன. இவ்வாறு லயகஷாய விட்சேப சுகாஸ்வாதங்களின்றிய சித்தம் அநிங்கனமாம். ஈண்டு இங்கனமென்பது சலனமாம். வாயுவிலுள்ளவிளக்குலயாபிமுகவடிவ சலனமுடையதுபோல் லயாபிமுகவடிவ இங்கனமின்றிய மனம் அநிங்கனமெனப்படுகிறது. அதாவது, காற்றிலாதவிடத்திலுள்ள விளக்கெனச் சித்தம் சலனவடிவ இங்கனமற்றதாகின்றது. அவ்வாறே அநாபாசமுமாம்; அதாவது சித்தமொரு விஷயாகாரமாய்த் தோற்றுவதில்லை. இவ்வாறு சித்தத்தில் லயகஷாய விட்சேப சுகாஸ்வாதமாகிய நான்கு தோஷங்களுமில்லாதகாலத்தில் சமமாகிய பிரஹ்மத்தை யடைகின்றது. (5) இத்தன்மைத்தாய யோகம் நேரே சுருதியாலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. யதோவை அவதிஷதெ ஜுஹூதா நிஸ்ருஹவாவஹ
பஹ்வீர்ஸ்ருஜவிதெவஷதெ தாஸாஹ்ரி வரஸோமதிம் ।
தாம்யொமதி உதீயதெஷ்டிரா மிம்ரியயாரணாம்
சுவ்ரதத்வ ஊஹவதி யொமொஹி வ்ரஹவாவ்ருயெள ஊதி ॥

(பொ-ள்.) எக்காலத்தில் மனதோடு ஐவகை ஞானேந்திரிய நிரோதமும் புத்திசேஷ்டையின்றியதுமாகின்றனவோ அந்தத்திரமாகிய விந்திரியங்களின் தாரணையை யோகநூலுணர்ந்தோர் பரமகதியென்றும் யோகமென்றுங்கூறுவர். அக்காலத்தே முயற்சியின்றிச் சித்தம் பிரஹ்மாகாரத்தையடைகின்றது. இம்முதலிலையும் உடன்பட்டு ஸ்ரீ பதஞ்சலிபகவான் யோகச்சித்தவிருத்தி நிரோதஃ என்னுஞ் சூத்திரத்தைக் கூறியருளினர். ஆதலின், 'ததஹ்ஏதா நியவெஜ்ஞ தஹ்ஆத்மனெஜ்ஞ வவஸ்தானயெசு' என ஸ்ரீ பகவான் கூறியருளியது சுருதி சூத்திரங்களைத் தழுவினவாதலின் உண்மையுரையாம் என்க.

(அ-கை.) இவ்வாறு யோகப்பயிற்சி வலியால் யோகியின்மனம் பிரத்தியக்கான்மாவின்கண்ணே ஒருமைப்படுகின்றது. ஆதலின் அவனுக்குப் பலப்பிராப்தியாம் என்பதை ஸ்ரீ பகவானிப்போ தருளிச்செய்கின்றார்.

சு-ம். வ்ரஹ்மாஜ்ஞாநஸம் ஹ்ருத்யம் யொகிநம் ஸுவஸுத்தழி ।
உவெதி ஸாஜ்ஞாஜஸம் ப்ரஹ்மாநந்தஸகுஷ்ழி ॥ (27)

ப-ம். 1 வ்ரஹ்மாஜ்ஞாநஸம்ஹி 5 ம்ருத்யம் 6 யொகிநம் 8 ஸுவம் 7 உத்தஸம் 9 உவெதி 2 ஸாஜ்ஞாஜஸம் 4 ப்ரஹ்மாநந்தம் 3 ஸுகஷ்ம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பிரசாந்தமனமும் ரஜோகுண நிவிருத்தியும் தமோகுண நிவிருத்தியுமுடைய பிரஹ்மரூபமாகிய யோகி புருஷனுக்கு நிரதிசய சுகப்பிராப்தியாம். (27)

(வி-ம்.) பிரசாந்தமாகிய மனதுடையோன் அதாவது சர்வ விருத்திகளுமின்மையின் சமஸ்காரமாத்திராவசேடமாய் நிரோதமாகிய மனமுளோன் பெயர் பிரசாந்தமனதன் இவனையே சாத்திரங்களில் நிர்மனஸ்கனெனவுங் கூறுவர். இப்போது யோகிபுருஷனது நிர்மனஸ்கத்தன்மையில் ஹேது! கர்ப்ப விசேடணங் கூறியருளுகின்றார். 'ஸாஜ்ஞாஜஸம் ஸுகஷ்ம் உத்தி' விசேஷபகாரணமாகிய ரஜோகுணத்தின் சாந்தமாகிய நிவிருத்தியையுடையோன்பெயர் சாந்தரசசன்; அதாவது, யோகிபுருஷன் விசேஷபத் தோடமற்றவன், அங்ஙனமே லயத்தின் காரணமாகிய தமோகுணவடிவ கல்மஷமில்லாதவன்பெயர் அகல்மஷனும்; அதாவது, யோகியானவன் லயதோடமற்றவன். ஈண்டு, சாந்தரசசம் என்னும் பதத்தையே தமோகுணத்தின் உபலட்சணமென் றுடன்படிலோ, அகல்மஷம் என்னும் பதத்திற்குச் சம்சாரத்தின் காரணபூதமாகிய தருமாதருமவடிவ கல்மிஷமற்ற யோகியின்பெயர் அகல்மஷனும் எனப் பொருள்செய்க. அங்ஙனமே யோகிபுருஷன் பிரஹ்மபூதனும் அதாவது, இவ்வுலகனைத்தும் பிரஹ்மசொரூபமே என்னும் நிச்சயத்தால் சமமாகிய பிரஹ்மத்தையடைந்த சீவன் முத்தபுருஷன் என்னுமித்தன்மைய யோகிபுருஷனுக்கு நிரதிசய சுகப் பிராப்தியுண்டாம். ஆண்டு, மனம் மனவிருத்திகளினபாவத்திலும் சுழுத்தியிற் சொரூப சுகானுபவம் மிக விளக்கமாம்; அவ்விளக்கத்தை யறிவுறுத்துவான் மூல சுலோகத்தில் 'ஹி' என்னும் சத்தத்தைக் கூறியருளினர். இது 'ஸுவராத்யுத்திகம் யத்தத்' என்னுஞ் சுலோகத்தில் முன் கூறப்பட்டது.()

(அ-கை.) கூறிய யோகி புருஷனது சுகத்தை விளக்கியருளுகின்றார்:—

சு-ம். யுஞ்ஜைவம் ஸதாத்மாநம் யொகீ விகதகல்மஷ: ।
ஸுகேந ப்ரஹ்மஸம்ஸ்பர்ஷம் அத்யந்தம் ஸுகமஸ்நுதெ ॥ (28)

ப-ம் 4 யுஞ்ஜந் 1 ஏவம் 2 ஸதா 3 ஆத்மாநம் 6 யொகீ 5 விகதகல்மஷ: 7 ஸுகெந 8 ப்ரஹ்மஸம்ஸ்பர்ஷம் 9 அத்யந்தம் 10 ஸுகம் 11 அஸ்நுதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வாறு எப்போதும் தனது மனத்தை ஆன்மாவின்கண்ணே சமாகிதம்பண்ணிய தர்மாதர்மமின்றிய யோகி புருஷன் வருத்தமின்றிப் பிரஹ்மவடிவ அபரிச்சின்ன சுகத்தையே யநுபவிக்கின்றான். (28)

(வி-ம்.) 'உதஹைவெம்ஷ்யமராஜ்ஞவிதியஷ்யஹஜ்ஞதஃ' என்பது முதலிய வாக்கியங்களால் கூறிப்போந்த கிரமத்தால் யோகி புருஷன் தனது மனத்தை எப்போதும் பிரத்தியக்கான்மாவில் சமாகிதம்பண்ணி நிலைத்தவன் விகதகல்மஷன்; அதாவது, சம்சாரத்தைக்கொடுக்கும் தருமாதருமவடிவ கல்மஷங்கணீங்கியவன், அத்தன்மைய யோகி புருஷன் ஈச்வரப் பிரணிதானத்தால் சர்வ தடைகளையும்

நீக்கி வருத்தமின்றியே சுகத்தை யனுபவிக்கின்றான். இப்போது சன்னியசுகத்தை நீக்குவான், சுகத்திற்கு இரண்டு விசேஷணமருளுகின்றார். 'ஸ்ரஹ்மஸம்ஸ்பரிசம் சுகமஸ்நுதே ஹதி' விடயசம்ஸ்பரிசமின்றி பிரஹ்மத்தின் தாதான்மியவடிவ சம்ஸ்பரிசமுள்ள சுகத்தின் பெயர் பிரஹ்மசம்ஸ்பரிசமாம்; அதாவது, பிரஹ்ம வடிவம் சுகமாம். அங்ஙனமே அத்தியந்தம் சுகமாம். ஈண்டு, தேசகாலவஸ்து பரிச்சேதங்களின் பெயர் அந்தம், அவ்வந்தத்தைக் கடந்திருக்குஞ் சுகத்தின் பெயர் அத்யந்தமாம். இவ்வபரிச்சின்னப் பிரஹ்மவடிவ சுகத்தை, யோவை, பூமா, தத் சுகம் என்னுஞ் சுருதி கூறுகின்றது. அத்தன்மைய நிரதிசயப் பிரஹ்மானந்தத்தை யோகி புருஷன் சர்வ விஷயங்களினின்றும் நிரோதம்பண்ணிய மனதால் லய விக்ஷேபத்தினும் வேறாய் அநுபவிக்கின்றான். ஆண்டு, விக்ஷேபமுளதாகவே விருத்தி யவசியமாயுண்டாம்; லயமுளதாகவே மனவடிவமேயின்றும். ஆதலின், சுகாநுபவத்தை லயவிக்ஷேபங்களினும் வேறாய்க் கூறப்பட்டது. அன்றியும், சர்வ விருத்திகளுமற்ற சூக்ஷ்மமனத்தால் சுகாநுபவம் கேவலம் அசம்பிரஜ்ஞாத சமாதியின்கண்ணேயுண்டாம்; வேறிடத்தின்றும். ஈண்டுச் 'சுகேந' என்னும் பதத்தால் பிரதிபந்தக அந்தராயங்களின் நிவிருத்தியைக் கூறியருளினர். அவ்வந்தராயங்களை யோகசூத்திரத்தில் ஸ்ரீ பதஞ்சலிபகவான் கூறியிருக்கின்றார்.

ஆ-சு. வ்யாதிஸ்த்யாநஸம்ஸய ப்ரமாதாலஸ்யாவிரதி ப்ராந்திதர்சநாலப்தபூமிகத்வாநவஸ்திதத்வாநி சித்தவிக்ஷேபாஸ்தேந்தராயாஃ ॥

(போ-ள்.) வியாதி, ஸ்தியானம், சம்சயம், பிரமாதம், ஆலசியம், அவிரதி, பிராந்திதரிசனம், அலப்தபூமிகத்துவம், அநவஸ்திதத்துவம் இவ்வொன்பதுவகைச் சித்த விக்ஷேபங்களும் அந்தராயமெனப்படுகின்றன. அவற்றுள், சித்தத்தை யோகத்தினின்றும் விக்ஷேபப்படுத்துவது; அதாவது, சித்தத்தை யோகத்தினின்றும் வெளிமுகமாக்குவது சித்த விக்ஷேபமெனப்படுகிறது. அச்சித்த விக்ஷேபங்கள் யோகத்தின் விரோதிகளானதால் அந்தராயமெனப்படுகின்றன. அவற்றுள்ளும், சம்சயம் பிராந்திதரிசனம் இரண்டும் விருத்தி நிரோதவடிவ யோகத்திற்கு நேரே விரோதிகளாகின்றன. ஏனைய வியாதி முதலியனவோ எப்போதும் விருத்தியோடு சஞ்சாரமானதால் அவ்விருத்திக்கே விரோதிகளாகின்றன. அதில் வாதபித்த முதலியவைகளின் ஏற்றத்தாழ்வைக் காரணமாகவுடைய சுரமுதலிய விகாரங்களின் பெயர் வியாதியாம். 1. கருமமிலாத் தன்மையின் பெயர் ஸ்தியானமாம்; அதாவது, யோகநூலுணர்ந்தோரால் நன்கு சிக்ஷிக்கப்படினும், சிஷ்யனிடத்து ஆசனமுதலிய கருமங்கட்குத் தகுதியற்றதன்மை. 2. இந்த யோகம் எனக்குக் கிட்டுமோ கிட்டாதோ என்னும் பாவாபாவவடிவ இருகோடியை விஷயம்பண்ணும் ஞானத்தின் பெயர் சம்சயமாம். அதனபாவமுடையதில் அதன் புத்தி வடிவ விபரியயம்போல சம்சயத்திலுமாம். ஆதலின், சமுசயம் விபரியயத்திற்குள் அடங்குதல்கூடும்; அங்ஙனமாயினும், சம்சயத்திலோ இரண்டுகோடி காணப்படுகிறது, விபரியயத்திலோ ஒருகோடியே காணப்படுகிறது; இத்துணை இடைப்பட்ட விசேஷத்தை யுடன்பட்டே ஈண்டுச் சமுசயத்தை விபரியயத்தினின்றும் வேறாய்க் கூறினர் என்க. 3. சமாதியின் சாதனத்தை யநுட்டிக்க வலியுளதேனும் அச்சாதனத்தை யநுட்டியாதிருத்தலின் பெயர் பிரமாதமாம்; அதாவது, வேறு விஷயத்தில் பிரவிருத்தித்துக்கொண்டு யோகசாதனத்தில் உதாசீனமாயிருத்தல். 4. அவ்வுதாசீனம் நீங்கினும் கபமுதலிய தாதுக்களின் மிகுதிப்பாட்டாலேனும் தமோகுணத்தின் மிகுதிப்பாட்டாலேனும் சரீரத்திலும் சித்தத்திலுமுள்ள கனத்தன்மையின்பெயர் ஆலசியமாம். அவ்வாலசியம் வியாதிவடிவாற் பிரசித்தமின்றேனும் யோகத்தில் பிரவிருத்தியின் விரோதியாம். 5. யாதானுமோர் விஷய விசேஷத்தில் சித்தத்தினது நிரந்தராபிலாஷையின்பெயர் அவிரதியாம்.

6. யோகசாதனமலாததில் யோகசாதன மென்னும் புத்தியும், அங்ஙனமே யோக சாதனத்தில் யோகசாதனமலவெனும் புத்தியும் பிராந்தி தரிசனமாம். 7. சமாதியின் ஏகாக்கிரபூமியின் லாபமின்மை அதாவது க்ஷிப்தமூட விக்ஷிப்த வடிவத்தை யடைதலின் பெயர் அலப்த பூமிகையாம். 8. அப்பூமி கிட்டினும் தனது முயற்சியின் வழுவலால் அப்பூமியில் சித்தம் நிலைக்காமையின் பெயர் அநவஸ்திதமாம். 9. இவ்வொன்பதுவகைச் சித்த விக்ஷேபங்களும் யோக மலங்களென்றும் யோகப் பிரதிபக்ஷங்களென்றும் யோகாந்தராயங்களென்றும் கூறப்படுகின்றன. அல்லது, இதற்கயலாய் விக்கினவடிவ வேறந்தராயங்களும் ஸ்ரீபதஞ்சலி பகவானல் கூறப் பட்டுள்ளன.

ஆ-சு. துஃகதௌர்மனஸ்யாங்கமேஜயத்வ ஶ்வாஸ ப்ரஶ்வாஸா விக்ஷேப ஸஹபுவஃ ॥

(பொ-ள்.) துக்கம், தௌர்மனஸ்யம், அங்கமேஜயத்துவம், சுவாசம், பிரசுவாசம் என்னு மிவ்வைந்தும் சமாகிதசித்தத்திற் காகாதனவாம் மற்றை, விக்ஷிப்த சித்தத்திற் கியைவனவாமாதலின் இவ்வைந்தும் விக்ஷேபத்தோடு தோற்றும் அந்தராயங்களெனப் படுகின்றன. இவற்றுள் சித்தத்தின் வாதனவடிவ ராசஸ பரிணமத்தின்பெயர் துக்கமாம்; அத்துக்கமும் ஆத்தியான்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்னும் வேறுபாட்டான் மூவகைத்து. அதில் சுர முதலிய நோயினுண்டாகிய உடலையடுத்ததுக்கம், காமக்குரோதமுதலியவை களா லுண்டாகும் மனதையடுத்த துக்கம் என்னு மிவ்விருவகைத்துக்கமும் ஆத் தியான்மிகதுக்கமெனப்படும். புலி, பாம்பு, திருடர், முதலியவைகளா லுண்டாகுந் துக்கம் ஆதிபௌதிக துக்கமெனப்படும். கோள் பீடை முதலியவைகளா லுண்டா குந் துக்கம் ஆதிதெய்விக துக்கமெனப்படும். இம்மூவகைத் துக்கமும் துவேஷ வடிவ விபரியயத்திற்குக் காரணமாதலின் சமாதி விரோதியாம். 1. இச்சைக் கேடு முதலிய பெருந் துக்காநுபவத்தாற் றோன்றிய சித்தத்தின் தாமச பரிணம விசேடம் க்ஷோபமெனவும் தப்தீபாவமெனவுஞ் சொல்லப்படும்; அதன் பெயர் தௌர்மன ஸ்யமாம். அது கஷாயவடிவமாதலின், லயம்போலச் சமாதி விரோதி யாம். 2. கை கால் முதலிய அங்கங்களின் கம்பனத்தின்பெயர் அங்கமேஜயத்துவ மாம்; அஃதாசன நிலைமைக்கு விரோதியாம். 3. பிராணனுல் வெளிக்காற்று உள்ளே செல்லலின்பெயர் சுவாசமாம்; அது சமாதியங்கவடிவ ரேசகவிரோதியாம். 4. பிராணனுல் உட்சென்ற வாயு வெளியிலோடலின்பெயர் பிரசுவாசமாம், அது சமாதியங்க பூரகவிரோதியாம். 5. முற்கூறிய இவ்விரண்டுசூத்திரங்களாற் கூறிய விக்கினவடிவ பதினொன்று அந்தராயங்களும் அப்பியாச வைராக்கியங்களால் இனி விருத்தியாகும் அல்லது ஈசுரப்பிரணிதானத்தால் நிவிருத்தியாகும். ஆண்டு யோக சூத்திரங்களில் ஸ்ரீபதஞ்சலிபகவான் 'தீவ்ரசம்வேகானாமாசன்னஃ' என்னுஞ் சூத் திரத்தில் தீவிர வைராக்கியமுண்டையவனுக்கு அசம்பிரக்ஞாத சமாதிலாபம் மிகச் சமீபம் எனக் கூறி, 'ஈசுவரப் பிரணிதானாத்வா' என்னுஞ் சூத்திரத்தில் வேறோர் பகுதம் விகற்பித்துக்கூறி பிரணிதேய ஈசுர சொரூபத்தை 'க்லேசகர்ம விபா காசயை ரபராமிருஷ்டப்புருஷ விசேஷ ஈசுரஃ, தத்திரநிரதிசயம் சர்வஜ்ஞபீசம், சபூர்வேஷாமபிகுரு காலேனானவச்சேதாத்' என்னும் இம்மூன்று சூத்திரங்களாற் கூறி ஈசுரப்பிரணிதானத்தை 'தஸ்யவாசகஃ பிரணவஃ தஜ்ஜபஸ்தத்தார்த்த பாவனம்' என்னு மிரண்டு சூத்திரங்களாற் கூறினர். அதன்பின் ஸ்ரீபதஞ்சலிபகவான் 'ததஃ பிரத்தியக்சேதனாதிகமோபி அந்தராயாபாவச்ச' என்னுஞ் சூத்திரத்தைக் கூறினர். இப்போது இவ்வேழு சூத்திரார்த்தத்தையும் முறைப்படி நிரூபிப்பாம். ஈசுரனி டத்திலுள்ள காயிக வாசிக மானசமென்னும் மூவகையான பத்தி விசேடத்தின் பெயர் ஈசுரப் பிரணிதானமாம் அதனுல் இந்தயோகி புருஷனுக்கு மிக நெருங்கிய

அசம்பிரக்ஞாத சமாதி லாபமாம். அச்சூத்திரவீற்றிலுள்ள 'வா' என்னுஞ் சத்தம் முற்கூறிய தீவிரவைராக்கியவடிவ வுபாயத்தோடு ஈசுரப்பிரணிதானவடிவ வுபாயத்தின் விகற்பத்தை யுணர்த்துதற்பொருட்டாம். அதாவது, தீவிரவைராக்கியத்தாற் சமாதிலாபங் கிட்டுமாபோல ஈசுரப் பிரணிதானத்தானுமாம். பக்தியாற் றிருப்தியுற்ற வீசுரன் இவ்விஷ்டப்பொருள் இப்பக்தஜனத்திற்குப் பிராப்தமாகுக என்றிவ்வாறு அவசியம் அநுக்கிரகிப்பதுதலின் என்க. 1. இப்போது எந்த வீசுரனது பிரணிதானத்தால் அந்தராய நிவிருத்தி பூர்வகம் சமாதிலாபங் கிடைக்குமோ அவ்வீசுரசொரூபத்தை மூன்று சூத்திரங்களால் வர்ணிக்கின்றார். கிலேசம், கருமம், விபாகம், ஆசயம், என்னும் நான்கோடும் முக்காலத்தும் சம்பந்தமற்ற புருஷவிசேஷத்தின் பெயர், ஈசுரனும். அவற்றில், அவித்தை, அஸ்மிதை, ராகம், துவேஷம், அபினிவேசம் என்னு மிவ்வைந்தின் பெயர் கிலேசமாம்; இக்கிலேசங்களின் சொரூபம் முன்னர் ஐந்தாவதத்தியாயத்தில் கூறப்பட்டது. விதி நிடேதக்கிரியையாற் றோன்றிய தருமாதருமத்தின் பெயர் கருமமாம்; தருமாதருமப் பலத்தின் பெயர் விபாகமாம். அப்பலனை யநுபவித்தற் கநுகூலமாகிய சமஸ்காரத்தின் பெயர் ஆசயமாம். இவன் பாபகருமத்தால் ஒட்டைச்சன்மத்தையடையில் அதில் முட்டின்னும் சம்ஸ்காரமுண்டாகின்றது. இவ்வாறு இச்சீவன் எந்தெந்தச் சாதியுடைய சரீரத்தை யடைகின்றானோ அந்தந்தச் சாதியுடைய சரீரபோகத்தில் முந்திய சம்ஸ்காரத்தானே பிரவர்த்திக்கின்றான், சம்ஸ்காரம் வெளிக்கிளம்பாது ஆக்கை பிழைத்திருத்த லமையாது, இவ்வாறு சித்தத்திலுள்ள கிலேச முதலியவைகளோடு இச்சம்சாரி புருஷன் சம்பந்தப்படுகிறான், அஃதில்லாத புருஷவிசேஷன் ஈசுரனெனப்படுகின்றான். இச்சூத்திரத்திலுள்ள விசேஷமென்னுஞ் சத்தம் முக்காலத்திலுஞ் சம்பந்தப்படாத வடிவார்த்தவாசகமாம்; அதனால், ஈசுரன் முக்த புருஷனிலும் வேறெனக் கூறப்பட்டது. முக்தபுருஷனிடத்து இப்போது கிலேச வடிவ பந்தமின்றுமாயினும், தத்துவ சாக்ஷாத்காரத்தின் முற்காலத்தில் அவனிடத்தும் அச்சம்பந்தமிருந்ததாதலின் முக்காலத்தும் கிலேச முதலியவற்றின் சம்பந்தமின்மை அம்முக்தனிடத்து மமையாது. மற்றோ, எவன் சர்வஞ்ஞன், சர்வவித் என்பதுமுதலிய சுருதிகளாற் கூறிய சர்வஞ்ஞருகிய ஈசுரனிடத்தே பொருந்துமாம் என்க. 2. இப்போது ஈசுரனது சர்வஞ்ஞத்தன்மையில் அநுமானப்பிரமாணங் கூறுகின்றார். ஆண்டு, நம்மனோர்க்குள்ள ஞானம் சாதிசயமானதால் நிரதிசய ஞானத்தால் வியாப்தமாம்; எவ்வெப்பொருள் சாதிசயமாமோ அவ்வப்பொருள் தனது சமானசாதியுடைய நிரதிசயப்பொருளால் வியாபிக்கப்பட்டதாம். எங்ஙனம் கடத்தின் பரிமாணம் சாதிசயமாதலின், பரிமாணத்தன்மையால் தனது சமானசாதியுடைய விபுப் பரிமாணத்தால் வியாப்தமாம், அத்தன்மைய நிரதிசய ஞானம் கேவலம் ஈசுரனிடத்திலேயுளதாம், மற்றொன்றிலும் இராதாம். நிரதிசய ஞானமே சர்வஞ்ஞத்தன்மையின் ஞாபகமாம். அதாவது, யாண்டு நிரதிசயஞானமாமோ ஆண்டுச் சர்வஞ்ஞத்தன்மை யுணரப்படுகின்றது. நிரதிசயஞானமுடையோனுதலின் ஈசுரன் சர்வஞ்ஞனுமென்க. 3. இப்போது ஈசுரன், பிரமன் முதலிய தேவதைகளினின்றும் விசேடன் எனக் கூறுகின்றார். சிருட்டிகாலமுதற்கொண்டு தோற்றப்பட்ட பிரமன்முதலிய தேவர்கள் அனைவரும் கால பரிச்சேதமுடையவர்; அத்தன்மைய கால பரிச்சின்னர்களாகிய பிரமன் முதலியோர்கட்கும் ஈசுரன் குருவாம் என்னை? ஈசுரன் காலத்தால் அபரிச்சின்னனுதலின் அதாவது முதலிறிலாதோன்.

ஆ-சு. யொவ்ரஹ்மாணம் விதயாதிவ்ரூவ்ம் ।
யொவெதாம்ஶ்ச வ்ரஹிணொதி தஸ்மை ॥

(போ-ள்.) ஈசுரன் சிருட்டியின் ஆதிகாலத்தில் இரணியகருப்பவடிவப் பிரமாவை உண்டுபண்ணினனன். அப்பிரமாவின்பொருட்டு எல்லா வேதத்தையு மீந்தனன் என்பது முதலிய சுருதிகளால் ஈசுரனிடத்துப் பிரமன் முதலியோர்களது குருத்தன்மை சித்தமாகின்றது. 4. முற் சூத்திரங்களாற் கூறிய ஈசுரனது பிரணிதானத்தை இப்போதிரண்டு சூத்திரங்களாற் கூறுகின்றார். முற்கூறிய வீசுரனது வாசகம் ஓங்காரவடிவப் பிரணவமாம். 5. அவ்வீசுரவாசக பிரணவத்தினிரந்தரஜபமும் அப்பிரணவப்பொருளாகிய வீசுரனைத் தியானம்பண்ணலும் ஈசுரப் பிரணிதானமாம். 6. அப்பிரணவ ஜபவடிவமும் பிரணவார்த்தத்தின் தியானவடிவமுமாகிய ஈசுரப் பிரணிதானத்தால் அந்த யோகி புருஷனுக்குப் பிரத்தியக்சைதன்யவான்ம சாக்ஷாத்காரமுண்டாகின்றது. அங்ஙனமே முன்னர் வியாதிஸ்தியானம் என்பது முதலிய இரண்டு சூத்திரங்களாற்கூறிய விக்கினவடிவ பதினொன்று அந்தராயங்களு மபாவமாகின்றன. 7. ஈசுரப் பிரணிதானத்தால் அவ்வந்தராயங்கள் நீங்குவனபோல அப்பியாசவைராக்கியங்களினாலும் நீங்குவனவாம். அவ்வப்பியாசவைராக்கியங்களால் அந்தராய நிவிருத்தியில் அவ்வப்பியாசத்தைத் திடம்பண்ணற் பொருட்டு ஸ்ரீபதஞ்சலிபகவான் இரண்டு சூத்திரங் கூறியருளினர்.

ஆ-சு. ததபிஷெயார்த்தஃ ஸெகதக்வாஹ்யாஹஃ ॥ (1)

ஸெதிரகரணார்தமிதொ வெக்ஷாணாம் வாவஸ்துவ ।
வாணயாவாணயவிஷயாணாம் ஹாவநாதஸ்ரித்த வ்ரஹாதம் ॥ (2)

(போ-ள்.) முற்கூறிய விக்கினவடிவ அந்தராய நிவிருத்தியின்பொருட்டு யோகி புருஷன் யாதேனுமோர் இஷ்ட தத்துவத்தில் மனதை மறித்து மறித்துப் புகவிடல் வடிவ அப்பியாசஞ் செய்யவேண்டும். 1. ஈண்டு நன்மைசெயுந்தன்மை மைத்திரியாம்; கிருபை கருணையாம்; சந்தோஷம் முதிதையாம்; உதாசீனத்தின் பெயர் உபேக்ஷையாம்; அன்றியும், சுகம், துக்கம், புண்யம், அபுண்யம் இந்நான்கு பதங்களுந் யதாக்கிரமம் சுகமுடையன், துக்கமுடையன், புண்யமுடையன், அபுண்யமுடையன் வாசகங்களாம் ஆதலி னிப்பொருட் பெறப்பட்டது. சுகபோக சம்பந்தமுடைய பிராணிகளிடத்தில் எனது மித்திரர்களாகிய விவர்கட்குக் கிடைத்த சுகப்பேறு எப்போதும் நழுவாதிருக்கவேண்டும் என மைத்திரியை இவன் செய்யவேண்டும். சுகியாகிய அப்பிராணிகளைப்பார்த்து இச்சுகம் இவர்கட்கேன் கிடைத்தது என ஈரிஷையைபண்ணக்கூடாது. ஈண்டுத்துக்கப்படும்பிராணிகளிடத்தில் எவ்வாற்றாலேனும் இவர்களுடைய துக்கம் நீங்கிடின் நலம் எனக் கிருபைசெய்யவேண்டும். இவர்களிடத்தில் உபேட்சாபுத்தியையும் ஈரிஷையையும் செய்யப்படாது புண்ணியவானிடத்தில் அப்புண்ணியத்தைப் புகழ்வதோடு சந்தோஷத்தையும் அடையவேண்டும் அவனிடத்தில் துவேஷத்தையும் உபேட்சையையும் செய்யக்கூடாது; பாபியாகிய துஷ்டர்களிடத்தில் உதாசீனவடிவ வுபேட்சைபண்ணவேண்டும். அவர்களிடத்தில் சந்தோஷ துவேஷங்களைச் செய்யக்கூடாது; இவ்வாறு மைத்திரி, கருணை, முதிதை, உபேட்சை என்னும் நான்கையு மனுஷ்டிக்கும் புருஷனிடத்தில் சுக்கிலமென்றோர் தருமமுண்டாகின்றது. அத்தரும விசேடத்தின் பிரபாவத்தால் இராகத்துவேஷமுதலிய மலமின்றிய சித்தம் பிரசன்னமாய் ஏகாக்கிரத்தை யடைகின்றது. 2. ஈண்டு, மைத்திரி முதலிய நான்கு தருமங்களும் தெய்வசம்பத்து வடிவ வேறு தருமத்திற்கு முபலக்ஷணமாம் அத்தருமம். 'ஸுஹ யம் லக்ஷவ்ம் ஸ்ரீ' என்பது முதலிய வசனங்களாலும் 'ஸுகா நிக்ஷேஷுஹ்ம்ஹிக்ஷ்ம்' என்பது முதலிய வசனங்களாலும் ஸ்ரீ பகவான் தாமே பின்னர்க் கூறியருளுவர். அச்சார்வ தருமங்களும் சுபவாசனை வடிவமனதால் மலினவாசனையை நிவிருத்திப்பதாமாதலின், சர்வ புருஷார்த்தத்திற்கும் தடையானதால் மிகச் சத்துருவடிவ

இராகத்துவேஷாதிகளை இவ்வதிகாரிபுருஷன் மிக முயன்றேனும் நீக்கவேண்டும். ஸ்ரீ பதஞ்சலிபகவான் யோகசாத்திரத்தில் சித்தசாந்தியின்பொருட்டு மைத்திரி கருணை முதலிய வுபாயங்களைக் கூறியதுபோல பிராணயாமம் முதலிய வேறுபாயங்களையுங் கூறினர். அத்தன்மைய சித்தசாந்தியைத் திருவருளாலடைந்த பகவதநுக்கிரகமுடைய புருஷனுக்கே 'சுகேந' என்னும் வசனத்தை ஸ்ரீபகவான் கூறியருளினர். அந்தப் பகவதநுக்கிரகமின்றி இம்மனோநிக்கிரகம் முடியாதென்க. (28)

(அ-கை.) இவ்வாறு நிரோதசமாதியால் துவம்பத தத்பத லட்சியார்த்த வடிவ சுத்தசேதன சாக்ஷாத்காரத்தின்பின்னர் அந்த லட்சியசேதனங்களின் ஐக்கியத்தை விஷயம்பண்ணுவதும் தத்துவமசி முதலிய மகாவாக்கிய சன்னியமும் நிருவிகற்ப சாக்ஷாத்காரவடிவமுமாகிய அந்தக்கரணவிருத்தி யுண்டாகின்றது. அதை வேதமுணர்ந்தவர் பிரஹ்மவித்தையெனக் கூறுவர். அவ்வித்தையிலை அவித்தை அதன் காரியமாகிய வுலகம் அனைத்தும் நிவிருத்தியாய் இவ்வதிகாரி புருஷன் பரிச்சின்னமற்ற பிரஹ்மசொரூபசுகத்தை அநுபவிக்கின்றான் என்னு மிவ்வர்த்த மனைத்தையும் ஸ்ரீ பகவான் மூன்று சுலோகத்தால் அருளிச்செய்கின்றார். அவற்றுள், இம்முதற்சுலோகத்தால் முன்னர் துவம்பத லட்சியார்த்தத்தைக் கூறியருளுகின்றார்.

சு-ம். ஸவ-ஃஹ்ம்தஜ்ஜ்ஞாதாரம் ஸவ-ஃஹ்ம்தாநி அாதஜ்நி ।
ஸ்ரம்க்ஷேத யொமயா-ஜ்தாதா ஸவ-ஃத்ர ஸஃஉபா-ஃநஃ ॥ (29)

ப-ம். 4 ஸவ-ஃஹ்ம்தஜ்ஜ்ஞம் 5 க்ஞாதாரம் 8 ஸவ-ஃஹ்ம்தாநி 6 அ 7 க்ஞாதஜ்நி 9 ஸ்ரம் க்ஷேத 1 யொமயா-ஜ்தாதா 2 ஸவ-ஃத்ர 3 ஸஃஉபா-ஃநஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யோகம்பொருந்திய மனத்தோன் சர்வ உலகத்திலும் சமபுத்தியுடையனுய்ச் சர்வ பூதங்களிலுள்ள வான்மாவையும் ஆன்மாவில் சர்வ பூதத்தையும் பார்க்கின்றான். (29)

(வி-ம்.) தாவரசங்கம சரீரவடிவ பூதங்களனைத்திலும் போக்தாவடிவமாயிருக்கப்பட்ட ஏக அத்துவிதிய விபு சச்சிதானந்த வடிவமாகிய பிரத்தியக் சாக்ஷியாகிய வான்மாவைப் பொய்சடப் பரிச்சின்ன துக்கவடிவமாகிய விளக்கப்படு பொருள்களின் வேறாய் சாக்ஷாத்கரிக்கின்றான். அங்ஙனமே அப்பிரத்தியக் சாக்ஷியாகிய வான்மாவில் ஆரோபித சம்பந்தத்தாலிருக்கப்பட்ட பொய்வடிவ பரிச்சின்ன சடதுக்கவடிவ சர்வ பூதங்களையும் அப்பிரத்தியக் சாக்ஷியாகிய வான்மாவில் கற்பித வடிவமாய் சாக்ஷாத்கரிக்கின்றான். யாவன் அதைச் சாக்ஷாத்கரிக்கின்றான் என்றுணரும் வேட்கைநிகழ அருளுகின்றார். 'யொமயா-ஜ்தாதா ஸவ-ஃத்ர ஸஃஉபா-ஃநஃ ஈதி' ஆண்டு, பொருளாராய்ச்சியின் மிகுந்த குசலத்தன்மைவடிவ யோகயுக்தமெனப்படும் சாந்தியையடைந்த ஆன்மாவெனப்படும் அந்தக்கரணமுடையோன் பெயர் யோகயுக்தான்மாவாம். அங்ஙனமே அந்த யோகத்தாலுண்டாகிய ரிதம்பரையெனப் பெயரிய பிரத்தியட்சத்தால் நுண்ணிய பொருள்களையும் மறைபட்ட பொருள்களையும் தூரத்தனவாகிய பொருள்களையும் ஒரேகாலத்தில் சமமாய்ப்பார்க்கின்றான். இவ்வண்ணம் பார்ப்பவன் பெயர் சமதரிசனனும். அத்தன்மைய சமதரிசனனுகிய யோகயுக்தான்மா பிரத்தியக்கான்மாவையும் அதிற் கற்பிதமாகிய ஆனன்ம வுலகத்தையும் முற்கூறியவாற்றால் உள்ளவாறுணர்வன் என்னுங் கூற்றைக்கும் அல்லது, இச்சுலோகத்திற்கு வேறு பொருள்செய்க. யோகயுக்தான்மாவும் யாண்டும் சமதரிசியானவனே இப்பிரத்தியக் சாக்ஷியை சாக்ஷாத்கரிக்கின்றான். இத்துணைகூறியதால் யோகி சமதரிசி இருவரும் ஆன்ம சாக்ஷாத்காரத்திற் கதிகாரியெனக் கூறப்பட்டனர். கருத்திதுவாம்:—சித்தவிருத்தி நிரோதவடிவ

யோகம் சாக்ஷியாகிய வான்மாவை சாக்ஷாத்கரித்தற் கேதுவாமாறு சடப்பிரபஞ் சத்தின் விவேகத்தால் சர்வத்திலும் அநுசூதமாகிய சைதன்யவடிவ வான்மாவை வேறு பிரித்தல்வடிவ விசாரமும் ஆன்ம சாக்ஷாத்காரத்திற் கேதுவாம். அவ்வா ன்மசாக்ஷாத்கார மடைவதில் கேவலம் யோகமே மிக்கபேட்சிதமன்றும். இக்கருத் துப்பற்றியே ஸ்ரீ வசிட்டபகவானும் ராமச்சந்திரனைக்குறித்து இவ்வாக்கியத்தை யருளினர்.

ஆ-சு. ஹளகுஉள விதுநாஸஹ்ய யொமொஜ்ஞாநமுஸாவிவ ।
யொமொவ்யதி நிஸொயொஹி ஜ்ஞாநம் ஸஉய்மவெக்ஷணம் ॥ (1)

ஸஹாஜ்யஃகுஹ்ய விஜ்ஞாநஃ கஹ்யவிதுக்ஷ நிஸ்சயஃ ।
வ்யகாஸ ஹள தத்தாஜ்ஞவொ ஜ்ஞாஜ்ஞவாஸஸிவஃ ॥ (2)

(பொ-ள்.) ஹே ராமச்சந்திர! சாக்ஷியாகிய வான்மாவின் உபாதிவடிவ சித் தத்தை அதனின் வேறுக்கிச்சாக்ஷியாகிய வான்மாவைப்பார்த்தலே சித்தநாசமாம். அதற்கு இரண்டுபாயம், ஒன்று யோகம் மற்றையது ஞானம்; அவற்றுள் சர்வ விருத்திகளின் நிரோதவடிவ அசம்பிரஞ்ஞாத சமாதியோகமாம். அது சம்பிரஞ் ஞாத சமாதியால் அடையப்படும். அவற்றுள், சம்பிரஞ்ஞாத சமாதியில் ஏக வான் மாகாரவிருத்திப்பிரவாகத்தோடுகூடிய அந்தக்கரணமிருப்பதைச் சாக்ஷி யுணர்கின் றது. அசம்பிரஞ்ஞாத சமாதியிலோ சர்வவிருத்தி நிரோதத்தோடு அந்தக்கரண சத்வ முபசாந்தமானதால் சாக்ஷி யநுபவிப்பதில்லை. இத்துணையே அவ்விரண்டின் விசேடமாம்; சாக்ஷியிற் கற்பிதமாகிய இச்சாக்ஷியவுலகம் மித்தையானதால் மூக்கா லத்திலுமில்லை. ஒரே சாக்ஷியாகிய வான்மாவே பரமார்த்தசத்தியம் என நன்றாய் விசாரித்தலின் பெயர் ஞானமாம். 1. அவற்றில் சில அதிகாரிக்கு யோகங் கடின மும் விசாரஞ் சுலபமுமாம்; சிலர்க்கு யோகஞ் சுலபமும் விசாரங் கடினமுமாம். அக்காரணத்தானே பரமான்மாவாகிய சிவபெருமான் அவ்விரண்டையுங் கூறியரு ளினர். 2. ஆண்டு, இவ்விருவகை யுபாயத்திலும் முதலாவதாகிய யோகவடிவ வுபாயத்தை உலகமுண்மையெனக்கொள்ளும் ஹேரணியகருப்பர் முதலியோர் உடன்பட்டுக்கொண்டனர். அவர் மதத்தில் பரமார்த்தசத்திய சித்தத்தைத் தரிசி யாது சாக்ஷியாகிய வான்மாவைத் தரிசிப்பதில் சித்தநிரோதமொழித்து மற்றொரு பாயமின்றும். மற்றே, கேவலஞ் சித்தநிரோதமே சாக்ஷியாகிய வான்மதரிசனத் திற்கேதுவாம் என்க. ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசாரிய மதத்தையநுசரித்த உலகம் பொய்யென வுடன்படும் ஔபநிடதர்களோ இரண்டாவதாகிய விசார வடிவ உபாயத்தையே உடன்பட்டுக்கொண்டனர், அவ்வுபநிடதத்தைத் தழுவி னோர்க்கு அதிட்டானமாகிய சேதனத்தின் திட சாக்ஷாத் காரத்தின் பின்னர் அவ்வதிட்டானத்திற் கற்பிதமாகிய சித்தம், திருசியப் பிரபஞ்சமிவற்றின் தோற்ற மின்மை ஆயாசமின்றியே பொருந்துதல் கூடும். அவ்வுலகத்தோற்ற மின்மையில் அவர்கட்கு யோகாபேட்சையின்றும் அதுபற்றியன்றே ஸ்ரீமது சங்கரபகவத் பாதாசாரியர் ஓரிடத்தும் பிரஹ்மமுணர்ந்த புருஷனுக்கு யோகாபேக்ஷை கூறி யருளவில்லை. அதனானே உபநிடதாவலம்பியாகிய பரமஹம்சசந்நியாசியும் பிரஹ்ம சாக்ஷாத்காரத்தின் பொருட்டு பிரஹ்மமுணர்ந்த ஆசாரியரையணுகி வேதாந்தவாக் கியங்களின் சிரவண மனனவடிவ விசாரத்திலே முயல்கின்றனன் யோகத்தில் முய லுவதின்றும் என்னை அந்த யோகத்தால் சித்தத்தின் காமக்குரோதமுதலிய தோட நிவிருத்தியாகி அஃதொழிந்த மற்றொருபாயத்தால் நீங்காதாகின் யோகமே அவசியம் வேண்டற்பாலதாம் ஆனாலோ சித்த தோஷம் விசாரத்தானும் நிவிருத்தி யாகின்றது ஆதலின், அவ்வுப நிடதாவலம்பிகட்குப் பிரஹ்மசாக்ஷாத்காரமடைதற் பொருட்டு யோகம் அவசியம் வேண்டற்பாலதன்றும்; மற்றே, வேதாந்தவாக்கிய

விசாரமே ஒரு தலையாய் வேண்டற்பாலதாம் இதனுற்றுன் தைத்திரீய வுப நிடதத்தில் வருணரிஷி பிருகு புத்திரரைக்குறித்து அடிக்கடி விசாரவடிவ தவத் தையே விதித்தருளினர் என்க. (29)

(அ-கை.) ஆண்டு முற்சுலோகத்தில் சுத்தமாகிய துவம்பதார்த்தத்தைக் கூறியருளினர் இப்போதிந்தச் சுலோகத்தில் சுத்தமாகிய தத்பதப்பொருளை அருளிச்செய்கின்றார்.

சு-ம். யொ ஸாம் வஸ்யதி ஸவ-ஸ்ரு ஸவ-ஸ்ரும் அ ஸயி வஸ்யதி ।
தஸ்யாஹம் ந ப்ரணஸ்யாமி ஸ அமெ ந ப்ரணஸ்யதி ॥ (30)

ப-ம். 1 யஃ 3 ஸாம் 4 வஸ்யதி 2 ஸவ-ஸ்ரு 6 ஸவ-ஸ்ரும் 5 அ 7 ஸயி 8 வஸ்யதி 9 தஸ்ய 10 ஸுஹம் 11 ந 12 ப்ரணஸ்யாமி 14 ஸஃ 13 அ 15 மெ 16 ந 17 ப்ரண ஸ்யதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன எந்த யோகி புருஷன் சர்வலுலகத்திலும் பரமேசுர ணுகிய என்னையும் அவ்வுலகனைத்தையும் பரமேசுரணுகிய என்னிடத்திலும் பார்க் கின்றுனே அவனுக்கு நான் பரோட்சமாகமாட்டேன் அவனும் எனக்குப் பரோட்ச மாகமாட்டான். (30)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தத்துவமசி முதலிய மகாவாக்கியத்திலுள்ள தத் பதார்த்தவடிவ பரமேசுரணுகிய யான் எத்தன்மையனெனின் மாயோபாதிகணுகிய சர்வ லுலககாரணன் உண்மையிலோருபாதியுமற்றவன் அங்ஙனமே பரமார்த்த சத்திய ஆனந்தகனன் மூவித பரிச்சேதமற்றவனுதலின் அனந்தவடிவன் எல் லாவுலகத்திலும் சத்தாஸ்புரணவடிவத்தால் அநுசூதன் அத்தன்மைய பரமேசுர ணுகிய என்னை யோகி புருஷர்கள் சர்வலுலகத்திலும் வியாபகமாய்ப் பார்க்கின்றூர் கள் யோக சன்னியப் பிரத்தியட்ச ஞானத்தால் பரமேசுரணுகிய என்னைச் சாக்ஷாத் கரிக்கின்றூர்கள் என்பது பொருள். அங்ஙனமே இவ்வுலகனைத்தையும் பரமேசுர ணுகிய என்னிடத்திற் பார்க்கின்றூர்கள் பரமேசுரணுகிய என்னிடத்தில் மாயை யாற் கற்பிக்கப்பட்ட சர்வ லுலகத்தையும் அதிட்டானவடிவ பரமேசுரணுகிய என் னின் வேறுய் மித்தியாவடிவமாய்ப் பார்க்கின்றூர்கள் என்பது பொருள் என்னை யும் உலகத்தையும் உள்ளவாறுணர்ந்தயோகி புருஷனுக்கு தத்பதப் பொருள் வடிவப் பரமேசுரணுகிய நான் ஓர்காலும் பரோட்சமாவதில்லை ஈசுரன் என்னின் வேறு என்றிவ்வாறு யோகி புருஷரின் பரோக்ஷஞானத்திற்கு யான் விஷயமாக மாட்டேன் மற்றேயோகத்தாலுண்டாய அவரது அபரோக்ஷஞானத்திற்கு விஷய மாகின்றேன். தத்பதார்த்த ஈசுரனிடத்துள்ள வாக்கிய சன்னிய அபரோட்சஞான விஷயத்தன்மை துவம்பதார்த்த சீவனிடு அபேதவடிவத்தானே யாம் கேவலம் ஈசுரனிடத்து வாக்கிய சன்னிய அபரோட்ச ஞானவிஷயத்தன்மையின்றும் ஆயி னும் யோக சந்நிய அபரோட்சஞான விஷயத்தன்மை கேவல ஈசுரனிடத்தும் பொருந்துதல்கூடும் இவ்வாறு யோகசந்நியப் பிரத்தியட்ச ஞானத்தால் பரமேசுர ணுகிய என்னைச் சாக்ஷாத்கரித்த யோகி புருஷன் பரமேசுரணுகிய எனக்கும் பரோட்சமாவதில்லை என்னை அவ்வித்துவான் எனதான்மவடிவமும் மிகப் பிரிய மமாம் இஃதனைத்தும் 'ஜ்ஞானீக்வாத்மைவமெ மதம்' என்பது முதலிய வாக்கியங் களால் மேலும் விளக்கப்படும் தனதான்மா ஒருவர்க்கும் பரோட்சமாவதில்லை மற்றை, யாவர்க்கும் அபரோட்சமேயாம் ஆதலின் அவ்வித்துவான் எப்போதும் எனது அபரோட்சஞானத்திற்கே விஷயமாம் என்னுமிஃதனைத்தும் 'யெயதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ ஜ்ஜாத்யஹம்' என்னுங் கீதாவாக்கியத்தானே சித்த மாம் அன்றியும் இதுமாபாரதத்திலும் யுதிஷ்டிரனுக்கு ஸ்ரீபகவான் அருளியிருக் கின்றூர்.

ஆ-சு. சுவிஷாம்ஹுஹுஹாதாக ஷவிஸம்தம் ஹமவஜ்ஜம் நவஸ்யதி ।
சுதொஹமவாதஸ்யநவிதம் நவஸ்யதி ॥

(போ-ள்.) ஹே யுதிஷ்டிர! ஆன்மஞானமிலாத வஞ்ஞானி தனதான்மவடிவாயிருப்பினும் பரமேசுரனைப் பார்ப்பதில்லை; இதனல் பரமேசுரனுகிய யானும் எனது சர்வஞ்ஞ சுபாவத்தால் சர்வ வுலகத்தையும் பார்க்கினும் அவ்வஞ்ஞானி புருஷனைப் பார்ப்பதில்லை இது சுருதியிலுங் கூறப்பட்டுளது. 'ஸவேநரஷிஜி தொநஹுநகி' அப்பரமான்மா எப்போதும் இச்சீவான்மவடிவமாயிருந்தும் அறியப்படாதவப் பரமான்மா இச்சீவனைப் பிறப்பிறப்புவடிவ சம்சாரத்தினின்று மிரட்சிப்பதில்லை வீட்டிலிருப்பினும் தனம் அறியப்படாது அவ்வீட்டிலுள்ள புருஷனது தரித்திரத்தை நிவிருத்தியாததுபோலவாம். வித்துவானே எப்போதும் அத்தியந்த சமீப டகவானது அநுக்கிரகபாத்திரனும் என்க. (30)

(அ-கை.) ஆண்டு முன்னிரண்டு சுலோகங்களால் தத்துவம் பதங்களின் சுத்தார்த்தங்களைக் கூறியருளினர். இப்போது அவ்விருபொருளின் அபேதவடிவ தத்துவமசி மகாவாக்கியப் பொருளை யருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸவ-ழஹ்மிதஷ்டிதம் யொஸாம் ஹஜதெயகக்வஸாஷ்டிதஃ ।
ஸவ-ழயா வத-ழஸாநொஸவி ஸ யொமீ உயி வத-ழதெ ॥ (31)

ப-ம். 2 ஸவ-ழஹ்மிதஷ்டிதம் .1 யஃ 3 ஸாம் 6 ஹஜதி 4 ஸகக்வம் 5 ஷ்டிதஃ 9 ஸவ-ழயா 10 வத-ழஸாநஃ 11 சுவி 7 ஸஃ 8 யொமி 12 உயி 13 வத-ழதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எந்த யோகி சர்வ பூதத்திலுமுள்ள தத்பதார்த்தமாகிய என்னைத் துவம்பதார்த்தமாகிய தன்னோடு அபேதமென்று நிச்சயித்து அபசோட்சஞ்செய்கின்றனோ அந்த யோகி புருஷன் பலவாறுய் விவகரிப்பினும் பரமான்மாவாகிய என்னிடத்திலே அபேதவடிவமாயிருக்கின்றன். (31)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சர்வ பூதத்திலும் அதிட்டானவடிவத்தாலிருக்கப்பட்டதும் சத்தாஸ்புரணவடிவத்தால் அநுசூதமுமாகிய சத்தாமாத்ர தத்பதலட்சியார்த்தவடிவப் பரமேசுரனுகிய என்னைத் துவம்பத லட்சியார்த்தவடிவ தனது பிரத்தியக் சாட்சியோடு அபேதமாய் நிச்சயித்து அதாவது கடவடிவ வுபாதியை நீக்கக் கடவான்மாவானேபோன்று அவித்தை அந்தக்கரணமுதலிய வுபாதியை நீக்கிப் பரமேசுரனுகிய என்னைத் தனதான்மாவோடு அபேத நிச்சயம்பண்ணி எவ்வதிகாரி என்னைப் பஜனைசெய்கின்றனோ அதாவது அகம்பிரஹ்மாஸ்மி என்னும் வேதாந்தவாக்கியத்தாலுண்டாய சாகூத்காரத்தால் பரமேசுரனுகிய என்னை அபரோட்சமாயறிகின்றனோ அவ்வதிகாரி காரியத்தோடு அஞ்ஞானநிவிருத்தியால் சீவன் முத்தனுய கிருதகிருத்தியனுகின்றன். அவனுக்குப் பாதிதாநுவிருத்தியால் சரீர முதலிய தோற்றமுள்ளவரையில் விலட்சணப்பிராரப்தகருமவலியால் அப்பிரஹ்மஞானியாக்ஞவற்கியர் முதலியோர்போலச் சர்வ கருமங்களையும் விடத்தேனும் வசிஷ்டர் ஜனகர் முதலியோர்போல அக்கினிஹோத்திரமுதலிய விகிதகருமத்தையநுஷ்டித்தேனும் இருப்பினும் அல்லது தத்தாத்திரயர் முதலியோர்போல நிஷித்தமாகிய கருமத்தோடிருந்து பலவகையாய் விவகரிப்பினும் யான் பிரஹ்மமென வுணர்ந்து பரமான்மாவாகிய என்னிடத்திலே அபேதமாயிருக்கின்றன்; எனது பரமானந்தவடிவத்தினின்றும் அவன் நழுவுவதின்றும். அவ்வித்துவானுக்கு எவ்வாற்றலேனும் மோட்சப் பிரதிபந்தக் சங்கையேயின்றுமென்பது டொருள். இது சுருதியினுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. தவ்யஹ நஒவாஜ்ஞாஹ மத்யா ஸம்ஸித ।
சூத்ஹொ ஜ்ஷாம்ஸ ஹவதி ॥

(பொ-ள்.) மகாப் பிரபாவமுள்ள இந்திரன் முதலிய தேவர்களும் அவ்வித்துவானது மோட்சத்தில் தடைசெயற்கேலாது அவன் அத்தேவர்களின் ஆன்மவடிவமேயாதலின் தனதான்மாவிற் கொருவரும் கேடுறுத்துவதில்லை. இந்திரன் முதலிய தேவர்கட்கும் தடைசெய்தற்கேலாதாகில் ஏனைய அற்பப் பிராணிகள் தடைப்படுத்தாதென்பதிற் கூறவேண்டுவதென்னை. நிடேதகருமத்திற் செலுத்தும் இராகத்துவேஷம் பிரஹ்மஞானியிடத்தின்றுமாதலின், அவனுக்கு நிடேதகருமத்திற் பிரவிருத்தியு மமையாது. அங்ஙனமாயினும் பிரஹ்மஞானிக்கு நிடேதகருமத்திற் பிரவிருத்தியை யுடன்பட்டு ஆன்மஞானத்தைத் துதித்தற்பொருட்டு ஸ்ரீ பகவான், 'ஸவ-ஷ்யாவத்-ஷ்ரஸ்நோவி' என்னும் வாக்கியத்தைத் திருவாய்மலர்ந்தருளினர். 'ஹகஸ்வாவிஸ் ஷ்ரஸ்ம ஜ்ரொகாந்ஹஹஸ்தி கஸ்பைஷ்யதே' என முன்னர் ஞானத்தைத் துதித்தற்பொருட்டுக் கூறியருளியதுபோலவே இம்மொழியுமாம். தத்தாத்திரயபகவானது நிடேதகருமப் பிரவிருத்தியோ ஓரிராகத்துவேஷங்களாலன்று. மற்றோர், பகிர்முகமாகிய வுலக சகவாசத்தை நீக்குதற்பொருட்டாம். இஃதனைத்தும் ஆத்மபுராணத்தின் பதிநோராவதத்தியாயத்தில் விரிவாய்க் கூறினும்.

(அ-கை.) இவ்வாறு பிரஹ்மசாக்ஷாத்காரமுண்டாயினும் சில வித்துவான் மனோநாசம் வாசனாக்ஷய மின்மையின் சீவன் முத்திச்சுகத்தை யநுபவிப்பதில்லை சித்தவிட்சேபத்தால் திருஷ்டதுக்கத்தையநுபவிப்பவன் அபரமயோகியெனப்படுகிறான். அவன் இத்தேகம் விழுந்ததின் பின்னரோ விதேக கைவல்லியத்தையடைகின்றான். இத்தேகமுள்ளவரையிலும் விட்சேபத்தால் திருஷ்டதுக்கத்தை யநுபவிக்கின்றனுதலின், தத்துவஞான மனோ நாசம் வாசனா க்ஷய மூன்றையும் ஒரே காலத்திலப்பியாசம்பண்ணித் திருஷ்டதுக்க நிவிருத்தி பூர்வகம் சீவன் முத்திச்சுகத்தை யநுபவித்துப் பிராரப்தகருமவசத்தால் சமாதியினின்று வெளிப்பட்ட போது சர்வப் பிராணிகளையும் தனதான்மாவிற் கொப்பெனப் பார்ப்பவன் பரமயோகி யெனப்படுவன் என்னும் அர்த்தத்தை ஸ்ரீ பகவான் இப்போதருளிச்செய்கின்றார்.

சு-ம். சூத்ளவஜ்ஞ ஸவ-ஷ்ர ஸஉம வஸ்யதி யொஜ்ஞ ।
ஸ்ஸவம் வா யதி வா உஸ்ஸவம்ஸ யொ மீ வஸ்ஸொ உதஃ ॥ (32)

ப-ம். 4 சூத்ளவஜ்ஞ 3 ஸவ-ஷ்ர 8 ஸஉம 9 வஸ்யதி 2 யஃ 1 ஸஜ்ஞ 5 ஸ்ஸவம்வா 6 யதிவா 7 உஸ்ஸவம் 10 ஸஃ 11 யொ மீ 12 வஸ்ஸஃ 13 உதஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவன் சர்வப்பிராணிகளிடத்தும் தனதான்ம திருட்டாந்தத்தால் சுகத்தையேனும் துக்கத்தையேனும் சமமாய்ப் பார்க்கின்றனோ அந்தப் பிரஹ்மவேத்தாவாகிய யோகி மேலானவனென்றெண்ணப்படுகிறான். (32)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எந்த வித்துவான் சர்வப் பிராணிகளிடத்தும் சுகத்தையேனும் துக்கத்தையேனும் தனதான்மதிருஷ்டாந்தத்தால் சமமாய்ப் பார்க்கின்றனோ அதாவது எந்த வித்துவான் துவேஷமின்றியவனுதலின் தனக்கிஷ்டமிலாததைச் சம்பாதியாததுபோல, அன்னியப் பிராணிகட்கும் அநிட்டத்தைச் சம்பாதிப்பதில்லையோ அங்ஙனமே இராகமின்றியவனுதலின், தனக்கிஷ்டத்தைச் சம்பாதிப்பதுபோல அன்னியப் பிராணிகட்கும் இஷ்டத்தைச் சம்பாதிக்கின்றனோ நிர்வாசனையால் சாந்தமனதுடைய அந்தப் பிரஹ்மஞானியாகிய யோகி முற்கூறிய அபரமயோகியினும் மேலானவனும். அதாவது, மனோநாச வாசனா

க்ஷயமின்றிய கேவல தத்துவஞானியினும் மகோநாச வாசனாக்ஷயமுடைய தத்துவஞானி மேலாம். ஆதலின், தத்துவஞான மகோநாச வாசனாக்ஷய மூன்றும் முறைப்படி அநுட்டித்தற்பொருட்டு இவ்வதிகாரி பெருமுயற்சி செய்யவேண்டும் என்க. இப்போது தத்துவஞான, மகோநாச, வாசனாக்ஷய மூன்றின் வடிவம் வர்ணிக்கப்படுகின்றது. அவற்றுள், துவைதமாகிய இவ்வுலகனைத்தும் அத்துவிதிய சச்சிதானந்தவடிவப்பரமான்மாவில் மாயையாற் கற்பிதமாதலின் பொய்யேயாம் பரமான்மாவொன்றே பரமார்த்த சத்தியமாம் அதுவே நான் என்னும் ஞானம் தத்துவஞானமெனப்படுகின்றது. தீபச்சுவாலையின் சந்தானம்போல விருத்திகளின் சந்தானவடிவத்தால் பரிணமத்தையடைந்த அந்தக்காணவடிவ திரவியம் மனனவடிவத்தன்மையால் மனமெனப்படும். அவ்விருத்திவடிவ பரிணமங்களைவிடித்து அச்சர்வவிருத்திகளின் விரோதியாகிய நிரோதாகாரபரிணமமே மகோநாசமாம். முன்பின் விசாரியாது சீக்கிரமுண்டாகும் குரோதமுதலிய விருத்தி விசேடங்கட்குக் காரணபூதமாகிய சித்தத்திலுள்ள சமஸ்காரத்தின் பெயர் வாசனையாம். அதில் விவேகத்தாலுண்டாகிய சித்தசாந்தியின் திடவாசனாவலியால் குரோதமுதலியவைகளை யுண்டுபண்ணும் பாகியநிமித்தமிருப்பினும் குரோதமுதலியன தோன்றுமையின் பெயர் வாசனாக்ஷயமாம் இப்போது இம்மூன்றற்கும் ஒன்றற்கொன்று காரணகாரிய பாவத்தைத் தெரிவிப்பாம் அவற்றுள் தத்துவ ஞானந்தோன்றியதின்பின்னர் மித்தைவடிவமான வுலகத்தில் மநுடக்கோடு முதலியனபோலப் புத்திவிருத்தியெழாது அப்போது ஆன்மா அபரோட்சமாதலின் அதனிடத்தும் விருத்தியினுபயோகமில்லை. பரிசேடத்தால் விறகின்றிய தீப்போல மனங்கெடுகின்றது இவ்வாற்றால் தத்துவஞானம் மகோ நாசத்திற்குக் காரணமாம் அம்மனங் கெட்டபின்னர் சமஸ்காரத்தை யெழுப்பும் பாகிய நிமித்தந்தோற்றுமையின் சமஸ்காரவடிவ வாசனையும் நாசமாகின்றது. ஆதலின், மகோநாசம் வாசனாக்ஷயத்திற்குக் காரணமாம் அவ்வாசனை கெட்டபின்னர் காரணமபாவமானதால் குரோதமுதலிய விருத்திகளுற்பத்தியாவதில்லையாதலின், அம்மனமும் நாசமாகின்றது. ஆதலின், வாசனாக்ஷயம் மகோ நாசத்திற்குக் காரணமாம் மனம் நாசமானபின்னர் சமதமமுதலிய சாதனசம்பத்தியால் தத்துவஞானமுண்டாகின்றது. ஆதலின், மகோநாசம் தத்துவஞானத்திற்குக் காரணமாம், தத்துவஞானந் தோன்றினபின்னர் இராகத்துவேஷாதிவடிவ வாசனையும் நாசமாதலின் தத்துவஞானம் வாசனாக்ஷயத்திற்குக் காரணமாம் வாசனை கெட்டபின்னர் பிரதிபந்தக மபாவமாதலின், தத்துவஞான முண்டாகின்றது. ஆதலின், வாசனாக்ஷயம் தத்துவஞானத்திற்குக் காரணமாம். இவ்வாறு தத்துவஞான மகோநாச வாசனாக்ஷயம் மூன்றும் ஒன்றற்கொன்று காரிய காரணத்தன்மையடைந்தன. இது ஸ்ரீ வசிட்டபகவானும் ஸ்ரீ ராமச்சந்திரனைக்குறித்து அருளியிருக்கின்றார்.

ஆ-சு. தகுஜ்ஞாநம் ஒநோநாஸொ வாஸநாக்ஷய வநவது ।
தித3ங்காரண தாம்மகுவா உ॒ஷாஜ்ஞாநிஷ்டி தாநிஹி ॥ (1)
தஷா ஜ்ஞாவவயதெந வளர॒ஷெண விவெகி நா ।
ஹொமெஹ்ரம் ஒ॒ஸ தஷ்யிகூ தாயஷெ தத ஸாஸ்ரயெக ॥ (2)

(பொ-ள்.) தத்துவஞான முதலிய மூன்றும் ஒன்றற்கொன்று காரிய காரணத்தன்மையடைந்து ஈண்டடைதற்கரிதாயிருக்கின்றது. ஆதலின், ஹே ராம! விவேகமுடைய புருஷ முயற்சியால் போகேச்சையை தூரத்தில் விடுத்து இவ்வதிகாரி இம்மூன்றையும் பற்றவேண்டும் ஈண்டு எவ்வித வுபாயத்தாலேனும் இம்மூன்றையும் யான் அவசியஞ் சம்பாதிப்பேன் என்னும் உற்சாக விசேடத்தின் பெயர் புருஷமுயற்சியாம்; இம்மூன்றிற்கும் வேறுவேறு சாதனமென்று நிச்சயித்தலின்

பெயர் விவேகமாம். தத்துவஞானத்திற்குச் சிரவணமுதலியன சாதனம், மனோ நாசத்திற்கு யோகம் சாதனம், வாசனைகூடிய த்திற்குப் பிரதிகூல வாசனைதான்றல் சாதனம், அத்தன்மைய விவேகமுடைய புருஷ முயற்சியால் போகேச்சையை நெடுந்தூரத்திற்றள்ளி இம்மூன்றையும் பற்றல்வேண்டும். ஆண்டு, நெய் முதலிய ஹவிஷ் அக்கினி விருத்தியாதற்குக் காரணமாவதுபோல, போகேச்சை மிகச் சிறி தாயினும் வாசனை வளருவதற்குக் காரணமாம். ஆதலின், அதை நெடுந்தூரத்திற் றள்ளவேண்டுமென்றருளினர். (2) ஈண்டிதுகருத்தாம். பிரஹ்மஞானத்திற்கு அதி காரி யிருவகையாம். ஒருவனை கிருதாபாசகன், மற்றவனை அகிருதாபாசகன் அதில் உபாசிக்கப்பட்ட தேவதையின் சாகூத்காரபரியந்தம் உபாசித்துப் பின்னர் தத்துவஞானத்தின்பொருட்டுப் பிரவிருத்தித்தவன் கிருதாபாசகனெனப்படு வன். அவனுக்கு மனோநாசம் வாசனைகூடிய மிரண்டும் தத்துவஞானத்தின்முன்னரே திடமாதலின், தத்துவஞானத்தின்பின்னர் அவனுக்குச் சீவன் முத்தி இயல்பாகவே யுண்டாம். தத்துவஞானத்தின்முன்னர் உபாசனைபண்ணாதவன் அகிருதாபாசக னெனப்படுகிறன். இக்காலத்திய முமுட்சுஜனங்கள் பெரும்பாலும் அகிருதா பாசர்களேயாவர். அவர்கள் ஊக்கமாத்திரத்தால் சீக்கிரமே ஞானத்தில் பிரவிர்த் திக்கின்றார்கள். அசம்பிரக்ஞாதவடிவ யோகமின்றியே சேதனசடப்பொருள்களின் விவேகமாத்திரத்தானே தாற்காலிகமனோநாச வாசனைகூடியத்தைத்தடுத்துக்கொண்டு சமதம முதலிய சம்பத்தியால் சிரவண மனன நிதித்தியாசனங்களைச் சம்பாதிக் கின்றார்கள். திடமா யநுட்டித்த அச்சிரவணாதிகளால் சர்வ பந்தத்தையும் நாசப் படுத்தும் தத்துவ ஞானமுண்டாகின்றது. அதனால் அவித்தியாக்கிரந்தி, பிரஹ்ம மின்றியதன்மை, இருதயக்கிரந்தி, சம்சயம், கருமம், சர்வகாமத்துவமின்மை, பிறப் பிறப்பு, சர்வத்தன்மையின்மை என்பன முதலிய சர்வ பந்தங்களும் நீங்குகின்றன.

ஆ-சு. வததெஉ்யாவெஉ நிஹிதம் மூஹாயாம்ஹொ விஉ்யா ம்ரு◌உயிம் ।
விகிரஂதிஹெ வளஉ்ய ப்ரஹ்மவெஉ ப்ரஹ்மெவஹவதி ॥
ஹிஉ்யதெ ஹ்ரு◌உய ம்ரு◌ஂயிஷ்ட்வுஉ்ஹெ வவ-ழஹ்ஂஸயாஃ ।
கூடீயதெ ஆவ்ருகூ◌ா-ழணி தஹ்ரிஉ்ரு◌ஷெ வரூாவரெ ॥
வதயஜூ◌ா◌உ◌நஞம் ப்ரஹ்மயொவெஉ நிஹிதம் ।
மூஹாயாம் வரூெவெவ்ரு◌ஊ ஹொஸ்ரூதெ வவா-ழஊ கூா◌ா◌ஹ்ரூ
தவெவ விதிகூாதி ரூதவ்ரூெ தீம்யஹ்ரூவி ஜூ◌ா◌நவாஊ ।
ஹவதவ்ரு◌ஊஃ வஉாஸ்ரூவிஃ வதரூதத்வுஉாவொதி யஹ்ரா
ஹ்ரூயொ◌நஜாயதெய வனவம் வெஉாஹம் ।
ப்ரஹ்மாஹ்ரீதிஹ உஉம்வவ-ழம் ஹவதி ॥

இப்போது முறைப்படி அச்சர்வ சுருதிகளின் பொருளையுங் கூறுவாம்:— ஹே பிரியதரிசன! ஹிருதயவடிவக் குகையிலுள்ள இவ்வான்மாவைச் சாகூத் கரித்தவன் அவித்தியாக்கிரந்தியை நாசம்பண்ணுகிறன்; பிரஹ்மசாகூத்காரஞ் செய்தவன் பிரஹ்மவடிவமாகின்றன். பரமான்மாவைச் சாகூத்கரித்த வித்துவா னது ஹிருதயக்கிரந்தி பேதனப்படுகிறது. சர்வ சமுசயமும் சேதமாகின்றது; பிராரப்தகருமமொழிந்த மற்றக் கருமங்கள் நாசமாகின்றன. பரமாகாசவடிவ ஹிரு தயக்குகையிலுள்ள சத்தியஞானானந்தப் பிரஹ்மத்தைச் சாகூத்காரம்பண்ணி யவன் சர்வ காமத்தையுமடைகிறன்; அவ்வான்மசாகூத்காரத்தால் இவ்வித்து வான் மிருத்தியுவற்றவனாகின்றன்; விஞ்ஞானமும் மன நிரோதமும் எப்போதும் சுசியும் உள்ளவன் புனராவிருத்தியின்றிய அப்பரமபதத்தையடைகிறன். யான் பிர ஹ்மவடிவமென்றுணர்வோன் சர்வ வுலகத்திற் கான்மாவாவன் என்பது முதலிய

சுருதிகளில் தத்துவஞானத்தால் சர்வ பந்த நிவிருத்தியும் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு சர்வ பந்தங்களின் நிவிருத்திவடிவ விதேகமுத்தி இத்தேகமிருப்பினும் தத்துவ ஞாலேற்பத்தியின் சமகால மென்றுணர்க. என்னை, பிரஹ்மத்தில் அவித்தையாலாரோபிதமான மூற்கூறிய பந்தம் தத்துவஞானத்தின் முன்னமேயுளது; தத்துவஞானத்தால் அவித்தை நாசமானபின்னர் அப்பந்தமும் நாசமாகின்றது. தத்துவஞானத்தால் ஒருதரம் நாசமாகிய அவித்தியாசுகித பந்தம் மறித்தும் உண்டாவதில்லை. ஆதலின், தத்துவஞானத்தைச் சிதையச்செய்கின்ற காரணபாவத்தினின்றும் தத்துவஞானம் இவ்வித்துவானுக்கு எவ்வாற்றலேனும் நிலைத்திருக்கவேண்டும். முன்னர்த் தத்துவஞானத்தை யடைதற்பொருட்டு தாற்காலிகமாய்ச் சம்பாதித்த மலேநாச வாசனாகூடியங்கள் திடாப்பியாசமின்மையானும் போகத்தைத்தரும் பிராரப்தகருமத்தால் பாதப்படுதலானும் வாயுவோடுகூடிய விடத்திலுள்ள இனிய தீபம்போலச் சீக்கிரம் நீங்கிவிடுகின்றது. இக்காரணத்தால் இக்காலத்திய அகிருதோபாசகனுகிய தத்துவஞானிக்கு முன்னர்க் கிடைத்த தத்துவஞானத்தில் சிறிதளவும் முயற்சியவாவின்றேனும் மலேநாச வாசனாகூடிய மிரண்டும் முயற்சியானே அடையப்படுவனவாம். ஆண்டு, மலேநாசம் முன்னர் அசம்பிரக்ஞாத சமாதியைக் கூறியதால் கூறப்பட்டது; ஆதலின், இப்போது வாசனாகூடியங் கூறப்படுகிறது. அதில் வாசனையுணர்விலாது வாசனாகூடியஞ் செய்யமுடியாது; ஆதலின், முதலில் வாசனாவடிவத்தைக் கூறவேண்டும். ஆண்டு, வாசனாசொரூபம் ஸ்ரீ வசிஷ்டபகவான் அருளிச்செய்திருக்கின்றார்.

ஆ-சு. ஏஜஹாவ நயாதயீத வமிவாழவ விஆரணம்।
யஏாஏாகம வஏாயுழவை வாஹநாஹா வ்ருகீத்திழதா॥

(பொ-ள்.) திடபாவனையால் முன்பிரராய்ச்சியின்றிப் பொருளைக் கவர்தலின் பெயர் வாசனையாம். ஈண்டு, தனது தேச வொழுக்கத்திலும் குல தருமத்திலும் சுபாவத்திலும் தேசத்திலுள்ள தீயவுரை இனியவுரையினும் பிராணிகட்குள்ள அபினிவேசத்தின் பெயர் வாசனையாம். இது வாசனையின் பொதுவடிவமாம். இப்போது சிறப்புவகையாற்கூறுவாம். வாசனை இருவகைத்து: ஒன்று சுத்தவாசனை, மற்றது அசுத்தவாசனை. அதில் மானமிலாமை தம்பமிலாமை முதலிய மேற்கூறப்படும் தெய்விகசம்பத்துச் சுத்தவாசனை யெனப்படும். அது தத்துவஞானத்தின் சாதனவடிவமாதலின் ஒருருவேயாம். மற்றைய மலினவாசனையோ மூவகைத்தாம்; உலகவாசனை, சாத்திரவாசனை, தேகவாசனை என்ப. அவற்றுள் இவ்வுலகம் எவ்வாறுலென்னை யிகழாதோ மற்றை, புகழுமோ அவ்வாறுழுகுவேன் யான் என்னும் அமையாப்பொருளின் அபினிவேசம் உலகவாசனையெனப்படும். அவ்வுலகவாசனை தேடற்கரிதாம். என்னை, முன் இராமகிருஷ்ணர் முதலிய அவதாரங்களையும் உலகனைத்தும் புகழவில்லை. மற்றை, சில துஷ்டர்கள் அவர்களையும் இகழ்ந்திருக்கின்றார்கள். சாகூஷாத் ஈசுரனையும் உலகனைத்தும் புகழவில்லையெனின் இக்காலத்திய சீவர்களை உலகனைத்தும் புகழ்வது யாங்ஙனம்? மற்றை, புகழாது. ஆதலின், உலகவாசனை தேடற் கேலாமையானும் புருடார்த்தத்திற்கு உபயோகமின்மையானும் அது மலினமாமென்க. இரண்டாவது சாத்திரவாசனை மூவகைத்தாம்; பாடவியசனம், பலசாத்திரவியசனம், சாத்திரார்த்தானுட்டானவியசனம் என்ப. அவற்றுள், பாடவியசனவடிவ சாத்திரவாசனையோ பாரத்துவாசற்குண்டாயிருந்தது. பலசாத்திரவியசனவடிவ சாத்திரவாசனையோ துருவாசற்குண்டாயிருந்தது. அநுட்டானவடிவ சாத்திரவாசனையோ நிதாகர்க்குண்டாயிருந்தது. இம்மூவகை வாசனையும் பல கிலேசத்தோடு கூடியதினாலும் புருஷார்த்தத்திற்கு உபயோகமின்மையானும் அபிமானத்திற்கும் சன்மத்திற்கும் காரண

மாதலினுனும், இது உலகவாசனேபோன்று மலினமேயென்க. மூன்றுவது தேக வாசனேயு மூவகைத்தாம். அவற்றுள், ஒன்று தேகத்தில் ஆன்மாவென்னும் பிராந் திவடிவமாம். இரண்டாவது குணதானத்துவப் பிராந்திவடிவமாம். மூன்றுவதே தா தோஷாப நயநவடிவமாம். அவற்றுள் முதலாவதே உலகாயதர்களிடத்தும் அவ ரைத் தழுவிய இக்காலத்திய பலரிடத்தும் மிக விளக்கம். இரண்டாவது இருவகைத் தாம். லௌகிககுணந் தேடல், சாஸ்திரீயகுணந் தேடல் என. அவற்றுள் இனிய சத்தமுதலிய விஷயங்களேச் சம்பாதித்தல் லௌகிககுணதானமாம். கங்கைநீராடல் சாலிக்கிராம தீர்த்த முதலியவைகளேச் சம்பாதித்தல் சாஸ்திரீய குணதானமாம். இதுபோல் மூன்றுவதாகிய தோஷாபநயனம் இருவகைத்தாம். லௌகிகம் சாஸ்தி ரீயம் என. அவற்றுள் வைத்தியன் கூறிய ஔடதத்தால் சுரமுதலியவைகளே நிவி ருத்திபண்ணல் லௌகிகமாம். சாத்திரோக்த ஸ்நாந ஆசமன முதலியவைகளால் அசௌச முதலியவைகளே நிவிருத்திபண்ணல் சாஸ்திரீயமாம். இம்மூவகையான தேகவாசனேயும் பிராமாணிக மின்மையானும் செய்தற்கேலாததானும் புருஷார்த் தவுபயோகமிலாததானும் மறித்தும் பிறப்பிற்கேதுவாதலானும் மலினமாமென் பது சாஸ்திரங்களில் மிக விளக்கம். இவ்வாறு மூவகையான மலினவாசனேயும் அவிவேகிகட்குக் கொள்ளற்பாலதாய்த் தோற்றும். அங்ஙனமாயினும் இம்மூன் றும் சிஞ்ஞாசுக்கட்கு ஞானமுண்டாவதில் விரோதியாம். வித்துவானுக்கு ஞான நிட்டைக்கு விரோதியாம். ஆதலின், சிஞ்ஞாசு ஞானியிருவராலும் ஞானமடைதற் பொருட்டும் ஞானநிட்டை யடைதற்பொருட்டும் இம்மூன்றுந் தள்ளத்தக்கன வாம். இத்துணை கூறியதால் பாகியவிஷயவாசனே மூன்றுங் கூறப்பட்டன. அந்தர் மலினவாசனேயோ காமக்குரோதமுதலிய அசுர சம்பத்துவடிவமாம். அது சர்வா னர்த்தத்திற்கும் மூலபூதமான மானசவாசனேயெனப்படும். இதனுலிப்பொருள் பெறப்பட்டது.—உலகவாசனேமுதலிய பாகியவாசனே மூன்றும் அசுரசம்பத்துவடிவ அந்தர்வாசனே ஒன்றும், ஆகிய விந்நான்கையும் அதிகாரியானவன் சுத்தவாசனே யாற் கெடுக்கவேண்டும். இதை ஸ்ரீ வசிட்டபகவானும் இராமச்சந்திரனேக்குறித்து அருளியிருக்கின்றார்.

ஆ-சு. ஸாதஸீவாஸநாஃ வலவத்ஃ கஸ்கூராவிஷய வாஸநாஃ।
ஸெதரஜஸிவாஸநா ஸாஅமஜஸாணாஅவாஸநாஃ ॥

(போ-ள்.) ஹே ராமச்சந்திர! விஷயவாசனேயெனப்படும் உலகவாசனே முத லிய மூன்று மலின வாசனேகளேயும் காமக்குரோதமுதலிய அசுரசம்பத்துவடிவ மலினமாகிய மானசவாசனேயையுந்தள்ளி மைத்திரி கருணே முதிதைமுதலிய சுத்த வாசனேயைக் கொள்ளுதி. அல்லது இச்சுலோகத்திலுள்ள விஷயவாசனே மானஸி வாசனே என்னும் இருபதத்திற்கும் வேறுரார்த்தஞ்செய்க. சத்தமுதலிய ஐந் தின் பெயர் விஷயமாம்; அவைகட்கு இரண்டவஸ்தையாம். புஜ்யமானவஸ்தை யொன்று காம்யமானவஸ்தையொன்று. அவற்றுள், போகத்தின் விஷயத்தன்மை புஜ்யமானத்தன்மையாம். காமத்தின் விடயத்தன்மை காமியமானத்தன்மையாம். ஆண்டு, அச்சத்த முதலிய விஷயங்களின் புஜ்யமானத்துவதசையிலுண்டாகிய சமஸ்காரத்தின் பெயர் விஷய வாசனேயாம். காம்யமானத்துவதசையிலுண்டா கிய சமஸ்காரத்தின் பெயர் மானச வாசனேயாம். இப்பட்சத்தில் கூறிப்போந்த நால்வகை வாசனேகளும் இவ்விரண்டிலடங்கும்:—பாகிய, ஆந்தர இருவகை வாச னேகளின் வேறு யொருவாசனேயின்மையின் சர்வ வாசனேகளும் இவ்விரண்டிலடங் கும். ஆண்டு, மலினவாசனேகளின் விருத்தமாகிய மைத்திரி கருணே முதலிய சுத்த வாசனே தோன்றலே மலினவாசனேயைத் தள்ளுவதாம். ஸ்ரீ பதஞ்சலிபக வானுல் யோகசூத்திரத்திற் கூறப்பட்ட அம்மைத்திரி முதலிய சுத்த வாசனேகள் முன்னர்ச் சுருக்கமாய்க்கூறினும். ஆயினும் முற்கூறியவர்த்தத்தைத் திடப்படுத்து

வான் மறித்துமவைகளின் சொரூபத்தைக்கூறுவாம். ஆண்டு, இவனது சித்தத்தை இராசு, துவேஷ, புண்ணிய, அபுண்ணியமென்னும் நான்குமே மலினப்படுத்துகின்றன. அதில் ஒரு சுகத்தை யநுபவித்தபின்னர் அன்னிஷவால் அச்சுகத்தின் சஜாதீயமாகிய வேறு சுகத்திலும் அதன் சாதனத்திலும் சாதனத்தோடு சர்வ விஷய சுகங்களும் எனக்குக் கிடைக்கவேண்டும். என்னும் அந்தக்காரணத்தின் ராசஸவிருத்தி விசேஷவடிவ திருஷ்ணையின்பெயர் இராகமாம். ஆண்டு அந்தச் சர்வ சுகத்தையுங்கொடுக்கும் திருஷ்டாதிருஷ்டவடிவ காரண சாமக்கிரியையின்மையின் அதைச் சம்பாதிப்பது மிகவும் முடியாததாம். ஆதலின், விஷயப்பிராப்தியின்றிய அவ்விராகம் இவனதுள்ளத்தை மலினப்படுத்துகின்றது. இவ்வதிகாரி சர்வ சுகிப்பிராணிகளிடத்தும் இவ்வனவரும் எம்மவரே என்னும் மைத்திரியைச் சம்பாதிக்கின் அவர்களுடைய சுகம் தன்னுடையதே என்பது பெறப்படுகின்றது. இவ்வாறு பாவனபண்ணும் புருஷனது சித்தத்தில் அவ்விராகம் நீங்கிவிடுகின்றது. ஒரு ராசன் தான் இராச்சியத்தினின்று வைராக்கியத்தையடைந்தும் தனது புத்திரன் முதலியோரது இராச்சியத்தையே தனது இராச்சியமாய் அபிமானிப்பதுபோல அவனும் தனக்குச் சுகவிஷயக ராகமின்றனும் வேறு பிராணிகளின் சுகத்தையே தனதாயபிமானிக்கின்றான். இவ்வாறு மைத்திரிபாவனையால் இராகம் நீங்கின் மழை யோய்ந்தபின்னர்த் தண்ணீர் சுத்தமாவதுபோல அச்சித்தம் சுத்தமாமென்க. ஒரு துக்கத்தை யநுபவித்த பின்னர் அதன் ஸ்மரணத்தால் அத்துக்கத்தின் சஜாதீயமாகிய வேறு துக்கத்திலும் அதன் சாதனத்திலும் இச்சாதன சகித சர்வ துக்கமும் எனக்கு ஓர்போதும் கிடைக்காதாகுக என்னும் தமங்கலந்த ரசோகுண பரிணமவடிவ அந்தக்காரணவிருத்தி விசேடத்தின் பெயர் துவேஷமாம். ஆண்டு, துக்ககாரணமாகிய சத்துரு புலி முதலியன உள்ளனவாகவே அத்துக்கத்தை நீக்கமுடியாது. அச்சர்வ துக்ககாரணத்தையுங் கெடுப்பதில் சமர்த்த ரொருவருமிலர் ஆதலின், அத்துவேஷம் இவனதுள்ளத்தைக் கொதிக்கும்படிசெய்யும். இவ்வதிகாரி சர்வதுக்கிப் பிராணிகளிடத்தும் தன்னைப்போன்று அவர்கட்குமும் இத்துக்கம் வாராமதாழிக என்னுங் கருணையைச்செய்யின், இவனுக்குச் சத்துரு முதலியோர்களிடத்துள்ள துவேஷம் நிவிருத்தியாகின்றது. அதன்பின் இவ்வதிகாரியினது சித்தம் நிர்மலமாகின்றது. இது ஸ்மிருதியிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. ஏணாயயாதுநாஹீஷா ஹுதாஸாஉவிதெதயா ।
சூத்ளவஜ்ஞஹுதெஷு உயாம்கூவஞ்சி வாயவஃ ॥

(பொ-ள்.) இவனுக்குத் தனது பிராணன் மிகப் பிரியமாவதுபோலச் சர்வ பிராணிகட்குந் தனது தனது பிராணன் மிகப் பிரியமாம் என விசாரித்து மேலாகிய மகாத்துமாக்கள் தனதான்மாவைப்போலச் சர்வ பிராணிகளிடத்துந் தயைபண்ணுவார்கள். இவ்வர்த்தத்தை ஸ்ரீ பகவான் இங்கே 'சூத்ளவஜ்ஞ வவஞ்சி வாவம்வஸ்யதி யொஜஞ்ஞ' என்னுஞ் சுலோகத்தில் திருவாய்மலர்ந்தருளினர் என்க இப்பிராணிகள் இயல்பாய்ப் புண்ணிய கருமத்தை அநுட்டியாது பாவ கருமத்தையே அநுஷ்டிக்கின்றார்கள். இது சாத்திரத்திலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. வேணஸ்யஹுயிஹுஞ்சி வேணஸ்யம் நெஹுஞ்சி ஸாகவாஃ ।
ஸவாவஹுயிஹுஞ்சி வாவம் கூவஞ்சியந்நதாஃ ॥

(பொ-ள்.) இம்மக்கள் புண்ணியகருமத்தின் சுகவடிவ பலனை யிச்சிக்கின்றார்கள்; ஆனாலோ அப்புண்ணியகருமத்தை யிச்சிப்பதில்லை பாவகருமத்தின் துக்கவடிவ பலத்தை யிச்சிப்பதில்லை. அப்பாவகருமத்தையே முயற்சியோடு செய்கின்றார்கள். ஆண்டுப் புண்ணியகருமத்தைச் செய்யாதவனுக்கும் பாவகருமத்தைச் செய்தவனுக்கும் பச்சாத்தாபம் பிராப்தியாம். இது சுருதியிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. கிஹம் வாயூநாகரவம் கிஹம் வாவஹ கரவம் ॥

(பொ-ள்.) புண்ணிய கருமத்தைச் செய்யாதவன் வேறு புண்ணியவான் சுகியாயிருப்பதைப்பார்த்து இவ்வாறு சுகங்கொடுக்கும் புண்ணிய கருமத்தை யான் எக்காரணத்தாற் செய்யாதொழித்தேன் எனப் பச்சாத்தாபப்படுவன். ஆதலின், புண்ணியகருமத்தைச் செய்யாதவனுக்குப் பச்சாத்தாபம் பிராப்தியாம். பாவ கருமத்தைச் செய்தவன் அதன் பலமாகிய துக்கத்தை யடைந்தபோது இத்தன்மைய துக்கத்தைக்கொடுக்கும் பாவ கருமத்தை யான் எக்காரணத்தாற் செய்தேனே எனப் பச்சாத்தாபமடைகிறன். ஆதலின், பாவகருமம்பச்சாத்தாபமடைவிப்பதாம். இவ்வதிகாரி புண்ணியவானிடத்தில் முதிதையைச் செய்யின் அந்தச் சுத்தவாசனையுடையவன்தானே சாதனமாய அசுக்கில கிருஷ்ணமெனப் பெயரிய புண்ணிய விசேடத்திற் பிரவிர்த்திக்கின்றன். இது யோகசூத்திரத்தில் ஸ்ரீ பதஞ்சலிபகவானாலுங் கூறப்பட்டிருக்கிறது. 'கூஹாஉபாகூகூஷ்ணம் யொமிந ஹிவியஜிதரெஷாம்' என யோகி புருஷர்களின் கருமமோ அசுக்கில கிருஷ்ணதராம்; ஏனையோர்க்குச் சுக்கிலம், கிருஷ்ணம். சுக்கிலகிருஷ்ணம் எனக் கருமம் மூவகைத்தாம். அவற்றுள், கேவல மனவாக்குகளாற்செய்யப்பட்டதாயும் சுகவடிவ பல மொன்றையே தருவதாயுமுள்ள கருமம் சுக்கிலகருமமெனப்படும். அத்தன்மைய சுக்கிலகருமம் வேதாத்தியயன பராயணனாகிய பிரஹ்மசாரிக்கும் தவமூனாவனுக்கு முளதாம். கேவலந் துக்கத்தையேதருங் கருமம் கிருஷ்ணகருமமெனப்படும். அத்தன்மைய கருமமோ துஷ்டர்கட்குளதாம். சுகதுக்கமிரண்டையுங் கலந்துகொடுப்பதாயும் நெல்யவ முதலிய பாகிய சாதனத்திலுண்டாவதுமாகிய கருமம் சுக்கில கிருஷ்ணமெனப்படும். அதுவோ சோமயாகமுதலியவற்றிற் பிரவிருத்தித்தவனுக்குளதாம். என்னை, சோமயாகத்தில் நெற்குத்தன் முதலியதால் எறும்பு முதலிய பிராணிகட்குத் துக்கமுண்டாகிறது. தட்சணைகொடுத்தன் முதலியதால் அந்தணர் முதலியோர்க்குச் சந்தோஷமுண்டாகின்றது. ஆதலின், அக்கருமம் சுக்கிலகிருஷ்ணமெனப்படும். இம்மூவகைத்தான கருமங்களுடம் யோகியலாதோரிடத்துள்ளன. சந்நியாசியாகிய யோகியோ நன் முதலிய பாகிய சாதனங்களாலமையப்பட்டயாகாதிகளைத் தியாகம்பண்ணினவனுதலின், அவனுக்குச் சுக்கில கிருஷ்ண கருமமும் உண்டாவதில்லை. அவித்தை முதலிய சர்வ கிலேசங்களுமில்லாமையின் கிருஷ்ணகருமமும் இன்றும். யோக சன்னிய தருமபலத்தை யிச்சியாமல் அத்தருமத்தை ஈசுராப்பணஞ்செய்ததால் அவனுக்குச் சுக்கிலகருமமுமின்றும். மற்றோர், சித்த சுத்திவாயிலாகவும் விவேகக்கியாதிவாயிலாகவும் போட்சவடிவமாகிய ஒரே பலனைத் தருவதான அசுக்கிலகிருஷ்ணமெனப் பெயரிய புண்ணியகருமமுண்டாகின்றது. அன்றியும் இவ்வதிகாரி பாபிகளிடத்தில் உபேட்சை பண்ணித்தானும் அவ்வாசனையுடையனைப்பாவகருமத்தினின்றும் நிவிருத்தியாகின்றன். இதனாலிப்பொருள் பெறப்பட்டது:—புண்ணியவானிடத்தில் முதிதையும் பாபியிடத்தில் உபேட்சையுஞ் செய்பவனுக்குப் புண்ணியபாவகருமங்களைச் செய்யாமை செய்தலாகிய நிமித்தங்களாலுண்டாம் பச்சாத்தாபமுண்டாவதில்லை. அஃதிலதாகவே சித்தம் நிர்மலமாகின்றதென்க. அல்லது, இவ்வாறு சுகிப் பிராணிகளிடத்தில் மைத்திரி பாவனை பண்ணுவோனுக்குக் கேவலம் இராகமொன்றே நிவிருத்தியாவதில்லை; மற்றோர், அசூயை ஈரிஷை முதலியனவும் நிவிருத்தியாகின்றன. ஆண்டுப் பிறர் குணத்திற்றோடத்தை வெளிப்படுத்தல் அசூயையாம் பிறர் குணத்தைச் சகிக்காமை ஈரிஷையாம் மைத்திரி பாவனை வசத்தால் இவ்வதிகாரி சர்வப் பிராணிகளையும் தனதாயபிமானிக்குங்கால் அவனுக்குப் பிறர் குணத்தின் அசூயை ஈரிஷைகளும் ஓர்போது மின்றும் இவ்வாறு துக்கிப் பிராணிகளிடத்தில் கருணையைப் பாவிப்பவனுக்குச் சத்துரு முதலியவைகளை வதஞ்செய்யப்பட்ட துவேஷம்

நிங்கும்போது பிறர் துக்கத்தையும் தனது சுகத்தையும் பார்த்துண்டாம் தர்ப்பமும் நிவிருத்தியாகின்றது. இவ்வாறே ஏனையதோஷ நீக்கமுமறிந்துகொள்க. இதனலிப்பொருள் பெறப்பட்டது. இவ்வதிகாரி சீவன்முத்திச் சுகத்தின்பொருட்டுத் தத்துவஞானம் மனு நாசம் வாசனாக்ஷயம் என்பவற்றை அப்பியாசம் பண்ணவேண்டும். ஆண்டு, எவ்வாற்றலேனும் மறித்து மறித்துத் தத்துவத்தை ஸ்மரணை பண்ணல் தத்துவஞானப்பியாசமாம். இது பிறநூலினுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. தத்ரைகாந்தம் தத்யாநமநைந்யாந்யம் தத்வபோயகம் ।
வாததைகவாக்யகுவம்து ப்ரஹ்மாஹ்யாவம் விதுர்புதாஃ ॥ (1)
வமாநுபாவெவைநாத்மம் உபாயம் நாஹ்யேவ தத்ஹுதா ।
உபந்யமநுமாநைஸ்து போயாஹ்யாவம் விதுர்வரம் ॥ (2)

(போ-ள்.) அத்துவிதீயப் பிரஹ்மத்தை அடிக்கடி சிந்தித்தலும் சொல்லுதலும் ஒன்றற்கொன்று போதித்தலும் நிரந்தரம் அப் பிரஹ்மபாத்தன்மை என்பவற்றைப் பிரஹ்மாப்பியாசமெனக் கூறுவர். (1) காணப்படு மிவ்வுலகம் சிருட்டியின் முற்காலத்திற் றோன்றவில்லையாதலின், முக்காலத்துமில்லை. சுயஞ்சோதியும் அதிட்டானவான்மாவுமாகிய நான் எப்போதுமுள்ளவன் என நிரந்தரம் விசாரம் பண்ணுவதை ஞாலப்பியாசமெனக் கூறுவர். (2) காணப்படு மூலகத்தோற்றத்திற்கு விரோதியாகிய யோகாப்பியாசத்தை மனோநிரோதமெனக் கூறுவர். இஃதன்னியநூலினுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. சுதஸ்ஞாஹாவவம்வதள ஜ்ஞாதுர்ஜ்ஞேயஸ்ய வஸ்துநஃ ।
யுக்தயாபாவெஸ்ய தத்தெ யெதெவஸ்தராஹ்யாவிநஃ ஸ்ம்ருதாஃ ॥

(போ-ள்.) ஞாதாவேயவஸ்துக்களின் மித்தியாத்துவ புத்தியின் பெயர் அபாவசம்பத்தியாம்; அவ்விரண்டின் வடிவத்தோற்றமின்மை அத்தியந்தாபாவசம்பத்தியாம். அதன்பொருட்டு யோக சாத்திரங்களால் முயற்சிபண்ணுபவன் மனோநிரோதாப்பியாசமுடையவனெனப்படுகிறன். திருசியப்பிரபஞ்சத்தின் அசம்பவஞானத்தால் இராகத்துவேஷாதிகளைக் கேடடையச்செய்தல் வாசனாக்ஷயாப்பியாசமெனக் கூறுவர். இஃதன்னியசாத்திரத்திலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. உபாயாவம்ஹவவைபோயெந ராமஅஷாதிதாநவெ ।
ராதிவ்ருநொ திதாயாவள ப்ரஹ்மாஹ்யாவஃவ உயுதெ ॥

(போ-ள்.) இக்காணப்படு மூலகத்தின் அசம்பவஞானத்தால் இராகத்துவேஷாதிகளை க்ஷீணஞ்செய்வதில் உண்டாகின்ற திடமான ரதி பிரஹ்மாப்பியாசமெனப்படுகின்றது. இதனலிப்பொருள் பெறப்பட்டது, தத்துவஞான முதலிய மூன்றப்பியாசங்களாலும் இராகத்துவேஷ முதலிய விகாரங்களற்று சுகதுக்காதிகளின் சமதிருஷ்டியுடையவன் பரமயோகியாம்; விஷமதிருஷ்டியுடையவன் தத்துவஞானியேனும் அபரமயோகியாம்என்க. (32)

(அ-கை.) ஆண்டு, ஸ்ரீ பகவான் விரிவாய்க் கூறியருளிய மனோநிரோதத்தைச் செய்தவனுய் விளுவுகின்றன்.

ருஜ்ருரு உவாச.

சு-ம். யொயம் யொமஷ்டயா ப்ரோக்தஃ ஸாம்யேந மதுஸூதந ।
வதஸ்யாஹம் ந பஸ்யாமி சஞ்சலத்வாஸ்திதிம் ஸ்திராம் ॥ (33)

ப-ம். 3 யஃ 4 சுயம் 5 யொமஃ 2 கூயா 7 வெ்ராகூஃ 6 ஸாஜ்ஞ 1 ஸ்ரீஹ்ஷ்ண 8 வாதஸ்ய 11 சுஹம் 12 ந 13 வஸ்யாமி 14 அஞ்ஜுலிகூவாகூ 10 ஷ்ரிதிம் 9 ஷ்ரியாம்.

(அ-ம்.) ஹே மதுசூதன! நீர் சமத்துவத்தன்மையாற் கூறியருளிய யோகத்தின் ஸ்திர நிலையை மனத்தின் அதி சஞ்சலத்தால் நான் பார்க்கின்றேனில்லை.

(வி-ம்.) ஹே மதுசூதன! அதாவது, ஹே சர்வ வைதிக சம்பிரதாயப் பிரவர்த்தக சர்வஞ்ஞேசுரனுய நீ எல்லாவிடத்தும் சமதிருஷ்டிவடிவ மேலான யோகத்தைச் சமபாவத்தாற் கூறியருளினை; அதாவது, சித்தத்திலுள்ள விஷம திருஷ்டிக்குக் காரணமாகிய இராகத்துவேஷாதிகளின் நிராகரணத்தால் யோகத்தைக் கூறியருளினை. அச்சர்வ மஞ்ஞவிர்த்தி நிரோதவடிவ யோகத்தின் நெடுநாளிருக்கப்பட்ட நிலையை அர்ச்சுனனுகிய யான் பார்த்திலேன். அதாவது, அத்தன்மைய சர்வவிருத்தி நிரோதவடிவயோகம் நெடுநாள்வரையினிலைக்கும் என்னும் சம்பாவனை எனக்குண்டாகவில்லை.

சங்கை :—ஹே அர்ச்சுன! அத்தன்மைய சம்பாவனை உனக்கு எக்காரணத்தாலுண்டாகவில்லை?

சமாதானம் :—ஹே பகவன்! இம்மனம் மிகச் சஞ்சலமானது ஒரு க்ஷண மாத்திரமேனும் நிலைப்பதில்லையாதலின் அத்தன்மைய சம்பாவனை எனக்குண்டாக வில்லை.

(அ-கை.) அர்ச்சுனன் இப்போது அம்மனத்தின் சஞ்சல சுபாவத்தைச் சர்வலுக சாத்திரப் பிரசித்தமென்றுபபாதனஞ்செய்கின்றுன்.

சு-ம். அஞ்ஜும் ஹி உகூ: க்ருஷ்ண ப்ரமாயி பலவத்³ த்³ருடம் ।
தஸ்யாஹம் நிக்³ரஹம் மந்யே வாயோரிவ ஸுது³ஷ்கரம் ॥ (34)

ப-ம். 4 அஞ்ஜும் 3 ஹி 2 உகூ: 1 க்ருஷ்ண 5 ப்ரமாயி 6 பலவகூ 7 த்³ருடம் 8 தஸ்ய 10 சுஹம் 9 நிக்³ரஹம் 14 மந்யே 11 வாயோ: 12 இவ 13 ஸுது³ஷ்கரம்.

(அ-ம்.) ஹே கிருஷ்ண! பிரசித்தமான சஞ்சலமும் பிரமாதியும் பலவானுந் திடமுமுடைய இம்மனத்தின் நிக்கிரகத்தை நான் வாயுவின் நிக்கிரகம்போல மிகக் கடினமென்றெண்ணுகிறேன்.

(வி-ம்.) ஹே கிருஷ்ணபகவன்! இம்மனஞ் சஞ்சலமானது. அதாவது, மிகுந்த சலன சுபாவமுடையது, ஒருபோதும் நிலைப்படுவதில்லை; இஃதெல்லாவுலகத்திலும் அநுபவசித்தமாம், அஃதல்லாமலும் பிரமாதியுமாம். ஆண்டு, தேகேந்திரியங்களைக் கலக்கமடையச் செய்யுஞ் சுபாவம் பிரமாதியாம். அதாவது, இம்மனம் தேகேந்திரியங்களைக் கலக்கமடையச் செய்வதாதலின், அவைகளின் விவசகாரணமாதலின் பிரமாதியாம், அஃதல்லாமலும் பலமுடையதுமாம். அதாவது, அபிப்பிராயப்பட்ட விஷயத்தினின்றும் இம்மன மெவ்வுபாயத்தாலுந் திருப்ப முடியாததாம். இவ்வுலகத்திலும் ஒரு காரியத்தில் முயன்றவனை அதினின்றுருவாலுந் திருப்ப முடியாததாகில் அவன் பலமுடையானெனப் படுவதேபோல மனமுமாம். அங்ஙனமே இம்மனந் திடமுடையதுமாம், அதாவது பலபிறப்பின் பல்லாயிரம் வாசனைகளோடு கூடியதாதலின் பேதித்தற்கு முடியாததாம். அல்லது தந்துனுகம்போலச் சேதிக்கப்படாததால் திடமாம். ஈண்டு, நாகபாசத்தின்பெயர் தந்து நாகமாம், அல்லது நீர் மடுவிலுள்ள பிராணி விசேடமாம். அதைக்குர்ச்சர முதலிய தேசங்களில் தாந்தனீயெனக் கூறுவர். ஈண்டு அர்ச்சுனன் கூறிய சஞ்

சலம் பிரமாதி பலவத் திருடம் என்னும் நான்கு மதே விசேடங்களில் முன்முன் விசேஷண சித்தியில் பிற்பின் விசேஷணங் காரணமாம். இம்மனம் திடமாத லின் பலவான், ஆதலினுல் பிரமாதி, ஆதலினுல் சஞ்சலம். மிக்க மதமுடைய காட்டாணையை அடக்கல் மிகக் கடினமாபோல இம்மன மடக்கலுமாம். அதா வது சர்வ விருத்திகளற்றதாய்ச் செய்வது மிகக் கடினமென்றுணர்கின்றேன். அதா வது எவ்வாற்றுலேனும் அடக்கமுடியாதென்றுணர்கின்றேன்; அதில் திருஷ்டாந் தங்கூறுகின்றுன். 'வாயோரிவ' என; ஹே பகவன் வானிலுலாவிக்கொண்டிருக்குங் காற்றைச்சலிப்பின்றி யடக்கல் முடியாததேபோல எப்போதும் சலித்துக்கொண்டி ருக்கு மனதைச் சலிப்பற வடக்கல் முடியாததாம். இது பிறநூலின்கண் ணுங்கூறப் பட்டுளது.

ஆசு. சுவயஜிவாநாநஹதிஃ ஸுஸெமநமுநாஹவி।
சுவிவஹநயஸாநாதாயொம விஷஉஜித நிமரஹிஃ॥

(போ-ள்.) சாதுவே! பெருங்கடலைக் குடித்தலினும், மேரு மலையை அடி யோடு பெயர்த்தலினும், தீயை யுண்ணலினும், இம்மனத்தையடக்கல் மிகக் கடின மாம் ஈண்டு, ஹே கிருஷ்ண என்னும் சம்போதனையால் அர்ச்சுனன் ஸ்ரீபகவா னைக்குறித்து இப்பொருட் சூசிப்பித்தான். தோஷங்களை கிருஷதி நிவாரயதி ஆத லின் கிருஷ்ணன் அல்லது புருடார்த்தங்களை ஆகர்ஷதி பிராபயதி ஆதலின் கிருஷ் ணன்; பொருளிதுவாம்: அன்பர்களின் நீக்கமுடியாத தோஷத்தை நிவிருத்தி பண்ணுவதலை அல்லது அன்பர்கட்கு எவ்வாற்றுனுமடையக்கூடாத புருடார்த் தத்தைக் கொடுப்பதிலை கிருஷ்ணன் எனப்படுவன். தாங்களத்தன்மைய பெய ருடையராதலின், தங்களுடைய பெயரைப்பொருளுடையதாக்குதற்பொருட்டு என் மனசஞ்சலம் நீக்கொணுதலேதனும் தாங்களவசியமாய் நீக்கி யருளுவீர். அங் ஙனமே இச்சமாதிச் சுகம் கொடுக்கொணுதலேதனும் தாங்களவசியமாய்க் கொடுத் தருளுவீர், ஈண்டு, அர்ச்சுனனுக்கிது கருத்தாம். தத்துவஞான முண்டாயினும் பிராரப்தகருமத்தை நுகர்தற்பொருட்டுச் சீவித்திருக்கும் வித்துவானுக்குக் கருத் திருத்துவ போக்திருத்துவ சுகதுக்காகாதவேஷ முதலிய சித்த தருமங்கள் பாதி தானுவிருத்தியாலுள்ளதாயினும், கிலேச காரணங்களாதலின் பந்தவடிவமே யாம். அன்றியும், சர்வ சித்த விருத்தியின் நிரோதவடிவ யோகத்தால் பந்த நிவி ருத்திவடிவ சீவன் முத்தியைத் தேடிக்கொள்வதால் அவ்வித்துவான் பரம யோகி யெனப்படுவன் எனத் தாங்கள் முற்கூறியருளிய வார்த்தத்தில் யான் கூறுவதாவது, அப்பந்தநிவிருத்தி சாக்ஷி சேதனத்திற்கா, அல்லது சித்தத்திற்கா; முதலாவ தெனின் பொருந்தாது, என்னை, முன்னுண்டாகிய தத்துவஞானமே அச்சாக்ஷியி னது பந்தத்தை நிவிருத்திக்கில் அதில் யோகத்திற்குச் சிறிதளவு முபயோகமின் றும்; இரண்டாவதெனின், அதுவுமமையாது. என்னை, அப்பந்தம் சாக்ஷி சேதனத் திலாரோபிதமாவதுபோலச்சித்தத்திலுமாரோபிதமாகில்நிவிருத்திகூடும்; மற்றே, அப்பந்தம் சித்தத்தின் சுபாவமாம். ஆரோபிதமன்று. எதற்கெதுசுபாவமோ அது ஆயிரமுபாயத்தாலு மகலா. எங்ஙனம் நீரின்றண்மை தீயின் வெப்பம் பல வுபாயத்தாலும் நீரினின்றும், தீயினின்றும் நீக்கமுடியாததுபோலச் சித்தத்தின் சுபாவமும் நீக்கொணுதாம். சாஸ்திரத்தில் சித்தம் கூடினபரிணமியெனக் கூறப் பட்டிருக்கிறது. 'வ்ருத்திகூடினவரிணாமி நொஹிஹாவா ஔதவிதிபாதெஃ' சைதன் யத்தினும் வேறுகிய அனைன்ம வஸ்துக்களனைத்தும் கூடினபரிணமத்தையடையும் அல்லது, பிராரப்தகருமவடிவப் பிரதிபந்தகமுளதாகவே பந்தநிவிருத்தி கூடாது. என்னை, அஞ்ஞான மஞ்ஞான காரியங்களைக் கெடுக்கப்புகுந்த தத்துவஞானத் தைப் பிராரப்தகருமந் தடைப்படுத்தித் தனது போகத்தைக் கொடுத்தற்பொரு ட்டு இத்தேகாதி சமுதாயத்தை நிலைப்படுத்துகின்றது; அதாவது, அச்சங்காதத்

தை நிவிருத்தியாகவிடுவதில்லை. சித்தவிருத்தியன்றி அப்பிராரப்தகருமம் சுகதுக்கவடிவ தனது பலத்தைதச் சம்பாதியாது. சுகாகாரமாகவேனும் துக்காகாரமாகவேனும் உண்டாகுஞ் சித்தவிருத்தியைச் சாஸ்திரத்தில் போகமெனக் கூறுவர். அஃதிலாது சுகதுக்க போகமமையாது. ஆதலின், யோகத்தால் சுபாவமான சித்த பரிணாமத்தின் அடக்கம் ஏகதேசத்திலுண்டாயினு முண்டாகும். அங்ஙனமாயினும், தத்துவஞானத்திலும் பிரபலமானதுபோல யோகத்தினும் பிராரப்தகருமம் பலமுடையதாம்; அஃதுள்ளத்திலுளதாகவே சலனத்தன்மையு மவசியமேயாம். ஆதலின், யோகத்தால் சித்த சஞ்சலத்தை நீக்குவது கூடாதென்று எனதஞ்ஞானத்தாலுணர்கின்றேன். அங்ஙனமாகவே தாங்கள் தனதான்மாவைப்போல எவ்விடத்துஞ் சமமாய்ப்பார்ப்பவன் பரமயோகியெனத் திருவாய்மலர்ந்தருளியது அமையாது. இவ்விரண்டு சுலோகங்களான் அர்ச்சுனன் சங்கித்தனன் என்க. (34)

(அ-கை.) இப்போது அவ்வர்ச்சுனன் சங்கையை ஸ்ரீபகவான் நிவிருத்தித்தருளுகின்றார்.

ஸ்ரீ ஹமவாசு உவாச.

சு-ம். ஈஷம்ஸயம் உஹாவாஹொ உதொ ஊ நிஃ ம்ரஹம் அமும்।
ஈஹ்யாஷெ ந தூ களம்தெய வொஸாமெயுணை அ ம்ரஹ்யதெ॥ (35)

ப-ம். 5 ஈஷம்ஸயம் 1 உஹாவாஹொ 2 உந 3 ஊ நிஃ ம்ரஹம் 4 அமும் 8 ஈஹ்யா ஷெந 6 தூ 7 களம்தெய 10 வொஸாமெயுணை 9 அ 11 ம்ரஹ்யதெ.

(அ-ம்.) ஹே மஹாபாஹோ! இம்மனம் அடக்கற்கரிதென்பதும் சஞ்சலமென்பதும் உண்மையாயினும் கௌந்தேய! அப்பியாச வைராக்கியங்களால் நிக்கிரகம்பண்ணல்கூடும்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! உனது வாக்கால் உனது சித்தசரிதம் நன்குணர்ந்தேன், ஆனாலோ நீ இம்மன நிக்கிரகம்பண்ணுவதில் சமர்த்தன் என அர்ச்சுனச் சந்தோஷப்படித்துவான் ஸ்ரீபகவான் அர்ச்சுனனை விளித்தருளுகின்றார். ஹே மஹாபாஹோவென நேரே மகாதேவனேடும் போர்புரிந்ததால் மகத்தாகிய தோள்களையுடையவன் மகாபாகுவாம். இத்துணை கூறியதால் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனிடத்தில் நிரதிசய வத்கிருஷ்டதன்மையைக் குறிப்பித்தருளினர். அதாவது, அத்தன்மையனுகிய நீ இம்மனமடக்குவதில் அவசியமாய்ச் சமர்த்தனுவை என்பதாம். நீ முன்னர் மனம் துர்நிக்கிரகமென்றும் அதாவது, பிராரப்தகருமப் பிரபலத்தால் அடக்கமிலா மனத்தோனுக்குக் கஷ்டத்தானும் மநிக்கிரகமுடியாதெனவும் சுபாவமாகவே சஞ்சலமெனவும் கூறினை. முற்கூறிய பிரமாதி பலவத் திருடம் என்னும் விசேஷணங்களை ஒன்றுபடுத்தி ஈண்டு துர்நிக்கிரகம் எனக் கூறியருளினர். நீ கூறியதில் சிறிதளவும் ஐயமில்லை. அதாவது நீ கூறியதுண்மையே அங்ஙனமாயினும் அடக்கமுள மனத்தோன் சமாதி மாத்திரவடிவ உபாயத்தானும், யோகியானவன் அப்பியாச வைராக்கியவடிவ உபாயங்களானும் மனநிக்கிரகம்பண்ணுவன். அதாவது, மனதைச் சர்வ விருத்திகளுமற்றதாய்ச் செய்வன். ஈண்டு, மனநிரோதம் பண்ணுத அடக்கமிலா மனத்தோனின் மனநிரோதம்பண்ணும் அடக்கமுள மனத்தோன் விசேஷமுடையன் என்றுணர்த்தியருளற் பொருட்டுச் சுலோகத்தில் 'து' என்னுஞ் சத்தமும் மனநிக்கிரகத்தில் அப்பியாச வைராக்கியங்களின் சமுச்சயமுணர்த்துவான் 'ச' என்னுஞ் சத்தமும் கூறியருளினர். அன்றியும், ஹே கௌந்தேய என்னுஞ் சம்போதனத்தால் எனது தந்தையின் சகோதரி புத்திரனுனதால் யான் உனக்கு அவசியம் சுகத்தையே கொடுப்பேன் எனக் குறிப்பித்தருளினர். ஈண்டுச் சுலோகத்தின் முதற்பாதியால் சித்தத்

தின் அட நிக்கிரகங் கூடாதென்பதைக் கூறியருளினர். இரண்டாவதுபாதியால் சித்தத்தின் கிரமநிக்கிரகங் கூடுமென்றருளினர் ஈண்டு ஸ்ரீபகவானுக்கிது கருத்தாம் :—மனநிரோதம் இருவகைத்தாம், அடநிக்கிரகம், கிரமநிக்கிரகம் என. ஆண்டு, ஞானேந்திரியங்களும் கருமேந்திரியங்களும் கோளகமாத்திர நிரோதத்தால் அடமாய் நிக்கிரகப்படுவனபோல மனதையும் அடமாய் நிக்கிரகம்பண்ணுவேன் என்னும் பிராந்தி மூடனுக்குண்டாம்; ஆனாலோ இந்திரியங்களைப்போல மனத்தின் அடநிக்கிரகங்கூடாது. என்னை, மனமிருத்தற்கிடம் இருதயமாம், அதை நிரோதித்தற் கேலாமையின் கிரமமாயடக்கலே உசிதமாம். இது ஸ்ரீவசிஷ்டபகவானுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. உவவிஸ்யாவ விஸ்யவஜித்த ஜெந உஹஉஹஃ।
நபகயுதெ உநொஜெதம் விநாயக்தி உநிஜிதாழ ॥ (1)

சுங்கஸ்பெநவிநாஉதெதா யஸ்யாஉஷ உதம் மஜஃ।
சுயயாதுவிஉயாயிமஉஃ வாயஸ்வம்மஉ வஉவஅ ॥ (2)

வாஹநாஹம் வஜிதயாமஃ ப்ராணஷ்டம்உ நிஸ்ரொயநம்।
வஜதாஹாயகுயஃ வஷாஃஹஜி ஜித்தஜயெகிஜ ॥ (3)

ஹதீஷ்யக்தி ஷ்வெதாஹ ஹம்ஆந்தியஉயஜியெ।
ஸ்வெதஷ்ஹெதீவ உதஜய விநிவந்தி தஸொம்ஜஸ்ரெநஃ ॥ (4)

(பொ-ள்.) சித்தசுபாவத்தையுணர்ந்தவன் உத்தமமானயுத்திகளின்றிக்கேவலம் ஆசனத்தில் உட்கார்ந்து உட்கார்ந்து மனதைச் செயிக்கமாட்டான். (1) துஷ்டமதயானை அங்குசமின்றி வசப்படாததுபோல இம்மனம் உத்தமயுத்திகளின்றி வசப்படாது. அந்தயுத்திகளாவன, முதலாவது அத்தியான்மவித்தியாப்பிராப்தி இரண்டாவது மகாத்துமாக்களின்சங்கம். (2) மூன்றுவது வாசனைத்தியாகம் நான்காவது பிராணனடக்கலாம். இவைகளே மதுஜயத்தின் காரணங்கள். இவைகளிருக்கினும் அடமாய் மனநிக்கிரகம்பண்ணுவோன் தீபத்தையொழித்து மையிலல் இருளீக்குவனைவன் (4) இப்பொருளையே விளக்கிக்கூறுவாம். ஆண்டுக் கிரமமாய் மதுநிக்கிரகம்பண்ணுவதில் அத்தியான்மவித்தையொன்றே யுபாயமாம். என்னை, அவ்வித்தைதகாணப்படுமுலகம் மித்தையெனவும் திருஷ்டாவும் சாட்சியுமாகிய ஆன்மாப்பரமார்த்த சத்தியமாயும் பரமானந்த சுவப்பிரகாசமாயும் உள்ளதெனவும் உணர்த்துகின்றது. அத்தன்மைய வுணர்வு உண்டானதின்பின்னர், இம்மனம் தனது விஷயபூத திருசியப்பொருள்களில் மித்தையென்னும் ஏதுவால் பிரயோசனமின்மையை நிச்சயித்து, பிரயோசனமுடையது பரமார்த்த சத்திய பரமானந்தவடிவ திருஷ்டாவெனச் சுவப்பிரகாசமாகிய ஏதுவால் நிச்சயித்து விறகின்றிய தீப்போலத் தானே சாந்தியாகின்றது. ஆதலின், அவ்வத்தியான்மவித்தியாப்பிராப்தி மனநிக்கிரகவுபாயமாம்; உணர்த்திய தத்துவத்தை நன்குணராதேனும் உணர்த்திய தத்துவத்தை மறப்பவனுமாகிய இவர்கட்கு மனநிக்கிரகத்தில் சாதுசங்கமே வுபாயமாம். என்னை, அம்மகாத்துமாக்கள் இவ்வதிகாரிக்கு அடிக்கடி தத்துவ வுணர்வையும் ஸ்மரணத்தையும் உண்டாச்குவார்கள். வித்தியாமதமுதலிய மலின வாசனையால் பீடிதனுய் சாதுசங்கத்தை யடையாதவனுக்கு மூற்கூறிய விவேகத்தால் அவ்வாசனையின்பரித்தியாகமே உபாயமாம். அதை நீக்கமுடியாதவனுக்குப்பிராணஸ்பந்தன நிரோதமே உபாயமாம். என்னை, பிராணசலனம், வாசனை இவ்விரண்டுமே சித்தத்தைச் செலுத்துவனவாம். இவ்விரண்டினிரோதத்தால் சித்தசாந்தி அவசியமாம். இது ஸ்ரீவசிட்டபகவானுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. ஜெஜீஜெ வித்தவ்ருக்ஷஸ்ய வ்ராணஷ்டுத நவாஸ்ரெ !
ஸகுஷ்டிம்ஷ்டுதயொ: கூீணைகூி வ்ரம்ஜெவி விநஶ்யதி: ॥ (1)

வ்ராணாயாம ஏுபாஹ்யா ஜெஷ்யுக்தயாது முஷ்யுத்தயா ।
சூஷ்டநாஶநயொமெந வ்ராணஷ்டம்ஜொ கிஷ்யுதெ ॥ (2)

சுஷ்டம்மவ்யவஹாரி கூாஷ்டவஹாவந வஜ்ருநாசு ।
ஶரீரநாஶ ஏுபி:ருகூா ஆஷ்டநாந வ்யவத்திஷ்டெ ॥ (3)

வாஷ்டநாஷ்டம் வரித்யாமாஷ்டித்தம் மஷ்டத்ய வித்தாம் ।
வ்ராணஷ்டம்ஏ கிஜொயாஷ்டு யஜ்ஜஷ்டிதயா கூுரு ॥ (4)

வந்தாவந்தூ:ருகும் ஏநெயுரூமவம் வித்தவ்யுரூாவவ ।
யஷ்டாவந்வஷ்டு ஜொஞ்வ:ஷ்டுகூுந ரூஜெநஷ்டு ॥ (5)

யஏுாநஹாவ்யதெ கிம்விஜெயொவாஜெ யுரூவியசு ।
ஷ்டீயதெஷ்ட கூும்தயீகூா தஏாவித்தம் நஜாயதெ ॥ (6)

சுவாஷ்டநகூாத்ததம் யஏுாநஏநுதெஏநஃ ।
சுஏநஷ்டுாதஜொஜெதி வாரூாத்து வஏவ்ருஏா ॥ (7)

(பொ-ள்.) ஹே ராமச்சந்திர ! இந்தச் சித்தமாகிய விருக்ஷத்திற்கு இரண்டு பீசமாம் ; ஒன்று பிராணசலனம், மற்றது வாசனை. இவற்றுள் ஒன்று கெடின் இரண்டும் நாசமாம். (1) பிராணயாம திடாப்பியாசத்தாலும், குரு வுணர்த்திய யுத்தியாலும், ஆசன போசன முதலியவைகளி னியமத்தாலும், பிராணசலன நிரோதமாகின்றது. (2) அசங்கனெனும் வியவகாரத்தாலும், உலகசிந்தனை நீக்கத்தாலும், தேகத்தை நாசமுடையதெனப் பார்த்தலாலும், இவ்வதிகாரிக்கு வாசனை யெழுவதில்லை. (3) வாசனை நீக்கத்தாலும், பிராணசல்ன நிரோதத்தாலும், சித்தம் சித்தமற்ற தன்மையையடைகின்றது. உனக்கெது இச்சையோ அதைச் செய்குதி. (4) ஹே ராம ! பாக்கியமான அனேன்ம பதார்த்தங்களை வஸ்து விடிவத்தானும் இராகத்தானும் உள்ளே சிந்தித்தன்மாத்திரமே சித்தவடிவமென் றெண் ணுகின்றேன். (5) எக்காலத்திலிவன் விடத்தக்கதும் கொள்ளத்தக்கதுமாகிய வஸ்துவைச் சிறிதளவுஞ் சிந்தியாது எல்லாவற்றையும் நீக்கியிருக்குங்காலத்தில் சித்தமுற்பன்னமாகாது. (6) மனம் சர்வ வாசனைகளுமின்மையின் வஸ்துவைச் சிறிதளவும் டனனம்பண்ணுதபோது அமனஸ்தன்மையுண்டாகின்றது. அது பாமான்மபதத்தைக் கொடுக்கத்தக்கதாம். (7) இத்துணை கூறியதால் இரண்டுபாயஞ் சித்திக்கின்றது. பிராண சலன நிரோதத்தின்பொருட்டு அப்பியாசவடிவ வுபாயமும், வாசனை நீக்கத்தின்பொருட்டு வைராக்கிய வடிவ வுபாயமுமாம். சாதுசங்கமும் அத்தியான்ம ஞானப் பிராப்தியும் இவ்விரண்டினுபபாதகமானதால் அந்நியதாசித்தமாம். ஆதலின், இவ்விரண்டும் அப்பியாச வைராக்கியங்களில் அடங்குவனவாம். இதுபற்றியே பகவான் இரண்டுபாயத்தையே அருளிச்செய்தனர் இவ்வர்த்தத்தை ஸ்ரீ பதஞ்சலி பகவானும் யோகசூத்திரத்திற்கூறியருளியிருக்கின்றார். 'சுஹ்யாஸ வைராமஸ்ரா ஹ்யாஜ்ஞநிரொய:' முற்கூறிய பிரமாணமுதலிய ஐவகை விருத்தி அசுரத்தன்மையால் கிலிஷ்டமெனவும் தெய்விகத்தன்மையால் அக்கிலிஷ்டமெனவும் கூறப்படும். அதனிரோதம் அதாவது விறகின்றிய தீப்போல உபசாந்தவடிவ பரிணாம விசேடம் அப்பியாச வைராக்கியங்களாலாம் என்க. யோகபாடியத்தில் ஸ்ரீ வியாச பகவானும் இது கூறப்பட்டுளது. '**விதுஷஸ்தாவத்** ஹயதெதாவாஹி நீவஹதி கூுஸ்ராணாயவஹதி வாவாயஷ' ஸ்ரீ கங்கையமுனை முதலிய நதிகள் பள்ளமான பூமியிற்

சென்று கடலேயடைகின்றன. அதுபோலச் சித்தமாகிய நதியும் விவேகவடிவ பள்ள மான பூமியிற் சென்று கைவல்யவடிவ பலத்தில் முடிவுறுகின்றது; அது கல்யாண வடிவப்பிரவாகமெனப்படும். அவிவேகவடிவப்பள்ளப் பூமியிற்சென்று சம்சாரத்தில் முடிவுறும்; அது பாபவடிவப் பிரவாகமெனப்படும். இவ்வாறு சித்தவடிவ நதி இரு பக்கமுஞ்செல்கின்றது. ஆண்டு, விஷயத்தில் அடிக்கடி தோஷ திருஷ்டியா லுண்டா கிய வைராக்கியத்தால் விஷயபக்கத்திற்செல்லும் சித்த நதியின் பிரவாஹம் கட்டுப் படுகின்றது. விவேக தரிசனவடிவ அப்பியாசத்தால் பிரத்தியக்கான்மாவில் சித்த நதி பிரவாஹமாய்ச் செல்கின்றது. இவ்வாறு வைராக்கியாப்பியாசங்களின் வச மாம் சித்த நிரோதம் கேவலவைராக்கியத்தானும் கேவல அப்பியாசத்தானும் ஆவ தில்லை. கருத்திதுவாம்:—தீவிரமான வேகத்தோடுகூடிய நதிப்பிரவாகத்தை மரம் மண் முதலியவைகளால் வாராவதி கட்டித்தடுத்து அங்கொரு மதகமைத்து வய லுக்கு நோய் வக்கிரப்பிரவாஹம் உண்டாக்குவதுபோல வைராக்கியத்தால் சித் தநதியின் விஷயாபி முகப்பிரவாகத்தை நிவிருத்தித்துச் சமாதி யப்பியாசத்தால் பிரத்தியக்குப் பிரவாகமுண்டாக்கப்படுகின்றது. இவ்வாறு வைராக்கியாப்பியாசங் கட்குச் சித்தநிரோதத்தில் வெவ்வேறு வாயிலானதால் அவ்விரண்டற்குஞ் சமுச் சயமே பொருந்துகின்றது. ஓர் ஹராமத்தில் நெற்கோதுமை யிரண்டற்கும் வாயிலொன்றுனதால் விகற்பமடைந்ததுபோல அப்பியாச வைராக்கியங்கட்கு வாயி லொன்றுயின் விகற்பமாமென்க.

மந்திரதவ தேவதாத்தியான முதலியவைகள் கிரியாவடிவமானதால் மறித்து மறித்து ஆவிருத்திவடிவ அப்பியாசங்கூடும். ஆனல் சர்வ வியாபாரோபரமவடிவ சமாதிக்தோர் அப்பியாசமும் 'பொருந்தாது என்னுஞ் சங்கையை நிவிருத்தித் தருளற்பொருட்டு இவ்வாறு அப்பியாசவடிவத்தைக் கூறியருளினர். 'தத்ரஸ்தி தௌயத்தோஹ்யாஸ:' தனது சொரூபத்தினிலத்த திருஷ்டாவடிவ சுத்த சிதான் மாவில் சர்வ விருத்திகளற்ற பிரசாந்தப் பிரவாகவடிவ சலனமற்ற நிலையின்பொரு ட்டு மானச உற்சாகவடிவ யத்தநமாம். அதாவது, தனது சஞ்சல சுபாவத்தால் பாகியப் பிரவாகமுடைய சித்தத்தை எவ்வாற்றுனும் நிரோதம்பண்ணுவேன் என்னும் மனதின் உற்சாகவடிவ யத்தநத்தை அடிக்கடி ஆவிருத்தித்தல் அப்பி யாசமெனப்படுகிறது. வேறு சூத்திரம், 'ஸதுதீர்க்ஷகாலு நைரந்தர்ய-ஸத்காரா தொரதய-ஸத்காரா வஸ்விதோ த்ருடபூமி:' முற்கூறிய அப்பியாசமானது உத்வேகமின்றி தீர்க்க காலபரியந்தம் வியவதானமின்றி நிரந்தரமாய்ச் சிரத்தாதிசயவடிவ சத்காரத்தாற் சேவிக்கப்பட்டுத் திடபூமியாகின்றது. அதாவது அவ்வப்பியாசம் விஷய சுகவாசனை யால் சலனப்படுவதில்லை. ஆண்டு, அவ்வாறுசேவனையின்றேல் லயமுதலிய தோஷங் கள் நேர்கா; வியுத்தான சமஸ்காரத்தின் பிரபலத்தால் அவ்வப்பியாசம் அதிட பூமி யாகிய பலனைத்தாரா. இது பற்றியே ஸ்ரீபதஞ்சலிபகவான் தீர்க்ககால நைரந்தரிய சத்காரம் என்னு மூன்றையுங் கூறினர். இத்துணை கூறியதால் அப்பியாசவடிவங் கூறப்பட்டது. இனி வைராக்கிய சொரூபத்தைக்கூறுவாம் அபாவைராக்கியம் பர வைராக்கியம் என்னும் வேறுபாட்டால் வைராக்கியம் இருவகைத்தாம். அவற்றுள், அபாவைராக்கியம் யதமானம், வெயதிரேகம்; ஏகேந்திரியம், வசீகாரம் என்னும் வேறுபாட்டால் நால்வகைத்தாம். ஆண்டு, பூர்வ பூமியைச் செயித்து உத்தர பூமி யின் சம்பாதன விவட்சையால் ஸ்ரீபதஞ்சலிபகவான் நான்காவதாகிய வசீகார வைராக்கியத்தையேகூறினர். 'த்ருஷ்டாநுஸ்ரவிகவிஷய விதருஷ்ணஸ்ய வசீகார ஸம்ஜ்ஞா வைராக்யம்' ஸ்திரி அன்னபான மைதுன ஐசுவரியம் முதலியன எவ் வுலகத்தும் பிரத்தியட்சமானதால் திருஷ்டவிஷய மெனப்படுகின்றன. சுவர்க்கம் விதேகத்தன்மை பிருகிருதிலயம் முதலியன கேவல சாத்திரப்பிரமாணத்தாலறியப் பட்டனவாதலின், ஆநு சிராவிக விஷயமெனப்படும். இவ்விருவகை விஷயங்களின் திருஷ்ணையிருப்பினும் விவேகத்தின் நிரூஞகத்தன்மையால் யதமானமுதலிய

மூன்று வைராக்கியமுமுண்டாகும். ஆண்டு, உலகத்திலுள்ள சாராசாரப் பொருள்களைக் குரு நூற்களால் நிச்சயம்பண்ணுவேன் என்னும் முயற்சியதமானமாம். தனது சித்தத்திலுள்ள தோஷங்களுக்குள் அநுட்டித்த விவேகத்தால் எத்தனை பக்குவமாயின எத்தனை பாக்கியுள்ளன என வைத்தியன்போல் பகுத்தல் வையதிரேகமாம். இருவகை விடயமுயற்சியும் துக்கவடிவமென்றுணர்ந்து பாகியேந்திரியப் பிரவிருத்திபண்ணுதிருந்தும் திருஷ்ணையின் கிளர்ச்சி மாத்திரமாய் மனதிற் றங்குதல் ஏகேந்திரியமாம். அதுவுமின்றி எவ்வாற்றானும் திருஷ்ணையின்மை அதாவது, திருஷ்ணை விரோதியான ஞானப் பிரசாதவடிவ சித்தவிருத்தி விசேஷம் வசீகாரமாம். அது சம்பிரக்ஞாத சமாதியின் அந்தரங்க சாதனமாம். அசம்பிரக்ஞாத சமாதியின் பகிரங்கசாதனமாம். இதற்குப் பரவைராக்கியமே, அந்தரங்க சாதனமாம். அதன் சொரூபத்தை ஸ்ரீபதஞ்சலிபகவான் யோகசூத்திரத்திற் கூறியிருக்கின்றார். 'தத்பரம் வைராக்யமபுருஷக்யாதேர்குணவைதிருஷ்யம்' சம்பிரக்ஞாத சமாதியின்திடத்தால் முக்குணவடிவப்பிரதானத்தினும் வேறுபிரித்த புருஷசாக்ஷாத்கார முண்டானதின்பின்னர்ச் சம்பூரண குண வியவகாரத்தில் திருஷ்ணையின்மை பரவைராக்கியமெனப்படும். அதாவது, சர்வத்தினும் மேலாகிய பலவடிவவைராக்கியமெனப்படும். அதன்பரிபாகத்தால் சித்த உபசமபரிபாகமாய்ச்சிக்கிரமே கைவல்யமடையப்படும். இச்சர்வார்த்தங்களையும் வைத்துக்கொண்டு ஸ்ரீ பகவான் 'அப்பியாசேனது கௌந்தேய வைராக்கியேணச கிருகியதே' எனத் திருவாய் மலர்ந்தருளினரென்க. (35)

(அ-கை.) ஹே அர்ச்சுன! நீ, தத்துவஞானத்தினும் பிரபலமாகிய பிராரப்தகருமமானது பலத்தைக் கொடுத்தற்பொருட்டு மனோவிருத்தியைத் தோற்றுவித்தே பல நுகரச்செய்கின்றது. அத்தன்மைய சித்தவிருத்தி நிரோதங் கூடாதெனக் கூறினை. அதனுத்தரத்தைக் கேள்.

சு-ம். ஸுலபமதாத்மநா யோகஃ ஷ்ரவுதி மே மதிஃ।
வஶ்யாத்மநா து யததா ஶக்யோவாப்துமுபாயதஃ॥ (36)

ப-ம். 1 ஸுலபமதாத்மநா 2 யோகஃ 3 ஷ்ரவுதி 4 மே 5 மே 6 மதிஃ 9 வஶ்யாத்மநா 7 து 8 யததா 12 ஶக்யஃ 11 ஸுவாப்தும் 10 உபாயதஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அடக்கமிலாமனத்தோனால் அந்த யோகம் வருத்தத்தானுமடையப்படாது. இஃதெனக்குஞ் சம்மதம்; அங்ஙனமாயினும் அடக்கமுள்ள சுவாதீன மனத்தனால் உபாயத்தாலடையத்தக்கதாம். (36)

(வி-ம்.) தத்துவ சாட்சாத்காரமுண்டாயினும், வேதாந்தநூலின் வியாக்கியானத்தில் மனப்பற்றுளதாலேனும் ஆலசிய முதலிய தோஷத்தாலேனும் அப்பியாச வைராக்கியங்களால் நிரோதப்படாத மனமுடையோன் அசம்யதாத்மாவாம். அத்தன்மையன் தத்துவ சாக்ஷாத்காரமுடையவனையினும் பிராரப்தத்தாலுண்டாகும் மனோசஞ்சலத்தால் சர்வ விருத்தி நிரோதவடிவ யோகத்தை வருத்தத்தாலேனு மடையான் என நீ கூறியது எனக்குஞ் சம்மதமாம். அதாவது, நீ கூறியதுண்மையே.

சங்கை :—ஹே பகவன்! அடக்கமிலாத மனத்தோன் அந்த யோகத்தை அடையானெனில், மற்றெவனடைபவன்;

சமாதானம் :— 'வஶ்யாத்மநா து' வைராக்கியத்தின் பரிபாகத்தால் வாசனாக்ஷயமாய் வசியமான, சுவாதீனப்பட்ட, அதாவது, விஷயங்களின் பரதந்திரத்தன்மையிலாத ஆன்மாவெனும் அந்தக்கரணமுடையோன் வசியாத்மாவாம்.

ண்டு, வசியாத்மநாது என்னும் வாக்கியத்திலுள்ள 'து' சத்தமானது முற்கூறிய அடக்கமிலாத மனத்தோனினும் வசம்பண்ணிய மனத்தோன் விலக்ஷணனென் றுணர்த்தற்பொருட்டாம் அல்லது, நிர்ணயார்த்தகமாம். வைராக்கியத்தால் சித்த வடிவநதியின் விஷயாபிமுகப்பிரவாகத்தைத் திருப்பிப் பிரத்தியக்கான்மாபிமுகப் பிரவாகமாக்கற்பொருட்டு முற்கூறிய அப்பியாசம்பண்ணுவோன் யத்தனியாம். இவ்விரண்டு முடையவனே சித்த சலனத்தைக்கொடுக்கும் பிராரப்தகருமத்தை யும் அமிழ்த்திவிட்டுச் சர்வவிருத்தி நிரோதவடிவ சமாதியை யடைவதற்குச் சமர்த்தனுவன்.

சங்கை :—மிக வலியுடைய பிராரப்தகருமத்தை யமிழ்த்தல் எவ்வாறும் ?

சமாதானம் :—ஹே அர்ச்சுன ! புருஷப் பிரயத்தனவடிவ உபாயமே அதை அமிழ்த்துவதாம். என்னை, லௌகிக வைதிகப் பிரயத்தனங்கள் பிராரப்தகருமா பேட்சையால் வலியுடையனவாம் இன்றெனிலோ உலகத்தார் பயிரிட முயலலும் வைதிகர் சோதிட்டோமாதிப் பிரயத்தனமும் பயனற்றனவாம். சர்வ காரியங்களி லும் பிராரப்தகருமம் உளதிலிதென்னும் விகற்பமே வருவதால் ஒரு காரியத்தி லும் முயற்சி யெழாதாம். என்னை, பிராரப்தகருமமுளதெனில் அதனை பலப் பிராப்தியுமாம். ஆகவே, அதிற் புருடப் பிரயத்தனம் சிறிதும் பயனற்றதாம். பிரா ரப்தகருமமின்றெனிலோ எவ்வாற்றானும் பலப்பிராப்தியிலதாகும். ஆனதாலும் புருடப் பிரயத்தனம் பயனற்றதாம் என்றிவ்வாறு ஆராய்ந்து ஒருவரும் இக்கரு மங்களில் முயலார்.

சங்கை :—பிராரப்தகருமவடிவ அதிருஷ்ட காரணமானது திருஷ்டகாரண மிலாது, காரியத்தைத் தோற்றுவியாது; ஆனலோ திருஷ்டகாரணத்தின் சகாயத் தால் காரியத்தைத் தோற்றுவித்தலால் அதிருஷ்டகாரணவடிவப் பிராரப்தமும் திருஷ்டசாதன சம்பத்தியின்றிப் பலத்தையுண்டாக்குவற் கேலாததாம். ஆதலின், பயிரிடன் முதலிய லௌகிக காரியங்களிலும் சோதிட்டோமமுதலிய வைதிக காரியங்களிலும் பிராரப்தகருமத்திற்குப் புருடப் பிரயத்தனம் மொருதலையே யபேட்சிதமாம்.

சமாதானம் :—இது யோகாப்பியாசத்திலுஞ் சமமாம். என்னை, யோகாப்பி யாசத்தாற் பெறப்படும் சீவன் முத்தியும் சுகாதிசய வடிவமானதால் பிராரப்த கருமபலத்திலையடங்கும். இதுபற்றியே அத்தியான்ம நூலில் சீவன்முத்தி, பல பிறப்பின் புண்ணியபலவடிவமெனக் கூறப்பட்டது. ஆதலின் சீவன் முத்திவடிவப் பலமடைதற்குத் திருஷ்டகாரணவடிவ யோகாப்பியாசந் தேடற்பாலதென்பது பொருந்தும். தத்துவஞானிக்குத் தேகேந்திரியக்கூட்டம்நிலைதிருத்தல்கண்டு பிரா ரப்தகருமத்தைத் தத்துவஞானத்தினும் வலியுடையதெனக் கற்பிக்குமாறுபோல யோகாப்பியாசம் பிராரப்தகருமத்தினும் வலியுடையதென்பதுமாம். நூற் கூறிய பிரயத்தனத்திற்கு எவற்றினும் வலியுடையதாந்தன்மை காணப்படுதலின், என்க. இது ஸ்ரீ வசிட்டபகவானலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. ஸவ-ருஉவெஹ ஹிஸஉா ஸ்ஸொஸ ஸவ-ஹ்ஸ்உஹ ।
ஸஉயுக்ய-காத்வெ-ருண வளஸ-ஷாத்ஸஉ வாவ்யுதெ ॥ (1)

உஹாஹ்ஸ் ஸாஹ்ஸித்ஸ் வெதிவளஸ-ஷ்ஸ் தியஸ்ஹ்யத்ஸ் ।
தத்ரஹ்ஸ உஸயா-ருய வஸாயா-ருய ஸாஹ்ஸித்ஸ் ॥ (2)

ஸுஹாஸுஹாஹ்யாம் ஸாமாகுஹ்யாம் வஹஞ்ஜி வாஹநாஹரிகு ।
வளஸுஷெண வ்ரயதேந யொஜநீயா ஸுஹெவயி ॥ (3)

சுஸுஹெஷு ஹஸாவிஷ்டம் ஸுஹெஷ்வாவதாரய ।
ஹுஉநஃ வாஸுஷாயெகுந பவுந பவுநாம்வஸ ॥ (4)

வ்ராமஹ்யாஹ வஸாஉயாஜி யஉதேவாஹ நொஉயம் ।
தஉாஹ்யாஹஹ்ய ஹாஹய்யம் விஜிகூ உரிஉகுந ॥ (5)

ஹம்யிஜ்ராயாஉ விஹ்ரயம் ஸுஹாஹெவ ஹஸாஹஸ ।
ஸுஹாயாம் வாஹநாவ்ய ஹுள தாததொஷொந கஸுந ॥ (6)

சுவ்யுதஹ உநாயா வஹுவாந ஜுதததத்வுஃ ।
முஸுஸுபாஹு வ்ரஸாணைஹ்வம் நிணீகுதஞ்சாவ ஊஅஸ ॥ (7)

ததஃவகூ கூஷாயெண நமநம் விஜுதவஹுஸுநா ।
ஸுஹொவய ஹுளகூயாதய்யாஜைய்யா வாஹநள வொநி மொயிநா ॥ (8)

(போ-ள்.) ஹே ரகுநந்தன! இவ்வுலகத்தில் யாவராலும் இனிய முயற்சியாற் பொருளனைத்தும் அடைடத்தக்கனவே; புருஷ முயற்சியால் அடையப்படாத பொருளொன்றில்லை. 1. புருஷப் பிரயத்தனம் இருவகைத்தாம்; ஒன்றே உத்சாத்திரம், மற்றது சாஸ்திரிதம். சாஸ்திரத்தால் நிஷேதிக்கப்பட்டது உத்சாத்திரம், சாஸ்திரத்தால் விதித்தது சாத்திரிதமெனப்படும். அவற்றுள், உத்சாத்திரம் நரகப்பிராப்தியின்பொருட்டாம்; சாத்திரிதம் அந்தக்கரணசுத்தி வாயிலாக மோட்சப் பிராப்தியின்பொருட்டாம். 2. இந்த வாசனைவடிவ நதியானது சுபமார்க்கம் அசுபமார்க்கம் இரண்டினுஞ் செல்கின்றது. அவற்றுள், இவ்வதிகாரி, புருஷப் பிரயத்தனத்தால் இந்நதியை அசுபமார்க்கத்தினின்றுந் திருப்பிச் சுபமார்க்கத்திற் செலுத்தவேண்டும். 3. வல்லார்களின் மேலோய் அசுபகருமத்திற் சென்ற மனத்தை நீ முயற்சியால் அதினின்றுந் திருப்பிச் சுபகருமத்திற் செலுத்துவாய். 4. மாற்றானையடுவாய் முன் அப்பியாசவசத்தால் உனக்குச் சுபவாசனையுண்டாகில் தனது முயற்சி பலமுடையதென உணர்தி. 5. அவ்வாசனை நிர்ணயப்படாவிடினும், நீ நிரந்தரம் அதையே சம்பாதிப்பாய். மைந்த! அவ்வாசனை விருத்தியடையில் சிறிதுந் தோஷமில்லை; அசுபவாசனை மிகுதியே தோஷமாம். 6. எதுகாறும் வியுத்பன்ன மனமும் பரமபத ஞானமும் உனக்கில்லையோ அதுகாறும் குரு நூற்பிரமாணத்தால் நிச்சயிக்கப்பட்ட வர்த்தத்தை நீ சிரத்தையோடும் அநுட்டிப்பாய். 7. இவ்வாறு உபாயத்தால் பாடவவடிவ கஷாய நிவிருத்தியும் ஆன்மவஸ்து நிச்சயமும் மனநிர்மோதமுமுண்டாகில் அச்சுபவாசனையையும் நீக்குதி. 8. என்பது முதலிய வாக்கியத்தால் ஸ்ரீ வசிஷ்டபகவான் புருஷப் பிரயத்தனத்தின் பிரபலத்தன்மையைக் கூறியருளினராதலின், சாத்திரீயப் புருஷப் பிரயத்தனம் எவற்றினும் வலியதாம். அதனல் பிராரப்தகருமத்தை அமிழ்த்தலுங் கூடும். இத்துணை கூறியதால் அர்ச்சுனன் சங்கைக்குப் பெறப்பட்ட உத்தரம் இஃதாம் சாட்சியிலுள்ள அஞ்ஞானத்தாலாய சம்சாரபந்தம் விவேக சாகூத்காரத்தால் நிவிருத்தியாயினும் பிராரப்தகருமம் நிலைப்படுத்திய சித்தத்தின் சுபாவவிருத்திகளை யோகாப்பியாசத்தால் நிவிருத்திபண்ணிய சீவன்முத்தன், பரமயோகியெனப்படுவன்; அஃதிலாதோன் தத்துவஞானியாயினும் பரமயோகியெனப்படான். மற்றே, அபரமயோகியெனப்படுவன் என்க. (36)

(அ-கை.) ஆண்டு, இப்பூர்வ கிரந்தத்தால் தத்துவஞானத்தையடைந்தும் சீவன் முத்தியடையாதோன் அபரமயோகியெனப்படுவன்; அவ்விரண்டையுமடை

ந்தவன் பரமயோகியெனப்படுவன் எனவுங் கூறப்பட்டது. ஆண்டு, அவ்விருவருக்கும் தத்துவஞானத்தால் அஞ்ஞானம் நாசமாயினும் பிராரப்தகருமமுள்ளவரையில் தேஹேந்திரிய சங்காதமும் நிலைத்திருக்கும்; அது நாசமாகவே, அவ்விருவர்களின் தேக சங்காதமும் நாசமாகின்றது. ஒருபோது நாசமானது மறித்து ஒருகாலுமுண்டாகாது; அதை யுண்டாக்கும் அவித்தை காமகருமங்கள் அவனுக்கு நாசமாயினவாதலின். இவ்விருவகை வித்துவான்களும் விதேகமுத்தியடைவதில் சிறிதளவும் வழுக்கில்லை. ஆனாலோ, முன்னர்ச் செய்த நிஷ்காமகருமத்தால் விவிதிஷாபரியந்த சித்தசுத்தியையடைந்து பின் விதிபூர்வகம் அக்கருமங்களனைத்தையும்விடுத்து விவிதிஷாவடிவப் பரமஹம்ச சந்நியாசத்தையடைந்து அதன்பின் சுரோத்திரியப்பிரஹ்மநிஷ்ட சீவன்முத்தசந்நியாசியாகிய குருவையணுகி அவரால் வேதாந்த மகாவாக்கிய உபதேசத்தைப்பெற்று அதிலுள்ள அசம்பாவனை விபரீதபாவனைவடிவப் பிரதிபந்தநிவிருத்தியின்பொருட்டு, 'அதாதோபிரஹ்மஜிக்ஞாசா' என்னுஞ் சூத்திரமுதற்கொண்டு, 'அநாவிருத்தி சப்தாத்' என்னுஞ் சூத்திரபரியந்தமுள்ள நான்கத்தியாயவடிவ உத்தரமீமாஞ்சா சாஸ்திரமுழுதானும் சிரவணாதிகளைக்குருவின் பிரசாதத்தாற் செய்யவேண்டுமெனத் தொடங்கற்பாலது. அவ்வதிகாரி சிரத்தையுடையவனாயினும் ஆயுளற்பமாக அற்பப்பிராயத்தனவாதலின் இப்பிறப்பில் ஞானத்தையடையாது, சிரவணாதிகளைச்செய்தே இடையில் மரணமடையின் ஆன்மஞானமிலதாகவே அஞ்ஞானநாசமின்மையின்மோட்சமடையான். அவன் கருமோபாசனைகளை முன்விடத்தோன்றுதலின், அர்ச்சிராதிமார்க்கத்தால் தேவலோகவடிவ உபாசனைசெய்த கருமபலத்தையுமடையான். தூமாதி மார்க்கத்தால் பிதிருலோகவடிவ கேவல கருமபலத்தையு மடையான்; ஆனால், யோகத்தில் வழுவிய அவன் கீடபதங்கமுதலிய தன்மையையடைந்து கஷ்டகதியையே பொருந்துவன், வருணைச்சிரம ஒழுக்கத்தில் வழுவியவனைப்போல ஆன்மஞானமின்றியவனுய்த் தேவயான பிதிருயான மார்க்க சம்பந்தமிலாதோன்றுதலின், அல்லது அக்கஷ்டகதியை அடையான்; வாமதேவரைப்போலச் சாத்திர நிஷேதகருமமின்றியவனுதலின் என்று ஐயமுற்று வியாகுலமடைந்த அர்ச்சுனன் தனதையப்பாட்டை நீக்கவேண்டி ஸ்ரீ பகவானை வினவுகின்றன்.

அர்ஜுந உவாச.

சு-ம். அயதிஃ ஶ்ரத்தயோபேதோ யோகாச்சலிதமானஸஃ।
அப்ராப்ய யோகஸம்ஸித்திம் காம் கதிம் கிருஷ்ண கச்சதி ॥ (37)

ப-ம். 2 அயதிஃ 3 ஶ்ரத்தயா 4 உபேதஃ 5 யோகாத் 6 அசலிதமானஸஃ 8 அப்ராப்ய 7 யோகஸம்ஸித்திம் 9 காம் 10 கதிம் 1 கிருஷ்ண 11 கச்சதி.

(அ-ம்.) ஹே கிருஷ்ண! அற்ப முயற்சியும் சிரத்தையும் தத்துவ சாக்ஷாத்காரத்தினின்று சலனப்பட்ட மனமும் உடையவன் தத்துவஞானபலத்தை யடையாது மரணமாயின், எக்கதியையடைவன்? (37)

(வி-ம்.) ஹே கிருஷ்ணபகவன்! ஆயுளற்பத்தால் அற்ப முயற்சியும் குருவேதாந்த வாக்கியத்தில் விசுவாச புத்திவடிவ சிரத்தையு முடையவன் ஈண்டுச் சிரத்தையானது தன்னுடுள்ளனவாகிய சமதம முதலியவைகளின் உபலக்ஷணமாம். சிரத்தையோடுகூடிய அச்சமதமாதிகள் 'சாந்தோதாந்த வுபரதஸ்திதிக்ஷுஃ சிரத்தாவித்தோ பூத்வாத்மன்யே வாத்மானம் பஶ்யதி' என்னுஞ் சுருதியிற்கூறப்பட்டுள்ளன. இதனாலிதுபெறப்படுகின்றது. நித்தியாநித்தியவஸ்துவிவேகம், இகாமுத்திரபல போகவிராகம், சமதமாதி ஷட்சம்பத்தி, முமுட்சுத்தன்மைஎன்னும் நான்குமுடையவன், சுரோத்திரியப் பிரஹ்மநிஷ்ட குருவையடைந்து

வேதாந்தவாக்கியத்தின் சிரவணாதிகளைச்செய்தும் ஆயுளற்பத்தன்மையால் மரண காலத்தில் இந்திரியங்கள் கலக்கமடைய அச்சிரவணமுதலிய சாதனங்களின் திடா நுட்டான மனோயாமையின் யோகத்தினின்றும் சலனப்பட்ட மனத்தன். ஈண்டுச் சிரவணாதிகளின் பரிபாகத்தால் உண்டாகிய தத்துவ சாகூஷாத்காரம் யோகமாம்; அதினின்றுஞ் சலித்ததென்பது அதன் பலத்தையடையாமையாம். அத்தன்மைய மனத்தோன் அந்த யோகசித்தியையடையாது; அதாவது, தத்துவ சாகூஷாத்காரத்தால் அடையத்தகுந்தபுனராவிருத்தியின்றிய,காரியசகித அஞ்ஞான நிவிருத்தி யோகசித்தியாம், அதையடையாது தத்துவமுணராதவனுய் இடையில் மரணமடைந்தவன் எந்தக் கதியையடைவன். அதாவது, நற்கதியையடைவனு அல்லது துர்க்கதியையடைவனு? கருத்திதுவாம். நித்திய நைமித்திககருமங்களேயோ பரித்தியாகம்பண்ணிவிட்டான், தத்துவஞானமோ உற்பத்தியாகவில்லை, ஆதலின், அவன் துர்க்கதியையடைவன் எனவுஞ் சம்பாவனைபண்ணலாம். சாஸ்திரோக்த மோட்சசாதனத்தை யநுட்டித்தவன் சாஸ்திர நிஷேதகருமத்தை விடுத்தவனுதலின், நற்கதியையடைவனெனவும் சம்பாவனைபண்ணலாமென்க. ()

(அ-கை.) இப்போது முற்கூறிய சம்சய காரணத்தை விளக்கிக்கூறுகின்றுன்.

சு-ம். கூவிந்நாஹயவிஹ்ருஷ்டிந்நாஹ்ருதிவ நஸ்ருயதி ।
கூவ்ருத்திஷ்டோ உஹாவாஹொ விஜூவ்ருஜோ ப்ருஹ்மணஃ பதி ॥ (38)

ப-ம். 9 கூதிக் 10 நர 6 உஹயவிஹ்ருஷ்டஃ 7 அபிந்நாஹ்ருதம் 8 உவ 11 நஸ்ருயதி 5 கூவ்ருத்திஷ்டஃ 1 உஹாவாஹொ 4 விஜூவ்ருஜஃ 2 ப்ருஹ்மணஃ 3 பதி.

(அ-ம்) ஹே திண்புயமுடையகிருஷ்ண! பிரஹ்மப்பிராப்தியின் ஞானவடிவ மார்க்கத்தில் மூடனும் கருமோபாசனைகளின்றியவனுமாகிய உபயப் பிரஷ்டன் விச்சேதமான மேகம்போல் எவ்வாறு நாசமடையான். (38)

(வி-ம்.) ஹே திண்புயத்தோய்! அதாவது சர்வ அன்பர்கட்கும்உபத்திரவங்களை யொதுக்குவதில் சமர்த்தமுடைய நாற்புய முடையவன் அல்லது சர்வ பக்தர்கட்கும் தருமமாதி நான்கு புருடார்த்தத்தையுங் கொடுப்பதில் சமர்த்துள நாற்புயத்தோன் பெயர் திண்புயத்தோனும். ஈண்டு, திண்புயத்தோய் என்னுஞ் சம்போதனத்தால் தனது விரைவால் பகவானுக்குக் குரோதமின்மையையும் தனது விரைவிற்கு உத்தரமளிப்பதில் சமர்த்தனென்பதையும் அர்ச்சுனன் குறிப்பித்தனன் கச்சித் என்னும்பதம் வேட்கைசகிதவிஜ்ஞாசையாம். அதைத்தெரிப்பாம்:—ஹே பகவன் அத்துவிதீயப் பிரஹ்மப்பிராப்தியின் ஆன்மஞானவடிவ மார்க்கத்தில் விமூடன்; அதாவது, பிரஹ்மான்மாக்களின் ஏகத்துவ சாட்சாத்கார முண்டாகாதான். அப்பிரதிஷ்டன் அதாவது பிதிருயான மார்க்க தேவயானமார்க்கப் பிராப்தியின் சாதனங்களான கருமோபாசனைகளுமின்றியவன். உபாசனையோடு கருமத்தையும் முன்னமே தியாகம் பண்ணியவனுதலின் அத்தன்மைய உபயப் பிரஷ்டன் அதாவது கருமமார்க்கம், ஞானமார்க்கம் இரண்டினும் வழுவியவன். விச்சேதமடைந்த மேகம்போல் எவ்வாறு நாசமடையான் அதாவது காற்றினால் வேறுபடுத்தப்பட்ட மேகம் பூர்வ மேகத்தினின்று நீங்கியதாய் உத்தர மேகத்தையுமடையாததாய் மழைக்குத் தகுதியின்றி இடையிலே கெடுகின்றதுபோல, யோகப் பிரஷ்டனும் முந்திய கருமமார்க்கத்தினும் வழுவியவனைப்பிந்திய ஞானமார்க்கத்தையுமடையாது இடையிலேகெடுகின்றுன். அத்தன்மையன் கரும, ஞான, பலனை அடைதற்கு யோக்கியனதல்யாங்ஙனமென்க. இத்துணை கூறியதால் கரும ஞானங்களின் சமுச்சயமு நீக்கினமை காண்க; என்னை; சமுச்சய பட்சத்தில் ஞானபல மடையாதொழியினும் கரும பல மடைதல் பொருந்தும் ஆதலின் சமுச்சயம் பண்ணுவோ

னிடத்தில் உபயப் பிரஷ்டத்தன்மை சம்பவியாது. ஈண்டு, அவனுக்குக் கருமஞ் சம்பவமாயினும் கரும பலேச்சை விடுத்துளனுதலின் கருமஞ் செய்யினும் உபயப் பிரஷ்டத்தன்மை டொருந்துமென்றுசங்கிக்கில் அதுவுமமையாது ; என்னை ? சகாம கருமத்திற்குப் பலனுண்டாவதுபோல நிட்காம கருமத்திற்குமாம். இது முன்னர் ஆபத்தம்ப சூத்திரத்தைப் பிரமாணமாய்க் கொடுத்துக் கூறப்பட்டது. ஆதலின் ஞான கருமங்களின் சமுச்சயத்தை யநுட்டிக்கும் புருஷனிடத்து இவ்விரு வமை யாது மற்றோரு, சர்வ கருமங்களின் தியாகியின் மீதாம் அனர்த்தப் பிராப்தியாட்சே பம் அவனிடத்தே சம்பவமாதலின் என்க. (38)

(அ-கை.) இப்போது முற்கூறிய ஐயம்கற்றுவான் அந்தரியாமியாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானை அர்ச்சுனன் பிரார்த்திக்கின்றான்.

சு-ம். ஸ்தானே ஹ்ருஷீகேச தவ ப்ரகீர்த்யா ஜகத்ப்ரஹ்ருஷ்யத்யனுரஜ்யதே ச ।
ரக்ஷாம்ஸி பீதானி திசோ த்ரவந்தி ஸர்வே நமஸ்யந்தி சசாரணாஸ்ச ॥ (39)

ப-ம். 3 ஸ்தானே 2 ஹ்ருஷீகேச 4 ஹ்ருஷ்யம் 1 ப்ரகீர்த்யா 6 ஜகத் 7 ப்ரஹ்ருஷ்யதி 5 ரஜ்யதே 8 ச 9 ரக்ஷாம்ஸி 11 ப்ரஹ்ருஷ்ய 10 ரஜ்ய 12 பீதா 13 ச 8 ஸி 14 ஸ்ரவ ந்தி.

(அ-ம்.) ஹே ஹ்ருஷீகேச ! எனதையப்பாடு முழுதையும் நீக்குதற்குத் தாங் களே யோக்கியர் ஆதலின் உமக்கன்னியமான ஒருவரும் இவ்வையமகற்றுபவ ராகார். (39)

(வி-ம்.) ஹே ஹ்ருஷீகேச பகவன் ! முன்னிரண்டு சுலோகங்களால் யான் விளக் கிய எனது ஐயப்பாட்டைச் சேடமின்றி நிவிருத்திசெய்வதற்கு அதாவது சம்சய காரணமான அதர்மாதிகளின் சேத பூர்வகம் அதை நீக்குவதற்குத் தாங்களே யோக்கியர். ஹே அர்ச்சுன ! என்னின் வேறுய் ரிஷியேனும் தேவர்களேனும் உனதையமொழிப் போரிலரோவென அர்ச்சுனன் கூறுகின்றான். 'ஹ்ருஷீகேச' ஹே பகவன் சர்வக்ஞர் சர்வ நூற்கருத்தர் பரமகுரவர் கிருபாலு என்னுமித்தன் மைய பரமேசுரராகிய தங்களின் வேறுன ரிஷிமுதலியோர்கள் ஈசுரர்களல்லாத லின் சர்வஞ்ஞமற்ற அவ்வெவரும் எனது சமுசயத்தை நன் கொழிப்பவராகார் கள். ஆகலின், யாவர்க்குங் குருவாகவும் எல்லாப்பொருளையும் புலப்படக் காணு பவராயுமுள்ள ஈசுரராகிய தாங்களே எனதைய மொழிக்கத்தக்கவர். (39)

(அ-கை.) இவ்வணம் அர்ச்சுனனது யோகி நாசமாவன் என்னுஞ் சங்கைய கற்றுதற்கு உத்தரமருளுகின்றார்.

ஸ்ரீ ஹ்ருஷீகேச உவாச.

சு-ம். வாயுர்யமோக்நிர்வருண: சசாங்க: ப்ரஜாபதிஸ்த்வம் ப்ரபிதாமஹஸ்ச ।
நமோ நமஸ்தேஸ்து ஸஹஸ்ரக்ருத்வ: புனஸ்ச பூயோபி நமோ நமஸ்தே ॥ (40)

ப-ம். 1 வாயுர் 6 ச 4 வருண 3 சந்த்ர 9 ச 8 ப்ரஜாபதி 5 த்வம் 2 ப்ரபிதாமஹ 7 த்வ 15 ச 10 புன 12 நமஸ்தேஸ்து 13 ஸஹஸ்ர 14 க்ருத்வ 11 ஸ்த 16 பூ யோபி.

(அ-ம்.) ஹே பார்த்த ! அந்தயோகப் பிரஷ்டனுக்கு இவ்வுலகத்திலும் பர வுலகத்திலும் ஒருபோதும் நாசமில்லை. தாத ! சாஸ்திரம் விதித்தவா றொழுகிய வர் ஒருவரும் துர்க்கதியை யடைவதில்லை. (40)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! உபயப்பிரஷ்டனுகிய போகி நாசமடைவன் என. நீ முற்கூறிய வாக்கியத்திற்குப்பொருள் யாது அவன் விதித்த கருமத்தை விடுத் தோணுதலின் இவ்வுலகத்தில் யாதேனுமொரு பிரமாத புருஷனைப்போல் பெரி யோர்களாலிகழப்படுவனென்பதா அல்லது சுருதிகூறியபடியாய பரவுலகத்தில் தாழ்ந்தகதியை யடைவனு.

ஆ-சு. ஈயெதயொ வயொநகதனெண அநதெ।
கீடாஃ வதம்மாயதிஉம் உஸுமகம ॥

(பொ-ள்.) தேவ வுலகமடைவிக்கும் தேவயான மார்க்கம் பிதிருலோக மடைவிக்கும் பிதிருயான மார்க்க மிரண்டனுள் ஒன்றிலேனும் அவன் பிரவிருத்தி யான் அவ்வஞ்ஞானி கீடபதங்க மசகமுதலிய பாபயோனியை அடிக்கடியடை வன் என. இவ்விருவகை நாசமும் அவனுக்கின்றும். என்னுமர்த்தத்தை ஸ்ரீபகவா னருளுகின்றார். ஹே பார்த்த! சாஸ்திரம் விதித்தவாறு சர்வ கருமங்களையுந் தியாகம்பண்ணி விரத்தனைய்க் குருவையடைந்து சிரவணாதிகள்செய்தே இடையில் மரணமானவன் இரண்டுலகத்திலும் நாசமாகான் அதிற்காரண மருளுகின்றார். 'நஹிகலுயாணகாரு துகதி' தாத! சாஸ்திரத்தில் விதித்தபொருளைச் சிறிதளவிடப்பினும் ஒருவரும் அபகீர்த்திவடிவ துர்க்கதியையுமடைவதில்லை, பரவுலகத்தில் கீடமுதலிய பாபயோனியுமடைவதில்லை. சாமான்யமாய்விதித்த பொருளை யநுட் டித்தவனும் துர்க்கதியடையானெனின் எவரினும் மேலாகிய யோகப் பிரஷ்டன் துர்க்கதியடையானென்பதில் கூறற்பாலதென்னை. ஈண்டு ஸ்ரீபகவான் அர்ச்சுனனை தாத என விளித்ததற்கு 'தவொதயாதாநம வாதரவெணைதாதஃ' தன தான்மாவையே புத்திரவடிவமாய் விரிப்பவன் என்பது கருத்து. இவ்வணம் தாத சத்தம் பிதாவாசகமாம் பிதாவே புத்திரவடிவமாதலின் புத்திரனைப் பிதாவெனக் கூறியதென்க. அன்றியும் சீடனும் புத்திர சமமானதால் புத்திரஸ்தானத்தில் சீட னேயவிளித்ததாம்; சீடனிடத்துக் கிருபாதிசயத்தைக் குறித்தற்பொருட்டென்க ஆண்டுமுற்பிரசினத்தில் யோகப்பிரஷ்டன் துர்க்கதியையடைவன் அஞ்ஞானியாய்த் தேவயான பிதிருயானமார்க்கங்களின் சம்பந்தமிலாமையால் தனதுகருமத்தினின் றும் வழுவியவனைப்போன்று எனக்கூறியதுமசங்கதம் என்னை யோகப் பிரஷ்டன் தேவயானமார்க்கசம்பந்தமில்லாதவனன்று; மற்றோரு, சம்பந்தமுடையவன் ஆதலின் அவ்வனுமானத்தில் அவ்வேதுவே அசித்தமாம். அதாவது, அவனிடத்தஃதின்று. பஞ்சாக்கினி வித்தையில் இவ்வார்த்தை கூறப்பட்டுளது. 'யஉதம விஉயெஃ ஆஈ கரணைஃ ஸ்ரு ஹாஂஹுதயு ஊவாஸுதெ தெவிஃரு ஹி ஸம்ஹவந்தீதி' இச்சுருதி யில் பஞ்சாக்கினியை யறிந்தவனைப்போலச் சிரத்தையும் சத்தியமுமுடைய மூமூட் சுக்கட்குத் தேவயான மார்க்கவாயிலாய்ப் பிரஹ்மலோகப் பிராப்தி கூறப்பட்டி ருக்கிறது. சிரவணாதிகளைச் செய்த யோகப் பிரஷ்டனுக்கும் சிரத்தாவனுய் என்னு முற்கூறிய சுருதியால் சிரத்தையும், சாந்தோதாந்த என்னுஞ் சுருதியால் பொய் சொல்லும் வாக்கிந்திரியத்தொழில் நிரோதவடிவ சத்தியமும், அவனுக்குப் பிராப் தமாம் என்னை; சுரோத்திரமுதலிய விந்தியங்களின் தொழிலையடக்கல் தமமாம்; அது பிராப்தமாகவே சத்தியமும் பிராப்தமாம். அல்லது, யோகசாத்திரத்தில் யோகாங்கமெனக்கூறிய அஹிம்சை சத்தியம் முதலிய ஐந்தும் யமமாம் அஃதை யடையவே சத்தியமும் பிராப்தமாம். முற்கூறிய சுருதியிலுள்ள சத்திய என்னுஞ் சத்தத்தால்பிரஹ்மத்தையே கொள்ளினும் இழுக்கின்றும்; என்னை; வேதாந்தசாஸ் திர சிரவணாதிகளும் அந்தச்சத்தியமான பிரஹ்ம சிந்தனவடிவமே. எவனுகெப் பொருளில் மன நிலைக்கின்றதோ அவன் மரித்தபின்னர் அப்பொருளையே யடை கின்றன், என்னும் நியமஞ் சாஸ்திரத்திலுங் கூறப்பட்டிருக்கிறது. ஆதலின் சத் தியவடிவ பிரஹ்மசிந்தனம் பண்ணுகின்ற புருஷனுக்குப் பிரஹ்மலோகப் பிராப்தி

கூறுதல் பொருந்தாதாயினும் இந்நியமம் யாண்டுஞ் சம்பவியாது பஞ்சாக்கினிவித்தையிற் பிறழ்தலின்; பஞ்சாக்கினி வித்தையுடையோனுக்குப் பிரஹ்மவுலகம் பிராப்தியாவதுபோலச் சத்தியப்பிரஹ்மசிந்தனம் பண்ணுவோனுக்கும் பிரஹ்மவுலகப் பிராப்திகூடும். அன்றியும் சந்நியாசாத்பிரஹ்மணஃ ஸ்தானம் என்னு மிருதியும் சந்நியாசத்தால் பிரஹ்மவுலகப் பிராப்தி கூறியிருக்கின்றது. அன்றியும் ஒவ்வொரு நாளிலும் அன்போடு செய்யப்பட்ட வேதாந்த சாஸ்திர விசாரத்தை நூறுகிருச்சிரபலத்திற்குச் சமமாய் ஸ்மிருதியில் கூறப்பட்டிருக்கிறது. இதனால் இப்பொருள் பெறப்படுகின்றது: சிரத்தை, சத்தியம், பிரஹ்மவிசாரம், சந்நியாசம். இந்நான்கில் ஒவ்வொன்றும் பிரஹ்மவுலகப் பிராப்தியிற் காரணமாயின் யோகப்பிரஷ்டனிடத்துள்ள இந்நான்கும் பிரஹ்மவுலகப் பிராப்தியின் காரணமென்பதில் கூறற்பாலதென்னை? இதனுற்றான் தைத்திரிய சாகையையுடைப் பிராமணம் 'தஸ்யஹவா வனவம விஜ்ஞோயஜ்ஞஃ' என்பதுமுதலிய வாக்கியங்களால் யோகிசரிதம் சர்வசுகிருதமெனக் கூறியது. அங்ஙனமே ஸ்மிருதியிலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. ஸ்ரூதம் தெநஸஃஸ்ததீயஃ ஸமிதெ ஸவாஃவிஃதாவநி
யஃஜ்ஞாகாஅ கூதம் ஸஹஸ்ர உவிஜ்ராஷெவாஜ்ஜஸம் வஹ்நிதாஃ।
ஸம்ஸாரதாஜ ஸஃஜ்யதாஃ ஸவிதாரமெஷொகய வஹ்நெஜ்யோவ்யஸஸ
யஸ்யைஷ விதாரணெ சூத்ரஸவிஷ்டெயஃஃநஃ வ்யாஜ்ஹாரஃ ॥

(போ-ள்.) எவனுடைய மனம் ஒரு கணமேனும் பிரஹ்மவிசாரத்தினிலகின்றதோ அவன் சர்வ தீர்த்தமுமாடினவன் சர்வ பூமிதானமும் பண்ணினவன் ஆயிரயாகமுஞ் செய்தவன் பிரஹ்மன் முதலிய சர்வ தேவர்களையும் பூசித்தவன் தனது பிதிர்க்களைப் பிறவிக்கடலினின்றுங் கரையேற்றியவன் மூவுலகத்தும்பூச்சியனுமாவன். (40)

(அ-கை.) ஹே பகவன்! இவ்வணம் யோகப்பிரஷ்டன் நன்மை யாற்றியதன்மையால் இரண்டுலகத்தும் நாசமுறுனெனும் வேறெப்பலனையடைவன் என்று அர்ச்சுனனுக்குணரும் வேட்கையுண்டாக ஸ்ரீபகவானருளுகின்றார்.

சு-ம். வ்யாவ்ய வாணயகூதாம் ஜொகாநாஷிகுவா ஸாஸ்வதீஸமாஃ।
ஸுசீநாம் ஸ்ரீமதாம் கெஹெ யொகப்ரஷ்டொஅபிஜாயதெ ॥ (41)

ப-ம். 4 வ்யாவ்ய 2 வாணயகூதாந 3 ஜொகாந 7 உஷிகுவா 5 ஸாஸ்வதீஃ 6 ஸமாஃ
8 ஸுசீநாம் 9 ஸ்ரீமதாம் 10 கெஹெ 1 யொகப்ரஷ்டஃ 11 அபிஜாயதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! யோகப்பிரஷ்டன் புண்ணியவான்களாலடையத்தக்க உலகத்தையடைந்து ஆண்டுப் பல்லாண்டுவரையினுமிருந்து பின்னர்ப் பவித்திரமான ஸ்ரீமான் வீட்டிற் பிறப்பன். (41)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! யோகமார்க்கத்தில் முயற்சித்துச் சர்வகருமங்களையும் விடுத்து நிரந்தரஞ் சிரவணாதிகளைச் செய்துகொண்டிருந்தபுருஷன் இடையில் மரணமடைந்தனன்; அதிலும் ஒருவன் முன்னுகர்ந்த விஷயவாசனை வெளிப்பட்டதால் விஷயங்களை யிச்சிக்கின்றான், மற்றொருவன் வைராக்கிய பாவனையின் திடத்தால் விஷயங்களையிச்சிப்பதில்லை இவற்றுள் முந்தினவன் சரிதை ஈண்டுக்கூறப்படுகின்றது அதில் உபாசனையோடு அசுவமேதமுதலிய யக்ஞங்களைப் பண்ணும் புருஷன் அடையத்தக்க பிரஹ்மவுலகத்தை யோகப்பிரஷ்டன் அர்ச்சிராதிமார்க்கமாய் அடைந்து அதில் பிரஹ்மனையு ளளவுகாலம் வசித்துப் பின்னர்ப் பவித்திரமும் ஐசுவரியமுமுடைய மகா ராஜாவாகிய சக்காவர்த்தி வீட்டில் போக வாசனை சேட

மிருத்தலின் அஜாத சத்துரு ஜனகன் முதலியோர்களைப்போன்று சென்மத்தை யடைவன். அதாவது போகவாசனை வலியால் யோகப் பிரஷ்டன் பிரஹ்ம வுலகத்தின் அந்தத்திற் சர்வகருமங்களையும் தியாகம்பண்ணையோக்கியமிலாத மஹாராஜாவாகுவன்னன்பதாம். ஈண்டு ஓரபிரஹ்மவுலகத்தில் உலகங்களைனப்பன்மைகூறியது பிரஹ்மவுலகத்திலுள்ள போகஸ்தானத்தைப்பற்றியென்க. ஸ்ரீமானவன் திரவியத்தால் பாவ கருமங்களைச்செய்து அதோகதியை யடைவனுதலின் யோகப் பிரஷ்டனும் அவன் வீட்டிற்பிறந்து அதோகதியையடைவன் என்னும் அர்ச்சுனன் சங்கையை யகற்றுவான் ஸ்ரீமான் புருஷனுக்கு சுசி என்னும் விசேடமருளினர். அதாவது பவித்திரமான ஸ்ரீமானவன் பாவகருமத்தில் திரவியாதிகளைச் செலவிடான்; மற்றோரு, புண்ணியகருமத்திற் செலவிட்டுப் பூர்வகதியினும் மிக்குயர்ந்த கதியையடைவன் என்க. (41)

(அ-கை.) இப்போது விஷயங்களிலிச்சையற்ற மற்றொரு யோகப் பிரஷ்டனது மரணத்தின் அனந்தரகதியை அருளுகின்றார்.

சு-ம். சுயு வா யொமிநாஉவ கூஉெ ஹவதி யீஉதாழி।
வனதஜி உூஙுஃஹதஸ்ஸ ஙொகெ ஜந்ஹ யஈஉஷ்ஷழி ॥ (42)

ப-ம். 1 சுயுவா 3 யொமிநாம் 5 வனவ 4 கூஉெ 6 ஹவதி 2 யீஉதாம்12வனதகி 7 ஹி 13 உூஙுஃஹதஸ்ஸம் 8 ஙொகெ 11 ஜந்ஹ 10 யகி 9 ஸ்ஸம்உஷ்ஷம்

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அல்லது அந்த யோகப் பிரஷ்டன் பிரஹ்மவித்தையுடைய தரித்திரமுடைய பிராஹ்மண குலத்திலே பிறப்பன் இவ்வுலகத்தில் இத்தன்மைய ஜன்மம் மிகவுமரிதாம். (42)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சித்தை வைராக்கிய முதலிய குணமிகுதிப் பாட்டால் விஷயபோக வாசனையின்றிய யோகப் பிரஷ்டன் மரணனந்தரம் புண்ணியவான்களடையத்தக்க உலகத்தையடைந்து பிரஹ்மவித்தையும் யோகாப்பியாசமுமுடைய தரித்திரியாகிய பிராஹ்மண குலத்திற் பிறப்பன் இராஜகுலத்திற் பிறவான் அத்தன்மைய பிறப்புப் பிரமாத காரணங்களனைத்து மின்மையின் மிகவரிதாம் கருத்திதுவாம் இவ்வுலகத்தில் சீமான் குலத்திற் பிறத்தலும் பல சுகிருதங்களாலடையப்படுவதானும் மோட்சத்தில்முடிவுறுதலினாலும் அதுவுமரிதாம். பவித்திரப் பிரஹ்மவித்தையுடைய தரித்திரப் பிராஹ்மண குலப்பிறப்புப் பிரமாத காரணமாகிய திரவியமுதலிய பதார்த்தங்களின்மையினால் மிகவரிதாம். இவ்வணம் இரண்டாவது யோகப்பிரஷ்டன் புகழத்தக்கவனும். கருத்திதுவாம் ஸ்ரீமான் குலத்திற்பிறந்த முதலாவது யோகப்பிரஷ்டனுக்குச் சித்தவிட்சேபப்படுத்தும் பல வித நிமித்தங்கள் பிராப்தியாயின; அவைகள் இயல்பாயே மற்றையோனுக்கில்லை. சித்தவிட்சேப நிமித்தங்கள் சாஸ்திரங்களிற் கூறப்படுகின்றன.

ஆ-சு. உதொஹஸாணாம் ஹொஜ்ஜாநாம் யாவதீநாம்அ வாஹஹாம்।
விதஹ்யாவி அஹாநியாஅஉெஇதம் ஹதாஉவி।
தத்தாநியம் ததஹ்யிகூ உூஉூகூஷ்ஷுஙுஸ்ஸதொவஹெகி ॥

(பொ-ள்.) மனதைக் கவ்ரும்படியான உண்ணப்படுபொருள்கள், பெண், ஆடை, பொன் இவைகளின் சமீபத்தால் மேலானவர்களும் சலனப்படுவார்கள். ஆதலின் அவைகளை நீக்கி வேறிடத்திருக்கவேண்டும் என்பதாம். ஆதலின் போக வாசனையின்மையின் சர்வத்தியாகம்பண்ணத்தக்க இரண்டாவது யோகப்பிரஷ்டன் முதலாமவனினும் மேலானவன் என்க. (42)

(அ-கை.) ஹே பகவன்! யோகப்பிரஷ்டனது இருவகைப் பிறப்பும் அரிதா மென்பது எதனால் என்றுணரும் ஆவட்கையுண்டாக அதிலேதுவை அருளு கின்றார்.

சு-ம். தது தம் ப்ராப்னுவந்யோமம் ருஹதை வளவ-ழுதெஹிகம் ।
யததெ அ தததோ ஹ்யுயஃ ஸம்ஸித்ஔ கூரூணாமநு ॥ (43)

ப-ம். 2 தது 4 தம் 5 ப்ராப்னுவந்யோமம் 6 ருஹதை 3 வளவ-ழுதெஹிகம் 11 யத தெ 9 அ 7 ததஃ 10 ஹ்யுயஃ 8 ஸம்ஸித்ஔ 1 கூரூணாமநு.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அந்த யோகப்பிரஷ்டன் அவ்விருவகைப் பிறப்புக் களிலும் முற்பிறப்பிற்றொடங்கிய அச்சிரவணமுதலிய சாதனங்களையடைந்து பின் னர் மோட்சத்தின்பொருட்டு மீண்டும் மிக முயல்வன். (43)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பிரஹ்மான்ம ஏகத்துவ ஞானத்தின்பொருட்டு முற்பிறப்பிற்றொடங்கின விவேகாதி, சந்நியாசம், குருவினடைவு, சிரவணாதி, சர்வசாதனங்களுள் எதை யெதை எத்துணை யெத்துணை அநுட்டித்திறந்தனமே அதையதை அத்துணை அத்துணை இருவகைப்பிறப்பி லுமடைவன். ஆதியிலிருந்து அநுட்டிக்கவேண்டுமெதில்லை. தீர்த்தமாடக்கருதித் தனது கிராமத்தினின்றும் வெளிப்பட்டு மார்க்கத்தில் ஓரிடத்தில் இடினித்திரைபண்ணிப் பிராதக்காலத்தில் அவ்விடத்தினின்று முன்செல்கின்றனரேயன்றி தமது கிராமத்தினின்றுஞ் செல்வ தில்லை; அதுபோல, யோகப்பிரஷ்டனும் முற்பிறப்பின் சாதனத்தினின்று மீண் டும் அதிக சாதனத்தை யடைதற்பொருட்டு முயல்கின்றான். அதாவது, இந்த யோகப்பிரஷ்டன் முன் சென்மத்திற்றேடின பூமியினின்றும் மேற்பூமியையே மோட்சமடைதற்பொருட்டுத் தேடுகின்றனன் என்பதாம்; ஈண்டு, ஹே குரு நந்தன என்னுஞ் சம்போதனையால் ஸ்ரீ பகவான் இப்பொருளைக் குறிப்பித்தருளி னர். உலகத்தில் மிகப் பிரபாவமும் மிகச் சுத்தமும் மிக ஐசுவரியமுமுடைய குரு ராஜன் குலத்தில் நீ பிறந்தனையாதலின், நீயும் யோகப் பிரஷ்டனென்றே அறியப் படுகின்றாய் ஆதலின் பூர்வஜன்ம சமஸ்காரவசத்தால் இப்பிறப்பில் சிறிது முயற்சி யானே உனக்கான்மஞான முண்டாம் .என்க. ஸ்ரீ வசிஷ்ட பகவானுலும் இது கூறப்பட்டுளது. ஸ்ரீராமர் வினவல்.

ஆ-சு. வைகாக்யஜிஜ்ஞாஸாவா தர்கஜ்ஞாநம் ஹ்யுதிகாக்ருத ।
ஸூரூம்ஜ்ஹெய ஏததஹ்யாயஜ்ஞீருபஸீஹமவதூதிஃ ॥

(பொ-ள்.) ஹே பகவன்! முதற் பூமியையேனும் இரண்டாவது பூமியை யேனும் மூன்றுவது பூமியையேனுமடைந்து மரணமானவன் அதன்பின் எவ்வித கதியையடைவன்? எழுபூமிகளையும் இதின் மூன்றுவது அத்தியாயத்தில் விரிவாய்க் கூறினும். ஸ்ரீ இராமர் விளவிற்கிது கருத்தாம்:—நித்தியாநித்தியமுதலிய மூன்று சாதனங்களையுமடைந்து சர்வ கருமசந்நியாசபூர்வகம், மிகுந்த மோட்ச வேட்கை வடிவ முமுட்சுத்தன்மை, சுபேச்சையென்னு முதற்பூமியாம்; இது சாதன சதுட் டயவடிவமாம். பின்னர்ப் பிரஹ்மவேத்தாவாகிய குருவையடைந்து வேதாந்தவாக் கியங்களைவிசாரித்தல் விசாரணையென்னும் இரண்டாவது பூமியாம்; இது சிரவண மனனவடிவமாம். பின்னர்ச்சிரவணமனனங்களாற்கிடைத்ததத்துவஞானத்தில்ஐய மகலல் தநுமானசியென்னும் மூன்றுவது பூமியாம்; இது நிதித்தியாசனவடிவமாம். இம்மூன்று பூமிகளும் தத்துவ சாட்சாத்காரத்திற்குச் சாதனங்களாம். சத்துவாப த்தியென்னும் நான்காம்பூமி தத்துவ சாக்ஷாத்காரவடிவமாம். மேல் மூன்று பூமி களும் சீவன் முக்தியின் அவாந்தரபேதங்களாம். ஆண்டு, நான்காம்பூமியையுடை

ந்து மரணமானவனுக்குச் சீவன் முத்தியின்றேனும் விதேகமுத்தியடைவதில் சிறி தளவும் ஐயமின்றும். மேல் மூன்று பூமிகளையுமடைந்தவன் சீவித்திருப்பினும் முத்தனும். அவன் சீவித்திருந்தே முத்தனுகில் விதேகமுத்தியிற்கூறுவதென்னை ? மேற்பூமிகள் நான்கினும் சிறிதளவும் ஆட்சேபமில்லை; மற்றேரு, சாதனவடிவ கீழ் மூன்றுகளில் சர்வ கருமங்களையும் விடுத்தனன் ஞானத்தையும்டைந்திலனுதலின், ஆட்சேபமுண்டாகும்; இதுபற்றியே ஸ்ரீ இராமர் அம்மூன்று பூமிகளேயவிலுவினர் என்க. ஸ்ரீ வசிஷ்ட பகவான் உத்தரமருளுகின்றூர்.

ஆ-சு. யொமஹாயிக யொத்தாக ஜீவிதஷ்ய பரிரிணஃ ।
ஹாயி காம்பாந்த வாரெண க்ஷீயதெ வவ-ஃஉத்தரம் ॥ (1)
ததஃஷ்ரவிஷ்டாதெஷு யொகவாஞ் வாரெஷுத ।
ஸ்ரவவ-ஃத கர்மஜெஷு ரமதெதரஃணீவவஃ ॥ (2)
ததஷ்ரத்தத வம்ஹாரெ உத்தரதெத வாரகுதெ ।
ஸ்ரீமதாயாத்ரிக்ஷீணெ ஜாயதெயொபி நொஹ்வி ॥ (3)
பூமீநாம் ஸ்ரீஉதாம் மெஹெ முவெ முணவதாம் வதாம் ।
ஜநிக்வாயொமதெ விவெதெஹவவதெ யொமவாவிதாஃ ॥ (4)
தத்ர வ்ராஹ்மாவநாஹ்யஹம் யொமஹாயிக்ரஃம் பூயாஃ ।
உரவ்வா வரிவதம் தயுஸ்ரெஷ்ரதரம் ஹாயிகா க்ரஃம் ॥ (5)

(போ-ள்.) ஞானயோக பூமியையடைந்து மரணமானவனது பூர்வ பாவகருமம் யோகபூமி யநுசாரம் நாசமாகின்றது. (1) அதன்பின் மேருபருவத குஞ்சங்களிலும் இந்திரன்முதலிய வுலகபாலர்களின் புரியிலும் தேவவிமானத்திற்சென்று தேவமாதோடு ரமிக்கின்றனன். (2) அதன்பின் முன்தேடின புண்ணியபாவங்கள் போகத்தால் நாசமாகவே மறித்தும் இவ்வுலகத்திற் பிறக்கின்றுன். (3) ஆண்டு, இவ்வுலகத்திலும் பவித்திரனுயும் சீமானுயும் வித்தைமுதலிய சிரேஷ்ட குணமுடையவனுயுமுள்ள நல்லவர் வீட்டில் ஜென்மத்தையடைந்து முந்திய யோகபூமிகளின் சமஸ்காரவசத்தால் மீண்டும் அவைகளையே சம்பாதிப்பன். (4) ஆண்டுப் பூர்வ ஜென்மத்தில் லநுட்டித்த பூமிகளை விசாரித்து அவ்வறிவுளான் அதனின் உத்தரபூமிகளை முயன்றடைவன். (5) ஈண்டு, முன்னர் அதிகமான போகவாசனையின் பிரபலத்தால் சிறிதுநாள் அநுட்டித்த வைராக்கிய வாசனையின் தூர்ப்பலத்தால் பிராணன் வெளிப்படும்போது வெளிப்பட்ட போகவாசனையுடைய சந்நியாசியையே ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறியருளினர். வைராக்கிய வாசனையின் பிரபலத்தானும் மிகப் புண்ணியத்தாற்பெற்ற பரமேஸ்வராகிருபையாலும் பிராணன் வெளிப்படுங்கால் போகேச்சையின்றிய சந்நியாசி விடயபோக மறைப்பின்றியே பிரஹ்மவித்தையுடைய தரித்திரப் பிராமணர்களின் சர்வப் பிரமாதகாரண ரஹிதமான குலத்தில் பிறப்படைவன். அத்தன்மையனுக்குப் பூர்வ சமஸ்காராபிவியக்தியின்றியே முயற்சியுண்டாம்; ஆதலின், அவன்போல் இவனுக்குமோக்ஷத்தில் சிறிதளவுஞ் சங்கையில்லை. இவ்விரண்டாவது யோகப்பிரஷ்டனை ஸ்ரீ வசிஷ்டபகவான் கூறவில்லை; மற்றேரு, பரமகிருபாலுவாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானே, 'அதவாயோகினாமேவ' என்னும் பட்சாந்தரத்தையுடன்பட்டுத் திருவாய்மலர்ந்தருளினர். (43)

(அ-கை.) ஹே பகவன்! பிரஹ்மவித்தையுடைய தரித்திரப் பிராமணகுலத்தில் பிறந்தவனுக்கு இடையில் விடயபோக மறைப்பின்மையின், மறைப்பற்ற பூர்வ சமஸ்காரத்தின் உற்போதத்தால் அவன் மறித்தும் சர்வகருமசந்நியாசபூர்வகம்

ஞானத்தின் ஶ்ரவணமுதலிய சாதனங்களையடைவன். ஆனல், சீமாகிய ராஜ குலத்தில் பலவித விஷயபோக மறைப்புடன் பிறந்தவனுக்கு விடயபோகவாசனை யின் பிரபலத்தானும் திரவியமுதலிய பிரமாத காரணங்கள் பொருந்தியிருத்தலி னலும் மறைபற்ற பூர்வஞான சமஸ்காரத்தின் உற்பாதமும், கூர்த்திரியனை தால் சர்வ கர்ம சந்நியாசத்திற் கபோக்கியகிய அவனுக்கு ஞானசாதனப் பிராப் தியும், எவ்வாறுண்டாம்; மற்றை, உண்டாகாது என்னு மர்ச்சுனன் சங்கைக்கு ஶ்ரீபகவான் உத்தரமருளுகின்றார்.

சு-ம். வயவாஃஹ்யாஹெந தெதெநவ ஹ்ரியதெஹ்ய வஸொவிஹஃ।
ஜிஜ்ஞாஸுரவியொமஹ்ய ஶப்தப்ரஹ்மாதிவர்தஃதெ ॥ (44)

ப-ம். 5 வயவாஃஹ்யாஹெந 4 தெந 6 வன வ 7 ஹ்ரியதெ 8 ஹி 2 சுவஸஃ 3 சுவி 1 வஃ 10 ஜிஜ்ஞாஸுஃ 11 சுவி 9 யொமஹ்ய 12 ஶப்தப்ரஹ்ம 13 சுதிவர்தஃதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அந்த யோகப்பிரஷ்டன் முயலானேனும் அந்தப் பூர்வாப்பியாசமே முயல்விக்கின்றது, பிரத்தியக்கபின்னப் பிரஹ்ம சிஞ்ஞாசுவாயி னும் கருமகாண்டவடிவ வேதத்தைக் கடந்திருப்பன். (44)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! உத்தமகுலத்தில் போகத்தை நுகர்ந்து சீமா ராகிய ராஜவீட்டில் பிறந்த யோகப்பிரஷ்டனது அத்தியந்த மறைப்புடைய பூர்வ ஜன்மத்தில் சம்பாதிக்கப்பட்ட ஞானசமஸ்காரம் பூர்வாப்பியாசமாம்; அது இப் பிறப்பில் மோட்சசாதனத்தின்பொருட்டு முயற்சியிலானேனும் அப்புருஷனைத் தன்வசப்படுத்துகின்றது. அதாவது, பூர்வ சமஸ்காரத்தால் காரணமின்றியே போகவாசனை நீங்கி அவன் மோட்சசாதனத்திற் பிரவிர்த்திக்கின்றன். அந்த ஞான வாசனை சிறிதுகால மநுட்டிக்கப்பட்டது, போகவாசனை நீண்டகால மநுட்டிக்கப் பட்டது; அங்ஙனமாயினும், ஞானவாசனை வஸ்துவிடயகம், போகவாசனை அவ ஸ்து விடயகம்; ஆதலின், ஞானவாசனை போகவாசனையினும் மிகவும் பிரபலமாம். அதனல் தர்ப்பலமான போகவாசனையின் அடக்கம் கூடும். ஆகாசத்தில் நீலஞான த்தானுண்டாகிய வாசனை நீண்டநாள் அநுட்டித்தலானும் வான் உருவமற்றது என்பது முதலிய சாத்திரஞானஜன்ய அற்பகாலத்திய வாசனையால் அவ்வாசனை பாதமாகின்றது. ஆதலின், வாசனையின் பிரபலத்தன்மை தர்ப்பலத்தன்மைகளில் நெடுநாள் அப்பியாச விஷயத்தன்மை அற்பநாள் அப்பியாச விஷயத்தன்மை காரணமல்ல; மற்றை, வஸ்து விஷயத்தன்மை அவஸ்து விஷயத்தன்மைகளாம். வஸ்துவிஷயமோ ஞானவாசனையிலையாம்; போகவாசனையிலின்றும். ஆதலால், ஞானவாசனையே பிரபலமாம். இதை உன்னிடத்திலே காணுதி. வேறிடத்திற் காணற்க; நீ முன்னர்க் கேவலம் போர்புரியத்தொடங்கினை, ஞானத்தின்பொரு ட்டன்று. ஆனலோ மூந்திய ஞானவாசனையின் பிரபலத்தால் காரணமின்றியே ரணபூமியில் போரினின்றும் உபாரமத்தையடைந்து ஞானத்திலே பிரவிருத்த னையினை; இதுபற்றியே, முன்னர் 'நஷ்மோஹோ கூ உமாபொஷ்' என்னும் வாக்கி யம் உன்னைக்குறித்துக் கூறியதாம். கருத்திதுவாம்:—பல்லாயிரம் பிறப்புக்க ளால் மறைக்கப்பட்டதாயினும், அந்த ஞான சமஸ்காரம் விரோதிகளை விநாசம் பண்ணித் தனது காரியத்தை ஒருதலையாப் பெறுவிக்கும் என்பதாம். கூர்த்திரிய ராஜனுக்கு சர்வகரும சந்நியாசமின்றேனும் ஞானதிகாரத்தன்மை பிராப்தியாம்; ஈண்டு, ஹிரியதே என்பதால் ஶ்ரீபகவான் இதைக் குறிப்பித்தருளினர். இரட்சிப் போர்கள் பலரின் மத்தியிலுள்ள கோ, குதிரை முதலியவைகள் செல்வதற் கிச்சி யாதனவாயினும், திருடன் சர்வ ரட்சகர்களுக்குந் தெரியாமல் தனது சாமர்த்திய விசேடத்தால் அவைகளைக் கவர்ந்துகொள்கின்றன; அதுபோல, பலவிதமான ஞானப்பிரதிபந்தகங்களோடுகூடிய யோகப்பிரஷ்டன் தானே ஞானத்தை இச்சியா

னேனும் பூர்வஜன்ம ஞான சமஸ்காரம், தன் சாமர்த்திய விசேடத்தால் சர்வப் பிரதிபந்தங்களையும் அடக்கிவிட்டு தனது வசப்படுத்துகின்றது ; அதாவது, மறித்து ஞானத்திற் பிரவிருத்திப்பிக்கின்றது. இதுபற்றியே சமஸ்காரத்தின் பிரபலத்தால் பிரத்தியக்கபின்னப் பிரஹ்மத்தையுணர விச்சித்த அதாவது சுபேச்சை வடிவ முதற்பூமியினிலேத்த சந்நியாசியும் அப்பூமியின்கண்ணே மரித்து இடையில் பலவித விஷயபோகங்களைநுகர்ந்து மகாராஜாவின் குலத்திற் பிறந்தும் அந்த யோகப்பிரஷ்டன் முற்றேறிய ஞானசமஸ்காரப் பிரபலத்தால் அப்பிறப்பிலே கருமத்தைக் கூறும் வேதபாகத்தைக்கடந்து நிலைக்கின்றான் ; அதாவது, கருமாதிகாரத்தைவிடுத்து ஞானத்திற் கதிகாரியாகின்றான். இதனனும் ஞான கருமங்களின் சமுச்சய மறுக்கப்பட்டதென்றுணர்க. என்னை ? சமுச்சயபட்சத்தில் ஞான மூடையோனுக்குக் கருமபரித்தியாக மமையாமையின் என்க.

(அ-கை.) இவ்வாறு முதற் பூமியில் மரிக்கினும் பல போகவாசனையால் மறைக்கப்படினும் பலவித பிரமாத காரணங்களுடைச் சீமான்வீட்டில் ஜன்ம மெடுத்தும் அந்த யோகப்பிரஷ்டன் முற்றேறிய ஞானசமஸ்காரத்தின் பிரபலத்தால் கருமாதிகாரத்தைவிடுத்து ஞானதிகாரியாகின்றனெனில், இரண்டாவது மூன்றுவது பூமிகளில் மரணமடைந்து உத்தமகுலத்திற்பிறந்து பலவித போகத்தைநுகர்ந்து பின்னர்ச் சீமான்குலத்தில் ஜனித்த யோகப்பிரஷ்டன் அக்கருமாதிகாரத்தை விடுத்து ஞானதிகாரியாவனென்பதிற் கூறற்பாலதென்னை ? அல்லது, அம்மூன்றுகளில் மரணமடைந்து உத்தமகுலத்திற்பிறந்து போகங்களை நுகராது பிரஹ்மவித்தையுடைய பிராமணகுலத்திற்பிறந்த இச்சையின்றிய யோகப்பிரஷ்டன் கருமாதிகாரத்தைவிடுத்துக் கேவலம் ஞானதிகாரியாய் அதன் சாதனங்களாகிய சிரவணதிகளைச் சம்பாதித்து அதன் பலமாகிய ஞானத்தால் சர்வ சம்சாரத்தினின்றும் முத்தனுவன் என்பதிற் கூறற்பாலதென்னை ? இவ்வாறு கைமுதிக நியாயத்தாற் சித்தித்த அர்த்தத்தை ஸ்ரீபகவானிப்போதருளுகின்றார்.

சு-ம். பூர்யதாஉ்ருதஉாநஹு யொ ஈ ஸம்ஸு-ஸித்திஷ: ।
ஸுநெகஜந்மஸம்ஸித்ஸுதொ யாதி பராம் கதிம் ॥ (45)

ப-ம். 2 பூர்யதாஉ் 4 யதஉாநஃ 3 து 1 யொ ஈ 5 ஸம்ஸு-ஸித்திஷ: 6 ஸுநெக ஜந்மஸம்ஸித்: 7 ததஃ 10 யாதி 8 பராம் 9 கதிம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன ! பூர்வ முயற்சியினும் அதிகமாய் முயற்சிப்பவனும் பாவ மலங்கழுவப்பட்டவனும் அநேக சுகிருதத்தாற்பெற்ற அந்திய ஜன்மமுடையவனுமாகிய அந்த யோகி அச்சாதனங்களின் பரிபாகத்தால் பரம முத்தியையடைகின்றான். (45)

(வி-ம்.) ஹே அர்ச்சுன ! முற்பிறப்பிற்செய்த முயற்சியினும் அதிகாதிக முயற்சிபண்ணனும் யோகி அதாவது முற்பிறப்பிற்றேறிய ஞான சமஸ்காரவடிவ யோகத்தோடுகூடியவன் அந்த யோக முயற்சிவடிவபுண்ணியத்தால் பாவவடிவ மலங் கழுவப்பட்டவன் அதாவது அப்புண்ணியவடிவ நீரால் ஞானத்தின் பிரதிபந்தக பாவவடிவமலங் கழுவப்பட்டவன் இக்காரணத்தானே ஞான சமஸ்காரத்தின் விருத்தியினனும் புண்ணியத்தின் விருத்தியானும் பல ஜன்மங்களிற் சித்தமானவன் ; அதாவது, முந்திய பல பிறப்பின் ஞான சமஸ்காரத்தின் பிரபாவத்தானும் புண்ணியகருமத்தின் பிரபாவத்தானும் அந்திய ஜன்மத்தையடைந்தவன், அத்தன்மைய யோகப்பிரஷ்டன் சிரவணமுதலிய சாதனங்களின் பரிபாகத்தால் பரமான்மைக்கியசாக்ஷாத்காரத்தையடைந்து புனராவிருத்தியின்றிய பரம முத்தியையடைவன் ; இதிற் சிறிதளவுமையமிலை. (45)

(அ-கை.) இப்போது அர்ச்சுனனுக்குச் சிரத்தாதிசயோற்பன்னபூர்வகம் கூறியருளிய யோகத்தை விதித்தருளற்பொருட்டு ஸ்ரீ பகவான் அதைத் துதித் தருளுகின்றார்.

சு-ம். தவஜ்ஹியாயிகோ யொமீ ஜ்ஞாநிஹ்யோவி உதாயிகஃ।
சுவி-ஃஹ்யஸ்சாயிகோ யொமீ தஜ்ஞோஜ்ஞோமீ ஹவாஜ-ஃஜ ॥ (46)

ப-ம். 2 தவஜ்ஹிஹ்யஃ 3 சுயிகஃ 1 யொமீ 5 ஜ்ஞாநிஹ்யஃ 6 சுவி 4 உதஃ 7 சுயிகஃ 10 சுவி-ஃஹ்யஃ 8 அ 11 சுயிகஃ 9 யொமீ 12 தஜ்ஞோஜ்ஞ 14 யொமீ 15 ஹவ 13 சு ஜ-ஃஜ.

(அ-ம்) ஹே அர்ச்சுன! அந்தத் தத்துவ வேத்தாவாகிய யோகி, தவசிகளி னும் பரோட்சஞானியினும் கருமிகளினும் மேலானவனென்றனக்குடன்பாடாத லின், நீ அத்தன்மைய யோகியாகுவாய். (46)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தத்துவஞானமுண்டானதன் பின்னர்ச் சீவன்முத் திச் சுகத்தின்பொருட்டு மநோநாசவாசனைகளைச் செய்யும் யோகியானவன் கிருச்சிர சாந்திராயணாதி தவம் பண்ணுவோனினும் மேலாமென்றனதெண்ணம்; அதாவது, அந்த யோகி புருஷனைத் தவசியினின்றும் உற்கிருஷ்டனென்றண்ணு கிறன் என்பதாம்.

ஆ-சு. விஜ்ஞாயா தஜ்ஞாநொஹவஜ்ஞி யத் கார்ஃ வர்ஜ்ஜயதா।
ததத்ர உக்ஷிணாயஜ்ஞிகா விதாம்ஹவ்வஸ்ரிகஃ ॥

(போ-ள்.) தத்துவ ஞானியானவன் யான் பிரஹ்மசொரூபம் என்னும் பிரஹ் மஞானத்தால் அப்பதத்தை யடைகின்றான்; அதன்கட் சர்வகாமங்களு முடிகின் றன. யாகாதிகளை யாற்றுபவரும் அடையார்; வித்துவானலாத தவசியும் அடை யான் என்க. இதுபற்றியே தக்ஷிணையோடு சோதிட்டோம முதலிய கருமங்களைச் செய்பவனினும் அந்த யோகி மேலானவனென்பதனதெண்ணம். என்னை? அக் கருமி தவசிகள் தத்துவஞானமின்றியவர்களாதலின், மோக்ஷத்திற் குரியாரல்லர் கள்; ஆன்மாவினது பரோட்சஞான முடையோனினும் யோகி மேலானவனென் றனதெண்ணம். மநோநாச வாசனைக்ஷயங்களின்மையால் சீவன்முத்திச் சுகத்தை யடையாத அபரோட்ச ஞானியினும் மநோநாச வாசனைக்ஷயங்களுடைய சீவன் முத்தனுகியயோகி மேலானவனென் றனதெண்ணம். ஆதலின், யோகப் பிரஷ்ட னுகிய நீயும் இப்போதே முயற்சிவலியால் தத்துவஞான மநோநாசவாசனைக்ஷயங் களையடைந்து சீவன்முத்த யோகியாகுவாய்; அதுவும் (சயோகி பரமோமதஃ) என்னும் வாக்கியத்தால் நானுனக்கு முன்னர்க்கூறியதாமென்றுணர்வாய். ஈண்டு, ஹே அர்ச்சுன! என்னுஞ் சம்போதனையால் ஸ்ரீபகவான் அர்ச்சுனன் சுத்தமான வனென்றுணர்த்தி யருளினாதலின், அவன் அந்தயோகத்தைச் சம்பாதித்தற் குரியனெனக் குறிப்பித்தருளினார். (46)

(அ-கை.) இப்போது சர்வ யோகியினும் மேலான யோகியைத் திருவாய் மலர்ந்தருளி ஸ்ரீபகவான் ஆறுவது அத்தியாயத்தை முடித்தருளுகின்றார்.

சு-ம். யொமிதாஉவி ஹவெஃஷாம் உஜ்ஜதமாஜ்ஞாதமா।
ஸ ஜீவாவாநு ஹஜதெ யொ ஸாம்ஹவெ யுக்ததஸ்ரொ உதஃ ॥ (47)

ப-ம். 9 யொமிதாம் 10 சுவி 8 ஹவெஃஷாம் 3 உஜ்ஜதம 4 சுஜ்ஞாதமா 2 ஸ ஜீவா வாநு 6 ஹஜதெ 1 யஃ 5 ஸாம் 7 ஹஃ 12 ஸெ 11 யுக்ததஃ 13 உதஃ

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவன் சிரத்தையுடையவனுய் என்னிடத்து நிலைத்த அந்தக் காரணத்தால் பரமேசுரனுகிய என்னைப் பூசிக்கின்றனே அவன் சர்வயோகிகளுக்குள்ளும் மிக மேலானவனென்று எனது சம்மதம். (47)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! வாசுதேவனுகிய என்னிடத்தில் புண்ணிய பரிபாக விசேஷத்தினின்று அன்பின் வசத்தாலுண்டாகிய அந்தக்காரணத்தால் முன் சமஸ்காரத்தானும் சாதுசங்கத்தானும் என்னிடத்துச் சிரத்தையுளனுய் என்னைப் பூசிக்கின்றன்; அதாவது ஈசுவர்கட்கு மீசுரவடிவ நாராயணனுகிய என்னைச்சகுணமாகவேனும் நிர்க்குணமாகவேனும் இக்கிருஷ்ணன் மனுஷ்யன், மற்றுரீசனுக் கொப்பானேனன் என்னு மித்தன்மைய பிராந்தியைவிடுத்து நிரந்தரம் சிந்தனைசெய்பவன், வசுருத்திரன்முதலிய அன்னிய தேவதைகளைப் பூசிக்கும் சர்வயோகியினும் மிகுந்த உத்தமனென்பது எனதுசம்மதம்; அதாவது சர்வ சமாகிதச் சித்தமுடையவர்களினும் இவனே மேலானவனென்றறிஞனுகின்றேன். கருத்திதுவாம்:— யோகாநுட்டானக் கிலேசமும் பூசனைக்கிலேசமும் சமமாயினும் எனது பக்தியின்றிய யோகியினும் எனது பக்தன் மிகச் சிரேஷ்டனும். நீயும் எனது பரமபக்தனதலின் ஆயாசமின்றியே மேலான யோகியாதற்குச் சமர்த்தன் என்க. இவ்வாறுவது அத்தியாயத்தில் ஸ்ரீபகவான் இத்துணைப்பொருள் கூறியருளினர். அவற்றுள் முதலில் சித்த சுத்திக்குக் காரணமாகிய கருமயோகமும், அதன்பின் சர்வ கருமங்களையுந்தியாகம் பண்ணியவன் செய்யத்தக்க அங்கசகித யோகமும், அதன்பின் அர்ச்சுனனது ஆட்சேப நிராகரணபூர்வகம் மனநிக்கிரகோபாயமும், அதன்பின்யோகப்பிரஷ்டனது புருஷார்த்தமின்மையின் மறுப்புமாமென்க. ஸ்ரீபகவான் இவ்வர்த்தங்களைத் திருவாய் மலர்ந்து பிரதமஷட்கவடிவ கருமகாண்டத்தையும் துவம்பதார்த்த நிரூபணத்தையு முடித்தருளினர்மேல் 'சிரத்தாவான்பஜதே யோமாம்' என்னும் வாக்கியத்தாற் சூசிப்பித்தருளிய பக்தி யோகத்தையும் அதன் விஷயமான வாசுதேவவடிவ தத்பதார்த்தத்தையும் அருளிச்செய்வான் மேலைய ஆறத்தியாயவடிவ உபாசனைகாண்டந் தொடங்கியருளப்படும். (47)

ஸ்ரீமத் பரமஹம்ச பரிவிராஜகாசார்ய ஸ்ரீ உத்தவானந்தகிரி சுவாமிகளின் பூச்சியபாத சிஷ்யராகிய ஸ்ரீ சித்தனைனந்தகிரி சுவாமிகளால் இயற்றியருளிய பிரகிருத கூடார்த்த தீபிகை எனப் பெயரிய வியாக்கியானத்தின்,

ஆறுவது அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

எழாவது அத்தியாயம்.

ஓம் ஸ்ரீ கணேசாயநமஃ ஸ்ரீ காசிவிஸ்வேஸ்வராப்யாம்நமஃ ஸ்ரீ குருப்யோநமஃ
ஸ்ரீ சங்கராசார்யேப்யோநமஃ.

சு-ம். யஃகிம்ந விநாஃ க்ரியஃவ்ஹவ்யஃ ஹவஃயொமிநாம் ।
தம்வேதவாஸாநஃ வநம் ஸ்ரீநநம்ஃநழ ॥

(பொ-ள்.) அன்பர்களைக்கரையேற்றுவான் ஸ்ரீநந்தரின் மைந்தத்தன்மையை யடைந்த எக் கிருஷ்ணபகவான் பத்தியின்றி அதிகாரிகள் மோட்சத்தையடை யார்களோ அந்தச் சர்வ யோகிகளாற் சேவ்யனையும் பரமாநந்தகனனையும் உள்ள ஸ்ரீ கிருஷ்ணபகவானை அடிக்கடி வணங்குகின்றேன். ஆண்டுச் சர்வகருமங்களின் சந்நியாசவடிவ சாதனம் பிரதானமாயுள்ள முதலாவது ஷட்கத்தால் ஸ்ரீ பகவான் யோகத்தோடு துவம்பத லட்சியார்த்தவடிவ ஜீவபரஸ்துவைத் திருவாய்மலர்ந் தருளினர். இப்போது தியேயப் பிரஹ்மத்தின் பிரதிபாதனத்தைப் பிரதானமாக வுடைய இரண்டாவது ஷட்கத்தால் தத்பதார்த்தவடிவப் பரமான்மாவைக் கூறி யருளுவர். அதிலும் 'யொமிநாஃவி ஹவெஃஷாம் ஃஹ்ருதிநாஜ்ஞாதநா' 'ஸ்ரீ லோ வாஸு ஹஜதேயொ ஸாம்ஹவெய்ஃகு தஸொஃதஃ' என்னுஞ் சுலோகத்தால் முற்கூறி யருளிய தமதுவசனத்தை வியாக்கியானஞ்செய்வான் ஸ்ரீபகவான் இந்த எழாவது அத்தியாயத்தைத் தொடங்கி யருளுகின்றார். ஆண்டு, எத்தன்மைய பகவத்வடி வம் பஜனைபண்ணத்தக்கதென்றும் அவ்வடிவத்தில் இம்மனம் எவ்வாறு நிலைக்கு மென்றும் அர்ச்சுனன் விஞவத்தக்கவன். ஆனாலோ, இருவகை விஞக்களையும், ஸ்ரீபகவானிடத்தில் விஞவிலேனனும் பரமகிருபாலுவாகிய ஸ்ரீபகவான் விஞவின் றியே அர்ச்சுனனுக்கு இவ்விரண்டின் உத்தரத்தை யருளிச்செய்கின்றார்.

ஸ்ரீ ஹமவாஸு உவாஅ.

சு-ம். மயாஸக்தமநாஃ பார்ஃத யொகம் யுஞ்ஜந்மதாஸ்ரயஃ ।
ஸகலம்ஸமயம் மாம் யதா ஜ்ஞாஸ்யஸி தச்ருணு ॥ (1)

ப-ம். 2 மயி 3 ஸக்தமநாஃ 1 பார்ஃத 5 யொகம் 6 யுஞ்ஜந் 4 மதாஸ்ரயஃ 7 ஸகலம் ஸமயம் 8 மாம் 9 யதா 10 யதா 11 ஜ்ஞாஸ்யஸி 12 தத் 13 ஸ்ருணு

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய என்னிடத்தில் ஆசத்தமனத்த னையும் எனது சரணத்தனையுமாகி முற்கூறிய யோகத்தைச்செய்து ஐயமின்றிச் சர்வ விபூதிகளையுமுடைய என்னை எவ்வாற்ரு னறிவையோ அப்பிரகாரத்தைக் கேட்பாய். (1)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சர்வ வுலகத்தின் உற்பத்தி திதி லயங்களின் காரணமுதற்கொண்டு டலவிதமான விபூதிகளையுடைய பரமேசுரனுகிய என்னிடத் தில் ஆசத்த மனமுடைய நீ, இதுபற்றியே எனது ஒரே சரணத்தையுமடைந்த வன். கருத்திதுவாம்:—இராஜனுடைய வேலைக்காரன் இராஜாவைத் தழுவியவ னையினும் அவனிடத்து ஆசக்த மனமுடையவனல்லன்; மற்ரோ, தனது மனவிமக் கள் முதலியோர்களிடத்தே யாசக்தனுவன் இவ்வண்ணன் நீயலன். மற்ரோ, ஒரே

பரமேசுரனிடத்தில் ஆசிரிதனும் ஆசத்தமனமுடையவனுமாவாய் அத்தன்மைய முழுட்சுவாகிய நீயேனும் உன்னைப்போன்ற மற்ற முழுட்சுவேனும் ஆருவது அத்தியாயத்திற் கூறிய நீதியாய் மனநிரோதவடிவ யோகத்தைச்செய்து ஐயப்பா டின்றிப் பலம் சத்தி ஐசுவரியமுதலிய சர்வ விபூதிகளுமுடைய என்னை எவ்வா றுணர்வையேபா அவ்வாற்றை யுனக்குச் சொல்கின்றேன் சாவதானமாய்க்கேட்பாய்.

(அ-கை.) ஆண்டு, இம்முற் சுலோகத்தில் 'மாம்ஞாஸ்யசி' என்னும் வாக் கியத்தைத் திருவாய்மலர்ந்தருளினர். அவ்வாக்கியத்தால் பகவத்விஷயகஞானம் பரோட்சமேயாம் எனத் தோற்றுகின்றது என்னு மர்ச்சுனன் சங்கையை நிவிர்த் தித்தருளி ஸ்ரீபகவான் கேட்போன் ஞானபிமுகமாதற்பொருட்டு ஞானத்தைத் துதித்தருளுகின்றார்.

சு-ம். ஜ்ஞானந்தேஹம் ஸவிஜ்ஞானமிதம் வக்ஷ்யாம்யஸேஷதஃ ।
யஜ்ஞாத்வா நேஹ பூயோந்யத் ஜ்ஞாதவ்யமவசிஷ்யதே ॥ (2)

ப-ம். 5 ஜ்ஞானம் 2 தே 1 ஸஹம் 4 ஸவிஜ்ஞானம் 3 இதம் 7 வக்ஷ்யாமி 6 அசேஷதஃ 8 யத் 9 ஜ்ஞாத்வா 14 ந 10 இஹ 11 பூயஃ 12 அந்யத் 13 ஜ்ஞாதவ்யம் 15 அவ சிஷ்யதே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய நான் உனக்கு அவ்விஞ்ஞான சகிதஞானத்தைச் சாதனபலன் முதலியவைகளோடு கூறுகின்றேன். எந்தச் சைதன்ய வடிவஞானத்தை யுணர்ந்து ஈண்டு மறித்தும் அறியத்தக்க பொருள் ஒன்றும் சேடமில்லையாமோ. (2)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எனதத்துவிதீய சொரூபத்தை விஷயம் பண் ணப்பட்ட ஞானம் இயல்பாதே அபரோட்சமாயினும் அசம்பாவனை முதலிய தோஷவசத்தால் தனது பலத்தைக் கொடுக்காது பரோட்சமெனப்படுகின்றது. சிரவணமுதலியவைகளின் பரிபாகத்தால் தடைகணீங்கிய பின்னர் அவ்வாக்கியத் தாலுண்டாகிய ஞானம் தடைகளின்மையின் தனது பயனைத்தரவே அபரோட்ச மெனப்படுகின்றது. இவ்வாறு சிரவணமுதலிய விசாரத்தாலுண்டானதால் அதுவே விஞ்ஞானமெனப்படுகிறது. இவ்வாறு விஞ்ஞானத்தோடுற்ற மகாவாக்கிய ஜன்ய இவ்வபரோட்சஞானத்தை உண்மைகூறுவோனுகிய நான் உனக்குச் சேடமிலாது சொல்கின்றேன். அதாவது, அவ்வபரோட்ச ஞானத்தின் பலன் சாதனங்களனைத் தையும்உனக்குக்கூறுகின்றேன். எந்த நித்தியசைதன்யவடிவஞானத்தையுணர்ந்து அதாவது யான் பிரஹ்மமாயிருக்கின்றேன் என்னும் வேதாந்த வாக்கிய ஜன்ய மதிவிருத்திக்கு விஷயமாக்கி ஈண்டு மறித்தொரு பொருளும் உனக்கறியத் தகுதியதின்றாமோ.

ஆ-சு. யஜ்ஜ்ஞாத்வா ஜ்ஞாதம் ஸர்வமேவாவிஜ்ஞாதம்விஜ்ஞாதம் ।
கஸ்மின்னு ஹ்யமவோ விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் ஹவதி ॥

(பொ-ள்.) என்பனமுதலிய சுருதிகளில் ஒரு பரமான்மஞானத்தானே சர்வ வுலகஞானமுமாமென்பது கூறப்பட்டிருக்கிறது. கருத்துவாம்:—அஞ்ஞானத் தாற் கயிற்றிற்சேற்றும் சர்ப்பதண்ட முதலியவைகட்குக் கயிறுகிய அதிட்டானத் தை யுணர்ந்த பின்னர்ப் பாதமுண்டாகின்றது. பின்னர்க் கயிறென்றே சேடமா யிருப்பதுபோல, அதிட்டானமாகிய சத்தியப் பிரஹ்மத்தில் கற்பிதமான இவ்வுல கனைத்தும் அவ்வதிட்டான ஞானத்தால் பாதமாகின்றன; பின்னர் அதிட்டான மாகிய பிரஹ்மமே சேடமாயிருக்கின்றது; அத்தன்மைய ஞானத்தானே நீ கிரு தார்த்தனுவாய்.

(அ-கை) ஹே அர்ச்சுன! அத்தன்மைய பெரும் பயனைத்தரும் எனது சொரூபஞானம் எனதநுக்கிரகமின்றி மிகவரிதாம் என அதனருமையைக்கூறி யருளி அதிகாரிகளதில் முயலுவான் அந்த ஞானத்தை ஸ்ரீபகவான் துதித்தருளு கின்றார்.

சு-ம். உபஷ்யாணாம் வஹவொஷ கூஷ்டிஉயததி வியயெ।
யததாஉவி விஜ்ஞாநாம் கூஷ்டிநா ம் வெத்தி தக்வதஃ॥ (3)

ப-ம் 1 உபஷ்யாணாம் 2 வஹவொஷ 3 கூஷ்டிகு 5 யததி 4 விஜயெ 6 யததாம்
8 சுவி 7 விஜ்ஞாநாம் 9 கூஷ்டிகு 10 ஸாம் 12 வெத்தி 11 தக்வதஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பல்லாயிர மநுடர்களுக்குள் ஒருவனே ஞானமுண் டாதற்பொருட்டு முயலுவான்; அவ்வாறு முயலுமதிகாரிகளுக்குள்ளும் ஒருவனே என்னையுள்ள வாறுணர்வன். (3)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சாத்திரத்திற் கூறப்பட்ட கருமஞானங்களையநுட் டிக்கத்தக்க பல்லாயிர மதிகாரிகளுக்குள் ஒருவனே முற்பிறப்பின் புண்ணியவசத் தால் நித்தியாநித்திய விவேகமுடையனுய் அந்தக்காரணசுத்திவாயிலாய் ஞான முண்டாதற்கு முயலுவான்; அவ்வாறு முயலும் பல்லாயிரமதிகாரிகளுக்குள் ஒரு வனே சிரவணாதிகளின் பரிபாகத்தின்பின்னர்ப் பரமேசுரனுகிய என்னைச்சாட்சாத் கரிக்கின்றனன்.

சங்கை:—ஹே பகவன்! விஷ்ணுவையும் ராமரையும் தங்களையும் தேவர் அசுரர் மநுடர் முதலிய பல பிராணிகளும் அறிகின்றார்களாதலின், பல்லாயிர மநுடர்களுக்குள் ஒருவனே என்னையறிவன் எனத்தாங்கள் கூறியது சம்பவியாது.

சமாதானம்:— 'தக்வதஃ' என. ஹே அர்ச்சுன! சங்கு, சக்கரம், கதை, பத்மங்களையுடைய நான்குபுயத்த எனது தூலவடிவத்தைத் தேவர்முதலிய பல் லோர்கள் உணர்கின்றார்கள் ஆயினும் இஃதெனக் குண்மைவடிவமன்று; மற்றே, மாயையாற் பண்ணப்பட்டது. ஆதலின், அவர்கள் என்னை உள்ளவாறுணர்ந்திலர்; அன்றியும், பிரஹ்ம வேத்தாக்குரு வுபதேசசத்தால் யான் பிரஹ்மசொரூபம் எனத் தனது பிரத்தியக்கான்மாவிற் கபின்னமாய் என்னை யுணர்ந்தவனே எனது உண் மைவடிவத்தை யுணர்ந்தவன். இவ்வாறுணர்பவன் பல்லாயிரர்களுக்கு ளொருவ னே. இதனல் இப்பொருள் பெறப்பட்டது: முதலில் பல்லோர்களுக்குள் ஆன்ம ஞானத்தின் சாதனத்தை யநுட்டிப்பவரே மிக வரியர்; அதை யநுட்டிக்கும் அநே கர்களுக்குள்ளும் ஞானவடிவபலத்தை யடைபவர் மிக வரியர்; அத்தன்மைய பிரஹ்மஞானத்தின் பெருமைமையைக் கூறற் கெவராலேலும். (3)

(அ-கை.) இவ்வண்ணம் ஆன்மஞானத்தைத்துதித்துக் கேட்போனை அதி லபிமுகப்படுத்தி இப்போது சர்வான்மவடிவ காரணத்தால் ஆன்மாவின் பரிபூர ணத்தன்மையைக் கூறுதற்பொருட்டு முதலில் அபரப்பிரகிருதியை யருளிச்செய் கின்றார். 'பூமிராப' என. அல்லது, 'யஜ்ஞாக்வாநமஹ ஹ்ருயொஸ்ய ஜ்ஞாதவ்யஉவ பவிஷ்யதி' என்னும் வாக்கியத்தால் ஒரு பரமான்மாவின் ஞானத்தால் சர்வ வுலக ஞானமுமாமென்னும் பிரதிஜ்ஞை செய்யப்பட்டது; அது பிரஹ்மத்தை ஜகத் காரணமெனக்கொள்ளிற் சித்தமாம் என்னை உலகத்தி லுபாதான காரணத்தின் ஞானத்தானே அதன் காரியங்களனைத்தின் ஞான முண்டாம் ஒரேமண்வடிவ கார ணஞானத்தால் அதன் காரியவடிவ கடசராவமுதலிய சர்வ ஞானங்களு முண்டா கின்றன; காரண ஞானமின்றிக் காரியஞான முண்டாகாதாகலின் முற்பிர திஜ் ஞையை உபபாதனம் பண்ணற்பொருட்டு ஸ்ரீபகவான் அந்த ஞானவடிவப் பிரஹ்

மத்தினின்றும் சடாசட வடிவ சர்வ வுலகோற்பத்தியை 'பூமிராபஃ' என்பது முதலிய மூன்று சுலோகங்களால் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஹூமிராவொநயொ வாயூஃ வம் உநொ பூஜிரெவச ।
ஸுஹம்காரு �இதீயம் ஸெ ஹிந்நா வ்ரகூ திரஷ்டயா ॥ (4)

ப-ம். 1 ஹூமிஃ 2 கூவஃ 3 கநலுஃ 4 வாயூஃ 5 வம் 6 உநஃ 7 பூஜிஃ 8 ஹவ 9 அ
10 ஸுஹம்காரஃ 11 இதி 13 இயம் 12 ஸெ 16 ஹிந்நா 14 ப்ரகூ திஃ 15 ஸுஷ்டயா.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மண்ணீரொளிகால்வான் மனம் புத்தி யகங்காரம் என்னு மிவ்விதமாய பரமேசுரனுகிய எனது பிரகிருதி எண்வகைப் பேதமுடைய தாம்.

(4)

(வி-ம்.) ஆண்டு, சாங்கிய நூலார் ஐந்துதன் மாத்திரைகள் அகங்காரமகதத் துவ அவ்வியக்தம் என்னும் இவைகளை அஷ்டப் பிரகிருதியென்பர், மாபூதமைந்து கருமேந்திரியங்களைந்து ஞானேந்திரியங்களைந்து மனமொன்று என்னும் இப் பதினுறையும் ஷோடசவிகாரமெனக்கூறுவர், இவ்விரண்டையுங் கூட்டி இருபத்து நான்கு தத்துவமென்பர். ஆண்டு, மண்முதலிய ஐந்து சத்தங்களால், இலட்சணை விருத்தியால் அவைகளின் சூட்சுமாவத்தைவடிவ கந்தமுதலிய ஐந்து தன்மாத்திரைகளையுங் கொள்ளவேண்டும். அதாவது, பூமி என்பதால் கந்ததன் மாத்திரையும், சலம் என்பதால் ரசதன் மாத்திரையும், அநலம் என்பதால் ரூபதன்மாத்திரையும், வாயு என்பதால் பரிசதன் மாத்திரையும், கம் என்பதால் சத்ததன் மாத்திரையும் கவரல் ஆம். புத்தி யகங்காரங்களென்னுஞ் சத்தங்கள் மிக விளக்கமான தமதர்த்தங்களையே விளக்குகின்றன. மனமென்பதால் பரிசேடமாகிய அவ்வியக்த முங்கொள்ளப்படுகின்றதாம். என்னை, மனச்சத்தத்திற்குப் பிரகிருதிசத்தத்தோடு சமாநாதி காணமாதலின், தனதர்த்தத்தை விடுத்து அவ்வியக்தத்தில் இலட்சணை பண்ணல் உசிதமாம். அல்லது, இலட்சணை விருத்தியால் மனத்தின் காரணமாகிய அகங்காரத்தைக்கொள்ளவேண்டும். என்னை, முற்கூறிய கந்தமுதலிய பஞ்சதன் மாத்திரைகள் அகங்காரத்தினின்றே உற்பத்தியாகின்றனவாதலின், தன்மாத்திரைகளின் சமீபத்தன்மையால் ஈண்டு, மனச்சத்தத்தால் அகங்காரமே கொள்ளற்பாலது. புத்திசத்தமோ அகங்காரத்தின் காரணவடிவமகதத்துவத்தைச்சுட்டிவடிவ முக்கிய விருத்தியானே கூறுகின்றது. அகங்கார சத்தத்திற்கு இலக்கணை விருத்தியால் சர்வ வாசனையோடுகூடிய அவித்தைவடிவ அவ்வியத்தங் கொள்ளற் பாலது. என்னை, பிரவர்த்தகத்தன்மைமுதலிய அசாதாரணதருமங்கள் இரண்டிலுஞ்சமமாயிருத்தலின் என்க. இவ்வாறு சாட்சியான்மாவால் பிரகாசிக்கப்படுவதால் அபோராட்சமாயும் பரமேசுரனது சத்திவடிவாயும் அநிருவசன சுபாவமுடையதாயும் முக்குணவடிவாயுமுள்ள மாயாரூபப் பிரகிருதியானது, பஞ்ச தன்மாத்திரைகள் அகங்காரம் மகதத்துவம் அவ்வியத்தம் என்னும் எண்வகையான பேதமடைந்தது. அவ்வெண்வகைப் பிரகிருதியினுள்ளே இச்சடவுலகங்களனைத்து மடங்கும். இவ்வுரை சாங்கியநூலைத் தழுவிக் கூறப்பட்டது. வேதாந்தநூலின்கண்ணே பூமி அப்பு அநலம் வாயு கம் என்னும் ஐந்து சத்தங்களானும் பஞ்சீகரியாத மண்முதலிய ஐவகைப் பூதங்களே கொள்ளற்பாலன. புத்தி சத்தத்தால் சிருஷ்டியினுதிகாலத்திய பரமேசுரனது மாயையின்பரிணமவடிவ ஈகூஷணத்தைக்கொள்ளவேண்டும்; அகங்கார சத்தத்தால் அம்மாயையின் பரிணமவடிவ சங்கற்பமே கொள்ளற்பாலதென்க. (4)

(அ-கை.) ஆண்டுப் பூர்வ சுலோகத்திற் கூறப்பட்ட ஷேத்திரவடிவ எண்வகைப் பிரகிருதிகளில் அபரத்தன்மையைக் கூறியருளி ஸ்ரீபகவான் இப்போது ஷேத்திரஞ்ஞவடிவப் பரப்பிரகிருதியைக் கூறியருளுகின்றார்.

சு-ம். ஸுவஸ்யதிஷ்டூ நஸ்யாம் வ்ரகூ ஜதிம் விஷி ஸெ வாழி।
ஜீவஹேதாம் உஹாஸுவாஹோ யயெஉம் யாயஜுதெ ஜமகே ॥ (5)

ப-ம். 3 ஸுவாஸ 2 உயம 5 ஊதயே 4 தா 6 ஸுநயாம 10 வ்ரகூ ஜதிம 11 விஷி 7 ஸெ 9 வாஸாம 8 ஜீவஹேதாம 1 உஹாஸுவாஹோ 12 யயா 13 ஊஉம 15 யாயஜுதெ 14 ஜமகே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! முற்கூறிய அஷ்டப்பிரகிருதியானது அபாவெனப் படுகின்றது. இப்போழுது இதனின்வேறான பரமேசுரனது சீவவடிவப் பரப்பிரகிருதியை நீயுணர்தி, இதுவே இவ்வுலகனைத்தையுந் தரிக்கின்றது. (5)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! முற்சுலோகத்திற் கூறிய அசேதனவர்க்க வடிவ கேஷத்திரமெனப் பெயரிய எண்வகைப் பிரகிருதியை அபரமென்றுணர்தி, அதாவது அப்பிரகிருதி சடமாதலினாலும் பரத்தின்பொருட்டாதலினாலும் சம்சாரபந்த வடிவமாதலினாலும் நிக்கிருஷ்டமேயாம். அன்றியும், அசேதனவர்க்கவடிவமும் கேஷத்திரவடிவமும் ஆயதினும் விலக்ஷணமுமான சத்பதார்த்தவடிவப் பரமேசுரனாகிய எனது சேதனசீவவடிவகேஷத்திரஞ்ஞப் பிரகிருதியைப்பரப்பிரகிருதியென்றுணர்தி, அதாவது எல்லாவற்றினும் மேலென்றுணர்தி. ஈண்டு, இதஸ்து என்னும் வாக்கியத்திலுள்ள 'து' என்னும் சத்தமானது முற்கூறிய கேஷத்திரவடிவச் சடப் பிரகிருதியினும் கேஷத்திரஞ்ஞவடிவச்சேதனப் பிரகிருதியில்முற்றும் விலட்சணத் தன்மையை யறிவுறுத்தற்பொருட்டாம், அதாவது இவ்விரு பிரகிருதிகட்கும் எவ் வாற்றாலேனும் ஏகத்தன்மை யமையாதாம். ஹே அர்ச்சுன! சர்வசங்காதத்திலும் பிரவிஷ்டமான கேஷத்திரஞ்ஞனென்னும் சீவவடிவப் பரப்பிரகிருதியானதே இத் தேதேகந்திரியாதிவடிவ சடவுலகத்தைத் தாரணைசெய்கின்றது.

ஆ-சு. ஸுமஹஜீவெமாதுமாம வ்ரவிஸ்யாமி மனவெவஸ்வே காமவாணீ ॥

(பொ-ள்.) பரமான்மாவாகிய நான் இச்சீவவடிவத்தாற் பிரவேசித்து நாம ரூபங்களை வெளிப்படுத்துவேன். இவ்வாறு கேஷத்திரஞ்ஞமென்னும் சீவவடிவப் பரப்பிரகிருதியே இவ்வுலகனைத்தையுந் தாரணைபண்ணுகின்றது; அதனின் வேறாகிய ஒருபொருளும் ஒருபொருளையுந் தாரணஞ்செய்வதிற் சமர்த்தமுடைய தன்று என்க. (5)

(அ-கை.) ஆண்டு, முன்னிரண்டு சுலோகங்களால் பராபரையாகிய இரு வகைப் பிரகிருதிகளுங் கூறப்பட்டன. இப்போது அவ்விரண்டு பிரகிருதிகளினும் காரிய விலிங்கமுடைய அநுமானப் பிரமாணத்தைக் காண்பித்தருளி ஸ்ரீ பகவான் தாம் அதன் வாயிலாய் உலகத்தோற்ற முதலியவைகட்குக் காரணரென்றருளிச் செய்கின்றார்.

சு-ம். வனதஜ்யாநீநி ஹேதாநி லவஜாணீதயுவயாஸய।
ஸுஹம்கூதஹ்லஸ்ய ஜமதகே வ்ரஹவகே வ்ரயுயஹ்லயா ॥ (6)

ப-ம். 3 வனதஜ்யாநீநி 2 ஹேதாநி 1 லவஜாணி 4 உதி 5 உவயாஸய 6 ஸுஹம 7 கூதஹ்லஸ்ய 8 ஜமதகே 9 வ்ரஹவகே 11 வ்ரயுயகே 10 தயா.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இப்பூதங்களனைத்தும் இவ்விரண்டு பிரகிருதிகளின் காரியங்களென நிண்ணயித்துணர்தி; ஆதலின், பரமேசுரனாகிய நானே உலகனைத்தின் உற்பத்தி பிரளயங்கட்குக் காரணன். (6)

(வி-ம்) ஹே அர்ச்சுன! முன்னர் அபராபரவடிவங்களாற் கூறிய கேஷத்திரம் கேஷத்திரஞ்ஞன் என்னுமிரண்டையுங் காரணமாகவுடைய வதத்யோனிகளாம்; அத்தன்மைய் யோனிவடிவ உற்பத்தித்தருமமுடைய சேதனசேதனவடிவ சர்வ பூதங்களையும் நீ யுணர்தி. கருத்திதுவாம்:—காரியமியாவும் சேதனசேதனங்களின் கிரந்திவடிவமாதலின் அக்காரிய வடிவவேதுவால் அதன் பிரகிருதிவடிவ காரணத்தையும் சேதனசேதனங்களின் கிரந்திவடிவமென் றனுமானிப்பாயாக, காரணகாரியங்கட்குச் சமான சுபாவமே உலகத்திற் காணப்படுகின்றது. சேதன சேதனவடிவ காரியத்தால் சேதனசேதன வடிவகாரணமே அநுமானித்தல் பொருத்தமாம். இவ்வாறு கேஷத்திர கேஷத்திரஞ்ஞங்களாகிய இரு பிரகிருதிகளும் பரமேசுரனுகிய எனது வுபாதியாதலின் சர்வஞ்ஞனையும் அனந்த சத்தியுடையனையும் மாயோபகிதனையுமுள்ள பரமேசுரனுகிய நான் முற்கூறிய பிரகிருதிவாயிலாய்ச் சர்வ உலகத்தின் உற்பத்திலய காரணமாகின்றேன். அதாவது களப்பொருள்களின் உபாதானமுந் திருஷ்டாவும் ஒன்றேயாவதுபோல மாயையின் ஆசிரயமும் விஷயமுமானதால் மாயாவியாகிய நானே இம்மாயிகவுலகத்திற்கு உபாதானமுந் திருஷ்டாவுமாவேன். (6)

(அ-கை.) பரமேசுரனுகிய நானே எனது மாயாசத்தியால் சர்வவுலகத்தின் உற்பத்தி திதிலயகாரணமாதலின் உண்மையில் எனக்கயலா யொருபொருளுமில்லை யென்னு மர்த்தத்தை ஸ்ரீ பகவானிப்போ தருளுகின்றார். 'உதஃவா தமம் உதி' அல்லது, 'யஜ்ஞாக்வாநெ ஹஹூயொந்ய ஜ்ஞாதவ்ய உவசிஷ்யதெ' என்னும் வாக்கியத்தால் முன்னர், ஓரான்மவஸ்து ஞானத்தால் சர்வ வுலகத்தின் ஞானமுமாமெனக் கூறியருளப்பட்டது. அந்தப் பிரதிக்ஞையை உபபாதனஞ்செய்தருளற் பொருட்டு ஆன்மாவைச் சர்வசகவுபாதானமெனக் கூறியருளியதால் ஆன்மாவின் நிருவிகாரத்திற் கிழுக்காமென்னுஞ் சங்கைக்கு ஸ்ரீ பகவானருளுகின்றார்.

சு-ம். உதஃ வாதமம் காஸ்யக் கிம்சிதஹி யநம்ஜய।
யயி ஸர்வாணி பூதம் ப்ரோதம் ஸூத்ரெ மணிகணா இவ॥ (7)

ப-ம். 2 உதஃ 5 வாதமம் 6 ந 3 சாஸ்யக் 4 கிம்சிக் 7 சஹி 1 யநம்ஜய 11 மயி 13 ஸர்வாணி 12 பூதம் 14 ப்ரோதம் 9 ஸூத்ரெ 10 மணிகணாஃ 8 இவ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய எனக்கயலாய் ஒரு பொருளும் உண்மையாயில்லை: நூலில் மணிகள் கோர்த்திருக்குமாபோலப் பரமேசுரனுகிய என்னிடத்தில் இவ்வுலகனைத்துங் கோர்த்திருக்கின்றது.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! காணப்படும் உலகாகாரமாய்ப் பரிணமித்த மாயாதிஷ்டானமும், சகத்பிரகாசகமும், சத்தாஸ்புரணத்தால் உலகனைத்திலும் அநுசூதமும் சுவப்பிரகாச பரமானந்த சைதன்யகனமும் உண்மையிற் பரமார்த்தவடிவமும் ஆகிய பரமேசுரனுகிய எனக்கயலாய் ஒரு பொருளும் உண்மையிற் சத்தியமன்று. கனவைக் காண்பவனின் வேறுய்க் கனப்பொருள்கள் உண்மையிற் சத்தியமலாததுபோலும், மாயிகனுக்கயலாய் மாயிகபதார்த்தம் உண்மையிலிலாததுபோலும், சுத்தியவச்சின்ன சைதன்யத்தின்வேறுய்க் கற்பிதாசதம் உண்மையிலிலாததுபோலும் பரமேசுரனுகிய என்னிடத்திற் கற்பிதமாகிய உலகனைத்தும் உண்மையில் எனக் கன்னியமாயின்று. இஃதனைத்தும் 'ததனன்யத்வ மாரம்பண சப்தாதிப்யஃ' என்னுஞ் சூத்திரபாடியத்தில் ஸ்ரீ பகவான் பாடியக்காரால் விரிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன. வியவகார திருஷ்டியாலோ இச்சடவுலகம் சத்துரூபமும் புரணரூபமுமாகிய என்னிடத்தில் கோர்த்திருக்கின்றது: அதாவது, பரமேசுரனுகிய எனது சத்தையினுல் இவ்வுலகனைத்தும் சத்துப்போலவும் எனது ஸ்புரண

வடிவத்தால் புராணம்போலவுந் தோற்றுகின்றன. ஆண்டு, இவ்வுலகனைத்தும் சைதன்யத்தில் கோர்த்திருக்கின்றன என்னு மித்துணைமாத்திரத்தில் திருஷ்டாந்தங் கூறியருளுகின்றார். 'ஹரதெ ஹணிமணா ஜவஜதி' நூலில் மணிக்கூட்டங்கள் கோர்த்திருக்குமாபோலச் சத்தாஸ்புராணவடிவப்பரமேசுரனுய என்னிடத்தில் இவ்வுலகனைத்துங் கோர்த்திருக்கின்றன. அல்லது 'சூத்திரேமணிகணஇவ' என்னும் வாக்கியத்திற்கு இவ்வணம் பொருள்பண்ணுக.—இரணியகர்ப்பவடிவ சுவப்பனதிருஷ்டாவாகிய தைஜசான்மா சூத்திரமாம்; சுவப்பனத்துண்டாய அதன்கண் மணிக்கூட்டங்கள் கோர்த்திருக்குமாபோல என்னிடத்தும் இவ்வுலகனைத்துங்கோர்த்திருக்கின்றது. இவ்விரண்டாவது வியாக்கியானத்தில் காரணகாரியபாவ திருஷ்டாதிரிசியபாவம் என்பனமுதலிய எல்லா அம்சத்திலும் திருஷ்டாந்தம் பொருந்துகின்றது. பிரதமவியாக்கியானத்திலோ கோர்த்திருக்குந்தன்மைமாத்திரத்திற்குத் திருஷ்டாந்தமாம் என்க. ஒரு வியாக்கியானத்தில் இதற்கிவ்வணம் பொருள் கூறப்பட்டுளது. ஹே அர்ச்சுன! சர்வக்ஞனும், சர்வ சத்திமானும் சர்வகாரணவடிவனும் பரமேசுரனுமாகிய எனக்கயலாய் மற்றொன்றும் உலகத்தினுற்பத்தி பிரளயங்கட்குச் சுவதந்திரகாரணமாய்ப் பிரசித்தமில்லை: மற்றோர், நானே காரணன். அதனல் காரணனுகிய என்னிடத்தில் இவ்வுலகனைத்தும் கோர்த்திருக்கின்றது; எனக்கன்னியத்திலின்று. மணிக்கூட்டம் நூலின்கண்ணே கோர்த்திருக்கின்றதன்றி மற்றொன்றிலுமல்லாததுபோலவாம். ஈண்டுச் சூத்திரமணிகளின் திருட்டாந்தம் கேவலம் கோர்த்திருத்தற் றன்மைமாத்திரத்திற்காம்; காரணத்தன்மையிலிது பொருந்தாது. சூத்திரம் மணிகட்குக் காரணமன்மையின் காரணத்திலே பொன்னிற்குண்டல முதலியவைகளின் திருஷ்டாந்தம் பொருந்தும் என்ப. ஒரு வியாக்கியானத்தில் இவ்வாறு பொருட்படுத்தினர். வியவகாரகாலத்தில் மண்முதலிய காரணங்கட்கும், கடமுதலிய காரியங்கட்கும், ஒன்றற்கொன்று பேதந் தோற்றுகின்றதாதலின் மண்முதலிய காரணங்களினும் கடாதிகாரியங்கள் பரமாம்: அதாவதுமேலும். கடாதிகட்கு மண்ணுபாதானமானதுபோல ஆ, குதிரை முதலியவற்றிற்கன்றுதலின் அவைகள் மண்ணினின்றும் பரதரமாம். அதுபோலப் பரமான்மாவின் ஒருகாரியமும் பரதரமன்று: அதாவது நான் உபாதான காரணமல்லாத காரியமொன்றில்லை. இத்துணை கூறியருளியதால் பிரபஞ்சத்தில் பிரஹ்மத்தின் வியதிரேகமின்மை கூறியருளப்பட்டது. அதைத் திருஷ்டாந்தத்தோடு திருவாய் மலர்ந்தருளுகின்றார். 'உயிஹவ-ஃஜி' ஹே அர்ச்சுன! ஒன்றற்கொன்றுஞ் சூத்திரத்தினும் விலகிய மணிகள், மணிகளில் கலந்துநிற்கும் நூலில் கோர்த்திருக்கின்றனபோல சத்தாரூபத்தானும் புராணரூபத்தானும் எவ்விடத்தும் கலந்துநிற்கும் பரமேசுரனுகிய என்னிடத்தில் பரஸ்பரம் விலகியவுலகங் கோர்த்திருக்கின்றது. வெவ்வேறுணமணிகளில் கலந்திருக்கும் நூல் பின்னமானதுபோல வேறுபாடுடைய இவ்வுலகத்தி லநுசூதமாயிருக்கும் யானும் பின்னமாவன். இவ்வாறு சர்வப்பிரபஞ்சாகிதமான பரமேசுரனுகிய என்னிடத்தில் விகாரித்தன்மை சம்பவியாது, இவ்வியாக்கியானத்தைத்தழுவிச் சுலோகத்தொடக்கத்தில் அல்லது என்பதுமுதலிய அவதாரிகை கூறப்பட்டதென்க. (7)

(அ-கை) ஹே பகவன்! நீர்முதலியவைகள் இரசமுதலியவைகளிற் கோர்த்திருத்தல் காணப்படுகின்றதாதலின், பரமேசுரனுகிய என்னிடத்து இவ்வுலகனைத்துங் கோர்த்திருக்கின்றதெனத் தாங்கள் கூறுவது எவ்வணம் பொருந்துமென்னும் அர்ச்சுனன் சங்கைக்குப் பரமேசுரனுகிய நானே இரசமுதலிய வடிவமாய் நிற்கின்றேனுதலின், இரசமுதலியவைகளில் ஜலமுதலியவைகளின் கோர்த்திருக்குந் தன்மை பரமேசுரனுகிய என்னிடத்திலேயாம் என ஐந்து சுலோகங்களால் உத்தாமருளுகின்றார்.

சு-ம். ரவொஹஉவு களஞ்ஞெய வ்ரஹாஷ்டி ஸஸிஹரூயஃயொஃ।
வ்ரணவவுஷ்வஃவெஒஷு ஸஜஃஃவெ வளரு²ஷம் ஈரஷு² ॥ (8)

ப-ம். 3 ரஹஃ 4 சுஹம் 2 சுவு² 1 களஞ்ஞெய 7 வ்ரஹா 5 சுஷ்டி 6 ஸஸிஹரூயஃயொஃ 9 வ்ரணவஃ 8 ஹவஃவெஒஷு² 11 ஸஜஃ 10 வெ 13 வளரு²ஷம் 12 ஈரஷு².

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஜலங்களிலுள்ள இரசம் நானின்றேன், இரவிமதிகளிடத்துள்ள பிரபையும் நானே, சர்வ வேதங்களுக்குள்ளும் பிரணவம் நானே, வானிலுள்ள ஒலியும் நானே, சர்வ புருஷர்களிடத்திலுள்ள புருஷத்தன்மையும் நானே. (8)

வி-ம். ஹே அர்ச்சுன! எல்லா நீர்களிலுமுள்ள ரசதன்மாத்திரைவடிவப் புண்ணியமதுரமாயும் அந்தச் சர்வ ஜலத்தின் சாரபூதமாயும், காரணமாயும், அநுசூதமாயும் உள்ள ரசமும் நானே: அதாவது, அத்தன்மைய ரசவடிவப் பரமேசுரனிகிய என்னிடத்தில் அந்தச் சர்வ ஜலமும் புரோதமாம். சர்வ உலக வியவகாரத்திற் கேதுவாகிய இரவிமதிகளிடத்துள்ள பிரபைவடிவப் பிரகாசமும் நானே. அதாவது, சாமான்யப் பிரகாசவடிவப் பரமேசுரனிகிய என்னிடத்தில் சந்திர சூரியர்கள் புரோதமாம். சர்வ வேதங்களிலும் அநுசூதமாய்நிற்கும் ஓங்காரவடிவப் பிரணவமும் நான். அதாவது, அந்தப் பிரணவவடிவமாகிய என்னிடத்தில் அவ்வேதங்களனைத்தும் புரோதமாம்.

ஆ-சு. தஉயாஸஂகு²நா ஸவ-ஹாணி வண-ஹாநி ஸஂதரணா²நி।
வஸவ ஸொஂகாரொண ஸவ-ஹாவாகு² ஸஂதரணா² உதி ॥

(போ-ள்.) இலைகளனைத்தும் தமது நாடிகளாற் கட்டப்பட்டிருக்கின்றன போலச் சர்வவேதவாக்குகளும் ஓங்காரத்தாற் கட்டப்பட்டிருக்கின்றன என்பதாம். வான் முழுதும் அநுசூதமாயும், வானின் காரணமாயும், உள்ள சத்த தன்மாத்திரைவடிவப் புண்ணியசத்தம் நானே. அதாவது, அச்சத்தவடிவமாகிய என்னிடத்தில் அவ்வாகாசம் புரோதமாம். எல்லாப் புருஷரிடத்தும் அநுசூதமாய்நிற்கும் புருஷத்துவ சாமான்யவடிவப் பௌருஷமும் நானே. அதாவது, அப்பௌருஷவடிவ என்னிடத்தில் அப்புருஷர்களனைவரும் புரோதராம். ஈண்டிது கருத்தாம். சர்வ ஒலிகளிடத்தும் அநுசூதமாய்நிற்கும் ஒலித்தன்மைவடிவ சாமான்யத்தில் துந்துபிச்சத்தத்தன்மை முதலிய விசேஷங்கள் புரோதமாம். அதுபோல் ரசாதி சாமான்யவடிவமாகிய என்னிடத்தில் ஜலமுதலிய சர்வ விசேஷங்களும் புரோதங்களாம். இவ்வாறு மேல் நான்கு சுலோகங்களிலும் யாண்டு மூன்றாலது. ஆண்டு, துந்துபி, சங்கம், வீணை இம்மூன்று திருஷ்டாந்தங்களும் ஸ்ரீ ஆத்மபுராணத்தின் ஏழாவது அத்தியாயத்தில் எம்மால் விரிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன. ஈண்டு, 'ரசோகமப்சு' என்பது முதலிய ஐந்து சுலோகங்களால் ஸ்ரீ பகவான் தமது விபூதியைக் கூறியருளினர். அது கேவலந் தியானம்பண்ணுதற்பொருட்டாதலின் இத்தியேயவடிவத்தில் மிகுந்த அபினிவேசம் பண்ணத் தக்கதன்று. (8)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். வ²ணையா மஂயஃவ்யயிவ்யாஂஅ தெஜஷ்டாஷ்டி விஹாவஹள।
ஜீவஸ²ஂ ஸவ-ஹு²ஷுதெஷ² தவஷ்டாஷ்டி தவஷ்டிஷ² ॥ (9)

ப-ம். 2 வாணஃ 3 மஃயஃ 1 வாயிவ்யாம், அ 7 தெஜஃ 5 அ 4 சுஷ்மி 6 விஹாவஹள 9 ஜீவகம் 8 லவ-ஹ்ருதெஷு 12 தவஃ 10 அ 13 சுஷ்மி 11 தவஷ்விஷு.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மண்ணிலுள்ள புண்ணியகந்தமும் நான், தீயிலுள்ள ஒளியும் நான், எல்லாப் பிராணிகளிடத்துமுள்ள சீவனமும் நான், தவசிகளுக்குள்ள தவமும் நான். (9)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சர்வப்பிருதிவியிலும் சாமான்யவடிவமாயும் அநுசூதமாயும் பிருதிவியின் காரணமாயுமுள்ள தன்மாத்திரைவடிவப் புண்ணியகந்தம் அதாவது விகாரத்தன்மையிலாத சுகந்தமும் நானே. அதாவது, அப்புண்ணியகந்தவடிவப் பரமேசுரனுகிய என்னிடத்தில் அப்பிருதிவி புரோதமாம். ஈண்டு, 'புண்யோகந்தஃ பிருதிவியாம்ச' என்னும் வாக்கியத்திலுள்ள சகாரமானது ரசமுதலியவைகளிடத்தும் அப்புண்ணியத்தைச் சம்பந்தப்படுத்துதற்பொருட்டாம். கருத்திதுவாம்:—சத்தமுதலிய ஐந்தினிடத்தும் இயல்பானே புண்ணியத்தன்மையுளது பிராணிகளின் அதருமவிசேஷத்தால் அச்சத்தமுதலியவைகளில் அபுண்ணியத்தன்மையுமுண்டாம். இயல்பாய் அது அவைகளிடத்தின்றும். ஈண்டு, துர்க்கந்தமுதலிய விகாரத்தன்மையின்மை புண்ணியத்தன்மையாமென்க. அக்கினியிலுள்ள எல்லாப்பொருளையும் எரிக்கும் விளக்குஞ் சாமர்த்தியவடிவமாயும் உஷ்ணபரிசத்தோடு கூடியதாயும், வெண்ணிறமுடையதாயும் சர்வ தீக்களிலும் அநுசூதமாயுமுள்ள தேசசும் நான். அதாவது, அத்தேஜசுவடிவப் பரமேசுரனுகிய என்னிடத்தில் அவ்வக்கினி புரோதமாம். ஈண்டு, 'தெஜஶ்சாஹ்னி' என்னும் வாக்கியத்திலுள்ள சகாரத்தால் வாயுவின் பரிசத்தையுங் கொள்ளவேண்டும். அதாவது, உஷ்ணஸ்பரிசத்தால் வெந்துயரடைந்தோனுக்குத் தண்மையையுண்டாக்கும் வாயுவின் தட்பப் பரிசமும் நானே. அச்சிதவடிவான என்னிடத்தில் அவ்வாயும் புரோதமாம். தாவரசங்கமவடிவச் சர்வப் பிராணிகளிடத்துமுள்ள பிராணதாரணையாகிய ஆயுள்வடிவச் சீவனமும் நானே. அதாவது, ஆயுள்வடிவப் பரமேசுரனுகிய என்னிடத்தில் அப்பிராணிகளனைத்தும் புரோதமாம். அல்லது, ஜீவதி அனேன இதி ஜீவனம். அதாவது, சீவனத்தை யடைவதெதனால் அது சீவனம் என இவ்வாறு விரித்துக்கூறலால் சீவனசத்தம் விராட்டுவடிவ சமட்டியன்னத்தின் வாசகமாம். அவ்வன்னவடிவப் பரமேசுரனுகிய என்னிடத்தில் அப்பூதங்களனைத்தும் புரோதமாம். நாடோறுந் தவத்தோடுகூடியுள்ள வானப்பிரஸ்தன்முதலிய தவசிகளிடத்திலுள்ள சீதோஷ்ணதிகளைச் சகித்தல்வடிவ தவமும் நானே. அதாவது, அத்தவவடிவப் பரமேசுரனுகிய என்னிடத்தில் அத்தவசிகள் புரோதாராம். ஈண்டு, 'தவஶ்சாஹ்னி' என்னும் வாக்கியத்திலுள்ள சகாரத்தால் உள்வெளித் தவங்களனைத்தையுங் கொள்ளவேண்டும். அதில் மனவொருமை, உள்தவம்: நாக்கு, உபத்தாதிகளைக் கட்டுப்படுத்தல் வெளித்தவம் என்க. (9)

(அ-கை.) ஹே பகவன்! சூகாஶாஆய-வா-ஃயொஶ்மிஶ்மொஶாவஃ சுஷ்மி வாயிவீ' என்னுஞ் சுருதியில் வானில் வாயும் வாயுவில் தீயும் தீயில் நீரும் நீரில் மண்ணும் உற்பத்தியாமெனக் கூறப்பட்டிருக்கிறது. காரியத்திற்குத் தனது காரணத்தின்கண்ணே புரோதத்தன்மையாமாதலின், சர்வ பூதங்களும் தத்தங் காரணத்தின்கண்ணே புரோதமாம். அகாரணவடிவ உம்மிடத்திலொருபொருளும் புரோதமின்று என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு 'சூதம சூகாஶஃ ஸம்ஹ்ருதஃ, யதோவா உதாஹ்ரி ஹ்ருதாஹ்ரி' என்பது முதலிய சுருதிகளில் பரமேசுரனுகிய என்னிடத்திலே சர்வ பூதங்கட்கும் உற்பத்தி கூறப்பட்டிருக்கின்ற தாதலின் பரமேசுரனுகிய நானே சர்வ பூதங்கட்கும் காரணன் என. ஸ்ரீபகவான் உத்தரமருளிச்செய்கின்றார்.

சு-ம். ஬ீஜம் உாம் ஸவ-ழஹ்ம்தாநாம் வித்தி வாய-ழ ஸநாதநழ ।
ப்ராப்ரபு-ராஜதாஉஹ்மி தேஜஸ்தேஜஸ்வீநாஉஹழ ॥ (10)

ப-ம். 5 ஬ீஜம் 3 உாம் 4 ஸவ-ழஹ்ம்தாநாம் 6 வித்தி 1 வாய-ழ 2 ஸநாதநம் 8 ப்ரா
ப்தி: 7 ப்ரஜ்ஞாதாம் 10 சுஹ்மி 12 தேஜ: 11 தேஜஸ்வீநாம் 9 சுஹம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! தோற்றமீறிலாத பரமேசுரனுகிய என்னைச் சர்வ பூதங்கட்குங் காரணமென்றுணர்தி: புத்திமான்களிடத்துள்ள புத்தியும் தேசசு புருஷர்களிடத்துள்ள தேசசும் நானே. (10)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தாவரசங்கமவடிவ சர்வ பூதங்கட்கும் சாதன மாகிய பீசம் அதாவது தனது தோற்றத்திற் காரணத்தை யவாவாத ஒரு நித்திய காரணமானது ஒவ்வொரு வியத்தியிலும் பேதமுடையதன்று அநித்தியமுமன்று. அத்தன்மைய அவ்வியாகிருதமெனப் பெயரிய சகத்தின் பீசவடிவம் பரமேசுரனுகிய நானேயென்றுணர்தி. எனக்கன்னியமான மற்றொருபொருளும் சர்வ சகத்திற்குங் காரணமன்று. சுருதி வான்முதலியவைகளினின்று வாயு முதலியவைகட்குற்பத்தி கூறியதும் கேவலம் சடத்தினின்றன்று; மற்றே, வாஞ்தியுபஞ்த பரமேசுரனுகிய என்னிடத்தினின்றே வாயுமுதலியவைகளின் உற்பத்தி கூறுகின்றது. ஆதலின், சர்வ பூதங்களின் அவ்வியாகிருதமெனப் பெயரிய பீசவடிவமாகிய என்னிடத்திலே சர்வ பூதங்களின் புரோதத்தன்மை பொருந்துமென்க. அல்லது, தத்துவா தத்துவவடிவப்பொருளின் விவேகமாகிய சாமர்த்தியம் புத்தியாம். அஃதுடையோன் புத்திமான்: அவர்களிடத்துள்ள புத்தியும்நானே. அதாவது அப்புத்திவடிவப் பரமேசுரனுகிய என்னிடத்தில் அவர்கள் புரோதமாவர்கள் அன்னிய சத்துருக்களை யடக்குஞ் சாமர்த்தியத்தால் தான் அவர்களா லடக்கப்படாதிருத்தல் தேஜசாம்: அதை யுடையவர்கள் தேஜஸ்விகளாம். அவர்களிடத்துள்ள தேஜசும் நான். அதாவது, அத்தேஜசுவடிவப் பரமேசுரனுகிய என்னிடத்தில் அவர்கள் புரோதர்களாவார்கள் என்க. (10)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். ப3லம் ப3லவதாம் சாஹம் காமராக3விவர்ஜி-ழதழ ।
த4ர்மாவிருத்3தே4ஷு பூ4தேஷு காமோஸ்மி ப4ரதர்ஷப4 ॥ (11)

ப-ம். 4 ப3லம் 2 ப3லவதாம் 7 அ 5 சுஹம் 3 காமராக3விவர்ஜி-ழதம் 9 த4ர்மாவிரு
த்3தே4: 8 பூ4தேஷு 10 காம: 6 சுஹ்மி 1 ப4ரதர்ஷப4.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பலமுடைய புருஷர்களின் காமராகமின்றிய பலமும் நானே. சர்வப்பிராணிகளிடத்தும் தருமத்தினும் மாறுபடாத காமமும் நானே. ()

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அடையாததை அடைவிக்குங் காரணமின்றே னும் இவ்விஷயம் எனக்குண்டாகுக என்னும் சித்தவிருத்தி விசேடத்தின் பெயர் காமமாம்; அடைந்ததைக் கெடுக்கத்தக்க காரணமிருக்கினும் இவ்விஷயம் கெடுறு தொழிக என்னும் பிரியவடிவ சித்தவிருத்தி விசேஷம் ராகமாம். அத்தன்மைய காமராகங்களின்றிய பலம் அதாவது எவ்வாற்றானும் காமராகங்களையுண்டாக்காத ரசதமங்களின்றிய தனது தருமானுட்டானத்தின் பொருட்டுத் தேகேந்திரிய முதலியவைகளின் தாரணையாகிய சாமர்த்திய வடிவபலமுடைய புருஷர்களாகிய சம்சார பராமுக பலவான்களிடத்துள்ள பலமும் நானே. அதாவது, அச்சாத்துவிக பலவடிவ என்னிடத்தில் அவர்கள் புரோதராகின்றார்கள். கருத்திதுவாம்:— அக்காமராகங்களின்றிய பலமே பரமேசுரனுகிய எனது வடிவமாய்த் தியானம்

பண்ணத்தக்கது; காமராகங்களையுண்டாக்கப்பட்ட விஷயாசத்தர்களின்பலமன்று. அல்லது, 'காமராக விவர்ஜிதம்' என்னும் வாக்கியத்திலுள்ள ராகசத்தத்தால் தோஷத்தையே கொள்ளவேண்டும். அல்லது தருமசாஸ்திரம் தருமமாம் அதற் கவிருத்தம் அதாவது அதனால் நிஷேதிக்கப்படாதது. அல்லது, தருமத்திற் கநு கூலமாகிய சர்வப் பிராணிகளிடத்துள்ள சாத்திராநுசார மனைவி மக்கள் விஷயக அபிலாஷைவடிவ காமமும் நான் அதாவது சாத்திரத்திற் கவிரோதமாகிய காம வடிவ பரமேசுரனுகிய என்னிடத்தில் அக்காமத்தோடுகூடிய சர்வப்பிராணிகளும் புரோதர்களாவர்கள். (11)

(அ-கை.) ஹே அர்ச்சுன! இவ்வாறு பலபொருளையு மெண்ணுவதிலென் பயன்? இவ்வுலகங்களனைத்தும் பரமேசுரனுகிய என்னிடத்திலேயுண்டாகி என்னிடத்திலே புரோதமாம் என்னும் அர்த்தத்தை ஸ்ரீ பகவானிப்போதருளுகின்றார்.

சு-ம். யெ யெவ ஹாகூகிகா ஹாவா ஸாஜஹாஹாஉஹாஷுயெ।
உத வஸவெதி தாகிஞ்சி நகூஹம் தெஷு தெஉயி॥ (12)

ப-ம். 1 யெ 5 அ 2 வஸவ 3 ஹாகூகிகாஃ 4 ஹாவாஃ 7 ஸாஜஹாஃ 9 தாஉஹாஃ 8 அ 6 யெ 11 உதஃ 12 வஸவ 13 உதி 10 தாஞ 14 விஞ் 18 ந 15 து 16 கூஹம் 17 தெஷு 19 தெ 20 உயி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மற்றுமுள்ள சாத்விகராஜத தாமதபதார்த்தங்களியாவும் பரமேசுரனுகிய என்னிடத்தினின்றே முற்கூறியமுறையாய் உண்டாயினவென வுணர்ந்து, ஆயினும், யான் அவற்றிலில்லேன் அவையிலா என்பாலேயுள்ளனவாம். (12)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! முற்கூறியபொருளின் வேறான மற்றெதுவும் அந்தக்கரண பரிணமவடிவ சமதமமுதலிய சாத்துவிகபாவமும் அர்ஷமுதலிய ராஜசபாவமும் சோகாதி தாமசபாவமும் ஆகிய இவ்வனைத்தும் வித்தை கருமாதிகளின் வசத்தாலுண்டாகின்றன. அவ்வனைத்தும் 'கூஹம்கூதஸ்வாஜமதஃ வ்ரஜவஃ' என்பது முதலிய வாக்கியப்பிரகாரமாய்ப் பரமேசுரனுகிய என்னிடத்திலே உண்டாகின்றன என்றுணர்ந்து; அல்லது சத்துவகுணப் பிரதானமாகியதேவ, ரிஷி, பிராஹ்மண, சர்க்கரை முதலிய பொருள்களும் ரஜோகுணப் பிரதானமாகிய கந்தருவ, யக்ஷ, கூத்திரிய, மிளகாய் முதலிய பதார்த்தங்களும் தமோகுணப் பிரதானமாகிய ராக்ஷஸ, சூத்திர, வெள்ளைப்பூண்டுமுதலிய பதார்த்தங்களும் பரமேசுரனுகிய என்னிடத்தினின்றேயுண்டாகின்றன. இவ்வாறு அச்சர்வபதார்த்தங்களும் என்னிடத்திலே தோன்றினபோதிலும் பரமேசுரனுகிய நான் அவைகளிடத்தில் ஆதேயவடிவத்தானிலத்திலேன்; அதாவது, இரச்சுவடிவ அதிட்டானம் கற்பிதமாகிய சர்ப்பமுதலிய விகற்பங்களால் தூஷிதப்படாததுபோலப் பரமேசுரனுகிய நானும் அனன்மபதார்த்தங்களின் வயப்பட்டு அவ்விகாரங்களால் தூஷிதப்படேன். சம்சாரிகளை அவைகளால் தூஷிக்கப்படுவர் அச்சடவடிவப் பதார்த்தங்களனைத்தும் ரச்சுவில் சர்ப்பமுதலியவைகளைப்போலப் பரமேசுரனுகிய என்னிடத்திற் கற்பிதங்களாம். அதாவது, என்னிடத்தினின்றுஞ் சத்தாஸ்பூர்த்திகளையடைந்து அவ்வனைத்தும் என ததீனங்களாம். (12)

(அ-கை) ஹே பகவன்! 'ஸ்வொஹஉவ்ஸ களஂதெய' என்பது முதலிய வாக்கியங்களால் தாங்கள் உலகனைத்தையும் தங்கள் சொரூபமாகவும் தங்களை ஸ்வதந்திரனெனவும் நித்திய சுத்தமுத்த சுபாவனெனவுங் கூறியருளினீர்கள் அத்தன்மைய தங்கட்கபின்னமாகிய இவ்வுலகத்தில் சம்சாரித்தன்மை எவ்வாறும்? மற்றோ

ஆகாது. ஆண்டு, எமது சுவதந்திர நித்திய சுத்த முத்த சொரூபத்தின் அஞ்ஞானத்தால் ஈண்டுச் சமுசாரித்தன்மையாம் உண்மையிலின்று எனக் கூறியருளினும் அச்சொரூபாஞ்ஞானம் இவ்வுலகத்தி லெக்காரணத்தாலாம்? என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் தமது சொரூபாஞ்ஞானத்திற்குக் காரணங் கூறியருளுகின்றார்.

சு-ம். த்ரிபி₃ர்கு₃ணமயை₃ர்பா₄வை₃ரேபி₄꞉ ஸர்வமித₃ம் ஜக₃த் ।
மோஹிதம் நாபி₄ஜானாதி மாமேப்₄ய꞉ பரமவ்யயம் ॥ (13)

ப-ம். 3 த்ரிபி₄꞉ 2 கு₃ணமயை₃꞉ 4 பா₄வை₃꞉ 1 ஸர்வம் 6 இத₃ம் 5 ஜக₃த் 7 ஜக₃த்
8 மோஹிதம் 13 ந 14 அபி₄ஜானாதி 12 மாம் 9 ஸர்வை₃꞉ 10 பரம் 11 அவ்யயம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! முற்கூறிய குணமயமான மூவகைப்பாவங்களால் இவ்வுலகனைத்தும் மோகிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலின், இக்குணமய பாவங்களினின்றும் பரமாகவும் அவிக்கிரியமாகவுமுள்ள பரமேசுரனாகிய என்னை யுணருவதில்லை. (13)

(வி-ம்) ஹே அர்ச்சுன! முற்கூறிய முக்குணங்களின் விகாரவடிவ மூவகைப் பாவபதார்த்தங்களானே இப்பிராணிகளனைத்தும் மோகிக்கப்பட்டன அதாவது நித்தியாநித்தியப் பொருள்களின் விவேகத்திற் கயோக்கியத்தன்மையையடைந்தன. இதனானே பரமான்மாவாகிய என்னை யுணருவதில்லை. பரமேசுரனாகிய நான் இம்மூவகைப் பாவங்களினும் பரன், அதாவது எல்லாப் பாவகற்பனைகட்கும் அதிஷ்டானரூபன். அப்பாவப்பொருள்களினும் மிக விலட்சணமானவன் என்பதில் ஏது கர்ப்பவிசேடணமருளுகின்றார். 'அவ்யயம்' என அதாவது சோகாற்ற முதலிய சர்வ விகாரங்களுமற்றவன், இக்காணப்படு மூலகற்றவன், ஆனந்தகனன், தன் பேரொளியாலொளிர்பவன், சர்வப் பிராணிகளின் ஆன்மாவடிவன், அவ்வணம் மிகச் சமீபித்திருக்கினும் என்னை யறிந்திலர்; பிரத்தியக்கபின்னப் பரமேசுரனுய என்னை யறியாமையினானே இவர்கள் மறித்தும் மறித்தும் பிறப்பிறப்பையடைகின்றார்கள். ஆதலின், இவ்வவிவேகிகட்கு மிகவும் பாக்கியமில்லை. அந்தோ, ஆண்டு முக்குணபாவத்தால் இவர்கள் மோகமடைந்ததன்மை பிறராலினுங் கூறப்பட்டுளது.

ஆ-சு தை₃வீ ஹ்யேஷா கு₃ணமயீ மம மாயா து₃ரத்யயா ।
மாமேவ யே ப்ரபத்₃யந்தே மாயாமேதாம் தரந்தி தே ॥

(பொ-ள்.) அற்பப் பிரயத்தனத்தால் அகற்றமுடியாத உபஸ்தமும் ஜிஹ்வேந்திரியமுமே பிரமன்முதற்கொண்டு மசகமீறாயுள்ள இவ்வுலகனைத்தையும் நாசஞ்செய்தன இது மிகவற்புதம். தத்தம் விடயங்களிற்சென்ற நேத்திராதிய இந்திரியங்களனைத்தும் இவனது துக்கத்திற்கே காரணங்களாயினும் அவ்வனைத்துள்ளும் உபஸ்தம் ஜிஹ்வை இரண்டுமே மிகப் பிரபலங்களாகலின் அவைகளே ஈண்டுக் கொள்ளப்பட்டன. (13)

(அ-கை.) ஹே பகவன்! முற்கூறிய அநாதியாகிய மாயையின் முக்குணத்தால் சம்பந்தப்பட்ட இவ்வுலகங்களனைத்தும் சுவதந்திரமின்மையின் முக்குணவடிவமாயையை நிவிருத்திக்கவலியிலையாதலின் ஒருபோதும் அம்மாயா நிவிருத்தியுண்டாகாதாம் என்னை? உண்மைப்பொருளை யுணருமாற்றலின்மைக்குக் காரணமாகிய அம்முக்குணவடிவ மாயை சநாதனமாம் என்னு மர்ச்சுனன் சங்கைக்கு, அன்னிய வுபாயத்தால் அம்மாயை அகற்றுணுதேனும் பகவத்திருவடியொன்று

னே அடையப்பெற்ற தத்துவஞானத்தால் நிவிருத்தியாம் என ஸ்ரீ பகவான் உத்தரமருளுகின்றார்.

சு-ம். ஸெஷீ ஹ்ருஷா மூணஸயீ ஸ ஸாயா ஊர்ஜயா !
ஸாஸெவ யெ வ்ரவஸ்ருஜெ ஸாயாஸெதாம் தரஜ்ஜிதெ ॥ (14)

ப-ம். 5 ஸெஷீ 4 ஹி 2 ஹ்ருஷா 3 மூணஸயீ 1 ஸ 6 ஸாயா 7 ஊர்ஜயா 9 ஸாம் 10 ஹ்ரவ 8 யெ 11 வ்ரவஸ்ருஜெ 14 ஸாயாம் 13 ஹ்ரதாம் 15 தரஜ்ஜி 12 தெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன ! பரமேசுரனுகிய எனது இச்சத்துவாதிகுணவடிவ விளக்கமான தெய்வீக மாயை கடக்கொணாதது என்னைச் சாட்சாத்கரித்தவனே இம்மாயையைக் கடப்பான். (14)

(வி-ம்.) ஹே அர்ச்சுன ! 'ஏகோதேவ சர்வ பூதேஷு கூடஃ' என்பது முதலிய சுருதியாற் கூறப்பட்ட சுவப்பிரகாச சைதன்யானந்தவடிவ சிவசுர பேதமிலாத சுத்த தேவனை யாசிரயித்து விஷயம்பண்ணுவதாகிய மாயை தெய்வீகமாம்; அதாவது, இருளானது வீட்டைத் தழுவிநின்று அதையே மறைப்பது போல இம்மாயையும் சுத்த சைதன்யதேவனைத் தழுவிநின்றவனையே விஷயம் பண்ணுகின்றது. இத்தன்மையதாதலின் தெய்வீக மாயை யெனப்படுகின்றது. பிறநூலிலும் இஃதறையப்பட்டுளது.

ஆ-சு. சூர்ஜயகு விஷயகு ஹாமி நீ நிவி-ருஹாம ஜீதிஸெவ கெவரா !
வஜ்ரவ-ருஷிஜ தரஹொஹி வர்ஜிஸொ நாரா யொஹ்வதி நா விமொஹாஃ ॥

(பொ-ள்.) சிவசுபேதமற்ற கேவலசைதன்யமே அநாதிசித்த அஞ்ஞான சிரயத்தன்மையையும், விஷயத்தன்மையையும் பொருந்துகின்றது. அநாதியாகிய அஞ்ஞானத்திற்கு அதன்பினுண்டாகிய வொருபொருளும் ஆசிரயமும் விஷயமுமாகாதாதலின் என்க. அத்தெய்வீக மாயை என்னையாணைர்ந்திலன் என்னுஞ் சாட்சிவடிவப் பிரத்தியட்சத்தாற் பெறப்படுகின்றதாதலின் தள்ளொணாததாம். அன்றியும், கணப்பிராந்தி முதலியவைகளின் மேலேராற்றாற் பொருந்தாமை வடிவ அருத்தாபத்திப் பிரமாணத்தானும் பெறப்படும். இம்மாயையின் பிரசித்தியை ஏஷா, ஹி என்னு மிரண்டு சத்தங்களானுங் கூறியருளினர். ஆண்டு, ஏஷா, என்னுஞ் சத்தத்தால் சாட்சிப் பிரத்தியட்சத்தாற் பெறப்படுந்தன்மையும் 'ஹி' என்னுஞ் சத்தத்தால் அருத்தாபத்தியாற் பெறப்படுந்தன்மையுங் கூறப்பட்டன. இம்மாயை குணமயமாம் அதாவது, சத்துவாதி முக்குணவடிவமாம் கருத்தாதுவாம் :— மும்மடங்குகொண்ட கயிறு மிக வலியானதால் புருஷபந்தனத்திற்குக் காரணமாவதுபோல மிக வலியுடையதாதலின் முக்குணவடிவமாயையும் ஜீவர்களின் பந்தனகாரணமாம். இவ்வர்த்தத்தைத் தெரிவித்தற்பொருட்டு ஸ்ரீ பகவான் மாயையைக் குணமயீ என விசேடித்தனர்; அத்தன்மைய பரமேசுரனுகிய எனது மாயை; அதாவது, சர்வ சகத்காரணனும் சர்வஞ்ஞனும் சர்வ சக்திமானும் மாயாவியுமாகிய பரமேசுரனுகிய எனக்கு வீட்டிலுள்ளவனுக்கு வீடு முதலியனபோல என தென்பதற்கு விஷயமாகிய மாயை எனததீனமானதால் இவ்வுலகின் தோற்றமாதியை நிருவகிப்பதாம் தத்துவவத்துவை விளங்காதபடி மறைத்து அதத்துவவத்துவை விளக்குவதற்குக் காரணமாகிய ஆவரண விட்சேப சத்திகளையுடைய அஞ்ஞானவடிவமாம், சர்வ சகத்தின் பிரகிருதிவடிவமாம். 'ஸாயாஜ வ்ரகூதிம் வித்யாந்நாயிநஜ ஸெஹ்வரம்' மாயை உலகோபாதானகாரணமெனவும் அம்மாயையுடையோன் மகேசுரன் எனவும் ஆம் ஈண்டிப் பிரக்கிரியையாம்: சிவசுபேதமற்ற சுத்த சைதன்யத்தில் அத்தியஸ்தமாகிய அனுதி மாயாவடிவ அவித்தை சத்

திவகுணப் பிரதானமானதால் மிக ஸ்வச்சமாம், மிகத் தூய்மையான கண்ணுடி முகாபாசத்தைக் கவருமாபோல அதுவும் சேதனுபாசத்தைக் கவருகின்றது. ஆண்டுக் கண்ணுடிவடிவ வுபாதியின் கருமைமுதலிய தோஷங்கள் முகவடிவப் பிம்பத்தைப் பற்றுதனபோல அவித்தைவடிவ வுபாதியின் தோஷத்தோடு பற்றுருமையின் பரமேசுரன் விம்பனுவன். கண்ணுடியிலுள்ள பிரதிவிம்பம் கர்ப்பணத்தின் கருமைமுதலிய தோஷங்களோடு சம்பந்தப்படுவதுபோல அவித்தியோபாதியின் தோஷத்தோடு பற்றுற்றமையின் ஸீவான்மாப் பிரதிவிம்பமாம். ஆண்டு, விம்பவடிவ ஈசுரன் வாணுதி முறைப்படி தேகாதிக் கூட்டங்களையும் அவைகளின் தோக்கியவடிவ உலகனைத்தையும் ஜீவதோகப்பொருட்டு உண்டாக்கினன் எனக் கற்பிக்கப்படுகின்றது. ஆண்டு, விம்பப் பிரதிவிம்ப மிரண்டிலும் சுத்தமுகம் அநுகதமாய் நிற்பதுபோலச் ஸீவசர்களிடத்தும் அநுகதமாகிய மாயோபகித சைதன்யம் சாட்சியெனப்படும். அந்தச் சாட்சியால் தனதிடத்து அத்திபஸ்தயான மாயை அதன் காரியவடிவ உலகங்களனைத்தும் விளக்கப்பட்டனவாதலின், அதன் கருத்தைக் கொண்டே ஸ்ரீ பகவான் மாயையை தெய்வீகமாயையெனக் கூறியருளினர். விம்பவடிவ ஈசுராபிப்பிராயத்தால் எனதுமாயையெனக் கூறியருளினர். ஓவித்தையிற் பிரதிவிம்பவடிவ ஸீவனென்ற யாமாயினும் அதனிடத்துள்ள அந்தக்கரண சமஸ்காரம் வெவ்வேறுதலின், அதை யுபாதியாகவுடைய ஸீவனும் இக்கீதையிலும் சுருதியிலும் பின்னமாய்க் கூறப்பட்டது. அவற்றுள், இந்நூலின்கண் 'மாம்யே பிரபத்யந்தே, துஷ்கிருதினோமூடாஃ நப்பிரபத்யந்தே சதுர்விதாபஜந்தேமாம்' என்பனமுதலியவாக்கியங்களால் கூறப்பட்டிருக்கிறது. சுருதியில், 'தஷ்யாயொஷவா நாம வ்ருக்ஷஸ்தமுபாஸ்தே ஸ வனவதஷ்வவதயா ஸ்ரீணாம் தயாஷ்வவாஷ்யாணாம்' என்பதுமுதலிய வாக்கியங்களாற் கூறப்பட்டிருக்கிறது. அவ்வந்தக்கரண வுபாதியோடதங்களை விசாரிபாமலோ ஸீவத்தன்மைக்குக் காரணமாகிய அவித்தியோபாதி ஒன்றுனதால் ஸீவனுமொன்றென்றே; இக்கீதையிலுஞ் சுருதியிலுங் கூறப்பட்டிருக்கிறது. கீதையில், 'க்ஷேத்ரக்ஞஞ்சாபிமாம்வித்தி சர்வ க்ஷேத்ரேஷ்வபாரத, 'பிரகிருதிம்புருஷம்சைவ வித்யனாதி உபாவபி, மமைவாம்ஸோ ஜீவலோக ஜீவபூதஃ சநாதனஃ' என்பனமுதலிய வாக்கியங்களாலும் சுருதியில்,

ஆ-சு. ப்ரஹவா உஷஉர சுவஸ்தஷாதாநஸேவ வெஷாஹம் ப்ரஹாஸ்மீதி தஷ்வா ஷவ-ஃ உஹவக்ஷ வகெவெஷவஃ ஸவ-ஃ ஹ்யெதஷ்ரை மஷ்யஃ சுவெநஜீவெநாதநா ந ப்ரவிஸ்ய வாயுர்ப்ரஸாதஹாமஸ்ய ஸாதயாகஷ்டிதஸ்ய ஹாமொஜீவஃ ஸவிஜ்ஞயஃ ஸஆநந்தயாய கல்பதெ ॥

என்பதுமுதலிய வாக்கியங்களாலுங்கூறப்பட்டிருக்கிறது. கண்ணுடியிலுள்ள சைதந்நானது பிரதிவிம்பம் தன்னையும் பிறரையுமுணராது; என்னை? சடசேதனக்கூட்டவடிவச் சைதந்நானது சரீரவடிவ அசேதனம்சமே அதிற் பிரதிவிம்பித்தது சேதனம்சமன்று. ஆதலின், அது தன்னையும் பிறரையுமறிவதன்று அங்ஙனமாயினும் அவித்தையிலுள்ள சேதனப்பிரதிவிம்பம் சேதனவடிவமாதலின், தன்னையும் பிறரையுமுணர்கின்றது. என்னை? பிரதிவிம்பபக்ஷத்தில் அது மித்தையன்று. மற்றோர், அவ்விம்ப சைதன்யத்தில் உபாதியிலிருக்குந் தன்மைமாத்திரமே கற்பிதமாம். ஆபாசபக்ஷத்தில் அச்சிதாபாசன் கிளிஞ்சில் வெள்ளிபோல அநிருவசனமாய்த் தோற்றுவதாயினும் கடமுதலியவைகளினும் விலட்சணமாதலின், தன் உணர்வும் பிறருணர்வுமுண்டாம். அச்சிதாபாசன் தன்னைப் பரமேசுரவடிவ விம்பத்தோடொன்றுயுணருமவரையினும் சலத்திலுள்ள சூரியன் சலத்தின் சலனமுதலியவிகாரங்களை அடைவதுபோல அப் பிரதிவிம்பவடிவ ஸீவனும் அவித்தியோபாதியின் ஆயிரவிகாரங்களையடைவன் இவ்வர்த்தமனைத்தையும் அருளுகின்றார்.

'ஸஸாயாஉ ரதயா ஊதி' விப்பவடிவப் பரமேசுரனது எகத்துவ சாகூாத்கார மின்றி என்னுடையமாயை கடக்கொணாதது ஆதலின் கடக்கப்படாததாம் இது சுருதியிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. யஉாஅஃ வஉாகாமம் வெஷ்டயிஷ்யந்தி ஸாதவாஃ।
தஉாஉெவஉ விஜ்ஞாய உ ஃவஷ்யாஞ்ஞொஹ விஷ்யதி ॥

(போ-ள்.) ஒருவன், வாணத்தேர்ப்பால் வளையச்செய்வனேல் நான் பிரஹ்ம மென்னும் பரமான்ம ஞானமின்றி அவித்தியா துக்கங்களனைத்தையும் நாசமாக்குவன். கருத்துவாம்:—அவயவமிலாத ஆகாசத்தைச் சுருட்டுதற்கேலாததுபோலப் பிரஹ்ம சாகூாத்காரமின்றி அவித்தியாதுக்கத்தைக் கெடுத்தலுமேலாதாம் என்க. இதனாலே அச்சீவன் அந்தக்காரணவச் சின்னனுதலின் அந்தக்காரணத்திற் சம்பந்தப்படு பொருளேய நேத்திராதி இந்திரியவாயிலாய் விளக்கி அற்பஞ்ஞனனப்படுகிறான், இதனாலே அவன் நான் அறிகின்றேன், செய்கின்றேன், உண்கின்றேன் என்பனமுதலிய அத்தியாசவடிவ ஆயிரந் துக்கத்திற்குப் பாத்திரனுவன். பிரதிவிம்பவடிவ சீவன் தனது விம்பவடிவ ஈசுரனை ஆராதிக்குங்கால்; அதாவது அனந்த சத்திகளையுடையவன் அவித்தைவடிவ மாயையின் நியந்தா, உலகனைத்தும் முணர்பவன் புண்ணியாபுண்ணிய கருமபலனைக் கொடுப்பவன் பரிபூரண ஆனந்தகன மூர்த்தி அன்பர்களைக் கரையேற்றுதற்பொருட்டு அநேகாவதாரமெடுத்தவன் எல்லாவற்றின் குரு என்னும் விம்பனாகிய ஈசுரனுக்குப் பிரதிவிம்பவடிவ சீவன் சர்வ கருமங்களையுஞ் சமர்ப்பித்து ஆராதனைபண்ணுங்கால் விம்பத்தேதற்றியகுணம் பிரதிவிம்பத்துக்கானதால் இச்சீவன் சர்வ புருஷார்த்தத்தையு மடைகின்றான். இது பிரகலாதராலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. நெவாதஃ வ்ரஹ்மாயம் நிஜயாஹ வ்யணொஃ
ஸாநம் ஜநாஉவிஉஷஃ கரணொ வ்ரணீதெ।
யஉஜ்ஜநொ ஹமவதெவிஉ யீதஸாநம்
தஉாதநெ வ்ரதிஉவஸ்ய யயாஉவஸ்ரீஃ ॥

(போ-ள்.) கண்ணுடியிற் பிரதிவிம்பித்தமுகத்தில் திலகமுதலிய அலங்காரத்தை யபேட்சிக்கில் விம்பபூதமாகிய முகத்தில் திலகமுதலிய குறிகளையிடல்வேண்டும். அவைகள்தாமே இதிற்றோன்றும் விம்பத்தில் திலகமிடன் முதலிய உபாயந்தவிர்த்துப் பிரதிவிம்பத்தில் திலகமுதலியவைகளை அடைவிப்பதற்கோருபாயமுமின்றும்; அதுபோல விம்பபூத ஈசுரனிடத்துச் சமர்ப்பித்த தருமமுதலிய புருடார்த்தங்களேயே பிரதிவிம்பவடிவ ஜீவனடைவன்; அஃதொழித்து மற்றொன்றுனும் இவன் அதையடையான். இவ்வாறு சர்வ பரிபூரணமாகிய வாசுதேவனை ஆராதிக்கும் அதிகாரியினது அந்தக்காரணம், ஞானப் பிரதிபந்தகமாகிய பாபங்களிலாதொழிந்து ஞானத்திற் கநுகூலமாகிய புண்ணியத்தேதாடு கூடுங்கால் மிகத் தூய்தான சுண்ணுடியில் முகம் விளக்கமாய்த்தோற்றுவதுபோலச் சர்வ கருமத்தியாக சமதமாதிபூர்வகம் பிரஹ்மவேத்தாவாகிய குருவையடைந்துசெய்த சிரவணாதிகளால் மிகத் தூய்மையாகிய. அதன்கண் நான் பிரஹ்மசாரூபம் என்னும் சாகூாத்காரவிருத்தி யுண்டாகின்றது. பிரஹ்மவேத்தாக் குரு வுபதேசித்த தத்துவமசி என்னும் வேதாந்தவாக்கியத்தா லுண்டான்றும் அனன்மாகாரமற்றதும் சுத்த சைதன்யாகாரமானதுமாகிய சாகூாத்காரவிருத்தியில் பிரதிபலித்த சைதன்யம் அக்காலத்திலே தனதாசிரய விடயக அவித்தையை நாசஞ்செய்கின்றது. விளக்குண்டானகாலத்திலே இருளொழிவதுபோல அவ்வவித்தை நாசத்தின்பின்னர் அவ்விருத்திசகித, சர்வ காரியப் பிரபஞ்சங்களு நாசமாகின்றன என்னே, உபாதான

காரண நாசத்தின்பின்னர் உபாதேயகாரிய நாசத்தைச் சர்வ நூலாரும் உடன்பட்டனர்களாதலின், இவ்வர்த்தமனேத்தையும் ஸ்ரீபகவானருளுகின்றார், 'ஸாதெவெயெவ்ரவஉயஞ்ஜொஸாயாஜெதாம் தரஜ்திதெ' ஆண்டு, 'ஆத்மா இத்யேவோபாஸித, ததாத்மானமேவாவேத், தமேவதீராவிக்ஞாய; தமேவவிதித்வா' என்பன முதலிய வாக்கியங்களிலுள்ள ஏவகாரசத்தமானது பிரத்யக்கபின்னப் பிரஹ்மத்தில் சர்வோபாதி ரகிதத்தன்மையை விளக்குமாறுபோல 'மாமேவபிரபத்யந்தே' என்னுமிக் கீதைவாக்கியத்திலுள்ள ஏவகாரமும் பிரத்யக்கபின்னப் பிரஹ்மத்தில் சர்வோபாதி ரகிதத்தன்மையை அறிவுறுத்துகின்றது அதாவது, தூலசூட்சும காரணவடிவமாகிய சர்வோபாதிகளுமின்றிய சச்சிதானந்தாகண்ட அத்துவிதீயவடிவப் பரமான்மாவாகிய என்னை எவ்வதிகாரியானவன் சாக்ஷாத்காரிக்கின்றானோ அவனே அவ்வவித்தைவடிவ மாயையை நாசமாக்குகின்றான். கருத்து:—தத்துவமசிமுதலிய வேதாந்தவாக்கிய சன்னிபமாயும் நிருவிகற்ப சாக்ஷாத்காரவடிவமாயும் சொல்லத்தகாத சுத்த சித்தாகாரத்துவ தருமத்தோடு கூடியதாயும் சர்வசுகிருதபலமாயும் நிதித்தியாசனத்தின் பரிபாகத்தாற் றோன்றியதாயும், சர்வகாரியசகித அஞ்ஞானத்திற்கு விரோதியாயுமுள்ள சாக்ஷாத்காரவிருத்தியால் தத்பதார்த்தவடிவப் பரமான்மாவாகிய என்னைத் தனது சொரூபமாய்ச் சாக்ஷாத்கரிக்கும் அதிகாரியே எனதவித்தைவடிவ மாயையை ஆயாசமின்றி நாசம்பண்ணுகின்றான்; அம்மாயை நான் பிரஹ்மசொரூபம் என்னும் எனது சாட்சாத்காரத்தையொழித்து வேறு பல வுபாயங்களாலும் நாசஞ்செய்யொணாது சர்வாணர்த்தங்கட்கும் சென்மபூமியாம்; அதை எனது சாக்ஷாத்காரத்தால் அவ்வதிகாரி ஆயாசமின்றி நாசஞ்செய்கின்றான். அதாவது, சர்வோபாதிகளையும்விடுத்து அவன் சச்சிதானந்தகனப் பரமான்மசொரூபமாய் நிலைக்கின்றான்; அப்பிரஹ்மதேவத்தாப்புருஷனுக்கு ஒருவரும் பிரதிபந்தகம்பண்ணமுடியாது.

ஆ-சு. தஸ்யாஹ தெவாஹ்யாஹமோதயா ஂஸ்ஂஸ்ருதி க்ஷூதாஹெயஷாஂலெ ஹவதி ॥

(போ-ள்.) அப்பிரஹ்மதேவத்தாப்புருஷனை யடைக்குவதற்கு இந்திராதிதேவர்கட்கும் வலியில்லை, அவன் சர்வதேவதைகளின் ஆன்மசொரூபமாதலின் என்க. ஆண்டு, யெ-தெ-என ஸ்ரீபகவானுலருளின வெகுவசனமிரண்டும் தைதேகந்திரியாதி பேதத்தாற் கற்பிக்கப்பட்ட ஆன்மபேதப் பிராந்தியை யறுவாதம்பண்ணுகின்றன. உண்மையாய் ஆன்மபேதத்தை அறிவுறுத்துவனவன்று; அன்றியும், 'மாமேவயே பிரபத்யந்தே' என்னும் வாக்கியங் கூறும்விடத்தில் 'மாமேவயே பிரபத்யந்தி' என்னுஞ் சாக்ஷாத்கார வாசகவாக்கியமே ஸ்ரீபகவானுல் கூறியருளத்தக்கது என்னை? சாக்ஷாத்காரத்தானே அம்மாயை நிவிருத்தியாகின்றது. கருமோபாசனைகளாலன்றும்; அவ்வாக்கியத்தை யருளாதொழித்து 'மாமேவயேபிரபத்யந்தே' என்னும் வாக்கியத்தை அருளினதால் இப்பொருளைக் குறிப்பித்தருளினர். பரமேசுரனுகிய எனது சரணமொன்றையேயடைந்து பரமானந்தகனப் பரிபூரண வாசுதேவனுகிய என்னையே சிந்தித்து நாட்கழிக்கும் அதிகாரி எனது பிரியத்தாலுண்டாகிய பேரானந்தக்கடலில் மூழ்கினவனுதலின் எனது மாயையின் சர்வகுணங்களாலும் அமிழ்த்தப்படான். மற்றோர், மாறுய் அம்மாயை இப்பகவத் சரணாகத புருஷன் எனது விலாசவிளைதத்தில் குசலனுகாமையின் என்னைக் கெடுத்தற்கு வலியுளான் எனச் சிந்தித்து அப்பக்தனைவிட்டுத் தானே விலகுகின்றது. சூசோதமுடைய தபஸியிடத்தினின்றுங் காமமாது நிவிருத்தியாவதுபோலும் ஆதலின் இவ்வதிகாரி எனது மாயையைக் கடத்தற்பொருட்டுப் பரிபூரண பரமான்ம வாசுதேவபகவானுகிய என்னை நிரந்தரந் தியானிக்குக. (14)

(அ-கை.) ஹே பகவன்! இவ்வணம் பரமேசுரனுகிய தங்கள் சரணாகதமாய்த் தங்களையே நிரந்தரந் தியானித்தலால் அம்மாயை நிவிருத்தியாமெனின் சர்வா

னர்த்த காரணமாகிய இம்மாயையை நீக்குதற்பொருட்டு எல்லாமனுஷரும் தங்கள் சரணகதியை அடையாததென்ன, என்னு மர்ச்சுனன் சங்கைக்குப் பல பிறப்பிற் றேறடிய பாபவடிவப் பிரதிபந்தகத்தால் அனைவரும் எனது சரணத்தை யடைந்திலர் என உத்தரமருளுகின்றார்.

சு-ம். நரா உஷ்ஷ்ரதிரா உமயாஃ வ்ரவஉயஞ்ஜெ நராயஸாஃ।
ஸாயயாவஹ்ரு தஜ்ஞாநா சூஹுஸ்ரம் ஹாவஸாஶ்ரிதாஃ॥ (15)

ப-ம். 10 ந 9 ஸா 1 உஷ்ஷ்ரதிநஃ 2 உமயாஃ 11 வ்ரவஉயஞ்ஜெ 3 நராயஸாஃ 4 ஸாய யா 5 சுவஹ்ரு தஜ்ஞாநாஃ 6 சூஹுஸ்ரம் 7 ஹாவம் 8 சூஶ்ரிதாஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பாபகருமமுடையவனும், மூடனும், நராதமனும், மாயையால் ஞானம் நிவிருத்திக்கப்பட்டவனும், இடம்பமுதலிய அசுரபாவத்தை யடைந்தவனுமாகிய அவன் பாமேசுரனாகிய என்னைப் பஜனைபண்ணான். (15)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சந்ததம் பாவகருமத்தோடுகூடிய பாவியானவன் யாவருள்ளும் அதமனவன்; அதாவது, அவன் ஈண்டோ மேலோராலிகழப்படு வன், ஆண்டோ ஆயிரமனர்த்தத்தையடைவன்.

சங்கை:—ஹே பகவன்! அவன் அநர்த்தத்தையடைவிக்கும் பாவத்தையே எப்போதும் என் செய்கின்றனன்?

சமாதானம்:—ஹே அர்ச்சுன! 'உமயாஃ' மூடனைதலின், அதாவது இக்காரியம் எனதர்த்தசாதனம், இக்காரியம் என தனர்த்தசாதனம் என்னும் இஷ்ட அநிஷ்ட விவேகமற்றவனைதலின், எப்போதும் பாவத்தையேசெய்வன்.

சங்கை:—ஹே பகவன்! நூற் பிரமாணமிருப்ப அவன் அவ்விவேகத்தை என் செய்திலன்?

சமாதானம்:—ஹே அர்ச்சுன! 'ஸாயயாவஹ்ரு தஜ்ஞாநாஃ', உடற்பொறிக் கூட்டத்தே தாதான்மிய மயல்வடிவத்தாற் பரிணமத்தையுற்ற மாயையால் கட்டுப் பட்டது; விவேகமாற்று மாற்றல்வடிவ உணர்ச்சி யாவனுக்கோ அவன் மாயயாப ஹ்ருதஞானனவன். அவன் அத்தகையனைதலின், காரியாகாரிய விவேகமாற்றி லன். இதனாலே, 'உம்ஹோஉவொ-ஹிஸாநஸ்ய க்ரோயஃ வாரணஷ்யேவ' என் பதுமுதலிய வசனங்களால் மேற்கூறப்பெறும் கொலை களவு முதலிய ஆசுர சுபா வத்தையே பற்றுநிற்பன். இவ்வண்ணம் என்னைச் சாக்ஷாத்கரிக்கத் தகுதியற்ற துட்டன் என்னைப் பணிந்திலனைதலின் அவனது துர்ப்பாக்கியம் யாவரும் வியக்கத் தக்கதேயாம். ஒருரையின்கண்ணோ இச்சுலோகத்திற்கு இப்பொருள் இயம்பப் பட்டுளது:—அவன் துட்டனைதலின் மனத்தூய்மையற்ற மூடனவன். அதாவது, ஆன்மாவுண்மை விவேகமற்றவன் அதனாலே அவன் மநுடர்களுக்கு ளதமன் அத் தன்மைய துஷ்கிருதியாகிய அதமன் என்னைப் பஜனைபண்ணான்; அவன் எதனால் துஷ்கிருதியெனின் அருளுகின்றார். 'ஸாயயாவ ஹ்ரு தஜ்ஞாநாஃ உதி', அவித்தை வடிவ மாயையால் அவனது அகண்டசைதன்யப் பிரஹ்மஞானம் மறைக்கப்பட்ட தால் அவன் துஷ்கிருதியாயினன், இத்துணையும் மாயையின் ஆவரணசத்தி கூறப் பட்டது. மறித்துமவனெத்தன்மையனெனின் ஆசுரபாவத்தைப்பற்றியவன் அதா வது தேஹேகந்த்ரியாதி சங்காதங்களே ஆன்மாவாதலின் அச்சங்காதத்தையே எல் லாவித்தத்தானும் திருப்திபண்ணவேண்டும் என்னும் அசுரவிசாசனனது உள்ள க்கருத்தே ஆசுரபாவமாம், அத்தன்மைய ஆசுரபாவத்தையடைந்தவன் இத்துணை யும் மாயையின் விக்ஷேபசத்தி கூறப்பட்டது. இதனாலிப்பொருள் பெறப்பட்

டது :—இந்த மாயையானது தனது சொரூபானந்தத்தை மறைத்துத் தேகத்தி லுண்டாக்கிய ஆன்மபுத்திப் பிராந்தியால் அதைப் புஷ்டிசெய்தற்பொருட்டு அவன் பலவித துஷ்கிருதிபைச்செய்கின்றன், அப்பாபகருமத்தால் மூடனாய் மநுஷர்க்கு ளதமனுய்ப் பரமேசுரனுகிய என்னை அவன் பஜனபண்ணுகின்றிலன் ; ஆதலின், இவ்வவித்தைவடிவ மாயையே சர்வானர்த்தத்திற்குங் காரணமாமென்க.

(அ-கை.) அல்லது, அவ்வாசுரபாவத்தையடையாது, சர்வதா புண்ணிய கருமமும் இஷ்டாநிஷ்டவஸ்து விவேகமுமுடையவர்கள் புண்ணியத்தின் நியூ ஞதிகத்தன்மையால் நால்வகையாய் என்னைப் பஜனபண்ணுகின்றார்கள். அவர்கள் நிரமமாய்க் காமமற்றவர்களாய்ப் பரமேசுரனுகிய எனது பிரசாதத்தால் அம்மாயை யைக் கடக்கின்றார்கள் என்னுமர்த்தத்தை ஸ்ரீ பகவானிப்போ தருளுகின்றார்.

சு-ம். அதவிஷயா ஹஜந்தே ஜநாஸ்சதுர்விதாபாரத ।
ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்தார்தீ ஜ்ஞானீ ச பரதர்ஷபஹ ॥ (16)

ப-ம். 8 அதவிஷயாஃ 12 ஹஜந்தே 11 ஜநாஃ 9 சதுர்விதாஃ 2 பாபாபாரத 3 ஆர்தாஃ 4 ஜிஜ்ஞாஸுஃ 5 அர்தார்தீ 7 ஜ்ஞானீ 6 ச 1 பரதர்ஷபஹ.

(அ-ம்.) ஹே பரதவம்சசிரேஷ்டனுகிய அர்ச்சுன ! ஆர்த்தன், சிஜ்ஞாசு, அர்த்தார்த்தி, ஞானி என்னும் இந்நால்வகையான சுகிருதிஜனங்கள் பரமேசுரனு கிய என்னைப் பஜனபண்ணுகின்றார்கள். (16)

(வி-ம்.) ஹே அர்ச்சுன ! சுகிருதிகள், அதாவது முற் பல பிறப்புக்களில் புண்ணியத்தைத் தேடினவர்கள் சபலமென்பார்கள். அவர்களின் அபலார்கள் பய னிலாப் பிறப்புளார்கள் அத்தன்மையர்களே பரமேசுரனுகிய என்னைப் பஜன (ஆராதன) பண்ணுகின்றார்கள். அவர்களும் ஆர்த்தன், சிஜ்ஞாசு, அர்த்தார்த்தி, ஞானி என்னும் பேதத்தால் நான்குவகைப்படுவார்கள். அவர்களுள், ஆர்த்தன் முதலிய மூவரும் சகாமர்களாவார்கள் ; ஞானியொருவனே நிட்காமனுவன். ஆண்டுச் சத்துரு வியாக்கிரமுதலிய வடிவ ஆபத்து ஆர்த்தியாம் அதனுல் கிரஸ்தப் பட்டவன் ஆர்த்தனுவன், அத்தன்மைய ஜனங்கள் அவ்வாபத்துவடிவ ஆர்த்தியை நீக்குதற்பொருட்டுப் பரமேசுரனுகிய என்னை ஆராதிக்கின்றார்கள். எஞ்ஞபங்கத் தால் குரோதமடைந்த இந்திரன் இடைச்சேரியில் மிகு விருஷ்டிபெய்வித்ததால் துக்கமடைந்த இடைச்சேரியிலுள்ள ஜனங்களும், சராசந்த ராஜாவின துகாரா கிரகத்தையடைந்து ஆர்த்தர்களான ராஜாக்கள் அனைவரும், துரியோதனனவை யில் துகிலுரிந்ததால் ஆர்த்தையாகிய துரோபதையும், முதலே பிடித்துக்கொ ண்ட கஜேந்திரனும், மற்றும் பலரும், ஆர்த்தர்களாகிப் பரமேசுரனுகிய என்னை ஆராதித்ததுபோலாமென்க. சர்வதா ஆன்மஞானத்தையடைய விரும்புவோன் சிஜ்ஞாசுவாம். அவனும் அவ்வான்மஞானத்தை யடைதற்கு என்னை ஆராதிக் கின்றன் ; முசுகுந்தச் சக்கரவர்த்தி, ஜனகராஜா, உத்தவர் முதலியவர்போ லவாம் ; இரண்டுலகத்திலுமுள்ள பொன், பெண், புத்திரன் முதலிய போகசாத னங்கள் அர்த்தமாம் அதை இச்சிப்போன் அர்த்தார்த்தியாம் ; அவனும் அவ்வர் த்தத்தின்பொருட்டு என்னை யாராதிக்கின்றன் ; சுக்கிரீவன், விபீஷணன், உப மன்னியு முதலியவர்கள் இகலோக போகசாதனங்களை விரும்பியும் துருவன் முத லியோர்கள் பரலோக போகசாதனங்களை விரும்பியும் என்னை யாராதித்தார்கள். ஆண்டு, தத்துவதீவத்தாவானவன் மாயையைக் கடப்பதுபோல ஆர்த்தன்முதலிய மூவரும் என தாராதனத்தால் மாயையைக் கடக்கின்றார்கள். அவர்களுள் சிஜ்ஞா சுவோ, ஆன்ம ஞானேற்பத்தியால் நேரமாயையைக் கடக்கின்றன் ; மற்றிருவ ரும் சிஜ்ஞாசுக்களாகியே கடக்கின்றார்கள். இம்மூவர்களுக்குள்ளு மித்துணை

விசேடமாம்; ஆண்டு, ஆர்த்தனுக்கும் அர்த்தார்த்திக்கும் சிஞ்ஞாசுத்தன்மைபொருந்தும். சிஞ்ஞாசுவுக்கும், ஆர்த்தத்தன்மையும் ஆன்மஞானத்தின் சாதனவடிவ அர்த்தார்த்தித்தன்மையும் பொருந்தும். இதுபற்றியே ஸ்ரீ பகவான் ஆர்த்த அர்த்தார்த்திகட்கிடையில் சிஞ்ஞாசுவைக் கூறியருளினர். இத்துணையால் சகாமர்களாகிய ஆர்த்தன்முதலிய மூவருங் கூறப்பட்டார். நிஷ்காமனுகிய நான்காவது பக்தனைக் கூறியருளுகின்றார் ஞானீ என. ஆண்டு, சர்வ பரிபூரண அத்துவிதீய பரமான்மாவே நான் என்னும் பகவத்துண்மைவடிவத்தின் சாக்ஷாத்காரம் ஞானமாம். அதைதாடுகூடியவன் ஞானியாவன் அவன் அவ்வான்மஞானத்தால் எனது மாயையைக் கடந்தவன்; சர்வகாமமற்ற அத்தன்மையஞானியும் என்னை ஆராதிக்கின்றன். ஈண்டு, ஞானீ என்னும் வாக்கியத்திலுள்ள சகாரமானது யாராகினும் நிஷ்காமபக்தர்களுளரேல் ஞானிக்கு ளடங்குவரென் றுணர்த்தியருளற்பொருட்டாம்; நிஷ்காமப்பிரேமபக்தனும் ஞானிக்குளடங்குவனென்க. ஆதலின், ஐவகையாய்க் கூறத்தக்கதென்னும் குறைவுபாட்டுச் சங்கை கூடாதாம். அன்றியும், ஹே பரதர்ஷப என்னுஞ் சம்போதனத்தால் இப்பொருள் குறிப்பித்தருளப்பட்டது. அர்ச்சுனனுகிய நீ சிஞ்ஞாசுவேனும் ஞானியேனுமாகுவை; ஆதலின், நால்வருள் நான் யாரெனுஞ் சங்கையொழிப்பாய் என்பதாம்; ஆண்டு, சனகாதிகளும் நாரதரும், பிரகலாதரும், பிருதுராஜாவும், சுகதேவரும் நிஷ்காமஞானிகளாகிய பக்தர்களாவர்கள். நிஷ்காமசுத்தப் பிரேமபக்தர்களோ ஆயர்குலமாதர்கள், அக்குரூரன், யுதிஷ்டிரன் முதலியோர்களாவர்கள். அன்றியும், கம்சன், சிசுபாலன் முதலியோர்களோ பயத்தாலும், துவேஷத்தாலும், பகவத்சிந்தனையை நிரந்தரம் பண்ணினவர்களேனும் பக்தர்களெனப்படடார்கள்; அவர்கட்குப் பரமேசுரனிடத்தில் பகவத்பிரீதிவடிவ பக்தியின்மையின் என்க. (16)

(அ-கை.) ஆண்டுப் பூர்வசுலோகத்தில் நால்வகைப் பக்தர்களும் சுகிருதிகளெனக் கூறியருளப்பட்டனராதலின், ஸ்ரீ பகவானுக்கு அந்நால்வருஞ் சமமானவர்களோ என்பது கருத்தாம் என்னு மர்ச்சுனன் சங்கைக்கு நால்வரிடத்தும் சுகிருதித்தன்மை யுளதேனும் சுகிருதத்தின் மிகுதிப்பாட்டாலடைவுற்ற நிஷ்காமப் பிரேமை மிகுந்ததால் ஞானியே சர்வ சிரேஷ்டனுவன் என உத்தரமருளுகின்றார்.

சு-ம். தெஷாம் ஜ்ஞானீ நித்யயுக்த ஏகபக்திர்விஷ்யதே।
ப்ரியோஹி ஜ்ஞானினோத்யர்த மஹம்ஸ ச மமப்ரியஃ॥ (17)

ப-ம். 1 தெஷாம் 4 ஜ்ஞானீ 2 நித்யயுக்தஃ 3 ஏகபக்திஃ 5 விஷிஷ்யதே 10 ப்ரியஃ 6 ஹி 8 ஜ்ஞானினஃ 9 அத்யர்த்தம் 7 அஹம் 12 ஸஃ 11 ச 13 மம 14 ப்ரியஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அந்நால்வர்களுக்குள் நித்தியயுக்த ஒரு பக்தியுடைய ஞானி மேலாவன்; பரமேசுரனுகிய நான் அவனுக்கு மிகப் பிரியன், அவனும் எனக்கு மிகப் பிரியனுவன். (17)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஆர்த்தன் முதலிய நான்கன்பர்களுக்குள் சர்வபரிபூரண அத்துவிதீயப் பிரஹ்மமே நான் என்னுந் தத்துவஞானத்தையுடைய சர்வகாமமற்ற ஞானியானவன் எல்லாரினு முத்கிருஷ்டனுவன். அதில் அவனுக்கு இரண்டு ஏதுகர்ப்பவிசேடணமருளுகின்றார். 'நித்யயுக்தஃ ஏகபக்திஃ உதி', நித்தியயுக்தன் அதாவது சர்வ விசேஷாம்சங்களுமின்மையின் பிரத்தியக்கபின்னப் பரமான்மாவில் எப்போதுஞ் சமாகித சித்தமுடையவன்; அதலைவன் ஏகபக்தனுவன். அதாவது, ஓரே பிரத்தியக்கபின்னப் பரமான்மாவினிடத்தில் அநுரக்திவடிவப் பக்தியுடையோன் மற்றொன்றிலிலாதவனுவன். இவ்வாறு நித்தியயுக்த

ணனதானும் ஏகபக்தி யுடையனனதானும் அந்த ஞானி மிகச் சிரேஷ்டனுவன்; அவ்வேகபக்தியிற் காரணமருளுகின்றார். 'ப்ரியொஹி ஜ்ஞானினோத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:' அவனுக்கு நான் மிகப் பிரியனுதலின், அதாவது நிருபாதிகப்பிரீதிக்கு விஷயனுதலின். அவன் ஏகபக்தனுவன், இதனுலேன எனக்கவன் மிகப் பிரியன். என்னை, தனதான்மா மிகப் பிரியமாம் என்பது சுருதியினும் உலகத்தினும் மிக விளக்கமேயாம் என்க. ஒருவியாக்கியானத்திலோ இச்சுலோகத்திற் கிவ்வாறு பொருள்பண்ணப்பட்டது: அந்நால்வர்களுள் ஞானியே சிரேஷ்டனுவன்; அவன் நித்தியயுக்தனுதலின், அதாவது சர்வதா எனதாராதனையிலே யுக்தன். சகாமர்களாகிய ஆர்த்தன் முதலியோர்கள் காமம் பூரணமாகும்வரையிலுமே எனதாராதனையில் யுக்தர்கள்; பின்னரல்லர் ஆதலின், அவர்கள் நித்திய யுக்தர்களெனப்படார்கள். அங்ஙனமே ஞானியும் ஏகபக்தனுவன்; அதாவது பரமேசுரனுகிய என்னையே ஏகபாவனையாலாராதிப்பவன் மற்றவைகளை யாராதியாதவன். ஆர்த்தன் முதலியோர் அவ்வகையரல்லர்கள்; ஆண்டு சோகமடைந்த ஆர்த்தபுருடனே சூரியனையும், சிஞ்ஞாசுக்களோ சாசுவதியையும், அர்த்தார்த்திகள் குபேரன் முதலியோர்களையும் ஆராதிக்கின்றார்கள். இவ்வாறு ஆர்த்தன் முதலியோரிடத்தும் அவ்வக்காமப்பிராப்தியின் பொருட்டுப் பலவகைப்பக்திகள் பார்க்கப்படுகின்றன. ஞானியினது நித்தியயுக்தத்தன்மையிலும் ஏக பக்தித்தன்மையிலும் காரணமருளுகின்றார். 'ப்ரியொஹி ஜ்ஞானினோத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:' பரமேசுரனுகிய நான் அவனுக்கு மிகப்பிரியன். என்னை, நான் அவனதான்மவடிவமேயாவன். தனதான்மா நிருபாதிகப் பிரீதிவிடயமானதால் சர்வர்களுக்கும் பிரியமேயாம். கருத்துவாம்:—நிருபாதிகம், சோபாதிகம் எனப் பிரீதி இருவகைத்தாம். அவற்றுள், எப்பிரீதி எப்பொருளில் பிறவற்றின்பொருட்டாமோ, அது சோபாதிகமாம். தனதான்மசுகத்தின்பொருட்டுப் பெண் பொன்னுதிகளிலுள்ளதுபோலாம். எப்பிரீதி எப்பொருளில் பிறவற்றின் பொருட்டன்றே அது நிருபாதிகமாம். தனதான்மாவிலுள்ள பிரீதிபோலவாம்.

ஆ-சு. தஜ்ஜ்ஞானேயஃ வ்ருத்ரஜ்ஞானேயொ விதஜ்ஞானேயொ(அ)ஹ்ய ।
ஹ்ருத்³ஹ்யேவ-ஹ்ருத்³ஹ்யாஜ்ஞாஸ்ம யஜ்யஜ்ஞாத்³ ஜ்ஞானீ ॥

(போ-ள்.) புத்தி முதலிய சர்வ சங்காதங்களினும் அந்தாமாகிய இவ்வான்மா, புத்திரனிலும் தனத்திலும் வேறெயபொருளனைத்தினும் மிகப்பிரியமாம். அத்தன்மைய நிட்காமஞானியாகிய பக்தன் மிகவரியனுவன், எனதான்மசொரூபமாதலின் எனக்கு மிகப்பிரியனுவன் என்க. (17)

(அ-கை.) ஹே பகவன்! 'ஸ அஜ்ஞஜ்ஞேயஃ' என்னுங்கங்கள் வாக்கியத்தால் ஏகஞானியாகிய பக்தனே தங்கட்குப் பிரியனுவன். ஏனையரலர்கள் எனத்தோற்றுகின்றது என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு அவர்களும் பிரியர்களே. ஆனுலோ, அவர்கள் மிகப் பிரியர்களலர்கள். ஞானியாகிய பக்தன் எனதான்மவடிவமானதால் மிகப்பிரியன் என ஸ்ரீ பகவான் உத்தரமருளுகின்றார்.

சு-ம். உதா³ரா: ஸர்வ ஏவைதே ஜ்ஞானீ த்வாத்மைவ மே மதம் ।
ஸ்தி²தஃ ஸ ஹி யுக்தாத்மா மாமேவானுத்தமாம் க³திம் ॥

ப-ம். 3 உதா³ரா: 2 ஸர்வ ஏவ 4 ஏவ 1 ஏதே 6 ஜ்ஞானி 5 து 7 ஆத்மா 8 ஏவ 9 மே 10 மதம் 18 ஸ்தி²தஃ 12 ஸ: 11 ஹி 13 யுக்தாத்மா 14 மாம் 15 ஏவ 16 அனுத்தமாம் 17 க³திம். (18)

14.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வார்த்தன் முதலிய மூவர்களும் உத்தமர்களே ஆனுலோ, பிரஹ்மஞானியோ எனதான்மாவே என எனது நிச்சயம்

அந்த ஞானி பரமேசுரனுகிய என்னிடத்தில் சமாகிதச்சித்தமுடையனுய் என்னையே எல்லாவற்றினும் மேலாகிய பரமபலவடிவமாய்க் கொள்கின்றன். (18)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஆர்த்தன் முதலிய மூவர்களும் சகாமர்களாயினும் எனது பக்தியிலாத பிராணிகளைப்பார்க்கிலும் உத்கிருஷ்டர்களே. என்னை, முற்பிறப்பில் அவர்கள் பல சுகிருதகாரிகளாவர்கள். இப்பிறப்பில் அவர்கட்கு எனது பக்தி கிடைத்ததாகலின் பூர்வ சுகிருதமொழித்து எனது பக்தி கிடைக்காது. ஒருபோது அவர்கட்கு முற்பிறப்பில் பல சுகிருதமின்றேல் பரமேசுரனுகிய என்னை ஒருபோதும் ஆராதியார்கள். இவ்வுலகத்தில் பரமேசுரனுகிய என்னின் பகிர்முகமாகிய ஆர்த்தன் முதலியோர்கள் அன்னியமான அற்ப தேவதைகளை ஆராதிப்பது காணப்படுகிறது. ஆதலின், இச்சன்மத்திலுள்ள எனதாராதனையால் அவர்களின் முற்பிறப்பின் சுகிருதம் அநுமானம் பண்ணப்படுகின்றது. அத்தன்மைப் பூருவஜன்மப் புண்ணியப்பிரபாவத்தால் என்னையாராதிக்கின்ற ஆர்த்தன் முதலிய மூவரும் எனக்குப் பிரியர்களேயாவர்கள். எனது பக்தர்கள் ஞானிகளாயினும் அஞ்ஞானிகளாயினும் எனக்கப்பிரியரலர். ஆனலோ, எப்புருஷர்க்கெவ்வண மென்னிடத்திற் பிரீதியுளதோ பரமேசுரனுகிய எனக்கும் அப்புருஷரிடத்து அவ்வண்மே பிரீதியுண்டாம். இஃதுலகனைத்தும் மிக விளக்கமாம். ஆண்டு, ஆர்த்தன் முதலிய மூவர்கட்கும் பரமேசுரனுகிய நான்மாத்திரம் பிரியமாவதில்லை. மற்றே, இச்சைக்கு விடயமான பொருளுமாம். ஞானிக்கோ யாதொழிந்த மற்றெப்பொருளும் பிரியமாவதில்லை. மற்றே, அவனுக்கு நானே நிரதிசயப்பிரீதிவிடயமாகின்றேன். இதனுனே, நிஷ்காமனுகிய ஞானியும் எனக்கு நிரதிசயப்பிரீதி விஷயமாகின்றன். நான் அவ்வாறலனெனின் செய்ததுணருந் தன்மை என்னிடத்து எவ்வாறு உளதாம். 'செய்ததழிக்குந்' தன்மையே யுளதாம். ஆதலின், என்னிடத்தில் கிருதக்ஞத்தன்மை நித்தித்ததற்கும் கிருதக்னத்தன்மை நீக்குதற்கும் பரமேசுரனுகியநானும் ஞானிகளாகிய பக்தர்களிடத்தில் நிரதிசயப்பிரியஞ்செய்வேன். இதுபற்றியே பூர்வசுலோகத்தில் 'அத்யர்த்தம்' என்னும் விசேடணஞ் கூறியருளப்பட்டது. 'யதெவவிஷ்யாகுரொதிஸ்ரஜ யொவநிஷ்ஷாத தெவவீயஷுவதஸ்ரம் ஹவதி' என்னுஞ் சுருதியில் வித்தை ரத்தை முதலியவைகளால் செய்யப்பட்ட கருமமே வீரியவத்தரமெனக்கூறப்பட்டிருக்கிறது. ஈண்டு, வீரியவத்தரம் என்னும் வாக்கியத்திற்றிலுள்ள 'தர' விகுதிக்கு அதிசயவடிவார்த்தமே உடன்பாடாம். அதனுலிப்பொருள் பெறப்படுகின்றது; வித்தை முதலியவைகளாற்செய்யப்பட்ட கருமம் அதிசயமான வீரியமுடையதாகின்றது என்ப. அவ்வித்தை முதலியவைகளாலாக்கப்படாத கருமமும் வீரியமுடையதாகின்றது. அதுபோல, ஞானியாகிய பக்தன் பரமேசுரனுகிய எனக்கு 'அத்யர்த்தம்பிரியன்' என்னும் பகவத் வாக்கியத்திலுள்ள அத்யர்த்தம் என்னும் பதத்திற்கு அதிசயத்தன்மைவடிவார்த்தமே யுடன்பாடாம். அதனுலிப்பொருள் பெறப்படுகின்றது. ஞானியானவன் எனக்கு மிகப்பிரியன், ஞானமின்றியார்த்தன் முதலியோர்களும் பிரியர்களே. இவ் வபிப்பிராயத்தால் ஸ்ரீ பகவான் அந்த ஞானிக்கு அத்யர்த்தம் என்னும் விசேடணஞ் கூறியருளினர். இவ்வர்த்தத்தை 'யெயமாஸ்ரம் வ்ரவஷ்யதெ தாம்ஸ்தெவ ஹஜாம்யஹம்' என்னும் வாக்கியத்தால் தாமே திருவாய்மலர்ந்தருளினர். இதனுல் பரமேசுரனுகிய என்னைத் தனதான்மவடிவாயுணரும் ஞானியாகிய பக்தன் எனதான்மவடிவனெனயாவன். என்னினவன் வேறல்லன் 'ப்ர ஹ்மவெஷ ப்ரஹ்மவஹவதி' பிரஹ்மத்தைத் தனதான்மவடிவமாயுணர்ந்தவன் பிரஹ்ம சொரூபமேயாகின்றன் எனச் சுருதியுங்கூறுகின்றது. இவ்வாறெனது நிச்சயம். ஈண்டு, 'ஞானீது' என்னும் வாக்கியத்திலுள்ள 'து' என்னும் சத்தமானது சகாமன் பேதகரிசி ஆர்த்தன் முதலிய மூன்றன்பர்களினும் அந்த ஞானியி

னிடத்து நிஷ்காமத்தன்மை அபேததரிசித்தன்மைவடிவ விசேடணங்களை அறி வுறுத்தற்பொருட்டாம். இப்போது ஞானியின் ஆன்மரூபத்தன்மையிற் காரண மருளுகின்றார். 'ஸஹியுக்தஸ்ததா உக்தி' அர்ச்சுன! அந்த ஞானியாகிய பக்தன் யுக்தான்மாவாதலின் அதாவது நானே பகவானாகிய வாசுதேவன் என அபேத மாய்ப் பரமேசுரனாகிய என்னிடத்தில் எப்போதும் சமாகிதச்சித்தமுடையனாய் ஆநந்தகனமாகிய என்னையே எவற்றினும் மேலாகிய பலமென வுடன்பட்டுப்பரமான்மாவாகிய எனக்கயலாய் மற்றொரு பலத்தையுமுடன்படாதவன் ஆதலின் அவன் எனதான்மவடிவமேயாவனென்க. (18)

(அ-கை.) ஹே அர்ச்சுன! அந்த ஞானி, பரமேசுரனாகிய என்னையே பரம பலவடிவமெனக் கொள்கின்றுளதலின், அவன் என்னையே அபேதமாயடைவன். அத்தன்மைய ஞானியே மிகவரியனவன் என்பதை ஸ்ரீ பகவான் இப்போதருளு கின்றார்.

சு-ம். பஹூனாம் ஜந்மநாமந்தே ஜ்ஞானவான்மாம் ப்ரபத்யதே।
வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லபஸ்ஸ: ॥ (19)

ப-ம். 2 பஹூனாம் ; 3 ஜந்மநாம் 4 அந்தே 1 ஜ்ஞானவான் 8 மாம் 9 ப்ரபத்யதே
6 வாஸுதேவஸ் 5 ஸர்வம் 7 இதி 10 ஸ: 11 மஹாத்மா 12 ஸுதுர்லபஸ்ஸ:.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அந்த ஞானியானவன் பல சன்மாந்தத்தில் இவ்வுலகனைத்தும் வாசுதேவசொரூபமே என்னும் உணர்வுடையனாய்ப் பரமேசுர னாகிய என்னை அபேதரூபமாய் ஆராதிப்பன் அம்மகாத்துமா மிகவரியன். (19)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சிறிது சிறிது புண்ணிய சம்பாதனத்திற்குக் காரணவடிவ முற்போன பல சன்மாந்தத்தில் அதாவது சர்வ சுகிருதங்களின் பல வடிவ அந்திய சன்மத்தில் ஞானியாகிய புருஷன் இவ்வுலகனைத்தும் வாசு தேவ சொரூபமே என்னும் ஞானமுடையனாய், நிரூபாதிகப் பிரிய விடயவடிவ பரமேசுரனாகிய என்னையே எப்போதும் எல்லாப் பிரேமைவிஷயவடிவமாய் ஆரா திக்கின்றான். என்னை, நானும் இவ்வுலகனைத்தும் பரமேசுரனாகிய வாசுதேவ சொரூ பமே என்னும் பார்வையால் அவனது பிரேமைகளனைத்தும் பரமேசுரனாகிய என் னிடத்திலேயேமுடிவுறுகின்றன. இதனாலே, அந்த ஞானபூர்வகமாகனது பக்தி பண்ணுவோன் மகாத்மாவாவன்; அதாவது, மிகவுந் தூயமனத்தோனதால் அச்சீவன் முத்தன் சருவத்திலும் உத்கிருஷ்டனவன். அவனுக்கிணையாய் மற் றொருவரில்லை. அவனுக்கொப்புளாரிலையெனில் அவனின் மேலோர் எவ்வாறுவர். இதுபற்றியே அச்சீவன்முக்தனாகிய ஞானி மிகத் துர்லபமாவன்; அதாவது, அவ் வித்துவான், பல்லாயிர மனுடர்க்குள்ளாநும் துக்கத்தாலுங் கிடைக்கொணாதோன். அத்தன்மையோனது துர்லபத்தன்மையை (மனுஷ்யாணாம் சஹஸ்ரேஷு) என் னும் வாக்கியத்தில் ஸ்ரீ பகவான் விளக்கமாய்த் திருவாய்மலர்ந்தருளினர். ஆத லின், அச்சீவன் முத்தன்பரமேசுரனாகிய எனது நிரதிசயப்பிரிய விடயமாவன் என வருளியதற்கிழுக்கின்றுமென்க. (19)

(அ-கை.) ஆண்டு, 'தெஷாம் ஜ்ஞானீ நித்யயுக்த ஏகபக்திர்விஷ்யதே' என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் ஆர்த்தன் முதலிய மூவரபேக்ஷயால் ஞானியாகிய பக்தன் மேலானவன் என, பண்ணியருளிய பிரதிக்ஞை இத்துணை பரியந்தஞ்சித்தமானது. அன்றியும் சகாமத்தன்மை பேததரிசித்தன்மைகள் ஒப் பாயினும் வேறு தேவதைகளின் பக்தர்களை யபேக்ஷித்து ஆர்த்தன் முதலிய எனது முப்பக்தர்கள் உத்கிருஷ்டர்கள் என்னும் பிரதிக்ஞையை 'உதாரா: சர்வ ஏவைதே' என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் முன்னருளியிருந்தனர். இப்

போது இவ்வேழாவது அத்தியாயம் முடிவுறும்வரையினும் அப்பிரதிக்ஞையைச் சித்திபண்ணியருளுகின்றார். ஈண்டு, பரமகிருபாலுவாகிய ஸ்ரீ பகவானுக்கிது கருத்தாம்:—ஆர்த்தன் முதலிய எனது பக்தர்களிடத்தும் அன்னியதேவதைகளின் பக்தர்களிடத்தும் ஆபாசம், சகாமத்தன்மை, பேததரிசித்தன்மைமுதலிய தருமங்கள் சமமேயாயினும் பரமேசுரனுகிய எனதன்பர்கள் பூமிகைமுறையாய் எல்லாவற்றினும் மேலாகிய மோகூஷவடிவ பலத்தையே அடைவர்கள். அற்பதேவதைகளின் பக்தர்கள் மறித்தும் மறித்தும் பிறப்பிறப்பையே தரும் அற்பபலத்தையே அடைவார்கள். ஆதலின், ஆர்த்தன் முதலிய பக்தர்களனைவரும் பரமேசுரனுகிய எனது சரணுகதியைப்பெற்று ஆபாசமின்றியே எல்லாவற்றினும் மேலாகிய மோகூஷவடிவபலத்தை அடைவார்கள் என்க. ஆண்டு, மோகூஷவடிவப் பரமபுருஷார்த்தமாகிய பலத்தைத் தருவது எனதாராதனையாம். எனது ஆராதனையை யுபேக்ஷித்து அற்பபலத்தைத் தருவதாகிய அற்பதேவதா ஆராதனை பண்ணப்புகுவதில் பூர்வசம்ஸ்காரவடிவ வாசனுவிசேடமே அசாதாரண காரணமாம் என்னுமர்த்தத்தை ஸ்ரீ பகவான் இப்போதருளுகின்றார்.

சு-ம். காவைஷைஷைஷ ஹ்ரஸ்தஜூராஃ வ்ரவஸ்யஜ்ஞேயஸ்தவதாஃ !
தம் தம் நியமமாஸ்தாய வ்ரகூயதயா நியதாஃ ஸ்வயா ॥ (20)

ப-ம். 3 காவைஷஃ 1 ஸ்தைஃ 2 ஸ்தைஃ 4 ஹ்ரஸ்தஜூராஃ 13 வ்ரவஸ்யஜ்ஞே 12 ஸ்ரஸ்யஸ்தவதாஃ 8 தம் 9 தம் 10 நியமம் 11 ஸ்தாய 6 வ்ரகூயதயா 7 நியதாஃ 5 ஸ்வயா.

(அ-ம்.) ஹே அர்ச்சுன ! அவ்வக்காமங்களால் பரமேசுரனுகிய என்னிற் பகிர்முகமாகிய அந்தக்கரணமுடையோர்கள் பூர்வ வாசனைவடிவப் பிரகிருதியால் வசம் பண்ணப்பட்டவர்களாய் அவ்வந்நியமத்தைத்தழுவி அன்னிய தேவர்களை ஆராதிப்பார்கள்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன ! மாரண, மோகன, உச்சாடன, தம்பன, ஆகர்ஷண, வசீகரண முதலியவைகளை விடயம்பண்ணப்பட்ட அபிலாஷை காமமாம்; அதின் விடயங்களான மாரணாதிகள் பகவத்சேவையால் அடையமுடியாதனவென அவர்கள் எண்ணினவர்கள். அத்தன்மைய அவ்வக்காமங்களால் அபகிருதமான அதாவது, பகவானுகிய வாசுதேவனிற் பகிர்முகமாய் அவ்வம்மாரணாதிபலத்தைத் தருபவர்களெனக் கொள்ளப்பட்ட அற்பதேவர்களின் அபிமுகமாகிய, ஞானமெனு மந்தக்கரணமுடையோர்கள் அபகிருதஞானர்கள். எனக் கன்னியமான அவ்வற்பதேவதைகளின் ஆராதனையில் பிரசித்தமாகிய ஜபம், உபவாசம், பிரதட்சிணை, நமஸ்காரம்முதலிய அவ்வந்நியமங்களைத்தழுவி மாரணமுதலிய அவ்வற்பபலனை இச்சித்து ஆராதிக்கின்றார்கள். அவ்வற்பதேவதைகளுக்குள்ளும் பூர்வாப்பியாசசன்னிய தனது தனது அசாதாரண வாசனைவசப்பட்டு ஒரு தேவதையையே சிலர் ஆராதிக்கின்றார்கள். (20)

(அ-கை.) ஹே பகவன் ! அன்னியமான அற்பதேவதைகளை ஆராதிப்பவர்களுக்கும் அவ்வத்தேவதைகளின் பிரசாதத்தால் சர்வேசுரனுகிய ஸ்ரீ பகவான் வாசுதேவனிடத்தில் அவசியமாய்ப் பக்தியுண்டாகுமென்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவானருளுகின்றார்.

சு-ம். யொ யொ யாம் யாம் தநும் ஹக்தஃ ஸ்ரத்தயார்சிதுமிச்ஹதி ।
தஸ்ய தஸ்யாசலாம் ஸ்ரத்தாம் தாமேவ விதயாம்யஹம் ॥ (21)

ப-ம். 1 யஃ 2 யஃ 4 யாம் 5 யாம் 6 தத்ராம் 3 ஹ்ருஃ 7 ஸ்ரத்தயா 8 ஸமன்விதாம் 9 ஆராதயதி 10 தஸ்ய 11 தஸ்ய 14 ஸமீஹிதான் 15 ஸ்ரயான் 12 தான் 13 ஹி வ 17 விதீயாதி 16 ஸஹம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வெச் சகாமபுருஷன் பக்தியுடையனுய் எவ்வெத் தேவதாமூர்த்தியைச் சிரத்தையோடும் ஆராதிக்க முயல்கின்றனே அவ்வப்புருஷனுக்கு அவ்வத்தேவதாமூர்த்தியினிடத்தே நிலையுறுபக்தியை அந்தர்யாமியாகிய நான் உண்டாக்குவேன். (21)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அவ்வன்னியதேவதைகளை ஆராதிப்பவர்களுள் எவ்வெச்சகாமபுருஷர்கள் பக்தியுடையர்களாய் எவ்வெத்தேவதாமூர்த்தியை முற்பிறப்பின் வாசனைவலியால் வெளிப்பட்ட அன்புபூண்டு ஆராதித்தற் கெத்தனிக்கின்றார்களோ அவ்வவர்கட்கு அவ்வத் தேவதாமூர்த்தியின்கண்ணேயே முன்வாசனையாலுண்டாகிய பக்திவடிவச்சிரத்தையை அந்தர்யாமியாகிய நான் நிலைப்படுத்துவேன். அப்புருஷர்க் கத்தேவதைகளினின்றும் சிரத்தையைத்திருப்பி என்னிடத்திற் சிரத்தையுண்டாமாறு செய்வதில்லை. ஒரு வியாக்கியானத்தில் 'தாம்' (அதை) என்னும் பதத்தால் சிரத்தையே கொள்ளப்பட்டது. ஆனல், இவ்வியாக்கியானத்திற் கூறிப்போந்த 'யாம் யாம், எதை எதை, இத்தேவதா வாசக எது' என்னுஞ் சத்தத்திற் கன்வயம்படாது. அல்லது, 'அது' என்னுஞ் சத்தத்தைச் சேர்த்துக்கொண்டே அஃதன்வயப்படும். என்னை, 'எது அது' என்னுஞ் சத்தங்கட்கு அவாய்நிலை அவசியமாயுண்டாம். ஆதலின், ஈண்டு 'தாம்' (அதை) என்னுஞ் சத்தத்தின் முன்பைக்குறித்து இச்சத்தத்தை அத்தியாகாரம் பண்ணி 'தாம்' (அதை) என்னுஞ் சத்தத்தால் முன்னர் 'யாம் யாம்' (எதை எதை) என்னுஞ் சத்தத்தாற் கூறப்பட்ட தேவதையையே பராமரிசித்தனர் என்க. (21)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். ஸ ததயா ஸ்ரத்தயா யுக்த ஸ்தஸ்யா ராதனமீஹதே।
லபதே ச தத꞉ காமான் மயைவ விஹிதான் ஹி தான் ॥ (22)

ப-ம். 1 ஸஃ 2 ததா 3 ஸ்ரத்தயா 4 யுக்தஃ 5 தஸ்ய 6 ஆராதனம் 7 ஈஹதே 16 லபதே 8 ச 9 ததஃ 14 காமான் 10 மயா 11 ஹி வ 12 விஹிதான் 15 ஹி, 13 தான்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அச்சகாமன் அவ்வன்புடையனுய் அத்தேவதாமூர்த்தியை ஆராதிக்கின்றன். அங்ஙனமே அத்தேவதாமூர்த்தியினின்றும் பரமேசுரனுகிய என்னுலே கற்பிக்கப்பட்ட முன்னினைத்திருந்த காமத்தை நன்கடைகின்றன். (21)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அம்மாரணமோகனதிபலனையடைய விரும்பி அச்சகாமன் பரமேசுரனுகிய என்னுல் அவ்வத்தேவதைகளிடத்தில் திரம்பண்ணப்பட்ட பக்தியுடையனுய் அவ்வம்மூர்த்தியையே ஆராதிக்கின்றன். அதையொழித்து என்னை ஆராதிப்பதில்லை. அதனுல், அவன் அம்மூர்த்தியினின்றுமே முன்னிச்சித்த மாரண முதலியவைகளை யடைகின்றன்.

சங்கை :—அன்னிய தேவதைகளும் தத்தம் அன்பர்களுக்கு அவ்வக் கருமபலனைக்கொடுப்பதில் சுவதந்திரர்களாயிடில் தங்களிடத்துச் சர்வ கருமபலனையுங் கொடுக்குந் தன்மை பொருந்தாதன்றே ?

சமாதானம்:—'ஒயெவவிஹிதாநு உதி' ஹே அர்ச்சுன! சர்வ ஜீவர்களின் புண்ணிய பாவங்களே அறிபவனும், அவ்வக்கரும பலன்களைக் கொடுப்பவனும், அச்சர்வ தேவர்களின் அந்தரியாமியுமாகிய நானே அவ்வக்கருமபலனே விபாகம் பண்ணும்போது மாரண முதலிய பலனே யுண்டாக்குகின்றேன். பரமேசுரனுகிய என்னையன்றி அவ்வக்கருமபலனே உண்டாக்குவதில் அத்தேவதைகள் சமர்த்தரா கார்கள். நாணுண்டாக்கின அம்மாரணதிபயனேயே அவர்களடைகின்றார்கள். ஆதலின், பரமேசுரனுகிய நானே நேராகவேனும் மற்றெவ்வாயிலாகவேனும் சர்வ கருமபலனேயுங் கொடுப்பவன். இத்துணே கூறியதால் ஸ்ரீ பகவான் சர்வ தேவர் களும் தனதாஞ்ஞாவசத்தர்களென அறிவுறுத்தருளினர் என்க. அல்லது, மூல சுலோகத்தில் 'ஹிதான்' என்பது ஒரு பதமாகவே யுணரற்பாலது; அதாவது, உண்மையில் மாரணாதிகள் ஹிதவடிவங்களன்றேனும் அவர்கட்கு ஹிதவடிவங் களாய்த் தோற்றுகின்றனவாம். (22)

(அ-கை.) அத்தேவதைகளும் சர்வான்மவடிவ பரமேசுரனுகிய எனது மூர்த்திகளே ஆதலின், அவர்களின் ஆராதனமும் உண்மையின் எனதாராதனமே. எவ்விடத்தும் பலன்கொடுப்பவனும் அந்தரியாமியாகிய நானே அங்ஙனமாயினும் சாகூடாத் எனது பக்தர்களுக்கும் அன்னிய தேவதைகளின் பக்தர்களுக்கும் விஷமமாகவே பலப்பிராப்தியுண்டாகின்றது. அதுவோ, வஸ்துவின் விவேக அவிவேகங்களானேயாம். ஆண்டு, எனது பக்தர்களிடத்து வஸ்து விவேகமுளது. அன்னிய தேவதாபக்தர்களிடத்து அஃதின்று. இதனுனே விஷம பலப்பிராப்தி யுண்டாகின்றதென்பதை ஸ்ரீ பகவான் இப்போதருளுகின்றார்.

சு-ம். ஈஜ்ஜவதா மயும் தெஷாம் தஹ வதயூயெஹாழி ।
ஒவாநுஒவயஜோ யாஞ்சி ஹூகா யாஞ்சி ஸவி ॥ (23)

ப-ம். 5 ஈஜ்ஜவஸ் 6 தா 4 மயும் 1 தெஷாம் 3 தஸ் 7 ஹவதி 2 ஸயூயெஹாம்
9 ஒவாநு 8 ஒவயஜஸ் 10 யாஞ்சி 11 ஹூகா 14 யாஞ்சி 12 ஸாம் 13 ஸவி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அவ்வற்ப புத்தியுடையவர்களின் அப் பலம் நாச முடையதேயாம். அத்தேவதைகளே ஆராதிப்பவர்கள் அத்தேவதைகளேயே அடை கின்றார்கள். பரமேசுரனுகிய எனது பக்தர்கள் என்னையே யடைகின்றார்கள். (23)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அற்ப புத்தியாகிய மேதையையுடையவர்கள் அதாவது, மந்தத்தால் உண்மைப்பொருளே யுணருவதில் சமர்த்தமின்மைவடிவ மேதையையுடையவர்கள் அற்ப மேதசுகள் அத்தன்மைய அவ்வத்தேவதைகளின் பக்தர்களுக்கு அந்தரியாமியாகிய நானே அவ்வவ் வாராதனத்தாலுண்டாம் பல னைக் கொடுக்கின்றேன். அங்ஙனமாயினும் அப்பலம் நாசமுடையதேயாம். அதா வது பரமார்த்த வஸ்துவின் விவேகம் பண்ணும் பரமேசுரனுகிய எனது பக்தர் களின் மோகூடவடிவப் பலம் நாசமுறுததுபோல் அன்னிய தேவதாபக்தர்களின் மாரண முதலிய பலன்கள் நாசமடையாதனவல்ல; மற்றே, நாசமுடையனவே யாம். பரமார்த்தவஸ்து விவேகமின்றியவர்கட்குக் கருமத்தால் நாசப்படும் பலமே பிராப்தியாம் இது சுருதியிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. யொவா வை தநூரூபம் மாமயூவிஜிக்ஷாஹ்ஸிம் லோகெஜ்ஞாஹொதி । [ஹவதி.
யஜ்ஞெததவஹ்ஸவயூதெ ஐஹ ஸுநிவஷ்டிஹ ஹவ்யாணயூக்ஷவ ஒவாஹ்யதெ

(போ-ள்.) ஹே கார்க்கி! இவ்வகூடாமாகிய பரமான்மாவை யுணராது இவ் வுலகத்தில் ஹோமமும் யக்ஞமும் பல்லாயிரம் வருஷ தவசும் செய்பவனுக்கு அக்கருமங்கள் அநித்திய பலத்தையே கொடுக்கும் என்பதாம்.

சங்கை:—ஹே பகவன்! அன்னிய தேவதைகளை ஆராதிப்பவர்கள் அநித்தியபலத்தையும், உனது பக்தர்கள் நித்திய பலத்தையுமடைவதிற் காரணம் யாது?

சமாதானம்:—'ஒவாஸு ஒவயஜஃ உதி' ஹே அர்ச்சுன! எனக்கன்னியமான இந்திராதி தேவர்களை ஆராதிப்பவர்கள் அநித்தியமான அவர்களையே அடைகின்றார்கள்; பரமேசுரனுகிய என்னை அடைகின்றிலர்கள். இவ்வாறே யக்ஷராக்ஷச பக்தர்களும் பூதப்பிரேத பக்தர்களுமாவர்கள். ஆண்டு, இந்திரன் முதலிய தேவதைகள் அவர்களின் பக்தர்கள்; சாத்துவிகர்களாவர்கள். யக்ஷராக்ஷசர்கள் அவர்களின் பக்தர்கள் ராஜசர்களாவர்கள்; பூதப்பிரேதங்கள் அவைகளின் பக்தர்கள்; தாமதர்களாவர்கள். எவன் எவன் எதையெதை ஆராதிக்கின்றானே அவனவன் அதையதை அடைகின்றன். இது சுருதியிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. கூஉணாவிதுயொகொ விஉயாஎவயொகஃ।
ஒவொஹமிகூா ஒவாநவைதி ॥

(பொ-ள்.) பிதிருகருமத்தால் பிதிருலோகத்தை யடைகின்றார்கள். தேவதாவுபாசனையால் தேவலோகத்தை யடைகின்றார்கள். அவ்வத்தேவதாராதனத்தால் அவ்வத்தேவபாவத்தையடைந்து அவ்வத்தேவலோகத்தை யடைவர்கள். இது முதலிய சுருதிவாக்கியங்கள் அவ்வத் தேவதைகளை ஆராதிப்பவர்கட்கு அவ்வத்தேவதாப்பிராப்தியைக் கூறுகின்றன. ஆர்த்தன் முதலிய மூன்று பக்தர்களுமே நேரே யென்னையே ஆராதித்து என்னையே யடைகின்றார்கள். ஈண்டு, 'மாமபி' என்னும் வாக்கியத்திலுள்ள 'அபி' என்னுஞ் சத்தத்தால் பகவான் இவ்வர்த்தத்தைக் குறிப்பித்தருளினர். ஆர்த்தன் முதலிய எனது பக்தர்கள் மூவரும் முதலில் எனது பிரசாதத்தால் மனவாஞ்சிதப்பொருளையடைந்து, பின்னர் எனதுபாசனை பரிபாகத்தால் அனந்த ஆநந்தகன பரமேசுரனுகிய என்னையும் அடைகின்றார்கள் என்பதாம். இதனால், இப்பொருள் பெறப்படுகின்றது:—எனது பக்தர்களும் அன்னிய தேவதாபக்தர்களுமாகிய ஆர்த்தன் முதலிய மூவருக்கும் சகாமத்தன்மை சமமாயினும், நித்திய அநித்தியபலப் பிராப்தியால் அத்தியந்தம் அவர்கள் பேதமாவர்கள். இதனால், 'உஊாஃவவ-ஃ வனவெதெ' எனப் பகவானருளிய வாக்கியத்திற்கிழுக்கின்றமென்க. ஆர்த்தன் முதலிய பரமேசுர பக்தர்களால் தத்தங் காமனுசாரம் துக்க நிவிருத்தி வாஞ்சிதார்த்தப் பிராப்தி முதலிய அடையப்படும் சாம்சாரிகப்பலன்கள் அநித்தங்களேயாம். ஆயினும், பரமேசுராராதனத்தின் பரமபலமாகிய மோட்சமோ நித்தியமாம். அம்மோக்ஷவடிவப்பலனை யுத்தேசித்தே அப்பரமேசுர பக்தர்களுக்கு நித்தியபலப்பிராப்தி கூறப்பட்டது. ஈண்டு, ஒரு வியாக்கியானத்தில் 'அற்பமேதசாம்' என்னும் வாக்கியத்திற் கிவ்வாறு பொருள் பண்ணப்பட்டது:—'கூஉ ஒயாயெஷாஎ' சுருதியில், அற்பசத்தத்தாற் கூறப்பட்ட இத்துவித வுலகத்திற் புத்திவடிவமேதையுடையவன் அற்பமேதசாம்; அதாவது, வெளிப்பொருளை விழைவோனுவன்.

ஆ-சு. கூயாதராநயூபாயதியநய ஹூனொதி ।
கூநயநமஃதெநய ஜிஜாநாதி தஉயும் ॥

(பொ-ள்.) துவிதபாவத்தில் இவன் அன்னிய எப்பொருளைப் பார்க்கின்றன், கேட்கின்றன், மனனம் பண்ணுகின்றன், அறிகின்றானே, அந்தத்துவைதப்பிரபஞ்சம் அற்பமாமென்க.

(23)

(அ-கை.) ஹே பகவன்! நேரே பகவதாராதனை ஒருகால் நாசமற்ற உத்தமமானபலத்தைக் கொடுக்குமேல், ஈண்டுப் பெரும்பாலும் இவர்கள் அப்பகவானி

னும் விழுகர்களாய்ப்போகின்றது என்னை என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அதிற் காரணமருளுகின்றார்.

சு-ம். சுவயூகம் வயூஹாவந்தம் உபயஞ்ச ராஜபுத்ரயஃ ।
வரம் ஹாவஜாநஞ்ச ராவயுபநிஷதம் ॥ (24)

ப-ம். 8 சுவயூகம் 10 வயூஹ்யம் 11 சூவந்தம் 12 உபயஞ்ச 9 ராம் 1 சுபுத்ரயஃ 3 வரம் 5 ஹாவம் 7 சுஜாநஞ்ச 2 ர 4 சுவயுவம் 6 சுநிஷதம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! விவேகமின்றிய புருஷர்கள் பரமேசுரனுகிய என்னுடைய சர்வகாரணவடிவமும் நித்தியமுமாகிய சோபாதிக சொரூபத்தையும், சர்வத்திலு மேலாகிய நிருபாதிக சொரூபத்தையுமுணராது அவ்வியக்தவடிவப் பரமேசுரனுகிய என்னை வியக்தமானவனுய்க் கொள்கின்றார்கள். இதனுனே, அவர்கள் பரமேசுரனினின்றும் பகிர்முகமாகின்றார்கள். (24)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! விவேகமற்றவர்கள் அவ்வியக்தவடிவப் பரமேசுரனுகியஎன்னை வியக்தபாவத்தையடைந்தவனென எண்ணுகின்றார்கள். அதாவது, இத்தேகம் எடுப்பதற்குமுன் காரியஞ் செய்வதில் வலியற்ற வடிவமாய் நிலைத்திருந்த பரமேசுரனுகிய என்னை இப்போது வசுதேவர்வீட்டில் பௌதிகதேகத்தால் காரியஞ்செய்வதில் சாமர்த்தியத்தைப்பெற்ற ஒரு சீவவிசேடன் எனக் கொள்கின்றார்கள். அல்லது, அவ்வியக்தம், சர்வ காரணவடிவ பரமேசுரனுகிய என்னை வியக்திமாபன்னம், மீறுதி அவதாரத்தால் காரியபாவத்தை யடைந்தவன் என எண்ணுகின்றார்கள்.

ஹே பகவன்! அவர்கள் உமது சொரூப விவேகம்பண்ணுததென்னை என அர்ச்சுனன் சங்கிப்ப ஸ்ரீ பகவான் காரணமருளுகின்றார். 'சுஹ்ருயஃ ஹி' அர்ச்சுன! அவர்கள் எனது சொரூப விவேகபுத்தியில்லாதவர்கள், அதனுல் என்னை அவ்வாறுணர்கின்றார்கள். ஆண்டு, அவ்வாறு கொள்வதில் கூறப்பட்ட அபுத்தயஃ என்னும் ஏதுவை இப்போது விளக்கியருளுகின்றார். 'வரம்ஹாவஜாநஞ்ச ஹி' அர்ச்சுன! பரமேசுரனுகிய எனது மேன்மைபொருந்திய அவ்வியயபாவத்தை அதாவது, சகத்காரணமும் நித்தியமுமாகிய எனது சோபாதிக சொரூபத்தையும் அநுத்தமபாவம் அதாவது, 'புருஷாந்பரம்கிஞ்சித் சாகாங்ஷ்டா சாபராகதிஃ என்பது முதலிய சுருதிகளாற் கூறப்பட்ட சர்வத்திலும் மேலாகியதாயும் நிரதிசயமாயும் அத்துவிதீய பரமாநந்தகனமாயும் பரிச்சேதமற்றதுமாகிய எனது நிருபாதிக சொரூபத்தையும் அவர்களுணராதார்கள். இதனுனே, அவ்விவேகசூனியர்கள் அன்னிய சீவனைப்போல எனது விசேஷதமாத்திர காரியத்தைப்பார்த்து இவனுமொரு ஜீவ விசேடனேயென் றெண்ணுகின்றார்கள். ஈசுர சொரூபமாய் என்னைக் கொள்வதில்லை. இதனுனே, என்னை ஒழித்து மிக விளக்கமான இந்திரன் முதலிய அன்னிய தேவர்களை ஆராதிக்கின்றார்கள். அதனுலவர்கள் அநித்திய பலத்தையே அடைவார்கள். இதை ஸ்ரீ பகவான், 'சுவஜாநந்ஹ்யாம் உபபாராநுஷ்டாநாம் சாஸ்ரீரதம்' என்னும் வாக்கியத்தால் மேலுந் திருவாய்மலர்ந்தருளுவர் என்க.

(அ-கை.) ஹே பகவன்! தாங்கள் சன்மகாலத்தும் சர்வயோகிகளுந் தியானிக்கத்தக்கதும் ஸ்ரீ வைகுண்டத்திலுள்ளதுமாகிய அத்தன்மைய ஈசுர சம்பந்தமுடைய சொரூபமாய் ஆவிர்ப்பவித்தீர்கள். வர்த்தமான காலத்திலோ ஸ்ரீ வத்ச கௌஸ்துபமணி வனமாலை முகுடகுண்டல திவ்ய அலங்காரத்தோடு கூடியவரும் சங்குசக்கர கதாபத்மங்களேந்திய நாற்புயத்தரும், கருடவாகனரும், சர்வதேவர்

களாற் சம்பாதிக்கப்பட்ட ராஜ ராஜேசுவராபிடேக முதலிய மகா வைபவத்தோடு கூடினவரும், சர்வ சுராசுரர்களை வெற்றிபெறுபவரும், பலவிதமான திவ்யவிநோத விலாசத்தைச் செய்பவரும், இராமன் முதலிய அவதாரங்களுக்குள் சிரோமணியும் நேரே வைகுண்ட உலகாதிபரும், சர்வ உலகத்தையும் ஈடேற்றுவான் இப்பூமியில் அவதாரம் பண்ணியவரும், பிரஹ்மசிருட்டியில் தோற்றத்தகாத நிரதிசய சுந்தரத் தன்மை வாய்ந்தவரும், பால லீலையால் சாகூதப் பிரஹ்மாவையும் மோகிக்கச் செய்பவரும், சூரிய கிரணம்போன்ற திவ்ய பீதாம்பரத்தைத் தரித்தவரும், ஒப் பற்ற நீலமேனியையுடையவரும் பாரிசாதத்தின்பொருட்டு நேரே இந்திரனையும் பராசயம் பண்ணியவரும், பாண யுத்தத்தில் சாகூதமகாசேதவரையும் பராஜயம் பண்ணியவரும், சர்வ சுராசுரர்களையுஞ் ஜயம்பண்ணுபவராய்த் தைத்தியர்களின் பிராணனீருயுள்ள சர்வப்பொருளையுங் கைக்கொண்டவரும், ஸ்ரீ காமாதிப்பிரமரங் கங்குறித்துப் பெரும் வைபவத்தைக்கொடுப்பவரும், ஓர சகாலத்தில் பதினாயிரம் திவ்ய வடிவத்தை யெடுத்தவரும், அளவறுகுணமுடையரும், பெரு மகிமையுடை யரும், நாரதர் முதலிய மகாமுனிகளால் துதிக்கப்பட்டவரும், இன்னும் இவை முதலாய பலவித திவ்ய குணங்களுள்ளவருமாயிருக்குந்தன்மை தேவரீரிடத்தே யமையும், எச் சீவனிடத்தும் அமையா ; மற்றீரு, ஈசுரனிடத்தே அக்குணங்கள் பொருந்துவனவாம். அத்தன்மைத்தாய தங்களிடத்தே அவிவேகிகட்கும் மனுஷ் யத்துவ புத்தியும் சீவத்துவ புத்தியும் எவ்வாறும்? என்னும் அர்ச்சுனன் சங் கையை நிவிர்த்தித் தருளுகின்றார்.

சு-ம். நாஹம் ப்ரகாசஃ ஸர்வஸ்ய யொகமாயாஸமாவ்ருதஃ ।
மூடொயம் நாபிஜாநாதி லொகொ மாமஜமவ்யயம் ॥ (25)

ப-ம். 4 ந 1 சுஹம் 3 ப்ரகாசஃ 2 ஸர்வஸ்ய 5 யொகமாயாஸமாவ்ருதஃ 6 மூடஃ
7 சுயம் 12 ந 13 சுபிஜாநாதி 8 லொகஃ 11 மாம் 9 சுஜம் 10 சுவ்யயம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனாகிய நான் சர்வ உலகத்திற்கும் வெளிப்படமாட்டேன். யான் யோகமாயையால் ஆவிருதப்பட்டவனாகையின் மூடர் களாய இவ்வுலகம் சன்மமரணமின்றிய என்னை யுணருவதில்லை. (25)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனாகிய நான் எல்லா உலகத்திற்கும் எனது சொரூபத்தோடு வெளிப்படமாட்டேன்; மற்றீரு, பரமேசுரனாகிய என் பக்தர்களுள் சிலர்க்கே உள்ளவாறு தோற்றுவேன்.

சங்கை :—ஹே பகவன்! சர்வ உலகத்திற்குந் தாங்கள் வெளிப்படாத தென்னை?

சமாதானம் :—ஹே அர்ச்சுன! 'யோகமாயாசமாவிருதஃ' என ஈண்டு, எனது பக்தியிலாதோர்கள் என்னை உள்ளவாறுணராதொழிக; என்னும் என் சங் கற்பம் யோகமாம். அதன் வசப்பட்ட அநாதி அநிருவசன அவித்தியாவடிவமாயை யோகமாயையாம். அதாவது, எனது சங்கற்பத்தைத் தழுவியுள்ள மாயை யோக மாயையாமென்க. அதனால் நான் நன்கு மறைக்கப்பட்டேன் அதாவது, எனது சொரூபவிஷயகஞானத்தின் காரணங்களிருப்பினும் அம்மாயையால் அந்த ஞான விடய மாதற்குத் தகுதியிலாது செய்தனன். இதனானே, சர்வ உலகத்திற்கும் என துண்மைவடிவத்தோடு வெளிப்படுவதில்லை. ஆதலின், 'வாஸுதேவஸர்வமிதி ஸ மஹாத்மா' என்னும் வாக்கியத்தாற் புகன்ற சோபாதிகநிருபாதிக சொரூ பங்களின் ஞானமின்மைக்கு எனது மாயாப்பிரசாக சங்கற்பமே காரணமாம் என்க. இதனானே, எனது யோகமாயையால் மூடமாய் அதாவது, மூற்கூறிய ஆர்த்தன் முதலிய நால்வகைப் பக்த ஜனங்களின் வேறானவர்கள் மறைபட்ட ஞான

சக்தியுடையர்களாய் எனது விடயகஞானகாரணங்களிருப்பினும் உற்பத்தி நாச மின்றிய என்னை யுணருவதில்லை. மற்றே, அம்மூடர்கள் விபரீத திருஷ்டியால் பரமேசுரனுகிய என்னை யாரோ ஒரு மனுஷ்ய விசேடமென் றெண்ணுகின்றார்கள். இதனினை விபரீத திருஷ்டியுடைய அம்மூடர்கள் பரமேசுரனுகிய என்னை யொழித்து வேறே இந்திராதி தேவர்களை ஆராதிக்கின்றார்கள். ஆண்டு, பொருட்குள்ள உண்மைவடிவத்தை மறைத்து அதற்கிலாத பொய்ம்மைவடிவத்தைக்காட்டுதல் மாயைக்கியல்பாம். அது, லௌகிக இந்திரசாலிகமாயையினிடத்து மிக விளக்க மென்க. ஈண்டு, ஒரு வியாக்கியானத்தில் 'யோகமாயா' என்பதற்குத் தனதா வரணசத்தியால் இவனைச் சென்ம மரணவடிவ துக்கப்பிரவாகத்தோடு சம்பந்தப் படுத்துவது யோகமாம். அத்தன்மைய யோகமாகியமாயை யோகமாயையாம் எனப் பொருட்படுத்துகின்றனர். ஸ்ரீ பகவான் பாடியக்காரோ சத்துவ முதலிய முக்குணங்களின் சம்பந்தம் யோகமாம்; அதையுடைய மாயை யோகமாயையாம் எனப் பொருள்கொண்டனர். ஒரு வியாக்கியானத்தில் 'யோகமாயாசமாவிருத: என்பதில் யோகம், மாயா சமாவிருத: என இரு பதமாக்கிச் சித்த நிரோதவடிவ யோகமுள்ளவன் யோகமாம் எனப் பொருட்படுத்தி யோகின்' என்னுஞ் சத்தம் போல அர்ச்சுனன் சம்போதனமெனக்கொண்டனர். அதாவது, ஹே யோகியே! மாயையால் மறைக்கப்பட்ட நான் எல்லா வுலகிற்குந் தோற்றுவதில்லை என்பதாம்.

(அ-கை.) ஹே அர்ச்சுன! இவ்வாறு எனததீனமான மாயையால் பரமேசுரனுகிய நான் சர்வ பூதங்களையும் மோகிக்கச்செய்கின்றேன். நான் பிரதிபந்தமின்றிய ஞானசத்தியுடையேனுதலின் அச் சர்வபூதங்களையும் அறிகின்றேன். என்னை எனது பக்தியின்றி ஒருவரு முணரார் என்னும் அர்த்தத்தை ஸ்ரீ பகவான் இப்போதருளிச்செய்கின்றார்

சு-ம். வெதாஹம் ஸமதீதானி வர்தமானானி சார்ஜுந ।
ஸவிஷ்யாணிச மாம்தானி வேத்ந கஶ்சந ॥ (26)

ப-ம். 9 வெத 2 சாஹம் 3 ஸமதீதானி 5 வர்தமானானி 4 ச 1 சார்ஜுந 7 ஸவிஷ்யாணி 6 ச 8 மாம்தானி 10 ந, 11 து 14 வேத 13 ந 12 கஶ்சந.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய நான் சென்ற நிகழ்கின்ற வருங் காலத்த சர்வ பூதங்களையு மறிவேன். என்னை அபக்தர்கள் ஒருவருமுணரார். ()

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தடையற்ற சர்வ விடயகஞானமுடைய பரமேசுரனுகிய நான் எனது மாயையால் சர்வ உலகங்களையும் மோகிக்கச்செய்யினும் முக்காலத்திலுமுள்ள தாவரசங்கமவடிவ பூதங்களனைத்தையும் அபரோட்சமாயுணர்வேன். இதனினை நான் சர்வக்ஞன். இதிற் சிறிதும் ஐயமுறற்க. அத்தன்மைய பரமேசுரனுகிய என்னை எனது மாயையான் மோகிக்கப்பட்டு ஒரு பிராணிகளு முணர்வதில்லை. அதாவது, உலகத்தில் இந்திரசாலிகனது மாயையான் மோகிக்கப்பட்டவர்கள் அவனை யுணருகின்றிலர். மற்றே, அம்மாயாவியி னனுக்கிரகத்திற்குப்பாத்திரமாய அவனுடைய புத்திரன் முதலியோர்களை அவனை யுணருகின்றார்கள். அதுபோல எனதனுக்கிரகபாத்திரர்களாகிய எனதன்பர்களொழிந்த மற்றனைவரும் எனது மாயையால் மோகிக்கப்பட்டவர்களாய் என்னை யுணரார்கள். மற்றே, எனது பக்தர்களை உள்ளவாறுணர்வார்கள். இதனினை, எனதுண்மை வடிவினுணர்வின்மையால் என்னையுமொரு மனிதனென்று ஆராதியாது இந்திரன் முதலிய தேவர்களை ஆராதிக்கின்றார்கள். ஈண்டு, 'மாம்து' என்பதிலுள்ள து-என்னுஞ் சப்தத்தால் தமதபக்தர்களிடத்துப் பரமேசுர விடயகஞானத்தின்

கடையைக் குறிப்பித்தருளினர். அதாவது, யாதேனு மொரு தடையின்வசத் தால் அவ்வபக்தர்கள் என்னை உள்ளவாறுணர்வதில்லை என்பதாம். (26)

(அ-கை.) ஆண்டுப் பரமேசுரனது உண்மைவடிவத்தின் ஞானப் பிரதிபந்த கத்தில் முற்கூறிய யோகமாயை காரணமெனக் கூறப்பட்டது. இப்போது அதில் தேதேகந்திரியாதிகளின் அபிமானநிசயபூர்வகம் போகாபினிவேசவடிவ மற்றோ ரேதுவை அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஊஹாபோஹரூபேண ஜம்புரொஹக ஹாரத ।
லவ-ஹ்மதாநி லம்ரொஹம் லமெ-ஃ யாஞ்ஜி வாஜ்ஜவ ॥ (27)

ப-ம். 5 ஊஹாபோஹரூபேண 6 ஜம்புரொஹக 1 ஹாரத 3 லவ-ஹ்மதாநி 7 லம்ரொஹம் 4 லமெ-ஃ 8 யாஞ்ஜி 2 வாஜ்ஜவ.

(அ-ம்.) ஹே பாரத! பரந்தப! இச்சர்வபூதப் பிராணிகளும் தூலவுடலுண் டாயதன்பின்னர் இச்சாத்துவேஷங்களாலுண்டாக்கப்பட்ட சீதோஷ்ணாதி துவந் துவ நிமித்தக மோகத்தால் நன்கு மோகத்தையடைவர்கள். (27)

(வி-ம்.) பரதவம்சத்திற் றோன்றினவனும் சத்துருக்களைக் கெடுப்பவனு மாகிய ஹே அர்ச்சுன! அனுகூலவஸ்துவை விடயம்பண்ணுவதான இப்பொ ருள் எனக்குக் கிடைக்கவேண்டும் என்னும் இச்சையும், பிரதிகூல வஸ்துவை விட யம்பண்ணப்பட்ட இப்பொருள் எனக்குக் கிடைக்காதொழிக என்னும் துவேஷ மும், அவைகளாலுண்டான சீதோஷ்ண சுகதுக்க பசிதாகமுதலிய துவந்துவ தருமங்களைக் காரணமாகவுடைய நான் சுகி, நான் துக்கி என்பனமுதலிய விபரியய வடிவ மோகத்தால் இச்சர்வபூதப் பிராணிகளும் தூலவுடல் தோன்றியபின்னர் நித்தியாநித்தியவஸ்து விவேகத்திற்கசையாக்கியவடிவ சம்மோகத்தையடைகின் றார்கள். ஈண்டுப் பாரத பரந்தப என்னும் சம்போதனங்களால் அர்ச்சுனனிடத் துக்குலமகிமையையும் சொரூபத்தாற் சத்தியையும் ஸ்ரீ பகவான் கூறியருளி அவ னிடத்திலிதைக் குறிப்பித்தருளினர்:—குலமகிமையோடும் சொரூபசத்தியோடுங் கூடிய உன்னைத் துவந்துவமோகவடிவ சத்துருவானது பராஜயப்படுத்துவதில் வலியற்றதாம்; மற்றோ, நீயே அதைப் பராஜயம்பண்ணுவதிற் சமர்த்தன் என்ப தாம். ஈண்டிது ஸ்ரீ பகவானது கருத்தாம்:—இச்சாத்துவேஷங்களற்றவ ரொரு வருமிலர். மற்றோ, அனைவர்களு மவைகளையுடையவர்களே. அவ்விச்சாத்து வேஷங்களோடு கூடியவர்களுக்கு வெளிப்பொருள் விடயகஞானமே அமையா தெனின், அந்தரான்ம விடயகஞானம் எவ்வாறுண்டாம்? மற்றோ, உண்டாகாது. இராகத்துவேஷங்களால் வியாகூலப்பட்ட அந்தக்கரணமுடையவர்க ளாதலின், சர்வப்பிராணிகளும் பரமேசுரனுகிய என்னைத் தமதான்மசொரூபமாய் அறிகின் றிலர்கள். இதனையே ஆராதனைபண்ணற்குரித்தாய என்னையும் ஆராதிக்கின்றார்க ளில்லை. (27)

(அ-கை.) ஹே பகவன்! 'சர்வபூதானி சம்மோஹமாயாந்தி' என்னும் வாக்கியத்தால் தாங்கள் சர்வப் பிராணிகட்கும் சம்மோகப்பிராப்தி கூறியருளினீர் கள், 'சதுர்விதாபஜந்தேமாம்' என்னும் வாக்கியத்தால் ஆர்த்தன்முதலிய நால் வகைப் பக்தர்கட்கும் பரமேசுர பஜனைப் பிராப்தியுங் கூறியருளினீர்கள். இவ் விரண்டும் தம்முள் மாறுபட்ட பொருளையே கூறுகின்றன. இவற்றுள், ஒன்றைப் பிரமாணமாகக்கொள்ளிலோ ஒன்று அசங்கதமாகும் என அர்ச்சுனன் சங்கிப்பச் சர்வ பாபகருமமுமொழிந்து புண்ணியமிகுந்தவர்களென்னை யாராதிக்கின்றார்க ளென்பதை 'சதுர்விதாபஜந்தேமாம்' என்னும் வாக்கியத்தான் முற்கூறினும்.

அவர்களின் விலக்ஷணமானவர்களை 'சர்வபூதானி சம்மோஹம்யாந்தி' என்னும் வாக்கியத்தாற் கூறினுமாதலின், அவ்விரு வாக்கியங்கட்கும் தம்முள் மாறுபாடின்றுமென்றுத்தாமருளுகின்றார்.

சு-ம். யெஷாம் த்வந்த்வமதம் பாபம் ஜநாஸ்தாம் புண்யகர்மணாம் ।
தே த்வம்த்வமோஹநிர்முக்தா பஜந்தே மாம் த்ருடவ்ரதாஃ ॥ (28)

ப-ம். 2 யெஷாம் 1 து 6த்வந்த்வமதம் 5 பாபம் 4ஜநாஸ்தாம் 3புண்யகர்மணாம் 7தே 8 த்வம்த்வமோஹநிர்முக்தாஃ 11 பஜந்தே 10 மாம் 9 த்ருடவ்ரதாஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மற்றும் எப்புண்ணியகருமமுடையோனுக்குப் பாபந் தொலைகின்றதோ, அவன் துவந்துவ மோகமின்றியவனுய்த் திடசங்கற்பமுடையவனுய்ப் பரமேசுரனுகிய என்னை ஆராதிக்கின்றன்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! முற்பிறப்பிற்றேடிய புண்ணியகருமத்தாலடைவுற்ற சபல ஜன்மமுடைய பாவரினும் விலக்ஷணமான அதிகாரிக்கு அவ்வப் புண்ணியகருமத்தால் ஞானத் தடைகளைசமாகவே அவன் பிரதிபந்தகவடிவ பாபங்களொழிந்து துவந்துவமோகம் விடுபட்டவனுய் அதாவது, பாபத்தை நிமித்தமாகவுடைய இராகத்துவேஷாதிகளாலுண்டாகிய நான் சுகி, நான் துக்கி என்பன முதலிய துவந்துவவடிவ மோகத்தால் புனராவிருத்திக்குரித்தல்லனைத் தள்ளப்பட்டவனுய்த் திடவிரதமெனும் அசல சங்கற்பமுடையனுய் அதாவது, எல்லாவாற்றனும் இப்பரமேசுரனே ஆராதிக்கத்தக்கவர், அவர் இத்தன்மையரே என்னும் நூலளவையாலுண்டாகியதாயும், அப்பிராமாணிய சங்கையற்றதாயுமுள்ள ஞானமுடையனுய்ப் பரமேசுரனுகிய என்னை ஆராதிக்கின்றன்; அதாவது, அநன்ய சரணனுய் எனக்கே சேவைசெய்கின்றன் என்பதாம். இத்தன்மைய அதிகாரிகளையே 'சதுர்விதாபஜந்தேமாம்ஜனாஃ சுகிருதிநோர்ச்சுன' என முற்கூறியருளிய வாக்கியத்திலுள்ள சுகிருதிகளென்னுஞ் சத்தத்தாற் கூறியருளினர்; இதனலிப் பொருள் பெறப்பட்டது. 'சர்வபூதானி சம்மோஹம்யாந்தி' என்னும் வாக்கியம் உத்சர்க்கவடிவ (சாமானியவடிவ) மாம். சர்வப்பிராணிகளுக்குள் புண்ணியகருமமுடையவன் அம்மோகமின்றியவனுய்ப் பரமேசுரனுகிய என்னை ஆராதிக்கின்றன் என்னும் அர்த்தத்தை உணர்த்தும் 'சதுர்விதாபஜந்தேமாம்ஜனாஃ சுகிருதிநோர்ச்சுன' என்னும் வாக்கியமும் 'ஏஷாந்த்வந்த்வகதம்பாபம் ஜனாஸ்புண்ய கர்மணாம்' என்னு மிவ்வாக்கியமும் அச்சாமான்யத்தின் அபவாதவடிவ, 'சிறப்புவடிவ' மாம். பொதுவாய் எவ்விடத்தும் பிரவிருத்தியாவது உத்சர்க்கமாம். யாதேனு மோரிடத்திற் பிரவிருத்திப்பது அபவாதமாம். ஆண்டு, எவ்விடத்தில் அபவாதம் பிரவிருத்திக்கின்றதோ அவ்விடத்தில் உத்சர்க்கம்பிரவிர்த்திப்பதில்லை. மற்றே, அதனினும் வேறிடத்திலேயே அவ்வுத்சர்க்கம்பிரவிருத்தியாம். எங்ஙனம், எவ்வுயிரையுங்கொல்லற்க, என்னும் இச் சர்வபூதங்களின் ஹிம்சையின் நிவேதவாக்கியமோ உத்சர்க்க(சாமான்ய)வடிவமாம். அக்நிஷோமசம்பந்தமாய, பசுவைக்கொல்லுக, என விம்மகத்தில் பசு ஹிம்சையை விதிக்கும் வாக்கியமோ அபவாத (சிறப்பு) வடிவமாம். அபவாதஸ்தானத்தே உத்சர்க்கம்பிரவிருத்தி கூடாதாம், மற்றிடத்தே கூடும்; அதாவது, மகமும் பொருமல்லாவிடத்தில் ஒரு பிராணியையுங் கொல்வதொழிக என்பது, சாமான்ய வாக்கியார்த்தமாம். அங்ஙனமே, 'சர்வபூதானி சம்மோஹம்யாந்தி என்னும் சாமான்யவாக்கியத்திற்கும் ஆர்த்தன் முதலிய நால்வகைப் பக்தர்களொழித்து மற்றவரிடத்தே பிரவிர்த்தியுண்டாம். அதாவது, எனது பக்தர்களொழிந்த மற்றனைவரும் சம்மோகத்தை யடைகின்றார்கள் என்பது சாமான்யவாக்கியத்தின்பொருளாம். இவ்விதமாகிய சாமான்யவாக்கியம் முன்னரும் 'திரிபிர்குணமயைர்பாவைரேபிஃ சர்வமிதஞ்சகத்மோஹிதம் நாபிஜா

நாதிமாமேப்யஃ பாமவ்யயம், என்னுஞ் சுலோகத்திற் கூறப்பட்டிருக்கிறது. ஆதலின் இவ்விரண்டு வாக்கியங்கட்குந் தம்முள் விரோதப்படுவதின்றுமென்க. ஆதலின், அந்தக்காரணத்தைச் சுத்திபண்ணப்பட்ட புண்ணிய கருமந்தேடுவான் இவ்வதிகாரி எப்போதும் முயலவேண்டுமென்க.

(அ-கை.) இப்போது மேற்கூறும் அர்ச்சுனனுடைய விண்ணப்பிபருளும்பொருட்டுச் சூத்திரவடிவங்களான இரண்டு சுலோகங்களை ஸ்ரீ பகவானருளிச்செய்கின்றார். மேல் எட்டாவது அத்தியாயம் இவற்றின் விபாக்கியான வடிவமென்றே யுணரற்பாலது.

சு-ம். ஜராமரணமொக்ஷாய மாமாஶ்ரித்ய யதந்தியெ।
தெ ப்ரஹ்ம தத்விதுஃ கிருத்ஸ்னமத்யாத்மம் கர்ம சாகிலம் ॥ (29)

ப-ம். 2 ஜராமரணமொக்ஷாய 3 மாம் 4 ஆஶ்ரித்ய 5 யதந்தி 1 யெ 6 தெ 8 ப்ரஹ்ம 7 தத் 14 விதுஃ 9 கிருத்ஸ்னம் 10 அத்யாத்மம் 13 கர்ம 11 அ 12 சகிலம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பிறப்பிறப்பை யறுத்தற்பொருட்டுச் சகுண பரமேசுரனாகிய என்னை ஆசிரயித்து முயல்பவன் தத்பதவிலக்கியார்த்தவடிவ நிர்க்குணப் பிரஹ்மத்தையும், அபரிச்சின்ன துவம்பதவிலக்கியார்த்தவடிவ ஆன்மாவையும் சிரவணாதி சாதனங்களினத்தையும் உணரவேண்டும். (29)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! மூப்பிறப்பு முதலிய துக்கங்களால் சம்சாரத்தினின்றும் வைராக்கியத்தையடைந்த அதிகாரிகள் மூப்பிறப்பாதி பலவிதமான பேராந்தையை வேரறுப்பான், சகுண பரமேசுரனாகிய என்னை ஆசிரயித்து அதாவது, மற்றனைத்தினும் பராமுகனாகிப் பரமேசுரனாகிய எனது சரணமொன்றையே யடைந்து யத்தனிப்பான்; அதாவது, பலச்சையின்றிச் சாஸ்திரத்தில் விதித்த சுபகருமத்தை எனக்கர்ப்பணமாய்ச்செய்வன் என்பதாம். அவ்வதிகாரி முறையாய்ச் சுத்தாந்தக்காரணமுடையனுய் அப்பிரஹ்மத்தை யுணர்வன்; அதாவது, இச்சர்வப்பிரபஞ்சகாரணமாகிய மாயாதிட்டானவடிவமாயும் தத்பதலட்சியார்த்த வடிவமாயும் சர்வ உபாதிரகிதமாயுமுள்ள நிர்க்குணப்பிரஹ்மத்தை அவனுணர்வன். அங்ஙனமே உடலத்தழுவி ஒளிராநிற்பதால் அத்தியான்மமெனப் பெயருடைய சேர்க்கையாலாய பரிச்சேதங்களினத்துமின்றிய துவம்பதலட்சியார்த்த வடிவப் பிரத்தியக்கான்மாவையும் அவனுணர்வன்; அத்தத் துவம்பதங்களின் லட்சியார்த்த விடயஞானத்தின் சாதனங்களான பிரஹ்மவித்தாக்குருவைக் கிட்டியிருத்தல், சிரவணமனன நிதித்தியாசனமுதலிய ஞானவடிவபலத்தை நியதமாய்க் கொடுக்கப்பட்ட அனைத்தையும் உணர்வன்.

(அ-கை.) அன்றியும்,

சு-ம். ஸாயிஹ்மதாயிதெவம் மாம் ஸாயியஜ்ஞம்ச யெ விதுஃ।
ப்ரயாணகாலெபி ச மாமெ விதுர்யுக்தசெதஸஃ ॥ (30)

ப-ம். 2 ஸாயிஹ்மதாயிதெவம் 5 மாம் 4 ஸாயியஜ்ஞம் 3 அ 1 யெ 6 விதுஃ 9 ப்ர யாணகாலெ 10 சபி, அ 11 மாம் 7 தெ 12 விதுஃ 8 யுக்தசெதஸஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வதிகாரி புருஷர்கள் அதிபூத அதிதய்வ அதியஞ்ஞத்தோடும் பரமேசுரனாகிய என்னைச் சிந்திக்கின்றார்களோ அவர்கள் எனதிடத் தொருமைப்பட்ட மனதுடையர்களாய்ச் சாம்போதும் பரமேசுரனாகிய என்னையே அறிவார்கள். (30)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வாறு எனது பக்தர்கள் மரணகாலத்தே இந்திரியமுதலிய காரணங்களை வயப்படுத்தாமையால் பரமேசுரனுகிய என்னை மறந்துவிடுவார்களென்னும் சங்கையை நீ செய்யற்க. அதிபூத அதிதெய்வ அதியக்ஞங்களோடும் பரமேசுரனுகிய என்னை எப்போதுஞ் சிந்திக்கின்றவர்கள், எப்போதும் எமதிடத் தொருமைமனமுடையர்களாய்ப் பூர்வாப்பியாசசன்னிய சமஸ்கார வலியால் ஆவியகலுங்காலத்திலும் சர்வான்மவடிவாகிய என்னையே யுணர்கின்றார்கள். அதாவது, மரணகாலத்தில் இந்திரியமுதலிய காரணங்கள் ஒருமைப்படாவிடினும் எமது கிருபையாலும் பூர்வாப்பியாச சமஸ்கார வலியாலும் அவர்களுடைய அந்தக்காணவிருத்தி எனதாகாரமேயாம்; மற்றோரனன்மாகாரமாகாதாம். ஆதலின், இவ்வதிகாரிகள் பரமேசுரனுகிய எமது பக்தி யோகத்தால் கிருதார்த்தர்களாகின்றார்கள். ஆண்டு, அதிபூதம், அதிதெய்வம், அதியக்ஞம் என்னுஞ் சத்தார்த்தங்களை ஸ்ரீ பகவான் தாமே எட்டாவதத்தியாயத்தில் அர்ச்சுனன் விஞவாயிலாய் விளக்கியருளுவர். ஆதலின், ஈண்டு அவ்வர்த்தங்களைக் கூறவில்லை என்க. ஆண்டு, இவ்வேழாவது அத்தியாயத்தில் ஸ்ரீ பகவான் உத்தமாதிகாரிகளைக்குறித்து இலக்கணவிருத்தியால் தத்பதப் பிரதிபாத்தியமேனுயப் பிரஹ்மத்தைக் கூறியருளினர்; மத்திமாதிகாரிகளைக்குறித்தோ சக்திவடிவ முக்கியவிருத்தியால் தத்பதப் பிரதிபாத்திய திசியப்பிரஹ்மத்தைத் திருவாய்மலர்ந்தருளினரென்க.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய ஸ்ரீ உத்தவாநந்தகிரி சுவாமிகளது பூஜ்யபாத சிஷ்யராகிய ஸ்ரீ சித்கணனந்தகிரி சுவாமிகளால் இயற்றியருளிய பிரகிருத கூடார்த்ததீபிகையெனப் பெயரிய வியாக்கியானத்தின்

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

எட்டாவது அத்தியாயம்.

ஓம் ஸ்ரீ கணேசாயநமஃ ஸ்ரீ குருப்யோநமஃ ஸ்ரீ காசிவிச்வேச்வராப்யாம்நமஃ
ஸ்ரீ சங்கராசார்யேப்யோநமஃ.

ஆண்டு, முந்திய ஏழாவது அத்தியாயத்தினீற்றில் 'தெவ்ரஹ்மதஹிஉஃகூதம்' என்னும் ஒன்றரைச் சுலோகத்தால் ஸ்ரீ பகவான் ஏழுபொருளை ஞேயவடிவமாய்ச் சூத்திரித்தருளினர். அச்சூத்திரவடிவ வாக்கியத்தாலருளின ஏழுவகைப்பொருளின் வியாக்கியான வடிவமேயாகிய இவ்வெட்டாவது அத்தியாயத்தைத் தொடங்கியருளுகின்றார். ஆண்டு, முன்னர்ச் சூத்திரவடிவ வாக்கியத்தால் சாமான்யமாயுணரப்பட்ட அவ்வெழுவகைப்பொருளையும் மறித்தும் விசேடவடிவமாயுணர விச்சித்து இரண்டு சுலோகங்களால் அர்ச்சுனன் அவற்றை வினவுகின்றான்.

சுஜஃஉக உவாச.

சு-ம். கிம் தத்ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம ।
அதிபூதம் ச கிம் ப்ரோக்தம் அதிதைவம் கிமுச்யதே ॥ (1)

சுயியஜ்ஞஃ கயம் கொத்ர ஒஹெஹ்யஸ்மின்மதுஸூதன ।
ப்ரயாணகாலெ ச கயம் ஜ்ஞேயொஸி நியதாத்மபிஃ ॥ (2)

ப-ம். 5 க்ஷம் 3 தக்ஷ 4 ப்ரஹ்ம 7 க்ஷம் 6 சுயஸ்யாத்மம் 8 க்ஷம் 9 கஉஷ 1 வாஸுதெவ
11 சுயிஹ்மிதம் 10 அ 12 க்ஷம் 13 வ்யாக்தம் 14 சுயிதெவம் 15 க்ஷம் 16 உஅஸ்ய
தெ 18 சுயியஜ்ஞஃ 20 கயம் 19 கஃ 17 சுத்ர 22 ஒஹெ 21 சுஹ்ரிது 2 உயஸ்
மின்மதுஸூத 24 ப்ரயாணகாலெ 23 அ 26 கயம் 27 ஜ்ஞேயஃ 28 சுஹி 25 நிய
தாத்மபிஃ

(அ-ம்.) ஹே சர்வ புருடர்க்குள்ளுஞ் சிரேட்ட மதுசூதன! அப்பிரஹ்மம், அத்தியான்மம், கருமம், அதிபூதம், அதிதெய்வம் என்பவையாவை? அதியக்ஞம் யாது? அஃதெவ்வாறு சிந்திக்கத்தக்கது? அஃதிவ் வுடலில் உள்ளதா உடற்கயலாயுள்ளதா? மரணகாலத்தில் ஒருமைப்பட்ட மனத்தோன் உன்னை எவ்வணமறிவன்?
(1, 2)

(வி-ம்.) ஹே பகவன்! முன்னர் ஞெயவடிவமாய்த் தங்களாற் கூறியருளப்பட்ட பிரஹ்மம் யாது? சோபாதிகமா அல்லது நிருபாதிகமா என்பது முதல்வினு. (1) ஆன்மசம்பந்தமுடைமையின் ஆன்மாவெனப்படும் தெகத்தைத் தழுவியிருப்பது அத்தியான்மமாம். அஃதியாது? அதாவது, சுதொத்திராதிகரணக் கூட்டமா அல்லது பிரத்தியக்சைதன்யமா என்பது இரண்டாவது வினு. (2) 'கர்ம சாகிலம்' என, முன்னர்த் தாங்கள் அருளிய கருமம் யாது? அதாவது, யக்ஞவடிவமா, அல்லது அதற்கன்னியமான பொருளா, 'விஞ்ஞானம் யக்ஞம் தநுதெகர்மாணி தனுதெதபிச' என்னுஞ்சுருதி யஞ்ஞ கருமங்களை வேறுவேறுய்க் கூறுதலின் என்பது மூன்றுவது வினு. (3) பூதங்களை யாசிரயித்திருப்பது அதிபூதம் அஃதெதுவென அருளுகின்றீர்; அதாவது, அதிபூதமென்பதால் தங்கட்கு மண்ணுதிகளைத் தழுவிக்கொண்டிருக்கும் சிறிது காரியம் கூறியருளவிழைவா? அல்லது சர்வகாரியங்களுமா என்பது நான்காவது வினு. (4) தெய்வத்தைத் தழுவிக் கொண்டிருப்பது அதிதெய்வம்; அஃதெதுவென அருளுகின்றீர்? அதாவது தெவதாவிடயத்தியானமா? தெவர்களின் ஆதித்தியமண்டல முதலியவைகளில் கலப்புற்றிருக்கும் சைதன்யமா என்பதைந்தாவது வினு. (5) யக்ஞத்தைத் தழுவிக்கொண்டிருப்பது அதியக்ஞமாம்; அஃதீண்டியாது? அதாவது, யாதானுமொரு தெவதாவிசெடமா அல்லது பரப்பிரஹ்மமா? அவ்வதியக்ஞம் இவ்வதிகாரியால் எவ்வணஞ் சிந்திக்கற்குரித்தாம், அதாவது, தாதான்மியவடிவமாகவா அல்லது முற்றுமபெதமாகவா. அங்ஙனமே, அது எல்லாவாற்றானும் இத்தெகத்திலிருக்கின்றதா, தெகத்திற்கயலாகவா, இத்தெகத்திலெனில் அஃதியாது. புத்தி முதலிய வடிவமா, அதற்கயலா என்பது ஆறுவது வினு. (6) மரணகாலத்தில் இந்திரியங்கள் சிதிலமடைவதால் அப்போதுன்னை ஒருமைமனத்தோன் எவ்வாறுணர்வன்? என்பது ஏழாவது வினு. (7) ஹே பகவன்! தாங்கள் எல்லா மறிந்து பாமகிருபாலுவாதலின் இவ்வர்த்தங்களனைத்தையும் சரணகதனுகிய எனக்கு அருளிச்செய்வீராக. ஈண்டு, நீயு நானு மொப்பாதலின் இவ்வர்த்தங்களை எனதிடத்திற் கேட்பதென்னை? என்னுஞ் சங்கையை நீக்குவான், அர்ச்சுனன், புருஷொத்தமன் எனச் சம்போதனைசெய்து சர்வ புருடர்க்குள்ளும் சர்வக்ஞ முதலிய குணங்களுடைய உத்தமன் புருடோத்தமனுவன் அத்தகைமை தங்கட்குளதாதலின், அறியப்படாதபொருளொன்றில்லை. மற்றிரு, உள்ளங்கை நெல்லிக்கனியெனச் சர்வபொருள்களும் புலப்படக் காணப்பட்டனவேயாம். எனக் கவ்வாறின்றுதலின் தாங்களை அவ்வர்த்தங்களனைத்தையு மருளிச்செய்யவேண்டும் என்பதைக் குறிப்பித்தனன். 'மதுசூதன' என்னுஞ் சம்போதனத்தால் தாங்கள் பரமகிருபை

நலின் மது முதலிய தைத்தியர்களைக்கொன்று மிக வருத்தமுற்றே பத்திரவத்தை நீக்கி யருளுகின்றீர்கள். அத்தன்மைத்தான தங்கட்குறியே எனதையவடிவச் சிறிய உபத்திரவத்தை நிவிர்த்திப்பது தகுதிபதைக் குறிப்பித்தனன். (1,2)

(அகை.) இவ்வாறு இரண்டு சுலோகங்களால் விஞவிய எழுவகை விஞக்கட்கும் ஸ்ரீ பகவான் முறைப்படி மூன்று சுலோகங்களாலுத்தர மருளிச்செய்கின்றார்.

ஸ்ரீஹமவாஹ உவாச.

சு-ம். சகூசுரம் ப்ரஹ்ம வாசம் ஹ்ரஹாவொயஸ்ாத்ஹ உஷயதெ।
ஹ்ரீதஹாவொஹ்வகாரஃ விஸமஃ கஉஃஸம்ஜ்ஞிதஃ॥ (3)

ப-ம் 2 சகூசுரம் 3 ப்ரஹ்ம 1 வாசம் 5 ஹ்ரஹாவஃ 6 சயஸ்ாதம் 4 உஷயதெ 7 ஹ்ரீ தஹாவொஹ்வகாரஃ 8 விஸமஃ 9 கஉஃஸம்ஜ்ஞிதஃ.

(அ-ம்.) அர்ச்சுன! பரமாகூசரம் பிரஹ்மமெனப்படும். சுபாவம் அத்தியான்மமெனப்படும். பூதோத்பத்தி வளர்ச்சிசெய்யும் யாகதான முதலியன கருமமெனப்படும். (3)

(வி-ம்.) ஆண்டெம்முறையாய்ச் சீடனால் வினவப்பட்டனவோ அம்முறையாகவே குரு அவைகட் குத்தரமருளிச்செய்யின் ஆயாசமின்றியே விஞவிய சீடனுக்கு இஷ்டங் கைகூடுமென்னுங் கருத்தால் ஸ்ரீ பகவான் முதற் சுலோகத்தில் மூன்று விஞவிற் குத்தரமும், இரண்டாவது சுலோகத்தில் மூன்று விஞவிற் குத்தரமும், மூன்றாவது சுலோகத்தில் ஒரு விஞவிற் குத்தரமும் அருளிச்செய்தனர். ஆண்டு, பிரஹ்மமென்னுஞ் சத்தத்தால் நிருபாதிகப்பிரஹ்மமே ஈண்டியம்பவேட்கையாம்; சோபாதிகப்பிரஹ்மமன்று என முதல் விஞவிற் குத்தரமருளினர். ஆண்டு, 'அகூசரதி அ கமயீதி சகூசரம்' பொருளிதுவாம். ஞானத்தாலேனும், அஞ்ஞானத்தாலேனும், தேச காலங்களிஞாலேனும், மற்றெப்பொருளிஞலேனும் நாசப்படாதது அகூசரமெனப்படும் என்பதாம். அல்லது, 'சமஸ்த பூதஸ்வஜிதி சகூசரம்' பொருள்: தீ இருப்புப்பிண்டத்தை உள் வெளியிஞும் வியாப்பியம் பண்ணிக்கொண்டிருப்பதுபோல அவ்வியாகிருதமதன் காரியமென்னும் சர்வத்தையும் புறம்பிஞும் உள்ளிஞும் வியாப்பியம் பண்ணிக்கொண்டிருப்பது அகூசரமெனப்படும்; அதாவது, தோற்றமீறற்றதும் யாண்டும் வியாபகமுமாகிய பொருள் அகூசரமென்பதாம். இதையே பிருகதாரண்யோபநிடத்தும் கூறுகின்றது: ஆண்டு, யாக்ஞவற்கியமுனி கார்க்கியைக்குறித்துக் கூறுகின்றார். 'தஜ்ஜெததகூசரம் மாமி-ஃ ப்ராஹ்மணா அபிவதந்தி அஸ்தூலமனணஹ்ரஸ்வமதீர்க்கம்' பொருளிதுவாம். ஹே கார்க்கி! பிரஹ்மவேத்தாவாகிய பிராமணன் இவ்வகூசரத்தைத் தூலத்தன்மையும், அணுத்தன்மையும், இரஸ்வத்தன்மை, தீர்க்கத்தன்மைகளும் இன்றியதெனக் கூறுகின்றனன், எனத்தொடங்கி இடையில் யாக்ஞவற்கியமுனி அக்கார்க்கியைக்குறித்து இவ்வாக்கியத்தைக் கூறுகின்றார்:—

வதஹ்யாகூசரஸ்ய வ்யாகாஸெ மாமி-ஃ।
ஸர்வாயாம்ஸ்ர உஷள வியுதளதிஷம்தஃ நாந்யதொஸ்தி ஸ்ரோஷ்டா॥

(பொ-ள்.) ஹே கார்க்கி! இவ்வகூசரத்தினது ஆணையால் இரவிமதிகள் நியமத்தோடிருக்கின்றன. இதற்கயலாய்த் திருஷ்டா வொன்றில்லை. இதுவே

திருஷ்டாவாம். என இடையிற்கூறி அந்தத்தில் அவ்வியாக்ருவற்கியர் இவ்வாறு முடித்தனர் :—'வனதஹிந-வவுகூஷரெ மாமஃயாகாபபபு ஒதஹுவைராதஹு' பொருள். ஹே கார்க்கி! இவ்வகூஷரத்தில் அவ்வியாகிருதாகாசம் குறுக்கும் நெடுக்குமாம் என, இவ்வணம் தாத்பரியநிண்ணயம் பண்ணப்பட்ட உபக்ரம உபசம்மார முதலிய இலிங்கங்களால் சர்வோபாதிகளின்றியதும், சூரியன் முதலிய உலகனைத்திற்கும் ஆணை தருவதும், அவ்வியாகிருதவடிவ ஆகாசமீறிய உலகனைத்தையுந் தாரணபண்ணுவதும், இத்தேதேகேந்திரியாதிகளில் விஞ்ஞாதாவும் ஆகிய நிருபாதிக சைதன்யமே அகூஷரசத்தார்த்தமெனப் பெறப்படுகின்றது. அதுவே, ஈண்டுப் பிரஹ்மசத்தத்தால் கூறப்பெறும் இவ்வர்த்தத்தை விளக்குவான் அவ்வகூஷரத்திற்கு விசேடணங்கூறுகின்றார். 'பரமம்' என அதாவது, அவ்வகூஷரம் சுவப்பிரகாசபரமானந்த சொரூபமாம், கருத்திதுவாம் :—சூரிய சந்திரர்களின் கியந்தாத்தன்மை சர்வ சடவுலகத்தாரணத்தன்மை சர்வ நிருஷ்டாத்தன்மை முத லியவாய்ச்சுருதியாற் கூறப்பட்ட அகூஷர லிங்கங்கள் பிரஹ்மத்தின்னண்ணே பொருந்துவனவாம். மற்றெப்பொருளினுமன்று. ஆதலின், அவ்வகூஷரம் பிரஹ்ம சொரூபமேயென்க. இது வியாசபகவானாலும் பிரஹ்மசூத்திரத்திற் கூறப்பட்டிருக்கிறது. 'அகூஷரமம்பராந்தயுதேஃ' பொருளிதுவாம். பிருகதாண்யோபநிடதத்தில் அகூஷரம் அவ்வியாகிருதமென்னும் ஆகாசபரியந்தமாயுள்ள உலகனைத்தையுந் தரிக்கின்றதாமெனக் கூறப்பட்டது. அது பிரஹ்மத்தின்னண்ணே பொருந்துவதாம்; மற்றெப்பொருளினுமில்லை. ஆதலின் அகூஷரசத்தத்தால் பிரஹ்மமே கொள்ளற்பாலதென்க.

சங்கை :—ஹே பகவன்! 'ஓமித்யேததகூஷரம்' என்றற்றொடக்கத்துச் சுருதிகளினும், 'ஓமித்யேகாகூஷரம் பிரஹ்ம' என்றற்றொடக்கத்து மிருதிகளினும் ஓங்காரவடிவப் பிரணவமே அகூஷரமெனப்படுகின்றது. உலகத்தினும் அகூஷரசத்தம் எழுத்திற்கிடுகுறியாம். ஆண்டு, 'ஸுபியொ-ஃமஷவஹஸ்ரி' பதத்தின் ரூடிசத்தியோகசத்தியின் பாதகமாம்; என்னும் நியாயத்தால் ரூடிசத்திக்கு அகூஷரம் என அகூஷரம் என்னும் யோகசத்தியினிடம் பிரபலத்தன்மை பெறப்படுகின்றதாத லின் அகூஷர சத்தத்தால் ஓங்காரமே கொள்ளற்பாலது. அல்லது, 'சம்யத்தமே தத்கூஷரமகூஷரஞ்ச' என்பது முதலிய சுருதியில் அவ்வியக்தமும் அகூஷரமெனப் படுகின்றதாதலின் அகூஷர சத்தத்தால் அவ்வியக்தமே கொள்ளற்பாலதாம்.

சமாதானம் :—ஹே அர்ச்சுன! உலகனைத்தின் நியந்தாத்தன்மை, காரணத்தன்மை, நிருஷ்டாத்தன்மை முதலியவாய் மூற்கூறிய அகூஷரலிலிங்கங்கள் ஓங்காரவடிவப்பிரணவத்திலும் மாயாவடிவ அவ்வியக்தத்திலும் பொருந்தாகனவாம். அங்ஙனமே, 'தஷ்யவ்ருகூதிஜீதஷ்ய' என்னுஞ் சுருதி அப்பிரணவத்திற்கும் இலயங்கூறுகின்றது. 'தாதயவிஷ்யாம்விததாம்' என்று மிருதியும் மாயைவடிவ அவ்வியத்தத்திற்கும் நாசங்கூறுகின்றது. ஆதலின், ஈண்டு அகூஷரசத்தத்தால் எழுத்துவடிவப் பிரணவமேனும், மாயாவடிவ அவ்வியக்தமேனுங் கொள்ளற் பாலதன்று. சுருதிமிருதிகளில் பிரணவத்தை அகூஷரமெனக்கூறியது நித்தியத் தன்மையைக்கொண்டன்று; மற்றோர், சத்தியமான பிரஹ்மத்தை அடைவிக்கும் ஞானத்தைச் சுருதியில் சத்தியமெனக்கூறியதேபோல, அகூஷரப் பிரஹ்மத்தின் வாசகமானதால் பிரணவத்தையு மகூஷரமெனக்கூறியதாம். இவ்வாறு சுருதியில் அவ்வியத்தத்தை அகூஷரமெனக்கூறியது, அதன் நித்தியத்தன்மையைக்கொண் டன்று; மற்றோர், தனது காரியாபேட்சையால் அவ்வியக்தம் நெடுநாளிருப்பது பற்றி அகூஷரமெனப்பட்டது. 'கூஷரம்பிரதானமம்ருதாகூஷரம்ஹர' என்னுஞ் சுருதி பிரதானவடிவ அவ்வியத்தத்திற்கு நாசத்தன்மையையும் பரப்பிரஹ்மத் திற்கு அகூஷரத்தன்மையையுங் கூறுகின்றது. அன்றியும், மூற்கூறின உலககார

ணத்தன்மை முதலிய அக்ஷரத்தின் இலிங்கங்கள் எழுத்துவடிவப் பிரணவத்திற் கேலாதனவாமாதலின், ஈண்டு, அக்ஷராசத்தத்தின் யோகசத்தியே ரூடிசத்தியி னும் பிரபலமாம். அக்ஷராசத்தத்தால் தோற்றமீறின்றிய சைதன்யமே ஈண்டு கொள்ளற்பாலது; பிரணவமேனும் அவ்வியத்தமேனுங் கொள்ளற்பாலதன்று. அப்பிரணவாவ்வியத்தங்களை நீக்குதற்கே ஸ்ரீ பகவான் அக்ஷரத்திற்கு 'பரமம்' என்னும் விசேடமருளினர். இதுவரையிலும், 'கிந்தத்ப்ரஹ்மம்' என்னும் முதல் வினாவிற்குத்தரங்கூறியருளியதாம். இப்போது 'கிமத்தியாத்மம்' என்னும் இரண் டாவது வினாவிற் குத்தரமருளுகின்றார். 'ஹ ஹாவொயஸ்ய ஸ்யாத் ஸ ஏஸ்ய தே உதி' ஹே அர்ச்சுன! முற்கூறிய அக்ஷரப்பிரஹ்மத்தின் சுபாவம். அதாவது, அதனது சொரூபபூத பிரத்தியக்சைதன்யமே இத்தேகவடிவ மித்தையான்மாவை ஆசிர யித்துப் போக்தாவடிவாயிருந்து அத்தியான்மமெனப்படுகின்றது. அதற்கயலான சுரோத்ராதி கரணக்கூட்டங்களன்று, இஃதிரண்டாவது வினாவிற் குத்தரமாம். (2) இப்போது 'கிம்கர்ம' என்னும் மூன்றுவது வினாவிற்குத்தரமருளுகின்றார். 'விஸர்கஃ கஸ்ஜ்ஞிதஃ' உதி ஹே அர்ச்சுன! இந்திரன் முதலிய தேவதைகளை யுத்தேசித்துத் திரவியத் தியாகவடிவயாகம், வைதிகத்தீயில் நெய் கோதுமை முதலிய பதார்த்தங்களின் பிரக்ஷேபவடிவ ஹோமம், அந்தணர்கட்குப் பொன் முதலிய வளித்தல் வடிவதானம் என்னும் இம்மூன்றனுள்ளும் தியாகவடிவம் அநுகதமாம். ஆதலின், தியாகவாசகமாகிய விசர்க்க சத்தத்தால் இம்மூன்றுங் கொள்ளற்பாலனவாம். இவைகளை ஈண்டுக் கருமசத்தத்தாற் கூறப்பட்டன, உதாசீனக்கிரியைமாத்திர மன்று. அத்தியாகவடிவ விசர்க்க மெப்படிப்பட்ட தெனின் பூதபாவோத்பவகாமாம்; அதாவது, தாவாசங்கமவடிவ பூதங்களின் உத்பத்திவடிவபாவம் விருத்திவடிவ உத்பவம் என்னு மிரண்டையுஞ்செய்யப்பட் டது. யஞ்ஞ ஹோமாதிகளினுனே, சர்வ பூதங்களின் உத்பத்திவிருத்தி சுருதி மிருதியில் விளக்கமாம்.

ஆ-மி. ஸுஸூள வ்ராஹ்மணாஹ் ஸஸ்யமாஹிதஸ் ஸுவதிஷ்டதெ।
சூஹிதஸ்ராஜ்ஜாயதெ வஷ்டிவ்ரஃவ்ருஷ்டாந்நம் ததஃப்ரஜாஃ॥

(பொ-ள்.) வைதிகத்தீயில் அன்போடு போடப்பட்ட ஆகுதியானது நுண் ணிபவடிவமாய்ச் சூரியமண்டலத்தினிலத்திருக்கின்றது. அவ்வாகுதியோடுகூடிய சூரியனிலிருந்து நீரின் விருஷ்டியுண்டாகின்றது. அதிலிருந்து நெல் முதலியன வும், அதிலிருந்து தாவாசங்கமவடிவப் பிரஜைகளுமுண்டாகின்றன. அவ்வன்னத் தானே அப்பிரஜைகள் விருத்தியடைகின்றன. இவ்வாறு பரம்பரையாய் யஞ்ஞ ஹோமாதிகளை சர்வ பூதங்களின் உத்பத்திவிருத்திகட்குக் காரணங்களாம். இவ் வர்த்தத்தையே 'தேவா ஏதே ஆகுதி உத்கிராமந்தஃ' என்னுஞ் சுருதியுங் கூறு கின்றதென்க. ஒரு வியாக்கியானத்தில் 'பூதபாவோத்பவகரஃ' மனுஷ்யாதி பூதங் களின் சாத்துவிக ராசதவடிவபாவமும் உத்பத்திவடிவ உத்பவமுஞ் செய்கின்றது எனவாம். ஆண்டு, பூதங்கட்கு யஞ்ஞாதிகளினின்று முத்பத்தியோ அக்நௌபி ராஸ்தாகுதி, எனக் கூறிப்போந்த மிருதிவாக்கியத்தானே சித்தமாம். பூதங்களின் சாத்துவிக முதலிய பாவங்கட்குக் கருமத்தினின்றும் உத்பத்தியும் புத்தி கரு மானுசாரமாகவுடையது; அதாவது, தனது கருமானுசாரமாகவே சாத்துவிக ராசதபுத்தியுண்டாகின்றது, என்னும் மிருதிவாக்கியத்தாற் சித்தமாம் எனப் பொருள்கொள்கின்றனர். ஒரு வியாக்கியானத்தில் 'பூதபாவோத்பவகரஃ' என்ப தற்கு பூதவடிவமாகிய பாவத்தையே பூதபாவமென்பர்; அதாவது, தாவாசங்கம வடிவ பதார்த்தங்களை பூதபாவங்களாமென்க. அத்தன்மைய பூதபாவத்தை யுண் டாக்குவது பூதபாவோத்பவகரம் எனப் பொருள் கூறுகின்றனர். இது மூன்று வது வினாவிற் குத்தரமாம்.

(அ-கை.) ஆண்டுப் பூர்வ சுலோகத்தில் பிரஹ்மம் அத்தியாத்மம் கருமம் யாதென்பதற் குத்தரங்கூறியருளப்பட்டது. இப்போது அதிபூதம், அதிதெய்வம், அதியஞ்ஞம் எது. என்னு மூன்று விஞக்கட் குத்தரமருளிச்செய்கின்றார்.

சு-ம். சுயிஹ ூதம் கூஷிரொ ஹாவஃ வ ூர ூஷ்டூாயிஷெவதம் ।
சுயியஜ்ஞோஹதெவாதர தெஹெ தெஹஹ்ருதாம் வர ॥ (4)

ப-ம். 5 சுயிஹ ூதம் 3 கூஷிரஃ 4 ஹாவஃ 7 வ ூர ூஷஃ 6 அ 8 சுயிஷெவதம்
9 சுயியஜ்ஞ ஃ10 சுஹம் 11 ஹவ 12 சுதர 13 தெஹெ 1 தெஹஹ்ருதாம் 2 வர.

(அ-ம்.) ஹே சர்வப்பிராணிகட்குள்ளும் சிரேஷ்டனுகிய அர்ச்சுன ! நாசப் படுபொருள் அதிபூதமெனப்படும். இரணிய கருப்பனென்னும் புருஷன் அதி தெய்வமெனப்படுவன். விஷ்ணுவடிவ அதியக்ஞம் வாசுதேவனுகிய நானே. அவ் வதியஞ்ஞம் இம்மனுடதேகத்தின்கண்ணே யுளதாம். (4)

(வி-ம்.) ஹே அர்ச்சுன ! நாசப்படுபொருள் கூரமாம். தோற்றப்படு பொருள் பாவமாம், உத்பத்தி விநாசங்களையுடைய பொருள்களனைத்தும் சர்வப் பிராணி மாத்திரவடிவ பூதத்தை யாசிரயித்தேயுண்டாகின்றனவாதலின் அதிபூத மெனப்படும். அற்பமானபொருள் அதிபூதமெனப்படாது. இது நான்காவது விஞவிற் குத்தரம். (4) இப்போது அதிதெய்வம் யாது என்னும் ஐந்தாவது விஞ விற் குத்தரமருளுகின்றார். 'புருஷச்சாதிதைவதம்' என. ஆண்டுச் சர்வகாரி யங்களும் எதனுற் பூரணிக்கப்படுகின்றனவோ அது புருஷனும். அல்லது சரீர வடிவ சர்வ புரங்களிலுமிருப்பது புருஷனும். அத்தன்மைய புருஷன் இரணியகருப் பனுவன். அவன் சமட்டிலிங்க சொரூபனும் சூரியன் முதலிய வடிவங்களால் வியட் டியாகிய காரணங்கட் கனுக்கிரகம்பண்ணுபவனும் 'ஆத்மைவேதமக்ர ஆசீத்புருஷ விதஃ ஸ்ரிரண்யகர்ப்பஃ சமவர்த்ததாக்ரே பூதஸ்ய.' என்பது முதலிய சுருதியாற் கூறப்படுபவனும். அன்றியும்,

ஸவைஷரீரீ வ்யஷஃ ஸவைவ ூர ூஷ உச்யதெ ।
சூஷிகுதா-ஃஸ ஹ ூதாகாம் ப்ரஹ்மாத்ரஸஃ வதத-ஃத ॥

என்னு மிருதியானுங் கூறப்படுபவனும், ஆதித்தன் முதலிய தேவதைகளை யாசி யித்துச் சட்சு முதலிய காரணங்கட்கு அநுக்கிரகம் பண்ணுபவனுமாவதனுலின் அவ் விரணியகருப்பனே அதிதெய்வமெனப்படுவன். தேவதாவிஷயகத்தியான முதலியவைகள் அப்பெயரினவாகா. ஈண்டுப் 'புருஷச்ச' என்பதிலுள்ள சகாரத் தால் அவன் சுருதிமிருதிப் பிரசித்தனனெனக் கூறப்பட்டனன். ஓரு உரையில் அச் சகாரத்தால் சுரேசாத்திர முதலிய பதிஞன்கு காரணங்களின் பிரவர்த்தகங்களாகிய திசைகாலிரவி முதலிய பதிஞன்கு தேவதைகள் கொள்ளப்பட்டன. அதாவது, இரணியகருப்ப புருஷனும் திசைகாலிரவியாதி தேவதைகளனைத்தும் அதிதெய்வ மெனப்படுமென்பதாம். இது ஐந்தாவது விஞவிற்குத்தரம். (5) இப்போது, 'அதி யஞ்ஞஃகஃ' என்னும் ஆருவது விஞவிற்குத்தரமருளுகின்றார். 'அதியஞ்ஞோஹம்' என, ஆண்டுச் சர்வ யஞ்ஞங்கட்கும் அதிட்டானத்தன்மைவடிவாயும் சர்வயஞ்ஞ பலனைத் தருபவராயும் சர்வ யஞ்ஞங்களின் அபிமானியாயும் உள்ள விஷ்ணுதே வ கூறிப்போந்த விசர்க்கவடிவ யஞ்ஞத்தை யாசிரயித்திருத்தலின் அதியஞ்ஞமெனப் படுவர். "யஞ்ஞோவை விஷ்ணுஃ" என்னுஞ்சுருதியும் அங்ஙனமே கூறுகின்றது. அத்தன்மைய அந்தரியாமியாகிய விஷ்ணுவடிவ அதியஞ்ஞம் வாசுதேவனுகிய நானேயன்றி மற்றொன்றில்லை. இத்துணை கூறியதால் ஆருவது விஞவில் 'கதம்' எப்படி, என்னுஞ் சத்தத்தாற்கூறப்பட்ட அதியஞ்ஞம் தாதான்மியவாகமோ அல்

லது, அபேதமாகவோ தியானிக்கத்தக்கதென்னும் ஐயப்பாடுமொழிந்ததாம்; அதாவது, அப்பரப்பிரஹ்மவடிவவிவிஷ்ணு அத்தியந்தம் அபேதமாகவே சிந்திக்கத்தக்கவராமென்க. அத்தன்மைய விஷ்ணு இம்மநுடதேகத்தின்கண்ணேயஞ்ஞவடிவமாயிருக்கின்றனர். வியாபகமானதால் பரிச்சின்னமான புத்தி முதலியவைகளினும் பின்னமாம். இதனினே, அவ்வதியஞ்ஞம் தேகத்திலுள்ளதோ அல்லது இதனின் வெளியிலுள்ளதோ. தேகத்திலிருப்பினும் புத்தியாதிவடிவமோ அவைகளின் வேறோ என்னும் சந்தேகங்களு நீங்கினவாம். அதாவது, அதியஞ்ஞவடிவ விஷ்ணு யஞ்ஞவடிவத்தா லிவ்வுடலின்கண்ணேயிருக்கின்றார். புத்தி முதலிய வடிவங்களல்லர் என்னு முத்தாஞ்சித்தமானது. ஈண்டு, இம்மனுடதேகத்தானே அவ்வத்துப்பெறப்படுகின்றது; மற்றைய தேகங்களாலின்று. ஆதலின், இம்மனுடதேகத்தின்கண்ணே உள்ளதெனக் கூறப்பட்டது. ஆண்டு, ஹே தேகபிருதாம்வர! அதாவது சர்வ பிராணிகட்குள்ளுஞ் சிரேஷ்டனுகிய அர்ச்சுன, என்னுஞ் சம்போதனமானது ஒவ்வொரு கணத்திலும் பரமேசுரனுகிய எனது சம்பாஷணையால் கிருதகிருத்தியனுகிய நீ எனது உபதேசத்தை யுணர்தற்குரியோன் என, உத்சாகப்படுத்தும்பொருட்டாம். இது, ஆறுவது விஞவிற் குத்தரமாம். (4)

(அ-கை.) 'வ்ரயாணகாலெ கயம் ஜ்ஞயொவி' அதாவது, ஒருமைப்பட்ட மனத்தோன் மாணகாலத்தில் எவ்வாறும்மை யுணர்வன் என்னும் விஞவிற் குத்தரமருளிச்செய்கின்றார்.

சு-ம். சுஜ்ஜகாலெ அ ஸரெவ ஹ்ருதா கயெவரு।
ய: வ்ரயாதி ஸத்யாவம் யாதி நாஸ்த்யத்ர ஸம்ஸய: ॥ (5)

ப-ம். 2 சுஜ்ஜகாலெ 3 அ 4 ஸர 5 ஸவ 6 ஹ்ருத 8 ஸ்ரீகா 7 கயெவரு 1 ய:
9 வ்ரயாதி 10 ஸ: 11 ஸத்யாவம் 12 யாதி 15 ந 16 சுஹி 13 சுத்ர 14 ஸம்ஸய:.

(அ-ம்.) எவன் மாணகாலத்திலும் பரமேசுரனுகிய என்னையே சிந்தித்து இவ்வுடலை விட்டேகின்றானே அவன் பரமேசுரனுகிய எனது சொரூபத்தையே அடைகின்றான்; இதிற் சிறிதுமையமில்லை. (5)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அதியஞ்ஞவடிவச்சகுணப்பிரஹ்மமாகிய என்னையேனும், பரம அக்ஷரவடிவ நிர்க்குணப்பிரஹ்மமாகிய என்னையேனும் சிந்தித்து அச்சிந்தனையின் வலியால் சுரோத்திர முதலிய காரணங்கள் சிதிலத்தன்மையையடைந்த மாணகாலத்திலும் ஸ்மரணை பண்ணிக்கொண்டு இவ்வுடலை விடுத்து; அதாவது, இவ்வுடலில் நானெனதென்னு மபிமானத்தைவிடுத்து ஆவி நீங்குங் காற்செல்பவன் என்னையே யடைகின்றான்; அதாவது, நிர்க்குணப் பிரஹ்மபாவத்தை யடைகின்றான். ஆண்டுச் சகுணத்தியானபக்ஷத்திலோ 'அக்னிர்ஜ்யோதிரஹ: சுக்ல' என்பது முதலிய மேற்கூறுஞ் *லோகத்தால் கூறப்படுந் தேவயானமார்க்கமாய்ப் பிரஹ்மவுலகத்தையடைந்து அவ்வுபாசகன் இரணியகருப்பவுலகத்தை யனுபவித்து அந்தத்தில் நிர்க்குணப்பிரஹ்மத்தையே யடைகின்றான். நிர்க்குணப் பிரஹ்மசொரூப ஸ்மரணபக்ஷத்தில் இவ்வுடலைவிட்டேகின்றான் என்பது கேவலம் உலகதிருஷ்டியினபிப்பிராயத்தாலென்றுணர்க. என்னை, நான் பிரஹ்மசொரூபம் என நிர்க்குணப்பிரஹ்மசாக்ஷாத்காரம் வந்தவனது பிராணன், மாணகாலத்தில் தேகத்திற்கு வெளியிற்செல்வதின்றும்; அஃதின்றேல் வேறுலகத்தையடைதல் யாங்ஙனம்? இது, சுருதியிலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. "தஸ்யைவாணா உத்க்ரமணாயைவ ஸ்ரீவ ஹ்ருவ மீயதெ"

(பொ-ள்.) பிரஹ்மவேத்தாவின் பிராணன் இவ்வுடலின் வெளியிற் செல்வ தில்லை; மற்றே, இவ்வுடற்குள்ளே அதிட்டான சைதன்யத்தில் லப்பாவத்தை யடைகின்றது. அத்தன்மைய பிரஹ்மஞானி நேரே நிர்க்குணப்பிரஹ்மபாவத்தை யடைகின்றன். சுருதியும் 'ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ', அத்தத்துவ வேத் தாவானவன் பிரஹ்மமாகியே பிரஹ்மத்தையடைகின்றன் எனக் கூறுகின்றது. தேகத்தின் வேறாக ஆன்மாவிருப்பதிலும் நிர்க்குணப்பிரஹ்மத்தை யடைவதி லும் சிறிது மையமின்றும்; அதாவது, ஆன்மாத்தேகத்திலும் பின்னமா அலவா, பின்னமாயிலும், ஈசுரனினின்றும் பின்னமா, அபின்னமா என்னுஞ் சந்தேகஞ் சிறிதேதனு மில்லை யென்பதாம். தத்துவ சாக்ஷாத்காரத்தின்பின்னர் 'சித்யந்தே சர்வசம்சயாஃ, என்னுஞ் சுருதியால் சர்வ சம்சயநிவிருத்திகூறப்பட்டிருக்கிறது. ஈண்டு, 'கலேவாமுக்த்வாபிரயாதி' என்னும் வாக்கியத்தாலோ ஸ்ரீ பகவான் சீவான்மா, இத்தேகத்திலும் பின்னமாமென வருளினர். 'மத்பாவம்யாதி' என் பதாலோ சிவனுக்கு ஈசுரனீண்டு அபேதங்கூறியருளினர். இச்சீவப்பிரஹ்மா பேதத்தையே தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களுங் கூறுகின்றன. இஃதேதழா வது விஞவிற் குத்தாம். (5)

(அ-கை.) அந்த காலத்தில் பரமேசுரத்தியானம் பண்ணுபவன் அப்பரமே சுரனையே அவசியமடைவன் என முற்கூறிய அர்த்தத்தையே விளக்குவான் வேறு தேவதைகளைத் தியானம் பண்ணுபவர்க்கும் நியமமாய் அவ்வத்தேவதாப்பிராப் தியை அருளுகின்றார்.

சு-ம். யம் யம் வாபி ஸ்மரன்பாவம் த்யஜத்யந்தே கலேவரம் ।
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவபாவிதஃ ॥ (6)

ப-ம். 5 யம் 6 யம் வா 7 ஸ்மரி 9 ஸ்மரன் 8 பாவம் 11 த்யஜதி 4 அந்தே 10கலேவரம் 12 தம் 13 தம் 14 மேவ 15 மதி 1 கௌந்தேய 2 ஸதா 3 தத்பாவபாவிதஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எப்போதும் எவ்வெத்தேவதாவிஷயகபாவனை யுடையனாய் மரணகாலத்திலுமெவன் எவ்வெத்தேவதைகளை ஸ்மரித்துக்கொண்டு இவ்வுடலை விடுகின்றனோ அவன் அவ்வத்தேவதா பாவத்தையே யடைகின்றன்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! மரணகாலத்தில் பரமேசுரனாகிய என்னை ஸ்மரித் துக்கொண்டு எனதுபாவத்தையேயடைகின்றன் என்பதே நியமமன்று; மற்றே, அக்காலத்திலெவன் எவ்வெத்தேவதா விசேடத்தையேயனும் வேறுபிரியாப் பிரிய மான பொருளையேயனும் ஸ்மரித்துக்கொண்டு சரீரத்தைவிடுகின்றனோ அவன் அம் மரணத்தின்பின்னர் அவ்வப்பாவத்தையே யடைகின்றன்; மாறுயின்று. ஈண்டிதுகருத்தாம்: நிரந்தரம் ஒரு பொருளைத் தியானிப்பவனுக்கு அத்தியானபலத் தால் வேறு தேகத்தையடையாமலே இச்சீவனகாலத்தில் அப்பொருட்பிராப்தி யாதேனு மோரிடத்துக்காணப்படுகின்றது; குளவியைநினைத்த பசும்புழுவைப் போலும். அன்றியும் நந்திகேசுரர் இடைவிடாது இறைவனைச்சிந்தித்து வே றுடலையெடாது அவ்விறைவனுக்கொப்பான வடிவத்தையடைந்தனர்; இது நூற் பிரசித்தம். அவ்வப்பொருளைச் சிந்திப்பவரும் சீவித்திருக்கும்போதே அத்தியான வலியால் தியானித்த அவ்வப்பொருளை யடைவரெனின் அவ்வத்தேவதா விசே டத்தை இடைவிடாது தியானிப்பவர் மரணத்தின்பின் அவ்வத்தேவதா விசேடத் தையடைவதிற் கூறற்பாலதென்னை. அக்காலத்தில் அவ்வவற்றின் ஸ்மரணமெழல் கூடாதாயினும் பூர்வாப்பியாசசமஸ்காரவடிவ வாசனையே அந்த ஸ்மரணத்திற்குக் காரணமாம் இவ்வர்த்தத்தை ஸ்ரீ பகவானருளுகின்றார்: 'சதா தத்பாவபாவிதஃ' என. ஆண்டு, மரணத்தின் முன்னிடைவிடாதுசெய்த அவ்வத்தேவதாபாவ

ஞசன்னியசமஸ்காரவடிவவாசனை தத்பாவமாம், அதையுடையவன் தத்பாவபாவி தன்; அதாவது பூர்வாப்பியாச சமஸ்காரபலத்தானே அக்காலத்தில் அவனுக்கு அவ்வத்தேவதாஸ்மரணமுண்டாகிறது. ஈண்டு, ஹே கௌந்தேய! என்னுஞ் சம்போதனத்தால் அர்ச்சுனனிடத்துத் தமது பிதாவின் சகோதரி புத்திரத்தன்மையைக்கூறியருளிச் சினேகாதிசயத்தைக் குறிப்பித்தருளுகின்றனர். இதனானே, பரமேசுரனுகிய நான் அவசியமாய் உனக் கனுக்கிரகிப்பேன் என்னுமர்த்தங் குறிப்பித்தருளப்பட்டது. இதனானே, ஸ்ரீ பகவான் என்னை வஞ்சிக்கின்றீர் என்னுஞ் சங்கை இன்றென்பதுங் குறிப்பித்தருளப்பட்டது. ஈண்டு ஒரு வியாக்கியானத்தில் 'யம்யம்சாபி' என, மூலபாடங்கற்பித்துக்கொண்டு 'யம் யம்' என்பதால் அவ்வத்தேவதாவிசேடமே கொள்ளப்பட்டது; சகாரத்தால் வேறு பொருள் கொள்ளப்பட்டது. ஆனாலோ, பல மூலகிரந்தங்களில் 'யம்யம்வாபி' என்பதே பாடமாதலின் அதுவே ஈண்டெழுதப்பட்டதென்க. (6)

(அ-கை.) ஹே அர்ச்சுன! பூர்வஸ்மரணப்பியாசசன்ய மரணகாலத்திய அந்தியபாவனையே அக்காலத்திற் பாவசமாகியவனுடைய தேசாந்தரப்பிராப்தியில் காரணமாதலினால் நீயும் அவ்வந்தியபாவனையுண்டாதற்கு எக்காலத்தும் என்னையே சிந்திப்பாய் என்னு மர்த்தத்தைப் பகவானருளுகின்றார்.

சு-ம். தஸ்மாத்ஸர்வேஷு காலேஷு மாமநுஸ்மர யுத்ய ச।
மய்யர்பிதமநோபுத்திர்மாமேவைஷ்யஸ்யஸம்ஸயம் ॥ (7)

ப-ம். 1 தஸ்மாத் 2 ஸர்வேஷு 3 காலேஷு 4 மாம் 5 அநுஸ்மர 7 யுத்ய 6 ச 8 மயி 9 அர்பித மநோபுத்திர்மாம் 10 மாம் 11 ஏவ 12 ஏஷ்யஸி 13 அஸம்ஸயம் உதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஆதலின் எப்போதும் எனது சிந்தனத்தையும் யுத்தத்தையும் செய்தி. எனதிடத்தர்ப்பணம்பண்ணிய மனமுடைய நீ பரமேசுரனுகிய என்னையே அடைவாய். இதிற்சிறிது மையமின்றும். (7)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! கூறிப்போந்தவாற்றால் முந்திய அப்பியாசசன்னிய அந்தியபாவனையே வேறு தேகமெடுப்பற்குக் காரணமாதலின், எனது விஷயக அவ்வந்தியபாவனையுண்டாதற்கு நீயும் அம்மரணத்தின் முன்னரே இடைவிடாதன்போடுஞ் சகுணப்பிரஹ்மமாகிய என்னையே சிந்திப்பாய். ஒருகால் உனதுள்ளம் நிர்மலமின்மையின் இடைவிடாதென்னைச் சிந்தித்தற்கேலாதெனினோ, அவ்வந்தக்காணுஞ் சுத்தமாதற்பொருட்டு யுத்தத்தைச்செய்தி. ஈண்டு யுத்தமென்னுஞ் சத்தம் தனது வர்ணாச்ரம சர்வநித்திய நைமித்திககருமங்கட்கும் உபலட்சணமாம். பிரசங்கத்தில் முன்னர் யுத்தமே பிராப்தமாதலின் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனை யுத்தஞ்செய்தி என விதித்தருளினர்; அதாவது, அந்தக்கரண சுத்தியாதற்பொருட்டு நீ யுத்த முதலிய நித்திய நைமித்திகருமங்களையே செய்தி. அதனால், அந்தக்கரணஞ் சுத்தமான இன்பின்னர் எனதிடத்தில் மனோபுத்திகளை அர்ப்பணம் பண்ணிய நீ, அதாவது எப்போதும் எனது சிந்தனபரனுகிய நீ என்னையே அடைவாய்; இதிற் சிறிது மையமில்லை. சகுணப்பிரஹ்மோபாசகர்கட்கே பகவானிஃதருளினர்; அவர்க்கு அந்தியகாலபாவனை அவசியமாமாதலின் என்க. நிர்க்குணப்பிரஹ்மசாக்ஷாத்காரமுடைய தத்துவஞானிக்கோ அக்காலத்திலே அஞ்ஞானநிவர்த்திவடிவ முத்திசித்தமாமாதலின் அவனுக்கு இவ்வந்தியபாவனையை அவாவுதல் யாங்ஙனமாம்? ஈண்டுச் சிந்திக்கப்படுபொருள் வடிவச்சித்தவிருத்திபாவனையாமென்றுணர்க.

(அ-கை.) இவ்வண்ணம் அர்ச்சுனனது எழுவகைவினுக்கட்கும் உத்தரமருளிச்செய்து மரணகாலத்திய பரமேசுரஸ்மரணத்திற்குப் பயனுங்கூறியருளினர். அவைகளைவிரித்துக் கூறியருள ஸ்ரீ பகவான் தொடங்கியருளுகின்றார்.

சு-ம். ஸுஹ்ருல்லொமயுக்தெந ஸெதஸா நாந்யமாஶிநா।
வாயோ வாயுஷ்மம் ஹிவ்யம் யாதி வாயுஷ்நாவிஜயது ॥ (8)

ப-ம். 3 ஸுஹ்ருல்லொமயுக்தெந 5 ஸெதஸா 4 நாந்யமாஶிநா 6 வாயோ 8 வாயுஷ்மம் 7 திவ்யம் 9 யாதி 1 வாயுஷ் 2 ஸுநவிம்தயது ஜநி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இடைவிடாது பரமான்மாவைச் சிந்தித்து இவன் அப்பியாசவடிவ யோகமுடையதும் பிறவிடயத்திற் செல்லாததுமாகிய மனத்தால் பரம திவ்ய புருஷனையடைகின்றான்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன குருநூலுபதேசத்தின் பின்னர் நிரந்தரம் பரமான்மாவைச் சிந்தித்துச் சித்தத்தாற் சுத்தான்மாவையடைகின்றான். சித்தத்தில் அஃதடையும் யோக்கியத்தன்மையை யறிவுறுத்துவான் அதை விசேடித்தருளுகின்றனர். 'அப்பியாசயோகயுக்தேந நான்யகாமிநா' என, ஈண்டுப் பரமேசுரனிடத்திலுறும் விஜாதீயவிருத்தி மறைப்பற்ற சஜாதீய விருத்திப்பிரவாஹம் அப்பியாசமாம். அஃதாறுவது அத்தியாயத்தில் விரிவாய்க் கூறப்பட்டது. அதுவே சமாதி வடிவயோகமாம். அஃதேதாடுகூடிய சித்தம் அதாவது, அநான்மாகாரவிருத்திகளனைத்து நீங்கி அவ்வப்பியாசயோகத்தில் மிகப் பற்றுற்ற அங்ஙனமே அன்னிய காமியல்லா; அதாவது, நிரோதமுயற்சியின்றேனும் அஃதனைமப்பொருளிற் செல்லுந் தன்மையதல்லாத சமாகித சித்தத்தானே இவ்வதிகாரி பரமான்மாவையடைகின்றான். அது பரமமென்னும் நிரதிசயாநந்தவடிவமாம், யாண்டும் பரிபூரணமாம், திவ்யமாம்; அதாவது 'ஒளிவடிவ இரவியில் அந்தரியாமியாயிருப்பது' 'யஸ்சாஸௌ ஆதித்யே' என்னுஞ் சுருதியும் அவ்வாறு கூறுகின்றது. அத்தன்மைய பரம திவ்வியபுருஷனை அபேதமாய்ச் சிந்தித்து இவ்வதிகாரி ஆறு கடலடைவதாப்பப் பரமான்மாவை யடைகின்றான். இது சுருதியிலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. யயாக்ஷரம் வேதவிதோ வதம்தி விஶம்தி யத்யதயோ வீதராகா:।
தத்தே பதம் ஸம்க்ரஹேண ப்ரவக்ஷ்யே ஓமித்யேதத்।

(பொ-ள்) ஸ்ரீ கங்கை, யமுனை முதலிய நதிகள் தமது நாமவுருவங்களைபொழிந்துக் கடலில் ஏகத்துவத்தையடைகின்றனபோல இவ்விந்துவானும் புண்ணியபாவங்களைவிடுத்துச் சுத்தான்மாவினும் பரமாகிய அந்தரியாமியெனுந் திவ்வியபுருஷனை அபேதமாயடைகின்றான் என்பதாம். (8)

(அ-கை.) ஆண்டுப் பூர்வசுலோகத்தில் ஸ்ரீ பகவான் அதிகாரிகட்குச் சிந்திக்கற்குரியதாயும் அடைவதற்குரியதாயும் முற்கூறப்பட்ட பரம திவ்ய புருஷனையே மறித்தும் பல விசேடணங்களால் இப்போதருளிச்செய்கின்றார்.

சு-ம். கவிம் புராணமநுஶாஸிதாரமணோரணீயாம்ஸமநுஸ்மரேத்யஃ।
ஸர்வஸ்ய தாரமசிம்த்யரூபமாதித்யவர்ணம் தமஸஃபரஸ்தாத் ॥

ப-ம். 1 கவிம் 2 புராணம் 3 அநுஶாஸிதாரம் 4 அணோஃ 5அணீயாம்ஸம் 13அநுஸ்மரேத் 12 யஃ 6 ஸர்வஸ்ய 7 தாரம் 8 அசிம்த்யரூபம் 9 ஆதித்யவர்ணம் 10 தமஸஃ 11 பரஸ்தாத் ஜநி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சர்வக்ஞனும் அநாதியும் சர்வநியந்தாவும் சூட்சுமத்தினுஞ் சூட்சுமனும் எல்லாவற்றையுந் தரிப்பவனும் அசிந்தியவடிவுடையனும் இரவிபோலொளியுடையனும் அஞ்ஞானத்தின்மேலுள்ளவனும் ஆகிய அத்தன்மைய திவ்ய புருஷனை எவன் சிந்திக்கின்றானே அவனையடைகின்றான். (9)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! மோட்சவேட்கையுடைய அதிகாரிகள் சிந்தித்தற்கும் அடைவதற்கும் தக்கது பரம திவ்ய புருஷனுகும். அது கவியாம்; அதாவது முக்காலப்பொருளெலா முணர்வதால் சர்வக்ஞனும். புராணனும். அதாவது, எல்லாவுலகிற்குங் காரணமாதலின் அநாதியாம். அது சாசிதாவாம். அதாவது, இரவிமதியாதிகளை நியதத்தோடு செலுத்துவதாம். அல்லது, சர்வப்பிராணிகளின் உள்ளத்திலுமிருந்து அவர்களின் கருமானுசாரமாய் அவர்களைப் புண்ணிய பாவகருமங்களில் முயல்விப்பதாம். வானுதி யுலகனைத்திற்கும் உபாதான காரணமாதலின், அவ்வானுதி நுண்ணியபொருள்களினும் மிக நுண்மையதாம். காரியாபேட்சையால் அதனுபாதானகாரணத்திற்கு மிகச் சூக்ஷ்மமாந்தன்மை ஆடை நூலாதிகளில் மிக விளக்கமாம். ஈண்டு, சூக்ஷ்மத்தன்மையால் தூர்விஞ்ஞேயத்தன்மை கொள்ளற்பாலதாம்; பிறவெனிலோ, 'மஹதோமஹீயான்' என்னுஞ் சுருதி அசங்கதமாம். சர்வத்தையுந் தரிப்பதாம்; அதாவது, புண்ணிய பாவங்களாலுண்டாகும் பலனைச் சர்வப் பிராணிகட்கும் தத்தங் கருமானுசாரமாய் விநித்திரவடிவமாய் வேறுவேறூக்கிக்கொடுப்பதாம் இது 'பலமதவுபபத்தேஃ' என்னுஞ் சூத்திரவியாக்கியானத்தில் ஸ்ரீ பாடியக்காரர் விரிவாய்க் கூறியிருக்கின்றனர். அசிந்தியரூபமாம்; அதாவது, அளவறுமகிமையுடையதாதலின் சிந்தித்தற்கொணுதவடிவதாம். ஆதித்தியவர்ணமாம்; இரவிபோல் எல்லாவற்றையும்விளக்குமொளியதாம்; அதாவது, சூரியன்போல் எல்லாவற்றையும் பிரகாசிப்பதாம். ஒளிவடிவதாதலின் தமத்தினின்றும்பரமாம். ஈண்டு, அஞ்ஞானவடிவ மோகவிருள் தமமாம் அதனின்றும்பரம்; அதாவது, ஒளிவடிவாதலின் அவ்விருளுக்கு விரோதியாம். அத்தன்மைத்தான பரமான்மவடிவ திவ்யபுருஷனை எவ்வதிகாரி சிந்திக்கின்றானே அவனை அவ்வப்பியாசவலியால் அடைகின்றான். இவ்வாறு இச்சுலோகத்தை முற்சுலோகத்தோடந்வயிக்க 'அல்லது சதம்பரம்புருஷமுபைதிதிவ்யம்' என்னும் மேல்வருஞ் சுலோகத்தோடு சம்பந்திக்குக. (9)

(அ-கை.) ஹே பகவன்! தாங்கள் அடிக்கடி பாமேசுரஸ்மாணத்தில் மூயற்சியின் மிகுதிப்பாட்டை அருளிச்செய்கின்றீர்கள். அஃதெக்காலத்தில் வேண்டும் என அர்ச்சுனன் சங்கிப்ப ஸ்ரீ பகவான் அக்காலத்தை யருளிச்செய்கின்றார்.

சு-ம். ரயாணகாலெ உநஹா அலெந
ஹக்ஷ்யா யுகொ யொமபலெந லெவ।
ஹ்ரூவொஃயெய்வ்ராணஸாவெஸ்ய ஹஃயுக்ஷ்
ஹதம் வஸ்ம வ்ரூக்ஷஃவெதி திவ்யம்॥ (10)

ப-ம். 1 ரயாணகாலெ 3 உநஹா 2 சுஅலெந 4 ஹக்ஷ்யா 5 யுக்ஷ் 7 யொமப லெந 6 அ லவ 9 ஹ்ரூவொஃ 10 உயெய் 11 வ்ராணம் 13 சூவெஸ்ய 12 ஹ உயுக்ஷ் 8 ஹஃ 14 தம் 15 வஸ்ம 17 வ்ரூக்ஷம் 18 உவெதி 16 திவ்யம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவன் மரணகாலத்தில் ஒருமைப்பட்ட மனத்தால் அத்திவ்யபுருஷனை ஸ்மரிப்பவனும் பக்தியுடையவனும் யோகமுடையனும் ஆவனை அவனை இருபுருவத்திடையிற் பிராணனை லயிமையினிறுத்தி அப்பரமான்மபுருஷனை யடைகின்றான். (10)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வுபாசகபுருஷன் மாணகாலத்தில் ஒருமை மனத்தோனுய் அத்திவ்யபுருஷனே ஸ்மாணஞ்செய்பவனும் பக்தியுடையவனும் அதாவது, பரமேசுரவிஷயகபரமப்பிரீதியுடையவனும், யோகவலிவுடையனும் ஆவனே; ஈண்டுச்சமாதி, யோகமாம். அதன்வலி அதாவது, சமாதிவடிவயோகத் தாலுண்டாகிய சமஸ்காரசமூகம். அது, சமாதியினின்று வெளிப்படுத்துஞ் சமஸ் காரங்களின் விரோதியாம். அத்தன்மைய யோகவலியுடையோன் தனதுள்ளக் கமலத்தில் பிராணனே வசப்படுத்திப்பின்னர் இருதயதேசத்தின்மேலே செல்கின்ற சுழுமுனை நாடிவடிவமார்க்கமாய்ப் பூர்வபூர்வ பூமிகளின் சயத்தால் இரண்டு புருவத்திடைப்யிலுள்ள ஆக்ஞாசக்கரத்தில் நிறுத்திச் சாவதானமாய்ப் பத்துவாயி லுடைய பிரமரந்தரத்தால் வெளியிற் செல்லுபவனை அத்தன்மைய உபாசக புரு ஷனே கவி, புராணன் என்பது முதலிய லக்ஷணங்களாற் கூறப்பெற்ற அப்பரம திவ்யபுருஷனை யடைகின்றன். ஆண்டு, ஆதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் அறுவகைச் சக்கரவடிவங்களும் அதனிட மும் தேவதைகளும் அவைகளிற் பிராணனை நிறுத்துமாறும் ஆன்மபுராணத்தின் பதினேராவது அத்தியாயத்தில் விரிவாய்க்கூறினும் ஆண்டுக்காண்க. (10)

(அ-கை.) முற்பிரசங்கத்தில் பரமேசுரபாவத்தை யடைதற்பொருட்டு ஸ்ரீ பகவான் பரமேசுரஸ்மரணம் விதித்தருளினர்; ஆண்டிவ்வையமுண்டாகின்றது. தியானகாலத்தில் யாதேனுமொரு நாமத்தால் ஸ்மரிக்கலாமோ, அல்லது நிய தமாய் ஒரே நாமத்தானே ஸ்மரிக்கத்தக்கதோ என அஃதகற்றுவான் ஸ்ரீ பகவான்,

ஸவெஃவெஹாயத்ஹஃஸாஃகஞ் தவாம்ஸி ஸவாஃணிஅ யஃஹஞ்ஞி। [தக்ஷ

யஜ்ஞைர்ப்ரஹ்மயஃம் அர்ஜித்தத்தேவஃம் ஸம்ரஹ்மணை ர்ப்ரவிஶ்யாமி தே

என்பது முதலிய சுருதியாற்கூறப்பட்ட ஓங்காரவடிவ பிரணவநாமத்தானே சிந் திக்கத்தக்கது வேறு மந்திரங்களாலன்று என்னும் நியமத்தை யருளுகின்றார்.

சு-ம். யஃக்ஷ்யம் வெஃவிஹோ வஃஞ்ஞி விஶ்வஞ்ஞி யஃய்தயோ வீதாஶ்வாஃ।
யஜ்ஞைர்ப்ரஹ்மயஃம் அர்ஜித்தத்தேவஃம் ஸம்ரஹ்மணை ர்ப்ரவக்ஷ்யே॥

ப-ம். 2 யக்ஷ் 3 சுக்ஷ்யம் 1 வெஃவிஃ 4 வஃஞ்ஞி 8 விஶ்வஞ்ஞி 7 யக் 6 யதயஃ
5 வீதாஶ்வாஃ 9 யக் 10 ஊஃஹஃ 11 ப்ரஹ்மயஃம் 12 அர்ஜி 13 தக்
15 தெ 14 வஃம் 16 ஸம்ரஹ்மணை 17 ர்ப்ரவக்ஷ்யே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! வேதமுணர்ந்தோர் எவ்வக்ஷரத்தை உச்சரிக்கின் றார்களோ இச்சையற்ற சந்நியாசி எவ்வக்ஷரத்தை யடைகின்றனே சாதகபுருஷன் எவ்வக்ஷரத்தை யிச்சித்துப் பிரஹ்மசரிய மனுட்டிக்கின்றனே அவ்வக்ஷரத்தை யானுனக்குச் சுருக்கிக் கூறுகின்றேன். (11)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஓங்காரமெனப் பெயரிய விநாசமற்ற பிரஹ்மத் தை வேதமுணர்ந்தோர்கள் கூறுகின்றார்கள். அதாவது, 'வததெஇதக்ஷரம் மாமி-ஃ ப்ராஹ்மணா ஸுஹிவஃஞ்ஞி ஸுஹ ஔஉணஹ்ஸ்வஹ ஸீவ-ஃம்' என்பது முத லிய சுருதிவாக்கியங்களால் தூல முதலிய சர்வ விசேடதருமங்களற்றதாகவே அவ்வக்ஷரப்பிரஹ்மம் பிரதிபாதிக்கப்படுகின்றது. அஃதன்றியும் முத்தர்களடை பத்தக்கதானதால் அவர்களது மனுபவிக்கின்றார்கள் என்னும் அர்த்தத்தை ஸ்ரீ பகவானருளுகின்றார். 'விசந்தி' என விடயசுகங்களனைத்துமின்றிய யத்தனசில சந்நியாசிகளும் நான் பிரஹ்மசொரூபன் என்னும் ஆன்மஞானத்தால் அதைத் தமது சொரூபமாயடைகின்றார்கள். அஃதன்றியும் சாதகர்களாகிய முமுட்சுக் களும் அதையடைவான் மிகமுயற்சிக்கின்றார்கள் என்பதை அருளிச்செய்கின்றார்,

யதிச்சந்தஃ என, அவ்வக்ஷரப்பிரஹ்மத்தை அடைவதற்கிச்சித்து நைட்டிகப் பிரஹ்மசாரி குருகுலவாசம்பண்ணிப் பிரஹ்மசரிய பூர்வகம் வேதாந்தசாத்திர சிரவணாதிகளைச் செய்கின்றார்கள். அத்தன்மைய அக்ஷரப்பிரஹ்மவடிவபதத்தை உனக்குச் சுருக்கிக் கூறுகின்றேன். அதாவது, எவ்வாற்றா லுனக்கு ஐயமின்றி அவ்வக்ஷரப்பிரஹ்மஞான முண்டாமோ அவ்வாறே யுனக்குக் கூறுகின்றேன். ஆதலின், அதை எவ்வாறுணர்வேன் என்னுஞ் சிந்தையால் வியாகூலப்படாதே. ஆண்டு, இவ்வோங்காரவடிவப்பிரணவம் பரப்பிரஹ்மத்தின் வாசகமேயாம். அல்லது, சாலிக்கிராம முதலிய பிரதிமைகள்போலப் பிரஹ்மத்தின் பிரதீகமாம். ஆதலினால், பிரஹ்மவாசகவடிவத்தாலேனும் பிரதீகவடிவத்தாலேனும் சுருதி மாதா மந்தமத்தியம புத்தியுடையோர்களைக்குறித்துக் கிரமமுத்திவடிவப் பலமுடைய அப் பிரணவோபாசனையைக் கூறுகின்றனள்.

ஆ-சு. யஃவோ நஃ ததஃ திரஃ தெரணோ தித்யநெனெவா ।
கூஷெணவஸ்ம வோ ஷஃஹியஸ்யாயீத வ தயிமஹ்னி ॥

(பொ-ள்.) எவன் அகார உகார மகாரமென்னு மூன்று மாத்திரைகளுடைய ஓமெனு மக்காரத்தால் பரமபுருஷனைச் சிந்திக்கின்றானோ அவன் அப்பரமபுருஷனையே அடைகின்றான் என்க. இவ்வணஞ் சுருதியிற்கூறப்பட்ட பிரணவோபாசனையே ஸ்ரீ பகவானுக்கீண்டு விவக்ஷிதமாம். ஆதலின், இவ்விவட்டாவது அத்தியாயமுடிவு வரையிலும் ஸ்ரீ பகவான் அந்த யோகதாரணையோடுகூடிய ஓங்காரோபாசனை, உபாசனையின் தனது சொரூபவடிவப் பலப்பிராப்தி, அப்பலத்தால் புனராவிருத்தியின்மை, அம்மார்க்கம் இவ்வனைத்தும் அருளிச்செய்கின்றார். (11)

(அ-கை.) 'தத்தேதபதம் பிரவக்ஷ்யே' என்னும் முற்கூறிய வாக்கியத்தாற் பிரதிஜ்ஞைபண்ணிய அர்த்தத்தைச் சாதனத்தோடு இரண்டு சுலோகங்களால் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸவ-ஃ ஆரணி ஸ்ம்யஃய ஃதெநா ஹ்ருதி நிரு-ய்ய அ ।
ஃமுய்ய-ஃ ஆயாயாத்மநஃ ப்ராணம் க்ஷ்ஹிதெதா யொமயாரணாழ் ॥ (12)
ஒமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரந்மாமநுஸ்மரந் ।
யஃ ப்ரயாதி த்யஜந்தெஹம் ஸயாதி பரமாம் கதிழ் ॥ (13)

ப-ம். 2 ஸவ-ஃ ஆரணி 3 ஸ்ம்யஃய 5 ஃதநஃ 6 ஹ்ருதி 7 நிரு-ய்ய 4 அ 9 ஃமுய்ய-ஃ 10 க்ஷ்யாய 11 க்ஷ்ஹிதநஃ 8 ப்ராணம் 13 க்ஷ்ஹிதஃ 12 யொமயாரணாம் 14 ஒம் 15 இதி 17 ஸகாக்ஷரம் 16 ப்ரஹ்ம 18 வ்யாஹரந்ஸ் 19 ஸ்ம் 20 ஸ்மரந்ஸ் 1 யஃ 23 ப்ரயாதி 22 த்யஜந்ஸ் 21 தெஹம் 24 ஸஃ 27 யாதி 25 பரமாம் 26 மதிம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வுபாசக புருஷன் சர்வேந்திரியவாயில்களை அடைத்துக்கொண்டு மனத்தை இருதயத்தினிறுத்திப் பிராணனை உச்சித்தேதசத்திலிருத்தி ஆன்மவிஷயகசமாதிவடிவதாரணை பண்ணி ஓம் என்னும் பிரஹ்மவடிவ ஏகாக்ஷரத்தை யுச்சரித்துப் பரமேசுரனாகிய என்னைச் சிந்தித்து இத்தேகத்தை விடுத்துச்செல்கின்றனனோ அவ்பாசகன் பரமகதியை யடைகின்றான். (12,13)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வுபாசக புருஷன் சுரோத்திர முதலிய இந்திரியங்களைத் தத்தம் சத்த முதலிய விடயங்களினின்றுந்திருப்பி நிலைப்படுத்தினோன். அதாவது, அச்சத்த முதலிய விடயங்களில் அடிக்கடி தோடங்காணு

மப்பியாசத்தால் அவ்விடயங்களினின்று பாராமுகப்பட்ட அவ்விந்திரியங்களால் அவ்விடயங்களைக் கவராது நிறுத்துவன்.

சங்கை :—ஹே பகவன்! சுரோத்திர முதலிய வெளியிந்திரியங்களை நிரோதம் பண்ணினும் உள்ளே மனத்தால் அவ்விடயசிந்தனையுண்டாகும் என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சமாதானம் —ஹே அர்ச்சுன! 'மனஷ்ருதிநிருத்தியச' எனப் பூர்வார்த்தியாயத்தில் விரிவாய்க் கூறப்பட்ட அப்பியாச வைராக்கியங்களால் மனதை இருதயதேயத்தில் சர்வ விருத்திகளற்றதாய் நிறுத்தினேன் அதாவது, உள்ளேயும் விடயசிந்தனைபண்ணுது நிலைத்தான் இங்ஙனம் உள்வெளியுணர்ச்சிகளின் துவாரவடிவ மனசகித இந்திரியத் துவாரங்களை நிரோதம்பண்ணியவன் கிரியையின் துவாரபூதமாகிய பிராணனையும் எல்லாவாற்றானு நிக்கிரகித்து உச்சித்தேசத்தினிறுத்தியிருப்பவன் அதாவது எவன் குரு வுபதேசித்த மார்க்கத்தால் மூன் முற்பூமிகளின் ஜயக்கிரமமாய் முதலில் பிராணனை இருபுருவத்திடையினிறுத்திப் பின்னர் அதன்மேல் உச்சித்தேசத்தில் நிலைப்படுத்தியிருப்பவன் அங்ஙனமே பிரத்தியக்கான்ம விடயக சமாதிவடிவதாரணை செய்திருப்பவன் 'ஈண்டான்ம' என்னும் பதம் அன்னிய தேவதாவிஷயகதாரணை நீக்குதற்காம். அன்றியும் ஓமெனு மேகாக்கரம் பிரஹ்மவாசகமானதாலெனும், சாலிக்கிராம முதலிய பிரதிமைகள்போலப் பிரஹ்மப்பிரதிகமானதாலெனும் பிரஹ்மரூபமாகிய அவ்வக்கரத்தை உச்சரித்திருப்போன். ஈண்டு, 'ஓமித்யேகாக்ஷரம்' என்னுமித்தாரணை கூறுவதானை நிர்வாகமாம், ஏகாக்ஷரம் என்பதால் அதிகப்பொருளமையவில்லையினும் அஃது ஆயாசமின்மையைக்கூறி அப்பிரணவோச்சாரணத்தைப் புகழுதற்காம். அல்லது, 'ஓமித்யேகாக்ஷரம் பிரஹ்மமாம் அநுஸ்மரன்', எனப்பதங்களை அந்வயம் பண்ணுக. பொருள், எவன் ஓமென்னும் பிரணவமந்திரத்தை யுச்சரித்து அதனர்த்தமாகிய அத்துவிதிய விநாசமற்ற சர்வ வியாபக பரமேசுரனாகிய என்னையும் ஸ்மரித்துக்கொண்டிருப்பவன் என்பதாம். இவ்வண்ணம் பிரணவமந்திரத்தைச் செபித்துக்கொண்டும் அதனர்த்தவடிவமாகிய என்னைச் சிந்தித்துக்கொண்டும் மரணகாலத்தில் சுழுமுனையெனும் மூர்த்தினி நாடிவடிவ மார்க்கமாய் இத்தேகத்தைவிடுத்துச் செல்லுமுபாசகனாகிய அவன் தேவயான மார்க்கவாயிலாய்ப் பிரஹ்மலோகமடைந்து அங்குள்ள திவ்ய போகங்களை நுகர்ந்து அந்தத்தில் பரமகதியை யடைகின்றன் அதாவது, நான் பிரஹ்ம சொரூபன் என்னுந் தத்துவசாக்ஷாத்காரத்தால் எவற்றினு மேலாகிய பிரஹ்மபாவத்தை யடைகின்றன். இது சுருதியிலுங்கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. வஷாவஷ்யவாஷாமதி மெஷாவஷ்யவாஷாலம்வெஷெஷாவஷ்ய வாஷஸ்ருகஷ்ட.

(போ-ள்.) இவ்வத்துவிதிய ஆநந்தவடிவப் பிரஹ்மமே இவ்விதுவானது பரமகதியும் பரமசம்பத்தும் பரமானந்தமுமாமென்க. (12,13)

(அ-கை.) ஹே பகவன்! கூறிப்போந்தவாற்றால் மரணகாலத்தில் பிராண நிரோதமின்மையின் இருபுருவத்திடை பிராணனை நிறுத்தி மூர்த்தினிநாடிமார்க்கமாய்த் தனதிச்சையால் இத்தேகத்தை விடுவதற்கு வலியற்றுப் பிராரத்தகர்ம மொழியவே மரணகாலத்தில் பிறவயத்தனுய் இத்தேகத்தை விடுத்தவனுக்கு எப்பலன் பிராப்தியாம் என்னு மர்ச்சுனன் சங்கைக்குப் பகவான் அப்பலத்தையருளிச் செய்கின்றார்.

சு-ம். ஈநஸ்யஷெதாஷ்ஹததம் யொஸ்ம ஷ்ருதி நித்யஷ்ஹ: ।
தஷ்யாஹம் ஷுலபஷ்ஹ: வார்த்த நித்யயுக்தஷ்ய யொகிந: ॥ (14)

ப-ம். 3 சுகநயதாஃ 4 ஸததம் 2 யஃ 6 ஸ்ம 7 ஸ்ம்ருதி 5 நித்யஸஃ 8 தஸ்ய
11 சுஷம 12 ஸ்ம்ருஹஃ 1 வாயு 9 நித்யஸ்ம்ருத்யை 10 யொமிகஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவன் வேறிலாமனத்தனுய் இடைவிடாது ஜீவன காலம்வரையில் பரமேசுரனுகிய என்னைச் சிந்திக்கின்றனே அச்சமாகித சித்த முடைய யோகிக்கு யான் மிகச்சுலபன். (14)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய எனக்கபலாய் மற்றொரு பொருளிலும் ஆசத்தியின்றிய மனத்தேதான் அநன்யசேதாவாவன்; அச்சீவகாலபரியந்தம் இடைவிடாது சிந்திக்கும் சாமாகிதமனத்தேதான் முற்கூறியவாறுகச் சுவர்தீன மாய்த் தேகத்தை விடுக்கினும் அல்லது பராதீனமாய் விடுக்கினும் எல்லாவாற்றனும் அவனுக்கு நான் சுலபனவன்; அதாவது, ஏனையோர்கட்கு மிகத் துர்லபமாயினும் அவனுக்கு சுகமாகவே அடைதற்குரியனவன். அர்ச்சுன! நீயும் இவ்வண்ணம் அனன்யபக்தனுதலின் உனக்கு மிகச்சுலபமாவேன். ஆதலின், எவ்வாற்றனும் பயமுறாதே என்பதாம். ஈண்டு, 'அநன்யசேதாஃ' என்பதால் ஸ்ரீ பகவான் அப்பரமேசுர ஸ்மரணத்தில் மிக்காதரவுவடிவ சத்காரத்தையும் சததம் என்பதால் நிரந்தரத்தன்மையையும், நித்யஸஃ என்பதால் தீர்க்ககாலத்தன்மையையும் கூறியருளினர். அதனல், 'ஸ்ம்ருதீவிகாருதெரஸ்ம் தயுவஸ்ம்ருதிரவிதா ஏஜ ஹ்ருதிஃ' எனப் பதஞ்சலி கூறிய சூத்திரத்தை ஸ்ரீ பகவானனுசரித்தருளினர். இச்சூத்திரத்தில் ஸஃ 'அது' என்னும் பதத்தால் ஸ்ரீ பதஞ்சலிபகவான் அப்பியாசத்தைக் கூறினர். ஈண்டு, ஸ்ரீ பகவான் 'மாம்ஸ்மரதி' என்பதால் ஸ்மரணத்தைக் கூறியருளினர். ஆயினும் அவ்வப்பியாசம் பரமேசுரனது ஸ்மரணத்திலே முடிவுறும். இதனலிப்பொருள் பெறப்பட்டது:—மற்றொரு விசேஷபமின்றி மிகவன்மபாடு சீவனகாலபரியந்தம் வியவதானமின்றி இடைவிடாது பரமேசுரனுகிய என்னைச் சிந்தித்தலே அம்மோக்ஷவடிவப் பரமகதியையடைதற்குக் காரணமாம். அவ்விதச் சிந்தனையைப்பெறவே தனதிச்சையால் சுழுமுனைநாடிவாயிலாய்ப் பிராணன் வெளிப்படுக அல்லது வெளிப்படாதொழிக; இதில் மிக்க ஆக்கிரகமின்றும். எல்லாவாற்றனும் பரமேசுரனைச் சிந்திப்பவன் அப்பரமகதியையே அடைவன் என்க.

(அ-கை.) ஹே பகவன்! இவ்வாறு இடைவிடாது பரமேசுரனைச்சிந்தித்துப் பரமேசுரனை அடைந்த அதிகாரிகள் புனராவிருத்தியையடைவார்களோ அலவோ என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அவர்கள் புனராவிருத்தியையடையார்களென உத்தாமருளிச்செய்கின்றார்.

சு-ம். ஆஜ்ஞவைதய வ்ருஜிநஸ்ய ஊர்வாயஸ்யாஸ்ருதிம்
நாவ்ருவஞ்சி ஸஹாதாரஃ ஸம்ஸித்திம் வரமாம் கதாஃ ॥ (15)

ப-ம். 1 ஆம் 2 உவைதய 3 வ்ருஜிஃ 6 ஜநஸ்ய 4 ஊர்வாயம் 5 சுஸ்ருதிம் 7 ந 8 சுவ்ருவஞ்சி 9 ஸஹாதாரஃ 11 ஸம்ஸித்திம் 10 வரமாம் 12 கதாஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! உபாசகர்கள் பரமேசுரனுகிய என்னையடைந்து மறித்தும்எவ்வகைத் துக்கத்திற்குமிருப்பிடமாகிய நாசமுறும் பிறப்படையார்கள், அம்மகாத்துமாக்கள் எவற்றினு மேலான மோக்ஷமடைந்தவர்களாதலின் என்க.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வுபாசகன் பரமேசுரனுகிய என்னையடைந்து மறித்தும் மனுடராதி தேகசம்பந்தவடிவப் பிறப்பையடைவதில்லை. எத்தன்மைத்தாமப்பிறப்பெனின் துக்காலயமாம்; அதாவது, கருப்பையிற்கட்டுப்படல் யோனித்துவாரத்தானெருக்குப்படல்முதலிய கருப்போபநிடதத்திற்கூறிய துக்கங்களனைத்

திற்கு மிடமாம். இன்னும் நிலைபற்றதாம் அதாவது திரமற்றதும் தானிகழுங்கால த்திலும் நாசமானதுபோன்றதாம் அத்தன்மைய தேகசம்பந்தத்தை அவர்களடை வதில்லை; அதாவது, அவர்கள் புனராவிருத்தியை அடையார்களென்பதாம். அவர் கள் அஃதடையாமையில் காரணவடிவ இரண்டு விசேடணமவர்கட்கருளுகின்றார். 'ஸுஹ்ருதது³ஷ்க்ருதாநி' என. அர்ச்சுன! அவர்கள் மகாத்துமாக்க ளாதலானும் அதாவது, ரஜோதமோகுணங்களின்றிபவர்கள் ஆதலானும்; பரம சம்ஸித்தியையடைந்தவர்களாதலானும் அதாவது, எனதுலகையடைந்து ஆண்டுப் பலவகைத் திவ்யபோகங்களை நுகர்ந்து அந்தத்தில் பிரஹ்மஞானத்தையடைந்து எவற்றினு மேலாகிய கைவல்யமோக்ஷத்தையடைந்தவர்கள் ஆதலானுமென்க. ஈண்டுப் பரமேசுராஜ்ஞைய என்னைபடைந்து மோக்ஷமடைகின்றார்களெனக் கூறின மையின் அவர்கட்கு ஸ்ரீ பகவான் கிரமமுத்திப்பேற்றைக்காட்டினர். ஆண்டு, உபாசனைவழிபால் தேவபான மார்க்கமாய்ப் பிரஹ்மவுலகத்தைபடைந்து ஆண்டுத் திவ்யபோகங்களை நுகர்ந்து அதன்பின் தத்துவஞானத்தால் முத்திப்பேறெய்தல் கிரமமுத்திபாம். இது ஸ்மிருதியிலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. ப்ரஹ்மணாஹஹதேஹவெ² ஹம்ப்ராப்தெ வ்யதீஹம்அரே ।
வரஹ்யாஞ்ஜேகுதாத்மாநஃ வ்ரஹ்மஜ்ஞி வரம்வஹ்ம ॥

(பொ-ள்.) அவ்வுபாசகர்கள் பிரஹ்மவுலகஞ்சென்று ஆண்டுப்பிரஹ்மப்பிர ளயமாகவே தத்துவ சாக்ஷாத்காரமுடையரைப் அப்பிரஹ்மஞைசத்தின்பின்னர் பிரஹ்மவிடு விதேககைவல்லிபத்தை யடைகின்றார்கள். ஈண்டுப் பரமேசுராஜ்ஞைய என்னையடைந்து மோக்ஷத்தையடைகின்றார் என்னும் பகவானது வாக்கியத்தால் பிரஹ்மலோகத்திற்கயலாய் விஷ்ணுவுலகமென்பதான் றறியப்படவில்லை. எங்க ளனம் பௌராணிகர்கள் பிரஹ்மவுலகம், விஷ்ணுவுலகம், ருத்திரவுலகமென்னும் இவைகளை வெவ்வேறாய் மேன்மேற் கற்பிக்கின்றார்களே, அங்ஙனம் வேதாந்தக் கோட்பாட்டினின்றும்; மற்றை அவ்வுலகங்கள் சத்தியவுலகமெனும்பிரஹ்மலோகத் திலே அடங்கும். ஆண்டு, விஷ்ணுவுபாசகர்கட்கு அதுவே விஷ்ணுலோகமா யும் உருத்திரோபாசகர்கட்கு ருத்திரவுலகமாயுந் தோன்றுகின்றதென்க. இஃத னைத்தும் 'வாராஹிஹொவாஹகுஹொ²ஜி²தி² ஹிரண்யமஹ² வராவ்யம்தா' என்னும் பிருகதாரண்யோபநிஷத்சுருதி விபாக்கியானத்தில் ஸ்ரீ பாடியக்காரரா லும் பாடிய வியாக்கியானக்காரர்களாலும் நன்கு கூறப்பட்டிருக்கின்றமை காண்க.

(அ-கை.) ஆண்டுப்பரமேசுரோபாசனைபால் பரமேசுரனைபடைந்து தத்துவ சாக்ஷாத்காரமுடையராய அவ்வுபாசகர்கட்குப் புனராவிருத்திபின்மை கூறவே அப்பரமேசுரரின் விமுகராய்த் தத்துவஞானமின்றிபவர்க்கு அவ்வுலகத்தினின் றும் புனராவிருத்தியானது அர்த்தத்தாலே சித்தமாகின்றதென்பதை இப்போது ஸ்ரீ பகவானருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸுப்ரஹ்மணாஹவதாலொகாஃ வாநராவதி²நொஜ²ந்²ந ।
ஸரஸ்வெதீ²ஷு தா களஞ்ஜெய வாநஜ²ந்²ந விதீ²யதெ ॥ (16)

ப-ம். 2 ஸுப்ரஹ்மணாஹவதாகா 3 லொகாஃ 4 வாநராவதி²நாஃ 1 ஸஜ²ந்²ந 6 ஸரஸ்
8 உவெதீ²ஷு 7 தா 5 களஞ்ஜெய 9 வாநாஃ 10 ஜந்ம 11 ந 12 விதீ²யதெ

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பிரமவுலகசஞ்சித சர்வ உலகங்களும் புனராவிருத்தி யுடையனவேயாம். கௌந்தேய! பரமேசுராஜ்ஞைய என்னையடையினோ புனராவிரு த்தியின்றும்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய என்னிற் பராமுகராய்த் தத்துவ ஞானமின்றியவர்களனேவர்களுக்கும் பிரஹ்மலோக சகித சர்வ போகபூமிவடிவ லோகங்கள் புனராவிருத்தியுடையனவேயாம். அதாவது, பரமேசுரனுகிய என்னின் விமுகபடைந்தோர்கள் பிரஹ்மலோக முதலிய சர்வ உலகங்களினின்றும் கீழேவிழுந்து மறித்தும் பிறப்பையே யடைவார்கள்.

சங்கை :—ஹே பகவன்! பரமேசுரனுகிய உன்னையடைந்த அதிகாரிகட்கும் அவர்களைப்போன்று புனராவிருத்தியே பிராப்தமாங்கொல்?

சமாதானம் :—'ஸஹஸ்ரவெதயுத ஆதி' ஹே கௌந்தேய! பரமேசுரனுகிய என்னையே யடைந்து பரமானந்தத்தைப்பெற்ற அதிகாரிகள் மறித்தொருகாலும் பிறப்பதில்லை. அதாவது, அவர்களொருபோதும் புனராவிருத்தியடைவதில்லை. ஈண்டு, ஹே அர்ச்சுன, என்னுஞ் சம்போதனத்தால் அவனிடத்து இயல்பாயுள்ள மகானுபாவத்தன்மையையும் 'கௌந்தேய என்னுஞ் சம்போதனத்தால் மாதாவைப்பற்றிய மகானுபாவத்தன்மையையு மருளிச்செய்தனர். அதனனே, ஆண்மஞானப்பேற்றின்பொருட்டுச் சொலுபத்தானும், காரணத்தானும் தூய்தாந்தன்மை குறிப்பித்தருளினரென்க. ஈண்டு, 'சூஷ்ஹஹவநாஜ' எனச் சில புஸ்தகத்திற் பாடமுளதாயினும் கூறிப்போந்த அர்த்தத்தினும் விலக்ஷணத் தன்மையின்றும். என்னை 'ஹவம்தயுத ஹமதாநீதி ஹாவநம்' எதிற்பூதங்களிருக்கின்றனவோ அது புவனமாம் என விரித்துரைப்பதால் புவனசத்தம் உலகவாசகமாம். அன்றியும், நிவாசத்தானப்பவனமாம், அதுவும், லோகவாசகமேயாம். ஈண்டு, 'சூஷ்ஹஹவநாஜ்ஞோகாஃ வர்நராவர்தினோஜர்ஜுந' என்னும் பூர்வார்த்தத்தால் ஸ்ரீ பகவான் பிரஹ்மலோகத்தையடைந்தவர்களின் புனராவிருத்தியைக் கூறியருளினர். 'ஸஹஸ்ரவெதயுதகளஞ்ஞெய வர்நஜந்துநவிஜ்ஞெதே' என்னுமுத்தரார்த்தத்தால் அப்பிரஹ்மலோகத்தினின்றும் புனராவிருத்தியின்மையைக் கூறியருளினர். ஈண்டிப்படிப்படிப்பாம் :—கிரமமுத்தியைப்பலமாகவுடைய தகரோபாசனையால் தேவயானமார்க்கவாயிலாய்ப் பிரஹ்மலோகத்தையடைந்த உபாசகர்களே ஆண்டுண்டாகிய தத்துவசாக்ஷாத்காரஞானத்தால் பிரஹ்மாவோடு மோக்ஷமடைகின்றனர். ஆதலினவர்கள் புனராவிருத்தியடைவதில்லை. பஞ்சாக்கினிவித்தை முதலியவைகளாற் பிரஹ்மலோகத்தையடைபவர்கட்கு ஆண்டுத் தத்துவசாக்ஷாத்காரப் பேறின்றுமாதலின் அவர்களாங்கேபோகத்தை நுகர்ந்து மறித்தும் பிறப்பெடுத்தல் திண்ணமே. ஆனுலோ, அவர்கள் பிரஹ்மலோகத்தையடைந்த கற்பத்திலே புனராவிருத்தி யடைவதில்லை. மற்றே, வேறு கற்பத்திலாமாதலின் 'பிரஹ்மலோகமபிசம்பத்தியதே நசபுனராவிர்த்தந்தே' என்பது முதலிய சுருதிகளும் 'அனுவிருத்திசப்தாத்' என்னுஞ் சூத்திரமும் பிரஹ்மலோகத்தையடைந்த வுபாசகர்கட்கு. புனராவிருத்தியின்மை கூறுவது கிரமமுத்தியுடைய வுபாசகர்கட்காம். சுருதி ஸ்மிருதிவாக்கியங்கள் பிரஹ்மலோகத்தை யடைந்தவர்கட்குப் புனராவிருத்தியைக் கூறுவதோபஞ்சாக்கினிவித்தை முதலியவைகளால் பிரஹ்மலோகத்தையடைந்தவர்கட்காம். ஆதலின், உபாசகர்கட்குப் பிரஹ்மலோகத்தினின்று புனராவிர்த்தியின்மையையும் புனராவிருத்தியையும் கூறுவாக்கியங்கள் தம்முள் முரண்படாதனவாம். பஞ்சாக்கினிவித்தை ஆண்டபுராணத்தின் ஆறுவது அத்தியாயத்தில் எம்மால் விரிவாய்க்கூறப்பட்டிருக்கிறது ஆண்டுக்காண்க. (16)

(அ-கை.) ஆண்டு, பிரஹ்மலோகசகித சர்வ உலகங்களும் காலத்தாற் பரிச்சின்னப்படுதலின் புனராவிருத்தியையுடையன என்னு மர்த்தத்தை ஸ்ரீ பகவான் இப்போதருளுகின்றார்.

சு-ம். ஸஹஸ்ரயுகபர்யந்தமஹர்யத்ப்ரஹ்மணோ விது:।
ராத்ரிம்யுகஸஹஸ்ராந்தாம் தேஹோராத்ரவிதோ ஜநா:॥ (17)

ப-ம். 3 ஸஹஸ்ரயுகபர்யந்தம் 4 அஹ: 1 யே 2 ப்ரஹ்மணோ 5 விது: 7 ராத்ரிம் 6 யுகஸஹஸ்ராந்தாம் 8 தே 10 அஹோராத்ரவிதோ 9 ஜநா:.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவன் ஆயிரஞ்சதுர்யுகங்கொண்டது பிரஹ்மாவின் தினமென்றும் ஆயிரஞ் சதுர்யுகங்கொண்டது இரவென்றும் அறிகின்றானோ அந்த யோகியே இரவுபகல்களையுணர்ந்தோனாவன். (17)

(வி-ம்.) சத்தியயுகத்திற்கு வரு பதினேழுலட்சத்து இருபத்தெண்ணாயிரம் 17,28,000 ஆம். திரேதாயுகத்திற்கு வரு பன்னிரண்டுலட்சத்துத் தொண்ணூற்றாறாயிரம் 12,96,000 ஆம். துவாபரயுகத்திற்கு வரு எட்டுலட்சத்து அறுபத்தெண்ணாயிரம் 8,68,000 ஆம். கலியுகத்திற்கு வரு நான்குலட்சத்து முப்பத்திரண்டாயிரம் 4,32,000 ஆம். இச்சதுர்யுகம் ஆயிரமாகில் பிரஹ்மாவிற்கொருதினமாம்; இச்சதுர்யுகம் ஆயிரமாகில் பிரஹ்மாவிற்கோரிரவாம். இதுவே 'அதர்யத்ஸஹஸ்ரபர்யந்தமஹர்ப்ரஹ்மணோவிது:' என்பது முதலிய புராணவாக்கியங்களாலுங் கூறப்படுகின்றது. இவ்வாறு பிரஹ்மாவின் பகலிரவுணர்ந்தயோகியே பகலிரவுணர்ந்தோனாவன். இரவிமதிகள் நடத்தல்கொண்டு பகலிரவறிபவன் சிறிதுணர்ந்தோனாதலின் உணர்ந்தவனல்லன் என்க. (17)

(அ-கை.) இவ்வாற்றால் பதினைந்துநாளாகில் பிரஹ்மாவிற்கொரு பக்ஷமாம். இரண்டு பக்ஷம் ஒருமாதமாம். பன்னிரண்டு மாதம் ஒரு வருஷமாம். நூறு வருஷம் பிரஹ்மாவின் பரமாயுளாம். அதில் முன் ஐம்பது வருஷம் பிரதமபரார்த்தமெனப்படும், பின்னைம்பது வருஷம் துவிதீயபரார்த்தமாம் அவ்வாறு நூறு வருடம்போகித்துப் பிரஹ்மா நாசமாகின்றார். இவ்வாற்றால் பிரஹ்மாவும் காலத்தாற் பரிச்சின்னனாதலால் அநித்தியமேயாவர். ஆதலின், காமமுக்தி யின்றியவர்க்கு அப்பிரஹ்மலோகத்தினின்றும் புனராவிருத்தி பொருந்துமாறேதையாம். இந்திராதிதேவர்கள் அப்பிரஹ்மாவினின்று மிகக் கீழோராம். அவ்விந்திராதிதேவர்கள் பிரஹ்மாவின் ஒரு தினப்போதாற் பரிச்சின்னப்படுவரேல் அவ்வுலகத்தினின்றும் இவர்கள் புனராவிருத்தி யடைவரென்பதிற் சொல்லவேண்டுவதென்னை என்னும் இவ்வர்த்தத்தை ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். அவ்யக்தாத்வ்யக்தயஹ்வ:ஸர்வா: ப்ரபவந்த்யஹராகமே।
ராத்ர்யாகமே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்தஸம்ஜ்ஞகே॥ (18)

ப-ம். 2 அவ்யக்தாத் 4 வ்யக்தய: 3 அவ:ஸர்வா: 5 ப்ரபவந்தி 1 அஹராகமே 6 ராத்ர்யாகமே 10 ப்ரலீயந்தே 7 தத்ர 9 ஏவ 8 அவ்யக்தஸம்ஜ்ஞகே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அப்பிரஹ்மாவின் பகல் வரில் அவ்வியத்தத்தினின்றும் இவ்வியத்தங்களனைத்துமுண்டாகின்றன. இரவு வரில் அவ்வனைத்தும் அதின்கண்ணே பிரளயமாகின்றன.

(வி-ம்.) கூறிப்போந்த பிரஹ்மாவின் ஒரு தினத்தில் அதாவது, நனவுகாலத்தில் அவ்வியத்தத்தினின்றும் இவ்வியத்தங்களனைத்து முண்டாகின்றன. வேறிடங்களில் அவ்வியத்தசத்தம் அவ்வியாகிருதாவத்தையின் வாசகமேயாயினும் ஈண்டதுகொள்ளத்தக்கதன்று; என்னை, பிரசங்கத்தில் பிரஹ்மாவின் ஒவ்வொரு தினத்திற் சிருட்டியையும் ஒவ்வோரிரவிற் பிரளயத்தையுங்கூறற்பொரு

ட்டே தொடங்கினதாம். அப்பிரஹ்மாவின் பகலிரவுகளி லுண்டாம் சிருட்டிலயங் களில் வாழுதிபூதங்கள் தோற்றிக்கெடுவனவன்றும்; மற்றை அதிலவைகள் கெடாதிருக்கின்றனவாதலின் அவ்வியக்த சத்தத்தால் வாழுதிகளின் காரணவடிவ அவ்வியாகிருதாவஸ்தையைக்கொள்ளாது பிரஹ்மாவின் சுழுப்தியவஸ்தையையே கொள்ளவேண்டும். அதாவது, சுழுப்தியடைந்த பிரஜாபதியின்பெயர் அவ்வியத்த மாம். அதினின்று போகத்தின் பூமிவடிவ தேகம்விடயாதிகளாகிய வியத்திக ளுண்டாகின்றன; அதாவது, முன்னர்ச் சூட்சுமவடிவாயிருந்த அவ்வியத்திகள் வழங்குதற்குத் தக்கவடிவோடு வெளிப்படுகின்றன என்பதாம். அப்பிரஜாபதி யாகிய பிரஹ்மாவின் இரவுபகல் வருவதற்குள்; அதாவது, சுழுத்திகாலத்தில் அவ் வியக்தவடிவகாரணத்தில் வெளிப்பட்ட வியத்திகள் லயப்படுகின்றனவென்க. (18)

(அ-கை.) இவ்வாறு இச்சம்சாரம் சீக்கிரத்திலே கெடுவதாயினும் நிவிர்த்தி யாவதில்லை. என்னை, அவித்தை காமகருமங்களால் பாதந்திரத்தையடைந்த இச் சம்சாரம் மீண்டு மீண்டும் உண்டாகின்றது. அங்ஙனமே, அவைகளின் வசத் தால் மீண்டும் மீண்டும் நாசமுமாகின்றது, அத்தன்மைய வருதல்போதலுடைய சம்சாரத்திலுள்ள பிராணிகளனைத்தும் அவித்தை காமகருமங்களினுல் பாதந்திரர் களே யாவர்கள் அவர்கட்குப் பிறப்பிறப்பாதி துக்கங்களுண்டாம். ஆதலின், இதினின்றும் நீங்கலே மேலாம் என்னும் வைராக்கியமுண்டாதற்கும், இச்சம்சா ரம் சமமான நாமரூபங்களோடே மறித்து மறித்துந்தோன்றலின் செய்தது கெடல், செய்யாதது கொளல் என்னுந் தோடத்தை நீக்குதற்பொருட்டும் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஹுதமராஹ வனவாயம ஹுங்கூா ஹுங்கூா வ்ரூீயதெ।
ரா தரூாமஎவஸ்ஃ வாயுஃ வ்ரஹவதயூஹரா மஎ ॥ (19)

ப-ம். 5 ஹுதமராஃ 2 வஃ 3 வன 4 சுயம 6 ஹுங்கூா 7 ஹுங்கூா 12 வ்ரூீய தெ 11 ரா தரூாமஎ 8 சுவஸ்ஃ 1 வாயுஃ 10 வ்ரஹவதி 9 சுஹரா மஎ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! முன் கற்பத்திலுள்ள பிராணிசமுதாயங்களே உத்தரோத்தர கற்பத்திலுமுண்டாகின்றன. உண்டாகிப் பரவசப்பட்டுப் பிரஹ்மா வின் பகற்குள்தான்றி இரவிற்குள்ளிலயமாகின்றன. (19)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பூர்வகற்பத்திலுள்ள தாவரசங்கமபூதசமுதாயங் களே உத்தரோத்தர கற்பத்திலுமுண்டாகின்றன. ஒவ்வொரு கற்பத்திலும் வெவ்வேறு புதிதாயுண்டாவதில்லை. என்னை, நியாயமதத்தில் அசத்காரியமுண்டா கின்றதெனக் கொள்வதுபோல, வேதாந்த சித்தாந்தத்திலுடன்பாடில்லை, ஒருகால் அசத்தானகாரியமே தோன்றுகின்றதாமெனின், மநுடக்கோடு மலடிமகன் முதலி யவைகளுந் தோற்றவேண்டுமாதலின் அசத்காரியந் தோற்றுவதில்லை. மற்றை, தனது தோற்றத்தின் முன்னர்த் தனது காரணத்தில் சூட்சுமவடிவமாயிருக்கப் பட்டகாரியமே காரணசாமக்கிரிவசத்தால் மறித்தும் வெளிப்படுகின்றது. பிற வெனின், ஒவ்வொரு கற்பத்திலும் வெவ்வேறு புதிய பிராணிகளின் உற்பத்தி யுடன்படிலோ, பூர்வ கற்பாந்தத்தில் பிராணிகளாற் செய்யப்பட்ட கருமங்கள் போகமின்றியே நாசப்படுகின்றனவாம். இக்கற்பத்தின் முதலில் உண்டாகப்பட்ட பிராணிகட்குப் பூர்வஞ்செய்யாத புண்ணியபாவ கருமங்களின் சுகதுக்கவடிவ பலன் அனுபவிக்கப்படும். இதுவே நூற்களில் கிருதநாசம் அகிருதாப்யாகமமென வழங்கப்படுகின்றது. ஆன்மஞானமிலாதோர்க்குச்செய்த கருமம் பலபோகமின்றி நாசப்படலும், செய்யாத கருமபலபோகமுங்கூறுதல் சாஸ்திரத்திற்குமுரணும் என்னை? சாஸ்திரத்தில்,

ஆ-சு. ஈவஸ்ய ஜெவஹொ கூவ்யம்கூதம்கஉஃ ஸுஹாஸுஹம்।
நாஹு கும்கூீயதெகஉஃ கலுகொடி ஸஸ்ரொஸுவி ॥

(போ-ள்.) ஆன்மஞானமின்றிய அஞ்ஞானியாற்செய்யப்பட்ட சுபாசுப கருமங்கள் அவசியமாய் அநுபவிக்கப்படுகின்றன். அவனுக்கு அது போகத்தைக் கொடாது நூறுகோடி கற்பமாயினும் நாசப்படாது. ஆதலினாலும், ஒவ்வொரு கற்பத்திலும் புதிதுபுதிதாய பிராணிகளின் ஜேற்றமுண்டாகாது. மற்றே, முன்னுள்ளதற்கேயாம். இது யுக்திமாத்திரத்தாற் பெறப்படுவதில்லை நேரே சுருதியுங் கூறுகின்றது.

ஆ-சு. ஈஸ்யஃஅம் ஔஜஃஸளயாதா யயாவஸ்வஃ ஏகஜ்யங்।
ஶிவஜ்ஞுவ்யயிவீம் ஆஜ்ஞிகூஃஉயொஷ்ஜிதி ॥

(போ-ள்.) சூரியன் சந்திரன் பிருதிவி அந்தரிக்ஷம் சுவர்க்க முதலிய சர்வ வுலகத்தையும் முன்னுள்ளவாறே உத்தரோத்தர கற்பத்திலும் பரமேசுரன் சிருட்டித்தனன், அத்தாவாசங்கம பூதசமுதாயங்களே அவித்தை காமகருமங்களால் பாவசப்பட்டுப் பிரஹ்மாவின் பகலில் அவ்வியத்தத்தினின்றும் வெளிப்படுகின்றன. இரவில் அதின்கண்ணே லயமடைகின்றனவென்க. (19)

(அ-கை.) இவ்வாறு அவித்தியாகாமகருமங்களினதீனமான பிராணிகட்கு அடிக்கடி தோற்றநாசங்காண்பித்து, 'சூவ்ரஜஹஸ்வதாஜ்ஞொகாஃ வாகஸாவதிஃ தொஜஸ்ஃக' எனக் கூறிப்போந்த வாக்கியார்த்தத்தை மூன்று மூன்று சுலோகங்களால் உபபாதனம்பண்ணி யருளினர். இப்போது 'ஸாஸ்வெகயவாகஜஃக ரவிஉயதெ' என முற்கூறிய வாக்கியார்த்தத்தை இரண்டு சுலோகங்களால் உபபாதனம்பண்ணி யருளுகின்றார்.

சு-ம். வாஸுஹொாத்ரா ஹாவொஸ்யாவ்யக்தொவ்ய க்தாதகாதகஃ।
யஃஸ வஸவெஃஷ்ரா ஹஸ்தெஷ்ரா கஸ்யத்ஸ்ரா கவிகஸ்யதி ॥ (20)

ப-ம். 5 வாஸுஃ 3 தஹ்ராத்ரா 2 ஹாவஃ 6 அகஸ்யஃ 7 அவ்யக்தாஃ 4 அவ்யக்தாத்ர 8 வகாதகாஃ 1 யஃ 9 ஸஃ 10 ஸவெஃஷ்ரா 11 ஹஸ்தெஷ்ரா 12 கஸ்யத்ஸ்ரா 13 க 14 விகஸ்யதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சத்தாவடிவபாவமானது அவ்வியக்தத்தினின்றும் பரமாம், முழுதும் விலட்சணமாம், இந்திரியங்கட்கவிடயமாம், நித்தியமாம். அத்தன்மைய சத்தாவடிவபாவமானது சர்வ பூதங்களுடனும் நாசப்படினும் நாசப்படாததாம். (20)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! கற்பிதமான சர்வ வுலகத்திலும் அநாதியான சத்தாவடிவபாவமானது முற்கூறிய சராசரதூலப்பிரபஞ்சகாரணவடிவ இரணிய கருப்பனெனும் அவ்வியக்தத்தினின்றும் பரமாம். அதாவது, அதனின்வேறும். அல்லது சிரேட்டமாம். என்னை? சத்தாவடிவபாவமானது இரணியகருப்பவடிவ அவ்வியக்தத்திற்குங் காரணமாமாதலின்.

சங்கை :—ஹே பகவன்! சத்தாவடிவபாவமானது அவ்வியக்தத்தினும் வேறுயினும் அதற்கொப்பாம். ஆயின் வேறுன ஆமா ஆயிற்கொப்பாவது போலும்?

சமாதானம் :—'அகஸ்யஃ உதி' ஹே அர்ச்சுன! சத்தாவடிவபாவமானது அவ்வியக்தத்தினும் வேறும் அதாவது, முழுதும் விலட்சணமாம், எக்கூற்றாலுனு

மொப்பற்றதாமென்க. 'சதஸ்யவ்ரதிஸாசுஷ்டி' சத்தாவடிவ பரமான்மாவிற்கொப்பான ஒருபொருளுமின்றும் என்பதும் ஆண்டுச்சுருதியாம்.

சங்கை :—ஹே பகவன்! அத்தன்மைத்தாய சத்தாவடிவபாவத்தை உலகனைத்தும் புலப்படக்காணுததென்னை?

சமாதானம்.—'சுவயுக்தஃ உதி' ஹே அர்ச்சுன! அச்சத்தாவடிவபாவமானது உருவாதிகுணங்களற்றதானதால் நேத்திர முதலிய இந்திரியங்கட்கு விடயமாவதில்லை. சுருதியும் 'நஅக்ஷிஷ்வஷாவபஸ்யதி கஶ்சிதெநம்' இவ்வான்மாவை நேத்திராதி யிந்திரியங்களால் ஒருவரும் காண்பதில்லை எனக் கூறுகின்றது. அது சநாதனமாம்; அதாவது, தோற்றமீறின்மையின் எப்போதுமுள்ளதாம். ஈண்டு 'தஷ்டா த்ரு' என்பதிலுள்ள 'து' சத்தமானது, தள்ளத்தகுந்த அநித்தியமான அவ்வியக்தத்தினின்றும் அச்சத்தாவடிவ அவ்வியக்தத்தில் விராகியத்தன்மைவடிவ விலட்சணத்தன்மையைக் குறிப்பிக்கின்றது. அல்லது, நியாயநூலார் கற்பிக்கின்ற சாதிவடிவசத்தாநிஷ்டித்தியை அறிவுறுத்துகின்றது. என்னை? அந்தச்சாதிவடிவ சத்தையானது நிரவிய குண கர்மமென்னும் முப்பொருளிலுங்கலந்துநிற்பினும் சாமான்ய விசேட சமவாய அபாவங்களுள் இருப்பதில்லை. இச்சைதன்யவடிவசத்தையோ எல்லாப்பொருளிலும் அநுசூதமாயிருக்கின்றது. இத்தன்மையசத்தாவடிவபாவமானது அந்த அவ்வியக்தமெனும் இரணியகருப்பன்போன்று பூதங்களனைத்துங் கெடினும்கேடுறாது. அப்பூதங்களைப்போலத் தோன்றுவதுமன்றும். அவ்வியக்தமென்னும் இரணியகருப்பனே, தான்காரியமும் பூதாபிமானியுமாதலின் அப்பூதங்களின் உத்பத்திநாசங்களால் உத்பத்தி நாசங்களோடுகூடியவனவன். பூதாபிமானியும் காரியவடிவமுமிலாத சத்தாவடிவ பரமான்மாவிற்கோ அப்பூதங்களின் உத்பத்திநாசங்களால் உத்பத்திநாசங்களில்லை யென்க. (20)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். சுவயுக்தஃ ஸாக்ஷாத் உதயாத் ஸ்ரஷ்டாரம் வராம் மதிம் ।
யம் வ்ரூவய நமிவத்ஸ்மதெ தஸ்மை வராய ஸ்துயே ॥ (21)

ப-ம். 1 சுவயுக்தஃ 2 ஸாக்ஷாத் 3 உதிஃ 4 உக்தஃ 5 தம் 8 ஸ்ரஷ்டாரம் 6 வராம் 7 மதிம் 9 யம் 10 வ்ரூவய 11 ந 12 நிவத்ஸ்மஹெ 13 தஸ்மை 16 யாய 15 வராய 14 ஸ்துயே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஈண்டு, அவ்வியக்தம் அக்ஷரம் என்னும் பெயர்களாற்கூறப்பட்ட சத்தாவடிவபாவத்தைச் சுருதி ஸ்மிருதிகள் பரமகதி எனக் கூறுகின்றன. எந்தச் சத்தாவடிவபாவத்தையடைந்து இவ்வதிகாரிகள் மறித்தும் பிறப்பையடைவதில்லையோ அதுவே பரமேசுரனுகிய எனக்கு எவற்றினு மேலான வடிவமாம். (21)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இந்நூலின்கண் இந்திரியங்கட்கவிடயமானதால் அவ்வியக்தமெனவும், நாசமின்மையின் அல்லது, யாண்டும் வியாபகமானதால் அக்ஷரமெனவுங்கூறப்பட்டுள்ள சத்தாவடிவபாவத்தை சுருதிஸ்மிருதிகள் பரமகதிவடிவமாய்க்கூறுகின்றன. ஈண்டு, 'வராம்' என்பதால் தோற்றமீறிலாத சுயம்பிரகாசபரமானந்தரூபமே கொள்ளத்தக்கது. அன்றியும், ஆன்மஞானமான்றனே முழுமுட்சுக்கட்குப்பிராப்தியாம் புருடார்த்தம் கதியெனப்படும்; அதாவது, அச்சத்தாவடிவபாவத்தையே சுருதி ஸ்வப்பிரகாசபரமானந்தவடிவ பரம புருடார்த்தமெனக் கூறுகின்றது. அல்லது, பிரமவுலகமீறுகிய கதிகளனைத்தும் காரியவடிவமாதலின் அபரங்களாம். இச்சைதன்யவடிவகதியோ காரியகாரணத்தன்மைகளற்றதானதால் பரமாமென்க. சுருதியும் 'வஷாவஷ்ய வராமதிஃ

வாஸுதேவஸர்வம் கிம்துர்லபாகாஷாவாவாஸாமதிஃ' இச்சச்சிதானந்தவடிவ பரமான்மாவே இவ்வித்துவானது பரமகதியாம், அதற்குமேலாம் பொருளொன்றில்லை. மற்றே, அப்பரமான்மாவே சர்வத்தின் அவதியும் பரமகதியுமாமென்க. எந்தச் சத்தாவடிவபாவத்தையடைந்து முமுட்சுக்கள் மறித்துஞ் சம்சாரத்தில் விழுவதில்லையோ அதாவது, மறித்தும் பிறப்பையடைவதில்லையோ அச்சத்தாவடிவபாவம் பரமேசுரனுகியனது பரமதாமமாம். அதாவது, அதுவே பரிபூரண விஷ்ணுவாகிய எனது எவற்றினுமேலானதும் சர்வோபாதிகளற்றதுமான உண்மை வடிவமாம். சுருதியும் 'தவிஷ்ணோஃ வாஸம்வஜ்ம்' எந்தச் சச்சிதானந்தவடிவ நிர்க்குணப்பிரஹ்மத்தை நான் பிரஹ்மமென அபேதமாயடைந்து தத்துவஞானி மறித்தும் பிறப்பிறப்பாகிய சம்சாரத்தையடைவதில்லையோ, அவ்வத்விதிய நிர்க்குணப்பிரஹ்மமே விஷ்ணுவின் பரமபதமாம். அதாவது, அவ்விஷ்ணுவின் உண்மைவடிவமாமென்க. ஈண்டு, இராகுவினது தலை, புருஷனது சைதன்யம், என்னுமிடங்களில் இராகுக்கும் தலைக்கும், புருடனுக்குஞ் சைதன்யத்திற்கும் அபேதமிருப்பினும், கற்பிதபேதத்தால் ஆரும்பவற்றுமையாம், உண்மையில் அபேதமே போல 'ஸயோஸ' என்பதானும் பரமேசுரனுக்கும் சத்தாசொரூபதாமத்திற்கும் உண்மையில் அபேதமிருப்பினும் கற்பிதபேதத்தால் ஆரும்பவற்றுமையாம். இதனாலிது பெறப்பட்டது:—எந்த அசுரா அவ்வியக்தவடிவபாவத்தைச் சுருதி பரமகதியெனக் கூறுகின்றதோ அது பரமேசுரனுடைய எனது சொரூபமாம் என்க.

(அ-கை.) ஆண்டு, 'சுநாஸ்யதாஃ வாதம்யோஷாம் வாரகிஸ்யபஃ தவ்யாஹம் வாருஹஃ வாயுரிஸ்ய யாதவ்யோமிஸஃ' என்னுஞ் சுலோகத்தால் கூறப்பட்ட பக்தியோகமே அப்பரமகதியை யடைவதற்கு உபாயமாம் என்னுமர்த்தத்தை ஸ்ரீ பகவான் இப்போதருளிச்செய்கின்றார்.

சு-ம். வாஸுதேவ வாஸ வாயு ஹஸ்ய ஹஸ்ய ஹஸ்யா ।
யவ்யாஜ்ஞ ஷ்ராதி யெக வவ்ருதிஷ்டம் தத ॥ (22)

ப-ம். 4 வாஸுதேவ 2 ஹ 3 வாஸ 1 வாயு 6 ஹஸ்ய 8 ஹஸ்ய 7 த 5 சுநாஸ்யா 9 யவ்ய. 11 சுஜ்ஞஷ்ராதி 10 ஹ்ருதாதி 12 யெக 14 வவ்ருஷ்டம் 15 தத.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! முற்கூறிய நிரதிசயபரமான்மாவானது அநன்யபக்தியாலே அடையப்படுகின்றது. அப்பரமான்மாவினுள்ளிருப்பதாம் இவ்வுலகங்களனைத்தும் அதனாலே வியாபிக்கப்பட்டதுமாம். (22)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! நிரதிசயபரமான்மாவாகிய நான் அநன்யபக்தியொன்றாலே பிராப்தமாவேன். ஆண்டு, பரமான்மாவொழிந்த வேறு விடயமிலாத பிரேமையே அநன்யபக்தியாம். அந்நிரதிசயபுருஷன் யாவனென அர்ச்சுனனுக்கு உணரும் வேட்கையுண்டாக ஸ்ரீ பகவானருளுகின்றார். 'யஸ்யாஜ்ஞஃ ஷ்ராதி உதி' ஹே அர்ச்சுன! எந்தக்காரணவடிவ புருஷனிடத்துக் காரியவடிவ பூதங்கள் அந்தர்வர்த்திகளாம் (உள்ளிருப்பனவாம்). என்னை? இவ்வுலகத்தும் யாதுயாது காரியமாமோ அதுஅது தனது உபாதானகாரணத்தின் அந்தர்வர்த்தியாம். கடசராவமுதலிய காரியங்கள் மண்வடிவகாரணத்திற்குள்ளே இருப்பனபோல, இச்சர்வ காரியப்பிரபஞ்சங்களும் காரணவடிவ புருஷனிடத்து அந்தர்வர்த்திகளாம். இதனாலே, அப்புருஷனால் இவ்வுலகம் வியாப்தமாம். மண்வடிவ காரணத்தால் கடசராவ முதலிய காரியங்கள் வியாபிக்கப்பட்டனபோலுமென்க.

ஆ-சு. யஹாதஶ்ம நாவாஶஹ்கிம்மிக யஹாநாணீயொநஜ்யா யொஹ்திகஶ்சிக ।
வ்ருக்ஷ இவஹ்தவ்ப்ரோ திவிதிஷ்ட தேயகவ்தெநஶ்ம வ்யாணஶ்ம ॥
வாஶ்ரா ஷெணஹவஶ்ம யஶ்சகிம்மீஜ்மதயஹ்ஸிந । [யணஃ ஶ்ரீதஃ ॥
ஏஷ்யதெ ஶ்ரூயதெதெவிவா கூக்ஷபஶஹிஶ்ச தத்ஸவஶ்ம வ்யாவ்ய நாஶா

(பொ-ள்.) எப்பரமான்மதேவனினின்றும் பராபரப்பொருளும் மிகச்சிறிதும் மிகப்பெரிதுமாகிய பொருளும் ஒன்றுமில்லையோ, எப்பரமான்மதேவன் பெரிய மரம்போல் சலிப்பற்றவனே, தனது சுயம்பிரகாசத்தில் நிலைப்பவனே, அப்பரமான்மதேவனுலே இவ்வுலகங்களனைத்தும் பூரணம்பண்ணப்பட்டது. இவ்வுலகத்தில் ஒரு பொருளுங் காணப்படவுங் கேட்கப்படவுமில்லை. இவ்வுலகனைத்தையும் உள்ளிலும் வெளியிலும் வியாபித்துக்கொண்டே நாராயணனிருக்கின்றான் என்பதாம். என்பது முதலிய அநேக சுருதிகள் அப்பரமான்மதேவனது வியாபகத்தன்மையைக்கூறுகின்றது. அத்தன்மைத்தான பரமான்மதேவன் அநன்யபக்தியொன்றினே அடையப்படுவன். ஈண்டு, நான் பிரஹ்மசொரூபம் என்னுந் தத்துவஞானமே அப்பரமான்மாவினது பிராப்தியாம். அதற்கு அப்பரமான்மாவின் அநன்யபக்தியே உபாயமாம் இது சுருதியிலுங் கூறப்படுகின்றது.

ஆ-சு. யஹ்யதெவெவாஶ ஹக்தியஶ்யாதெவெதயாஶாஶாள ।
தஹ்வைஶ்தெகயி தாஹஶ்யாஶஃ வ்ருகாஶஸ்தெஶஹாதஶ்மஃ ॥

(பொ-ள்.) எவ்வதிகாரிக்குப் பரமேசுரனிடத்துள்ள அநன்யபக்திபோலவே குருவினிடத்தும் உளதோ அம்மகாத்துமபுருஷனுக்கு இவ் வேதாந்தத்தாற் கூறப்பட்ட அர்த்தம்புலப்படத்தோன்றும் அஃதிலானுக்கின்றும்; ஆதலின், ஜிஞ்ஞாசுக்கட்கு அப்பரமேசுரபக்தி அவசியம் கர்த்தவ்யமாமென்க. (22)

(அ-கை) ஆண்டுப் பூர்வமிது கூறப்பட்டது. சகுணப்பிரஹ்மோபாசகன் அச்சகுணப்பிரஹ்மத்தையடைந்து புனராவிருத்தியடைவதில்லை. மற்றே, ஆண்டுக்ரமமுத்தியையே யடைகின்றான். சகுணப்பிரஹ்மலோகபோகத்தின்முன்னர் ஆன்மஞானமுண்டாகாத உபாசகனுக்குப் பிரஹ்மலோகத்தையடைவற்கு மார்க்காபேட்சை ஒரு தலையாயுளது, தத்துவஞானிகட்குப்போல அவாவில்லையென வில்லை ஆதலின், உபாசகர்கள் அப்பிரஹ்மவுலகத்தை யடைதற்பொருட்டு ஸ்ரீ பகவான் தேவயான மார்க்கத்தைக்கூறி யருளினர். ஈண்டுப் பிதிருயானமார்க்கத்தையுங் கூறினது தேவயானமார்க்கத்துதியின்பொருட்டாம்.

சு-ம். யத்ர காலெ த்வநாவ்ருத்திஞாவ்ருத்திஞ் சைவ யொகி நஃ ।
வ்ரயாதா யாந்தி தம் காலும் வக்ஷ்யாமி ஹரதர்ஷபஹ ॥ (23)

ப-ம். 2 யத்ர 3 காலெத்வ 6 நாவ்ருத்திஞ் 8 ஞாவ்ருத்திஞ் 7 ச 9 ஏவ 5 யொகி நஃ 4 வ்ரயாதாஃ 10 யாந்தி 11 தம் 12 காலும் 13 வக்ஷ்யாமி 1 ஹரதர்ஷபஹ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எம்மார்க்கத்திற்செல்கின்ற உபாசக கருமிகள் ஆவிருத்தியின்மையையும் ஆவிருத்தியையுமே அடைகின்றார்களோ அம்மார்க்கத்தை அருளுகின்றேன். (23)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இத்தேகத்தினின்றுமாவிவெளிப்பட்டதின்பின்னர் எக்காலத்திற்செல்லும் யோகியானவன் அதாவது, பகலிரவு முதலிய காலாபிமானிதேவதைகளா லுபலக்ஷிக்கப்பட்ட மார்க்கத்திற்செல்லும் யோகி புருஷன் அநாவிருத்தியையும் ஆவிருத்தியையும் அடைகின்றானே, அக்காலத்தை உனக்

கருளுகின்றேன். அதாவது, அக்காலாபிமானி தேவதைகளால் உபலக்ஷிக்கப் பட்ட அநாவிருத்திமார்க்கம் ஆவிருத்திமார்க்கங்களை உனக்கருளுகின்றேன். ஈண்டு, 'யோகிந:' என்னும் பதத்தால் கர்மோபாசகர்களைக் கொள்ளவேண்டும். அவற்றுள், தேவயானமார்க்கமாய்ச் செல்லுகின்ற உபாசகனே அநாவிருத்தியை யடைவன். பிதிருயானமார்க்கத்திற்செல்லும் கருமியோ ஆவிருத்தியையடைவன். தேவயானமார்க்கத்திற்செல்லு முபாசகனும் புனராவிருத்தியடைவன் என்பது, 'சூஷ்ரூஹ்ரவ நாலோகாஃ வ்ருநராவர்த்தினோ ந:' என்னும் வாக்கியத்தான் முன்னர்க்கூறப்பட்டது. அங்ஙனமாயினும், பிதிருயானமார்க்கத்திற்செல்கின்ற கருமிகளனைவரும் நியதமாய் ஆவிருத்தியையே யடைகின்றார்கள். ஒருவரேனும் ஆண்டுக் கிரமமுத்தியையடைவதில்லை. தேவயானமார்க்கத்திற் செல்பவர்க்குள்ளாயாரேனும் ஒருவர் பஞ்சாக்கினிவித்தையினப்யாசத்தால் தேவயானமார்க்கமாய்ப் பிரஹ்மலோகத்தையடைந்தும் புனராவிருத்தியை யடைகின்றார்கள். அங்ஙனமாயினும் எந்தவுபாசகன் தகரவித்தை முதலிய உபாசனைகளால் தேவயானமார்க்கமாய்ப் பிரஹ்மலோகத்தை யடைகின்றானே அவன் புனராவிருத்தியையடைவதில்லை; மற்றே, அப்பிரஹ்மலோகபோகானந்தரம் கிரமமுத்தியையடைகின்றான். ஆதலின், தேவயானமார்க்கமாய்ப் பிரஹ்மலோகத்தையடைந்த உபாசகர்களனைவர்களுமே ஆவிருத்தியையடைவதில்லை. இதுபற்றியே நியமமாய்ப் பிதிருயானமார்க்கம் ஆவிருத்திவடிவ பலமுடையதானதால் நிக்கிருஷ்டமாம்; இத்தேவயானமார்க்கமோ அநாவிருத்திவடிவபலமுடையதாதலின் உத்கிருஷ்டமாம். இவ்வாற்றால் தேவயானமார்க்கத்தைப் புகழ்தல்பொருந்துமாறு காண்க. தேவயானமார்க்கத்திற் செல்பவர்கள் அனைவர்களுமறித்தும் ஆவிருத்தியையடைவர்களேனும் அதிற்சென்ற உபாசகர்களனைவரும் புனராவிருத்தியையடையார்கள். ஆதலின், தேவயானமார்க்கம் ஆவிருத்தியின்மைவடிவ பலமுடையதாதல் சம்பவமாமென்க. ஈண்டு, 'யத்ரகாலேத்வனாவ்ருத்திமாவ்ருத்திஞ்சைவ யோகினோ' என்பதிலுள்ள காலசத்தத்தால் இலக்ஷணாவிருத்தியால் பகலிரவு முதலிய காலாபிமான தேவதாவுபலட்சிதமார்க்கத்தைக் கொள்ளாதொழித்து முக்கியார்த்தமானகாலத்தையே கொள்ளினோ மேற்கூறுஞ் சுலோகத்தில் 'சுக்லகிருஷ்ணேகதீஹ்யேதே' என்பது அமையாதாம், அவ்வாக்கியார்த்தம் காலமாகாமையின். அன்றியும் மிக விளக்கமார்க்கவாசகமாகிய மேற்கூறும் கதி, ஸ்ருதி, என்னுஞ் சத்தங்களும் அமையாதனவாம். ஆதலின், காலசத்தத்திற்கு மார்க்கத்தில் இலட்சணைகொள்ளப்பட்டதாம். அம்மார்க்கத்தில் காலாபிமான தேவதைகள் பலவாதலின் ஸ்ரீ பகவான் மார்க்தோபலட்சக காலசத்தத்தைக் கூறியருளினர் என்க.

(23)

(அ-கை.) முதலில் உபாசகர்களின் தேவயானமார்க்கத்தை ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். அக்நிர்ஜ்யோதிரஹ: ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணம்।
தத்ர ப்ரயாதா ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜநா: ॥

(24)

ப-ம். 2 அக்நி: 1 ஜ்யோதி: 3 அஹ: 4 ஶுக்ல: 5 ஷண்மாஸா 6 உத்தராயணம் 7 தத்ர 8 ப்ரயாதா 12 ப்ரஹ்ம 11 ப்ரஹ்மவித: 10 ஜநா: 9

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எம்மார்க்கத்தில் ஒளிவடிவ அக்கினியும் பகலும் சுக்கிலபட்சமும் ஆறுமாதமாகிய உத்தராயணமும் உள்ளதோ, அத்தேவயானமார்க்கத்தில் செல்லப்பட்ட சகுணப்பிரஹ்மோபாசகர்கள் அச்சகுணப்பிரஹ்மத்தையடைகின்றார்கள்.

(24)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எத்தேவயானமார்க்கத்தில் முதலில் ஒளிவடிவ மான அக்கினியுள்ளதோ அதன்பின் பகலும் அதன்பின் சுக்கிலபட்சமும் அதன் பின் ஆறுமாதவடிவ உத்தராயணமும் இருக்கின்றனவோ. ஈண்டு, 'கூ஫ிஜ்யோ-ஜ்ஃ' என்பதால் அக்கினியபிமான தேவதையைக் கொள்ளவேண்டும். இவ்வக்கினி யையே சுருதியானது அர்ச்சியெனக் கூறுகின்றது. 'அஹ꞉' என்பதால் திரூபி மான தேவதையைக்கொள்ளவேண்டும். 'சுக்கில' என்பதால் சுக்கிலபட்சாபி மான தேவதையைக்கொள்ளவேண்டும். 'ஷண்மாசா உத்தராயணம்' என்பதால் அதனபிமான தேவதையைக்கொள்ளவேண்டும். ஈண்டுக்கூறிய தேவதைகள் சுருதியிற்கூறப்பட்டவனைய தேவதைகட்கும் உபலக்ஷகங்களாம்.

ஆ-சு. தெசு஧ி-ழ஧ஹிஸ்ம் ஸ்வம் தயு஧ி-ழஷொ ஸ்஧ஸ்ஹ ரூவ஻ய-ழஸ்ண வக்ஷஸ்ர வ஻ய-ழஸ்ண வக்ஷாஉயாந ஷஐ-ழஹி஧ிஸ்ராஸ்ம் ஸ்ஹாஹா ஸ்ஹ꞉ ஸ்ஹ்ய꞉ ஸ்ம்வ ஹ்ரூம் ஸ்ம்வ஧ாஉ ஹி஧ியஸ்ராஹி஧ியஸ்ராஅம் உ஧ஸ்ஸ்ம்அம் உ஧ஸ்ஸொவிஉ-ழ்ஹம் ஹ்ரூ-ழ்ஹ-ஷொ ஸ்ராஸவ꞉ ஸ்வஸ்ஹாந ஐ஧ஹ்மயஷ்ய꞉ ஷெ-ழவயொஐ஧ ஸ்ஹவயஸ்வஸ்ஹ ஸவ஧ி஧வஉயஸ்ராஸ்ஹ ஸ்ர஧ஸ்ராஸவஸ்ராவ஧ி-ழ ஸ்ராவ஧ி-ழஸ்ஹ.

(பொ-ள்.) அவ்வுபாசகபுருஷன் முதலில் அர்ச்சியபிமானதேவதையையடை கின்றான். பின்னர்த் திரூபிமானதேவதையை யடைகின்றான், பின்னர்ச் சுக்கில பட்ச அபிமானதேவதையை யடைகின்றான். பின்னர் ஆறுமாதவடிவ உத்தராய ணாபிமான தேவதையையடைகின்றான். அதன்பின் வருடாபிமான தேவதையை யடைகின்றான். பின்னர் ஆதித்தியனையும், பின்னர்ச் சந்திரனையும்; பின்னர் நக்ஷத் திரத்தையும் அடைகின்றான். ஆண்டு, அமானவபுருடன்வந்து இவனைப் பிரஹ்ம லோகத்திற்குக் கொண்டுபோகின்றான். இதுவே தேவமார்க்கமும் பிரஹ்மமார்க் கமுமாம். இத்தேவயானமார்க்கமாய்ப் பிரஹ்மலோகத்தையடைந்த வுபாசகன் மீண்டு மநுடத்தன்மையை யடைவதின்றும்; அச்சுருதியில் மற்றொரு சுருதியை அனுசரித்து சம்வத்சரத்தின் பின்னர்த் தேவலோக தேவதையையும், அதன் பின் வாயுதேவதையையும், அதன்பின் ஆதித்தியதேவதையையுங் கொள்ளவேண் டும். அங்ஙனமே, நக்ஷத்திரத்தின்பின்னர் வருணேந்திரப் பிரஜாபதிகளைக் கொள்ளவேண்டும். இவ்வாறு ஸ்ரீ பாடியக்காரரால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டு, அவ்வுபாசகனை முதலில் அக்கினிதேவதை கொண்டுபோகும், அவ் வக்கினிலோகத்தினின்றுந் திரூபிமானிதேவதை தனது லோகத்திற்குக்கொண்டு போகும் இவ்வண்ணமே மேலுமுணர்ந்துகொள்க. மின்னலின் லோகத்தில் பிரஹ்மலோகவாசியாகிய அமானவபுருஷன் வந்து அவ்வுபாசகனை வருணலோகத் திற்குக்கொண்டுபோவான் உபாசகன் அமானவபுருஷன் இருவரோடும் நக்ஷத்தி ராபிமானிதேவதை வருணலோகம்வரையிற் செல்லும், பின்னர் வருணதேவதை அவ்விருவரோடும் இந்திரலோகம்வரையிற்செல்லும், பின்னர் அவ்விந்திரதேவதை அவ்விருவரோடும் பிரஜாபதிலோகம்வரையிற்செல்லும், பின்னர் அப்பிரஜாப திக்குப் பிரஹ்மலோகத்திற் செலவலியின்மையின் கேவலம் அமானவபுருஷனே அவ்வுபாசகனைப் பிரஹ்மலோகத்திற்கொண்டுபோகின்றான். ஈண்டுப் பிரஜாபதி என்பதால் விராட்டைக்கொள்ளவேண்டும். ஆண்டு, ஸ்ரீ பகவானும் அக்கினியபி மானதேவதை திரூபிமானதேவதை சுக்கிலபட்சாபிமானிதேவதை உத்தராய ணாபிமானதேவதை என்னும் நான்கு தேவதைகளையே கூறியருளினர். சம்வத்சர தேவலோகவாயு ஆதித்தியன், சந்திரன், மின்னல், வருணன், இந்திரன், பிரஜா பதி முதலிய தேவதைகளை ஈண்டருளவில்லையாயினும் சுருதியை யநுசரித்து அத்தேவதைகளையுங் கொள்ளவேண்டுமென்க. எம்மார்க்கத்தில் அக்கினிமுதற் கொண்டு பிரஜாபதியீறான சர்வதேவதைகளும் இருக்கின்றனவோ அத்தேவயான

மார்க்கத்தில் செல்லப்பட்ட சகுணப்பிரஹ்மோபாசகர்கள் இரண்யகருப்பவடிவ சகுணப்பிரஹ்மத்தையே யடைகின்றார்கள். அதன் வாயிலாய் அவர்கள் நிர்க் குணப்பிரஹ்மத்தையடைகின்றார்கள். இஃதனைத்தும் 'காயஃ வாஉரிஸ்யமி கஸ்ய வவதேஃ' என்னுஞ் சூத்திரத்தில் ஸ்ரீ பகவான் பாடியக்காரர் விரிவாய்க் கூறியிருக்கின்றனர். ஈண்டு, 'வனேதந வ்ரதிவஉஸ்ரோநா உஏம்ரோநவரோவதஃ ஸோ நாவதஃஸ்ரை' என்னுஞ் சுருதியில் 'உஏம்' எனக்கூறப்பட்ட விசேடணத்தால் இப்பொருடோற்றுகின்றது :—இக்கற்பத்தின் பின் வேறுகற்பத்தில் பஞ்சாக்கினி வித்தையையுடைய யாவனுகினுமோருபாசகன் அப்பிரஹ்மலோகத்தினின்று புனராவிருத்தியையடைகின்றான். அவனுக்கே பகவான் 'ஸுவ்ரஹ்மலோகாஃ ஸ்ரை வாநரோவதிஃ நொஜாஃஸ' என்னும் வாக்கியத்தால் ஆவிருத்தியைக்கூறியருளினர். இதுபற்றியே ஈண்டு ஸ்ரீ பகவான் கூறியருளிய மார்க்கத்திற்குச் சுருதிசொல்லிய மார்க்கத்தைத்தழுவியே உரைபண்ணினும். இதனை விரிவோ ஸ்ரீ ஆன்மபுராணம் ஆறுவது அத்தியாயத்தில் மிக விளக்கமாம். (24)

(அ-கை.) கூறிப்போந்த தேவயான மார்க்கத்தைத்துதிப்பான் ஸ்ரீ பகவான் பிதிருயானமார்க்கத்தை அருளிச்செய்கின்றார்.

சு-ம். யஸ்மொ ராதிரஸ்யா கூர்ணஃ ஷணாவஸா உக்ஷிணாயநம் ।
தத்ர ஆம்உரஃவம் ஜ்யோதி யொஃமீ வ்ராவ்ய ரிவதஃஸெ ॥ (25)

ப-ம். 1 யஸ்மஃ 2 ராத்ரிஃ 3 தஸ்யாஃ 4 கூர்ணஃ 5 ஷணாவஸாஃ 6 உக்ஷிணாயநம்
7 தத்ர 9 ஆம் உரஃவம் 10 ஜ்யோதிஃ 8 யொமீ 11 வ்ராவ்ய 12 ரிவதஃஸெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எம்மார்க்கத்தில் தூமமும் இரவும் கிருஷ்ணபக்ஷமும் ஆறுமாதவடிவமாகிய தக்ஷிணாயநமும் இருக்கின்றனவோ அம்மார்க்கத்திற் செல்லப்பட்ட கருமியானவர்கள் சந்திரனினின்று கிட்டிய கருமபலத்தையடைந்து புனராவிருத்தியை யடைகின்றார்கள்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எந்தப்பிதிருயானமார்க்கத்தில் முதலில் தூமமும் பின்னர் இரவும் அதன்பின்னர்க் கிருஷ்ணபக்ஷமும் அதன்பின்னர் ஆறுமாதவடிவ தக்ஷிணாயநமும் இருக்கின்றனவோ ஈண்டும், தூமம் இரவு கிருஷ்ணபக்ஷ மாசதக்ஷிணாயநம் என்பவைகளால் அவ்வவ்வபிமான தேவதைகளைக்கொள்ள வேண்டும். இங்கேயும் கூறப்பட்ட தூமமுதலிய நான்கு தேவதைகளும் சுருதியிற் கூறப்பட்ட ஏனைய தேவதைகட்கும் உபலக்ஷகங்களாம்.

ஆ-சு. தெயஸ்ரஃ ரஹிஸ்ரம் ஸவஜ்ஜியஸ்ரோ உராத்ரிஸ்ரா தெஸ்ரஸ்ரவரவக்ஷஃஸ்ரவரவ
க்ஷாஉஸ்ராநுஷப உக்ஷிணைதி ஸாஸ்ரம் ஸாநுஸாஸ்ரஹஸ்ரஃ விதுஸ்ரொகம்
விதுஸ்ரொகா உகாஸாஸ்ரகா ஸாத்ரம் உரஃஸ்ரம் தஸ்ரிநுயாவதஸ்ரம்வாதஸ்ரஸ்ரி
ஸ்ரூவாஸ்ரெத தெவாஸ்ரூநாம் வாநநி-ஃவதஃஸெ.

(பொ-ள்.) அக்கருமிபுருஷன் முதலில் தூமாபிமானிதேவதையை யடைகின்றான். பின்னர் இரவபிமானிதேவதையையும் அதன்பின் கிருஷ்ணபக்ஷாபிமானிதேவதையையும் அதன்பின் ஆறுமாதவடிவ தக்ஷிணாயந அபிமானி தேவதையையும் அதன்பின் பித்ர்லோகாபிமானி தேவதையையும் அதன்பின் ஆகாசாபிமானி தேவதையையும் அதன்பின் சந்திரனையும் அடைகின்றான். அந் தச்சுவர்க்கமெனும் பெயருள்ள சந்திரலோகத்தில் புண்ணியகரும போககால பரியந்தம் வசித்துப் பின்னர்ச் சேடித்திருந்த புண்ணியபாவ கருமங்களின்வசத் தால் மறித்தும் அம்மார்க்கவாயிலாகவே நிவிருத்தனாகின்றான். ஈண்டு ஸ்ரீ பக

வான் தூமாபிமானதேவதை இராத்திரியபிமானதேவதை கிருஷ்ணபக்ஷாபிமான தேவதை தக்ஷிணயனபிமானதேவதை என்னும் இந்நான்கையுமருளினர். பிதுரு லோகாபிமானதேவதை ஆகாசாபிமானதேவதை சந்திரதேவதை என்னும் இம் மூன்றையு மருளிச்செய்யவில்லையாயினும், சுருதியநுசாரமாய் அம்மூன்றையும் ஈண்டுக்கொள்ளவேண்டும். இவ்வணம் தூமாபிமான தேவதை முதற்கொண்டு சந்திரதேவதையீறுகக் கூறப்பட்ட தேவதைகளனைத்தும் எம்மார்க்கத்திலுள் ளனவேவா அப்பிதுருயானமார்க்கத்தில் செல்லப்பட்ட இஷ்டபூர்த்தத்த என்னு மூவகைக்கருமங்களையுஞ்செய்யப்பட்ட கருமிபுருஷன் சந்திரலோகத்தில் அச்சந் திரனினின்று கிடைத்த அக்கருமபலமாகிய சுகதுக்கங்களையடைந்து அக்கரும நாசமானபின்னர் மறித்தும் இம்மநுடலோகத்திற் சூழலுகின்றனன். ஆதலின், ஆவிருத்தியையுடைய இப்பிதுருயானமார்க்கத்தினின்று ஆவிருத்தியின்றிய தேவ யானமார்க்கம் மிகச் சிரேட்டமாம். ஈண்டு, அக்கினிஹோத்திரமுதலியன இஷ்ட கருமமாம். வரி கிணறு குளம் தருமசாலை முதலியன பூர்த்தகருமமாம். நல்ல வர்கட்கு கோ பொன் முதலியவைகளைத் தானம்பண்ணல் தத்தகருமமாம். இம் மூவகைக்கருமங்களை முன்னரும் விரிவாய்க்கூறினும். (25)

(அ-கை.) கூறிப்போந்த இருவகை மார்க்கங்களையும் உபசம்மாரம்பண்ணி யருளுகின்றார்.

சு-ம் ஸுக்லகிருஷ்ணே மதீ ஹ்யேதே ஜகதஃ ஸாஶ்வதே மதே।
ஏகயா யாத்யனாவ்ருத்திமன்யயாவர்ததே புனஃ ॥ (26)

ப-ம். 4 ஸுக்லகிருஷ்ணே 5 மதீ 3 ஹி 2 ஏதேஃ 1 ஜகத 6 ஸாஶ்வதே 7 மதே
8 ஏகயா 10 யாதி 9 அனாவ்ருத்திம் 11 அன்யயா 13 ஆவர்ததே 12 புனஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வுலகத்தில் மிகு விளக்கமான சுக்கிலகிருஷ்ண மார்க்கங்களிரண்டும் அநாதிசித்தங்களாம். அவற்றுள் சுக்கிலமார்க்கத்தால் சில வுபாசகர்கள் அநாவிருத்தியை யடைகின்றார்கள். கிருஷ்ணமார்க்கத்தாலோ சர்வர்களுமே புனராவிருத்தியை யடைகின்றார்கள். (26)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! முன்னர், பிரஹ்மலோகமடைவதற்கு மார்க்கமா மெனக்கூறிய தேவயானமார்க்கம் ஞானவடிவப் பிரகாசமிகுதிப்பாட்டையுடைய அக்கினி முதலிய தேவதையுடையதும் பிரகாசவடிவ சகுணப்பிரஹ்மவித்தையா லடையப்படுவதும் பிரகாசமயலோகங்கள் பலவுள்ளதும் சுவப்பிரகாசப் பிரஹ் மத்தையடைவதற்குக் காரணமானதுமாதலின் உத்கிருஷ்டமாம். ஞானவடிவப்பிர காசமயமாதலின் அது சுக்கிலமெனப்படுகின்றது. சுவர்க்கலோகமடைவதற்குக் காரணமெனக்கூறிய பிதுருயானமார்க்கமோ, ஞானமயப்பிரகாசமின்மையின் தமோமயமும், அப்பிரகாசவடிவ புகையிரவு முதலியவைகளோடு கூடியதும், மறித்தும் பிறவிக்கேதுவுமாதலின் நிக்கிருஷ்டமாம்; ஆதலின் அதுவும், கிருஷ்ண மெனப்படுகின்றது. இவ்வணம் சுக்கில கிருஷ்ணநாமங்களாற் பிரசித்தமான இரண்டு மார்க்கங்களும் இவ்வுலகிற்கனுதிசித்தமாம்; அதாவது, இச்சம்சாரம் பிரவாகவடிவத்தால் அனுதியாமாதலின் இதன்கணுற்ற அவ்விரண்டும் அனுதி யாம். உலகம் என்பது பிராணிமாத்திரவாசகமாயினும், ஈண்டதனுல் சகுணப் பிரஹ்மவித்தையினதிகாரியையும் கருமாதிகாரியையும் நூலுணர்ந்தார்களையுமே கொள்ளவேண்டும்; பிராணிமாத்திரம் கொள்ளப்படுவதில்லை; என்னை, இவ்விரண் டுமார்க்கமும் எல்லாராலும் அடையப்படுவதன்று, மற்றிரு, கேவலம் உபாசக கரு மிகளாலே யடையப்படுகின்றது. கருமோபாசனைகளின்றிய பாபிகளாகிய அஞ் ஞானிகட்கு, அதேதாகதியிற் சேர்ப்பிக்கும் மூன்றுவது ஸ்தானம் எனப்படும் மார்

க்கமே பிராப்தியாகின்றது. ஆதலின், ஈண்டுச்சுகத்து என்னுஞ் சுத்தத்தால் கருமி உபாசகர்களைக்கொள்வதே தகுதியாமென்க. ஹே அர்ச்சுன! இவ்விரண்டுமார்க்கத் துள்ளும் முதலாவது தேவயானவடிவ சுக்கிலமார்க்கத்தால் பிரஹ்மலோகத்தை யடைந்த உபாசகர்களுள் எவராகினுமொருவர் அனுவிருத்தியையே யடைகின்றார் கள். சுருதியும் 'நஅவா நராவதாஎதெ' கிரம முத்தியையுடைய உபாசகன் புனராவிருத்தியையடைவதில்லை. இரண்டாவது பிதுருயானமெனும் கிருஷ்ண மார்க்கத்தால் சுவர்க்கத்தையடைந்த கருமிகளனைவர்களுமே புனராவிருத்தியை யடைகின்றார்கள்.

ஆ-சு. ஸ்ரோவ்யாஜ்ஞ கஉஞணஷ்ஹஷ்ய யதிஷ்ஷெ ஹகஸொத்யயம் ।
தஷ்ஹா ஜ்ஞொகாத்ஷ நரொதிசுஷைஷ்ஹொகா யகஉஞணை ॥

(பொ-ள்.) இவன் ஈண்டெவ்வெக் கருமம்பண்ணுகின்றானே அவ்வப் புண் ணிய கருமவசத்தால் சுவர்க்கலோகத்தையடைந்து அப்புண்ணிய கருமத்தை யநு பவித்தலால் நாசம்பண்ணி மறித்தும் இம்மநுடலோகமடைய வருகின்றான் என்பதாம். (26)

(அ-கை.) ஆண்டுச் சகுணப்பிரஹ்மோபாசனை பிரஹ்மலோகமடைதற்குக் காரணமானதுபோல தேவயானமார்க்க சிந்தனையுங் காரணமாமாதலின் அம்மார்க் கோபாசனையைச் செய்விப்பான் ஸ்ரீ பகவான் அம்மார்க்கஞானத்தைத் துதித்தரு ளுகின்றார்.

சு-ம். ஸெநதெ ஸ்ருதீ வாயஞ்ஜாநநு யொமீ உஹ்யதீ கஷ்டந !
தஷ்ஹாதஷ்ஹவெஞஷ்ஹ காஷ்ஹெஷ்ஹ யொமயஹ்கதாஷ்ஹவாஜ்ஹஞஞ ॥ (27)

ப-ம். 7 ந 2 வனெத 3 ஸ்ருதீ 1 வாயஞ்ஜ 4 ஜாநநு 6 யொமீ 8 உஹ்யதீ 5 கஷ்டந
9 தஷ்ஹாக 11 ஸவெஞஷ்ஹ 12 காஷ்ஹெஷ்ஹ 13 யொமயஹ்கத 14 ஹவ 10 ஸஜ்ஹஞஞ.

(அ-ம்.) ஹே பார்த்த! கூறிப்போந்த இவ்விரண்டு மார்க்கங்களையுமுணர்ந் து ஒரு தியானபாயணரும் மோகத்தையடையார். ஆதலின், எக்காலத்தும் நீ தியானபாயணத்தி. (27)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இத்தேவயானமார்க்கமெனும் சுக்கிலமார்க்கமோ கிரமமுத்தியையே தருவதாம். இப்பிதுருயானமார்க்கமெனும் கிருஷ்ணமார்க் கமோ மறித்தும் பிறவியையே தருவதாம். என்றிவ்வணம் இவ்விருமார்க்கங் களையு முணரப்பட்ட சகுணப்பிரஹ்மத்தியான பாயணர்கள் ஒருவரும் மோக த்தையடையார்கள். அதாவது, பிதுருயானமார்க்கத்தைப் பயப்பிக்கும் இஷ்ட பூர்த்தகருமங்களை எனக்குச் செயற்பாலனவாம், மற்றொன்றுமில்லை; என்றிவ்வ ணம் கருமமேமகர்த்தவ்யமாமென்று நிச்சயியார்கள். ஹே அர்ச்சுன! சகுணப் பிரஹ்மத்தியானரூப யோகம் அபுனராவிருத்திவடிவ பலத்தையே தருவதாமாத லின் நீயும் அப்பலத்தின்பொருட்டு அந்த யோகத்தையே செய்குதி. அதாவது, சமாகிதச்சித்தமுடையனாகுதி என்பதாம். (27)

(அ-கை.) இப்போது அந்தத்தியானவடிவ யோகத்தில் அதிகாரிகட்கு அன்புமிக்குண்டாக்குவித்தற்பொருட்டு ஸ்ரீ பகவான் மீண்டும் அந்தயோகத்தைத் துதித்தருளுகின்றார்.

சு-ம். வெதெஷ்ஹ யஜ்ஞேஷ்ஹ தவஃஹ்ஹ வைவ
தாநெஷ்ஹ யத்புண்யஹலம் ப்ரதிஷ்டம் ।
அத்யேதி தத்ஸர்வமிதம் விதிக்வா
யொமீ பரம் ஸ்தாநமுபைதி சாத்யம் ॥ (28)

ப-ம். 1 வெஹெஷு 2 யஜ்ஞஷு 4 தவஃஸு 3 அ 5 ஸவ 6 தாநெஷு 7 யஃ 8 வாணயஸ்ஸும் 9 வ்ரதிஷ்டம் 15 சுதெஸ்தி 10 தஃ 11 ஸவ்ம் 13 ஜுஹ்ம் 14 விதிக்ஷ்வா 12 யொ மீ 17 வாம் 19 ஹ்ருதம் 20 உவெதி 16 அ 18 சூஹ்யம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! வேதத்திலும் யஞ்ஞத்திலும் தவத்திலும் தானத்திலும் எப்புண்ணியபலம் சாத்திரத்திற் கூறப்பட்டுள்ளதோ, அவ்வனைத்தையும் அந்தத் தியானநிஷ்டன் கூறிப்போந்த வர்த்தத்தையுணர்ந்து அதிக்கிரமணஞ் செய்கின்றன். எவற்றினும் மேலான காரணவடிவ ஸ்தானத்தையுமடைகின்றன்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! வேதாத்தியயனகாலத்தில் சாஸ்திரத்திற்கூறிய பிரமசரிய முதலிய நியமபாலனபூர்வகம் விவாகாண முதலிய ஆறங்கத்தோடு இருக்காதிவேதங்களை அத்தியயனம் பண்ணுகின்றவனுக்கும், அங்கோபாங்க சாத்தைகளோடு அசுவமேத முதலிய யஞ்ஞங்களை நன்கநுட்டிப்பவனுக்கும், மனபுத்திகளின் ஒருமைப்பாட்டால் சிரத்தையோடு கிருச்சிரசாந்திராயண முதலிய தவம் பண்ணுகின்றவனுக்கும், நல்லதேசகாலத்தில் சத்பாத்திரங்களுக்குச் சாத்திரத்தில் விதித்தபடி அன்போடு கோ, பொன் முதலியவைகளைத் தானம்பண்ணுகின்றவனுக்கும் சாத்திரத்தில் எப்புண்ணியபலம் விதிக்கப்பட்டிருக்கின்றதோ; அதாவது, சார்வபௌமன் முதற்கொண்டு விராட்டுலகசுகமீறுய்த்தைத்திரீய சுருதியில் நூறு நூறு பங்கு அதிகமெனக் கூறப்பட்ட அச்சுகங்களனைத்தையும் அந்தத்தியானபராயண புருஷன் அதிக்கிரமணஞ்செய்கின்றன். எப்பொருளையுணர்ந்ததனின், ஸ்ரீ பகவான் அருளுகின்றார். 'உஷ்விதா ஜதி.' அர்ச்சுன! இவ்விவெட்டாவதத்தியாயத்தில் முற்கூறிய எழுவகை விஞ்சுகளின் வாயிலாய் அருளிச்செய்யப்பட்ட வர்த்தங்களை நன்றாய் நிச்சயித்துச் சிரத்தையோடு மநுட்டிக்கும் அச்சகுணப் பிரஹ்மோபாசகன் அப்புண்யபலன்களனைத்தையுந் தாண்டுகின்றன்.

சங்கை:—ஹே பகவன்! அவ்வுபாசகனுக்குக் கேவலம் அப்புண்ய பலன்களைக் கடந்தறன் பயனே, அல்லது, மற்றியாதானும் வேறு பயனுமுளதோ?

சமாதானம்:—'வாம்ஹ்ருதஜ வெதிஆஹ்யம்' என; அர்ச்சுன! அந்தத்தியானபராயண புருஷன் அச்சுவர்க்கமுதலிய பலன்களை அதிக்கிரமணித்தன்மாத்திரமன்று மற்றே, சர்வத்திலும் மேலானதாயும், சர்வகாரணரூபமுமாகிய ஈசுரசம்பந்தமுடைய ஸ்தானத்தையுமடைகின்றன்; அதாவது, அந்தத்தியான நிஷ்டவுபாசக புருஷன் சர்வத்திற்குங் காரணவடிவப் பிரஹ்மத்தையுமடைகின்றன் என்பதாம். ஆண்டு, இவ்விவெட்டாவது அத்தியாயத்தால் ஸ்ரீ பகவான் தியேயத்துவரூபத்தால் தத்பதார்த்தத்தைத் திருவாய் மலர்ந்தருளினரென்க. (28)

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய ஸ்ரீ உத்தவாநந்தகிரி சுவாமிகளது பூஜ்யபாத சிஷ்யராகிய ஸ்ரீ சித்கணனந்தகிரி சுவாமிகளால் இயற்றியருளிய பிரகிருத கூடார்த்ததீபிகையெனப் பெயரிய வியாக்கியானத்தின்

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

ஒன்பதாவது அத்தியாயம்.

ஓம் ஸ்ரீ கணேசாயநமஃ ஸ்ரீ குருப்யோநமஃ ஸ்ரீ காசிவிச்வேச்வராப்யாம்நமஃ
ஸ்ரீ சங்கராசார்யேப்யோநமஃ.

ஆண்டுப் பூர்வம் எட்டாவது அத்தியாயத்தில் சுழுமுனையெனும் மூர்த்தன்ய நாடி கமனத்துவாரமும் இருதயம் கண்டம் புருவமத்தியம் இது முதலிய விடங்களில் பிராணதாரணையும் சர்வேந்திரிய வாயில்களின் பந்தனவடிவகுணமும் இருக்கப்பட்ட யோகத்தால் தனதிச்சாபூர்வகம் இத்தேகத்தினின்றும் பிராணன் வெளிப்பட்டவனும் அர்ச்சிராதிமார்க்கத்தால் பிரஹ்மலோகத்தையடைந்தவனுமாகிய உபாசக புருஷன் அவ்வுலகத்தில் திவ்ய போகங்களை நுகர்ந்ததின் பின்னர்ப் பிரஹ்மஞான முண்டாவதால் அக்கற்பாந்தத்தில் பிரஹ்மப்பிராப்திவடிவக்கிரமமுத்தியையடைகின்றன் எனக் கூறப்பட்டது. ஆண்டு, இவ்வையப்பாடு நிகழ்கின்றது. இவ்வதிகாரிக்குக் கூறிப்போந்தவாற்றான மோட்சப்பிராப்தியாமா ? அல்லது வேறு மார்க்கத்தானுமாமா என்பதே ; இவ்வண நிகழ்ந்த அச்சங்கையை நீக்குவான்,

சுக ஸுயெதாஃ ஸுததம் யொஸாம் ஸுஸ்தி நிதயுஃ
தஸ்யாஹம் ஸுஷுஹஃ வாயுஃ நிதயாக்ஷஸ்யொமிதஃ

(அகை.) என்பது முதலிய வசனங்களால் பகவானது உண்மைவடிவ விஞ்ஞானத்தினின்றுமே நேரே மோக்ஷப்பேறு கூறப்பட்டது. அப்பேற்றில் அநன்ய பகவத்பக்தியே முக்கிய காரணமாமென்பதும், 'வஸுஷஃ ஸுவஸுஃ வாயுஃ ஸுஸ்ருஷுஸ்ருஷ்டிமஸ்யா' என்னும் வாக்கியத்தாற் கூறப்பட்டது. இஃதனைத்தும் பூர்வாத்தியாயத்தில் கூறப்பட்டதாம். ஆண்டு, முற்கூறிய தாரணாபூர்வக பிராணோத்க்ரமணமும் அர்ச்சிராதிமார்க்க கமனமும் பலநாட்செலன் முதலிய கிலேசங்களின்றியே நேரே மோட்சப்பிராப்தியின்பொருட்டு ஸ்ரீ பகவானது உண்மைவடிவத்தையும் அவரது பக்தியையும் விரிவாய் நிரூபணஞ் செய்தற்பொருட்டு இவ்வொன்பதாவது அத்தியாயந் தொடங்கப்படுகின்றது. ஆண்டுப் பூர்வாத்தியாயத்தில் திவ்யப்பிரஹ்மத்தை நிரூபித்து அதன் தியானபுருஷரின்கதி கூறப்பட்டது. இப்போது ஒன்பதாவது அத்தியாயத்தில் ஞேயப்பிரஹ்மத்தின் நிரூபணத்தால் ஞானநிஷ்டர்களின்கதி கூறப்படுகின்றது. அதில் மேற்கூறும் ஞானத்தைத் துதித்தற்பொருட்டு ஸ்ரீ பகவான் மூன்று சுலோகங்களை அருளிச்செய்கின்றார்.

ஸ்ரீஹயவதந வாயு.

சு-ம். இதம் தவ தெ மநுஹ்யதரம் ப்ரவக்ஷ்யாமி அநஸூயவெ ।
ஜ்ஞாநம் விஜ்ஞாநஸஹிதம் யஜ்ஜ்ஞாத்வா மொக்ஷ்யஸெ(3)ஸுபாதாகாத் ॥ (1)

ப-ம். 3 இதந்தவ 2 தெ 4 மநுஹ்யதரம் 7 ப்ரவக்ஷ்யாமி 1 அநஸூயவெ 6 ஜ்ஞாநம் 5 விஜ்ஞாநஸஹிதம் 8 யத் 9 ஜ்ஞாத்வா 11 மொக்ஷ்யஸெ 12 அஸுபாதாகாத்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன ! அசூயை யின்றிய உனக்கு யானிப்பரமரகசியமாயும் விஞ்ஞானசகிதமாயுமுள்ள ஞானத்தை யருளிச்செய்கின்றேன். எந்த ஞானத்தைப்பெற்று நீ சம்சாரத்தினின்றும் மோட்சமடைவையோ. (1)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! கேவல மகாவாக்கியவடிவ சத்தப்பிரமாணத்தாலுண்டானதாயும், பிரத்தியக்கபின்ன பிரஹ்மத்தை விஷயம்பண்ணப்பட்டதாயுமுள்ள நான் பிரஹ்மசொரூபன் என்னும் எந்த ஞானத்தை முன்னரும் பலவாற்றூற் கூறினேனே, மேலுங் கூறுவேனே, இவ்வத்தியாயத்திலு மருளுவேனே அதை உனக்கருளுகின்றேன் நீ சாவதானமாய்க்கேட்பாய். ஈண்டு, 'ஊஂதத்' என்பதிலுள்ள 'து' சத்தமானது பூர்வாத்தியாயத்திற் கூறப்பட்ட சகுணப்பிரஹ்மத்தியானத்தினின்று இந்த ஞானத்தில் விலக்ஷணத்தன்மையைக் காட்டுகின்றது. அதாவது, இவ்வான்மஞானமே நேரே மோக்ஷமடைதற்குக் காரணமாம். முற்கூறியதியானமன்றும். என்னை, ஆன்மஞானம் அஞ்ஞானத்தைக்கெடுப்பதுபோல அத்தியானம் கெடுக்கமாட்டாதாதலின் அது நேரே மோக்ஷமடைதற்குச் சாதனமன்றும். மற்றை, அந்தத்தியானம் அந்தக்காணசுத்திவாயிலாய் ஆன்மஞானத்தைச் சம்பாதித்தீத கிரமமாய் அம்மோக்ஷத்தைப் பயப்பிக்கும் என்பது முந்தின அத்தியாயத்திலுங் கூறப்பட்டது. மீண்டும், எத்தன்மையதாமெனின், அந்த ஞானம் பரமரகசியமாம். அதாவது, மிக ரகசியமானதால் மறைத்துவைக்கத்தக்கதாம். இப்போது அந்த ஞானத்தை ஒளித்துவைக்கும் விஷயத்தில் ஞானத்திற்கு ஏது கர்ப்ப விசேடணமருளுகின்றார். 'விஜ்ஞாநஸஹிதம் உக்தி' ஹே அர்ச்சுன! அந்த ஞானம் விஞ்ஞானசகிதமாம் அதாவது, நான் பிரஹ்மசொரூபன் என்னும் அபரோட்சானுபவ பரியந்தமானது; இதனேன அஃதொளித்துவைக்கத்தக்கதாம். இவ்வணம் மிகுரகசியமாயினும் நானுனக்கு அருளுகின்றேன். அவ்வர்ச்சுனனிடத்து இந்த ஞானோபதேசத்திற்கு யோக்கியத்தன்மைபை அறிவுறுத்துவான் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனே விசேடித்தருளுகின்றார். 'சுஸஹ்யவே' ஹே அர்ச்சுன! நீ அசூயை இன்றியவனுதலின் இந்த ஞானத்தையுபதேசித்தற்கு அதிகாரியாவாய். ஆண்டுக்குணத்திற்றோடதிர்ஷ்டிபண்ணல் அசூயையாம். அஃதின்றியவன் நீ. அதாவது இக்கிருஷ்ணபகவான் எனது சமீபத்தில் எப்போதுந் தமதைசுவரியத்தைச் சொல்லிக்கொண்டு தம்மையே துதிக்கின்றார் என்னு மசூயை இன்றியவனும். ஈண்டு, அசூயையின்மை ஏனைய ஆர்ச்சவசம்யம முதலிய சிஷ்யகுணங்கட்குமும் உபலக்ஷகமாம். அதாவது, சீடர்களின் குணங்களனைத்து நிறைந்துள்ள உனக்கு இந்த ஞானத்தை யுபதேசிக்கின்றேன் என்பதாம்.

சங்கை :—ஹே பகவன்! அத்தன்மையஞானப்பேறற்றூல் எனக்கெப்பயன் வாய்க்கும்?

சமாதானம் :—'யஜ்ஞாத்வாமொக்ஷ்யஸேஶுபாத்' ஹே அர்ச்சுன! எவ்வான்மஞானத்தையடைந்து நீ சீக்கிரமே சர்வதுக்கங்கட்குங்காரணவடிவ சம்சாரத்தினின்று முக்தனாகுவையோ.

(அ-கை.) இப்போது அவ்வான்மஞானத்தில் அதிகாரிகட் கபிமுகத்தன்மையை யுண்டாக்குதற்பொருட்டு ஸ்ரீ பகவான் மீண்டு மந்தஞானத்தைத் துதித்தருளுகின்றார்.

சு-ம். ராஜவித்யா ராஜகுஹ்யம் பவித்ரமித³முத்தமம் ।
ப்ரத்யக்ஷாவக³மம் த⁴ர்ம்யம் ஸுஸுக²ம் கர்துமவ்யயம் ॥ (2)

ப-ம். 2 ராஜவித்யா ராஜகுஹ்யம் 5 பவித்ரம் 1 இதம் 4 உத்தமம் 6 ப்ரத்யக்ஷாவகமம் 7 த⁴ர்ம்யம் 8 ஸுஸுக²ம் 9 கர்துமும் 10 அவ்யயம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வான்மஞானம் சர்வவித்தைகட்கும் ராஜனும் இரகசியப் பொருளனைத்திற்கு மிராஜனும் எல்லாவற்றினு முத்தமமும் பவித்திரா

மும் பிரத்தியகூஷப் பிரமாணமுடையதும் சர்வ தருமங்களின் பலரூபமும் சுக பூர் வகமே செய்யத்தக்கதும் நித்திய பலமுடையதுமாம். (2)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அவ்வான்மஞான மெத்தன்மைத்தாமெனின் லௌகிக வைதிக வித்தைகளனைத்திற்கும் ராஜனும். அதாவது, அவ்வனைத்தினும் மேலானதாம். என்னை, இவ்வான்மஞானம் காரியத்தோடு அவித்தையை முழுது நாசம் பண்ணுவதாம். இஃதொழிந்த மற்றைய வித்தைகள் அவ்வாறு கெடுப்பன வன்றும். மற்றே, அம்மூலாவித்தைக்கு ஏகதேசமே விரோதிகளாம். அவ்வேக தேசத்தைச் சாஸ்திரத்தில் தூலாவித்தையென்றும், அவஸ்தாஞ் ஞானமென்றுங் கூறுவர். மறித்து மெத்தன்மைத்தாமெனின், அவ்வான்ம ஞானம் உலகத்திலும் சாஸ்திரத்திலுமுள்ள இரகசியப் பொருளனைத்திற்கு மிராஜனும். அதாவது, அவ்விரகசியப் பொருளனைத்தினும் மிக ரகசியமாம். என்னை, இவ்வான்மஞானம் பலசென்மத்திற் செய்யப்பட்ட நிஷ்காம புண்ணிய கருமத்தானே பிராப்தமாம். அஃதின்றியவன் தனது புத்திவலியால் பல விரகசியப் பொருள்களை யுணரினும் இவ்வான்மஞானத்தை யுணரச் சமர்த்தனல்லன். ஆதலின், இது இரகசியப் பொரு ளனைத்தினும் மிக ரகசியமாம். அன்றியும், எவற்றினும் உத்தம பவித்திரமாம். என்னை, தரும நூலிற் பாவ நிவிருத்தியின்பொருட்டுக் கூறப்பட்ட பிராயச்சித்தம் இவனுடைய பாவங்களனைத்தையு நிவிருத்தியாது; மற்றே, யாதானு மொருபாவத் தையே நிவிருத்திக்கும். அங்ஙனம் நிவிருத்தியாயினும், அப்பாவம் தனது கார ணத்தில் சூட்சுமவடிவாயிருக்கின்றது. இதனாலே இவன் மறித்தும் பாவஞ்செய் வதில் முயலுகின்றான். ஆதலின் அப்பிராயச்சித்தம் சர்வத்தினும் உத்தம பவித் திரமன்றும். இவ்வான்மஞானமோ பல்லாயிரம் பிறப்பிற் றேடியதும், தூல சூட் சும அவஸ்தைகளையுடையதுமான அப்பாவங்களனைத்தையும் அவற்றின் காரண வடிவ அஞ்ஞானத்தையும் சிக்கிரமே நாசஞ்செய்வதாமாதலின், இது சர்வத்தி னும் உத்தம பவித்திரமாம்; அதாவது சுத்தப்படுத்துவதாம். ஹே பகவன்! அதீந்திரியமாகிய தருமத்தில் உலகத்திற் சந்தேகமுள்ளதுபோல, இந்த ஞானத் திலும் சந்தேகமிருக்கும் என்னும் அர்ச்சுனனது சங்கை நிகழ இவ்வான்மஞானம் தனது சொரூபத்தானும் பலத்தானும் பிரத்தியட்சமேயாம் என ஸ்ரீ பகவான் உத்தர மருளுகின்றார். 'வ்ருத்ர ஸுரவமஉ உதி' என. ஆண்டு, 'ஸுவமஉதெ ஸுநெ நெதுயவமஸொஉம' எதனற் பொருளுணரப்படுகின்றதோ அது அவகம மாம். இவ்வாறு விரித்துரைத்தலால் 'அவகமம்' என்னுஞ் சத்தம் பிரமாணத்தின் வாசகமாம். 'ஸுவமஉதெ வுரவுதெ உதுயவமஉஃ வறும்' அதிகாரிக்குப் பிராப்தி யாவது அவகமமாம். இவ்வாறு விரித்துரைத்தலால் அவகமசத்தம் பலவாசகமு மாம். அவற்றுள் முதலாவதர்த்தத்தில் பிரத்தியகூஷம் அவகமம் (பிரமாணம்) எதில், அது பிரத்தியகூஷாவகமமாம் என்னும் அன்மொழித்தொகையால் விருத்தி வடிவ ஞானத்தில் சாகூஷிப்பிரத்தியகூஷத்துவஞ் சித்தமாகின்றது. இரண்டாவது அர்த்தத்தில் பிரத்தியகூஷம் அவகமம் பலம் எதற்கு, அது பிரத்தியட்சாவகம மாம் என்னும் அன்மொழித்தொகையால் அவ்விருத்தி ஞானத்தில் பலத்தானும் சாட்சிப் பிரத்தியகூஷத்துவம் சித்தமாம். ஆண்டு யானிப்பொருளையுணர்ந்ததால் இப்போதெனக்கு இப்பொருள் விஷயக அஞ்ஞான நீங்கியது என்னுஞ் சாட்சி யநுபவம் எல்லாவுலகத்து நிகழும். அச்சாட்சியநுபவம் அவ்விருத்தி ஞானத்தை உருவத்தானும் அஞ்ஞான நிவிருத்திவடிவப் பலத்தானும் விஷயஞ்செய்கின்றதா மென்க. இவ்வாறு வித்துவான்களது சாட்சிரூப அநுபவத்தால் அவ்வான்ம ஞானம் பெறப்படினும் தனது தருமத்திற்குப் பிரதிகூலமன்றும். மற்றே, தருமியவடிவமாம்; அதாவது பலபிறப்பிற்றேடிய நிஷ்காம தருமங்களின் பல வடிவமாம்.

அத்தியாயம்.] கூடார்த்ததீபிகையென்னு முரையும். சுருங்

சங்கை :—ஹே பகவன்! அத்தன்மைய ஆன்மஞானம் பெருந்துன்பத்தாற் சம்பாதிப்பதாமன்றே?

சமாதானம் :—'ஸ்ரவணம் கதாஂ உதி' ஹே அர்ச்சுன! பிரஹ்மவேத்தாவாகிய குருவின் கிருபையாற் கிடைக்கப்பெற்ற விசாரத்தைச் சககாரியாகவுடைய தத்துவமசி முதலிய மகா வாக்கியத்தால் அத்தத்துவஞானம் அநாயாசமாகவே சம்பாதித்தற்கேலும்; அது தனதுற்பத்தியில் தேசகாலமுதலியவைகளின் வியவதானத்தை யபேட்சிப்பதன்று. என்னை, அந்த ஞானம் கேவலம் வஸ்துப் பிரமாணதீனமேயாம். தியானம்போல புருஷேச்சையதீனமன்றும். பொருளோடு பிரமாணஞ் சம்பந்தப்பட்டதின்பின்னர் அப்பொருளுணர்ச்சி யவசியமாய் நிகழுமாதலின்.

சங்கை :—ஹே பகவன்! இவ்வாறு அநாயாசமாய் ஆன்மஞானசித்தி உடன்படிலோ, அற்பாயாசத்தாற் சாத்தியமான கிரியைக்கு அற்பமே பலமாம்; மகத்பல மன்றுமாதலின், ஆன்மஞானத்திற்கும் பலமற்பமேயாம், பெரும் பயனிலதாம். மிகுந்த பிரயாசத்தாற் சாத்தியமான கருமத்திற்கே பெரும்பயன் காணப்படுகின்ற தாதலின்.

சமாதானம் :—'சுவயமே உதி' ஹே அர்ச்சுன! இவ்வான்மஞானம் அநாயாசமாகவே சித்தமாமாயினும் மோட்சவடிவ அதன்பலம் நாசமாவதின்றும். ஆதலின், இஃதவ்வியயமாம் அதாவது, நாசமற்ற மோட்சவடிவ பலமுடையதாம். அந்தக்காரணவிருத்திவடிவ ஞானத்தில் அவ்வியயவடிவத்தன்மை பொருந்தாதாயினும் சுருதியில் சத்தியமான பிரஹ்மத்தை யடைவிப்பதால் ஞானத்தைச் சத்திய மெனக் கூறியதுபோல ஈண்டு ஸ்ரீ பகவானும் மோக்ஷவடிவ அவ்வியய பலத்தைத் தருவதால் அந்த ஞானத்தையும் அவ்வியயமெனக் கூறியருளினர். அக்கினிஹோத்திர முதலியவைகள் பெருமாயாசத்தாற் சித்திப்பனவாமாயினும் அவைகள் நாசமுடைய பலமுடையனவேயாம். இது சுருதியிலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. யொவாஹதஉக்தம் மாமய்விதிக்வாஹ்யிஜ்ஞொகெஜ்ஞொஹொதி யஜதெதவ
ஹவ்யதெவ ஹ்ரூயதிவஷ்டி ஸஹஸ்ரானாய்ஜ்ஞவ தெவாஸ்யதஹ்ரூவதி.

(பொ-ள்.) ஹே கார்க்கி! எவன் இவ்வகூரப் பரமான்மாவை யுணராது இவ்வுலகத்தில் ஹோமமும் யஜ்ஞமும் பல்லாயிரம் வருடம் தவசுஞ் செய்கின்றானே அக்கருமங்களனைத்தும் இவனுக்கு நாசமுடைய பலத்தையே கொடுக்கின்றன எனபதாம். இவ்வாற்றால் இவ்வான்மஞானஞ் சர்வத்திலும் மேலானதாமாதலின், இதுவே முமுட்சுக்களால் மிகவுமாதரிக்கத்தக்கதாமென்க. (2)

(அ-கை.) ஹே பகவன்! இவ்வாறு இவ்வான்மஞானம் அத்தியந்த சுகமும் சர்வத்திலுமேலானதும் பெரும் பயனுக்குக் காரணமுமாகுமேல், யாவரும் அதன்கண் ஏன் முயலவில்லை? மற்றே, அவசியம் முயலவேண்டும். பெரும் பயனுடைய சுகமகாரியத்தில் உலகனைத்தும் இயல்பாமே பிரவிருத்திக்குமாதலின், யாவர்களு மதிற் பிரவிருத்திக்கவே சம்சாரமார்க்கமே உச்சேதமாம் என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவானருளுகின்றார்.

சு-ம். சுஸ்ரூஷவொ நரா வர்தமானா பராஙம்ருத்யுமுபயந்தி தீராஃ ।
ஸ்வாத்யாயே நம் நிவதத்யெக ஏதஸ்மிந்ஸம்யக்வதத்யுத ॥ (3)

ப-ம். 4 சுஸ்ரூஷவொ நராஃ 5வர்தமானாஃ 3 பராஙம் 2 ம்ருத்யும் 1 உபயந்தி 7 ஸ்வாத்யாயே 6 நம் 9 நிவதத்யெக 8 ஏதஸ்மிந் ஸம்யக்வதத்யுத.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வான்மஞானவடிவ தருமத்திற் சிரத்தையிலாதோன் பரமேசுரனுகிய என்னை யடையாது மிருத்யுவையுடைய சம்சாரமார்க்கத்தில் நிரந்தரம் சுழலுவன். (3)

(.வி-ம்) ஹே அர்ச்சுன! இவ்வான்மஞானம் தேடற்கருபாசமாகவும் சர்வத்தினின்றும் உத்கிருஷ்டமும் மகத்பலமுடையதுமாயினும், இதிற் சர்வப்பிராணிகட்கும் பிரவிருத்தியுண்டாவதில்லை. இதில் இவர்களுடைய சிரத்தையின்மையே காரணமாம். ஹே அர்ச்சுன! இவ்வான்மஞானவடிவ தருமத்தின் சொரூபமும் சாதனமும் பலமும் சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருப்பினும், அவற்றில் சிரத்தை பண்ணுதவன்; அதாவது, வேதத்திற்கு மாறுன கெட்ட காரணங்களின் தெரிசனத்தால் மலிஞந்தக்கரணனுதலின் அவன் ஆன்மஞானத்தின் சொரூப சாதன பலன்களை அப்பிரமாணவடிவமெனவே கொள்கின்றன். அங்ஙனமே, எப்போதும் பாவத்தையே செய்பவனும் தம்ப முதலிய அசுரசம்பத்தையே காரணம் பண்ணுபவனுமாகிய அப்பாபான்ம புருஷன் தனது புத்தியாற் கற்பித வுபாயத்தால் ஒருவாறுய் முயலினும், நூல்விதித்த முயற்சியின்மையால் என்னை யடைவதில்லை; என்னை யடைவிக்குஞ்சாதனத்தையுமடைவதில்லை. இதனுனே, சிரத்தையின்றிய அவன் மிருத்யுவையுடைய இச்சம்சாரமார்க்கத்தில் சுழலுவன். அதாவது, அவன் அடிக்கடி கீடபதங்க முதலிய நாகசம்பந்த யோனியின்கண்ணே சுற்றுவன் என்பதாம். (3)

(அ-கை.) ஆண்டுப்பூர்வம் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்குச் சொல்லுதற் பொருட்டுப் பிரதிக்ஞைபண்ணிய அவ்வான்மஞானத்தை விதிமுகத்தானும் நிடேதமுகத்தானும் துதித்தருளினர். அதில் முதற்சுலோகத்தாலே விதிமுகமாய்த் துதித்தருளினர். 'சுஸ்ரு ஜ்யாதாஃ வாஸுதேவாஃ' என்னும் மூன்றுவது சுலோகத்தாலே நிடேதமுகமாய்த் துதித்தருளினர். அவற்றுள் எப்பொருட்பேற்றால் எப்பெரும்பயனைக் கூறப்படுகின்றதோ அஃதப்பொருளின் விதிமுகத்துதியாம். எப்பொருட்பேறின்மையால் எப்பெருந்துன்பங் கூறப்படுகின்றதோ அஃதப்பொருளின் நிடேதமுகத்துதியாம். இவ்வாறு மூன்று சுலோகங்களால் ஆன்மஞானத்தைத்துதித்ததால் அதில் அபிமுகமாகிய அர்ச்சுனனுக்கு ஸ்ரீ பகவான் இப்போதிரண்டு சுலோகங்களால் அவ்வான்மஞானத்தை யருளிச்செய்கின்றார்.

சு-ம். ஊயா ததஜ்ஞம் ஸவ-ஃம் ஜமதவ்யூதூஊஹ்தி-ஃகா।
ஊஹ்தாநி ஸவ-ஃஹஂதாநி நஅாஹ வெஷ்வவஜ்ரிதஃ ॥ (4)

ப-ம். 2 ஊயா 6 ததம் 3 ஊஹ்ம் 4 ஸவ-ஃம் 5 ஜமஃ 1 ஸுவ்யூதூஊஹ்தி-ஃகா 8 ஊஹ்தாநி
7 ஸவ-ஃஹஂதாநி 12 நஅ 9 அ 10 ஸுஹம் 11 தெஷா 13 ஸுவஜ்ரிதஃ

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அவ்விபக்தமூர்த்தியுடைய பரமேசுரனுகிய என்னால் இவ்வுலகனைத்தும் வியாபிக்கப்பட்டிருக்கின்றது. இதனுனே, இச்சர்வபூதங்களும் என்னிடத்திருக்கின்றனவாம். பரமேசுரனுகிய நானே இப்பூதங்களிடத்திருப்பவனலேன்! (4)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பூதபௌதிகவடிவமும் அவைகளின் காரணவடிவமுமாகக் காணப்படு மிவ்வுலகனைத்தும் பரமேசுரனுகிய எனதுஞானத்தாற் கற்பிக்கப்பட்டனவாம். இவ்வுலகனைத்தும் அதிட்டானவடிவமும் பரமார்த்த சத்திய வடிவமுமாகிய என்னால் சத்துரூபத்தாலும் ஸ்புரணரூபத்தாலும் வியாபிக்கப்பட்டன. கயிற்றிற் கற்பிதமான பாம்பு மாலை தண்டம் நீர்த்தாரை முதலியவைகட்கு

அதிட்டானமாகிய கயிறு தனது இதமம்சத்தான் வியாபித்திருப்பதுபோல அதிட்டானவடிவ பரமேசுரனுகிய நானும் எனது சத்தாஸ்புரணரூபங்களால் இவ்வுலகனைத்தும் வியாபித்திருக்கின்றனன்.

சங்கை :—ஹே பகவன்! எனது ரதத்திலுள்ள பரிச்சின்னமான வசுதேவபுத்திரனுகிய தங்களால் இவ்வுலகனைத்தும் வியாபிக்கப்பட்டதெயெவ்வாறும், மற்றை, வியாபித்தல்கூடாது. தாங்கள் கூறியது பிரத்தியட்ச விரோதமாதலின்.

சமாதானம் :—'ஈவ்யக்தமூர்த்திர்மயா' என, இந்திரியங்கட்குப் புலப்படாத ஸ்வப்பிரகாச அத்துவிதிய சச்சிதானந்தமூர்த்தியையுடையவன் அவ்வியக்தமூர்த்தியாம். அத்தன்மைத்தான பரமேசுரனுகிய என்னுல் இவ்வுலகனைத்தும் வியாபிக்கப்பட்டிருக்கின்றனவாம். உனது மாம்சமயநேத்திரத்தாற் காணப்பட்ட இத்தூல சரீரத்தால் யானிவ்வுலகனைத்தையும் வியாபிக்கவில்லை. ஆதலின், நான் கூறியது பிரத்தியட்சத்திற்குமாறின்றும். என்னுல் வியாபிக்கப்பட்டிருத்தலினுனே எனது சத்தாஸ்புரணரூபங்களால் சத்துப்போலவும் ஸ்புரணம்போலவும் யாவுமிருக்கின்றன. அங்ஙனமாயினும், நான் அக்கற்பித பூதங்களிடத்தில் உண்மையிலிருப்பவனலேன். என்னை, கற்பிதமிலாத எனக்கும் கற்பிதமாகிய அவைகட்கும் சம்பந்தமொன்று மமையாமையின், சம்பந்தமிலாது அப்பூதங்களிடத்தில் உண்மையில் என திருப்புப்பொருந்தாது; இதுபற்றியே வேதமுணர்ந்தோர் இவ்வாக்கியங் கூறுகின்றனர் :—

ஆ-சு. யதா³ யஸ்ய ஹ்ருʼதி³ தத்ஸ்வதமமனேன ஸ்வரூபேண ।
ஸதை³வாவிக³ம ஸ்வபா⁴வஸ்தே ॥

(பொ-ள்.) எவ்வதிட்டானத்தில் எப்பொருள் கற்பிதமாமோ அக்கற்பிதப்பொருளாய குணத்தோடாயினும் தோடத்தோடாயினும் அவ்வதிட்டானம் சிறிதளவும் சம்பந்தப்படுவதின்றும். (4)

(அ-கை.) ஹே பகவன்! சர்வவிகாராகிதமும், சர்வபரிபூரணமுமாகிய தாங்கள் பரப்பிரஹ்மமே; அத்தன்மைத்தான தங்கட்குப் பூதங்களிடத்திருப்பு உண்மையில் இலாதொழிக; ஆனல், அப்பூதங்களோ தங்களிடத்தில் உண்மையிலிருக்கின்றனவாம் என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ந அ உ²ஸ்²தானி ஹ்யதானி வ்யூ ஏ யொமமைஶ்வரம் ।
ஹ்யதஸ்²யந்ந அ ஹ்யதஸ்²ரோ உ²ஸ்²தா ஹ்யதஸ்²ரோவந்ந: ॥ (5)

ப-ம். 3 ந அ 2 உ²ஸ்²தானி 1 ஹ்யதானி 7 வ்யூ 4 ஏ 6 யொமம் 5 ஐஶ்வரம் 10
ஹ்யதஸ்²யந்ந 14 ந 12 அ 13 ஹ்யதஸ்²ந: 8 உ² 9 ஸ்²தா 11 ஹ்யதஸ்²ரோவந்ந:.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இச்சர்வ பூதங்களும் பரமேசுரனுகிய என்னிடத்திலாதனவாம். என்னுடைய இவ்வற்புதப் பிரபாவத்தை நீ காணுதி. எனது சச்சிதானந்த சொரூபம் பூதங்களைத் தாரணம் பண்ணினும் பூதங்களை யுண்டாக்கினும் அப்பூதங்களிடத்திருப்பதன்றும். (5)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! வானிலுள்ள சூரியனிடத்தில் நீரலைதல் முதலிய விகாரங்கள் ஆரோபிக்கப்படுவதுபோல, பரமேசுரனுகிய என்னிடத்தில் இப்பூதங்களனைத்தும் உண்மையில் இருப்பனவன்றும். அர்ச்சுன! நீ இப்பிரகிருதி சம்பந்தமாகிய மறுட புத்தியை விடுத்து நுண்ணிய விசாரதிருட்டியால் எனதைசுவரியத்

தைக்காணுதி. அதாவது, உலகப்பிரசித்தமான மாயாவியினுடைய செய்யொணாப் பொருளைச்செய்விக்குஞ் சாமர்த்தியவடிவப்பிரபாவம்போல, மாயாவிவடிவப் பரமேசுரனுகிய என்னுடையசெய்யொணாததைச்செய்யும் சாமர்த்தியவடிவப் பிரபாவத்தை நீ காணுதி. நான் உண்மையில் எப்பொருட்கும் ஆதாரவடிவமுமலென் ஆதேயவடிவமுமலெனினும் இப்பூதங்களிடத்துள்ளேன்; என்னிடத்திவைகளுமுள்ளன; இஃதெனது மாமாயையாம். அர்ச்சுன! எனக்குச் சச்சிதானந்தகனவேகரசமே பரமார்த்தசொரூபமாம்; அதுவே பூதபிருத்தாம். அதாவது, என்னுடைய அந்தச்சொரூபமே உபாதானகாரணரூபத்தன்மையால் இக்காரியவடிவபூதங்களனைத்தையுந் தாரணமும் போஷணமும் பண்ணுகின்றது. ஆதலின், எனது சொரூபம் பூதபிருத்து எனப்படுகின்றது. அன்றியும் அந்த எனது சொரூபமே கருத்தாவடிவத்தால் பூதங்களனைத்தையும் உண்டாக்குகின்றது. ஆதலின், எனது சொரூபம் பூதபாவனமெனப்படுகின்றது. இவ்வாறு இப்பூதங்களனைத்திற்கும் உபாதானகாரணமும் நிமித்தகாரணமுமாயினும் எனது சச்சிதானந்தவடிவம் உண்மையில் அசங்க அத்துவிதிய சொரூபமாதலின் அப்பூதங்களிடத்திருப்பதன்றும். அதாவது, கனாக்காண்போன் உண்மையில் கனாப்பொருளோடு சம்பந்தப்படாததுபோல எனது சொரூபமும் உண்மையில் இக்கற்பிதபூதங்களோடு சம்பந்தப்படாததேயாம். ஈண்டு, 'ஜகூதா' என்னும் வாக்கியத்திலுள்ள ஆறும் வேற்றுமையானது கற்பனைபேதத்தாலாம்; இராகுவினது சிரசு என்னும் வாக்கியத்தில் இராகுவிற்குஞ் சிரசிற்கும் அபேதமாயினும் கற்பனைபேதத்தால் ஆறும்வேற்றுமையுமையுமாறு போலாமென்க.

(5)

(அ-கை.) ஆண்டுப் பூர்வசுலோகத்தில் ஸ்ரீபகவான் பரமேசுரனுகிய எனக்கும் இப்பூதங்களனைத்திற்கும் உண்மையாய்ச் சிறிதுஞ் சம்பந்தமில்லையாயினும் நான் அப்பூதங்களிலிருப்பவன், என்னிடத்தவைகளிருப்பனவாம் எனத் திருவாய் மலர்ந்தருளினர். ஆண்டு பரமேசுரனுகிய தங்கட்கும் இப்பூதங்கட்கும் உண்மையிற் சம்பந்தமின்மேறல் தங்கட்கு மவைகட்கும் ஆதாரவாதேயத்தன்மை எவ்வாறும் எனச் சங்கையுண்டாக அச்சங்கையகற்றுவான் ஸ்ரீ பகவான் உண்மையிற்றம்முள் சம்பந்தமிலாத பொருள்கட்கும் ஆதாரவாதேயத்தன்மையை உலகப்பிரசித்ததிட்டாந்தத்தால் அருளிச்செய்கின்றார்.

சு-ம். யயாகாஶஸ்஥ிதோ நித்யம் வாயுஃ ஸர்வத்ரகோ மஹான் ।
ததா ஸர்வாணி பூதானி மத்ஸ்தானீத்யுபதாரய ॥ (6)

1 யயா 6 ஆகாஶஸ்஥ிதஃ 4 நித்யம் 5 வாயுஃ 2 ஸர்வத்ரகஃ 3 மஹான் 7 ததா 8 ஸர்வாணி 9 பூதானி 10 மத்ஸ்தானி 11 இதி 12 உபதாரய.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எல்லாத்தேசங்களிலுஞ் செல்லப்பட்டதாயும் மகத்பரிமாணமுடையதாயும் இடைவிடாது சலிக்குமியல்புடையதாயுமுள்ள வாயுவானது வானிலிருப்பதுபோல, இப்பூதங்களனைத்தும் பரமேசுரனுகிய என்னிடத்தினிலித்திருப்பனவென நீ நிச்சயித்துக்கொள்ளுதி. (6)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! கிழக்கு முதலிய சர்வதிசைகளிலும் கமனம் பண்ணப்பட்டதாயும் மகத்பரிமாணமுடையதாயும் உத்பத்தி திதிலய காலங்களில் சலனசுபாவத்தையுடையதாயுமுள்ள வாயுவானது அசங்கசுபாவமுடைய ஆகாசத்தினிலித்திருக்கின்றது. ஆனாலோ அவ்வாயு அவ்வசங்காகாசத்தோடு உண்மையில் ஒருபோதும் சம்பந்தப்படாததுபோல, அசங்க சுபாவமுடைய பரமேசுர

ஞகிய என்னிடத்தில் சம்பந்தமின்றியே இவ்வாஞதி பூதங்கணிலத்திருக்கின்றன வாம். கருத்திதுவாம் :—அசங்க சுபாவமுடைய ஆகாசத்தில் உண்மையில் வாயுவின் சம்பந்தமிலாதிருந்தும் வாயு வானிலுள்ளது எனச் சொல்லப்படுவதுபோல, அசங்க சுபாவமுடைய பரமேசுரஞகிய என்னிடத்தில் உண்மையில் இவ்வாஞதி பூதங்களின்றேனும் இவைகள் என்னிடத்திருப்பனவெனச் சொல்லப்படுகின்றன. இவ்வாறு உண்மையிற் சம்பந்தமின்றேனும் என்னிடத்தில் இக்கற்பிதவுலகத்தின் ஆதாரத்தன்மையும், அதில் எனது ஆதேயத்தன்மையும் ஆகாச திருஷ்டாந் தத்தால் விசாரித்து நிச்சயம் பண்ணுதி. அல்லது, 'சுவம் மொஹ்யவா ரூஷ சுவம்மொஹிதவஜ்ஜித' என்பது முதலிய பல சுருதிகள் பிரத்தியக்க பின்ன அசங்கப் பிரஹ்மத்தினிடத்தில் வாஞதி சர்வ பூதங்களின் சம்பந்தத்தையு நிடேதிக்கின்றன. அச்சுருதிகளிடத்தில் விசுவாசமின்றி அப்பிரஹ்மத்தினிடத் தில் வாஞதி பூதங்களின் சம்பந்தத்தை அங்கீகரிக்கும் வாதியை இது விஞவ வேண்டும் :—அவ்வசங்கப் பிரஹ்மத்தினிடத்தில் அப்பூதங்கள் சம்யோக சம்பந் தத்தாலிருக்கின்றனவோ? அல்லது சமவாய சம்பந்தத்தாலோ? அல்லது தாதான் மிய சம்பந்தத்தாலோ? அவற்றுள் முதலாவது சம்யோக பட்சத்திலும், பிரஹ்மத் திற்கும் பூதங்கட்கும் சர்வாம்சமும் சம்யோகமாமெனின் அஃதேதலாது. அபரிச் சின்னமாகிய பிரஹ்மத்திற்குப் பரிச்சின்னமாகிய பூதங்களோடு சர்வாம்சமும் சம்யோகமாதல் பொருந்தாது. ஏகதேசத்தாற் சம்யோகமெனிலோ அதுவும் பொருந்தாததாம். என்னை, எப்பொருள்கள் சாவயவமாமோ அவைகட்கே தம் முள் ஏகதேசத்தாற் சம்பந்தமாம்; விருக்ஷவானரங்கட்கேபோலும். பிரஹ் மமோ நிரவயவமாமாதலின் அதற்கும் அப்பூதங்கட்கும் ஏகதேசத்தாலும் சம்பந்தமையாதாம். சமவாய சம்பந்தத்தாலேனும் இரண்டாவது பக்ஷத்தை அவன் கொள்ளினேனை அதுவும் பொருந்தாது; என்னை, குணகுணிக்கும் ஜாதிவியத் திக்கும் அவயவி அவயவங்கட்குமே வாதியால் சமவாய சம்பந்தங்கொள்ளப்பட் டிருக்கிறது. ஈண்டுப் பிரஹ்மத்திற்கும் பூதங்கட்கும் குண குணித்தன்மையே னும் சாதிவியக்தித்தன்மையேனும் அவயவி அவயவத்தன்மையேனும் பொருந்தா தாதலின் சமவாய சம்பந்த பக்ஷமுமசங்கதமாம். தாதான்மியத்தாலேனும் மூன் ரூவது பக்ஷத்தைக் கொள்ளினேனை அதுவுமமையாது. என்னை, பிரஹ்மமோ சச்சி தாநந்த பரிபூரணசொரூபமாம். ஆகாசாதிகளோ அசத்து ஜட துக்க பரிச்சின்ன வடிவங்களாம். அத்தன்மைய மாறுபாடான சுபாவமுடைய ஆகாசாதி பூதங்கள் பிரஹ்மத்தினிடத்தில் தாதான்மிய சம்பந்தத்தானிருப்பனவா மென்பதமையாது. ஆதலின், யரிசேடமாய் ஆகாசாதிகட்குப் பிரஹ்மத்தினிடத்தில் ஆரோபிதவடிவ கற்பித சம்பந்தமே கொள்ளத்தக்கதாம்; அஃதெமக்கும் இஷ்டமேமயாம். என்னை, எவ்வதிட்டானத்தில் எப்பொருள் ஆரோபிதமாமோ அப்பொருள் அவ்வதிட்டா னத்தில் பெயர் மாத்திரமேயாம்; உண்மையிலுளதன்று. கயிற்றிற் கற்பிதமான சர் ப்பம் கிளிஞ்சியில் கற்பிதமான வெள்ளி நாமமாத்திரமேயன்றி உண்மையிலிலாதன போலப் பிரஹ்மத்தினிடத்திற் கற்பிதமான ஆகாசாதிகளும் நாமமாத்திரமேயன்றி உண்மையிலின்றும். அத்தன்மைய கற்பித பூதங்களின் சம்பந்தத்தால் அதிட் டானப் பிரஹ்மத்தின் இயல்பாகிய அசங்கத்தன்மைக் கிழுக்கின்றுமென்க. ஒரு வியாக்கியானத்தில் இச்சுலோகத்திற்கு இவ்வாறு பொருள்பண்ணுகின்றார்கள். அஃதாமாறு :—முன்னர் எட்டாவது அத்தியாயத்தில் 'க்ஷீதஜ்ஞ' அப்பிரஹ்மம் யாது என்னும் வினவிற்கு 'சுக்ஷரஸ்வரூபம்ப்ரஹ்ம' அக்ஷரமெனும் சுத்த தூவம் பதார்த்தமே நிருபாதிகப்பிரஹ்மம் என உத்தரங் கூறப்பட்டது. அந்நிருபாதிகப் பிரஹ்மமே. ஈண்டு, 'யாதத்தசிஉம்ஹவ-ம' என்பது முதலிய சுலோகங்களாற் பிரதிபாதிக்கப்படுகின்றது. இப்போது அந்நிருபாதிகப்பிரஹ்மத்திற்கு அக்ஷர

மெனுஞ் சீவமேறு அபேதத்தைத் திருட்டாந்தத்தாற் கூறுகின்றார் 'யயாகாஸ ஸ்ஸ்திதஃ ஊதி' என. ஈண்டு, வாயுவென்பதால் சூத்திரான்மாவே கொள்ளத்தக்கது. எதனாலெனின், 'வாயூமளஃதஃ தஸ்ஸூத்ரம்' என்னுஞ்சுருதியில் சூத்திரான்மா வாயுவென்னும் பெயராற் கூறப்படுகின்றது. அச்சூத்திரான்மவடிவ வாயு யாண்டுங் கமனம்பண்ணுவதாம். அதாவது, சமட்டிலிங்கதேகவடிவமானதால் யாண்டும் வியாபகமாம். அஃதன்றியும் அது மகத்தாம். அதாவது, இவ்வெளிவாயுவினின்றும் விலட்சணமாம். அத்தன்மைய சூத்திரான்மவடிவ வாயுத்தனது காரணவடிவ அவ்வியாகிருதமெனும் ஆகாசத்தில் நித்தியமாயிருப்பதுபோல, ஈண்டு நித்தியமென்றதால் சூத்திரான்மாவிற்கு முக்காலத்தும் அவ்வியாகிருதமெனுமாகாசத்தோடு சம்பந்தங்கூறப்பட்டது. இப்பூதங்களனைத்தும் பரமேசுரனுகிய என்னிடத்தி னிலைத்திருப்பனவாம். ஈண்டு, பூதமென்பதால் உபாதியற்ற தூவம் பதார்த்தவடிவ சீவசேதனமே கொள்ளற்பாலது. அஃதுண்மையிலொன்றுமாயினும் உலகதிருட்டியால் ஸ்ரீ பகவான் பலவென வருளினார். கருத்துரைவாம் :— சர்வ காரியங்களும் தமது தோற்றத்தின்முன்னரும் நாசத்தின் பின்னரும் தமது திதிகாலத்தும் தமதுபாதானகாரணத்தில் அபேதரூபமாயிருப்பனபோன்று இச்சீவர்களனைவரும் அந்தக்கரண முதலியவுபாதிகள் தோற்றுவதற்கு முன்னும் நாசமானதின் பின்னும் இடையிலும் அப்பிரஹ்மத்தினின்றுவேறன்றும். கடவான் கடவடிவவுபாதி தோன்றுவதற்கு முன்னும் நாசமானதின் பின்னும் இருக்கும்போதும் மாவானினும் பின்னமன்றும்; மற்றே, அக்கடவான் முக்காலத்தும் மாவான்வடிவமேயாதல்போல இச்சீவனும் முக்காலத்தும் பிரஹ்மவடிவமேயாம். சுருதியும், 'சுயஸாதாவைஷ சுஹம்வைஷாஷி' இப்பிரத்தியக்காண்மாப் பிரஹ்மவடிவமேயாம், நான் பிரஹ்மரூபமாகின்றேன் எனக் கூறுகின்றதன்க.

(அ-கை.) ஆண்டுப் பூர்வசுலோகத்தில் இவ்வுலகந்தோற்றும்போதும் நிலைக்கும்போதும் அஃதோடு அசங்கவான்மாவிற்குச் சம்பந்தமின்மை கூறப்பட்டது. பிரளயகாலத்திலும் சம்பந்தமின்மையை ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸவ-ஸ்ருஷ்டாநி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம் ।
கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ விஸ்ருஜாம்யஹம் ॥ (7)

ப-ம். 3 ஸவ-ஸ்ருஷ்டாநி 1 கௌந்தேய 5 ப்ரக்ருதிம் 6 யாந்தி 4 மாமிகாம் 2 கல்பக்ஷயே 7 புநஃ 10 தாநி 8 கல்பாதௌ 11 விஸ்ருஜாமி 9 அஹம்.

(அ-ம்.) ஹே கௌந்தேய! பிரளயகாலத்தில் இப்பூதங்களனைத்தும் பரமேசுரனுகிய எனது சத்திவடிவ மூக்குணவடிவப்பிரகிருதியையடைகின்றன. மீண்டுந் சிருட்டிகாலத்தில் நான் இப்பூதங்களை உண்டாக்குவேன். (7)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எனது சத்திவடிவமாய்க்கற்பிக்கப்பட்ட மாயையை 'மாயாஞ்ஞ்ரக்ருதிம் வித்யாத்' என்னுஞ் சுருதி உலகமனைத்திற்கும் பிரகிருதிவடிவமெனக்கூறுகின்றது. அத்தன்மைத்தான காரணவடிவ மாயாப்பிரகிருதியையே ஆகாசாதி பூதங்களனைத்தும் பிரளயகாலத்தில் அடைகின்றன. அதாவது அவ்வாகாசாதிபூதங்களனைத்தும் பிரளயகாலத்தில் தமது காரணவடிவ மாயையெனும் பிரகிருதியின்கண்ணே சூட்சுமவடிவத்தாலிலயபாவத்தையடைகின்றன. அர்ச்சுன! அப்போது பிரகிருதியில் பின்னமின்மையடைந்திருந்த அவ்வாணவங்களையே சர்வ சக்தியையுடைய சர்வக்ஞ பரமேசுரனுகிய நான் சிருட்டிகாலத்தில் வெவ்வேறுக்கி வெளிப்படுத்துகின்றேன். (7)

(அ-கை.) ஆண்டுப் பரமேசுரன் இவ்வாணவியுலகைத் தோற்றுவித்தல் பாதுபயன் கருதியாம். தனது போகத்தின்பொருட்டோ? அல்லது வேறெவர்

போகத்தின்பொருட்டோ? அவற்றுள் தனது போகத்தின்பொருட்டெனின் அமையாது. எதனாலெனின், சர்வசாக்ஷிவடிவமும் சைதன்யமாத்திரவடிவமுமாகிய பரமேசுரனிடத்தில்சுகதுக்கங்களின்போக்திருத்தன்மைபொருந்தாது. ஓர்காலுடன்படிமேலை அவனிடத்துநம்மேலைர்கள்போலச்சம்சாரித்தன்மையுமுடன்படல்வேண்டும் அதுவோ பொருந்தாது. என்னை, எதனிடத்துச் சம்சாரித்தன்மையுளதோ அதனிடத்து ஈசுரத்தன்மை யிராது; எதனிடத்து ஈசுரத்தன்மை யுளதோ அதனிடத்துச் சம்சாரித்தன்மை யிராது. ஆதலின், பரமேசுரன் தனது போகத்தின்பொருட்டுச் சிருட்டியாமெனலடாது: வேறெவர் போகத்தின் பொருட்டேனும் எனும் இரண்டாவது பக்ஷமும் பொருந்தாது. எதனாலெனின், 'நாந்யதோஸ்தி த்ரஷ்டா' என்பது முதலிய சுருதி பரமேசுரரின் வேறாய் வேறு சேதனமின்மையைக் கூறுகின்றது. சிவசேதனம் பரமேசுரனின் வேறாமெனின் அதுவு மசங்கதமாம். என்னை, 'சுசெதநஜீவெநாத்தநாந்வ்யவிஸ்ய நாஸ்தீவெவ்யாகரவாணி' என்பது முதலிய சுருதிகள் அப்பரமேசுரனுக்கே யாண்டுஞ் சீவத்தன்மை கூறுதலினாலும் 'தக்வ ஸி சுவேதகேது' என்பன முதலிய மகாவாக்கியங்கள் சீவனுக்குப் பிரஹ்மத்தன்மையைக் கூறுதலினாலும் பரமேசுரனின் வேறாய்ச் சேதனவடிவம்போக்தாவென்பதென்றின்றாம். சைதன்யவடிவப் பரமேசுரனின் வேறு பொருள் சடமாமாயினும் அச்சடபதார்த்தத்தில் சுகதுக்கபோக்திருத்தன்மையே பொருந்தாது. அல்லது, அச்சடபதார்த்தங்கட்குப் போக்தாத்தன்மையை யுடன்படிமேலை போக்தாபோக்கியம் என்னும் பேதமே பெறப்படாதாமாதலின் அச்சடபதார்த்தங்களின் போகத்தின்பொருட்டுச் சிருட்டியாமெனலும் அசங்கதமாம். அல்லது ஒருவர் போகத்தின்பொருட்டு இச்சிருட்டி யமையாவாறுபோல ஒருவரின் மோட்சத்தின்பொருட்டும் பொருந்தாதாம். என்னை, பந்தமென்பதொன்றுண்மையிலுளதாமெனின் அதன் மோட்சத்தின்பொருட்டுச் சிருட்டியுமாம். பந்தமென்பதோ ஒன்று உண்மையிலின்றாம். அன்றியும், இச்சிருட்டி அம்மோட்சத்திற்கு மாறுபாடாய் விரோதியேயாம். எது எதற்கு விரோதியாமோ அஃததன் பிராப்திக்காகாவாமாதலின் ஒருவர் மோட்சத்தின்பொருட்டும் இச்சிருட்டியாகாததாம். இதுமுதற் பலவகையான பொருத்தமிலாத்தன்மைகள் இச்சிருட்டியிற் பிராப்தமாகின்றன. அப்பொருத்தமின்மைகளே சிருட்டியில் மாயாமயத்தன்மையைப் பெறுவிக்கின்றனவாதலின் அப்பொருந்தாமைகள் எமது சித்தாந்தத்திற்குப் பிரதிகூலமாகாதனவேயாம். மற்றே, அநுகூலமேயாம். இதுபற்றியே அவ்வநுபபத்திகள் பரிகரிக்கத்தக்கனவன்றும். இக்கருத்துக்களைப்பற்றியே ஸ்ரீபகவான் மாயாமயத்துவ ஏதுவிலுல் மித்தியாத்தன்மையைச் சித்தம் பண்ணற்பொருட்டு மூன்று சுலோகங்களாற் றொடங்கியருளுகின்றார்.

சு-ம். ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி புநஃபுநஃ ।
பூதக்ராமமிமம் க்ருத்ஸ்நமவசம் ப்ரக்ருதேர்வஸாத் ॥ (8)

ப-ம். 2 ப்ரக்ருதிம் 1 ஸ்வாம் 3 அவஷ்டப்ய 12 விஸ்ருஜாமி 10 புநஃ 11 புநஃ
9 பூதக்ராமம் 7 இமம் 8 க்ருத்ஸ்நம் 6 அவசம் 4 ப்ரக்ருதேஃ 5 வசாத்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனாகிய யான் எனது மாயைவடிவப் பகுதியைப்பற்றி அம்மாயையின் மகிமையால் உண்டாகிய இவ்வெல்லா ஆகாசாதி பூதங்களின் சமுதாயத்தை மீண்டும் மீண்டும் உண்டாக்குவேன்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனாகிய என்னிடத்திற் கற்பிதமாகவும் எனததீனமாகவுமுள்ள மாயையெனும் அநிருவசனீயமான எனது பிருகிருதியை

ஆசிரயித்தே அதாவது, அப்பிரகிருதியை எனது சத்தாஸ்பூர்த்திப்பிராப்தி வாயிலாய்த்திடப்படுத்தி மாயாவியாம் பரமேசுரனுகிய நான் பிரத்தியட்சப் பிரமாணத்தாற் சித்தமாகிய இவ்வாணுதிகளின் சமுதாயவடிவப்பிரபஞ்சத்தை ஜீவர்களின் கருமத்தை யநுசரித்துப் பலவகையாயுண்டாக்குவேன். அதாவது, ஸ்வப்ன திருஷ்டாவாகிய புருஷன் கணவுலகைக் கற்பணமாத்திரத்தால் உத்பத்தி செய்கின்றதே போலப் பரமேசுரனுகிய நானும் இவ்வாகாசாதிகப்பிரபஞ்சத்தைக் கற்பணமாத்திரத்தால் உற்பத்தி பண்ணுவேன். எத்தன்மைத்தாமெனின் இவ்வாகாசாதிபூதக் கூட்டங்கள் பிரகிருதிவசத்தாற் ரோற்றுவனவாம்; அதாவது, மாயாவடிவப் பிரகிருதியின் அவித்தை முதலிய ஐவகைக்கிலேசங்கட்குங் காரணவடிவமான ஆவரணவிட்சேபசத்திரூபப்பிரபாவத்தாலுண்டாகின்றனவாம். ஒரு வியாக்கியானத்தில் 'சுவபாவம் வ்ருகூதெவ-ஹாசு' என்னும் வாக்கியத்திற்குத் தனது சுபாவம் பிரகிருதியாம். அதன் வசத்தால் இவ்வுலகம் அவசமாம்; அதாவது, இராகத்துவேஷாதிகளின் அதீனமாம் எனப்பொருளுரைத்தனர். வேறு ஒரு வியாக்கியானத்தில் இவ்வாக்கியத்திற்கு அவித்தை முதலிய ஐவகைக்கிலேசங்களும் ஈண்டுப் பிரகிருதிசத்தத்தாற் கொள்ளற்பாலன. அக்கிலேசவடிவப் பிரகிருதிவசத்தால் அதாவது சுபாவத்தால் இப்பூதசமுதாயம் அவசமாம். அதாவது, சுவதந்திரமின்றியதாமென்க.

(8)

(அ-கை.) இவ்வுலகத்தின் தோற்றநிலை யீறு முதலியன கணப்போல மித்தியாவடிவமாதலின் உண்டுபண்ணல் முதலிய அக்கருமங்கள் கணக்காண்போனைப் போலப் பரமேசுரனுகிய என்னைப் பந்தப்படுத்துவனவன்றும் என்னுமர்த்தத்தை இப்போது ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். மயா ததமிதம் சர்வம் ஜகதவ்யக்தமூர்திநா |
மத்ஸ்தானி சர்வபூதானி ந சாஹம் தேஷ்வவஸ்தித: ॥

(9)

ப-ம். 10 மயா 7 தம் 8 தாம் 9 சர்வபூதானி 11 மத்ஸ்தானி 1 ஜகத்ஸர்வம் 2 மமாத்மா 3 பூதபாவன: 6 பூதானி 4 தேஷு 5 சாவஸ்தித:.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! உதாசீனனைப்போலுள்ளவனும் அக்கருமங்களில் ஆசக்தியின்றியவனுமாகிய என்னை அச்சிருட்டியாதிகருமங்கள் பந்தப்படுத்துவனவன்றும்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! மாயாவியானவன் தனது மாயையால் பலவகைப் பொருள்களைத்தோற்றுவித்து நிலைப்படுத்தி யொடுக்குகின்றான். ஆனாலோ, அக்கருமங்கள் அவனைப் பந்தப்படுத்தாதேபோலவும் ஸ்வப்பன திருஷ்டாவான புருஷன் ஸ்வப்பனத்தில் பலவகைப்பொருள்களின் தோற்றமாதிகளைச் செய்யினும் அக்கருமங்கள் அவனைப்பந்தப்படுத்தாதனபோலும் பரமேசுரனுகிய நானும் எனது மாயாசத்தியால் இவ்வாணுதிப்பிரபஞ்சத்தின் சிருட்டியாதிகளைச்செய்கின்றேனுயினும் அக்கருமங்கள் பரமேசுரனுகிய என்னைப் பந்தப்படுத்துவனவன்றும். அதாவது, அச்சிருட்டியாதிகருமங்கள் அநுக்கிரக நிக்கிரகங்களால் சுகிதுக்கியாக என்னைச் செய்வதின்றுமாதலின் அவைகள் சுவப்பனம்போல மித்தியாவடிவமேமாம். அக்கருமங்கள் தங்களை எக்காரணத்தாற் பந்தப்படுத்துவதில்லை என்னுமர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அதிற் காரணங்கூறியருளுகின்றார். 'உதாஸீநவதாஸீநம் ஆஸீ' அர்ச்சுன! தம்முள் விவாதமிடும் இருவர்களின் வெற்றி வெற்றியின்மைவடிவ கருமசம்பந்தமற்றவனும் அவ்விருவரிடத்தும் உபேட்சை செய்பவனுமாகிய ஒருதாசீனபுருஷன் அவர்களின் ஜயாபஜயத்தாலாய சுகதுக்கங்களற்றவனுய் விகாரமற்றிருக்கின்றான். அதுபோல அசங்கபரமேசுரனுகிய நானும்

எப்போதும் நிருவிகாரவடிவமாயிருக்கின்றேன். ஈண்டுப் பரமேசுரவடிவ தாஷ்டாந்தத்தில் உதாசீனவடிவ திருஷ்டாந்தத்தைப்போல விவாதமிடு மிருவரிலரேனும் இரண்டி-லும் உபேட்சகத்தன்மை சமமேயாம். அதைக்கொண்டே இங்கே 'உஓஅஸீஅவஸ்' என்னும் வாக்கியத்தினீற்றில் 'வது' என்னும் பிரத்தியயத்தைக் கூறியருளினர். அர்ச்சுன! பரமேசுரனுகிய நான் உதாசீனனைப்போல சுகதுக்க முதலிய விகாரங்களற்றவனுயிருத்தலின் நான் அக்கருமங்களில் அசக்தனேன். அதாவது, நானிக்கருமத்தைச்செய்கின்றேன், இக்கருமபலத்தை நுகர்வேன் என்னும் கருத்திருத்துவாபிமான வடிவமும், பலாபிலாஷை வடிவமுமாகிய சங்கமற்றவன். இதனுனேயே என்னை அக்கருமங்கள் பந்தப்படுத்துவனவன்றும். இத்துணை கூறியதால் ஸ்ரீ பகவானிப்பொருளைக் காண்பித்தருளினர்:—கருத்திருத்துவாபிமானமும் பலேச்சையுமின்றிய என்னை அக்கருமங்கள் பந்தப்படுத்தாதவாறுபோல மற்றை அதிகாரியும் அவ்வாறிருந்து கருமத்தைச்செய்யினும் அந்தலௌகிக வைதிககருமங்கள் அவனைப் பந்தப்படுத்தமாட்டாதனவாம். கருத்திருத்துவாபிமானமும் பலேச்சையுமிருந்திடினே இம்மூடபுருஷன் கோசகாரப்புழுவைப்போல அக்கருமங்களாற் பந்திக்கப்படுகின்றனென்பதாம். ஈண்டுப் பகவான் தானுபதேசித்த அர்த்தசாரணத்தில் அர்ச்சுனனை உற்சாகம் பண்ணற்பொருட்டு 'ஹையஜய' என்னுஞ் சம்போதனத்தால் அர்ச்சுனனது மகத்பிரபாவத்தைக் குறிப்பித்தருளினர். அதாவது, யுதிட்டிராது ராஜசூயயாகத்தின்பொருட்டு நீ சர்வ ராஜாக்களையுஞ் செயம்பண்ணித் தனத்தைக் கொண்டுவந்தனையாதலின் உனக்குத் தனஞ்சயன் என்னும் பெயர் வந்தது. அத்தன்மைய பிரபாவமுடையவன் நீ என்பதாம். ஒரு வியாக்கியானத்தில் இச்சுலோகத்திற்கு இப்பொருட்படுத்துகின்றனர்:—

சங்கை:—ஹே பகவன்! இவ்வுலகத்தில் சில பிராணிகள் சுகிகள், சிலர் துக்கிகள், சிலர் தனிகர்கள், சிலர் தரித்திரர்கள், சிலர் புத்திமான்கள், சிலர் மூடர்கள் என்றிவ்வணம் விஷமசிருட்டிபண்ணுந் தோஷமும் தயையின்றிய தோஷமும் தங்கட் கவசியம் உண்டாமன்றே?

சமாதானம்:—"அஅஓதாநிகஉஓணி" ஹே அர்ச்சுன! விஷமசிருஷ்டிவடிவவினை என்னைப் பந்தப்படுத்தாது. அதன்கண் ஏதுவையருளுகின்றார். 'உஓஅஸீஅவஓஅஸீஅம்' என. அர்ச்சுன! மேகமானது ஒரு வித்தின்கண் ராகத்தையும் ஒரு வித்தின்கண் துவேஷத்தையுஞ் செய்யாது உதாசீனமாய் நீரைப் பெய்கின்றது. பின்னோ அவ்வவ்வித்துவின் அநுசாரமாய் வெவ்வேறு பலனுண்டாகின்றது. அதுபோல, பரமேசுரனுகிய நானும் புண்ணியவான்களிடத்தும் பாபிகளிடத்தும் இராகத்துவேஷங்களைச் செய்யாது இவ்வுலகத்தை உண்டாக்குகின்றேன். பின்னர் பிராணிகள் தத்தம் புண்ணியபாவ அனுசாரமாய் அவ்வச்சுகதுக்காதிரூப வெவ்வேறு பலத்தையடைவர்கள். ஆதலின், பரமேசுரனுகிய எனக்கு விஷமத்தன்மையானும் தயையின்மையானுமுண்டான் தோஷங்களின்றுமென்க.

(9)

(அ-கை.) ஹே பகவன்! முன்னர்த் தாங்கள் 'ஹஅதஅரஅம் ஹஅஜாஅி' என்னும் வாக்கியத்தால் தங்கட்குச் சர்வ பூதங்கட்கும் கருத்தனுந்தன்மையைக் கூறியருளினீர்கள். 'உஓஅஸீஅவஓஅஸீஅம்' என்னும் வாக்கியத்தால் தங்கட்கு உதாசீனத்தன்மையைக் கூறியருளினீர்கள். தங்களுடைய இவ்விரண்டு வாக்கியங்களும் தம்முள் மாறுபட்ட அர்த்தத்தைப் போதிப்பனவாதலின் அசங்கதமாம். எதனுலெனின், எதனிடத்துக் கருத்தாத்தன்மையுளதோ அதனிடத்தில் உதாசீனத்தன்மையிராது. எதனிடத்தில் உதாசீனத்தன்மை யிருக்கின்றதோ அதனி

டத்தில் கருத்திருத்தன்மையிராதாம் என்னு மர்ச்சுனன் சங்கையை நீக்கியருளும் பொருட்டு ஸ்ரீ பகவான் மீண்டும் இவ்வுலகத்திற்கு மாயாமயத்தன்மையையே அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸயாத்⁴யக்ஷேண ப்ரக்ருதிஃ ஸூயதே ஸசராசரம் ।
ஹேதுனாநேந கௌந்தேய ஜக³த்³விபரிவர்ததே ॥ (10)

ப-ம். 3 ஸயா 2 ஸத்⁴யக்ஷேண 4 ப்ரக்ருதிஃ 6 ஸூயதே 5 ஸசராசரம் 8 ஹேதுனா 7 நேந 1 கௌந்தேய 9 ஜக³த் 10 விபரிவர்ததே.

(அ-ம்.) ஹே கௌந்தேய! பிரகாசவடிவ பரமேசுரனாகிய என்னால் பிரகாசிப்பிக்கப்பட்ட மாயாவடிவப் பிரகிருதியே இச்சராசரமான வுலகைத்தோற்றுவிக்கின்றது இப்பிரகாசகத்துவ நிமித்தத்தானே இவ்வுலகம் பற்பலவகையான விகாரத்தை யடைகின்றது.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! கேவலம் திருஷ்டாவடிவமும் சர்வ விகாரரகிதமும் தனது சந்நிதிமாத்திரத்தாற் சர்வத்தினியந்தாவும் சர்வப்பிரகாசகமுமாகிய பரமேசுரனுமென்னால் பிரகாசிப்பிக்கப்பட்ட மாயாவடிவப் பிரகிருதியானது மூக்குணவடிவமும் சத்து அசத்து சதசத்துவடிவங்களாற் கூறுறுணதாமாம். அம்மாயாரூபப்பிரகிருதியே தாவரசங்கமவடிவ இவ்வுலகனைத்தையும் தோற்றுவிக்கின்றது. மாயாவிபுருஷனாற் செலுத்தப்பட்டமாயை கற்பிதமான யானை குதிரை முதலிய பதார்த்தங்களை உண்டாக்குகின்றதுபோல, பரமேசுரனாகிய என்னாற் பிரகாசிப்பிக்கப்பட்ட அம்மாயையே இக்கற்பிதப்பிரபஞ்சத்தை உண்டாக்குகின்றது. பரமேசுரனாகிய நானே காரியசகித அம்மாயையைக் கேவலம் பிரகாசஞ் செய்தன்மாத்திரமேயன்றி மற்றொரு தொழிலும் யான் செய்திலேன். அர்ச்சுன! அந்தப்பிரகாசகத்துவ நிமித்தத்தானே இத்தாவரசங்கமவடிவ உலகனைத்தும் பற்பலவகையாய்ப் பரிவர்த்தமானமாகின்றன; அதாவது, இவ்வுலகம் தோற்றமுதற்கொண்டு நாசமீறுகப் பலவிதமான விகாரத்தை எப்போதும் மடைகின்றது. ஆதலின், 'ஸூயதே ஸசராசரம்' பரமேசுரனாகிய நான் இவ்வுலகனைத்தையு முண்டாக்குகின்றேன் என யாது முன் கூறப்பட்டதோ. அது இப்பிரபஞ்சத்தின் காரணவடிவ மாயையைப் பிரகாசிக்குமாத்திரவடிவ வியாபாரத்தைப்பற்றியே கூறப்பட்டது. இவ்வுலகத்தில் சூரியாதிகளின் பிரகாசத்தானே சர்வ காரியங்களுமுண்டாகின்றனவாயினும், அதனானே அவைகட்குக் கருத்தனந்தன்மை யமையாததுபோல அக்காரணவடிவமாயையின் பிரகாசகத் தன்மைமாத்திரத்தானே பரமேசுரனாகிய எனக்கும் கருத்தனந்தன்மை அமையாது என்னு மபிப்பிராயத்தானே முன்னர் யான் 'உதாஸீநவதாஸீநம்' எனக்கூறினேன். ஆதலின், மூற்கூறிய வாக்கியமிரண்டிற்கும் தம்முள் மாறுபாடின்மைகாண்க. இஃதன்னிய நூலினுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. ஸஹ்ய வைதம் ஜகா³ஹ்ய யஜ்ஞவாதா⁴ காரணம் ।
ஸஜ்ஞாநம் தஜ்ஞ வாஸ்ரித்ய ப்³ரஹ்மகாரண ஜ்ஞயதே ॥

(போ-ள்.) இத்துவிதப்பிரபஞ்சவடிவ இந்திரஜாலத்திற்கு உபாதானகாரணவடிவ அஞ்ஞானத்தைப் பிரகாசிப்பிக்குந் தன்மையினானே பிரஹ்மம் ஜகத்காரணமெனப்படுகின்றது. உண்மையில் அஃததற்குக்காரணமன்றும், ஒரு வியாக்கியானத்திலோ இச்சுலோகத்திற்கு இக்கருத்துக்கூறுகின்றனர்:—காந்தக்கல் தன தண்மைமாத்திரத்தானே இரும்பைச்செலுத்தினும் உண்மையில் உதாசீனமாயிருப்பதுபோல, பரமேசுரனாகிய நானும் எனது சமீபமாத்திரத்தானே மாயா

வடிவப் பிரகிருதியை உலகத்தைத்தோற்றுவிட்டதிற் செலுத்துவனையினும் உதாசீனமாகவே யிருக்கின்றேன். ஆதலின், 'ஹேதமூரம் வாஜாஜி உதாஸீகவதாஸீகம்' என்னும் இரண்டு வாக்கியங்களும் தம்முள் முரண்படாவென்க. (10)

(அ-கை.) ஹே அர்ச்சுன! இவ்வாறு நித்தியசுத்த புத்த முக்த சுபாவமும் சர்வப் பிராணிகளின் ஆன்மரூபமும் ஆனந்த கனமும் தேசகாலவஸ்துபரிச்சேத ரகிதமுமாகிய அத்தன்மைய பரமேசுரனுகிய என்னை இவ்வவிவேகி புருஷர்கள் மநுஷ்யனென்றெண்ணி ஆதரம் பண்ணுவதில்லை; மாறுய் நிந்திக்கின்றார்கள் என்னு மர்த்தத்தை ஸ்ரீ பகவானிப்போதருளிச்செய்கின்றார்.

சு-ம். சுவஜாநந்தி மாம் மூடா மாநுஷீம் தநுமாஸ்ரிதம்।
பரம் பாவமஜாநந்தோ மமபூதமஹேஸ்வரம் ॥ (11)

ப-ம். 11 சுவஜாநந்தி 10 மாம் 1 மூடாஃ 7 மாநுஷீம் 8 தநும் 9 ஆஸ்ரிதம் 4 பரம் 5 பாவம் 6 அஜாநந்தஃ 2 மம 3 பூதமஹேஸ்வரம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அவிவேகிகள் பரமேசுரனுகிய எனது, சர்வ பூதங்கட்கு மகத்தாகிய ஈசுரவடிவ எல்லாவற்றினு மேலாகிய பரமார்த்தமான தத்துவத்தை அறியாது மனுடவடிவெடுத்திருக்கப்பட்ட பரமேசுரனுகிய என்னை அனுதரஞ்செய்கின்றார்கள். (11)

(வி-ம்) ஹே அர்ச்சுன! விசாரமற்ற மூடர்கள் பரமேசுரனுகிய என்னையும் இக்கிருஷ்ணடாகவான் சாட்சாதீசுரனே என ஆதரிப்பதில்லை; மாறுய் என்னையே நிந்திக்கின்றார்கள். அவர்கள் செய்யும் அவமதிப்பில் பிரான்திவடிவகாரணத்தை அருளிச்செய்கின்றார் :—'மாநுஷீம் தநுமாஸ்ரிதம்' என. அர்ச்சுன! மநுஷ்யவடிவமாய்த்தோற்றும் இம்மூர்த்தியைப் பரமேசுரனுகிய நான் எனதிச்சையான பக்தர்கட்கநுக்கிரகிப்பான் எடுத்துக்கொண்டேன். அதாவது, மனுடவடிவமாய்த்தோற்றுமித்தேகத்தால் வியவகரிக்கின்றேன். இதனினை, இக்கிருஷ்ணனும் என்னைப்போன்ற ஒரு மநுடனேயாவன் என்னும் பிரான்தியால் மறைக்கப்பட்ட அந்தக்காரணத்தையுடைய அம்மூடர்கள் பரமேசுரனுகிய எனது பரம்பாவத்தையுணராது; அதாவது, எனது சர்வத்தினு மேலாகிய பாரமார்த்திக தத்துவத்தையுணராது என்னை அனுதரமும் நிந்தையும் பண்ணுகின்றார்கள்; அம்மூடர்களுக்கது பொருந்துவனவேயாம். அர்ச்சுன! யான், சர்வ பூதங்கட்கு மகத்தான ஈசுரனேவன். அதாவது, சர்வ பூதங்களையுஞ் செலுத்துபவனேவன். (11)

(அ-கை.) ஹே அர்ச்சுன! இவ்வணம் பரமேசுரனுகிய என தவமதிப்பால் உண்டாகிய பாவத்தால் பிரதிபந்திக்கப்பட்ட புத்தியையுடைய மூடர்கள் நிரந்தாம் நரகத்தின்கண்ணே வசிக்கத்தக்கவர்களாவர்கள் என்பதை ஸ்ரீ பகவானிப்போதருளிச்செய்கின்றார்.

சு-ம். மொகாஸாமா மொககர்மாணோ மொகஜ்ஞாநா விசேதஸஃ।
ராக்ஷஸீமாஸுரீம் சைவ ப்ரக்ருதிம் மொஹிநீம் ஸ்ரிதாஃ ॥ (12)

ப-ம். 1 மொகாஸாஃ 2 மொககர்மாணஃ 3 மொகஜ்ஞாநாஃ 4 விசேதஸஃ 5 ராக்ஷஸீம் 7 ஆஸுரீம் 6 ச 10 ஏவ 9 ப்ரக்ருதிம் 8 மொஹிநீம் 11 ஸ்ரிதா.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பயனற்ற ஆவட்கையுடையனும் பயனிலாக் கருமமுடையனும் பயனிலா வுணர்வுடையனுமாகிய அத்தன்மைய விவேகமின்றிய புருஷன் ராக்ஷஸி ஆசுரிமோகினிப் பிரகிருதியையே ஆசிரயிக்கின்றன். (12)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அந்தரியாமியாகிய பரமேசுரனன்றியே கேவலங் கருமமே எனக்குப் பலத்தைக்கொடுக்கும் என்னும் நிஷ்பலமேயான பலத்தின் பிரார்த்தனைவடிவ ஆசை எவனுக்கோ அவன் மோகாசாவாம். கருத்திதுவாம்:— அந்தரியாமியுஞ் சர்வஞ்ஞனுமாகிய ஈசுரனன்றிச் சடமாகிய கருமத்தில் சுவதந்திரமாய்ப் பலங்கொடுத்தற்குச்சாமர்த்தியமின்றும். அத்தன்மைய அசமர்த்த கருமத்தினின்றேபலமடைய விச்சித்தல் நிஷ்பலமேயாம். இதனினே பரமேசுரனினின்றும் புறம்பானதால் மோகமெனும் கேவல மாயாசவடிவ கருமமெவனுக்கோ அவன் மோககருமாவாவன். அதாவது பரமேசுரனின் விமுகமானவனுக்கு அவ்வக்கினி ஹோத்திராதி கருமங்கள் கேவலம் பரிசிரமத்திற்கே காரணங்களாம்; மற்றுரு பயனைப் பயப்பியாதனவாம். ஈசுரனைப் பிரதிபாதனம்பண்ணுத குதர்க்கநூலாற் றேன்றிய நிஷ்பலஞான மெவனுக்கோ அவன் மோக ஞானனுவன். அதாவது பரமேசுரனைப் பிரதிபாதிக்கும் அத்தியான்ம நூலாலுண்டாகும் ஞானமே இவ்வதிகாரிக்குப் பலத்தைக் கொடுக்கும். பரமேசுரனைப் பிரதிபாதியாதுகண்டனம் பண்ணுகின்ற குதர்க்க நூலாராய்ச்சியாலுண்டாகிய ஞானம் இவ்வதிகாரிக்குச் சிறிதளவும் பயனைப் பயப்பியாதாதலின் அந்த ஞானம் நிஷ்பலமேயாம். இப்போது கூறிப்போந்த அர்த்தத்தில் காரணங்கூறுகின்றார் 'விஷயதஸ்' என. ஆண்டுப் பரமேசுரனது அவமதிப்பாலுண்டாகிய பெரும்பாவத்தாற் பிரதிபந்தப்பட்ட விவேக விஞ்ஞானம் எவனுக்கோ அவன் விசேதசாவானவன். அத்தன்மைய விசேதசனனதினே அம்மூட புருஷன் மோகாசாவும், மோககர்மாவும், மோக ஞானனுமாகின்றான். அல்லது அம்மூட புருஷன் பரமேசுரனுகிய எனதவமதிப்பின் வசத்தால் ராக்ஷஸீ ஆசுரீ மோகினீப் பிரகிருதியையே ஆசிரயிக்கின்றான். சாஸ்திரம் விதிக்காத ஹிம்சையின் காரணபூத தமோவஸ்தம் பிரதானமெதன்கண்டீரு, அத்தன்மைய தாமசப் பிரகிருதி ராக்ஷஸப் பிரகிருதியாம். சாஸ்திரவிகிதமின்றிய விஷயபோகத்திற்குக் காரணபூதமான ராகம் பிரதானமாமெதனில், அத்தன்மைய ராஜஸப் பிரகிருதி ஆசுரப்பிரகிருதியாம். சத்சாஸ்திர ஜன்னிய ஞானத்தினின்றும் வழுவுதலேச்செய்வது மோகினிப்பிரகிருதியாம். ஈண்டுப் பிரகிருதியென்பது சுபாவத்திற்காம். இவ்விதமான பிரகிருதிகளையே அம்மூட புருஷன் பற்றுவனுதலின் அவை நரகப் பிராப்தியின் வாயிலத்தருவதால் நிரந்தர நரகத்தையே அநுபவிக்கின்றான். அந்நரகத்துவாரம் சாஸ்திரத்திலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசனமாத்மன: ।
காம: க்ரோதஸ்ததா லோபஸ்தஸ்மாதேதத்த்ரயம் த்யஜேத் ॥

(பொ-ள்.) காமக்குரோத லோபமென்னும் இம்மூன்றுமே இவனுக்கு நரகப் பிராப்தியின் துவார பூதங்களாகின்றனவாதலின் இம்மூன்றையுந் தள்ளவேண்டுமென்பதாம்.

(அ-கை.) ஆண்டுப் பூர்வம் இவ்வார்த்தை கூறப்பட்டது. அது வருமாறு:— பரமேசுரனுக்குப் புறம்பானவனது பலேச்சையும், அதனுலுண்டான நித்திய நைமித்திக காம்ய கருமானுஷ்டானங்களும், அவற்றினுபயோகமான சாஸ்திர ஜன்ய ஞானமும் பயனற்றனவேயாமாதலின், அவன் பரலோக பலமும் சாதனமும் இன்றியவனுகின்றான்; அன்றியும் அவனுக்கு இவ்வுலக பலனுங் கிடைப்பதில்லை; அவன் விவேக விஞ்ஞான சூனியனுகவேவிசேதசாவாகின்றுனதலின். பரமேசுரனின் விமுகமான தீனபுருஷன் சர்வ புருடார்த்தத்தினின்று நழுவி யாவர்களும் வருத்தப்படத்தக்கவனுவன் என்னு மிவ்வனைத்து முன்னர்க்கூறப்பட்டனவாம். அற்றேல், சர்வ புருடார்த்தத்தையடைபவனும், யாவரும் வருத்தப்படத்தகாதவனும் யாவன்

என அர்ச்சுனனுக்கறியும் வேட்கையுண்டாகப் பரமேசுரனது சரணமான்றை யடைந்தவனே இத்தன்மையனுவன் என்பதை இப்போதருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸஹாதா நஷ்ட ராம் வாயு2 ஸெஷீம் வ்ருகூ3தீ4ராபி4ரி4தாஃ ।
ஹஜம்தூ5நயு2நஹொ ஜூ7ராகூ8வா ஹ்ருʼ9தாஹி3வயயழ ॥ (13)

ப-ம். 6 ஸஹாதூ2நஃ 7 தூ2 8 ராம் 1 வாயு2 2 ஸெஷீம் 3 வ்ருகூ3தீ4ம் 4 கூ3பி4தாஃ 12 ஹஜஹ்ரி 5 சுநயு2நஹஃ 11 ஜூ7ராகூ8வா 9 ஹ்ருʼ9தாஹிம் 10 சுவயயம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! தெய்வீகப் பிரகிருதியை ஆசிரயிப்பவனும் பரமேசுரனுகிய என்னினின்று மன்னியத்தின் மனம் பற்றூதானுமாகிய மகாத்ம புருஷனை என்னைச் சர்வ பூதங்கட்குங் காரணவடிவமாயும் நாசமற்றவனுகவுமுணர்ந்து பஜனை பண்ணுகின்றான். (13)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! மகத் ஆத்மா 'அந்தக்காணம்' எவனுக்கோ அவன் மகாத்மாவாவான்; அதாவது, பல பிறப்புக்களில் செய்யப்பட்ட புண்ணிய கருமத்தாற் சுத்தமானதும் அற்பமான காமாதி விகாரங்களாலபிபவஞ் செய்யமுடியாததுமாகிய அந்தக்காண மெவனுக்கோ அவன் மகாத்மாவாவான். எதனுலவன் மகாத்மாவென அதனுனே 'சுஹயம் லக்ஷ்யம் ஸ்ரூஷ்டிஃ' என்பது முதலிய வாக்கியங்களான் மேற்கூறும் தெய்வீகமெனும் சாத்துவிகப் பிரகிருதியை ஆசிரயித்தவனெவனை அதை யாசிரயித்த அதனுனே பரமேசுரனுகிய என்னினன்னியப் பொருளில் பற்றிலாதமனம் எவனுக்கோ அத்தன்மைய மகாத்மபுருஷன் பரமேசுரனுகிய என்னைக் குருசாஸ்திரோபதேசத்தால் சர்வ சகத்காரணவடிவமாகவும் அவிநாசவடிவமாகவும் உணர்ந்து பஜனை பண்ணுகின்றான். அதாவது, பரமேசுரனுகிய எனக்குச் சேவை செய்கின்றான். ஈண்டு, 'ஸஹாதூ2நஷ்ட' என்பதிலுள்ள 'து' சத்தமானது முன்னர்க் கூறப்பட்ட மூடபுருஷனினும் இம்மகாத்ம புருஷன் முழுதும் விலட்சணன் எனக்குறிப்பிக்கின்றது. (13)

(அ-கை.) ஹே பகவன்! அம்மகாத்ம புருஷன் பரமேசுரனுகிய தங்களை எவ்வாற்றூற் பஜனை பண்ணுகின்றான் என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு இரண்டு சுலோகங்களால் அப்பஜனப் பிரகாரத்தை ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸததம் கீ1தூ3யஞ்ஷ்ச ராம் யதந்தஷ்ச த்3ருʼட4வ்ரதாஃ ।
நமஸ்யந்தஷ்ச ராம் ப4க்த்யா நித்யயுக்தா உபாஸதெ ॥ (14)

ப-ம். 1 ஸததம் 3 கீ1தூ3யந்தஃ 2 ராம் 5 யதந்தஃ 4 அ 6 த்3ருʼட4வ்ரதாஃ 9 நமஸ்யந்தஃ 7 அ 8 ராம் 10 ப4க்த்யா 11 நித்யயுக்தா 12 உபாஸதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அம்மகாத்மபுருஷன் எப்போதும் பரமேசுரனுகிய என்னைக் கீர்த்தித்தும் முயன்றும் திடவிரதனுகியும் நமஸ்கரித்தும் எனது பக்தியோடு நித்திய யுக்தனுய் என்னைச் சிந்தனைசெய்வான். (14)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அம்மகாத்ம புருஷன் எப்போதும் பரமான்மாவாகிய என்னையே கீர்த்தனைசெய்கின்றான்; அதாவது, சர்வோபநிடதங்களாலும் பிரதிபாதிக்கப்பட்ட நிர்க்குணப்பரமான்மாவாகிய எனது சொரூபத்தை அவன் பிரஹ்மவித்தாகுருவின் சமீபஞ்சென்று வேதாந்த வாக்கியவிசாரஞ்செய்து கீர்த்தனஞ் செய்கின்றான். குரு சமீபத்தையடையாத வேறு காலத்தில் பிரணவ முதலிய மந்திர செபத்தானும் உபநிடதங்களின் ஆவிருத்தியினுனும் கீர்த்தனை பண்ணுவான். கருத்திதுவாம்:—அம்மகாத்மாவானவன் நிர்க்குணப் பிரஹ்மமாகிய

என்னை எக்காலத்தும் வேதாந்தசாஸ்திராத்தியயனவடிவ சிரவணவியாபாரத் திற்கு விஷயம்பண்ணுவன். இத்துணை கூறியதால் சிரவணவடிவசாதனம் நிரூபிக் கப்பட்டது. இப்போது மனனவடிவசாதனத்தை நிரூபித்தருளுகின்றார். 'யதஹ ஊதி' அர்ச்சுன! மீண்டும், அம்மகாத்மபுருஷன் குரு சமீபத்தையடைந்து அல்லது வேறிடத்தில் வேதாந்தத்திற்கு விரோதமில்லாத தர்க்காநுசந்தானத் தால் குருவுபதேசித்த நிர்க்குணப்பிரஹ்மவடிவ பரமேசுவரனென்ற எனது சொரூ பத்தை அப்பிரமாண்யசங்கையிலாது நிச்சயித்தற்பொருட்டு முயலுவன்; அதா வது சிரவணத்தால் நிர்ணயம்பண்ணப்பட்ட பொருளைப் பாதப்படித்தும் சங் கையை நிவர்த்திபண்ணப்பட்ட தர்க்காநுசந்தானரூப மனனபரியாயனுகுவன் என்பதாம். இத்துணை கூறியதால் மனனம் நிரூபிக்கப்பட்டது. இப்போது அச்சிர வணமனனநிதித்தின்பொருட்டுச் சமதமாதிசாதனங்களை நிரூபித்தருளுகின் றார். 'ஊயி வதாஃ ஊதி' அர்ச்சுன! அம்மகாத்மபுருஷன் அச்சிரவணமனனநி திதர்ப்பிராப்தியின்பொருட்டு முதலில் திடவிரதனுகின்றன். ஆண்டு, விரோதி களால் சலனப்படுத்துவதற்கேலாத திட அகிம்சை, சத்திய, அஸ்தேய, பிரஹ்ம சரிய, அபரிக்கிரகம் என்பது முதலிய விரதமெவனுக்கோ அவன் திடவிரதனும் அதாவது, அம்மகாத்மபுருஷன் சமதமாதிசாதனசம்பன்னனுகின்றன். ஆண்டு, அகிம்சை முதலிய விரதங்களில் திடத்தன்மை பதஞ்சலிபகவானுலும் யோகசூத் திரத்திற் கூறப்பட்டுளது.

ஆ-சு. ஈஹிம்ஸாஸத்யா ஸ்தேயப்ரஹ்மசர்யாபரிக்ரஹாயமாஃ।
ஜாதிதேஶகாலஸமயானவச்சின்னாஃ ஸார்வபௌமாமஹாவ்ரதம்॥

(போ-ள்.) அகிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரமசரியம், அபரிக்கிரகம் என்னு மிவ்வைந்தும் யமமெனப்படுகின்றன. அந்த அகிம்சை முதலிய ஐவகை யானயமம், க்ஷிப்த மூட விக்ஷிப்த பூமிகளிலும் சம்பாவனை பண்ணப்படுகின்ற னவாதலின் அவ்வைந்துஞ் சார்வபௌமமெனப்படுகின்றன. அத்தன்மைய அகிம்சை முதலிய ஐவகையும் ஜாதி தேசகாலசமயம் என்னும் நான்காலுமனவச்சின்னப் பட்டு மகாவிரதமெனப்படுகின்றன. ஈண்டுச் சாதி சப்தத்தால் பிராமணத்தன்மை முதலிய சாதிகளும், தேசசப்தத்தால் தீர்த்த முதலிய உத்தம தேசங்களும், கால சப்தத்தால் ஏகாதசி அமாவாசை முதலிய புண்ணிய தினங்களும், சமய சப்தத் தால் பிரயோசனவிசேடங்களும் கொள்ளற்பாலனவாம். ஆண்டு, பிராஹ்மணர் முத லிய உத்தமப்பிராணிகளை நான் கொல்லேன். என நினைத்து அவர்களைக் கொல்லா திருக்கும் அகிம்சை சாதியால் அவச்சின்னமெனப்படுகின்றது. தீர்த்த முதலிய உத்தம தேசங்களில் யாதொரு பிராணியையுங்கொல்லேன் என நினைத்து ஆண் டொன்றையுங் கொல்லாதிருக்குமகிம்சை தேசசத்தாலவச்சின்னப்பட்டதாம். ஏகா தசி முதலிய புண்ணிய தினங்களில் யாதொன்றையுங்கொல்லேன் என நினைத்து அப்போதொன்றையுங் கொல்லாதிருக்குமகிம்சை காலத்தாலவச்சின்னப்பட்ட தாம். யஞ்ஞயுத்த முதலிய பிரயோசனமின்றி ஒரு பிராணியையுங்கொல்லேன் என நினைத்து அஃதன்றி யொன்றையுங் கொல்லாதிருக்குமகிம்சை சமயத்தா லவச்சின்னப்பட்டதாம். இவ்வாறே சத்திய முதலியவைகளிலும் தக்கவாறு சாதி முதலியவைகளால் அவச்சின்னமாந்தன்மையையுங் கண்டுகொள்க. எல்லாத்தேசத் திலும் எல்லாக்காலத்திலும் எவ்விதப் பிரயோசனத்தின்பொருட்டேனும் எவ்வித மான ஜாதியுடைய சீவர்களையும் நான் கொல்லேன் என்றெண்ணி எவ்வாற்றானும் ஒரு பிராணிகளையுங் கொல்லாதிருத்தலாகிய அகிம்சையே சாதி முதலிய நான்கா னும் அனவச்சின்னமெனப்படும். இவ்வாறே சத்திய முதலியவைகளிலும் சாதி முதலியவைகளால் அனவச்சின்னத்தன்மையை அறிந்துகொள்க. இவ்வணம்

சாதி முதலியவைகளால் அவச்சின்னமின்றிய அகிம்சை முதலிய யமம் மகாவிரத மெனப்படுகின்றதன்க. இவ்விரண்டு யோகசூத்திரங்கட்கும் இக்கீதையின் நான் காவதத்தியாயத்தில் 'ஊவுயஜூர்வேதவொயஜூர்' என்னுஞ் சுலோகவியாக்கியா னத்தில் விரிவாய்க்கூறிஞம். இவ்வாற்றால் நிடமான அகிம்சை முதலிய விரதங்க ளெவனுக்கோ அவன் நிடவிரதனவன். அம்மகாத்மாவானவன் பரமேசுரனெகிய என்னையே நமஸ்கரிக்கின்றான். அதாவது, அவனுக்கு இஷ்டதேவதாவடிவமாக வும் சர்வ குணங்களின் நிதானவடிவ குருரூபமாயுமிருக்கும் பகவான் வாசுதேவ னெகிய என்னையே முக்காணத்தானும் வழிபடுகின்றான். ஈண்டு, 'நமஸ்யந்தஶ்ச' என்பதிலுள்ள சகாரத்தால் நூற்பிரசித்தமான சிரவணகீர்த்தனாதிகளையுங்கொள்ளவேண் டும்.

ஆ-சு. ஶ்ரவணம் கீர்த்தநம் விஷ்ணோர் ஸ்மரணம்வாஉவெவநம் ।
அர்சநம் வம்தநம் தாஸ்யம் ஸவ்யஸாக்யநிவெதநம் ॥

(தொ-ள்.) எங்கும் வியாபகமாகிய விஷ்ணுவைச் சிரவணம்பண்ணலும் கீர்த் நித்தலும் ஸ்மரித்தலும் அவர் பாதங்களை வழிபடலும் அர்ச்சித்தலும் வந்தனஞ் செய்தலும் தாசபாவம் பண்ணலும் சகாபாவம் பண்ணலும் தனதான்மாவை சமர்ப்பித்தலுமாம். இச்சுலோகத்திற்கூறப்பட்ட வந்தனமே பகவானும் 'நமஸ் யஜ்ஞஶ்ச' என்னும் வாக்கியத்தாற் கூறப்பட்டுளது. ஆதலின், இச்சுலோகத்தில் அவ்வந்தனத்திற்காடிருக்கப்பட்ட சிரவணகீர்த்தனமும் அச்சகாரத்தாற்கொள்வதமை யும். புஷ்பசந்தன முதலியவைகளால் அர்ச்சித்தலும் பாதசேவையும் நேரே ஈசுர னுக்குச் சம்பவியாதாயினும், அவ்வீசுரனை குருவடிவெடுத்துச் சிஷ்யனுக்குபதே சிக்கின்றார் என்பது சாஸ்திரத்திற் கூறப்பட்டிருக்கின்றதாதலின், அக்குருவடிவ ஈசுரனுக்கு அர்ச்சனை பாதசேவை யிரண்டும் அமைதற்பாலனவேயாம். அல்லது,

ஆ-சு. ஶ்ரீவிவெவாஹ்ரூஶ்ரீவஹ்ய அயுஜ்யோஅயுஜ்ரெவஅ ।
அயும் வஸுர்யோவிஶ்ரோ ரூபவஅயும் வ்ருதிராஜிகம் ॥

(பொ-ள்.) எங்கும் வியாபகமாகிய விஷ்ணுவுக்கு இரண்டு வடிவமாம். ஒன்றே சுவிக்கப்பட்டரூபமாம். மற்றொன்றே அசலரூபமாம். அவற்றுள், சங்கி யாசியின் சொரூபஞ்சலனரூபமாம்; பிரதிஷ்டை பண்ணப்பட்ட பாஷாணமய அல் லது, தாருமயப் பிரதிமை முதலியவைகள் அசலரூபமாம். என்பது முதலிய சாஸ் திர வசனத்தில் பிரதிமையும் விஷ்ணுவடிவமெனக் கூறப்பட்டதாதலின் அதற்கு அர்ச்சனைபாத சேவணங்கள் சம்பவமாம். இதனானே, சாஸ்திரங்களில் அவ்விரண்டு வடிவங்களையும் நமஸ்காரம் பண்ணுதானுக்கு நாகப்பிராப்தி கூறப்பட்டிருக் கிறது:—

ஆ-ம். ஶ்ரெவதா வ்ருதிராம் ஊஷாயதிம் ஊஷாஅஜம்பிகம் ।
வ்ருணிவாத ஈகூவாஞணோ ரளரவம் நரூகம்வ்ருஜெகூ ॥

(பொ-ள்.) விஷ்ணு, சிவன் முதலிய பிரதிமைகளைத்தரிசித்தும் தண்ட முடைய சந்நியாசியைத்தரிசித்தும் வணங்காதிருந்தவன் ரௌரவநரகத்தையடை கின்றான் என்பதாம். ஈண்டு, 'நமஸ்யந்தஶ்ச ஸ்ரீ' என்னும் வாக்கியத்திலுள்ள 'ஸ்ரீ' [என்னை] என்னும் பதம் இரண்டாந்தரங் கூறப்பட்டது. அது சகுண வடிவத்தைப்போதித்தற்பொருட்டாம். அவ்வாறு கொள்ளவில்லையேல் 'கீதாஶ்ய ஞானஸ்ரீ' என்னும் பூர்வ வாக்கியத்திலுள்ள 'ஸ்ரீ' [என்னை] என்னுஞ் சப்தத் தானே அர்த்தசித்தியுண்டாக, மறித்தும் 'ஸ்ரீ' [என்னை] என்றுகூறல் பயனிலதா மாதலின் முதலாவது 'ஸ்ரீ' என்னுஞ் சத்தம் நிர்க்குணவடிவத்தைத் தெரிவிப்ப

தாம். இரண்டாவதோ, சகுணவடிவத்தைத் தெரிவிப்பதாம் எனப் பொருள்கோடலே தகுதியாமென்க. அங்ஙனமே அம்மகாத்மாக்கள் எப்போதும் பரமேசுரனுகிய எனது விஷயக பரமப்பிரேமவடிவ பக்தியுடையர்களாவர்கள். இத்துணை கூறியதால் சர்வ சாதனங்களின் புஷ்கலத்தன்மையும் பிரதிபந்தகமின்மையுங்காட்டப்பட்டன. அதாவது, எவ்வதிகாரி சர்வதாபரமேசுரபக்தியுடையனே அவ்வதிகாரி அப்பக்தியின் பிரபாவத்தால் சர்வப் பிரதிபந்தங்களும் நீங்கியவனுய்ச் சீக்கிரமே ஆன்மஞானத்தையடைகின்றன். இது சுருதியிலும் கூறப்பட்டுளது :—

ஆ-சு. யஸ்யதெவ வரூஹக்ஷிய-ஃ யாதெவெதயாமரூள ।
தவைஷ்யதெ கயிதாஹ்ய யா-ஃ வ்ருகாஸஷ்ஷ ஊஹாத்மகஃ ॥

(பொ-ள்.) எவ்வதிகாரி புருஷனுக்குப் பரமான்மதேவனிடத்தில் பராபக்தியிருப்பதுபோலவே, பிரஹ்மோபதேசகராகிய குருவினிடத்தில்பரமபக்தியுளதோ அம்மாகாத்துமாவாகிய அதிகாரிக்கே இவ்வேதாந்தப்பிரதிபாதிதார்த்தம் புத்தியில் நன்கு விளங்குமென்பதாம். இது பதஞ்சலி பகவானல் யோகசூத்திரத்திலுங் கூறப்பட்டிருக்கிறது :—

ஆ-சு. ததஃ வ்ருத்யஃ ஸெதராயிமஸொ வ்யஞ்ஜா யாஹாவஷ்ஷ ।

(பொ-ள்.) அப்பரமேசுரனது அநன்யபக்திவடிவப் பிரணிதானத்தால் இவ்வதிகாரிக்குப்பிரத்தியக்சேதன சாக்ஷாத்காரமுண்டாகின்றது. அங்ஙனமே சர்வவிக்கினங்களின் அபாவமுமுண்டாகின்றது. இவ்வாறு அம்மகாத்துமாக்கள் சமதமாதிசாதன சம்பன்னர்களாயும் வேதாந்த சாஸ்திர சிரவணமனனபராயணர்களாயும் பரமகுருவாகிய என்னிடத்திலுள்ள பரமப்பிரேமையாலும் நமஸ்கார முதலியவைகளினுலும், சர்வ விக்கினங்களின்றியவர்களாயும் பரமேசுரனுகிய என்னை உபாசிக்கின்றனர்கள்; அதாவது, சிரவணமனனங்களின் பரிபாகத்தின் பின்னருண்டாகத்தக்க அநான்மாகாரவிஜாதீய விருத்திகளின் வியவதானமின்றிய பரமேசுரனுகிய எனதாகாரசஜாதீய விருத்திப்பிரவாகத்தால் நிரந்தரம் என்னையே சிந்திப்பார்களென்பதாம். இத்துணை கூறியதால் தத்துவ சாக்ஷாத்காரத்திற்கு மிகச் சமீபமானதால் பரமசாதனவடிவ நிதித்தியாசனத்தைக்காண்பித்தனர். இவ்வாறு சிரவணாதிசாதனங்களின் புஷ்கலத்தன்மையாகவே இவ்வதிகாரிக்கு வேதாந்த வாக்கியத்தாலுண்டானதும், அகண்ட வஸ்து விஷயகமும், நான் பிரமமெசொலுபன் என்னும் சாக்ஷாத்காரவடிவமுமாகிய ஆன்மஞானமுண்டாகின்றது. சர்வ சாதனங்கட்கும் பலபூதமாகிய அவ்வான்மஞானம் சர்வ சங்கைவடிவ கலக்கங்களின் காரியமாகிய சர்வப் பிரபஞ்சத்தையும் நாசம்பண்ணுகின்றது. தீபமானது தனதுத்பத்தி மாத்திரத்தானே இருளை யிரிக்கின்றது. அதில் மற்றொரு சாதனத்தையுமபேட்சிப்பதில்லை. மற்றும், அத்தீபம் தனது தோற்றத்தின்கண்ணே எண்ணெய் திரி முதலிய சாதனங்களை யபேட்சிக்கின்றதுபோல, அவ்வான்மஞானமும் காரிய சகித அஞ்ஞானத்தை நிவிருத்திப்பதில் மற்றொரு சாதனத்தையுமபேட்சிப்பதில்லை; மற்றும், தனதுத்பத்தியின்கண்ணே சிரவணமுதலிய சாதனங்களை யபேட்சிக்கின்றது. ஆதலின், அவ்வான்மஞானம் நிரபேட்சமாகியே நேரே மோட்சத்திற்கேதுவாகின்றது. அம்மோட்சத்தைப் பயப்பிப்பதில் அவ்வான்ம சாட்சாத்காரம் பூமிகளின் ஜயக்கிரமமாய்ப் புருவத்திடையிற் பிராணப் பிரவேசத்தையும் அபேட்சிப்பதில்லை. அங்ஙனமே, சுழுமுனையென்னும் மூர்த்தினி நாடியால் பிராணன் வெளிப்படுதலையும் அபேட்சிப்பதில்லை. அங்ஙனமே, அர்ச்சிராதிமார்க்கத்தால் பிரஹ்மலோகமடைதலையும், பிரஹ்மலோக போகாந்த காலவரையில் விலம்

பத்தையும் அபேட்சிப்பதில்லையாதலின், ஸ்ரீ பகவான் 'உஉந்தா தெமாஹயதஉ வரவஜ்ஜாயா சுஹமியவெஜ்ஜாதம்' என்னும் வாக்கியத்தால்முன்னர்ப் பிரதிஞ்ஞை செய்யப்பட்ட ஞாணைபதேசத்தை இச்சுலோகத்திலருளிச்செய்தனர். இவ்வான்ம ஞானத்தினது துக்க சம்சாரத்தின் மோட்சவடிவபலம் ஸ்ரீ பகவானல் முன்னரே அருளப்பட்டமையின் மறித்துமீண்டருளவில்லை. இச்சுலோகத்தில் இவ்வாறு ஸ்ரீ பகவானுடைய ஆழ்ந்த கருத்திருந்தமைகாண்க. சுலோகத்தின் மேலாகிய அர்த்த மோவிளக்கமே யென்க. (14)

(அ-கை) ஆண்டுப் பூர்வ சுலோகத்தில் கூறப்பட்ட தத்துவஞானத்தின் சாதனவடிவ சிரவண மனன நிதித்தியாசனங்களைச் செய்யற்கேலாத புருஷனும், உத்தம மத்தியம மந்த பேதங்களால் மூவகையாவன். அவர்கள் தத்தம் புத்திய நுசாரமாய்ப் பரமேசுரனுகிய என்னைச் சிந்திக்கின்றார்கள் என்பதை ஸ்ரீ பகவானிப்போ தருளிச்செய்கின்றார்.

சு-ம். ஜ்ஞாநயஜ்ஞை ராவ்யஜ்ஞை யஜந்தோ மாமுவாஸதே ।
ஏகத்வேந ப்ருதக்த்வேந பஹுதா விஸ்வதோமுகம் ॥ (15)

ப-ம். 2 ஜ்ஞாநயஜ்ஞை 7 ர 4 ஸவி 1 ஸஜ்ஞை 3 யஜந்தோ 6 மாம் 8 உவாஸதே 5
ஏகத்வேந 9 ப்ருதக்த்வேந 10 பஹுதா 11 விஸ்வதோமுகம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அந்நியர்களாகிய உத்தமாதிகாரிகள் ஞானவடிவ யக்ஞத்தால் என்னைப் பூசிப்பவர்களாய்க் கேவலம் ஏகத்துவரூபஞானத்தால் பரமேசுரனுகிய என்னையே சிந்திக்கின்றார்கள். சிலமத்தியமாதிகாரிகளோ பேதவடிவத்தாகிய சிந்திக்கின்றார்கள். சிலமந்தர்களோ பலவகையாய்ப் பரமேசுரனுகிய என்னையே சிந்திக்கின்றார்கள். (15)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பூர்வ சுலோகத்தில் கூறப்பட்ட சிரவணமுதலிய சாதனங்களை யநுட்டிப்பதில் சாமார்த்தியமின்றிய சில அதிகாரிகள் பரமேசுரனுகிய என்னை ஞானவடிவ யக்ஞத்தால் சிந்திக்கின்றார்கள். அவர்களுள்ளும் சில உத்தமாதிகாரிகளோ கேவலம் ஏகத்துவ ஞானயக்ஞத்தாகிய சிந்திக்கின்றார்கள். ஈண்டுச் சுருதியிற் கூறப்பட்ட உபாசியோபாசகங்களின் அபேத சிந்தனவடிவ அஹங்கிரகோபாசனை ஞானமாம்.

ஆ-சு. கஸ்மாத் ஸாஹஸ்ரீஹ மவோ தெவதெஸஹம் வெக்ஷஸி ।

(போ-ள்.) ஹே பகவன்! சகுண நிர்க்குண தேவதையாகிய நீ நானே நானே நீ, உமக் கெனக்குஞ் சிறிதளவும் பேதமில்லையென்பதாம். இத்தன்மைய அஹங்கிரகோபாசனைவடிவ ஞானமே பரமேசுரனது யஜனரூபமானதால் யக்ஞ வடிவமாம். ஈண்டு, 'ஜ்ஞாநயஜ்ஞை ராவ்யஜ்ஞை' என்பதிலுள்ள 'அ-ஸவி' என்னு மிரண்டு சத்தங்களில், சகாரமோ ஏகாரத்தின் அவதாரணவடிவ அர்த்தத்தை யறிவுறுத்துகின்றது. அதை 'ஸம' [என்னை] என்பதனோடும் அந்வயஞ் செய்க. அபி-சத்தமோ வேறு சாதனவிலக்கை யறிவுறுத்துகின்றது. இதனால் இப்பொருள்பெறப்படுகின்றது :—சில அதிகாரிகள் வேறு சாதனேச்சையின்றியவர்களாய் உபாசிய வுபாசகங்களின் அபேத சிந்தனவடிவ அஹங்கிரகோபாசனவடிவ ஞானயஞ்ஞத்தால் பரமேசுரனுகிய என்னையே சிந்தனைசெய்கின்றார்கள் என்பதாம். இவ்வாறு சிந்திப்பவர்கள் உத்தமர்களெனப்படுவர்கள். மற்றுஞ் சில மத்தியமாதிகாரிகள் பின்னரூபமாய் என்னையே சிந்திக்கின்றார்கள். அதாவது 'சூஷிஷ்வா ப்ருஹ்மதயா ஹரிம் உபாஸதே' என்பது முதலிய சுருதிகளாற் கூறப்பட்ட உபாசியோபாசகங்களின் பேதவடிவப் பிரதீகோபாசனைவடிவ ஞான

யஞ்ஞத்தால் என்னைச் சிந்திக்கின்றார்கள். அவ்விருவகையாலுஞ் சிந்தித்தற் கேலாதமந்தன் யாதேனு மொருவேறு தேவதையை யுபாசித்தேனும், யாதானுமொரு கருமத்தைச் செய்தேனும் பற்பல வகையாலும் விசுவரூப பரமேசுரனாகிய என்னையே அவ்வத்தேவதா வுபாசனாவடிவ ஞானயக்ஞத்தால் சிந்திக்கின்றான். அவற்றுள், அந்தவந்த ஞானயக்ஞத்தால் உத்தமோத்தம புருஷனுக்குக் கிரமமாய்ப் பூர்வ பூர்வ பூமியின் லாபமவசியமுண்டாம். ஒரு வியாக்கியானத்தில் இச்சுலோகத்திற்கு இவ்வாறு பொருள் கூறப்பட்டது. அது வருமாறு :—பாதஞ்சலர்களாகிய யோக நூலார்கள் நிருவிகற்ப சமாதிவடிவ ஞானயக்ஞத்தால் பரமேசுரனாகிய என்னையே சிந்திக்கின்றார்கள். உபநிடதாவலம்பிகள் நான் பகவானாகிய வாசுதேவசொரூபன் என அபேதமாய் என்னையே சிந்திக்கின்றார்கள். விசாரமின்றிய பிராகிருத சனங்கள் இவ்வீசுரன் எனது சுவாமி, யாணிவர்க்குத்தாசன் எனப்பின்னமாய் என்னையே சிந்திக்கின்றார்கள். மற்றுஞ் சிலர்கள் பலவாற்றால் விசுவதோமுகமாம்வண்ணம் என்னையே சிந்திக்கின்றார்கள். அதாவது, யாதேனுமொரு பொருள் காணப்படின் அது பகவான் வடிவமேயாம். யாதேனு மோரொலி செவிக்குப்புலப்படின் அது பகவான் நாமமேயாம். யாதேனுமொரு பொருளையேனும் அனுபவிக்கினும் அவ்வனைத்தும் பகவானிடத்திலே அர்ப்பணமாகின்றன. இவ்வாறு எல்லாவகையாலும் பரமேசுரனாகிய என்னையே சிந்திக்கின்றார்கள். (15)

அ-கை.) ஹே பகவன்! அவர்கள் பற்பலவகையாய் உபாசிக்கினும் பரமேசுரனாகிய என்னையே சிந்திக்கின்றார்கள் என்னுந் தங்கள் வாக்கியம் எவ்வாறு சங்கதமாகும்? என்னு பார்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் நான்கு சுலோகங்களால் தனது விசுவரூபத்தன்மையை வர்ணித்தருளுகின்றார்.

சு-ம். அஹம் க்ரதுரஹம் யஜ்ஞ: ஸ்வதாஹமஹமௌஷதம் ।
மந்த்ரோ ஹமஹமேவாஜ்ய மஹமக்நிரஹம் ஹுதம் ॥ (16)

ப-ம். 1 அஹம் 2 க்ரது: 3 அஹம் 4 யஜ்ஞ: 6 ஸ்வதா 5 அஹம் 8 ஔஷதம் 10 மந்த்ர: 9 அஹம் 11 அஹம் 12 ஏவ 13 ஆஜ்யம் 14 அஹம் 15 அக்நி: 16 அஹம் 17 ஹுதம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனாகிய நானே க்ரதுரூபமாகின்றேன், யஜ்ஞரூபமாகின்றேன், ஸ்வதாரூபமாகின்றேன், ஔடதரூபமாகின்றேன், மந்திரரூபமாகின்றேன், ஆஜ்யரூபமாகின்றேன், அக்கினிரூபமாகின்றேன், ஹவனரூபமாகின்றேன். (16)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஸ்ரௌதகருமமெனும் அக்கினிஷ்டோமாதி கருமங்கிருதுவாம், அதுவும் நானே. ஸ்மார்த்தமெனும் வைசுவதேவ மூதலியவைகள் ஸ்மிருதியில் மகாயஞ்ஞவடிவமாய்க் கூறப்படுகின்றன. அக்கருமங்கள் எக்ருமெனப்படும் அவையும் நானே. பிதிர்க்கட்குக்கொடுக்கப்பட்ட அன்னம் சுவதாவாம், அதுவும் நானே. வனஸ்பதிவடிவ ஓஷதிகளால் உண்டாக்கப்பட்டுச் சர்வப்பிராணிகளாலு முண்ணப்படும் அன்னம் ஔடதமாம். அல்லது, நோய் நீக்கற்குபாயவடிவ மருந்தும் ஔடதமெனப்படும், அந்த ஔடதவடிவமும் நானே. சுவாகா, சுவதா என்னுஞ் சப்தங்கட்கிடையிலுள்ள எவ்வேதவாக்கியங்களைக்கூறித் தேவதைகட்கும் பிதிர்க்கட்கும் ஹவிசுகொடுக்கப்படுமோ அவ்வேதவாக்கியம் மந்திரமாம். 'ஔம் பூர்புவஸ்ஸுவரோம், விதாஹ்யஸ்ய: ஸ்வாஹா' என்பது மந்திரங்கள். அம்மந்திரங்களும் நானே. அம்மந்திரத்தால் அக்கினியில் விடப்பட்ட நெய் ஆஜ்யமாம். அது நெல் முதலிய ஹவிஷ்மாத்திர உபலக்ஷணமாம், அதுவும் நானே. அந்த நெய் முதலிய வடிவ ஹவிசு விடுவதற்கிடமான ஆஹவநீய முதலிய அக்கினியும் நானே. அவ்வக்கினியில் நெய் முதலியவைகளை விடுதலாகிய ஹவனம் ஹுதமாம்,

அந்த ஹவனமும் நானே. ஈண்டு, நான் என்னும் ஒரே சத்தத்தானே கூறிய பொருள் பெறப்படுமாமாயினும், ஒவ்வொரு கிருதுயஞ்ஞ முதலிய சத்தங்களோடு நான் என்னுஞ்சத்தத்தைக்கூறியது, அக்கிருதுயக்ஞ முதலியவைகளில் ஒவ்வொன்றின் ஞானமும் பரமேசுரனுகிய எனதுபாசனையேயாம் என்னு மர்த்தத்தை அறிவுறுத்தற்பொருட்டாம். ஆண்டு, இச்சுலோகத்தின் பிண்டப்பொருளிதுவாம்:— கிரியைகளும், அவைகளைத்தோற்றுவிக்குங் காரகங்களும், அவ்விரண்டானும் பெறப்படு பலமும் ஆகிய இவ்வனைத்தும் எனது சொரூபமேயாம்; என்னினன்னிய மற்றொன்று மில்லை என்பதாம். ஒரு வியாக்கியானத்தில் கிருது சத்தத்தால் தேவதாவிஷயகத் தியானவடிவ, சங்கற்பத்தையும், டஞ்ஞ சத்தத்தால் ஸ்ரௌத ஸ்மார்த்த கருமங்களையுங் கொண்டனர். (16)

(அகை.) அன்றியும்,

சு-ம். விதா ஹஉஹ்ய ஜமதெ ஊதா யாதா விதாஉஹஃ।
வெஉஷ்யம் வவித்ரொம்காரஷ்ஷ்காஉ யஜுரெவ அ ॥ (17)

ப-ம். 3 விதா 7 சுஹம் 1 சுஹ்ய 2 ஜமதஃ 4 ஊதா 5 யாதா 6 விதாஉஹஃ 9 வெஉஷ்யம் 10 வவித்ரம் 11 ஒம்காரஃ 12 ஷ்க் 13 ஹாஉ 14 யஜுஃ 15 ஹவ 8 அ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வுலகத்திற்குப் பிதாவடிவமும், மாதாவடிவமும், தாதாவடிவமும், பிதாமஹவடிவமும் பரமேசுரனுகிய நானே. அங்ஙனமே வேத்தியப்பொருள் வடிவமும், பவித்திரவஸ்து வடிவமும், ஓங்காரவடிவமும் இருக்கு வேத சாமவேத யசுர்வேதவடிவமும் பரமேசுரனுகிய நானே. (17)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சர்வப் பிராணிமாத்திரவடிவ இவ்வுலகத்தைத் தோற்றுவிக்கும் பிதாவடிவமும் நானே, மாதாவடிவமும் நானே, தாதாவடிவமும் நானே. அதாவது, போஷிப்பவனும் அவ்வப்புண்ணியபாவ கருமங்கட்குச் சுகதுக்கவடிவபலனைக்கொடுப்பவனும் நானே. இப்பிராணிகளின் பிதாவின்பிதா பிதாமகனும்; அப்பிதாமகனும் நானே. ஈண்டு ஒரு வியாக்கியானத்தில் உலக சத்தத்தால் வானுதிசர்வ காரியப்பிரபஞ்சங்களையுங்கொண்டு மாயாவிசிஷ்ட சபலப் பிரஹ்மம் அதற்குப்பிதாவடிவமெனவும், அவ்வியத்தமென்னும் அபரப்பிரகிருதி மாதாவடிவமெனவும், மாயோபகித அக்ஷரம் பிதாமகனெனவும் கூறப்பட்டன. அதிகாரிகளா லறியத்தக்க பரப்பிரஹ்மவஸ்து வேத்தியமாம். அச்சொரூபமும் நானே. அல்லது, சர்வப்பிராணிகளா னுமுணரத்தக்க சத்தஸ்பரிச முதலியபொருள்கள் வேத்தியங்களாம், அவைகளும் நானே. அதிகாரிகளைச் சுத்தப்படுத்துவது பவித்திரமாம், அத்தன்மைய கங்கை நீராடல் காயத்திரி செபமுதலிய பவித்திரவடிவங்களும் நானே. அறியத்தக்க பிரஹ்மஞானத்தின் சாதனவடிவ ஓங்காரமும் நானே. அக்கினி ஹோத்திரமுதலிய கருமசித்தியிலுபயோகியும், வேத்தியப் பிரஹ்மத்தில் பிரமாண பூதமுமாகிய இருக்கு சாம யஜுர் வேதங்களும் நானே. ஈண்டு, 'யஜுரெவஅ' என்பதிலுள்ள சகாரத்தால் அதர்வண வேதமுங் கொள்ளத்தக்கது. (17)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். மதிஹ-ஃதா-ஃ வ்ருஹ்ஃஸாக்ஷி நிவாஸஃஶரணம் ஸுஹ்ருத்ப்ரு।
வ்ருஹவஃ வ்ருஷ்யஃ ஸ்தானம் நிதானம் ஸ்ஜஉவ்யயம் ॥ (18)

ப-ம். 1 மதிஃ 2 ஹதா-ஃ 3 வ்ருஹ்ஃ 4 ஸாக்ஷி 5 நிவாஸஃ 6 ஶரணம் 7 ஸுஹ்ருத்ப்ரு 8 வ்ருஹவஃ 9 வ்ருஷ்யஃ 10 ஸ்தானம் 11 நிதானம் 13 ஸ்ஜம் 12 அவ்யயம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய நானே கதிரூபமும், பர்த்தாரூப மும், பிரபுரூபமும், சாக்ஷிரூபமும், நிவாசரூபமும், சரணரூபமும், சுகிருத் ரூபமும், பிரபவரூபமும், பிரலயரூபமும், ஸ்தானரூபமும், நிதானரூபமும், நாச மற்ற பீசரூபமுமாவேன். (18)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! கருமத்தாற் பிராப்தமாம்பலம் கதியாம். அத்தன் மைய சுவர்க்காதிரூப கதியும் பரமேசுரனுகிய நானே. சுகசாதனத்தைக்கொடுத் துப் போஷிப்பவன் பர்த்தாவாம், அவனும் நானே. புத்திரன் முதலிய பொருள்கள் எம்முடையவைகளே எனச் சுவீகரிக்குஞ் சுவாமி பிரபுவாம், அப்பிரபுவும் நானே. சர்வப்பிராணிகளின் புண்ணிய பாவகருமங்களை இரவிமதி முதலியனபோலக் காண் பது சாக்ஷியாம், அச்சாக்ஷிவடிவமும் நானே. எதில் நிவாசஞ்செய்யப்படுகின் றதோ அது நிவாசமாம். அதாவது, போகஸ்தானம் நிவாசமாம் அதுவும் நானே. துன்பம் நீங்குவது எதனதின் சமீபம் அது சரணம். அதாவது, சரணாகதமாயடைந் தவர்களின் துக்கத்தை நீக்குவது சரணமாம், அதுவும் நானே. பிரதியுபகாரத்தை யபேட்சியாது உபகரிப்பது சுகிருதாம், அதுவும் நானே. தோற்ற ஈறு நிலைகள் பிரபவ பிரலய ஸ்தானங்களாம் அவைகளும் நானே. அல்லது, எதனல் இக்காரிய முண்டாகின்றதோ அது பிரபவமாம் அதாவது, சிருட்டிப்பது பிரபவமாம். எத னல் இலயபாவத்தையடைகின்றதோ அது பிரலயமாம். அதாவது, சங்கரிப்பது பிரலயமாம். இக்காரியம் எதனிடத்தினிலத்திருக்கின்றதோ அது ஸ்தானமாம். அதாவது ஆதாரம் ஸ்தானமாம், அவ்வடிவங்களும் நானே. இப்போது நகரத் தகாமையின் வேறு காலத்தினுகரத்தக்கதாம்பொருள் நிலைப்பதெதின்கண்ணே அது நிதானமாம். அதாவது, சூட்சுமப்பொருள்களின் அதிகாணமாகிய பிரலய ஸ்தானம் நிதானமாம். அல்லது, சங்கபத்மமுதலிய நிதிகள் நிதானமாம், அந் நிதானமும் நானே. உத்பத்திக்கேதுவானது பீஜமாம். எந்தப்பீஜம் அவ்வியயமோ அதாவது, நெற்கோதுமை முதலிய வித்துக்கள் விநாசத்தையடைவனபோல எது விநாசத்தையடைவதில்லையோ அத்தன்மைய தோற்றமீறின்றிய சர்வ காரணரூப பீஜமும் நானே என்பதாம். (18)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். தவாஉஹஉஹம் வஷ்ட்கரோம் நிமஉஹாஉஹ்ணாஉஹ்ம் தஉஜஹாமி அ।
சுஉஹுதமெஷ்வெவ உஹுஉஹ்ம் ஸுஉஹுஅஹுஉஹஜஹ்ம்ஸுஉஹ ॥ (19)

ப-ம். 4 தவாமி 2 சுஹம் 5 சுஹம 6 வஷ்ட்கரோம் 7 நிமஉஹாமி 9 உஹ்ம்தஉஜஹாமி 8 அ 12 சுஉஹுதம் 10 அ 3 ஸவ 14 உஹுஉஹ்ம் 13 அ 15 ஸஹ 17 சுஸஹ 16 அ 11 சுஹம் 1 சுஜஹ்ஸுஹ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய நானே தபிப்பிப்பவனும் சலவடிவ ரசத்தைக் கிரகிப்பவனும் அவ்விரசத்தை மீண்டு மண்ணில் விடுபவனும் அமிருத ரூபனும் மிருத்துரூபனும் சத்துரூபனும் அசத்துரூபனுமாவேன். (19)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சர்வத்திற்கும் ஆன்மவடிவ அந்தரியாமி யென் னும் பரமேசுரனுகிய நானே சூரியரூபனுய் இவ்வுலகத்தில் தபிப்பிக்கின்றேன். அத் தபனவசத்தால் சூரியவடிவமாகிய நானே முன்பெய்த விருஷ்டிவடிவரசத்தை எனது கிரணத்தால் கார்த்திகைமுதலிய எட்டுமாதங்களிலிம்மண்ணினின்றுங் கிர கிப்பேன். பின்னர், அச்சூரியவடிவாகியநானே கிரகித்தரசத்தை ஆடிமுதல் நான்கு மாதங்களில் எனது கிரணத்தால் இம்மண்ணில் விருஷ்டிரூபமாய் விடுவேன். தேவர் களுண்டு மரணப்படாத அன்னம் அமிருதமாம். அல்லது, சர்வப் பிராணிகளின்

ஜீவனத்தின் பெயர் அமிருதமாம், அவ்வமிருத ரூபமும் நானே. சர்வப்பிராணிகளை யுங்கொல்வது மிருத்துவாம், அல்லது சர்வப் பிராணிகளின் நாசம் மிருத்துவாம் அவ்வடிவமும் நானே. எப்பொருள் எந்நிலைக்களத்தின் சம்பந்தமுடையதாகியிருக்கின்றதோ அப்பொருள் அந்நிலைக்களத்திற் சத்தெனப்படுகின்றது; எப்பொருள் எந்நிலைக்களத்தின் சம்பந்தமுடையதாகியிருப்பதில்லையோ அப்பொருள் அந்நிலைக்களத்தில் அசத்தெனப்படுகின்றது; உருவம் மண்ணீரொளிகளின்வடிவ ஆதார சம்பந்தமுடையதாகியிருக்கின்றதாதலின், அவ்வுருவம் மண்ணீரொளிவடிவ ஆதாரத்திற் சத்தெனப்படுகின்றது; அவ்வுருவமோ கால் வான்வடிவ ஆதார சம்பந்தமுடையதாகியிராமையின், அவ்வுருவம் கால் வான்களில் அசத்தெனப்படுகின்றது. இங்ஙனமே சத்தசத்துவடிவத்தை ஏனையபொருள்களிலு முணர்ந்துகொள்க; அச்சத்தசத்துவடிவமும் நானே. ஒரு வியாக்கியானத்தில் சத்தசத்தென்னுஞ் சத்தங்கட்குச் சாத்திரம் விதித்த நற்கருமம்சத்தாம், சாஸ்திரநிஷேதித்த துற்கருமமசத்தாம் எனவும், மற்றும் ஒரு வியாக்கியானத்தில் எப்பொருள் இஃதிருக்கின்றது இஃதிருக்கின்றது என நாமரூபங்களாற் சொல்லப்படுகின்றதோ அப்பொருள் வியக்தமெனப்படும்; அத்தன்மைய நாமரூபவடிவகாரியங்கள் சத்தெனப்படுகின்றன. அவற்றின் வேறாய் அவற்றின் காரணவடிவ அவ்வியக்தம் அசத்தெனப்படும். அல்லது தூலவடிவதிருசியம் சத்தாம், சூட்சுமவடிவ அதிருசியம் அசத்தாம், அவ்வடிவம் நானே எனக்கூறுகின்றனர். ஈண்டு, 'ஸஉஸஅ' என்பதிலுள்ள சகாரமானது வியக்தாவ்வியக்தவடிவங்களை நிஷேதித்து அதன் அவதிவடிவமாயிருக்கப்பட்டதும் காரியகாரணபாவமின்றியதுமாகிய நிருவிஷேடப்பரப்பிரஹ்மமும் நானே என்னும் பொருளைக் குறிப்பித்தற்பொருட்டாம். இதனலிப்பொருள் பெறப்பட்டது :—சர்வத்திற்கு மான்மவடிவ பரமேசுரனுகிய என்னை யுணர்ந்து அதிகாரிகள் தங்கள் தங்கள் அதிகாராநுசாரமாய்க் கூறிப்போந்தபலவாற்றானும் பரமேசுரனுகிய என்னையே சிந்திக்கின்றார்கள் என்பதாம். (19)

(அ-கை.) இவ்வாறு அஹங்கிரகோபாசனைவடிவ ஏகபாவத்தானும், பிரதிகோபாசனைவடிவ பின்னபாவத்தானும், மற்றும் பற்பலவகைபானும் என்னை நிஷ்காமமாய்ச் சிந்திக்கப்பட்ட கூறிப்போந்த உத்தமமத்திபமந்த அதிகாரிகள் அந்தக்கரணசுத்தித்துவாரா ஆன்மஞானேத்பத்திவாயிலாய்க் கிரமமாய் மோட்சத்தையே யடைகின்றார்கள். சகாமராய் எவ்வாற்றானும் என்னைச்சிந்திபாது தத்தங் காமனாவிஷய சுவர்க்கமுதலிய சுகங்களையடைதற்பொருட்டுக்காமியகருமத்தையே செய்கின்றார்களோ, அவர்கள் அந்தக்கரண சுத்திபண்ணும் நிஷ்காமகருமமின்றியவர்களாதலின் ஆன்மஞானத்தின் சிரவணமுதலிப சாதனங்கட்கமோக்கியர்களாய் மறித்தும் மறித்தும் பிறப்பிறப்புவடிவ சம்சாரத்தையே அநுபவிக்கின்றார்கள் என்னும் அர்த்தத்தை ஸ்ரீ பகவான் இரண்டு சுலோகங்களால் இப்போதருளிச் செய்கின்றார்.

சு-ம். தெ ரவிஉயா ஸம ளொஉவாஃ வமிதவாவா
யலெஜுரிஷா வுமஃதிம் வராயஃயஜெ ।
தெ வாணயஸாஹாஉய ஹாரொம்உரொக
உஸுஜ்ஞி திவ்யா திவிதெவஹொமாநு ॥ (20)

ப-ம். 1 தெ ரவிஉயாஃ 3 ஸம 5 ளொஉவாஃ 6 வமிதவாவாஃ 2 யலெஜுஃ 4 உஷாவ 7 வுமஃதிம் 8 வராயஃயஜெ 9 தெ 10 வாணயம் 12 கூஹாஉய 11 ஹாரொம் உரொகம் 16 சுஸுஜ்ஞி 14 திவ்யாநு 16 திவி 15 தெவஹொமாநு.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இருக்குமுதலிய மூன்றுவேதங்களையு முணர்ந்தவர்களாய்க் காமிய யக்ஞத்தால் பரமேசுரனுகிய என்னையே பூசித்துச் சோமபானம் பண்ணிப் பாபமின்றியவர்களாய்ச் சுவர்க்கமடைய விரும்புஞ் சகாமர்கள் புண்ணிய பலரூப அச்சுவர்க்கலோகத்தையடைந்து ஆண்டுத் திவ்யமாகிய தேவபோகங்களை அநுபவிக்கின்றார்கள். (20)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! யக்ஞத்தில் ஹோதா, அத்துவர்யு, உத்காதா என்னுமிவர்களாற்செய்யப்பட்ட கருமஞானத்திற் கேதுவாகிய இருக்கு யசுர் சாமம் என்னும் மூன்று வித்தைகளையுடையவன் திரைவித்தையாவன். அல்லது, அந்த இருக்குமுதலிய மூன்று வித்தையையும் நன்குணர்ந்தவன் திரைவித்தையாவன். ஆண்டு, இம்மூன்று வேதங்களுங்கூறிய கருமத்தைச் செய்விப்பதிலும் செய்வதிலும் சாமர்த்தியமாந்தன்மையே அவ்வேதங்களீ நன்குணர்வதாம், அவ்வாறுணர்ந்த யாக்ஞிக புருஷன் அக்கினிஷ்டோமமுதலிய காமிபகருமங்களால் இந்திரவசுருத்திர ஆதித்தியவடிவ பரமேசுரனுகிய என்னைப் பூஜித்து; அதாவது இப்பரமேசுரனே இந்திரன் முதலிய தேவர்களாவன் என இந்திரன் முதலிய வடிவங்களாக என்னையுணராவிடினும் வஸ்துகதியில் அவ்விந்திரன் முதலிய தேவர்களின் பூஜையினுல் அந்தரியாமியாகிய என்னையே பூஜித்து; சோமபானம் பண்ணுகின்றவர்களாகின்றார்கள். ஈண்டு, சோமக்கொடிரசத்தைப் பிழிந்தெடுத்து அதை வைதிகாக்கினியில் ஹவனஞ்செய்து, மீந்த சோமரசத்தைப் பருகுவான் சோமபானனுவன்; அதனுனே பூதபாபனுகிய அதாவது, சுவர்க்கபோகத்திற்குத்தடையாகிய பாபமின்றியவனுகியசகாமபுருஷன் கேவலம் சுவர்க்கமடையவே விரும்புகின்றன்; அந்தக்காணசுத்தி ஆன்மஞானப்பிராப்திகளை விரும்புவதில்லை அதாவது, சுவர்க்கலோகத்தில் சிறிதளவும் பயமுண்டாவதில்லை, சுவர்க்கத்தில் வசிக்கும் தேவதைகள் அமிருதபாவத்தை அடைகின்றார்கள் என்னுமர்த்தவாத வாக்கியத்தைக்கேட்டுச் சகாம புருஷன் அச்சுவர்க்கலோகம் எனக்குக்கிடைக்குக, எனக் கேவலஞ் சுவர்க்கசுகத்தையே இச்சிக்கின்றன். சுவர்க்கேச்சையுடைய அச்சகாம புருஷன் அக்கினிஷ்டோமாதிகளின் பலவடிவ சுராதிபனது சுவர்க்கலோக வடிவஸ்தானத்தையடைந்து ஆண்டு திவ்யபோகங்களை நுகர்வன். மநுடர்க்குக் கிட்டாதபோகம் திவ்யபோகமெனப்படும். அன்றியும் தேவதாதேகத்தாலே அநுபவிக்கப்படும்போகம் திவ்யபோகமாம். அல்லது சுவர்க்கத்தில் தேவதைகளால் கொடுக்கப்பட்டது திவ்யபோகமாம். ஈண்டுப் போகசாத்தத்தால் விடய சுகங்கொள்ளற்பாலது. அல்லது, அச்சுகத்தின் சாதனமான விடயங்களை கொள்ளற்பாலனவாம். அவற்றுள், விடயசுகம்போகமாம் இப்பக்ஷத்திலோ, 'சுபஜ்ஞி' என்பதற்கு, அநுபவிக்கின்றனர், எனப்பொருள் கொள்ளவேண்டும். விஷயபோக மென்னும் பக்ஷத்திலோ புசிக்கின்றனர் எனப்பொருள்படுத்தவேண்டும். அதாவது, அச்சகாமன் சுவர்க்கலோகத்தில் விடயஜன்னிய திவ்யசுகத்தையேனும், திவ்யவிஷயங்களையேனும் அனுபவிக்கின்றன் என்பதாம். (20)

(அ-கை.) ஹே பகவன்! அச்சுவர்க்கலோகத்தில் திவ்யபோகங்களை அநுபவித்தலால் அச்சகாம புருஷர்கட்கு வருமிழுக்கென்ன? என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு அவர்கட்குப் பெருமநிட்டம் பிராப்தியாம் என ஸ்ரீ பகவானருளுகின்றார்.

சு-ம். தெ தம் ஹூக்வா வ்ம-ழொகம் விஶாலம்
க்ஷீணை வ்ணை ஸ்ய-ழொகம் விஶந்தி।
வ்வம் த்ரிதெ ஶ்ய-ழநு-வ்ரவந்தா
மதாமதம் காமகாமா லபந்தெ ॥

(21)

ப-ம். 1 தெ 2 தம் 5 ஹுகூ 4 வ்ஹுமஃயொகம் 3 விஶாயும் 7 கூஹீணை 6 வுணைய் 8 உதய்ஃயொகம் 9 விஶஞ்சி 10 ஸவம் 11 ஹி 12 தெரயீயஃய்ஃம் 13 சுகுவுதந்நாஃ 15 மதாமதம் 14 காஃகாஃநாஃ 16 முஹஞ்சை.

(அ-ம்.) ஹே அர்ச்சன! அச்சகாம புருஷர்கள் விரிவான அச்சுவர்க்கலோகத்தை யநுபவித்து அப்புண்ணியம் நந்துழிமறித்தும் இம்மநுடலோகத்தை யடைகின்றூர்கள். இவ்வாற்றுல் மிக விளக்கமான வேதப் பிரதிபாதிதமாகிய காமிய கருமத்தை மீண்டும் நிச்சயித்துணர்ந்தும் திவ்யபோகங்களையிச்சித்தும் அவர்கள் அடிக்கடி போதல் வருதலேயை அடைகின்றூர்கள். (21)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அச்சகாம புருஷர்கள் அக்காமியரூப அப்புண்ணிய கருமத்தால் அடையப்பட்ட விரிவுடைய சுவர்க்கலோகத்தை யநுபவித்து; அதாவது, நத்தம புண்ணிய கருமமிகுதிப்பாட்டால் அச்சுவர்க்கத்தின் போரின்பத்தை யநுபவித்து அப்போகத்தையுண்டாக்கும் புண்ணிய கருமநாசமானதின் பின்னர் தேவதேக நாசமாகவே மறித்துந் தேகமெடுப்பான் இம்மநுஷ்யலோகத்தை யடைகின்றூர்கள். அதாவது, மறித்துக் கருப்பத்தில் வசித்தல் முதலிய பலவகைத் துன்பங்களை யநுபவிக்கின்றூர்கள். முன்னர் மநுடதேகத்தில் அக்கருமியானவன் திரை தருமபத்தை 'மூன்று தருமத்தன்மையை' நிர்ணயம் பண்ணியிருந்ததிதாப்ப இம்மநுடதேகத்தும் அம்மூன்று தருமங்களையே நிச்சயிக்கின்றுன். அதாவது அந்தத்திரைதருமபாநுஷ்டானத்திலே தற்பரனுகின்றுன். ஆண்டு இருக்காதி மூன்று வேதங்களாற் கூறப்பட்ட ஹோதா அத்துவர்யு உத்காதாக்களின் தருமவிசேடமாகிய அம்மூன்று தருமங்கட்கும் யோக்கியமான சோதிட்டோம முதலிய கருமங்கள் திரை தருமபமாம். அன்றியும், 'ஸவம் தரயீயஃ ஸுவர்வதந்நாஃ' என மூல சுலோகபாடமிருக்கினும் கூறிப்போந்த வார்த்தத்தினும் விலக்ஷணமான அர்த்தஞ் சித்திபாது. மற்றும், கூறிப்போந்த அர்த்தமேசித்தமாம். ஆண்டு இருக்குமுதலிய மூன்று வேதங்களும் திரயீயாம். அவற்றுற் பிரதிபாதிக்கப்பட்ட சோதிட்டோமமுதலிய காமிய தருமம் திரயீதருமமாம். ஆண்டு, ஹோதா அத்துவர்யு உத்காதா என்பவர்கள் யக்ஞஞ்செய்விக்கும் அந்தணர்களாவர்கள். அக்நிஷ்டோமம் சோதிட்டோமம் என்பது யக்ஞவிசேடமாம். 'ஸுவர்வதந்நாஃ' என்னும் வாக்கியத்தின் ஆதியிலுள்ள அது என்பது உத்தரோத்தர சன்மத்தின் கருமவிஷயக நிச்சயத்தில் பூர்வ பூர்வ சன்மத்தின் கருமவிஷயக நிச்சயாபேட்சையைக் குறிப்பிக்கின்றது. இதனுலிப்பொருள் பெறப்படுகின்றது.

ஆ-சு. தி ஃகுஃ-ஃ கூதுஸ் திஜந்ஹ ஸுதயீ உக்ஷிணாவஞ்ஞோ ஸுஸுதக்வம்ஹஜஞ்ஞே।

(போ-ள்.) மூன்று வேதங்களானுங் கூறப்பட்ட கருமத்தைச் செய்பவன் பிறப்பிறப்பையடையான், தக்ஷிணையுடையவன் அமிருதத்தன்மையை யடைகின்றுன் என்பது முதலிய துதிவடிவ அர்த்தவாதத்தைக் கூறும் வாயிலாய் இருக்காதி வேதங்களாற் கூறப்பட்ட காமிய கருமங்களே போக மோட்சப் பிராப்தியில் முக்கியகாரணங்களாம்; மனவொருமை வடிவசமம், இந்திரியங்களையடக்கும்வடிவதமம், சர்வ கருமங்களையும் விடல், ஆன்மஞானம், ஈசுரன் என்னுமிவ்வனேத்திலுள்ளநும் ஒன்றேனும் அதற்குச் சாதனமாகாது இவ்விதமான பூர்வ பூர்வ சன்மத்தின் நிச்சயத்தைக்கொண்டு உத்தரோத்தர ஜன்மத்திலும் அச்சகாம புருஷன் அவ்விதமான நிச்சயத்தையேயடைகின்றுன் இதனுனே அவன் மறித்தும் அத்திவ்யபோகத்தை யிச்சித்துப்போதல் வருதலேயடைகின்றுன். அவற்றுள் புண்ணிய கருமத்தால் இம்மநுடலோகத்தினின்றும் சுவர்க்கலோகத்திற்குச் செல்லல் போத

லாம். புண்ணிய கருமக்ஷயமாக அச்சுவர்க்கலோகத்தினின்றும் மறித்தும் இம்மநு டலோகத்திற்கு வரல்வருதலாம்; அதாவது, அச்சகாமபுருஷன் காமியகருமத்தால் சுவர்க்கத்தையடைகின்றான் அக்கரும நாசமானபின்னர் அதினின்று மநுடலோ கத்திற்கு வந்து பூர்வசம்ஸ்காரவசத்தால் மறித்துங் கருமத்தைச்செய்கின்றான், அக்கருமபோகத்தை நுகர்தற்குச் சுவர்க்கத்திற்குச் செல்கின்றான், அதினின்று மறித்தும் மநுடலோகத்தையடைகின்றான் இவ்வணம் அச் சகாம புருஷனுக்குக் கருப்பவாசமுதற்கொண்டு பலவகையான துக்கப் பிரவாஹம் நிரந்தரம் இருந்து கொண்டேயிருக்கும் இதுவே அவனுக்குப் பெருமிட்டமிலாப் பிராப்தியாமென்க. அவ்வநிட்டப் பிராப்தி முண்டகோப நிஷத் சுருதியிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. வவாஹையதெ சுஉஜபாயஜூ ரூமவா சுஷ்டாஉபொகூ உவரம் யெஷுகஉ।
வநதிஹ்ரயொயெ ஹிகம்உஞ்ஜி உமபாஜரா ஏதஸ்ரூம் தெவுகமெவா
வியாஞ்ஜி ॥

(போ-ள்.) பதிறறு இருத்துவிக்குகள், யஜமாநன், அவன் மநைவி என்னும் செலுத்துகின்ற பதினெட்டுத்தேவர்கள் எதற்காக அத்தன்மைய காமிய கருமவடிவ திடமிலா ஓடம் இவணைப் பெரும் பிறவிக்கடலினின்றுங் கரையேற்றுவதில்லை. அத்தன்மைத்தான காமிய கருமத்தைத் தனது சிரேயசாதனமென்றெண்ணிச் சந்தோஷப்படும் மூடபுருஷன் மறித்து மறித்தும் பிறப்பிறப்பையடைகின்றான் என்பதாம். இச்சுருதியின் அர்த்தம் ஆன்மபுராணத்தின் பதிறாவது அத்தியாயத்தில் விரிவாய்க்கூறிணமாதலின் ஈண்டு விரித்திலம். அதிக மூலப் புஸ்தகத்தில் 'வவம ஏயீயஉஉஉவுவநாஉ' எனவே பாடமுளது. அங்ஙனமே, ஸ்ரீ சங்கரானந்த சுவாமிகளும், ஸ்ரீ நீலகண்ட பண்டிதரும் இவ்விதமான பாடத்தை அங்கீகரித்தே வியாக்கியானஞ் செய்தனர்கள். அங்ஙனமாயினும், கீதாபாடியத்தின் வியாக்கியானக்காரர்களாகிய ஸ்ரீ ஆனந்தகிரிசுவாமிகளும், ஸ்ரீ மதுசூதன சுவாமிகளும் 'வவம ஹிதெ ஏயஉஉஉவுவநாஉ' என்னும் பாடத்தை யுடன்பட்டே வியாக்கியானஞ்செய்தனர்கள் ஆதலின் 'வவம ஹிதெ ஏயஉஉஉவுவநாஉ' என்னும் பாடமே இந்நூலிலும் வைக்கப்பட்டதென்க.

(அ-கை.) ஆண்டுப் பூர்வம் இரண்டு சுலோகங்களால் தத்துவஞானமின்றிய சகாமபுருஷர்களின் கதியை அருளிச்செய்தனர். இப்போது தத்துவஞானமுடைய நிஷ்காமபுருஷரின்கதியை அருளிச்செய்கின்றார்.

சு-ம். சுநநயாஶ்சிஞ்தயநதொ மாம் யெ ஜநாஃ வர்யுவாஸதெ ।
தெஷாம் நித்யாஹிய்க்தாநாம் யொகக்ஷெமம் வஹாம்யஹம் ॥ (22)

ப-ம். 3 சுநநயாஃ 4 சிஞ்தயநதஃ 5 மாம் 1 யெ 2 ஜநாஃ 6 வர்யுவாஸதெ 7 தெஷாம் 8 நித்யாஹிய்க்தாநாம் 9 யொகக்ஷெமம் 11 வஹாமி 10 அஹம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வதிகாரிகள் அநன்யமாய்ச்சிந்தித்துப் பரமே சுரனுகிய என்னைச் சாட்சாத்கரிக்கின்றார்களோ அந்த நித்தியயுக்தர்களின் யோகக்ஷேமங்களைப் பரமேசுரனுகிய நானே அடைவிக்கின்றேன். (22)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அன்னியமெனும் பேதபுத்திருட்டிக்கு விடயம் எவனுக்கில்லையோ அவன் அநன்யமாவன். அதாவது, யாண்டும் அவ்வத்துவிதீயப் பிரஹ்மத்தையே பார்த்துச் சர்வவிடய போகேச்சையின்றியவனுய் ஸ்ரீ பகவான் வாசுதேவனுகிய நானே சர்வான்மரூபன், எனக்கன்னியம் சிறிதளவுமில்லை என

நிச்சயித்து அப்பிரத்தியக்கான்மாவை இடைவிடாது சிந்தித்துச் சாதனசதுட்டய சம்பன்ன எவ்விரக்தசந்நியாசியானவன் பரப்பிரஹ்மமாகிய என்னைத் தனதான்ம வடிவமாய்ச் சாக்ஷாத்கரிக்கின்றானே அந்தத் தத்துவவேத்தாவானவன் பரிபூரணப்பிரஹ்மமாகிய எனது அபேதபாவத்தால் கிருதகிருத்தியனேயாகின்றான்; அத்தத்துவஞானிக்கு மறித்துஞ் சம்சாரப்பிராப்தியில்லை.

சங்கை :—ஹே பகவன்! அத்வைத தரிசனத்தில் நிஷ்டையையும், அத்தியந்த நிஷ்காமத்தன்மையையும், தனதிச்சாபூர்வகம் பிரயத்தனமின்மையையுமுடைய தத்துவஞானியின் சரீரரக்ஷகத்தின்பொருட்டு யோகக்ஷேமம் எவ்வாறுமையும்?

சமாதானம் :—'தெஷாம்நித்யா ஹியுக்தாநாம்' ஆண்டு நிரந்தரம் ஆதரவோடு பரமேசுரத்தியானத்தில் தற்பரனேவான் நித்தியாபியுக்தனவன், தனது தேகங்காத்தன் மாத்திரத்திற்கேனும் முயலாத தத்துவஞானியினது யோகக்ஷேமங்களைப் பரமேசுரனாகிய நானே அடைவிக்கின்றேன். ஆண்டு, முன்னரடையாத அன்னம், ஆடை முதலியவைகளின் பிராப்தியோகமாம். அடையப்பட்டபொருள்களை யிரட்சித்தல் க்ஷேமமாம். தத்துவஞானி தனது தேகம் நிலைத்திருப்பான் யோகக்ஷேமங்களை யிச்சியானேனும் அந்தரியாமியாகிய நான், சுயமேயவனுக்கடைவிப்பேன். தமக்கிச்சையின்றிய மக்களின் யோகக்ஷேமங்களை அவர்தம் தாய்தந்தையர்களை அமைவிக்குமாபோல, பரமேசுரனாகிய நானும் தத்துவஞானியின் யோகக்ஷேமங்களைப் பெறுவிக்கின்றேன்.

ஆ-சு. வியொஹி ஜ்ஞாநிநொ நித்யயுக்தா உஹம் வஹ்ய உ வியஃ।
உத்தராவஹ்வாம் வஹ்வெதெ ஜ்ஞாநீக்ஷ்வாத்மைவ உ மே மதம் ॥

(பொ-ள்.) என்பது முதலிய வாக்கியங்களால் பரமேசுரனாகிய நான் அந்தஞானியை எனதான்மரூபமாய்க்கூறினேன். அங்ஙனமே, எனதான்மரூபமானதிருமேலெனக்கவன் மிகப்பிரியன், நான் அவனுக்குப்பிரியன், அவ்வணம் ஆன்மரூபனும் அத்தியந்தப்பிரியனுமாகிய ஞானியின் யோகக்ஷேமங்களைப்பெறுவித்தலெனக்குரித்தேயாம். எல்லாப்பிராணிகளின் யோகக்ஷேமங்களையும் பரமேசுரனாகிய நானே அடைவிக்கின்றேன்; ஆன்பஞானிக்குமாத்திரமன்று; அங்ஙனமாயினும் ஏனையருக்கு முதலில் பிரயத்தனத்தைத்தோற்றுவித்து அதன் வாயிலாகவே அவர்கட்கு யோகக்ஷேமங்களை அடைவிக்கின்றேன்; முயற்சியின்றியின்றும். ஞானிக்கோ முயற்சியைத்தோற்றுவியாமலே அடைவிக்கின்றேன். இதில் இத்துணைவிசேடமாமென்க. ஒரு வியாக்கியானத்தில் யோகக்ஷேமமென்பதற்கு இவ்வாறுபொருட்படுத்தினர்:—முன்னடையாத யோகபூமியின் பிராப்தியோகமாம். முன்னடைந்தயோகபூமியைக்காத்தல் க்ஷேமமாம். மற்றுமொரு வியாக்கியானத்தில் யோகத்தினுடைய க்ஷேமம் யோகக்ஷேமம் என வேற்றுமைத்தொகையாக்கி யோகக்ஷேமமென்பதற்கு இவ்வண்ணம் பொருள்பண்ணுகின்றனர்:—நிரந்தரப்பிரஹ்மநிஷ்டையோகமாம்; அதனது க்ஷேமம் அதாவது, அத்தியான்மிக முதலியதுன்பங்களால் விச்சேதமிலாமை யோகக்ஷேமம் என்பதாம். அத்தகைய யோகக்ஷேமத்தைப் பரமேசுரனாகிய நானே எப்போதும் அடைவிக்கின்றேன் என்க.

(அ-கை.) ஹே பகவன்! பரமேசுராகிய தங்கட்கயலாய் மற்றொரு பொருளில்லை; மற்றே, எல்லாப்பொருளும் உமதுவடிவமேயாமாதலின், இந்திரன் முதலிய அன்னிய தேவதைகளும் உமது சொரூபமே, உமக்கன்னியமல ஆதலின், உமது பக்தனாகிய நான் நேரே யுன்னைப் பூசிப்பதுபோல இந்திரன் முதலிய அன்னிய தேவதைகளின் பக்தர்களும் வஸ்துகதியால் பரமேசுராகிய உம்

மையே பூஜிக்கின்றார்கள். இவ்வாற்றல் உமது பக்தர்கட்கும் அன்னிய விந்திராதி தேவதாபக்தர்கட்கும் சிறிதளவும் விசேடம் பெறப்படாமையின் அன்னிய தேவதாபக்தர்கள் மறித்துமறித்தும் போதல் வருதலையடைகின்றார்கள். அநன்யமாய்ச்சிந்திக்கும் ஞானியாகிய பக்தனைகிருதகிருத்தியனகின்றான் என மூற்கூறியருளிய தங்கள் வசனம் எங்ஙனம் பொருந்தும் என்னு மர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். யெவ்யஸ்யெவதாஹக்தா யஜந்தெ ஸ்ரத்தயான்விதாஃ।
தெவி தாஎவ களந்தெய யஜந்த்யவிதிபூவ்வகம் ॥ (23)

ப-ம். 2 யெ 4 சுவி 3 சுஸ்யெவதாஹக்தாஃ 7 யஜந்தெ 5 ஸ்ரத்தயா 6 சுந்விதாஃ
8 தெ 9 சுவி 11 தாம 12 வைவ 1 களந்தெய 13 யஜந்தி 10 சுவிதிபூவ்வகம்.

(அ-ம்.) ஹே கௌந்தேய! எவ்வன்னிய தேவதாபக்தர்களும் சிரத்தையோடு பூஜிக்கின்றார்களோ அவர்களும் அஜ்ஞானபூர்வகம் என்னையே பூஜிக்கின்றார்கள்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எனது பக்தர்கள் பரமேசுரனகிய என்னையே பூஜிப்பதுபோல, இந்திரன் முதலிய அன்னியதேவதா பக்தர்கள் ஆஸ்திக்கிய புத்திவடிவ சிரத்தையோடு சோதிட்டோம முதலிய எக்ஞங்களால் அவ்விந்திரன் முதலிய தேவதைகளைப் பூசிக்கின்றார்கள். அவர்களும் வஸ்துகதியால் அவ்வத் தேவதாவடிவமாயிருக்கப்பட்ட பரமேசுரனகிய என்னையே பூஜிக்கின்றவர்களாவர்கள். ஆனலோ, என்னை அவிதிபூர்வகமாகவே பூஜிக்கின்றார்கள். ஈண்டு, அவிதியென்பது அஜ்ஞானமாம். அவ்வஜ்ஞானபூர்வகமாயே என்னைப் பூஜிக்கின்றார்கள். அதாவது, இப்பரமேசுரனே எல்லாவற்றின் ஆன்மவடிவன் என என்னைச் சர்வான்மகமாயுணராது, இந்திரன் முதலிய தேவர்களை எனக்கன்னியமாய்க் கற்பித்து அவர்கள் என்னைப் பூஜிக்கின்றார்கள். இதனலேன அவர்கள் மறித்து மறித்தும் சன்மமரணத்தையடைகின்றார்கள் என்க. ஒரு வியாக்கியானத்தில் 'அவிதிபூர்வகம்' என்பதற்கு, அபேதபுத்திவிதியாம். அஃதிலாதான் ஆனதால் அவர்கள் வஸ்துகதியால் சர்வான்மக பரமேசுரனகிய என்னைப் பூசிப்பினும், அவர்களின் பூஜை அவிதிபூர்வகமேயாம். அபேதபுத்தி பூர்வகஞ்செய்யப்பட்ட எனது பூஜையே விதிபூர்வகமாமெனப் பொருளுரைக்கின்றனர். (23)

(அ-கை.) இப்போது ஸ்ரீ பகவான் அச்சகாமர்களின் பூஜையில் அவிதிபூர்வகத்தன்மையை விளக்குவித்து, அவர்கள் அச்சுவர்க்க முதலிய பலங்களினின்று நழுவுவார்களென்பதை அருளிச்செய்கின்றார்.

சு-ம். சுஹம் ஹி ஸவ-யஜ்ஞாநாம் ஹொக்தா அ வ்ரஹ்மெவ அ।
ந தூ ஏஎஹிஜா நந்தி தச்வெநாதஸ்த்வயவந்தி தெ ॥ (24)

ப-ம். 1 சுஹம் 7 ஹி 3 ஸவ-யஜ்ஞாநாம் 4 ஹொக்தா அ 6 வ்ரஹ்மெ 2 ஸவ 5 அ
11 ந 8 தூ 9 ஏம் 12 சுஹிஜாநந்தி 10 தச்வெந 13 சுதஃ 15 அயவந்தி 14 தெ

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனகிய நானே சர்வயக்ஞங்கட்கும் போக்தாவும் பலப் பிரதாதாவுமாவேன்; இது மிக விளக்கம். ஆனலோ அச்சகாமர்கள் பரமேசுரனகிய என்னை அவ்வடிவமாய்ப் பார்ப்பதில்லை இதனலேன அவர்கள் புனராவிருத்தியையடைகின்றார்கள். (24)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அதிகாரிகளைக்குறித்துச் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட சிரௌதஸ்மார்த்த யக்ஞங்களின் போக்தா அவ்விந்திரன் முதலிய தேவதா

வடிவபாக யானே யாகின்றேன். அங்ஙனமே, பரமேசுரனுகிய நானே அந்தரி யாமிவடிவத்தால் அதியக்ரு வடிவனுனதால் அந்த யக்ஞங்களின் பலத்தைக் கொடுப்பவனுமாகின்றேன் இது சுருதி மிருதிகளிற் பிரசித்தமாம். அத்தன்மைய பரமேசுரனுகிய என்னை அன்னிய தேவதைகளின் சகாம பக்தர்கள் அத்தத்துவ வடிவமாயறிவதில்லை; அதாவது, ஸ்ரீ பகவானுகிய இவ்வாசுதேவரே இந்திராதி தேவதாவடிவத்தால் அந்த யக்ஞங்களின் போக்தாவும், தமது அந்தரியாமிவடிவத் தால் அந்த யக்ரு பலத்தைக்கொடுப்பவருமாகின்றார். அத்தன்மைய சர்வான்ம வடிவ பரமேசுரருக்கயலாய் ஒன்றும் பூஜிக்கத்தக்கதின்றும் இவ்வாறனை அச் சகாம புருஷர்களுணர்வதில்லை. இதனுனை அவர்கள் அவ்வப்பலத்தினின்று நழுவு கின்றார்கள் அதாவது, பரமேசுரனுகிய எனது உண்மைவடிவத்தை யுணராது அச் சகாமர்கள் மிக வருத்தத்தால் அவ்விந்திராதி தேவதைகளைப் பூசிப்பினும் எமக் கர்ப்பணம் பண்ணுத காமியகருமங்களின் பிரபாவத்தால் முற்கூறிய தூமாதிமார்க் கத்தால் அவ்வத்தேவதாலோகத்தையடைந்து அதனது போகாந்தத்தில் அதி னின்றும் நழுவுகின்றார்கள். கருத்திதுவாம்:—அவ்வவ்வுலக போகங்களையுண் டாக்கும் புண்ணிய கருமபோகத்தால் நாசமடைந்தபின்னர் அச்சகாமர்கள் அவ் வத்தேவதா தேகாதிகளினின்று பிரிவடைந்தவர்களாய் மறித்தும் தேகமெடுப் பான் இம்மநுடலோகத்தையடைகின்றார்கள். எவ்வதிகாரி இந்திரன் முதலிய அத் தேவர்களிடத்தில் சர்வாந்தரியாமியாகிய பகவானையே பார்த்து அந்த யக்ஞாதி கருமங்களைச் செய்கின்றனை அங்ஙனமே, அக்கருமங்களை அந்தரியாமியாகிய பர மேசுரனுக்கே அர்ப்பணஞ் செய்கின்றனை அந்நிஷ்காம புருஷன் அவ்வுபாசனை சகித கருமங்களின் பிரபாவத்தால் முற்கூறிய அர்ச்சிராதிமார்க்கமாய்ப் பிரஹ்ம லோகத்தையடைந்து ஆண்டான்மஞானத்தைப்பெற்று அப்பிரஹ்மலோகத்தின் போகாந்தத்தில் கைவல்லியமாகிய மோட்சத்தையடைகின்றனன். இவ்வாற்றல் சகாம நிஷ்காமர்களின் பலத்தில் பெரும்பேதமாமென்க. (24)

(அ-கை.) இந்திரன் முதலிய அன்னிய தேவதைகளைப் பூஜிப்பவர்க்குப் புன ராவிருத்தியின்மைவடிவ பல மின்றேனும் அவ்வத்தேவதா பூசாநுசாரமாய் அவ் வற்பபலப் பிராப்தி அவசியமுண்டாம் என்னு மர்த்தத்தைக்கூறி நேரே பரமே சுரனைப் பூசிக்கும் பக்தர்கட்கு அவர்களினின்றும் விலக்ஷணத்தன்மையை அரு ளிச்செய்கின்றார்.

சு-ம். யாஞ்சி தெவவ்ரதாதெவாந்ரு விதயந்ரயாஞ்சி விதயவ்ரதாஃ।
ஹுமதாநி யாஞ்சி ஹுமதெஜயா யாஞ்சி உயாஜிநொஷி உழ ॥ (25)

ப-ம். 3 யாஞ்சி 1 தெவவ்ரதாஃ 2 தெவாந்ரு 5 விதயந்ரு 6 யாஞ்சி 4 விதயவ்ரதாஃ
8 ஹுமதாநி 9 யாஞ்சி 7 ஹுமதெஜயாஃ 13 யாஞ்சி 10 உயாஜிநஃ 12 சுவி 11 உம.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! தேவதைகளைப்பூஜிப்பவன் அவர்களையேயடை வன். பிதிர்க்களைப் பூஜிப்பவன் அவர்களையேயடைவன்; பூதங்களைப் பூஜிப்பவன் அவர்களையேயடைவன்; பரமேசுரனுகிய என்னைப் பூஜிப்பவன் என்னையேயடை வன. (25)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அந்தக்காரணவடிவ வுபாதியின் முக்குணத்தால் அவிதி பூர்வகம் பூஜிப்பவர்களும் சாத்துவிக முதலிய பேதங்களான் மூவகைப் படுவர்கள். அவற்றுள், இந்திரன் முதலிய தேவதைகட்குப் பலிப்பிரதானம் பிர தக்ஷிணை நமஸ்காரமுதலிய பூசைவடிவ விரதமுடையவர்கள் தெய்வவிரதிகள். அவ்விந்திரன்முதலிய தேவதைகளையே அடைகின்றார்கள் அவர்கள் சாத்துவிகர்க ளெனப்படுவர்கள். சிராத்தமுதலிய கருமங்களால் பிதிர்க்கட்கு ஆராதனபண்ணு

பவர்கள் பிதிருவிரதர்கள் அவர்கள் அப்பிதிர்க்களையே அடைகின்றார்கள் அவர்கள் ராஜஸரெனப்படுவர்கள். யக்ஷராக்ஷச விநாயகமாதிருகணம் முதலியவைகளைப்பூஜிப்பவர்கள் பூத பூஜகர்களாவர்கள். அவ்வாறு பூஜிப்பவர் அப்பூதங்களையே அடைவார்கள் அவர்கள் தாமதர்களெனப்படுவர்கள். இத்துணை கூறியதால் பரமேசுரனுக்கன்னியமான தேவதாராதனத்திற்கு அவ்வத்தேவதா சொரூபப் பிராப்திவடிவ அநித்திய பலங்கூறப்பட்டது. இப்போது பரமேசுர ஆராதனத்திற்குப் பரமேசுரப் பிராப்திவடிவ நித்தியபலத்தை அருளிச்செய்கின்றார். 'யாந்தி மத்யாஜினோபிமாம்' என. அர்ச்சுன! பரமேசுரனுகிய என்னைப் பூஜிக்கு மியல்புளோன் மத்யாஜியாவன் அதாவது, எவன் இந்திரன் முதலிய சர்வ தேவதைகளிடத்தும் பரமேசுரனுகிய என்னையே வியாபகமாய்ப்பார்த்து இடைவிடாதென்னையே யாராதிக்கின்றானே அந்த எனதன்பன் என்னையே யபேதமாயடைவான். எவன் எதை ஆராதிக்கின்றானே அவன் அப்பாவத்தையே யடைகின்றன் இது சுருதியிலுங் கூறப்பட்டுளது.

தெயஸ்ய யொவாஹ தெத ஒவஹவதி।

(போ-ள்.) எவன் எத்தேவதையை உபாசிக்கின்றானே மரணத்தின்பின்னர் அவன் அவ்வத்தேவதா பாவத்தையே அடைகின்றன் என்பதாம். ஈண்டிது பசுவானது கருத்தாம்:—பரமேசுரனை ஆராதிப்பதிலும் இந்திரன் முதலிய அன்னிய தேவதைகளை ஆராதிப்பதிலும் ஆயாசஞ் சமமாயினும் நித்திய பலத்தைத் தரத்தக்க அந்தர்யாமியாகிய பரமேசுர ஆராதனத்தைத்தள்ளி அன்னியமான இந்திரன் முதலிய தேவதைகளை யாராதித்து அநித்திய பலத்தையேயடைகின்றார்கள்; ஆதலின் இவ்வஞ்ஞானிகளின் துரதிருஷ்டத்தின் பிரபாவம் ஆச்சர்யவடிவமாம் அதன் பிரபாவத்தால் இவ்வஞ்ஞானிகள் மோட்சத்தைத்தரும் பரமேசுர ஆராதனத்தைத் தள்ளிவிட்டு அநித்திய பலத்தைக்கொடுக்கும் இந்திராதி தேவதாராதனத்தைச் செய்கின்றார்கள். (25)

(அ-கை.) ஆதலின் பரமேசுரனுக் கன்னியமான தேவதைகளைவிடுத்து இவ்வதிகாரி பரமேசுர ஆராதனமே செய்யற்பாலது. அஃதிவனுக்கு நித்தியமான மோட்சபலத்தைக் கொடுக்கின்றதன்றே? அன்றியும் அன்னியதேவதா ஆராதனத்தில் இவனுக்குத் திரவியச்செலவு முதற்கொண்டு எத்துணைத்துன்பமுண்டோ அத்துணை யாந்தை பரமேசுர ஆராதனத்திலுண்டாவ தில்லை; மற்றோர், இது மிகச்சுலபமாமென்பதை ஸ்ரீ பகவானருளிச்செய்கின்றார்.

சு-ம். வதோ வாஷம் மறுஞ்ஞொயம் யொ மெ ஹக்தயா வ்யயஹதி।
தத்ஹம் ஹக்தயுவஹ்ருத உபாஹி வ்யதாத்மநஸ்॥ (26)

ப-ம். 4 வதோ 5 வாஷம் 6 மறும் 7 தொயம் 1 யஸ் 2 மெ 3 ஹக்தயா 8 வ்யயஹதி
10 தத் 12 சுஹம் 11 ஹக்தயுவஹ்ருதம் 13 சுபாஹி வ்யதாத்மநஸ்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவன் பரமேசுரனுகிய எனக்கு அன்போடு பத்திரத்தையேனும், புஷ்பத்தையேனும், பலத்தையேனும், சலத்தையேனும் கொடுக்கின்றானே அந்தச் சுத்தபுத்தியுடையோன் அன்போடர்ப்பித்த பத்திர புஷ்பாதிகளைப் பரமேசுரனுகிய நான் ஏற்றுக்கொள்கின்றேன். (26)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பத்திரம் புஷ்பம் பலம் தோயமுதற்கொண்டு பிரயத்தனமிலாது மிகவுமெளிதாய்க் கிடைக்கும் சுலபமான வஸ்துக்களில் யாதானுமொருபத்திர புஷ்பபல முதலியவைகளை யாவன் பேரைசுவரியமுடைய எனக்கு அன்போடளிக்கின்றானே அதாவது பரமேசுரனுக்குமேல் மற்றொன்றுமில்லை

யென்னும் புத்தி பூர்வக நிரதிசயப் பிரீதியோடு எவன் அடிமையணைப்போலப் பரமேசுரனுகிய எனக்கு அப்பொருளை அர்ப்பணம் பண்ணுகின்றானே; கருத்திதுவாம்:—மகாராசனது ராச்சியத்திலுள்ள பொருள்களனைத்தும் வஸ்துகதியால் அம்மகாராசனதேயாம் அப்பொருள்களையே அடிமைக்காரர்கள் அன்போடு அர்ப்பணஞ்செய்கின்றார்கள் அதனல் அம்மகாராசாவானவர் சந்தோடத்தையடைவதுபோல உலகத்திலுள்ள பதார்த்தங்களனைத்தும் பரமேசுரனுகிய என்னுடையதேயாம். இவ்வுலகத்தில் என்னுடையதல்லாததொரு பொருளில்லை அத்தன்மைத்தாய எனக்கு எவர்களன்போடு எனது பதார்த்தத்தையே அர்ப்பணஞ்செய்கின்றார்களோ அச்சுத்த புத்தியுடையோர்கள் அன்போடளித்த பத்திர புஷ்பமுதலியவைகள் மிகவுமற்பமேனும் நான் உண்பேன். அதாவது, ஒருவன் அன்னமுண்டு திருப்தியடைவதுபோலப் பரமேசுரனுகிய நானும் அப்பத்திரமுதலிய பதார்த்தங்களை அன்போடேற்றுக்கொண்ட மாத்திரத்தானே திருப்தியடைவேன். ஈண்டு, 'சுஹ்ருதி' 'உண்கின்றேன்' என்னும் பதத்திற்கு முக்கியார்த்தமாகிய போஜனகருத்திருத்துவத்தைவிட்டு அப்பதத்திற்கு இலக்கணை விருத்தியால் அன்போடு சுவீகருத்திருத்துவத்தைக்கொண்டது பிரீதி யதிசய காரணத்தை யறிவுறுத்தற்பொருட்டு அதாவது, அன்போடர்ப்பணஞ்செய்த பத்திர புஷ்பாதிகளின் சுவீகாரமாத்திரத்தானே நான் மிகப்பிரசன்னனுகின்றேன். சுருதியிலும் தேவதைகளுக்கு மநுடரைப்போலப்போசன கருத்திருத்தன்மை நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது. இதனனும் 'சுஹ்ருதி' என்னும் பதத்திற்கு சுவீகாரார்த்தத்தில் லட்சணை பண்ணுவதுரித்தாம்.

ஆ-சு. ஸுஹவெ ஜெவா சுஹ்ருதி ஸுவிஹ்ருதி ।
வனதெவா ஊதம் ஊஷா தாவ்ருதி ॥

(பொ-ள்.) மநுஷ்யர்கள் அன்ன முதலிய பொருள்களை யுண்ணுவதுபோலும் தண்ணீர் முதலியவைகளைக் குடிப்பதுபோலும் தேவதைகள் அன்னமுதலியவைகளை யுண்ணுவதும் நீர் முதலியவைகளைக்குடிப்பதுமிலை; மற்றேரு, அவர்கள் அமிருத சரிசனமாத்திரத்தானே திருப்திபடைவர்களென்பதாம். ஹே பகவன்! தாங்கள் சாகூடாத் பரமேசுரனுயிருந்தும் அத்தன்மைய பத்திர புஷ்பமுதலிய வற்ப வஸ்துவைச் சுவீகாரம்பண்ணுவதற்குக்காரணம்? மகத்புருஷர்கட்கு மகத்தாம் பொருளைச்சுவீகாரம்பண்ணுமேலயுரித்தாம் என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு அதிற் காரணமருளிச்செய்கின்றார். 'ஸுஹ்ருதவஹ்ருதம்' என, அவைகளற்பமாயினும் அவர்கள் மிகவன்போடெனக் கர்ப்பித்தமையின் நான் அவைகளை மகத் பொருளென ஏற்றுக்கொள்கின்றேன். அதாவது, அப்பொருளை யேற்றுக்கொள்வதில் சௌகர்யத்தன்மை முதலியன காரணமன்று, மற்றேரு, போன்போ காரணமாம் என்க. ஈண்டு, 'ஸுஹ்ருத வ்ரயஹ்ருதி' என்னும் வாக்கியத்தில் பக்தியை யருளிச்செய்து 'ஸுஹ்ருதவ ஹ்ருதம்' என்னும் வாக்கியத்திலும் மீண்டும் பக்தியை அருளிச்செய்தது இப்பொருளைக்குறிப்பித்தற்காம்:—பிராமணனும் பெருந்தவனுமிருந்தும் எனது பக்தியின்றியவன் பெரும்பொருளை யர்ப்பணம் பண்ணினும் நானதை யேற்றுக்கொள்ளேன் ஆதலின், பரமேசுரனுகிய என்னுலாக்கப்பட்ட பொருளை யேற்றுக்கொள்வதில் பிராமணன் முதலிய உத்தமசாதியும் தவமும் காரணமன்றும்; மற்றேரு, அர்ப்பணஞ்செய்வோனது போன்போ காரணமாமென்க. அல்லது, மிகவுமன்போடு தாய் கொடுத்தபொருளைப் பாலகன் உண்ணத்தக்கதுதகாதது என்னும் விசாரமின்றி உண்ணுமாறுபோல, அன்பர்கள் போன்போடர்ப்பணஞ்செய்த உண்ணத்தக்கதகாதவஸ்துக்களின் ஞானமுடையநானும் அவர்களன்போடர்ப்பணஞ்செய்த பத்திர புஷ்பாதிகளை எனது லீலாவதாரத்தால் நேரே

யுண்கின்றேன். ஸ்ரீதாமப்பிராஹ்மணர் போன்போடளித்த தண்டுலத்தையும், சபரால் போன்போடு கொடுக்கப்பட்ட பதரிப்பலத்தையும் யான் உண்ணுதாழித்தேனே! ஆதலின், கேவலம் அநன்ய பக்தியே எனது சந்தோஷகாரணமாம். ஏனைய இந்திரன் முதலிய தேவதைகளைச் சந்தோஷப்படுத்துவதில் பெரும்பொருட்செலவு தேகவருத்தம் முதலியன காரணமாபோல, என்னைச் சந்தோஷப்படுத்துவதில் அக்காரணங்கள் அவசியாபேட்சிதமன்று; மற்றும், கேவலம் பக்தியொன்றே அபேட்சிதமாமாதலின் அதிகாரிகள் வேறு தேவதைகளைவிடுத்துப் பரமேசுரனுகிய என்னை யொருவனையே ஆராதிக்கவேண்டுமென்பதாம். ஒரு வியாக்கியானத்தில் பத்திரம் புஷ்பம் என்னு மிச்சுலோகத்திற்கு இவ்வாறு பொருள்படுத்துகின்றனர்:—

ஆ-சு. ஒ॒ம்வெ வாஹ॒ ஒவ ஹ்ய அயுஜ்ரா அயுஜவத ।
அயும் ஹ்ருயாஹி நொ॒ம்வஜதயும் வ்ருதிராஹிகழ ॥

(போ-ள்.) பரமேசுரனுகிய வாசுதேவனுக்குச் சல மசலம் என இரண்டு ரூபங்களாம். அவற்றில் சந்தியாதியோ சல ரூபமாம், சாளிக்கிராமமுதலிய பிரதிமைகள் அசலரூபமாம் என்னுமிச்சாத்திரவாக்கியத்தில் சந்தியாதியும் சாளிக்கிராமமுதலிய பிரதிமைகளும் பரமேசுரனது சொரூபமெனக் கூறப்பட்டிருக்கின்றன. அன்றியும் 'ஸஹ்யாத்ரஃ வ்யம்விஷ்ணு' உண்ணும்போது மணக்கண்வந்த அதிதி சாட்சாத் விஷ்ணுரூபமாமென்க. இம்மிருகியிலும் அதிதியை விஷ்ணுவெனக் கூறப்பட்டிருக்கின்றதாதலின், அதிகாரியானவன் சாளிக்கிராமத்திற்கேனும்பிரதிமைக்கேனும் அன்போடு என்பொருட்டு அர்ப்பணஞ்செய்பவேணும். அவ்வாறு அர்ப்பித்ததை நானேற்றுக்கொள்வேன். அல்லது, எவன் உண்ணும்போது மணக்கண்வந்த அன்னம் வேண்டுமதிதிக்குச் சாகம் பல முதலிய எதையுண்கின்றேனே அதை அன்போடு கொடுக்கின் அவன் அன்போடளித்த அப்பத்திர புஷ்பபலாதிகளை அதிதி முகத்தால் நேரே நானே யுண்கின்றேன் என்க. (26)

(அ-கை.) ஹே பகவன்! எப்பூஜையால் தாங்கள் பிரசன்னராவீர்களோ அப்பூஜை எவ்வாறு செய்யற்பாலதாம்? என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவானருளிச்செய்கின்றார்.

சு-ம். யத்கரொஷி யதஶ்நாஸி யஜ்ஜுஹொஷி ததாஸி யத ।
யத்தபஸ்யஸி கௌந்தெய தத்குருஷ்வ மதர்பணம் ॥ (27)

ப-ம். 2 யத் 3 கரொஷி 4 யத் 5 அஶ்நாஸி 6 யத் 7 ஜுஹொஷி 9 ததாஸி 8 யத் 10 யத் 11 தபஸ்யஸி 1 கௌந்தெய 12 தத் 14 குருஷ்வ 13 மதர்பணம்.

(அ-ம்.) ஹே கௌந்தெய! நீ யாது செய்கின்றனையோ, யாது உண்ணுகின்றனையோ, எவ்வேளமஞ் செய்கின்றனையோ, எத்தானம் பண்ணுகின்றனையோ, எத்தவம் பண்ணுகின்றனையோ, அவ்வனைத்தையும் எனதர்ப்பணமாய்ச் செய்குதி.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! நூலாக்ஞையின்றிக் கேவலம் ராகத்தால் வந்த கமனாகமனவடிவ எந்த லௌகிக கருமத்தை நீ செய்கின்றனையோ அங்ஙனமே, எனது திருப்தியின்பொருட்டேனும் கருமசித்தியின்பொருட்டேனும் எவ்வனத்தை யுண்கின்றனையோ, சாஸ்திரபலத்தால் எந்த நித்திய அக்கினிஹோத்திர முதலிய ஹோமத்தைச் செய்கின்றனையோ ஈண்டு 'ஜுஹொஷி' என்னும் ஹோமவாசகபதமானது சிரௌதஸ்மார்த்த சர்வ ஹோமங்கட்கும் உபலக்ஷணமாம்.

அதாவது, சிரௌதஸ்மார்த்த எத்துணை ஹோமம் நீ செய்கின்றனையோ, அதிதி பிராஹ்மணன் முதலியோர்கட்கு எந்த அன்ன சுவர்ணமுதலிய பதார்த்தங்களைக் கொடுக்கின்றனையோ ஒவ்வொருவருடத்திலும் அறியாமலும் மயங்கியுஞ் செய்யப் பட்ட பாபநிவிருத்தியின்பொருட்டு எந்தச் சாந்திராயணமுதலிய தவஞ்செய்கின் றனையோ அல்லது, இச்சைப்படியுண்டாம் பிரவிருத்தியை நிவிருத்திப்பான் தேதேகந்திரிபாதிகளையடக்கும் வடிவ எந்தத்தவத்தைச் செய்கின்றனையோ, இத் தவம் சர்வ நித்திய நைமித்திககருமங்கட்கு முபலக்ஷணமாம். அக்கருமங்களனைத் தையும் பரமேசுரனுகிய எனக்கர்ப்பணஞ் செய்குதி. அதாவது, பிராணியின் சுபாவ வசத்தால் சாஸ்திரமின்றி அவசியஞ் செய்பத்தக்க போதல்வருதல் முதலிய லௌகிக கருமங்களையும் சாஸ்திர பலத்தால் அவசியஞ் செய்பத்தக்க ஹோமதான முதலிய கருமங்களையும் வேறு நிமித்தத்தாற் செய்யப்படு மிவ்விருவித கருமங்களை யும் பரமேசுரனுகிய எனக்கர்ப்பணமாம்வண்ணமே செய்குதி. ஈண்டு, 'கௌந்தேய' என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் இப்பொருளைக் காண்பித்தனர்.—இவ்வண மெவன் சர்வ கருமங்களையும் பரமேசுரனுகிய எனக்கர்ப்பணஞ்செய்கின்றனை அவ னுக்கு மோட்சவடிவபலம் பிராப்தியேயாகும்; அதனல் எனக்குச் சிறிதளவும் பலனுண்டாவதில்லையென்க. இதனலிப்பொருள் பெறப்பட்டது:—அவசியஞ்செய் யத்தக்க கருமங்களைப் பரமகுருசொரூப பரமேசுரனுகிய எனக்கு அர்ப்பணஞ் செய்தலே எனதாராதனையாம். அதில் மற்றொரு தொழிலும் வேறுய்ச் செய்யத் தக்கதின்றுமென்க. (27)

(அ-கை) இப்போது கூறிப்போந்த ஆராதனையின் பலத்தை அதிகாரிகளை யாராதனத்தில் முயலுவிப்பான் ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஶுபாஶுபலைரேவம் மொக்ஷ்யஸே கர்மபந்தனை: ।
ஸந்யாஸயோகயுக்தாத்மா விமுக்தோ மாமுபைஷ்யஸி ॥ (28)

ப-ம். 2 ஶுபாஶுபலைஃ 1 ஸவம் 4 மொக்ஷ்யஸே 3 கர்மபந்தனை:
5 ஸந்யாஸயோகயுக்தாத்மா 6 விமுக்தஃ 7 மாம் 8 உபைஷ்யஸி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அத்தன்மைய ஆராதனையையுடைய நீ இஷ்டா நிஷ்டபலமுடைய கருமவடிவ பந்தங்களினின்று விடுபடுவாய். அங்ஙனமே சந்நி யாச யோகயுக்தான்மாவாகிய நீ அக்கருமபந்தங்களினின்று விமுக்தனுய்ப் பரப் பிரஹ்மமாகிய என்னையே யடைவாய். (28)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! கூறிப்போந்தவகையால் ஆயாசமின்றியே சித்த மாகும் சர்வ கருமங்களையும் எனதர்ப்பணமாக்கல்வடிவ எனதாராதனையை யடைந்த நீ இஷ்டாநிஷ்டபலங்களையுடைய கருமபந்தனவடிவ லௌகிகவைதிக கருமங்களினின்று நீங்குவை; அதாவது, அச்சர்வ கருமங்களும் எனக்கர்ப்பண மானதால் உனக்கதனேடு சம்பந்தம் பொருந்தாதாதலின் அக்கருமங்களானும் அத னுடை இஷ்டாநிஷ்ட பலங்களானும் நீ சம்பந்தியாகமாட்டாய்; அதன்பின்னர் சன்னியாசயோக யுக்தனுகிய நீ; ஈண்டுச் சர்வகருமங்களையும் பரமேசுரனுக் கர்ப் பணம்பண்ணல் சந்நியாசமாம்; அதுவே யோகம்போலச் சித்தசாதகமானதால் யோகரூபமாம்; அத்தன்மைய சன்னியாச யோகயுக்தனென்பது சோதிக்கப்பட்ட ஆன்மாவெனு மந்தக்காரணமுடையோன் சன்னியாசயோகயுக்தான்மாவாம்; அல் லது, அச்சந்நியாசயோகத்தில் யுக்தன் என்பது ஆசக்தாந்தக்காரணமுடையனுவன்; அல்லது, பலத்தோடு சர்வ கருமங்களின் தியாகம் சந்நியாசமாம், அச்சந்நியாச யோகத்தோடுகூடிய மனமுடையோன் சந்நியாசயோக யுக்தான்மாவாம்; அத் தன்மையனுய்ச் சுவித்திருப்பினும் அக்கருமவடிவபந்தங்களினின்று விடுபட்டவனு

கிய நீ ; என்னையே யடைவாய். அதாவது, சம்யக்தரிசனத்தால் அஞ்ஞானவடிவ ஆவரணத்தை நிவிருத்தித்துப் பரப்பிரஹ்மமாகிய என்னை 'நான் பிரஹ்மமாகின்றேன்' எனச் சாக்ஷாத்கரிப்பாய். அதன்பின்னர்ப் போகத்தால் பிராரத்தகருமநாசமாயித்தேதகம் விழவே விதேதகைவல்லியவடிவ பரப்பிரஹ்மமாகிய என்னையடைவாய். நிகழ்காலத்தும் பரப்பிரஹ்மமாகிய எனது சொரூபஞ்சர்வோபாதிகளினிவிருத்திபால் மாயையாலான பேதவியவகாரவிடயமாகாய். (28)

(அ-கை.) ஹே பகவன்! நீரும் உமதன்பர்கட் கநுக்கிரகம்பண்ணி அன்பிலார்க்குச் செய்யாதொழிவீரேல் எம்மைனர்களைப்போல ராகத்துவேஷங்களையுடையாதலின் பரமேசுராதல் யாங்ஙனமாம்? மற்றீரு, எம்மைனர்களைப்போல நீருமொரு சீவவிசேஷராகுதிர் என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிசெய்கின்றார்.

சு-ம். ஸஹொஹம் ஸவ-ஹ்மதெஷு ந ெ ஷ்வெஷ்யாஹி நவி யஃ।
யெஹஜந்தி தூ ஸாம் ஹக்தயா மயி தெதெஷு அாவ்யஹம் ॥ (29)

ப-ம். 3 ஸஃ 1 ஸுஹம் 2 ஸவ-ஹ்மதெஷு 6 ந 4 ெ 5 ஷ்வெஷ்யஃ 7 ஸுஹிஃ 9 ந 8 வ்ரியஃ 11 யெ 14 ஹஜந்தி 10 தூ 12 ஸாம் 13 ஹக்தயா 17 மயி 15 தெ 20 தெஷு 16 அ 19 ஸுவி 18 ஸுஹம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனாகிய நான் சர்வப் பிராணிகளிடத்தும் சமானனாதலின், ஒரு பிராணியும் எனக்குத் த்வேஷ விஷயமும் ப்ரீதிவிஷயமுமின்றேனும், எவன் என்னை அன்போடு சேவிக்கின்றானோ அவனை என்னிடத்துள்ளான்; நானுமவனிடத்திலேயுளேன். (29)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனாகிய எனது பக்தாபக்தர்களனைவரிடத்தும் நான் சமானனே அதாவது, பரமேசுரனாகிய எனக்குச் சுபாவிகம், உபாதியாலாயது என இருவகை வடிவங்களுண்டு. அவற்றுள், சச்சிதானந்தமூன்றும் எனது சுபாவிகவடிவமாம். அந்தரியாமித்தன்மை யுபாதியாலாயதாம். சுபாவிகமான சச்சிதானந்தவடிவங்களால் அப்பிராணிகளனைத்திலுஞ் சமானன், உபாதிபாலாகிய அந்தரியாமிவடிவத்தாலுஞ் சமானன், இதனாலே ஒரு பிராணியும் எனக்குத் த்வேஷவிஷயமும் ப்ரீதிவிஷயமுமன்றும். வானமண்டலத்தில் வியாபகமாகிய இரவியொளிக்கு ஒரு பொருளிலும் விருப்பு வெறுப்பின்றும்; மற்றீரு, யாண்டுஞ் சமானமாவதுபோலாம். ஹே பகவன்! ஒரு பிராணியிடத்தும் உமக்கு விருப்பு வெறுப்பின்றேல் உமது பக்தாபக்தர்களிடத்துப் பல விஷமத்தன்மை எவ்வாறும்? என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அதிற்காரணமருளிச்செய்கின்றார். 'யெஹஜந்தி' என, அர்ச்சுன! எவர்கள் சர்வ கருமங்களையும் பரமேசுரார்ப்பணம் பண்ணல் வடிவ பக்தியால் என்னைச் சேவிக்கின்றார்களோ அவர்கள் சிரேஷ்டர்களாவர்கள். ஈண்டு, 'யெஹஜந்திதூ' என்பதிலுள்ள 'து' சத்தமானது அபக்தர்களைபேட்சையால் பக்தர்களின் விசேஷத்தன்மையை அறிவுறுத்தற்பொருட்டாம்; அவ்விசேடத்தன்மையாதாமெனின் அருளுகின்றார் 'மயிதெதெஷு ஸாவ்யஹம்' என. அர்ச்சுன! எனக்கர்ப்பணம்பண்ணிய நிஷ்காமகருமத்தால் எவன் சுத்தாந்தக்கரணமுடையனோ அவனை என்னிடத்திருக்கின்றான்; அதாவது ராஜாதமங்களொழிந்து சத்துவ குணமிகுந்ததால் மிகவும் சுவச்சமாகிய அந்தக்கரணவிருத்திபைப் பரமேசுரனாகிய எனதாகாரமாய் உபநிஷத் பிரமாணத்தாலுண்டுபண்ணிய பக்தர்களை என்னிடத்திருக்கின்றார்கள். அபக்தர்கள் என்னிடத்திவ்வாறிரார்கள். பரமேசுரனாகிய நானும் அந்தப் பக்தர்களிடத்திலிருக்கின்றேன்; அதாவது

நானும் அவர்களுடைய சுவச்சமாகிய அந்தக்காணவிருத்தியிற் பிரதிவிம்பிதனுகி அவர்களிடத்திருக்கின்றேன்; என்னை, இவ்வுலகத்தில் யாது யாது சுவச்சத்திரவியமோ அதுவதற்கு இது சுபாவமேயாம்:—எப்பொருளோடு அதற்குச் சம்பந்தமுண்டாகின்றதோ அப்பொருளாகாரத்தை அது தன்னிடத்திழுத்துக்கொள்ளல். அச்சுவச்சத்திரவியத்தோடு சம்பந்தமுடையவை எவ்வெப்பொருள்களோ அப்பொருள்கட்கு மிதுவே சுபாவமாம்; அச்சுவச்சத்திரவியத்தினிடத்தில் பிரதிவிம்பத்தன்மையையடைதல். அன்றியும், சுவச்சமிலாத்திரவியங்கட்கும் அதனேடு சம்பந்தமான பொருள்களுக்கும் அவ்வாகாரத்தைக் கிரகியாததும் அதிற் பிரதிவிம்பபாவத்தையடையாததுமேசுபாவமாம். இரவியொளியானது எவ்விடத்துஞ் சமமேனும் சுவச்சமாகிய தர்ப்பணமுதலியவைகளிலே விளக்கமாகின்றது. சுவச்சமிலாத கடமுதலியவைகளிலின்று இத்துணையானே அப்பிரகாசத்திற்கு தர்ப்பணத்தில் ராகமும் கடாதிகளிடத்தில் துவேஷமும் சித்தமாவதில்லாததேபோலப் பரமேசுரனுகிய நான் எல்லாவிடத்துஞ் சமமாயினும் பக்தர்களின் நின்மலாந்தக்காணத்தில் விளக்கமாகின்றேன்; அபக்தர்களின் மலினந்தக்காணத்தில் விளக்கமாகிலேன். இத்துணையானே எனக்குப் பக்தர்களிடத்து ராகமும் அபக்தர்களிடத்துத்துவேஷமும் சித்தியாதாமாதலின், பரமேசுரனுகிய என்னிடத்திற் சிறிதளவும் விஷமத்தன்மையின்றும். கருத்திதுவாம்.—இராகத்துவேஷங்களின்றியதாயினும் அக்கினியானது தன்னிடத்தில் நெருங்கியிருப்போர்களின் சீதத்தை நீக்குகின்றது. நெருங்காதோர்களின் சீதத்தை நிவிருத்திப்பதில்லை. அங்ஙனமே இராகத்துவேஷங்களின்றிய கற்பகவிருக்ஷமும் தஞ்சமணுகினோர்க்கு மனதிலிச்சித்தபொருளைக்கொடுக்கின்றது அணுகாதோர்க்கில்லை. இத்துணையானே அக்கினியிலும் விருக்ஷத்திலும் விஷமதோஷப் பிராப்தியாகாதவாறேபோல, இராகத்துவேஷங்களின்றிய பரமேசுரனுகிய நானும் சரணுகதமான பக்தர்களின் பந்தத்தையே நிவிருத்திப்பேன் ஏனையோர்களின் பந்தத்தை நிவிருத்தியேன் இத்துணை மாத்திரத்தால் என்னிடத்தில் விஷமதோஷப் பிராப்தியின்றும் என்க. (29)

(அ-கை.) எவ்விடத்துஞ் சமானமாகிய என்னிடத்தில் விஷமத்தன்மையைக் காட்டுவது பரமேசுரனுகிய எனது பக்தியின் பிரபாவமாம். அப்பக்தியின் பிரபாவத்தை நீ கேளுந்தி.

சு-ம். ஸுவி தெஷ்வு॒ரோஅாஸொ ஹஜதெ ஸஅநயஹாக்ஷி।
ஸாய॒ரெவ ஸ உஜ்ஜவ்யஃ ஸஃயுவ்யவஹிதோ ஹி ஸஃ ॥ (30)

ப-ம். 2 ஸுவி 3 தெஷு 1 ஸ॒ரோஅாஸஃ 6 ஹஜதெ 5 ஸாம் 4 ஸஅநயஹாக்ஷி 8 ஸாய॒ 9 ஸவ 7 ஸஃ 10 உஜ்ஜவ்யஃ 13 ஸஃயுக்ஷி 14 வ்யவஹிதஃ 11 ஹி 12 ஸஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஒருவன் மிகவும் துராசாரமுடையவனுயினும் அநன்யசித்தனுய்ப் பரமேசுரனுகிய என்னை ஆராதிப்பனேல் அவன் சாதுவேயென மதித்தல்வேண்டும்; அவன் உள்ளவாறு நிச்சயமுடையோனுதலின். (30)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! யாரேனுமொருவன் அஜாமிளாதிகளைப்போல முற்றுந்துராசாரமுடையனுயினும் பூர்வ புண்ணியாதயத்தால் அநன்ய சித்தனுய் என்னை யாராதிப்பனேல் அவன் முன்னர் அசாதுவாயினும் அப்போது சாதுவென்றே கொள்ளவேண்டும். எதனுலவன் அக்காலத்தில் இனிய நிச்சயமுடையோனுவனே ஆண்டுத் துராசாரமுடையவனும் பரமேசுரனதாராதனத்தால் சாதுவேயாவன் என்பது அன்னிய சாஸ்திரத்திலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. சுதிவாவ வ்ரஹகொவி யூய நிஷி உஅ்ரூதம் ।
ஹூய ஷுவஷீ ஹவதி வம்க்திவாவநவாவநஃ ॥ (1)

வ்ராயஶ்சித்தா நயஸொஷாணிதவஃ கூஶா-உதிகாநி வெ ।
யாநி தெஷா உஸொஷாணாம் கூஷ்ணா நா ஸ்மரணம்வரு ॥ (2)

(போ-ள்.) அத்தியந்த பாவகருமத்திலுழ்ந்தினவனும் ஆன்ய சித்தனுய் ஒரு கணப்போது என்னையாராதிப்பனேல், அதன் பிரபாவத்தால் சர்வ பாபமற்ற வனுகி மீண்டுந்தவசுடையனுகின்றன். பாப மலத்தைச் சுத்தம்பண்ணும் சதா சாரமுடையவர்களையும் தனது தரிசனத்தால் சுத்தம் பண்ணுகின்றவனுமாகின் றன். அல்லது, பாவநிவிருத்தியின்பொருட்டுத் தருமசாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட கிருச்சிர அதிகிருச்சிர மஹாகிருச்சிர சாந்திராயணமுதலிய பிராயச்சித்தங்க ளனைத்தினும், வாஜபேய ராஜசூய அசுவமேத யஞ்ஞமுதலிய கருமரூபப் பிராயச் சித்தங்களனைத்தினும் ஸ்ரீ கிருஷ்ணபகவானது ஸ்மரணமேலானதாமென்க. கருத் திதுவாம்:—அக் கிருச்சிரமுதலிய பிராயச்சித்தங்கள் எவ்வெப்பாவ நிவிருத்தியின் பொருட்டுச் செய்யப்படுகின்றதோ அவ்வப்பாவத்தையே நிவிருத்திக்கும்; ஆனய பாவத்தையகற்றுது. இப்பரமேசுர ஸ்மரணமோ! நூறுகோடி. கற்பங்களின் பாவத்தையும் நாசம்பண்ணும். இது பிறநூலினுங்கூறப்பட்டுளது.

ஆ-சு. சுஹம் ப்ரஹதி ஶாஂயா யதெகா ம்ரஹஸா வகூரு ।
வவ-ஂதாஜி வாவாஹம் கரு கொடிஶதெஃ கூதம் ॥

(போ-ள்.) எவன் ஒருமைப்பட்டமனத்தால் ஒருதாம் யான் பிரஹ்மசொரூ பம் என அபேதமாய் என்னைச் சிந்திக்கின்றனே அவன் நூறுகோடி. கற்பத்திற் செய்யப்பட்ட சர்வ பாவங்களையு நாசஞ்செய்கின்றன் என்பதாம். (30)

(அ-கை.) ஆண்டு அநன்ய சித்தனுய்ப் பரமேசுரனை ஸ்மரித்தலே மோட்ச சாதனம் என்னுந் திடநிச்சயத்தால் அவன் முந்திய துராசாரங்களை நீக்கிச் சீக் கிரமே தருமான்மாவாகின்றன், என்பதை ஸ்ரீ பகவான் இப்போதருளிச் செய் கின்றார்.

சு-ம். கூதிவ்ரஂ ஹவதி யஶ-உதா ஶஶ்வ ஹ்ஹாஂதிஂ நிஂமஹ்ஹதி ।
கௌந்தெய ப்ரதிஜாநீஹி ந மெ ஹக்தஃ ப்ரணஶ்யதி ॥ (31)

ப-ம். 1 கூதிவ்ரஂ 3 ஹவதி 2 யஶ-உதா 4 ஶஶ்வகூ 5 ஶாஂதிஂ 6 நிஂமஹ்ஹதி 7 கௌ ந்தெய 12 ப்ரதிஜாநீஹி 10 ந 8 மெ 9 ஹக்தஃ 11 ப்ரணஶ்யதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அவன் சீக்கிரமே தருமான்மாவாகின்றன் நித்திய சாந்தியையுமடைகின்றன்; கௌந்தேய! எனது பக்தன் நாசமாகானென நீ பிர திஜ்ஞை செய்குதி. (31)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! முன்னர்ப் பல்காலம் அதர்மான்மாவானவனும் பர மேசுரனுகிய எனது பஜனையின் பிரபாவத்தால் சீக்கிரமே தருமான்மாவாகின் றன்; அதாவது, அவன் அவ்வாராதனையின் பிரபாவத்தால் முந்திய துராசாரத் தன்மையை விடுத்துத் தருமத்திற் பிரீதியுடையவனுகின்றன். அல்லது, எனதன்ப னுகிய அவனுக்குக் கேவலம் இத்துணைப்பலமன்று, மற்றை இதனினும் மிகுந்த பல னுண்டாமென்பதை ஸ்ரீ பகவானருளிச்செய்கின்றார். 'ஶஶ்வ ஹ்ஹாஂதிஂ நிஂமஹ்ஹதி' என, அர்ச்சுன! எனதாராதனையின் பிரபாவத்தால் அவன் நித்திய சாந்தியை யடைகின்றன்; அதாவது, பரனுகிய எனதாராதனையால் சுத்தாந்தக்கரணனுகிய

அவன் தீவிர வைராக்கியமுடையபனுய்ச் சகல விடயபோகங்களினிச்சையற்றவனு கின்றுன். ஹே பகவன்! பரமேசுரனைப் பஜனைபண்ணுவானும் முந்திய துராசாரத்தைவிடாது தருமான்மாவாகாதொழிகின்றுனுதலின் அவன் நாசத்தையே யடைவான் என்னு மர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் பக்தர்களிடத்துள்ள கிருபாபரவசத்தால் வெகுண்டவனைப்போன்று அவனுக்கருளிச்செய்கின்றார். 'கௌந்தெய' என முன்னர்த்துராசாரனுயினும் இவன் பரமேசுரனுகிய எனது பஜனையின் பிரபாவத்தால் அத்துராசாரத்தைவிடுத்துச் சீக்கிரமே தருமான்மாவாகின்றுன், நித்தியசாந்தியையுமடைகின்றுன். இஃதோ ரற்புதமென நீ யறியற்க; மற்றேரு, எனது பக்திப்பிரபாவம் நிச்சயமேயாதலின் இவ்விஷயத்தில் வாதம்பண்ணும் பிரதிவாதியின் முன்னின்று கரமேலெடுத்து அப்பிரதிவாதியின் அவமானபூர்வகம் கருவத்தோடும் பரமேசுர பக்தன் மிகவும் துராசாரனுயினும், பிராணசங்கடத்தையடையினும், மிக மூடனுயினும், அசரணனுயினும் நாசத்தையே அடையான் எனப் பிரதிக்ஞை செய்வாய். அதாவது, துர்க்கதியையடைவதில்லை. மற்றேரு, எல்லாவாற்றுனும் எனது பக்தன் கிருதார்த்தனேயாகின்றுன். இதில் அஜாமிலன், பிரகலாதன், துருவன், கஜேந்திரன் முதலிய அநேக திருட்டாந்தம் மிகப்பிரசித்தமாம். அங்ஙனமே,

ஆ-ம். ஸவாஸுதெவ ஹகுதா ஸுஸுஹம் விஉதெ கூவிக ।

(பொ-ள்.) பரமேசுர பக்தனுக்கு ஒருக்காலும் சுபமின்மையுண்டாகாதாம் என்பது முதலிய பல சாத்திரவசனங்களும் பிரமாணமாமென்க.

(அ-கை.) ஆண்டுப் பூர்வசுலோகத்தில் இடையில்வரும் தோடகத்தால் துஷ்டனைவனுக்குப் பகவத்பக்திப்பிரபாவத்தால் ஈடேறுந்தன்மை கூறப்பட்டது. இப்போது சுபாவிகதோஷத்தோடுகூடிய துஷ்டனுக்கும் அதன் பிரபாவத்தால் ஈடேறுந்தன்மை கூறியருளுகின்றார்.

சு-ம். ஊம் ஹி வாயு-ு வ்யவாஸ்ரிதஸ்ய யெவி ஸ்யு-ுஃ வாவயொநயஃ ।
ஸ்ரியொ·வைஸ்யாஸ்ததா ஸுத்ரா ஹ்யெவி யாந்தி வரூாம்மதிழ ॥ (32)

ப-ம். 2 ஊம் 17 ஹி 1 வாயு-ு 3 வ்யவாஸ்ரிதஸ்ய 4 யெ 6 சுவி 7 ஸ்யு-ுஃ 5 வாவ யொநயஃ 9 ஸ்ரியஃ 10 வைஸ்யாஃ 8 ததா 11 ஸுத்ரா ஃ 12 தெ 13 சுவி 16 யாந்தி 14 வரூாம் 15 மதிம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய என்னை ஆசிரயித்தவர்கள் பாபயோனிகளாயினும் ஸ்திரீகளாயினும் வைசியர்களாயினும் சூத்திரர்களாயினும் பரமகதியையே அடைவார்கள் என்னும் இது நிச்சயமேயாம். (32)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய எனது சரணத்தையடைந்தவர்கள் பாபிகளாயினும் அதாவது, சாதிதோடத்தால் துஷ்டர்களாகிய சண்டாளர்களாயினும், சர்ப்ப முதலிய திரியக்யோனிகளாயினும், வேதாத்தியயனமிலாமையின் அதிநிக்ருஷ்டர்களாகிய ஸ்திரீகளனும், கிருஷிவாணிச்சிய முதலியவைகளில் தத்பராகிய வைசியர்களனும், வேதாத்தியயன முதலியவைகளின்மையின் பரமகதிக் கயோக்கியமான சூத்திரர்களனும், பரமேசுரனது பக்திப்பிரபாவத்தால் சுத்தாந்தக்கரணமுடையராய்ப் பிரஹ்மசாட்சாத்காரவாயிலாய் மோக்ஷவடிவப் பரமகதியையே அடைகின்றார்கள் இஃதுண்மையென்றுணர்தி. இதிற் சிறிதளவு மையமுறுதொழி நீ. ஈண்டு, 'ஊம்ஹி' என்பதிலுள்ள 'ஹி' சத்தத்தால் இவ்வர்த்தத்தில் நூற்பிரமாண சித்தியுமுளதெனத் தெரிவிக்கப்பட்டதாம். அம்மானமிதுவாம்.

ஆ-சு. கிராத ஹூணாம் ஸ்ரவாஸ்தவாஸ்ததா யவநாஃ
வராஸ்தயஃ யெந்யே அ வாவாய உவாஸ்ரயாஸ்ரயாஃ
ஸ்ரூயந்தி தஸ்மை ஸ்ரவிஷவெநமஃ

(போ-ள்.) கிராத, ஹூண, அந்திர, புலிந்த, புல்கச, ஆபீர, கங்க, யவன, கச, என்பன முதலிய தாழ்ந்த சாதியுடைய பிராணிகளும் மற்றும் பாபாசரண முடையர்களனைவர்களும் எந்தப் பரமேசுரனது சரணத்தையடைந்து சுத்தர்களாகின்றார்களோ அப்பரமேசுரனை யான் நமஸ்கரிக்கின்றேன். ஈண்டு, அவர்களும் என்பதிலுள்ள. உம்மையால் 'சுவிஜெ ஹ்ஸ்ரூ உவாஅரொ' என, முற்சுலோகத்திற்கூறப்பட்ட துராசாரமுடையோர்களையுங் கொள்ளவேண்டும். (32)

(அ-கை.) ஆண்டு இவ்வாறு ஸ்திரீசூத்திரர் முதலியோர்களும் பரமேசுரனது பக்தியால் பரமகதியையடைவர்களேல், பிராஹ்மணர், முதலிய உத்தமர்கள் அப்பக்தியால் பரமகதியை அடைவார்களென்பதில் வியப்பென்னை? என்னுங் கைமுதிக நியாயத்தால் ஸ்ரீ பகவான் அவ்வுத்தமர்கட்குப் பக்தியில் பிரவிருத்தியுண்டாம்பொருட்டுப் பகவத்பத்தியின் பிரபாவத்தை அருளிச்செய்கின்றார்.

சு-ம். கிம்வாநபுராஹ்மணாஃ வாண்யாம் ஹக்ஷாராஜ ஷிஃயஸ்ததா।
கூநித்யஃஹாவம் ஒகமி ஃம் வ்ராவ்ய ஹஜஷ்வ ஸாழ ॥ (33)

ப-ம். 7 கிம் 6 வாநஃ 3 ப்ராஹ்மணாஃ 2 வாண்யாஃ 1 ஹக்ஷாஃ 5 ராஜஷிஃயஃ 4 ததா 9 கூநித்யம் 10 சுவாவம் 11 ஒகம் 8 ஃம் 12 வ்ராவ்ய 14 ஹஜஷ்வ 13 ஸாம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எனது பக்தனுகிய உத்தமஜாதியையுடை பிராமணனும் க்ஷத்ரியனும் பரமகதியை அடைவார்கள் என்பதன்கண்ணே மறித்தும் யாதோ கற்குளது! ஆதலின், நீ அநித்தியமும் துக்கத்தோடுற்றதும் ஆய மனுட தேகத்தை அடைந்து பரமேஸ்வரனுகிய என்னை ஆராதிப்பாயாக. (33)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! முற்கூறிய ஸ்திரீசூத்திரர் முதலியோர்களும் பரமேசுரனுகிய எனது பக்தியால் பிரஹ்மஞானப்பிராப்திவாயிலாய் மோக்ஷமாகிய பரமகதியையடைவர்களெனின், உத்தமாசார உத்தமஜாதியுடைய பிராஹ்மணர்களும் சூட்சுமப்பொருளை விவேகம் பண்ணப்பட்ட க்ஷத்ரியர்களும் எனது பக்தியால் பிரஹ்மஞானவாயிலாய் மோட்சமாகிய பரமகதியை யடைவர்களென்பதில் கூறற்பாலதென்னை? மற்றும், இதிலொருவர்க்கேனுஞ் சந்தேகமின்றாம். அர்ச்சுன! பரமேசுரனுகிய எனது பக்தியின் மஹாப் பிரபாவமிவ்வாறுமாதலின் சர்வ புருடார்த்தத்தையு மடையத்தக்கதும் மிக வருமையுமாகிய இம்மனுஷ்யதேகத்தை அதிகாரியாகிய நீ அடைந்தும், எத்துணைக்காலம்வரையில் இம்மநுடதேகம் நாசத்தையும் நோயால் கிலேசத்தையும் அடையவில்லையோ அத்துணைக்குள் மிகச்சீக்கிரமாய்ப் பெருமுயற்சியால் பரமேசுரனுகிய எனது சரணகதனுகுக. அர்ச்சுன! இம்மநுடதேகம் எத்தன்மையதெனின், அநித்தியமாம். அதாவது, சீக்கிரமே நாசமாகப்பட்டது. அசுகமாம், அதாவது கருப்பத்திருந்தன் முதற்கொண்டு பலவிதத் துக்கத்தோடக்குற்றது. இவ்வணம் அநித்தியமும் மசுகமுமாதலின் நீ பரமேசுர பஜனையில் விலம்பஞ்செய்யாதே, இச்சரீர சுகத்தின்பொருட்டு முயல்வதொழிப்பாய். அர்ச்சுன! முன்னர் உத்தமாசாரமுடைய ஜனகாதி ராஜரிஷிகள் பரமேசுரனுகிய எனதாராதனத்தால் தமது சென்மத்தை சபலப்படுத்தினது போல, நீயும் எனது பஜனையால் உனது சென்மத்தைச் சபலம்பண்ணுதி. அதிகாரமுடைய இம்மநுடதேகத்தை யெடுத்தும் எனது சிந்தனைபரனுகாதொழிவை

யேல், அத்தன்மைய உனது சரீரம் பயனற்றதாம். இது சுருதியிலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. ஊஹவெஉவெ ஈஉயஸ்தய ஃ ஷ்ரிநவெ உவெஉங ஃ ஹதீவிநஷிஃ ।

(பொ-ள்.) இப்பாரதகண்டத்தில் அதிகாரமுடைய மநுடதேதகத்தை எடுத்து இவன் பரமான்மாவைச் சாட்சாத்கரிப்பனேல் இவனுக்கு மோகூஷவடிவ நித்திய பலமே பிராப்தியாம். இவன் இத்தன்மைய தேதகமெடுத்தும் பரமான்மாவைச் சாட்சாத் கரியாதேனல் இவனுக்கடிக்கடி பிறத்தலிறத்தல்வடிவ சம்சாரமே பிராப்தியாம் என்க.

(அ-கை.) கூறிப்போந்த பஜனைப்பிரகாரத்தை அருளிச்செய்து ஸ்ரீ பகவான் இப்போது இவ்வொன்பதாவது அத்தியாயத்தைச் சமாப்திசெய்தருளுகின்றார்.

சு-ம். உநநா ஹவ உஹுகொ உயாஜீ ஸாம நமஸ்குரு ।
ஸாமெவைஷ்யஸி யுக்த்வைவமாத்மானம் மத்பராயணஃ ॥ (34)

ப-ம். 1 உநநாஃ 2 ஹவ 3 உஹுகுஃ 4 உயாஜீ 5 ஸாம 6 நமஸ்குரு 11 ஸாம 12 ஹவ 13 ஸமஷ்யஸி 10 யுக்த்வா 7 ஹவம 9 மாத்மானம் 8 மத்பராயணஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! நீ என்னிடத்தில் மனமுடையவனும் எனது பக்தனும் எனது பூஜாபராயணனும் ஆகுதி. எனக்கு நமஸ்காரமுஞ் செய்குதி. இவ்வாறு எனது சரணாகதனாகிய நீ உனதுள்ளத்தை எனதிடத்திலே செலுத்தி என்னையே யடைகுவாய். (34)

(வி-ம்) ஹே அர்ச்சுன! எவனது மனம் கேவலம் பரமேசுரனிடத்திலேயே பற்றுவதும் மற்றைய புத்திரமனைவி முதலியவைகளில் பற்றுதலுமாமோ, அவன் என்னிடத்தில் மனமுடையனுவன்; அவ்வண்ணம் நீ யாகுதி. எவன் பரமேசுரனாகிய எனக்கொருவனுக்கே பக்தனுய்த் திரவிய முதலியவைகளை யடைதற் பொருட்டு ஏனைய இராஜன் முதலியோர்கட்குப் பக்தனுகாமே, அவன் எனது பக்தனுகுவான்; நீயுமப்படிப் பக்தனுகுதி. கருத்துரைவாம்:— இவ்வுலகத்தில் இராஜன் முதலியோர்களின் அடிமைக்காரர்கள் திரவிய முதலியவற்றின் பிராப்தியின் பொருட்டு அவ்விராசனுக்குப் பக்தர்களாயினும் அந்த ராஜன் முதலியோர்களிடத்தில் அவர்கள் மனம் பற்றுடையதன்றும்; மற்றே, தமது மனைவி மக்களிடத்தில் பற்றுளதாம். ஆதலின், அவர் இராஜாவின் பக்தராகினும் அவனிடத்தில் மனமுடையோரலர், அவருடைய புத்திராதிகளிடத்தில் மனமுளோராவர். அங்ஙனமே, என்னிடத்தில் பக்தியுடையோனுயினும் பிறவற்றில் மனமுளனுகற்க, என்னிடத்தில் மனமுளனேனும் பிறவற்றிற் பக்தியுளனுகற்க; மற்றே, என்னிடத்திலே மனமும் பக்தியுமுடையனுகுதி என்பதாம். மத்யாஜியாகுவாய்; அதாவது, எனது பூஜாபராயணனுகுதி, முக்காலத்தானும் என்னை வணங்குதி. இவ்வாறு எனது பராயணனுகிய நீ அதாவது, பரமேசுரனுகிய என்னை யொருவனையே சரணாகதமாயடைந்த நீ உனது அந்தக்காரணத்தை எனது சிந்தனத்தின்கண்ணே செலுத்திப் பரமானந்தகன சுவப்பிரகாச நிருபத்திரவ அபயபரப்பிரஹ்மமாகிய என்னையே கடவான் மாவாறுவதுபோலவும், ஆறுகடலாவதுபோலவும் அபேதமாயடைகுவாய். கருத்துரைவாம்:—கோடாபாதியொழியவே கடவான் அபேதமாய் மாவாறை யடைவதுபோலவும், ஸ்ரீ கங்கை யமுனை முதலிய நதிகள் தமது நாமரூபங்களைவிடுத்துச் சமுத்திரத்தை அபேதமாயடைவதுபோலவும், நீயும் பரமேசுரனுகிய எனது பக்தியாலுண்டாகிய பிரஹ்மசாட்சாத்காரத்தால் அவித்தை

முதலிய சர்வோபாதிகளும் இன்றியவனுய் நிர்க்குணப்பிரஹ்மமாகிய என்னையே அபேதமாயடைவாய்.

ஆ-சு. யயாகஉஃ ஷ்ஂஉஊகாஃ ஸஉஎ ஷ்ஂமஷ்ஂதி காஉ ஸ்ஷவெவிஹாய
தயாவிஷ்ணா உஸ்ஷவாஷி உஊகஃ வஸாதஸ்ஂ வஸ்ஸஷஉ வெதிதிவ்யஂ.

(பொ-ள்.) ஸ்ரீ கங்கை யமுனை முதலிய நதிகள் தமது நாமரூபங்களை விடுத்துக் கடலிற்சென்று ஒன்றுந்தன்மையடைவதுபோல, இவ்வித்துவானும் நாமரூபமின்றியவனுய்ச் சர்வோத்கிருஷ்ட சுயஞ்சோதியாகிய பரமான்மபுருஷனையே அபேதமாயடைகின்றனென்பதாம். ஒரு வியாக்கியானத்தில் 'ஸாஉவ கூதாகம் வஷ்யஷி' எனப் பதத்தை அந்வயித்து 'கூதாகம்' என்பதால் பரமான்மாவையே கொண்டனர். (34)

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய ஸ்ரீ உத்தவாநந்தகிரி சுவாமிகளின் பூஜ்யபாத சிஷ்யராகிய ஸ்ரீ சித்கணனந்தகிரி சுவாமிகளால் இயற்றியருளிய பிராகிருதமுகையெனப் பெயரிய பகவற்கீதை கூடார்த்ததீபிகையின்

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

பத்தாவது அத்தியாயம்.

ஓம் ஸ்ரீ கணேசாயநமஃ ஸ்ரீ காசிவிஸ்வேஸ்வராப்யாம்நமஃ ஸ்ரீ குருப்யோநமஃ
ஸ்ரீ சங்கராசார்யேப்யோநமஃ.

ஆண்டுப் பூர்வம் ஏழு எட்டு ஒன்பது அத்தியாயங்களால் தத்பதார்த்தவடிவப் பரமேசுரனது சோபாதிக நிருபாதிக சொரூபங்களைக் காண்பித்தருளினர். அந்தத் தத்பதார்த்த பரமேசுரனது விபூதிகள்; அவ்விருவகைச் சொரூபங்களிலும் ஒன்றில் தியானத்திற்கும் மற்றொன்றில் ஞானத்திற்கும் உபாயங்களாம். அத்தன்மைத்தான பரமேசுரனுடைய விபூதிகள் ஏழாவது அத்தியாயத்தில் 'ஈஷொஹ உவாகளஞ்ஞெய' என்பது முதலிய வசனங்களாலும், ஒன்பதாவது அத்தியாயத்தில் 'சுஹம்கூதாஸ்ரஹம்யஜ்ஞ' என்பது முதலிய வாக்கியங்களாலும் சுருக்கிக் கூறியருளப்பட்டன. அவைகளை விரித்துக்கூறவேண்டுவதொருதலையாம். என்னை, பகிர்முகமுடையோர்கட்கு அப்பரமேசுர சொரூபம் தியானித்தற்கும் மிகவுந் துர்விஞ்ஞேயமாம், அத்தன்மைய சொரூபத்தை மறித்து மறித்தும் அருளிச்செய்வது அதனுணர்ச்சியின்பொருட்டேயாமாதலின், ஸ்ரீ பகவான் இப்பத்தாவது அத்தியாயத்தை ஆரம்பித்தருளுகின்றார். ஆண்டு முதலில் அர்ச்சுனனது உள்ளத்தில் உத்சாகமுண்டாக்குவான் பரமகிருபாளுவாகிய ஸ்ரீ பகவான் வினவாமலே அவனுக்கு அருளிச்செய்கின்றார்.

(அ-கை.) 'ஸ்ரீ ஹமவாகூவாச.'

சு-ம். ஹூய வஸ மஹாபாஹோ ஸுணு மெ பரமம் வசஃ।
யதெஹம் ப்ரீயமாணாய வக்ஷ்யாமி ஹிதகாம்யயா ॥ (1)

ப-ம். 2 ஹ்ரீயஃ 3 வஸவ 1 உஹாவாஹொ 7 ஸ்ரவணா 4 ஒ 5 வஸுஂ 6 வஜ்ரஃ 8 யக்ஷ 11 தெ 9 க்ஷஹம் 12 ஸ்ரீயஸானாய 13 வக்ஷ்யாமி 10 ஹிதகாம்யயா.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மீண்டும் என்னுடைய உத்தமவாக்கியத்தை நீ கேட்குதி. அவ்வாக்கியத்தை நான் உனது இதவேட்கையால் அன்புளவுனக்குக் கூறுகின்றேன். (1)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! திண்புயமுடைய நீ மீண்டும் எனதுத்தமவசனத்தைக் கேட்குதி. அவ்வாக்கியத்தை ஆப்தனகிய நான் உனதிட்ட சித்திவேட்கையால் உனக்குபதேசிக்கின்றேன். அர்ச்சுனனுக்கு அவ்வுபதேசஞ் செய்வதில் யோக்கியத்தன்மையை அறிவுறுத்துவான் அவனை விசேடித்தருளுகின்றனர். 'ஸ்ரீயஸானாய' என. அமிருதம் பருகலால் ஆனந்தமனுபவிக்கப்படுவதுபோல, எனது வாக்கியவடிவ அமிருதத்தைப் பருகலால் நீ பிரீதியை அடைகின்றனையாதலின் உனக்கு மறித்துஞ் சொல்கின்றேன். ஈண்டு, 'ஸ்ரீயஸானாய' என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் இப்பொருளைக் குறிப்பித்தருளினர்:—இவர்து வாக்கியத்தைக்கேட்பதால் எனதிட்டசித்தி அவசியமாம் என்னுந் திடபாவனையால் எவன் பிரியத்தோடு அவ்வாக்கியத்தைக்கேட்கின்றானை அவ்வதிகாரியின் பொருட்டே தத்துவஞானிபால் பிரஹ்மவித்தை உபதேசிக்கத்தக்கது அஃதிலானுக்கின்றும் என்பதாம். அவ்வாக்கியத்தைப் பரமம் என விசேடித்தலால் எனது வாக்கியம் மிகவும் உத்கிருஷ்டமாமாதலின் அதைக் கேட்கு முனக்கு அவசியமாயிஷ்ட சித்தியுண்டாமென்பதைக் குறிப்பித்தருளினர் என்க. (1)

(அ-கை) ஹே பகவன்! அத்தன்மையவாக்கியத்தை முன்னர்த் தாங்களெனக்குப் பலதரமும் உபதேசித்தருளினீர்கள்; மீண்டும், அதையே எதன்பொருட்டுபதேசிக்கின்றீர்கள் என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் துர்விஞ்ஞேயவஸ்துவை மறித்துமறித்தும் உபதேசித்தலினனே போதமுண்டாகும் என்னும் அபிப்பிராயத்தால் தனது சொரூபத்தின் துர்விஞ்ஞேயத்தன்மையை அருளிச்செய்கின்றார். அல்லது, ஹே பகவன்! எனக்குப் பரமேசுவராகிய உம்முடைய சொரூபத்தை யுபதேசிப்பவர்கள் இந்திரன் பிருகு முதலிய ரிஷிகள் அநேகர்களிருக்கின்றார்களே அவர்கள் வாக்கியங்கேட்பதனனே எனக்குத் தங்கள் சொரூபஞானமுண்டாகும் இதைத் தாங்கள் கூறுவதெற்றிற்கு என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு, எந்த இந்திரன் முதலியோர்களின் வாக்கியத்தால் எனது சொரூபஞானத்தையடைய விரும்புகின்றனையோ, அவ்விந்திரன் முதலியோர்கட்கும் எனது சொரூபம் துர்விஞ்ஞேயமென்பதை ஸ்ரீ பகவானருளிச்செய்கின்றார்.

சு-ம். ந ஒ விதுஃ ஸுரமணாஃ ப்ரபவம் ந மஹர்ஷயஃ ।
ஸர்வஶோ ஹி தெவானாம் மஹர்ஷீணாஞ்ச ஸர்வஶஃ ॥ (2)

ப-ம். 4 ந 1 ஒ 5 விதுஃ 3 ஸுரமணாஃ 2 ப்ரபவம் 7 ந 6 மஹர்ஷயஃ 9 ஸர்வம் 14 சாதிஃ 8 ஹி 10 தெவானாம் 12 மஹர்ஷீணாம் 11 அ 13 ஸர்வஶஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனகிய எனது பிரபாவத்தை இந்திரன் முதலியதேவர்களும் பிருகு முதலிய மகரிஷிகளும் உணரார்கள்; எதனல் பரமேசுரனகிய நான் தேவர்கட்கும் அம்மகரிஷிகட்கும் எல்லாவாற்றானுங்காரணமே.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனகிய எனது பிரபாவம் அதாவது:—வானதியுலகனைத்தின் தோற்றநிலையீறு பிரவேச நியமன நிக்கிரஹானுக்கிரகம் என்பன முதலியவைகளைச்செய்யுஞ் சாமர்த்தியவடிவப் பிரபாவம். அல்லது, அநேக விபூதிகளால் ஆவிர்ப்பாவரூபப் பிரபாவமாம். என்னுடைய அப் பிரபா

வத்தை இந்திரன் முதலிய தேவர்களும் பிருகு முதலிய மகரிஷிகளும் சர்வக்ஞர்களெனு மூணார்கள்.

சங்கை :—ஹே பகவன்! அவர்கள் அதை யுணராதது எக்காரணத்தால்?

சமாதானம் :—'ஸஹஸாஹிஹி-ஃ' எதனல் பரமேசுரனுகிய நான் அவ்விந்திரன் முதலிய தேவர்கட்கும் மகரிஷிகட்கும் எல்லாவகையாலுங் காரணனுகின்றேனே. அதாவது, நான் அவர்கட்கு உண்டாக்குந்தன்மையாலும் புத்தியாதிகளைப் பிரவிர்த்திப்பிக்குந் தன்மையாலும் காரணனுகின்றேன் என்பதாம். அல்லது, அவர்களின் உபாதானரூபத்தாலும் நிமித்தரூபத்தாலுங்காரணன், அவர்கள் எனது காரியங்கள், ஆதலின் எனது பிரபாவத்தை யுணருகின்றார்களில்லை, பிதாவின் பிரபாவத்தைப் புத்திரனு லறியலாகுமாதலின் நானே எனது பிரபாவத்தை உனக்குபதேசிக்கின்றேன். ஆண்டு, பரமேசுரனினின்றே சர்வதேவதைகளும் ரிஷிகளு முண்டாயினார்கள் என்பது "எதில் மகரிஷிகளும் தேவர்களும் யுக்தர்களா அதினின்றும் பல தேவர்கள் உண்டாயினார்கள்" என்பது முதலிய சுருதியிற் பிரசித்தமாமென்க. (2)

(அ-கை.) ஆண்டுப் பரமேசுரனது பிரபாவஞானம்மகத்பலத்திற் கேதுவாமாதலின், யாராகினுமோரதிகாரியே அதை யுணர்வானென்பதை ஸ்ரீ பகவானிப்போதருளிச்செய்கின்றார். அல்லது, ஹே பகவன்! அவ்விந்திரன் முதலிய தேவர்களும் பிருகு முதலிய மகரிஷிகளும் ஓர்கால் தங்களுடைய பிரபாவத்தை உபதேசஞ் செய்வதில் சமர்த்தர்களல்லரேல், தாங்களே எனக்கு அதை உபதேசிக்கலாம். ஆனல், தங்களுடைய அப் பிரபாவத்தையுணர்வதால் எனக்கெப்பயனுண்டாம்? என்னு மருச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அதன் ஞானபலத்தை யருளிச்செய்கின்றார்.

சு-ம். யொ மாமஜமநாதிஞ்ச வெத்தி லொகமஹேஷ்வரம் ।
ஸமம்மூடேஷு மர்த்யேஷு ஸர்வபாபைஃ ப்ரமுச்யதே ॥ (3)

ப-ம். 6 யஃ 5 மாம் 1 அஜம் 3 அநாதிம் 2 ச 7 வெத்தி 4 லொகமஹேஷ்வரம் 10 ஸமம் மூடேஷு 8 ச 9 மர்த்யேஷு 11 ஸர்வபாபைஃ 12 ப்ரமுச்யதே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சன்மமும் காரணமுமின்றிய சர்வலோகமகேசுர பரமேசுரனுகிய என்னை எவன் உணர்வதே அவன் எல்லா மநுடர்க்குள்ளும் சம்மோகரகிதனுகிச் சர்வ பாபத்தினின்றும் விடுபடுகின்றான். (3)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய நான் சர்வ வுலகத்திற்குங் காரணுதலின், ஆதியென்னுங்காரணமில்லாத வநாதிவஸ்துவம் நானுகின்றேன். அநாதியானதால் நான் அஜன், அதாவது :—உற்பத்திவஸ்து சென்மமிலாதவன், சர்வவுலகங்கட்கு மகேசுரன். அத்தன்மைத்தாய என்னை எவ்வதிகாரியானவன் தன தான்மாவினபின்னமாய்ச் சாட்சாத்கரிக்கின்றனே அவன் சர்வ மநுடர்க்குள்ளும் அசம்மூடனுய் அதாவது :—அஞ்ஞான நிவிருத்திக்துவாரா ஆன்மாநான்மாக்களின் தாதான்மியாத்தியாசவஸ்துவ சம்மோகமின்றியவனுய்ச் சர்வ பாபத்தினின்றும் விடுபடுகின்றான்; அதாவது, புத்தியபுத்தி பூர்வகமாய்ச்செய்யப்பட்ட முக்காலத்திய பாபங்களினின்றும் அத்தத்துவஞானி முக்தனுகின்றான். ஈண்டு, 'வரஸ்ய' என்பதிலுள்ள 'ப்ர' என்னுஞ் சத்தத்தால் ஸ்ரீ பகவானிப்பொருளைக் குறிப்பித்தருளினார் :—அஞ்ஞானியும் அப்பாபகருமங்களைப் போகத்தாலும் பிராயச்சித்தத்தாலும் நிவிருத்திக்கின்றனுயினும், அவன் அதினின்றும் அத்தியந்த முக்தனுவதில்லை. என்னை? சர்வ பாபங்கட்கும் காரணமாகிய அஞ்ஞானமுமதனை

லாகிய தேதகாதிகளில் நான்னைது என்னும் அத்தியாசமும் அவ்வஞ்ஞானியினிடத்திலிருத்தலால் மீண்டுப்பாபோத்பத்தியுண்டாம். அப்பாபகருமம் போகத்தால்நாசமாயினும் சமஸ்காரவடிவமாய் அவ்வஞ்ஞானியினிடத்திலேயே அஃதிருக்கின்றது. இதனாலே, அச்சமஸ்காரவசத்தாலுய் பறித்தும் பாபகர்மத்திற் பிரவிர்த்திக்கின்றான். தத்துவஞானிக்கோ ஆன்மசாட்சாத்காரத்தால் அஞ்ஞானவடிவமூல காரணமும் அதனாலாயவத்தியாசமும் சமஸ்காரத்தோடு சர்வ பாபங்களும் எஞ்சுதலின்றி நிவிருத்தியாகின்றனவாதலின், அத்தத்துவஞானியானவனே அச் சர்வ பாபங்களினின்றும் அத்தியந்த முக்தனாகின்றான். இதில்,

ஆ-சு. கூடீயஜ்ஞை ஆவ்ருகூஷாஉணிதஷ்டிந உபஷ்டோ வாசாவஸ்ரெ ।
ஜுஹுதாமிஃ ஸவஃ கூஷாஉணிஹஷ்ட ஸாத்கூரு தெதயா ॥

(பொ-ள்.) என்பது முதலிய சுருதிமிருதி வாக்கியங்கள் பிரமாணமென்றறிக.

(அ-கை.) ஆண்டுப் பூர்வசுலோகத்தில் 'ஜ்ரொகுஉஹ்வரம்' என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் தன்னிடத்தில் சர்வ வுலகங்கட்கு மஹேசுரத்தன்மையைக் கூறியருளினர். இப்போது அதையே விரிவாய் அருளிச்செய்கின்றார்.

சு-ம். பூர்ஜிஜ்ஞாஃ கூஉஹ்ம்ஜொஹஃ கூஷா ஸுதயம் உஉஃ ஸுஉஃ ।
ஸுவம் உஃவம் ஹவொஹாவொஹயஜ்ஞா ஹய ஜெவஅ ॥
கூஹிம்ஸா ஸுஉதா தூவ்ருத்தி ஷ்டவொஉாநம் யஜொயயஸுஃ ।
ஹவம்தி ஹாவா ஹ்ருதாநாம் உத்த வன வ்யயம்ருவ்யாஃ ॥ (4)

ப-ம். 1 பூர்ஜிஃ 2 ஜ்ஞாநம் 3 கூஹ்ம்ஜொஹஃ 4 கூஷா 5 ஸுதயம் 6 உஉஃ 7 ஸுஉஃ 8 ஸுவம் 9 உஃவம் 10 ஹவஃ 11 ஹாவஃ 12 ஹயம் 13 அ 14 கூஹயம் 22 வன அ 15 கூஹிம்ஸா 16 ஸுஉதா 17 தூவ்ருத்திஃ 18 தவஃ 19 உாநம் 20 யஸுஃ 21 கூயஸுஃ 28 ஹவம்தி 24 ஹாவாஃ 25 ஹ்ருதாநாம் 26 உத்தஃ 27 வன வ 23 வ்யயம்ருவ்யாஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! புத்தி, ஞானம், மோகமின்மை, கூஷமை, சத்தியம், தமம், சமம், சுகம், துக்கம், பவம், பாவம், பயம், அபயம், அகிம்சை, சமத்தன்மை, துஷ்டி, தவம், தானம், யசசு, அயசசு, என்னும் உலகப்பிரசித்தமான நானுவிதமான சர்வப்பிராணிகளின் காரிய விசேடங்களையும் நானே உண்டாக்குகின்றேன்.

(4-5)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சர்வப்பிராணிகளின் புத்திமுதற்கொண்டு அயசசு ஈறுகிய காரிய விசேடங்களை நானே உண்டாக்குகின்றேன்; மற்றொன்று மூண்டாக்குவதில்லை. அந்தப் புத்தியாதிகளின் வடிவத்தைக்கூறுவாம்:—அவற்றுள், சூட்சுமப்பொருள்களை விவேகம் பண்ணத்தக்க அந்தக்கரணத்தின் சாமர்த்தியம் புத்தியாம். ஆன்மாவுன்ம சர்வ பொருள்களையுமுணரல் ஞானமாம். அறியத்தக்க தன் ரூபத்தாலேனும் செய்யத்தக்க தன் ரூபத்தாலேனும் கிடைக்கப்பட்டபொருளில் வியாகூலமின்றி விவேக பூர்வகப் பிரவிருத்தி அதாவது, அதன் இஷ்டாநிஷ்டரூப பல விசார பூர்வகமுண்டாகும் பிரவிருத்தி அசம்மோகமாம். கடுஞ்சொலாலேனும் தண்டத்தாலேனும் சிகூஷிக்கப்பட்டவனது சித்தத்தின் நிருவிகாரத்தன்மை அதாவது, அவ்வாறு சிட்சித்தவர்கட்கு அநிட்டத்தைச் சிந்தியாமை கூஷமையாம். அல்லது, ஆத்தியான்மிக முதலிய மூவகைத் துன்பங்களைச் சகித்தல் கூஷமையாம். ஆண்டு, சுர முதலியநோயால் வருந்துன்பம் ஆத்தியான்மிகமாம். மிகுந்ததண்மை, மிகுந்தவெப்பம், மிகுந்த விருஷ்டி என்பது முதலியவைகளால்

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சிருட்டியின் ஆதிகாலத்தில் உண்டாகிய பிருகு முதலிய சப்தரிஷிகளும் சாவருணி முதலிய நான்கு மனுக்களும் எந்தப் பிருகு முதலியவர்கள் எனது சிந்தனைபாயணர்களும் மனோசங்கற்பமாத்திரத்தாலுண்டானவர்களும் ஆவர்களோ எந்தப் பிருகு முதலியவர்கட்கு இவ்வுலகத்தில் இப்பிராஹ்மணர் முதலிய பிரஜைகள் உள்ளார்களோ அப்பிருகு முதலியோர்களும் பரமேசுரனுகிய என்னிடத்தினின்றே உண்டானவர்கள். (6)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சிருட்டியினுதிகாலத்தில் உண்டாகிய பிருகு முதலிய சப்தரிஷிகளும், வேதபாடத்தையும் வேதார்த்தத்தையு முள்ளவாறுணர்ந்தவர்களும், சர்வக்ஞர்களும், வேதவித்தையின் சம்பிரதாயப் பிரவிருத்தகர்களுமாவர்கள். இதனுனே, அவர்களைச் சாஸ்திரம் மகரிஷிகளெனக்கூறுகின்றது. அவர்களின் பெயரும் சிருட்டியின் ஆதிகாலத்தில் அவர்களின் உற்பத்தியும் புராணத்திலுங் கூறப்பட்டுள்ளன.

ஆ-சு. ஹ்ருமூம் ஸீஜீஉதி ஜு வுஹ்ருயூம் வுஹம் கூதூம்।
வஸிஷ்டம்அ உஹாதெஜாஃ ஹொஹ்ரு ஜநுஉஹா வுதாநு ॥

(பொ-ள்.) பிருகு, மரீசி, அத்திரி, புலத்தியர், புலஹர், கிருது, வசிஷ்டர் என்னும் இந்த ஏழு ரிஷிகளாகிய புத்திரர்களை அந்தப் பேரொளியையுடைய பிரஹ்மா சிருட்டியின் ஆதிகாலத்தில் தமது மனத்தால் உண்டாக்கினர் என்பதாம். அங்ஙனமே, சிருட்டியினுதிகாலத்தில் உண்டாகிய சாவர்ணி முதலிய பெயரால் மிக விளக்கமான நான்கு மனுக்களுமாவர்கள். அல்லது, 'உஹஷ்டயஃ ஸவ' என்பதால் பிருகு முதலிய சப்தமஹரிஷிகளையுங் கொள்ளவேண்டும் 'வுவெஷ்டு அக்வாரஃ' என்பதால் அப்பிருகு முதலிய சப்தரிஷிகளுக்கு முன்னருண்டாகிய சனகர் முதலிய நான்கு மகரிஷிகளையுங்கொள்க. 'உதவஹ்யா' என்பதால் சுவாயம்பு முதலிய பதினன்கு மனுக்களையுங்கொள்கவென்பதாம். அவர்கள் எத்தன்மையர்களெனின், மத்பாவர்கள். ஆண்டு, பரமேசுரனுகிய என்னிடத்தில் பாவம் அதாவது, பாவனை எவர்கட்கோ அவர்கள் மத்பாவர்களாவர்கள்; அதாவது, பரமேசுரனுகிய எனது சிந்தனைவடிவபாவனைவசத்தால் வெளிப்பட்ட என்னுடைய ஞான ஐசுவரிய முதலிய பலவிதமான சத்திகளெவர்க்கோ அவர்கள் என்பதாம். அன்றியும் மானசர்கள் அதாவது, பிரஹ்மாவின் மனோசங்கற்பமாத்திரத்தானே உண்டானவர்கள். எனையோர்கள்போல யோனியாற்றோற்றினவர்களன்றுவர்கள். இதனுனே, சுத்த சன்மர்களானதால் அவர்கள் சர்வப்பிராணிகளிலும் சிரேஷ்டர்களாவர்கள். சாஸ்திரத்தில் 'யோனிம்வினுசரீரம், என்னும் வாக்கியத்தில், யோனிசத்தம் மாதர்யோனிவாசகமன்று; மற்றே, காரணவாசகமாம்; அதாவது, காரணமின்றித் தேகந்தோன்றுதென்பதாம். அத்தன்மைய பிருகு முதலிய சப்தமகரிஷிகளும் சனகர் முதலிய நான்கு மகரிஷிகளும், சுவாயம்பு முதலிய பதினன்கு மனுக்களும் சிருட்டியினுதிகாலத்தில் இரணியகருப்பவடிவப் பரமேசுரனிடத்தினின்றே உண்டாயினர்கள். அவர்கட்கோ இவ்வுலகத்தில் சன்மத்தானும் வித்தையானும் இப்பிராஹ்மணர் முதலிய சர்வப் பிரஜைகளும் சந்ததிரூபமாவர்கள். ஈண்டு, ஒரு வியாக்கியானத்தில் 'யொகூஉஃ' என்னும் வாக்கியத்தில் 'யொகஃ' என்னும் முதல் வேற்றுமை முடிவுப்பதத்தைக்கொண்டு இவ்வாறு பொருள்படுத்துகின்றனர்:—அப்பிருகு முதலியோர்கட்குச் சாயுஜ முதலிய நான்குவகைப் பிரஜைகளும் அவர்கள் வசித்தற்காதாரமான உலகங்களும் சந்ததிரூபங்களாவர்கள். அல்லது, 'யெஷாம்' என்னும் ஆறும் வேற்றுமை 'யெஷ்யஃ' என்னும் ஐந்தாம் வேற்றுமைப்பொருளில் வந்தது, இதனுலிப்பொருள் பெறப்படுகின்றது:—எந்தப்பிருகு முதலியோர்களிடத்தினின்றும் எந்தச்சாயுஜ முதலிய

கல்வகைப் பிரஜைகளும் லோகக்களும் உண்டாயினவோ அந்தப் பிருகுமுதலி யோர்கட்குக் காரணவடிவப் பரமேசுரனுகிய வென்னிடத்தில் சர்வலோக மகேசுரத்தன்மையுள்ளதென்பதில் கூறற்பாலதென்னை என்க. (6)

(அ-கை.) இவ்வாறு சோபாதிகப் பரமேசுரனது பிரபாவத்தை அருளிச் செய்து இப்போது அப்பிரபாவஞானபலத்தை அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸதாம் விஸ்ருʼஜிம் யொமஞ்ச ஸ யொ வெத்தி தத்வதஃ ।
ஸொவிகம்பெந யொகெந யுஜ்யதெ நாத்ர ஸம்ஶயஃ ॥ (7)

ப-ம். 3 ஸதாம் 4 விஸ்ருʼஜிம் 6 யொமம் 5 அ 2 ஸ 1 யஃ 8 வெத்தி 7 தத்வதஃ 9 ஸஃ 10 ஸுவிகம்பெந 11 யொகெந 12 யுஜ்யதெ 15 ந 13 கத 14 ஸம்ஶயஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவன் கூறிப்போந்த பரமேசுரனது விபூதியையும் யோகத்தையும் உள்ளவாறுணர்கின்றானே அவன் அசலமான யோகத்தோடு கூடியவனுகின்றான். இதில் ஒரு தடையுமில்லை. (7)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! முன்னர் 'ஸ்ரீஜகந்நாதம்' என்பது முதலிய மூன்று சுலோகங்களால் கூறப்பட்ட புத்தி முதல் அயசசு ஈறுகிய எனது விபூதிகளையும், பிருகு முதலிய சப்தரிஷிவடிவமும் சனகர் முதலிய நான்கு மகாரிஷி வடிவமும் சுவாயம்பு முதலிய பதினைந்து மநுவடிவமுமாகிய எனது விபூதிகளையும், அதாவது, அவ்வப்புத்தி முதலிய வடிவங்களாகவும் அவ்வம்மகரிஷி வடிவங்களாகவும் பரமேசுரனுகிய எனது நிலைமையேயிருக்கின்றது, அத்தன்மைய எனது விபூதிகளையும், எனது யோகத்தையும், எவ்வதிகாரி குருசாஸ்திரோபதேசத்தால் உள்ளவாறுணர்கின்றானே. ஈண்டு, அவ்வப்பொருளை உண்டாக்குவதிற் சாமர்த்தியவடிவப் பரமேசுரனது ஐசுவரியம் யோகமாம். அதையும் எவ்வதிகாரி அறிகின்றானே அவன் சலிப்பற்ற யோகமுடையனுகின்றான்; அதாவது, தத்துவஞானியின் ஸ்திரத்தன்மைவடிவ சமாதியுடையவனுகின்றான். அர்ச்சுன! இதிற் சிறிது மையமில்லை; அதாவது, தடைப்படுத்துவது ஒன்றுமின்றென்பதாம். ()

(அ-கை) ஆண்டுப் பரமேசுரனது எந்த விபூதியோகங்களின் ஞானத்தால் இவ்வதிகாரிக்கு அசலசமாதிவடிவ யோகப்பிராப்தியாமோ; அந்த ஞானத்தின் சொரூபத்தை ஸ்ரீ பகவான் நான்கு சுலோகங்களால் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸர்வம் ஸவ-ருʼஷ்யீ வ்ருʼஹவொ ஸ்ருʼஷ்டிஸவ-ரும் வ்ருʼவத்ஸ-ருʼதெ ।
உதி ஸ்ருʼவா ஜஜ்ஞெ ஸாம் பூʼர்யா ஹாவஸ்ருʼஜ்ரிதாஃ ॥ (8)

ப-ம். 1 ஸர்வம் 2 ஸவ-ருʼஷ்யீ 3 வ்ருʼஹவஃ 4 ஸ்ருʼஷ்டிஃ 5 ஸவ-ரும் 6 வ்ருவத்ஸ-ருʼதெ 7 உதி 8 ஸ்ருʼவா 12 ஜஜ்ஞெ 11 ஸாம் 9 பூʼர்யாஃ 10 ஹாவஸ்ருʼஜ்ரிதாஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய நானே சர்வ சகத்திற்கும் உற்பத்திகாரணன், என்னுலே சர்வமும் பிரவிர்த்திக்கின்றன, என்றபிமானித்துப் புத்திமான்கள் பிரேமவடிவபாவத்தோடு கூடியவர்களாகி என்னை ஆராதிக்கின்றார்கள்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! வாசுதேவனெனும் பரப்பிரஹ்மமாகிய நானே இவ்வுலகனைத்தின் உற்பத்திகாரணன்; அதாவது, பரமேசுரனுகிய நானே இவ்வுலகனைத்திற்கும் உபாதானகாரணமும் நிமித்தகாரணமுமாவேன். இவ்வுலகத்தின் நிலையீறு முதலிய வியாபாரங்களும் என்னினின்றே பிரவிர்த்திக்கின்றன; அதாவது, சர்வ சக்தி சம்பன்ன சர்வக்ஞனுகிய என்னுற் பிரேரிக்கப்பட்டு இந்த ஜீவிமநு முதலிய உலகனைத்தும் தத்தம் மரியாதையைக்கடவாது பிரவிர்த்திக்

கின்றன. அல்லது, பிரத்திபக்சாட்சியான்மவடிவமாகிய எனதுசத்தாஸ்பூர்த்தி யைப்பெற்றே இப்புத்தி யிந்திரிய முதலிய வுலகமனைத்தும் பலவகையாய்ச் சேஷ்டிக்கின்றன. இவ்வாறெனது சொரூபத்தையுணர்ந்து விவேகத்தால் தத்துவப் பொருளை யுணர்ந்தவனெவனே அத்தன்மைய புத்திமான் பரமார்த்த தத்துவக் கிரகணவடிவப் பிரேமரூபபாவத்தோடு கூடியவனுய் என்னையே பஜனை செய்கின்றன்; அதாவது, நித்திய நிரந்தரப் பரமேசுரனுகிய என்னையே சிந்திக்கின்றனென்பதாம். (8)

(அ-கை.) ஹே பகவன்! அந்தப் பிரீதிபூர்வக பஜனை எவ்வாறுமென்னு மர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அதனது சொரூபத்தை அருளிச்செய்கின்றார்.

சு-ம். உவித்தா உதவ்ரணா வொயயஞ்ஃ வரஹ்ரம் ।
கயயஞ்ஹ ஸாம் நிதயம் தாஷ்யம்தி அ ரஉம்தி அ ॥ (9)

ப-ம். 1 உவித்தாஃ 2 உதவ்ரணாஃ 4 வொயயஞ்ஃ 3 வரஹ்ரம் 8 கயயஞ்ஃ 5 அ 7 ஸாம் 6 நிதயம் 9 தாஷ்யம்தி 10 அ 11 ரஉம்தி அ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய என்னிடத்திற் சித்தமுடையவர்களும் என்னையடைந்த பிராணனுடையர்களுமாய்ப் பரஸ்பரம் என்னையே அறிவுறுத்தியும் நித்தியம் என்னையே யுரைத்தும் எனதன்பர்கள் சந்தோடத்தை யடைவார்கள் சுகத்தையுமனுபவிப்பார்கள். (9)

(வி-ம்.) பரமேசுரனுகிய என்னிடத்திற் சித்தமுடையவர்கள் என் சித்தத்தவர்கள். அல்லது, பரப்பிரஹ்மமாகிய நானே எவர்களது சித்தத்தின்கண்ணே அவர்கள் எனது சித்தத்தவர்கள்; அதாவது, எவர்கள் மனத்தால் என்னையெப்போதும் சிந்திக்கின்றார்களோ அவர்கள் என்பதாம். பரமேசுரனுகிய என்னையடைந்தனரோ பிராணனெனும் நேத்திர முதலிய விந்திரியங்கள் எவர்கட்கோ, அவர்கள் எனையடைந்த பிராணர்கள். அதாவது:—பரமேசுரனுகிய என்பொருட்டேவிழி முதலிய இந்திரியங்களின் விபாபாரம் எவர்களுக்கோ அவர்கள் எனையடைந்த பிராணர்கள். அல்லது, பாகியவிடயங்களைவிடுத்து என்னிடத்திலே நேத்திர முதலிய விந்தியங்களை எவர்கள் இலயம்பண்ணுபவர்களோ, அல்லது எனது பஜனையின்பொருட்டு எவர்கட்குப் பிராணனெனும் சீவனமாமோ, அயற் பலப்பொருட்டன்றுமோ அவர்கள் எனையடைந்த பிராணர்கள். அங்ஙனமே எவர்கள் அறிஞர்களவையில் சுருதிவாக்கியத்தானும் அதற்கிசைந்த யுக்திகளானும் ஒருவர்க்கொருவர் என்னையே அறிவுறுத்துகின்றார்களோ, எவர்கள் எப்போதும் தமது மாணாக்கர்களின்பொருட்டு என்னையே ஏகரூபத்தானும் நியாயரூபத்தானும் உபதேசிக்கின்றார்களோ அவர்கள் அவ்வாறுவர்கள். இவ்வாறு பரமேசுரனுகிய என்னிடத்தில் சித்தத்தையும் பாகியமான நேத்திர முதலிய கரணங்களையும் தமது சீவனத்தையும் அர்ப்பணஞ்செய்வதும், தமக்கொத்தவர்கட்கு ஒருவர்க்கொருவர் என்னையறிவுறுத்துதலும், தம்மிற்குறைந்த அறிவுடையமாணாக்கர்கட்கு என்னையே உபதேசிப்பதுமாகிய விதுவே எனதாராதனையாம். இவ்வாறு, ஆராதிக்கும் வித்துவான்கள் சந்தோடத்தைபடைவர்கள்; அதாவது, இப்பரமேசுர வாராதனைபினை நான் கிருத கிருத்தியனேனன், இதையொழித்தொரு பொருளும் எனதிட்ட சாதனமன்று என்னு முணர்ச்சிவடிவ சந்தோஷத்தையடைவர்கள். அதனுனே, பரமசுகத்தை யனுபவிக்கின்றார்கள். சந்தோஷத்தால் பரமசுகப் பிராப்தியாமென்பது பதஞ்சலிபகவானுலுங் கூறப்பட்டுளது. 'ஸமாதிஸித்திரீஸ்வரப்ரணிதானாத்' என. பொருள்:—இவ்வதிகாரிக்குச்

சச்சிதாஷத்காரனை சுவற்மினுபலாகிய சுகம் பிராப்தியாகின்றது புராணத்திலு மிது கூறப்பட்டினது.

ஆ-சு. யதுகா ஸெஷ்வம் லோகெயஸ்மிந் விஷயீ ஸஹஸ்ரவம் ।
தாவ்ணா கூபஸெஷ்வமிஹெயதெ காஹஸ்ரதீ ஷொடஸீங்குழி ॥

(போ-ள்.) இவ்வுலகத்தில் விஷயத்தாலுண்டாஞ் சுகங்களெவ்வளவோ, சுவர்க்கம் முதலிய வுலகங்களில் விஷயத்தாலுண்டாம் பெரிய திவ்ய சுகங்களெவ்வளவோ, அந்தச் சுகங்களனைத்தும் திருஷ்ணை நிவிர்த்திவடிவச் சச்சிதாஷத்தாலுண்டாஞ் சுகத்தின் பதினறிலொரு கூறிற்கிணபற்றனவாம் என்க. (9)

(அ-கை.) ஹே அர்ச்சுன! எவ்வதிகாரிகள் கூறிப்போந்தவாற்றல் என்னை யாராதிக்கின்றார்களோ அவர்கட்கு யானும் அந்தப் புத்தியோகத்தைக்கொடுத்து எனது நிர்க்குணவடிவத்தையும் அடைவிப்பேன் என்பதை ஸ்ரீ பகவான் இப்போ தருளிச்செய்கின்றார்.

சு-ம். தெஷாம் ஸததயுக்தா நாம் ஜதாம் ப்ரீதிபூவகம் ।
ததாமி புத்தியொகம்தம் யெந மாமுபயாம்தி தெ ॥ (10)

ப-ம். 4 தெஷாம் 1 ஸததயுக்தாநாம் 3 ஜதாம் 2 ப்ரீதிபூவகம் 7 ததாமி 6 புத்தியொகம் 5 தம் 8 யெந 10 மாம் 11 உபயாம்தி 9 தெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனாகிய என்னிடத்தில் ஒருமைப்பட்ட மனமுள்ளவர்களும் பிரீதியோடு என்னை யாராதிப்பவர்களுமாகிய அந்தப் பக்தர்கட்குக் கூறிப்போந்த அந்த ஞானயோகத்தைப் பரமேசுரனாகிய நான் உண்டாக்குவேன். எந்த ஞானயோகத்தால் அவர்கள் என்னைத் தமதான்மவடிவமாயடைகின்றார்களோ. (10)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! முன்னர் 'உதீதா உதுதிவ்ராணாஃ' என்னுஞ் சுலோகத்தாற் கூறப்பட்ட எனதாராதனைப் பிரகாரத்தாலெவர்கள் என்னை யாராதிக்கின்றார்களோ எப்போது என்னிடத்தொருமைப்பட்ட உள்ளத்தவர்களென இதனாலென எவர்கள் ஸ்துதியம், பூஜை, புகழ், என்பன முதலிய ஒரு பயனையு மிச்சியாது மஹாவன்போடு என்னை யாராதிக்கின்றார்களோ; அப்பக்தர்கட்குக் கூறிப்போந்த ஞானயோகத்தை நானென உண்டாக்குவேன்; அதாவது, 'ஹொவிகம் வெதயொமெதயாஜ்யதெ' என்னும் வாக்கியத்தான் முன்னர்க் கூறப்பட்ட எனது வாஸ்தவ சொரூபத்தை விஷயம்பண்ணும் சம்யக்ஞானமாகிய புத்தியோகத்தை நானென புண்டாக்குவேன் என்பதாம்.

சங்கை:—ஹே பகவன்! அந்தப் புத்தியோகத்தால் அதிகாரிகள் எப்பயனையடைவர்கள்?

சமாதானம்:—'யெநமா உபயாம்திதெ' என அர்ச்சுன! எந்தப் புத்தியோகத்தால் எனதன்பர்கள் என்னையே தமதான்மவடிவமாயடைகின்றார்களோ; அதாவது, கடமாகிய வுபாதியொழிபவே கடவான் அபேதமாய் மாவானையடைவதுபோலவும், ஸ்ரீ கங்கை யமுனை முதலிய நதிகள் தத்தம்வடிவத்தை விடுத்துக் கடலில் அபேதத்தன்மையை யடைவதுபோலவும் எனது பக்தர்களும் எனது பக்தியாலுண்டாகிய தத்துவ சாட்சாத்காரத்தால் என்னையே அபேதமாயடைகின்றார்கள் என்பதாம்; அதாவது, அத்துவிதிய நிர்க்குணப்பரமேசுரனாகிய என்னைத் தமதான்மாவாயே உணர்கின்றார்கள் என்பது பொருள். (10)

(அ-கை.) ஆண்டுத் தனதன்பர்கட்குப் பரமேசுரனல் அடைவிக்கப்பட்ட தத்துவஞானரூப புத்தியோகமானது எந்த அஞ்ஞான நிவிருத்திவடிவ வியாபார மூடையதாய் ஆநந்தமாகிய தனதான்மாவின் பிராப்திவடிவ பலத்தைக்கொடுக் கின்றதோ இடையிலுள்ள அவ்வியாபாரத்தை ஸ்ரீ பகவானிப்போதருளிச்செய் கின்றார்.

சு-ம். தெஷாமேவா நுகம்பாயுஷ் ஊஹஜ்ஞா நஜம் தமஃ।
நாஸயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞா நதீபெ ந பாஸ்வதா ॥ (11)

ப-ம். 1 தெஷாம் 2 மேவ 3 சுநுகம்பாயுஷ்ம் 5 சுஹம் 8 சுஜ்ஞா நஜம் 9 தமஃ 10 நா ஸயாமி 4 சூத்மபாவஸ்தோ 7 ஜ்ஞா நதீபெ ந 6 பாஸ்வதா.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அந்தப் பக்தர்கட்கே அனுக்கிரகார்த்தம் அவர்க ளது ஆன்மாகார விருத்தியிலிருக்கப்பட்டவனுப்ப் பிரஹ்மமாகிய நான் சிதாபாசத் தோடுகூடிய அந்த விருத்தி ஞானவடிவ தீபத்தால் அவர்களின் அஞ்ஞானத்தா லுண்டாய ஆவரணவடிவ இருளை நாசஞ்செய்வேன். (11)

(வி-ம்) ஹே அர்ச்சுன! கூறிப்போந்த பிரகாரத்தால் என்னையாராதிக்கும் அந்தப் பக்தர்களின் அநுக்கிரகார்த்தம்; அதாவது இந்த எனதன்பர்கட்கு எவ் வாற்றானும் மேன்மையுண்டாகுக என்னும் அநுக்கிரகத்தின்பொருட்டுச் சுயம்பிர காசசைதன்ய ஆநந்தாத்துவிதிய பிரத்திபக்கான்மவடிவமாகிய நான் அவர்களது ஆன்மபாவத்தில் ஸ்திதமாய்; அதாவது அவர்களுடைய மகாவாக்கிய ஜன்னிய ஆன்மாகார அந்தக்கரண விருத்தியில் விஷயவடிவத்தால் ஸ்திதனுய்; சிதாபாசத் தோடுகூடிய அவ்வந்தக்கரணவிருத்திவடிவ ஞானதீபத்தாலே அஞ்ஞான ஜன் னிய விருளையிரிப்பேன்; அதாவது, அஞ்ஞானத்தை உபாதானகாரணமாகவுடைய மித்தியாஞானவடிவ ஆன்மவிடயக ஆவரணவடிவாந்தகாரத்தை, அதன் உபா தானகாரணமாகிய அஞ்ஞானத்தை நாசஞ்செய்து கெடுப்பேன். என்னை, உலகப் பிரசித்தமான சர்வப்பிராந்திஸ்தலங்களிலும் அந்தப் பிராந்தியின் உபாதான காரணமாகிய அஞ்ஞானமானது அதிட்டான ஞானத்தாலே நிவிருத்தியாகின் றது, மற்றோருபாயத்தாலுமன்று. பாம்புவெள்ளி வடிவப்பிராந்திகட்கு உபாதான காரணமாகிய அஞ்ஞானமானது கயிறு கிளிஞ்சில் முதலிய அதிட்டான ஞானத் தாலே நிவிருத்தியாகின்றது; மற்றோருபாயத்தாலுமன்று. எவ்விடத்தும் உபா தானகாரண நாசத்தாலே உபாதேயவடிவ காரியங்களும் நாசமாமென்பதோரு தலியே. மண் நூல் முதலிய உபாதானகாரண நாசத்தால் உபாதேயவடிவ குடம் ஆடை முதலிய காரியங்களுமவசியமாய் நாசமாவதுபோன்று, ஆன்மாகார அந்தக் கரணவிருத்திவடிவஞானத்தால் அஞ்ஞானவடிவ உபாதானகாரணம் நாசமாகவே ஆவரணவடிவ உபாதேயத்தின் நாசமுமொருதலியேயாமென்க. ஈண்டு, 'ஜ்ஞா நதீபெந' என்பதால் ஸ்ரீ பகவான் ஆன்மஞானத்தில் தீப ஒப்புமைவடிவ உருவா லங்காரமருளியதால் இப்பொருளைக்குறிப்பித்தருளினர்:—விளக்கு இருளை யொதுக் குவதில் கேவலம் தமதுற்பத்திமாத்திரமே அபேட்சிக்கின்றது. அஃதன்றி, மற்றொரு காரணங்களேயேனும் அப்பியாசத்தையேனும் அபேட்சிப்பதில்லை. அவ்விளக்கால் இருணீங்கிய பின்னர் முன்னுள்ளனவாகிய கட முதலிய பொருள் களே வெளிப்படுகின்றன. முன்னுண்டாகாத பொருள்களன்றும். அதுபோல ஆன்மஞானத்தால் அஞ்ஞானத்தை நிவிருத்திசெய்வதில் அவ்வான்மஞானத்தின் உற்பத்திமாத்திரமே அபேட்சிதமாம். அஃதன்றி வேறோர் கருமமேனும் அப்பி யாசமேனுமபேட்சிதமன்றும். அவ்வான்மஞானத்தால் அஞ்ஞான நாசமானதின் பின்னர் முன்னுள்ள பிரஹ்மபாவவடிவமோட்சமே வெளிப்படுகின்றது. முன்

ஹண்டாகாத மோட்சமுண்டாவதில்லை; எந்த வுற்பத்திபால் அம்மோட்சத்திற்குச் சுவர்க்க முதலிய பலன்கள்போல காசமாந்தன்மையும் கரும முதலியவைகளின் அபேட்சையுமாமோ. அன்றியும் 'லாவ்தா' என்பதால் ஸ்ரீ பகவானிப்பொருளைக் குறிப்பித்தருளினர்:—காற்றின்றிய தீபசத்திலுள்ள பிரகாசமான தீபத்தில் தீவிரமான காற்று முதலிய தடைகளில்லாததுபோலப் பரமசுரனுகிய எனது பக்தியால் கிடைத்த ஆன்மஞானத்தில் அசம்பாவனை முதலிய தோஷப்பிரதிபந்தங்களின்றுமென்க. (11)

(அகை.) இவ்வாறு பரமேசுரனது விபூதியையும் யோகத்தையும் சாமான்யமாய்க்கேட்டு மறித்தும் அதை விசேடமாய்க்கேட்க மிகவேட்கையடைந்து அர்ச்சுனன் ஸ்ரீ பகவானைத்துதிக்கின்றான்.

சுஜ்ஞாத உவாச—

சு-ம். பரம் ப்ரஹ்ம பரம் தாம பவித்ரம் பரமம் பவான் ।
புருஷம் சாச்வதம் திவ்ய மாதிதெவ மஜம்விபும் ॥ (12)
ஆஹுஸ்த்வாமிருஷயஸ்ஸர்வெ தெவர்ஷிர்நாரதஸ்ததா ।
அஸிதொ தெவலொ வ்யாஸஸ் ஸ்வயஞ் செவ ப்ரவீஷி மெ ॥ (13)

ப-ம். 1 பரம் 2 ப்ரஹ்ம 3 பரம் 4 தாம 6 பவித்ரம் 5 பரமம் 7 பவான் 18 புருஷம் 19 சாச்வதம் 20 திவ்யம் 21 ஆதிதெவம் 22 அஜம் 23 விபும் 24 ஆஹுஸ் 17 ருஷயஸ் 9 ஸர்வெ 8 பவெ 11 தெவர்ஷிஸ் 12 நாரதஸ் 10 ததா 13 அஸிதஸ் 14 தெவலஸ் 15 வ்யாஸஸ் 26 ஸ்வயம் 25 அ 27 ஏவ 28 ப்ரவீஷி 16 மெ.

(அ-ம்.) ஹே பகவன்! பரப்பிரமும் பரமதாமமும் பரமபவித்திரமும் தாங்களேயாவீர். எதனாலெனின், நாரத முதலிய சர்வ ரிஷிகளும் தேவரிஷி நாரதர்களும் அசித தேவல வியாசர் முதலிய அனைவரும் உன்னைப் புருஷன் சாசுவதன் திவ்யன் ஆதிதேவன் அஜன் விபுவடிவன் என்று எனக்குபதேசித்திருக்கின்றார்கள். அங்ஙனமே, நீரே தாங்களும் அருளிச்செய்தீர்கள். (12,13)

(வி-ம்.) ஹே பகவன்! தாங்கள் பரப்பிரஹ்மமாவீர்கள், அதாவது, தத்துவஞானிபாலடையத்தக்க சர்வ வுபாதிகளின்றிய நிருவிசேடப்பிரஹ்மம் தாங்களேயாவீர்கள். ஈண்டுப் பரம் என்னும் விசேடணத்தால் உபாசித்தற்குரிய சோபாதிக அபரப்பிரஹ்மத்தின் நீக்கங்கூறப்பட்டது. என்னை 'தவெவம்ப்ரஹ்மகும் விஜிதெஹும் யதிஹ்யுபாஸதெ' என்னுஞ் சுருதியானது உபாசனை பண்ணுதற்குரிய சோபாதிக அபரப்பிரஹ்மத்தை நிஷேதித்து நிர்விசேஷ சைதன்யத்தையே பிரஹ்மமெனக் கூறுகின்றது. இன்னுந் தாங்கள் எத்தன்மையரெனின், பரந்தாமனாகுவீர்; அதாவது, தூலமுதற்கொண்டு அவ்விபாகிருதமீறுகிய எல்லாவுலகத்திற்கு மாசிரயமாவீர். அல்லது, பரமப்பிரகாசரூபமாவீர். ஈண்டும் பரம் என்னும் விசேடணத்தால் விருத்திவடிவ அபரப்பிரகாசநீக்கங்கூறப்பட்டதாம். என்னை, 'ஹ்ருஸ்-ஹ்ருத்யெதத்ப்ரஹ்மவ-ம் உதனவ' என்னுஞ் சுருதி அவ்விருத்திவடிவ ஞானத்தை மனத்தின் பரிணாமவிசேடமெனக் கூறுகின்றது. இன்னுந் தாங்களெத்தன்மையரெனின் பரமபவித்திரமாவீர்; அதாவது, உலக சாஸ்திரப்பிரசித்தமாகிய எத்தனைப் பவித்திரம் பண்ணும் தீர்த்த முதலியவைகளுள்ளனவோ அவ்வனைத்தினும் தாங்கள் பரமோத்தமமான பவித்திரம் பண்ணுபவர். எதனாலெனின் அன்போடுசெய்யப்பட்ட அத்தீர்த்த முதலிய்வைகள் இவனது கேவலம் பாவத்தையே நாசஞ்செய்யும்; அப்பாவகாரணத்திற்குக் காரணமான அஞ்ஞானத்தைக்கெடுக்காது; பரப்பிரஹ்மமாகிய தாங்களோ இவ்வதிகாரியின் விருத்தியி

லாரூடமாய் அஞ்ஞானவடிவகாரணத்தோடு சகல பாவகருமத்தையும் நாசஞ்செய் கின்றீர் ஆதலினாலே 'வவித்ரயாணாம் வவித்ரம் யொ உம்மயூநாஞ்து உம்மும்' என்பது முதலிய மிருதிவாக்கியங்கள் தங்களைப் பவித்திரம் பண்ணப்பட்ட தீர்த் தம் முதலிய சர்வ பவித்திரங்கட்கும் பவித்திரம் பண்ணுபவரென்றும் சர்வ மங்க லங்கட்கும் மங்கலவடிவமெனவுங் கூறுகின்றன.

சங்கை :—ஹே அர்ச்சுன! அத்தன்மைய எனது வடிவத்தைக்கேவலமுனது புத்தியால் நிச்சயித்தனையோ, யாதேனுமொரு பிரமாணத்தால் நிச்சயித்தனையோ என்னுஞ் ஸ்ரீ பகவான் சங்கைக்குக் கூறியவத்தன்மைய வடிவத்தில் பரமாப்தர் களாகிய ரிஷிகள், நேரே ஸ்ரீ பகவான் என்னும் இவர்களது வாக்கியவடிவப் பிரமாணத்தைக் கூறுகின்றனன். 'வாஸுதேவஷம் மாஸுதம்' என்பது முதலிய ஓன்ற ரைச்சுலோகத்தால் ஹே பகவன்! ஞானநிஷ்டையுடைய பிருகுவசிட்டர் முதலிய ரிஷிகளும் தேவரிஷியாகிய நாரதரும் அசிததேவலரிஷிகளும் சாட்சாத் விஷ்ணு அவதாரமாகிய ஸ்ரீ வியாசமுனியும் இத்தன்மைய உனது சொரூபத்தை எனக் குபதேசித்திருக்கின்றார்கள். எவ்வணமுபதேசித்தார்களெனின் ?

சமாதானம் :—'வாஸுதேவஷம்' என, ஹே பகவன் அந்தப் பிருகு முதலிய ரிஷிகள் அந்தமிலா மகிமையுடைய பரமேசுரனாகிய தங்களைப் புருஷனென வருளி னர் ; அதாவது, 'வாஸுதேவாத்பரம் நான்யதகாஷா மாவாஸாமதி' என்னும் இச்சுருதியில் புருஷசத்தத்தாற் கூறப்பட்ட நிர்விசேடப்பரப்பிரஹ்ம சொரூபம் தாங்களேயென உபதேசித்தார்கள். அவர்கள் தங்களைச் சாசுவதமெனவுங் கூறி னார்கள் ; அதாவது முக்காலத்திலும் ஏகரூபமெனக் கூறினர்கள். அவர்கள் தங் களைத் திவ்யமெனவுங்கூறினர். ஆண்டு, 'வாஜெவெஸ்யாஸ்ய ஸவாஸுஹூ தாநி' என்னுஞ் சுருதியில் பரமவியோம சத்தத்தாற் கூறப்பட்ட தமது சொரூபம் திவ மாம். அதிலொளிர்வது திவ்யமாம், அதுவே தாங்கள் எனக்கூறினர் ; அதாவது சர்வலோக ரக்ஷிதமெனக் கூறினர்களென்பதாம். அவர்கள் தங்களை ஆதிதேவனென வுங்கூறினர். ஈண்டு எல்லாவுலகத்திற்குங் காரணமென்பது தியாம், சுவப்பிரகாச மென்பது ஆதிதேவனும். ஆதியும் தேவனுமாவது ஆதிதேவனும் ; அதாவது, அவர்கள் தங்களைச் சர்வ வுலகத்திற்குங் காரணவடிவமாயும் சுவப்பிரகாச வடிவ மாகவுங் கூறினரென்பதாம். ஈண்டுக்காரணத்திற்குச் சுவப்பிரகாசத்தன்மை கூறியதால் நியாய நூலாரும் சாங்கியநூலாருங் கற்பித்த பரமாணுவடிவகாரண மும் பிரதானவடிவகாரணமும் நீக்கப்பட்டன. அவைகள் சடமானதால் பரப்பிர காசமேயாம். அவர்கள் தங்களை அஜனெனவுங் கூறினர் ; அதாவது, தோற்ற மின்றியவரெனக் கூறினர். அவர்கள் தங்களை விபுவெனவுங்கூறினர் ; அதாவது, யாண்டும் வியாபகமெனவுங்கூறினர். ஹே பகவன்! கேவலம் அந்தப்பிருகு முதலிய ரிஷிகள்மாத்திரம் எனக்கித்தன்மைய உனது சொரூபத்தைக்கூறிலர் ; மற்றே, எந்தப் பரமேசுரனாகிய தங்களுடைய வேதரூபவாக்கியத்தை யநுசரித்தே அந்த ரிஷி முதலியோர்களின் வாக்கியங்கள் பிரமாணமாமோ அத்தன்மைய ஸ்ரீ பகவா னாகிய தாங்களும் நேரே எனக்கு 'ஹொகாரம் யஜுதவஹாம் ஸவாஸுஹூ தஷ்டிதம் யொஹம்' என்பது முதலிய வாக்கியங்களால் இத்தன்மைத்தான தங்களுடைய வடிவத்தை அருளிச்செய்தீர்கள். ஈண்டு, 'சூஹாஹ்வா ஊஷயஃ ஸவெஃ' என் னும் வாக்கியத்திலுள்ள சர்வம் என்னுஞ் சப்தத்தானே அந்த நாரதர் முதலிய சர்வரிஷிகளுங் கொள்ளப்படுவர்களாயினும் நாரத அசிததேவலவியாசர் என நான்கு பெயர்களால் அர்ச்சுனன் வெவ்வேறுய்க்கொண்டது சாக்ஷாத் பரமேசுர னுடைய சொரூபத்தைக் கூறுபவர்களாதலின் அவர்கள் மிகவும் சிரேஷ்டர்களென் றறிவுறுத்தற்பொருட்டாமென்க. அன்றியும், 'சூஹாஹ்வா ஊஷயஃ ஸவெஃ' என்னும் வாக்கியத்தால் அர்ச்சுனன் தனது நிச்சயத்தில் ரிஷிகள் வாக்கியத்தின்

சம்மதிகூறியதால் இது குறிப்பிக்கப்பட்டது :—இவ்வதிகாரி சாஸ்திரத்துவாரா தனது புத்தியால் நிச்சயம்பண்ணினும் ஆன்மசொரூபத்தில் மறித்தும் சம்சய மொழாவண்ணம் பிரஹ்மதேவத்தாவாகிய வித்துவானுடைய சம்மதமும் அவசிய மாய்க்கொள்ளற்பாலதென்பதாம். (12,13)

(அ-கை.) ஆண்டு, குருநூற்களா லுபதேசிக்கப்பட்டவர்த்தத்தில் இவ்வதிகாரி ஒருபோதும் சம்சயப்படல்கூடாது. அவ்வர்த்தம் உண்மையே என்னும் சத்தியத்துவபுத்தி பண்ணல்வேண்டும் என்னு மர்த்தத்தைக்குறிப்பித்து அர்ச்சுனன் அந்த வாக்கியத்தில் தனது சத்தியத்துவபுத்தியைக் கூறுகின்றான்.

சு-ம். ஸர்வமேததிருதம் மந்யே யன்மாம் வதஸி கேஶவ !
ந ஹி தே பகவன்வ்யக்திம் விதுர்தேவா ந தானவாஃ ॥ (14)

ப-ம். 6 ஸர்வம் 5 மேதத் 7 ரிதம் 8 மந்யே 3 யன் 2 மாம் 4 வதஸி 1 கேஶவ 14 ந 9 ஹி 11 தே 10 பகவன் 12 வ்யக்திம் 15 விதுஃ 13 தேவாஃ 17 ந 16 தானவாஃ.

(அ-ம்.) ஹே கேசவ ! அர்ச்சுனனாகிய எனக்குத் தங்களால் எவ்வாக்கியங்கள் அருளிச்செய்யப்பட்டனவோ அவ்வாக்கியங்களனைத்தையும் நான் உண்மையென்றெண்ணுகின்றேன். ஹே பகவன் ! எக்காரணத்தால் உமது பிரபாவத்தைத் தேவர்களுமுணரார்களோ அங்ஙனமே தானவர்களுமுணரார்களோ. (14)

(வி-ம்.) ஹே கேசவ ! எனக்கு முன்னர்த்தாங்களும் தங்களுடைய சொரூபத்தை அருளிச்செய்தீர்கள். அங்ஙனமே ரிஷிகளும் அருளிச்செய்தார்கள். அவ்வாக்கியங்களனைத்தும் நான் உண்மையென்றே எண்ணுகின்றேன். ஹே பகவன், உமது வாக்கியத்திலெனக்குச் சிறிதளவும் அப்பிரமாணசங்கையில்லை. எனதுள்ளத்திலுள்ளவைகளனைத்தையும் தாங்கள் சர்வஞ்ஞரானதால் உணருகின்றீர்கள் என்னுமர்த்தத்தை அர்ச்சுனன் கேசவ என்னுஞ் சம்போதனத்தால் குறிப்பித்தனன். ஆண்டு,

ஆ-சு. கேஶவாதி ஸ்ரீகம்வ்யதயா ஸ்வமஹிதீதி கேஶவஃ !

(பொ-ள்) 'க' என்பது பிரஹ்மாவிற்காம், ஈசனென்பது ருத்திரனுக்காம், அவ்விருவர்க்கும் அநுக்கிரகத்தால் எது பிராப்தமாமோ அது கேசவமாம். இவ்வாறு விரித்துக்கூறுவதால் அக்கேசவசப்தம் நிரதிசய ஐசுவரியத்தைப் பிரதிபாதிக்கின்றது. அத்தன்மைய கேசவனெனும் பெயருடைய பரமேசுரனாகிய தாங்கள் எனது இருதயத்திலுள்ள விருத்தாந்தத்தை அறிகின்றீர் என்பதாம். ஆதலின், ஹே பகவன் ! முன்னர்த்தாங்கள் 'நஹிவிதுஃ ஸுரமுனயஃ ப்ரபவம்' 'நதேவாஃ ப்ரகடிம்' என்பது முதலிய வாக்கியங்களால் முன்னர்க்கூறியருளினீர்கள். அவ்வாக்கியங்களனைத்தும் உண்மையேயாம். ஹே பகவன் ! அதாவது, ஹே சம்பூர்ண ஐசுவரிய முதலிய ஆறு பக சம்பன்ன ! உமது பிரபாவத்தை மிகுந்த அறிவுடைய இந்திரன் முதலிய தேவர்களும் மது முதலிய தானவர்களும் பிருகு முதலிய ரிஷிகளும் உணருமாற்றலிலாதவர்கள். உமது பிரபாவத்தை அத்தன்மையவர்களே யுணராரென்னின் இக்காலத்திய சிற்றறிவுடைய மனுடர்கள் அப்பிரபாவத்தையுணரார்களென்பதில் கூறற்பாலதென்னே. (14)

(அ-கை.) ஹே பகவன் ! எக்காரணத்தால் பரமேசுரராகிய தாங்கள் அத்தேவதை ரிஷி முதலிய சர்வர்கட்கும் ஆதிகாரணரும் அவர்களால் அறியொணாதவருமாகின்றீரோ ; அக்காரணத்தானே தாங்களே தங்களது பிரபாவத்தை உள்ளவாறுணர்ந்தவராவீர் என்னுமர்த்தத்தை அர்ச்சுனன் கூறுகின்றான்.

சு-ம். ஹ்ரயஸெவாத்மநா தாரம் வெத்ஸு வும் வாஸுதேவாத்மக !
ஹரிதஹாவந ஹரிதெஸ ஸெவஸெவ ஜமத்வதெ ॥ (15)

ப-ம். 6 ஹ்ரயம் 7 ஹவ 9 க்ரூத்மநா 10 க்ரூதாரம் 11 வெத்ஸு 8 கும் 1 வாஸுதேவாத்மக
2 ஹரிதஹாவந 3 ஹரிதெஸ 4 ஸெவஸெவ 5 ஜமத்வதெ.

(அ-ம்.) ஹே புருஷோத்தம ! ஹே பூதபாவன ! ஹே பூதேச ! ஹே தேவ தேவ ! ஹே ஜகத்பதியே ! ஹே பகவன் ! பிறருபதேசமின்றியே நீங்கள் தங்கள் ஸொரூபத்தானே தங்களதான்மாவையுணர்கின்றீர்கள். (15)

(வி-ம்.) ஹே குடாகேச! அதாவது நித்திரையை ஜயித்த அர்ச்சுன! எனது தேகத்தில் மிக அற்பமாகிய நகமூலமாத்திரவடிவ அவயவத்திலிருக்கப் பட்ட இத்தாவரசங்கமசகித உலகனைத்தையும் நீ நோக்குதி. எவ்வுலகனைத்தும் அவ்வவ்விடத்தில் நூறுகோடி வருஷபரியந்தஞ் சுற்றினுங் காணுணுதாமோ, அவ்வுலகனைத்தையும் இப்போது ஓரிடத்திருக்கின்றதைக் காணுதி. ஏனையவெற்றி தேவ்விகளைக்காண விரும்பினும் உனதையம் நீங்குவான் எனதாக்கையின் கண்ணே அவைகளையும் பார்த்துக்கொள்ளுதி. (7)

(அ-கை.) ஆண்டு 'மமதேஹே யதிதஞ்சான்யம் யச்சாபி த்ரஷ்டுமிச்சஸி' தங் களுடைய ஐசுவரிய சொரூபத்தை நான் காணற்கேலுமெனத் தங்கட்கபிமதமேல் அவ்வடிவத்தை எனக்குத் தரிசிப்பித்தருளுவீராக; என முன்னர் அர்ச்சுனன் ஸ்ரீ பகவானிடத்தே கூறியிருந்தனன்; இப்போது அவ்வடிவத்தை நோக்குவதில் ஸ்ரீ பகவான் சிறிது விசேடத்தை அருளிச்செய்கின்றார்.

சு-ம். ந து மாம் ஶக்யஸே த்ரஷ்டுமனேநைவ ஸ்வசக்ஷுஷா ।
திவ்யம் ததாமி தே சக்ஷுஃ பஶ்ய மே யோகமைஶ்வரம் ॥ (8)

ப-ம். 7 ந 1 து 4 மாம் 8 ஶக்யஸே 6 த்ரஷ்டும் 2 அனேந 5 ஏவ 3 ஸ்வசக்ஷுஷா 10 திவ்யம் 12 ததாமி 9 தே 11 சக்ஷுஃ 16 பஶ்ய 13 மே 15 யோகம் 14 ஐஶ்வரம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மற்று இவ்வுனது நேத்திரத்தால் எனது திவ்ய சொரூபத்தை ஒருகாலும் நோக்கற்கு வலியனுகாய். ஆதலின், நான் உனக்குத் திவ்ய நேத்திரத்தைத்தருகின்றேன். அதனல், எனது ஐசுவரியவடிவ யோகத் தைக்காணுதி. (8)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இயல்பாற்பெறப்பட்ட உனது பிராகிருதசட்சு வால் திவ்யவடிவத்தையுடைய என்னைக்காணுவதற்கு ஒருபோதும் வலியனுகாய். அற்றேல், ஹே பகவன்! நான் உனது சொரூபத்தை எவ்வாறு காண்பேன் என்னு மருச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'திவ்யம் ததி' ஹே அர்ச்சுன! எனது திவ்ய சொரூபத்தைக்காணத்தக்க அப்பிராகிருதமெனும் திவ்ய சட்சுவை நானுனக்குக் கொடுக்கின்றேன், அதனல் எனது ஐசுவர யோகத்தை அதாவது, செய்யொணுப்பொருளையுஞ் செய்வதற்கு ஆற்றல் வடி வாகிய யோகத்தைக்காண்பாய்; அந்த யோகம் ஐசுவரமாம். அதாவது பரமேசுர னுகிய எனக்கே அசாதாரண தருமமானதாம், மற்றெவரிடத்தும் அஃதிருப்ப தின்றும். ஈண்டுச் சில புத்தகத்தில் 'மதீயமைஸ்வரயோகம்' எனவும் பாடமுளது. அதற்கு நீ இந்நேத்திரத்தில் திவ்ய சொரூபத்தையுடைய என்னைக் காண்டற்காற்ற லுளனுகாய் எனப் பொருள்பண்ணத்தக்கது. (8)

(அ.கை) ஆண்டு ஸ்ரீ பகவான் தனது திவ்ய ரூபத்தைத் தரிசிப்பித்தருளி னர். அதைத் தரிசித்து மிகவும் விஸ்மயத்தையுடைந்த அர்ச்சுனன் தான்கண்ட ஆதித்தியரூபத்தை ஸ்ரீ பகவானுக்குக்கூறினன் என்பதை விருத்தாந்தத்தோடு கூட 'ஸவஸ்ஸ்ரு' என்பது முதலிய ஆறு சுலோகங்களால் திருதராஷ்டிரர்க் குச் சஞ்சயர் கூறுகின்றார்.

ஸஞ்ஜய உவாச.

சு-ம். ஸவஸ்ஸ்ரு ததோ ராஜந் ஸஹாயொமஸ்ஸொ ஹரிஃ।
ஸ்ரஸ்யாஸாஸ வாஸுய வரஸ்ரு ஸ்ரீவஸ்ஸஸ்ரு ॥ (9)

ப-ம். 4 ஸவம் 5 ஸ்ரு 6 ததஃ 1 ராஜந் 2 ஸஹாயொமஸ்ரஃ 3 ஹரிஃ 11 ஸ்ர
யாஸாஸ 7 வாஸுய 8 வரஸ்ரு 10 ஸ்ரீவம் 9 ஸஸ்ரம்.

(அ-ம்.) ஹே திருதராஷ்டிர! அம்மகா யோகேசுரனுகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் இவ்வாறுயவாக்கியத்தை யருளிச்செய்து பின்னர் அர்ச்சுனனுக்குத் தமது திவ்ய ஐசுவரரூபத்தைத் தரிசிப்பித்தருளினர். (9)

(வி-ம்.) ஹே திருதராஷ்டிர! அந்த மகா யோகேசுரனுகிய ஹரி: அதா வது எல்லாவற்றினு மேலானவரும் சர்வ யோகிகட்கீசரும் தமதன்பர்களின் கிலேசங்களனைத்தையுங் கெடுப்பவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் இந்தப்பிராகிருதி சம்பந்தமாகிய நேத்திரத்தால் திவ்ய வடிவழுடைய பரமேசுராகிய எம்மைக் காண்டற்காற்றலுளனுகாய்; ஆதலின், நானுனக்குத் திவ்யநேத்திரத்தைத் தரு கின்றேன் என்னும் வாக்கியத்தை அர்ச்சுனனுக் கருளிச்செய்து அந்நேத்திரத் தைக்கொடுத்தருளியபின்னர் மிகவு மன்பனுகிய அர்ச்சுனனுக்குக் காணற்கரிய தமது திவ்யவடிவத்தைக்காட்டியருளினர். (9)

(அ-கை.) இப்போது அத்திவ்யரூபத்தைப் பலவகை விசேடணமுடைய தாகக் கூறுகின்றார்.

சு-ம். அநேகவக்த்ரநயந மநேகாத்புததர்ஶநம்!
அநேகதிவ்யாபரண திவ்யாநேகோத்யதாயுதம் ॥ (10)

ப-ம். 1 ஸுதெகவகு நயநம் 2 ஸுதெகாஓ தஉபஉநம் 3 ஸுதெகஷிவ்யாஹரணம்
4 ஷிவ்யாதெகொஉ்யதாயாயம்.

(அ-ம்.) ஹே ராஜன்! பல முகங்களையும் நேத்திரங்களையுமுடையதும், அனேகாற்புதப்பொருள்களின் தரிசனங்களையுடையதும், அனேக திவ்ய பூடணங்களையுடையதும், ஏந்திய பல வாயுதங்களையுடையதுமாகிய சொரூபத்தை ஸ்ரீ பகவான் தரிசிப்பித்தருளினர். (10)

(வி-ம்.) ஹே ராஜன்! அநேக முகங்களையும் அநேக நேத்திரங்களையுமுடையதும், விசக்கத்தக்க பலவகை வஸ்துக்களின் தரிசனமுடையதும், அநேக திவ்யாபரணங்களையுடையதும், ஏந்திய சங்குசக்கர முதலிய ஆயுதங்களையுடையதுமாகிய சொரூபத்தை அர்ச்சுனனுக்கு ஸ்ரீ பகவான் தரிசிப்பித்தருளினர். (10)

(அ-கை.) அன்றியும்.

சு-ம். திவ்யாயுராம் வாயாம் திவ்யமாயாநுலெவநம்।
ஸவாஉஜ்ஜயஉயம் தெவ உநஞ்ஞம் விஜ்வதொஉவழ॥ (11)

ப-ம். 1 திவ்யாயுராம் வாயாம் 2 திவ்யமாயாநுலெவநம் 3 ஸவாஉஜ்ஜயஉயம்
4 தெவம் 5 ஸுநஞ்ஞம் 6 விஜ்வதொஉவம்.

(அ-ம்.) ஹே ராஜன்! திவ்ய மாலைவஸ்திராதாரணமுடையதும், திவ்ய நறுநாற்றமுடைய பொருள்களின் பூச்சுடையதும், சர்வாச்சரியமயமும், பிரகாசவடிவமும், அபரிச்சின்னமும், எப்புறமும் முகமுடையதுமாகிய சொரூபத்தைக் காட்டியருளினர். (11)

(வி-ம்.) ஹே ராஜன்! புட்பமய இரத்தினமயமாகிய மாலைகளைத்தரித்ததும், பீதாம்பர முதலிய திவ்ய ஆடைகளைத்தரித்ததும், திவ்யமான நறுநாற்றமுடைய கர்ப்பூரசந்தன முதலியவைகளின் பூச்சையுடையதும், சர்வாச்சரியமயமும்; அதாவது, தேஜசு, பலம், வீரியம், சத்தி, ரூபம், குணம், அவயவம், அவஸ்தானம் என்பன முதலிய சர்வ விசேடணங்களால் அநேகாற்புதரூபமுடையதும்; தேவமும், அதாவது, பிரகாசவடிவமும்; அனந்தமும், அதாவது, மூவிதபரிச்சேதமற்றதும்; விசுவதோமுகமும், அதாவது, எப்பக்கமும் முகமுடையதுமாகிய தமது சொரூபத்தை ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்குக் காண்பித்தருளினர், இவ்வணம், முந்திய எட்டாவது சுலோகத்திலுள்ள 'உபஉயா ஊஹ' என்னும் பதத்தோடு இவ்விரண்டு சுலோகங்களும் அந்வயஞ்செய்யத்தக்கன. அல்லது, 'ஸுஜ்ஞஉதொஉபஉ' என்னும் பதத்தைச் சேர்த்துக்கொண்டு இவ்விரண்டு சுலோகங்களும் அந்வயஞ்செய்யத்தக்கன; அதாவது, அத்தன்மைய சொரூபத்தை அர்ச்சுனன் தரிசித்தனன் என்பதாம். (11)

(அகை.) ஆண்டுப் பூர்வசுலோகத்தில் அவ்விசுவரூபத்தை 'தேவ' என்னும் விசேடணத்தாற் கூறினர். இப்போது ஈண்டதை விரிவாய் வர்ணிக்கின்றார்.

சு-ம். திவி ஸூயஉஸஹஸ்ரஸ்ய ஹவெஉ்யாமவஉ்திதா।
யதிஹாஃ ஸதृ்ருஸீ ஸா ஸ்யாத்பாஸஸ்தஸ்ய மஹாத்மநஃ॥ (12)

ப-ம். 1 திவி 4 ஸூயஉஸஹஸ்ரஸ்ய 7 ஹவெகு 2 யாமவகு 6 உத்திதா 3 யதி
5 ஹாஃ 13 ஸதृ்ருஸீ 8 ஸா 12 ஸ்யாகு 11 பாஸஃ 9 தஸ்ய 10 மஹாத்மநஃ.

(அ-ம்.) ஹே ராஜன்! வானில் ஏகோகாலத்தில் ஆயிரம் சூரியப்பிரபை யுதிக்குமேல் அது அவ்விஸ்வரூப ஒளிக்கொப்பாம். (12)

(வி-ம்.) ஹே ராஜன்! வானிலாயிர மிரவிகளுதித்து அவைகளின் பிரபைகள் ஒரே காலத்தில் ஒன்றுகூடி யெழுமேல் அது இவ்விசுவரூபத்தின் பிரபைக்கொப்பாம். அல்லது, ஒப்பாகாது. அச்சூரியர் களின் பிரபைகளினின்றும் விசுவரூபத்தின்பிரபை மிகவும் மேலானதாம் என யானினைக்கின்றேன். இதற்கோரெடுத்துக்காட்டின்றும். ஆண்டு, ஒரு காலத்தில் அளவிலாச்சூரியர்களுதயமாதலை சம்பவியாதாதலின் இவ்விவாப்புமை அபூர் வோபமாவாம். இவ்வுவமையால் இப்பொருள் குறிப்பிக்கப்பட்டது:—எவ்வாற் றானும் அவ்விசுவரூபப்பிரபைக்கொப்புமை சம்பவியாமென்பதாம். (12)

(அ-கை.) ஆண்டுப்பூர்வம் 'உஹைகஸ்தம் ஜமகூதஸ்தம் வஸ்யாஉயஸ்ய ஸாதுஸ்ரம்' என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்குத் தனதாக்கையி லொருகூற்றில் உலகனைத்தையுங்காண ஆணைகொடுத்தனர், அர்ச்சுனன் அதையு மநுபவித்தனன் என்பதையும் சஞ்சயர் திருதராஷ்டிரர்க்குக் கூறுகின்றார்.

சு-ம். தத்ரைகஸ்தம் ஜகதஸ்தம் வ்யவிஹதமநேகதா।
கவஸ்யதேவதேவஸ்ய ஸரீரே பாண்டவஸ்ததா ॥ (13)

ப-ம். 4 தத்ர 6 ஏகஸ்தம் 10 ஜகத் 9 கஸ்தம் 8 வ்யவிஹதம் 7 அநேகதா 11 கவ
ஸ்யத் 3 தேவதேவஸ்ய 5 ஸரீரே 2 பாண்டவஸ் 1 ததா.

(அ-ம்.) ஹே ராஜன்! அக்காலத்தில் அர்ச்சுனன் தேவர்களால் ஆராதிக் கப்பட்ட அவ்விசுவரூப சரீரத்தில் ஏகதேசத்திலுள்ள பலவகையான வெவ்வே றுலகனைத்தையுங்கண்டனன். (13)

(வி-ம்.) ஹே ராஜன்! எப்போது ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்கு ஆச்சரிய மான விசுவரூபத்தைத் தரிசிப்பித்தனரோ, அப்போதே அவன் இந்திரன் முதலிய தேவர்களாற் பூஜிக்கப்பட்ட பகவானது அவ்விசுவரூப சரீரத்தில் ஒரு சிறித வயவத்தின்கண்ணே இவ்வுலகனைத்தையும் பார்த்தனன் அவ்வுலகங்களைத் தன்மையவெனின், தேவ பிதிரு நரர்கள் என்பன முதலிய பலவகையால் வெவ்வே றுணைவை என்பதாம். (13)

(அ-கை.) ஹே திருதராஷ்டிர! இத்தன்மைய அற்புத விசுவரூபத்தைத் தரிசித்தும் பயத்தையுமடைந்திலன்; அதைக்கண்டு தனது நேத்திரத்தை மூடிக் கொள்ளவுமில்லை; பிராந்திவசத்தால் அப்போது அவசியஞ்செய்யற்பாலதை மறக் கவுமில்லை; பயபீதிகளையடைந்து அவ்விடத்தினின்று ஓடவுமில்லை; மற்றே, பெருமுள்ளக்கலக்கத்தையடைந்தும் மிகுந்த தைரியமுடையோனதலின் உரிய விவகாரத்தை அக்கால் செய்தே முடித்தனன் என்னுஞ் சார்வார்த்தங்களையுஞ் சஞ்சயர் திருதராஷ்டிரர்க்குக் கூறுகின்றார்.

சு-ம். ததஃஸ விஸ்மயாவிஷ்டோ ஹ்ருஷ்டரோமா தநஞ்ஜயஃ।
ப்ரணம்ய ஸிரஸா தேவம் கிருதாஞ்ஜலிரபாஷத ॥ (14)

ப-ம். 1 ததஃ 4 ஸஃ 2 விஸ்மயாவிஷ்டஃ 3 ஹ்ருஷ்டரோமா 5 தநஞ்ஜயஃ 8 ப்ரணம்ய
7 ஸிரஸா 6 தேவம் 9 கிருதாஞ்ஜலிஃ 10 அபாஷத.

(அ-ம்.) ஹே திருதாஷ்டிர! அதன்பின் ஆநந்தத்தால் வியாப்தனும், புள கிதரோமத்தையுடையனுமாகிய அர்ச்சுனன் அந்த நாராயணதேவனைத் தன்றலை யால் வணங்கி இருகரங்களையுங்கூப்பி இவ்வாக்கியத்தைக்கூறினன். (14)

(வி-ம்.) ஹே ராஜன்! யுதிட்டிரருடைய ராஜசூயயாகத்திற்கு இராஜர்க ளனைவரையும் வென்று தனத்தைக்கொண்டுவந்ததாற் றனஞ்சயனெனப் பேர் பெற்றவனும், நேரே மாதேவரோடு போர்புரிந்த மிகப்பிரசித்தமாகிய பராக்கிரம முடையவனும், அக்கினியைப்போன்ற அத்தியந்தமொளியுடையவனும், மிகத் தைரியமுடையவனுமாகிய அர்ச்சுனன் அவ்விசுவரூபத்தைக் கண்ணுற்றபின்னர் விஸ்மயத்தால் ஆவிஷ்டனுய் அதாவது அவ்வற்புதரூப தரிசனத்தாலுண்டாகிய சித்தத்தின் அலௌகிக சமத்காரவடிவ விஸ்மயத்தால் வியாப்தனுகி அதனுனே மயிர்க்கூச்சுடையனுகிய அர்ச்சுனன் அவ்விசுவவடிவெடுத்த நாராயணனைத் தலை தரையிற்படப் பேரன்போடு வணங்கி இருகைகுவித்து மேற்சொல்லும் வாக்கி யத்தைக்கூறினன். (14)

(அ-கை) ஆண்டு ஸ்ரீ பகவான் எனக்கு யாவரானுங்காண்டற்கரிய விசுவ ரூபத்தைக்காட்டியருளினராயினும், பகவானீந்த திவ்யசட்சுவால் அவ்வடிவத் தைதப்புலப்படக்காண்கின்றேன். ஆதலின், அந்தோ! எனது பாக்கியம்என, தன தனுபவத்தை வெளிப்படுத்துபவனுய் அர்ச்சுனன் ஸ்ரீ பகவானிடத்தே விண் ணப்பிக்கின்றனன்.

அர்ஜுன உவாச.

சு-ம். பஶ்யாமி தெவாம்ஸ்தவ தெவ தெஹே
ஸர்வாம்ஸ்ததா பூதவிஶெஷஸம்காந் ।
ப்ரஹ்மாணமீஶம் கமலாஸனஸ்தம்
ருஷீம்ஶ்ச ஸர்வாம்ருரகாம்ஶ்ச திவ்யாந் ॥ (15)

ப-ம். 6 பஶ்யாமி 5 தெவாந் 2 தவ 1 தெவ 3 தெஹே 4 ஸர்வாம்ஸ் 7 ததா 8 பூத விஶெஷஸம்காந் 11 ப்ரஹ்மாணம் 10 ஈஶம் 9 கமலாஸனஸ்தம் 14 ருஷீந் 12 ச 13 ஸர்வாம்ஸ் 17 உரகாந் 15 ச 16 திவ்யாந்.

(அ-ம்.) ஹே தேவ! உன்னுடைய இந்த விசுவரூபதேகத்தில் நான் சர்வ தேவதைகளையும் பார்க்கின்றேன்; தாவரசங்கமரூப பூதசமூகங்களையுங்காண்கின் றேன்; கமலாசனத்திலமர்ந்திருக்கும் சர்வத்திற்கும் நியந்தாவாகிய நான்முகப்பிர ஹ்மாவையும் பார்க்கின்றேன்; சர்வ ரிஷிகளையும் பார்க்கின்றேன்; திவ்யமாகிய சர்ப்பங்களையும் பார்க்கின்றேன். (15)

(வி-ம்.) ஹே உலகத்தைத் தாரணஞ்செய்யப்பட்ட நாராயணரே! உம் முடைய விசுவரூபமாகிய இத்தேகத்தின்கண்ணே நான் வசுக்கள் உருத்திரர்கள் ஆதித்தியர்கள் என்பவர் முதலிய சர்வ தேவதைகளையும் பார்க்கின்றேன்; அதா வது இத்திவ்ய நேத்திர சன்னிய ஞானத்திற்கு விடயமாக்குகின்றேன். இவ் வாறே 'பஶ்யாமி' என்னுஞ் சப்தார்த்தத்தை மேலுஞ் சர்வ பரியாயங்களிலு முணர்ந்துகொள்க. அங்ஙனமே தாவர சங்கமவடிவ பூதசமூகங்களையும் பார்க் கின்றேன். கமலாசனத்தில் வீற்றிருக்கும் சர்வபூதங்களின் நியந்தாவாகிய நான்முகப் பிரஹ்மாவை அதாவது பூமிவடிவ கமலத்தின் கர்ணிகையான்மகசு மேருவாகிய ஆசனத்திலேனும், விஷ்ணுவினுடைய நாபிக்கமலவடிவ ஆசனத்தி லேனும் வீற்றிருக்கப்பட்ட பிரஹ்மாவையும் பார்க்கின்றேன். பிரஹ்மாவின் புத்

திரர்களாகிய வசிஷ்டர் நாரதர் முதலிய ரிஷிகளையும் பார்க்கின்றேன். இவ்வுலகிற் பிரசித்தமின்றிய வாசுகி முதலிய சர்ப்பங்களையும் பார்க்கின்றேன். (15)

(அ-கை.) ஆண்டு ஸ்ரீ பகவானுடைய எந்தவிசுவரூபதேகத்தில் அர்ச்சுனன் கூறிப்போந்த பொருள்களனைத்தையுங் கண்டனனே, அத்தேகத்தை இப்போது பலவகையான அற்புத விசேடணங்களால் வர்ணிக்கின்றான்.

சு-ம். சுநெகுவாஹமுரவகு நெத்ரம் வஸ்யாதி சுவாம் லவ-ுதாநனாலவம்।
நாஞ்ஜம் நயம் நவாநஹுவாதிம் வஸ்யாதி விஸ்வஸ விஸ்வஸவ ॥

ப-ம். 3 சுநெகுவாஹமுரவகு நெத்ரம் 7 வஸ்யாதி 6 சுவாம் 4 லவ-ுதாந
5 சுநஞ்ஜலவம் 11 நயம் 10 சுஞ்ஜம் 14 நயம் 13 உயம் 14 நவாந 8 வாநஹ 9 தவ
15 சூதிம் 12 வஸ்யாதி 1 விஸ்வஸ 2 விஸ்வஸவ.

(அ-ம்.) ஹே சர்வேசர! சர்வ விசுவரூப! அநேகந் தோள் உதரம் முகம் நேத்திரங்களையுடையவரும், எவ்விடத்து மனந்தரூபமுடையவருமாய உம்மை நான் பார்க்கின்றேன்; மற்றுமது ஆதிமத்தியாந்தங்களைக் காணிலேன். (16)

(வி-ம்.) ஹே சர்வ விசுவேச! சர்வ விசுவரூபமுமாகிய பகவன்! பலவகையான தோள்கள் உதரங்கள் முகங்கள் நேத்திரங்களும் எதன்கண்ணே, அத்தன்மைய உமது விசுவரூபத்தை நான் இத்திவ்ய சட்சுவால் பார்க்கின்றேன்; எவ்விடத்தும் அனந்தரூபமாகிய உம்மைப் பார்க்கின்றேன்; உமது ஆதியையும் மத்தியத்தையும் அந்தத்தையும் காணிலேன். என்னை, எப்பொருள் தேசத்தாலேனும் காலத்தாலேனும் பரிச்சின்னப்படுமோ, அப்பொருளே ஆதிமத்தியாந்தங்களையுடையதாம்; தாங்களோ சர்வ தேசகாலங்களிலுமுள்ளவராதலின் தங்கட்கவை சம்பவியா. ஈண்டு (ஹே விசுவேசர விசுவரூப) என அர்ச்சுனன் சம்போதனை பண்ணியது மிகுந்த சம்பிரமத்திலாம். (16)

(அ-கை.) இப்போது அர்ச்சுனன் அவ்விசுவரூப பகவானை வேறோராற்றால் பலவகை விசேடணங்களோடுகூடியவராய்க் கூறுகின்றான்.

சு-ம். கிரீடிநம் கதிநம் அக்ரணம் அ
தெஜோராசிம் லவ-ுதோ தீவிதஞ்ஜம்।
வஸ்யாதி சுவாம் உர்நி-ுரீக்ஷ்யம் லஜ்ஞா
தீவ்ராதபாகு-ுயுர்நிலவ்ரயேயம் ॥ (17)

ப-ம். கிரீடிநம் 2 கதிநம் 3 அக்ரணம் 4 அ 5 தெஜோராசிம் 6 லவ-ுதோ
7 தீவிதஞ்ஜம் 13 வஸ்யாதி 11 சுவாம் 8 உர்நி-ுரீக்ஷ்யம் 12 லஜ்ஞாகு
9 தீவ்ராதபாகு-ு யுர்நிம் 10 சுவ்ரயேயம்.

(அ-ம்.) ஹே பகவன்! கிரீடத்தைத் தரித்தவரும் கதையைத் தரித்தவரும் சக்கரத்தை யேந்தியவரும் பேரொளிக் கூட்டவடிவினரும் எப்புறத்தும் பிரகாசமானவரும் காண்டற்கரியவரும் பிரகாசிக்கப்பட்ட தீயிரவிகளின் பிரபைபோன்ற பிரபையையுடையவரும் அப்பிரமேயருமாகிய உம்மை நான் எப்புறத்துங்காண்கின்றேன். (17)

(வி-ம்.) ஹே பகவன்! தங்களுடைய விசுவரூபம் எத்தன்மையதினின் சிரசில் மகுடந்தரிக்கப்பட்டது, கையிற் கதையைத் தாங்கியது, சக்கரத்தையு மேந்

தியது, எப்புறத்தும் பிரகாசமானது, ஒளிகளின் சமூகவடிவாயது, இதனை காண்டற்கரியது. அதாவது, இத்திவ்ய நேத்திரமின்றிப் பார்க்கொணாதென்பதாம். ஈண்டு 'ஊ॒மி॒ஸ்ரீக்ஷ்யம்' என மூலபாடமுளதேல் 'ஊ॒ஃ' என்னுஞ் சத்தத்திற்கு நீக்கப்பொருளென்றுணர்க; அதாவது, தங்களுடைய அச்சொரூபம் பார்க்கொணாதென்பதாம். அவ்விசுவரூபம் மீண்டு மெத்தன்மையதினின், பேரொளியையுடைய தியிரவிகளின் பிரபைபோன்ற பிரபையையுடையது; அப்பிரமேயமானது அதாவது, இத்தன்மையது இவ்வடிவம் எனத் துணிதற்குக்கூடாததாம். இத்தகைய வடிவுபூண்ட வும்மை எப்புறத்தும் நானித்திவ்யநேத்திரத்தாற் பார்க்கின்றேன். 'ஊ॒மி॒ஸ்ரீக்ஷ்யம்' என்னும் வாக்கியத்தால் அவ்விசுவரூப தரிசனத்தை நிடேதித்தனையினும் 'வஸ்யாமி' என்னும் வாக்கியத்தால் அதன் தரிசனத்தையுங் கூறினதலின், பூர்வோத்தர வாக்கியங்கள் முரண்படுகின்றன; அங்ஙனமாயினும், அதிகாரியின் வேறுபாட்டால் அவ்விரண்டும் பொருந்துமாமென்க. ஆண்டுத் திவ்யநேத்திரமிலாதோனுக்குக் காண்டற்கரியதும். அஃதுடையோனுக்குக் காண்டற்குரியதுமாமென்க. (17)

(அ-கை) ஹே பகவன்! அறிவுடையோர்களானும் தருக்கித்தற் கேலாத தங்களுடைய நிரதிசய ஐசுவரிய தரிசனத்தால் நான் தங்களை இவ்வாறு நினைக்கின்றேன் என்பதைக்கூறுகின்றான்.

சு-ம். கூ॒ஃக்ஷ்யம் வபு॒ஃ வெதி॒தவ்யம் கூ॒ஃஹ்ய விஸ்வஹ்ய வரம் நிதா॒நம்।
கூ॒ஃவ்யயஃ ஸாஸ்வ॒தது॒ஃமொவ்தா ஹ॒நாதநஸ்வம் வா॒ஸு॒ஷோ॒ஃதெ॒ ॥

ப-ம். 1 கூ॒ம் 3 கூ॒ஃக்ஷ்யம் 2 வபு॒ஃ 4 வெதி॒தவ்யம் 5 கூ॒ம் 6 கூ॒ஃஹ்ய 7 விஸ்வஹ்ய 8 வரம் 9 நிதா॒நம் 10 கூ॒ம் 11 கூ॒ஃவ்யயஃ 12 ஸாஸ்வ॒தது॒ஃமொவ்தா 14 ஹ॒நாதந 13 கூ॒ம் 15 வா॒ஸு॒ஷஃ 17 ஒ॒தஃ 16 ஒ॒.

(அ-ம்.) ஹே பகவன்! தாங்களே பரமாக்கரமும், காணத்தக்கவரும், இவ்வுலகத்திற்குப் பரமாசிரயரும், அவ்யயரும், அநாதியாகிய தருமங்களை யிரட்சிப்பவரும், சநாதனரும், பரமான்மாவுமாவீர் என்பதே எனது சம்மதமாம். (18)

(வி-ம்.) ஹே பகவன்! "ஏதத்வைத தக்ஷரம் கார்க்கி" என்பது முதலிய சுருதிகளால் அக்ஷரரூபமாய்ப்பிரதிபாதிக்கப்பட்டதும், அவ்வியக்தாத் புருஷஃ பரஃ, என்பது முதலிய சுருதிகளால் சர்வத்தினும் பாரூபமாகப் பிரதிபாதிக்கப்பட்டதுமான நிர்க்குணப் பிரஹ்மமும் தாங்களேயாவீர். இதனை தாங்களே முமுட்சுக்களால் வேதாந்த நூற்சிரவணத்தால் அடையத்தக்கவராவீர். தாங்களே இவ்வுலகத்திற்குப்பரமாசிரயராவீர், அதாவது கற்பிதமாகிய இவ்வுலகனைத்திற்கும் அதிட்டானரூபமாவீர். இதனை தாங்கள் அவ்வியயராவீர்; அதாவது நித்தியமாவீர். நித்தியமாகியவேதத்தாற் பிரதிபாதிக்கப்படுதலின், சாசுவதமான வருணாசிரம தருமங்களையும் தாங்களே பாலிப்பவர். அல்லது 'ஸாஸ்வ॒தது॒ஃமொவ்தா' என்பது இருபதமாயுணரத்தக்கது. ஆண்டுச் 'சாசுவத' என்னும் பதம் பகவானுடைய சம்போதனமாம். அதாவது ஹே சாசுவத! 'நித்தியரூப'. இப்பக்ஷத்தில் 'அவ்யயஃ' என்பதற்குக் கேடற்றதெனப் பொருள்பண்ணவேண்டும். இதனை சநாதனமாகிய பரமான்மதேவ புருடரும் தாங்களே என்பதனது அபிமதம். ()

(அ-கை.) அன்றியும்,

சு-ம். ஸ॒நாதி॒யஸ்வாக்ஷ॒ரவீய॒ஃ ஸ॒ஸ்வபோஹ॒ம் ஸஸ்மி॒ஸ்யய॒ஃஸ்தெ॒ரம்।
வஸ்யாமி கூ॒ம் தீவ்ஹ॒ரதாஸவக்ஷ்வ॒தெஜஸா விஸ்வமி॒ம் தவ॒ஸ்ஹ ॥(19)

ப-ம். 1 சுதாஜிஜயஸ்ஸாஜ்ஞம் 2 சுதஜ்ஞவீயஸ்ஸும் 3 சுதஜ்ஞவாஹஸ்ஸும் 4 ஸஸிஹரியஸ்ஸும் நேதஸ்ஸும் 11 வஸ்யாஜி 10 கஸ்ஸும் 5 தீவ்ரஹரிதாஸவக்ஸும் 6 வ்ருதேஜஸா 8 விஸ்வம் தஸ்ஸும் 7 ஜ்ஞம் 9 தவஜ்ஞம்.

(அ-ம்.) ஹே பகவன்! தோற்ற நிலையீறுகளற்றதும், அந்தமிலாப் பிரபாவமுடையதும், அனந்தவாகுகளையுடையதும், இரவிமதிகளாகிய நேத்திரங்களையுடையதும், மிக் கொளியாகிய வக்கினியை முகத்திலுடையதும், தனது தேஜசால் இவ்வுலகனைத்தையும் தபிக்கப்பண்ணுவதுமாகிய தங்களுடைய சொரூபத்தை நான் தரிசிக்கின்றேன். (19)

(வி-ம்.) ஹே பகவன்! தங்களுடைய விசுவரூபம் எத்தன்மையதினின் தோற்ற நிலையீறுகளற்றது; அளவறு வீரியமெனும் பிரபாவமுடையது; அனந்தவாகுவையுடையது. ஈண்டு, 'சுதஜ்ஞவாஹஸ்ஸும்' என்பது வதனமுதலிய சர்வாவயவங்களின் அனந்தத்தன்மைக்கு உபலக்ஷணமாம். இரவிமதிகளே நேத்திரமாகவுடையது; திரளொளித்தீமுகமுடையது; அல்லது, திரளொளித் தீயை முகத்திலுடையது, தனதொளியால் இவ்வுலகனைத்தையும் தபிக்கப்பண்ணுவது, இத்தன்மைய உமது விசுவரூபத்தை நான் திவ்பசட்சுவால் தரிசிக்கின்றேன். (19)

(அ-கை.) இப்போது அர்ச்சுனன் ஸ்ரீ பகவானுடைய அவ்விசுவரூபத்தையாண்டும் வியாபகமுடையதெனக் கூறுகின்றான்.

சு-ம் த்யாவாவ்ருதிவ்யோரிதமந்தரம்ஹி
வ்யாப்தம் த்வயைகேந திசஶ்சஸர்வாஃ।
த்ருஷ்ட்வாத்புதம் ரூபமுக்ரதவேதம்
லோகத்ரயம் ப்ரவ்யதிதம் மஹாத்மந் ॥ (20)

ப-ம். 5 த்யாவா வ்ருதிவ்யோஃ 7 இதம் 6 அந்தரம் 4 ஹி 8 வ்யாப்தம் 2 த்வயா 3 ஏகேந 11 திசஃ 9 ச 10 ஸர்வாஃ 17 த்ருஷ்ட்வா 14 அத்புதம் 16 ரூபம் 15 உக்ரம் 12 தவ 13 இதம் 18 லோகத்ரயம் 19 ப்ரவ்யதிதம் 1 மஹாத்மந்.

(அ-ம்.) ஹே மகாத்மன்! தாங்களொருவரே சுவர்க்கந் தரைகட்கிடையிலுள்ள அந்தரிக்ஷத்தை வியாபித்திருக்கின்றீர்; சர்வ திக்குகளையும் வியாபித்திருக்கின்றீர்; உம்முடைய உக்கிரமாகிய இவ்வற்புத ரூபத்தைப்பார்த்து மூவுலகங்களும் மிகவும் பீதியையடைந்தன. (20)

(வி-ம்.) ஹே மகாத்மன்! அதாவது சாதுக்கட்கு அபயத்தைக்கொடுக்கப்பட்ட விசுவரூப பகவன்! சுவர்க்கமண்கட்கிடையிலுள்ள அந்தரிட்சவுலகத்தைத் தாங்களொருவரே வியாபித்திருக்கின்றீர். கிழக்கு மேற்கு முதலிய திசைகளையும் தாங்களே வியாபித்திருக்கின்றீர். ஈண்டு அந்தரிட்சத்தையும் திசைகளையுங் கொண்டது, தாவர சங்கமவடிவ உலகனைத்திற்கு முபலக்கணமாம்; அதாவது தாவர சங்கமவடிவ இவ்வுலகனைத்தையும் விசுவரூபராகிய தாங்களொருவரே வியாபித்திருக்கின்றீர். எப்பொருள் எதனுல் வியாபிக்கப்பட்டதோ அப்பொருள் அதன் சொரூபமேயாம். மண்ணுல் வியாபிக்கப்பட்ட கடசராவ முதலிய காரியங்கள் மண்வடிவங்களேயாம். அதுபோலப் பரமேசுவராகிய தங்களால் வியாபிக்கப்பட்ட இவ்வுலகனைத்தும் தங்கள் வடிவமேயாம்; அதாவது சர்வ வுலகவடிவமுந் தாங்களே: சுருதியும் 'ப்ரஹ்மைவேதம் ஸர்வம்' இவ்வுலகனைத்தும் பிரஹ்ம

சொரூபமேயாமெனக்கூறுகின்றது. ஹே பகவன்! உமது விசுவரூபத்தைப்பார்த் துப்பயத்தினுல் மூன்றுலகமும் வியாகூலமடைந்தன. இப்போது அவ்விசுவரூபதரி சனத்தில் பயகாரணத்தைச் சித்திசெய்தற்பொருட்டு அச்சொரூபத்திற்கு இரண் டேதுகர்ப்பவிசேடணங்களை அர்ச்சுனன் கூறுகின்றான். 'அத்புதம் உக்ரம்' என ஹே பகவன்! உம்முடைய விசுவரூபம் எத்தன்மைபதினின் அற்புதமாம்; அதா வது தனது தரிசனமாத்திரத்தால் மிகவும் வியக்கத்தக்கதாம். உக்கிரமுமாம் அதாவது பேரொளியுடையதானதால் மிகவருத்தத்தாலுணரத்தக்கதாம். ஆத லின் ஹே பகவன்! இப்போது தங்களுடைய விசுவரூபத்தை அந்தர்த்தானஞ் செய்தருளுவீர் என்பதாம். (20)

(அ-கை.) பரமேசுரனுகிய நானே சர்வப் பிருதிவி பாரத்தையும் சம்ஹாரம் பண்ணப்பட்டவன், எனத் தம்மாட்டு அச் சம்ஹர்த்திருத்தன்மையைப் பிரகடம் பண்ணுகின்ற ஸ்ரீ பகவானைப்பார்த்து அர்ச்சுனன் கூறுகின்றான்.

சு-ம். ஈதி³ஹிகூ²வ ஸ்ரு²ஹ்யோவ விஸ்ருஜ்ய
கெ²தீ³ஹ்யதா² ப்ராஞ்ஜலயோ ம்ரு²ணந்தி ।
ஸ்வஸ்தீத்யுக்த்வா ஜ²ஹர்ஷி-ஸித்³த⁴ஸங்கா⁴ஹ
ஸ்துவந்தி ஸ்தோத்ரை: புஷ்கலாபி: ॥ (21)

ப-ம். 1 ஈதி 4 ஹி 3 கூ²வ 2 ஸ்ரு²ஹ்யோவ 5 விஸ்ருஜ்ய 6 கெ²தீ³ 7 ஹ்யதா²
8 ப்ராஞ்ஜலயை 9 ம்ரு²ணந்தி 11 ஸ்வஸ்தி 12 உக்த்வா 13 உ-ஜ²ஹர்ஷி-
ஸித்³த⁴ஸங்கா⁴ 17 ஸ்துவந்தி 14 ஸ்தோத்ரை 16 புஷ்கலாபி: 15 ஸ்ரு²ஹ்யோவ.

(அ-ம்.) ஹே பகவன்! இவ்வமரக்கூட்டங்கள் உம்மைக்குறித்தே பிரவேச மாகின்றார்கள். சிலர்கள் பயமுற்று இருகை குவித்துத் துதிக்கின்றார்கள். மகரிஷி களாகிய சித்தகணங்கள் இவ்வுலகனைத்தின் பாலகன் என்னும் வாக்கியத்தைக் கூறிப் பரமேசுராகிய உம்மை பரிபூரணப்பொருளைத்தரும் வாக்கியங்களால் துதிக் கின்றார்கள். (21)

(வி-ம்.) ஹே பகவன்! பிருதிவிபாரத்தை உத்தாரஞ் செய்தற்பொருட்டு மானுடவடிவெடுத்தவர்களும் துட்டர்களைக் காய்தற்பொருட்டு யுத்தஞ்செய்பவரு மாகிய இவ்வசுருத்திராதித்தியர் முதலிய தேவகணங்கள் உம்மிடத்திலே பிரவேச மாகி எனக்குப் புலப்படுகின்றனர். ஈண்டு 'கூ²வஸ்ரு²ஹ்யோவ' எனப் பதத் தைப்பிரித்து இவ்வாக்கியத்திற்கு இவ்வாறும் பொருள்செய்யத்தக்கது:—அசு ராம்ஸர்களானதால் அசுரவடிவமான துரியோதனன் முதலியோர்களான அசுர கணங்கள் இத்தரையில் பாரரூபங்களாம். அத்தன்மைய துரியோதனன் முதலிய அசுரகணங்கள் துட்டாதிருட்டத்தாற் செலுத்தப்பட்டுத் தமது மரணத்தின் பொருட்டு உம்மிடத்திலே பிரவேசமாகின்றனர்; விட்டிற்பூச்சி தான்மரணமடையத் தீயிற் பிரவேசித்ததுபோலும். இருவகைச் சேனைகட்கிடையில் சிலர்கள் பீதர்க ளாய், அதாவது ஓடுவதிலும் வலியற்றவர்களாய்த் தமதிருகைகளைக்குவித்துத் தோத்தினின்றே உம்மைத் துதிக்கின்றார்கள். இவ்வாறு பெரும்போரடைந்து கேடுறுதன் முதலிய நிமித்தங்களைப்பார்த்துப் பரிபூரணமாகிய பொருளைத்தருவ தும், குணமேம்பாட்டைக் கூறுவதுமாகிய இவ்வுலகனைத்தின் பாலகனுவாய்; அதாவது இரட்சகனுகுவாய் என்பது முதலிய வாக்கியங்களால் போரைப்பார்த் தற்பொருட்டுவந்த நாரதர் முதலிய சர்வ மகரிஷிகளும் கபிலர்முதலிய சர்வ சித் தர்களும் உலகனைத்தும் கேடுறுவதை நீக்குவான் பரமேசுராகிய தங்களைத் துதிக் கின்றார்கள். (21)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். ஸுஜ்ராதித்யா வஸவொ யெ அ ஸாத்யா
விஶ்வே தே³வாஸ்ததா² ஸாத்⁴யா
மருத்வந்தஶ்சோஷ்மபாஸ்ததா²
விஶ்வேऽஜே அஹிர்பு³த்⁴ன்யோ (22)

ப-ம். 2 ஸுஜ்ராதித்யாஃ 3 வஸவஃ 1 யெ 4 அ 5 ஸாத்யாஃ 6 விஶ்வே 7 தே³வாஸ்ததா² 8 அ 11 ஸாத்⁴யாஃ 10 அ 12 மருத்வந்தஶ்சோஷ்மபாஸ்ததா² 16 விஶ்வேऽஜே 15 அஹிர்பு³த்⁴ன்யோ 18 விஶ்வாஃ 17 அ 14 தே³வ 13 ஸவெஷு.

(அ-ம்.) ஹே பகவன்! உருத்ராதித்தியர்கள், வசுக்கள், சாத்தியர்கள், விசுவேதேவர்கள், அசுவினி குமாரர்கள், மருத்துக்கள், ஊஷ்மபாக்கள், கந்தருவ யக்ஷாசுர சித்த சமூகங்களாகிய அனைவர்களும் உம்மைப்பார்த்தே விஸ்மயத்தை யடைகின்றார்கள். (22)

(வி-ம்.) ஹே பகவன்! ருத்திரனெப்படும் தேவகணங்கள், ஆதித்திய னெப்படும் தேவகணங்கள், வசுவெனப்படும் தேவகணங்கள், சாத்தியனெப்படுந் தேவகணங்கள், விசுவனெனப்படுந் தேவகணங்கள், இரண்டசுவினி குமாரர்கள், மருத்துக்களெனப்படும் நாற்பத்தொன்பது தேவதாவிசேடங்கள், ஊஷ்மபாக்க ளெனப்படும் பிதிருகணங்கள்; இப்பிதிர்க்கள் 'உஷ்ணாமாஹிவிதா³ஃ' என்னுஞ் சுருதியில் ஊஷ்மபா என்னும் நாமத்தாற் கூறப்படுகின்றார்கள். கந்தருவ கணங் கள் யக்ஷகணங்கள் அசுரகணங்கள் சித்தகணங்கள் என்னு மனைவர்களும், விசுவ ரூபமுடைய பரமேசுரராகிய தங்களைப் பார்க்கின்றார்கள்; அத் தங்களுடைய அற்புதரூபத்தைத் தரிசித்தபின்னர் அவ்வனைவர்களும் வியப்பையடைகின்றார்கள்.

(அ-கை.) ஆண்டுப் பூர்வம் இருபதாவது சுலோகத்தில் 'லொகத்ரயம் வ்யவ்யதி²தம் ஏதான்' என்னும் வாக்கியத்தில் அவ்விசுவரூப தரிசனத்தால் மூவுலகப் பயப்பிராப்திகூறப்பட்டது. அவ்வர்த்தத்தை இப்போது உபசம்மரிக் கின்றான்.

சு-ம். ரூபமேதத்தவ ஸோக்³ரமேதத்
தபோ வ்யாப்தம் பஹுதே⁴ஜஸம் த்வாம்।
பஹ்வாஶ்சர்யம் பஹுபா³ஹூருபாத³ம்
பஹூதரம் பஹுத³ம்ஷ்ட்ராகராலம்
த்³ருʼஷ்ட்வா லொகாஃ ப்ரவ்யதி²தாஸ்ததா²ஹம் (23)

ப-ம். 8 ரூபமேவம் 2 ஏதத் 7 தெ 3 பஹுதே⁴ஜஸம் 1 ஏதாவாதெ
4 பஹுவாதாரூபாம் 5 பஹுமுக²ம் 6 பஹுதா³ம்
ஷ்ட்ராகராலம் 9 த்³ருʼஷ்ட்வா 10 லொகாஃ 13 ப்ரவ்யதி²தாஃ 11 தயா
12 அஹம்.

(அ-ம்.) ஹே மஹா வாகுவையுடைய பகவன்! மிகப் பெரிதானதும் பல முக நேத்திரங்களையுடையதும் பல வாகூருபாதங்களையுடையதும் பல உதரங் களையுடையதும் பலவிதமான கோரப்பற்களையுடையதுமாகிய மிகவும் பயத்

தைத்தரும் உமது விசுவரூபத்தைப்பார்த்துச் சர்வப் பிராணிகளும், நானும் வியாகூலத்தையடைகின்றோம். (23)

(வி-ம்.) ஹே பெருந்தோளுடைய விசுவவடிவ பகவன்! உம்முடைய இவ்வற்புதமான விசுவரூபத்தைப்பார்த்துப் பயத்தால் சர்வப் பிராணிகளும் மிக வியாகூலமடைகின்றார்கள், நானுமதை யடைகின்றேன். அஃது எத்தன்மைபதாமெனின் மகத்தாம்; அதாவது மிகுந்த பரிமாணத்தையுடையதாம். இன்னும் பல முகங்களையும், பல நேத்திரங்களையும், பல தோள்களையும், பல தொடைகளையும், பல பாதங்களையும், பல வயிறுகளையும், கோரப்பற்களால் மிகப் பயத்தையுடையதுமாகிய தங்களுடைய சொரூபத்தைப் பார்த்தமாத்திரத்தானே என்னுடைல்லாப் பிராணிகளும் பயத்தாற் பீடையடைகின்றார்கள். (23)

(அ-கை.) இப்போது அர்ச்சுனன் அவ்விசுவரூபத்தில் பயப்படக்கூடிய தன்மையை விளக்கிக்கூறுகின்றான்.

சு-ம். நபஃஸ்ப்ருசம் தீப்தமனேகவர்ணம்
வ்யாத்தாநநம் தீப்தவிஸாலநேத்ரம் ।
த்ருஷ்ட்வா ஹி த்வாம் ப்ரவ்யதிதாந்தராத்மா
த்ருதிம் ந விந்தாமி ஸமம் அ விஷ்ணோ ॥ (24)

ப-ம். 2 நபஃ 3 ஸ்ப்ருசம் தீப்தம் 4 அனேகவர்ணம் 5 வ்யாத்தாநநம் 6 தீப்தவிஸாலநேத்ரம் 8 த்ருஷ்ட்வா 9 ஹி 7 த்வாம் 10 ப்ரவ்யதிதாந்தராத்மா 11 த்ருதிம் 14 ந 15 விந்தாமி 13 ஸமம் 12 அ 1 விஷ்ணோ.

(அ-ம்.) ஹே விஷ்ணுபகவன்! வான்முழுதினும் வியாபகமும் மிகுந்த தேஜசும் பலவர்ணமுமுடையதும், படர்ந்தமுகமும் ஒளிபொருந்தியகன்ற நேத்திரமுமுடைய உம்மைத் தரிசிக்கவே வியாகூலமனத்தனாகிய நான் தைரியத்தையும் சாந்தியையுமடைந்திலேன். (24)

(வி-ம்.) ஹே விஷ்ணுவே! அதாவது, எவ்விடத்தும் வியாபகமாகிய பகவன்! நானும்மைத்தரிசித்துப் பயத்தால் கேவலம் வியாகூலத்தை மாத்திரம் அடைந்திலேன்; மற்றும், பயத்தால் அத்யந்தம் வியாகூலப்பட்ட மனத்தனாகிய நான் தைரியத்தையுமடைந்திலேன். அதாவது தேகேந்திரிய முதலிய சமுதாயத்தைத் தரிக்குஞ் சாமர்த்தியவடிவ தைரியத்தையுமடைந்திலேன். அங்ஙனமே மனத்தின் ஸ்திரத்தன்மைவடிவச் சமர்த்தையுமடைந்திலேன். தங்களுடைய சொரூபம் சம்பூரண ஆகாசவடிவ அந்தரிக்ஷலோகத்தில் வியாபகமாயிருக்கின்றது. அல்லது ஆகாயம்போல் எல்லாப்பொருள்களையுஞ் சம்பந்தித்திருக்கிறது; தீப்தமானது, அதாவது பெருந்தியென மிகுந்த தேசசாயிருக்கின்றது; பலவர்ணமானது அதாவது பயப்படுத்தத்தக்க பலரூபங்களையுடையது, மிக விரிந்த காந்தியானமுகமுடையது, சூரியமண்டலம்போன்ற ஒளியும் விசாலமுமுள்ள நேத்திரங்களையுடையது. இத்தன்மைத்தாய தங்களுடைய சொரூபத்தைத் தரிசிக்கவே பயத்தால் வியாகூலப்பட்ட மனத்தனாகிய நான் தைரியத்தையும் சமர்த்தையுமடைந்திலேன். ஈண்டு ஹே விஷ்ணே! என்னும் சம்போதனத்தால் அர்ச்சுனன் விசுவரூபமாகிய பகவானுடைய வியாபகத்தைக்கூறினன். இதனாலிப்பொருளைக் காண்பித்தனன்:—விசுவரூபமாகிய தாங்கள் யாண்டும் வியாபகமாதலினால் உம்மோடுகூடிய பயகாரண தேசத்தைவிடுத்து வேறிடத்திற்கேகச் சமர்த்தனலே

னுதலின் பயப்படத்தக்க இவ்விசுவரூபத்தைத் தாங்கள் அந்தர்த்தானஞ் செய்தருளுவீர் என்பதாம். (24)

(அ-கை.) இப்போது கூறிப்போந்த அர்த்தத்தையே மீண்டும் வேறு வகையாய்க்கூறி ஸ்ரீ பகவானுடைய பிரசன்னத்தின்பொருட்டுப் பிரார்த்திக்கின்றான்.

சு-ம். ஔஷ்ராகூராயூராநி அ தெஊவாநி
ஔரவைவ கூராயூ நயஹந்நிஹாநி ।
ஸிஏா நஜாதெ நயுஹெ அ ஸஉழு
வ்ரஹீஉ தெவெஸ ஜமந்நிவாஹ ॥ (25)

ப-ம். 1 ஔஷ்ராகூராயூராநி 2 அ 4 தெ 5 ஊவாநி 6 ஔரவைவ 7 வை 3 கூராயூநயஹந்நிஹாநி 8 ஸிஏஃ 9 ந 10 ஜாதெ 13 ந 14 யுஹெ 11 அ 12 ஸஉழு 17 வ்ரஹீஉ 15 தெவெஸ 16 ஜமந்நிவாஹ.

(அ-ம்) ஹே பகவன்! பயங்கரமான கோரப்பற்களையும் ஊழித்தீபோன்ற முகத்தையுந் தரிசிக்கவே நான் திசைகளையுமறிந்திலேன், சுகத்தையுமடைந்திலேனுதலின், ஹே தேவேச! ஹே ஜகந்நிவாச! என்மேற் கிருபைபாலிப்பீர். (25)

(வி-ம்.) ஹே பகவன்! பற்களின் வரிசையால் மிக விகாரமாயிருத்தலின் பயப்படத்தக்க பிரளயத்தீபோன்ற முகங்களை அவற்றிற்படாவிடினும் நான் கேவலம் பார்த்ததினாலேயே பயவசத்தால் கிழக்கு மேற்கு என்பன முதலிய திசைகளையுமுணர்ந்திலேன், இதனாலே உமது தரிசனத்தாற் சுகத்தையுமடைந்திலேன் ஆதலின் ஹே தேவேச! ஜகந்நிவாச! என்மேற் கிருபைபாலிப்பீர்; எதனால் பயமற்றவனுய் உனது தரிசன சன்னிய சுகத்தை அடைவதை ஆண்டுப் பிறவற்றையவாவாது தானே பிரகாசிப்பவர் தேவராவர். தனதண்மை மாத்திரத்தால் எல்லாவற்றையுஞ் செலுத்துவோர் ஈசராவர். தேவரு மீசருமானவர் தேவேசராவர். சுயம்பிரகாசவடிவமாய் எல்லாவற்றையுஞ் செலுத்துபவர் தேவேசராவர். அல்லது, இந்திரன் முதலிய சர்வ தேவர்கட்கு மீசராகுபவர் தேவேசராவர். இவ்வுலகனைத்திற்கும் எவர் நிவாசராவரோ அதாவது அதிட்டானரோ அவர் ஜகந்நிவாசராவர் என்க. (25)

(அ-கை.) ஆண்டுப் பூர்வம் பதினேராவது அத்தியாயத்தின் ஏழாவது சுலோகத்தில் 'ஹ ஹெஹைமஸ்யாகெஸயஹூநஸ்ய ஜகந்நிஹஸி' என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்கு எப்போதும் உனது வெற்றியையும் துரியோதனாதிகளின் தோல்வியையும் பார்ப்பதெனக்கிட்டமாதலின், அவற்றையும் நீ காண்பாய் என்னும் வாக்கியத்தைத் திருவாய் மலர்ந்தருளினர். இப்போது அவற்றையும் பார்க்கின்றேன் என்னும் அர்த்தத்தை அர்ச்சுனன் ஐந்து சுலோகங்களால் கூறுகின்றான்.

சு-ம். கஸீ அ கூவாம் யுதராஷ்ர வஸ்வஸ்தராஃ
வஸெஷ வஸைஹவாவநிவாஜவஸம்வைஃ ।
ஹீஷ்மா ஸ்ரோணஃ வஸூதவஸ்தரஷ்யாவள
வஹாவஷ்ஸீயொஸவி யொயுஜ்வைஸ்ஃ ॥ (26)

வகாணி தெ கூரஸாணா விஸம்தி
தூ
உம்ஷ்ரகுரராஜா நி ஹயா நகா நி ।
கெவிழ்வுந்ரா உபநாஞ்ஜெஷு
ஸம்ருத்யுஜ்ஜெ அ-ணிழுதெரு-தூஸாம்மெஸ் ॥ (27)

ப-ம். 2 சுஸீ 1 அ 10 கூவாம் 3 ய்ருதராஷ்ட்ரஸ்ய 4 வ-ந்ரயாஸ் 5 ஸவெழ 7 ஸஹ 8 வஸவ 6 சுவநிவாஜுஸம்வெஸ் 12 ஹீஷ்ஷுஸ் 13 ஒ்ராணஸ் 16 ஸ-மிதவ-ந்ரயாஸ் 14 தயா 15 சுஸள 20 ஸஹ 17 சுஷ்ஷுஜீயெஸ் 18 சுவி 19 யொயஉ-வெய்யஸ் 24 வகாணி 23 தெ 9 கூரஸாணாஸ் 11 விஸம்தி 21 உம்ஷ்ரகுரராஜாநி 22 ஹயாநகாநி 25 கெவிசு 29 விஜுந்ராஸ் 28 உபநாஞ்ஜெஷு 30 ஸம்ருத்யுஜ்ஜெ 26 அ-ணிழு தெஸ் 27 உதூஸாம்மெஸ்.

(அ-ம்.) ஹே பகவன்! மற்றும் இத்திருதராஷ்டிரரின் புத்திரர்கள் சர்வ ராஜசமூகங்களோடுகூடவே மிகுவிரைவுடையர்களாய்ப் பரமேசுவராகிய உம்மிடத் திற்பிரவேசிக்கின்றார்கள். அங்ஙனமே, பீஷ்மத்துரோணகர்ணர்களும் எனது சம்பந்திகளாகிய முக்கிய யோத்தாக்களோடு உம்மிடத்திற் பிரவேசிக்கின்றார்கள். ஹே பகவன்! கோரப்பற்களின் வரிசைகளால் பயங்கரமுடைய உமது வாயில் இத் துரியோதனன் முதலிய அனைவர்களும் சீக்கிரமாய்ப் பிரவேசிக்கின்றார்கள். ஆண்டுச் சில யோத்தாக்கள் பொடிப்பொடியான தலையையுடையர்களாய்ப் பல் லிடையிற்நெருங்குகின்றவர்களாகக் காணப்படுகின்றார்கள். (26-27)

(வி-ம்.) ஹே பகவன்! இத்திருதராட்டிரரின் புத்திரராகிய துரியோத னன் முதலியவர்கள் சால்வராஜன் முதலிய சர்வ ராஜாக்களோடு மிகவுஞ் சீக் கிரமாய் உம்மிடத்திற் பிரவேசிக்கின்றார்கள். ஹே பகவன்! கேவலம் அவர்கள் மாத்திரமன்று; மற்நோ, யாவர்களும் ஜயிக்க முடியாதவர்களாகச் சம்பாவனை பண்ணும் பீஷ்ம பிதாமகரும், துரோணாசாரியரும் எப்போதுமென்னிடத் தில் துவேஷமுடைய இச்சூத புத்திரனுகிய கர்ணனும், எனது சம்பந்திவடிவ திருட்டத்துய்மன் முதலிய முக்கிய யோத்தாக்களோடு பரமேசுவராகிய உம்மி டத்திற் பிரவேசிக்கின்றார்கள். இப்போது விசுவரூபத்தில் அந்தத் துரியோதனன் முதலியோர்களின் பிரவேசத் துவாரத்தைக்கூறுகின்றான். 'வகாணி' ஹே பகவன்! கோரதந்தவரிசைகளையுடைய மிகப்பயங்கரமான தங்களுடைய வாயின் கண்ணே இத்துரியோதனன் முதலிய சர்வர்களும் அதிசீக்கிரமாய்ப் புகுகின்றார் கள். அவ்வணம் புகுவோர்க்குள்ளுஞ் சில யோத்தாக்கள் பொடிபட்ட தலையை யுடையர்களாய்த் தங்களுடைய பல்லிடையிற்நெருங்குவதை நான் பார்க்கின்றேன். சில வியாக்கியானத்தில் இவ்விரண்டு சுலோகங்களின் பதத்தையும் 'சுஸீயராஜா ஷ்ரஷ்யவ-ந்ரயாஸ் கூவாம் விஸந்தி ஹீஷ்ஷுஸ் ரணாத்யயஸ் தெவகாணி விஸந்தி' என அந்நுவயம்பண்ணி இப்பொருள் பண்ணுகின்றனர்:—மிகப் பாபிகளாகிய திருதராஷ் டிரரின் புத்திரர்களெனும் துரியோதனன் முதலியோர்கள் மூவுலகவடிவ சரீரத் தையுடைய பரமேசுவராகிய தங்களிடத்திற் பிரவேசித்தார்கள். அதாவது, அத் துரியோதனன் முதலியோர்கள் தத்தம் பாவ கருமானுசாரமாக விசுவரூபவடிவ பகவானது பாயுஸ்தானத்திலிருக்கப்பட்ட நரகத்தையே யடைந்தார்கள். பீஷ்மத் துரோணர் முதலியோர்களோ தங்களுடைய பக்தர்களானதால் தியந்தணர் தெவ

தைகள் தோன்றும் தங்களுடைய முகத்துக்குள் பிரவேசமானர்கள்; இவ்வணம் துரியோதனன் முதலியோர்களுடையவும் பீஷ்மன் முதலியோர்களுடையவும் கதியின் விலட்சணத்தன்மையை அறிவுறுத்தற்பொருட்டு இவ்வாறு பதங்களை அந்நுவயித்தல் தக்கதேதயாமென்க. (26-27)

(அ-கை.) ஆண்டுப் பூர்வ சுலோகத்தில் துரியோதனன் முதலிய சர்வராஜாக்கட்கும் ஸ்ரீ பகவானுடைய வாயிற் பிரவேசங்கூறப்பட்டது. அப்பிரவேசம் புத்தி பூர்வகமெனவும், அபுத்தி பூர்வகமெனவும் இருவகைத்தாம். உணராது புகுதல் அபுத்தி பூர்வகமாம், உணர்ந்து புகுதல் புத்தி பூர்வகமாம்; அவற்றில் ஸ்ரீ பகவானுடைய திருவாயில் அவ்விராஜாக்கள் அபுத்தி பூர்வகம் பிரவேசமானதிற் கெடுத்துக்காட்டுக் கூறுகின்றான்.

சு-ம். யயா நதீநாம் பஹவொம்பூவெமாஃ ஸஉதூஉவொஹிஉவாதூவதி।
தயா தவாதீ நரலொகவீரா விசந்தி வக்த்ராண்யபிதொஜ்வலந்தி ॥ (28)

ப-ம். 1 யயா 2 நதீநாம் 3 பஹவஃ 4 சும்பூவெமாஃ 6 ஸஉதூஉ 7 வஸவ 5 சுஹிஉவாஃ 8 உதூவதி 9 தயா 12 தவ 10 சுதீ 11 நரலொகவீராஃ 16 விசந்தி 15 வக்த்ராணி 13 சுஹிதஃ 14 ஜ்வலந்தி.

(அ-ம்.) ஹே பகவன்! ஆற்றின் மிகு நீர்வேகம் கடலின் அபிமுகமாய்ச் சமுத்திரத்தையேயடைவதுபோல, இம்மானுடலோக வீரர்கள் எப்புறத்தும் விளங்கும் தேவரீரது முகத்தின்கண்ணேயே பிரவேசமாகின்றார்கள்.

(வி-ம்.) ஹே பகவன்! பல வழியாய்ச் செல்லுகின்ற ஸ்ரீ கங்கை, யமுனை முதலிய நதிகளின் மிகுந்த ஜலங்களின் வேகமானது அதாவது, அவ்வேகமுடைய ஜலங்களின் பிரவாகமானது சமுத்திராபிமுகமாய்ச் சமுத்திரத்தின்கண்ணேயே அபுத்தி பூர்வகம் பிரவேசமாகின்றதுபோல, இம்மானுடலோகத்தில் மிகச் சூரவீரர்களாகிய துரியோதனன் முதலியோர்கள் எப்புறத்தும் விளங்குந் தங்களுடைய முகங்களில் அபுத்தி பூர்வகம் பிரவேசமாகின்றார்கள். ஆண்டுச் சில புஸ்தகங்களில் 'சுஹிதொஜ்வலந்தி' என்னும் வாக்கிய மிருக்குமிடத்து 'சுஹிவிஜ்வலந்தி' எனப் பாடமுமுளது; அதற்குங் கூறிப்போந்த அர்த்தமென்றறியுணர்க. (28)

(அ-கை.) இப்போது ஸ்ரீ பகவானுடைய முகத்தில் புத்தி பூர்வகம் அவ்விராஜாக்கள் பிரவேசமானதற்கு அர்ச்சுனன் திட்டாந்தங்கூறுகின்றான்.

சு-ம். யயா வ்ரதீவ்தம் ஜ்வலநம் வதம்மா விசந்தி நாசாய ஸமுத்தவேமாஃ।
தவைவ நாசாய விசந்தி லொகா ஸ்தவாபி வக்த்ராணி ஸமுத்தவேமாஃ ॥

ப-ம். 1 யயா 5 வ்ரதீவ்தம் 6 ஜ்வலநம் 2 வதம்மாஃ 7 விசந்தி 4 நாசாய 3 ஸமுத்தவேமாஃ 8 தவ 9 ஸவ 13 நாசாய 16 விசந்தி 10 லொகாஃ 14 தவ 11 சுவி 15 வக்த்ராணி 12 ஸமுத்தவேமாஃ.

(அ-ம்.) ஹே பகவன்! பதங்கமானது அத்தியந்தம் வேகமுடையதாய்த் தன் நாசப்பொருட்டு ஓங்கியெரியும் எரியின்கண்ணே புகுவதேபோல, இத்துரியோதனாதியரும் மிக வேகமுடையராய்த் தம்மழிவின்பொருட்டுத் தேவரீரது முகத்தேபுகுகின்றனர்.

(வி-ம்.) ஹே பகவன்! பதங்கமானது மிக வேகமுடையதாய்த் தனது மரணத்திற்கு மிக்கொளியாகிய தீயில் புத்தி பூர்வகம் பிரவேசிக்கின்றதுபோல, இந்தத் துரியோதனன் முதலிய சர்வ ராஜாக்களும் மிக வேகத்தர்களாகித் தமது மரணத்தின்பொருட்டுப் பரமேசுராகிய உம்முடைய முகத்தில் புத்தி பூர்வகம் பிரவேசமாகின்றார்கள் என்பதாம். (29)

(அ-கை.) ஆண்டுப் பூர்வம் யுத்தவேட்கையுடைய ராஜர்கட்கு ஸ்ரீ பகவானது முகத்திற் பிரவேசப்பிரகாரங் கூறப்பட்டது. இப்போது அக்காலத்தில் ஸ்ரீ பகவானுடைப் பிரவிருத்திப்பிரகாரத்தையும், தீப்திவடிவப் பிரகாசத்தின்பிரவிருத்திப் பிரகாரத்தையு மருச்சுனன் கூறுகின்றான்.

சு-ம். லெலிஹயஸெ ரஸஸாகரஸஸஜா
லொகா ஸமக்ராஸ்வதநைர்ஜ்வலத்பிஃ ।
தேஜோபிராபூர்யஜகத்ஸமக்ரம்
பாஸஸ்தவோக்ராஃ ப்ரதபந்தி விஷ்ணோ (30)

ப-ம். 8 லெலிஹயஸெ 4 ரஸஸாகரஃ 7 ஸஜஜாகூ 3 லொகாந் 2 ஸமக்ர
ஸ்வாந் 6 வதநைஃ 5 ஜ்வலத்பிஃ 11 தேஜோபிஃ 12 பூர்யஜகத் 10 ஜகூ
9 ஸமக்ரம் 15 பாஸஃ 13 தவ 14 உக்ராஃ 16 ப்ரதபந்தி 1 விஷ்ணோ.

(அ-ம்) ஹே விஷ்ணுபகவன்! எல்லா வுலகங்களையும் ஒளிபொருந்திய முகங்களால் எடுத்து விழுங்கி நாற்புறத்தும் ஆஸ்வாதிக்கின்றீர்; இவ்வுலகனைத்தையும் உமது பேரொளியால் வியாபித்து உக்கிரமான பிரபையால் மிகத்தபிக்கின்றீர். (30)

(வி-ம்.) ஹே விஷ்ணுவே! அதாவது சர்வவியாபகமாகிய விசுவரூப ஸ்ரீ பகவன்! இவ்வண்ணம் மிக வேகமாய் உமது முகத்திற் பிரவேசித்த துரியோதனாதிகளை விழுங்கி அதாவது, உமது வாயின்வழியாய் உதிரத்தையடையச்செய்து, உமது ஒளி முகங்களால் நாற்புறத்தும் ஆஸ்வாதனம் பண்ணுகின்றீர்; அதாவது மநுடர் மதுரப்பொருளைப்புசித்துத் தமது நாவால் தாலு ஓஷ்டங்களை நக்குவதுபோல, நீரும் துரியோதனன் முதலிய ராஜாக்களைப்புசித்து, உமது நாவால் தாலு ஓஷ்டங்களை நக்குகின்றீர்; என் செய்தெனின், தீப்திவடிவ ஒளியால் இவ்வுலகனைத்தையும் வியாபித்து. ஹே பகவன்! எக்காரணத்தால் உமதொளிபால் இவ்வுலகனைத்தையும் வியாபித்தீரோ, அதனாலே உமது பேரொளியானது மிகத்தேசுடைய தீப்போல மிகத்தாபப்படுத்துகின்றது என்பதாம். (30)

(அ-கை.) இவ்வாறு ஸ்ரீ பகவானுடைய தீப்தியால் வியாகூலப்பட்ட அர்ச்சுனன் இவர் சாட்சாத்பரிபூரணமாகிய பகவான் என்று அவருடைய சொரூபத்தை ஸ்மரியாது ஸ்ரீ பகவானைக்குறித்துக் கூறுகின்றான்.

சு-ம். கூவ்யாஹி தெ கொ ஹவாக்ரரூபோ
நமோஸ்து தே தேவவர ப்ரஸீத ।
விஜ்ஞாதுமிச்சாமிஹவக்ஷளாத்யம்
ந ஹி ப்ரஜாநாமி தவ ப்ரவ்ருத்திம் ॥ (31)

ப-ம். 5 கூவ்யாஹி 4 தெ 3 கஃ 2 ஹவாந் 1 உக்ரரூபஃ 8 நமஃ 9 அஸ்து
7 தே 6 தேவவர 10 ப்ரஸீத 13 விஜ்ஞாதும் 14 இச்சாமி 12 ஹவ
க்ஷம் 11 க்ஷத்யம் 18 ந 15 ஹி 19 ப்ரஜாநாமி 16 தவ 17 ப்ரவ்ருத்திம்.

(அ-ம்.) ஹே பகவன்! அத்தன்மைய உக்கிரமூடைய தாங்கள் யாரென் பதை எனக்கருள்வீர். ஹே சர்வ சுரசிரேஷ்ட! உமக்கு நான் நமஸ்காரம் பண்ணுகின்றேன் பிரசன்னமாவீர். நான் சர்வ காரணராகிய உம்மை யறிய விரும்புகின்றேன், எக்காரணத்தால் உமது சேஷ்டையை நானுணர்ந்திலனே.

(வி-ம்.) உக்கிரம் 'குரூரம்' ரூபம் 'ஆகாரம்' எவனுக்கோ அவன் உக்கிர ரூபனுவன்; அல்லது, பிரளயகாலத்தில் உலகினத்தையும் சம்மரிக்குமுருத்திரன் உக்கிரனுவன். அந்த உக்கிரரூபம்போன்ற உருவமுடையவன் உக்கிரரூபமுடையவ னுவன். அல்லது, உலகினத்தையும் பயமுறுத்தும் உருவமுடையவன் உக்கிர ரூபனுவன்; அல்லது, உக்கிரமெனும் குரூரமாகிய கர்மமுடையவன் உக்கிரரூப னுவன். அத்தன்மைய உக்கிரரூபமுடைய தாங்கள் யார்? அதாவது பிரளயகால உருத்திரரோ? அக்கினியோ? அல்லது மகா மிருத்யுவோ? அவ்வது காலாந்தகரோ? அல்லது பாமபுருஷரோ? அல்லது இவைகட் கன்னியமா யொருவரோ? இப்போது தங்களுடைய சொரூபத்தை எனக்குத் தயையோடருளிச்செய்வீர். இதனினை நான் உலக குருவெனும் பரமேசுராகிய தங்கட்கு நமஸ்காரம் பண்ணுகின்றேன். சுர சிரேஷ்ட பகவன்! என்மீது கிருபை செய்வீர்; அதாவது, குரூரத்தன்மை விடுத்துச் சாந்தாடராவீர். ஹே பகவன்! சர்வ வுலகத்திற்குங்காரணமாகிய பர மேசுராகிய தங்களை விசேடமாயறிய விரும்பினேன். அற்றேல், ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய எனது சொரூபமோ எனது சேஷ்டையைக்காண்டலானே யுணர் தற்கேலுமாதலின், 'கொஹவாது' தாங்கள் யார்? என்னுமுனது வினாப்பொருந் தாது, என்னும் ஸ்ரீ பகவான் சங்கைக்கு அர்ச்சுனன் கூறுகின்றனன். 'நமிவ்ரஜா நாமி உதி' ஹே பகவன்! நான் தங்களுடைய சகாவாயிருப்பினும் தங்களுடைய சேஷ்டாவடிவப் பிரவிருத்தியை யுணர்ந்திலனுதலின், தங்களுடைய சொரூபத் தைத் தாங்களே அருளிச்செய்வீர் என்பதாம். (31)

(அ-கை.) இவ்வாறு அர்ச்சுனனுற் பிரார்த்திக்கப்பட்ட ஸ்ரீ பகவான் தமது சொரூபத்தையும், தமது பிரவிருத்தி எக்காரியத்தின் பொருட்டென்பதையும், மூன்று சுலோகங்களால் அருளிச்செய்கின்றார்.

ஸ்ரீ ஹமவாசு வாக்ய.

சு-ம். காலொஹி லொகக்ஷயகரு வ்ருத்தொ
லொகா ஸமாஹர்துமிஹ ப்ரவ்ருத்த: ।
ருதேபி த்வா ந பவிஷ்யந்தி ஸர்வே
யேவஸ்திதா: ப்ரத்யநீகேஷு யோதா: ॥ (32)

ப-ம். 3 காலோ 4 ஸ்மி 1 லொகக்ஷயகரு 2 ப்ரவ்ருத்தோ 6 லொகாந் 7 ஸமாஹர்துமிஹ 5 இஹ 8 ப்ரவ்ருத்த: 15 ருதே 16 அபி 14 த்வா 17 ந 18 பவிஷ்யந்தி 13 ஸர்வே 10 யே 12 அவஸ்திதா: 9 ப்ரத்ய நீகேஷு 11 யோதா:.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! உலகினத்தையும் சம்ஹரிப்பதும், அத்தியந்த விருத்தியையடைந்ததுமாகிய காலரூப பரமேசுரனுகிய நான் இப்போது துரியோ தனன் முதலியோர்களைப் பக்ஷணஞ் செய்தற்பொருட்டுப் பிரவிருத்தித்தனால், பிரதிவாதிகளின் சேனைகளுக்குள்ளிருக்கப்பட்ட யோத்தாக்களனைவர்களும் உனது யுத்தரூப வியாபாரமின்றியும் இருக்கமாட்டார்கள். (32)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இப்பூமியின் பாரமாகிய துட்டப் பிராணிகளை நாசஞ் செய்பவனும், அல்லது பிரளயகாலத்தில் சர்வப்பிராணிகளையும் நாசம் பண்ணுபவனும், மிக விருத்தியையடைந்த கிரியாசத்தி யுபகித காலரூப பரமேசுரனுகிய நான். இவ்வணந்தமது சொரூபத்தைக்கூறியருளித் தமது பிரவிருத்தியை அருளிச் செய்கின்றார், 'லொகாந' என. ஹே அர்ச்சுன! நானிப்போது எக்காரியத்தின் பொருட்டுப் பிரவிருத்தித்தேனெனின், அதைக்கேள்: பூமிக்குப் பாரமாகிய துரியோதனன் முதலியோர்களைப் பக்ஷணஞ்செய்தற்பொருட்டாம். அற்றேல், எனது பிரவிருத்தியிலாது தாங்களவர்களை எவ்வாறு நாசஞ்செய்வீர்கள்? என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'ஜதெவிக்வா உதி' ஹே அர்ச்சுன! உன்னை யன்றியும், அதாவது உனது யுத்தரூப வியாபாரமின்றியும் கேவல பரமேசுரனுகிய எனது பிரவிருத்தியினாலேயும் இப்பீஷ்மத்துரோணர் முதலிய யோத்தாக்களையும், இத்துரியோதனன் சேனையிலுள்ள அவர்கட்கயலான மற்றெத்துணை யோத்தாக்களிருக்கின்றார்களோ அவ்வனைவர்களையும் நானே நாசம் பண்ணுவேன். ஆதலின் அவர்களைக்கொல்லும்பொருட்டு உன்னுடைய யுத்தரூபமான வியாபாரம் மிக்க அவசியமன்றும். உனது வியாபாரமின்றியே துரியோதனன் முதலிய அனைவர்களையும் நாசஞ் செய்வேன் என்க. (32)

(அ-கை.) ஹே பகவன்! எனது யுத்தரூபமான வியாபாரமின்றியே துரியோதனாதிகள் ஒருபோது நாசமடைவதால், அடிக்கடி என்னை யுத்தத்திற் செலுத்துவ தெக்காரணத்தாலாம்? என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். தஹ்ராஷ்ட்ரஸ்ய துர்புத்தேர் யுத்தே ப்ரியசிகீர்ஷவ:
ஜிக்ஷவோ மஹதீம் ராஜ்யஸ்ரியம் ஹ்ருத்யாம் ச பாண்டவை: ।
நிமித்தமாத்ரமேவைதத் பவ ஸவ்யஸாசின்
நிர்தக்ஷ்யஸே ஹி தான் ஸர்வான் ஹதாம்ஸ்த்வம் ஜஹி மா வ்யதிஷ்டா யுத்யஸ்வ ஜேதாஸி ரணே ஸபத்னான் ॥ (33)

11-23.

ப-ம். 1 தஹ்ராஷ்ட்ரஸ்ய 2 துர்புத்தேர் 3 யுத்தே 4 ப்ரியசிகீர்ஷவ: 5 ஜிக்ஷவோ 6 மஹதீம் 10 ராஜ்யஸ்ரியம் 9 ஹ்ருத்யாம் 8 பாண்டவை: 15 நிமித்தமாத்ரம் 16 பவ 12 ஸவ்யஸாசின் 17 நிர்தக்ஷ்யஸே 13ஹி 14 தான் 18 ஸர்வான் 19 ஹதாம் 11 ஸ்த்வம் ஜஹி மா வ்யதிஷ்டா யுத்யஸ்வ ஜேதாஸி ரணே ஸபத்னான்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஆதலின் நீ யுத்தத்திற் பிரவிருத்தனுகுதி. யசசையுமடைவாய்; சத்துருக்களை ஜயித்து நிருபத்திரவாச்சியத்தையும் அநுபவி. ஹே வாமகாத்தானும் சரந்தொடுக்குமியல்புளாய்! உனது சத்துருக்களை உனது யுத்தத்திற்கு முன்னரே நானே நாசம்பண்ணிவிடுகின்றேன், நீ கேவலநிமித்தமாத்திரமாவாய். (33)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எதனுல் உன்னுடைய யுத்தரூப வியாபாரமின்றியும் இப்பீஷ்மத்துரோணர் முதலியோரை அவசியமாய் நாசம்பண்ணுவனே, அதனுனே நீ இப்போது யுத்தம்பண்ணுதற்பொருட்டுப் பிரவிருத்தனுகுதி; அந்த யுத்தத்தில் இப்பீஷ்மத்துரோணாதிகளை நாசஞ்செய்து யசசையடைவாய்; அதாவது இந்திரன் முதலிய தேவர்களாலும் ஜயிக்கமுடியாத பீஷ்மத்துரோணர் முதலிய அதிரதர்களை இவ்வருச்சுனன் சீக்கிரமாய் ஜயம்பண்ணினன் என்னும் புகழைப் பெறுதி. இத்தன்மையபுகழ் பெரும்புண்ணிய கருமத்தாற் கிடைப்பதாதலின்; அதையடைவான் யுத்தத்தில் முயலுதி; அதாவது உனக்கு இத்தன்மைய பெரும் புகழையடைவித்தற்பொருட்டே இப்போரினுனைச்செலுத்துகின்றேனென்பதாம். உனது போரிலாது பீஷ்மர் முதலியோர்கள் நாசமடையார்களென முயல்விப்ப

தன்றும். ஹே அர்ச்சுன! இச்சத்துருக்களை நாசஞ்செய்து நீ கேவலம் புகழை மாத்
திரமடையாய், மற்றே இவர்களை முயற்சியின்றியே ஜயம்பண்ணிச் சர்வ ஐசுவரியங்
களையுமுடைய நிருபத்திரவ இராச்சியத்தையுமநுபவி. அற்றேல், அதிரதியென்னும்
யோத்தாக்களாகிய இப்பீஷ்மர் முதலியோர்களிருக்குமிடத்துத் துரியோதனன்
முதலியோர்களை ஜயம்பண்ணுவது மிகவுமரிதாம் என்னும் அர்ச்சுனன் சங்கையை
அகற்றுவான் ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'ஊயெ வெதெ ஊதி' ஹே
அர்ச்சுன! உனது யுத்தவடிவ வியாபாரத்திற்கு முன்னமே இப்பீஷ்மத்துரோ
ணதிகள் காலரூபப் பரமேசுரனுகிய என்னல் ஆயுளற்றவர்களாக்கப்பட்டிருக்கின்
றார்கள்; கேவலம் உனது புகழின் பொருட்டே அவர்களை நான் இரத்தத்தின் கீழ்க்
கிடத்தவில்லை. ஆதலின், ஹே இருகரத்தானும் பாணந்தொடுப்போய்! நீ கேவலம்
நிமித்தமாத்திரமாவாய்; அதாவது,இப்பீஷ்மத்துரோணர் முதலியோர்களை அர்ச்
சுனனே ஜயித்தனன், என்னும் உலகவார்த்தைக் காசிரயமாகுதி. கருத்திதுவாம்:—
இருகரச்சர்ந்தொடுக்கும் பேராற்றலுடைய உனக்கு இப்பீஷ்மத்துரோணர் முதலி
யோர்களைச்சயித்தல் அசம்பவமன்று, மற்றே சம்பவமேயாமாதலின்,உனது யுத்த
ரூப வியாபாரத்தின்பின்னர் இப்பீஷ்மத்துரோணர் முதலியோர்களை இரத்தத்
தின் கீழ்ப்போடுவேன், அதைப்பார்த்து உலகனைத்தும் இவ்வருச்சுனனே இப்
பீஷ்மத் துரோணர் முதலியோர்களைக் கொன்றுவிட்டான் எனக் கற்பிக்கும். (33)

(அ-கை.) ஹே பகவன்! இத்துரியோதனன் சேனைகளிலுள்ள சர்வப் பிரா
மணர்களுள் சிரேஷ்டரும், தனுர் வேதாசாரியரும், எங்களுடைய குருவும், திவ்
யாத்திரமுடையருமாகிய துரோணாசாரியரும்; தனதிச்சையால் மரிக்கப்பட்ட
வரும், திவ்யாத்திரமுடையரும், பரசுராமராலும் பராஜயம்பண்ணமுடியாதவரு
மாகிய பீஷ்மபிதாமகரும்; விருத்த க்ஷத்திரனென்னும் எவனுடைய பிதா, எந்த யுத்
தவீரன் எனது புத்திரனுடைய சிரசைத் தரையில்விழும்படி செய்வானே அந்த
யுத்த வீரனது சிரசும் அப்போதே தரையில் விழுந்துவிடும் எனச் சங்கற்பித்துத்
தவம் பண்ணினானே, எவன் மகாதேவ பக்தனுவனே, திவ்யாத்திரமுடையனே,
அத்தன்மைய ஜயத்திரதராஜனும்; இரவிக்கொப்பானவனும், சூரியனை யாரா
தித்துப்பெற்ற திவ்யாத்திரமுடையனும், ஒருவனைக் கெடுக்கப்பட்டதும் வியர்த்த
மாக்கற்கசக்கியமானதுமாகிய இந்திரனற்கொடுக்கப்பட்ட வேலாயுதத்தையுடைய
வனுமாகிய கர்ணனும்; இவர்கள் முதற்கொண்டு ஏனைய கிருபாசாரியர், அசுவத்
தாமா, பூரி சிரவர்கள் முதலிய மகாப் பிரபாவமுடைய யுத்தவீரர்களாகிய அனைவர்
களும் எவ்வாற்றானுஞ் சயித்தற்கரியர்களேயாவர்கள்; அத்தன்மையர்களிருக்கு
மிடத்து நான் துரியோதனன் முதலிய சத்துருக்களைவென்று நிருபத்திரவ ராஜ்
யத்தை அநுபவித்தலும், யசசையடைதலும் யாங்ஙனம்? என்னும் அர்ச்சுனன் சங்
கையை நீக்குவான் ஸ்ரீ பகவான் அச்சங்கையின் விஷய பூதர்களாகிய யுத்தம்
பண்ணுபவர்களைத் தத்தம் நாமத்தாற் கூறி அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸெ²ரணஞ்ச ஹீஷ்மஞ்ச ஜயத்³ரதஞ்ச
கர்ணஂ தயாந்யாநபி யோத⁴வீராந் ।
மயா ஹதாம்ஸ்த்வம் ஜஹி மா வ்யதி²ஷ்டா²
யுத்⁴யஸ்வ ஜேதாஸி ரணே ஸபத்நாந் ॥ (34)

ப-ம். 1 ஸெ²ரணம் 2 அ 3 ஹீஷ்மம் 4 அ 5 ஜயத்³ரத²ம் 6 அ 7 கர்ணஂ 8 தயா
9 ந்யாநபி 10 நபி 11 யோத⁴வீராந் 12 மயா 13 ஹதாந் 14 ஸ்த்வம்
15 ஜஹி 16 மா 17 வ்யதி²ஷ்டா² 18 யுத்⁴யஸ்வ 21 ஜேதாஸி 19 ரணே
20 ஸபத்நாந்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! துரோணசாரியரையும், பீஷ்ம பிதாமகரையும், ஜயத்ரதனையும், கர்ணனையும், இதற்கன்னியமான யுத்தவீரர்களையும் பரமேசுரனுகிய நானே ஹதம்பண்ணிவைத்திருக்கின்றேன்; அவர்களை நீ அதஞ்செய்வாய், வியாகூலமடையாதே: யுத்தம்பண்ணுதி; இப்போரில் மாற்றூர்களை அவசியம் ஜெயிப்பாய். (34)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! துரோணசாரியர் முதலியோர்களையும் ஏனைய யுத்த வீரர்களையும் எவ்வாறு ஜயிப்பேன் என்னு முனது சங்கைக்கு விஷயர்களுமாகிய அனைவர்களையும் காலரூபப் பரமேசுரனுகிய நான் உனது யுத்தத்திற்கு முன்னரே ஹதம்பண்ணிவிட்டேன், அத்தன்மைத்தான அவர்களை நீ இப்போது ஹனனம் பண்ணுதி. முன் ஹதம்பண்ணப்பட்டவர்களை ஹதம்பண்ணுவதில் உனக்குப் பரிசிரமமாவதென்கொல்? அதிலுனக்கொரு துன்பமும் வாராதாதலின் வியாகூலப்படாதே; அதாவது இவர்களை எவ்வாறு ஜயிப்பேம் என்னும் பயத்தாலுண்டாம் பீடைவடிவ வியாகூலத்தை யடையாதே. அர்ச்சுன! அப்பீதியை விடுத்துப் போர்புரிதி. இவ்வணம் பயத்தைவிடுத்து யுத்தம் புரிவையேல், இந்த ரணத்தின்கண்ணே கொஞ்சநேரத்தில் இத்துரியோதனன் முதலிய மாற்றூர்களை ஜயிப்பாய். கருத்திதுவாம்:—துரியோதனன் சேனைகளிலுள்ள யுத்தவீரர்களில் யாராகினுமொருவர் உன்னைப் பராஜயம்பண்ணி விடுவார்களென்னுஞ் சங்கையை யொழிப்பாய். யாராகினுமொரு யோத்தாவைக் கொல்வனேல் பாபம் பற்றும் என்னும் சங்கையையும் ஒழிப்பாய். (34)

(அ-கை.) ஆண்டித் துரியோதனன் வெற்றி பெறுவனெனும் ஆசைக்கு விஷயமாகிய துரோணசாரியர் முதலிய நான்கு யோத்தாக்களையுங் கொன்றதின் பின்னர், நிராதாரமான துரியோதனனும் கொல்லப்படுவான் என விசாரம்பண்ணி இத்திருதராஷ்டிரன் தனது வெற்றி வேட்கையைவிடுத்து இப்பாண்டவர்களோடு மித்திரபாவத்தையடைந்து யுத்த நீங்குமேல், பாண்டவர்கட்கும் கௌரவர்கட்கும் சாந்தியுண்டாகும் என்னும் அபிப்பிராயத்தையுடைய சஞ்சயர், பின்னர் என்ன விருத்தாந்தமாயிற்று எனத்திருதராஷ்டிரனுக்கறியும் வேட்கையுண்டாகக் கூறுகின்றார்.

ஸஂஜய உவாச.

சு-ம். ஏதச்ச்ருத்வா வசநம் கேஶவஸ்ய க்ருதாஂஜலிர்வேபமாந꞉ கிரீடீ।
நமஸ்க்ருத்வா ஭ூய ஏவாஹ க்ருஷ்ணம் ஸகத்3க3தம் ப4ீ4தப4ீ4த꞉ ப்ரணம்ய ॥()

ப-ம். 2 ஏதத் 4 ஶ்ருத்வா 3 வசநம் 1 கேஶவஸ்ய 5 க்ருதாஂஜலி꞉ 6 வேபமாந꞉ 8 கிரீடீ 10 நமஸ்க்ருத்வா 13 ப4ூய꞉ 14 ஏவ 15 ஆஹ 9 க்ருஷ்ணம் 12 ஸகத்3க3தம் 7 ப4ீ4தப4ீ4த꞉ 11 ப்ரணம்ய.

(அ-ம்.) ஹே திருதராட்டிர! கூறிப்போந்த ஸ்ரீ பகவானுடைய திருவாக்கைக்கேட்டு இருகை கூப்பியதோடு, தேக கம்பனத்தையும் பயத்தையுமடைந்த அர்ச்சுனன் ஸ்ரீ கிருஷ்ணபகவானை நமஸ்கரித்து மிகுந்த நம்ரபாவத்தனுய்த் தழுதழுத்த வாக்கோடுங் கூறுகின்றான். (35)

(வி-ம்.) ஹே திருதராஷ்டிர! கூறிப்போந்த ஸ்ரீ பகவானுடைய வாக்கியத்தைக்கேட்டுக் கிரீடியாகிய அர்ச்சுனன், அதாவது இந்திரனுற் கொடுக்கப்பட்ட கிரீடியெனும் பரமவீரரூபத்தாற் பிரசித்தனுகிய அர்ச்சுனன் நடுக்கமுடையனுய்; அதாவது பரமாச்சரிய தரிசனத்தாற் சம்பிரமத்தாற் கம்பனமடைந்த அர்ச்சுனன்

ஸ்ரீ கிருஷ்ணபகவானே நமஸ்கரித்துத் தழுதழுப்புடன் கூறுகின்றான். ஆண்டுப் பயத்தாலேனும் சந்தோடத்தாலேனும் வெளிப்பட்ட கண்ணீரால் நேத்திரம் பூரணமாய், ஐயிஞ்மிடறடைப்புண்டலால் வாக்கின் மந்தம், நடுக்கமுதலிய விகாரங்களையுடையனுய், மிகப்பயந்தவனுய் ஸ்ரீ பகவானேமறித்து மறித்தும் வணங்கி; அதாவது மிகத்தாழ்ந்தவனுய் மறித்தும் மேற்கூறுட் வாக்கியத்தைக்கூறினன் என்பதாம். ஈண்டு, ஒரு வியாக்கியானத்தில் 'ஹவாஹ' என்பதை 'ஹவ சூஹ' எனப் பதத்தைப்பிரித்து 'சூஹ' என்னும் பதத்தைப் பிரசித்தவாசகமாகிய அவ்வியயபதமெனக்கொண்டனர். என்னே, 'சூஹ' எனப் பதத்தைப்பிரித்து வசனவடிவக் கிரியாவாசகபதமெனக் கொள்ளிலோ, மறித்தும் 'ஸஜ ுஹ உவாச' என மேற்கூறும் வாக்கியம் புனருத்தியாம். ஆதலின், 'ப்ரணம்ய ஸஜ ுஹ உவாச' எனப்பதத்தை அந்நுவயஞ்செய்யவேண்டும். 'ப்ரணம்ய சூஹ' எனப் பதத்தை அந்நுவயப்பண்ணற்க என்பதாம். (35)

(அ-கை.) பதினைரு சுலோகங்களால் அர்ச்சுனன் ஸ்ரீ பகவானுக்கவ்வாக்கியத்தைக் கூறுகின்றான்.

ஸஜ ுஹ உவாச.

சு-ம். ஸ்தாநே ஹ்ருஷீகேச தவ ப்ரகீர்த்யா
ஜகத் ப்ரஹ்ருஷ்யத்யநுரஜ்யதே ச।
ரக்ஷாம்ஸி பீதாநி திசோ த்ரவந்தி
ஸர்வே நமஸ்யந்தி ச ஸித்தஸங்காஃ ॥ (36)

ப-ம். 16 ஸ்தாநே 1 ஹ்ருஷீகேச 2 தவ 3 ப்ரகீர்த்யா 4 ஜகத் 5 ப்ரஹ்ருஷ்யதி 7 அநுரஜ்யதே 6 ச 8 ரக்ஷாம்ஸி 9 பீதாநி 10 திசஃ 11 த்ரவந்தி 13 ஸர்வே 15 நமஸ்யந்தி 12 ச 14 ஸித்தஸங்காஃ.

(அ-ம்.) ஹே இருஷீகேச! உனது பிரகீர்த்தியால் இவ்வுலகனைத்தும் சந்தோடத்தை யடைகின்றன. அங்ஙனமே அநுராகத்தையும் அடைகின்றன. இராக்கதர்கள் பயமடைந்து எல்லாத் திக்குகளினும் ஓடினர். சர்வ சித்தகணங்களும் நமஸ்கரிக்கின்றனர் என்னும் இவ்வனைத்தும் பொருத்தமேயாம். (36)

(வி-ம்.) ஹே இருஷீகேச! அதாவது சர்வேந்திரியப்பிரவர்த்தகப் பரமேசுரனுகிய நீ அத்தியந்த அற்புதப்பிரபாவமுடைய பக்தவத்சலதையின், உனது பிரகீர்த்தியால் அதாவது, உனது நிரதிசய உத்கிருஷ்டத்தின் கீர்த்தனத்தாலும், சிரவணத்தாலும் கேவலம் நான் மாத்திரமே சந்தோஷத்தையடைவதில்லை; மற்றை, ராக்ஷஸர்கட்கு விரோதியாகிய சேதனமாத்திரமாகிய உலகனைத்தும் தங்களுடைய பிரகீர்த்தியால் பரானந்தத்தையடைகின்றன என்பதூஉம் உரித்தானதேயாம். அங்ஙனமே, அத்தன்மைய உனது பிரகீர்த்தியால் இவ்வுலகனைத்தும் பரமேசுரனுகிய உனது விஷயக அநுராகத்தையடைவதும், சர்வ ராக்ஷஸர்களும் பீதியுற்றுச் சர்வ திக்குகளிலும் ஓட்டமாய் ஓடிவிட்டதும், கபிலர் முதலிய சித்தகணங்கள் உன்னை யன்போடு நமஸ்கரிக்கின்றதென்பதூஉம் உரித்தானதேயாம். ஒரு வியாக்கியானத்திலோ 'ஸ்தாநே ஹ்ருஷீகேச' என்னு மிச்சுலோகத்திற்கு இவ்வாறு பொருள்பண்ணுகின்றனர்:—ஹே இருஷீகேச,

காலொஹ்லிலொகரக்ஷண கர்தவ்யஜொ லொகோ ஹ்ருஷாஹ தாஷி ஹவ்யவ்யதிஃ।

(பொ-ள்.) பூமி பாரமாகிய துஷ்டஜனங்களைச் சம்மரித்தற்பொருட்டுக் கால ரூப பரமேசுரனுகிய நான் பிரவிருத்தித்தேன்; என உன்னுல் முன்னர்க்கூறி யருளப்பட்டது. உன்னுடைய அந்தப் பிரகிருஷ்டவாக்கியவடிவப் பிரகீர்த்தியைச் சிரவணம்பண்ணுஞ் சாதுக்களாகிய வுலகம் பரமசந்தோடத்தையடைகின்றதென்ப தும், அதாவது, சாதுக்களை யிரட்சிப்பான் பரமேசுரன் சர்வ துஷ்டர்களையும் சம்மரித்தலால் அச்சாதுக்கட்குப் பரமசந்தோடப்பிராப்தியாமெனல் உரியதே யாம். உன்னுடைய பிரகீர்த்தியைக்கேட்டு அச்சாதுக்கள் பக்தவத்சலனும், சர்வ பூதங்கட்கும் சுகிருத்ரூபமுமாகிய பரமான்மதேவனிடத்தில் அநுராகத்தையடை கின்றார்கள் என்பதும், அதாவது, சர்வ வுலகங்களின் உபத்திரவத்தை நீக்குதற் பொருட்டு முயற்சியையுடைத்தாய்ப், பரமகிருபாலுரூபனுமாகிய பரமேசுரனுகிய உன்னிடத்தில் அவர்கட்கநுராகமுண்டாதல் உசிதமேயாம். உனது பிரகீர்த்தி யைக்கேட்டுச் சர்வராக்ஷஸர்களும் பயமுற்றுக் கிழக்கு முதலிய திசைகளின் மூலை களில் ஓட்டமாய் ஓடிவிட்டார்களென்பதும் உசிதமேயாம். உனது கீர்த்தியைக் கேட்டு உலகனைத்திற்கு மின்பத்தைச்செய்யும் சித்தர்கணங்களனைத்தும் உனக்கு நமஸ்காரம்பண்ணுகின்றதென்பதும் உசிதமேயாம். ஈண்டுச் சித்தர் எனுஞ் சத்தம் தேவஜாதிமாத்திரத்திற்குபலக்கணமாம்; அதாவது தேவ, ரிஷி, சித்த, கந்தருவ, சாரண என்பது முதலிய சர்வ தேவத்தன்மைச் சாதியையுடையவர் கள். ஹே சுவாமின்! நீ துஷ்டர்களைச் சம்மரித்தற்பொருட்டுக் கூறிய உறுதி மொழியை அவசியமாய்ப் பூரணஞ்செய்யவேண்டும்: என்னும் பிரார்த்தனை பூர் வகம் உனக்கு நமஸ்காரம்பண்ணுகின்றார்களென்பதும் உரித்தானதேயாம் என்க. ஆண்டு, 'ஷ்ரொநெஹஜ்ரஷ்கெபப' என்னுஞ் சுலோகம் 'ரக்ஷோக்ந' மெனு மந்திர ரூபத்தால் மந்திரநூலிற் பிரசித்தமாம். எம்மந்திரத்தை யநுட்டித்ததால் துஷ்ட ராக்ஷஸர்கள் நாசமடைவர்களோ அம்மந்திரம் 'ரக்ஷோக்ந' மந்திரமெனப்படும் என்பதாம். (36)

(அ-கை.) ஆண்டுப் பூர்வ சுலோகத்தில் அர்ச்சுனன் ஸ்ரீ பகவானிடத்து உலகனைத்தின் சந்தோட விஷயத்தன்மையையும், அநுராகவிஷயத்தன்மையை யும், நமஸ்காரியத்தன்மையையுங் கூறினன். இப்போது அதைச் சித்தம்பண்ணு தற்பொருட்டு ஹே துவைக் கூறுகின்றான்.

சு-ம். கஹொஅு தெ நமொ நஹொது மஸீயஹெ ப்ரஹ்மணொவ்யாதிகுதெ-ச்।
சுமஹ தெவெப ஜமநிவாஹ கூடஸ்தம் லொகத்ரயம் யத் ॥ (37)

ப-ம். 10 கஹொகி 13 அ 9 தெ 11 ந 12 நமொநு 1 நஹொது 7 மஸீயஹெ 5 ப்ரஹ்மணி 6 சுவி 8 குதிகுதெ-ச் 2 சுமஹ 3 தெவெப 4 ஜமநிவாஹ 14 கூம் 19 சுகூடஸ்தம் 15 லொகி 16 சுலொகி 17 தத்ரயம் 18 யகி.

(அ-ம்.) ஹே மகாத்மன்! அனந்த! தேதேவச! ஜகன்னிவாச! பிரமனுக்குங் குருரூபமும் ஜனகரூபமுமாகிய தங்கட்கு ஏன் நமஸ்காரஞ்செய்யார்கள்? மற்றே, அவசியமே செய்வார்கள். ஹே பகவன்! சத்சத்து ரூபமும், அவைகட்குப் பரமுமாகிய அக்ஷரப்பிரஹ்மமும் நீரே யாகின்றீர். (37)

(வி-ம்.) ஹே மகாத்மன்! அதாவது, ஹே பரமோதாரமனமுடையோய்! ஹே அனந்த! அதாவது, மூவகைப்பரிச்சேதமிலாதோய், ஹே தேதேவச! அதா வது, இரணியகருப்பன் முதலிய சர்வ தேவதைகட்கும் நியந்தாவே! ஹே ஜகந்நி வாச! அதாவது, ஹே சர்வஜகத்திற்கு மாதாரூப! உமக்குச் சித்தகணங்களனைத் தும் தேவதைகளும் ஏன் நமஸ்காரம்செய்யார்கள்? மற்றே, அவ்வனைவர்களும்

தங்களை வணங்கவேண்டுவது உசிதமேயாம். உலகனைத்திற்குங் குருவாகிய பிரஹ்மாவிற்குங் குருரூபமும், இவ்வுலகனைத்திற்குங் காரணமாகிய பிரஹ்மாவிற்குங் காரணரூபமுமாகிய தங்கட்கு அவ்வனைவர்களும் நமஸ்காரம்பண்ணவேண்டுவது உசிதமேயாம். ஈண்டு, 'கஹோஅ' என்னும் வாக்கியத்தினீற்றிலுள்ள சகாரத்தால் அர்ச்சுனன் இப்பொருளைக்குறிப்பித்தனன்:—பிரஹ்மன் முதலிய தேவதைகளின் நியந்தாத்தன்மை, உபதேசகத்தன்மை, ஜனகத்தன்மை என்பது முதலிய தேஹதுக்களுள் எவ்வேவாரேதுவும் தங்களிடத்து அவ்வனைவர்களும் நமஸ்காரம் பண்ணத்தக்க தன்மைக்குக்காரணமாயின், மகாத்துமாத்தன்மை, அனந்தத் தன்மை, ஜகந்நிவாசத்தன்மை என்பன முதலிய பல கல்யாணகுணங்களோடு கூடிய ஏதுக்கள் தங்களிடத்து நமஸ்காரம்பண்ணத்தக்க தன்மைக்குக்காரணமா மென்பதில் விபப்பென்னை? தாங்கள் சத்தசத்துவடிவமானவர். அவற்றில் 'இருக்கிறது' என்னும் விதிமுகப்பிரதிதியால் எப்பொருள் தோற்றப்படுமோ அது சத்தாம் 'இல்லை' என்னும் நிடேதமுகப்பிரதியால் எப்பொருள் தோற்றப்படுமோ அது அசத்தாம். அல்லது, விபத்தம் சத்தாம். அவ்வியத்தம் அசத்தாம். அந்தச் சத்தசத்துக்களினும் வேறாய்ச் சர்வத்திற்கு மூலகாரணமாகிய அக்ஷரப்பிரஹ்மமும் தாங்களை; தங்கட்கயலாய் ஒரு பொருளுமின்றும். 'ஸவ்வம் ஹெயுதவ்ஹ' இவ்வுலகனைத்தும் பிரஹ்மசொரூபமே எனச்சுருதியுங் கூறுகின்றது. ஹே பகவன்! கூறிப்போந்த இச்சர்வ ஹேதுக்களால் சித்தர் முதலிய யாவர்களும் பரமேசுராகிய உம்மைப்பணிகின்றார்கள். மிக்கானந்தத்தையும் அநுராகத்தையுமடைகின்றார்கள் என்பதிலோர் ஆச்சரியமுமின்றும். (37)

(அ-கை,) இப்போது மிகுந்த பக்திபின் வேகத்தால் அர்ச்சுனன் மறித்தும் ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் துதிக்கின்றன்.

சு-ம். கூஹாஜிஹெவஃ வாஸுதேவஃ வாராண ஹஹய விஷ்ணவே வரம் நியாதம்।
வெதாஹி வெஹ்யஞ்ச வரஞ்ச யாஹ கூயா தந்தம் விஷ்வரூபாஸுவ ॥ (38)

ப-ம். 2 கூம 3 கூஜிஹெவஃ 4 வாஸுதேவஃ 5 வாராணஃ 6 கூம 7 ஸுஹய 8 விஷ்ணவே 9 வரம 10 நியாதம 11 வெதா 12 ஸுஹி 14 வெஹ்யம 13 அ 16 வரம 15 அ 17 யாஹ 18 கூயா 20 தந்தம 19 விஷ்ண 1 ஸுரூபாஸுவ.

(அ-ம்.) ஹே அனந்தரூப! நீயே ஆதிதேவன், புருஷன், புராணன், நீயே இவ்வுலகிற்குப் பரமநிதானம், முற்றுமறிபவன், சர்வதிருஷ்டிரூபம், பரமதாமரூபம்; நீயே இவ்வுலகனைத்தையும் விபாபித்திருக்கின்றனை. (38)

(வி-ம்.) ஹே அனந்தரூப! அதாவது மூவகைப்பரிச்சேதமிலாதோய்! இவ்வுலகனைத்தின் உற்பத்தி காரணந்தலின் நீயே ஆதிதேவனாய். எவ்விடத்தும் அஸ்நிபாதிப்பிரிய ரூபங்களாற் பூரணந்தலின் நீயே புருஷன்; அல்லது, பரிபூரண சர்வதேசகத்தின்கண்ணும் தூங்குபவந்தலின் நீயே புருஷன். நீயே புராணன்; அதாவது அநாதி: அல்லது, இவ்வாக்கைகள் கெடினும் நீ கேடுறாதிருத்தலின் புராணனுவாய். நீயே உலகனைத்திற்கும் பரமநிதானன். அதாவது, இவ்வுலகனைத்து மொடுங்கற்கிடமாவாய். ஈண்டு 'கூஜிஹெவஃ வாஸுநியாதம' என்னுமிரண்டு பதங்களால் அர்ச்சுனன் பகவானிடத்து இவ்வுலகனைத்தின் உற்பத்தி காரணத்தன்மையையும், இலபத்திற்குத்தானத்தன்மையையுங்கூறினன். இதனால் பரமேசுரனே உலகனைத்திற்கு முபாதானகாரணன் எனக் கூறப்பட்டதாம். என்னை, எதிற்காரியந்தோற்றி யொடுங்குகின்றதோ அது உபாதானகாரணமேயாம்; மண்ணிற்கடந்தோற்றி யொடுங்குகின்றதாதலின் அம்மண் அக்கடத்திற்குபாதானமே

யாதல்போலவாம். இவ்வாறு பரமேசுரனிடத்து உலகனைத்தின் உபாதான காரணத்தன்மையைக்கூறி, இப்போது சர்வக்ஞத்தன்மையாகிய வேதவால் சாங்கியநூலார் கற்பித்த ஜடப்பிரதானரூபகாரணத்தை விலக்கி, அப்பரமேசுரனிடத்து உலகத்திற்கு நிமித்தகாரணத்தன்மையையுங் கூறுகின்றான். 'வெதாஸி இதி' ஹே பகவன்! சர்வக்ஞனைதால் நீயே இவ்வுலகனைத்தையு மறிபவனுவாய். அதாவது, நீயே இவ்வுலகனைத்திற்குங் கருத்தாவடிவ நிமித்தகாரணனுவாய். ஆண்டு, இவ்வுலகனைத்தையும் பரமேசுரனுக்கயலாகக்கொள்ளிலோ, துவிதப்பிராப்தியாம். அதை நீக்குவான் அர்ச்சுனன் கூறுகின்றான் 'மவத்தியம்' என:—ஹே பகவன்! திருசியப்பிரபஞ்ச முழுதும் நீயே யாவாய்; அதாவது, ஞானசொரூப பரமேசுரனுகிய உன்னிடத்து இச்சடரூபத் திருசியப்பிரபஞ்சங்கட்கு ஓரு சம்பந்தமும் உண்மையிலின்றுமாதலின், இஃதனைத்தும் உன்னிடத்திற் கற்பிதமேயாம், கற்பிதப்பொருள் அதிட்டானத்தினும் வேறன்றும், கற்பிதமானபாம்பு முதலியவைகள் கயிறுகிய அதிட்டானத்தினும் வேறுகாததுபோலவாம். ஆதலின், துவிதபாவப்பிராப்திவாராதென்க: இதனுனே நீ பரமதாமனுவாய்; அதாவது, சச்சிதானந்தகனமும், காரியத்தோடு அஞ்ஞானமற்றதுமாகிய வியாபக விஷ்ணுவின் பரமபதமும் நீயேயாவாய். ஹே பகவன்! இயல்பாய்ச் சத்தாஸ்பூர்த்திபின்றிய இவ்வுலகத்தை திதிகாலத்தில் மாயிகசம்பந்தத்தால் நீ சத்தாஸ்புரணரூபகாரணத்தால் வியாபித்தனை, கயிறுகிய வதிட்டானம் தனது இதுவெனும் ரூபத்தால் கற்பிதமான பாம்பு, தடி முதலியவைகளை வியாபித்திருப்பதுபோலப் பரமேசுரனுகிய நீயும் உனது அஸ்திபாதிப்பிரியரூபத்தால் இவ்வுலகனைத்தையும் வியாபித்திருக்கின்றுய். (38)

(அ-கை.) இப்போது அர்ச்சுனன் ஸ்ரீ பகவானைச் சர்வதேவதாரூபத்தாற் றுதிக்கின்றான்.

சு-ம். வாயுயமொகிவருணஃ ஸஸாங்கஃ
ப்ரஜாவதிஸ்த்வம் ப்ரபிதாமஹஶ்ச।
நமோ நமஸ்தேஸ்து ஸஹஸ்ரகிருத்வஃ
புனஶ்ச பூயோபி நமோ நமஸ்தே ॥ (39)

ப-ம். 1 வாயுஃ 2 யமஃ 3 அக்நிஃ 4 வருணஃ 5 ஸஸாங்கஃ 6 ப்ரஜாவதிஃ 9 த்வம் 8 ப்ரபிதாமஹஃ 7 ச 12 நமஃ 13 நமஃ 10 தே 14 அஸ்து 11 ஸஹஸ்ரகிருத்வஃ 17 புனஃ 15 ச 19 பூயஃ 18 அபி 20 நமஃ 21 நமஃ 16 தே.

(அ-ம்.) ஹே பகவன்! வாயு, எமன், அக்கினி, வருணன், சந்திரன், பிரஜாபதி, பிரபிதாமகர் என்பவாய சர்வ தேவதாரூபமும் பரமேசுரனுகிய நீயேயாகின்றுய்; ஆதலின், உனக்கு நான் பல்லாயிரந்தரம் நமஸ்காரம்பண்ணுகின்றேன், நமஸ்காரம்பண்ணுகின்றேன். உனக்கு மறித்தும் அடிக்கடி நமஸ்காரம் நமஸ்காரம். (39)

(வி-ம்.) ஹே பகவன்! பரமேசுரனுகிய நீயே வாயுரூபமும், யமரூபமும், அக்கினிரூபமும், வருணரூபமும், சந்திரரூபமுமாவாய். ஈண்டு, 'ஸஸாங்கஃ' என்னுஞ் சத்தம் சூரியன் முதலிய தேவதைகட்கும் உபலக்ஷகமாம். அதாவது, பரமேசுரனுகிய நீயே சூரியன் முதலிய சர்வ தேவதாரூபமும், பிரஜாபதிரூபமுமாவாய். ஈண்டுப் பிரஜாபதி என்னுஞ் சத்தத்தால் விராட்டையேனும், இரணியகருப்பனையேனும், தக்ஷன் முதலியோர்களையேனுங் கொள்ளவேண்டும். நீயே

பிரபிதாமகரூபமுமாவாய். அதாவது, அவ்விரணியகருப்பனுக்கும் பிதாரூபகாரணப் பிரஹ்மமும் நீயேயாகின்றாய். ஹே பகவன்! எக்காரணத்தால் சர்வதேவதாவடிவமானதால் பரமேசுரனுகிய நீ சர்வப்பிராணிகளாலும் நமஸ்கரித்தற்குரியனுகின்றனையோ! அதனுனே, மிகவும் அனுதனுகிய நான் உன்னைப் பல்லாயிரந்தரம் நமஸ்கரிக்கின்றேன்: நமஸ்கரிக்கின்றேன். மறித்து முனக்கு நமஸ்காரம்: நமஸ்காரம். ஈண்டு, மறித்து மறித்தும் நமஸ்காரத்தின் ஆவிருத்தியால் அர்ச்சுனன் பக்திசிரத்தாபூர்வகம் பகவானுடைய நமஸ்காரத்தில் போதும் எனும் புத்தியின்மையைக்குறித்தனன்; அதாவது, பரமேசுரனுகிய உனக்குச் சிரத்தை பக்திபூர்வகம் மறித்து மறித்தும் நமஸ்காரம் பண்ணுவதில் எனக்குத் திருப்தியுண்டாகவில்லை என்பதாம். (39)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். நமஃ வாஸுதேவாய வ்ருஷ்ணயே
நமோஸ்து தே ஸவ்ருத ஸவ ஸவ-ஃ।
ஸநஞ்ஜயீயாஃயிதவிக்ரமாய
ஸவ-ஃம் ஸமாவைஷி ததோஸி ஸவ-ஃஃ॥ (40)

ப-ம். 4 நமஃ 3 வாஸுதேவாய 6 ச 7 வ்ருஷ்ணயே 2 தே 8 நமஃ 5 ஸ்துதே
9 தே 10 ஸவ-ஃதஃ 11 ஸவ 1 ஸவ-ஃ 13 ஸநஞ்ஜயீயாஃயிதவிக்ரமாய
12 ஸ்வம் 14 ஸவ-ஃம் 15 ஸமாவைஷி 16 ததஃ 18 ஸ்வ 17 ஸவ-ஃஃ.

(அ-ம்.) ஹே சர்வ! உனது முன்பக்கத்தும் பின்பக்கத்தும் நான் நமஸ்கரிக்கின்றேன். உன்னை எல்லாத்திக்குகளிலுமே நமஸ்கரிக்கின்றேன். பரமேசுரனுகிய நீ அனந்தவீரிய அமித விக்கிரமமுடையனும், இவ்வுலகனைத்தையும் வியாபித்தவனுமாதலின் நீ சர்வனெனப்படுகின்றாய். (40)

(வி-ம்.) ஹே சர்வ! அதாவது சர்வான்மகரூப பகவன்! நான் உனக்கு முன்பக்கத்தும் பின்பக்கத்தும் எத்திக்குகளிலும் நமஸ்காரம் பண்ணுகின்றேன். ஈண்டு, சர்வான்மரூப வியாபக பரமேசுரனுக்கு முற்பக்கமுதலியவைகள் பொருந்தா; பரிச்சின்னப் பொருட்கேயாம்; அங்ஙனமாயினும் நான் அவ்வகளைக் கற்பித்துக்கொண்டு நமஸ்கரிக்கின்றேன், உண்மையிலின்றும். ஒரு வியாக்கியானத்திலோ 'வாஸுதேவாய' என்னும் பதத்திற்குக் கருமத்தின்முடக்கத்திலும், பிருஷ்டதஃ என்னும் பதத்திற்குக் கருமத்தினீற்றிலும், சர்வதஃ என்னும் பதத்திற்குக் கருமத்திற்கிடையிலும் நான் உனக்கு நமஸ்காரம் பண்ணுகின்றேன் எனப் பொருள் பண்ணப்பட்டிருக்கிறது; அதாவது கருமந்தொடங்கும்போதும் இடையிலும் ஈற்றிலும் உன்னை நமஸ்கரிக்கின்றேன் என்பதாம். இவ்வியாக்கியானம் சர்வான்மரூபப் பரமேசுரனுக்கு முற்பக்க முதலிய கற்பனைகளைச் செய்யாதொழிந்ததென்க. ஹே பகவன்! அனந்தவீரிய அமித விக்கிரமமாவாய்; ஆண்டு அனந்தவீரியத்தையும் அமிதவிக்கிரமத்தையும் உடையவன் அனந்த வீரியாதி விக்கிரமனுவன். அவற்றில் தேகத்திணுற்றல் வீரியமாம்: சிகூதாநூலின் பிரயோகத்தின் குசலத்தன்மை விக்கிரமமாம். ஆண்டு ஏக வீரியத்தானே அதிகத்தன்மையும், ஏக விக்கிரமத்தானே அதிகத்தன்மையுமோ பீம துரியோதனன் முதலியோர்களிடத்தும், அன்னிய ராஜாக்களிடத்துமிருக்கின்றது; ஆனல் அனந்த வீரியத்தால் அதிகத்தன்மையும் அமித விக்கிரமத்தால் அதிகத்தன்மையும் பரமேசுரனுகிய நின்னையொழிந்த ஏனையோர்களிடத்தின்றும்; மற்றே, நீயோ நின்னிடத்தேயாம். அல்லது, அனந்தவீரிய அமித விக்கிரமம் என்பதை இரண்டு பதங்களென்

றுணரவும். அவற்றுள் அனந்தவீரிய என்னும் பதமோ, ஹே அனந்தவீரிய! எனப் பகவானுடைய சம்போதனமாம். ஆண்டு அர்ச்சுனன் ஸ்ரீ பகவானை 'ஹே சர்வ' எனச் சம்போதனை பண்ணியிருந்தனன், அச்சர்வ சப்தத்தின் அர்த்தத்தை இப்போது கூறுகின்றான்.— 'ஸர்வ-ஃo ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ-ஃ:' என : ஹே பகவன்! எக்காரணத்தாற் பரமேசுரனுகிய நீ இவ்வுலகனைத்தையும் உனது சத்தாஸ்புரணரூபத்தால் வியாபித்திருக்கின்றனையோ, அக்காரணத்தானே நீ சர்வன் எனக்கூறப்படுகின்றாய்; அதாவது உனைத்தவிர வொருபொருளுமின்றென்பதாம்.

(அ-கை.) ஹே பகவன்! எக்காரணத்தால் பரமேசுரனுகிய உன் மகாத்மியத்தை யுணராமல் உனக்கபராதம் பண்ணினேனே, அதனுனை பரமகிருபாலுவாகிய வுனக்குத் தண்டம்போல் நமஸ்காரஞ்செய்து அவ்வபராதங்களைச் சாந்திபண்ணுகின்றேன் என்பதை அர்ச்சுனன் இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றான்.

சு-ம். ஸகெதி மத்வா ப்ரஸபம் யதுக்தம்
ஹெ கிருஷ்ண ஹெ யாதவ ஹெ ஸகெதி ।
அஜாநதா மஹிமாநம் தவெதம்
மயா ப்ரமாதாத் ப்ரணயெந வாபி ॥ (41)

ப-ம். 6 ஸகா 7 இதி 8 மத்வா 18 ப்ரஸபம் 13 யத் 19 உக்தம் 14 ஹெகிருஷ்ண 15 ஹெயாதவ 16 ஹெஸகெ 17 இதி 4 அஜாநதா 3 மஹிமாநம் 1 தவ 2 இதம் 5 மயா 9 ப்ரமாதாத் 11 ப்ரணயெந 10 வா 12 அபி.

(அ-ம்.) ஹே பகவன்! உனது விசுவரூபத்தையும் ஐசுவரியத்தையு முணராது, நான் இக்கிருஷ்ணன் என்சகா எனவெண்ணிச் சித்த விசேஷபத்தாலேனும், சிநேகத்தாலேனும், ஹே கிருஷ்ண! ஹே யாதவ! ஹே சகே! என மறைப்போடுகூடிய எவ்வாக்கியத்தைச் சொன்னேனே, அவ்வனைத்தையும் நீ க்ஷமித்தருள்வாய். (41)

(வி-ம்) ஹே பகவன்! இக்கிருஷ்ணன் எனது சகாவாவன். அதாவது சமான வயதுடையவன்: அல்லது, எனதுமாமன்புத்திரன் என உன்னை யெண்ணி நான் எனது சித்தவிசேஷரூபப்பிரமாதத்தால் அல்லது, சிநேகத்தால், உன்னைக்குறித்து இழிவாகிய எவ்வார்த்தையைக் கூறினேனே, அதாவது எனது மேம்பாட்டை வெளிப்படுத்தல்வடிவ இறுமாப்பினுல் உசிதமிலா எவ்வசனத்தைக்கூறினேனே, என்னுடைய அவ்வபராதங்களனைத்தையும் க்ஷமித்தருள்வாய். அர்ச்சுன! அத்தன்மைய உசிதமிலா வசனத்தை எக்காரணத்தாற் கூறினை எனப் பகவான் சங்கிப்ப அதிற் காரணங்கூறுகின்றான்.—'அஜாநதா மஹிமாநம் தவெதம் இதி' ஹே பகவன்! உன்னுடைய விசுவரூபத்தையும் ஐசுவரிய வடிவமகிமையையும் நான் முன் அறியாததால் அத்தன்மைய உசிதமிலா வாக்கியத்தைக் கூறினேன். ஹே அர்ச்சுன! நீ என்னவார்த்தை அநுசிதமாய்க் கூறினை எனப் பகவான் வினவ, அர்ச்சுனன் அவ்வார்த்தையின் சொரூபத்தைக் கூறுகின்றான்.—ஹே கிருஷ்ண! ஹே யாதவ! ஹே சகே! என. ஹே பகவன்! உலகனைத்தின் தோற்ற நிலையிறுகளைச் செய்யப்பட்டவனும், பிரஹ்மன் முதலிய சர்வ தேவதைகட்குங் குருரூபமுமாகிய பரமேசுரனை உன்னை நான் ஹே கிருஷ்ண! ஹே யாதவ! ஹே சகே! எனச் சம்போதித்தேன் (கூப்பிட்டேன்). ஆண்டு ஒரு மூல புஸ்தகத்தில் 'அஜாநதா மஹிமாநம் தவெதம்' எனவும் பாடமுளது. அதில் 'அஜாநதா மஹிமாநம் அதம்' என்னு மிரண்டு பதங்கட்குஞ் சமானதிகரணமே யுணரத்தக்கது: அதாவது உன்னுடைய விசுவரூப இம்மகிமையை நான் முன்னருணர்ந்திலேன் என்பதாம். (41)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். யஷுாவஹாஹாயுழஹஸ்தூதொஹி
விஹாரஸயுாஹநஹொஜநெஷு ।
ஹகொயு வாவ்யஅ்ஸ்ததஹஸ்ஹுக்ஷம்
தக்ஷோஷயெ கூாஷஹஷவ்யெயெழ ॥ (42)

ப-ம் 9 யகூ 2 அ 3 சுவஹாஹாயுழ்ம் 10 சுவஹஸ்தூதஃ 11 சுவஹி 4 விஹாரஸ
யுாஸநஹொஜநெஷு 5 ஹகஃ 6 சுயுவா 7 சுவி 1 சுஅஸ்ஸ்த
8 ததஹஸ்ஹுக்ஷம் 12 தக்ஷ 16 க்ஷோஷயெ 14 கூவாம் 13 சுஹம் 15 சுவ்யெயம்.

(அ-ம்.) ஹே அச்சுத! அங்ஙனமே பரிகாசத்தின்பொருட்டு விளையாட்டு, படுக்கை, ஆசன போஜனங்களில் ஒன்றாய் உட்கார்ந்திருப்பவனாகி; அல்லது ஒரு போது அச்சகாவின் முன்னிலுட்கார்ந்திருப்பவனாய், நான் தங்கட்கு நிந்திதமாகச் செய்த அபராதங்களனைத்தையும் அப்பிரமேயரைக்குறித்து க்ஷமைப்படுத்துகின்றேன். (42)

(வி-ம்.) ஹே அச்சுத! அதாவது சர்வதா நிருவிகார! கிரீடைவடிவ விவகாரத்திலும், ஆடை பஞ்சு முதலியனவகளாற் செய்யப்பட்ட உறங்குமிடமாகிய படுக்கையிலும், சிம்மாசன முதலிய ஆசனங்களிலும் என்ஜாதியார் பலரோடு உண்ணுதலாகிய போஜனத்திலும், சர்வ சகபாடிகளையும் விடுத்துத் தனித்திருக்கப்பட்ட அல்லது, பரிஹாசம் பண்ணிக்கொண்டு அச்சகாபாடிகளோடு கூடிக்கொண்டிருக்கப்பட்ட தங்களைக் கேலியின்பொருட்டு நிந்தித்த அநுசிதவாக்கியரூப சர்வாபராதங்களையும் அல்லது, அசத்காரணவடிவமாகிய அபராதங்கள் அனைத்தையும் க்ஷமிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். தாங்களெத்தன்மையரெனின், அப்பிரமேயராவீர்; அதாவது அசிந்தியப் பிரபாவமுடையவராவீர். கருத்திதுவாம்:— அசிந்தியப்பிரபாவமுடையரும், சர்வ விகாரமின்றியவரும், பரமகிருபாலுரூபருமாகிய பரமேசுரவடிவ தங்களுடைய பிரபாவத்தையறியாத நான் செய்த அபராதங்களை க்ஷமைசெய்தருள்வீர் என்பதாம். (42)

(அ-கை.) இப்போதர்ச்சுனன் ஸ்ரீ பகவானைக்குறித்துக் கூறிப்போந்த அசிந்தியப்பிரபாவத்தை விளக்கமாய் வருணிக்கின்றான்.

சு-ம். விதாவி லொகுவ்ய அமாஅமவ்ய
கூவவ்ய வலஜ்யஷ்டுமாமமரீயாநு ।
நகூத லொவ்ஸ்தயஹ்யயிகஃ கூதொநயா
லொகுத்ரயெவ்யவ திவ்யஹாவ ॥ (43)

ப-ம். 6 விதா 7 சுவி 4 லொகுவ்ய 3 அமாஅமவ்ய 5 கூம் 2 சுவ்ய
9 வலஜ்யஃ 8 அ 10 மாமாஃ 11 மரீயாநு 16 ந 13 கூதஸ்ஹஃ 17 சுவி.
18 சுவ்யயிகஃ 19 கூதஃ 15 சுநயஃ 12 லொகுத்ரயெ 14 சுவி
1 சுவ்யதிவ்யஹாவ.

(அ-ம்.) ஹே ஒப்பிலாப் பிரபாவமுடையோய்! இந்தச் சராசரமாகிய உலகனைத்திற்கும் நீர் பிதாரூபரும், பூஜ்யரும், குருரூபரும், குருசிரேஷ்டருமாவீர். மூவுலகத்தும் உமக்கொப்புமையுமின்றேல் உம்மிலதிகமாதல் யாங்ஙனமாம்? (43)

(வி-ம்.) ஹே பகவன்! இந்தத் தாவரசங்கமவடிவ உலகனைத்திற்கும் நீரே பிதா அதாவது, உண்டுபண்ணுபவர்: ‘யதோவாஉஸா நி ஹூதாநிஜாயந்தெ’ எப்பரமான்மாவினின்றும் இப்பூதங்களனைத்துமுண்டாகின்றன: என்பது முதலிய சுருதிகளிலும் பரமேசுராகிய வுமக்கு உலகனைத்தையு முண்டாக்குந்தன்மை கூறப்பட்டிருக்கின்றது. சர்வத்திற்கு மீசரானதால் தாங்களே பூஜ்யராவீர். தாங்களே நூல்களனைத்தையு முபதேசிக்குங்குருவுமாவீர். இதனினை, எவ்வாற்றானும் தாங்களே குருசிரேஷ்டராவீர். அதாவது, எவற்றினும் மேம்பட்டவராவீர். இதனினை, மூவுலகத்துள்ளும் உமக்கொப்பாரை யொருவரில்லை. அங்ஙனமேல் உம்மிலதிகமாய் ஒருவருளரென்பது யாங்ஙனம்? மற்றை, ஒருவருமேயின்றும், கருத்திதுவாம்.—பரமேசுராகிய உமக்கொப்பாரைர் வேறொருவருமிலர், என்னை ஒருகால் உமக்கொப்பாய் ஒருவரையுடன்படில் அவரு மீசுரரே என்பது சித்தமாம். ஆகவே, ஓரீசன் இவ்வுலகையுண்டாக்கவேண்டுமென இச்சிப்பன், மற்றை ரீசன் அக்காலத்திலேயே இவ்வுலகைச் சம்மரிக்கவேண்டுமென் றிச்சிப்பன். ஆதலின், ஒரு வியவகாரமும் பொருந்தாதாம். மற்றை, சர்வ வியவகாரங்களும் மறைபட்டுப்போம். ஆதலின், உமக்கொப்பாரைர் வேறொருவருமிலர். அங்ஙன மேல் உம்மிலதிகமெவராவர்? மற்றை, எவ்வாற்றானும் உம்மிற்சிறந்தாரிலர். ஆண்டுச்சுருதி.—

தத்ஹ உஷா ஆஹ்யிகுஷ உபாஸ்யதெ।

(பொ-ள்.) அப்பரமேசுரருக்கொப்பும் அதிகமுங் காணப்படவில்லை என்பதாம். ஆண்டு, உமக்கொப்பாரைரில்லை எனக் கூறிப்போந்த அர்த்தத்தில் அர்ச்சுனன் காரணங்கூறுகின்றான்.—‘ஹெசுவு தீஉவு ஹாவ ஊதி’ என்றொப்புப் பிரதிமாவாம், அஃதின்றியது அப்பிரதிமாவாம், அத்தன்மைய சாமர்த்திய முடையவர் அப்பிரதிமப்பிரபாவமுடையவராவர் என்பதாம். (43)

(அ-கை.) தாங்களித்தன்மையராதலின் என்னுடைய அபராதத்தை க்ஷமை செய்விப்பான் தங்களுடைய சந்நிதியில் தண்டம்போல் நமஸ்கரித்துப் பிரார்த்திக்கின்றேன் என்பதை இப்போ தருச்சுனன் கூறுகின்றான்.

சு-ம். தஸ்மாத் ப்ரணம்ய ப்ரணிதாய காயம்
ப்ரஸாதயெ த்வாமஹமீஶமீட்யம்।
பிதெவ புத்ரஸ்ய ஸகெவ ஸக்யுஃ
ப்ரியஃ ப்ரியாயார்ஹஸி தெவ ஸொட்டும்॥ (44)

ப-ம். 1 தஸ்மாத் 2 ப்ரணம்ய 4 ப்ரணிதாய 3 காயம் 9 ப்ரஸாதயெ 7 த்வாம் 5 அஹம் 8 ஈஶம் 6 ஈட்யம் 12 பிதா 13 இவ 11 புத்ர 15 ஸ்ய 15 ஸகா 16 இவ 14 ஸக்யுஃ 18 ப்ரியஃ 17 ப்ரியாயாஃ 20அர்ஹஸி 10தெவ 19ஸொட்டும்.

(அ-ம்.) ஹே பகவன்! ஆதலின் உம்மை நமஸ்கரித்து எனதாக்கையைத் தண்டம்போல்தாணம்பண்ணி எல்லாப்பிரகாரத்தானும் ஸ்துதித்தற்குரிய உம்மை கிருபைபாலிப்பீர் எனப் பிரார்த்திக்கின்றனதலின், தேவனே! புத்திரன் பிழையைப் பிதாவும், சகாவின் பிழையை சகாவுடையனும், மனையாள் பிழையைக் கணவனும் பொறுத்துக்கொள்வதுபோல, என்னுடைய அபராதத்தைத் தாங்கள் க்ஷமித்துக்கொள்ளற்குரியரே. (44)

(வி-ம்,) ஹே பகவன்! பரமேசுராகிய தாங்கள் உலகனைத்திற்கும் பிதாவும் குருவுமாவீராதலின், நானும்மை நமஸ்கரித்து எனதாக்கையைத் தரையிற் படியச்செய்து உமக்கன்புண்டாம் வண்ணம் பிரார்த்திக்கின்றேன்; அதாவது, அபராதியாகிய நான் என தபராதத்தை க்ஷமை செய்வித்தற்பொருட்டு என்னிடத்தன்புகூர்வீர் எனத் தங்களுடைய சந்நிதியிற் பிரார்த்திக்கின்றேன். தாங்கள் எத்தன்மையரெனின், இவ்வுலகனைத்திற்கு நியந்தாவாகிய வீசுராவீர். பிரஹ்மன் முதலிய தேவர்களாலுந் துதிக்கத்தக்கவராவீர். இதனாலே தேவனெனும் சுயம் பிரகாசரூபரே! புத்திரன் குற்றத்தைப் பிதாவும், சகாவின் குற்றத்தைச் சகியும், பத்தினியாகிய பிரியாள் குற்றத்தைப்பதியும் க்ஷமித்துக்கொள்வதுபோல, எனது குற்றத்தையும் தாங்கள் க்ஷமித்தற்குரியரேயாவீர். நான் கேவலம் உமது திருவடி ஊழியனேயன்றி மற்றெவர்க்குமிலன் ஆதலின், எனது பிழையைப் பொறுத்தருள்செய்தற்குரியரே என்பதாம். ஈண்டு, 'ப்ரியாயார்ஹஸி' என்னும் வாக்கியத்தில், வது, என்பதின் உலோபமும், விசர்க்கலோபமாகினுஞ் சந்தியும், சந்தசு சம்பந்தத்தாலென்க. (44)

(அ-கை.) இவ்வாறு அர்ச்சுனன் தனதபராதத்தை க்ஷமிக்கும் வண்ணம் ஸ்ரீ பகவானைப் பிரார்த்தித்து, மீண்டும் அவ்விசுவரூப உபசம்மார பூர்வகம் முந்தியரூப தரிசனத்தின் பிரார்த்தனையை இரண்டு சுலோகங்களாற்செய்கின்றான்.

சு-ம். அதிருஷ்டபூர்வம் ஹ்ருஷிதோஸ்மி ப்ரவ்யதா
ஹயேந மே ப்ரவ்யதிதம் மனோ மே।
ததேவ மே தர்சய தேவ ரூபம்
ப்ரஸீத தேவேச ஜகந்நிவாஸ ॥ (45)

ப-ம். 1 அதிருஷ்டபூர்வம் 3 ஹ்ருஷிதஃ 4 அஸ்மி 2 ப்ரவ்யதா 6 ஹயேந 5 மே 9 ப்ரவ்யதிதம் 8 மனஃ 7 மே 11 தத் 13 மம 10 மே 14 தர்சய 15 தேவ 12 ரூபம் 18 ப்ரஸீத 16 தேவேச 17 ஜகந்நிவாஸ.

(அ-ம்.) ஹே பகவன்! முன்னர்க்காணுத விசுவரூபத்தைக்கண்டு நான் சந்தோடமுடையனானேன், பயத்தால் எனதுள்ளம் வியாகூலத்தை அடைந்தது; ஆதலின், எனக்கு முந்தியவடிவத்தையே காட்டியருள்வீர். ஹே தேவதேவேச! ஜகன்னிவாச! என்னிடத்தில் அன்புகூர்ந்தருள்வீர். (45)

(வி-ம்) ஹே பகவன்! நான் முன்னொருபோதுங் காணுத தங்களுடைய விசுவரூபத்தைத் தரிசித்துச் சந்தோடத்தையடைந்தேன். அக்கோரரூப தரிசனத்தாலுண்டாகிய பயத்தால் மனோ வியாகூலத்தையுமடைந்தேன். ஆதலின், ஹே பகவன்! எனக்கு மிகப் பிரியமான முந்தியவடிவத்தைக் காட்டியருள்வீர். ஹே தேவனென்னும் சுயம்பிரகாசரூப! சர்வ தேவதைகட்கு நியந்தாவாகிய தேவேச! உலகனைத்திற்கும் ஆதாரமாகிய ஜகன்னிவாஸ! என்மே லன்புகூர்ந்து முந்திய தரிசனவடிவப் பிரசாதமளித்தருள்வீர். (45)

(அ-கை.) தரிசனத்தின்பொருட்டுப் பிரார்த்தித்த முந்தியவடிவத்தை விசேடணங்களோடு வர்ணிக்கின்றான்.

சு-ம். கிரீடினம் கதினம் சக்ரஹஸ்த
மிச்சாமி த்வாம் த்ரஷ்டுஹம் ததைவ।
தேனைவ ரூபேண சதுர்புஜேன
ஸஹஸ்ரபாஹோ பவவிஸ்வமூர்தே ॥ (46)

ப-ம். 2 கிரீடிநம் 3 மதிநம் 4 அ கூஹஸ்தம் 9 ஹ்ருஷீ 5 கூவாம் 8 ஹ்ருஷீம் 1 கூஹம் 6 தயா 7 வை 12 தேந 15 வை 14 ரூபி வெண 13 அ தர்ஹ்ருஜேந 10 வஹஹ்ருவாஹோ 16 ஹ்வ 11 விஸ்வரூபித்ரு.

(அ-ம்.) ஹே பகவன்! நான் கிரீடத்தையும், கதையையும், கரத்திற் சக்கரத்தையும் உடைய உனது சொரூபத்தை முன்போற்றரிசித்தற் கிச்சிக்கின்றேனதலின், ஹே ஆயிரந்தோளுடையோய், ஹே விசுவமூர்த்தியே! இப்போது முந்திய சதுர்ப்புஜரூபமாகவே பிரகடனமாவாய். (46)

(வி-ம்.) ஹே பகவன்! கிரீடத்தையும், கதையையும், கரத்திற் சக்கிரத்தையும் உடைய பரமேசுரனுகிய உனது அழகிய சொரூபத்தை இவ்விசுவரூபத்திற்கு முன்னர்ப் பார்த்தபடி பார்த்தற்கு இச்சிக்கின்றேனதலின், ஹே ஆயிரந்தோளுடையோய்! ஹே சர்வ விசுவரூப மூர்த்தியைத்தரித்தவனே! இப்போது அவ்விசுவரூபத்தை அடக்கிக்கொண்டுமுந்திய சதுர்ப்புஜரூபமாய்ப் பிரகடமாவாய். இத்துணை கூறியதால் அர்ச்சுனன் எப்போதும் ஸ்ரீ பகவானுடைய சதுர்ப்புஜ முதலிய சொரூபத்தையே தரிசித்துக்கொண்டிருந்தான் என்பது குறிப்பிக்கப் பட்டதாம். (46)

(அ-கை.) இவ்வாறு அர்ச்சுனனைப் பிரார்த்திக்கப்பட்ட ஸ்ரீ பகவான் அவ்வர்ச்சுனன் பயத்தாற் பீடையுற்றதைப்பார்த்து விசுவரூபத்தை அடக்கிக்கொண்டு உசிதமான வார்த்தைகளால் அவ்வர்ச்சுனனைச் சந்தோடப்படுத்தி அருளிச்செய்கின்றார்.

ஸ்ரீ ஹ்ருவாச வாச.

சு-ம். யோவ்ருஸ்தேந தவாஜ்ரு நேந
ரூபேண பார்த்தேதமதர்சயம் ஸ்வம்
தேஜோமயம் விஸ்வமநந்தமாத்யம்
யந்மே த்வதந்யேந ந த்ருஷ்டபூர்வம் ॥ (47)

ப-ம். 3 மயா 2 வ்ருஸ்தேந 5 தவ 1 சுஜ்ரு நேந 6 ஊம் 8 ரூபேண 7 பார்த்த 9 தர்சிதம் 4 ஸ்வயோகாத் 10 தேஜோமயம் 11 விஸ்வம் 12 சுநந்தம் 13 ஸ்ரூத்யம் 14 யந் 15 மே 16 த்ருஸ்டபூர்வம் 17 ந 18 த்ருஷ்டபூர்வம்.

(அ-ம்) ஹே அர்ச்சுன! பிரசன்னமுடைய பரமேசுரனுகிய நான் எனது வலியாலுனக்கு இவ்விசுவரூப சிரேஷ்ட வடிவத்தைக்காட்டியருளினேன்; அச்சொரூபம் தேஜோமயமாம், சர்வ விசுவரூபமாம், அனந்தமாம், ஆதியாம், முன்னெவராலுங் காணப்படாததுமாம். (47)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! நீ எனது விசுவரூபத்தைப் பார்த்துப் பயமுறாதே. உனக்கொருபயமுண்டாம்வண்ணம் இவ்விசுவரூபத்தை நானுனக்குத் தரிசிப்பிக்கவில்லை. மற்றோ, சந்தோடமுடைய நான் அதாவது, உனது விஷயக மிக்க கிருபையையுடைய நான் உனக்குச் சிரேட்டமாகிய எனது விசுவரூபத்தை எனதாற்றலாற்றரிசிப்பித்தேன், கேவலம் உன்னிடத்துள்ள கிருபையாலே காண்பித்தேன். ஆண்டு, பரம் என்னும் விசேடணத்தால் அவ்விசுவரூபத்திற்குக் கூறப்பட்ட சிரேஷ்டத்துவரூபமாகிய பரத்துவத்தையே இப்போது விளக்கிக் கூறுகின்றார் 'தேஜோமயம்' என. ஹே அர்ச்சுன! எனது விசுவரூபம்எத்தன்மையதெனின்,

தேஜோமயம் அதாவது, கோடியிரவிகளின் பிரபைக்கொப்பான பிரபையையுடையதாம், விசுவரூபமானதாம், முதலீறிலாததாம், அத்தன்மைய விசுவரூபத்தை நான் கேவலம் மிகப்பிரிய பக்தனாகிய உனக்குத் தரிசிப்பித்தேன். ஹே பகவன்! தாங்களிவ்வாறு கூறல் தகாது ; என்னை, திருதராஷ்டிரன் மனையில் பீஷ்மர் முதலியோர்கட்கும், பாலியாவத்தையில் உமது மாதாவாகிய யசோதைக்கும், அக்குரூரனுக்கும் தாங்கள் இவ்விசுவரூபத்தைக் காட்டியிருத்தலின் ; என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு, ஹே அர்ச்சுன! நான் அவர்க்குக்காட்டிய விசுவரூபம் இவ்விசுவரூபத்தினிடைப்பட்டதொரு சொரூபமாதலின், அது உத்தமமன்று. உனக்குக் காண்பித்த விசுவரூபமோ எல்லாவற்றினுஞ் சிறந்ததாம், மற்றெவருமிதைப் பார்த்திலார் என உத்தரமருளிச்செய்கின்றார் :—'யன்மேஉதி' ஹே அர்ச்சுன! என்னுடைய இந்த விசுவரூபத்தை உனக்கன்னிய ரெவரும் பார்த்திலார், கிருபையாலுனக்கிதைத் தரிசிப்பித்தேன் என்பதாம். (47)

(அ-கை.) ஹே அர்ச்சுன! இந்த விசுவரூபதரிசனமாகிய மிகத்துர்லபமான எனது பிரசாதத்தையடைந்து நீ கிருதார்த்தனாயினை என்னுமபிப்பிராயத்தால், ஸ்ரீ பகவான் அவ்விசுவரூபத்தின் துர்லபத்தன்மையை இப்போதருளிச்செய்கின்றார்.

சு-ம். ந வேதயஜ்ஞாத்யயனைர்ந தானை
ர்ந சக்ரியாபிர்ந தபோபிருக்ரை:।
வமவம்ரூபஃ ஶக்ய அஹம் நரலோகே
த்ரஷ்டும் த்வதன்யேன குருப்ரவீர ॥ (48)

ப-ம். 9 ந 7 வேதயஜ்ஞாத்யயனைஃ 12 ந 11 தானைஃ 15 ந 13 அ 14 க்ரியாபிஃ 18 ந 17 தபோபிஃ 16 உக்ரைஃ 3 வமவம் 4 ரூபஃ 10 ஶக்யஃ 5 அஹம் 2 நரலோகே 8 த்ரஷ்டும் 6 அதன்யேன 1 குருப்ரவீர.

(அ-ம்.) ஹே குருவம்சத்தில் அதிவீரசூரனாகிய அர்ச்சுன! இம்மநுடலோகத்தில் இத்தன்மைத்தானவிசுவரூபமுடைய பகவானாகிய நான், நீ பொழிந்த ஏனையோர்களால், வேதங்களின் யஜ்ஞங்களின் அத்தியயனத்தால் காணற்கொணாதோன் நான். அங்ஙனமே தானங்களாலு மறியப்படேன். அங்ஙனமே கருமங்களாலும் தவங்களாலும் காணற்கரியேன். (48)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் வேதங்களைக் குருமுகமாய் அக்ஷரக்கிரகணரூப அத்தியயனம், அங்ஙனமே பூர்வமீமாஞ்சை, கற்பசூத்திர முதலியவைகளால் வேதபோதித கருமரூப யக்ஞங்களின் அர்த்தவிசாரரூப அத்தியயனம் என்னு மிவ்விருவகை அத்தியயனங்களாலும், யாகங்களின் அத்தியயனத்தாலும், துலா புருஷதானம், கன்னியாதானம், கோ பொன் அன்னதான முதலிய பலவகைத் தானங்களாலும், அக்னிஹோத்திர முதலிய ஸ்ரௌதஸ்மார்த்தகருமங்களாலும், காயபுலன்கள் காய்ந்துவிடுதலால் செய்வதற்கு மிகக் கஷ்டமாகிய கிருச்சிர சாந்திராயண முதலிய தவங்களாலும், இம்மநுடலோகத்தில் இத்தன்மைய விசுவரூபத்தை நீ யொழிந்த ஏனையோர்களால் பார்க்கொணாது. அதாவது, எனதநுக்கிரகமின்றியவனால் கூறிய வேதாத்தியயன முதலியவைகளால் எனது விசுவரூபத்தைத் தரிசிக்கமுடியாது. அத்தன்மைத்தான இவ்விசுவரூபத்தைக் கிருபையாலுனக்குக் காண்பித்தேன். அதன்றரிசனத்தால் இப்போது நீ கிருதார்த்தனாயினை என்க. ஆண்டு, மூலசுலோகத்தில் 'ஶக்யஅஹம்' என்னும் வாக்கியங்கூறிபவிடத்தில் 'ஶக்யோஅஹம்' என்னும் வசனங்

கூறற்பாலதாமாயினும், 'ஸகூ ஸஹம்' என்பதிலுள்ள விசர்க்கலோபம் சந்தசு சம்பந்தத்தாலாம். அன்றியும், நகாரம் ஒன்றைக்கூறுவதனாலே அத்தியயன முதலிய சர்வத்தையும் நிடேதம்பண்ணியதாம். ஆயினும், அத்தியயன முதலிய நான்கோடும் தனித்தனி நகாரபாடம் விசுவரூபதரிசனத்தில் அத்தியயன முதலியவைகளின் நிடேதம் திடமாதற்பொருட்டாம். அன்றியும், 'நஅக்ரியாஹிஃ' என்னும் வாக்கியத்திலுள்ள சகாரமானது ஈண்டுக் கூறுத வேனயசாதனங்களையுங் கொள்ளுதற்பொருட்டாம்; அதாவது பரமேசுரனுகிய எனதனுக்கிரகமின்றி மற்றெந்தச் சாதனங்களினாலும் எனது விசுவரூபங்காணுணுதென்பதாம். (48)

(அ-கை.) ஹே அர்ச்சுன! உன தனுக்கிரகத்தின்பொருட்டு என்னாற் பிரகடம் பண்ணப்பட்ட எனது விசுவரூபத்தால் உனக்கு ஒருகால் வியாகுலமுண்டாகில், நான் எனது சொரூபத்தை இப்போதே அடக்கிக்கொள்கிறேன்: நீ வியாகூலமுறுதே என்பதை ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக் கருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸ தெ வ்யுஸ ஸ அ விஶ்வரூபமிதம்
தவ்வ்ய ருஷ்ண ஸ்ரீவம் வொஸீ தவ்ய ஜூதெஶம் ।
வ்யுவெதஹீஃ ரூபதபாஃ வாநஷ்வம்
ததெவ மெ ஸ்ரீவவிஶம் வ்யுவஸ்ய ॥ (49)

ப-ம். 9 ஸ 7 தெ 8 வ்யுஸ 12 ஸ 10 அ 11 விஶ்வரூபமிதவஃ 6 தவ்வ்ய 5 ஸ்ரீவம் 4 வொஸம் 2 ஸ்ரீதவ்ய ஜூ 1 ஶஶ 3 இதம் 13 வ்யுவெதஹீஃ 14 ரூபத பாஃ 16 வாநஃ 15 க்வம் 18 தக் 21 ஸவ 17 மெ 20 ஸ்ரீவம் 19 இதம் 22 வ்யுவஸ்ய.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய என்னுடைய இத்தன்மைத்தான இக்கோரரூபத்தைப்பார்த்து வியாகூலப்படாதே; விமூடபாவத்தையுமடையாதே; மற்றோ, பயமின்றிச் சந்தோடமனத்தனுய் நீ மறித்தும் என்னுடைய முந்திய இச்சொரூபத்தையே நோக்குதி. (49)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பலமுகந் தோள்களோடு கூடினமையின் மிகப் பயங்காமான எனது விசுவரூபத்தைப்பார்த்துநின்ற நீ வியாகூலத்தை யடையாதே; அதாவது, பயமாகிய நிமித்தத்தாலுண்டாகிய பீடையையடையாதே. எனது விசுவரூபத்தைப்பார்த்து விமூடபாவமாகிய வியாகூலமனத்தன்மை, சந்தோடமின்மைகளை யடையாதே; மற்றோ, பயமின்றியவனுய், சந்தோடமனத்தனுய் நீ மீண்டும் எனது சதுர்ப்புஜரூபத்தைத் தரிசிப்பாய்; அதாவது, இவ்விசுவரூபத்திற்குமுன் நீ எப்போதுந் தரிசித்த எனது சதுர்ப்புஜரூபத்தைப் பயமிலாது சந்தோடமனத்தனுய்த் தரிசிப்பாய். ஈண்டுப்பயமின்மை சந்தோடங்கள் ஸ்ரீ பகவான் 'வ்யுவஸ்ய' இனிது நோக்குதி, என்பதிலுள்ள 'வ்ய' இனிது, என்னுஞ் சத்தத்தாற் கூறியருளினார் என்க. (49)

(அ-கை.) இப்போது சஞ்சயர் திருதராஷ்டிரர்க்குச் சொல்கின்றார்.

ஸஂஜய உவாச.

சு-ம். இத்யர்ஜுநம் வாஸுதெவஸ்ததொக்த்வா
க்வகம் ஸ்ரீவம் உபஸுயாஸாஸ ஭ீதஃ ।
கூஸ்ரீவாஸயாஸாஸ ச ஭ீததெஹம்
஭ீமக்வா வாநஃஸௌம்யவவுஸுஹாதா ॥ (50)

ப-ம். 3 ஊதி 2 ஸுஜ்ஞதம் 1 வ்ருஷெவஃ 5 தயா 4 உக்தா 6 ஹுகும் 7 ஸ்மிவம் 9 உபஜ்ஞயாஸா 8 ஹ்ருயஃ 17 க்ருஷ்ணஸயாஸாஹ 10 அஹ்ருக்ஷா 12 வ்ருதஃ 13 ஸளஜ்யவவ்ருஃ 15 ஹீதம் 16 வனதம் 11 உஹாதா.

(அ-ம்.) ஹே திருதராட்டிர! க்கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு இவ்வாறுய வாக்கியங்களை அருளிச்செ்து, அத்தன்மைத்தான தனது சதுர்ப்புஜ ரூபத்தை தரிசிப்பித்து, அந்த பரமகிருபாளுவாகிய அப்பகவான் இனிய வடிவுகிய பயமுடைய அர்ச்சுனனை ஆனந்தப்படுத்தியருளினர். (50)

(வி-ம்.) ஹே திராட்டிர! அந்த வாசுதேவனுகிய கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்குக் முன்போந்த வாக்கியத்தை அருளிச்செய்து, விசுவரூபமெடுத்தற்கு முன்னுள்ள சொரூபத்தை அர்ச்சுனனுக்குத் தரிசிப்பித்தனர். அதாவது, சிரசிற் கிரீடத்ததும், காதிற் குண்டலந்தரித்ததும், சதுர்ப்புயங்களிலும் சங்குசக்கர பத்மங்களைத் தரித்ததும், ஸ்ரீ வத்ச கௌஸ்துப வநமாலை பீதாம்பர முதலிவைகளாற் சோபிக்கப்பட்டதுமாகிய முந்திய தன்சொரூபத்தை அர்ச்சுனனுக்குத் தரிசிப்பித்தருளினர். அங்ஙனமே, அம்மஹாத்துமாவாகிய கிருஷ்ணன் அதாவது, பரமகாருணிக சர்வேசுர சர்வக்ஞத்தன்மை முதலிய கல்யாண குணவடிவமாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான், மீண்டும் சௌம்பியவபுவையுடையவராய் அதாவது, பரமாநுக்கிரகரூபசரீரமுடையவராய் விசுவரூபத்தாற் பயமுற்ற அர்ச்சுனனுக்குத்தைரியமுடை வாக்கியங்களால் இன்பத்தை விளைவித்தருளினர் என்க.

(அ-கை.) ஆண்டு ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய முந்திய சதுர்ப்புஜரூபத்தைத் தரிசித்த பின்னர் அர்ச்சுனன் பயமற்றவனுய் ஸ்ரீ பகவானைக்குறித்து இவ்வாறுய வாக்கியத்தைக்கூறுகின்றனன்.

ஸஜ்ஞத உவாச.

த்ருஷ்ட்வேதம் மாநுஷம் ரூபம் தவ ஸௌம்யம் ஜநார்தந |
இதாநீமஸ்மி ஸம்வ்ருத்தஃ ஸசேதாஃ ப்ரக்ருதிம் கதஃ ॥ (51)

7 த்ருஷ்டா 3 இதம் 4 மாநுஷம் 6 ரூபம் 2 தவ 5 ஸௌம்யம் 1 ஜநார்தந 8 இதாநீம் 11 ஸ்மி 10 ஸம்வ்ருத்தஃ 9 ஸசேதாஃ 12 ப்ரக்ருதிம் 13 கதஃ.

(அ-ம்.) ஹே ஜனார்த்தன! உன்னுடைய இந்த மாநுட சௌம்யரூபத்தைத் தரிசித்து நானிப்போது வியாகூலமின்றிய சித்தனானேன். சுவஸ்தனுமானேன்.

(வி-ம்.) ஹே ஜனார்த்தன! உன்னுடைய இம்மாநுடசௌம்யரூபத்தைத் தரிசித்து நான் இனிய மனத்தனானேன். அதாவது, விசுவரூபதரிசனபயத்தாலுண்டாகிய மோகமின்றி இப்போது சித்த வியாகூலமிலாதவனானேன். பயத்தாலுண்டாய துன்பமற்றிருத்தலின் சுவஸ்தனுமானேன். (51)

(அ-கை.) ஆண்டு ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்குச்செய்த விசுவரூபதரிசனடிவ அநுக்கிரகத்தின் துர்லபத்தன்மையை நான்கு சுலோகங்களால் அருளிச்செய்கின்றார்.

ஸ்ரீ ஹ மவாச.

ஸுதுர்தர்சமிதம் ரூபம் த்ருஷ்டவாநஸி யந்மம |
தேவா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் தர்சநகாங்க்ஷிணஃ | (52)

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஹே பரந்தப! இத்தன்மைய விசுவரூபமுடைய பரமேசுரனுகிய நான் அனன்யபக்தியாலே அறியத்தக்கவனும், உண்மைவடிவத்தை உள்ளவாறுணரத்தக்கவனும், அபேதரூபமாய்டையத்தக்கவனுமாவேன்.

(வி-ம்.) ஹே பரந்தப! அஞ்ஞானவடிவ சத்துருவைக்கெடுப்போய்! இத்தன்மைத்தாய திவ்ய விசுவரூடங்கொண்ட பரமேசுரனுகிய நான் அனன்யபக்தியொன்றாலே அறியப்படுவேன்; அதாவது, சர்வவிடயவாசனைகளையும் விடுத்துப் பரமேசுரனுகிய என்னேயொருவனேயே விடயப்பண்ணப்பட்ட நிரதிசயப்பிரீதியாகிய அனன்யபக்தியொன்றாலே இவ்வதிகாரிகள் நூற்பிரமாணத்தால் என்னேயுணரத்தக்கவராவர்கள், மற்றெவ்வுபாயத்தாலும் உணராதார்கள் அர்ச்சுன! அனன்ய பக்தியால் நூலளவையால் கேவலம் நான் உணரத்தக்கவனேயல்லேன்; மற்றோர், அனன்ய பக்தியால் வேதாந்தவாக்கியத்தின் சிரவண முதலியவைகளின் பரிபாகத்தால் தமதுண்மைவடிவமாய்ச் சாக்ஷாத்கரிக்கவுப்படுவேன். அதாவது, அதிகாரிகள் அவ்வனன்யபக்தியாலும் சிரவணமனனுதிகளாலும் நானே பரமேசுரனுகிய பிரஹ்மசாரூபம் எனச் சாக்ஷாத்கரிப்பார்கள் என்பதாம். அச்சாக்ஷாத்காரத்தையடைந்தபின்னர், அதனல் அஞ்ஞான நீங்கவே நான் அத்தத்துவ வேத்தாக்களாகிய பக்தர்களுக்குத் தம துண்மைவடிவமாய் அடையத்தக்கவன். அதாவது, அந்தத் தத்துவஞானிகளாகிய பக்தர்கட்குப் பரமேசுரனுகிய நான் தமதான்மவடிவாய்ப் பிராப்தமாவேன். ஈண்டு, ஹே பரந்தப! என்னுஞ் சம்போதனத்தால், ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்கு அஞ்ஞானவடிவ சத்துருவைத்தொலைத்துத் தன தத்துவீதிய நிர்க்குணவடிவத்தில் அபேதமாய்ப் பிரவேசமாதற்கு யோக்கியத்தன்மையைக் குறிப்பித்தனர். அன்றியும், 'ஸகூயஃ ஸஹ' எனக் கூறுமிடத்து 'ஸகேயா ஹம்' எனக் கூறற்பாலதாமாயினும், சக்கியபதத்தீற்றின் விசர்க்கலோபம் முன்போல் சந்தசுசம்பந்தத்தாலாம் என்க. (54)

(அ-கை.) இப்போது ஸ்ரீ பகவான் கீதாநூல் முழுதின் சாரபூதமாகிய அர்த்தத்தை முமூட்சுக்களின் அநுட்டானத்தின்பொருட்டு ஒருங்குகூட்டி அருளிச்செய்கின்றார்.

சு-ம். உத்தரஃகூரதராஸ்தரொ உத்தகூஃ ஸம்பவஜிஃதஃ।
நிவெஃஸஃ. ஸவஃஹேதுஃ யஃ ஸஸாஸதிவாணவ ॥ (55)

ப-ம். 3 உத்தரஃகூரகூ 4 உதராஸ்தரஃ 5 உத்தகூஃ 6 ஸம்பவஜிஃதஃ 8 நிவெஃஸஃ 7 ஸவஃஹேதுஃ 2 யஃ 9 ஸஃ 10 ஸாம் 11 ஸனி 1 வாணவ.

(அ-ம்.) ஹே பாண்டவ! எவன் எனது கர்மகாரி, எனது பரன், எனது பக்தன், நிர்ச்சங்கன், எல்லாப்பூதங்களிடத்தும் நிர்வைரன், அவனே பரமேசுரனுகிய என்னே அபேதமாயடைவன். (55)

(வி-ம்.) ஹே பாண்டவ! அதாவது, பாண்டுராஜாவின் புத்திரனுகிய அர்ச்சுன! எவ்வதிகாரி எனது கர்மகாரி; அதாவது, எவ்வதிகாரியானவன் பரமேசுரனுகிய எனது பிரசன்னத்தின்பொருட்டே வேதவிகித அக்கினிஹோத்திர முதலிய நித்யனைமித்திகருமங்களைச் செய்கின்றனே. அற்றேல், ஹே பகவன்! சுவர்க்க முதலிய பல வேட்கையுளதாகவே அவ்வதிகாரியினிடத்து எனது கர்மகாரித்தன்மை எவ்வாறுபொருந்தும் என்னு மர்ச்சுனன் சங்கைக்கு, ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார் 'மத்பரமஃ' என:—ஹே அர்ச்சுன! எவ்வதிகாரி எனது பரமானவனே: அதாவது, பரமேசுரனுகிய நானே அடையத்தக்கவன் என்னும் நிச்சயமும், ஏனைய சுவர்க்க முதலிய பலன்கள் அடையத்தவைகளன்றென்னும் நிச்

சயமுமுடையவன் எனது பாலுவன். எனது கர்மகாரியும் எனது பாலுமானதால் எனது பக்தனுவன்; அதாவது, பரமேசுரப்பிராப்தியின் வேட்கையால் எவன் எல்லாவாற்றலும் என்னையே பஜனை பண்ணுகின்றானே. அற்றேல், ஹே பகவன்! புத்திரன் முதலியோர்களிடத்துச் சிநேகமுளதாகவே அவனிடத்து உனது பக்தனுந்தன்மை எவ்வாறும் என்னு மர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார் 'சங்கவர்ஜிதஃ' என.—எவன் சங்கமற்றவனே; அதாவது, புத்திரன் முதலிய பாகிய அனைன்ம பதார்த்தங்களினைத்துள்ளும் பற்றிலாதவனே. அற்றேல், ஹே பகவன்! சத்துருக்களின் துவேஷம் உளதாகவே அவனிடத்து நிர்ச்சங்கத்தன்மை எவ்வாறமையும் என்னு மர்ச்சுனன் சங்கைக்குப் பகவான் அருளிச்செய்கின்றார் 'நிவைரஃ ஸவ-ஹூதேஷு' என.—ஹே அர்ச்சுன! எவ்வதிகாரி சர்வ பூதங்களிடத்தும் வைரமிலாதவனே; அதாவது, தனக்கபகாரம் பண்ணினவர்களிடத்துந் துவேஷமின்றியவனே. ஹே அர்ச்சுன! இத்தன்மைகளையுடைய அதிகாரியே பரமேசுரனுகிய என்னை யடைதமாயடைவன். அர்ச்சுன! சர்வ சாத்திரங்களின் சாரபூதமாகிய அர்த்தத்தை உனக்குபதேசித்தேன். இதுவே உனக்கறியத்தக்கதாம் இதை யுணர்ந்ததின்பின்னர் உனக்குச் செயற்பாலதொன்றுமின்றுமென்க. ஒரு வியாக்கியானத்திலோ 'உதாரஃ' எனது பாமன் என்பதற்கு இவ்வாறு பொருள்பண்ணப்பட்டுளது:—'ஈயதெவஉா யொ-ஃ கூநயா உதி' உா. எதனுற் பதார்த்தம் நிர்ணயிக்கப்படுகின்றதோ அது 'மா' வாம். அதாவது, நேத்திர முதலிய இந்திரியங்களாற் றேன்றும் அந்தக்காணவிருத்தியால் சர்வமு மறியப்படுதலின் அவ்விருத்தி 'மா' வெனப்படும். எவ்விடத்தும் எனது சொரூபநிரகணபரமாகிய அந்தக்காணவிருத்தியெனும் மா வையுடையவன் எனது பாமனுவன். ஆண்டு, 'எனது கர்மகாரி, எனது பாமன்' என்னும் இரண்டு பதங்களாலும் துவம்பதார்த்தத்தின் சோதகங்களான சம்பூரண கருமயோகத்தையும் தியானயோகத்தையு மருளிச்செய்தனர். எனது பக்தன் என்னும் பதத்தால் உபாசனைகாண்டமுழுதின் அர்த்தத்தையும் சங்கிரகம்பண்ணினர். 'சங்கவர்ஜிதஃ' என்னும் பதத்தால் சர்வ சங்கபரித்தியாகம்பண்ணி ஏகாந்தமான தேசத்திலிருந்து இவ்வதிகாரி பகவத்தியான நிஷ்டாபரனுகவேண்டும் என்னு மர்த்தத்தைக் கூறியருளினர். நிர்வைர சர்வபூதேஷு என்னும் வாக்கியத்தால் இவ்வர்த்தத்தைக் கூறியருளினர்:—இவ்வதிகாரி இவ்வுலகனைத்தையும் பகவத் சொரூபமாய்ப் பார்த்தல்வேண்டும்; இவனைருகால் அவ்வனைங் காணவிலையேல், பேதபுத்தியையுடைய இவ்வதிகாரியினிடத்து நிர்வைரத்தன்மையே பொருந்தாது. இவ்வாறு இச்சுலோகம் கீதாநூன் முழுதின் சாரபூதமான அர்த்தத்தைக்கூறுகின்றது. ஹே பாண்டவ! என்னுஞ் சம்போதனத்தால் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்குச் சுத்தவம்சத்திலுற்பத்தியைக் கூறியருளினர். அதனுலிப்பொருள் சூசிக்கப்பட்டதாம்:—நீ நூலனைத்தின் சாரபூதமாகிய இவ்வர்த்தத்தை அறிவதிற் சமர்த்தனுவாய் என்பதாம். (55)

ஸ்ரீமத் பாமஹம்ஸ பரிவிராஜகாசாரிய ஸ்ரீ உத்தவானந்தகிரி சுவாமிகளின் பூஜ்யபாத சிஷ்யராகிய சிற்கனைனந்தகிரி சுவாமிகளால் இயற்றியருளிய பிராகிருத டீகையெனப் பெயரிய கீதா கூடார்த்ததீபிகையின்,

பதினேராவது அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

பன்னிரண்டாவது அத்தியாயம்.

ஓம் ஸ்ரீ கணேசாயநம: ஸ்ரீ காசிவிஸ்வேஸ்வராப்யாம்நம: ஸ்ரீ குருப்யோநம:
ஸ்ரீ சங்கராசார்யேப்யோநம:

ஆண்டுப் பூர்வம் பதினொராவது அத்தியாயத்தினீற்றில்,

உத்உஷ்கூக உதபரொ உஷ்கூ: ஸம்மவஜிஷ்தா: ।
நிவெஷயஸவ்ஷ ஹமிதெஷாயா: ஸஸாஹெதிவாணுவ ॥

என்னுஞ் சுலோகத்தில் ஸ்ரீ பகவான் நான்கு முறை 'மத்' எனது, என்னுஞ் சத்தங்கூறியருளினர். அதனர்த்தத்தில் இவ்வைய முண்டாகின்றது:—ஸ்ரீ பகவான் அச்சப்தத்தால் நிராகாரவஸ்துவை அருளிச்செய்தனரோ? சாகார வஸ்துவை அருளிச்செய்தனரோ? என. ஆண்டு இவ்வாறுய ஐயப்பாடுண்டாதற்குக் கூறிப்போந்த ஸ்ரீ பகவான் வாக்கியமே காரணமாம்; என்னை, ஸ்ரீ பகவான் 'உத்உஷ்கூக' என்னுஞ் சுலோகத்திற்குப் பூர்வம் 'மத்' என்னும் சப்தத்தால் இருவகை வடிவத்தையுங் கூறியருளினர்,

ஆ-சு. பஹூநாம் ஜந்மநா மந்தெ ஜ்ஞாநவாந்மாம்ப்ரபத்யதெ ।
வாஸுதெவ: ஸர்வமிதி ஸமஹாத்மா ஸுதுர்லப: ॥

என்பது முதலிய வாக்கியங்களால் ஸ்ரீ பகவான் 'மத்' என்னுஞ் சப்தத்தால் நிராகார வஸ்துவையே கூறியருளினர். விசுவரூப தரிசனத்தின் பின்னர், 'காஹம் வெதைதரூ தவஸாதரூ நெதரதெ ஜ்யாயா ஸகூயஸவம் வியொஜ்ய ஷ்ம் ஏவஷவாதஸி' ஸாம்யஸா என்பது முதலிய வாக்கியங்களால் ஸ்ரீ பகவான் 'மத்' என்னுஞ் சப்தத்தால் சாகாரவஸ்துவையே கூறியருளினர். ஆண்டு, அவ்விருவகை யுபதேசங்களின் வியவஸ்தை அதிகாரிகளின் வேறுபாட்டானே செய்யப்படும். ஒருகால், அவ்வணஞ்செய்யாதொழியிலோ அவைகள் தம்முள் முரணுறும்; இவ்வாறு அதிகாரிகளின் வேறுபாட்டால் அவ்விருவகை யுபதேசத்தையும் வியவஸ்தை பண்ணுமிடத்து என்னுல் நிராகாரவஸ்து சிந்திக்கத்தக்கதோ? அல்லது சாகாரமோ? எனத்தனது அதிகாரத்தை நிச்சயித்தற்பொருட்டுச் சகுண வித்தை நிர்க்குணவித்தை இரண்டையும் அறிய இச்சை நண்ணிய அர்ச்சுனன் ஸ்ரீ பகவானை வினவுகின்றன்.

அர்ஜுந உவாச.

சு-ம். ஏவம் ஸததயுக்தா யெ ப4க்தாஸ்த்வாம் பர்யுபாஸதெ ।
யெ சாப்யக்ஷரமவ்யக்தம் தேஷாம் கெ யொக3வித்தமா: ॥ (1)

ப-ம். 1 ஏவம் 2 ஸததயுக்தா 4 யெ 3 ப4க்தாஸ் 5 ஸ்வாம் 6 பர்யுபாஸதெ 8 யெ 7 அ 11 சாபி 9 அக்ஷரம் 10 அவ்யக்தம் 12 தேஷாம் 13 கெ 14 யொக3 வித்தமா:.

(அ-ம்.) ஹே பகவன்! இவ்வாறு நிரந்தரம் யுக்தனும், சாகார வஸ்து ஒன்றன் சரணமானவனுமாகிய எந்த அதிகாரி நிரந்தரம் சாகாரப் பிரஹ்மரூபப் பரமே சுரனுகிய உன்னை சிந்திக்கின்றனோ; அங்ஙனமே, எந்த விரக்த புருஷன்

அகூர அவ்வியக்தரூப நிர்க்குணப் பிரஹ்மமாகிய உன்னை நிரந்தரஞ் சிந்திக் கின்றனை; அவ்விருவர்களுக்குள் எவன் விசேடமாய் யோகத்தையுணர்ந்த னவன்?

(வி-ம்.) ஹே பகவன்! எவன் 'உத்தமஃ புருஷஸ்' என்னுஞ் சுலோ கத்தாற்கூறிய பிரகாரங்களோடு எப்போதுங் கூடியவனை; அதாவது, எவன் நிரந்தரம் பகவதர்ப்பணமாய்ச் செயுங்கருமங்களிற் சாவதானமாய்ப் பிரவர்த்திக் கின்றனை; எவன் பக்தனை, அதாவது சாகாரவஸ்து வொன்றையே சரணடைந்த வனை; இவ்வாறு நிரந்தரயுக்தனும், பக்தனுமாகிய அதிகாரியானவன் இத்தன் மைய சாகாரரூபமுடைய பரமேசுரனாகிய உன்னைச் சிரத்தையோடு நிரந்தரஞ் சிந் திக்கின்றன். இத்துணைகூறியதால் சகுணப் பிரஹ்மசிந்தனை பண்ணும் பக்தர்கள் கூறப்பட்டனர். இப்போது நிர்க்குணப் பிரஹ்ம சிந்தனைபண்ணும் பக்தர்களைக் கூறுகின்றன்.—'யெஅபி வக்ஷரமநிர்தேஸ்யமவ்யக்தம்' ஹே பகவன்! எவ்வதிகாரி சர்வ சம் சாரத்தினின்றும் விரக்தனைச் சர்வ கருமங்களையும் விடுத்தவனாய், அகூரரூப மும் அவ்வியக்தரூபமுமாகிய உன்னை நிரந்தரஞ் சிந்திக்கின்றனை. 'அகூரமி ஸ்யுக்தெவா உதயகூரம்' ஒருபோதும் நாசமுறுப்பொருள் அகூரமாம். அல் லது, தனது சத்தாஸ்புரணரூபத்தால் உலகனைத்தையும் வியாபிக்கப்பட்டது அகூர மாம். அத்தன்மைய அகூரவடிவ நிர்க்குணப் பிரஹ்மத்தைப் பிருகதாரண்ய உப நிடதத்தில் யாக்கிய வற்கியமுனி கார்க்கியைக்குறித்துத் தூலசூட்சும முதலிய உபாதிகளனைத்து மிலாததாய் உபதேசித்திருக்கின்றார்.

ஆ-சு. வததெவ்ய தக்ஷரம் மாமி-ஸ் ப்ராஹ்மணா।
ஸஹிவஷ்டதயஹ்ஸ்ய உதணஹ்யஹ்வ ஏவ ॥

(போ-ள்.) ஹே கார்க்கி! இந்நிர்க்குணப் பிரஹ்மமாகிய அகூரத்தை பிரஹ் மமுணர்ந்த பிராஹ்மணன் தூலத்தன்மையற்றதெனவும், அணுத்தன்மையற்ற தெனவும், குறுகல் நீளமற்றதெனவும் கூறுகின்றன் என்பதாம். சர்வோபாதிகளு மற்றதாதலின் அந்நிர்க்குணப் பிரஹ்மமாகிய அகூரம் அவ்வியக்தமாம்; அதாவது நேத்திர முதலிய சர்வ கரணங்கட்கும் அவிடயமாம். அத்தன்மைய அகூரரூப மும், அவ்வியக்தரூபமுமாகிய நிராகார நிர்க்குணப் பரமேசுரனை எவன் சிரத்தை பக்தியோடு நிரந்தரஞ் சிந்திக்கின்றனை; இவ்விருவகை அதிகாரிகளுக்குள் எவ் வதிகாரியோக வித்தமனுவன்? அதாவது எவ்வதிகாரி விசேடமா யோகத்தை யறிந்தவன்? அல்லது, எவன் விசேடரூபமாய்ச் சமாதி யோகத்தையடைந்தவன்? ஆண்டுச் சமாதியோகத்தை அறிந்தவன், அல்லது அடைந்தவன் யோகவித்தா வன்: அவர்களுக்குள் மிகச்சிரேஷ்டன் யோகவித்தமனுவன்; அதாவது இத்தன் மைய யோகவித்துக்கள் இருவகை யதிகாரிகளாவர்கள்; அவ்வதிகாரிகளுள் எவ் வதிகாரி மிகச் சிறந்த யோகவித்தாவன்? அதாவது எவ்வதிகாரிகளின் ஞானம் நான் அனுசரிக்கத்தக்கது சகுணப்பிரஹ்ம முணர்ந்தேதானது ஞானமா? நிர்க் குணப்பிரஹ்ம முணர்ந்தேதானது ஞானமா? என்பது கருத்தாம். (1)

(அ-கை.) ஆண்டு, சர்வக்ஞனுகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவ்வர்ச்சுனனுக் குச் சகுணப்பிரஹ்மவித்தையின்கண்ணே அதிகாரமுளதென்றுணர்ந்து அர்ச்சுன னுக்கு அச்சகுணப்பிரஹ்மவித்தையையே விதானஞ்செய்யவும், அங்ஙனமே அதி காரத்தைத்தழுவி அவ்வித்தையின் குறைவு நிறைவுகளையுடைய சாதனங்களை யும் விதிக்கவும், முதலில் சாகாரப்பிரஹ்மவித்தையில் உருசியுண்டாக்குவித்தற் பொருட்டு அவ்வித்தையைத்துதித்து, அவ்வித்தையே சிரேஷ்டமானது என உத்தாமருளிச்செய்கின்றார்.

ஸ்ரீ ஹயவாநாவாய.

சு-ம். ஸ்யாவெஸ்ய ஸநொ யெ ஸாம் நித்ஸ்யாகா உவாஹஸ்தெ।
ஸ்ரத்தயா வஸயொவெதா ஹைஸ ஸெ யாகதஸா ஸதாஃ ॥ (2)

ப-ம். 3 ஸயி 4 சூவெஸ்ய 2 ஸநஃ 1 யெ 9 ஸாம் 5 நித்ஸ்யாகாஃ 10 உவாஹஸ்தெ
7 ஸ்ரத்தயா 6 வஸயா 8 உவெதாஃ 11 தெ 12 ஸெ 13 யாகதஸாஃ 14 ஸதாஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வதிகாரி தனது மனத்தைச் சகுணப்பிரஹ்ம மாகிய என்னிடத்தில் ஒருமைப்படுத்தி நித்திய யுக்தனுகியும், சாத்துவிகசிரத் தையுடையவனுகியும் சாகாரப்பிரஹ்மமாகிய என்னைச் சிந்திக்கின்றனே, அவ்வதி காரி என்னுடைய யுக்ததமனென்றெண்ணப்படுகின்றன். (2)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பகவான் வாசுதேவ பரமேசுரனுகிய சகுணப் பிரஹ்மத்தில் தனது மனத்தை ஆவேசஞ்செய்து, அதாவது அநன்யசரணத் தன்மையானும், நிரதிசயப்பிரியத்தானும், தனது மனத்தைச் சகுணப்பிரஹ்ம மாகிய என்னிடத்திற் பிரவேசம்பண்ணி; கருத்திதுவாம் :—சிவப்பு வர்ணத்தோடு கலக்கப்பட்ட அரக்கு அம்மயமாஞற்போல, தனது மனதை எனது மயமாகச் செய்து என்பது கருத்தாம். எவன் நித்திய யுக்தனுய் அதாவது, நிரந்தரம் எனது சிந்தனை விஷயகப்பிரவிருத்தனுகின்றன், பரமசிரத்தையுடையனுமாகின்றன்; அதாவது, ஆராதிக்கப்பட்ட இச்சகுணப் பரமேசுரன் அவசியமாய் எனை யீடேற்று வான் என்னும் ஆஸ்திக்கிய புத்திவடிவ சாத்துவிக சிரத்தையையுடையனுய், சர்வ யோகேசருக்கு மீசுரரூபனும், சர்வக்ஞனும், சர்வ கல்யாணகுணங்கட்கு ஸ்தானரூபனுமாகிய பரமேசுரனை என்னைச் சர்வதா சிந்திக்கின்றன், அவனே எனக்கு யுக்ததமரூபமாய் அபிமதம்; அதாவது, அவ்வதிகாரி எப்போதும் என் னிடத்தில் ஆசக்த சித்தமுடையனுதலினனும், சர்வ விடயங்களினின்றும் விடு பட்டவனுய் என்னையே சிந்தித்து இரவுபகல் முழுதையுங் கழிக்கின்றனுதலி னனும், அந்தச் சகுணப்பிரஹ்மசிந்தனை பண்ணப்பட்ட அதிகாரியே எனக்கு யுக்ததமனுய் அபிமதம்; அதாவது, யான் அவனைச் சர்வ யோகிகளிலும் மேன் மையனுக எண்ணுகின்றேன். (2)

(அ-கை.) ஹே பகவன்! நிர்க்குணப்பிரஹ்மத்தை அறிவோனது அபேட் சையால் சகுணப்பிரஹ்மத்தை யறிவோனிடத்து யாது அதிசயமாம்? எவ்வதிச யத்தால் சகுணப்பிரஹ்மத்தை யறியப்பட்டவனை தங்கட்கு யுக்ததமனுய் அபி மதம் என அர்ச்சுனனுக்கறியும் வேட்கைவர, ஸ்ரீ பகவான் அவ்வதிசயத்தைப் பிரதிபாதித்து முதலில் அவ்வதிசயத்தன்மையின் நிரூபகமாகிய நிர்க்குணப் பிரஹ்மவேத்தாவை இரண்டு சுலோகங்களாற் றுதித்தருளுகின்றார்.

சு-ம். யெ ஷ்வக்ஷரமநிர்தேஶ்யமவ்யக்தம் பர்யுபாஸதே।
ஸர்வத்ரகமசிந்த்யம் ச கூடஸ்தமசலம் த்ருவம் ॥ (3)

ஸந்நியம்யேந்த்ரியக்ராமம் ஸர்வத்র ஸமபுத்தயஃ।
தே ப்ராப்நுவந்தி மாமேவ ஸர்வபூதஹிதே ரதாஃ (4)

ப-ம். 2 யெ 1 தூ 16 ஷ்வக்ஷரம் 8 அநிர்தேஶ்யம் 9 அவ்யக்தம் 17 பர்யுபாஸதே
10 ஸர்வத்ரகம் 11 அசிந்த்யம் 12 அ 13 கூடஸ்தம் 14 அசலம் 15 த்ருவம்
4 ஸந்நியம்ய 3 இந்த்ரியக்ராமம் 5 ஸர்வத்র 6 ஸமபுத்தயஃ 18 தே
21 ப்ராப்நுவந்தி 19 மாம் 20 ஏவ 7 ஸர்வபூதஹிதே ரதாஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மறித்தும் இந்தியக்கூட்டங்களை நிரோதித்து, யாண்டுஞ் சமபுத்தியுடையவர்களாய், சர்வ பூதங்களின் ஹிதத்தில் பிரீதியுடைய ராய், அநிர்த்தேசிய அவ்வியக்த சர்வ வியாபக அசிந்திய கூடஸ்தாசல நிலையாகிய நிர்க்குணப்பிரஹ்மரூப அக்ஷரத்தை இடைவிடாது சிந்திக்கின்ற அதிகாரிகளும், நிர்க்குணப்பிரஹ்மமாகிய என்னையே யடைகின்றார்கள். (3-4)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அக்ஷரசொரூப நிர்க்குணப்பிரஹ்மமாகிய என்னை இடைவிடாது சிந்திக்கின்ற புருஷர்களும், அத்தன்மைய நிர்க்குணப்பிரஹ்ம மாகிய என்னையே படைகின்றார்கள். எவ்வக்ஷரரூப நிர்க்குணப்பிரஹ்மத்தைப் பிருகதாரண்யோபநிடதத்தில் யாக்ஞயவற்கியமுனி கார்க்கிக்கு, 'வை தத்தெத அக்ஷரம் கார்கி ஸ்ரோத்ரியா ஹுனா ஸுஹிவஜ்ஞ ஸ்ரோது ச மனுஹ்ய ஸ்ரோதீவ்யம்,' என்பது முதலிய வாக்கியங்களால் உபதேசித்தருளினார: ஈண்டு, 'யேத' என்பதிலுள்ள 'த' என்னுஞ் சத்தமானது கூறிப்போந்த சகுணப்பிரஹ்மோ பாசகனினின்றும் நிர்க்குணப்பிரஹ்மோபாசகனிடத்து விலக்ஷணத்தன்மையைக் காண்பித்தற்பொருட்டேயாம். இப்போது அவ்வக்ஷரத்தில் நிர்க்குணப்பிரஹ்ம ரூபத்தன்மையைச் சித்திசெய்தற்பொருட்டு ஸ்ரீ பகவான் அவ்வக்ஷரத்திற் கெழு வகை விசேடணங்களை அருளிச்செய்கின்றார்:—ஹே அர்ச்சுன! அந்த நிர்விசேடப் பிரஹ்மசொரூப அக்ஷரம் எத்தன்மையதெனின், அநிர்த்தேசியமாம்: அதா வது, யாதொரு சப்தத்தானுங் கூறமுடியாததாம். அற்றேல், ஹே பகவன்! அது சத்தத்தாற் கூறப்படாததென்னை யெனின், அதிற்காரணங்கூறுகின்றார் (அவ்வியக் தம்) என, அவ்வக்ஷரம் அவ்வியக்தமாம். அதாவது, சப்தப் பிரவிருத்தி நிமித்த வடிவங்களாகிய ஜாதி குணம் கிரியை சம்பந்தம் என்னும் நான்கு தர்மங்களுமின் றியதாதலின், யாதொரு சப்தத்தானுங் கூறப்படுவதின்றும். கருத்திதுவாம்:— உலகத்தில் எவ்வெப்பொருளில் எவ்வெச்சப்தம் பிரவிருத்திக்கின்றதோ, அவ்வச் சப்தம் அவ்வப்பொருளில் ஜாதி முதலிய நிமித்தங்களுக்குள் யாதானுமொன்றைப் பற்றிக்கொண்டே பிரவிருத்திக்கும். பிராஹ்மணன் என்னுஞ்சப்தம்பிராஹ்மண ஜாதி தன்மை முதலிய ஜாதியைக்கொண்டே தனதர்த்தத்திற் பிரவிருத்திக்கின்றது. வெண்மை நீலம் என்பன முதலிய சப்தங்கள், வெண்மை நீல முதலிய குணங்களைப் பற்றிக்கொண்டே தமதர்த்தத்திற் பிரவர்த்திக்கின்றன. அடுபவன் படிப்பவன் என்பன முதலிய சப்தங்கள் அடல் முதலிய கிரியைகளைக்கொண்டே தமதர்த் தத்திற் பிரவிருத்திக்கின்றன. தந்தை மகன் என்பன முதலிய சப்தங்கள் ஜநக ஜன்னிய பாவசம்பந்தத்தைக் கொண்டேதத்தமர்த்தத்திற் பிரவிருத்திக்கின்றன. இவ்வாற்றால் சர்வ சப்தங்களும் ஜாதி குணமுதலிய நிமித்தங்களைக்கொண்டே தத்தமர்த்தத்திற் பிரவிருத்திக்கின்றன. நிர்விசேட அக்ஷரப்பிரஹ்மத்தே அவ் விசேட தருமங்களின்றுதலின், அதன்கண் யாதொரு சப்தமும் பிரவிருத்திக்கா தென்க. அற்றேல், ஹே பகவன்! அவ்வக்ஷரப்பிரஹ்மம் ஜாதி குணமுதலிய நிமித்தங்களற்றதென்பதென்னிமித்தத்தால்? என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு, ஸ்ரீ பகவான் அதிற்காரணமருளிச்செய்கின்றார்.—'ஸர்வ-கதம்' என. அர்ச்சுன! அவ்வக்ஷரப்பிரஹ்மம் சர்வத்திரகம், அதாவது யாண்டும் வியாபகமும் சர்வ காரணமுமாதலின், ஜாதிமுதலிய நிமித்தங்களற்ற தென்க. எப்பொருள் பரிச் சின்னமும் காரியமுமாமோ, அப்பொருளே அந்நிமித்தங்களையுடையதாம். வான் போது திசைகட்கு நியாய நூலார் அகாரியத்தன்மை வியாபகத்தன்மை உடன் பட்டும், அவைகளில் அந்நிமித்தங்களை யங்கீகரித்தனராதலின், பரிச்சின்ன காரியத் தின்கண்ணே அந்நிமித்தங்களிருக்கின்றன என்னும் நியமம் பொருந்தாதாயினும், வேதாந்த சித்தாந்தத்தில் அவ்வாகாசாதிகட்கும் காரியத்தன்மையும் பரிச்சின்னத் தன்மையும் உடன்பாடேயாம். 'கூடஸ்தஃ கூகாயஃ ஸம்ஹித' பொருள்:—ஆன்

மாவினின்று வானுண்டானது; என்பது முதலிய சுருதிகள் அவ்வாகாசமுதலிய வைகட்கு ஆன்மாவினின்றும் உற்பத்தி கூறுகின்றன. அன்றியும், 'யொவெஹ ஸாதத்ஹவம் நாஷ்வுஹவ உஷ்தி' என்பது முதலிய சுருதிகள் வியாபகமாகிய ஆன்மாவிற் கயலாகிய வாஞ்தி யுலகஸ்தும் பரிச்சின்னமெனக் கூறுகின்றன. ஆதலின், ஆகாய முதலியவைகளில் அந்தியமத்திற்கிழுக்கின்றுமென்க. அகூரப் பிரஹ்மம் சர்வத்திர வியாபகமாதலினே அசிந்தியமாம், அதாவது அது சப்தப் பிரவிருத்திக் கவிடயமானதுபோல மனப்பிரவிருத்திக்குமவிடயமாம். சப்தப் பிரவிருத்தியைப்போல மனப் பிரவிருத்தியும் பரிச்சின்ன வஸ்துவையே விஷயஞ் செய்வதாம்; அவ்வகூரப் பிரஹ்மத்தின்கண்ணே பரிச்சின்னத்தன்மையின்று மாதலின் அது மனப் பிரவிருத்திக்கும் விடயமன்றென்க.

ஆ-சு. யதோவாசொ நிவர்த்ததெ அப்ராப்ய மநஸாஸஹ।

(பொ-ள்.) எதினின்று மனத்தோடு வாக்கும் பிராப்தமின்றி மறித்தும் வருகின்றதோ.

சங்கை:—அற்றேல், சுருதிவாக்கியமும் வியாத சூத்திரமும் பிரஹ்மத்தில் வாக்குமனங்கட்கு விடயத்தன்மை கூறல் எக்காரணத்தால்?

ஆ-சு. தம் த்வளவதிஷ்டம் வாசோவிஷ்டம் வ்ருஷ்டி ஹதி।
ஏஷஸ்யதெ சுமத்ர்யயா புத்ர்யா ஸுமத்யா ஸுமத்ர்யஹிஸ் ஹதி।
ஸ ஏஷொவாசோ ஏஷ்டவ்யம் ஹதி॥

(பொ-ள்.) ஹே சாகல்ய! கேவலம் உபநிடதப் பிரமாணத்தானே யுணரத் தக்க பரப்பிரஹ்ம சொரூபத்தை நானுன்பால் விளுவுகின்றேன். நுண்ணிய பொருளைக்காணும் வித்துவான், விடயவாதனையற்ற ஒருமைப்பட்ட நுண்ணியமனத்தால் இவ்வான்மாவைச் சாக்ஷாத்கரிக்கின்றான். இவ்வான்மாக் கேவலந் தூயமனத்தானே பார்க்கப்படுகின்றது என்பதாம். 'ஸாஹ்ரு யொநிக்வாக்' உபநிடதரூப சாத்திரப் பிரமாணமுடைய பிரஹ்மம் என்பதாம். என்பது முதலிய சுருதி, சூத்திர வாக்கியங்கள் அகூரப் பிரஹ்மத்தின்கண்ணும் உபநிடதவடிவவாக்கின் விடயத்தன்மையையும், சுத்தமனத்தின் விடயத்தன்மையையுங் கூறுகின்றன. பிரஹ்மத்தை அவிடயமெனக்கொள்ளில், அவைகள் அசங்கதமாகுமன்றே?

சமாதானம்:—ஹே அர்ச்சுன! மகாவாக்கியவடிவ சப்தப் பிரமாணத்தால் உண்டாகிய புத்தியின் அந்திய விருத்தியில் அவித்தியா கற்பித சம்பந்தத்தால் பரமானந்த போதரூப சுத்தப்பொருள் பிரதிவிம்பிதமாகியே கற்பிதரூப அவித்தையையும் அதன் காரியத்தையும் நிவிருத்திக்கின்றது; இதனானே உபசார மாத்திரத்தால் வாக்கு விஷயத்தன்மையும் மனே விஷயத்தன்மையுங் கூறப்படுகின்றது. அதாவது, மகாவாக்கிய ஜன்னிய நிர்மலாந்தக்கரணவிருத்தி சிதாபாசனோடு கூடியதாய்ப் பிரஹ்மாசிரயமும் பிரஹ்மவிடயமுமாகிய அவித்தியா நிவிருத்தி மாத்திரத்தைச் செய்கின்றது; இதைச் சாஸ்திரங்களில் விருத்தி வியாப்தியெனக் கூறுகின்றனர். இதையுடன்பட்டே சுருதி சூத்திரங்கள் பிரஹ்மத்தின்கண் வாக்கு விடயத்தன்மையையும், மனே விடயத்தன்மையையுங் கூறுகின்றன. பிரஹ்மத்தை அவிடயமெனக்கொள்ளில், அவைகள் அசங்கதமாகுமன்றே?

சமாதானம்:—ஹே அர்ச்சுன! மகாவாக்கியவடிவ சப்தப் பிரமாணத்தால் உண்டாகிய புத்தியின் அந்திய விருத்தியில் அவித்தியா கற்பித சம்பந்தத்தால் பரமானந்த போதரூப சுத்தப்பொருள் பிரதிவிம்பிதமாகியே கற்பிதரூப அவித்தையையும் அதன் காரியத்தையும் நிவிருத்திக்கின்றது; இதனானே உபசார மாத்திரத்தால் வாக்கு விஷயத்தன்மையும் மனே விஷயத்தன்மையுங் கூறப்படுகின்றது. அதாவது, மகாவாக்கிய ஜன்னிய நிர்மலாந்தக்கரணவிருத்தி சிதாபாசனோடு கூடியதாய்ப் பிரஹ்மாசிரயமும் பிரஹ்மவிடயமுமாகிய அவித்தியா நிவிருத்தி மாத்திரத்தைச் செய்கின்றது; இதைச் சாஸ்திரங்களில் விருத்தி வியாப்தியெனக் கூறுகின்றனர். இதையுடன்பட்டே சுருதி சூத்திரங்கள் பிரஹ்மத்தின்கண் வாக்கு விடயத்தன்மையையும், மனே விடயத்தன்மையையுங் கூறுகின்றன. ஆக்கை முதலிய அனன்மப் பொருள்களில் பலவியாப்திவடிவ முக்கிய விடயத்தன்மையிருப்பதுபோல, அதன்மாட்டு முக்கிய விடயத்தன்மையைக் கூறவில்லை. இச்சார்வாபிப் பிராயத்தால் ஸ்ரீ பகவான் அவ்வகூரப்பிரஹ்மத்தினிடத்தில் கற்பித அவித்தியா சம்பந்தத்தை உபபாதனஞ் செய்தற்பொருட்டு அருளிச்செய்கின்றார் 'கூடஸ்தம்'

என. ஆண்டு, எப்பொருள் உண்மையிற் பொய்வடிவமாயினும் சத்தியரூபமாய்ப் பிரதிதியாகின்றதோ, அப்பொருளை உலகத்தில் கூடம் எனக் கூறுகின்றார்கள். ஈண்டு, உண்மையிற் பொய்சொல்கின்ற சாக்ஷியாயினும் உண்மை கூறுவோன்போற் காணப்படுந் சாக்ஷியைக் கூடசாக்ஷியென்பதுபோல, மாயா அவித்தியாவடிவ அஞ் ஞானமும் தனது காரியத்தோடு உண்மையிற் பொய்வடிவமேயாயினும், விசா மிலாதோனுக்குச் சத்தியரூபமாய்ப் பிரதிதியாகின்றதாதலின், காரியசகித அஞ் ஞானமும் கூடம் எனக் கூறப்படுகின்றது. காரியப் பிரபஞ்சசகித அஞ்ஞான மெனுங் கூடத்தில் எப்பொருள் ஆத்தியாசிக சம்பந்தத்தால் அதிட்டானரூப மாயிருக்கின்றதோ அது கூடஸ்தனுகும்; அதாவது, காரியசகித அஞ்ஞானத் தின் அதிட்டானமாகிய பிரஹ்மம் கூடத்தனும். இத்துணை கூறியதால் கூறிப் போந்த பொருந்தாமை யனைத்தும் இருப்பிலவாயின. இதனினை, விகாரங்க ளனைத்தும் அவித்தியாகற்பிதமானதால், அவித்தையின் அதிட்டானரூப சாக்ஷி சைதன்யம் நிருவிகாரமாம், என்னு மர்த்தத்தை இப்போது ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார் 'அசலம்' என. ஆண்டு விகாரஞ் சலனமாம், அத்தன்மைய விகாரமற்றது அசலமாம். இதனினை, அவ்வக்ஷரப்பிரஹ்மம் துருவமாம். அதா வது, பரிணமித்தன்மையிலாத நித்தியமாம். இத்தன்மைத்தான அக்ஷரப்பிரஹ்ம பரமேசுரனுகிய என்னை எவ்வதிகாரி சிந்திக்கின்றனன்; அதாவது, பிரஹ்ம முணர்ந்த குருமுகமாய் வேதாந்த நூலைக்கேட்டுப் பிரமாணத்துள்ள அசம்பாவ னையை நிவிர்த்தித்து மனத்தால் பிரமேயத்துள்ள அசம்பாவனையை நிவிருத் தித்துப் பின்னர் விபரீதபாவனையை நிவிருத்தித்தற்பொருட்டு எவ்வதிகாரி தியானிக்கின்றனன்; அதாவது, அனன்மாகார விஜாதீய விருத்திகளைத்தள்ளித் தைலதாரைபோல விச்சேதமின்றிய சஜாதீயவிருத்திப் பிரவாஹரூப நிதித் தியாசனமாகிய தியானத்தால் எவ்வதிகாரி நிர்க்குணப்பிரஹ்மமாகிய என்னை விஷயம் பண்ணுகின்றனன். அற்றேல், ஹே பகவன்! சுரோத்திர முதலிய இந்தி யங்கட்குத் தத்தம் சப்த முதலிய விடயங்களோடு சம்பந்தமுளதாகவே விஜாதீய விருத்தியைத்தள்ளல் எவ்வாறும்? என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு, ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார் 'ஸந்நியம்ய ஸ்யமராம்' என. ஹே அர்ச்சுன! எவ் வதிகாரியானவன் தனது இந்திரியக்கூட்டங்களைத் தத்தம் விடயங்களினின்று நிவிருத்தித்து நிர்க்குணப்பிரஹ்மமாகிய என்னைத் தியானஞ்செய்கின்றனன். இத் துணை கூறியதால் ஸ்ரீ பகவான் சமதம முதலிய ஆறின் பிராப்தியையுமருளிச் செய்தனர். அற்றேல், ஹே பகவன்! விடயபோகவாசனையுளதாகவே விடயங்களி னின்றும் இந்திரியங்களைவிருத்தியடைதல் யாங்ஙனம்? என்னும் அர்ச்சுனன் சங் கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார் 'ஸமதுக்கஸுகம்' என. ஹே அர்ச்சுன! சர்வ விடயங்களிலும் சமமெனப்படுந் துல்லியத்தன்மை; அதாவது, இன்பத்துன்பங்களும், இராகத்துவேஷங்களும் இன்றிய புத்தியையுடையோர்கள் யாண்டுஞ் சமபுத்திகளாவர்கள். கருத்துவாம்:—சம்யக்ஞானத்தால் சந்தோஷ விஷாத முதலிய விகாரங்கட்குக் காரணமாகிய அஞ்ஞானமொழிந்தவர்களும், விடயதோடதரிசனப்பியாசத்தால் சர்வ விடயேச்சைகளும் நீங்கியவருமாகிய தத்துவவேத்தாவானவர்கள் யாண்டுஞ் சமபுத்தியுடையவர்கள்; அத்தன்மைத் தான அதிகாரிகள் நிர்க்குணப்பிரஹ்மமாகிய என்னைச் சிந்திக்கின்றார்கள். இத் துணை கூறியதால் ஸ்ரீ பகவான் வசீகாரமெனும் வைராக்கியத்தைக் கூறியருளி னர். இதனினை, யாண்டு மான்மதிருட்டிசெய்து ஹிம்சைகட்குக் காரணங்களாகிய ராகத்துவேஷங்களின்றியவர்களாதலின், எவ்வதிகாரிகள் சர்வப்பிராணிகளின் ஹிதத்தில் பிரீதியுடையவர்களாகின்றார்கள்; அதாவது, 'ஸுஹயம்ஸர்வபூதஹிதே ரதஹ்' என்னும் மந்திரத்தால் சர்வ பூதப்பிராணிகட்கும் அபயரூப

தக்ஷிணை கொடுப்பவர்கள் பரமஹம்ஸ ஸந்நியாசிகளே. ஆண்டுச் சந்நியாசிகள் சர்வ பூதப்பிராணிகட்கும் அபயங்கொடுப்பார்களென்பது சுருதியிலுங் கூறப்பட்டிருக்கிறது :—

ஆ-சு. ஸுஹயம் ஸவ-ுஹ்மதெஹ்யோ உக்வாஹம்நயாஹ ஸாஉஸெக் ।

(பொ-ள்.) இவ்வதிகாரி மூக்காணங்களாலும் தாவரசங்கமவடிவ சர்வப் பிராணிகட்கும் அபயதானமளித்துச் சந்நியாச ஆசிரமங்கொள்ளற்பாலதென்பதாம். இவ்வாறு சர்வ சாதனங்களையுமுடைய விரக்தர்களாகிய அதிகாரிகள் தாங்கள் பிரஹ்மரூபமாயினும் சர்வ சாதனங்களின் பல பூதமும், சந்தேகமின்றியதுமாகிய ஆன்மசாட்சாத்காரத்தால் அக்ஷரப்பிரஹ்மமாகிய என்னையே யடைகின்றார்கள்; அதாவது, தத்துவவேத்தாவானவர்கள் அத்தத்துவ சாட்சாத்காரத்திற்கு முன்னரும் நிர்க்குணப்பிரஹ்மமாகிய எனது வடிவமேயாவர்கள்; தத்துவ சாட்சாத்காரத்தால் அஞ்ஞானம் நீங்கவே நிர்க்குணப்பிரஹ்மரூப நாஞ்கவே நிலைக்கின்றார்கள்.

ஆ-சு. ஸ்ரஹ்மைவஸந்ஸ்ரஹ்மாவெ்யதி ஸ்ரஹ்மவித்ஸ்ரஹ்மைவஸவதி ।

(பொ-ள்.) இவ்வதிகாரிகள் பிரஹ்மரூபமாகியே பிரஹ்மத்தையடைகின்றார்கள். நானே பிரஹ்மசொரூபம் எனத் தனதான்மாவாய்ப் பிரஹ்மத்தையுணர்ந்தோன் பிரஹ்மரூபமேயாகின்றனென்பதாம். ஆண்டு ஞானியானவன் பிரஹ்மசொரூபமேயாவன் என்பதை 'ஜ்ஞாநீக்வாத்மைவ மே மதம்' என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் தாமே இந்நூலினும் அருளிச்செய்திருக்கின்றார் என்பதாம்.

(அ-கை.) இப்போது இந்நிர்க்குணப் பிரஹ்ம சிந்தனை பண்ணும் அதிகாரிகளினின்றும், கூறிப்போந்த சகுணப் பிரஹ்மசிந்தனை செய்யும் அதிகாரிகளின் அதிசயத்தன்மையைக் காண்பித்து ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்கு அருளிச்செய்கின்றார்.

சு-ம். க்லெஶோயிகதரஸ்தேஷாம் அவ்யக்தாஸக்தசெதஸாம் ।
அவ்யக்தா ஹி கதிர்து:கம் தெஹவத்பிரவாப்யதெ ॥ (5)

ப-ம். 4 க்லெஶ: 3 அயிகதர: 2 தேஷாம் 1 அவ்யக்தாஸக்தசெதஸாம் 7 அவ்யக்தா 5 ஹி 8 கதி: 9 து:கம் 6 தெஹவத்பி: 10 அவாப்யதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! நிர்க்குணப் பிரஹ்மத்தின்கண் ஆசக்தமுடைய மனத்தோனுக்கு மிகுந்த கிலேசமாம், தேகாபிமானமுடையோன் அந்நிர்க்குணப் பிரஹ்மத்தை மிக வருத்தத்தோடடைகின்றனுதலின். (5)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சகுணப் பிரஹ்மசிந்தனை பண்ணும் முற்கூறிய அதிகாரிகட்கும் விடயங்களினின்று மனத்தைத் திருப்பிச் சகுணப் பிரஹ்மத்தில் ஒருமைப்படுத்துவதிலும், இடைவிடாது பரமேசுரனது பிரீதியின்பொருட்டு நிஷ்காமகருமபராயணரதலினும், பரமசாத்துவிக சிரத்தையுடையவரதலினும் மிகுந்த கிலேசமே வந்தணுகும்; ஆனால் அச்சகுணப் பிரஹ்மசிந்தனை பண்ணுவோர்க்கு அத்தியந்த மிகுந்த கிலேசம் வந்தணுகா. சிரவணாதி சாதனங்களையுடைய நிர்க்குணப் பிரஹ்மசிந்தனை பண்ணும் அதிகாரிகட்கோ, அத்தியந்தம் மிகுந்த கிலேசம் வந்தடையும், அதாவது மிகுந்த ஆயாசவடிவக்கிலேசம் பிராப்தமாமென்க. ஸ்ரீ பகவான் இப்போது கூறிப்போந்த அர்த்தத்திற் காரணமருளிச் செய்கின்றார்:—'அவ்யக்தாஹி மதி:து:கம்' எக்காரணத்தால் தேகத்தில் நானென

தென்னும் அபிமானமுடையோனல் அந்த அவ்வியக்தரூபகதி மி [illegible] த்தா லடையப்படுகின்றதோ, மூமுட்சுக்கள் தத்துவஞானத்தால் [illegible] அடைகின்றார் களோ, அத்தன்மைய பிராப்தவ்யவடிவ நிர்க்குணப் பிரஹ்மம் கதியாம். சுருதியும் 'ஸோகாமயாவஸாமதிக' அந்நிர்க்குணப் பிரஹ்மமே சர்வத்திற்கும் அவதி ரூபமும், பரமகதிரூபமுமாமெனக்கூறுகின்றது. அந்நிர்க்குணப் [illegible] மம் நேத் நிர முதலிய இந்நியங்கட்கு விடயமின்மையின், அந்நிர்க்குணப் பிரஹ்மரூபகதி அவ்வியக்தமெனப்பட்டது; அதாவது தேகாபிமானமுடையோரால் அது மிகவருத் தத்தாலடையப்படுகின்றது. ஆண்டு, முதலில் விவேகம், வைராக்கியம், சமதம முதலிய ஆறின் பிராப்தி, மூமுட்சுத்தன்மை என்னும் நான்கு சாதனங்களை யுடையதல்வேண்டும், அதன்பின் விதிபூர்வகம் கருமங்களைச் சந்நியாசம்பண்ணிச் சுரோத்திரியப் பிரஹ்மநிட்ட குருவின்பாற்செலவேண்டும், அதன்பின் அ [illegible] முகமாய் வேதாந்த வாக்கியங்களைக்கேட்கவேண்டும், அதன்பின் அவ்வ [illegible] களை விசாரித்து அவ்வப்பிராந்தியை நீக்கவேண்டும் என்பது முதலிய சா [illegible] களைத் தேடுவதிலும் தேகாபிமானமுடையோனுக்குப் பெருந்துன்பமுண்ட [illegible] பிரத்தியட்சசித்தமேயாம் என்னுமபிப்பிராயத்தால், ஸ்ரீ பகவான் 'க்லேஶ தரஸ்தேஷாம்' எனக் கூறியருளினர். சகுணப்பிரஹ்மத்தை யறிவோர்க்கும் [illegible] குணப்பிரஹ்மத்தை யறிவோர்க்கும் மோக்ஷவடிவப்பலப்பிராப்தி யொன்றேயா மாதலின், நிர்க்குணப்பிரஹ்மத்தை அறிபவனைப்பார்க்கினும் சகுணப்பிரஹ்மத்தை அறிபவனிடத்துச் சிரேஷ்டத்தன்மை கூறல் பொருந்தாதாயினும், ஓரே பலத்தை எவன் துஷ்கரோபாயத்தாலடைகின்றானே அவனைப்பார்க்கினும் சுலபோபாயத் தாலடைபவன் சிரேஷ்டனுவன் என்பது ஸ்ரீ பகவான் கருத்தாம். முன்னர் ஒன்ப தாவது அத்தியாயத்தில் 'ஸுஸுவம் கர்துமவ்யயம்' என்னும் வாக்கியத் தால் அதிகாரிகட்கு வருத்தமின்றியே பிரஹ்மஞானப்பிராப்தியை ஸ்ரீ பகவான் கூறியருளினர். ஈண்டு, 'க்லேஶதாஸ்தி மதி ரூபம்' என்னும் வாக்கியத்தால் மிக வருத்தத்தால் அந்நிர்க்குணப்பிராப்தியாம் எனக்கூறினர்; ஆதலின், பூர்வோத்தர வாக்கியங்கட்குப் பரஸ்பரம் விரோதந் தோற்றுகின்றது. அங்ஙனமாயினும், ஸ்ரீ பகவானுக்கிது கருத்தாம்:—விவேக முதலிய சர்வ சாதனங்களையுமுடைய நிஷ்கா மாதிகாரிகட்கோ, அனாயாசமாகவே நிர்க்குணப் பிரஹ்மப்பேறுண்டாகின்றது. தேகாதிகளில் யானெனதென்னும் அபிமானமுடைய சகாமர்கட்கு மிகுந்த வருத் தத்தானே நிர்க்குணப்பிரஹ்மப்பிராப்தியுண்டாகின்றது. இக்கருத்துப்பற்றியே ஸ்ரீ பகவான் ஈண்டு, 'க்லேஶவஸ்' என்பதால் தேகாபிமானியையே கூறி யருளினர். அத்தன்மையனுக்கு சகுணப்பிரஹ்மசிந்தனமே சுகமாமாதலின் பூர்வோத்தர வாக்கியங்கட்கு விரோதமின்மை காண்க. (5)

(அ-கை.) ஹே பகவன்! சகுணப்பிரஹ்ம முணர்ந்தோனுக்கும் நிர்க்குணப் பிரஹ்ம முணர்ந்தோனுக்கும் ஒருகால் பலமொன்றே பிராப்தியாமெனிலோ, ஆயாசக்குறைவுபாட்டால் சகுணப்பிரஹ்ம முணர்ந்தோன் சிரேஷ்டனென்பதும், ஆயாசமிகுதிப்பாட்டால் நிர்க்குணப்பிரஹ்மமுணர்ந்தோன் நிக்கிருஷ்டனென்பது மமையும். ஆனாலோ, அவ்விருவர்கட்கும் பலமொன்றே பிராப்தியாவதில்லை. மற்றோரு, அவர்கட்கு வெவ்வேறு பலமே பிராப்தியாகின்றது. அவற்றுள், நிர்க் குணப்பிரஹ்மத்தை யுணர்ந்தோனுக்குக் காரியப்பிரபஞ்ச சகித அவித்தியா நிவிருத்திபூர்வகம் நிர்விசேடப்பரமானந்த பிரஹ்மப்பிராப்தியாம். சகுணப்பிரஹ் மத்தை யுணர்ந்தவனுக்கோ அதிட்டானவடிவ நிர்க்குணப்பிரஹ்ம சாட்சாத் காரமின்மையின் அவனுக்கவித்தை நீக்கமில்லை. மற்றோரு, இரண்யகருப்பரூப காரி யப்பிரஹ்மலோகத்திற்சென்று ஆண்டைசுவரிய விசேடரூபபலத்தை யடைகின்றா னுதலின், அவனுக்கு மோக்ஷரூப அதிகபலத்தை யடைதற்பொருட்டு மிக வருத்த

மாம். அது நிர்குணப்பிரஹ்மமுணர்ந்தோனிடத்து நியூனத்தன்மையை அடை வியாது அற்பமான லத்தின்பொருட்டுண்டாம் மிகுந்த வருத்தமே நியூனத்தன் மையைத்தரும் என்னு மர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் உத்தரமருளிச்செய் கின்றார் :—ஹே அர்ச்சுன ! சகுணப்பிரஹ்மோபாசனையால் சர்வப் பிரதிபந்தங் களும் நீங்கிய சகுணப்பிரஹ்மோபாசகனுக்குப் பிரஹ்மலோகத்தில் கேவலம் ஐசுவரிய விசேடப்பிராப்திரூப பலமாத்திரமே கிடைப்பதன்று ; மற்றே, அவனுக் காண்டு குருவினுபதேசமும், சிரவணமனன முதலியவைகளின் ஆவிருத்திரூப கிலேசமும் இன்றியே ஈசுரனது பிரசன்னத்தோடு கூடியதும் இயல்பாய் விளங்கப் பட்டதுமாகிய வேதாந்தவாக்கியத்தால் தத்துவஞானமுற்பத்தியு முண்டாகின்றது. அத்தச் ஞானத்தால் காரியசகித அவித்தை நீங்கவே அவ்வுலகத்தின்கண்ணே கர்வினீற்றில் அவ்வுபாசகனுக்கு நிர்க்குணப்பிரஹ்மவித்தையின் பலரூப லிய மோட்சப்பிராப்தியாகின்றது, இது சுருதியிலுங்கூறப்பட்டுளது :—

தஹ்வா ஜீவவநா துரீதரம் வாரீயம் வாரஷீக்ஷதே' இரணிய னது ஐசுவரியத்தையடைந்த உபாசகன் அப்பிரஹ்மலோகத்தின் ஐசுவரிய தினீற்றில் இச்சீவர்களனைவர்களின் சமட்டிரூபமும் சிரேஷ்டமுமாகிய இர ணியகருப்பனினும் பரமெனப்படும் விலட்சணமும் இருதயவடிவ குகையிலிருப்ப தும் சர்வத்திர பரிபூரணமுமாகிய பிரத்தியக்கபின்ன அத்துவிதீயப் பரமான்மா வைச் சாட்சாத்கரிக்கின்றான் ; அதாவது, பிரஹ்மலோகத்தில் குருவுபதேசமின்றி இயல்பானே விளங்கப்பட்ட வேதாந்தவாக்கியரூபப் பிரமாணத்தால் அவ்வுபாச கன் பரப்பிரஹ்மத்தைச் சாட்சாத்கரிக்கின்றான். அதனானே, அவ்வுலகத்தில் கைவல்ய மோட்சத்தை அடைகின்றான் என்பதாம். இவ்வணம் கூறிப்போந்த கிலேசங்களின்றியே சகுணப்பிரஹ்ம வேத்தாவானவன் ஈசுரப்பிரசாதத்தால் நிர் க்குணப்பிரஹ்மவித்தையின் பலரூபமாகிய மோட்சத்தை அடைகின்றான் என்னு மர்த்தமனைத்தையும் ஸ்ரீ பகவான் இரண்டு சுலோகங்களால் அருளிச்செய்கின்றார்.

சு-ம். யெ தூ ஸவாருணி கூராருணி உயி ஸம்ருஜ்ஜ உத்தராः । 12-5.
கூரநெயுநெவ யொமெந ஸாம யுர்யாயஜ்ஜ உவாஸதெ ॥ (6)

தெஷாமஹம் ஸமுத்தாரு முத்ருர்ஷாம்ஸாரு ஸாகரு ।
ஹவாமி ந ஸிராத்பார்தாரு யுபாவெஸிததெ தஸாமி ॥ (7)

ப-ம். 3 யெ 2 தூ 4 ஸவாருணி 5 கூராருணி 6 உயி 7 ஸம்ருஜ்ஜ 8 உத்தராः 9 கூரநெயுந 12 ஸவ 10 யொமெந 11 ஸாம 13 யுர்யாயஜ்ஜः 14 உவாஸதெ 15 தெஷாம் 18 கூஹம் 21 ஸமுத்தாரு 19 முத்ருர்ஷாம் ஸாரஸாகரு 22 ஹவாமி 20 நஸிராத்பார்தாரு 1 வாயாரு 16 உயி 17 சூவெஸிததெதஸாம்.

(அ-ம்.) ஹே பார்த்த ! மற்றும் எவன் சர்வ கருமங்களையுஞ் சகுணப்பிரஹ்ம மாகிய எனக்கர்ப்பணஞ்செய்து எனது பாயணனுய் அனன்ய சமாதிவடிவ யோகத் தால் என்னையே சிந்திப்பவனுய் என்னையே யுபாசித்து என்னிடத்தாவேசமுடை யவனை நான் இப்பிறவிப்பெருங்கடலினின்றும் சீக்கிரமே கரையேற்றுகின்றேன்.

(வி-ம்.) ஈண்டு, 'யெதூ' என்பதிலுள்ள 'து' என்னுஞ் சப்தமானது முற்கூறிய அர்ச்சுனனது சங்கையை நீக்குதற்பொருட்டாம். ஹே அர்ச்சுன ! எவ்வதிகாரி சகுணப்பிரஹ்மமாகிய என்னிடத்தில் நித்திய நைமித்திக சுவாபாவி கம் என்பன முதலிய சர்வ கருமங்களையும் அர்ப்பணஞ்செய்து எனது பாயுய். அதாவது, பகவானெனும் வாசுதேவனுகிய நானே பரமெனும் மிகுந்த பிரீதி விடயமெவனுக்கு அவன் எனது பாயுவன். அல்லது, பரமேசுரனுகிய நானே பர

மெனும் சர்வ கர்மங்களாலும் அடையப்படுவதெவனுக்கு அவன் எனது பரமு வன். அல்லது, பரமேசுரனுகிய நானே பரமெனுந் தியானவிஷயமெவனுக்கு அவன் எனது பரமுவன். அல்லது, விசுவரூப பரமான்மாவாகிய நானே பர மெனும், தனக்கன்னியமான அறியத்தக்க காணத்தக்க பொருள்கள் எவனுக்கோ அவன் எனது பரமுவன். அதாவது, தனக்கன்னியமான பொருளில் எவ்விடத் தும் பரமேசுரனுகிய என்னையே காணப்பட்டவன் எனது பரமுவன். அத்தன்மை யனுகிய அதிகாரி அனன்யயோகத்தால் பரமேசுரனுகிய என்னையே சிந்திக்கின் றன். ஆண்டுப் பகவானெனும் வாசுதேவனுகிய என்னைவிடுத்து வேறுலம்பன மெதன் கண்ணில்லையோ அஃதனன்யமாம், அத்தன்மைய அனன்யரூப சமாதி யாகிய யோகத்தைச் சாத்திரத்தில் ஏகாந்தமான பக்தியோகமெனக் கூறுகின்ற னர். அத்தன்மையயோகத்தால் என்னைச் சிந்திப்பவனுய்; அதாவது, சர்வ ஜெளந் தரியத்திற்கும் நிதானரூபனும், ஆனந்தகனவடிவ விக்கிரகமுடையவனும், இரண்டு அல்லது நான்கு புயங்களோடு கூடியவனும், சர்வ ஜனங்களையும் மோகிக்கப்பண் ணும் வேணுவை மிகரம்யமான சப்த சுரங்களால் வாசிப்பவனும், சங்குசக்கர கதை பத்மங்களைக் கரத்திலேந்தியவனுமாகிய ஸ்ரீ பகவானை வாசுதேவனைச் சிந் திப்பவனுய் அல்லது, நரசிம்ம ராகவ வாமனம் என்பன முதலிய ரூப பரமேசுர னுகிய என்னைச் சிந்தித்து அல்லது, முன்னர்க்காண்பித்த விசுவரூபனுகிய என் னைச் சிந்தித்து எவ்வதிகாரி என்னை யுபாசிக்கின்றுனே! அதாவது, அத்தன்மைய பரமேசுர விஷயக மறைப்பற்ற சஜாதீய சித்தவிருத்தியின் பிரவாகத்தை எவ்வதி காரி பண்ணுகின்றுனே. அல்லது 'உவாஸதெ' என்பதற்கு எவ்வதிகாரி பரமே சுரனுகிய எனது சமீபத்தினிலேத்திருப்பவனுகின்றன், அத்தன்மைய என்னிடத்தி லாவேசசித்தமுடையவன் எனப் பொருள்பண்ணவேண்டும்; அதாவது, முன்னர் க்கூறிய சகுணப்பிரஹ்மமாகிய என்னிடத்தில் ஆவேசிதம் பண்ணப்பட்டதெனும் ஒருமை மனத்தாற் பிரவேசித்தமனமுடையோன் என்னிற் பிரவேசித்த மனத்த னுவன். அத்தன்மைத்தான சகுணப்பிரஹ்மோபாசகனை நான் பிறவிக்கடலினின் றும் கரையேற்றுபவனுகின்றேன். ஆண்டு, மிருத்யுவோடுகூடிய மித்தையாகிய அஞ்ஞானமும், அதன் காரியவடிவ இச்சம்சாரமுமே பிரசித்தமானகடல் போன்று நீந்தற்கரியதாதலின் சாகரரூபமாம். அத்தன்மைய கடலினின்று நான் அவனைக் கரையேற்றுவேன். அதாவது, அவ்வுபாசகனை நான் ஞானமாகிய ஆசிரயத்தைக் கொடுத்து ஆயாசமின்றியே சின்னளிலே சர்வப் பிரபஞ்சத்தின் பாதாவதிவடிவ சுத்தப்பிரஹ்மரூப மேலிடத்தில் தூக்கிவிடுவேனுவேன். ஈண்டு, ஹே பார்த்த! எனப் பகவான் அர்ச்சுனனைச் சம்போதித்தது, நீ எனது தந்தையின் சகோதரி புத் திரனுதலானும், என தனன்யபக்தனுதலானும், இப்பிறவிப்பெருங்கடலினின்றும் உன்னை அவசியமாய்க் கரையேற்றுவேன்: பயமுறுதே எனச் சந்தோடப்படுத்தற் பொருட்டாம் என்க. (6-7)

(அ-கை.) ஆண்டு, இத்துணைக்கிரந்தத்தால் சகுணப்பிரஹ்மோபாசனையின் துதி கூறப்பட்டது. இப்போது அச்சகுணப்பிரஹ்மோபாசனையை விதிக்கின்றுர்.

சு-ம். மயைவ மநஆவேச்ய மயி புத்திம் நிவேசய।
நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்வம் ந ஸம்ஶயஃ॥ (8)

ப-ம். 2 மயி 3 ஏவ 1 மநஃ 4 ஆவேச்ய 6 மயி 5 புத்திம் 7 நிவேசய 12 நிவஸி ஷ்யஸி 10 மயி 11 ஏவ 8 அதஃ 9 ஊர்த்வம் 14 ந 13 ஸம்ஶயஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! நீ உனது மனத்தைச் சகுணப்பிரஹ்மமாகிய என்னிடத்தில் நிலை நிறுத்துதி. உனது புத்தியையும் என்னிடத்தின்கண்ணே

நிலைப்படுத்துதி. அதனல் இத்தேகம் விழுந்தபின்னர் நீ சுத்தப்பிரஹ்மத் தின்கண்ணே அபேதமாய் வசிப்பாய்; இதிலோரையமுமுறுதே. (8)

(வி-ம்,) ஹே அர்ச்சுன! சங்கற்பவிகற்பரூப உனது மனத்தை என்னிடத் தில் நிலைப்படுத்துவாய்; அதாவது, அம்மனோவிருத்திகளனைத்தையும் எனது விடயமுடையனவாகச்செய்குதி. எனக்கன்னியமான சப்த முதலிய விடயங்களை அம்மனோவிருத்தி விடயமாகப்பண்ணுதே, உனது நிச்சயரூப புத்தியையும் என் னிடத்திலே நிறுத்செய்குதி; அதாவது, அப்புத்திவிருத்திகளனைத்தையும் எனது விஷயகமாகவே செய்குதி. கருத்திதுவாம்:—மற்றைய விருத்திகளனைத்தையும் விடுத்து எப்போதும் என்னையே சிந்தனைபண்ணுதி. அற்றேல், ஹே பகவன்! இவ்வாறு சகுணப்பிரஹ்மோபாசனை பண்ணுவதால் எப்பேறு கிடைக்கும் என அருச்சுனனுக்காசங்கையுண்டாக ஸ்ரீ பகவான் அதன் பலத்தை அருளிச்செய் கின்றார். 'நிவஸிஷ்யஸி ஊர்த்' ஹே அர்ச்சுன! இவ்வாறு நீ சகுணப்பிரஹ்மசிந் தனை செய்வையேல் நான் பிரஹ்மசொரூபம் என்னும் ஆன்மஞானத்தையடை ந்து இத்தேகம் விழுந்தபின்னர் நிர்க்குணமாகிய சுத்தப்பிரஹ்மத்தின் கண்ணே அபேதமாய் நிவாசஞ்செய்வாய். இவ்வாறு சகுணப்பிரஹ்மோபாசனை யின் மோக்ஷரூபபலத்தில் நீ சிறிதளவும் ஐயுறுதே; அதாவது, அதில் சிறிதள வேனும் பிரதிபந்தக சங்கை செய்யாதே. ஈண்டு, 'னவகூத ஊர்த்வம்' என்னும் வாக்கியத்தில் 'னவாத ஊர்த்வம்' எனச் சந்தி பண்ணுவதாழிந்தது சுலோகம் பூர்ணமாதற் பொருட்டாமென்க.

(அ-கை.) ஆண்டுப் பூர்வ சுலோகத்தில் சகுணப்பிரஹ்மோபாசனையின் பிரகாரங் கூறப்பட்டது. இப்போது அதில் வலியிலா அதிகாரிகள் இயலுமாறு முதலில் பிரதிமைமுதலிய பாகியவிடயங்களில் பகவத்தியானத்தைப் பயில வேண்டும்; அதாவது, பிரதிமை முதலியவைகளில் பகவத்புத்தி பண்ணல் வேண்டும். அதிலும் வலியற்ற அதிகாரிகள் கேட்டல் புகழ்தன் முதலியவடிவ பாகவத தர்மங்களை யநுட்டித்தல்வேண்டும். அதிலும் வலியற்ற அதிகாரிகள் கருமங்களனைத்தின் பலனையும் பரித்தியாகஞ்செயல்வேண்டும்; அதாவது பலச் சையின்றிக் கருமங்களைச்செய்யவேண்டும்; இவ்வாறு மூன்று சாதனங்களை மூன்று சுலோகங்களா லருளிச்செய்கின்றார்.

(அ-கை.) அன்றியும்,

சு-ம். சுயஸ்தம் வசா யாதூம் ந ஸகோஷி யயி ஷ்டிரம் ।
சுஹ்யாவயொமெந தபதா ஸஸ்தாவூம் யநம்ஜய ॥ (9)

ப-ம். 2 சுய 4 ஸ்தம் 6 வசாயாதூம் 7 ந 8 ஸகோஷி 3 யயி 5 ஷ்டிரம் 10 சுஹ்யா வயொமெந 9 தபதஃ 11 ஸாம் 13 உத 12 சூவூம் 1 யநம்ஜய.

(அ-ம்.) ஹே தனஞ்சய! சகுணப்பிரஹ்மத்தின்கண் உன் மனதை நிலை நிறுத்துவதற் கசமர்த்தனுகுவையேல், அப்பியாசயோகத்தால் என்னையடைதற் கிச்சிப்பாய்.

(வி-ம்.) ஈண்டுச் சுலோகத்தின் ஆதியிலுள்ள 'சுய' என்னுஞ் சப்த மானது கூறிப்போந்த பக்கத்தையவாவ, மற்றொரு பக்கத்தின்றொடக்கத்தை யறிவுறுத்துகின்றது. ஹே தனஞ்சய! சகுணப்பிரஹ்மத்தின்கண் சித்த நிலைக்கு மாறு நிலைப்படுத்துவதில் வலியிலனுவையேல், நீ அப்பியாசயோகத்தால் என்ன யடைய விரும்புதி; அதாவது, முயலுதி. ஆண்டு, பொன்னுதி தாதுமய, அல்லது கன்மய சிவவிஷ்ணுவாதிப்பாகியப் பிரதிமை முதலியவைகளில் எவ்விடத்தும்

நிவிருத்திபடைந்த சித்தத்தை மறித்து மறித்துந் தாபனம்பண்ணல் அப்பியாசமாம்; அவ்வப்பியாசபூர்வக சமாதிவடிவயோகம் அப்பியாசயோகமாம், அத்தன்மைபோகத்தால் என்னை யடைதற்பொருட்டு முயலுதி. ஈண்டுப்பகவான் 'ஹேதனஞ்சய' என்னுஞ் சம்போதனத்தால் யுதிட்டிரன் ராஜசூப யாகத்திற்குப் பல மாற்றார்களை வெற்றிபண்ணித் தனத்தைக்கொண்டு வந்தவனதலின், இத்தன்மைய பெயர்வாய்ந்த உனக்கு மனமாகிய ஒரு சத்துருவைச்செயித்துத் தத்துவஞானமாகிய இத்திரவியத்தைக் கைக்கொள்வது வியப்பன்றுமென்க. (9)

சு-ம். ஸுஹ்ருன்மெவ்யுஸ்தயோர்ஹி ஸ்தஸ்துவாரஸ்ய ஹவ।
ஸ்துயஸ்தவி கஸ்ய்ணி கூவ்ருஷ்டிஸ்ஸ்ருஜ்யஹி ॥ (10)

ப-ம். 1 ஸுஹ்ருன்மெ 2 ஸ்வி 3 ஸுஹ்ருயோ: 4 ஸ்வி 5 ஸ்தஸ்துவாரஸ்ய 6 ஹவ 7 ஸ்துயம்
9 ஸ்வி 8 கஸ்ய்ணி 10 கூவ்ருஷ்ட 11 ஸ்ருஜ்யஹி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! கூறிய அப்பியாசத்தினுமசமர்த்தனாகையேல், பகவத்கருமபராயணனாகுதி. என்பொருட்டுக் கருமத்தைச்செய்யினும், பிரஹ்மபாவத்தையே அடைவாய். (10)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பூர்வ சுலோகத்திற்கூறிய அப்பியாசம் பண்ணுவதினும் சமர்த்தனலனாகையேல், எனது கர்மபரமனாகுதி. ஆண்டு, எனது பிரீதியின்பொருட்டு எக்கருமமாமோ, அது எனது கருமமாம். அத்தன்மைய கருமம் ஒன்பதுவகையெனச் சாஸ்திரங்களிற் கூறப்படுகின்றது.

ஆ-சு. ஸ்ரவணம் கீர்த்தனம்விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம்।
அர்சனம் வந்தனம்தாஸ்யம் ஸக்யமாத்மநிவேதனம் ॥

(போ-ள்.) யாண்டும் வியாபகமாகிய விஷ்ணுபகவானுடைய இராமன், கிருஷ்ணன் என்பது முதலிய திருநாமங்களைச் சிரவணித்தல் (1) விஷ்ணுவின் திருநாமங்களைத் தன் வாயாற் கூறுதல், (2) மனத்தாலிடைவிடாது விஷ்ணுவைச் சிந்தித்தல், (3) விஷ்ணுவின் திருவடிக்கு ஊழியஞ்செய்தல், (4) சந்தனுட்சதை புஷ்பம் தூபம் தீபம் முதலியவைகளால் விஷ்ணுவை அர்ச்சித்தல், (5) முக்கரணங்களானும் விஷ்ணுவை வணங்கல், (6) விஷ்ணுவிற்குத்தாசனாதல், (7) விஷ்ணுவிற்குச் சகாவாதல், (8) விஷ்ணுவிற்குத் தனது சரீரவடிவ ஆன்மாவை அர்ப்பணஞ்செய்தல், (9) இவைகளில் யாண்டும் வியாபகமாகிய விஷ்ணுவிற்குப் பாதசேவை அர்ச்சனை யிரண்டுமமையாவாயினும்,

தொ॰ மெ வாஹ॰ தெவஹ்யஅ ஞோஅ ஸெவஅ ।
அமும் ஹ்ருதயாவிதொ॰ வஸுஅமும் வ்ரதிஸாதிகம் ॥

என்னுஞ் சாத்திரத்தில் விஷ்ணுவிற்குச் சலமசலமென இருவகைவடிவங் கூறப்பட்டுளது. அவற்றுள் சந்நியாசிசலரூபமாவன், பொற்கன்மயப் பிரதிமை முதலியவைகள் அசலரூபங்களாம். அச்சந்நியாசியின் அல்லது, விஷ்ணுவின் பிரதிமைகளின் பாதசேவையும் அர்ச்சனையும் பொருந்துமென்க. இந்த ஒன்பதுவகையான பஜனையைச் சாஸ்திரத்தில் பாகவத தர்மமெனக்கூறுகின்றனர். அத்தன்மைய பாகவத தர்மமெனும் எனது கருமத்தில் தற்பரனாகுதி. இவ்வணம் எனது பிரீதியின் பொருட்டு அந்தச் சிரவண முதலிய கருமங்களைச்செய்து அந்தக் கரண சுத்திவாயிலாகவும் ஆன்மஞானப்பிராப்தி வாயிலாகவும் நிர்க்குணப் பிரஹ்மபாவத்தின் பிராப்திவடிவ சித்தியையடைவாய். (10)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். சுமெததஉவ்யஜகொஹி கதுஃரூம் ஜஒஏமஜாஶ்ரதஃ ।
ஹவஃகஉஃஹஷ்டயாமம் ததஃ கூரு யதாத்மவாஞ் ॥ (11)

ப-ம். 1 சுமே 2 ஹ தஃ 3 சுஷி 5 சுஜதஃ 6 சுஹி 4 கதுஃரூம் 8 ஜஒஏமம் 9 சூஶ்ரதஃ 11 ஹவஃகஉஃஹஷ்டயாமம் 7 ததஃ 12 கூரு 10 யதாத்மவாஞ்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! கூறிய பாகவத தருமங்களையும் செய்ய ஆற்றலற்றவனுவையேல், எனது யோகத்தைப்பற்றியும் யதாத்மவானுகியும் நீ சர்வ கர்ம பலத்தைவிடுதி.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! வெளி விடயங்களிற் பிரீதியுடைய சித்தனைதால் முற்சுலோகத்திற் கூறிய சிரவண முதலிய பாகவத தர்மங்களையும் சம்பாதிப்பதற் கசமர்த்தனுத்வையேல், எனது யோகத்தை ஆசிரயித்தவனுய், அதாவது எனது சரணமொன்றையேயாசிரயித்தவனுய் அல்லது, என்னிடத்துக் கருமங்களனைத்தையும் அர்ப்பித்தல் எனது யோகமாம். அத்தன்மையயோகத்தை ஆசிரயித்தவனுய்; யதாத்மவானுய் ஈண்டுச் சப்த முதலிய விடயங்களினின்றும் சுரோத்திரமுதலிய இந்திரியங்களை நிவிர்த்தித்தவன் யதனுவன், விவேகி ஆன்மவானுவன், யதனுகியே ஆன்மவானுனவன் யதான்மவானுவன்; அதாவது, சர்வேந்திரிய நிக்கிரகமுடைய விவேகி யதான்மவான் எனப்படுவன்; அத்தன்மையனுய் நீ கூறிப்போந்த சர்வ கருமபலத்தையும் தியாகஞ்செய்குதி; அதாவது அக்கருமபலச்சையை விடுதி என்பதாம். (11)

(அ-கை.) ஆண்டுப் பூர்வம் சகுணப்பிரஹ்மோபாசனை, அப்பியாசயோகம், பாகவததர்மம், கருமபலத்தியாகம் என்னும் நான்கு சாதனங்களும் அதிகாரிகளின் வேறுபாட்டால் விதானம்பண்ணப்பட்டன. அந்த நான்கு சாதனங்களுக்குள் ஈற்றில் விதித்த கருமபலத்தியாக ரூபசாதனத்தின்கண்ணே முன்னர்க்கூறிய சாதனங்களின் விதானத்திற்கு முழுமுடிவாம். ஆதலின், ஸ்ரீ பகவான் அதில் அதிகாரிகளைப் பிரவிருத்திப்பித்தற்பொருட்டுச் சர்வ கருமபலத்தியாகரூப சாதனத்தைத் துதித்தருளுகின்றார்.

சு-ம். ஶ்ரேயொ ஹிஜ்ஞானமஜ்ஞாகஜ்ஞா நாஜ்யாநம் விஶிஷ்யதெ । 12-7.
ய்யானாத்கஃகஉஃஹஷ்டயாம ஷ்யாமாஹ்ரா ஶ்ரிய நஞ்ஞாஶ்ரு ॥ (12)

ப-ம். 4 ஶ்ரேயஃ 3 ஹி 2 ஜ்ஞானம் 1 சுஹ்யாஹாகு 5 ஜ்ஞானாகு 6 ய்யானம் 7 விஶிஷ்யதெ 8 ய்யானாகு 9 கஉஃஹஷ்டயாமஃ 10 தயாமாகு 12 ஶாஶ்ரிஃ 11 சுநஞ்ஞாம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அப்பியாசத்தினின்றும் ஞானமே சிரேஷ்டமாம். அந்த ஞானத்தினின்றுந் தியானமே சிரேஷ்டமாம். அந்தத் தியானத்தினின்றும் கருமபலத்தியாகம் சிரேஷ்டமாம். அத்தியாகானந்தரம் மோகூரூப சாந்தியுண்டாம். (12)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஞானப்பிராப்தியின்பொருட்டுச்செய்யப்பட்ட சிரவணப்பியாசத்தினின்றும் ஞானமேசிரேஷ்டமாம்; அதாவது சிரவணமனனங்களாலுண்டாக்கப்பட்ட ஆன்மவிடயக நிச்சயரூப ஞானம், அந்த ஞானத்தையே சிரவணஞானமெனவும், மனனஞானமெனவும், பிரமாணகத அசம்பாவனையின் பிரமேயகத அசம்பாவனையின் நிவர்த்தகமெனவும்படும்; அதினின்றும் அப்பியாசம்

சிரேஷ்டமாம். அந்தச் சிரவணமனன ஜன்னிய ஞானத்தினின்று நிதித்தியாசன ரூபத்தியானம் மிகச் சிரேஷ்டமாம்; என்னை, அந்நிதித்தியாசன ரூபத்தியானம் மறைப்பிலாதாகி ஆன்மசாக்ஷாத்காரத்திற்குக் காரணமாகின்றது, அந்தச் சிரவண மனன ஞானங்களோ! அந்நிதித்தியாசரவாயிலாக ஆன்மசாக்ஷாத்காரத்திற்குக் காரணமாகின்றன. மறைப்பற்றதாய அந்த ஞானம் ஆன்மசாக்ஷாத்காரத்திற்கு ஏதுவன்றும் ஆதலின், அந்த ஞானத்தினின்றும் நிதித்தியாசனரூப தியானம் சிரேஷ்டமுடைபதாம். இவ்வாறு அந்த நிதித்தியாசனரூபத் தியானம் சர்வத்தி யானத்தினின்றும் சிரேஷ்டமாமாயினும், அஞ்ஞானியாற் செய்யப்பட்ட சர்வ கரு மபலத்தியாகம் அவனுக்கு அத்தியானத்தினின்றும் சிரேட்டமாம் என்னுமபிப்பிரா யத்தால் ஸ்ரீ பகவான் சர்வ கர்மபலத்தியாகத்தைத்துதிக்கின்றார். 'யதா²த்ஸ²மதா²ஸ்மி உதி' அர்ச்சுன! அஞ்ஞானிபாற்செய்யப்பட்ட சர்வ கருமபலத்தி யாகம் அந்நிதித்தியாசனத்தினின்றுஞ் சிரேஷ்டமாம்; என்னை, மனிஞநிக்கிரக முடைபவனாற் செய்யப்பட்ட சர்வ கருமபலத்தியாகத்தினின்றும் இவ்வதிகாரிக்கு அஞ்ஞானத்தோடு சர்வ சம்சாரத்தின் சாந்தி சீக்கிரமாகவே பிராப்தியாகின்றது; அச்சாந்தி வேறுகாலத்தையபேட்சிப்பதில்லை. இது சுருதிபிலுங்கூறப்பட்டுளது:—

ஆ-சு. யதா³ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேঽஸ்ய ஹ்ருதி³ஸ்தி²தா: ।
அத² மர்த்யோঽம்ருதோ ப⁴வத்யத்ர ப்³ரஹ்மஸமஸ்நுதே ॥

(போ-ள்.) இந்தச் சீவனுடைய இருதயத்திலுள்ள காமங்களனைத்தும் நிவி ருத்தியாகுங்காலத்திலே இந்தச் சீவன் அமிருதனாகின்றான், அங்ஙனமே இந் தத்தேகத்தின்கண்ணே பிரஹ்மபாவத்தையுமடைகின்றான். என்பது முதலிய சுருதிவாக்கியங்களால் சர்வ கருமபலத்தியாகத்தில் மோக்ஷ சாதனத்தன்மை உண ரப்படுகின்றது. இந்நூலின்கண்ணும் நிதப்பிரக்ஞனுடைய லக்ஷணத்தில் 'ப்ரஜ ஹாதியதா³ காமாந் ஸர்வாம்ஸ்²ச பார்த² மநோக³தாந்' என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் தாமே சர்வ கருமத்தியாகத்தில் மோட்சசாதனத்தன்மையை அருளிச் செய்திருக்கின்றனர். சுருதியாலும் நிதப்பிரக்ஞன்லக்ஷணத்திற் சர்வ கருமத்தி யாகமே மோட்சசாதனமெனக்கூறப்பட்டது. கருமபலத்தியாகத்தை மோட்சசாத னமெனக்கூறவில்லை: அங்ஙனமாயினும் அக்கருமபலமும் காமரூபமேயாதலின், கரு மபலத்தியாகமும் காமத்தியாகமேயாம். அந்தக்காமத்தியாகரூப சாமான்ய தருமத் தைக்கொண்டு ஸ்ரீபகவான் கருமபலத்தியாகத்தைக் காமத்தியாகபலமாய்த் துதிக் கின்றார். முன்னர் அகஸ்தியப் பிராஹ்மணர் கடலைக்குடித்தார், பரசுராமப்பிராஹ் மணர் இத்தரையை க்ஷத்திரிய ராஜரற்றதாய்ச் செய்தனர். அந்தப் பிராஹ்மணத் தன்மை இக்காலத்திய பிராஹ்மணர்களிடத்துமாம், இதனால் அந்தப் பிராஹ்மணத் தன்மையினும் பொதுத்தருமத்தைக்கொண்டு இக்காலத்திய பிராஹ்மணர்களும் அளவிலாவலியுடையதாந்தன்மையால் துதிக்கப்படுகின்றதேபோல, அந்தச் சர்வ கருமபலத்தியாகமும் காமத்தியாகத்தின்பலமாய்த் துதிக்கப்படுகின்றது என்க. ஒரு வியாக்கியானத்தில் 'ஸ்ரௌயொஹி ஜ்ஞாநஸ்²யாஹாங்' என்னுஞ் சுலோ கத்திற்கு இவ்வண மருத்தஞ்செய்யப்பட்டுளது:—நிதித்தியாசனரூப அப்பியாசத் தினின்றும் சிரவணமனன சென்னிய பரோக்ஷஞானம் சிரேஷ்டமாம், அந்தப் பரோக்ஷஞானத்தினின்றும் விஷ்ணுவின் திருநாமத்தைக்கேட்டல் புகழ்தல் வடி வத்தியானம் சிரேஷ்டமாம், அதினின்றும் கருமபலத்தியாகம் சிரேஷ்டமாம், அக் கருமபலத்தியாகம், தியானாந்தரம் வியவதானமின்றியே சித்தசுத்தி முதலியவை களின் உற்பத்தித்துவாராமோக்ஷரூப சாந்தியை யடைவிக்கும். ஈண்டு, நிதித்தி யாசனவடிவ அப்பியாச அபேட்சையால் அந்தப் பரோக்ஷஞானம் பாகிய சாதன மாம், அதனபேட்சையால் சிரவணம் கீர்த்தனை முதலிய வடிவத்தியானம் பாகிய

சாதனமாம், அதனபேட்சையால் கருமபலத்தியாகம் பாகிய சாதனமாம் ஆதலின் அந்தர சாதனுபேட்சையால் பாகிய சாதனங்கட்குச் சிரேஷ்டத்தன்மைகூறல் அசங்கதமாமாயினும், அந்தர சாதனுபேட்சையால் பாகிய சாதனங்கள் செய்தற்குச் சுலபமாகின்றன. சோபானக்கிரமமாய் பாகிய சாதனப்பிராப்தி பூர்வகமே அந்தர சாதனப்பிராப்தியாமாதலின், ஸ்ரீ பகவான் அப்பாகியசாதனத்தில் அதிகாரிகளைப் பிரவிருத்திசெய்தற்பொருட்டுப் பூர்வ பூர்வசாதனுபேட்சையால் அவ்வப்பாகிய சாதனங்களில் சிரேஷ்டத்தன்மையைத் திருவாய்மலர்ந்தருளினனென்க.

(அ-கை.) ஆண்டுப் பூர்வம் மந்தாதிகாரியின்பொருட்டு மிகத்துஷ்கரமான தால் நிர்க்குண அக்ஷராப்பிரஹ்மோபாசனையை நிடேதித்து, மிகச் சுககரமான சகுணப் பிரஹ்மோபாசனை விதானம் பண்ணப்பட்டது, அதில் அசமர்த்தனைவனுக்கு வலியின்பையின் தாரதம்மியங்களை அநுசரித்து வேறு அப்பியாசமுதலிய சாதனங்களும் ஸ்ரீ பகவானால் விதானம்பண்ணப்பட்டன. சகுணப் பிரஹ்மோபாசனையும் அப்பியாசமுதலிய மூவகைச் சாதனங்களையுமருளிச்செய்வதில் ஸ்ரீ பகவானுக்கிதுகருத்தாம்:- இவ்வதிகாரிகள் யாதேனுமொரு பிரகாரத்தால் பிரதிபந்தங்களைத்து மற்றவர்களாய் உத்தமாதிகாரிகளாய்ச் சாதனங்களனைத்தின் பலரூபமாகிய நிர்க்குணப் பிரஹ்மவித்தையின்கண் பிரவேசமாகுக என்பதாம். என்னை, சாதன விதானம் பலத்தின்பொருட்டேயாம்; பலமிலாதில்லை, ஆதலின் ஈண்டுப் பகவான் சகுணப் பிரஹ்மோபாசனையையும் அப்பியாசமுதலிய மூவகைச் சாதனங்களையும் விதானம்பண்ணியருளினர். அவைகளை நிர்க்குணப் பிரஹ்மவித்தைவடிவ பலத்தின்பொருட்டே விதித்தருளினர். இது பிறநூலினுங் கூறப்பட்டுளது:—

ஆ-சு. நிவி:ஶேஷம் வரஃப்ரு ஹவா கூதத்ரு உநீஷ்வாஃ ।
யெ ஏநாவ்ருதாகம் வ்யஞ்ஜெ வாவிஶேஷநிரூ வசனெஃ ॥ (1)
வஶீகுரதெ உகவ்ருஷாம் வரூணப்ரு ஹஶீயுநாகு ।
தவ்ருவாவிஹ:ருவெதா கூஷா உவெதாவாயிகுவுகம் ॥ (2)

(போ-ள்.) நிர்விசேஷ பரப்பிரஹ்மத்தைச் சாக்ஷாத்கரித்தற்குச் சாமர்த்தியமற்ற மந்தாதிகாரிகள் சகுணப் பிரஹ்ம நிரூபணத்தால் அநுக்கிரகிக்கப்படுகின்றார்கள்; அதாவது, சுருதிபகவதியும் பிரஹ்மஞானிகளும் மந்தாதிகாரிகளிடத்துள்ள அநுக்கிரகத்தால் சகுணப் பிரஹ்மத்தை நிரூபணஞ்செய்கின்றார்கள் (1) அச்சகுணப் பிரஹ்மத்தியானத்தால் அவர்கள் மனம் வசமாகுங்கால் அவர்கட்கு சர்வோபாதிகற்பனைகளொழிந்த நிர்க்குணப் பிரஹ்மசாக்ஷாத்காரமுண்டாகின்றது (2) இது பதஞ்சலிபகவானாலும் யோகசூத்திரத்திற் கூறப்பட்டுளது:—

ஆ-சு. ஸதாயி ஹிஜ்ஞீஷ்வரணியாநாகு ।
ததஃ வ்ருதஃக்ஷெதநாயிமஶோ வ்யஞ்ஜநா யாஹாவஶ்ச ॥

(போ-ள்.) இவ்வதிகாரிகட்கு ஈசுரசிந்தனரூப ஈசுரப்பிரணிதானத்தால் சமாதிப் பிராப்தியாம்; இதனானே, இவ்வதிகாரிக்குப் பிரத்தியக்சேதன சாக்ஷாத்காரமுண்டாகின்றது விக்கினவடிவ அந்தராயத்தின் அபாவங்களுமுண்டாகின்றன என்பதாம் ஆதலின் முன்னர் 'க்ஷெஶொ யிகுதஶ்வெஷ்ஷாம்' என்பது முதலிய வாக்கியங்களால் செய்யப்பட்ட நிர்க்குணேபாசனையின் நிந்தை சகுணப் பிரஹ்மோபாசனையின் துதியின்பொருட்டாம்; நிர்க்குணப் பிரஹ்மோபாசனையை நிடேதித்தற்பொருட்டன்றும். உதிதஹோமவிதானத்தில் அநுதிதஹோமநிந்தை உதிதஹோமத்தின் துதியின்பொருட்டேயாம்; அநுதித ஹோமத்தை நிடேதித்தற்பொருட்

டன்றும். ஆண்டுச் சூரியோதயத்திற் செய்யப்பட்டது உதிதஹோமமாம். சூரியோதயத்திற்கு முன்னர்ச் செய்யப்பட்ட ஹோமம் அநுதிதஹோமமாம். அதுபோன்று சகுணப் பிரஹ்மோபாசனையை விதிக்குமிடத்துச் செய்யப்பட்ட நிர்க்குணப் பிரஹ்மோபாசனையின் நிந்தையும் சகுணோபாசனையின் துதியின்பொருட்டேயாம்; நிர்க்குணப் பிரஹ்மோபாசனையை நிந்தித்தற்பொருட்டன்றும். என்னை, நூலுடையார் இந்நியாயங்கூறியிருக்கின்றனர்:—

நஹி நிம் ஹாநிம்ஹ்யம்நீம் ஸிதாம்வ்ரவதூதெ விதாவியெயம் ஹ்ரொதாம் ।

(போ-ள்.) சாஸ்திரத்திலுள்ள நிந்தைவாக்கியங்கள் அந்நிந்திக்கப்பட்ட பொருளை நிந்தித்தற்பொருட்டன்று; மற்றே, பிரசங்கத்தில் வந்த விதேயப் பொருளைத்துதித்தற்பொருட்டு அந்நிந்தாவாக்கிய மெழுந்ததாம்; ஆதலின், நிர்க்குண அக்ஷரப்பிரஹ்மோபாசகர்களே உண்மையில் யோகவித்தமர்களாவர்கள் அவர்களையே ஸ்ரீ பகவான்,

வ்ரியொஹி ஜ்ஞாநிநொதயுயூ ஹ்ஹம் ஸ அ ஹவ்ரி.யஃ ।
உஹாஸாஃ ஸவ்ஹவெ தெஜ்ஞாநீக்ஷா தெவ ஹ்ரெதம் ॥

என்பது முதலிய வாக்கியங்களால் மறித்து மறித்தும் சிரேஷ்டமாய்த் துதித்திருக்கின்றனர். அர்ச்சுன! நீயும் அதிகாரத்தைத் தேடிக்கொண்டு அந்த நிர்க்குணப் பிரஹ்மவேத்தாக்களின் ஞானத்தையும் தருமத்தையுமே அநுசரிக்கத் தக்கவன் ஆவாய். இவ்வாறு அர்ச்சுனனுக் கறிவுறுத்தும் வேட்கையையும் அர்ச்சுனனது பரமஹிதத்திற்கு வேட்கையையுமுடைய ஸ்ரீ பகவான் ஏழுசுலோகங்களால் அந்தஅபேத தர்சனமுடையதும், கிருத கிருத்தியபாவத்தைப்பெற்றதுமாகிய நிர்க்குணப் பிரஹ்மோபாசனையைத் துதிக்கின்றார்.

சு-ம். சுஹ்ருஷ்டா ஸவ்ஹ்ருஹ்மிதா நாம் ஜெதூஃ கரூணா ஸவ அ ।
நிஃஸ்ரொ நிரஹம்காரஃ ஸஃஹ்ரூஃ வஹ்ரூவஃ க்ஷமீ ॥ (13)

ப-ம். 2 சுஹ்ருஷ்டா 1 ஸவ்ஹ்ருஹ்மிதாநாம் 3 ஜெதூஃ 6 கரூணாஃ 4 ஸவ 5 அ
7 நி ஸ்ரூஃ 8 நிரஹம்காரஃ 9 ஸஃஹ்ரூஃவஹ்ரூவஃ 10 க்ஷமீ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவன் சர்வ பூதங்கட்கும் அத்துவேஷ்டன், மைத்திரியையுடையவன், கருணையுடையவன், நிர்மமன், நிரகங்காரன், சுகதுக்க சமன், க்ஷமையுடையவன். (13)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அந்த நிர்க்குணப் பிரஹ்மவேத்தாவானவன் தாவரசங்கமரூப சர்வ பூதங்களையும் தனதான்மவடிவமாய்ப் பார்க்கின்றனனாதலின், தனக்குத் துக்ககாரணமாகிய வஸ்துவிலும் அவனுக்குப் பிரதிகூலபுத்தியுண்டாகிறதில்லை. எப்பொருளில் இவ்வஸ்து எனது துக்கசாதனம் என்னும் பிரதிகூலபுத்தியுண்டாகின்றதோ அவ்வஸ்துவின்கண்ணே துவேஷமுண்டாம், அப்புத்தியின்றி அஃதுண்டாகாது. அந்தப் பிரதிகூலபுத்தியின்றிய தத்துவவேத்தாச்சர்வ பூதங்களையுந் துவேஷிப்பதில்லை. மற்றே, அவைகளிடத்தில் மைத்திரியுடையவனேயாகுவன்: அதாவது, அச்சர்வ பூதங்களிடத்தும் சிநேகமுடையவனேயாவன் அம்மைத்திரிபாவத்தில் இப்போது காரணத்தை அருளிச்செய்கின்றார்.— 'கரூணஃ' என அர்ச்சுன! அவன் சர்வ பூதங்களிடத்தும் கருணையுடையவனாதலினாலே மைத்திரியுடையவனாகின்றான். ஆண்டு, துன்பப்படும் பிராணிகளிடத்துள்ள தயை கருணையாம்; அதையுடையவன் கருணையனுவன். அதாவது,

அந்தத்தத்துவவேத்தாவானவன் சர்வ பூதங்கட்கும் அபயதானங் கொடுக்கும் பரமஹம்ஸ சந்நியாசியாவன். நிர்மமனுமாவன்; அதாவது, தனதாக்கையின்கண் எனதென்னும் புத்தியிலாதோன். நிரஹங்காரனுமாவன்; அதாவது, அஞ்ஞானி சிறந்த வொழுக்கத்தானும் வேதவித்தையானும் அகங்காரத்தையடைவதுபோல அவைகளால் அகங்காரத்தையடையாதவன். ராகத்துவேஷங்களின்றியவனுதலின் சுகதுக்கங்களைச் சமமாகவுடையவன். இதனினே, அவன் க்ஷமையுடையவன், தாடன முதலியவைகளாலும் குரோதத்தையடையானென்க.

(அ-கை.) இப்போது பூர்வ சுலோகத்திற் கூறப்பட்ட நிர்க்குணப் பிரஹ்ம வேத்தாவினுடைய வேறு விசேடணங்களையு மருளிச்செய்கின்றார்.

சு-ம். ஹ ம்தா ஷ்ஃஹ தத ம் யொ ஈ யதாதா ஒர்ஜ நிஷ்ட யஃ।
உயுவிஃ ருதஃஸொமொவ் ஜி யொஃ உத க்ருஃஹ ஸெ வ்ரியஃ॥ (14)

ப-ம். 3 ஹ ம்தா ஷ்ஃ 2 ஹ தத ம் 4 யொ ஈ 5 யதாதா 6 ஒர்ஜ நிஷ்ட யஃ 7 உயி 8 ஸுவிஃ ருதஃஸொமொவ் ஜிஃ 1 யஃ 9 ஸ உக்ருஃ 10 ஹ 11 ஸெ 12 வ்ரியஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எப்போதும் சந்துஷ்டனும், சமாஹிதசித்த முடையவனும், சங்காதத்தை வசம் பண்ணியவனும், திடநிச்சயமுடையவனும், பரமேசுரனிடத்து மனம் புத்திகளை அர்ப்பணஞ்செய்தவனுமாகியவன் எனது பக்தனுவன்; எனக்குப் பிரியனுவன். (14)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எவன் எப்போதுஞ் சந்துஷ்டனுவனே, அதாவது தேக நிலைத்தற்குக்காரணமாகிய அன்னம், ஆடை முதலியவைகள் கிடைக்கினும் கிடைக்காவிடத்துஞ் சந்தோடமுடையவனுவனே. ஈண்டு, 'ஹ தத ம்' (எப்போதும்) என்னும் பதத்தைச் சர்வ விசேஷணங்களோடும் அந்வயம்பண்ணுக. எவன் சர்வதா யோகியாவனே, அதாவது, எப்போதுஞ் சமாஹித சித்தமுடையனே. எவன் நிக்கிரகமுடையனே, அதாவது, தேகேந்திரிய முதலிய கூட்டங்களை வசம்பண்ணியவனே. திடநிச்சயனே: திடம் குதார்க்கிகளால் பேதித்தற்கொணாத ஸ்திரமாகிய, நிச்சயமெனும், அகருத்தா அபோக்தா சச்சிதானந்தாத் துவிதீய பிரஹ்மமே நான் என்னும் ஞானமுடையவனே. அதாவது, திடப்பிரக்ஞன் திடநிச்சயனுவன். நிர்க்குணப்பிரஹ்மமாகிய என்னிடத்தில் சங்கற்ப விகற்பமான மனத்தையும், நிச்சயான்மக புத்தியையும் அர்ப்பணஞ்செய்தவனே எனது பக்தனுவன்; அதாவது, சர்வோபாதிகளுமொழிந்த சுத்தமான அக்ஷராப்பிரஹ்மத்தைத் தனதான்மவடிவமா யறிந்த தத்துவவேத்தாவானவன் எனக்கு எனதான்மவடிவனுதலின் மிகப்பிரியனுவன் என்னுமர்த்தத்தை மேலைச்சுலோகத்து முணர்ந்துகொள்க. (14)

(அ-கை.) இப்போது மீண்டும் அந்தத் தத்துவவேத்தாவினுடைய விசேஷணங்களை யருளிச்செய்கின்றார்.

சு-ம். யஸ்மான்நோத்விஜதே லொகொ லொகான்நோத்விஜதே ச யஃ।
ஹர்ஷாமர்ஷபயோத்வேகைர் முக்தொ யஃ ச மெ ப்ரியஃ॥ (15)

ப-ம். 1 யஸ்மாக் 3 ந 4 உத்விஜதே 2 லொகஃ 7 லொகாக் 8 ந 9 உத்விஜதே 5 ச 6 யஃ 12 ஹர்ஷாமர்ஷபயோத்வேகைர் 13 முக்தஃ 11 யஃ 14 ச 10 ச 15 மெ 16 ப்ரியஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவனினின்றும் இவ்வுலகம் சந்தாபத்தையடைகிறதில்லையோ, எவன் இவ்வுலகத்தினின்றுஞ் சந்தாபத்தையடையானே, அங்

ஙனமே எவன் அர்ஷம், அமர்ஷம், பயம், உத்வேகம் என்பவைகளை விட்டவனே, அத்தத்துவவேத்தாவாகிறன் எனக்கு மிகப்பிரியனுவன். (15)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சர்வப் பிராணிகட்கும் அபயத்தைக்கொடுக்கும் பரமஹம்ச சந்நியாசியினின்று யாதொரு பிராணியும் சந்தாபத்தையடைவ தில்லை; அதாவது, தத்துவவேத்தாவானவன் முக்கரணங்களாலும் யாதொரு பிராணியையும் பீடியான் என்பதாம். அபராதமின்றியே சந்தாபத்தை யுண்டு பண்ணுந் துஷ்டப்பிராணியாகிய வுலகத்தினின்றும் எவன் சந்தாபத்தையடைவ தில்லையோ, அவன் யாண்டும் அத்வைதான்மாவைப் பார்ப்பவனும் பரமகாருணி கனுமானதால் க்ஷமையே சுபாவமாகவுடையவன். எவன் ஹர்ஷம், அமர்ஷம், பயம், உத்வேகம் என்பவைகளை விடுத்தவன். ஆண்டு, இஷ்டவஸ்து லாபமாகவே உரோமஞ்சிலிர்த்தல், கண்ணீர் ததும்பல் முதலியவைகட்குக் காரணமாகியதும், இன்பத்தை யினிதிலக்குவதுமாகிய சித்தவிருத்தி விசேஷம் ஹர்ஷமாம். பிறர் மேம்பாட்டின் சகியாமைவடிவ சித்தவிருத்தி விசேஷம் அமர்ஷமாம். புலி, கள்வர், மாற்றூர் முதலிய அநிஷ்டவஸ்துக்களைக் காண்பதாலுண்டாகும் பீதிவடிவ சித்தவிருத்தி விசேடம் பயமாம். பிராணிகளிலாத ஏகாந்தஸ்தானத்தில் ஒன்றை யுங் கைக்கொள்ளாது தனித்திருக்கப்பட்ட நான் எவ்வாறு பிழைப்பேன்? என்னும் வியாகுலரூப சித்தவிருத்தி விசேடம் உத்வேகமாம். என்னுமிவைகளை விடுத்தவன்; அதாவது, அவன் அத்வைத தரிசியானதால் ஹர்ஷாதிகட்கு யோக்கியனு காமையின் அவைகள் தாமே அவனைவிட்டு விலகிவிடுகின்றன. அதன்பொருட்டு அவனுக்கொரு தொழிலுமின்றும். இது ஸ்மிருதியிலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. யஸ்மாந்நோத்விஜதே லோகோ லோகான்நோத்விஜதே ச யஃ।
ஹர்ஷாமர்ஷபயோத்வேகைர்முக்தோ யஃ ஸ ச மே ப்ரியஃ ॥ (1)

உ-ம். தஸ்ய ஸர்வேஷு பூதேஷு ஸ்வயமாத்மேதி விஜானதஃ।
தத்த்வதோ வேத்தாத்மானம் ப்ரஸன்னாத்மா ந முஹ்யதி ॥ (2)

(பொ-ள்.) தீயாற் கொளுத்தப்பட்ட பஞ்சை மிருக பக்ஷி முதலியவைகள் ஆசிரயாததுபோல, பிரஹ்மவேத்தாவை ராகத்துவேஷ முதலியவைகள் ஆசிரயிப்பதில்லை. உண்ணப்பட்ட விஷம் மந்திர ஔடதங்களின்பலத்தால் ஜீரணமாவது போல, ஞானியினுடைய புண்ணியபாவங்களாகிய கருமங்களனைத்தும் ஒரு கணப்போதில் நாசமாகின்றன என்பதாம். இத்தன்மைத்தான குணமுடையோன் எனது பக்தனுவன். அவன் எனது ஆன்மவடிவனுதலின் எனக்கு மிகப்பிரியனுவன் என்க.

(அ-கை.) அன்றியும்,

சு-ம். அநபேக்ஷஃ ஶுசிர்தக்ஷ உதாஸீனோ கதவ்யதஃ।
ஸர்வாரம்பபரித்யாகீ யோ மத்பக்தஃ ஸ மே ப்ரியஃ ॥ (16)

ப-ம். 2 அநபேக்ஷஃ 3 ஶுசிஃ 4 தக்ஷஃ 5 உதாஸீநஃ 6 கதவ்யதஃ 7 ஸர்வாரம்ப 1 பரித்யாகீ 8 யஃ 9 மஃ 10 மே 11 ப்ரியஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவன் நிரபேக்ஷனும், சுசியும், தக்ஷனும், உதாசீனனும், கதவியதனும், சர்வாரம்ப பரித்தியாகம் பண்ணினவனுமாவனே! அத்தன்மையனை எனது பக்தன் எனக்கு மிகப் பிரியனுவன். (16)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எவன் அனபேக்ஷன்; அதாவது, முயற்சியின்றி இச்சைவயத்தாற் கிடைத்த போகசாதனங்களனைத்திலும் வேட்கையிலாதோன்.

எவன் சுசியாவன்; அதாவது, உள்வெளியெனும் இருவகைச்சௌசமுடையவன்; அவற்றில் நீர், மண் முதலியவைகளால் தேகத்தைக் கழுவுதல் பாகிய சௌசமாம், மைத்திரி, கருணை முதலியவைகளால் அந்தக்கரணத்தை இராகத்துவேஷமுதலிய வைகளின் ரகிதமாகச்செய்தல் ஆந்தர சௌசமாம். எவன் தக்ஷன்; அதாவது, அவசியமாய் அறியத்தக்கதும் செய்யத்தக்கதுமாகிய பொருள்கள் கிட்டில், அவைகளை அறிதற்குஞ் செய்தற்குஞ் சமர்த்தன். எவன் உதாசீனன்; அதாவது, மித்திரன் முதலியோர்களது பக்ஷித்தையும் நிரகணம் பண்ணுதவன். எவன் கதவியதன் அதாவது, யாராகினு மொருதுஷ்டன் அடிக்கினும் பீடைவடிவ விகாரமிலாதோன். எவன் சர்வாரம்ப பரித்தியாகி; ஆண்டு, இவ்வுலக பரவுலக பலன்களைக்கொடுக்கப்பட்ட லௌகிக வைதிக கர்மங்கள் சர்வாரம்பமாம், அதை விடுத்தோனெகிய பரமஹம்ச சந்நியாசியே சர்வாரம்ப பரித்தியாகியாவன். இத்தன்மைத்தான எனது பக்தன் எனதான்மவடிவனுதலின் எனக்கு மிகப்பிரியனுவன் என்பதாம். (16)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். யொ ந ஹ்ருஷ்யதி ந த்வேஷ்டி ந ஶோசதி ந காங்க்ஷதி।
ஶுபாஶுபரித்யாகீ ஭க்திமாந்ஸ மே ப்ரியஃ ॥ (17)

ப-ம். 1 யஃ 2 ந 3 ஹ்ருஷ்யதி 4 ந 5 த்வேஷ்டி 6 ந 7 ஶோசதி 8 ந 9 காங்க்ஷதி 10 ஶுபாஶுபரித்யாகி 12 ப⁴க்திமாந் 11 யஃ 13 ஸஃ 14 மே 15 ப்ரியஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவன் சந்தோஷ விஷாதங்களிலாதோன், சோகேச்சையின்றியவன், புண்ணிய பாவகருமங்களைப் பரித்தியாகம்பண்ணியவன், அத்தன்மைய பக்திமானெனவன் எனக்குப் பிரியனுவன். (17)

(வி-ம்.) ஆண்டுப் பூர்வம் 13-வது சுலோகத்தில் 'ஸஉச்சூஃ வஸுவஃ' எனக்கூறப்பட்ட விசேடணங்களையே இப்போது விரிவாய் அருளிச்செய்கின்றார்.— ஹே அர்ச்சுன! எவன் பிரியாப்பிரிய வஸ்துக்களையடைந்து சந்தோஷ விஷாதங்களையடையாதவன், கிடைத்த பிரிய வஸ்து நீங்குழி எவன் சோகப்படுவதில்லை, எவன் இஷ்டா நிஷ்ட வஸ்துக்களின் சேர்தல் பிரிதல்களை இச்சிப்பதில்லை. இப்போது 'சர்வாரம்ப பரித்தியாகி' என முற்கூறிய விசேடணத்தவர்ணிக்கின்றார்.— 'ஶுபாஶுபரித்யாகீ' என.— அர்ச்சுன! இன்பதுன்பங்களைத்தரும் புண்ணியா புண்ணிய கருமங்களைப் பரித்தியாகஞ்செய்தவன்; அத்தன்மைய பரமேசுரபக்தியையுடைய பிரஹ்மவேத்தாவானவன் எனதான்மவடிவனுதலின் எனக்கு மிகப்பிரியனுவன். (17)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். ஸஃஶத்ரௌ ச மித்ரே ச ததா மாநாவமாநயோஃ।
ஶீதோஷ்ணஸுக²து³꞉கே²ஷு ஸமஃ ஸங்க³விவர்ஜி²தஃ ॥ (18)

ப-ம். 5 ஸஃ 2 ஶத்ரௌ 1 ச 4 மித்ரே 3 ச 6 ததா 7 மாநாவமாநயோஃ 8 ஶீதோஷ்ண 9 ஸுக²து³꞉கே²ஷு 10 ஸமஃ 12 ஸங்க³விவர்ஜி²தஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மற்றும் எவன் சத்துருமித்துருக்களிடத்திற் சமானனும், மானவமானங்களிற் சமானனும், தட்பவெப்ப இன்பதுன்ப முதலியவைகளிற் சமானனும், சங்கமற்றவனும். (18)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வுலகத்தில் அபகாரம்பண்ணும் பிராணி சத்துருவாம். உபகாரம்பண்ணும் பிராணிமித்துருவாம். அவ்விருதன்மையரிடத்துஞ்

சமானன் எவன் அதாவது, தனது பாபபுண்ணியவடிவ பிராரப்த கர்மவசத்தாலே இவ்வுடற்கு அபகாரம் பண்ணுகின்றவன் சத்துருவாகின்றான். உபகாரம் பண்ணுகின்றவன் மித்துருவாகின்றான் என மனத்திலாராய்ந்து அவ்விருவர்களிடத்தும் எவன் சமதிருட்டியனுகின்றான், எவன் இனியவராற் செய்யப்பட்ட பூஜனரூப மானத்திலும், தீயோராற் செய்யப்பட்ட நிந்தைவடிவ அவமானத்திலும் சமானன் அதாவது, அவ்விரண்டானுமுண்டாகும் சந்தோஷ விஷாதங்களை யடையாதவன், பிராரப்த கருமவசத்தாற் கிட்டிய சீதோஷ்ணசுகதுக்க முதலிய துவந்துவதருமங்களில் எவன் சமானன், எவன் சங்கமிலாதோன்; அதாவது, இவ்வுலகத்தில் சேதன சேதனரூபங்களாய் விளங்கும் பதார்த்தங்களனைத்தினுள் இப்பொருள் மிகரமணீயமானது என்னும் சோபனப் பிராந்தியிலாதோன் என்பதாம்.

(அ-கை.) அன்றியும்,

சு-ம். தாயுநிஷாஹுதிஸளரூநீ ஸுந்தாஷ்டோ யெந கெநசித் ।
சுநிகெதஃ ஷ்டிரமதி ஹரூக்திஸாநெந ஸ்திரோ நரஃ ॥ (19)

ப-ம். 1 தாயுநிஂஹாஹுதிஃ 2 ஸளநீ 5 ஸுந்தாஷ்டஃ 3 யெந 4 கெநசித் 6 சுநி கெதஃ 7 ஷ்டிரமதிஃ 8 ஹரூக்திஸாநு 10 ஸ்தெ 11 ஸ்திரயஃ 9 நரஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! நிந்தைஸ்துதிகளிற் சமனும், மௌனமுடையவனும், எவ்வித அன்னவஸ்திரங்களானுஞ் சந்துஷ்டனும், இல்லமிலானும், திரமனத்தோனுமாகிய பக்திமானே எனக்குப் பிரியனுகின்றான். (19)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஒருவருடைய தோடத்தைக்கூறல் நிந்தையாம், ஒருவருடைய குணத்தைக்கூறல் துதியாம், இவ்விரண்டிலுஞ் சமன்; அதாவது, அஞ்ஞானி தனது துதி நிந்தைகளைக்கேட்டு இன்பதுன்பங்களை யடைவதுபோல, தனது துதி நிந்தைகளைக்கேட்டுச் சுகதுக்கங்களையடையாதவன். மௌனி; அதாவது தனது வாக்கிந்திரியத்தை நிக்கிரகம் பண்ணிபவன். அற்றேல், ஹே பகவன்! தனது சரீரயாத்திரா நிர்வாகத்தின்பொருட்டேனும், அவனுக்கு வாக்கின் தொழில் அவசியம் வேண்டற்பாலதன்றே? என்னு மர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.—'சந்துஷ்டோயேந கேநசித்' என. அர்ச்சுன! தனது முயற்சியின்றியே பிராரப்தத்தின் வலியால் கிட்டிய தேகநிலைத்தற்குக் காரணமான எவ்வித அன்னவஸ்திர முதலியவைகளிலேயும் சந்துஷ்டன்; அதாவது, கிடைத்ததற்கதிகமாய் விரும்பாதவன். மௌபிலான்; அதாவது, நியமத்தோடு ஓரிடத்து வசியாதவன். ஸ்திரமதி அதாவது, திரபரமார்த்த சத்திய வஸ்துவிஷயக, மதிபுத்தி விருத்தி, உடையவன்; இத்தன்மைய பக்திமானுகிய வன் எனதான்மவடிவனுதலின் எனக்கு மிகப்பிரியமாவன். ஆண்டுச் சாத்திரத்தில் நிர்க்குணப் பிரஹ்மபக்திக்கு இவ்விலக்கணங் கூறப்பட்டிருக்கிறது:—

ஆ-சு. வநகூடஸ்த மசிந்த்யமஜ விகார்யமசலம் த்ருவம் ।
ஸர்வேந்த்ரியாணாம் வ்யுபரமே யாஹ்யக்ஷரம் வேதவிதோ வதந்தி ॥
தமக்ஷரம் ப்ரஹ்மயோ மஹத் நிர்குணம் உபாஸதே தம்

(போ-ள்.) உலகனைத்திலும் அஸ்திபாதிப்பிரிய ரூபமாய்ப் பரமான்மாவைத் தரிசித்தலே அதனது ஏகாந்தபக்தியாம்; அதாவது, அனன்யபக்தியாம். விபரீத பாவனையின் நீக்கம் முதலிய பயனுற்றதும், விஜாதீயவிருத்தி மறைப்பிலாததுமாகிய பிரஹ்மதேவத்தாவின் பிரத்திக்கபின்ன பரமான்மதேவனிடத்துள்ள அகண்டாகார விருத்திவடிவ பக்தியே, வித்துவானுல் நிர்க்குணப்பிரஹ்ம விஷயக

பக்திவடிவமெனக் கூறப்பட்டிருக்கிறது என்பதாம். இத்தன்மைய பக்தியுடைய பிரஹ்மவேத்தாவையே ஈண்டுப் பகவான் பக்திமான், பக்தன் என்னுஞ் சத்தங்களாற் கூறியருளினர். ஈண்டுப் பகவான் மறித்து மறித்தும் பக்தியை அருளியது அனன்யபக்தியே மோட்சப்பேற்றில் புஷ்கல (சிறந்த) காரணமென்னும் அர்த்தத்தைத் திடமுறுத்துதற்பொருட்டாம். இது சுருதியிலுங் கூறப்பட்டுளது :—

ஆ-சு. யஸ்ய தெவெவராஹக்தியதா தெவெதயாமராள ।
தஸ்தெதெ கதிதாஹ்யர்தாஃவ்காஶதெ ஃஹாத்மநஃ ॥

(போ-ள்.) எவ்வதிகாரிக்குப் பரமான்மாவினிடத்தில் அனன்யபக்தியிருப்பதுபோலவே, பிரஹ்மவேத்தாவாகிய குருவினிடத்திலும் அனன்யபக்தியிருக்கிறதோ அந்த மகாத்துமாவிற்கே வேதங்கூறிய பொருள் இனிது விளங்கும். ()

(அ-கை.) ஆண்டு, 'சுதெஷா ஸவ-ஃஹ்மிதாநாம்' என்பது முதலிய சுலோகங்களால் நிர்க்குணமான அக்ஷரப் பிரஹ்மசிந்தனை பண்ணுஞ் சீவன்முக்த பரமஹம்ஸ சந்நியாசியின் இலக்கணவடிவமும், இயல்பாகவே பெறப்பட்ட அத்துவேஷ்டாத்தன்மை முதலிய தர்மங்களுங் கூறப்பட்டன. வார்த்திகத்தில் ஸ்ரீ சுரேசுராசாரியராலு மிவ்வார்த்தை கூறப்பட்டுளது :—

ஆ-சு. உத்நாதாவவொயஸ்ய ஹ்யதெ ஷ்ரவணாதி உயொமாநாஃ ।
சுயததெதா ஹவஜ்ஞெய வநதாஸா யநாஸ்மிவிணஃ ॥

(போ-ள்.) குருசாஸ்திரோபதேசத்தால் நான் பிரஹ்மசொரூபன் என்னும் ஆன்மஞானமுண்டாகிய பிரஹ்மவேத்தாவிற்கு ஸ்ரீ பகவான் திருவாய்மலர்ந்தருளிய அத்துவேஷ்டிருத்தன்மை முதலிய குணங்கள் பிரயத்தனமின்றியே இயல்பாகவே பெறப்படுவனவாம். எங்ஙனம் முமுட்சுக்களிடத்து அக்குணங்கள் முயற்சியாற் பெறுவனவும், சாதனரூபமுமாகின்றனவோ அங்ஙனம் பிரஹ்மவேத்தாவினிடத்து அக்குணங்கள் பிரயத்தனத்தாற் பெறுவனவும், சாதனரூபமுமன்றும் என்க. இந்த அத்துவேஷ்டிருத்வ முதலிய தருமமே முன்னர்க்கூறப்பட்ட திடப்பிரக்ஞனது இலக்கணரூபமாய்க் கூறப்பட்டது. அக்குணங்களே முயற்சியாற் சம்பாதித்த முமுட்சுக்கட்கு மோட்சசாதனரூபங்களாம் என்னு மர்த்தத்தைப் பிரதிபாதனஞ்செய்து, ஸ்ரீ பகவான் இவ்வத்தியாயத்தைச் சமாப்திசெய்கின்றார்.

சு-ம். யெ தா யஃஃஜ்ஞதபிஃம் யயொக்தம் வயாஃவாஹதெ ।
ஸ்ரஜ்ஞயாநாஃ உதாஸ்ஸா ஹக்தாஹ்தீவ ஜெ வித்யாஃ ॥ (20)

ப-ம். 2 யெ 1 தா 8 யஃஃஜ்ஞதம் 5 ஜ்ஞம் 6 யயா 7 உக்தம் 9 வயாஃவாஹதெ
3 ஸ்ரஜ்ஞயாநாஃ 4 உதாஸ்ஸாஃ 11 ஹக்தாஃ 10 தெ 13 சுதீவ ஜெ வித்யாஃ

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மற்றும் எம்முமுட்சுக்கள் சிரத்தாவான்களாய், பரமேசுரபராயணர்களாய் இந்த முன்னர்க்கூறிய தருமரூப அமிருதத்தைச் சம்பாதிக்கின்றார்களோ! அந்த முமுட்சுக்களாகிய பக்தர்களும் எனக்கு மிகப்பிரியர்கள்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! முன்னர்க்கூறிய சீவன்முக்தரின் வேறான முமுட்சுக்களாகிய சந்நியாசிகள் சிரத்தாவான்களாய்; அதாவது, இந்த அத்துவேஷ்டிருத்துவ முதலிய தருமங்களே மோட்சசாதனம் என்னும் விசுவாசவடிவ சிரத்தையுடையர்களாய், எனது பரர்களாய்; அதாவது, அக்ஷரமும் நிர்க்குணப் பிரஹ்மமுமாகிய நானே பரமமெனும் அடையத்தக்க நிரதிசயகதி எவர்கட்கு அத்தன்மைய எனது பரர்களாய், இந்தப் பூர்வங்கூறிய தர்மரூப அமிருதத்தைச் சம்பாதிக்

கின்றார்கள்: அதாவது, மோக்ஷவடிவ அமிருதத்திற்குச் சாதனமாதலினாலும், அமிருதம்போலச் சுவைத்தற்கு யோக்கியமாதலினாலும் அமிருதரூபமாகியதும், 'சுஷெஷாவவ்ருஹ்மிதா நாம்' என்பது முதலிய வாக்கியங்களாற் கூறப்பட்டதுமாகிய அத்துவேஷ்டிருத்தன்மை முதலிய தருமங்கள் முமுட்சுக்களான் முயற்சியாற் சம்பாதிக்கற்பாலன; அப்பக்தர்கள் அதாவது, நிருபாதிகப் பிரஹ்மமாகிய என்னைப் பஜனபண்ணப்பட்டவர்கள், எனக்கு மிகப்பிரியர்கள் என்னுமிப்பகவான் வாக்கியமானது 'ப்ரியொஹி ஜ்ஞானி நொத்யர்த²மஹம் ஸ ச மம ப்ரியஃ' என முன்னர்க்கூறியவாக்கியத்தாற் குறிப்பித்த அர்த்தத்தின் உபசம்மாரமாம். ஆதலின், இச்சுலோகத்திற் கிப்பொருள்பெறப்பட்டது:—இந்த அத்துவேஷ்டிருத்தன்மை முதலிய தருமரூப அமிருதத்தை, சிரத்தையோடு சம்பாதிக்கப்பட்ட அதிகாரிகள் எனக்கு மிகப் பிரியர்களாதலின், ஞானிகட்குச் சுபாவசித்தமாதலால் இலக்கணவடிவமாயினும் அத்தருமம் தத்துவஞானேச்சையுடையவரும், விஷ்ணுவின் பரமபதத்தையடைய விரும்பியவருமாகிய முமுட்சுக்களால் ஆன்மஞான உபாயரூபமாய் மிக முயற்சியாற் சம்பாதிக்கத்தக்கதாம் என்க. இதனாலிப்பொருள் பெறப்பட்டது.—முன்னர்க்கூறிய சோபாதிக சகுணப்பிரஹ்மோபாசனையின் பரிபக்குவத்தின் பின்னர், நிருபாதிக நிர்க்குணப் பிரஹ்மசிந்தனை பண்ணியவனும், அத்துவேஷ்டிருத்துவ தருமமுடையவனும், இடைவிடாது சிரவணாதிகள் செய்பவனுமாகிய உத்தமாதிகாரிக்கு வேதாந்தவாக்கியார்த்தத்தின் தத்துவ சாக்ஷாத்காரம் அவசியமாயுண்டாம். அதனால் அவனுக்கு அவசியமாய் மோட்சப் பிராப்தியுமாம். ஆதலின், மோட்சத்திற்குக் காரணரூபமாகிய வேதாந்தமகாவாக்கியார்த்தத்தின் அந்நுவய யோக்கிய தத்பதார்த்தவடிவ பரமேசுரன் அதிகாரிகளால் அவசியமாய்ச் சிந்திக்கத்தக்கவன்; என்னு மர்த்தம் உபாசனைகாண்டரூபமாகிய இம்மத்திய ஷட்கத்தாற் சித்தமானது என்பதாம்.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய ஸ்ரீ உத்தவாநந்தகிரி சுவாமிகளின் பூஜ்யபாத சிஷ்யராகிய ஸ்ரீ 'சித்கனானந்தகிரி' ஸ்வாமிகளாலியற்றியருளிய பிரகிருதடீகையெனப் பெயரிய கீதா கூடார்த்ததீபிகையின்,

பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

பதின்மூன்றாவது அத்தியாயம்.

ஓம் ஸ்ரீ கணேசாயநமஃ ஸ்ரீ குருப்யோநமஃ ஸ்ரீ காசிவிஸ்வேஸ்வராப்யாம்நமஃ
ஸ்ரீ சங்கராசார்யேப்யோநமஃ.

ஆண்டு, பூர்வம் முதலாவது அத்தியாயம் முதல் ஆறுவது அத்தியாய மீறுகிய முதலாவது ஷட்கத்தில் துவம்பதார்த்த நிரூபணம் பண்ணப்பட்டது. ஏழாவது அத்தியாயம் முதல் பன்னிரண்டாவது அத்தியாய மீறுகிய இரண்டாவது ஷட்கத்தில் தத்பதார்த்த நிரூபணம் பண்ணப்பட்டது. இப்போது சோதித தத்துவம் பதார்த்தங்களின் அபேதரூப மகாவாக்கியார்த்தத்தைக் கூறுவதும், தத்துவஞானத்தைப் பிரதானமாகவுடையதுமாகிய பதின்மூன்றுவது அத்தியாய முதற்கொண்டு பதினெட்டாவது அத்தியாய மீறுகிய மூன்றாவது

ஷட்கம் ஆரம்பிக்கப்படுகின்றது. ஆண்டுப் பூர்வம் பன்னிரண்டாவது அத்தியாயத்தில் 'தெஷா ஷஹம் ஸஷ்ஷத்ரு ஷுதஸ்ரு ஸம்ஸார ஸாமஸாஹ்வாயி' என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் தம்மாட்டு அதிகாரி ஜனங்களைப் பிறவிக்கடலினின்றுங் கரையேற்றுங் கருத்திருத்தன்மையுளதெனக் கூறியருளினர். அந்த ஆன்ம விஷயக அஜ்ஞானரூப மிருத்துவினின்றுங் கரையேற்றுந்தன்மை ஆன்மஞான மின்றி அமையாததாம். மற்றீரு, 'தரதிமேசாகமாத்மவித்.' தரத்யவித்யாம் விதாம் ஹ்ருதியஸ்மின்னிவேசிதே, என்பது முதலிய சுருதிஸ்மிருதிவாக்கியங்கள் ஆன்மஞானத்தானே அவித்தியாரூப அஜ்ஞான நிவிருத்தியைக்கூறுகின்றன. ஆதலின், எவ்வான்மஞானத்தால் மிருத்யு சம்சார நிவிருத்தியாகின்றதோ, எத்தத்துவ ஞானியாகிய அத்துவேஷ்டிருத்துவாதி குணமுடைய சந்நியாசி பன்னிரண்டாவது அத்தியாயத்திற் கூறப்பட்டனரே! அவ்வான்மஞானம் இப்போது கூறத்தக்கதவசியமாம். அந்தத்தத்துவஞானம் அத்துவிதீயப் பரமான்மாவோடு சீவான்மாபேதத்தையே விஷயப்பண்ணுவதாம்; என்னே, பிறப்பிறப்பு முதலாகிய அனர்த்தங்களனைத்திற்கும் சீவப் பிரஹ்மபேதப் பிராந்தியே காரணமாதலினென்க.

ஷ தெஷாஃ ஸஷ்ஷத்ரு ஸா வொதிய உஹ நா நெவவஷ்யதி।

(போ-ள்.) அத்துவிதீயப் பிரஹ்மத்தின்கண்ணே துவைதபாவத்தைக்காண்பவன் அடிக்கடி பிறப்பிறப்பையடைவன். அத்தன்மைய பேதப்பிராந்தி நிவிருத்தி சீவப்பிரஹ்ம அபேத ஞானமின்றியுண்டாகாது; மற்றீரு, அதனனே நிவிருத்தியாம். இதிலிச் சங்கையுண்டாகின்றது:—நான் சுகி, நான்துக்கி, நான் கர்த்தா நான் போக்தா என்னுமநுபவம் சர்வப்பிராணிகட்குமாமாதலின், இச்சீவான்மா சுகதுக்கமுதலிய சம்சாரமுடையதும் ஒவ்வொரு சரீரத்திலும் வெவ்வேறுமாம். ஒருகால் சர்வ சரீரங்களிலும் ஆன்மா ஒன்றுகிலோ! ஒரு சரீரத்திற் சுகதுக்காநுபமுண்டாகுமிடத்து எல்லாச் சரீரங்களிலும் அந்தச் சுகதுக்காநுபவம் உண்டாதல் வேண்டும். அங்ஙனமின்மையின், ஒவ்வொரு சரீரத்திலும் ஆன்மாவெவ்வேறும். பரமான்மாவோ சுகதுக்கமுதலிய பந்தமற்றதும், ஏகமுமாம். அத்தன்மைய அநேக சம்சாரிகளாகிய சீவர்கட்கு ஏகமான அசம்சாரியாகிய பரமான்மாவோடு அபேதஞ் சம்பவியாது என்னுஞ் சங்கையுண்டாகவே: அந்தச் சுகதுக்கமுதலிய வடிவ சம்சாரமும் வெவ்வேறுதலும் அவித்தியாகற்பித அநான்மவஸ்துவின் தருமங்களேயாம், சீவான்மாவினதன்று; என்னும் விவேசனம் அவசியமாய்ச் செய்யவேண்டும். அதன்பொருட்டுத் தேதேகேந்திரியாந்தக்கரண பிராணனென்பன முதலியவடிவ க்ஷேத்ரத்தினின்றும் வேறுபிரித்து க்ஷேத்ரக்ஞனெனும் சீவான்மாச் சர்வ க்ஷேத்ரங்களிலும் ஒன்றேயாம், நிர்விகாரமாம் என்னுமர்த்தத்தைப் பிரதிபாதிப்பான் இவ்வத்தியாயத்தில் க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞர்களின் விவேசனம் பண்ணப்படுகின்றது. ஆண்டுப் பூர்வம் ஏழாவது அத்தியாயத்தில் ஸ்ரீ பகவாலல் குறிப்பித்தருளப்பட்ட பூமி முதலிய எண்வகையான அபரைப் பிரகிருதியெனும் க்ஷேத்ரத்தையும், சீவவடிவ பரப்பிரகிருதியெனும் க்ஷேத்ரஜ்ஞனையும் வெவ்வேறுய் நிரூபணஞ்செய்பவராய் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக் கருளிச்செய்கின்றார்.

ஸ்ரீ ஹ்மவாநு வாசு.

சு-ம். உஷ்ம ஸாரீரம் கூளஞ்ஜெய க்ஷேத்ர மித்யுஹியதெ। 13-2.
வஸதஜ்ஞா வெதி தம் ப்ராஹுஃ க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வஜ்ஞஃ॥

ப-ம். 2 உஷ்ம 3 ஸாரீரம் 1 கூளஞ்ஜெய 4 க்ஷேத்ரம் 5 உதி 6 யுஹியதெ 7 வஸஜ்ஞ
8 யஃ 9 வெதி 10 தம் 14 ப்ராஹுஃ 12 க்ஷேத்ரஜ்ஞம் 13 உதி 11 தத்வஜ்ஞஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இச்சரீரம் க்ஷேத்திரமெனப்படும், இதை யறிபவன் க்ஷேத்திரக்ஞனெனப்படுவன் என அவ்வுணர்வுடையோரறைவர். (1)

(வி-ம்.) ஹே கௌந்தேய! அதாவது, குந்தி புத்திர! சுரோத்திரமுதலிய பத்திந்திரியங்களோடு கூடியதும், அந்தக்காரணம், ஐவகைப் பிராணன் இவைகளோடு கூடியதுமாகிய இந்த இன்பதுன்ப நுகர்தற்கிடமான சரீரம் க்ஷேத்திரமெனப்படும். க்ஷேத்திர சப்தப்பொருள் கூறப்படுகின்றது:—ஆண்டு, அவித்தையால் ஆன்மாவை க்ஷயம்பண்ணுவதும், வித்தையால் ஆன்மாவை யிரட்சிப்பதும் எதுவோ அது க்ஷேத்திரமெனப்படும். அல்லது, இராகத்துவேஷமுதலிய தோடங்களையுடையன் எதனால் க்ஷயத்தையடைகின்றானே அது க்ஷேத்திரமாம். அல்லது, சமதமமுதலிய சாதனங்களையுடையவனுக்குப் பிறப்பிறப்பாதி அனர்த்தவடிவ க்ஷயத்தினின்றும் இரட்சிப்பது க்ஷேத்திரமாம். அல்லது, எப்போதும் தீபசிகையைப்போன்று தான் நஷ்டமாகின்றது க்ஷேத்திரமாம். அல்லது, சுகதுக்க முதலிய பலோத்பத்தியில் உலகசித்த பூமிரூபக்ஷேத்திரம்போல, ஆசரணைசெய்வது க்ஷேத்திரமாம். இத்தன்மைய இச்சரீரரூப க்ஷேத்திரத்தை எவன் அறிகின்றானே; அதாவது, இதில் நானெனதென்று அபிமானிக்கின்றானே அவன் க்ஷேத்திரக்ஞனெனப்படுவன். கருத்திதுவாம்:—பயிரிடப்பட்ட பயிர்த்தொழிலோன் பூமிவடிவ க்ஷேத்திரபலத்தை நுகர்வதுபோல, இச்சீவனும் இச்சங்காதவடிவ க்ஷேத்திரத்தின் சுகதுக்கமாகிய பலத்தை நுகர்பவனாதலின், இவன் க்ஷேத்திரக்ஞனெனப்படுகின்றன். அற்றேல், ஹே பகவன்! இச்சீவனே க்ஷேத்திரக்ஞனெனக் கூறுவோர்யாவரெனின் அருளிச்செய்கின்றார் 'தத்வதः' என. அர்ச்சுன! இந்த க்ஷேத்திரம் அசத்து சடதுக்கமெனவும், க்ஷேத்திரக்ஞனாகிய ஆன்மா சச்சிதானந்தரூபமெனவும், இவ்விரண்டையும் வேறு பிரித்தறியப்பட்ட விவேகியே இச்சீவான்மாவை க்ஷேத்திரக்ஞனெனக் கூறுகின்றன் என்க. ஈண்டு ஒரு மூலப்புஸ்தகத்தில் 'ஸ்ரீ ஹ்மவாஹ வாஅஉஉம் ஸரீரம் கௌஞ்ஞெய க்ஷேத்ரவித்யு ஹிலீயதே' என்னுஞ் சுலோகத்திற்குப் பூர்வம் அர்ச்சுனனுடைய விஞ்ஞவடிவமான இந்தச்சுலோகமிருக்கின்றது:— (1)

ஸுஜ ஹ உவாச.

ப்ரக்ருதிம் வாஸுதேவெவ க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞ ஏவது।
வேதவித்வித்வி ஹ்யாவி ஜ்ஞானம் ஜ்ஞேயஞ்ச கேஸவ॥

(பொ-ள்.) ஹே கேசவ! பிரகிருதி, புருஷன், க்ஷேத்திரம், க்ஷேத்திரஞ்ஞன், ஞானம், ஞேயம் என்பவைகள் யாவை என அறியவிரும்புகிறேன், தாங்கள் கிருபையோடு இதை எனக்கருளிச்செய்வீர்களாக என்பதாம். ஆனால் இந்தச் சுலோகத்தை ஸ்ரீ பாடியக்காரரே முதல் ஒருரைகாரரும் கொள்ளவில்லையாதலின், இந்தச் சுலோகம் யாரானுமொருவித்துவானால்செய்யப்பட்ட தென்றுணரப்படுகிறது. ஆதலின் இதின்றொடக்கத்தில் எழுதவில்லையென்க. (1)

(அ-கை.) இவ்வாறு தேகேந்திரியாந்தக்கரணமுதலிய வடிவக்ஷேத்திரத்தினும் விலட்சணமான சுவப்பிரகாச க்ஷேத்திரக்ஞனை யருளிச்செய்து, இப்போது க்ஷேத்திரக்ஞனெனனுஞ் சீவனுக்கு அசம்சாரியாகிய பரமான்மாவோடு ஏகத்வரூப பாரமார்த்திக சொரூபத்தை ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். க்ஷேத்ரஜ்ஞ ஹ்யாவி ஸாம் விது வவ்ருக்ஷேத்ரஷ்ஹாரத।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயொர்ஜ்ஞானம் யத்தஜ் ஜ்ஞானம் மதம் மம॥ (2)

ப-ம். 4 க்ஷேத்ரஜ்ஞ: 2 அ 6 சுவி 5 சா: 7 விஜி 3 ஸவ-ஷ்க்ஷேத்ரஜ்ஞ: 1 ஹாரத
8 க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞயோ: 10 ஜ்ஞாநம் 9 யத் 11 தத் 12 ஜ்ஞாநம் 14 ஏதத்
13 ஏவ.

(அ-ம்.) ஹே பாரத! மற்றும் சர்வ க்ஷேத்திரங்களிலுமுள்ள க்ஷேத்திரக்ஞனே நீ அத்துவிதீயப் பிரஹ்மசொரூபமென்றே யுணர்தி. இவ்விரண்டின் ஞானமே எனக்கபிமதமானதாம். (2)

(வி-ம்.) ஹே பாரத! அதாவது பரதவம் சத்துதித்த அர்ச்சுனனே அல்லது, ஆன்மாகார விருத்தி பா வெனப்படும் அதிலெப்போதும் ரமிப்பவனே அல்லது அகண்ட விருத்தியில் எப்போதும் பிரீதியுடைய பாரதனே அதாவது ஆன்ம ஞானத்திற் பிரீதியுடைய அர்ச்சுன! கூறிப்போந்த தேதேகந்திரியாதி சங்காதவடிவ சர்வ க்ஷேத்திரங்களிலும் அதிட்டானரூபமாயிருக்கப்பட்ட ஏகனுகிய க்ஷேத்திரக்ஞன் சுயம்பிரகாச சைதன்யரூபன் நித்தியன் விபு, அவித்தியாகற்பித கர்த்திருத்துவ போக்திருத்துவங்களை யுடையவன் அத்தன்மையனுகிய க்ஷேத்திரக்ஞனை அவித்தியா கற்பிதரூபத்தைவிடித்து நானே பரமேசுரனென்றுணர்தி அதாவது அந்தக்காணமுதலிய சர்வோபாதிரகித பிரத்தியக்கான்மாவாகிய க்ஷேத்திரக்ஞனை அசம்சாரியாகிய அத்துவிதீயப் பிரஹ்மானந்த சொரூபனென்றுணர்தி.

ஆ-சு. சுயஸ் தூவ ஹ, சுஹம் வ ஹாவ்ஹி, தக்வஸவி, வ ஜ்ஞாநஸ் நம்ஹ்ம்வ ஹ।

(போ-ள்.) இச்சீவான்மா பிரஹ்மசொரூபம், நான் பிரஹ்மசொரூபன், அது நீயாகின்றாய் இவ்வானந்தரூபப் பிரக்ஞானமெனுஞ் சீவன் பிரஹ்மசொரூபன் என்பதாம். ஹே அர்ச்சுன! முன்னர்க்கூறிய இந்த க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞர்களுடைய ஞானம்; அதாவது, மாயாகற்பிதமாதலின் இந்த க்ஷேத்திரம் கயிற்றரவுபோல மித்தியாவடிவமாம். இந்த க்ஷேத்திரரூப மயக்கத்திற் கதிட்டானமாதலின் க்ஷேத்திரக்ஞனெனு மான்மாபரமார்த்த சத்தியமாம், என்னு ஞானமே மோட்சசாதனமானதால், ஞானமாமென்பது எனது சம்மதம்; அதாவது, நான் அதையே அவித்தைக்கு விரோதியாகிய பிரகாசரூபமென எண்ணுகின்றேன். இத்தன்மைத்தான ஞானத்திற்கு வேறான லௌகிக வைதிகஞானங்களனைத்தும், அவித்தியாவிரோதிகளாகாமையின் அஞ்ஞானரூபமேயாமென்க. ஈண்டு ஒருவியாக்கியானத்திலோ, 'க்ஷேத்திரக்ஞஞ்சாபி' என்னும் வாக்கியத்திலுள்ள சகாரத்தால் முன்னர்க்கூறிய க்ஷேத்திரக்ஞனையுங் கொள்ளல்வேண்டும்; அதாவது, க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞரூபங்களும் பரமேசுரனுகிய நானேயென்றுணர்தி. ஆண்டு, க்ஷேத்திரக்ஞனெனும் சீவான்மாப் பிரஹ்மசொரூபமென்பதில், முன்னரே சுருதிப்பிரமாணங்கூறப்பட்டது. க்ஷேத்திரம் பிரஹ்மரூபமென்பதில் 'பிரஹ்மைவ இதம்சர்வம்' 'சர்வம்கலு இதம்பிரஹ்ம' என்பது முதலிய சுருதிவாக்கியங்கள் பல பிரமாணமாயுண்டென்க. (2)

(அ-கை.) ஆண்டு, முன்னிரண்டு சுலோகங்களாற் சுருக்கமாய்க் கூறிய அர்த்தத்தை இப்போது விரித்தற்பொருட்டு ஸ்ரீ பகவான் ஆரம்பித்தருளுகின்றார்.

சு-ம். தக்ஷ்க்ஷேத்ரம் யச்ச யாத்ருக்ச யத்விகாரி யதஸ்ச யத்।
ஸ ச யோ யத்ப்ரபாவஸ்ச தத்ஸமாஸேந மே ஸ்ருணு॥ (3)

ப-ம். 1 தத் 2 க்ஷேத்ரம் 3 யத் 4 ச 5 யாத்ருக் 6 ச 7 யத்விகாரி 9 யதஸ் 8 ச
10 யத் 12 ஸஸ் 11 ச 13 ச 15 யத்ப்ரபாவஸ் 14 ச 16 தத் 18 ஸமாஸேந
17 மே 19 ஸ்ருணு.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சரீரமாகிய க்ஷேத்திரம் எவ்வியல்புடையது, எந்த இச்சை முதலிய தருமங்களுடையது, எவ்விந்திரிய முதலிய விகாரமுடையது, எந்த க்ஷேத்திரரூபகாரணத்தால் எக்காரியமுண்டாகின்றது, அந்த க்ஷேத்திரக்ஞன் எத்தன்மையுடையவன், அவனுடைய சொரூபம் எப்பிரபாவமுடையது, என்னு மனைத்தையும் எனது வாக்கியத்தால் சுருக்கமாய்க்கேட்பாய். (3)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! 'உஉஂஸரீரம் கௌஞ்ஜெயக்ஷேத்ரவித்யி ஹியதெ' என முன்னர்க்கூறிய வாக்கியத்தாற் கூறப்பட்ட தேகேந்திரிய அந்தக்காணங்கள் என்பன முதலிய சடவர்க்கரூப க்ஷேத்திரமானது எந்தச் சடதிருசிய பரிச்சின்ன முதலிய சுபாவங்களையுடையது, எந்த இச்சாத்துவேஷ முதலிய தருமங்களையுடையது, எவ்விந்திரிய விகாரங்களையுடையது, எந்தக்ஷேத்திரவடிவ காரணத்தால் எக்காரியமுண்டாகின்றது, அல்லது, 'யத்ஹ்ரயக்' என்னும் வாக்கியத்திற்கு வேறு பொருள்செய்க. அந்த க்ஷேத்திரம் எந்தப் பிரகிருதி புருஷர்களின் சம்யோகத்தால் உண்டானது. எந்தத் தாவரசங்கம முதலிய பேதங்களால் வெவ்வேறானது என்ப. இவ்வளவானே, க்ஷேத்திரத்தின் சொரூபம் விசாரிக்கப்பட்டது. இப்போது க்ஷேத்திரக்ஞனது சொரூபத்தை விசாரிக்கின்றார்:— 'ஸஅ உதி' ஹே அர்ச்சுன! 'ஸதத்ஷ்யா வெத்திதம் வ்யாஹ்ருஃ க்ஷேத்ரஜ்ஞ ஸ்ததஸ்வ்ருஃ' என்னும் வாக்கியத்தால் கூறப்பட்ட க்ஷேத்திரக்ஞனும் தன் சொரூபத்தால் எந்த சுவப்பிரகாச சைதன்ய ஆனந்தசுபாவமுடையது, உபாதியாலாய எந்தச் சக்திரூப பிரபாவமுடையது என்க. இவ்விசடணங்களனைத்தோடுங்கூடிய க்ஷேத்திர, க்ஷேத்திரக்ஞர்களின் சொரூபத்தை எனது வாக்கியத்தாற் சுருக்கமாய்க்கேட்பாய்; அதாவது, கேட்டு நிச்சயம்பண்ணுதி என்பதாம். (3)

(அ-கை.) ஹே பகவன்! பூர்வ சுலோகத்தில் தாங்கள் க்ஷேத்திர, க்ஷேத்திரக்ஞர்களின் சொரூபத்தைச் சுருக்கமாய்க்கேட்பாய் எனத் திருவாய் மலர்ந்தருளினீர். தாங்கள் அவ்வணந் திருவாய்மலர்ந்தருளியது, யாரேனு முன்னர் விரிவாக அதை கூறியிருப்பரேல் பொருந்தும்; என்னை எப்பொருள் முன்னர் விரிவாய்க் கூறப்பட்டதோ அப்பொருளே பின்னர்ச் சுருக்கமாய்க் கூறப்படுகின்றது. முன்னர் விரித்துரையாத அர்த்தத்தைச் சுருக்கிக்கூறல் அமையாது. அந்த க்ஷேத்திர, க்ஷேத்திரக்ஞர்களின் சொரூபத்தை முன்னர் யார்விரித்துக்கூறினர். எவ்வணம் விரித்துக்கூறிய அர்த்தத்தைத் தாங்களிப்போது சுருக்கியருளிச்செய்கின்றீர். என அர்ச்சுனன் சங்கையுண்டாக, ஸ்ரீ பகவான், கேட்போர்களின் புத்தியில் க்ஷேத்திர, க்ஷேத்திரக்ஞர்களின் சொரூபவிஷயகப் பிரீதியை யுண்டுபண்ணுதற்பொருட்டு அச்சொரூபத்தைத் துதித்தருளுகின்றார்.

சு-ம். ஃஷிபிஃ பஹுதா கீதம் சந்தோபிர்விவிதைஃ பृதக்।
ப்ரஹ்மஸூத்ரபதைஶ்சைவ ஹேதுமத்பிர்விநிஶ்சிதைஃ ॥ (4)

ப-ம். 1 ஃஷிபிஃ 2 பஹுதா 3 கீதம் 5 சந்தோபிஃ 4 விவிதைஃ 6 பृதக்
10 ப்ரஹ்மஸூத்ரபதைஃ 7 ச 11 ஏவ 8 ஹேதுமத்பிஃ 9 விநிஶ்சிதைஃ.

3-4

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அந்த க்ஷேத்திர, க்ஷேத்திரக்ஞர்களின் சொரூபத்தை ஸ்ரீ வசிஷ்டர் முதலிய ரிஷிகள் பலவகையாய்க் கூறியிருக்கின்றார்கள். அங்ஙனமே, இருக்கு முதலிய வேதங்களும் பலவகையாய் வெவ்வேறாய்க் கூறியிருக்கின்றன. யுக்தியுடையதும், நிச்சயார்த்தமுடையதுமாகிய பிரஹ்மசூத்திரபதங்களாலும் அச்சொரூபம் பலவகையாய்க் கூறப்பட்டிருக்கிறது. (4)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இந்த க்ஷேத்ர, க்ஷேத்ரக்ஞளின் சொரூபம் ஸ்ரீ வசிஷ்டர் முதலிய ரிஷிகளாலும் யோகசாத்திரத்தில் தாரணை தியானங்களின் விஷயரூபமாய்ப் பலவகையாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இத்துணை கூறியதால் அச்சொரூபத்தில் யோகசாத்திரப் பிரதிபாத்தியத்தன்மை கூறப்பட்டது. பல விதமான சந்தங்களினாலும் அச்சொரூபம் வெவ்வேறாய்க் கூறப்பட்டிருக்கிறது; அதாவது, நித்திய நைமித்திகாமிய கர்ம முதலியவைகளை விஷயம்பண்ணும் இருக்கு முதலிய வேதமந்திரங்களாலும், பிராமணங்களாலும், வெவ்வேறாய் அச்சொரூபம் கூறப்பட்டிருக்கிறது. இத்துணை கூறியதால், ஸ்ரீ பகவான் அச் சொரூபத்தில் கர்மகாண்டப் பிரதிபாத்தியத்தன்மையை அருளிச்செய்தனர். பிரஹ்மசூத்ர பதங்களாலும் அச்சொரூபம் பலவிதமாய்ப் பிரதிபாதிக்கப்பட் டிருக்கிறது. ஆண்டுப் பிரஹ்ம என்னும் பதத்தைச் சூத்ரமென்பதோடும் 'பத' என்னும் பதத்தோடும் அன்னுவயம் பண்ணுவதால் பிரஹ்மசூத்ர பிரஹ்மபத மென இரு வசனங்கள் சித்தமாகின்றன. ஆண்டு, எவ்வாக்கியம் சிறிதளவு வியவ தானத்தோடு பிரஹ்மப்பிரதிபாதகமாமோ, அவ்வாக்கியம் பிரஹ்மசூத்ரமெனப் படும். 'யதோவா இமானி பூதானி ஜாயந்தெ யெந ஜாதானி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபி ஸம் விஸந்தி தத்' பொருள்:—எதினின்று இப்பூதங்களனைத்து முண்டாகின் றனவோ, தோற்றிய பூதங்களனைத்தும் எதனாற் சீவிக்கின்றனவோ, விநாச மாகிய பூதங்களனைத்தும் எதில் இலயத்தையடைகின்றனவோ, அதுவே பிரஹ்மம். என்பது முதலிய பிரஹ்மதடத்த லக்ஷணத்தைப் பிரதிபாதிக்கும் உபநிஷத்வாக் கியம் பிரஹ்மசூத்ரமாம். எவ்வாக்கியம் நேராகவே பிரஹ்மப்பிரதிபாதகமாமோ அவ்வாக்கியம் பிரஹ்மபதமாம். பிரஹ்மத்தின் சொரூபலட்சணத்தைக்கூறும் சத் தியம், ஞானமனந்தம், பிரஹ்மம் என்பது முதலிய உபநிடதவாக்கியங்கள்போல வாம். அத்தன்மைய பிரஹ்மசூத்ரவடிவ வாக்கியங்களும், பிரஹ்மபதரூப வாக் கியங்களும், க்ஷேத்ர, க்ஷேத்ரக்ஞர்களின் சொரூபத்தைப் பலவாறாய்க்கூறி யிருக்கின்றன. அவ்வாக்கியங்கள் எத்தன்மையவாமெனின் ஹேதுவையுடையன; அதாவது, இட்டமான பொருட்குச் சாதகமாகிய பலவிதமான யுக்திகளைக்கூறு வனவாம். அந்த யுக்திகள் இவைகளாம்:—சாந்தோக்கிய வுபநிடதத்தில் உத்தா லகரிஷியானவர் சுவேதகேதுவாகிய புத்திரனைக்குறித்து, ஸதெவ ஸௌம்ய இதமக்ர ஆஸீதெகமெவாத்விதீயம்' ஹே இனியமைந்தனாகிய சுவேதகேதுவே! காணப் படு மிவ்வுலகம் தனது தோற்றத்திற்குப் பூர்வம் சத்துவடிவமாயிருந்தது. அந்தச் சத்து ஒரே அத்துவிதீயமாகவேயிருந்தது எனத்தொடங்கிப் பின்னர் 'ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயெயெதி தத்தேஜோஸ்ருஜத' என வுபதேசித்தனர். பொருள் காணப்படு மிவ்வுலகம் தனது தோற்றத்திற்கு முன்னர் அசத்தாகவேயிருந்தது. அவ்வசத்து அத்துவிதீயமாகவே நிகழ்ந்தது. அவ்வசத்தாகிய காரணத்தால் சத்தாகிய காரியமுண்டானது எனச் சிலவாதிகள் கூறுகின்றனர் என்க. இதனால் நாத்திகமதத்தைக்கூறி அதன்பின் அவ்வுத்தாலக ரிஷியானவர், 'கதமஸதஸஜ்ஜாயெத ஸத்வெவ ஸௌம்யெதமக்ர ஆஸீதெகமெவாத்விதீயம்' ஹே இனியமைந்தனாகிய சுவேதகேதுவே! இந்த நாத்திகர் கூற்று எவ்வாறு பொருந்தும், மற்றே பொருந்தாது. அசத்தாகிய காரணத்தினின்றும் சத்தாகிய காரியம் ஒருகாலு முளவாகாததாலின். ஒருபோது அவ்வணமா மெனினே, அசத்தாகிய மலடிமைந்தனுக்குச் சத்தாகிய புத்திரனு முண்டாதல் வேண்டும்; ஆதலோ, இல்லை என்பது முதலிய பலவிதமான யுக்திகள் பிரதிபாதிக் கப்பட்டன. அந்தப் பிரஹ்மசூத்ர பதவடிவ வாக்கியங்கள் விநிச்சிதங்களாம்; அதாவது, தொடக்கமுடிவுவாக்கியங்களின் ஒற்றுமை வாக்கியத்தன்மையால் ஐய

மிலாப்பொருளைக் கூறுவனவாம். இவ்வாறு பிரஹ்மசூத்திர பதங்களாலும் அந்த க்ஷேத்திர க்ஷேத்திரஜ்ஞர்களின் சொரூபம் பலவகையாய்க்கூறப்பட்டதாம். இத்தனை கூறியதால் ஸ்ரீ பகவான் அந்த க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞர்களின் சொரூபத்தில் ஞானகாண்டத்தாற் கூறப்படுவதாந்தன்மையைத் திருவாய்மலர்ந்தருளினர். இவ்வாறு பூர்வம் ஸ்ரீ வசிட்டர் முதலிய ரிஷிகளாலும் இருக்கு முதலிய வேதங்களாலும் பிரஹ்மசூத்திரபதங்களாலும், மிக விரிவாய்க்கூறப்பட்ட, க்ஷேத்திர, க்ஷேத்திரக்ஞர்களின் உண்மைவடிவத்தை நானுனக்குச் சுருக்கிக்கூறுகின்றேன். அதைக் கேட்பாயாக என்க. அல்லது, 'ப்ரஹ்ம சூத்ரபதைஃ' என்னும் வாக்கியத்தில் பிரஹ்மசூத்திரமாவதெதுவோ அதுவே பதமாம் எனப் பண்புத்தொகை கொள்ளற்பாலது. ஆண்டு, 'சூதெதெயுவொ வாஸீத' இவ்வதிகாரி எவ்விடத்தும் வியாபகமாகிய ஆன்மாவே நான் எனச் சிந்திக்க, என்பது முதலிய வாக்கியங்களோ வித்தியா சூத்திரமெனப்படுகின்றன. இன்னும் 'நலுவெஉயுயா வஸுஃ' தனதான்மாவினின்றும் வேறெனக்கருதித் தேவதையை உபாசிப்பவனை பேததரிசியானவன் பசுப்போல் சிறிதளவு மூணர்ந்திலன் என்பது முதலிய வாக்கியங்களோ அவித்தியாசூத்திரங்களெனப்படும். ஒரு வியாக்கியானத்தில், ப்ரஹ்ம சூத்ரபதைஃ' என்னும் வாக்கியத்தால் 'ஜந்ஹுயுஸ்யதஃ' தோற்றமாதியிதற்கெதனின்.] என்பது முதலிய வேதாந்த சூத்திரங்களைக்கொண்டனர்.

(அ-கை.) இவ்வாறு, க்ஷேத்திர, க்ஷேத்திரக்ஞர்களின் சொரூபத்தை யுணருவதில் அர்ச்சுனனுக்கு உருசியை யுண்டுபண்ணி, இப்போது, ஸ்ரீ பகவான், அவ்வர்ச்சுனனுக்கு இரண்டு சுலோகங்களால் முன்னர் க்ஷேத்திரத்தின் சொரூபத்தை அருளிச்செய்கிறனர்.

சு-ம். உஹாஹ்மதாநயஹம்காரொ புத்திரவ்யக்தவெவ சு ।
இந்த்ரியாணி தஸைகம்சு வம்சு செந்த்ரியகொசராஃ ॥ (5)

இச்சா தெஷாஃஹ்ரூவம் துஃவம் ஸம்காதசெதநா தரிதிஃ ।
வததெ க்ஷேத்ரம்ஸமாஸெந ஸவிகாரமுதாஹ்ருதம் ॥ (6)

ப-ம். 1 உஹாஹ்மதாதி 2 சுஹம் காரஃ 3 புத்திஃ 5 சுவ்யக்தம் வன 4 சு 7 இந்த்ரியாணி 6 தச 9 ஏகம் 8 சு 12 வம்சு 10 சு 11 இந்த்ரியகொசராஃ 13 இச்சா 14 தெஷாஃ 15 ஹ்ரூவம் 16 துஃவம் 17 ஸம்காதஃ 18 செதநா 19 தரிதிஃ 20 வதத 23 க்ஷேத்ரம் 22 ஸமாஸெந 21 ஸவிகாரம் 24 உதாஹ்ருதம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஐந்துமாபூதங்கள் அகங்காரம் புத்தி அவ்வியக்தம் சுரோத்திர முதலிய பத்திந்திரியங்கள் மனமொன்று சத்த முதலிய ஐவகை விடயங்கள் இச்சை துவேஷம் சுகம் துக்கம் சங்காதம் சேதனதிருதி விகாரமுடைய இவ்வனைத்தும் சுருக்கமாய் க்ஷேத்திரரூபமெனச் சொல்லப்படுகின்றன.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! மண்ணுதி ஐவகைமாபூதங்கள் அவற்றின் காரணரூப அபிமானலட்சணமாகிய அகங்காரம் அதன் காரணவடிவ நிச்சயலட்சணமகத்துவமெனும்புத்தி அதன் காரணவடிவ முக்குணவடிவமான பிரதானரூப அவ்வியக்தம். அது எல்லாவற்றிற் குங்காரணமேயாகுமன்றி ஒன்றிற்குங் காரியமாவதில்லை இந்தமாபூத முதற்கொண்டு அவ்வியக்தமீறாயது எண்வகைப்பிரகிருதியெனக்கூறப்படுகின்றது. இப்பொருள் சாங்கியமதத்தைத்தழுவியதாம். வேதாந்தமதத்தைப்பற்றிப் பொருள் கூறுவாம். ஆண்டு, அவ்வியக்தமெனுஞ் சப்தத்

விருத்தி யுக்த அநுபவத்தில் காரணமெனப்படுகின்றனனென்பதாம். ஒரு வியாக்கியானத்திலோ 'காய-ஃகரண கதா-ஃகெவ' என்னுஞ் சுலோகத்திற்கு இவ்வர்த்தஞ்சொல்லப்பட்டிருக்கின்றது. அதுவருமாறு :—அந்த கேஷேத்திரக்ஞ புருஷனது காரியகாரணத்தன்மைகளிலும் கருத்திருத்தன்மையிலும் அம்மாயாவடிவப் பிரகிருதியே அப்புருஷனோடு தாதான்மியபாவத்தையடைந்து காரணமாகின்றது. தீயோடொற்றுமைத்தன்மையடைந்த இரும்பு அத்தீயின் நாற்கோண முதலிய வைகட்குக் காரணமாவதுபோல அப்புருஷனை டொற்றுமையையடைந்த அம்மாயாவடிவப் பிரகிருதியே அப்புருஷனது காரியத்தன்மையிலும் காரணத்தன்மையிலும் கருத்திருத்தன்மையிலுங் காரணமாம். இங்ஙனமே, அந்தப் பிரகிருதியின் இன்பத்துன்பங்களை நுகருவதில் அந்த கேஷேத்திரக்ஞனாகிய புருஷனே அந்தப் பிரகிருதியில் தனதாபாசவடிவச் சாயைப்பிராப்திசெய்து காரணனாகின்றான். தீயானது இரும்பில் தனது சாயையையடையச்செய்து இரும்பின்தாக கருத்துருத்தன்மையிற் காரணமாகின்றதேபோல, அந்த கேஷேத்திரக்ஞவடிவ புருஷனும் பிரகிருதியில் தனது சாயையை அடைவித்து அதனது இன்பத்துன்ப போக்திருத்தன்மையிற் காரணனாகின்றான். அதைக்காட்டுதும்:—காரியத்தன்மை, காரணத்தன்மை, கருத்திருத்தன்மை என்னும் மூன்றும் உண்மையில் பிரகிருதியின் விகாரவடிவ தேகேந்திரியமதிகளின் தருமங்களாயினும் சேதனமாகிய ஆன்மாவின்கண் ஆரோபிக்கப்படுகின்றன. எங்ஙனம் நான் வெள்ளையன், நான் இம்மனுடன்புதல்வன், நான் குருடன், நான் செவிடன், நான் கருத்தன் எனத் தேக முதலியவைகளின் காரியமாகிய தருமங்கள் சேதனமாகிய ஆன்மாவின்கண் ஆரோபிதமாய்ப் பிரதீதியாகின்றன. அன்றியும், அந்தச் சேதனான்மாவின் ஆபாசரூப சாயையைப்பெற்ற புத்தியும் நான் சேதனத்தன்மையுடையோன் நான் சுகதுக்காதிகளை உணருகின்றேன் என, சேதனான்மாவின் தருமங்களைத் தன்மாட்டபிமானிக்கின்றது. இவ்வாற்றால், பிரகிருதி புருஷர்களிடத்துப் பரஸ்பரதருமாத்தியாசமே இச்சம்சார காரணமெனச் சித்தமாகின்றது. இத்துணைகூறியதால் சாங்கியநூலார் கேவலம் புருஷனிடத்தே போக்தாத்தன்மையைக் கொண்டதும் மறுக்கப்பட்டதென்றுணர்க. ஒருபோது அவ்வாறு கோடாது பிரகிருதிக்குக் கருத்துருத்தன்மையும் புருஷனுக்குப் போக்திருத்தன்மையுங் கொள்ளினோ, கருத்திருத்தன்மை போக்திருத்தன்மைகட்கு ஓதிகரணமென்பதமையாது; மற்றோ, வெவ்வேறதிகரணமென்பது சித்தமாம்; அது முற்றுமுரணும். அன்றியும் போக்தாவாகிய புருஷனிடத்து நிருவிகாரத்தன்மையும் சித்தியாது என்க. (20)

(அ-கை.) ஹே பகவன்! 'வ்ரூஷ வ்வஹ்ரி வாதாம் ஹொகூகெவ ஹெதூரூஅயதே' என்னும் வாக்கியத்தில் முன்னர்த் தங்களால் கேஷேத்திரக்ஞனெனும் புருஷனிடத்துச் சுகதுக்கபோக்திருத்துவ சம்சாரித்தன்மை கூறப்பட்டது. அந்தப் புருஷனுடைய சம்சாரித்தன்மையில் ஒரு நிமித்தமுண்டா? இல்லையா? யாதொரு நிமித்தமுமின்றி அப்புருஷனிடத்துச் சம்சாரித்தன்மையைக் கொள்ளினோ, முக்திகாலத்திலும் அவனிடத்துச் சம்சாரித்தன்மையாதல் வேண்டும். இத்தோடத்தை நீக்குதற்பொருட்டு அவனுடைய சம்சாரித்தன்மையில் யாதானுமொரு நிமித்தங்கொள்ளற்பாலதாம். அந்நிமித்தம் யாதென்றருச்சுனன் வினவ ஸ்ரீ பகவான் அதை அருளிச்செய்கின்றார்.

சு-ம். வ்ரூஷ வ்ரகூதிஷ்வோ ஹி ஹ்ரூம்கெவ்ரகூதிஜாஸ்ரூணாஸு।
காரணம்ரூணஸம்மொஹ்யஸ்ய ஸுஸதெஸ்ஸாஸதிஜஸ்ரூஸ்ரூ ॥ (21)

ப-ம். 1 வ்ரூஷ 2 வ்ரகூதிஷ்வ 3 ஹி 6 ஹ்ரூம்கெ 4 வ்ரகூதிஜாஸு 5 ம்ரூணாஸு 10 காரணம் 9 ம்ரூணஸம்மஹ 8 ஸுஸ்ய 7 ஸதஸதெஸ்ஸாஸதிஜஸ்ரூஸ்ரூ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இந்த க்ஷேத்திரக்ஞ புருஷன் மாயாவடிவப் பிரகிருதியிலிருந்தே பிரகிருதி ஜன்னிய சுகதுக்காதி குணங்களைப்போகிக்கின்றான்; ஆதலின் சத்து அசத்து யோனிசன்மங்களில் இப்புருஷனுக்கு முக்குணவடிவப் பிரகிருதியோடுள்ள தாதான்மியமே காரணமாம். (21)

(வி-ம்) ஹே அர்ச்சுன! இந்த க்ஷேத்திரக்ஞனெனும் புருஷன் பிரகிருதியினிலேத்தவனகியே; அதாவது, மாயாவடிவப் பிரகிருதியோடு மித்தையான தாதான்மியத்தையடைந்தே அந்தப் பிரகிருதியிலுண்டாகிய இன்பதுன்பங்களை நுகர்கின்றான்; அதாவது, அந்தக்காண விருத்தியால் அவ்வின்பதுன்பங்களை அநுபவிக்கின்றனதலின், அந்தப் பிரகிருதி சன்ய சுகதுக்கங்களை நுகருதற்கிடமான சத்து அசத்து சதசத்து யோனிகளில் சன்மத்தையடைகின்றான் அதில் இவனுக்கு குணசங்கமேகாரணமாம்; அதாவது, முக்குணவடிவ மாயாரூபப் பிரகிருதியில் அவனுக்குள்ள தாதான்மியாபிமானமே காரணமாம். அஃதின்றிய சங்கனுக்கியல்பாகவே போக்திருத்வம் பொருந்தமாட்டாது. அவற்றுள் இந்திரன் முதலிய தேவதா சரீரங்கள் சத்துயோனியிற்றோன்றினமையின் அதில் சாத்துவிக இஷ்டபலமே நுகாப்படுகின்றது. பசு முதலியவைகள் அசத்துயோனியிற் றோன்றினமையின் அவைகளில் தாமத அனிஷ்ட பல்மே நுகரப்படுகின்றது. அந்தணர் முதலிய மநுடத்தேதகமோ தருமா தருமமிசிரத்தாலானமையின் சத்தசத்து யோனியிற் சன்மமாமாதலின் அதில் இராசத இஷ்டா நிஷ்டபலம் நுகரப்படுகின்றமதன்க. அல்லது, 'மாணஸம்மஃ' என்னும் வாக்கியத்திற்கு வேறு பொருள் செய்யவேண்டும்:—இன்பதுன்ப மோகவடிவ சப்த முதலிய விடயவடிவ குணங்களில் இவனுடைய அபிலாஷாவடிவ சங்கம் ஆம், எது சாத்திரத்திற்காமமெனக் கழறப்படுகின்றதோ; அத்தன்மைய குணசங்கமே இவனுடைய சத்த சத்துயோனி ஜன்மங்களிற் காரணமாம். இது சுருதியிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. ஸயயோகா ஸொஹவதிதக்ஷ கூதா ஹழவதி யக்ஷ கூதா ஹழவதி।
தத்தஉழகாரதெ யத்தஉழகாரதெ தஉஹிஸம்வஉயதெ॥

(பொ-ள்.) அப்புருஷன் எப்பொருள் விடயக அபிலாஷாவடிவ காமமுடையனகின்றனனே அதே வஸ்து விடயக நிச்சயமுடையனகின்றன்; எப்பொருள் விடயக நிச்சயமுடையனகின்றனனே அப்பொருளை யடைதற்பொருட்டுக் கருமத்தைச் செய்கின்றன்; எப்பொருளை யடைதற்பொருட்டுக் கருமத்தைச் செய்கின்றனனே அப்பொருளையே அடைகின்றன் என்பதாம். இப்பட்சத்திலும் அச்சம்சாரத்தின் மூலகாரணத்தன்மையால் அந்த முக்குணவடிவப் பிரகிருதி தாதான்மியாபிமானமே கொள்ளற்பால்தாமென்க. ஒரு வியாக்கியானத்திலோ 'வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸுதுர்லஹஸ் ஸ மஹாத்மா' என்னும் வாக்கியத்திற்கு இவ்வர்த்தஞ் செய்யப்பட்டிருக்கின்றது, தேதகேந்திய மனம் என்பவைகளின் சங்காதம் பிரகிருதியாம் அத்தன்மைய பிரகிருதியிற்றாதான்மியத்தையடைந்தே இப்புருஷன் அப்பிரகிருதி சன்ய இன்பதுன்ப மோகவடிவ குணங்களை நுகர்கின்றன், அப்பிரகிருதியிற்றாதான்மிய மடையாத சுழுப்தி மூர்ச்சை சமாதி முதலிய காலங்களில் இவன் அச்சுகதுக்க முதலியவைகளை யடையான், ஆதலின்; அச்சுகதுக்க முதலியவைகள் கேவலம் உபாதியின்கண்ணே இருப்புனவாம்; அவ்வுபாதியின்றிய விடத்து அச்சுகதுக்க முதலியவைகள் தோற்றுவென்னு மர்த்தஞ்சித்தமாம்: இதுசுருதியிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. சூதெஜ்ஜிய உநாயாகம் ஹொகெதயாஹா உநீஷிணஃ।

(போ-ள்.) தேகசுகோத்திர முதலிய இந்திரியங்களோடும் மனதோடும் பொருந்தியே இவ்வான்மாப் போக்தாவாகின்றது எனத் தத்துவ வேத்தாக்கள் கூறுகின்றார்கள். இந்தச்சுருதி தேகஇந்திரியமன சம்பந்தத்தானே ஆன்மாவினிடத்துப் போக்தாத்தன்மையைக் காண்பிக்கின்றது, கேவல சுத்தான்மாவில் அப்போக்திருத்தன்மையை நிடேதிக்கின்றது. ஒரு வியாக்கியானத்திலோ 'வா ஈஷஃ வ்ருகூ கிலொஹி' என்னுஞ் சுலோகத்திற்கு இவ்வர்த்தஞ் செய்யப் பட்டிருக்கிறது: தேதேகந்திரியமன முதலிய சடப்பொருள்களின் சங்காதவடிவப் பிரகிருதியைப் பொருந்தியே வித்துவான் அல்லது அவித்துவான் அப்பிரகிருதி சன்ய சுகதுக்கங்களைப் பொதுவாகவே அநுபவிக்கின்றன். இது பிரமசூத்திரத் தில் ஸ்ரீ பாடியக்கார பகவானாலுங் கூறப்பட்டிருக்கிறது. 'பலாஹி ஸ்ருவிபொ ஷாத்.' விவகாரகாலத்தில் வித்துவான் பசு முதலியவைகளோடு துல்யமாகின் றன். அதாவது பசு முதலியவைகள் இட்டாநிட்ட வஸ்துக்களைப் பார்த்துப் பிரவிருத்தி நிவிருத்திகளை அடைவனபோன்று அவ்வித்துவானும் இஷ்டாநிஷ்ட வஸ்துக்களைப்பார்த்துப் பிரவிருத்தி நிவிருத்திகளையடைகின்றனென்பதாம். அற் றேல் ஹே பகவன்! பிரகிருதியைப் பொருந்தியே அப்பிரகிருதியாலுண்டாகிய சுகதுக்க முதலிய குணங்களை யநுபவிப்பதில் வித்துவான் அவித்துவான்களைச் சமமென்றே கொள்ளிலோ அவ்வித்துவான் முக்தனாகின்றதுபோல அவ்வவித்து வான் முக்தனாகாதனென்னே? அங்ஙனமே அவ்வவித்துவான் பத்தனாயிருப்பது போல அவ்வித்துவானும் பத்தனாகாதனென்னே என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'காரணம் குணஸம்யொகஸ்ய ஸதஸ தொ நிஜஜன்ம' ஹே அர்ச்சுன! தேதேகந்திரிய விடயவடிவ குணங்களில் இப்புருஷனுடைய சங்கமாம் அதாவது இது நான் இஃதென்னுடையது என்னும் அகங்கார மமகாரரூப அபினிவேசமாம் அதுவே இவனுடைய சத்தசத்து யோனி சன்மங்களிற் காரணமாம், ஆண்டு வித்துவானிடத்திலோ அந்தச் சன்மகாரண குணசங்கமின்மையின் அவன் சன்மமுதலிய பந்தத்தையடையான். அவித்துவான் புருஷனிடத்து அந்தச் சன்மகாரணரூப குணசங்கமிருத்தலின் அவன் முக்தனா கான்; இதிற்றிருட்டாந்தம், ஒரு புருஷனுடைய தேகத்தில் பிசாசு பிரவேசித் திடின் அத்தேகத்தில் பிசாசின் சம்பந்தமும் அத்தேக சுவாமியாகிய சீவனுடைய சம்பந்தமும் சமானமாயினும்; அந்தப் பிசாசு அத்தேகாபிமானத்தைப் பூண் டிருக்குங்கால் அப்பிசாசே அத்தேகபீடையால் பீடிக்கப்படுகின்றது; தேக பதியாகிய சீவனல்லன், தேகபதியாகிய சீவனே அத்தேகாபிமானத்தைப் பூண்டி ருக்குங்கால் அத்தேக பீடையால் அத்தேகபதியாகிய சீவனே பீடிக்கப்படுகின்றனன் அப்பிசாசன்று; இவ்வாறே அகங்கார மமகாராபிமானரூப சங்கத்தின்கண்ணே பந்தப்படுத்துந்தன்மை விளக்கமாய்க் காணப்படுகின்றது சமீபித்திருக்குந் தன் மையில் அது காணப்படவில்லையாதலின் வித்துவான் அவித்துவான்களிடத்துத் தேகசம்பந்தஞ் சமமாயினும் அகங்கார மமகாராபிமானவடிவ சங்கம் சங்கமின் மைகளாற் செய்யப்பட்ட அவ்விரண்டிலும் மிக விசேடத்தன்மையுண்டென்க.(21)

(அ-கை.) ஆண்டுப் பூர்வ சுலோகத்தில் பிரகிருதியின் மித்தியா தாதான்மி யாத்தியாசத்தானே புருஷன் சம்சாரியாகின்றனன் அஃதின்றி உருவத்தால் அஃ தின்றியவனே யாவன் என்பது கூறியருளப்பட்டது; இப்போது அந்த கேவலத்தி ரக்ஞனெனும் புருஷனுக்கு எத்தன்மையது உண்மைவடிவம் எவ்வடிவத்தில் சம் சாரத்தை யேற்றுக்கொள்வதில்லை என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அவனுடைய சொரூபத்தை நேரே காண்பித்தருளிச்செய்கின்றார்.

சு-ம். உபத்ரஷ்டானுமந்தா ச ஹர்தா போக்தா மஹேச்வரஃ।
பரமாத்மேதி சாப்யுக்தோ தேஹேஸ்மின் புருஷஃ பரஃ॥ (22)

ப-ம். 5 உவஜ்ஷா 7 சுஸ்ஜனோ 6 அ 8 ஹத்ஸா 9 ஹொத்தா 10 ஸஹஸ்ரஃ 12 வர
ஸாதா 13 ஜதி 11 அ 14 சுவி 15 உக்தஃ 2 ஹெஹே 1 சுஷ்டு 3 வ்ருத்ரக்னஃ
4 வரஃ.

(அ-ம்) ஹே அர்ச்சுன! இப்புருஷன் இத்தேகத்திலிருப்பினும் சர்வத்தினும் மேலுறுவன். ஆதலின், இவன் உபதிருஷ்டாவெனவும், அனுமந்தாவெனவும், பர்த்தா எனவும், போக்தாவெனவும் மஹேசுரனெனவும், பரமாத்மாவெனவும் சுருதியிற் கூறப்படுகின்றான். (22)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அந்த மாயாவடிவப் பிரகிருதி பரிணமமாகிய இத்தேகத்தில் சீவரூபமாயிருப்பினும் இந்த க்ஷேத்திரக்ஞனெனும் புருஷன் பரனுவன், அதாவது, அப்பிரகிருதி சன்யகுண சம்பந்தங்களற்றவனும் தனது வடிவத்தால் உண்மையில் அசம்சாரியுமாவன். இப்போது அவனுடைய எதார்த்த அசங்கத்தன்மையில் ஸ்ரீ பகவான் உபதிருஷ்டா அனுமந்தா, பர்த்தா, போக்தா, மஹேசுரன், பரமான்மா என்னும் அறுவகை ஏதுகர்ப்ப விசேடணங்களை அருளிச்செய்கின்றார். 'உவஜ்ஷா ஜதி' ஹே அர்ச்சுன! அந்த க்ஷேத்திரக்ஞனெனும் புருஷன் எத்தன்மையனெனின் உபதிருஷ்டாவாவன்; அதாவது, யக்ஞவடிவ கருமசித்தியின்பொருட்டு இருத்துவிக்கு யஜமானர்களுடைய சமீபத்திலிருக்கும் மேலுறுவன் தான் அந்தயாகாநுகூலத்தொழிலிலாதாயினும் யஞ்ஞவித்தையிற் குசலனெனதால் அந்த இருத்துவிக்கு யஜமானர்களின் தொழிலிலுள்ள குணதோடங்களைப் பார்க்கின்றான். அதுபோல இந்த க்ஷேத்திரக்ஞனெனும் புருடனும் தேதேகந்திய முதலியவைகளின் வியவகாரங்களில் தான் தொழிலிலாதேனும் அவைகட்கு விலட்சணனுமாகி அந்த வியாபாரமுடைய தேதேகந்திரியாதிகளின் சமீபத்திலிருந்து பார்த்துக்கொண்டிருக்கின்றான். அவன் அவைகளைப்போலக் கருத்தனகிலன். ஆதலின், இவ்வான்மா உபதிருஷ்டாவெனப்படுகின்றது.

ஆ-சு. யதத்ர கிஞ்சித்ஸ்யாத்ய நநாமதவேத நஹவத்யஹம்மமாஹ்யயம்வா
ஸுஷஃ।

(போ-ள்.) இவ்வான்ம தேவனகிய புருடன் அந்த நனவு கனவு முதலிய அவத்தைகளில் எவ்வெப்பொருளைப்பார்க்கின்றானே அவ்வப்பொருளோடு சம்பந்தமுடையனகான். இவ்வான்மா அசங்கனதலின் என்பதாம். அல்லது தேகம் சட்சு, மனம், புத்தி, ஆன்மா என்னும் ஐந்து திருஷ்டாக்களுள் பாகியமான தேகாதி நான்கு திருஷ்டாக்களை நோக்க அவ்வியவகித திருஷ்டாவாகிய ஆன்ம புருஷன் உபதிருஷ்டாவெனப்படுகின்றான். ஆண்டு, உபதிருஷ்டா என்னும் வாக்கியத்திலுள்ள உப என்னுஞ் சப்தத்திற்கு அண்மைபொருளாம், வியவதானமின்றிய அத்தன்மைய அர்த்தம் பிரத்தியக்கான்மாவின்கண்ணே பொருந்துகிறது. வேறொருனென்மப்பொருளிலன்று. இத்தனை கூறியதால் ஸ்ரீ பகவான் இவ்வனுமானங் குறிப்பித்தருளினர். ஆன்மா, தேதேகந்திரிய முதலியவைகட்கு வேறும், உபதிருஷ்டாவானதால், யாகத்தின் உபதிருஷ்டா யாகத்தின் இருத்துவிக்கு யஜமானன் இவர்களின் வேறுதல்போல. மற்றுமெத்தன்மையனெனின் அந்த க்ஷேத்திரக்ஞனெனும் ஆன்மபுருஷன் அனுமந்தாவாவன்; அதாவது, தேதேகந்திரிய முதலிய பிரவிருத்திகளில் தானப்பிரவிருத்தனையினும் பிரவிருத்தன்போல அண்மைமாத்திரத்தானே அவைகட்கனுகூலனெனதால் அவன் அனுமந்தாவெனப்படுகின்றான். அல்லது, தத்தம் வியாபாரத்திற் பிரவிருத்தித்த தேதேகந்திரியாதிகளை ஒருபோதும் தமது வியாபாரத்தினின்றும் நிவிருத்தியாத அவைகளின் சாட்சியாகிய புருஷன் அனுமந்தாவெனப்படுகின்றான்.

ஆ-சு. சுத்ரஜ்ஞ ஏவாக்ஷீ அ உவஉ்ஜ்ஷாந்ர ஏஜ்ஷாந்ர ஏவெஷ சூத்ர ।

(பொ-ள்.) இவ்வான்மதேவர் அநுதிருஷ்டாவும் சாட்சியும் உபதிருஷ்டாவும் அனுமந்தாவுமாவர் என்பதாம். இத்துணை கூறியதால் ஸ்ரீ பகவான் இவ்வநுமானத்தைக்குறிப்பித்தருளினர். ஆன்மா, தேதேகேந்திரியாதிகட்கு வேறும், அனுமந்தாவானதால், விவாதம் பண்ணும் புருஷர்களினும் தடத்த புருஷன் வேறுதல்போல என்பதாம். மற்றுமெத்தன்மையனெனின் அந்த கேஷேத்திரக்ஞனெனும் புருஷன் பர்த்தாவாவன்; அதாவது, சைதன்யா பாசத்தோடுகூடியதும் சங்காதபாவத்தை யடைந்ததுமாகிய தேதேகேந்திரிய மநோபுத்திகளை அவன் தனது சத்தானும் ஸ்புரணத்தானும் தாரணம்பண்ணுவோனும் போஷணம் பண்ணுவோனுமாவன் என்பதாம். இத்துணை கூறியதால் ஸ்ரீ பகவான் இவ்வநுமானத்தைக் குறிப்பித்தருளினர். ஆன்மா தேதேகேந்திரியாதிகளின் வேறும், பர்த்தாவானதால், புத்திரன் முதலியோர்களைப் பாலிக்கும் பிதா அவர்களின் வேறுதல்போல என்பதாம். மற்றுமெத்தன்மையனெனின் அந்த கேஷேத்திரக்ஞனெனு மான்மாப் போக்தாவாம். அதாவது, புத்தியின் சுகதுக்க மோக்கவடிவ விருத்தி விசேடங்களைச் சொரூப சைதன்யத்தால் பிரகாசித்து இவ்வான்மதேவர் நிர்விகாரியாகவே அவைகளை விளக்குபவராவர். இத்துணை கூறியதால் ஸ்ரீ பகவான் இவ்வனுமானத்தைக்குறிப்பித்தருளினர். ஆன்மா, புத்தி முதலியவைகளினும் வேறும், போக்தாவானதால் தேவதத்தனெனும் போக்தாவாகிய புருஷன் அன்ன முதலிய பதார்த்தங்களினும் வேறுதல்போல என்பதாம். மற்றுமெத்தன்மையனெனின் அந்த கேஷேத்திரக்ஞனெனும் ஆன்மபுருஷன் மகேசுரனுவன். ஆண்டு, மகானுகிய ஈசுரன் மகேசுரனுவன். ஆண்டு, எல்லாவற்றின் ஆன்மவடிவமானதால் அந்த கேஷேத்திரக்ஞ புருஷன் மகான் எனப்படுகின்றன். சுவதந்திரனுதலின் ஈசுரனெனப்படுகின்றன். அல்லது, காந்தக்கல்லின் அண்மையால் இரும்பு சேஷ்டிப்பதுபோல எதனண்மையால் இப்புத்தி முதலிய சர்வ சடப்பொருள்களும் பலவகையாய்ச் சேஷ்டிக்கின்றனவோ அந்த கேஷேத்திரக்ஞனென்னும் ஆன்மா ஈசுரனெனப்படுகின்றன்.

ஆ-சு. உஹதோஹீயாநும் ஈஶ்வரோநா ஹ்யுதஹவ்யஹ்ய ।

(பொ-ள்.) இவ்வான்மதேவர் வானுதி மகான் (பெரிய) பொருள்களினும் மிகுந்த மகானும் சென்றவரும் நிகழும் சர்வ வுலகங்களையும் பரிபாரிப்பவன் ஈசானனுமாவன் என்பதாம். இத்துணை கூறியதால் ஸ்ரீ பகவான் இவ்வனுமானத்தைக் குறிப்பித்தருளினர். ஆன்மா, பிரகிருதி அதன் காரியங்களினும் வேறுதற் குரியதாம், மகேசுரனுதலின்; மாராஜன் தனது பிரஜைகளினும் வேறுதல்போல என்பதாம். மற்றுமெத்தன்மையனெனின் அந்த கேஷேத்திரக்ஞ புருஷன், சுருதியிற் பரமான்மாவெனுஞ் சப்தத்தாற் கூறப்படுவோன்; அதாவது, அவித்தியாவசத்தால் ஆன்மத்தன்மைரூபமாய்க் கற்பிக்கப்பட்ட தேகமுதற்கொண்டு புத்தியீறுகிய சடப்பொருளனைத்தினும் உத்கிருஷ்டமானது பரமெனப்படும். அத்தன்மைய கூறிப்போந்த உபதிருஷ்டாத்தன்மை முதலிய விசேடணங்களையுடைய ஆன்மா, பரமான்மாவெனப்படும். இதை 'உதஃ வாஸுஷ்ரூயஃ வாஸாதேதய்ஸாஹ்ரு தஃ' என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் தாமாகவே மேலருளிச்செய்வார். இத்துணை கூறியதால் ஸ்ரீ பகவான் இவ்வனுமானத்தைக் குறிப்பித்தருளினர். ஆன்மா, தேதேகேந்திரியாதிகளினும் வேறும், பரமான்மாவானதால் எது அங்ஙனமன்றே, அது பரமான்மாவுமன்றும்; தேதேகேந்திரிய முதலியவைகளைப்போல என்பதாம். ஒரு வியாக்கியானத்திலோ 'உவஉ்ஜ்ஷாந்ரஉதாஅ' என்னுஞ் சூலோகத்திற்கு இவ்வர்த்தஞ் செய்யப்பட்டிருக்கிறது:—ஆண்டுப் பூர்வம். 'ஸ அயொயகூ வ்ரஹாவஜ்ர' என்னும் வாக்கியத்தால் கேஷேத்திரக்ஞ கேஷேத்திரக்ஞனது பிரபாவங்களைக்

கூறுவதற்குப் பிரதிக்ஞை செய்யப்பட்டது. கேஷித்ரஜ்ஞன் வர்ணிக்கப்பட்டான். இப்போது இந்தச்சுலோகத்தால் அந்த கேஷித்ரக்ஞனது பிரபாவத்தை வர்ணிக்கின்றார். 'உபதிருஷ்டா' என அதில் பூர்வ சுலோகத்தில் புருஷனுக்கு தேதேகேந்திரிய மன முதலிய குணங்களோடுள்ள சங்கமே இவனுடைய ஜன்மகாரணமெனக்கூறப்பட்டது. ஆண்டு அக்குணசங்கம் நான்குவகைத்தாம். புருடனே நிடேதஞ்செய்து அக்குணமாத்திரத்தின் பிரதானத்தாலுண்டாம் குணசங்கமுதலாவதாம். அப்புருஷனுக்கு அந்தர பூதத்தால் அக்குணத்தின் பிரதானத்தாலுண்டாம் குணசங்கம் இரண்டாவதாம். புருஷ குணங்களின் சமப்பிரதானத்தாலுண்டாம் குணசங்கம் மூன்றுவதாம். அக்குணங்களின் அப்பிரதானத்தானும் புருஷனது பிரதானத்தானும் உண்டாம் குணசங்கம் நான்காவதாம். அவற்றுள் முதலாவது குணசங்கத்திலோ தேதேகேந்திய மன முதலிய வடிவகுணங்களின் சங்காதத்தையே ஆன்மரூபமாய்ப்பார்த்து இப்புருஷன் போக்தாவெனப்படுகின்றான். தேக முதலியவைகளையே ஆன்மாவெனக்கோடும் சார்வாகன் முதலியோர்களைப்போல, இரண்டாவது குணசங்கத்தின்கண்ணே அத்தேதேகேந்திரிய முதலிய குணங்கட்கே பிரதானத்தன்மையாமாதலின் ஆன்மாவின்கண் உண்மையில் கருத்திருத்வ முதலியவைகளை யபிமானித்து இவன் கருமபலன்களின் பாத்தாவெனப்படுகின்றான். நியாயமதத்தார் முதலியோர்களைப்போல மூன்றுவது குண சங்கத்தின்கண்ணே ஆன்மாவோடு அக்குணங்களின் சமப்பிரதானத்தன்மையால் குணங்களிலிருந்தும் போக்தாத்தன்மையற்றதுமாகிய ஆன்மாவில் ஆடையில் சேரான் அங்கங்களைப்போலும் எண்ணுபவனுய் அனுமந்தாவெனப்படுகின்றான். சாங்கிய நூலார் முதலியோர்களைப்போல நான்காவது குணசங்கத்திலோ எல்லாவாற்றானும் அக்குணங்களின் தர்மங்கட்கு ஆன்மாவின்கண் பிரவேசத்தைப் பாராது உதாசீன போதவடிவத்தன்மையால் அந்தச் சர்வ குணங்களின் பிரசாரங்களைப்பார்த்து இவன் உபதிருஷ்டாவெனப்படுகின்றான். வேதாந்திகளின் சாட்சியான்மாவைப்போல ஆண்டுக் கூறிப்போந்த போக்தா பாத்தா அநுமந்தா உபதிருஷ்டா என்னும் குணசங்கமுடையவர்களுள் உபதிருஷ்டாவே உத்தமனுவன், அநுமந்தா மத்தியமன், பாத்தா அதமன், போக்தா அதமாதமன்; எந்தச் சைதன்யதேவன் அக்குணங்களின் சங்கத்தால் போக்தா முதலிய தன்மையையடைகின்றானே, அவனே எக்காலத்தில் அக்குணங்களனைத்தையும் தன் வசமாக்கிக் கிரீடிக்கின்றானே அக்காலத்தில் மகேசுரனெனப்படுகின்றான். இவ்வுலகத்தின் தோற்ற நிலையீறுகளின் கர்த்தா பிரபு அந்தரியாமியாகிய அச்சைதன்ய தேவனே அக்குணங்களனைத்தையும் விடுத்திருக்கும்போது பரமான்மாவெனப்படுகின்றான். உபதிருஷ்டாவும் குணங்களைப் பரித்தியாகஞ்செய்து அவைகட்குச் சாட்சிரூபமாயிருப்பினும் சங்காதவுபகித அவ்வுபதிருஷ்டாவிற்கே வேறு சங்காதப் பிரசாரத்தின் திருஷ்டாத்தன்மையில்லை. பரமான்மதேவனே சர்வ சங்காதங்களின் பிரசாரத்திற்கும் திருஷ்டாவானதால் சர்வத்தினும் மேலானவனுனதால் பரமான்மாவாம். இப்பரமான்மாவை 'உதீஷ்ட வாஸுதேவாக்ஷ்ய வாஸுதேத்ய ஊர்த்வ யொயொகேத்ய ஈவிஜ்ஞாயதேஹிதேஷ்வவ்யயஸ்ஸம்ஜ்ஞஸ்' என்னுஞ் சுலோகத்தால் மேலே அருளிச்செய்வார். ஆண்டு, மகேசுரன் பரமான்மா என்னும் இரு வரும் குண சங்கிகளாவர்கள். இதனுலிப்பொருள் பெறப்பட்டது:—இத்தேகத்திலிருப்பதும் சர்வ குணங்களுமின்றிய அகண்டைகரச அத்துவிதிய ஆன்மாவே அக்குணசங்கத்தால் உபதிருஷ்டா, அநுமந்தா, பாத்தா, போக்தா, மகேசுரன், பரமான்மா என அறுவகைத்தாகின்றது. இதுவே இந்த கேஷித்ரக்ஞ ஆன்மாவின் பிரபாவமாம். அவற்றுள் அநுமந்தா, பாத்தா, போக்தா, இம்மூன்றுவடிவங்களாலோ இவ்வான்மாப் பந்தப்படுகின்றது. உபதிருஷ்டா மகேசுரபரமான்ம

வடிவங்களாலோ இவ்வான்மாவித்திய முக்த ஏக அத்துவிதீயரூபமேயாகின்றது என்பதாம். (22)

(அ-கை.) ஆண்டுப் பூர்வம் 'ஸ அயொயகூ வ்ரஹாவஷ்ட' என்னும் வாக்கியத்திற்கு வியாக்கியானஞ்செய்யப்பட்டது; அதாவது, கூஷேத்திரக்ஞனுடைய சொரூபமும் அதனுடைய பிரபாவமும் வர்ணிக்கப்பட்டன. இப்போது, 'யஜ்ஞாக்வாஸ்ருதஸ்ருதெ' என முன்னர்க்கூறப்பட்ட வாக்கியத்தை முடித்தருளுகின்றார்.

சு-ம். யாவான்யெதீ வாஸ்துவாஷம் வ்யக்தீம்ஸ்தா ஸ்ஜினைஷஹ ।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோகாத்தத்வித்தி பரதர்ஷப ॥ (23)

ப-ம். 1 யாவான் 2 யாவம் 8 யெதீ 3 வாஸ்துவாஷம் 7 வ்யக்தீம் 4 தா 5 ஸ்ருஜினைஃ 6 க்ஷேத்ர 10 க்ஷேத்ரஜ்ஞயா 11 ஸம்யோகாத் 12 தத்வி 14 த 9 வித் 13 ஹ்யயஃ 15 தத்விஜ்ஞாயதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வதிகாரி கூறிப்போந்த பிரகாரமாய் கூஷேத்திரக்ஞ புருஷனையும் தனது விகாரத்தோடுகூடிய அவித்தியாவடிவப் பிரகிருதியையும் அறிகின்றானே அவன் எல்லாவாற்றானுமிருப்பினும் மறித்தும் பிறப்பையடையான்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வதிகாரி கூறிப்போந்தவாற்றால் கூஷேத்திரக்ஞனெனும் புருஷனை யுணர்கின்றானே; அதாவது சர்வத்திர வியாபகமாகிய பரமான்மா நானென்றன என எவன் இந்த கூஷேத்திரக்ஞனாகிய ஆன்மாவைக் குருசாஸ்திராப தேசங்களால் சாட்சாத் கரிக்கின்றானே. அங்ஙனமே எவன் தேக முதலிய விகாரங்களோடுகூடிய அவித்தியாவடிவப் பிரகிருதியை யுணர்கின்றானே; அதாவது விகாரத்தோடுகூடிய அவித்தியாவடிவப் பிரகிருதி ஆன்மஞானத்தாற் பாதிதமானதால் மித்தியாவடிவமேயாம். அவ்வான்மஞானத்தால் எனதஞ்ஞானமும் அஞ்ஞானத்தின் காரியவடிவப் பிரபஞ்சமும் நாசமாயின, என எவன் அந்தக் குணத்தோடு கூடிய பிரகிருதியையறிகின்றானே அந்தத்தத்துவ மேவத்தாவானவன் எப்படியிருப்பினும்; அதாவது மிகுந்தவலியுடைய பிராரத்தகன்மவசத்தால் தேவராஜனாகிய இந்திரன்போலச் சாத்திரவிதியைத் தாண்டியிருப்பினும், மறித்தும் பிறப்பையடையான்; அதாவது இவ்வித்துவானுக்கு எந்தச்சரீரத்தில் ஆன்மஞான மடையப்படுகின்றதோ அந்தச் சரீரம் விழுந்தபின்னர் அவன் மீண்டும் இரண்டாவது தேகத்தையெடுப்பதில்லை. என்னை, அவித்தையினை. இவனுக்கு மறித்தும் சன்மப் பிராப்தியுண்டாகின்றது; பிரமஞானத்தால் அவ்வவித்தியாவடிவ காரணம் நாசமாகுமேல் அதன் காரியமாகிய சன்ம முதலியவைகளுமின்றிபவாகும். இது முன்னர்ப் பலதடவையுங் கூறப்பட்டது. அல்லது, புண்ணிய பாவகருமங்களாலே இவனுக்கு மீண்டுஞ் சன்மப்பிராப்தியாகின்றது, அப்புண்ணிய பாவங்கள் இத்தத்துவ ஞானிக்கு ஆன்மஞானத்தால் நாசமாகின்றமையினாலும் மறித்தும், சன்மப்பிராப்தியின்றும். இது பிரமசூத்திரத்தின்கண் ஸ்ரீ வியாதபகவானாலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. தஜ்ஞயிமஜ உதாஸ்துவமவாஜ் வயொஸ்துஷ்ட விதாஸளதத்வ்யவதெபர்ஷு ।

(போ-ள்.) நானே பிரமசொரூபன் என ஆன்மசாட்சாத்காரத்தையடையவே இத்தத்துவ ஞானிக்கு முந்திய புண்ணியபாவவடிவ சருவசஞ்சித கருமங்களும் நாசமாகின்றன, அவ்வான்மஞானத்தின் பின்னர்ச் செய்யப்பட்ட கருமங்கள் அவனைப் பரிசிப்ப தேயில்லை என்பதாம். இது பல சுருதிமிருதிகளிலுங் கூறப்பட்டுளதாமென்க. ஈண்டு, 'யவாவத்வாஸ்துவ மெவி' என்னும் வாக்கியத்திலுள்ள அபி (உம்மை) சப்தத்தால் ஸ்ரீ பகவான் இந்தக்கைமுதிக நியாயத்தைக்

குறிப்பித்தருளினர்; மிகுந்தவலியுடைய பிராரத்தகருமவசத்தால் தேவராஜனுகிய இந்திரன்போல சாத்திரவிதியைத் தாண்டியிருப்பினும் இவன் மீண்டுஞ் சன்மப் பிராப்தியை அடைந்திலனேல் சாத்திரவிதியைத் தாண்டாது தனதுயர்ந்த ஒழுக்கத்திலிருக்கப்பட்ட ஆன்மஞானி மறித்துஞ் சன்மப் பிராப்தியையடையானென் பதிற் கூறற்பாலதென்னை என்பதாம். ஆண்டு அமராஜனுகிய இந்திரன் சாத்திரவிதியைக்கடந்து விசுவரூபனெனும் பெயருடைய புரோகிதனையும் அசுர சந்நியாசிகளையும் எங்ஙனங் கொன்றனனே; அது ஆன்மபுராணத்தின் இரண்டாவது அத்தியாயத்தில் எம்மால் விரிவாய்க்கூறப்பட்டிருக்கின்றது ஆண்டுக்காண்க. (23)

(அ-கை.) ஆண்டு முன்னர்க்கூறப்பட்ட பலசுகித ஆன்மஞானத்தில் அதிகாரிகளின் வேறு பாட்டால் சாதனங்களின் விகற்பத்தை ஸ்ரீ பகவான் இப்போது அருளிச்செய்கின்றார்.

சு-ம். ய்யாஸ்ரஸாத்ரி வய்யத்தி கெஅிஷாத்தாஸஷாத்தரா।
சுஸ்ரெய் வாம்வெய்ர யொமெர கஉழுயொமெர அாவஸ்ரெ ॥ (24)

ப-ம். 2 ய்யாஸ்ரஸ்ர 3 சூத்ரி 6 வய்யத்தி 1 கெஅிக் 4 சூத்தாஸழ 5 சூத்ரா 7 சுஸ்ரெய் 8 வாம்வெய்ர 9 யொமெர 12 கஉழுயொமெர 10 அ 11 சுவஸ்ரெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சில அதிகாரிகள் தியானம்பண்ணியே தமதுள்ளத்தின்கண் பிரத்தியக்கான்மாவைத் தியானத்தோடுகூடிய அந்தக்காணத்தால் சாட்சாத்கரிக்கின்றார்கள். வேறு சில அதிகாரிகளோ சாங்கியயோகத்தால் ஆன்மாவைச் சாட்சாத்கரிக்கின்றார்கள். வேறு சில அதிகாரிகள் கன்மயோகத்தால் ஆன்மாவைச் சாட்சாத்கரிக்கின்றார்கள். (24)

(வி-ம்.) ஆண்டு இச்சுலோகத்தில் நான்குவகையாவர்கள் அதிகாரிகள், அவருளொருவர் உத்தமாவர், இரண்டாவது அதிகாரியர் மத்தியமாவர், மூன்றுவது அதிகாரியர் மந்தராவர், நான்காவது அதிகாரியரோ மந்ததராவர், அவர்களுள் முதலாவதாகிய உத்தமாதிகாரியரின் ஆன்மஞான சாதனத்தை அருளிச்செய்கின்றார். 'ய்யாஸ்ரஸ' என ஆண்டுத் தேகாதி அனன்மாகார விஜாதீய விருத்திவியவதானமின்றிய ஆன்மாகார சஜாதீயவிருத்திப் பிரவாகவடிவ ஆன்மசிந்தனமாம்; இதுவே சாத்திரத்தில் நிதித்தியாசன சப்தத்தாற் கூறப்படுகின்றதும் சிரவண முதலியவைகளின் பலவடிவமும் தேகாதிகளிலுள்ள ஆன்மபுத்திவடிவ விபரீதபாவனையை நிவிருத்திப்பதுமாம். அந்த நிதித்தியாசனவடிவ ஆன்மசிந்தனம் தியானமாம் அத்தன்மைய தியானத்தானை சில உத்தமாதிகாரிகள் தமதுபுத்தியின்கண் பிரத்தியக் சேதனவடிவ ஆன்மாவைத் தியானமுடைய அந்தக்காரணத்தால் சாட்சாத்கரிக்கின்றார்கள் என்பதாம். இப்போது மத்திமாதிகாரிகளின் ஆன்மஞான சாதனத்தை ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'சுஸ்ரெய் வாம் வெய்ரயொமெர ஊதி' ஆண்டு முன்னர்க்கூறிய நிதித்தியாசனவடிவத் தியானத்தின் பூர்வபாவி (முன்னருண்டாகத்தக்கதாகிய) சிரவண மननவடிவ ஆன்மசிந்தனமாம்; இதுவே நித்தியா நித்திய வுணர்ச்சி முதலிய நான்கு சாதனங்கட்கு உத்தரஞ்செய்யப்பட்டதும்; முக்குணவடிவ மாயாபரிணாமமாகிய அனன்மப் பொருளனைத்தும் மித்தியாபூதமாம், அவைகளின் சாட்சிவடிவாகிய நித்திய வியாபக நிர்விகாரசத்திய சடப்பொருளனைத்தின் சம்பந்தமிலாத பிரத்தியக்சேதன ஆன்மா நான் என வேதாந்தவாக்கியத்தாற் சன்னியமானதும்; பிரமாணப் பிரமேயங்களிலுள்ள அசம்பாவனைகளை நிவிருத்திப்பதுமாகிய அந்தச் சிரவணமननரூப ஆன்ம சிந்தனம் சாங்கியயோகமாம். அத்தன்மைய சாங்கியயோகத்தால் சில மத்திமாதிகாரிகள் தமதுள்ளத்தின்கண் அப்பிரத்தியக்கான்

மாவை அந்தத்தியாதீனத்பத்திவாயிலாய்ச் சாட்சாத்கரிக்கின்றார்கள் என்பதாம். இப்போது மூன்றவதாகிய மந்தாதிகாரிகளின் ஆன்மஞானசாதனத்தை ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'கஉயொமெத ஆவஎ ஊதி' ஆண்டு, பலேச்சையின்றிக் கேவலம் ஈசுவார்ப்பண புத்தியாற் செய்யப்பட்ட அவ்வவ் வருணாசிரமத்திற்குரிய வேதவிகித கருமங்கள் கருமயோகமாம். அத்தன்மைய கருமயோகத்தால் சில மந்தாதிகாரிகள் தமதுள்ளத்தில் அப்பிரத்தியக்கான் மாவை மனத்தூய்மை கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்பவைகளின் உத்பத்தித் துவாராச்சாட்சாத்கரிக்கின்றார்கள். (24)

(அ-கை) இப்போது நான்கவாதாகிய மந்ததர அதிகாரிகளின் ஆன்மஞான சாதனத்தை அருளிச்செய்கின்றார் ஸ்ரீ பகவான்.

சு-ம். சுநெஅகெவஉஜாநதஃ ஸ்ரூக்வாநெஅஹ உவாஹதெ।
தெவி ஆவிதஊஞ்ஞெவ ஊதஅஂ ஸ்ரூதிவஊயணாஃ॥ (25)

ப-ம். 2 சுநெஅ 1 த 3 ஸவம் 4 சுஜாநதஃ 6 ஸ்ரூக்வா 5 சுநெஅஹஃ 7 உவாஹதெ 8 தெ 9 சுவிஅ 13 சுதிதஊஞி 12 ஸவ 11 ஊதஅஂ 10 ஸ்ரூதிவஊயணாஃ.

(அ-கை) ஹே அர்ச்சுன! மற்றும் வேறு சில அதிகாரிகள் கூறிப்போந்த உபாயங்களால் ஆன்மாவை யுணராது வேறு குருவினிடத்திற் சிரவணஞ்செய்து ஆன்மாவைச் சிந்திக்கின்றார்கள். அவர்களும் சிரவண பாராயணர்களாய் இந்த மிருத்யுவோடுற்ற சம்சாரத்தை ஒரு தலையாக்கடக்கின்றார்கள். (25)

(வி-ம்) ஈண்டு, 'சுநெஅதஃ' (அன்னியர்களால) என்னும் வாக்கியத்திலுள்ள (ஓ) என்னுஞ் சப்தமானது பூர்வ சுலோகத்திற் கூறப்பட்ட மூவகை அதிகாரிகளினும் இம்மந்ததர அதிகாரியினிடத்து விலட்சணத்தன்மையை அறிவுறுத்தற்பொருட்டாம். அதைக் காண்பிப்பாம்:—ஹே அர்ச்சுன! மூந்திய சுலோகத்திற் கூறப்பட்ட தியானம் சாங்கிய கருமயோகங்கள் என்பவைகளுள் யாதேனுமொருபாயத்தால் ஆன்மாவை யுணராத மந்ததர அதிகாரிகளோ வேறு பரம காருணிகரான ஆசாரியரிடத்தினின்று சிரவணஞ்செய்து உபாசிக்கின்றார்கள். அதாவது, நீ இவ்வான்மாவை இவ்வாறு சிந்தனைசெய்குதி, என அந்தக்கிருபாலுவாகிய ஆசாரியரால் உபதேசிக்கப்பட்டு அந்தக் குருவின் வாக்கியத்தில் மிகச் சிரத்தையுடையனுய் அவ்வாறே அவ்வான்மாவைச் சிந்திக்கின்றன். அந்தச் சுருதி பராயண புருஷனும்; அதாவது, தனது புத்தியால் அவ்விசாரத்தில் வலியற்றவனுயினும் மிகுந்த சிரத்தாவந்தனைதால் அந்தக் குருவுபதேச சிரவண மாத்திர பராயணனுகியும் மிருத்யுவோடுகூடிய இச்சம்சாரத்தை ஒரு தலையாய்க் கடப்பன். கருத்திதுவாம், தியானத்திலுள்ள முயற்சி மிகுதிப்பாட்டால் அவனுக்குச் சித்தசுத்தியின்பொருட்டுக் கருமத்தினபேட்சையும் வேதங்கூறிய தத்துவத்தின்கண்ணுள்ள திடநிச்சயத்தால் அசம்பாவனை நிவிருத்தியின்பொருட்டுச் சிரவணாதிகளின் அபேட்சையும் வேண்டாமென்பதாம். ஈண்டு, 'தெவி' என்னும் வாக்கியத்திலுள்ள அபிசப்தத்தால் ஸ்ரீ பகவான் இந்தக் கைமுதிக நியாயத்தைக் குறிப்பித்தருளினர்:—தனக்கு விசாரஞ்செய்வதில் வலியின்றி வேறு குருவினிடத்தினின்று சிரவணித்தமாத்திரத்தால் ஆன்மாவைச் சிந்திக்கின்றவனும் இந்த மிருத்துவோடுகூடிய சம்சாரத்தைக் கடப்பனேல், விசாரம் பண்ணுவதிற் சமர்த்தனைவன் இச்சம்சாரத்தைக் கடப்பனென்பதிற் கூறற்பாலதன்னே என்பதாம். ஆண்டு, ஆன்மஞானத்தால் காரியசகித அஞ்ஞானத்தை நிவிருத்திப்பதுவே அச் சம்சாரத்தைக்கடப்படாதாம் என்க. (25)

(அ-கை.) ஆண்டு அதிட்டானப் பிரமத்தை ஆசிரயம் பண்ணுவதும் அப் பிரமத்தையே விஷயப்பண்ணுவதுமாகிய அநிருவசனீய அவித்தையினனே இச்சம்சாரமனத்தும் உத்பன்னமாமாதலின், அவ்வதிட்டானப் பிரமத்தை விஷயம்பண்ணப்பட்ட நானே பிரமசொரூபன் என்னும் ஆன்மஞானத்தால் அவித்தை நீங்கவே இவனுக்கு மோட்சப் பிராப்தியாதல் அமையும் என்னுமர்த்தத்தை நிச்சயஞ்செய்வான் இப்பதின்மூன்றுவது அத்தியாய முடிபீறுக ஸ்ரீ பகவான் சம்சாரத்தையுஞ் சம்சார நிவர்த்தக ஆன்மஞானத்தையும் விரிவாய் நிரூபித்தருளுகின்றார். ஆண்டு, 'காரணம் குணஸம் மொஹ்யஸ உஸெஒ நிஜ நூஹ' என முன்னர்க்கூறப்பட்ட வாக்கியார்த்தத்தையே இப்போது விளக்கியருளிச்செய்கின்றார்.

சு-ம். யாவகுஸம்ஜாயதெ கிம்சிகு ஸகுவம் ஸ்தாவரஜம்கமம் ।
க்ஷெத்ர க்ஷெத்ரஜ்ஞஸம்யொகாகு தத்வ்ஜ்ஞி ஹ்யதஷ்டுஹ ॥ (26)

ப-ம். 2 யாவகு 6 ஸம்ஜாயதெ 3 கிம்சிகு 5 ஸகுவம் 4 ஸ்தாவரஜம்கமம் 8 க்ஷெத்ர க்ஷெத்ரஜ்ஞஸம்யொகாகு 7 தகு 9 விஜ்ஞி 1 ஹ்யதஷ்டுஹ.

(அ-ம்.) ஹே பரதவம்ச சிரேஷ்ட அர்ச்சுன! தாவர ஜங்கமரூபவஸ்து எத்தனை யுண்டாகின்றனவோ அவையாவும் க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞ சம்யோகத்தானே யுண்டாயினவென நீ பறிதி. (26)

(வி-ம்.) ஹே பரதவம்ச சிரேஷ்டனகிய அர்ச்சுன! மூன்றுலகத்திலும் யாதேனுமொரு வஸ்துதாவரவடிவம் அல்லது சங்கமவடிவமாய்த் தோற்றுகின்றதோ அவ்வஸ்துக்களனைத்திற்கும் க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞர்களின் சம்யோகத்தானே தோன்றிய தென்றுணர்தி. ஆண்டு அவித்தை அதன் காரியவடிவ சடா நிருவசனீய பாவாபாவ (உண்மையின்மை) வடிவமாய்க் காணப்படுமூலகனைத்தும் க்ஷேத்ரரூபமாம்; அந்த க்ஷேத்ரத்தினின்று விலட்சணமானதும் அதை விளக்குவதும் சுயம்பிரகாச பரமார்த்த சத்தானதும் அசங்கோதாசீனமும் சர்வதருமமின்றியதுமாகிய அத்துவிதீய சைதன்ய க்ஷேத்ரக்ஞனும்; அத்தன்மைய க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞர்கட்கு மாயாவசத்தால் ஒன்றற்கொன்று விவேகமின்மையைக் காரணமாகவுடைய பொய்யுண்மைகளை ஒன்றுபடுத்தல் வடிவ மித்தியா தாதான்மியாத்தியாசமே அவர்களின் சம்யோகமாம்; அத்தன்மைய சம்யோகத்தினின்றே இத்தாவரசங்கமரூப காரியங்களனைத்தும் உண்டாகின்றன என்று நீயுணர்தி. இது கூறியதால் இவ்வர்த்தஞ் சித்தியானது :—தனதுண்மைவடிவத்தின் ஞானமின்மையினனே இச்சம்சாரந் தோற்றுகின்றது, அவ்வுண்மைவடிவத்தின் ஞானத்தால் இக்சம்சார நாசமேயாகின்றது, கனவு முதலிய மித்தியாப்பொருள்கள் அதிட்டானவஸ்துவின் உண்மைவடிவத்தின் அஞ்ஞானத்தினனே தோற்றுகின்றன, அச்சொரூபத்தின் ஞானமுண்டாகவே நிவர்த்தியாகின்றன என்பதாம். (26)

(அ-கை.) இவ்வாறு அவித்தியாவடிவ சம்சாரத்தை அருளிச்செய்து; இப்போது அதனை நிவர்த்திசெய்யும் பிரஹ்மவித்தையை அருளிச்செய்தற்பொருட்டு 'யஹவம் வெத்தி வாஸுதெவம்' எனக் கூறிப்போந்த வாக்கியார்த்தத்தை ஸ்ரீ பகவான் விளக்கியருளிச்செய்கின்றார்.

சு-ம். ஹஸம் ஸவெஷு பூதெஷு திஷ்டம்தம் பரமெஸ்வரம் ।
விநஸ்யத்ஸ்வவிநஸ்யந்தம் யஸ் பஸ்யதி ஸ பஸ்யதி ॥ (27)

ப-ம். 4 ஹஸம் 2 ஸவெஷு 3 பூதெஷு 5 திஷ்டம்தம் 7 பரமெஸ்வரம் 1 விநஸ்யத்ஸு 6 அவிநஸ்யந்தம் 8 யஸ் 9 பஸ்யதி 10 ஸ 11 பஸ்யதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! நாசமுடைய சர்வ பூதங்களிடத்தும் சமமும், நிருவிகாரரூபமாய் ஸ்திதமும், விநாசமின்றியதும்; பரமேசுவரரூபமுமாகிய அத்தன்மைய ஆன்மாவை எவன் காண்கின்றானே அவனே காண்பவனாவன். (27)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தோற்றுந் தருமமுடைய தாவரசங்கமவடிவ பூதங்களனைத்தும் எத்தன்மையவெனின், பலவகையான தோற்றமுதலிய பரிணம சுபாவமுடையனவாந் தன்மையானும், குணப்பிரதான பாவப்பிராப்தியானும், விஷமசுபாவமுடையவைகள். இதனினே அப்பூதங்கள் மிகச்சஞ்சலங்களாம், கணத்திற் கணத்திற் பரிணமிகளாம், அப்பரிணமத்தையடையாது ஒருகணமேனும் நிலைத்து நிற்பதற்கேலாதனவைகளாம், இதனினே அப்பூதங்கள் ஒன்றற்கொன்று பாத்தியபாதக பாவத்தையடைகின்றன, இதனினே அப்பூதங்கள் விநாசமுடையனவாம், அதாவது மாயாகந்தர்வ நகரமுதலியவைகளைப்போல திருஷ்ட நஷ்ட (காணக்கெடுந்) சுபாவமுடையனவாம், அத்தன்மைய சர்வ தாவர சங்கமவடிவ பூதங்களின்கண் ஆன்மதேவர் சமனுவர், அதாவது யாண்டும் ஏகரூபமேயாவர், அங்ஙனமே சர்வ தேகங்களிலும், ஒருவர், சர்வ பூதங்களில் தோற்றமாதி பரிணமிலதாந்தன்மையால் நிருவிகாரமாயிருப்பர், பரமேசுரராவர், அதாவது, தேகமுதலிய சர்வ சடவர்க்கங்கட்கும் சத்தாஸ்பூர்த்திகளைக் கொடுப்பவரானதால் பாத்திய பாதக பாவமற்றவர், ஆண்டு நாசமாதற்குரிய பொருள் பாத்தியமெனப்படும், நாசப்படுத்து பொருள்பாதகமெனப்படும், அத்தன்மைய பாத்திய பாதகங்களற்றவர், சர்வ தோடங்களுமற்றவர், மற்று மெத்தன்மையரெனின், அவிநாசியாவர், அதாவது மாயா கந்தர்வ நகரமுதலிய காணக்கெடுந்தன்மையவாய இந்தச் சர்வ துவிதங்கள் பாதமாயினும் பாதத்தையடையாதவராவர்.

ஆ-சு. "சுவிநாசீவா சுஸ்²யஸ்ய தர" ஹே மைத்திரேயி! இவ்வான்மதேவர் நாசமற்றவர் என்பதாம். இவ்வாற்றல் எல்லாவகையானும் இச்சடப்பிரபஞ்சத்தினின்றும் விலட்சணமாகிய பிரத்தியக்கான்மாவை, வேதாந்த நூலாலாகிய சட்சுவால் சாவ சடவர்க்கத்தினும் விலட்சணமாய்க் காண்கின்ற அதிகாரிகளே ஆன்மாவைப் பார்க்கின்றார்கள். நஞ்போதத்தால் கஞ்பிராந்தியை நிவிருத்தித்தவனே இனிது நோக்குகின்றான், அதுபோல, இவ்வாறு ஆன்மாவைக் காணாத அஞ்ஞானியோ, கனவுகாணும் புருஷன்போல் பிராந்தியால் விபரீதத்தைக்காணினும் காணாதவனே, என்னை, எது வெது பிராந்தியோ அதுவது அதரிசனரூபமேயாம். பிராந்தியில் தரிசனவடிவத்தன்மை சம்பவியாது இரச்சுவைச் சர்ப்பமாய்ப் பார்க்கினும் பிராந்த புருஷன் இதைப்பார்க்கின்றான் எனச்சொல்வதில்லை, மற்றோ, இவன் பார்க்கவில்லை எனவேசொல்லப்படுகின்றான்; என்னை, அந்தக் கற்பித சர்ப்பதரிசனம் இரச்சு அதரிசனமேயாம், ஆதலின் அந்தச் சர்ப்பத்தைக் காணினும் அந்தப் பிராந்தன் கண்டிலன், இதனுலிப்பொருள் பெறப்பட்டது:— இவ்வாறு சர்வோபாதிகளுமின்றிய சுத்தான்மாவின் தரிசனத்தால் அவ்வான்மாவின் அதரிசனரூப அவித்தை நிவிருத்தியாகின்றது; அந்த அவித்தியாவடிவ காரணம் நிவிருத்தியானதன் பின்னர், அதன் காரியவடிவ சம்சாரமும் நிவிருத்தியாகின்றது. அத்தன்மைய ஆன்மஞானம் இவ்வதிகாரியால் அவசியமாய்ச் சம்பாதிக்கத்தக்கதாமென்க. ஆண்டு இச்சுலோகத்தில் ஸ்ரீ பகவான் 'சுதாகம' என ஆன்மவடிவ விசேடியவாசகபதம் அருளிச்செய்யவில்லை; ஆயினும், யாண்டு, விசேடணவாசக பதங்களுளவோ ஆண்டு, விசேடியவாசகபதம் அர்த்தத்தானே பிராப்தியாகின்றது, இது நூலுணர்ந்தோர்களின் நியமம் அந்த விசேடண வாசக பதங்கள் ஈண்டும் (சமம். திஷ்டந்தம் பரமேசுரம் அவிநசியந்தம், என இருக்கின்றனவாதலின், ஆன்மவடிவ விசேடியத்தின் லாபம் அர்த்தத்தானே பிராப்தியா

கின்றது. அல்லது 'பரமேசுரம்' என்னும் பதமே அவ்வான்மவடிவ விசேடிய வாசகபதமென் றுணர்க. (27)

(அ-கை.) இப்போது இப்பூர்வ சுலோகத்திற் கூறிய ஆன்மதரிசனத்தை அதிகாரிகட்கு அதில் இன்பம் விளைவிப்பான் ஸ்ரீ பகவான் பலத்தாற்றுதித்தருளு கின்றார்.

சு-ம். ஸஉம் வயூஹி ஸவ-ருத்ர ஸஉவஷ்டிதஈஷ்வரம் ।
ந ஹிந ஹ்யாதநாத்மம் ததோ யாதி வரம் மதிம் ॥ (28)

ப-ம். 2 ஸஉம் 5 வயூஞ 6 ஹி 1 ஷவ-ருத்ர 3 ஸஉவஷ்டிதம் 4 ஈரம்ஷ்வரம் 9 ந 10 ஹி ந ஹி த 7 க்ஷ்யாதநா 8 க்ஷ்யாத்மம் 11 ததஃ 14 யாதி 12 வரம் 13 மதிம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சர்வ பூதங்களிடத்துச் சமமும் சமவஸ்திதமும் ஈசுரவடிவமுமாகிய ஆன்மாவைத் தரிசித்து, இவ்வித்துவான், எதனால், ஆன்மா வால் ஆன்மாவை இம்சிக்கவில்லையோ, அதனாலே பரமகதியை அடைகின்றான். ()

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தாவரசங்கமவடிவ சர்வ பூதங்களிடத்தும் ஆன் மா சமமாம் அதாவது, யாண்டும் ஏகரூபமாம் அங்ஙனமே சமவஸ்திதமுமாம், அதாவது, தோற்றமுதற்கொண்டு விநாசமீறுகிய சர்வ பாவவிகாரங்களுமற்றிருப் பதாம். ஈசுரனுமாம், அதாவது, சர்வப் பிராணிகளின் பிரவிருத்திகளின் காரண மாம் இவ்விதமாகக் கூறிப்போந்த சர்வ விசேடணங்களோடுகூடிய ஆன்மாவைத் தரிசித்து, அதாவது இத்தன்மைய ஆன்மதேவர் நானே எனச் சாத்திர திருட்டி யால் அவ்வான்மாவைச் சாட்சாத்கரித்து, இவ்வித்துவான் தனதான்மாவைத் தனதான்மாவால் ஹனனஞ்செய்திலனதலினாலே பரமகதியை யடைகின்றான், அன்றியும் இவ்வுலகத்திலுள்ள அஞ்ஞானி ஜனங்களனைவர்களும், பரமார்த்த சத்துவடிவமும், ஏகாத்து விதீயவடிவமும், அகர்த்தா அபோக்தாவடிவமும், பரமானந்தவடிவமுமாகிய ஆன்மா இருக்கிறது, விளங்குகிறது என்னும் பொரு ளிடத்தும், இல்லை விளங்கவில்லை என்னுந் தோற்றத்தைச் செய்விப்பதில் சமர்த்தமாகிய அவித்தையால், தாமே திரஸ்காரஞ்செய்து இல்லாதபொருளெனச் செய்கின்றார்களாதலின், அவ்வஞ்ஞானிகளனைவர்களும் அவ்வான்மாவை ஹன னஞ்செய்கின்றார்கள். அல்லது, அவித்தையால் ஆன்மவடிவமாய்க் கரகணஞ்செய் யப்பட்ட தேகேந்திரியாதிகளின் சங்காதவடிவ புராதன ஆன்மாவைக் கொன்று, புண்ணியபாவங்களின் வசத்தான் மீண்டும் புதிய சங்காதவடிவ ஆன்மாவைக் கரகணம் பண்ணுகின்றார்கள். இதனாலும், அவ்வஞ்ஞானிகள் ஆன்மாவைக் கொன்றவர்கள், ஆதலின், இருவகையானும் அவர்கள் ஆன்மாவைக் கொன்றவர் களே. இத்தன்மைய ஆன்மபாதகர்களை இலட்சியம்பண்ணியே இந்தச் சுருதியின் வாக்கிய வடிவ மிருதி எழுந்தது.

ஆ-சு. க்ஷேத்ர ஜ்ஞ்ஞம் வாவம்அள மெணாத்வ ஹ்ரிணா ।
யொ ந்யூ ஹ்ம்த ஸாத்ந உந்யூ வ்ரகிவஹ்யதே ॥

(பொ-ள்) உண்மை யொளியானந்த வியாபகான்மாவை இன்மையிருட்டின் பப் பரிச்சின்னரூப மென்றெண்ணும், ஆன்மாவை அபகரிக்குந் திருடனல் எந்தப் பாபஞ் செய்யப்படாததாம்; மற்றீரு, அவன் சர்வ பாவங்களையும் பண்ணியவ னவன், என்பதாம். இது சுருதியிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. சூஷ்மயா-ருத்ர உதெயொகா சுஂயெந்த உஷ்ரவ்ய தாஃ ।
தாம் ஷ்ஹவ்ரெதயா ஹிம ஹ்ஷி யெகெஅாத்ம ஹமெராஜ தாஃ ॥

(போ-ள்.) தம்பம் தர்ப்பமுதலிய ஆசுரீ சம்பத்தையுடைய புருஷர்கட்குப் பிராப்தியாகத்தக்கதும், அந்ததமத்தால் மறைக்கப்பட்டதுமாகிய நர முதலிய வுலகங்களை, அவர்கள் இறந்தடைகின்றார்கள். எவர்கள் ஆன்மாவைக்கொன்றவர் களோ, ஆண்டித் தேகமுதலிய அனைம்பதார்த்தங்களில் ஆன்மாபிமானஞ் செய் பவன், ஆன்மஹனனனுவன் என்பதாம். இதனாலிப்பொருள் பெறப்பட்டது :— ஆன்மாவைக் குருசாஸ்திரோபதேசங்களால் சாக்ஷாத்கரித்தவன் தேகமுதலிய அனைம்பதார்த்தங்களிலுள்ள ஆன்மாபிமானத்தைச் சுத்தான்மாவின் தரிசனத் தால் நாசம்பண்ணினவன்; ஆதலின், தனதுண்மைவடிவத்தின் இலாபத்தால் அந் தத்தத்துவஞானி தனதான்மாவைத் தனதான்மாவால் நாசஞ்செய்திலன். இத னாலை அவன் பரகதியை அடைகின்றான், அதாவது, காரியதேஹ அவித்தியா நிவிருத்தி பூர்வக பரமானந்தப் பிராப்திலடிவ முக்தியை அவன் அடைகின்றா னென்பதாம். (28)

(அ-கை.) ஹே பகவன்! புண்ணியபாபுண்ணிய கருமங்களைச் செய்வது தேகதேதாறும் வெவ்வேறான்மாவாம். அந்தச் சுகதுக்கமுதலிய விசித்திர பல போக்தாவானதால், அவ்வான்மா, விடம சுபாவமுடையதாம். ஆதலின், சர்வ பூதங்களினுமுள்ள ஓரான்மாவைச் சமமாய்த் தரிசித்து, இவன் தனதான்மா வால் தனதான்மாவை ஹனனஞ்செய்திலன், எனத் தாங்கள் கூறியருளியது எவ் வாறு பொருந்தும் என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய் கின்றார்.

சு-ம். ப்ரகூ⁴திஜை³வ அ கூ²ணை: க்ரியமாணானி ஸர்வஶ: ।
யோ வேத்தி தத்வதோ ஆத்மானம் அகர்தாரம் ஸ பஶ்யதி ॥ (29)

3-27

ப-ம். 1 ப்ரகூ⁴தி: 2 ஏவ அ 4 கூ²ணை: 5 க்ரியமாணானி 3 ஸர்வஶ: 6 ய: 7 பஶ்யதி 8 தத்வ 9 ஆத்மானம் 10 அகர்தாரம் 11 ஸ: 12 பஶ்யதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மாயாவடிவப் பிரகிருதியே சர்வப் பிரகாரத் தானும் சர்வ கருமத்தையுஞ் செய்கின்றது எனவும், க்ஷேத்ரக்ஞவான்மாவை அகர்த்தா வெனவும், எந்த விவேகி காண்கின்றானை அவனை நன்கு காண்பான்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! முக்காரணங்களானுந் தொடங்கத்தக்க இலௌகிக வைதிக சர்வ கருமங்களையும் எல்லாவாற்றானும் பிரகிருதியே செய்கின்றது, அதா வது, தேதேகேந்திய முதலிய சங்காதாகாரமாய்ப் பரிணமமடைந்ததும், சர்வ விகா ரங்கட்குங் காரணவடிவமானதுமாகிய முக்குணவடிவ, ஸ்ரீ பகவானுடைய மாயை யாகிய பிரகிருதியே, அச்சர்வ கருமங்களையுஞ் செய்கின்றது; சர்வ விகாரங்களு மற்ற க்ஷேத்ரக்ஞனெனும் புருஷன் அவைகளைச் செய்திலன். இவ்வாறு விவேகி யானவன் சாஸ்திரவடிவ சட்சுவாற் பார்க்கின்றான். இவ்வணமே அந்தப் பிரகிருதி வடிவ க்ஷேத்ரத்தாற் செய்யப்பட்ட சர்வ கருமங்களிலும், எவன், க்ஷேத்ரக்ஞ னாகிய ஆன்மாவை அகர்த்தாவாகவும், சர்வோபாதிரகிதமாகவும், அசங்கமாக வும், சர்வத்திர ஏகமாகவும், சர்வத்திர சமமாகவும் பார்க்கின்றானை, அவனை, பரமார்த்த தரிசியானதால், பார்க்கின்றான். அவ்வாறு ஆன்மாவைக்காணாத சர் வாஞ்ஞானிகளும் அந்தகர்களாயாவர்கள். இதனாலிப்பொருள் பெறப்பட்டது:— சன்மமரண முதலிய விகாரங்களையுடைய க்ஷேத்ரத்திற்கு அவ்வவ்விசித்திர கருமங்களின் கருத்தாத்தன்மையால் தேதேதோறும் பேதமாயினும், விஷமத் தன்மையுமாயினும், நிருவிகார அகர்த்தாவாகிய ஆன்மாவின் பேதத்திலும் விஷமத்தன்மையிலும், சிறிதளவும் பிரமாணமில்லை. கடமடமுதலிய சர்வ பேதங்

களுமின்றிய ஆகாயத்தின் பேதத்திலும் விஷமத்தன்மையிலும் சிறிதளவும் பிரமாணமின்றியதுபோல; நிருவிசேட அகர்த்தாவாகிய ஆன்மாவின் பேதத்திலும் விஷமத்தன்மையிலும் சிறிதளவும் பிரமாணமில்லை, இதை முன்னர்ப் பல முறையுங் கூறினும் என்க. (29)

(அ-கை.) ஆண்டுப் பூர்வம் ஆபாதத்தால் கேஷத்திரத்தின் பேததரிசனத்தைக்கூறி, கேஷத்திரக்ஞனது பேததரிசனத்தை நிடேதித்தருளினர்; இப்போது ஸ்ரீ பகவான் அந்த கேஷத்திர பேததரிசனத்தையும் மாயிகத்தன்மைவடிவ காரணத்தால் நிடேதித்தருளுகின்றார்.

சு-ம். யதா ஸர்வகதமாகாஶம் ஸௌக்ஷ்ம்யாந்நோபலிப்யதே ।
ததா ஸர்வத்ர தேஹேஷு ஸ்திதோ(அ)பி ப்ரஹ்ம நோபலிப்யதே ॥ (30)

ப-ம். 1 யதா 2 ஸர்வகதமாகாஶம் 3 ஸௌக்ஷ்ம்யம் 4 நோபலிப்யதே 6 ததா 7 ஸர்வ 5 ர்த்ர 8 தேஹேஷு 10 ப்ரஹ்ம 11 நோபலிப்யதே 9 தா.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வதிகாரி எப்போது பூதங்களின் வேற்றுமைத்தன்மை ஏகான்மாவின்கண்ணிருப்பதையும், அவ்வான்மா ஒன்றினின்றே அப்பூதங்களின் விஸ்தாரத்தையும் பார்க்கின்றானே அப்போது ஏகப்பிரமமேமயாகின்றான். (30)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வதிகாரி எக்காலத்தில் தாவரசங்கமவடிவ சர்வ பூதங்களின் ஒன்றற்கொன்று வேறுந்தன்மைவடிவ வேற்றுமைத்தன்மையை, ஒன்றின்கண் ணுள்ளதாய், அதாவது, ஓர சத்துவடிவ அதிட்டானமாகிய ஆன்மாவின்கண் அப்பூதங்களின் வேற்றுமைத்தன்மைகளைக் கற்பிதமாய்ப் பார்க்கின்றான். கருத்திதுவாம்:—எவ்விவப்பொருள் கற்பிதமாமோ அவ்வக்கற்பிதப் பொருள் அதிட்டானத்தினும் பின்னமன்று இரச்சுவில் கற்பிதமாகிய சர்ப்பதண்ட முதலியவைகள் அவ்விரச்சுவடிவ அதிட்டானத்தினும் வேறன்றுதல் போலவும், சுவர்ணத்திற் கற்பிதமாகியகுண்டலகங்கணமுதலிய பூடணங்கள், அச்சுவர்ணத்தினும் வேறன்றும் போலவும், சத்துவடிவ ஆன்மாவிற் கற்பிதமாகிய இப்பூதங்களின் பின்னத்தன்மைகள், அவ்வதிட்டான ஆன்மாவினின்று பின்னமன்று. இவ்வாறு குருசாத்திரோப தேசானந்தரம், எவன் தனது சொரூப விசாரஞ்செய்கின்றானே, அதாவது, இவ்வுலகனைத்தும் ஆன்மரூபமேயாம், ஆன்மாவினும் வேறுசத்தையுடையனவன்று என விசாரித்துப் பார்க்கின்றானே, எவன் அவ்வதிட்டான ஆன்மாவினின்றும் சர்வ பூதங்களும் பின்னமின்றியினும் அந்த ஓர ஆன்மாவினின்றே மாயாவசத்தால்சர்வ பூதங்களின் விஸ்தாரத்தன்மையையும் வேற்றுமைத்தன்மையையும் கனமாயையைப்போல் உய்த்து நோக்குகின்றானே அவன் அப்போது சஜாதீய முதலிய பேததரிசனமின்மையின் சர்வானர்த்தங்களுமின்றிய அத்துவிதீய பிரமசொரூபமேயாகின்றான். இது சுருதியிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. "யஸ்மின் ஸர்வாணி ஸர்வாத்மா தைவாஹ்ம் விஜானதஃ ।"
ததோ மோஹஃ கஃ ஶோக ஏகத்வமநுபஶ்யதஃ ॥

(போ-ள்.) இவ்வித்துவானுக்குத் தாவரசங்கமவடிவ சர்வ பூதங்களும் தன தான்மவடிவமாகவேயாகின்ற ஞானவத்தையில் ஆன்மாவின் ஓர அத்துவிதீய பாவத்தைக்காணும் அந்தத்தத்துவ வித்துக்குச் சோகமோகங்கள் ஒருபோதுமின்றுமென்பதாம், ஆண்டு, 'யஸ்மின் ஸர்வாணி' என்னும் பூர்வ சுலோகத்திலோ ஸ்ரீ பகவான் கேஷத்திரக்ஞ ஆன்மாவின் பேதத்தை நிடேதித்தருளி

னர். 'யதாஹ்மதவ்யய ஹ்ராவம்' என்னு மிச்சுலோகத்திலோ கேஷத்திரவடிவ அனுன்மவஸ்துக்களின் பேதத்தையும் நிடேதித்தருளினர். இத்தூணேய இவ் விரண்டு சுலோகங்கட்கும் விசேடமாமென்க. (30)

(அ-கை.) ஹே பகவன்! ஆன்மாவிற்கு இயல்பாய் அகர்த்திருத்தன்மை யிருப்பினும் சரீர சம்பந்தரூப உபாதியால் கருத்திருத்தன்மை பொருந்தும் என் னும் அர்ச்சுனன் சங்கையை நிவிருத்தித்து ஸ்ரீ பகவான் 'யஃவஸ்யதிதயாத்மா கஸகதாஸ்ரம் ஸவஸ்யதி' என்னும் கூறிப்போந்த வாக்கியார்த்தத்தை இப் போது விளக்கி வருணித்தருளுகின்றார்.

சு-ம். கூகாஷிக்வாந்மூஷணக்வா தஸ்வாதாயஸவ்யயஃ ।
ஸரீரஸ்தோவி களஜ்ஞெய ந கரொதி நலிவ்யதெ ॥ (31)

ப-ம். 2 கூகாஷிக்வாக் 3 நிமூஷணக்வாக் 5 வஸ்வாதா 4 கூபம் 6 கூவ்யயஃ 7 ஸரீ ரஸ்தஃ 8 கூவி 1 களஜ்ஞெய 9 ந 10 கரொதி 11 ந 12 லிவ்யதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அநாதியான திணலும், நிர்க்குணமான திணலும், இப்பரமான்மா அவ்வியயமாம், அத்தன்மைய ஆன்மா இச்சரீரத்தின்கண்ணிருப் பினும், செய்வதின்று, பற்றுறுவதுமின்று. (31)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரருக் கபின்னமானதால் பரமான்மவடிவ இந்த அபரோக்ஷப் பிரத்தியக்கான்மா அவ்வியயமாம். ஆண்டுச் சன்மமரண முத லிய விகாரங்கள் வியயமாம் அதை யடையாதது அவ்வியயமாம், அதாவது, தோற் றக்கேடு முதலிய விகாரங்களின்றிய பொருள் அவ்வியயமாம். வியயமோ இரு வகையாம், ஒன்றிரு:—தருமியின் வடிவமே யுற்பத்தியுடையதாதலின், வியய மாம்; மற்றொன்றிரு, அத்தருமியின் வடிவத்திற் குற்பத்தியின்றெனும், அதன் தருமங்கள் உத்பத்தியுடையனவாதலின், வியயமாம். ஆண்டு ஸ்ரீ பகவான் ஆன்மாவின்கண் முதல் வியயத்தை நிடேதித்தருளுகின்றார். 'கூகாஷிக்வாக் ஊதி' ஆண்டுப் பூர்வ அசத்வாவஸ்தையின் பெயர் ஆதியாம், கடமுதலிய பதார் த்தங்கட்குத் தமதுற்பத்திக்கு முன்னருள்ள அசத்துவாவத்தைபோலவாம். அதுவே அக்கட முதலியவைகட்கு ஆதியாம், அந்த ஆதி எப்பொருட்கில்லையோ அது அனுதியாம் அத்தன்மைய அனுதி எக்காலத்திலும் சத்தியான்மாவாம் அத் தன்மைய அனுதி யானதால் இவ்வான்மாக்காரணபாவ முடையதாதலின் சன் மத்தை யடைவதில்லை. என்னை? எப்பொருள் ஆதியுடையதாமோ, அப் பொருட்கே சன்மமுண்டாம், கடமுதலிய பொருள்கள் ஆதியுடையனவாதலின் சன்மத்தை யடைகின்றனபோலும், அவ்வான்மாவிற்கு அந்த ஆதித்தன்மையின் மையின் சன்மமுயின்றும் அந்தச் சன்மத்தின் பின்னரே மரண மீறுகிய சர்வ பாவ விகாரங்களும் வந்துறுவனவாம் இவ்வான்மாவிற்குச் சன்மரூப ஆதிவிகார மின்மையின், மரணமீறுகிய அச்சர்வபாவ விகாரங்களும் இன்றும்; ஆதலின் இவ் வான்மாத்தனது சொரூபத்தானே அந்தச் சன்மமுதலிய விகாரவடிவ வியயத்தை யடையவதில்லை. 'நதஹ்யதெ ஹ்யஜ்ஜ நிதா நமாயிவஃ' அவ்வான்மதேவனைத் தோற் றுவிப்பதொன்றுமில்லை, அதிட்டிப்பது மொன்றுமில்லை, என்க. இப்போது இரண் டாவது வியயத்தை நிடேதித்தருளுகின்றார். 'நிமூஷணக்வாக் ஊதி' இவ் வான்மாச் சர்வ தர்மங்களுமின்றியதாதலினாலும், அவ்வியயமாம், என்னை, இவ்வுல கத்தின்கண்ணுள்ள உருவம் இரதமுதலிய தருமங்கள், தமது தருமியோடு தாதான்மியங்களேயாமாதலின், அவ்வுருவமுதலிய தருமங்கள், தமது தருமியை விகாரமடையச்செய்யாது உத்பத்தி விநாசங்களை யடையா, மற்றோர், தமது தரு

மியை விகாரமடையச்செய்தே அந்தத் தருமங்கள் உத்பத்தி விநாசமாவனவாம். இவ்வான்ம தேதவர், சர்வ தருமங்களுமின்றியவராதலின் அத்தருமங்களின் வியயத்தாணும் வியயத்தை யடையார்.

ஆ-சு. ஸவிநாஸீவா மெஉய ஊதாஸுந ஆதியஊ-ஃ।

(போ-ள்.) ஹே மைதரேயி! இவ்வான்மதேதவர் உருவத்தாணும் நாசமுத முதலிய விகாரத்தை யடையார், தருமங்களின் நாசமுதலிய விகாரங்களினு மும் நாசமுதலிய விகாரத்தை யடையார், இவர் சர்வ தருமங்களுமின்றியவராதலின், என்பதாம். இவ்வான்மதேதவர், தோற்றம், இருப்பு, வளர்ச்சி, விபரிணமம், க்ஷீணம், நாசம், என்னும் அறுவகைப் பாவ விகாரங்களுமின்றியவராதலின் ஆத்தி யாசிக சம்பந்தத்தால் இச்சரீரத்தின் கண்ணிருப்பினும் இது பிரவிர்த்திக்கினும், இவர் சிறிதளவுஞ் செய்யாதவர். ஆத்தியாசிக சம்பந்தத்தால் சலத்திலிருப்பினும் சூரியன், அந்தநீர், சலனப்படினும் சலனப்படுவதின்றுவதுபோல இவ்வான்ம தேதவர், இலௌகிக வைதிக கருமங்க ளொன்றையுஞ்செய்யாத வராதலின், யா தொரு கரும பலத்தாணும் பற்றுறார், என்னை, இவ்வுலகத்தில் எவனெவன் எவ் வெப் புண்ணியா புண்ணிய கருமங்களைச் செய்கின்றானே அவனவனே அவ்வக் கருமபலமாகிய சுகதுக்கங்களில்ப ற்றுறுகின்றான்; அவ்வக்கருமங்களைச் செய்யா தோன் அவ்வப்பலத்தால் சம்பந்தப்படான்; இவ்வான்மாவும் ஒரு கருமத்தையுஞ் செய்யாமையின் யாதொரு கருமபலத்தினுஞ் சம்பந்தப்படுவதின்றும். 'உஆ ஹ்வுஷஃ ஸுவம்ஹுவம்' என்பது முதலிய வாக்கியங்களால், அவ்விச்சை துவேஷமுதலிய தருமங்கள் க்ஷேத்திரத்தின் தருமங்களென்றே கூறப்பட்டன. அல்லாமலும் 'வகுமெதயவஅகு ஊஃணிகியஊணாஜி' என்னும் வாக்கியத் தால் சர்வ கருமங்களும் மாயையின் காரியமென்றே கூறப்பட்டன. அசங்கவான் மாவிற்கு யாதொரு தருமமுமின்றும், யாதொரு காரியமுமின்றும்; இதனானே பரமார்த்த தரிசியாகிய வித்துவானுக்குச் சர்வ கருமங்களின் அதிகாரமிலதாந் தன்மை முன்னர்க் கூறினும். இத்துணையால் ஆன்மாவில். சர்வதரும ரகித தன்மை கூறிச் சுவகத பேதத்தையும் நிவிருத்தித்தனர். அன்றியும் 'வகுவ மெதயவஅகுஊஃணி' என்னுஞ் சுலோகத்திலோ முன்னர் ஸஜாதியபேதமும் நிவிருத்திக்கப்பட்டது. 'யஊஹுத வயஃஹாவம்' என்னுஞ் சுலோகத்திலோ முன்னர் விஜாதியபேதமு நிவிருத்திக்கப்பட்டது. 'ஸுஹாஜிகுவா நிமஃணகுவாக' என்னு மிச்சுலோகத்திலோ சுவகதபேதமும் நிவிருத்திக்கப்பட்டது; ஆதலின் மூவகைப்பேதங்களும் மின்றியதால் இவ்வான்மா, அத்துவிதியப்பிரம சொரூபமே என்பது பெறப்பட்டது, என்க. ஆண்டுச்சமான சாதியையுடைய பதார்த்தங் கட்குள்ள பரஸ்பரபேதம் சஜாதிய பேதமாம் ஒரு தருவில் மற்றொரு தருவின் பேதம்போலும். மாறுபட்டஜாதியையுடைய பதார்த்தங்கட்குள்ள பரஸ்பர பேதம் விஜாதியபேதமாம் அத்த தருவில் கல்லின் பேதம்போலும். ஒரே வஸ் துவில் தனதவயங்களாலுண்டாம் பேதம் சுவகதபேதமாம், அத்ததருவில் கிளையிலை பூகனி முதலிய அவயவங்களாற் பேதம்போலும். 'ஸகொஹெவஃ ஸவஃஹு தெஷுமுஜஃ' என்னுஞ் சுருதி சர்வ பூதங்களிடத்தும் ஆன்மா ஒன்றே யெனக் கூறுகின்றது. அவ்வான்மாவிற்குச் சமானசாதியுடையது மற்றோரான்மா இல்லை யாதலின் ஆன்மாவிற் சஜாதியபேதமின்று 'ஸதொமஸ் ஊதஃ' என்னுஞ் சுருதி ஆன்மாவிற்கு வேறான உலகங்களனைத்தையும் கற்பித மெனக் கூறுகின்றது, கற்பிதப் பொருட்கு அதிட்டானத்திலும் பின்னசத்தையின்மையின், ஆன்மாவில் விஜாதிய பேதமும் பொருந்தாது 'நிஷ்ஞும் நிமஃணம் நிஷ்கியம் ஸாந்தம்'

என்னுஞ் சுருதி ஆன்மாவை நிரவயவ நிர்க்குண நிட்கிரியமெனக் கூறுகின்ற தாதலின், ஆன்மாவின்கண் சுவகதபேதமும் பொருந்தாதென்பதாம். (31)

(அ-கை.) ஆண்டுச்சரீத்திலிருப்பினும் இவ்வான்மா அசங்கமானதால் அந்தச்சரீர கருமத்தால் சம்பந்தப்படுவதில்லை என்னுமர்த்தம் பூர்வ சுலோகத்திற் கூறியருளப்பட்டது. இப்போது ஸ்ரீ பகவான் கூறிப்போந்த அர்த்தத்தில் திருஷ்டாந்தத்தைக் கூறியருளுகின்றார்.

சு-ம். யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யாத் நாகாஸம் நோபலிப்யதே ।
ஸர்வத்ராவஸ்திதோ தேஹே ததாத்மா நோபலிப்யதே ॥ (32)

ப-ம். 1 யதா 2 ஸர்வகதம் 4 ஸௌக்ஷ்ம்யாத் 3 ஆகாஸம் 5 ந 6 உபலிப்யதே 8 ஸர்வத்ர 10 அவஸ்திதஃ 9 தேஹே 7 ததா 11 ஆத்மா 12 ந 13 உபலிப்யதே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எவ்விடத்தும் வியாபகமாயினும் ஆகாயம் அசங்கசுபாவமுடையதாதலின் சம்பந்தத்தை யடையாததுபோலச் சர்வ தேகங்களிலுமிருப்பினும் இவ்வான்மா அசங்கசுபாவமுடையதாதலின் சம்பந்தப்படுவதில்லை.()

(வி-ம்.) ஹே அர்ச்சுன! கடமட முதற்கொண்டு துஷ்டா துஷ்ட மூர்த்தத்திரவியங்களனைத்திலும் உள்ளுப்புறப்பும் வியாபித்திருப்பதாயினும் ஆகாயம், நுண்ணியதானமையின், அதாவது, அசங்கசுபாவ முடையதாதலின், அந்த மூர்த்தத் திரவியங்களின் நறுநாற்றம் தீநாற்றம் மழை வெயில் தீபுகை தூளி சேறு முதலிய குணதோஷங்களோடு சம்பந்தப்படாததுபோலத் தேவமநுட பசு முதலிய மேற்கீழாகிய சர்வ தேகங்களிலும் உள்ளும் புறப்பும் யாண்டும் வியாபித்திருப்பினும் இவ்வான்மா, அசங்கசுபாவமுடையதாதலின், அந்தத்தேக முதலியவைகளாற் செய்யப்பட்ட சுபாசுப கருமங்களோடுபற்றுவதில்லை. 'கூஸ்மொந ஹிலஜ்ஜதே' இவ்வான்மா அசங்கமானதால் யாதொரு பொருளோடும் சம்பந்தப்படுவதில்லை என்பதாம். (32)

(அ-கை.) அல்லது இவ்வான்மாவின்கண் கேவலம் அசங்கத்தன்மை வடிவ காரணத்தாலே அசம்பந்தித்தன்மையின்றும் மற்றே, பிரகாசத்தன்மைவடிவ ஹேதுவாலுமாம், என்னுமர்த்தத்தை இப்போது ஸ்ரீ பகவான் திட்டாந்தத்தாலருளிச் செய்கின்றார்.

சு-ம். யதா ப்ரகாஸயத்யேகஃ க்ருத்ஸ்நம் லொகமிமம் ரவிஃ ।
க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்நம் ப்ரகாஸயதி பாரத ॥ (33)

ப-ம். 2 யதா 8 ப்ரகாஸயதி 3 ஏகஃ 6 க்ருத்ஸ்நம் 7 லொகம் 5 இமம் 4 ரவிஃ 12 க்ஷேத்ரம் 10 க்ஷேத்ரீ 9 ததா 11 க்ருத்ஸ்நம் 13 ப்ரகாஸயதி 1 பாரத.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சூரியனொருவனே இவ்வுலகனைத்தையும் பிரகாசிப்பிக்கின்றதுபோல க்ஷேத்திரக்ஞனெனும் ஆன்மா இந்த க்ஷேத்திரமனைத்தையும் பிரகாசிப்பிக்கின்றது. (33)

(வி-ம்.) அர்ச்சுன! ஓரே சூரியன் உருவமுடைய தேகமுதலிய சர்வ பொருள்களையும் பிரகாசிப்பிக்கின்றான், ஆனால், அந்தப் பிரகாசிக்கப்பட்டனவாகிய தேகமுதலிய வஸ்துக்களின் தருமங்களோடு சம்பந்தப்படுவதுமில்லை, அத்தன்

மைய வஸ்துக்களின் பேதத்தால் சூரியன்பேதப்படுவதுமின்று. அதுபோல ஒன்றுகிய கேஷேத்திரக்ஞனென்னும் ஆன்மாக் கூறிப்போந்த சர்வ கேஷேத்திரங்களையும் பிரகாசிப்பிக்கின்றது. இதனுனே அவ்வான்மா அந்தப்பிரகாசியவடிவ கேஷேத்திர தருமங்களோடு சம்பந்திப்பதுமின்று, அவைகளின் பேதத்தால் பேதப்படுவதுமின்று ; இத்துணை கூறியதால் ஸ்ரீ பகவான் இவ்வனுமானத்தைக் குறிப்பித்தருளினர்:—கேஷேத்திரக்ஞனெனும் ஆன்மா, கேஷேத்திர தருமங்களோடு சம்பந்தப்படுவதுமில்லை, கேஷேத்திரங்களின் பேதத்தாற் பேதப்படுவதுமில்லை ; அந்த கேஷேத்திரங்களின் பிரகாசகமானதால், எது எப்பொருட்குப் பிரகாசமாமோ அது அந்தப் பிரகாசிய வஸ்துக்களின் தருமங்களோடு சம்பந்திப்பதுமில்லை, அவற்றின் பேதத்தாற் பேதப்படுவதுமில்லை : சூரியன்போல என்பதாம். அல்லது, கேஷேத்திரக்ஞனுகிய ஆன்மா, கேஷேத்திர தருமங்களோடு சம்பந்திப்பதில்லையென்பது கேவலம் அனுமான வளவை மாத்திரத்தாற் பெறப்படுவதன்று ; மற்றும், சாட்சாத்து சுருதிபகவதியும் இதைக் கூறுகின்றுள்.

ஆ-சு. ஸ॰யொ-யா ஸவ-ர்யொகஸ்யகேஷ்-ர்
நயிவ்யதேஅ கேஷ்-ரைஷ பா-ர்ஹ்ய தொஷை: ।
ஸகஹ்யா ஸவ-ர்ஹ॰தாஜ்ஞாதா
நயிவ்யதே யொக-ர்: வெந பாஹ்ய: ॥

(போ-ள்) உலகங்களனைத்திற்கும் சட்சுவடிவ சூரியன் சட்சுவின்விடய வடிவ வெளிப்பொருள்களின் தோடத்தால் பற்றுறுததுபோலச் சர்வசடப் பொருள்களையும் பிரகாசப்பண்ணப்பட்டதும் தேகாதி சங்காதத்தினும் பின்னமுமாகிய சர்வ பூதங்களின் அந்தரான்மாவாகிய ஒரே அத்துவிதீயவான்மாவும் பிரகாசிய வடிவ தேகமுதலியவைகளினது துக்கங்களோடு சம்பந்திப்பதில்லை என்பதாம். (33)

(அ-க.) இப்போது ஸ்ரீ பகவான் இப்பதின்மூன்றுவது அத்தியாயத்தின் பொருளைப் பலத்தோடு உபசம்மரித்தருள்கின்றார்.

13-31

சு-ம். கேஷேத்ர கேஷேத்ர ஜ்ஞயொரெவமேஜ்ஞான சக்ஷ்-ஷா ।
ஹ॰தவ பூதப்ரகிருதிமோக்ஷ்ம யே விது-ர்யாந்தி தே பர ॥ (34)

ப-ம். 2 கேஷேத்ர கேஷேத்ர ஜ்ஞயோ: 4 ஏவம் 3 சஜ்ஞானம் 5 ஜ்ஞான சக்ஷ்-ஷா 8 ஹ॰த தவ பூத ப்ரகிருதிமோக்ஷ்ம் 7 ச 1 யே 6 விது-: 11 யாந்தி 9 தே 10 பர.

(அ-ம்) ஹே அர்ச்சுன ! எவன் கேஷேத்ர கேஷேத்ரக்ஞர்களின் விலட்சணத்தன்மையைக் கூறிப்போந்தவாற்றல் ஞானசட்சுவால் உணர்கின்றுனே, அங்ஙனமே பூதங்கட்குக் காரணவடிவ மாயையின் முழுதுமின்மையையும் உணர்கின்றுனே, அவ்வதிகாரி கைவல்ய மோட்சத்தை யடைகின்றான். (34)

(வி-ம்.) ஹே அர்ச்சுன ! கூறிப்போந்த கேஷேத்ர கேஷேத்ரக்ஞர்களின் விலக்ஷணத்தன்மையை எவன் ஞான நேத்திரத்தாலுணர்கின்றுனே, அதாவது இந்த கேஷேத்ரமோ சடமும், கர்த்தாவும், விகாரியும், பரிச்சின்னமுமாம் ; இந்த கேஷேத்ரக்ஞனுகிய ஆத்துமாவோ சேதனமும், அகர்த்தாவும், அவிகாரியும், அபரிச்சின்னமுமாம். என இரண்டின் விலட்சணத்தன்மையை எவ்வதிகாரி குருசாஸ்திரோபதேசசன்ய ஆன்மஞானவடிவ நேத்திரத்தால் உணர்கின்றுனே, அவ்வண்ணமே எவன் பூதப்பிரகிருதிகளின் மோட்சத்தையும் உணர்கின்றுனே, ஆண்டவனுகிய பூதங்களனைத்தின் காரணவடிவமும் மாயை, அவித்தை, அஞ்ஞானம், பாமே

சுரசக்தி என்பன முதலிய நாமங்களையுடையதும் 'மாயாம்தூ வ்ருகூதிம் விஉயாகூ' என்பது முதலிய சுருதிகளாற் கூறப்படுவதுமாகிய மாயாசத்தி பூதப்பிரகிருதியாம். அந்தப் பூதப்பிரகிருதியின், நானேபிரமம் எனும் உண்மைவடிவ ஆன்மவித்தையால் ஆத்தியந்திக நிவிருத்தி, பூதப்பிரகிருதி மோட்சமாம். அத்தன்மையமோட்சத்தையும் எவ்வதிகாரி ஞானநேத்திரத்தா லுணர்கின்றானே, அவ்வதிகாரியே பரமார்த்த ஆன்மவஸ்துவடிவ கைவல்ய மோட்சத்தையடைகின்றன். அத்தன்மைய மோட்சத்தையடைந்து அவ்வதிகாரி மீண்டுந் தேகத்தை எடுப்பதில்லை. இதனால் இப்பொருள் பெறப்பட்டது :—முன்னர்க்கூறிய அமானித்துவ முதலிய சாதன சம்பன்னனும், கூறிப்போந்த கூஉத்திர கூஉத்திரக்ஞர்களின் விலகூஉணஞான முடையவனுமாகிய அதிகாரியே, சர்வானர்த்தங்களும் நிவிருத்தியாகிப் பரமபுருடார்த்தத்தையடைகின்றன். ஆதலின், பரமபுருடார்த்த வேட்கையுடையவன் அவ்வமானித்துவ முதலிய சாதனங்களை அவசியமாய்ச் சம்பாதித்தல்வேண்டும். அங்ஙனமே கூஉத்திர கூஉத்திரக்ஞர்களின் விவேகஞானத்தையும் அவசியமாய்ச் சம்பாதித்தல் வேண்டும் என்பதாம். (34)

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய ஸ்ரீ உத்தவாநந்தகிரி சுவாமிகளின் பூஜ்யபாத சிஷ்யராகிய ஸ்ரீ சித்கணைந்தகிரி சுவாமிகளாலியற்றியருளிய பிராகிருதடீகையெனப் பெயரிய கீதை கூடார்த்ததீபிகையின்,

பதின்மூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

பதினான்காவது அத்தியாயம்.

ஓம் ஸ்ரீ கணேசாயநமஃ ஸ்ரீ காசிவிஸ்வேஸ்வராப்யாம்நமஃ ஸ்ரீ குருப்யோநமஃ
ஸ்ரீ சங்கராச்சார்யேப்யோநமஃ

ஆண்டுப் பூர்வம் பதின்மூன்றுவது அத்தியாயத்தில்,

யாவகூஉம் ஜாயதெகிஞ்சிகூ ஸகூஉம்ஷ்ஹாவராஜம்மஉழி।
கூஉத்ர கூஉத்ரஜ்ஞ ஸம்யொகாத்தத்விஜ்ஞாநம்மதம்மம ॥

என்னுஞ் சுலோகத்தால் ஸ்ரீ பகவான் கூஉத்திர கூஉத்திரக்ஞர்களின் சம்யோகத்தினின்று சர்வ தாவரசங்கம பூதோத்பத்தியை அருளிச்செய்தனர். ஆண்டு, ஈசுரனே அங்கீகரியாத நிரீசுர சாங்கியமதத்தை மறுத்து அந்த கூஉத்திரகூஉத்திரக்ஞர்களின் சம்யோகம் ஈசுராதீனமெனக் கூறற்பாலதவசியமாம். அங்ஙனமே அப்பதின்மூன்றுவது அத்தியாயத்தில் 'காரணம் குணஸம்மொஸ்ய ஸதஸதொயோநிஜந்மஸு' என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் குணசங்கமே சன்மகாரணமெனத் திருவாய் மலர்ந்தருளினர். ஆண்டு, எந்தக் குணத்தில் எவ்வாற்றாற் சங்கமாம் அந்தக்குணம் யாது, அது எவ்வாற்றாற் சீவனைப் பந்திக்கின்றது என்னும் அர்த்தமும் அவசியமாய்க் கூறற்பாலதாம். அங்ஙனமே, 'ஹூ தவ்ருகூதிஜொகூஞ்ஞ யெஷிகூயாஃஅதி தெவரூம்' என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் பூதப் பிரகிருதியின் மோட்சத்தை அருளிச்செய்தனர். ஆண்டுப்

பூதப் பிரகிருதியெனும் பெயருடைய சத்துவாதி முக்குணங்களினின்றும் இவ்வதிகாரிக்கு எவ்வாற்றான் மோட்சமாம்? அந்த முக்த புருடனுக்கு இலக்கணம் யாது? என்னும் அர்த்தமும் அவசியமாய்க் கூறற்பாலதாம். இவ்வர்த்த மனைத்தையும் விரிவாய் அருளிச்செய்தற்பொருட்டு ஸ்ரீ பகவான் இப்பதினென்காவது அத்தியாயத்தை தொடங்கியருளுகின்றார். ஆண்டுக் கேட்போனுக் கின்பம் விளைவிப்பான் ஸ்ரீ பகவான் மேற்கூறும் பொருளை இரண்டு சுலோகங்களால் துதித்தருளிச்செய்கின்றார்.

ஸ்ரீ ஹயக்ரீவாய நம:

சு-ம். வராம் ஹம்ய வ்ரவக்ஷ்யாமி ஜ்ஞாநாநாம் ஜ்ஞாநமுத்தமம் ।
யஜ்ஞாத்வா முநய: ஸர்வே பராம் ஸித்திமிதோ கதா: ॥ (1)

ப-ம். 3 வராம் 5 ஹம்ய: 6 வ்ரவக்ஷ்யாமி 1 ஜ்ஞாநாநாம் 4 ஜ்ஞாநம் 2 உத்தமம் 7 யத்
8 ஜ்ஞாத்வா 10 முநய: 9 ஸர்வே 12 பராம் 13 ஸித்திம் 11 இத: 14 கதா:.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! ஞானசாதனங்களுக்குள் உத்தமமும் சிரேஷ்டமுமாகிய ஞானசாதனத்தைப் பகவானுகியயாம் மீண்டும் உனக்குரைக்கின்றேம். எந்தச் சாதனத்தை அநுட்டித்து முனிவரனைவர்களும் இத்தேகபந்தனத்தினின்றும் பரமகைவல்லிய மோட்சத்தையடைந்தார்களோ. (1)

(வி-ம்.) ஆண்டு, 'ஜ்ஞாயதெ சுநெந உதிஜ்ஞாநம்' பொருள் எச்சாதனத்தால் ஆன்மவஸ்து அறியப்படுகின்றதோ அது ஞானமாம். இவ்வாறு விரித்துரைப்பதால் ஈண்டு ஞானசப்தம் பரமான்ம விடயக ஞானத்தின் சாதனவாசகமாம். அந்த ஞானம் எத்தன்மையதினின் பரமாம் அதாவது பரமான்மவடிவ பாவஸ்துவை விடயம்பண்ணுவதாதலின் சிரேஷ்டமாம். அது மற்று மெத்தன்மையதினின் ஞானங்களுக்குள் உத்தமமாம் அதாவது, 'தஜ்ஜ்ஞாநவெஜ்ஞாநவ்ரஹ்மணாவிவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தவஸாஜ்ஞாபகேந' என்னுஞ் சுருதியாற் கூறப்பட்ட யக்ஞதான முதலியவைகள் ஞானத்தின் பகிரங்க சாதனங்களாம். அவைகளுக்குள் உத்தம பலத்தினுக்குக் காரணமானதால் உத்தமமாம். முன்னர்க்கூறிய அமானித்துவ முதலிய சாதனங்களுக்குள் அந்தஞானம் உத்தமமன்று; என்னை? அந்த அமானித்துவமுதலிய சாதனங்களும் அந்தரங்க சாதனங்களானதால் உத்தமபலத்திற்கே காரணங்களாம். ஆண்டு, பரம் என்னும் விசேஷணத்தாலே அந்த ஞானத்தில் உத்கிருஷ்ட வஸ்து விஷயகத்தன்மை கூறப்பட்டது. உத்தமமென்னும் விசேஷணத்தாலே உத்கிருஷ்ட பலமுடைமை கூறப்பட்டதாதலின், அவ்விரண்டினும் கூறியதுகூறலென்னுங் குற்றங் குலவாதாம். அத்தன்மைய உத்கிருஷ்ட வஸ்துவை விடயம்பண்ணுவதும், உத்கிருஷ்ட பலத்தைத் தருவதுமாகிய ஆன்மஞானத்தின் சாதனவடிவ ஞானத்தைப் பகவானுகிய யாம் உனக்கு மறித்து முரைக்கின்றேம். அதாவது இதற்கு முன்னத்தியாயத்தில் பலமுறை யாம் உனக்கு உபதேசித்த ஞானத்தையே மறித்தும் கூறிப்போந்த பிரகாரத்தினும் சிறிது விலக்ஷணப்பிரகாரத்தால் சொல்கின்றேம். எந்தச் சாதனவடிவ ஞானத்தைச் சிரத்தைபக்தியோடு அநுட்டித்து மனனசீலர்களாகிய முனிவரனைவர்களும் கைவல்ய மோட்சவடிவ பரமசித்தியை இத்தேகசம்பந்தத்தினின்றும் அடைந்தார்களோ என்பதாம். (1)

(அ-கை.) ஆண்டு, அந்தச் சாதனவடிவ ஞானத்தை யடைந்தவனுக்கு அந்த மோட்சவடிவப் பரமசித்தி அவசியமாய்ப் பிராப்தமாம் என்னும் நியமத்தை இப்போது ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஊஒம் ஜூாநஉஊவாஸ்ரீதயீ ஐஐ ஹாயஐயீ-ழஉாமதாஃ।
ஹமெழவி நொவஜாயஞை வுருயெ ந வயீயஞ்ஜிஅ ॥ (2)

ப-ம். 1 ஊதம் 2 ஜூாநம் 3 உவாஸ்ரீதயீ 4 ஐஐ 5 ஹாயஐயீ-ழம் 6 சூமதாஃ 7 ஹமெழ 8 சுவி 9 ந 10 உவஜாயஞை 12 வுருயெ 13 ந 14 வயீயஞ்ஜி 11 அ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இச்சாதனரூப ஞானத்தை யனுட்டித்துப் பரமேசுராகிய எமது அத்விதீய நிர்க்குணவடிவத்தை யத்தியந்தம் அபேதமாக அடைவுற்ற அறிஞன் சிருஷ்டி காலத்திற் பிறப்பதுமில்லை பிரளயகாலத்தில் இறப்பதுமில்லை. (2)

(வி-ம்) ஹே அர்ச்சுன! இந்தச் சாதனவடிவ ஞானத்தை, சிரத்தை பக்தியோடு அநுட்டித்துப் பரமேசுராகிய எமது அத்துவிதீய நிர்க்குண சொரூபத்தை அத்தியந்தம் அபேதமாய் அடைந்த அதாவது—நானே அத்துவிதீய நிர்க்குண பிரஹ்மசொரூபன் எனத் தனதான்மாவை அத்துவிதீய நிர்க்குணப் பிரமசொரூபமாயுணர்ந்த—வித்துவான் சிருட்டியிலும் உத்பத்தியாகிறதில்லை, பிரளயத்திலும் லயமாவதில்லை; அதாவது, இரணியகருப்பன் முதலியோர்கள் உத்பன்னராயினும் தத்துவஞானி உற்பவியான். அந்த இரணியகருப்பன் முதலியோர்களின் விநாச காலரூபப் பிரளயத்திலும் அவன் இலயப்படான் என்பதாம். (2)

(அ-கை.) இவ்வாறு இரண்டு சுலோகங்களால் அந்த ஞானத்தைத் துதித்துக் கேட்போனே ஸ்ரீ பகவான் அந்த ஞானபிழுகமாக்கியருளினர். இப்போது பரமேசுராதீனமாயிருக்கப்பட்ட பிரகிருதிபுருஷர்களே சர்வ பூதங்களின் உத்பத்திக்குக் காரணமாம். சாங்கியநூல்போலச் சுவதந்திரமாய் அவ்விரண்டிற்கும் பூதங்களின் காரணத்தன்மையின்று என்று சொல்லக்கருதிய பொருளே ஸ்ரீ பகவான் இரண்டு சுலோகங்களால் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஐஐ யொநிஃழஹஉஹ வுஹ தவ்ஷிஹஹ-ழம் உயாஅஹழி।
ஹம்ஹவஃஹவ-ழஹ ஔதா॥நாம் ததொ ஹவதி ஹாரத ॥ (3)

ப-ம். 3 ஐஐ 4 யொநிஃ 2 ஊஹஉஹ வுஹ 5 தவ்ஷிஹ 7 மஹ-ழம் 8 உயாசி 6 சுஹம் 11 ஹம்ஹவஃ 10 ஹவ-ழஹ ஔதாநாம் 9 ததஃ 12 ஹவதி 1 ஹாரத.

(அ-ம்.) ஹே பாரத! முக்குணண்மக மாயை சுசுராகிய எமது கர்ப்பாதானத்தின்றுனமாம். அம்மாயையால் பரமேசுராகிய யாம் சங்கல்பரூப கர்ப்பத்தைத் தாரணஞ்செய்வேம் அதனாலே எல்லாப் பூதங்களுமுண்டாம். (3)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுராகிய எமது மகத்பிரமயோனி (ஈண்டு மகத்பிரம சப்தத்தால் அவ்வியாகிருதத்தைக் கொள்ளவேண்டும்) எந்த அவ்வியாகிருதம் சாஸ்திரத்தில், அவித்தை, அஞ்ஞானம், பிரகிருதி, முக்குணவடிவமாயை, எனக் கூறப்படுகின்றதோ அந்த அவ்வியாகிருதம் தனது வாஞ்சி சர்வ காரியங்களையும்நோக்க அதிகமானதால் மகத்தெனப்படுகின்றது. அங்ஙனமே தனது சர்வ காரியங்களின் விருத்திக்குக்காரணமானதால் பிரமமெனப்படுகின்றது; அல்லது பிரமத்திற்குபாதியானதால் பிரமமெனப்படுகின்றது; அல்லது மகதத்துவமெனப் பெயரிய முதற்காரிய விருத்தி யேதுவாதலின் பிரமமெனப்படுகின்றது. அத்தன்மைய மகத்பிரமமெனும் பெயரையுடைய முக்குணவடிவமாயை பரமேசுராகிய எமது யோனியாம்; அதாவது கருப்பாதானஞ் செய்வதற்குத்தானமாம். அத்தன்மைய மாயாவடிவ யோனியில் நாம் கருப்பத்தைத்தாரணம் பண்ணுவோம்; அதா

வது சர்வ பூதங்களின் தோற்றத்திற்குக் காரணவடிவ 'வனகொஹம் பெஹ ஸ்யாம் வ்ரஜாயெய' என்னும் ஈகூஷணவடிவ சங்கற்பமாகிய கருப்பத்தை அந்த மாயாவடிவ யோனியில் தாரணம் பண்ணுவேம்; அதாவது அந்தச் சங்கற்பவிடயமாகச் செய்வேம். இவ்வுலகத்தில் தந்தை புண்ய பாபங்களோடு கூடியதும் நெற் கோதுமை முதலிய ஆகாரத்தால் தன்னிடத்தில் விலீனப்பட்டதுமாகிய புத்திரனைத் தூலவுடலோடு சம்பந்தப்படுத்துவதற்பொருட்டுத் தனது மனைவியின் யோனியில் வீரியத்தைத்தெளித்தல் பூர்வகம் கருப்பத்தைத்தாரணஞ்செய்கின்றான். அதனால் அப்புத்திரன் தூலவாக்கையோடு தொடர்பையடைகின்றான். அந்தச் சரீரத்தின் சம்பந்தத்தின் பொருட்டு இடையில் கலிலம் புத்புதம் முதலிய பல வவத்தைகளையடைகின்றான். அதுபோலப் பிரளயகாலத்தில் பரமேசுராகிய நம்மிடத்தில் விலீனப்பட்டிருந்த அவித்தை காமகருமங்களையுடைய க்ஷேத்ரக்ஞனெனும் சிவனைச்சிருட்டிகாலத்தில் காரியகாரணசங்காத வடிவ போக்கிய க்ஷேத்ரத்தோடு சம்பந்தப்படுத்துதற்பொருட்டே பரமேசுராகிய நாம் சிதாபாசவடிவ வீரியத்தைத் தெளித்தல் பூர்வகம் அந்த மாயாவிருத்திவடிவ கருப்பத்தைத் தாரணஞ்செய்கின்றோம். அந்தச் சரீர சம்பந்தத்தின்பொருட்டே இடையில் வானுதி பூதங்களின் உத்பத்தி வடிவ அவத்தையுண்டாகின்றது. அந்த மாயாவடிவ யோனியில் எம்மாற் செய்யப்பட்ட கருப்பாதானத்தினாலே இரணிய கருப்பன் முதலிய சர்வ பூதங்களுமுண்டாகின்றன என்னுற் செய்யப்பட்ட கருப்பாதான மொழிந்து அவைகள் உற்பத்தியாகா என்பதாம். (3)

(அ-கை.) ஹே பகவன்! மாயாவடிவ யோனியில் பரமேசுராகிய உம்மாற் செய்யப்பட்ட கருப்பாதானத்தினின்றுஞ் சர்வ பூதங்களின் உற்பத்தி எவ்வாறும் தேவதாமுதலிய தேக விசேடங்கட்கு வேறுகாரணமும் சம்பவித்தல்கூடுமாதலின் என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸர்வயொநிஷு கௌந்தேய மூர்த்தயஃ ஸம்ஹவந்தி யாஃ।
தாஸாம் ப்ரஹ்ம மஹத்யோநிரஹம் பீஜப்ரதஃ பிதா ॥ (4)

ப-ம். 2 ஸர்வயொநிஷு 1 கௌந்தேய 4 மூர்தயஃ 5 ஸம்ஹவந்தி 3 யாஃ 6 தாஸாம் 7 ப்ரஹ்மமஹத் 8 யொநிஃ 9 அஹம் 10பீஜப்ரதஃ 11 பிதா.

(அ-ம்.) ஹே கௌந்தேய! தேவதை முதலிய சர்வ யோனிகளிலு முண்டாஞ் சரீரங்கட்கு அம்மாயையே மாதாவடிவினளாவள்; பரமேசுராகிய நாமோ கருப்பாதானஞ் செய்யும் பிதாவடிவமாவேம். (4)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தேவ பிதிரு மநுட பசு மிருகம் என்பன முதலிய சர்வ யோனிகளிலும் எவ்வெம்மூர்த்தங்களுண்டாகின்றனவோ அதாவது ஜராயு ஜாதிபேதத்தால் விலக்ஷண நாலுவகை ஆகாரமுடைய எவ்வெத்தேகங்களுண்டாகின்றனவோ அவ்வச்சரீர வடிவ மூர்த்திகளின் காரண பாவத்தையடைந்த அந்த அவ்வியாகிருதமெனு மாயையே மாதாவாவள். பரமேசுராகிய நாமோ அந்த மாயைவடிவ யோனியில் கர்ப்பாதானம் பண்ணப்பட்ட அந்தச் சர்வ சரீரங்களின் பிதாவடிவம். இதனலிப்பொருள் பெறப்பட்டது.—அவ்வத்தேவதை முதலிய சரீரங்கட்கு உலக விளக்கமாய் எவ்வெக்காரணந்தான்றுகின்றதோ அக்காரணங்களனைத்தும் அந்த அவ்வியாகிருதமெனும் மாயைவடிவ மகத்பிரமத்தின் அவத்தாவிசேடங்களேயாம். ஆதலின், 'ஸம்ஹவஃ ஸர்வயோநீநாம் தவோஹவதி ஸாஸ்வத' என்னும் ஸ்ரீ பகவான் வாக்கியம் பொருத்தமுடையதேயாம்என்க. (4)

(அ-கை.) ஆண்டுப்பூர்வம் ஈசுரரை அங்கீகரியாத நிரீசுரவாதமாகிய சாங்கியநூலை மறுத்து க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞர்களின் சம்யோகத்தை ஈசுராதீன

மென அருளிச்செய்தனர். இப்போது எந்தக் குணத்தில் எவ்வாற்றல் சங்கமாகின்றது? அக்குணம் யாது? அக்குணம் இவனை எவ்வாறு பந்தப்படுத்துகின்றது? என்னு மர்த்தத்தை ஸ்ரீ பகவான் 'ஸக்வம்ரஜஸ்தம' என்னுஞ் சுலோக முதற் கொண்டு 'நாந்யம் குணேப்ய: கர்தாரம்' என்னுஞ் சுலோகத்தினும் முற்பதினைந்து சுலோகங்களா லருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸக்வம் ரஜஸ்தம இதி குணாஃ ப்ரக்ருதிஸம்பவாஃ।
நிபத்நந்தி மஹாபாஹோ தேஹே தேஹிநமவ்யயம் ॥ (5)

ப-ம். 2 ஸக்வம் 3 ரஜஃ 4 தமஃ 5 இதி 7 குணாஃ 6 ப்ரக்ருதிஸம்பவாஃ 11 நிபத்நந்தி 1 மஹாபாஹோ 8 தேஹே 10 தேஹிநம் 9 அவ்யயம்.

(அ-ம்.) ஹே நிஷ்புயமுடைய அர்ச்சுன! சத்துவ ரஜசு தமசு என்னுமிந்த மாயையிலுண்டாகிய முக்குணங்களும் அவ்வியயமாகிய சீவான்மாவை இத் தேகத்தில் பந்திக்கின்றன. (5)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சத்துவ ரஜசு தமசு என்னு நாமங்களையுடைய முக்குணங்களும் சைதன்ய புருஷனைக்குறித்து நித்தியமேபரதந்திரம்; ஒருபோதும் சுவதந்திரமன்று, என்னை? இவ்வுலகத்தில் எவ்வெப்பொருள் அசேதனவடிவமோ அந்தச் சர்வ அசேதனப் பொருள்களும் சைதன்ய புருஷன் பொருட்டேயாம். வீடு முதலிய அசேதனப்பொருள்கள் சேதனனுகிய வீட்டிலுள்ள புருஷன் பொருட்டேயாம். அதுபோல அந்தச்சத்துவ முதலிய குணங்களும் அசேதனமானதால் சேதனபுருஷன் பொருட்டேயாம். நியாயநூலார் உருவமுதலிய குணங்களை மண் முதலிய த்ரவியாசிரிதமெனக் கொள்ளுமாறுபோல இக் குணங்கள் யாதொரு த்ரவியாசிரிதமுமன்று; அங்ஙனமே நியாயநூலார் மண் முதலிய குணித்ரவியங்களை உருவ முதலிய குணங்களின் வேறெனக்கொள்வது போல ஈண்டுச் சித்தாந்தத்தில் அந்தச்சத்துவ முதலிய குணங்கள் மாயாவடிவப் பிரகிருதியினும் பின்னமெனவிவக்ஷிதமன்று; மாயைவடிவப் பிரகிருதியை முக்குண வடிவமே யெனக்கொள்வதால். அற்றேல் ஹே பகவன்! அக்குணங்கள் பிரகிருதிவடிவமே யெனக்கொள்ளிலோ 'ப்ரக்ருதிஸம்பவாஃ' என்னும் வாக்கியத்தால்பிரகிருதியினின்றுஉற்பத்தி எவ்வாறு கூறப்பட்டதென்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'ப்ரக்ருதிஸம்பவாஃ' என ஹே அர்ச்சுன! சத்துவ முதலிய முக்குணங்களின் சாம்யாவத்தை பிரகிருதியாம். எதைச் சாஸ்திரத்தில் பகவத்மாயை எனக் கூறுகின்றனரோ, அத்தன்மைய மாயாவடிவப்பிரகிருதியினின்றும் அச்சத்துவ முதலிய குணங்கள் தம்முள் அங்காங்கித் தன்மையால் விஷமத்தன்மையின் பரிணமத்தை யடைகின்றன. இதனல் அக்குணங்கள் பிரகிருதிசம்பவங்களெனக் கூறப்படுகின்றன. அக்குணங்கள் இத்தேகத்தில் (அதாவது அப்பிரகிருதியின் காரியவடிவ தேகேந்திய சங்காதங்களில்) அவ்யயரூபதேகியை (அதாவது உண்மையில் சன்மமரண முதலிய விகாரங்களின்மையின் அவ்வியய வடிவமும்) அவித்தையால் தேகத்தோடு தாதான்மிய பாவத்தையுமடைந்த சீவனைப்பந்திக்கின்றன: அதாவது உண்மையில் நிருவிகார வடிவமாயினும் அச்சீவான்மாவை அந்தச்சத்துவ முதலிய குணங்கள் தமது விகாரங்களோடு பொருந்தியதுபோற் காட்டுகின்றன. இதுவே அக்குணங்களாற் செய்யப்பட்ட அச்சீவான்மாவின்கண்ணுள்ள பந்தமாம். இவ்வாறே 'நிபத்நந்தி' என்னுஞ் சப்தார்த்தம் மேற்சுலோகத்திலுமுணரத்தக்கது. அதிற்றிட்டாந்தம் நீரானிறைந்தபாத்திரம் வானிலுள்ள இரவியைப் பிரதிபிம்பாத்தியாசத்தால் தன்மாட்டுள்ளகம்பன முதலிய விகாரங்களோடு கூடியதுபோற் காட்டுவதுபோல

வாம். அச்சத்துவ முதலிய குணங்களும் உண்மையில் நிருவிகாரமாகிய ஆன்மாவையும் தன் மாட்டுள்ள விகாரங்களோடுகூடியதுபோற் காட்டுகின்றன. ஆன்மாவின்கண் உண்மையிற் பந்தந்தொடர்புறுவாற்றை 'ஸுரஜஸ்தமோவிகளெய நகு ரொதிநவிவ்யதெ' என்னுஞ் சுலோகத்தில் முன்னர் விரிவாய்க் கூறினும் என்க. (5)

(அ-கை.) ஆண்டுப் பூர்வ சுலோகத்தில் சத்துவ முதலிய மூக்குணங்கட்கு இச்சீவான்மாவைப் பந்தப்படுத்துந்தன்மை கூறப்பட்டது. இப்போது எந்தக் குணம் எதன் சங்கத்தால் இச்சீவான்மாவைப் பந்தப்படுத்துகின்றதென்னு மர்த்தத்தை ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். தத்ர ஸத்வம் நிர்மலத்வாத் ப்ரகாஶகமநாமயம் ।
ஸுகஸங்கேந பத்நாதி ஜ்ஞாநஸங்கேந சாநக ॥ (6)

ப-ம். 2 தத்ர 6 ஸத்வம் 3 நிர்மலத்வாத் 4 ப்ரகாஶகம் 5 சுநாமயம் 7 ஸுகஸங்கமெந 10 பத்நாதி 9 ஜ்ஞாநஸங்கமெந 8 அ 1 சுநக.

(அ-ம்.) ஹே சர்வ வியசனமின்றிய அர்ச்சுன! அந்த மூக்குணங்களுள் சொச்சமானதால் பிரகாசகமும் துக்கமற்றதுமாகிய சத்துவகுணம், இச்சீவான்மாவைச் சுகசங்கத்தாலும், ஞானசங்கத்தாலும், பந்திக்கின்றது. (6)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சத்துவ ரஜசு தமசு என முன்னர்க்கூறப்பட்ட மூக்குணங்களுள் முதலாவதாகிய சத்துவகுணம் எத்தன்மையதெனின், பிரகாசமாம்; அதாவது சைதன்யத்தின்தமோகுணத்தாலாய ஆவரணத்தை நாசப்படுத்துவதாம். அதிற் காரணத்தை அருளிச்செய்கின்றார் 'நிர்மலத்வாத்' என; அதாவது தனது சுவச்சவியல்பால் சேதனத்தின் பிரதிவிம்பத்தைக் கிரகித்தற்குரியதாதலின் அது பிரகாசகமாம்; அல்லது அது கேவலம் சைதன்யத்தின் அபிவியஞ்சகமாத்திரமேயன்று; மற்றும், அநாமயமுமாம்: அதாவது துக்கவடிவ ஆமய விரோதியாகிய சுகத்திற்கும் அபிவியஞ்சகமாம். இவ்வாறு சைதன்யம் சுகம். இவைகளின் அபிவியஞ்சகமாகிய அச்சத்துவகுணம் இச்சீவான்மாவைச் சுகசங்க ஞானசங்கங்களால் பந்தப்படுத்துகின்றது. ஈண்டுச்சுகம், ஞானம், என்னுஞ் சப்தங்களால் அந்தக்காரணத்தின் பரிணமவடிவ சுகம், ஞானங்களைக்கொள்ள வேண்டும் ஆன்மவடிவ சுகம், ஞானங்களைக்கொள்ளக்கூடாது, என்னை? 'ஊர்த்வம் கச்சந்தி ஸத்வஸ்தா மத்யே திஷ்டந்தி ராஜஸா: ஜகந்யகுணவ்ருத்திஸ்தா அதோ கச்சந்தி தாமஸா:' என முன்னர்க்கூறிய சுலோகத்தில் சுகமும் சேதனவடிவஞானமும் இச்சைத்துவேட முதலியவைகளைப் போல க்ஷேத்ரத்தின் தருமவடிவமாகவே கூறப்பட்டன. ஆண்டு அந்தக் காரணத்தின் தருமவடிவ சுக ஞானங்கட்கு ஆன்மாவிலுள்ள அத்தியாசம் நான் சுகி நாஜ்ஞாநவாந்நேறன் என்னும் பிரதீதியாற்சித்தமாம். அது சுகசங்கமும் ஞானசங்கமுமாம். அத்தன்மையசுக, ஞான சங்கங்களால் அச்சத்துவகுணம் இச்சீவான்மாவைப் பந்திக்கின்றது. ஆண்டு, விஷயத்தின் தருமம் பிரகாசகவடிவ விஷயியதாகா; கட முதலிய விஷயங்களின்தருமம் பிரகாசகவடிவ சூரியனுடைய தாகாததுபோலவாம்: ஆதலின் இப்பந்தங்களனைத்தும் அவித்தியாமாத்திரமேயாம். இதை முன்னர்ப் பலமுறையுங் கூறினும். (6)

(அ-கை.) மேலும்,

சு-ம். ரஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணாஸங்கஸமுத்பவம் ।
தந்நிபத்நாதி கௌந்தேய கர்மஸங்கேந தேஹிநம் ॥ (7)

ப-ம். 3 ஸஜ§ 4 ஸாமாந்யகம் 5 விஜி 2 தமஷ்ணாலம்மஹஜ்ஜ்வலம் 6 தகீ 9 நிபை
ஜ்யாதி 1 களஞ்ஜய 8 கஜ்ஜலம்மெத 7 தெஹிநழி.

(அ-ம்.) ஹே கௌந்தேய! திருஷ்ணை ஆசங்கம் என்னுமிரண்டையுந் தோற்றுவிப்பதான ரஜோகுணத்தை நீ ராகவடிவ மென்றுணர்ந்து, அந்த ரஜோகுணம் இந்தத் தேகாபிமானியாகிய சீவனைக் கருமசங்கத்தாற் பந்தப்படுத்துகின்றது. (7)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஆண்டு, இவன் சத்தமுதலிய விடயங்களில் எதனுல் ரஞ்சனத்தை (பிரியத்தை) அடைகின்றானே அது ராகமாம், அந்தராகமே வடிவம் எதற்கோ அது ராகாத்மகமாம்; அத்தன்மைய ராகாத்மக ரஜோகுணத்தை நீயுணர்ந்து. அந்த ராகம் ரஜோகுணத்தின் தருமமாயினும், தருமதருமிகட்குத் தாதான்மியமேயாதலின், அந்த ரஜோகுணத்தை ராகரூபமெனக் கூறப்பட்டது. இதனுனே அந்த ரஜோகுணம் திருஷ்ணை சங்கங்களை யுண்டுபண்ணுவதாம். ஆண்டு, அடையாதபொருளின் அபிலாஷை திருஷ்ணையாம்; அடைந்த வஸ்து விநாசப்படினும் அதையிரட்சிக்கும் அபிலாஷை ஆசங்கமாம். அந்தத் திருஷ்ணை ஆசங்கங்களை யுண்டுபண்ணுவது திருஷ்ணை சங்க சமுத்பவமாம்; அத்தன்மைய ரஜோகுணம் உண்மையில் அகர்த்தாவடிவமாயினும் கருத்திருத்துவாபிமானமுடைய சீவனைக் கருமசங்கத்தாற் பந்திக்கின்றது. ஆண்டு, இகவுலக பரவுலகங்களின் பலங்கட்குக் காரணவடிவங்களான லௌகிக வைதிக கருமங்களுள், நானிக்கருமத்தைச் செய்கின்றேன், நானிக்கருமபலத்தை நுகருவேன், என்னும் அபினிவேச விசேஷம் கருமசங்கமாம். அத்தன்மைய கருமசங்கத்தால் அந்த ரஜோகுணம் இச்சீவான்மாவைப் பந்திக்கின்றது. அது கேவலம் பிரவிருத்திக்கே காரணமாதலின் என்க. (7)

(அ-கை.) மேலும்,

சு-ம். தஜ்ஞானஜம் விஜி மொஹநம் ஸர்வதெஹிநாம்।
ப்ரமாதாலஸ்யநித்ராபி ஸ்தந்நிபத்நாதி பாரத ॥ (8)

1-10

ப-ம். 3 தஜ்ஞ§ 2 தூ 4 ஸஜ்ஞானஜம் 5 விஜி 7 மொஹநம் 6 ஸர்வதெஹிநாம் 9 ப்ரமா
தாலஸ்யநித்ராபி 8 தகீ 10 நிபத்நாதி 1 பாரத.

(அ-ம்.) ஹே பாரத! மற்றும் தமோகுணத்தை நீ அஞ்ஞானசன்னிய மென்றுணர்ந்து, எல்லாச் சீவர்கட்கும் பிராந்தியையுண்டாக்கும் அந்தத் தமோகுணம் பிரமாத ஆலசிய நித்திரைகளால் இச்சீவனைப் பந்தப்படுத்துகின்றது. (8)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஆண்டு, 'தஜ்ஞூ' என்னும் வாக்கியத்திலுள்ள 'து' சப்தமானது முன்னர்க்கூறியசத்துவராஜசுக்களை நோக்க இதில்விலட்சணத்தன்மையை அறிவுறுத்தற்பொருட்டாம். இத்தமோகுணத்தை ஆவரண சக்திவடிவ அஞ்ஞானத்தினின்றும் உண்டானதென்றுணர்ந்து. இதனுனே அது தேகாபிமானியான சர்வ சீவர்களையும் மோகப்படுத்துகின்றது; அதாவது, அவிவேகவடிவத்தால் பிராந்தியை உண்டுபண்ணுவதாகிய தமோகுணம் இத்தேகாபிமானியாகிய சீவனைப் பிரமாத ஆலசிய நித்திரைகளாற் பந்திக்கின்றது. ஆண்டு, வஸ்துவை விவேகஞ்செய்தற்கேலாமை பிரமாதமாம்; அதுவோ, சத்துவகுணத்தின் பிரகாசவடிவ காரியத்திற்கு விரோதியாம், முயற்சி பண்ணற்கு வலியின்மை ஆலசியமாம். அதுவோ, ரஜோகுணத்தின் பிரவிருத்திவடிவ காரியத்திற்கு விரோதியாம்; தமோகுணத்தை ஆலம்பனம் பண்ணப்பட்ட லயவடிவ விருத்தி விசேடம் நித்திரையாம்; அதுவோ, அவ்விரண்டு குணங்களின் காரியங்கட்கும் விரோதியாம் என்க. (8)

(அ-கை.) ஹே பகவன்! கூறிப்போந்த காரியங்களுக்குள் எக்காரியத்தில் எக்குணத்திற்கு உத்கிருஷ்டத்தன்மையாம் என அர்ச்சுனனுக் குணருமவேட்கை வர ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸ்ரூகூம் ஸ்ரூவெ ஸ்ரஂஜயதி ரஜஃ கூஉஂணி ஹாரத ।
ஜூர கூஉவ்யதீ தூ தஉஃ வ்ரூஉெ ஸ்ரஂஜயதீ்ரத ॥ (9)

ப-ம். 2 ஸ்ரூகூம் 3 ஸ்ரூவெ 4 ஸ்ரஂஜயதி 5 ரஜஃ 6 கூஉஂணி 1 ஹாரத 9 ஜூரகம் 10 கூவ்யதீ 7 தூ 8 தஉஃ 11 வ்ரூஉெ 13 ஸ்ரஂஜயதி 12 உத.

(அ-ம்.) ஹே பாரத! சத்துவகுணம் இப்புருஷனைச் சுகத்திற்பொருத்துகின்றது, ரசோகுணம் கர்மத்திற் பொருத்துகின்றது, தமோகுணமோ ஞானத்தை ஆச்சாதித்துப் பிரமாதத்திலும் பொருத்துகின்றது. (9)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! கூறிப்போந்த சத்துவகுணம் உத்கிருஷ்ட (அதிக)த்தையடைந்து இத்தேகாபிமானியாகிய சீவனைச்சுகத்திற் பொருந்தவைக்கிறது; அதாவது, துக்ககாரணத்தை அமிழ்த்தி இவனைச் சுகத்திற் செலுத்துகின்றது. இவ்வாறு ரசோகுணமும் உத்கிருஷத்தையடைந்து சுகாரணத்தை அமிழ்த்தி இவனை இலௌகிகவைதிக கருமங்களில் செலுத்துகின்றது, தமோகுணமோ, பிரமாணவலியாலுண்டாயினும் சத்துவகுணத்தின் காரியமாகிய ஞானத்தை மறைத்து இவனைப் பிரமாதத்திற் செலுத்துகின்றது. ஆண்டு, அவசியமாயறியவந்துறு பொருளை அறியாமை பிரமாதமாம், அத்தன்மைய பிரமாதத்தில் இவனைச் செலுத்துகின்றது. ஈண்டு, 'ஸ்ரஂஜயதீ்ரத' என்னும் வாக்கியத்திலுள்ள உத என்னுஞ் சப்தமானது, அபி என்னுஞ் சப்தார்த்தவாசகமாம். அதனால் ஆலசியநித்திரைகளைக் கொள்ளவேண்டும். அதாவது, அந்தத்தமோகுணம் இச்சீவான்மாவை ஆலசிய நித்திரைகளிற் செலுத்துகின்றது. ஆண்டு அவசியமாய்ச் செய்தற்குரிய காரியத்தையுஞ்செய்யாமை ஆலசியமாம், இலயமெனும் தாமசவிருத்திவிசேடம் நித்திரையாம் என்க. (9)

(அ-க.) ஹே பகவன்! இந்தப்பூர்வ சுலோகத்திற்கூறப்பட்ட சத்துவமுதலிய குணங்கள் தங்காரியத்தை எக்காலத்திற்செய்கின்றன என்னு மர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ரஜஸ்தஸ்சாபிபூய ஸ்ரூகூம் ஹவதி ஹாரத ।
ரஜஃஸ்ரூகூம் தஉஸ்சைவ தஉஃஸ்ரூகூம் ரஜஸ்ததா ॥ (10)

ப-ம். 2 ரஜஃ 4 தஉஃ 3 அ 5 சாபிபூய 6 ஸ்ரூகூம் 7 ஹவதி 1 ஹாரத 9 ரஜஃ 10 ஸ்ரூகூம் 11 தஉஃ 8 அ வன வ 13 தஉஃ 14 ஸ்ரூகூம் 15 ரஜஃ 12 ததா.

(அ-ம்.) ஹே பாரத! ரசோகுணதமோகுணங்களை அமிழ்த்திச் சத்துவகுண மிகுங்காலும், ரசோகுண சத்துவகுணங்களை அமிழ்த்தித் தமோகுணமிகுங்காலும், தமோகுண சத்துவகுணங்களை அமிழ்த்தி ரசோகுணமிகுங்காலும், அக்குணங்கள் தத்தங்காரியங்களைச் செய்வனவாம். (10)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ரசதமோகுணங்களை ஏககாலத்திலமிழ்த்தி, அதாவது, திரஸ்காரம்பண்ணி, அச்சத்துவகுணம் மிகுதிப்பாட்டையடையுங்காலே கூறிப்போந்த தனது காரியத்தை அசாதாரண வடிவத்தாலுண்டாக்கும். இவ்வணமே ரசோகுணமும் சத்துவ தமோகுணங்களை ஏககாலத்தில் அமிழ்த்தி மிகுதிப்படுங்காலே கூறிப்போந்த தனது காரியத்தை அசாதாரணவடிவத்தாலுண்டாக்குகின்றது. இவ்வணமே தமோகுணமும் சத்துவ ரசோகுணங்களை ஏக

காலத்திலமிழ்த்தி மிகுதியை யடையுங்காலே கூறிப்போந்த தனது காரியத்தை அசாதாரணவடிவத்தாலுண்டாக்குகின்றது என்பதாம். (10)

(அ-கை.) ஹே பகவன்! அக்குணங்களின் விருத்தி [மிகுதிப்பாடு] எவ்விலிங்கத்தாலுணரப்படும்? அதை யுணர்ந்தே இவன் அதை நிவிருத்திசெய்வதிற்சமர்த்தனவன்றே? என்றருச்சுனனுக்கறியும் வேட்கையுண்டாக ஸ்ரீ பகவான் விருத்தியை யடைந்த அக்குணங்களின் இலிங்கத்தை மூன்று சுலோகங்களாலருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸவஃஜ்ஞானமெஷாꣳ தெஹெஷ்விந வ்ருகாஸ உவஜாயதெ।
ஜ்ஞானம் யதா ததா வித்யாத் விவ்ருத்தம் ஸத்வமித்யுத ॥ (11)

ப-ம். 3 ஸவஃஜ்ஞானமெஷாꣳ 2 தெஹெ 1 கவ்ஷிந 6 வ்ருகாஸஃ 7 உவஜாயதெ
5 ஜ்ஞானம் 4 யதா 8 ததா 12 வித்யாத் 10 விவ்ருத்தம் 9 ஸத்வம் 11 இதி உத.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இத்தேகத்தில் சுரோத்திரமுதலிய சர்வேந்திரியங்களில் எப்போது ஞானவடிவப் பிரகாசம் உண்டாகின்றதோ அப்போது சத்துவ குணம் விருத்தியடைந்தது என்று நீயுணர்ந்து. (11)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இச்சீவான்மாவின் இன்பதுன்பங்கட் கிருப்பிடமாகிய இத்தேகத்திலுள்ள சப்தமுதலிய விடயங்களின் உபலப்திக்குச் சாதனவடிவ சுரோத்திரமுதலிய இந்திரியவடிவ துவாரங்களில் எப்போது ஞானவடிவப் பிரகாசமுண்டாகின்றதோ; அதாவது, தீபம் தனது விடயவடிவ பதார்த்தங்களின் அந்தகாரவடிவ ஆவரணத்திற்கு விரோதியாவதுபோலத் தனது சத்தமுதலிய விடயங்களின் ஆவரணத்திற்கு விரோதியாகிய அந்தச் சத்தமுதலிய விடயாகார புத்திவிருத்திவடிவ பரிணமவிசேடம் பிரகாசமாம். அத்தன்மைய ஞானவடிவப் பிரகாசம் உண்டாகுங்காலத்தில், அந்த ஞானப்பிரகாசவடிவ இலிங்கத்தால், இவன் இப்போது பிரகாசவடிவ சத்துவகுண மிகுதிப்பாட்டையடைந்ததென்றுணர்கின்றான். ஈண்டு 'விவ்ருத்தம் ஸத்வமித்யுத' என்னும் வாக்கியத்திலுள்ள உதசப்தமானது அபி என்னுஞ் சப்தார்த்தவாசகமாம். அதனாலிப்பொருளறிவுறுத்தப்படுகின்றது:—ஞான வடிவப் பிரகாசத்தால் சத்துவகுண மிகுதிப்பாட்டையறிவதுபோலச் சுகமுதலிய இலிங்கங்களாலும், இவன் சத்துவகுணத்தின் விருத்தியை அறிகின்றான் என்பதாம். ஒரு வியாக்கியானத்திலோ உத என்னுஞ் சப்தத்திற்குச் சத்துவகுணத்தின் மிகுதியையறிவதுபோல, அந்த ஞானவடிவப் பிரகாசத்தால் ரசதமோகுணங்களின் க்ஷீணத்தன்மையையு முணர்கின்றான் எனப் பொருள் பண்ணப்பட்டிருக்கின்றதென்க. (11)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். லொபஃ ப்ரவ்ருத்திராரம்பஃ கர்மணாமஸமஃ ஸ்ப்ருஹா।
ரஜஸ்யெதானி ஜாயந்தெ விவ்ருத்தெ பரதர்ஷப ॥ (12)

ப-ம். 4 லொபஃ 5 ப்ரவ்ருத்திஃ 7 ஆரம்பஃ 6 கர்மணாம் 8 அசமஃ 9 ஸ்ப்ருஹா
2 ரஜஸி 10 வ்ருத்தானி 11 ஜாயந்தெ 3 விவ்ருத்தெ 1 பரதர்ஷப.

(அ-ம்.) ஹே பரதரிஷப! ரசோகுணமிகுதிப்படவே, லோபம் பிரவர்த்தி கருமங்களின் ஆரம்பம், அசமம் ஸ்பிருகை என்னு மனைத்துமுண்டாம். (12)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இராகவடிவ ரசோகுணமிகவே இப்புருஷனிடத்து உலோபம், பிரவிருத்தி கருமங்களின் ஆரம்பம், அசமம் ஸ்பிருகை, என்

னுமித்துணை, இராகாத்மகலிங்கங்களுண்டாகின்றன; அதாவது, இந்த உலோப முதலிய இலிங்கங்களால் இவன் இரசோகுணவிருத்தி (மிகுதி)யை யுணர்கின்றன். ஆண்டு மிகுந்த திரவியமுதலிய பொருள்கள் கிடைத்திருப்பினும், அவைகள் கிடைக்கவேண்டுமென்னும் அவைகளிலுள்ள மிகுந்த அபிலாஷை உலோபமாம்; அதாவது, தனது விடயப்பிராப்தியாலும் நீங்காத இச்சாவிசேடம் உலோபமாம். இடைவிடாமலே முயற்சியுடையோனுதல் பிரவிருத்தியாம். பெரும் பொருட் செலவால் பெறப்படுவதும், சாதகாயாசத்தைத் தருவதுமாகிய காமிய நிஷித்தலௌகிகமகாக்கிரக முதலிய விடயகவியாபாரம் கருமமாம். அத்தன்மைய கருமங்களைத் தொடங்கல் கருமாரம்பமாம். இக்காரியத்தைச்செய்து மீண்டும் நான் இக்காரியத்தைச் செய்வேன், இவ்விரண்டாவது காரியத்தைச்செய்து மீண்டும் நான் மூன்றாவது காரியத்தைச் செய்வேன், என்னுஞ் சங்கற்பத்தொடர்பின் உபராமமின்மை அசமமாம். பிறர் பொருளைக்கண்டமாத்திரத்தால் எவ்விதமான வுபாயத்தானும் அதைக் கைப்பற்றவேண்டுமென்னும் இச்சை ஸ்பிருகையாம். இவ்வாறு உலோபமுதற்கொண்டு ஸ்பிருகை ஈறுகச்சொல்லப்பட்ட இலிங்கங்களால் இவன் மிகுதிப்பாடடைந்த இரசோகுணத்தை யுணர்கின்றன் என்பதாம். (12)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். சுவ்ருகாஸ்ரோஷவ்ருத்திஸ்ச வ்ரதாதௌ ச ஹ வை அ।
தத்ஹ்யேதானி ஜாயந்தே விவ்ருத்தே கர்மணி நர ॥ (13)

ப-ம். 5 சுவ்ருகாஸ்ரஃ 7 சுவ்ருத்திஃ 6 அ 8 வ்ரதாதஃ 10 தௌஹ 4 வை 9 அ 2 தத் 11 வை தானி 12 ஜாயந்தே 3 விவ்ருத்தே 1 கர்மணி நர.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! தமோகுணம் மிகுதியாகவே, அப்பிரகாசம், அப்பிரவிருத்தி, பிரமாதம், மோகம், என்னும் இத்துணையிலிங்கங்கள் உண்டாகின்றன. (13)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தமோகுணம் மிகுதிப்படும்போது, அப்பிரகாசம், அப்பிரவிருத்தி, பிரமாதம், மோகம் என்னும் இத்துணை யிலிங்கங்களுண்டாகின்றன. அதாவது, இவன் வியாபிசாரமின்றிய இத்துணை யிலிங்கங்களர்னே தமோகுணத்தின் மிகுதிப்பாட்டை யுணர்கின்றன். ஆண்டு குரு நூன் முதலிய போதகாரணங்களிருப்பினும், எல்லாவாற்றானும் அப்போதத்திற்குரித்திலாமை அப்பிரகாசமாம். பொருளுணர்ச்சியை யுண்டாக்கிய பிரவிருத்திக்குக்காரணவடிவ அக்கினிஹோத்திரம் வேட்க, என்பது முதலிய சாத்திரங்களிருப்பினும், எல்லாவாற்றானும், அவ்வக்கினிஹோத்திர முதலிய கருமங்களில் முயற்சியின் தகுதியிலாமை அப்பிரவிருத்தியாம். அப்போது செயற்பாலதாந்தன்மையாற்கிடைத்த பொருளின் ஸ்மரணமுமுண்டாகாமை பிரமாதமாம்; நித்திரை விபரியயங்கள் மோகமாம் என்க. (13)

(அ-கை.) இப்போது சாங்காலத்தில் மிகுதியை யடைந்த அச்சத்துவ முதலிய குணங்களின் பல விசேடத்தை ஸ்ரீ பகவான் இரண்டு சுலோகங்களால் அருளிச்செய்கின்றார்.

சு-ம். யதா ஸத்வே ப்ரவ்ருத்தே து ப்ரலயம் யாதி தேஹப்ருத் ।
ததோத்தமவிதாம் லோகாநமலாந் ப்ரதிபத்யதே ॥ (14)

ப-ம். 3 யதா 4 ஸத்வே 5 ப்ரவ்ருத்தே 1 து 6 ப்ரலயம் 7 யாதி 2 தேஹப்ருத்
8 ததா 9 உத்தமவிதாம் 11 லோகாந் 10 அமலாந் 12 ப்ரதிபத்யதே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மீண்டு மித்தேதகாபிமானி சத்துவகுணம் விருத்தியடையும்போது மரிக்கின் உபாசகன் மலாகித உலகத்தை யடைகின்றான். (14)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! மற்றும் இத்தேதகாபிமானியாகிய சீவன் சத்துவ குணம் மிகுதிப்படவே மரணமடைவனேல், உத்தமவித்துக்களின் உலகத்தை யடைவன்; ஆண்டு இரணியகர்ப்பர் முதலிய தேவர்கள் உத்தமராவர். அவ்வுத்தமரை யுணர்வோன், அதாவது, அந்த இரணியகர்ப்பர் முதலிய தேவர்களை உபாசிப்பவர்கள் உத்தம வித்துக்களாவர்கள். அவர்களின் உலகம், அதாவது திவ்ய இன்பநுகருமிட விசேடமும், அமலமும் அதாவது ரசதமவடிவ மலங்களற்றதுமாகிய உலகத்தை அவன் அடைவன் என்பதாம். (14)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். ரஜஸி ப்ரலயம் கத்வா கர்மஸங்கிஷு ஜாயதே।
ததா ப்ரலீ ம்ருதஸ்தஸி உத்தமவிதோ ஜாயதே ॥ (15)

ப-ம். 1 ரஜஸி 2 ப்ரலயம் 3 கத்வா 4 கர்மஸங்கிஷு 5 ஜாயதே 6 ததா 8 ப்ரலீ நஸ் 7 தஸி 9 உத்தமவிதோ 10 ஜாயதே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இத்தேதகாபிமானியாகிய சீவன் ரஜோகுண மிகுதியாகவே மரணத்தையடைந்து, கருமாதிகாரிகளாகிய மநுடர்களுக்குட் பிறக்கின்றான். அங்ஙனமே, தமோகுண மிகவே மரணப்பட்ட சீவன் பசு முதலிய யோனிகளிற் பிறக்கின்றான். (15)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இத்தேதகாபிமானியாகிய சீவன் ரஜோகுணம் விருத்தியடையவே மரணப்படுவனேல் கருமசங்கிகளிடத்தில் உற்பவிக்கின்றான். அதாவது சுருதிமிருதிகளால் விதிக்கப்பட்ட அக்கினிஹோத்ர முதலியன அவைகளால் நிடேதிக்கப்பட்ட கொலை முதலியன என்னு மிக்கருமங்களிலும் அவற்றின் பலத்திலும் அதிகாரிகளாகிய மநுடர்கள் கருமசங்கிகளாவர்கள். அத்தன்மையர்களில் சன்மத்தையடைவன். இவ்வணமே தமோகுணமிகவே இச்சீவன் மரணமடைவனேல் காரியாகாரியங்களின் விசாரமின்றிய பசுமுதலிய மூடயோனிகளில் சன்மத்தையடைவன் என்பதாம். (15)

(அ-கை.) இப்போது சத்துவமுதலிய குணங்களில் தன தநுசாரக்கருமவாயிலாய் விசித்திரபலத்திற்குக் காரணத்தன்மையை தொகுத்தருளிச் செய்கின்றார்.

சு-ம். கர்மண: ஸுக்ருதஸ்யாஹு: ஸாத்விகம் நிர்மலம் பலம்।
ரஜஸஸ்து பலம் துக்கமஜ்ஞானம் தமஸ: பலம் ॥ (16)

ப-ம். 2 கர்மண: 1 ஸுக்ருதஸ்ய 6 ஆஹு: 3 ஸாத்விகம் 4 நிர்மலம் 5 பலம் 8 ரஜஸஸ் 7 து 10 பலம் 9 துக்கம் 12 அஜ்ஞானம் 11 தமஸ: 13 பலம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மகரிஷிகள், சாத்துவிக தருமத்திற்குச் சாத்துவிகமும் நிர்மலமுமாகிய பலத்தைக்கூறியிருக்கின்றார்கள். மற்றும் ராஜசதருமத்திற்குத் துக்கவடிவபலத்தையும், தாமசதருமத்திற்கு அஞ்ஞானவடிவ பலத்தையும் கூறியிருக்கின்றார்கள். (16)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! மகரிஷிகள் உத்தமமான சாத்துவிகதருமத்திற்குச் சாத்துவிகமும் நிர்மலமுமாகிய பலத்தை கூறியிருக்கின்றார்கள்; அதாவது

சாத்துவிக குணத்தாலடையப்படுவதும் ரசதமோகுணங்களா லடையொணாதது மாகிய சுகவடிவபலம், சாத்துவிக தருமத்திற்கென்று கூறியிருக்கின்றார்கள். பாபமிசிரித (கலப்பு) மூடைய ராசத தருமத்திற்கோ, ராசதவடிவ பலத்தைக் கூறுகின்றார்கள், அதாவது, ரசோகுணத்தா லுண்டாக்கப்பட்டுப் பலவித துக்கத் தோடு கலப்புற்ற சிற்றின்பம் ராசத கருமத்தின் பலமென்று சொல்கின்றார்கள். என்னை? யாது யாது காரியமாமோ அவ்வக்காரியம் தனது காரணதுல்யமேயாம்; ஆதலின் பாபக்கலப்புள புண்ணியவடிவ ராஜஸதருமத்திற்குப் பலவகைத் துன் பத்தோடு கலப்புடைய சிற்றின்பவடிவ பலமே பொருத்தமுடையது. தாமத தருமத்திற்கோ அஞ்ஞானவடிவ பலத்தையே கூறுகின்றார்கள்; அதாவது, தமோகுணத்தாற் றோன்றியதாதலின் தாமசவடிவ அவிவேகப்பிரயுக்த துக்கம் அத்தாமத தருமத்தின் பலமெனவே கூறுகின்றார்கள். ஆண்டு, சாத்துவிக முதலிய வைகளின் இலக்கணமோ 'நியதம்ஸம்மரஹிதம்' என்பதுமுதலிய வசனங்களால், பதினெட்டாவது அத்தியாயத்தில் ஸ்ரீ பகவான் தாமாகவே திருவாய்மலர்ந் தருள்வர். ஈண்டிச் சுலோகத்தில் ஸ்ரீ பகவான் ரசதமசத்தங்களை அதனதன் காரியவடிவ கருமங்களிற் பிரயோகித்தருளினர், அதுவோ காரியகாரணங்கட்கு அபேதத்தை அங்கீகரித்துக்கூறியதாம். (16)

(அ-கை.) இப்போது ஸ்ரீ பகவான் இவ்வாறு பலங்களின் விசித்திரத்தன் மையிற் கூறிப்போந்த ஹேதுவையே அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸக்வாத்ஸஞ்ஜாயதெ ஜ்ஞாநம் ரஜஸொ லொஹ வவ அ।
வ்ருʼத்யுʼஸொஹௌ தʼஸொ ஹவதெʼஜ்ஞா நமெவ அ ॥ (17)

ப-ம். 1 ஸக்வாʼ 3 ஸஞ்ஜாயதெ 2 ஜ்ஞாநம் 5 ரஜஸஃ 6 லொஹஃ 7 வவ 4 அ
10 வ்ருʼத்யுʼஸொஹௌ 9 தʼஸொஃ 11 ஹவதஃ 12 ஜ்ஞாநʼ 13 வவ 8 அ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சத்துவகுணத்தினின்று ஞானமுண்டாம், ரசோ குணத்தினின்று உலோபமேயுண்டாம், தமோகுணத்தினின்று பிரமாதமோகங்க ளுண்டாம், அஞ்ஞானமுமுண்டாம். (17)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சுரோத்திரமுதலிய இந்திரியங்களைத் துவாரமாக வுடைய சத்த முதலியவைகளை விடயஞ்செய்யும் பிரகாசவடிவ ஞானங்களோ கேவலம் சத்துவகுணத்தினின்றே தோன்றுவனவாம். இதனாலே அந்தப் பிர காசவடிவ ஞானநுசாரியாகிய சாத்துவிக கருமத்திற்கு விளக்க மிகுதிப்பாட்டை யுடைய சுகவடிவபலமே யுண்டாகின்றது. கோடிவிடயப் பிராப்தியா னும் நீக்கற் கேலாத அபிலாஷா விசேடம் உலோபமாம். அது ரசோகுணத்தினின்றே உண் டாகின்றது. ஆண்டு நிரந்தரம் விருத்தியையுடையதும், பூரணம் பண்ணற் கேலாததுமாகிய உலோபத்திற்குத் துக்ககாரணத்தன்மை மிகவிளக்கமாம். ஆத லின், அந்த லோப பூர்வகஞ் செய்யப்பட்ட ராசஸகருமத்திற்கும் துக்கமே பல மாம். தமோகுணத்தினின்றும் பிரமாதமோகங்களுண்டாகின்றன, அஞ்ஞான மும் உண்டாகின்றது. ஈண்டு, அஞ்ஞான சப்தத்தால் அப்பிரகாசத்தைக்கொள்ள வேண்டும், பிரமாதமோக சப்தங்களினர்த்தமோ 'ஸவ்ருʼகாலொ ஸவ்ருʼவ்ருʼதிஸ்ʼ தத்வ' என்னும் முற்கூறிய சுலோகத்திற்கூறினும் என்பதாம். (17)

(அ-கை.) இப்போது சத்துவமுதலிய முக்குணங்களின் விருத்தி விசேடத் திலுள்ளவனுக்கு 'யதாஸக்வெ வ்ருʼவ்ருʼதெʼ' என்னுஞ் சுலோகத்திற் கூறப் பட்ட பலத்தையே உத்தம மத்திம அதம பாவங்களால் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஊர்த்வம் கச்சந்தி ஸத்வஸ்தா மத்யே திஷ்டந்தி ராஜஸாः।
ஜகன்யகுணவ்ருத்திஸ்தா அதோ கச்சந்தி தாமஸாः॥ (18)

ப-ம். 2 ஊர்த்வம் 3 கச்சந்தி 1 ஸத்வஸ்தாः 5 மத்யே 6 திஷ்டந்தி 4 ராஜஸாः
7 ஜகன்யகுணவ்ருத்திஸ்தாः 9 அதः 10 கச்சந்தி 8 தாமஸாः.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சத்துவ விருத்தியிலிருக்கப்பட்டவன் மேலுலகத்தையடைகின்றான், ரஜோவிருத்தியிலுள்ளவன் மனுடலோகத்திருப்பவனாகின்றான், கீழாகிய தமோகுண விருத்தியிலுள்ள தாமதன் அதோலோகத்தை யடைகின்றான். (18)

(வி-ம்.) ஆண்டு, மூன்றுவதாகிய தமோகுணத்தினீற்றில் 'வ்ருத்தி' [விருத்தி] என்னுஞ் சப்தம் ஸ்ரீ பகவானாலருளப்பட்டமையின் ஏனை இரண்டு குணங்களினீற்றிலும் அதை யருளத்திருக்கருத்தாம். இதனால் இப்பொருள் பெறப்படுகின்றது:—சாத்விகசன்ய ஞானவடிவமும் சுபகருமவடிவமுமாகிய அச்சத்துவ குணவிருத்தியிலிருக்கப்பட்டவன், அதாவது, சிரத்தையோடு அவ்விருத்தியைத் தாரணம் பண்ணப்பட்டவன் பிரமலோகமீறுகிய மேலுள்ள தேவலோகங்களையடைகின்றான்; அதாவது, அந்த ஞானகருமங்களின் குறைவு மிகுதித்தன்மைகளால் அவன் குறைவு மிகுதித்தன்மைகளையுடைய அத்தேவதைகளிடத்திலே பிறக்கின்றான்; மநுடபசுமுதலிய தேகங்களை அவன் எடுப்பதில்லை. உலோப முதலிய பூர்வகம் ராஜசகருமவடிவ ரஜோகுண விருத்தியிலிருப்பவன், அதாவது, அந்த ராஜசகருமவடிவ விருத்தியை மிக அன்போடு செய்பவன், புண்யபாவக்கலப்புள்ள இம்மநுடலோகத்தின்கண்ணே நிலைத்திருக்கின்றான். அவன் தேவபசுமுதலிய தேகங்களையெடான். மற்றே, இம்மநுடர்களுக்குள்ளே அவன் பிறக்கின்றான். சத்வ ரஜ குணங்களை நோக்கப் பின்னர்த் தோற்றமுடையதாதலின், அவ்விரண்டினும் நிக்ருஷ்டமாகிய தமோகுணத்தின் நித்திரை ஆலசிய முதலிய வடிவ விருத்தியிற் பிரீதியுடைய தாமதனே, அதோ லோகத்தையடைகின்றான். அதாவது, பசு முதலிய யோனியின்கண்ணே பிறப்பன். அவன் மநுடதேவ சரீரங்களையெடான். ஆண்டுச் சாத்துவிக ராஜச புருஷர்களும் ஒருகால் தமோகுணத்தின் நித்திரை முதலிய விருத்தியில் நிலைத்திருக்கின்றார்கள்; ஆதலின், அவர்கட்கும் பசு முதலிய சரீரங்களினடைவும் ஆதல்வேண்டும், என்னுஞ் சங்கையை நீக்குவான் ஸ்ரீ பகவான் தமோகுண விருத்தியிலிருக்கின்றவனே விசேடித்தருளுகின்றார் 'தாமஸாः' என. ஆண்டு, எவனிடத்து எப்போதும் தமோகுணமே மிகுதியாமோ அத்தன்மைய தாமதனே பசு முதலிய யோனிகளிற் பிறக்கின்றான். சாத்துவிக ராஜச புருஷர்கள் ஒருகால் தமோகுண விருத்தியினிலைப்படினும் அவர்களிடத்துத் தமோகுணமிகாது; மற்றே, மிகக் கௌணமேயாம். ஆதலின் அவர்கள் பசுமுதலிய யோனிகளிற் சன்மமெடார்கள். ஈண்டு ஒரு மூலப்புத்தகத்தில் 'ஜகன்யகுணவ்ருத்திஸ்தாः' எனவும் பாடமுளது இப்பாடத்திலும் கூறிப்போந்த வர்த்தமேயுணரத்தக்கது என்க. (18)

(அ-கை.) ஆண்டு இப்பதினென்காவது அத்தியாயத்தில் ஸ்ரீ பகவான் மூன்று பொருளே அருளிச்செய்வான் பிரதிஜ்ஞை செய்தருளினர். அவற்றுள் க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞர்களின் சம்யோகத்தின் ஈசுராதீனத்தன்மை முதலாவது, அக்குணம் யாது? அது இச்சீவான்மாவை எவ்வாறு பந்திக்கின்றது? இரண்டாவது, அக்குணத்தினின்று இவனுக்கு எவ்வாறு மோட்சமுண்டாம்? அக்குணாதீத முக்தனுக்கு இலக்கணம் யாது? மூன்றுவது, இம்மூவகையர்த்தங்களில் முந்திய இரு வகையர்த்தங்களோ முன்னர் விரிவாய்க் கூறப்பட்டன. இப்போது மூன்றுவது

அர்த்தத்தைக் கூறவேண்டுவது எஞ்சும் அதிலும் சத்துவமுதலிய முக்குணங் களின் மித்தியாஞானவடிவ இவனுக்கு உண்மைஞானத்தால் அக்குணத்தினின்று மோட்சமுண்டாம் என்னுமர்த்தத்தை ஸ்ரீ பகவான் இப்போது அருளிச்செய் கின்றார்.

சு-ம். நாகயம்மாணைஹயீ கூத்ஸாரம் யஜாஜ்ஞா நாவபாயதி ।
மாணைஹயஜ்ஞவாரம் வெதிஜ்ஹாவம் வொயிமஹதி ॥ (19)

ப-ம். 6 ந 4 சுகயா 3 மாணைஹயீ 5 கூத்ஸாரம் 1 யஜா 2 ஜ்ஞா 7 சுநாவபாயதி
9 மாணைஹயீ 8 அ 10 வாரம் 11 வெதி 13 ஜ்ஹாவம் 12 வொ 14 சுயிமஹதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எப்போது இத்திருஷ்டாவானவன் சத்துவமுத லிய குணங்களினின்று வேறு கருத்தனைப் பார்க்கவில்லையோ அங்ஙனமே அக் குணங்களினின்றும் ஆன்மாவைப் பரமென்றுணர்கின்றானே அப்போது பிரமத் தன்மையை யடைகின்றான். (19)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! காரியகாரண விடய ஆகாரங்களாய்ப் பரிணமத் தையடைந்த சத்துவமுதலிய குணங்களினின்றும் வேறு கருத்தாவை எப்போது இத்திருஷ்டாவானவன் விசாரகுசலனகிப் பாரானே; அதாவது, விசாரத்திற்கு முன் அக்குணங்களினின்றும் வேறுகிய ஆன்மாவைக் கருத்தாவடிவாய்க் காணி னும் எவன் விசாரத்தின்பின்னர் அச்சத்துவமுதலிய குணங்களினின்று வேறு கருத்தாவைப் பார்த்திலனே; மற்றே அக்குணங்களே உள், வெளி, காணம் சரீரம் விடயம் என்பன முதலிய பாவங்களையடைந்து சர்வ லௌகிக வைதிக கரு மங்கட்குக் கர்த்தாவாகின்றன என, எவன் அக்குணங்களையே கர்த்தாவாய்ப் பார் க்கின்றானே; அங்ஙனமே அவ்வவத்தை விசேடவடிவமாய்ப் பரிணமத்தையடை ந்த அக்குணங்களினின்றும் எவன் ஆன்மாவை வேறென்றுணர்கின்றானே; அதா வது வானிலுள்ள சூரியன் மண்ணிலுள்ள நீரோடும் அதன் கம்பனத்தோடும் சம்பந்தமுடையதாகாததுபோல ஆன்மா சத்துவ முதலிய குணங்களோடும் அவற் றின் காரியங்களோடும் சம்பந்தமுடையதன்று; அங்ஙனமே அக்காரியசகித குணங்களின் பிரகாசகமும், சன்ம மரணமுதலிய சர்வ விகாரங்களின்றியதும், உல கனைத்திற்குஞ் சாட்சியும், யாண்டுஞ் சமமுமாகிய ஏகாத்துவிதீயவடிவ கூடஸ்தி ரக்ஞனகிய ஆன்மாவைத் திருஷ்டாவானவன் குருசாஸ்திரோபதேசங்களாலுணர் கின்றானே; அக்காலத்தில் அவன் பரமேசுவராகிய எமது பாவத்தையடைகின் றான்; அதாவது, அவன் நானே பிரமசொரூபன் என அபேதவடிவமாய் நிர்க்குணப் பிரமமாகிய எமது தன்மையையடைகின்றான். சுருதியும் 'ப்ரஹ்மவேத ப்ரஹ்மை வஹம்' நானே பிரமசொரூபன் எனப் பிரமத்தைத் தனதான்மாவாயுணர்ந்த வன் பிரமமேயாகின்றான் எனக் கூறுகின்றது. (19)

(அ-கை.) ஹே பகவன்! இவ்வாறு சத்துவமுதலிய குணங்களேயே கர்த்தா வெனவும் அக்குணங்களினின்று ஆன்மாவைப் பரமெனவும் உணர்ந்தவன் அந் நிர்க்குணப் பிரமத்தன்மையை எவ்வாற்றாலடைகின்றான். என்றுணரும் வேட்கை அர்ச்சுனனுக்குண்டாக ஸ்ரீ பகவான் அவ்வாற்றை அருளிச்செய்கின்றார்.

சு-ம். மாணாநெதாநதீதய தீரநு தெஹீ தெஹஸம்ஹவாநு ।
ஜநஜ்ஞதய்ஜ்ஞாநஜ்ஞாநாஃ வெ விஜ்ஞாகொ ஜ்ஞதஜ்ஞாநெ ॥ (20)

ப-ம். 4 மாணாநு 2 வதாநு 5 சுதீதய 3 தீரநு 8 தெஹீ 1 தெஹஸம்ஹவாநு
6 ஜநஜ்ஞதய்ஜ்ஞாநஜ்ஞாநைவெஃ 7 விஜ்ஞாகஃ 9 சுஜ்ஞதம் 10 சுஜ்ஞாநெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! தேகமுண்டாதற்குக் காரணவடிவ இச்சத்துவ முதலிய முக்குணங்களையும் பரித்தியாகஞ்செய்து சன்மமிருத்து சாதுக்கங்களி னின்று விடுபட்ட இவ்வித்துவான் மோட்சத்தை யடைகின்றான். (20)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தேதேகாத்பத்திக்குக் காரணமாகிய மாயாவடிவ முக்குணங்களையுந்தாண்டி; அதாவது, சீவனகாலத்திலே தத்துவஞானத்தால் அக்குணங்களைப்பாதித்துச் சன்மமிருத்து சரா அத்தியாத்மிக முதலிய துக்கம் இவைகளினின்று விடுபட்டவனும்; அதாவது சீவனகாலத்திலே அந்த மாயாமய மான சன்மமுதலியவைகளின் சம்பந்தமற்றவனுகிய வித்துவான் அமிருதத்தன் மையை யடைகின்றான்; அதாவது சருவானர்த்த நிவிருத்தி பூர்வகம் பிரம பாவப்பிராப்திவடிவ மோட்சத்தை யடைகின்றான். (20)

(அ-கை.) ஆண்டு இச்சத்துவ முதலிய குணங்களைக்கடந்து இவ்வித்துவான் சீவனகாலத்திலே மோட்சவடிவ அமிருதத்தை யடைகின்றான். எனக் கூறிபோந்த வார்த்தையைக்கேட்டு அர்ச்சுனனுக்கு அந்தக் குணாதீதனுடைய இலக்கணத் தையும் ஆசாரத்தையும் குணாதீதத்தன்மையின் உபாயத்தையும் அறியவேட்கை நிகழ ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

கூஜ்ஞ உவாச.

சு-ம். கைலிஂமைஷ்ஹீ நூணாநிதாந தீதொஹவதி வ்ரஹொ।
கிஸாசாரஃ கயம் செதாம்ஷ்ஹீ நூணா நதிவத்ஹதெ॥ (21)

ப-ம். 6 கைஃ 7 லிஂமைஃ 3 தீரு 4 நூணாரு 2 வநதாரு 5 சுதீதஃ 8 ஹவதி 1 வ்ரஹொ 9 கிஸாசாரஃ 14 கயம் 10 அ 11 வநதாரு 12 தீரு 13 நூணாரு 15 சுதிவத்ஹதெ.

(அ-ம்.) ஹே பிரபுவே! சத்துவமுதலிய முக்குணங்களைக் கடந்த புருஷன் எவ்விலிங்கங்களோடு கூடியவனுவன்? எத்தன்மைய ஒழுக்கமுடையவனுவன்? இம்முக்குணங்களையும் எவ்வாற்றாற் கடப்பன்? (21)

(வி-ம்.) ஹே பிரபுவே! சத்துவ முதலிய குணங்களைக்கடந்த தத்வஞானி யெனும் அக்குணாதீதன் எவ்விலிங்கங்களோடுகூடியவனுவன்; அதாவது எவ் விலக்கணவடிவ இலிங்கத்தால் அவனறியப்படுவன், அதை யெனக்கருளிச்செய் வீர். (1) அக்குணங்களைக்கடந்த தத்துவஞானிக்கு யாது ஒழுக்கமாம் அதாவது அவன் இஷ்டப்படி ஒழுக்கமுடையனோ அல்லது நியமபூர்வசேஷ்டை யுடை யனோ; அவனுடைய ஒழுக்கத்தையும் எனக்கருளிச்செய்வீர். (2) அவன் இக் குணங்களை எவ்வாற்றாற்கடப்பன் அதாவது அக்குணாதீதத்தன்மைக்கு உபாயம் யாது. அதையும் எனக்கருளிச்செய்வீர். (3) ஈண்டு (பிரபுவே) என்னுஞ் சம்போ தனத்தால் துக்கமுதலியவைகளை நீக்குதற்காற்றலுடையோன் பிரபுவாம். அரசர் முதலாயினோர் தமது வேலையாட்களின் துக்கத்தை நிவிருத்திப்பதுபோலச் சமர்த்தரானதால் ஸ்ரீ பகவானுகிய தாங்களே தொழும்பனுகிய எனது துக்கத்தை நிவிருத்தித்தருளற்குரியராவீர், என்னும் அர்த்தத்தை ஸ்ரீ பகவானுக்குக் குறிப்பித்தனன் என்க. (21)

(அ-கை.) ஆண்டு இந்நூலின் இரண்டாவது அத்தியாயத்தில் 'ஸ்திதவ்ரஜ்ஞ ஸ்யகாஹாஷ' என்பது முதலிய வாக்கியங்களால் இவ்வர்த்தத்தை முன்னரே அர்ச்சுனன் விஞவியிருக்கின்றான். அதற்கு, 'வ்ரஜஹாதிய ஹாகாஸ' என்பது

வாக்கியங்களால் யாமும் உத்தரம் முன்னரே கூறினேம். அங்ஙனமாயினும் முன்னர்க்கூறிய அர்த்தத்தை வேரோராற்றல் உணரக்கருதி இப்போது விளைவுகின்றன் என அர்ச்சுனன் கருத்தை நிச்சயித்து ஸ்ரீ பகவான் முன்னர்க்கூறிய பிரகாரத்தினும் வேறு பிரகாரத்தால் தத்துவஞானியின் இலக்கண முதலியவைகளை 5 சுலோகங்களால் அருளிச்செய்கின்றார். அதில் அவன் எவ்விலக்கணவடிவ இலிங்கமுடையான் என்னும் வினவிற்கு உத்தரத்தை ஒரு சுலோகத்தாலருளிச்செய்கின்றார்.

ஸ்ரீ ஹரவாத வாத.

சு-ம். ப்ரகாஶஞ்ச ப்ரவ்ருத்திஞ்ச மொஹமேவ ச வாண்ட வ।
ந த்வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தானி ந நிவ்ருத்தானி காங்க்ஷதி ॥ (22)

ப-ம். 3 ப்ரகாஶம் 4 ச 5 ப்ரவ்ருத்திம் 6 ச 7 மொஹம் 8 மேவ 11 ச 1 வாண்ட வ
9 ந 10 த்வேஷ்டி 2 ஸம்ப்ரவ்ருத்தானி 13 ந 12 நிவ்ருத்தானி 14 காங்க்ஷதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பிரவிருத்தமாகிய பிரகாசத்தையும் பிரவிருத்தியையும் மோகத்தையும் யாவனொருகாலும் துவேஷஞ்செய்யானே, நிவிருத்தமாகிய அவற்றை யிச்சியானே, அவன் குணாதீதனெனப்படுவன். (22)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சத்துவகுணகாரியப் பிரகாசம், ரசோகுணகாரியப் பிரவிருத்தி, தமோகுணகாரிய மோகம், என்பவைகள் அக்குணங்களின் வேறு சர்வகாரியத்திற்கும் உபலக்கணமாம். அக்குணங்களின் காரியங்களனைத்தும் தத்தம்காரண சாமக்கிரிவசத்தால் உண்டாக்கப்பட்டுத் துக்க சொரூபங்களேயாகின்றன. அங்ஙனமாயினும் இவன் துக்க புத்தியாலதில் துவேஷத்தைச்செய்யான். அதாவது இத்துக்கவடிவ குணங்களின் காரியம் எதனாலுண்டாகின்றது என அவன் அதனைத் துவேஷியான். அன்றியும் அக்குணங்களின் காரியம் தத்தம் விநாசசாமக்கிரிவசத்தானிவிருத்தியாய்ச் சுகவடிவமேமயாயினும் அவன் சுகபுத்தியால் அதை யிச்சியான். அதாவது சுகவடிவ இக்குணங்களின் காரியநிவிருத்தி எனக்கெப்போதும் வேண்டுமென இச்சியான்; என்னை, அவன் அக்குணங்களையும் அதன் காரியங்களையும் கனப்போல மித்தியாவடிவமே யென்றுணர்ந்தனனாதலின் மித்தியாவடிவத்தா லுணரப்பட்ட பொருள்கள் இவனுக்கு இராகத்துவேஷ விடயமாகா. பொய்வடிவ மென்றுணரப்பட்ட கிளிஞ்சில்வெள்ளி இவனுடைய ராகத்திற்கு விடயமாகாதது போலவும், பொய்வடிவ மென்றுணரப்பட்ட பழுதைப்பாம்பு இவனுடைய துவேஷத்திற்கு விடயமாகாதது போலவுமாம். இவ்வாறு சத்துவமுதலிய குணங்களின் பிரகாச முதலிய பிரவிருத்திகளிலும் அவற்றின் காரியங்களின் நிவிருத்தியிலும் துவேஷராகங்களை யடையாதவன் குணாதீதனெனப்படுகின்றன். இவ்வாறு இச்சுலோகத்தை நான்காவது சுலோகத்திலுள்ள (குணாதீதன் எனப்படுகின்றன்) என்னும்வாக்கியத்தோடு அந்வயிக்குக. இவ்விலக்கணம் அவனுக்கே பிரத்தியட்சமாம், வேறெயார்க்கன்று; என்னை, ஒருவனுள்ளத்திலுள்ள ராகத் துவேஷங்களின் உண்மை இன்மைகளை வேறுபுருடனு லுணரமுடியாமையின் இவனுடைய இலக்கணம் சுவார்த்த இலக்கணமேயாம் பரார்த்த இலக்கணமன்று. ஆண்டு, எவ்விலக்கணம் கேவலந்தனக்கே யுணரப்பட்டதாமோ அவ்விலக்கணம் சுவார்த்த விலக்கணமெனப்படும். எவ்விலக்கணம் பிறரானுமுணரப்படுகின்றதோ அவ்விலக்கணம் பரார்த்தவிலக்கண மெனப்படும். இவைகளைச் சாஸ்திரங்களில் சுவசம்வேத்திய பரசம்வேத்தியங்களெனக் கூறுகின்றனர். (22)

(அ-கை.) இப்போது அவன் எவ்வொழுக்கமுடையன் என்னும் இரண்டாவது வினவிற்கு மூன்று சுலோகங்களால் உத்தரமருளிச்செய்கின்றார்.

சு-ம். உதாஸீநவதாஸீநொ நாணெயொடு ந விசால்யதெ ।
நாணா வதடுங்க உதெய்வ யொவதிஷ்டதி நெம்மதெ ॥ (23)

ப-ம். 2 உதாஸீநவகி 3 கூஸீநகி 4 நாணெகி 1 யி 5 ந 6 விசால்யதெ 7 நா
ணாகி 9 வதடுங்கெ 10 உதி 8 வன்வ 11 யி 12 சுவதிஷ்டதி 13 ந 14 இம்மதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! உதாசீனன் போன்றிருப்பவனும் சத்துவமுத லிய குணங்களால் சலனப்படாதவனும் அக்குணங்களே பரஸ்பரமிருக்கின்றன என நிச்சயித்திருப்பவனும் சிறிதளவுந் தொழிற்படாதோனுமாபவன் குணாதீத னெனப்படுகின்றான். (23)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தம்முள் விவாதம்பண்ணும் இருவர்களில் ஒருவர் பட்சத்தையும் ஏற்றுக்கொள்ளாதவன் உதாசீனனுவன்; அவன் ஒருவ ரிடத்தும் ராகத் துவேடங்களைச் செய்வதில்லை; மற்றோ, அவன் அவைகளற்ற வனு யிருக்கின்றான்; அதுபோல, இராகத் துவேடங்களின்றித் தனது சச்சி தானந்தவடிவத்திலே நிலைத்திருக்கின்றான். அங்ஙனமே, சுகதுக்க முதலிய வடிவமாய்ப் பரிணமித்த சத்துவமுதலிய குணங்களாலும் தனது சொரூபத்தி னின்றுஞ் சலனப்படான்; மற்றோ, தேகேந்திய முதலிய வடிவங்களாய்ப்பரிண மித்த சத்துவ முதலிய குணங்களே தம்முள் சாதகபாதகபாவங்களாகவும் ஹா கிய ஹாகபாவங்களாகவும் உபகாரிய உபகாரகபாவங்களாகவும் இருக்கின்றன, இக்குணங்களனைத்தையும் பிரகாசிப்பவன் ஆன்மாவாகிய நானே, எனக்கு யா தொரு பிரகாசிய வஸ்துக்களின் தருமங்களோடும் சம்பந்தமில்லை, கடமுதலிய பதார்த்தங்களை விளக்கும் சூரியனுக்கு யாதொரு பிரகாசியவடிவ கடமுதலிய வற்றின் தருமங்களோடும் சம்பந்தமின்றியதுபோலும், இவ்வுலகனைத்தும் திருசிய வடிவமும் சடவடிவமும் கனப்போல் பொய்யுமாம்; ஆன்மாவாகிய நானே திருஷ்டாவும் சுயஞ்சோதியும் பரமார்த்த சத்தியரூபமும் சர்வ விகாரங்களற்ற தும் துவைதமற்றதுமாவேன் என்னும் நிச்சயத்தால் தனது சொரூபத்தின் கண்ணே நிலைத்திருக்கின்றான். யாதொரு காரிய சித்தியின்பொருட்டும் வியாபார முடையனலன். அத்தன்மையன் குணாதீதனெனப்படுகின்றான்: என்றிவ்வாறு இச்சுலோகத்தை மூன்றுவது சுலோகத்திலுள்ள 'குணாதீதனெனப்படுகின்றான், என்னும் வாக்கியத்தோடு அந்வயம்பண்ணுக. ஈண்டு, 'யொவதிஷ்டதி' என் னும் வாக்கியமிருக்குமிடத்து 'யொநாதிஷ்டதி' எனவுஞ் ஒரு புஸ்தகத்திலிருக் கின்றது அதிலும் கூறிப்போந்த அர்த்தமென்றேயுணர்க. (23)

(அ-கை.) அன்றியும்,

சு-ம். ஸஉதாஸீவஸீனவ ஸ்வஸ்தி ஸஉலொஷ்டாஸ்மகாஞ்சநஸ்தி ।
துல்யப்ரியாப்ரியொ தீர ஸ்துதிநிந்தாதுல்யஸம்ஸ்துதி ॥ (24)

ப-ம். 1 ஸஉதாஸீவஸீனவ 2 ஸ்வஸ்தி 3 ஸஉலொஷ்டாஸ்மகாஞ்சநஸ்தி 4 துல்ய்ப்ரி
யாப்ரிய 6 தீர 5 துல்யநிந்தாதுல்யஸம்ஸ்துதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சுகதுக்கங்களிற் சமமும் சொரூபத்தில் ஸ்திதமும் ஓடு கல் பொன்களிலொப்பும் பிரியாப் பிரியங்களிற் சமமும் தனது நிந்தை புகழ் களிற் சமமும் உடைய தீரபுருஷன் குணாதீதனெனப்படுகின்றான். (24)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அத்தத்துவ ஞானிக்குத் துக்கசுகங்களில் துவே டராகங்களில்லை; அவைகள் அனன்மவடிவ அந்தக்காரணத்தின் தருமங்களும் கனப் போன்று மித்தியாவடிவங்களுமாமாதலின், இராகத்துவேட ரகிதத்தானும் அனை

ன்ம தருமத்தன்மையானும் மித்திபாத்தன்மையானும் அவ்விரண்டையுஞ் சம மாகவுடையவன் சமதுக்கி சுகியாவன். அற்றேல், ஹே பகவன் அத்தத்துவ ஞானிக்கு அவைகள் எக்காரணத்தாற் சமங்களாம் என்றருச்சுனனுக்கு அறி யும் வேட்கையுண்டாக ஸ்ரீ பகவான் அதில் காரணத்தையருளிச்செய்கின்றார். 'ஷஷஃ' என அவன் சுவஸ்தன் ஆதலின்; அதாவது, துவைததரிசன மின்றிபவ தலின், அவன் தனது ஆனந்தவடிவ ஆன்மாவின்கண்ணே ஸ்திதன் இதனே அவனுக்குச் சுகதுக்கங்கள் சமங்களாம்; ஆன்மாவினிலேபடாத பகிர்முகனுக்கு அவைகள் மாறுபட்டவைகளேயாம்; தத்துவஞானி தனதானந்தவடிவ ஆன்மா வின்கண்ணே நிலைத்திருக்கின்றதனே ஓடு பொன்களிற் சமன்; ஆண்டுச் சம மெனும் கொள்ளல்தள்ளல் களின்மையன ஓடு பொன்கள் எவனுக்கு அவன் ஓடு பொன்களிற் சமனுவன். ஆண்டு, மட்பிண்டம்-ஓடாம், பாடாணம்-கல்லாம், சுவர் ணம்-பொன்னும், அதாவது அத்தத்துவஞானி ஓடுமுதலிய துச்சவஸ்துக்களிலும் சுவர்ணமுதலிய பெரும்பொருளிலும் தள்ளல் கொள்ளல் என்னும் புத்தியின்றிய வன். அவன் ஓடு-கல் பொன்களிற் சமனதலினேன பிரியாப்பிரியங்களிற் சமன். ஆண்டுச் சுகசாதனவடிவப் பிரியத்திலும், துக்கசாதனவடிவ அப்பிரியத்திலும் சமன் என்பதாம்; அதாவது, தத்துவஞானிக்குப் பிரியபதார்த்தமோ, இந்தப் பிரியமானபொருள் எனது இதத்திற் சாதனம் என இதசாதன புத்திக்கு விடய மாகாது; அப்பிரிய பதார்த்தமோ இவ்வப் பிரியப்பொருள் எனது அஇதசாதனம் என அஇதசாதன புத்திக்கு விடயமாகாது; மற்றும், அவ்விரண்டும் அவனுடைய உபேட்சா புத்திக்கே விடயமாம். அங்ஙனமே எவன் தீரனே; அதாவது புத்தி மான் அல்லது தைரியவான்; அவன் தீரனதலினேன, தனது நிந்தை புகழ்களிற் சமனுவன், ஆண்டுத் தனது நிதாடத்தைக்கூறல் நிந்தையாம். தனது குணத் தைக்கூறல் துதியாம். அவ்விரண்டிலு மொப்புநிளான் என்பதாம். அத்தன்மைய தத்துவஞானி குணதீதனெனப்படுகின்றன் என இச்சுலோகத்தை இரண்டாவது சுலோகத்திலுள்ள (குணதீதனெனப்படுகின்றன்.) என்னும் வாக்கியத்தோடு அந் நுவயஞ்செய்க. (24)

(அ-கை.) மேலும்,

சு-ம். ஸாதாவஸாதயொஷ்ச ஷ்ரையஸ்ச ஷ்ரையஸாதிதராணிவக்ஷ்யாமி ।
ஸவாஷுஸம்ஹவாணிதயாமீ மாணாதீதஃஸ உச்யதெ ॥ (25)

ப-ம். 1 ஸாதாவஸாதயொஃ 2 தாயஸ்ஃ 4 தாயஸ்ஃ 3 ஷிதராணிவக்ஷ்யாமி 5 ஸவாஷு ஸம்ஹவாணிதயாமீ 7 மாணாதீதஃ 6 ஸஃ 8 உச்யதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மானவமானங்களிலும் மித்துரு சத்துருக்களிடத் திலும் சமனும் சருவாரம்ப பரித்தியாகியுமானவன் குணதீதனெனப்படுகின்றன்.

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எந்தத் தத்துவஞானிபானவன் மானவமானங் களிற் சமானன்; ஆண்டு உலகத்தில் ஆதரவு எனப்படும் சத்காரம் மானமாம், அனாதரவெனப்படும் திரஸ்காரம் அவமானமாம். அவ்விரண்டிலுந் துல்லியன்; அதாவது, மானவமானங்கள் வந்தடையில் சந்தோஷ விஷாதமடையாதோன் ஆண்டுப் பூர்வ சுலோகத்தில் 'தாயஸ்நி ஷாதஸம்ஹவாதிஃ' என்னும் வாக்கியத் தாற் கூறப்பட்ட நிந்தை துதிகட்கும் இச்சுலோகத்திற் கூறப்பட்ட மானவ மானங்கட்கும் இத்துணை வேறுபாடாம், நிந்தை துதிகளோ சப்தவடிவங்களாம் மானவமானங்களோ சப்தமின்றியும் தேகமனங்களின் விபாபார விசேடங்க ளாம். ஒரு மூலப்புத்தகத்திலோ 'ஸாதாவ ஸாதவிபாஷ்ரையஃ' எனவும் பாட மூளது. இப்பாடத்திலும் கூறிப்போந்த பொருளேயுணர்க. அங்ஙனமே எவன்

மித்துருசத்துருக்களிற் சமன்; அதாவது அவன் மித்துரு பக்ஷத்தின் துவேஷத்திற்கு விடயமாகாததுபோல, சத்துரு பக்ஷத்தின் துவேடத்திற்கும் விடயமாகான். அல்லது, அவன் மித்துரு சத்துரு பக்ஷங்கட்கு அநுக்கிரக நிக்கிரகங்களைச்செய்யான். அங்ஙனமே எவன் சருவாரம்ப பரித்தியாகி; ஈண்டு முக்காணங்களாலும் ஆரம்பம்பண்ணுவோன் ஆரம்பனவன் அத்தன்மைய இலௌகிக வைதிகவடிவ சர்வாரம்பங்களையும் பரித்தியாகஞ்செய்தோன் சர்வாரம்பபரித்தியாகியாவான்; அதாவது, தேகயாத்திராமாத்திரத்திலுபயோகமான பிக்ஷாடன முதலியவைகளொழிந்த ஏனைய சர்வ கருமங்களையுந் தியாகம்பண்ணியவன் என்பதாம். இவ்வாறு 'உதாஸீநவ தாஸீநஃ' என்பதாதி மூன்று சுலோகங்களாற் கூறப்பட்ட ஆசாரங்களோடு கூடிய தத்துவஞானியே குணாதீதனெனப்படுகின்றான். கருத்திதுவாம்:—மேல் 3 சுலோகங்களாற் கூறப்பட்ட உபேட்சகத்தன்மை முதலிய தருமங்கள் ஆன்மஞானமுண்டாவதற்கு முன்னோ பிரயத்தன சாத்தியங்களாம்; அதாவது ஆன்மஞானேச்சையையுடைய அதிகாரியால் அவ்வான்மஞானத்தின் சாதனங்களாய் அவைகள் அநுட்டிக்கப்பாலனவாம்; ஆன்மஞான முண்டான பின்னோ குணாதீதனாகிய ஜீவன் முக்தனுக்கு அவைகள் முயற்சியின்றிச் சித்திக்கும் இலக்கணவடிவங்களாகின்றன. (25)

(அ-கை.) இப்போது இவ்வதிகாரி எவ்வுபாயத்தால் அக்குணங்களைத்தாண்டுவன் என்னும் மூன்றுவது வினாவிற்கு ஸ்ரீ பகவான் உத்தரமருளிச்செய்கின்றார்.

சு-ம். மாஞ்ச யொऽவ்யபிசாரேண பக்தியோகேந ஸேவதே।
ஸ குணாந் ஸமதீத்யைதாந் ப்ரஹ்மபூயாய கல்பதே॥ (26)

ப-ம். 3 மாம் 1 அ 2 யஃ 4 அவ்யபிசாரேண 5 பக்தியோகேந 6 ஸேவதே 7 ஸஃ 9 குணாந் 10 ஸமதீத்ய 8 ஏதாந் 11 ப்ரஹ்மபூயாய 12 கல்பதே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மற்றும் எவன் பரமேசுராகிய எம்மை அனன்ய பக்தியோகத்தாற் சிந்திக்கின்றானோ அவன் கூறிப்போந்த சத்துவமுதலிய குணங்களைக் கடந்து பிரமவடிவமாதற்குத் தக்கவனாகின்றான். (26)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சர்வ பூதங்கட்கும் அந்தரியாமியும் தமது மாயையால் சேஷத்திரபாவத்தையு மடைந்த பரமானந்தகனப் பகவானாகிய எம்மையே எவ்வதிகாரி பிறழ்தலின்றிய பக்தியோகத்தால் சேவிக்கின்றானோ, ஆண்டு விஜாதீயவிருத்தி வியவதானமின்றித் தைலதாரைபோன்ற பரமான்மாவாகிய எம்மை விஷயம் பண்ணும் சஜாதீயவிருத்திப் பிரவாஹம் அவ்வியபிசாரியாகிய பக்தியாம். எது முன்னர்ப் பன்னிரண்டாவது அத்தியாயத்தில் விரிவாய்க் கூறப்பட்டதோ அத்தன்மையமிகுந்த பிரேமைவடிவ அனன்ய பக்தியோகத்தால் எவன் நாராயணராகிய எம்மை இடைவிடாது சிந்திக்கின்றானோ அந்தப் பரமேசுர அனன்ய பக்தன் கூறிப்போந்த இச்சத்வ முதலிய குணங்களைத் தாண்டி; அதாவது அத்வைத தரிசனத்தால் அக்குணங்களைப்பாதித்து நிர்க்குணப்பிரமபாவவடிவ மோட்சத்திற்குச் சமர்த்தனாகின்றானதலின் இடைவிடாது எமது சிந்தனையே, அக்குணாதீதத்தன்மைக்கு உபாயமாமென்க. (26)

(அ-கை.) ஆண்டுப்பரமேசுராகிய எம்மைச்சிந்திக்கப்பட்டவன் மோட்சத்தையே யடைகின்றான் எனக் கூறிப்போந்த அர்த்தத்தில் ஸ்ரீ பகவான் தமது மகான்றன்மைக்காணத்தை அருளிச்செய்கின்றார்.

சு-ம். ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாஹமம்ருதஸ்யாவ்யயஸ்ய ச।
ஸாஸ்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்யைகாந்திகஸ்ய ச॥ (27)

ப-ம். 11 ப்ரஹ்மணே 1 ஹி 13 ப்ரதிஷ்டா 12 சுஹம் 2 சுத்தஸ்ய 4 சுவயம்ஸ்ய 3 அ 6 ஸாஸ்வதஸ்ய 5 அ 7 யஉ்யஸ்ய 10 ஹ்ரவஸ்ய 9 ஸெகாந்திகஸ்ய 8 அ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எதனல் அமிருதவடிவமும், அவ்வியய ரூபமும், சாசுவதரூபமும், தரும ரூபமும், பிறழ்தலின்றியதும் சுகரூபமுமாகிய சோபாதிக காரணப்பிரமத்திற்கு நிருபாதிக வாசுதேவராகிய நாம் உண்மை வடிவமாகின் றேமோ அதனாலன எமது பக்தியால் மோட்சமடைதல்கூடும் என்பதாம். (27)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தத்துவமஸி என்னும் மகா வாக்கியத்திலுள்ள தத்பதத்தின் வாச்சியார்த்தமும் உலகனைத்திற்கும் தோற்ற நிலையீறுகளின் காரணவடிவமுமாகிய சோபாதிகப் பிரமத்திற்கு நிர்விகற்பக வாசுதேவராகிய நாம் பிரதிஷ்டையாகின்றோம்; அதாவது பாரமார்த்திகவடிவமும் நிருவிகற்பக வடிவமும் சச்சிதானந்தவடிவமுமாகிய சர்வோபாதிகளின்றிய தத்பதத்தினிலட்சியார்த்த வடிவம் நாமாகின்றோம். ஆண்டு இதிற் பிரதிட்டையாதலின் இது பிரதிட்டையாம், என விரித்துரைத்தலால் கற்பிதவடிவங்களின்றிய அகற்பிதவடிவமே பிரதிட்டை என்னுஞ் சத்தத்தின் பொருளாம். நிருபாதிக சுத்தப்பிரமமாகிய நாமே அந்தச் சோபாதிகப் பிரமத்திற்கு உண்மைவடிவ மாகின்றோம். ஆதலின் நிருபாதிக சுத்தப்பிரமமாகிய எம்மை இடைவிடாது சிந்திக்கின்ற அதிகாரிகள் நிர்க்குணபாவப்பிராப்திவடிவ எம்மை யடைதற்குச் சமர்த்தராகின்றார்கள் என முன்னர்க்கூறிய அர்த்தம் பொருத்தமுடையதேயாம் என்க. எவ்விதமான பிரமத்தின் பிரதிட்டையாவீர்கள் தாங்கள் என்றருச்சுனனுக் குணரும் வேட்கை யுண்டாக ஸ்ரீ பகவான் அப்பிரமத்தை விசேடித்தருளிச் செய்கின்றார். 'சுத்தஸ்ய ஹி' எம்மைப் பிரதிஷ்டையாகவுடைய பிரமம் எத்தன்மையதெனின் அமிருதமாம்; அதாவது விநாசரகிதமாம். 'வசதஸ்ய சவய ஸெகாந்திகஸ்ய' இப்பிரமம் அமிருதவடிவமும் அபயவடிவமுமாம் என்பதாம். மற்றுமெத்தன்மையதெனின் அவ்வியயமாம்; அதாவது பரிணமமற்றதாம். சாசுவதமாம்; அதாவது அபக்ஷயமற்றதாம். ஈண்டு விநாச பரிணம அபக்ஷய என்னும் விகாரங்களின் நிடேதம் தோற்றல் நிலைத்தல் வளர்தல் என்பவைகளின் நிடேதத்திற்கும் உபலட்சணமாம்; அதாவது அந்தப் பிரமம் அறுவகை விகாரங்களுமற்றதாம். அது மற்று மெத்தன்மையதெனின் தரும வடிவமாம்; அதாவது ஞானநிஷ்டையாகிய தருமத்தாலடையத்தக்கதாம். சுகவடிவமாம்; அதாவது பரமானந்த ரூபமாம். இப்போது அந்தச்சுகத்தில் விடயேந்தியங்களின் சம்யோகத்தால் தோற்றுவதாந்தன்மையை நிவிருத்திப்பான் அந்தச்சுகத்தை விசேடித்தருளுகின்றார். 'வெகாந்திகஸ்ய' அந்தச் சுகம் எத்தன்மையதெனின் ஐகாந்திகமாம்; அதாவது, விடயத்தாற்றோன்றுஞ் சுகம்போலப் பிறழ்தலற்றதாம்; மற்றோர் எல்லாத் தேசகாலங்களிலு மிருப்பதாம்; இந்த வியாபகசுகத்தையே 'யொவை ஹ்ரஸ்வ' என்னுஞ் சுருதியுங் கூறுகின்றது. அத்தன்மைய அமிருதமுதலிய சர்வ விசேடணங்களையுமுடைய பிரமத்திற்குப் பரமேசுராகிய நாம் வாஸ்தவ வடிவம் ஆதலினாலன எம்முடைய அனன்ய பக்தன் இச்சம்சாரபந்தத்தினின்றும் முக்தனாகின்றான் என்பதாம். ஆண்டு இவ்விதமான ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய சொரூபத்தைப் பிரமாவும் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு அருளிச்செய்திருக்கின்றார்.

ஆ-சு. வன ஹ்ரஸ்வ வாஸுதேவ வாஸுனே
ஹ்ருத்யே ஹ்யம் ஜோதிரூபாய சூத்ரே।
நிதேயா கூபொஜ ஹ்ரஸ்வவா நிரஞ்ஜனே
வஸினோ ஹ்ரஸ்வ ஸுதா உவாயிதோ ஹ்ரதே॥

(போ-ள்.) ஸ்ரீ கிருஷ்ணபகவன்! தாங்கள் எத்தன்மையரெனின் ஏகர்; எவ்விடத்தும் ஓரே வடிவினர். இன்னும் சர்வப் பிராணிகளின் ஆன்மவடிவர், புருஷர், சர்வ சரீரங்களிலும் இருப்புவிளக்க இன்ப வடிவங்களாலிருப்பவர்; புராணர், இதற்குமுன்னு மிருப்பவர். சத்தியர்; மூக்காலங்களிலும் பாதமற்றவர். சுவபஞ்சேசாதி. தனது விளக்கத்தின்பொருட்டு வேறொளியை விரும்பாதார்; அனந்தர், தேசகால வஸ்து பரிச்சேசதமற்றவர், ஆதியர், எல்லாவற்றிற்கும் ஆதிகாரணர், நித்தியர்; தோற்றக்கேடுகளின்றியவர்; அசுசார், வியாபகசுக வடிவினர், நிரஞ்சனர், அஞ்ஞானவடிவக் களங்கமற்றவர், யாண்டும் பரிபூரணர், துவைதபாவ மற்றவர், சர்வோபாதிகளற்றவர், அமிருதவடிவர், மோட்சசொரூபர் என்பதாம். இச்சுலோகத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவானைப் பிரமாவானவர் சர்வோபாதிகளுமின்றிய ஆன்மவடிவமும் பிரம வடிவமுமாகக்கூறினர். அன்றியும் இவ்விதமான ஸ்ரீ பகவானுடைய சொரூபத்தை ஸ்ரீ சுகமுனிவரும் துதிப்பிரசங்கமின்றியே கூறியிருக்கின்றனர்.

ஆ-சு. ஸவெஷாவெ வஹ்மாம் ஹாவாயொஷ ஹவதிஷ்டிதஃ।
தஷ்யாவி ஹமவாநு கூஷஷ் கிஷதஷ்வ ஸ்மவ்யதாழி ॥

(போ-ள்.) சர்வ காரிபவடிவ வஸ்துக்களினத்தின் பாவார்த்தமெனப்படும் சத்தாவடிவ பரமார்த்த சொரூபம் காரியவடிவமாய்த் தோற்றப்பட்ட சோபாதிகப் பிரமத்தின்கண்ணே யிருப்பதாம்; என்னை, சித்தாந்தத்தில் காரணசத்தையினும் வேறுய்க் காரியசத்தையை உடன்படவில்லை, குண்டலகங்கணமுதலிய பூடணங்கட்குச் சுவர்ணவடிவ காரணசத்தையினும் வேறுசத்தையில்லாததுபோலவும், கடசாவமுதலிய காரிபங்கட்கு மண்வடிவகாரணசத்தையினும் வேறு சத்தை இல்லாதது போலவும், இப்பிரபஞ்சவடிவ காரிபத்திற்கும் அச்சோபாதிகவடிவ காரண சத்தையினும் வேறு சத்தை யில்லை. இது 'ததனன்யத்வமாரம்பண சப்தாதிப்ய' என்னுஞ் சூத்திர வியாக்கியானத்தில் ஸ்ரீ பாடியக்காரரால் விரிவாய்க்கூறி யருளப்பட்டிருக்கின்றது. அக்காரணவடிவ சோபாதிகப்பிரமத்திற்கும் சத்தாவடிவ பாவார்த்தம் ஸ்ரீ கிருஷ்ணபகவானுவர். என்னை; அந்தச் சோபாதிகக்காரணப்பிரமம் நிருபாதிகப் பிரமத்தின்கண்ணே கற்பிதமாம். யாதுயாது கற்பிதப்பொருளாமோ அதுவது அதிட்டானத்தினும் வேறுகாது, இரச்சுவிற் கற்பிதமாகிய சர்ப்பம் இரச்சுவடிவ அதிட்டானத்தினும் வேறுகாததுபோல ஸ்ரீ கிருஷ்ணபகவானே சர்வ கற்பணைகட்கும் அதிட்டானவடிவமானதால் பரமார்த்த சத்தியநிருபாதிகப் பிரமசொரூபர் ஆகலின் அத்தன்மைய ஸ்ரீ கிருஷ்ணபகவானே அக்காரணவடிவ சோபாதிகப் பிரமத்திற்குப் பரமார்த்த சத்தாவடிவ பாவார்த்தமாவர். அத்தன்மைய அதிட்டானவடிவ ஸ்ரீ கிருஷ்ணபகவானினும் வேறுக யாதொரு பொருளும் உண்மையின்றும்; மற்றோரு, அப்பரப்பிரம வடிவ ஸ்ரீ கிருஷ்ணபகவானே ஏகபாரமார்த்திகாவர் என்பதாம். இவ்வர்த்தத்தையே ஸ்ரீ பகவான் ஈண்டு '஬்ரஹ்மணோஹி ப்ரதிஷ்டாஹம்' என்னும் வாக்கியத்தாற்றிருவாய்மலர்ந்தருளினர் என்க. அல்லது '஬்ரஹ்மணோஹி ப்ரதிஷ்டாஹம்' என்னுஞ் சுலோகத்திற்கு வேறுபொருள் செய்பத்தக்கது. அஃதாமாறு: எவன் எத்தேவதையை தியானிக்கின்றானோ அவன் அத்தேவதாபாவத்தையே அடைகின்றான். ஆதலின் உமது பக்தன் உமது பாவத்தையே யடைவனுயின் அவன் பிரமபாவத்தை எவ்வாறடைவன்; மற்றோரு, அடையான். தாங்கள் அப்பிரமத்தினும் வேறுனமையின் என்றர்ச்சுனனுக்குச் சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் தம்மைப் பிரமவடிவமாய் அருளிச்செய்கின்றார். '஬்ரஹ்மணோஹி ப்ரதிஷ்டாஹம்' எனச் சர்வோபாதிகளுமின்றிய பரமான்மாவாகிய பிரமத்திற்குப் பரியவசான்வடிவப் பிரதிஷ்டை காமா

கின்றேம்; அதாவது எம்மின் வேறன்று அப்பிரமம்; மற்றே நாமே பரப்பிரம வடிவம். அங்ஙனமே அவ்வியயவடிவ அமிருதத்திற்கும் நாமே பிரதிஷ்டை யாகின்றேம். ஆண்டுச் சர்வானர்த்தநிவிருத்தி பூர்வகப் பரமானந்தப்பிராப்தி வடிவ மோட்சம் அமிருதமாம். அது எவ்வாற்றானும் நாசமுறுமையின் அவ்வியய மெனப்படுகின்றது. அத்தன்மைய மோட்சவடிவ அமிருதத்திற்கும் பரமான்மா வாகிய எம்மிடத்திலே பரியவசானமாம்; அதாவது பரமான்மாவாகிய எம்மை யபேதமாயடைதலே மோக்ஷமாம். அங்ஙனமே சாசுவத தருமத்திற்கும் நாம் பிரதிஷ்டை யாகின்றேம். ஆண்டு நித்தியமாகிய மோட்சபலத்தையுடைய ஞான நிஷ்டைவடிவ தருமம் சாசுவத தருமமாம் அத்தன்மையதருமமும் பரமேசுர ராகிய எம்மிடத்திற் பரியவசானமுடையதாம்; அதாவது அந்த ஞானநிஷ்டை யாகிய தருமத்தால் பரமான்மாவாகிய எமக்கயலாய் வேறொருபொருளு மடையப் படவில்லை; மற்றே, பரமான்மாவாகிய நாமே அதனுலடையப்படுகின்றேம். அங் ஙனமே ஐகாந்திக சுகத்திற்கும் நாமே பரியவசானவடிவப் பிரதிஷ்டையாகின் றேம்; அதாவது பரமானந்த சொரூபமானதால் பரமான்மாவாகிய நாமே சர்வமு மூட்சுக்கட்கும் அபேதமாயடைதற்குரியம் எமக்கயலாய் வேறு சிறிதளவு சுகமு மடைதற்குரியதன்றும்.

ஆ-சு. யொவெ ஹுஸாதத ஹுவம் நாஹ்ரு வுவஹ்தி।

(போ-ள்) தேசகால வஸ்துக்களால் பரிச்சேதமற்றதும் யாண்டும் வியா பகமாகியதுமாகிய பரமான்மாவே சுகவடிவமாம் பரிச்சின்ன பதார்த்தங்களிற் சிறிதளவுஞ் சுகமின்றும் என்பதாம். பரமான்மாவாகிய நாம் இத்தன்மையமாத லினுனே எம்முடைய அனன்யபக்தன் பிரமபாவத்தையே யடைகின்றுன் என முன்னர்க்கூறிய அர்த்தம் பொருத்தமுடையதேயாம் என்பதாம். ஒரு வியாக் கியானத்திலோ. 'ஏ ஹுணைஹி வ்ரதிஷ்டாஹம்' என்னுஞ் சுலோகத்திற்கு இவ்வர்த்தம் பண்ணபபட்டிருக்கிறது. அஃதுவருமாறு, இந்நூலின் நான்காவது அத்தியாயத்தில் 'வஸவம் ஸஹுவியாயஜ்ஞாவிததா ஏ ஹுணை உவெ' என் னும் வாக்கியத்திலுள்ள பிரம சப்தத்தால் வேதமே கொள்ளப்பட்டதாதலின் ஈண்டும் பிரம சப்தத்தால் வேதமே கொள்ளற்பாலது அத்தன்மைய பிரமமெனும் பெயரிய வேதத்திற்குப் பரமான்மாவாகிய நாமே பிரதிஷ்டையாகின்றேம்; அதா வது வேத மனத்திற்கும் தாற்பரியத்தால் பரியவசானஸ்தானம் பரப்பிரமமாகிய நாமாகின்றேம். 'ஸவெழவெ ஹாயது ஹாஉஹஸ்தி' கருமோபாசனை ஞானகாண்ட வடிவ இருக்குமுதலிய வேதங்களனைத்தும் நேராகவேனும் பரம்பரையாகவேனும் எந்தப் பரமான்மபதத்தைக் கூறுகின்றனவோ என்பதாம். அவ்வேதம் எத்தன்மை யதெனின் அமிருதமாம்; அதாவது கருமபிரமம் என்னு மிரண்டையும் பிரதிபா திக்கும் வாயிலாய் மோட்சவடிவ அமிருதத்திற்குச் சாதனமாம். அவ்வியயமாம்; அதாவது உத்பத்தி விநாசங்களற்றதாமாதலின், அபௌருஷேயமாம்; அதனுனே அப்பிரமாண்ய சங்கைவடிவக் களங்கமற்ற சுவதப் பிரமாணமாம். சாசுவத தரு மத்திற்கும் நாமே பிரதிஷ்டையாகின்றேம்; அதாவது, காமியதருமம் சுவர்க்க முதலிய பலத்தைக் கொடுத்துவிட்டு நாசப்படுவதுபோலப் பகவதர்ப்பணமாய்ச் செய்யப்பட்ட நித்திய தருமம் நாசமாவதில்லை. விவிதிஷா உத்பத்திவாயிலாக மோட்சவடிவ சாசுவத பலத்திற்கு ஹேதுவாகின்றது. ஆதலின் பகவதர்ப்பண மாய்ச் செய்யப்பட்ட நித்திய தருமம் சாசுவத தருமமெனப்படுகின்றது அத்தன் மைய தருமத்தாலடைதற் குரித்தான மேலான பல வடிவமும் பரமான்மாவாகிய நாமேவிடய சம்பந்த சன்னிய சுகத்தினும் ரகிதமான சொரூப பூத மோட்ச சுகம் ஐகாந்திக சுகமாம். அத்தன்மைய சுகத்திற்கும் நாமே பிரதிஷ்டையாகின்றேம்;

அதாவது பரமகாஷ்டை வடிவமாகின்றேம். பரமான்மாவாகிய நாம் இத்தன்மைய மாதலின் எம்மைச் சிந்திக்கின்ற அதிகாரி பரம பாவத்தையே அடைகின்றான் என முன்னர்க்கூறிய அர்த்தம் பொருத்தமுடையதேயாம் என்க. (27)

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய ஸ்ரீ உத்தவாநந்தகிரி சுவாமிகளின் பூஜ்யபாத சிஷ்யராகிய ஸ்ரீ சித்தனைந்தகிரி சுவாமிகளாலியற்றியருளிய பிரா கிருதடீகையெனும் பெயரிய கீதை கூடார்த்ததீபிகையில்,

பதினன்காவது அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

பதினந்தாவது அத்தியாயம்.

ஓம் ஸ்ரீ கணேசாயநமஃ ஸ்ரீ காசிவிச்வேச்வராப்யாம்நமஃ ஸ்ரீ குருப்யோநமஃ
ஸ்ரீ சங்கராச்சார்யேப்யோநமஃ

ஆண்டுப் பூர்வம் பதினன்காவது அத்தியாயத்தில் சம்சார பந்தத்திற்குக் காரணவடிவ சத்துவமுதலிய குணங்களை அருளிச்செய்து இவ்வதிகாரிக்குப் பரமேசுராகிய எமது அனன்யபக்தி யோகத்தால் அக்குணங்களின் அதிக்கிரமண பூர்வகம் பிரமபாவவடிவ மோட்சப் பிராப்தியுண்டாகும் என்னுமர்த்தத்தை ஸ்ரீ பகவான்,

ஸாது யொவ்யஹிஆ மொணஹக்கியொ மெநஹொவதெ ।
ஸமுணாஹு ஸஃதீதெய்யதாஹு ப்ரஹ்ம ஹொயாயகலுதெ ॥

என்னும் வாக்கியத்தால் திருவாய்மலர்ந்தருளினர். ஆண்டு மனுடராகிய உமது பக்தியோகத்தால் இவ்வதிகாரிக்குப் பிரமப்பிராப்தி எவ்வாறுண்டாம் என்றருச்சுனனுக்குச் சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் தம்மிடத்தில் பிரமரூபத்தன்மையை அறிவுறுத்தற்பொருட்டு,

ப்ரஹ்மணொஹி ப்ரதிஷ்டாஹமம்ருதஸ்யாவ்யயஸ்யச ।
ஸாஸ்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்யைகாந்திகஸ்ய ச ॥

என்னுஞ் சூத்திரவடிவச் சுலோகத்தை அருளிச்செய்தனர். அதனர்த்தத்தை விரித்துக்கூறப்பட்ட உரைவடிவ பதினேந்தாவது அத்தியாயத்தை ஸ்ரீ பகவான் ஆரம்பித்தருளுகின்றார். எதனால் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய உண்மைவடிவத்தையுணர்ந்து அவரது நிரதிசயப் பிரேமைவடிவ பஜனையால் குணாதீதராகிய அதிகாரிகள் எவ்வாற்றாலனும் பிரமபாவவடிவ மோட்சத்தையடைகின்றனர் என்பதாம். ஆண்டு, 'ப்ரஹ்மணொஹி ப்ரதிஷ்டாஹம்' என்பதுமுதலிய ஸ்ரீ பகவானுடைய திருவாக்கியங்களைக்கேட்டு எனக்கொப்பன இம்மநுடவடிவக் கிருஷ்ணன் பிரமத்திற்கும் நானே பிரதிஷ்டையாகின்றேன் எனக்கூறுவதென்னை என்னும் விஸ்மயத்தையடைந்தவனுய் விளுவுதற்குரிய அர்த்தம் வெளிப்படாமைவடிவ விளக்கமிலா

த்தன்மையானும், லச்சையானும் சிறிதளவும் விலுவுதற்கேலாதவனுகிய அர்ச்சுன னைப்பார்த்து கிருபையால் அவனுக்குத் தமது சொரூபத்தை யுபதேசித்தற்கு இச்சை நண்ணி ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றூர். ஆண்டு, சம்சாரத்தினின் றும் விரக்த புருஷனுக்கே பரமேசுரருடைய உண்மைவடிவ ஞானத்தில் அதிகார முண்டு வைராக்கிய மிலாதோனுக்கில்லை. ஆதலின், முதலில் வைராக்கியஞ் சம் பாதித்தற்குரியது. ஆண்டுப் பூர்வாத்தியாயத்திற் கூறப்பட்ட பரமேசுராதீனமா யுள்ள பிரகிருதி புருஷர்களின் சம்யோகத்தின் காரியவடிவ சம்சாரத்தை அதில் வைராக்கியத்தை யடைதற்பொருட்டு விருக்ஷவடிவமாய் வர்ணித்தருளுகின்றூர். அவ்வைராக்கியமும் கூறிப்போந்த குணதீதத்தன்மைக்கு உபாயவடிவமேயாம்.

ஸ்ரீஹமவாகு வாசு.

சு-ம். ஊர்த்வமூலமயஃ ஸாவசஸ்வத்தம் ப்ராஹுரவ்யயம் ।
ஆபஸ்தம்பி யஸ்ய பர்ணானி யஸ்தம் வேத ஸ வேதவித் ॥ (1)

ப-ம். 1 ஊர்த்வமூலம் 2 அயஃஸாவம் 3 அஸ்வத்தம் 5 ப்ராஹுஃ 4 அவ்யயம் 7 ஆபஸ்
தம்பி 6 யஸ்ய 8 பர்ணானி 10 யஃ 9 தம் 11 வேத 12 ஸஃ 13 வேதவித்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சுருதிமிருதிகள் இச்சம்சார விருக்ஷத்தை ஊர்த் துவ மூலமுடையதெனவும் அதோசாகையுடையதெனவும் அச்சுவத்தம் அவ்வியய மெனவுங் கூறுகின்றன. எவ்விருக்ஷத்திற்குக் கர்மகாண்டவடிவ வேதந்தழுவோ அச்சம்சாரவடிவ விருக்ஷத்தை எவன் அறிகின்றானே அவனே வேதத்தை யுணர்ந்தவனுவன். (1)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இச்சம்சார விருக்ஷம் எத்தன்மையதெனின் ஊர்த்துவமூலம் ஆண்டுச் சுவப்பிரகாச பரமானந்தவடிவமான திரனும், நித்திய மானதிரனும் எவற்றினுமேலாகிய காரணவடிவப் பிரமம் ஊர்த்துவமாம். அவ் வூர்த்துவம், மூலமெனப்படும் காரணமெதற்கோ அது ஊர்த்துவமூலமாம். அல் லது, சர்வ சம்சாரம் பாதமாயினும் பாதமாகாததும் சர்வ சம்சாரப் பிராந்திக் கும் அதிட்டானமாகியதுமாகிய பிரமம் ஊர்த்துவமாம். அவ்வூர்த்துவம் தனது மாயாசத்தியால் மூலமெனப்படும் காரணம் எதற்கோ அது ஊர்த்துவமூலமாம். மற்று மெத்தன்மையதெனின், அச்சம்சாரவடிவ விருக்ஷம் அதோசாகையாம். ஈண்டு, 'அயஃ' [அதோ] என்னுஞ் சப்தத்தால் பின்னுற்பவிக்கத்தக்க காரியவடிவ வுபாதியையுடைய இரணியகருப்பன் முதலியோர்களைக்கொள்ளவேண்டும். உலகப் பிரசித்தமான விருக்ஷத்தின் சாகை மேற்குக் கிழக்கு முதலிய திசைகளில் விரிந் திருப்பதுபோல இரணியகருப்பர் முதலியோர்கள் பலதிசைகளிலும் விரிந்திருக் கின்றனராதலின், அவர்கள் பிரசித்தமான சாகைபோற் சாகை எதற்கோ, அது அதோசாகையாம். மற்று மெத்தன்மையதெனின் அது அச்சுவத்தம். ஆண்டு, எப்பொருள் "இப்பொருள் நெருநலிலுமிருக்கும்" என விசுவசித்தற்குரியதன்றே அப்பொருள் அச்சுவத்தமாம். இவ்வாறு விசுவசித்தற்குரியதன்றுதலின் இச்சம் சார விருக்ஷம் அச்சுவத்தமாம். மற்றுமெத்தன்மையதெனின் அது அவ்வியயமாம். அதாவது அழிதியனந்தவடிவ இத்தேதகாதிகளின் பிரவாகத்திற்கு இது ஆசிரய மாம். அங்ஙனமே, ஆன்மஞானமொழிந்த வேறெவ்வுபாயத்தானும் கெடாத தாம். ஆதலின், இது அவ்வியயமாம். இவ்வாறு சுருதிமிருதிகள் இம்மாயாமய சம்சார விருக்ஷத்தை ஊர்த்துவ மூலமுடையதெனவும் அதோசாகையுடைய தெனவும் அச்சுவத்தவடிவமெனவும் அவ்வியயவடிவமெனவுங் கூறுகின்றன. (1)

ஆ-சு. ஊர்த்வ மூலமோ2வா3 க்ஷ ஸாவ ஸஸ்வத்தஃ ஸ நாதநஃ ।

(பொ-ள்.) எவற்றினும் மேலாகிய பிரமம் ஊர்த்துவமாம். அதைக் காரணமாகஉடையது ஊர்த்துவமூலமாம். அர்வாக் என்பது நிக்கிருஷ்டத்திற்காம். அத்தன்மைய காரியவடிவ வுபாதியையுடைய இரணியகருப்பன் முதலியோர்கள், அல்லது மகதத்துவம் அகங்காரம் ஐவகைத் தன்மாத்திரைகள் என்ன அவ்விரணிய கருப்பாதிகள். அல்லது மகதத்துவ அகங்கார முதலியன பிரசித்தமான சாகை போலச் சாகை எதற்கோ அது அர்வாக்சாகையாம். அத்தன்மைய ஊர்த்துவ மூல அர்வாக்சாகையதுமாகிய இச்சம்சாரவடிவ அச்சுவத்த விருக்ஷம் சநாதனமாம் என்பதாம். என்பது முதலிய சுருதிகள் கடவல்லியுபநிடத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன. ஆண்டு இச்சுருதியிலிருக்கப்பட்ட அர்வாக்சாகை என்னும் பதம் சுலோகத்திலுள்ள அதோசாகை என்னும் பதத்தின் சமானார்த்தமுடையதாம். சுருதியிலிருக்கப்பட்ட "சநாதநம்" என்னும் பதம் சுலோகத்திலுள்ள அவ்வியய மென்னும் பதத்தின் சமானார்த்தமுடையதாம். இவ்வாறே இவ்விருக்ஷத்தை மிருதிவசனமுங் கூறுகின்றது.

ஸவ்ருக்ஷஸ்ய ப்ரஹவஸ்ய ஸைவ்யாஸ்ரு ப்ரஹோதிதஃ।
ப்ரஹ்மேந்த்ரய ஸயஸ்ரேவ ஜ்ஞேயாஸ்ரு கொடரஃ ॥ (1)

ஸஹாஸ்ரமதவிஸாவ ஸ்ருஷ்டயெஃ வதரவாம் ஸ்ருதா।
யஸாஸ்ரயஸ்ரு ஸைவாஷ்ரு வேதஸ்ரு ஸைவஸ்ரிவ ஸரொஸயஃ ॥ (2)

ரூஜீவ்யஸவஸ்ரு ஸ்ரமதாநாம் ப்ரஹ்ரவ்ருக்ஷஃ ஸநாதநஃ।
வதஸ்ரு ஸவநஸ்ரெவ ப்ரஹ்ரஜாஸ்ரு ஸாகஷிவஸ்ரு ॥ (3)

வஸதஸிக்ஷாஸ்ர ஸிக்ஷாஸ்ர ஜ்ஞாநெந வாஸாஸிநா।
ததஸ்ரா தஸ்ரிம் ப்ராவ்ய தஸ்ரோநாவதஸ்ரெதி வாநஃ ॥ (4)

(பொ-ள்.) அவ்வியாகிருத மெனும் பெயருடைய மாயாவிசிஷ்டப் பிரமம் அவ்வியத்தமாம். அதுவே மூலமெனுங் காரணவடிவம் அத்தன்மைய அவ்வியத்த வடிவ முலத்தினின்று பிரபவம் எனும் உத்பத்தி எதற்கோ அது அவ்வியத்த மூலப்பிரபவமாம். அத்தன்மைய அவ்வியத்தவடிவ மூலத்தின் அநுக்கிரகத்தினேன இச்சம்சார விருக்ஷம் பருத்ததாம் அதாவது அம்மூலத்தின் திடத்தினேன இவ்விருக்ஷம் மிகப்பருமனை யடைந்ததாம். உலகப்பிரசித்தமான விருக்ஷத்தின் சாகைகள் கந்தத்தினின்றும் உண்டாகின்றன; அதுபோல புத்தியினின்றே இச்சம் சாரத்தின் நாலுவகையான பரிணமங்களுண்டாகின்றன. இவ்வாறு சமானதர்மத் தன்மையால் இப்புத்தியே கந்த வடிவமாம். அத்தன்மைய புத்திவடிவ கந்தமுடை யதாதலின் இச்சம்சாரவிருக்ஷம் புத்திக்கந்தமயமெனக் கூறப்பட்டது. பிரசித்த மான விருக்ஷத்திற்குள் துவாரவடிவ கோடரங்களிருக்கின்றனபோல இவ்விரு க்ஷத்தில் சுரோத்திர முதலிய இந்தியங்களின் துவாரங்களே கோடரவடிவங் களாம். (1) உலக விருக்ஷம் அநேகசாகைகளை யுடையதாவதுபோல இவ்விரு க்ஷமும் ஆகாய முதலியவடிவப் பலவகையான சாகைகளையுடையதாம். அல்லது விசாகை என்னுஞ் சப்தம் ஸ்தம்பவாசகமாதலின் மாபூதங்களாகிய விசாகை யெனும் ஸ்தம்ப முடையதாம். விருக்ஷம்போல இச்சம்சாரவடிவ விருக்ஷமும் சப்தஸ்பரிச முதலிய விடயவடிவ பத்திரங்களை யுடையதாம். விருக்ஷம்போலத் தருமாதரும வடிவப் புஷ்பங்களையுடையதும் அதினின்று முண்டாகப்பட்ட சுகதுக்க வடிவ பலத்தை யுடையதுமாம். (2) விருக்ஷம் பறவை முதலியவற்றிற்கு உபசீவியமாயிருப்பதுபோல இதுவும் சர்வப் பிராணிகட்கும் உபசீவியமாம் எதனல் உபசீவனமாமோ அது உபசீவியமாம். இச்சம்சார விருக்ஷத்தைப் பர

மான்மாவாகிய பிரமம் ஆசிரயத்திருப்பதால் இது பிரமவிருக்ஷமெனப்படும். ஆன்ம ஞான மொழிந்த வேறு எவ்வுபாயத்தானும் நாசமாகாமையின் சனாதன மெனப் படும். சீவான்மவடிவப் பிரமத்திற்குப் போக்கியமானதால் பிரமவன மெனப் படும். அத்தன்மைய சம்சாரவடிவ விருக்ஷத்தில் சுத்தப்பிரமமோ சாக்ஷியைப் போல விளங்கிக்கொண்டிருக்கிறது அதாவது இச்சம்சாரத்தின் குணதோடங் களாற் சம்பந்திப்பதில்லை. (3) அத்தன்மைய சம்சாரவடிவ விருக்ஷத்தை அகம் பிரமாஸ்மி என்னுந்திடமான ஆன்மஞானவாளால் சேதனபேதனஞ்செய்து அதா வது மூலத்தோடு கெடுத்து இவ்வதிகாரி ஆன்மவடிவகதியை அடைந்து அம் மோட்சத்தினின்று புனராவிருத்தியை யடையான் என்பதாம். (4) இது முதலிய அநேக மிருதிகளில் இச்சம்சாரம் விருக்ஷரூபமாய் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது மூலமோ மேலாகவும் சாகை கீழாகவும் உள்ள விருக்ஷம் பிரசித்தியின்றியதா மாயினும் ஸ்ரீ கங்கையின் அலையால் மோதப்பட்ட உயர்ந்தகரையினின்றுங் காற்றுற் கீழேதள்ளப்பட்ட பெரிய அரசவிருக்ஷத்திற்கு மூலமோ மேலாம் சாகையோ கீழாம். அத்தன்மைய அச்சுவத்த விருக்ஷத்தை ஒப்புமையாக்கி ஸ்ரீ பகவான் இச் சம்சாரத்தை ஊர்த்துவ மூலமுடையதென்றும் அதோசாகையுடையதெனவும் கூறியருளினர். ஆதலின் இப்பகவானுடைய வாக்கியத்திற் சிறிதளவும் முரணடை யாதென்க. மற்று மெத்தன்மையதெனின் மாயாமயச் சம்சாரவடிவ அச்சுவத்த விருக்ஷம் வேதவடிவச் சந்தசைப்பர்ணமாகவுடையது; அதாவது தத்துவப்பொரு ளின் ஆவாகமாதலினுல் அல்லது சம்சாரவிருக்ஷத்தின் ரக்ஷகமானதினுல் கரும காண்டவடிவ இருக்கு முதலிய நான்கு வேதங்களும் பிரசித்தமான பர்ணம்போல இவ்விருக்ஷத்திற்குப் பர்ணமாம். கருத்திதுவாம்.—பிரசித்தமான பர்ணம் விரு க்ஷத்தின் ரக்ஷகத்தின் பொருட்டேயாமாவது போல இந்தக்கருமகாண்ட வடிவ வேதமும் சம்சார வடிவ விருக்ஷத்தின் ரக்ஷணத்தின் பொருட்டேயாம். என்னை, அக்கருமகாண்டவடிவ வேதம் தருமாதருமங்கள் அவற்றின் காரணம் அவற்றின் பலம் என்பவற்றினையே விளக்குவதாம். ஆதலின், அந்தக்கருமகாண்ட வடிவ வேதம் இச்சம்சார விருக்ஷத்தின் பரிரக்ஷகமாமாதலின் அவ்வேதத்தில் சம் சாரவடிவ விருக்ஷத்தின் பர்ணவடிவத்தன்மை பொருத்தமுடையதேயாமென்க. வேற அர்ச்சுன! எவ்வதிகாரி இவ்வாறு மூலத்தோடு மாயாமய அச்சுவத்தவடிவ சம்சார விருக்ஷத்தை யுணர்கின்றானே அவனே வேதவித்தாவன் அதாவது கரும காண்ட ஞானகாண்டவடிவ வேதங்களின் அர்த்தங்களாகிய கருமப் பிரமங்களை அவனே யுணர்கின்றான் என்பதாம். ஆண்டு, இச்சம்சார விருக்ஷத்தின் மூலமோ பிரமமாம்; இரணியகருப்பன் முதலிய சீவர்களோ சாகைகளாவர்கள். இத்தன்மைய விருக்ஷம் தனது வடிவத்தால் நாசமுடையதாம்; பிரவாகரூபத்தாலோ அனந்த மாம்; வேதோக்த கருமகாண்டவடிவ நீராலோ தெளிக்கப்பட்டதாம்; பிரமஞான வடிவ கட்கத்தால் வெட்டப்படுவதாம். இத்துணையே சர்வ வேதங்களின் அர்த்த மாம்: இவ்வாறு வேதார்த்தத்தையுணர்ந்தவனே எல்லாவர்த்தத்தையு முணர்கின் றான். இத்தன்மைய ஞானத்தை ஸ்ரீ பகவான் துதித்தருளுகின்றார், 'யஜ்ஞ வெஷ வெஷவிஷ்' என. (1)

(அ-கை.) இப்போது ஸ்ரீ பகவான் கூறிப்போந்த சம்சார விருக்ஷத்தின் அவயவங்கட்கு வேறு கற்பனையையு மருளிச்செய்கின்றார்.

சு-ம். ऊर्ध्वमूलमधःशाखमश्वत्थं प्राहुरव्ययम्
छन्दांसि यस्य पर्णानि यस्तं वेद स वेदवित्॥
अधश्चोर्ध्वं प्रसृतास्तस्य शाखा गुणप्रवृद्धा विषयप्रवालाः।
अधश्च मूलान्यनुसन्ततानि कर्मानुबन्धीनि मनुष्यलोके॥ (2)

ப-ம். 3 சுயஃ 4 அ 5 ஊயூழும் 6 வ்ரஹ்மதாஃ 1 தஹ்ய 2 ஸாவாஃ 7 ஸ்ரஷ்டாரஃ 8 விஷயவ்ருக்ஷாணாஃ 10 சுயஃ 11 அ 9 உபரிஷ்டாத் 12 சுஸ்ரஷ்டாத் 14 கஸாத்ஸ்ரஷ்டாரம்யீத் 13 உஸ்ரஷ்டியொகெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இச்சம்சார விருக்ஷத்தின் சாகைகள் கீழும் மேலும் தழைத்திருக்கின்றன; சத்துவமுதலிய குணங்களால் பந்தப்பட்டன; சப்தமுதலிய விஷயவடிவ பல்லவத்தையுடையன. அங்ஙனமே அவ்விருக்ஷத்தின் வாசனைவடிவமூலம் கீழும் மேலும் அநுசூதமாயிருக்கின்றது; அதிகாரியாகிய மநுஷ்யலோகத்தில் புண்ணிய பாபவடிவ கருமங்களை யுண்டுபண்ணுவது. (2)

(வி-ம்.) ஆண்டுப் பூர்வ சுலோகத்தில் காரியவடிவ வுபாதியையுடைய இரணியகருப்பன் முதலிய சீவர் இச்சம்சாரவிருக்ஷத்தின் சாகைவடிவங்களாகக் கூறப்பட்டனர். இப்போது அந்தச் சாகைகளிலுள்ள விசேடங்களை ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'சுயஹ்ரஷ்டாரம்' அர்ச்சுன! சாகைவடிவங்களான அச்சீவர்களுள்ளும் தியொழுக்கமுடைய துஷ்டசீவனை இச்சம்சார விருக்ஷத்திற்குக் கீழ் தழைத்த கிளையாவன் அதாவது அப்பாபியாகிய சீவன் பசுமுதலிய கீழான யோனிகளில் விநியப்பட்ட சாகையாவன்; சாத்திவிகித நல்லொழுக்கமுடைய தருமான்மாவான சீவனை இச்சம்சார விருக்ஷத்திற்கு மேலே தழைத்துள்ள சாகையாகின்றான் அதாவது அப்புண்ணியவான் தேவதை முதலிய யோனிகளில் விரிவையடைந்த சாகையாகின்றான். இவ்வாறு மநுடலோக முதற்கொண்டு பசுபக்ஷி விருக்ஷம் நரகத்திலுள்ள சரீரமீறுகிய கீழான ஸ்தானங்களிலும் மநுடலோக முதற்கொண்டு பிரமலோக மீறுகிய மேலான ஸ்தானங்களிலும் அந்தச் சம்சார விருக்ஷத்தின் சீவரூபங்களாகிய சாகைகள் வித்தரத்தை யடைந்திருக்கின்றன. அச்சாகைகள் எத்தன்மைத்தாயனவாமெனின், குணங்களாற் பருக்கப்பட்டன அதாவது உலகத்தின் மாக்கிளைகள் நீர் தெளித்தலாற் பருமனையடைவனபோல தேகேந்தியவிடய முதலிய வடிவமாய்ப் பரிணமத்தையடைந்த சத்துவ முதலிய முக்குணமாகிய நீராற்பருக்கப்பட்டனவாம். மற்று மெத்தன்மையனவெனின் விடய வடிவப் பல்லவங்களையுடையனவாம்; அதாவது, உலகவிருக்ஷத்தின் கிளையின் நுனிப்பாகத்தோடு மிருதுவான அங்குரவடிவ பல்லவங்கள் பொருந்தியிருப்பனபோல க்கூறிப்போந்த சீவவடிசாகைகளின் நுனிப்பாகத்திலிருக்கப்பட்ட இந்திரிய சன்னிவிருத்திகளோடு சப்தமுதலிய விடய சம்பந்தங்களையுடையனவாம்; இதனாலே அவ்விடயங்கள் அந்தச் சாகைகளின் கோமளவடிவப் பல்லவங்களாம். மற்று மெத்தன்மையதெனின் இச்சம்சாரவடிவ விருக்ஷம், அதன் அவாந்தரமூலங்கள் கீழும் மேலும் அநுசூதமாயிருப்பனவாம். ஆண்டு அவ்வப்பதார்த்த போகங்களாலுண்டாகிய வாசனைய இவனைத் தருமாதருமங்களிற் செலுத்துகின்றது. அந்த ராகத்துவேஷ முதலியவற்றின் வாசனையே இச்சம்சார விருக்ஷத்திற்கு அவாந்தர மூலமாம். பூர்வ சுலோகத்தில் இச்சம்சார விருக்ஷத்திற்கு மாயாவிசிஷ்டப் பிரமம் மூலமெனக்கூறப்பட்டது அது முக்கிய மூலமாம். இப்போது வாசனைவடிவ அவாந்தரமூலங் கூறப்படுகின்றது. ஆதலின், ஈண்டுப் புனருக்தியின்றுமென்க. அவ்வாசனைவடிவ மூலம் எத்தன்மையதெனின் கருமானுபந்தியாம். ஆண்டுத் தருமாதருமவடிவ கருமம் எதற்குப் பின்னுலுண்டாகத்தக்கதாமோ அது கருமானுபந்தியாம்; அதாவது அந்த ராகத் துவேஷமுதலிய வாசனைவடிவ அவாந்தரமூலம் முதலில் தானுண்டாகிப் பின்னர் தருமாதருமவடிவ கருமத்தை யுண்டாக்குகின்றது. ஆண்டு அவ்வாசனைவடிவமூலம் எந்த ஸ்தானத்தில் அந்தக் கருமத்தையுண்டாக்குகின்றது என்றருச்சுனனுக்கறியும் வேட்கையுண்டாக ஸ்ரீ பகவான் அந்தஸ்தானத்தை அருளிச்செய்கின்றார். 'உஸ்ரஷ்டியொகெ உதி' ஆண்டு, மநுடனுகிய

வுலகம் மநுடலோகமாம் அதாவது அதிகாரியாகிய பிராமணன் முதலிய தேகங்கள் மநுடலோகமாம். அத்தன்மைய தேகங்களிடத்தே அவ்வாசனைவடிவமூலம் மிகுதியாய் அக்கருமத்தையுண்டாக்குகின்றது. சாத்திரத்தில் மநுடனேயே கருமாதிகாரியெனக் கூறியிருத்தலினென்க. (2)

(அ-கை.) இப்போது ஸ்ரீ பகவான் கூறிப்போந்த சம்சாரத்தில் அநிருவசனத்தன்மையைக்கூறி அதன் சேதனத்தின் உபாயத்தை அருளிச்செய்கின்றார்.

சு-ம். நமோவஸ்வை ஹதயோவமுஹ்யதே
நாஸ்மோ அதிநமஸ்துய வம்வ்ருதிஷ்மா ।
ஸபத்தஸேநம் மஹவிமோஜஸம் யோஸ்மாகம் ஸூரிம் மகவாத்ருணஸ்து ॥ (3)

ப-ம். 5 நம 4 மோவம் 2 ஸுஹ்ய 1 ஊஹ 3 தயா 6 உவமுஹ்யதே 8 நம 7 ஸுஷ்டி 11 நம 9 அ 10 க்ருதி 14 நம 12 அ 13 வம்வ்ருதிஷ்மா 17 ஸபத்தம் 16 வநம் 15 மஹவிமோஜஸம் 19 யோஸ்மாகம் 18 ஸூரிம் 20 மகவா

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இச்சம்சாரத்திலுள்ள பிராணிகள் இச்சம்சார விருக்ஷத்தினது அவ்விதமான சொரூபத்தையே யுணராரர்; அந்தத்தையு முணராரர்; ஆதியையுமுணராரர்; மத்தியத்தையுமுணராரர். அத்தன்மைய திடமான மூலத்தையுடைய இந்த அச்சுவத்தவடிவ சம்சார விருக்ஷத்தை மிகத் திடமான வைராக்கியவடிவ கட்கத்தாற் சேதித்துப் பிரமமுணரப்படுவதாம். (3)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! முன்னர் வர்ணிக்கப்பட்ட சம்சாரவடிவ விருக்ஷம் எத்தன்மையதெனின், இச்சம்சாரத்திலுள்ள பிராணிகள் இச்சம்சார விருக்ஷத்தினுடைய கூறிப்போந்த ஊர்த்துவமூலம் அதோசாகை என்பது முதலிய சொரூபத்தை அவ்விதமாகவே யுணராரர்கள். என்னை, கனுப்பொருள், கானனீர், மாயையுண்டாக்கிய பொருள், கந்தருவ நகரம் என்னுமிவ்வனைத்தும் மித்தையானதால் திருஷ்டநஷ்ட [காணக்கெடுஞ்] சொரூபமுடையவைகளேயாம். அதுபோல இச்சம்சார விருக்ஷமும் மித்தையானதால் திருஷ்டநஷ்ட சொரூபமுடையதேயாம்; ஆண்டு எப்பொருள் காணும்போழ்தே கெடுகின்றதோ அது திருஷ்ட நஷ்டமாம். அத்தன்மைய சுபாவமுடைய இச்சம்சாரவிருக்ஷத்தின் கூறிப்போந்த ஊர்த்துவ மூலம் அதோசாகை என்பது முதலிய சொரூபம் இச்சீவர்கட்குக் கட்புலப்படுவதில்லை. இதனானே இவ்விருக்ஷத்தின் முடிவுவடிவ அந்தமுந் தோற்றுவதில்லை. அதாவது இத்துணைப்போழ்து கழிந்தபின்னர் இச்சம்சார விருக்ஷம் முடிவையடையும் என இதன் அந்தமும் அறியப்படவில்லை என்பதாம். இதனானே இவ்விருக்ஷத்தின் ஆதியுந் தோற்றவில்லை; அதாவது இக்காலமுதற்கொண்டு இவ்விருக்ஷம் பிரவிருத்தியானது என இதன் ஆதியும் உணரப்படவில்லை என்பதாம். இது அநாதியாதலின் இதன் நிலைத்தல் வடிவப்பிரதிஷ்டையுந் தோற்றவில்லை. அதாவது மத்தியமுந்தோற்றவில்லை என்பதாம். என்னை, ஆதியந்தங்களின் அபேட்சையானே மத்தியமெனப்படுகின்றது அவைகள் சித்தியாதனவாகவே மத்தியமும் சித்திக்கவில்லை. இவ்வாறு இச்சம்சாரவிருக்ஷம் சேதித்தற்கருமையாதலினும் அனர்த்தத்தைத்தருவதாதலினும் அநாதியஞ்ஞானத்தால் மிகத்திடமாய்க்கட்டப்பட்ட மூலத்தையுடைய கூறிப்போந்த அச்சுவத்தவடிவ சம்சாரவிருக்ஷத்தைத் திடமான அசங்ககட்கத்தால் இவ்வதிகாரி சேதிக்கவேண்டும். ஈண்டு விடய சுகேச்சை சங்கமாம். அதற்கு விரோதியாகிய வைராக்கியம் அசங்கமாம் அதாவது மூவேடணைகளின்தியாகம் அசங்கமாம். உலகத்திலுள்ள கோடாரி முதலிய சஸ்

திரங்கள் உலகத்திலுள்ள விருக்ஷத்திற்கு விதோதிகளாகின்றனபோல வைராக்கியமும் ராகத்துவேட முதலியவடிவ சம்சார விருக்ஷத்திற்கு விரோதியாம். ஆதலின் வைராக்கியமும் சஸ்திரவடிவமாம். அந்த வைராக்கியவடிவ அசங்கசஸ்திரம் எத்தன்மையதினின் திடமாம் அதாவது நானே பிரமசொரூபம் என்னும் பிரமஞானத்தின் உத்கடவேட்கையால் வலியுறுத்தப்பட்டது; அன்றியும் உலகத்திலுள்ள சஸ்திரம் சாணைக்கல்லிற்றீட்டுவதாற் கூராகின்றதுபோல மறித்துமறித்தும் விவேகாப்பியாசத்தால் தீக்ஷ்ணமாக்கப்பட்டது. அத்தன்மைய திடாசங்கசஸ்திரத்தால் இவ்வதிகாரி கூறிப்போந்த அச்சம்சார விருக்ஷத்தை மூலத்தோடு சேதிக்கவேண்டும்; அதாவது வைராக்கியம் சமம் தமம் என்பது முதலிய சாதன சம்பத்தியால் சர்வகருமங்களையுஞ் சந்நியாசஞ்செய்தல்வேண்டும். இதுவே அதனைச்சேதிப்பதாம் என்க. (3)

(அ-கை.) ஹே பகவன்! அத்தன்மைய சம்சாரவடிவ அச்சுவத்த விருக்ஷத்தை அசங்கசஸ்திரத்தால் சேதித்த பின்னரும் இவ்வதிகாரியாற் செயற்பாலதொன்றுண்டோ அல்லது இத்துணைமாத்திரத்தானே கிருத கிருத்தியத்தன்மையோ என்றர்ச்சுனனுக்கறியும் வேட்கையுண்டாக ஸ்ரீ பகவான் அதன்பின் செய்யற்பாலதை அருளிச்செய்கின்றார்.

சு-ம். ததஃ பதம் தத்பரிமார்கிதவ்யம் யஸ்மின்கதா ந நிவர்தந்தி பூயஃ।
தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே
யதஃ ப்ரவ்ருத்திஃ ப்ரஸ்ருதா புராணீ ॥ (4)

ப-ம். 1 ததஃ 3 பதம் 2 தத் 4 பரிமார்கிதவ்யம் 5 யஸ்மிந் 6 கதாஃ 8 ந 9 நிவர்தந்தி 7 பூயஃ 15 தம் 18 ஏவ 10 அ 16 சாத்யம் 17 புருஷம் 19 ப்ரபத்யே 11 யதஃ 12 ப்ரவ்ருத்திஃ 14 ப்ரஸ்ருதா 13 புராணீ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அப்பிரமபதமே உணரத்தக்கது. எப்பதத்தில் நிலைத்தவனுய் வித்துவான் மறித்தும் ஜன்மத்தையடைவதில்லையோ எப்புருடனுல் இச்சம்சார விருக்ஷத்தின் பிரவிருத்தி அனுதியாய் வந்துகொண்டிருக்கிறதோ அந்த ஆதியாகிய புருடனுக்கே சரணாகதியானேன். (4)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வதிகாரி அந்த வைராக்கியவடிவ அசங்க சஸ்திரத்தால் கூறிப்போந்த சம்சாரவடிவ விருக்ஷத்தை மூலத்தோடு சேதித்த பின்னர்க் கற்றெழுகிய குருவின்பாற்சென்று இச்சம்சாரவடிவ விருக்ஷத்தின் ஊர்த்துவத்திலுள்ள சுத்தப் பிரமவடிவவைணவபதம் ஆகிய 'தத்விஷ்ணோஃ பரமம்பதம்' என்பது முதலிய சுருதிகளாற் கூறப்பட்ட அந்தச் சுத்தப்பிரமபதமே இவ்வதிகாரியால் சிரவண மனனவடிவ வேதாந்த வாக்கியங்களின் விசாரத்தால் உணரப்பாலதாம்.

ஆ-சு. ஸொதேஷ்டவ்யஃ ஸவிஜிஜ்ஞாஸிதவ்யஃ।

(பொ-ள்.) அந்தச் சுத்தப்பிரமமே இவ்வதிகாரியால் தேடத்தக்கது. அங்ஙனமே அந்தச் சுத்தப்பிரமமே இவ்வதிகாரிக்கு அறிய விரும்பத்தக்கது என்பதாம். ஆண்டு நெறிக்கண் பொருளைத்தேடல் அந்வேஷணமாம். அற்றேல் ஹே பகவன்! சர்வ கருமசந்நியாச பூர்வக சிரவணமுதலிய சாதனங்களால் இவ்வதிகாரியாலுணரத்தக்க பதம் யாது என்றருச்சுனனுக்கறியும் வேட்கையுண்டாக ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'யஸ்மின்கதா ந நிவர்தந்தி பூயஃ' என. ஹே அர்ச்சுன! எப்பதத்தில் அகம்பிரமாஸ்மி என்னும் ஞானத்தாலடையப்பட்ட

தத்துவஞானி மறித்தும் சம்சாரத்தையடைவதில்லையோ அதாவது மீண்டுஞ் சன்மத்தையடைவதில்லையோ அந்த அத்துவிதீயப் பிரமவடிவபதமே இவ்வதிகாரியால் சிரவணமுதலிய சாதனங்களால் உணரத்தக்கதாம். அற்றேல், ஹே பகவன்! அந்த நிர்க்குணப் பிரமபதம் எவ்வுபாயத்தாலுணரப்படும் என்றுணரும் வேட்கையுண்டாக அர்ச்சுனனுக்கு ஸ்ரீ பகவான் அதனையறியும் உபாயத்தை அருளிச் செய்கின்றார். 'தத்வெவமாத்ஸ்ம்வாஸ்ரஷம் ப்ரவக்ஷ்ய' என. ஹே அர்ச்சுன! முன்னர்ப்பதசப்தத்தாற் கூறப்பட்ட நிர்க்குணப்பிரமவடிவ ஆதியான புருஷனையே அதிகாரியாகிய நான் சரணகதியடைகின்றேன் என அப்பிரமத்தின் சரணகதியானே அப்பிரமவடிவுபதம் உணரப்படுகின்றதென்பதாம். ஆண்டு, சர்வ உலகத்தின் ஆதியில் இருக்கப்பட்டது ஆதியதாம்; இவ்வுலகனைத்தையும் அஸ்திபாதிப் பிரியவடிவத்தாற் பூரணம்பண்ணியது புருஷனும் அல்லது, இத்தேகவடிவ புரியில் அதிட்டானவடிவமாய்ச் சயனிப்பது புருஷனும். அத்தன்மைய ஆதியிலுள புருஷவடிவ பரப்பிரமத்தின் நிரந்தர சிந்தனவடிவ அனன்ய பக்தியே அப்பரப்பிரமபதத்தின் சாட்சாத்காரத்திற்கு உபாயம் என்பதாம். அற்றேல், ஹே பகவன்! இவ்வதிகாரி சரணடைந்து வைணவபதத்தை யடையத்தக்க புருஷன் யார் என்றருச்சுனனுக்கறியும் வேட்கையுண்டாக ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார் 'யதஃ ப்ரவ்ருத்திர்பூதானாம்' என. ஹே அர்ச்சுன! மாயையின் சம்பந்தத்தால் இந்த மாயாமய சம்சார விருக்ஷத்தின் அநாதிப் பிரவிருத்தியை நடத்திக்கொண்டிருக்கும் ஆதியிலுள புருஷன். இந்திரசாலிகளால் மாயாமயமான யானை முதலிய வைகளின் பிரவிருத்தியுண்டாவதுபோல எவ்வாதியிலுள்ள புருஷனால் இம்மாயாமய சம்சாரவிருக்ஷத்தின் பிரவிருத்தியுண்டானதோ அந்த ஆத்ய புருஷனுடைய சரணப் பிராப்தியே அப்பதத்தை யுணர்வதற்குபாயமாம் என்க. (4)

(அ-கை.) இப்போது அந்த வைணவபதத்தின் ஞானபூர்வகம் அந்த வைணவபதத்தை யடையத்தக்க அதிகாரிக்கு அப்பதப்பிராப்தியின்பொருட்டு வேறு சாதனத்தையும் ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். நிர்மானமோஹா ஜிதஸம்மதோஷா அத்யாத்மநித்யா விநிவ்ருத்தகாமாஃ।
த்வந்த்வைர்விமுக்தா ஸுகது:கஸம்ஜ்ஞை
ர்கச்சந்த்யமூடா: பதமவ்யயம் தத் ॥ 15-11 (5)

ப-ம். 1 நிர்மானமோஹாஃ 2 ஜிதஸம்மதோஷாஃ 3 அத்யாத்மநித்யாஃ 4 விநிவ்ருத்தகாமாஃ 6 த்வந்த்வைர்விமுக்தாஃ 5 ஸுகது:கஸம்ஜ்ஞைஃ 12 அமூடா: 8 பதம் 11 அவ்யயம் 10 தத் 9.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மானமோகங்களை நிவிருத்தித்தவனும் சங்கதோஷங்களைச் சயித்தவனும் பரமான்மவடிவ விசாரத்தில் தற்பரனும் காமம் நீங்கினவனும் சுகதுக்கங்களெனும் சீதோஷ்ணமுதலிய துவந்துவங்களைப் பரித்தியாகம்பண்ணினவனுமாகிய வித்துவான் அந்த அவ்வியயபதத்தை அடைவன். (5)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! கருவமெனும் அகங்காரம் மானமாம்; விவேகமின்மை மோகமாம் அல்லது விபரியயம் மோகமாம். அவைகளினின்றும் வெளிப்பட்டவர்கள் நிர்மானமோகர்களாவர்கள் அல்லது அவைகளை நிவிருத்தித்தவர்கள் நிர்மானமோகர்களாவர்கள். தோஷசங்கங்களைச்செயித்தவர்கள் அதாவது பிரியாப்பிரிய வஸ்துக்கள்வந்தடையினும் ராகத்துவேஷ மின்றியவர்கள். அல்லது சங்கதோஷங்களை ஜயம் பண்ணினவர்கள். ஈண்டுச் சங்கசப்தத்தாலோ நான் கருத்தன் எனக் கருத்திருத்துவாபிமானத்தைக் கொள்ளவேண்டும். தோஷசப்தத்

தால் ராகத்துவேஷ முதலிய தோஷங்களைக்கொள்ளவேண்டும். அத்தியாத்ம நித்தியர்கள் பரமான்மாவினது உண்மைவடிவ விசாரத்தினிரந்தரந்தற்பரர்கள். விநிவிருத்தகாமர்கள். ஆண்டு விசேடமாய் விடயபோகவடிவ காமநீங்கியவர்கள்; அதாவது விவேகவைராக்கியத்துவாரா சர்வ கருமங்களையுந் தியாகம் பண்ணியவர்கள் விநி விருத்தகாமர்களாவர்கள். சுகதுக்கங்கட்குக் காரணமானதால் சுகதுக்கங்களெனும் சீதோஷ்ணம் பசிதாகம் என்பது முதலிய துவந்துவங்களைப்பரித்தியாகம் பண்ணினவர்கள். ஒரு மூலப் புத்தகத்திலோ 'ஸுவதுஃவ ஸம்ஜ்ஞை:' எனவும் பாடமுளது. அதற்கு சுகதுக்கங்களோடுசங்கமெனுஞ் சம்பந்தமுடையசீதோஷ்ண முதலிய துவந்துவங்களைப் பரித்யாகம் பண்ணினவர்கள் என்றர்த்தம் பண்ணவேண்டும். இத்தன்மைய மூடமின்றியவர்கள் அதாவது வேதாந்தப் பிரமாணத்தாலுண்டாகிய இனிய வான்மஞானத்தால் ஆன்மாஞ்ஞானத்தை நிவிருத்தித்த தத்துவஞானிகளே கூறிப்போந்த விநாசமற்ற பரப்பிரம பதத்தை யடைகின்றார்கள் என்பதாம். (5)

(அ-கை.) ஆண்டுக் கூறிப்போந்த சாதனங்களாலடையத்தக்க அத்துவிதீய நிர்க்குணப் பிரமவடிவ வைணவபதத்தையே இப்போது விசேடமாயருளிச் செய்கின்றார்.

சு-ம். ந தத்³ பா⁴ஸயதே ஸூர்யோ ந ஶஶாங்கோ ந பாவக꞉ ।
யத்³க³த்வா ந நிவர்த⁴ந்தே தத்⁴பா⁴ம பரமம் மம ॥ (6)

ப-ம். 7 ந 5 தத் 8 பா⁴ஸயதே 6 ஸூர்ய꞉ 10 ந 9 ஶஶாங்க꞉ 12 ந 11 பாவக꞉
1 யத் 2 க³த்வா 3 ந 4 நிவர்த⁴ந்தே 14 தத் 16 ம்ம 15 பரமம் 13 மம.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எப்பதத்தை யடைந்து தத்துவஞானி புனராவிருத்தியை யடைவதில்லையோ அப்பதத்தைச் சூரியனும் சந்திரனும் அக்கினியும் பிரகாசிப்பிக்கின்றதின்றும். விஷ்ணுவாகிய எனது சொரூப பூதமாகிய அப்பதம் எல்லாவற்றினு மேலாகிய சுயம்பிரகாசவடிவமாதலின் என்க. (6)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! கூறிப்போந்த சாதனங்களால் எந்த நிர்க்குணமாகிய அத்துவிதீயப் பிரமவடிவ வைணவபதத்தையடைந்து தத்துவஞானியானவன் புனராவிருத்தியை யடைவதில்லையோ அதாவது மீண்டுஞ் சன்மத்தை யடையவில்லையோ, அந்தப் பரப்பிரமவடிவ பதத்தை உலகனைத்தையும் விளக்குமாற்றலுடைய சூரியனும் பிரகாசியான். அற்றேல், சூரியன் அத்தமிக்கினும் சந்திரனுலாயவொளி நிகழக்காண்டலின் அச்சந்திரனே அப்பதத்தை விளக்குவன் என்னு மர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார் 'ந தத்³ பா⁴ஸயதே ஸூர்யோ' என. சந்திரனும் அப்பதத்தைப்பிரகாசியான். அற்றேல், இரவிமதிகளில்லாவிடத்தும் தீயாலாயவொளி நிகழக்காண்டலின் அத்தீயே அப்பதத்தை விளக்கும் என்னு மர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார் 'ந பாவக꞉' என. அக்கினியும் அப்பதத்தைப் பிரகாசியாது. அற்றேல் இரவிமதி தீக்கள் அப்பதத்தை விளக்குதற்கேலாதன என்னும் பிரதிக்ஞை மாத்திரத்தாலப்பொருட்சித்தியாதல் கூடாது. அங்ஙனமாகிலோ மலடிமைந்தனிருக்கின்றான் என்னும் பிரதிக்ஞை மாத்திரத்தானே மலடிமைந்தனுஞ் சித்தியாதல் வேண்டும்; சித்தியோ இன்று. ஆதலின் பிரதிக்ஞைசெய்து அப்பொருட்சித்தியில் யாதேனும் ஹேது கூறற்பாலது. அவ்வேது யாது என்னு மர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அதில் அப்பரப்பிரமத்தின் சுயம்பிரகாசவடிவ ஹேதுவை அருளிச்செய்கின்றார் 'தத்³ தா⁴மபரமம் மம' என. அர்ச்சுன! எதனுல் அப்பதம் வியாபக விஷ்ணுவாகிய எனது சொரூபவடிவதாமமும் அதாவது சுவப்பிரகாசவடிவமும்

இரவி மதி தீமுதலிய சர்வசடப்பொருள்களை விளக்குவதும் பாமமும் அதாவது எல்லாவற்றினும் மேலாயதுமாமோ அதனல் அந்தச்சந்திரன் முதலியோர்கள் அப்பதத்தைப்பிரகாசியார்கள். உலகத்திலும் எப்பொருள் எவ்வொளியால் விளக்கப்படுகின்றதோ அவ்விளக்கப்படுபொருள் தன்னையொளிர்விக்குமொளியை விளக்கற் கேலாததாம். சூரியன் ஒளியால் விளக்கப்பட்ட குடமுதலிய பதார்த்தங்கள் தம்மையொளிர்விக்குஞ் சூரியவடிவ ஒளியை விளக்குதற்கேலாதனபோல இந்தச் சூரியசந்திரன் முதலிய சடவொளிகளும் தம்மையொளிர்விக்கும் சைதன்ய பரப் பிரமவடிவ சோதியை விளக்கற்கேலாதனவாம். இத்துணை கூறியதால் ஸ்ரீ பகவான் இவ்வனுமானத்தைக் குறிப்பித்தருளினர். இரவி மதி முதலியவைகள் பரப் பிரமத்தை விளக்குவனவன்று; அதனல் விளக்கப்பட்டனவாதலின் எப்பொருள் எவ்வொளியால் விளங்குகின்றதோ அப்பொருள் தன்னையொளிர்விக்கும் அந்த வொளியைப் பிரகாசியாது கடமுதலிய பொருள்கள் சூரியனைப்பிரகாசியாதன போல என்பதாம். இது சுருதியிலும் கூறப்பட்டுள்ளது.

ஆ-சு. நதத்ர ஸூயொ-ஜாதி நஜ்ஞ்ரதாரகம்
நெமாவிஜ்ய-துதோஜாதி கு-துதாயஜ்நிஃ ।
தமெவ ஜாஜ்ஜ-நு-ஜாதிஸவ-ஜ்ம் தஸ்யஜாஸா ஸவ-ஜ்ஜிஜ்ம் விஜாதி ॥

(பொ-ள்.) அப்பிரமவடிவ பதத்தைச் சூரியனும் சந்திரனும் உடுக்கணங் களும் மின்னலும் பிரகாசித்தற் கேலாதனவாம். ஆதலின் சிற்றொளியையுடைய இவ்வக்கினி அப்பிரமத்தைப் பிரகாசஞ்செய்வ தெங்ஙனம்; மற்றோ பிரகாசியாது. அப்பிரமம் பிரகாசமான பின்னரே இவ்வுலகனைத்தும் விளங்குகின்றது அங்ஙனமே அப்பரப்பிரமத்தின் பிரகாசவடிவ தேஜசால் இவ்வுலகனைத்துந்தோற்றுகின்றது என்பதாம். ஆண்டும் அப்பிரமவடிவ பதத்திற்குச் சுயம்பிரகாசத்தன்மை கூறிய தால் ஸ்ரீ பகவான் இச்சங்கையை நீக்கியருளினர். அது வருமாறு:—அந்தப் பரப் பிரமவடிவ வைணவபதம் வேத்தியமோ அல்லது அலவோ; அதாவது, யாதா மொரு ஞானத்திற்கு விடயமாவதோ அல்லது ஆகாததோ. வேத்தியமெனிலோ எப்பொருள் வேத்தியமாமோ அப்பொருள் தனக்கயலாய் அறிபவனையவாவல் ஒருதலையாம். கடமுதலிய வேத்தியப் (அறியப்படு) பொருள்கள் தமக்கயலாய் ஒருதலையா யறிபவனை அவாவுகின்றனபோல அந்த வேத்தியபதமும் தன்னின் வேறாய் யாதேனுமொரு அறிபவனை அவசியமவாவும். ஆதலின் உனது மதத்தில் துவைதத்தன்மை சித்தியாம். அவேத்தியமாமெனும் இரண்டாவது பக்ஷத்தைக் கொள்ளிலோ அப்பதம் புருடார்த்தமல்லாததென வரும். அறியப்படாதபதத்தில் புருடார்த்த வடிவத்தன்மை சம்பவியாமையின் என்னு மிச்சங்கையை நீக்கியருளி னர் என்பதாம். என்னை? அந்தப் பரப்பிரமரூபபதம் அவேத்தியமாயினும் தான் அபரோட்ச வடிவமேயாம். 'யஜ்ஞாக்ஷா உவசொக்ஷா ஜ்ஞ' எந்தப்பிரம நேரே யபரோட்சமோ என்பதாம். ஆதலின் துவைதப் பிராப்தியும் புருடார்த்தத்தன் மையின்மையும் ஆகாதென்க. ஆண்டு, அப்பரப்பிரமவடிவ பதத்தில் அவேத் தியவடிவத்தன்மையை ஸ்ரீ பகவான் 'நதஜ்ஞாவஜ்ய தெஹ-மயொ-ஜ்' என்னுஞ் சுலோகத்தில் சூரியாதிகளால் விளக்கப்படாத்தன்மைவடிவ ஹேதுவால் அரு ளிச்செய்தனர். எல்லாவற்றின் பிரகாசகத்தன்மையால் தம்மபரோட்சத்தன் மையோ 'யஜ்ஞாதிதஸ்ய மதம்தெஜ்ஃ' என மேற்கூறப்படுஞ் சுலோகத்தில் ஸ்ரீ பக வான் அருளிச்செய்வார். இவ்வாறு இரண்டு சுலோகங்களால் ஸ்ரீ பகவான் 'நதத்ர ஸூயொ-ஜாதி' என்னுஞ் சுருதியின் இரண்டுவிபாகார்த்தத்தை அருளிச்செய்தனர் என்பதாம். ஒரு வியாக்கியானத்திலோ 'நதஜ்ஞாவஜ்யதெ ஸூயொ-ஜ்' என்னுஞ்சுலோகத்திற்கு இவ்வர்த்தம் பண்ணப்பட்டிருக்கிறது.—

அப்பரப்பிரமவடிவபதத்தைச் சூரியனும் பிரகாசியான்; என்னை? அப்பதம் உருவ முதலிய குணமின்றியதாதலின் கட்புலப்படுவதில்லை. உருவமுடைப்பொருளே கட்புலப்படுவதாம். அந்த வுருவுடைப்பொருள்களோ சட்சுவிற் கதுக்கிரகிக்கும் சூரியனல் பிரகாசிக்கப்படுகின்றன. உருவமுடைய கடமுதலிய பொருள்கள் கட்புலப்படுவதால் சூரியனல் விளங்குகின்றனபோல இப்பரப்பிரமவடிவபதமோ உருவமுடையதாய்க் கட்புலப்படாமையின் இப்பதத்தை அச்சூரியனும் பிரகாசியான். ஆண்டு 'நதத்ர அக்ஷ்மழ்ஹதி நஅக்ஷ்ஷா மஹ்யதே' என்பது முதலிய சுருதிகளில் அப்பரப்பிரமம் கட்புலப்படாததென்று கூறப்பட்டிருக்கிறது. இத்துணைக் கூறியதால் ஸ்ரீ பகவான் அப்பதத்தில் வெளியிந்தியங்களனைத்தின் நீக்கத்தை அருளிச்செய்தனர். இப்போது அப்பதத்தில் மனத்தின் வியாவிருத்தியை அருளிச்செய்கின்றார். 'நமஸாஂகஃ' என. ஹே அர்ச்சுன! அப்பதத்தைச் சந்திரனும் விளக்கான்; என்னை, எப்பொருள் மனத்தாற் கிரகிக்கப்படுகின்றதோ அவ்வஸ்துவையே அம்மனத்திற் கதுக்கிரகம்பண்ணும் சந்திரன்விளக்குவன் இப்பரப்பிரமவடிவபதமே மனத்தாற் கிரகிக்கப்படாமையின் சந்திரனும் பிரகாசித்தற்கேலாததாம். ஆண்டு, 'யதோ வாசோ நிவர்தந்தே' என்பது முதலிய சுருதிகள் அப்பதத்தில் மனோவிடயத்தன்மையை நிவிருத்திக்கின்றன. அப்பதத்தை அக்கினியும் பிரகாசியாது; என்னை? எப்பொருள் வாக்கிந்திரியத்திற்கு விடயமாமோ அப்பொருளையே அவ்வாக்கிந்தியத்திற் கதுக்கிரகிக்கும் அக்கினி பிரகாசிப்பிக்கும். வாக்கிந்திரியத்திற்கு விடயமிலாப்பொருளை அவ்வக்கினி பிரகாசியாது. 'யதோ வாசோ நிவர்தந்தே நஅக்ஷ்ஷா மஹ்யதே நாவிவாசா' என்பது முதலிய சுருதிகள் அப்பதத்தில் வாக்கிந்தியத்தின் விடயத்தன்மையை நிவிருத்திக்கின்றன. ஆதலின் அப்பரப்பிரமத்தை அவ்வக்கினி விளக்கற்கேலாததாம். ஹே அர்ச்சுன! அப்பரப்பிரமபதம் சட்சு மனவாக்குசட்கு விடயமாகாமையின் தூல சூட்சுமகாரணவடிவ சர்வப் பிரபஞ்சங்களுமற்ற பிரத்தியக்கத்துவிதீயமாம். இவ்வாறு 'நாஞஃ வ்ருஜூ ம்ஸைஹிஃ வ்ருஜூம்ஸுஷ்வு உநணஹ்ரஸ்வ உதீவ்ரஃ' என்பது முதலிய சுருதிகள் சர்வ தருமங்களுமற்றதாய் அப்பிரத்தியக்கபின்ன அத்துவிதீயப் பிரமத்தைக்கூறுகின்றன. அவ்வத்துவிதீயப் பிரமம் பரமேசுராகிய எமது பரமதாமமாம்; அதாவது பரமபாவயின்றிய அந்தக்காணவிருத்திவடிவ ஞானத்தினும் வேறுகிய சின்மாத்திரசோதிவடிவமாம். ஈண்டு இராகுவின் சிரம் என்னும் வாக்கியத்தில் இராகு பதத்தினீற்றில் சம்பந்தவாசக ஆறும் வேற்றுமையிருக்கினும் இராகுவினுடைய தலை எனப் போதமுண்டாவதில்லை; மற்றோர் இராகுவினும் வேறன்று சிரம் என அபேதஞானமேயுண்டாகின்றதுபோல 'தஸ்ய உவாச உஃ' என்னும் வாக்கியத்தில் 'உஃ' [என்னுடைய] என்னும் பதத்தினீற்றில் சம்பந்தவாசக ஆறும் வேற்றுமையிருக்கினும் என்னுடைய பரமதாமம் எனப் போதமுண்டாகாது. மற்றோ, அந்த அத்துவிதீய சுவயஞ்சோதிவடிவ பரமபதம் பரமேசுராகிய எமது சொரூபமேயாம் என்னும் அபேதஞானமே யுண்டாகின்றது என்பதாம். ஹே அர்ச்சுன! அவ்வத்துவிதீய சுவயஞ்சோதியாகிய பிரமபதம் பரமேசுராகிய எமது சொரூபமேயாதலினனே அப்பதத்தை அகம்பிரமாஸ்மி என்னும் ஞானபூர்வகமடைந்து வித்துவான் மறித்தும் ஆவிருத்தியையடையான்; அதாவது மறித்துஞ் சன்மத்தையடையான்; என்னை? புனராவிருத்திக்குக் காரணமான மூலாஞ்ஞானம் அவனுக்குப் பரப்பிரமமாகிய எமது அபேதஞானத்தால் நீங்கினமையின் அத்தத்துவஞானி புனராவிருத்தியை யடைவதில்லை என்க. இவ்வாறு இச்சுலோகத்திற்கு வியாக்கியானஞ் செய்திடினே 'யஹாஹை வைஷவதஹ்ரி நஹ்ருஸ்யை உநாதேஸ்ய உநி ஸ்ரகே உநிருயநெஉஹயம் வ்ரதிஷ்டாம் விஜதெசுயஹொஹயம் மதொஹவதி' என்னு மிச்சுருதியர்த்தத்திற்கு இச்சுலோகத்தில் அநுகூலத்தன்மையுண்டாம்.

சுருதியின் பொருளிதுவாம் :—இவ்வதிகாரி எப்போது இந்த அதிருசிய அனன்ம அநிருக்த அனிலயப்பிரமத்தின்கண் பயமின்றிய நிலைமையையடைகின்றானோ அப்போது இவன் புனராவிருத்தியின் பயமின்றிய பிரமபாவத்தையடைகின்றான் என்பதாம். இச்சுருதியில் அதிருசிய முதலிய நான்கு விசேடணங்கள் பிரமத்திற்குக் கூறப்பட்டன அவற்றுள் கட்புலப்படாமை அதிருசியமாம். இவ்விசேடணத்தால் அப்பிரமத்தில் சூரியனுலாய விளக்கத்தன்மை நிசேடிக்கப்பட்டது. மனவடிவ ஆன்மாவிற்கு விடயமாவது ஆன்மியமாம். அதனின் வேறானது அனன்மியமாம். இந்த விசேடணத்தால் அப்பிரமத்தில் மனத்திற் கவிடயத்தன்மையைக்கூறிச் சந்திரனுலாய விளக்கத்தன்மை நிசேடிக்கப்பட்டது. தூலசூட்சுமவடிவ உலகனைத்தும் எதில் இலயத்தையடைகின்றதுவோ அது நில்யமாம். அத்தன்மைய அவ்வியாகிருதவடிவ காரண நிலயத்தினும் வேறுயது அநிலயமாம். இதனுனே அப்பிரமம் அநிருத்தமாம்; அதாவது கூறற்கரியதாம். இவ்விசேடணத்தால் அப்பிரமத்தினிடத்தில் வாக்கிந்தியத்தின் அவிடயத்தன்மையைக்கூறி அக்கினியாலாய விளக்கம் நிசேடிக்கப்பட்டது என்பதாம். சில பேதவாதிகளோ 'நதத்ராவயதெ வாயொ-ஃ' இச்சுலோகத்திற்கு இவ்வாறு அருத்தஞ் செய்கின்றனர். சூரியன் சந்திரன் அக்கினி என்பவைகளாற் பிரகாசிக்கப்படாததும் அர்ச்சிராதிமார்க்கத்தாலடையத்தக்கதும் பிரமலோகத்தினும் மேலாயுள்ளதும் அப்பிராகிருதமும் நித்தியமுமாகிய வைணவபதம் தேசாந்தரத்திலிருக்கின்றது. அப்பதத்தை அர்ச்சிராதி மார்க்கத்துவாராவடைந்து இவ்வதிகாரி புனராவிருத்தியையடைவதில்லை என்பதாம் என்னு மிப்பேதவாதியின் அர்த்தம் மிகமூரணுடையதாம். என்னே? 'நரு வை ஸைஸ்ஹதயொவமுஸ்யதெ' என்னுஞ் சுலோகத்தில் சர்வ திருசியப் பொருள்களும் மித்தியாவடிவமேயெனக் கூறப்பட்டன. 'ஸதெநஸ்ய ஸாதஃ' இப்பரமான்மாவிற்கயலான சர்வ அனன்மபதார்த்தங்களு மித்தையாம் என்னு மிச்சுருதியும் பரமான்மாவிற்கயலான சர்வ திருசிய பதார்த்தங்களையும் மித்தையெனக்கூறுகின்றது. இத்திருசியத்தன்மை இவ்வுலகத்தின்கண் ணிருப்பதுபோல வைணவபதத்திலுஞ் சமமாமாதலின் தேசாந்தரத்திலுள்ள வைணவபதத்திலும் அம்மித்தியாத்தன்மை அவசியமாய்க் கொள்ளற்பாலதாம். அத்தன்மையவுலகத்தையடைந்த புருஷனுக்கும் புனராவிருத்தியும் அவசியமாயுண்டாம். ஆதலின் இப்பேதவாதியின் வியாக்கியானம் நலமுடைத்தன்று மற்றோர் முந்திய வியாக்கியானமே நலமுடைதாம் என்க. (6)

(அ-கை.) - ஹே பகவன்! 'யஸ்ஸுவா நதிவதி-ஃஜ்ஞே' என்னும் தங்களுடைய வாக்கியம் அசங்கதமாம்; என்னே? இவ்வதிகாரி ஒருபோது அப்பதத்திற் செல்வனேல் அதினின்றும் அவசியமாய் நிவிருத்தியையுமடைவன்; துறக்கஞ்சென்றகருமி அதினின்றுந் திரும்புவதுபோல இவ்வதிகாரி ஒருகால் அப்பதத்தினின்றுந் திரும்பானெனிலோ அப்பதத்திலுஞ் செலான். ஆதலின் இவ்வதிகாரி அப்பதத்திற் செல்கின்றான் அதினின்று மீண்டுந் திரும்பான் என்னும் வாக்கியங்கள் தம்முள் முரணுடையனவாம். எது யாண்டுச்செல்கின்றதோ அது அவ்விடத்தினின்றுந் திரும்பிவருதல் ஒருதலையாம். இது சாஸ்திரத்திலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. ஸவை-ஃகூயாம் தாநிஅயாஃ வதநாஞாஃ ஸஃ ஹூயாஃ।
ஸ்யொமாவி வ்யொமாஞா ஸ்ணாஞ்ஞ ஹிஜீவிதம் ॥

(பொ-ள்.) எப்பொருள் விருத்தியுடையதாமோ அது அந்தத்தில் அவசியமாய் கூயமுடையதாம். எப்பொருள் மேலிடத்தை யடைந்தாதோ அப்பொருளீற்றில் அவசியமாய்க் கீழ்விழும். எப்பொருள் சம்யோகமுடையதோ அப்

பொருள் சுற்றில் அவசியம் விசேபாகமுடையதாம். எப்பொருள் சனித்ததோ அப்பொருள் சுற்றில் மரணத்தையடையும் என்பதாம். அனைன்ம வஸ்துவினடைவே புனராவிருத்தியை யுடையதாம். ஆன்மப் பிராப்திபோ அங்ஙனமன்று எனத் தாங்கள்கூறினும் அதுவும் பொருந்தாது; என்னை? 'ஸதாஸொம்யதேஹ ஸர்வ மேதாஸ்ரவதி' என்னுஞ் சுருதி சுழுப்திபவத்தையில் சர்வப்பிராணி மாத்திரத்திற்கும் ஆன்ம பாவப் பிராப்தியைக்கூறுகின்றது. ஆனல் அவ்வான்மபாவப் பிராப்தி அந்தத்தில் புனராவிருத்தியை யுடையதாம். ஒருகால் சுழுப்தியில் ஆன்ம பாவத்தையடைந்த பிராணிகட்கு நனவில் புனராவிருத்தியைக் கொள்ளாவிடினும் அச்சுழுப்திமாத்திரத்தானே சர்வப்பிராணிகளும் முக்தராவார்கள். ஆதலின் முக்தர்களானவர்கள் மீண்டு மெழும்பாதிருத்தல் வேண்டும். அந்தச்சுழுப்திக னுடைய புனராவிருத்திபோ காணப்படுகின்றது. ஆதலின் அப்பரப்பிரமபதப் பிராப்தியில் 'யத்கூவா' [எதை யடைந்து] எனக்கூறுதல் சம்பவியாது. அந்தக்க மனத்தைக் கௌணமாகக்கொள்ளினும் அதினின்று நிவிருத்தியின்மை சம்பவியாது. இவ்வாறு அர்ச்சுனனுக்குச் சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் உத்தரமருளிச் செய்கின்றார். ஹே அர்ச்சுன! அந்தப்பரப்பிரமபதத்தை யடையப்பட்ட சீவான்மா அடையத்தக்க அப்பிரமத்தினின்றும் சிறிதும் வேறன்று; மற்றோ அபின்னமேமயாம். இச்சீவான்மா பிரமரூபமே என்னுமர்த்தம் தத்துவமசி அகம்பிரமாஸ்மி பிரக்ஞானமானந்தம் பிரமம், அயமாத்மாப்பிரமம் என்பது முதலிய அநேக சுருதிகளிற் கூறப்பட்டிருக்கிறது. ஆதலின் 'யத்கூவா நநிவர்தந்தே' என்னும் வாக்கியத்தாற் கூறப்பட்ட சீவனுடைய பிரமப்பிராப்தியானது துறக்கமுதலியனபோல முக்கியமானதன்று; மற்றோ கௌணமாம். அதாவது அஞ்ஞான மாத்திரத்தானே வியவகிதமான பிரமத்தை அகம்பிரமாஸ்மி என்னும் அதன் ஞான மாத்திரத்தானே அடைதல் கூறப்படுகின்றது. ஆண்டு எப்பட்சத்தில் அந்தக்கரணத்தில் அல்லது அவித்தையிலுள்ள பிரமப் பிரதிவிம்பமே சீவனெனினு அப்பட்சத்திலோ சலத்திற் பிரதிபலித்த சூரியன் சலமபாவமாகவே பிம்பபூத சூரியனே யடைகின்றனன். அந்த விம்பபூத சூரியனினின்று அப்பிரதிவிம்பத்திற்குப் புனராவிருத்தியின்றியதுபோல அந்தக்கரணமுதலிய உபாதிகள் அபாவமாகவே இப்பிரதிபிம்பவடிவ சீவனும் அந்த நிருபாதிகப்பிரமவடிவத்தை யடைகின்றன். அப்பிரமத்தினின்றும் இச்சீவான்மாவிற்குப் புனராவிருத்தியில்லை. எப்பட்சத்தில் புத்தியவச்சின்னப்பிரமாம்சம் சீவனெனினு அப்பட்சத்திலோ கடவான் கடவடிவ வுபாதியொழியவே மாவானை யடைகின்றது. அம்மாவானினின்று அக்கடவானிற்கு மீண்டும் புனராவிருத்தியின்றியதுபோல இச்சீவான்மாவிற்கும் அந்தப் புத்திவடிவ வுபாதியொழியவே அப்பிரமத்தையடைகின்றது. அதினின்றும் இதற்குப் புனராவிருத்தியில்லை. ஈண்டு உண்மையில் விம்பவடிவ சூரியனுக்கபின்னமான பிரதிவிம்பவடிவ சூரியனுக்கு அந்த விம்பவடிவ சூரியனினடைவும் அதினின்று திரும்பாமையும் கௌணமேயன்றி முக்கியமன்றுதல்போல் உண்மையில் பிரமாபின்ன இச்சீவான்மாவிற்கு அப்பிரமத்தினடைவும் அதினின்று திரும்பாமையும் கௌணமேயன்றி முக்கியமன்றும். தன்னின் வேறான வஸ்துவினடைவு அதினின்று திரும்பாமையே முக்கியமெனப்படுகின்றது. இவ்வாறு உண்மையில் சீவப்பிரமங்கட் கபேதமாயினும் அவைகளின் பேதப்பிராந்தி கேவலம் அந்தக்காரணாவித்தானேயாம்; கடவடிவவுபாதி வசத்தால் கடவான் மாவானினும் பேதமெனப் பிராந்தியுண்டாகின்றதுபோலவாம். அவ்வந்தக்கரண முதலிய உபாதிகள் நீங்கவே அப்பேதப்பிராந்தியும் நிவிருத்தியாகின்றது என்பதாம். சுழுப்தியவத்தையிலோ சீவோபாதிவடிவ அந்தச் சமஸ்காரம் கரும முதலியவைகளோடுகூடிய அந்தக்காரணம் தனது காரணவடிவ அஞ்ஞானத்தில் சூட்சுமமாய் நிலைத்திருக்கின்றதாதலின் அதினின்றே அவ்வந்தக்கரண மீண்டுமுண்டாகின்றது. ஆன்ம ஞானத்

தால் அவ்வஞ்ஞானங் கெடிலே அஞ்ஞானவடிவ காரணம் இலதாகலே அவ்வந் தக்காண முதலிய காரிலேயோற்பத்திகள் யாங்ஙனமுண்டாம் மற்லேரு உண்டாகா. இதனுலிப்பொருள் பெறப்பட்டது. இச்சீவனுக்கு அகம்பிரமாஸ்மி, என்னும் வேதாந்தவாக்கியசன்ய சாட்சாத்காரத்தால் நான் பிரமமலன் என்னும் அஞ் ஞானத்தினிவிருத்திலேய ஸ்ரீ பகவானுல் 'யஜ்ஞா' என்னும் வாக்கியத்தாற்கூறப் பட்டது. ஆன்ம சாட்சாத்காரத்தால் நிவிருத்திபாகிய அநாதிபஞ்ஞானம் மறித்து மெழுதலின்மையின் அதன் காரியவடிவ சம்சாராபாவலே ஸ்ரீ பகவானுல் 'நஹி வதஜ்ஞெ' என்னும் வாக்கியத்தாற் கூறப்பட்டது. ஆதலின் ஸ்ரீ பகவானுடைய வாக்கியத்திற் சிறிதளவும் முரணின்றும். சீவனுடைய பாரமார்த்திகவடிவம் பிர மலே என்பது முன்னர்ப் பலமுறை கூறிலேம். முன்னர்க்கூறிய வர்த்தங்க ளனைத்தையும் ஸ்ரீ பகவான் இதற்குப்பிந்திய கிரந்தத்தாலருளிச்செய்வர். ஆண்டு இச்சீவான்மா உண்மையிற் பிரமவடிவலேபாமாதலின் பிரமசாட்சாத்காரத்தால் அஞ்ஞானம் நீங்கலே அப்பிரமவடிவத்தையடைந்த சீவன் அப்பிரமத்தினின்றும் மறித்தும் திரும்பான் என்னு மர்த்தத்தை ஸ்ரீ பகவான் 'உலெவாம பொஜீவலொ கெஜீவஹ மதஃ ஹ்ருதகஃ' என்னும் பாதிச் சுலோகத்தாலருளிச்செய்வார். சுழற்பிபவத்தையிலே சர்வ காரியங்களின் சம்ஸ்காரத்லேடு அஞ்ஞான மிருத்த லினலே சீவான்மாவிற்கு அச்சுழற்பினின்றும் மீண்டுஞ் சம்சாரப்பிராப்தி யுண் டாகின்றதுஎன்னு மர்த்தத்தை ஸ்ரீ பகவான் 'உபத்ரஷ்டானீம நியாணி வ்ரகுயதி ஷுனிகுஷதி' என்னுஞ் சுலோகத்தால் திருவாய்மலர்ந்தருள்வர். பின்னர் உண் மையில் அசம்சாரிவடிவமாயினும் மாயையால் சம்சாரித்தன்மையை யடைந்ததும் புல்லறிவாளரால் லேதத்லேடு தாதான்மிபபாவத்தைச்செய்யப்பட்டதுமாகிய இச் சீவான்மாவிற்கு அத்லேதத்தினும் லேவறுந்தன்மையை ஸ்ரீ பகவான் 'ஸரீரம யதுவாவொதி' என்னுஞ் சுலோகத்திறற்றிருவாய் மலர்ந்தருள்வர். சப்த முதலிய விடயங்களில் சுலோத்திர முதலிய இந்திரியங்களைச் செலுத்துகின்ற இச்சீவான்மா விற்கு அவ்விந்திரியங்களினின்றும் லேவறுந்தன்மையை 'பரோதம அக்ஷஃ ஷ்ரோத்ரமஞ்ஞ' என்னுஞ் சுலோகத்தாற்றிருவாய் மலர்ந்தருள்வர். ஆண்டு இவ் வாறு லேதலேகந்தியாதிகளினும் லேவறுகிய ஆன்மாவை உத்க்ராந்தி (வெளிப்படல்) முதலிய அவத்தைகளில் சர்வப் பிராணிகளும் பாராதலேதன்னை என்னு மர்ச்சுனன் சங்கைக்கு விஷய வாசனையால் விக்ஷிப்தமனத்லேதான் பார்க்கத்தக்கதாயினும் அவ் வான்மாவைப் பாரான் என்னு முத்தரத்தை ஸ்ரீ பகவான் 'உதாஜ்ஞம் ஸ்ரிதம்வாபி' என்னுஞ் சுலோகத்தாலருளிச்செய்வார். ஆண்டு, 'உதாஜ்ஞம்' என்னுஞ் சுலோ கத்திலுள்ள 'வபுயஞ்ஜி ஜூதாநஅக்ஷஃ' என்னும் வாக்கியார்த்தத்தை ஸ்ரீ பக வான் 'யதஞ்ஜோயொதி நரெஜ்ஜநம் வபுயஜ்ஜ்யாத நயவஜ்ஜிதம்' என்னுஞ் சுலோ கத்தால் வருணித்தருள்வர் 'விஜ்ஞாநாத்மா வபுயஞ்ஜி' என்னும் வாக்கியார்த் தத்தையோ 'யதஞ்ஜோ வ்யகுயதாதாநா லெநம் வபுயஜ்ஜ்ய அதஹஃ' என் னும் பாதிச்சுலோகத்தாலருளிச்செய்வார். இவ்வாறு மேற்கூறும் சுலோக பஞ்ச கங்களின் சம்பந்தவடிவ சங்கதி சித்தமானது, இப்லேபாது மேலில அச்சுலோகங் களின் லேகவலம் அக்ஷரப்பொருளையே வர்ணித்தருள்வர் என்பதாம்.

15-12

சு-ம். உலெவாம்பொஜீவலொகெ ஜீவஹ மதஃஹ்ருதகஃ ।
உபத்ரஷ்டானீம நியாணி வ்ரகுயதிஷ்ரோத்ரமி கஷ்டதி ॥ (7)

ப-ம். 2 உ 3 ஹவ 4 சும்ஸஃ 1 ஜிவலொகெ 6 ஜீவஹ மதஃ 2 ஹ்ருதகஃ 7 உபத்ர ஷ்டானீம 9 ஜ்ஞாநி 8 வ்ரகுயதிஷ்ரோத்ரமி 10 கஷ்டதி.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இச்சம்சாரத்தில் பரமான்மாவாகிய எம்முடைய அம்சமே சனாதனமான சீவவடிவமாம். அச்சீவனே மனதை ஆறுவதாகவுடைய பிரகிருதிக்கண்ணுள்ள சுரோத்திரமுதலிய இந்திரியங்களை ஆகர்ஷணஞ்செய்கின்றன். (7)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! உண்மையில் அம்சாம்சி பாவங்களின்றிய பரமான்மாவாகிய எம்முடைய மாயையாற் கற்பிக்கப்பட்ட அம்சம்போன்ற அம்சவடிவம் இச்சம்சாரத்திலிருக்கின்றது; அதாவது உண்மையில் அம்சாம்சி பாவங்களின்றிய சூரியனுக்கு நீரின்கண்ணுள்ள பொய்ப்பேதமுடைய அம்சம்போன்ற அம்சவடிவப் பிரதிவிம்பமுண்டானது போலவும்; உண்மையில் அம்சாம்சிபாவங்களின்றிய ஆகாயத்திற்குக் கடத்தின்கண்ணுள்ள பொய்ப்பேதமுடைய அம்சம்போன்ற அம்சவடிவ கடாகாய முண்டானதுபோல உண்மையில் அம்சாம்சி பாவங்களின்றிய பரமான்ம தேவராகிய எமக்கும் இச்சம்சாரத்தில் மித்தியாபேதமுடைய அம்சம்போன்ற அம்சமிருக்கின்றது அதுவே பிராணதாரணவடிவ உபாதியால் ஜீவபூதமானது; அதாவது கர்த்தா போக்தா சம்சாரி என்னும் மித்தியாப்பிரசித்தியை யடைந்தது. அந்தச்சீவரூப அம்சம் எத்தன்மையதினின் சனாதனமெனும் நித்தியமாம்; அதாவது அந்தக்காணமுதலிய உபாதிகளாலாய பரிச்சின்னத்தன்மையை யடையினும் உண்மையில் பரமான்மவடிவமேயாம்; என்னை? சுருதியில் அப்பரமான்மாவே இச்சரீரத்தில் சீவரூபமாய்ப்பிரவேசித்தது எனக் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. ஸ ஏஷஷ உஷவ்ரவிஷ்ட ஆநகவாமெ ரஹ்யஃ।
தஸ்ஹ்யஷ்டாத ஏவாநு வ்ராவிஶத் ॥

(பொ-ள்.) அப்பரமான்மதேவரே இச்சங்காதத்தில் நகத்தின் நுனிப்பாகமுதற்கொண்டு பிரவேசித்தனர். அப்பரமான்மாவே இச்சங்காதத்தை யுண்டுபண்ணித்தாமே சீவவடிவமாய் இதிற் பிரவேசித்தது என்பதாம். ஆதலின் ஆன்மஞானத்தால் அஞ்ஞான நிவிருத்தியாகவே இச்சீவான்மாத் தனது சொரூபவடிவப் பிரமத்தையடைந்து அதினின்றும் புனராவிருத்தியை யடைவதில்லை என முன்னர்க்கூறிய அர்த்தம் பொருத்தமுடையதேயாம். அற்றேல் தனது சொரூபத்தை யடைந்தும் இச்சீவான்மா சுழுப்தியவத்தையினின்றும் மறித்தும் எவ்வாறு திரும்புகின்றது என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'உதஃஷஷ்டாநி உதி' ஹே அர்ச்சுன! மனதை ஆறுவதாகவுடைய ஞானேந்தியங்கள்; அதாவது இந்திரவடிவ ஆன்மாவிற்குச் சப்தமுதலிய விடயங்களின் உபலப்திக்குக்காரணவடிவத்தால் இலிங்கவடிவ சுரோத்திரமுதலிய இந்தியங்கள், நனவுகனைக்களின் போகஜனக கருமமொழியவே பிரகிருதியில் ஸ்திதமாகின்றன; அதாவது அஞ்ஞானவடிவப் பிரகிருதியில் சூட்சுமவடிவமாயிருக்கின்றன. அத்தன்மையமனத்தோடுகூட இந்தியங்களை அச்சீவான்மா மறித்தும் சாக்கிரபோகத்தை யுண்டாக்குங் கருமமுதியமாகவே அப்போகத்தின்பொருட்டு ஆகர்ஷணஞ் செய்கின்றது. ஆமை தனதுடலில் இல்யமாகிய தலை கால் முதலிய உறுப்புகளை மறித்தும் அவ்வுடலினின்றும் வெளியில் விரிப்பதுபோல அச்சீவான்மாவும் அவ்வஞ்ஞானவடிவப் பிரகிருதியினின்றும் மனசகித இந்திரியங்களை விடயக்கிரகணமாக்கிய வடிவமாய் மறித்து வெளிப்படுத்துகின்றது. இதனலிப்பொருள் பெறப்பட்டது.— ஆன்ம ஞானத்தினின்றும் ஆவிருத்தியின்றேனும் அஞ்ஞானத்தினின்றும் புனராவிருத்தியாவது யாதொரு பொருந்தாமையுடையதன்று; மற்றே அஞ்ஞானத்தினின்று இச்சீவான்மாவிற்குப் புனராவிருத்தி பொருத்தமுடையதேயாமென்க. (7)

(அ-க.) ஹே பகவன்! இச்சீவான்மா எக்காலத்தில் மனசகித இந்திரியங்களை ஆகர்ஷணஞ்செய்கின்றது என அர்ச்சுனனுக்கறியும் வேட்கையுண்டாக ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸஸீஸம யஉவாவ்ொதி யஜாவயூதாஉதீஸஸ: !
மஹஹீசெ்வதா நி ஸ்ம்யாதி வாயூமழ்ம்யா நிவாஸயாசூ ॥ (8)

ப-ம். 6 ஸஸீஸம 5 யசூ 7 சுவாவ்ொதி 1 யசூ 4 அ 10 சுவி 3 உதாஉதி 2 ஸ்ம
ஸ்ஸ: 9 மஹஹீசுவா 8 வதாதி 11 ஸ்ம்யாதி 14 வாயூஸ: 15 மம்யாந்ு 12 உவ
13 சூஸயாசூ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எப்போது இச்சீவான்மா வெளிப்படுகின்றதோ அப்போது அவ்விந்தியங்களை ஆகர்ஷிக்கின்றது. அங்ஙனமே எக்காலத்தில் வேறு தேகத்தை யடைகின்றதோ அக்காலத்தில் மனத்தோடு இந்தியங்களைக் கிரகித்துக் கொண்டுஞ் செல்கின்றது புஷ்பமுதலிய ஸ்தானத்தினின்று காற்றுக் கந்தத்தைக் கிரகித்துச்செல்வதுபோலவாம். (8)

(வி-ம்) ஹே அர்ச்சுன! தேகேந்தியவடிவ சங்காதத்திற்குச் சுவாமியான தால் ஈசுரவடிவ இச்சீவான்மாவானது எப்போது உத்கிரமணஞ் செய்கின்றதோ; அதாவது இத்தேகத்தினின்றும் வெளியிற் செல்லுகின்றதோ அப்போது இச்சீவான்மா வெளிப்பட்ட தேகத்தினின்று மனசகித இந்தியங்களை ஆகர்ஷிக்கின்றது. அர்ச்சுன! இச்சீவான்மா மனசகித இந்தியங்களை ஆகர்ஷிப்பதுமாத்திரமேயன்று; மற்றும், இச்சீவான்மா பூர்வ தேகத்தினின்று வேறுதேகத்தை யடையும்போது மனசகித இந்திரியங்களைக் கிரகணம்பண்ணிக்கொண்டுஞ் செல்கின்றது. அவ்விந்தியங்களை விடுத்துச்செல்லாது; அதாவது, பரித்தியாகம் பண்ணிய முந்திய தேகத்தில் மறித்தும் வராவண்ணம் நன்கு அவ்விந்தியங்களைக்கொண்டு செல்கின்றது. இவ்வர்த்தத்தை 'ஸ்ம்யாதி' (இனிது செல்கின்றது) என்னும் வாக்கியத்திலுள்ள 'ஸ்ம்' (இனிது) என்னுஞ் சப்தத்தால் ஸ்ரீ பகவான் குறிப்பித்தருளினர். இப்போது இத்தூல வுடலிருக்கவே அதினின்றும் இந்திரியங்களைக் கிரகணம்பண்ணுவதில் ஸ்ரீ பகவான் திட்டாந்தத்தை அருளிச்செய்கின்றார். 'வாயூ மழ்ம்யாநி வாஸயாசூ ஊதி' ஹே அர்ச்சுன! புஷ்பமுதலிய ஸ்தானத்தினின்று கந்தவடிவ சூட்சுமாம்சங்களைக் கிரகித்து வாயுவானது பூர்வமுதலிய திசைகளிற் செல்கின்றதுபோல இச்சீவான்மாவும் இத்தூலதேகத்தினின்று மனசகித இந்திரியங்களைக் கிரகித்துப் பரவுலகத்திற்குச் செல்கின்றது என்பதாம். (8)

(அ-கை.) ஸ்ரீ பகவான் அவ்விந்தியங்களை யருளிச்செய்து இச்சீவான்மா அவ்விந்தியங்களைக்கொண்டு செல்வதின் பிரயோசனத்தை அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸ்ரோதஞ்ம சக்ஷூ: ஸ்பர்சநஞ்ு ரஸநம் க்ராணமெவ ச ।
அதிஷ்டாய மநஸ்சாயம் விஷயாநூபஸெவதெ ॥ (9)

ப-ம். 2 ஸ்ரோதஞ்ம 3 சக்ஷூ: 5 ஸ்பர்சநம் 4 அ 6 ரஸநம் 8 க்ராணம் 12 ஸவ
7 அ 11 சுயிஷ்டாய 10 உநஸ் 9 அ 1 சுயம் 13 விஷயாநு 14 உபஸெவதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இச்சீவான்மாச் சுரோத்திரம் சட்சு துவக்கு ரசநம் க்ராணம் மனம் என்பவைகளை ஆசிரயித்தே சப்தமுதலிய விடயங்களை நுகருகின்றது. (9)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இச்சீவான்மா ஞானேந்திரியபஞ்சகம் மனம் என்பவைகளை ஆசிரயித்தே சப்த முதலிய விடயங்களை நுகர்கின்றது. ஈண்டு, 'ஸ்ராணமெவ' என்னும் வாக்கியத்திலுள்ள சகாரத்தால் வாக்கு முதலிய கருமேந்திரியங்களையும் பிராணனையுங் கொள்ளவேண்டும்; அதாவது ஐவகை ஞானேந்திரியங்கள் ஐவகைக்கருமேந்திரியங்கள் ஐவகைப் பிராணன் அந்தக்கரண சதுட்டயம் என்பவைகளை ஆசிரயித்தே இச்சீவான்மா சப்தமுதலிய விடயங்களை நுகருகின்றது. அஃதின்றிய சுத்தான்மா நுகராது. இது சுருதியிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. கூதேஂஸ்ரோ யஉநோயூக்தம் ஹொகேதீயா ஹுமஉஸ்நீஷிணஃ।

(போ-ள்.) சுரோத்திர முதலிய இந்திரியங்களோடும் மனத்தோடும் பொருந்தியதாகியே ஆன்மாப் போக்தாவாகின்றது. இவ்வாறு வேதமுணர்ந்த நுண்ணறிவாளர் கூறுகின்றார்கள். (9)

(அ-கை.) அத்தன்மைய காண்டற்குரிய ஆன்மாவை மூடன் கண்டிலன் மற்றோர் விவேகியே காண்கின்றான் என்னுமர்த்தத்தை ஸ்ரீ பகவான் இப்போது அருளிச்செய்கின்றார்.

சு-ம். உதாஉக்ரம் ஷ்ரிதம் வாவி ஹுஂஜாநம் வா முஂணாந்விதம்।
விஉமூடா நாநுவஷ்யந்தி வஷ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷஃ॥ (10)

ப-ம். 1 உதாஉக்ரம் 3 ஷ்ரிதம் 2 வா 7 சுவி 5 ஹுஂஜாநம் 4 வா 6 முஂணாந்விதம்
8 விஉமூடாஃ 9 ந 10 நுநுவஷ்யந்தி 12 வஷ்யந்தி 11 ஜ்ஞாநசக்ஷுஷஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! உத்கிரமணஞ் செய்வதும் அத்தேகத்தின்கண்ணே நிலைத்திருப்பதும் விடயங்களை நுகருவதும் குணத்தோடு பொருந்தியதுமாகிய ஆன்மாவையும் விமூட புருஷன் காணமாட்டான்; ஆனால் ஞானவடிவ நேத்திர முடையனே அவ்வான்மாவைக் காண்கின்றான். (10)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! உண்மையில் கமனமுதலிய சர்வ விகாரங்களு மற்றதாயினும் அந்தக்கரண முதலிய உபாதிகளின் தாதான்மியாத்தியாசத்தினால் பூர்வ தேகத்தைவிடுத்து வேறு தேகத்திற்குச் செல்கின்றது இவ்வான்மா; அல்லது முந்திய தேகத்தின்கண்ணே நிலைத்திருக்கின்றது; அல்லது அந்த வேறு தேகத்தில் சப்தமுதலிய விடயங்களை நுகருகின்றது; சுகதுக்க மோகவடிவ சத்துவமுதலிய குணங்களோடுகூடியது இவ்வாறு சர்வாவத்தைகளிலும் காணற்குரியதாயிருப்பினும் இவ்வான்மாவை மூடபுருஷன் கண்டிலன். ஆண்டு இவ்வுலக பரவுலகபோகங்களின் வாசனையால் ஆகர்ஷிக்கப்பட்ட மனமுடைய ஆன்மாஞ்ஞானவிவேகத்திற்குரித்திலாகிய மூடன் உத்கிரமண முதலிய அவத்தைகளில் இவ்வான்மாவை தேகமுதலியவைகளினும் வேறாய் அறிந்திலன். அந்தோ சுருதிப்பிரமாணசன்ய ஞானவடிவ நேத்திரமுடைய புருஷனே அவ்வுத்கிரமணமுதலிய சர்வாவத்தைகளிலும் இவ்வான்மாவைத் தேகமுதலியவைகளினும் வேறாய்க் காண்கின்றான் என்பதாம். (10)

(அ-கை.) இப்போது 'வஷ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷஃ' என்னும் வாக்கியார்த்தத்தையும் 'விஉமூடா நாநுவஷ்யந்தி' என்னும் வாக்கியார்த்தத்தையும் முறையாய் விளக்கி வர்ணித்தருளுகின்றார்.

சு-ம். யததோ யோகிநஶ்சைநம் பஷ்யந்த்யாத்மந்யவஸ்தி தம்।
யததோவ்யக்ருதாத்மா நொநைநம் பஷ்யந்த்யசேதஸஃ॥ (11)

ப-ம். 1 யதஞ்ஞ 2 யொமிநஃ 3 அ 6 வநம் 7 வஶ்யஞ்ஜி 4 சூதநி 5 சுவஶ்ரீதம் 8 யதஞ்ஞ 9 சுவி 10 சுசுரதாதாநஃ 13 ந 12 வநம் 14 வஶ்யஞ்ஜி 11 சுவெதஸ்ஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! முயற்சியையுடைய யோகியே தனதுள்ளத்தின் கண்ணுள்ள ஆன்மாவைப் பார்க்கின்றான். பிரயத்தனம் பண்ணியும் மலினந்தக் காரணமுடைய அவிவேகி இவ்வான்மாவைப்பார்த்திலன். (11)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தியான முதலிய உபாயங்களால் முயன்று சுத்தாந்தக்காரணமுடைய யோகியே தனதுள்ளத்தின்கண்ணுள்ள இவ்வானந்தவடிவ ஆன்மாவைச் சாட்சாத்கரிக்கின்றான். யஞ்ஞமுதலிய நிட்காமகருமங்களால் தனதந்தக்காரணத்தைச் சுத்தி செய்யாமையின் ஆன்மாஞ்ஞானவிவேகமின்றிய அவ்வ சுத்தாந்தக்காரணமுடைய அவிவேகியோ முயன்றும் இவ்வான்மாவைச் சாட்சாத்கரித்தற் கசமர்த்தனாகின்றான் என்பதாம். (11)

(அ-கை.) ஆண்டு உலகனைத்தையும் விளக்கும் இரவி மதி முதலியவைகளால் பிரகாசித்தற் கேலாததும், மூமூட்சுக்களாற் புனராவிருத்தியின்றி யடையப்படுவதும், மாவானினின்று கடமுதலிய உபாதிகளாலாய பேதங்களையுடைய கடவான் முதலியவை அம்மாவானின் கற்பித அம்சபாவத்தை யடைகின்றனபோல உபாதியாலாய பேதத்தைப்பெற்றுத் தனது கற்பிதாம்சத்தை யடைந்து சீவன் பொய்யாகவே சம்சாரத்தை அநுபவிக்கின்றதும், கடமுதலிய உபாதிகளொழியவே அக்கடவான் முதலியவைகள் அம்மாவாகிறது அபேத மடைகின்றனபோல மகாவாக்கியசன்னிய சாக்ஷாத்காரத்தால் அவித்தை முதலிய உபாதிகணீங்கவே சீவன் அபேதமாகவடைவதுமாகிய பரப்பிரமத்தின் சர்வான்மத்தன்மையையும் சர்வ வியவகாரங்களின் சாதகத்தன்மையையும் காண்பித்து 'ப்ரஹ்மணொஹி ப்ரதிஷ்டாஹம்' என்னும் பூர்வாத்தியாயத்திற்கூறிய வாக்கியார்த்தத்தை வர்ணித்தற் பொருட்டு இப்போது நான்கு சுலோகங்களால் ஸ்ரீ பகவான் தமது விபூதியைச் சுருக்கியருளிச் செய்கின்றார்.

சு-ம். யதாதித்யகதம் தேஜோ ஜகத்பாஸயதேঽகிலம் ।
யச்சந்த்ரமஸி யச்சாக்நௌ தத்தேஜோ வித்தி மாமகம் ॥ (12)

ப-ம். 2 யகு 1 சூதித்யகதம் 3 தெஜஃ 10 ஜககு 11 பாஸயதெ 9 சுகிலம் 5 யகு 4 அம்சந்த்ரமஸி 8 யகு 6 அ 7 சாக்நௌ 12 தகு 13 தெஜஃ 15 வித்தி 14 மாமகம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இரவியின்கண்ணுள்ள ஒளி மதியின்கண்ணுள்ள ஒளி தீயின்கண்ணுள்ள ஒளி என்னும் உலகனைத்தையும் பிரகாசிக்கும் அவ்வொளிகளனைத்தையும் எனது சொரூபமென்றே யுணர்தி. (12)

(வி-ம்.) ஆண்டு, 'யதாதித்யகதம் தேஜோ பாஸயதேঽகிலம் ஜகத்' என்னுஞ் சுருதியின் அர்த்தபாகம் 'யதாஹ்லாதகரீ' என்னுஞ் சுலோகத்தான் முன்னர் வியாக்கியானம்பண்ணப்பட்டது. இப்போது 'தமேவபாந்தமநுபாதி பவதி தபந்தபாபபவதி' என்னுஞ் சுருதியின் அர்த்தபாகத்தை 'யதாதித்ய மதஃதேஜோ' என்னுஞ் சுலோகத்தால் ஸ்ரீ பகவான் வியாக்கியானஞ்செய்தருளுகின்றார். ஹே அர்ச்சுன! உலகனைத்தையும் விளக்கப்பட்ட இரவியின்கண்ணுள்ள சைதன்யான்மக சோதிவடிவ ஒளியையும் மதியின்கண்ணுள்ள சைதன்யான்மக சோதிவடிவ ஒளியையும் தீயின்கண்ணுள்ள சைதன்யான்மக சோதிவடிவ ஒளியையும் பரமான்மாவாகிய எனது சொரூபபூதமென்றே யுணர்தி. தாவரசங்கமவடிவ சர்வ

பதார்த்தங்களிலும் சைதன்யவடிவ சோதி சமானமேயாயினும் சத்துவகுணத்தின் மிகுதிப்பாட்டால் ஆவ்வாதித்தன் முதலியோர்கள் எல்லாவற்றினும் மேலானவர்களாதலின் அவர்களிடத்திலே அச்சைதன்யவடிவ சோதி நன்கு அபிவியக்தியை (விளக்கத்தை) யடைகின்றது. தமரசோகுணப் பிரதானங்களாகிய ஏனைய பதார்த்தங்களில் அச்சைதன்யவடிவச் சோதி சொரூபத்தாலிருப்பினும் தெளிவாய் விளக்கத்தை யடைவதில்லையாதலின் அப்பதார்த்தங்களை நோக்க ஆதித்தன் முதலியோர்களிடத்து விசேடத்தன்மையை அறிவுறுத்துவான் ஸ்ரீ பகவான் ஈண்டு இரவி மதி முதலியவைகளைக் கிரகித்தருளினர். முகத்தின் சமீபத்தன்மை சமமாயினும் கட்டை சுவர் முதலிய சுவச்சமின்றிய பதார்த்தங்களில் அம்முகம் பிரதிபிம்பவடிவத்தால் அபிவியக்தியாவதில்லை. சுவச்சம் மிகசுவச்சமாகிய தருப்பண முதலிய பதார்த்தங்களிலோ சுவச்சத்தின் குறைவுமிகுதிகளால் முகமும் நியூனாதிகத்தன்மைகளால் பிரதிபலித்து விளங்குகின்றதுபோல அச்சைதன்யவடிவ சோதியும் சொரூபத்தால் சர்வப் பொருள்களிடத்திலுமிருப்பினும் சத்துவகுண மிகுந்த ஆதித்தன் முதலியோர்களிடத்திலே தெளிவாய் அபிவியக்தியையடைகின்றது. தமோகுண மிகுந்துள்ள கடமுதலிய பொருள்களில் அபிவியக்தியையடைவதில்லை, என்பதாம். அல்லது 'யதாதித்ய கதம்தேஜோ' என்னும் வாக்கியத்தில் தேஜசுசப்தத்தை அருளிச்செய்து 'தத்தேஜோவிஷ்டி ஏதகம்' என்னும் வாக்கியத்தில் மீண்டும் அச்சப்தத்தையே அருளிச்செய்தனராதலின், இச்சுலோகத்திற்கு வேறொரு பொருளுந்தோன்றுகின்றது; அதாவது இரவி மதி தீக்களிடத்துள்ள அன்னியத்தை விளக்குதற்காற்றலுடைய வெண்மையொளிவடிவ தேஜசு, வடிவுடைப் பொருள்வடிவ உலகனைத்தையும் விளக்குகின்றது; அந்தத் தேஜசு பரமேசுரனுகிய எம்முடையதென்றே யுணர்த்தி. அதாவது பரமேசுரனுகிய எமது விபூதிவடிவ அந்தத் தேஜசில் பரமேசுர புத்தி செய்குதி என்பதாம். இவ்வாறு பரமேசுரனுடைய விபூதியை அருளிச்செய்தற்பொருட்டு இந்த வேறுபொருளுஞ் சம்பவித்தல்கூடும்:—ஒருகால் இச்சுலோகத்தை பரமேசுரனுடைய விபூதியைக் கூறுவதாய்க் கொள்ளப்படாதேயல் மறித்தும் தேஜசுசப்தத்தின் கரணமின்றியே 'தத்தேஜோவிஷ்டி' என்னும் இத்துணைமாத்திரவாக்கியத்தையே ஸ்ரீ பகவான் அருளிச்செய்வர் என்க. ஒரு வியாக்கியானத்திலோ 'யதாதித்ய கதம்தேஜோ' என்னுஞ் சுலோகத்திற்கு இப்பொருள் பண்ணப்பட்டிருக்கிறது — ஆதித்தன் சந்திரன் அக்கினி என்னுஞ் சப்தங்களால் சகூ—முதலிய காரணங்களின் அதிட்டானவடிவ சூரியன் முதலிய தேவதைகளையும் அவர்களாலநுக்கிரகிக்கப்பட்ட சட்சுமுதலியவைகளையுங் கொள்ளவேண்டும். இதனலிப்பொருள் சித்தமாகின்றது.—சட்சுமுதலிய பாகியகாரணங்களின் அதிட்டானவடிவ சூரியன் முதலிய தேவதைகள் சட்சுமுதலிய பாகியகாரணங்கள். இவ்விரண்டிலும் இருக்கப்பட்ட உருவ முதலியவைகளை விளக்குமாற்றல்வடிவ தேஜசைப் பரமேசுரனுகிய எம்முடையதென்றே யுணர்த்தி.

ஆ-சு. யெதாஹ்யாதித்யகதம் தேஜோ யெதாக்நௌ தத்தேஜோவிஷ்டி।

(பொ-ள்) எந்தச் சைதன்யவடிவ ஒளியால் இச்சூரியன் தபிக்கின்றனனமே எந்தச் சைதன்யவடிவ ஒளியால் இந்தேத்திரம் உருவமுதலிய பதார்த்தங்களைப்பார்க்கின்றது என்பதாம். இவ்வாறு மனத்திலும் மனத்தின் அபிமானியாகிய சந்திரனிடத்திலும் உள்ளுலகை விளக்குமாற்றல்வடிவ தேஜசையும் என்னுடையதென்றே யுணர்த்தி. இவ்வாறே வாக்கிந்திரியத்திலும் அதன் அபிமானியாகிய அக்கினிதேவதையினிடத்திலும் அவ்வியாகிருத முதலியவைகளை விளக்குஞ் சாமர்த்தியவடிவ தேஜசையும் பரமேசுரனுகிய எம்முடையதென்றே யுணர்த்தி என்பதாம்.

(அ-கை.) அன்றியும்,

சு-ம். மாஸாவிஸ்ய அ ஹ்ருதாநி யாஸயாஸ்யஹமொஜஸா ।
வாஷ்ணாவி அள க்ஷயீஃஸ்வாழஃ ஸொஸொ ஹ்ருக்வா ஸ்ருஷ்டகஃ ॥ (13)

ப-ம். 3 மாம் 4 க்ருவிஸ்ய 1 அ 5 ஹ்ருதாநி 7 யாஸயாமி 6 ஸஹம் 2 ஒஜஸா 14 வாஷ்ணாவி 8 அ 13 க்ஷயீஃ 12 ஸ்வாழஃ 10 ஸொஸஃ 11 ஹ்ருக்வா 9 ஸ்ருஷ்டகஃ.

(அ-ம்) ஹே அர்ச்சுன! மற்றும் எனது வலியால் இப்பூவையும் மிகத் திடஞ்செய்து சர்வ பூதங்களையும் பரமேசுரனுகிய நானே தாரணம் பண்ணுவேன். அங்ஙனமே சர்வ ரஸசுபாவமுடைய சோமவடிவமாய்ச் சர்வ ஓஷதிகளையும் நானே புஷ்டியுடையதாய்ச் செய்வேன். (13)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய நானே பிருதிவிதேவதாவடிவத்தால் இப்பிருதிவியை யாண்டும் வியாபித்துத் தூளி மூட்டிக்குத் தல்லியமாயெனது வலியால் மிகத்திடஞ்செய்து அதன்மேலிருக்கப்பட்ட தாவரசங்கமவடிவ சர்வ பூதங்களையும் தாரணம் பண்ணுகின்றேன். காற்றுத் தனது வலியால் மேக மண்டலத்திற் புகுந்து அதிலுள்ள நீரைத்தாங்குவதுபோலப் பரமேசுரனுகிய நானும் பிருதுவிதேவதாரூபத்தால் இப்பிருதிவியிற்புகுந்து எனது வலியால் இப்பிருதிவியை மிகத்திடப்படுத்தி அந்தத் தாவரசங்கம வடிவ சர்வ பூதங்களைத் தாரணஞ் செய்கின்றேன். ஒருகால் நான் அவ்வாறு செய்திலனேல் மண்முஷ்டியைப்போல இப்பிருதிவி விரைவாகவே கேடாந்தன்மையை யடையும் அல்லது அதாதேசத்திலமிழ்ந்திவிடும். இது சுருதியிலுங் கூறப்பட்டுளது. (13)

ஆ-சு. யெந த்யௌஸ்தீவ்ரா வ்ரயிவீ அ த்ரயிவீம் ॥

(பொ-ள்.) எப்பரமான்மாவால் சுவர்க்கமும் இம்மாபிருதிவியும் மிகத்திடம் பண்ணப்பட்டதோ எதனால் கனமுடையதாயினும் சுவர்க்கமும் பிருதிவியும் கீழே விழுவதில்லையோ இப்பிருதிவி சத்தியபரமான்ம தேவனுடைய ஆதாரத்ததேயாம். அல்லது சர்வ ரஸசுபாவமுடைய சோமவடிவமாய்ப் பரமேசுரனுகிய நானே பிருதிவி யிற்றோற்றுகின்ற நெற் கோதுமை முதலிய ஓஷதிகளையும் புஷ்டியுடையதாகவும் இனிய ரஸமுடையதாகவுஞ் செய்கின்றேன் என்பதாம். (13)

(அ-கை.) மேலும்,

சு-ம். ஸஹம்வைஷ்வா நரொஹ்ருக்வா வ்ராணி நாம்நெஹ்யபிரதஃ ।
வ்ராணாவா நஸாயாக்ஷஃ வஆஸ்யந்தம் அ தாவிஷ்யம் ॥ (14)

ப-ம். 1 ஸஹம் 2 வைஷ்வா நரஃ 3 ஹ்ருக்வா 4 வ்ராணி நாம் 5 நெஹ்ம 6 க்ருபிரதஃ 7 வ்ராணா வா நஸாயாக்ஷஃ 10 வஆமி 9 ஸந்தம் 8 அ தாவிஷ்யம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பரமேசுரனுகிய நானே சாடாராக்கினி வடிவமாய்ச் சர்வப் பிராணிகளின் தேகத்தையும் ஆசிரயித்தும் பிராணபானன்களால் மிகத் தேஜசுடையதாய் நால்வகை யன்னங்களையும் சீர்ணிப்பிக்கிறேன். (14)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! 'ஸயஸ்மி வைஷ்வா நரொயொயஸ்மிஃ வாஸ்ரா ஷொயெநெஸ்மி நம் வஆமி தெ'. (பொருள்) எவ்வக்கினி இப்புருடனுக்குள்ளிருக்கின்றதோ எவ்வக்கினியால் நால்வகை யன்னமும் சீர்ணமாகின்றதோ அது வைசுவாநராக்கினியாம் என்பதாம். என்னுமிச்சுருதியால் வைசுவாநரனெனும் பெயராற் கூறப்பட்ட சாடாராக்கினியாய்ப் பரமேசுரனுகிய நானே சர்வப் பிராணிகளின்

தேகங்களிற் புகுந்து அவ்வக்கினியைச் சோலிக்கப்பண்ணும் பிராணாபானன்களோடுகூடிப் பிராணிகளுண்ட பக்ஷியம் போஜ்யம் லேகியம் சோஷ்யம் என்னும் நால்வகை அன்னங்களையும் சீரணஞ் செய்கின்றேன். ஆண்டுப்பற்களால் துண்டு துண்டாக்கிப் பக்ஷணம் பண்ணும் பொருள் பக்ஷிய மெனப்படும், அப்பழுதலியன; அதுவே சர்வியம் எனவும்படும். பற்களிழின்றிக் கேவலம் நாவினாலே குழைத்துட்செலும் பொருள் போஜ்யமாம், பாயாசமுதலியன; நாவிற்பொருந்திய மாத்திரத்தாலே ரஸத்தின் சுவாதுமாத்திரத்தால் உட்செல்வது சிறிது நெகிழ்ச்சியையுமுடைய பொருள் லேகியமெனப்படும், வெல்லம் மாம்பழரஸமுதலியன; பற்களாலரைத்து அதனிரதபாகத்தை உள்ளிறக்கி மீந்த சக்கையை வெளியிற்றள்ளும் பொருள் சோஷ்யமாம், கருப்பங்கழி முதலியன என்பதாம். ஒரு வியாக்கியானத்திலோ 'வஜாஜீநம் அதாவிஷ்யம்' என்னும் வாக்கியத்திற்கு இவ்வர்த்தம் பண்ணப்பட்டிருக்கிறது. பரமேசுரனுகிய நானே சாடராக்கினியாய் மநுடர் முதலிய சர்வப்பிராணிகளின் உள்ளிருப்பதாய், பார்த்திவ-ஆப்ய-தைஜஸ வாயவிய என்னும் நால்வகையான அன்னங்களையும் பாகம் பண்ணுகின்றேன். ஆண்டு, மநுடர் முதலிய பிராணிகட்கோ நென்முதலிய பார்த்திவான்னமாம்; சாதக முதலிய பிராணிகட்குச் சலவடிவ ஆப்யான்னமாம். வாலகில்ய முதலிய பிராணிகட்கு அக்கினிவடிவ தைஜஸான்னமாம். சர்ப்பமுதலிய பிராணிகட்கோ வாயுரூப வாயவியான்னமாம். ஆண்டுப் போக்தா வைசுவாநராக்கினிவடிவமாம். போஜ்யான்னம் சோமவடிவமாம். இவ்வாறு இவ்வக்கினி சோமங்கட்கே சர்வரூபம் எனத் தியானிப்பவனே அன்னத்தின் தோடம் பற்றாது எனச்சாத்திரத்தில் கூறப்பட்டிருக்கும் பலசகிதத் தியானத்தையு மிங்ஙனாவண்டுமென்பதாம். (14)

(அ-கை.) மேலும்,

சு-ம். ஸவ-ஸ்ய ஆஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ
மத்ஃஸ்ம்ருதிர்ஜ்ஞாந-மபோஹநம்ச ।
வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்யோ
வேதாந்தக்ருத்வேதவிதேவ சாஹம் ॥ (15)

ப-ம். 3 ஸவ-ஸ்ய 1 அ 2 ஸ்தம் 4 ஹ்ருதி 5 ஸந்நிவிஷ்ட: 6 மத்த: 7 ஸ்ம்ருதி: 8 ஜ்ஞாநம் 10 ஸபோஹநம் 9 அ 13 வேதைஶ் 11 அ 12 ஸர்வை-ர் 14 ஸ்தம் 15 ஸவ 16 வேத்ய: 17 வேதாம்தக்ருத் 21 வேதவிச் 20 ஸவ 18 அ 19 ஸ்தம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மற்றும் பரமான்மதவனுகிய நானே சர்வப்பிராணிகளின் புத்தியில் சீவவடிவமாய்ப் புகுந்தேன். இதனாலே ஆன்மதவனுகிய என்னினின்றே அச்சர்வப் பிராணிகட்கும் மிருதியும் ஞானமும் அவ்விரண்டினபாவமும் உண்டாகின்றது. சர்வ வேதங்களாலும் பரமேசுரனுகிய நானே அறிதற்குரியோனும் வேதாந்தார்த்த சம்பிரதாயப் பிரவர்த்தகனும் சர்வ வேதார்த்தத்தையுமறிபவனு நானுகின்றேன். (15)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பிரமாதற்கொண்டு தாவரமீருன மேல் கீழாயுள்ள பிராணிகளனைத்தின் புத்தியில் பரமான்மாவாகிய நானே சீவவடிவாய்ப் புகுந்திருக்கின்றேன். (15)

ஆ-சு. ஸஹவ உஹவ்யவிஷ்ட: ஸநைநஜீவைநா
தநாதந வ்யவிஜ்ஞ நாஜ ஸ்வெவ்யா கூட வாணி ।

(பொ-ள்.) அப்பரமான்மாச் சீவவடிவாய் இச்சங்காதத்திற் பிரவேசித்தது. இச்சீவவடிவமாய் இச்சங்காதத்திற் புகுந்து பரமான்மாவாகிய நானே நாமரூபங்களை வெளிப்படுத்துகின்றேன் என்பதாம். என்பது முதலிய அநேக சுருதிகள் இச்சர்வ சங்காதத்திலும் பரமான்மாவே சீவவடிவாய்ப் புகுந்ததெனக்கூறுகின்றன. இத்துணை கூறியதால் ஸ்ரீ பகவான் சீவப்பிரமங்களின் அபேதத்தைத் திருவாய்மலர்ந்தருளினர். இதனையே தத்துவமசி அஹம்பிரமாஸ்மி என்பது முதலிய சுருதிகளுங்கூறுகின்றன. ஹே அர்ச்சுன! பரமான்மாவாகிய நானே இச்சர்வப் பிராணிகளின் புத்தியில் சீவவடிவமாய்ப் புகுந்திருத்தலினானே இச்சர்வப் பிராணிகட்கும் எவ்விவம் மிருதி ஞானங்களுண்டாகின்றனவோ அவ்வம் மிருதிஞானங்கள் ஆன்மதேவனுகிய என்னிடத்தினின்றே யுண்டாகின்றன. ஆண்டு முன்னநுபவித்த பொருளை விஷயம்பண்ணப்பட்ட சம்ஸ்காரசன்னிய அந்தக்கரண விருத்திவிசேஷம் மிருதிபாம். அம்மிருதி யோகமிலாதேனுக்கோ இச்சன்மத்தில் முன்னனுபவித்தபொருளை விடயம் பண்ணுவதாகவேயுண்டாம். யோகிக்கோ வேறு ஜன்மத்திலநுபவித்த பொருளை விடயம்பண்ணுவது முண்டாம். இவ்வாறு அக்காட்சியுணர்ச்சியும் அயோகி புருஷனுக்கோ விடயேந்திய சம்யோக சன்னிபமேபாம். யோகிக்கோ தேசகாலங்களால் வியவகிதமான வஸ்துக்களின் ஞானமுமுண்டாகும். அந்த இருவகைத்தான மிருதிகள் இருவகைத்தான ஞானங்கள் ஆன்மதேவனுகிய என்னினின்றேயுண்டாகின்றன. காமக்குரோத சோகமோக முதலிபவைகளால் வியாகுலமடைந்த மனமுடையவனுக்கு உண்டாகும் அவைகளினபாவமும் என்னிடத்தினின்றே யுண்டாகின்றது என்க. இவ்வாறு ஸ்ரீ பகவான் தமது சீவவடிவத்தன்மையை அருளிச்செய்து இப்போது பிரமவடிவத்தன்மைபை அருளிச்செய்கின்றார். 'வெவெஉஜ ஹவெஃஃ ஊதி' ஹே அர்ச்சுன! இருக்கு முதலிய நான்கு வேதங்களாலும் பரமான்மாவாகிய நானே அறிதற்குரியேயான். 'ஹவெஃ வெஹாயதூஉ ஶஆ நஞி' கருமம் உபாசனை ஞானம் என்னும் மூன்றுகாண்டவடிவ வேதங்களனைத்தும் எந்தப்பரமான்ம தேவ வடிவ பதத்தைப் பிரதிபாதிக்கின்றனவோ என்பதாம். இருக்கு முதலிய வேதங்களின் கருமகாண்டங்கள் இந்திரன் முதலிய தேவதைகளையே கூறுகின்றனவாமாயினும் பரமான்மாவாகிய நானே அவ்விந்திரன் முதலிய தேவதைகளின் ஆன்மவடிவினன். ஆதலின் இந்திரன் முதலிய தேவதைகளைக்கூறினும் அக்காண்டங்கள் பரமான்மாவாகிய என்னையே கூறுகின்றனவாம். ஆண்டுப் பரமான்ம தேவனை இந்திரன் முதலிய தேவதாவடிவம் என்பதை 'ஊம் ஜுஂவித்ரஂ வரேணஂ ஹிரண்மயொஜிவ்யஃ ஸவஸ்ரூவணொஃ மரூத்தாஞ்வஸகூஃஂஸஜிவ்ராஜஸ்ரூ யாவஜ்ஜஂதூ.ஜ்ஞியஃஂஸாதரிஷ்வா நஶாஸ்ரூஃ ஸஷஃஉஷெஜ்ய ஸவெஃஜெவாஃ' என்பது முதலிய அநேக சுருதிகள் கூறுகின்றன. மற்று மெத்தன்மையதெனின் பரமான்மதேவனுகிய நான் வேதாந்தகிருத்; அதாவது வேதவியாசர் முதலியவடிவமாய்ப் பரமான்மாவாகிய நானே உபநிடதவடிவ வேதாந்தார்த்தத்தின் சம்பிரதாயத்தைப் பிரவிருத்திப்பவன். ஹே அர்ச்சுன! கேவலம் நான் அதைமாத்திரம் பிரவிருத்திப்பவனலன் மற்றேரு வேதவித்தும் நானுகின்றேன். அதாவது கர்மடத்திரயவடிவ மந்திரப் பிராமணன்மக வேதங்களனைத்தின் அர்த்தத்தை உணர்பவனும் பரமான்மாவாகிய நானே; ஆதலின் 'ப்ரஹ்மணொஹி ப்ரதிஷ்டாஹம்' என முன்னத்தியாயத்திற் கூறியது உண்மையேயாம் என்க. ஒரு வியாக்கியானத்திலோ 'ஹவ-ஃஸ்ய ஆஹம்' என்னுஞ் சுலோகத்திற்கு இவ்வர்த்தம் பண்ணப்பட்டிருக்கிறது. சர்வப் பிராணிகளின் புத்திவடிவக் குகையில் பரமான்மாவாகிய நான் சந்நிதிக்குனெனுஞ் சீவவடிவாய் மிகச் சமீபமாய் நிலைத்திருக்கின்றேன். இதனானே சர்வப் பிராணிகளின்வடிவமு நானுகின்றேன். இத்துணை கூறி

யதால் ஸ்ரீ பகவான் சீவப்பிரமங்களிடத்தில் பேததிருஷ்டி யொருபோதும் சிறி துஞ் செய்யற்க என்பதை குறிப்பித்தருளினர். ஆண்டு, இவ்வுலகனைத்தும் பர மேசுரவடிவமே என எவ்விடத்தும் பாவிசுரபுத்திசெய்து பரமேசுரனைத் தியா னிப்பவன் திபானியாதவன் என்னுமிருவர்களின் பலத்தையும் ஸ்ரீ பகவான் அரு ளிச்செய்கின்றார். ‘உதஃஷ்வ ஜிஜ்ஞா-ஸுரவொஹ மது ஊதி’ ஹே அர்ச்சுன! பரமேசுரனெகிய என்னையுபாசித்து சுத்தாந்தக்காரணமுடைய அதிகாரிக்கே என னிடத்தினின்றே குருசாஸ்திரத்தின் அநுக்கிரகத்தால் மிருதியுண்டாகின்றது, அதாவது அவ்வான்மா தத்துவமசி என்னும் வாக்கியத்தால் ஸ்ரீ குருவால் மூவித பரிச்சேதமற்ற நிர்விசேட ஆன்மா நீயே யென்றுணர்த்தப்பட்டு அத்தன்மைய ஆன்மாவே நான் என்று அவ்வான்மாவின் கண்ணே தனதான்மத்தன்மையின் மிருதியும் அவ்வதிகாரிக்கு என்னினின்றே யுண்டாகின்றது அங்ஙனமே நானே பிரமசொரூபன் என உலகனைத்திலும் தன்னிடத்திலும் பிரமமாத்திரத்தன்மை யின் ஞானமும் அவ்வுபாசகனுக்கு என்னினின்றே யுண்டாகின்றது. எனது பாசனையின்றியவனும் மலின புத்தியுடையவனும் இராகத்துவேஷ முதலிய தோடங்களோடு கூடியவனுமாகிய பகிர்முக புருஷனுக்கு அந்த மிருதி ஞானங்க ளின் ஆவிர்பாவனம் அதாவது அப்பிராப்தி அதுவும் பரமேசுரனெகிய என்னி னின்றேயுண்டாகின்றது. ஹே அர்ச்சுன! மற்றும் பரமேசுரனெகிய நான் எத் தன்மையனெனின் வேதாந்த கிருத்; அதாவது இராணிபகருப்பவடிவப் பிரமா விற்கு வேதாந்தப் பிராப்திவடிவ அநுக்கிரகஞ் செய்தவன் நானே.

ஆ-சு. யொ ப்ரஹ்மாணம் விதயாதிவ மிவம் ।
யொ வெதெவெதாம் ச்ச ப்ரஹிணொதி தஸ்மை ॥

(பொ-ள்.) எந்தப் பரமேசுரர் முன்னர் இராணிபகருப்பவடிவப் பிரமாவை யுண்டாக்கினரோ எந்தப் பரமேசுரர் அப்பிரமாவிற்குச் சர்வ வேதங்களையுங் கொடுத்தனரோ என்பதாம். அல்லது, ‘வெதாம்தகூச’ என்னும் வாக்கியத்திற்கு இப்பொருள் செய்யவேண்டும். இச்சுலோகத்தில் அதிகாரியாகிய சிஷ்பனின் பொருட்டு ஆசாரியவடிவமாய் வேதாந்தார்த்தத்தைப் பிரகாசிப்பவனும் பரமே சுரனெகிய நானே; மற்றுமெத்தன்மையனெனின் நான் வேதவித் ஆண்டு, வேதார்த்தவடிவமாகிய நிர்விசேட அத்துவிதீயப் பிரமத்தை என்னுடைய அநுக்கிரகத்தினாலும் பிரஹ்மவேத்தாவான குருவின் அனுக்கிரகத்தினாலும் தனதான்மாவையுணர்பவன் வேதவித்தாவன். அத்தன்மைய பிரம வேத்தா புருஷனும் நானெகின்றேன். இது ‘ஜ்ஞானீத்வாத்தெவஜ்ஜ்ஞானம்’ என்னும் வாக் கியத்தால் முன்னருங் கூறப்பட்டதாம். ஆண்டு, ‘ஸவ-ஷ்ய ஆஹம் ஹ்ருதி ஸம்நிவிஷ்ட:’ என்னும் வாக்கியத்தால் சர்வப் பிராணிகளையும் தன தான்மவடிவ மாய்க்கூறி ஸ்ரீ பகவான் மற்றும் வேதாந்தகிருத் நானெகின்றேன் வேதவித்து நானெகின்றேன் என்னும் வாக்கியங்களைக் கூறியருளினது மூடபுருஷனும் புத்தி மானும் வேதாந்தநூல யுபதேசஞ்செய்யுங் குருவினிடத்திலும் வேறு பிரம வேத்தாக்களிடத்தும் பரமேசுரபுத்தி பண்ணவேண்டுவதவசியமாம் என்பதை அறிவுறுத்தற்பொருட்டாம். ஆண்டு, ‘யஸ்ய தேவ பரா பக்தி: யதா தேவே ததா குரௌ’ என்பது முதலிய வாக்கியங்களால் முமுட்சுக்கள் செய்த உபாசனையின்பொருட்டு ஸ்ரீ பகவான் தனது விபூதியை அருளிச்செய்தனர். அவ்விபூதியே பரமேசுரனுடைய உண்மை வடிவமாம் என்னுஞ் சுங்கை நிகழ ஸ்ரீ பகவான் தனதுண்மைவடிவத்தை யறி வுறுத்துவான் அருளிச்செய்கின்றார். ‘வெதெஷு ச வெ-ஷு ஹதெவவெஹ்ய’ என. ஹே அர்ச்சுன! இருக்குமுதலிய வேதங்களிலுள்ள உபநிடத வேதாந்தங் களால் பரமான்மாவாகிய நானே உணர்தற் குரியோன்; அதாவது ‘ஸ தஸ்ய ஸ்ரா

நஉநஞ்ஸ்ஹ விஜூநஉஈநஞ் ஸ்ஹ கூநஞ்ஹாஸ்ஹ தஎதஉஹா வூவ்ழஉ நவ்ரஂ சுவ்ழூமு உநணு ஹ்ரவ்ஹஉஈவ்ழஂ சுவ்ராணஉ ஊவஉ ஸ்ரோது உவாமஉ நொ2தெஜவ்கஉஅ கூஂஷ்க உநா உமொது உஸஸ்ஹஉவ்ஸஸ்ழ ஊஸ்வூவஉவ்யயஂ நிஷ்க்ஷமு நிஷ்டியஂ ஸ்ராஜ்ஞஂ நித்யஂஸ்ரூஜ்ஜஂ ஸ்ரூஜ்ஜஂஊக்ஷஂ வாத்யஂவ்ஸ்ரூக்ஷஂ வரிவஸ்ணஂழஉவ்யஂவ உாநஞ்ஜிநாத்ரஂ ஸ்ராஜ்ஞஂ அதஂஸ்ரூழ்ஞஂ நயஜ்ஞவ குஹ்ராவவிஜூயஉ தசுவஉவி' என்பது முதலிய வாக்கியங்களால் முழுமுட்சுக்களாலுணரத்தக்க நிருவிசேட நித்திய சுத்த புத்த முத்த சுபாவ சச்சிதானந்த ஏகரச அத்துவிதிய பரமான்ம தேவவடிவமே உண்மையிலாவேன். கூறிப்போந்த மாயோபாதிக வடிவன் அலன் என்பதாம். (15)

(அ-கை.) இவ்வாறு தமது சோபாதிகவடிவத்தை அருளிச்செய்து ஸ்ரீ பகவான் கிருபையால் அர்ச்சுனனுக்கு கூஷ்மாகூஷ்மமெனும் காரியகாரணவடிவ இருவகை யுபாதிகளுமற்ற தமது நிருபாதிக சுத்த சொரூபத்தை மூன்று சுலோகங்களால் பிரதிபாதித்தருளுகின்றார்.

சு-ம். ஊவிஉள வஂஸ்ரூஷ்ளஜ்ரொகெ கூஷ்ஸ்ஹாகூஷ்ஸ வனவ அ।
கூஷ்ஸஃவவ்ழாணி ஹ்ரூமதாந்ரி கூஜ்ரூடவ்ஹ்ரூகூஷ்ஸ உஅயூதெ ॥ (16)

ப-ம். 3 ஊள 2 ஊஉள 5 வஂஸ்ரூஷ்ள 1 ஜ்ரொகெ 7 கூஷ்ஸஃ 6 அ 9 கூகூஷ்ஸஃ 4 வனவ 8 ஊவ அ 12 கூஷ்ஸஃ 10 வவ்ழாணி 11 ஹ்ரூமதாந்ரி 14 கூஜ்ரூடவ்ஹ்ரூஃ 15 கூகூஷ்ஸஃ 13 உஅயூதெ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சம்சாரத்தில் புருஷர் இருவகையினாவர்; ஒருவரோ கூஷரபுருஷர் மற்றொருவரோ அகூஷரபுருஷர். அவர்களுள் காரியவடிவ சர்வ பூதங்களுமோ கூஷரபுருஷர் எனப்படுவர்; காரணவடிவ மாயை அகூஷரபுருஷரெனப்படுவர். (16)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சைதன்யபுருஷனுக் குபாதிவடிவமானதால் புருடசப்தத்தாற் கூறப்பட்ட இருவரே புருடர்கள். இச்சம்சாரத்தில் அவர்களியாவர்களெனின் அருளிச்செய்கின்றார் ஸ்ரீ பகவான் 'கூஷரஸ்சாகூஷரவனவ அ' என. ஹே அர்ச்சுன! ஒருவரோ கூஷரமெனும் புருடர். மற்றொருவரோ அகூஷரமெனும் புருடர்; அதாவது தோற்றக்கேடுகளையுடைய காரியக்கூட்டங்களனைத்துமோ கூஷரமெனும் புருடராவர். ஆன்மஞானமின்றிக் கேடிலாததும் கூஷரமெனும் புருஷரின் உத்பத்திக்குக் காரணவடிவமுமாகிய காரணோபாதிவடிவ பகவத்மாயாசத்தி அகூஷரமெனும் இரண்டாவது புருடனும். இவ்வாறு இவ்விருவர்களின் சொரூபத்தை ஸ்ரீ பகவன் தாமே விளக்கமாய் அருளிச்செய்கின்றார். 'கூஷரஃவவ்ழாணி ஹ்ரூமதாந்ரி உதி' ஹே அர்ச்சுன! தோற்றக்கேடுகளையுடைய சர்வ காரியப் பிரபஞ்சங்களுமோ கூஷரம் என்னும் பெயராற் கூறப்படுகின்றன; கூடத்தன் அகூஷரமெனும் பெயராற் கூறப்படுகின்றனன்; ஆண்டு உண்மைப் பொருளை மறைத்து உண்மையிலாப்பொருளைக் காட்டுவது வஞ்சகம் என்றும் மாயையென்றுஞ் சொல்லப்படும் கூடமாம். அவ்வடிவமாய் நிலைத்து நிற்பது கூடத்தமாம்; அதாவது ஆவரணவிட்சேபசத்தி வடிவங்களாயிருப்பது கூடத்தமாம். அத்தன்மைய கூடத்தமெனும் ஸ்ரீ பகவானுடைய மாயாசத்திவடிவ காரணோபாதியானது இச்சம்சாரமனைத்திற்குங் காரணமானதினாலும் ஆன்மஞானமாழிந்த வேறுபாயங்களால் கேடிலாமையினாலும் அனந்தமாம். ஆதலின் அம்மாயாசத்திவடிவ காரணோபாதி அகூஷரமென்னும் டெயராற் கூறப்படுகின்றது என்ப

தாம். ஒரு வியாக்கியானத்திலோ க்ஷர என்னுஞ் சப்தத்தால் சர்வ அசேதன வர்க்கங்களைக் கிரகணஞ்செய்து 'க²டி²ஹ்ரோக்ஷரஉச்யதே' என்னும் வாக்கியத்தால் க்ஷேத்திரக்ஞனெனுஞ் சீவான்மா கொள்ளப்பட்டது. அவ்வியாக்கியானம் நலமுடைத்தன்றும்; என்னை? 'உத்தம: புருஷஸ்த்வந்ய:' என்னும் இனிமேற் கூறப்படும் வாக்கியத்தால் அந்த க்ஷேத்திரக்ஞனெனும் ஆன்மாவையே புருஷோத்தமவடிவமாய்ப் பிரதிபாதித்தருளுவர். ஆதலின் ஈண்டு க்ஷராக்ஷர சப்தங்களால் காரியகாரணைபாதிகளே கொள்ளற்பாலனவாம் என்க. (16)

(அ-கை.) ஆண்டுப் பூர்வ சுலோகத்தில் க்ஷராக்ஷர சப்தங்களால் காரிய காரணைபாதிகளைக் கூறியருளினர். இப்போது இச்சுலோகத்தில் அவ்வுபாதிகளினும் விலட்சணமானதும் அவைகளின் தோஷத்தாற்றீண்டுதலுறாததுமாகிய நித்திய சுத்த புத்த முத்த சுபாவ உத்தம புருஷனை ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதா³ஹ்ருத: ।
யோ லோகத்ரயமாவிஸ்ய பி³ப⁴ர்த்யவ்யய ஈஶ்வர: ॥ (17)

ப-ம். 2 உத்தம: 3 புருஷ: 1 து 4 அன்ய: 5 பரமாத்மா 6 இதி 7 உதா³ஹ்ருத: 8 ய: 9 லோகத்ரயம் 10 ஆவிஶ்ய 11 பி³ப⁴ர்தி 12 அவ்யய: 13 ஈஶ்வர:.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மிக மேலாகிய சேதனபுருஷனே க்ஷராக்ஷரமிரண்டினும் வேறேயாவன்; பரமான்மாவெனப் பெயரிய சேதன புருஷன் மூன்று லோகங்கட்கும் தான் பற்றுக்கோடாய் நின்று தாங்குவன்; அவ்வயபுருஷனும் ஈசுவரபுருஷனுமாவன். (17)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! மிக மேலாகிய பிரத்தியக்சேதனன்மவடிவ புருஷனே ஆன்னியனே; அதாவது க்ஷராக்ஷர சப்தங்களாற்கூறப்பட்ட காரியகாரணைபாதிகளினின்று மிக விலட்சணமும் அவைகளைப் பிரகாசிக்கப்பட்டவனுமாகிய சேதனவடிவ உத்தம புருஷன் மூன்றுவதேயாவன். அப்புருஷன் வேதாந்த நூலிற் பரமான்மாவெனக் கூறப்படுகின்றன். அதாவது அன்னமய முதலிய பஞ்ச கோசங்களையும் அவ்வவ்வாதிகள் அவிவேகத்தால் ஆன்மவடிவமாய்க் கற்பிக்கின்றார்கள். அத்தன்மைய பஞ்சகோசங்களினின்றும் பரமும் ஆன்மாவுமானது பரமான்மாவாம். ஆண்டுச் சேதனவடிவ உத்தம புருஷன் கற்பிதனுகாபையின் கற்பிதமான அப்பஞ்ச கோசங்களினின்று மிகவும் உத்கிருஷ்டமானதால் பரமும் பிரமபுச்சம் பிரதிஷ்டா என்னுஞ் சுருதியால் சர்வாதிட்டானமாய்க் கூறப்பட்டதும் சர்வ பூதங்களின் பிரத்தியக்சேதனவடிவமும் ஆதலின் வேதாந்தநூலில் அச்சேதனவடிவ உத்தம புருஷன் பரமான்மாவெனப்படுகின்றன் என்பதாம். ஹே அர்ச்சுன! எந்தபரமான்மா பூலோகம் புவர்லோகம் சுவர்லோகம் என்னும் மூவுலகவடிவப் பிரபஞ்சங்களனைத்தையும் தமது மாயாசத்தியால் சுவாசரிதஞ்செய்து தனது சத்தாஸ்பூர்த்தியைக்கொடுத்துத் தாரணபோஷணங்களைச் செய்கின்றது. 'வ்யாப்ய வ்யாப்யம் ஹரதே விஶ்வ ஈஶ:' காரியகாரணவடிவப் பிரபஞ்சமுழுதிற்கும் பரமேசுரன் தாரணபோஷணங்களைச் செய்கின்றனன் என்பதாம். மற்றுமெத்தன்மையனெனின் அவ்வியயம் அதாவது சன்ம மரணமுதலிய சர்வ விகாரங்களுமின்றியவன் ஈசுரன்; அதாவது சூரிய சந்திரன் முதலிய சர்வ சகத்திற்கும் நியந்தாவாகிய நாராயணவடிவன்: அத்தன்மைய உத்தம புருடன் வேதாந்தத்தில் பரமான்மாவெனக் கூறப்படுகின்றன். 'ஸ உத்தம: புருஷ:' அப்பரமான்ம தேவனே உத்தம புருடனுவன் என்பதாம். ஈண்டுப் பிரத்தியக்சேதனவடிவ ஆன்மாவின் 'அவ்யய ஈஶ்வர:' எனக் கூறப்பட்ட இரண்டு ஹேதுகர்ப்ப விசேடணங்களால்

இவ்விரண்டனுமானஞ் சித்தமாகின்றன : சேதனுன்மா, கூறிப்போந்த கூஷாகூஷரமெனும் இரண்டு புருஷர்களினும் வேறுதற்குரியது, அவ்வியயமானதால்; எது கூஷாகூஷரங்களினும் வேறன்றே அது அவ்வியயமுமன்று புத்தி முதலியவைகளைப்போல; சேதனுன்மா, கூஷாகூஷரங்களினும் வேறுதற்குரியது, ஈசுரனுதால், பிரஜைகளின் நியந்தாவாகிய மகாராஜா அப்பிரஜைகளினும் வேறுதல்போல என்பதாம். (17)

(அ-கை.) இப்போது முன்னர்க்கூறப்பட்ட கூஷாகூஷரங்களினும் விலட்சணமாகிய பரமான்மதேவனுக்கு புருஷோத்தமனென்னு நாமத்தை யருளிச்செய்து அத்தன்மைய பரமான்மதேவன் நானே என ஸ்ரீ பகவான் தமது சொரூபத்தை 'ஸ்ருஹணொஹி வ்யிஷ்டாஹம் தஶாஶவாஶம் ஶ' என்பது முதலிய வாக்கியங்களால் முன்னர்க்கூறப்பட்ட தமது மகிமாவை நிச்சயித்தற்பொருட்டுக் காண்பித்தருளுகின்றார்.

சு-ம். யஸ்மாத்க்ஷரமதீதோஹ மக்ஷராதபி சொத்தமஃ।
அதோஸ்மி லொகே வெதே அ ப்ரதிதஃ புரூஷோத்தமஃ ॥ (18)

ப-ம். 1 யஸ்மாத் 3 க்ஷரம் 4 அதீதஃ 2 அஹம் 6 அக்ஷராத் 7 அபி 5 அ 8 உத்தமஃ 9 அதஃ 15 அஸ்மி 10 லொகே 12 வெதே 11 அ 14 ப்ரதிதஃ 13 புரூஷோத்தமஃ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! எதனுல் பரமேசுரனுகிய நான் க்ஷரத்தையும் கடந்தவனே அக்ஷரத்தினின்றும் மிகவுத்கிருஷ்டனே அதனுனே உலகத்திலும் வேதத்திலும் புருஷோத்தமனென விளங்குகின்றேன். (18)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! காரியவடிவமானதால் விநாசமுடையதும் கனப்போல் மாயாமயமுமாகிய அச்சுவத்தமெனும் இச்சம்சார விருக்ஷவடிவ க்ஷரத்தையும் பரமேசுரனுகிய நான் எதனுல் கடந்தவனுகின்றேனே அங்ஙனமே மாயை அவித்தை அஜ்ஞானம் பகவத்சக்தி என்னும் நாமங்களாலெது பிரசித்தமானதோ எந்த அவ்வியாகிருதவடிவ காரணம் 'சுக்ஷராத்பரதஃ வாஃ' என்னுஞ் சுருதியில் அக்ஷரமெனக் கூறப்பட்டிருக்கிறதோ அந்த மாயாமய அக்ஷரம் இச்சம்சார விருக்ஷத்தின்; பீஜரூபமாம் அத்தன்மைய உலகனைத்திற்குங் காரணவடிவ மாயையெனும் அக்ஷரத்தினின்றும் பரமேசுரனுகிய நான் உத்தமனுகின்றேன். அதாவது சைதன்யவடிவனுனதால் பரமேசுரனுகிய நான் அந்தச்சடவடிவ அக்ஷரத்தினின்றும் மிகவு முத்கிருஷ்டன் இதனுனே; அதாவது சேதன புருஷர்களின் உபாதிவடிவ கூஷராகூஷரங்களிரண்டும் சேதன புருஷர்களின் தாதான்மியாத்தியாசத்தால் புருஷன் என்னுஞ் சப்தத்தாற் கூறப்படுகின்றன. அத்தன்மைய கூஷாரவடிவ உபாதிகளினும் மிகவுமுத்கிருஷ்டனுனதால் பரமேசுரனுகிய நான் உலக வேதங்களில் புருஷோத்தமனென விளக்கமானேன். ஆண்டுக் கவிகளாலியற்றப்பட்ட காவிய முதலியவடிவ வுலகங்களிலோ 'ஹரியுமையொகஃ வாஃ' என்பது முதலிய வாக்கியங்களால் பரமேசுரனுகிய நான் புருஷோத்தமனெனப் பிரசித்தன், வேதத்திலோ 'ஸ உத்தமஃ வாஃ' என்பது முதலிய வாக்கியங்களால் பரமேசுரனுகிய நான் புருஷோத்தமனெனப் பிரசித்தன் என்பதாம். (18)

(அ-கை.) இப்போது ஸ்ரீ பகவான் கூறிப்போந்த அர்த்தத்தோடு புருஷோத்தம நாமத்தின் ஞானபலத்தை வர்ணித்தருளுகின்றார்.

சு-ம். யொ மாமேவமஸம்மூடொ ஜாநாதி புரூஷோத்தமம்।
ஸ ஸர்வவித்பஜதி மாம் ஸர்வபாவேந பாரத ॥ (19)

ப-ம். 2 யஃ 4 ஸ்ரீ 5 ஹ்ரீ 3 சுஹ்ரீஃஸ்ரீஃ 7 ஹ்ரூ 6 வ்ரூஷ்ரூஷ்ட்ரூஃ 8 ஹஃ 9 ஹ்ரவ்ரூஃவ்ரீ 12 ஜ்ரஜ்ரீ 11 ஸ்ரீ 10 ஹ்ரவ்ரூஹ்ரவ்ரே 1 ஹ்ரூ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! மிகுதியான மோகமின்றிப் பரமேசுரனுகிய என்னை இவ்வாறு புருடோத்தமவடிவமா யுணர்பவனுகிய சர்வக்ஞனனவனே பக்தியோகத்தால் பரமேசுரனுகிய என்னைச் சேவிக்கின்றான். (19)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எவ்வதிகாரி அசம் மூடனுய் அதாவது இக்கிருஷ்ணனும் யாதோர் ஒரு மநுட விசேடன் என்னுஞ் சம்மோக மின்றியவனுய்ப் பரமேசுரனுகிய என்னைப்புருடோத்தம நாமார்த்த ஞான பூர்வகம் புருடோத்தமனுகவே யுணர்கின்றனே மநுடவடிவமா யுணருவதில்லையோ அவ்வதிகாரி புருடனே பரமேசுரனுகிய என்னை நிரதிசயப்பிரேமைலட்சண பக்தியோகத்தாற் சேவிக்கின்றன். அவனே சர்வஜ்ஞனாவன்; அதாவது பரமேசுரனுகிய என்னை எல்லாவற்றின் ஆன்மவடிவமா யுணர்பவனே சர்வக்ஞன். ஆதலின் 'ஸ்ரீமத்பகவத்கீதாஸு உபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீகிருஷ்ணார்ஜுந ஸம்வாதே' என முன்கூறப்பட்ட வாக்கியம் பொருத்தமுடையதேயாம். அங்ஙனமே 'ப்ரஹ்மணோஹி ப்ரதிஷ்டாஹம்' முன்னர்க்கூறிய வாக்கியமும் பொருத்தமுடையதேயாம் என்க. (19)

(அ-கை.) இப்போது ஸ்ரீ பகவான் இப்பதினேந்தாவது அத்தியாயத்தின் அர்த்தத்தைத்துதித்து இவ்வத்தியாயத்தை முடித்தருளுகின்றார்.

சு-ம். உதி மஹர்ஷிபிர்மாம் ஸர்வே ஸ்ருதே: ப்ரோக்தம் ப்ரோதவ ।
ஸ்ருதே:
ஸ்ரவதஸ்ச்யா ஜ்ஞாநஸ்யாஸ்ய கூடகூடஸ்தஸ்ய ஹாரத ॥ (20)

ப-ம். 4ஃ உதி 5 மஹர்ஷிபிர் 6 மாம் 7 ஸர்வே 8 ஸ்ருதே: 3 ப்ரோக்தம் 1 ப்ரோதவ 9 ஸ்ரவதஸ்
ஸ்ருதே:
10 ச்யா 11 ஜ்ஞாநஸ்ய 12 ஸ்யாஸ்ய 14 கூடகூடஸ்தஸ்ய 13 அ 2 ஹாரத.

(அ-ம்.) ஹே சர்வ வியசனரகித பாரத! பகவானுகிய நான் உனக்குக் கூறிப்போந்தவாறுய் மிகவும் ரகசியவடிவமும் சம்பூரண சாத்திரவடிவமுமாகிய இப்பதினேந்தாவது அத்தியாயத்தைக் கூறினேன்; இதை யுணர்ந்தவன் ஆன்ம ஞானமுடையவனும் கிருதகிருத்தியனுமாகின்றான். (20)

(வி-ம்.) ஹே அனக! அதாவது ஹே சர்வ வியசனமின்றியவனே! அங்ஙனமே. ஹே பாரத! அதாவது ஹே பாதவம்சத்திலுற்பவித்த அர்ச்சுன! பகவானுகிய நான் உனக்கு இப்பதினேந்தாவது அத்தியாயத்தில் கூறிப்போந்த வாற்றல் மிக ரகசியவடிவ சம்பூரண சாத்திரத்தையே சுருக்கிக்கூறினேன்; அதாவது பதினெட்டாவது அத்தியாயவடிவ சர்வ கீதார்த்தத்தையும் நானுனக்குச் சுருக்கி இவ்வத்தியாயத்திற்கூறினேன். ஆதலின் இவ்வத்தியாயார்த்தத்தை பிரமமுணர்ந்த குருமுகத்தானிச்சயித்து இவ்வதிகாரி புத்திமானுகின்றான்; அதாவது நான் பிரமசொரூபன் என்னும் ஆன்மஞானமுடையவனுகின்றான். கிருதகிருத்தியனுமாகின்றான். ஆண்டு, இவ்வதிகாரிக்கு அவ்வவ் வருணாசிரமங்களிற் செய்யற்குரிய சுபகருமங்களனைத்தும் எவனுல் செய்யப்பட்டனவாமோ அதாவது, எவனுக்கு மீண்டும் யாதொரு கருமமுஞ் செயற்பாலதின்றுமோ அவன் கிருதகிவத்தியனுவன். கருத்துவாம்:—உத்தமகுலத்திலுற்பவித்த பிராமணனுல் எவ்வெச்சாத்திரவிகித கருமஞ்செயற்பாலதோ அக்கருமங்களனைத்தும் பரமான்மதேவ

னது சாக்ஷாத்காரமுண்டாகவே செய்யப்பட்டனவாம்; அப்பரமான்ம சாக்ஷாத்காரமின்றி ஒருவனுக்கும் அக்கர்த்தவ்விய கருமங்களின் சமாப்திபுண்டாகாது. ஈண்டு, ஹே அனக பாரத என்னுஞ் சம்போதனங்களால் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்கு இப்பொருளைக் குறிப்பித்தருளினர். இப்பதினைந்தாவது அத்தியாயார்த்தத்தையுணர்ந்து சாமானியபுருடனும் ஆன்மஞானமுடையவனைப் கிருதகிருத்தியனவனேல் நீயோ பெருங்குலத்திற் பிறந்தவனும் சர்வ விபசனமற்றவனுமாதலினால் குலகுணதன்மங்களோடுகூடிய நீ இவ்வத்தியாயார்த்தத்தையுணர்ந்து ஆன்மஞானமுடையனைப் கிருதகிருத்தியனாவை யென்பதில் கூறற்பாலதென்னை என்பதாம். அன்றியும் ஹே அனக என்னுஞ் சம்போதனத்தால் ஸ்ரீ பகவான் இவ்வர்த்தத்தையுங் குறிப்பித்தருளினர். சர்வ விபசனங்களுமின்றிய அதிகாரிக்கே பிரமவேத்தாவாகிய குருவானவர் மிக இரகசியமான இப்பிரமவித்தையை உபதேசிக்கவேண்டும் ஏனையோர்க்கன்றும் என்பதாம். (20)

ஸ்ரீமத் பரமஹம்ச பரிவிராஜகாசாரிய ஸ்ரீ உத்தவானந்தகிரி சுவாமிகளின் பூஜ்பபாத சிஷ்யராகிய ஸ்ரீ சித்கனானந்தகிரி சுவாமிகளாலிபற்றிபருளிப பிராகிருதமுகையெனும் கீதா கூடார்த்ததீபிகையில்,

பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

பதினாறவது அத்தியாயம்.

ஓம் ஸ்ரீ கணேசாயநமஃ ஸ்ரீ காசிவிஸ்வேஸ்வராப்யாம்நமஃ ஸ்ரீ குருப்யோநமஃ
ஸ்ரீ சங்கராச்சார்யேப்யோநமஃ

ஆண்டுப் பூர்வ அத்தியாயத்தில் 'சுயஜ்ஞ உமுரா நுநா வஜ்ஞதாநி கஉஷாநா வம்யீநி உநாக்ஷ்யுறொகெ' ஏன்னும் வாக்கியத்தால் ஸ்ரீ பகவான் மநுடதேகத்தில் முந்திய புண்ணிபபாப கருமாநுசாரமாய் அபிவியக்தியாகிய சுபா சுபவாசனைபைச் சம்சாரவிருக்ஷத்திற்கு அவாந்தர மூலவடிவமாய்த் திருவாய்மலர்ந்தருளினர். அவ்வாசனேய முன்னர் ஒன்பதாவது அத்தியாயத்தில் பிராணிகளின்பிரகிருதிவடிவத்தால் தெய்வீகம் ஆசுரம் ராக்ஷஸம் என மூவகையாய்க் குறிப்பிக்கப்பட்டது. அவற்றுள் வேதமறிவித்த நித்திய நைமித்திக கருமங்களையும் ஆன்மஞானத்தின் சமதமமுதலிய கருமங்களையும் அநுட்டிப்பதில் பிரவிருத்தி பண்ணப்பட்டது சாத்துவியாகிய சுபவாசனையாம்; அது தெய்வீகப் பிரகிருதியெனப் படுகின்றது. வேதங்கூறிய நிடேதத்தைக்கடந்து இயல்பாற் சித்தமான இராகத்துவேஷங்களை யநுசரித்ததும் சர்வானர்த்தத்தின் காரணவடிவமுமாகிய பிரவிருத்திக்குக் காரணமான ராஜசதாமதவடிவ அசுபவாசனைகள் ஆசுரப் பிரகிருதியென்றும் இராக்ஷஸப் பிரகிருதிபென்றுஞ் சொல்லப்படுகின்றன. ஆண்டு, விடயபோகங்களின் முக்கியத்தன்மையால் ராகத்தின் பிரபலத்தன்மையினின்று அவ்வசுபவாசனையில் ஆசுரித்தன்மையாம். ஹிம்சையின் முக்கிபத்தன்மையால் துவேபிரபலத்தினின்று அவ்வசுபவாசனையில் ராக்ஷஸீத்தன்மையாம். இத்துணையே இவ்விரண்டற்கு மிடைப்பட்டபேதமாம். இப்போது இவ்வத்தியாயத்தில் இவ்

வார்த்தை கூறப்படுகின்றது. சாத்திரத்தை யநுசரித்து அதிற்கூறிய அர்த்தத்திற் பிரவிருத்திக்கின்ற சாத்துவிபாகிய சுபவாசனைபோ தெய்வீக சம்பத்து எனப்படும். சாத்திரத்தை யநுசரியாது அதனால் விதிடதிக்கப்பட்ட விடயங்களிற் பிரவிருத்திக்கப்பட்ட ராஜஸீ தாமஸீவடிவ அசுபவாசனை ராகூஸ ஆசுரத்தன்மை களை யொன்றுபடுத்தி ஆசுரீசம்பத்தெனக்கூறப்படும். இவ்வாறு சுபாசுபத்தன்மை களால் வாசனைபின் இருவகைப்பேதத்தை 'தூபாஹ வைராஜாவதயா தெவாஸுரா வை:ராஸு' என்பது முதலிய சுருதிகள் கூறுகின்றன. ஆண்டி, தெய்வீக சம்பத் துவடிவ சுபவாசனைபோ இவ்வதிகாரிக்கு மோகூத்திற் சேகதுவாம். ஆசுரிசம்பத் துவடிவ அசுபவாசனைபோ இவணக்கு பத்தகாரணமாம். ஆகலின் தெய்வீகசம் பத்துவடிவ சுபவாசனைபோ அவசியமாய் இவ்வதிகாரியாற் கொள்ளற்பாலதாம்; ஆசுரிசம்பத்துவடிவ அசுபவாசனைபோ அவசியமாய்த் தள்ளத்தக்கதாம். அவை களைத்தள்ளுவதுங் கொள்ளுவதும் அவற்றின் சொரூப வுணர்ச்சியின்றி அமையா தாதலின் ஸ்ரீ பகவான் அச்சுபாசுப வாசனைகளைக் கொள்ளுவித்தற்பொருட்டும் தள்ளுவித்தற்பொருட்டும் அவைகளின் சொரூபத்தைக்கூறும் இப்பதினைவது அத்தியாயத்தைத்தொடங்கி யருளுகின்றார். ஆண்டு முதலில் மூன்று சுலோகங் களால் ஸ்ரீ பகவான் கொள்ளற்குரிய தெய்வீக சம்பத்து வடிவத்தை யருளிச் செய்கின்றார்.

ஸ்ரீஹயக்ரீவாய நம:

சு-ம். அபயம் ஸத்வஸம்ஸுத்தி ர்ஜ்ஞானயோகவ்யவஸ்தி:தி: ।
தானம் தமஸ்ச யஜ்ஞஸ்ச ஸ்வாத்யாயஸ்தப ஆர்ஜவம் ॥ (1)

ப-ம். 1 அபயம் 2 ஸத்வஸம்ஸுத்தி:3 ர்ஜ்ஞானயோகவ்யவஸ்தி:தி:4 தானம் 6 தம:5 ச 8 யஜ்ஞ:7 ச 9 ஸ்வாத்யாய:10 தப:11 ஆர்ஜவம்.

(அ-ம்.) தேஜ அர்ச்சுன! பயமின்மை, அந்தக்கரணத்தூய்மை, ஞான யோகங்களினிலைத்தல் தானம், தமம், யஞ்ஞம், சுவாத்திபாயம், தவம், ஆர்ச்சவம் என்னுமிவ்வனைத்தும் தெய்வீக சம்பத்து வடிவங்களாம். (1)

(வி-ம்) தேஜ அர்ச்சுன! நூலுபதேசித்த அர்த்தத்தில் ஐயமிலதாய் அத னனுஷ்டானத்தில் தத்பரத்தன்மை பயமின்மையாம். அல்லது யாதொன்றுங் கொள்வதின்றி ஓர் நிலைமையினிருக்கின்ற நான் 'எவ்வணம் பிழைப்பேன் என் னும் பயராகிதத்தன்மை பயமின்மையாம். அந்தக்கரணத்தின்மிக தூய்தாந்தன்மை சத்துவசம்சுத்தியாம். ஆண்டி அவ்வந்தக்கரணசுத்தியில் பரமசுர சொரூபத்தை அறிதற்குரியதாந்தன்மைபே மிக்கதன்மையாம். அல்லது பிறர்வஞ்சனை மாயை பொய் என்பது முதலியவைகளின் நியாகம் சத்துவசம்சுத்தியாம். அவற்றுள் தனது பிரமோபாசன சித்தியின்பொருட்டு எவ்விதமாகிய வுபாயத்தானும் பிறரை வசப்படுத்தல் பிறர்வஞ்சனையாம். மனதில் வேறுகருத்தைக்கொண்டு வெளியில் வேறுவிதமாய் விவகரித்தல் மாயையாம். கண்ட விருத்தாந்தப்படியே வாயாற் கூறாமல் அதற்கு மாறுக்கூறுதல் பொய்யாம். என்பது முதலிய தேதாடங்களின்றி யதன்மை சத்துவசம்சுத்தியாம். அத்தியாத்மநூலால் ஆன்மசொரூபத்தை நிச்ச யித்தல் ஞானம். மனவொருமையால் அவ்வடிவத்தை தனதனுபவத்திற்பதியவைத் தல் யோகமாம். அவ்விரண்டினிலைத்தல் அதாவது எப்போதுந் தத்பரத்தன்மை ஞானம் யோகங்களினிலைத்தலாம். அல்லது 'அபயம் ஸத்வஸம்ஸுத்தி ர்ஜ்ஞானயோக வ்யவஸ்தி:தி:' என்னும் வாக்கியத்திற்கு மேலிவ்வர்த்தம் பண்ணுக. 'அபயம் ஸர்வபூதேஷ்வாத்மதர்ஸநம்' என்னினின்றுந் சர்வ பூதப்பிராணி களுக்கும்

பயமின்மையுண்டாகுக என. அபயதானங்கொடுப்பதின் சங்கற்பம் சந்நியாசங் கொள்ளுங் காலத்திலுண்டாகின்றது. அதைப்பாலித்தல் முக்காரணங்களாலும் யாதொரு பிராணிகட்கும் பயமடைவிபாமை அபயமாம். இந்த அபயதானவடிவ தருமம் பரமஹம்சர்களின் சர்வ தருமங்கட்கும் உபலட்சணமாம். சிரவணாதிகளின் பரிபக்குவத்தால் அந்தக்காரணத்தின் அசம்பாவனை முதலிய மலமிலாத்தன்மை சத்துவசம்சுத்தியாம். அகம்பிரமாஸ்மி என்னும் ஆன்மசாட்சாத்காரம் ஞானமாம். மஹாவாசனைகட்குப்பங்கட்கு அநுகூலமாகிய முபற்சி யோகமாம். அந்த ஞானயோகங்களால் சம்சாரிஜனங்களினும் வேறாகிய சீவன்முத்திவடிவ நிலைமை ஞானயோக வியவஸ்திதிபாம். இவ்வாறு வியாக்கியானம் பண்ணப்பட்ட பயமின்மை முதலிய தெய்வீகசம்பத்து பலவடிவமென்றுணரத்தக்கது. ஆண்டுப் பகவத்பக்தியின்றி அவ்வந்தக்காரணசுத்தி யமையாமையின் அவ்வந்தக்காரணசுத்தியைக் கூறியதனால் அப்பகவத்பக்தியுங் கூறப்பட்டதென்றுணர்க. என்னை ?

உஹாதா நஹஸாம் வாயஃ தெவீம் வ்ருகூதிஷாஸ்ரிதாஃ ।
ஹஜந்ய நயஃநஹொ ஜூராக்வாஹமுதாஹி உவ்யயம் ॥

என்னு மிவ்வொன்பதாவது அத்தியாயத்தின் சுலோகத்தில் தெய்வீகசம்பத்தில் பகவத்பக்தியையுங் கூறியிருக்கின்றது. அந்தப் பக்தி மிக மேலானதாதலின் ஸ்ரீ பகவான் ஈண்டபய முதலியவைகளோடு அதைக்கூறியருளவில்லை என்க. இவ்வாறு பெரும்பாக்கியமுடைய பரமஹம்ச சந்நியாசிகளின் பலவடிவ தெய்வீகசம்பத்தை அருளிச்செய்து ஸ்ரீ பகவான் இப்போது அவர்களினும் வேறான கிருகஸ்தன் முதலியோர்கட்குச் சாதனவடிவ தெய்வீகசம்பத்தை அருளிச்செய்கின்றார். 'தாதவுஷ்ட' ஆண்டு, தன்னுடைய என தென்னுமபிமானத்திற்கு விடயமான அன்ன சுவர்ணகோ பூமி வீடு முதலிய பதார்த்தங்களைத்தனக்கியன்ற வளவு அன்போடு அதிதிப்பிராமணன் முதலியோர்கட்குக் கொடுத்தல் தானமாம். சுரோத்திரமுதலிய பாகியேந்தியங்களை தத்தம் விடயங்களினின்று நிவிருத்தித்தல்வடிவ அடக்கந்தமமாம். கிருகஸ்தனிடத்தில் எல்லாவகையானும் இந்தியங்களையடக்கல் பொருந்தாதாயினும் இருதுகால முதலியவைகளினின்றும் அன்னிய காலத்தில் புணர்தன் முதலியன செய்யொணாதனவாம். இதுவே அவர்கட்கு இந்திய நிக்கிரகமாம். ஈண்டு, 'தாவுஷ்ட' என்னும் வசனத்திலுள்ள சகாரம் ஈண்டுக் கூறுத வேறு நிவிருத்திவடிவ தருமங்களையுங் கூட்டுவித்தற்பொருட்டாம் சாத்திரவிகித கருமவிசேடத்தின் பெயர் யஜ்ஞமாம். அது சிரௌதம் ஸ்மார்த்தம் என்னும் வேறுபாட்டால் இருவகைத்தாம். அவற்றில் அக்கினிஹோத்திரம் தர்சபூர்ணமாசம் சோமயாகமுதலியன சிரௌதயக்ஞமெனப்படும். தைவயக்ஞம் பிதிருயக்ஞம் பூதயக்ஞம் மநுஷ்யக்ஞம் என்னும் நான்கும் ஸ்மார்த்தயக்ஞமெனப்படும். பிரமயக்ஞமும் ஸ்மார்த்தயக்ஞமென்றே கூறப்படுகின்றதாயினும் ஈண்டதை சுவாத்தியாயம் என்னும் பதத்தால் வேறுகூவே கூறியருளினர். ஆதலின், ஈண்டு யக்ஞசப்தத்தால் நால்வகை யக்ஞமே கொள்ளற்பாலன. ஈண்டு, 'யஜுஷ்ட' என்னும் வசனத்திலுள்ள சகாரம் ஈண்டுக் கூறுதவேறு பிரவிருத்திவடிவ தருமங்களையுங் கூட்டுவித்தற்பொருட்டாம். தானம் தமம் யக்ஞமென்னும் இம்மூன்றும் கிருகஸ்தர்கட்கே தெய்வீகசம்பத்துவடிவமாம். புண்ணிய விசேடாத்பத்திபின்பொருட்டு இருக்கு முதலிய வேதங்களை அத்தியயனம் பண்ணல் சுவாத்தியயனமாம். இதையே பிரமயக்ஞமெனக்கூறுவர். முன்னர்க்கூறிய யக்ஞசப்தத்தால் ஐவகையான ஸ்மார்த்தயக்ஞங்களைக் கூறலமைதல் கூடுமாயினும் அந்தச் சுவாத்தியயனம் பிரமசாரியின் முக்கியதருமமென்றுணர்த்துவான் ஸ்ரீ பகவான் ஈண்டுச் சுவாத்தியயனத்தை வேறுகக் கூறியருளினர். மேலை பதினாறாவது அத்தியாயத்திற்

கூறப்பட்ட சாரீர வாசிக மானசிகமென்னும் மூவகைபான தவமே ஈண்டுத் தவம் என்னுஞ் சப்தத்தாற் கொள்ளற்பாலது. அத்தத்தவம் வானப்பிரஸ்தனுக்கு முக்கிய தருமமாம். இவ்வாறு சந்நியாசி கிருகஸ்தன் பிரமசாரி வானப்பிரஸ்தன் என்னும் ஆசிரமங்களின் முக்கிய தருமங்களை யருளிச்செய்து இப்போது பிராமணன் முதலிய நான்கு வர்ணங்களின் முக்கிய தருமங்களை அருளிச்செய்கின்றார், 'கூஉவம் உதி' ஆண்டவத்தன்மையின்மை ஆர்ச்சவமாம். அதாவது அன்போடு கேட்போனிடத்து நிண்ணயம்பண்ணிய அர்த்தத்தை மறைத்துவையாமை ஆர்ச்சவமாம். (1)

(அ-கை.) மேலும்,

சு-ம். சுஹிம்ஸா ஸத்யமக்ரோத ஸ்த்யாகஶ்சாந்திரபைஶுநம் ।
தயா பூதேஷ்வலோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீரசாபலம் ॥ (2)

ப-ம். 1 சுஹிம்ஸா 2 ஸத்யம் 3 சுக்ரோதஃ 4 த்யாகஃ 5 சாந்திஃ 6 சுபைஶுநம் 8 தயா 7 பூதேஷு 9 சுலோலுப்த்வம் 10 மார்தவம் 11 ஹ்ரீஃ 12 சுசாபலம்.

(அ-ம்.) ஏஹ அர்ச்சுன! அஹிம்சை, சத்தியம், அக்குரோதம், தியாகம், சாந்தி, புறங்கூறாமை, சர்வப்பிராணிகளிடத்துந்தயை, விகாரமின்மை, கோரமின்மை, லச்சை, தொழிலின்மை என்பவைகளனைத்தும் தெய்வீகசம்பத்து வடிவங்களாம்.

(வி-ம்.) ஏஹ அர்ச்சுன! பிராணிகளின் சீவிதாவடிவ விருத்தியைச் சேதித்தல் இம்சையாம். அஃதின்மை அஹிம்சையாம். எவ்வெப்பிராணிகள் எவ்வெவ்விருத்திபால் சீவிக்கின்றனவோ அவ்வப்பிராணிகளின் அவ்வவ்விருத்தியை ஒருபோதுஞ் சேதியாமை அஹிம்சை என்பதாம். துன்பம் விளவிபாத உண்மைப்பொருளுணர்த்தும் வாக்கியத்தை எப்போதுங் கூறல் சத்தியமாம். ஆண்டு எந்த உண்மைப்பொருளுணர்த்தும் வாக்கியத்தைக் கூறுவதால் பிராமணன் முதலியோர்கட்கு இம்சையுண்டாகின்றதோ அதில் சத்தியத்தன்மையை நீக்குதற்கு துன்பம் விளவிபாத என விசேடிக்கப்பட்டது; பிறர் வாக்கால் ஆசரியாவிடத்தும் அடித்தவிடத்தும் உண்டாகப்பட்ட குரோதம் அப்போதே உபசமனமாதல் அக்குரோதமாம்; சாத்திரவிதிபூர்வகம் சர்வ கருமங்களின் சந்நியாசம் தியாகமாம். தானமும் தியாகமெனப்படுமாயினும் அந்தத் தானம் பூர்வ சுலோகத்திற் கூறப்பட்டது; ஆதலின் ஈண்டுத்தியாகசப்தத்தால் சர்வ கரும சந்நியாசமேகொள்ளற்பாலது. அந்தக்காரண உபசமம் சாந்திபாம்; காணுகாலபோது பிறர் தோடத்தை பிறர்முன் வெளிப்படுத்தல் புறங்கூறலாம்; அஃதின்மை புறங்கூறாமையாம். துக்கிகளிடத்துள்ள கிருபை தயையாம்; விடயங்கள் சமீபத்துறினும் நுகருமாற்றலிருப்பினும் இந்திரியங்களின் அவிக்கிரியத்தன்மை விகாரமின்மையாம். வெகுளாமை கோரமின்மையாம்; அதாவது பயனிலாது பூர்வபக்ஷ முதலியவைகளைச் செய்யும் சிஷ்யன் முதலியோர்கட்கும் அன்பிலாக்கூற்றிலாகிப் போதித்தல் மார்த்தவமாம். செய்யத்தகாத காரியத்தை விடயம்பண்ணும் பிரவிருத்தியாரம்பத்தில் அதைத் தடைப்படுத்துவதாய உலகலச்சை ஹ்ரீ எனும் லச்சையாம். பயனிலாத இந்தியாதிகளின் தொழில் தொழிலாம். அஃதின்மை தொழிலின்மையாம். ஆண்டு, ஆர்ச்சவம் முதற்கொண்டு தொழிலின்மையீறாய் முன்னார்க்கூறிய இவ்வனைத்தும் பிராமணரது தெய்வீகசம்பத்து வடிவ அசாதாரண தருமங்களாம் என்க. (2)

(அ-கை.) மேலும்,

சு-ம். தெஜஃ க்ஷமா யுதிஃபாளஅ உகூராஹொ நாதிஸாந்திதா।
ஹவந்தி வம்வஉம் வெஉவீ உவிஜாதவ்ய ஹாரத ॥ (3)

ப-ம். 2 தெஜஃ 3 க்ஷமா 4 யுதிஃ 5 பாளஅம் 6 கூகூராஹஃ 7 நாதிஸாந்திதா
11 ஹவந்தி 9 வம்வஉம் 8 வெஉவீம் 10 கூவிஜாதவ்ய 1 ஹாரத.

(அ-ம்.) ஹே பாரத! தேஜசு, க்ஷமை, திருதி, சௌசம், துரோகமின்மை, மிகுந்தமான மின்மை என்னு மிவ்வனைத்தும் சத்துவவாசனையோடு தோன்றின வனுக்குப் பிராப்தியாவன. (3)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பணவி மக்கள்முதலிய மூடர்க்களால் அமிழ்த்தப் படாமை தேஜசாம்; வலியிருந்தும் நிந்தைபண்ணுவோரிடத்து வெகுளாமை க்ஷமையாம்; வியாகூலம்வந்துறினும் தேகேந்திரியாதிகளை நிலைப்படுத்தும்பிரயத் தனவிசேடம் எந்தப் பிரயத்தனவிசேடத்தால் நிலைப்படுத்திய தேகேந்தியங்கள் வியாகூலத்தை யடையாதனவாமோ அந்தப் பிரயத்தனவிசேடம் திருதியாம்; தே ஜசு க்ஷமை திருதி என்டவைகள் க்ஷத்திரியர்களின் தெய்வீக சம்பத்துவடிவ அசா தாரண தருமங்களாம். திரவியமுதலியவைகளைத் தேடுவதில் மாயை பொய் முத லியவைகளின்மை சௌசமாம். இது ஆந்தர சௌசமென்றுணர்க. பண்ணீர் முதலி யவைகளாலுண்டாகும் தேகசுத்திவடிவமாகிய பாகிய சௌசத்தை ஈண்டுச்சௌச சப்தத்தாற் கொள்ளற்க; என்னை? அது தேகசுத்திவடிவமானதால் பாகியமாதலின் அந்தக்காரணத்தின்வாசலுவடிவமன்று. ஈண்டுப்பிரசங்கத்திலோ சாத்துவிக முத லிய வேறு பாட்டால் பின்னமான அந்தக்காரணவாசனைகளையே தெய்வீக ஆசுர சம்பத்துவடிவங்களாய்க் கூறக்கருதியதாமாதலின் சௌசபதத்தால் பாகிய சௌ சங்கொள்ளற்பாலதன்றும் என்க. யாதேனுமொரு பிராணியைக் கொல்லவேண்டு மென்னும் வேட்கையால் சஸ்திரமுதலியவகைளைக் கிரகித்தல் துரோகமாம். அஃதி லாமை அத்துரோகமாம். சௌசம் துரோகமின்மைகளிரண்டும் வைசியரின் சம் பத்துவடிவ அசாதாரண தருமமாம். மிகுமானிக்குந்தன்மை அதிமானித்தன்மை யாம்; அதாவது தன்னிடத்துப்பூஜ்யத்துவ அதிசயத்தின் பாவனை அதிமானித்தன் மையாம், அஃதின்மை மிகுந்தமானமிலாமையாம்; அதாவது தன்னிற் பூஜித்தற் குரிய பிராமண க்ஷத்திரிய வைசிய வர்ணத்தார்களுக்குமுன் வணக்கமுடைமை மிக மானமிலாமையாம். இது சூத்திரனுடைய தெய்வீகசம்பத்து வடிவ அசாதாரண தருமமாமென்க. ஈண்டு, 'தஜெதம் வெஉநுவஅ நெநஸ்ரோஹணா விவிஜிஷந்திய ஜ்ஞநஉாநெந தவஸா நாஸகெந' என்பது முதலிய சுருதியால் ஆன்மஞா னேச்சைக்கு உபாயவடிவமாய்க்கூறப்பட்ட முக்கியா முக்கியவடிவ வருணாசிரம தருமங்களும் ஈண்டுத் தெய்வீகசம்பத்து வடிவமாய்க் கொள்ளற்பாலனவாம். இவ்வாறு பயமின்மைமுதற்கொண்டு மிகமானமின்மையீறுக மூன்று சுலோகங் களாற் கூறப்பட்ட வெவ்வேறு வருணாசிரமதருமங்கள் இப்புருஷனிடத்து உண்டாகின்றன. ஆண்டு எத்தன்மைய புருஷனிடத்து இவை யுண்டாகின்றன என்றர்ச்சுனனுக்கறியும் வேட்கையுண்டாக ஸ்ரீ பகவான் அருளிச் செய்கின் றார். 'வம்வஉம் வெஉவீம் சுவிஜாதவ்ய உதி' ஹே அர்ச்சுன! இத்தேகாரம்ப காலத்தில் முந்திய புண்ணிய கருமத்தால் வெளிப்பட்ட சுத்த சத்துவகுணமய வாசனைக்கூட்டங்கள் தனதுள்ளத்தில் உண்டாகவே பார்த்துச் சன்மத்தை யடைந்த எவனுக்கு பின்னர் நன்மையுண்டாமோ அவனுக்கே இதத்தருமங்கள் கிடைக்கும். இது சுருதியிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. வாணஃ வாணை நகஉணாஹவதி வாவஃ வாவெந।

(போ-ள்.) முன்முற்சன்ம புண்யகருமவாசனையால் பிற்பிற்சன்மங்களில் புண்ணியவானாகின்றான். பூர்வபூர்வ பாபகருமவாசனையால் இவன் உத்தரோத்தர சன்மத்திலும் பாபவானாகின்றான் என்பதாம். ஈண்டு, 'ஹெஹாஸ்த' என்னுஞ் சம்போதனத்தால் ஸ்ரீ பகவான் இவ்வர்த்தத்தைக் குறிப்பித்தருளினர். தூய்மையானகுலத்திற் பிறந்தவனதலின் நீ மிகுந்த பவித்திரன்; ஆதலின் நீ கூறிப்போந்த தெய்வீகசம்பத்துவடிவ தருமங்களைச் சம்பாதித்தற்குரியோன் என்பதாம். (3)

(அ-கை.) ஆண்டுப்பூர்வம் மூன்று சுலோகங்களால் கொள்ளத்தக்க வடிவமாய் தெய்வீகசம்பத்தை அருளிச்செய்தனர். இப்போது ஸ்ரீ பகவான் தள்ளத்தக்க வடிவமாய் ஆசுரசம்பத்தை ஒரு சுலோகத்தாலருளிச்செய்கின்றார்.

சு-ம். ஓம்ஹொ ஓவொ-ழ2தீஸாநஸ்ஹ கொ்ராயஃ வாஸ்ஷ்யஸெவ அ।
சுஜ்ஞாந ஸ்ஹாஹிஜாதஸ்ய வாய-ழ ஸம்வஓஸாஹ்ஸீழ ॥ (4)

ப-ம். 5 ஓம்ஹஃ 6 ஓவ-ழஃ 8 சுதீஸாநஃ 7 அ 9 கொ்ராயஃ 11 வாஸ்ஷ்யம் 14 ஸவ 10 அ 13 சுஜ்ஞாநம் 12 அ 4 சுஹிஜாதஸ்ய 1 வாய-ழ 3 ஸம்வஓம் 2 சூஹ்ஸீம்.

(அ-ம்.) ஹே பார்த்த! ரசோகுணதமோகுணமய அசுபவாசனையோடு சன்மமடைந்தவனுக்குத் தம்பம், தர்ப்பம், அதிமானம், குரோதம், கடுஞ்சொல், அஞ்ஞானம் என்னுந்தீதாடங்களே பிராப்தமாம். (4)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! தனது பெருந்தன்மை சித்தித்தற்பொருட்டு உலகத்தில் தன்னைத் தருமான்மாவாகப் பிரசித்தப்படுத்தல் தம்பமாம், தனம், வித்தை, குலம், பந்து, உருவம், கருமம் என்பன முதலிய நிமித்தங்களையுடைய சிரேஷ்ட புருஷனது அவமானத்திற்குக்காரணவடிவ கர்வ விசேடம் தர்ப்பமாம். தன்னிடத்தில் மிகுந்த பூஜ்யத்துவவடிவ அதிசயாரோபம் அதிமானமாம், எதனால் அசுரர்கள் பாபவத்தை யடைந்தார்களோ அது சதபதபிராமண சுருதியிலுங் கூறப்பட்டுளது:—'ஒவாஹ்ஹா ஸ்ரீராஹ்ஹா ஹயெவ்ராஜா வத்யாஃ வஹ்ஸ்யஸெத தொ ஸ்ரீராசுதீரா நெநைநவகஸ்ரி நயம் ஜ்ரஹ்யாஹெதி வெஷ்ஷவா வெஸ்ஷ்ஜ்ரஹ்ததஹ்ஸ்ரஹ்ஹெஷ்ஹெதீராநெநைநவ வராவ ஹ்ஸவ்ஹஸ்ரஹ்ராதீஃ நெஸ்ததவராஹவஸ்ய வெஸ்ததஹ்ஸ்வம்யஹதி ராதஃ' என்பதாம். தனக்கும் பிறர்க்கும் அநிட்டம் பண்ணுவதிற் பிரவிருத்திக்கின்ற அக்கினிவடிவ அந்தக்காரணவிருத்தி விசேடம் குரோதமாம். இதை ரோஷாபமெனவுங்கூறுவர். பிரத்தியட்சவன்சொற் கூறல் பாருஷ்யமாம். ஈண்டு, 'வாஸ்ஷ்ய ஸெவ அ' என்னும் வாக்கியத்திலுள்ள சகாரம் ஈண்டுக்கூறுத பாவவடிவ சபலம் முதலிய தோடங்களைக் கூட்டுவித்தற்பொருட்டாம். இக்காரியம் எனக்குச் செயற்பாலது இக்காரியம் எனக்குச் செயற்பாலதன்று என்னுங் கர்த்தவ்யாகர்த்தவ்ய விவேகமின்மை அஞ்ஞானமாம். ஈண்டு சுஜ்ஞாநது' என்னும் வாக்கியத்திலுள்ள சகாரம் ஈண்டுக்கூறுத அபாவவடிவ தோடங்களையும் சேர்த்துக்கொள்ளுவித்தற்பொருட்டாம். ஆண்டு, அத்தன்மைத் தம்பமுதலியவைகள் எத்தன்மைய புருடனுக்கெய்துவனவாம் என்றருச்சுனனுக் கறியும் வேட்கையுண்டாக ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'சூஸ்ரீம் ஸம் வஓம் சுஹிஜாதஸ்ய ஓதி' அருச்சுன! இத்தேகாரம்ப காலத்தில் முந்திய பாவகருமத்தால் வெளிப்பட்டதும் ஆசுரபுருஷனது இச்சாவிஷயமுமாகிய ரசதமோகுணமய அசுபவாசனைக் கூட்டங்களைத் தனதுள்ளத்திற் பிராதுர்ப்பூதமாகப் பார்த்து சென்மமெடுத்த புருஷன் எவனுக்குப் பின்னர்த்தீமையுண்டாமோ அத்தன்

மைய நிந்தித புருஷனுக்கு இடம்பமுதல் அஞ்ஞானமீறுகிய தோடங்களனைத் துமே பிராப்தமாம். கூறிப்போந்த பயமின்மை முதலிய குணங்கள் அவனுக்கொரு போதும் பிராப்தமாகாதனவாம். ஈண்டு, ஹே பார்த்த என்னுஞ் சம்போதனத் தால் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனுக்கு இவ்வர்த்தத்தைக் குறிப்பித்தருளினர். சுத் தகுலத்திலுண்டாகிய பிருதைமாதாவின் புத்திரனதலின், நீ இந்த இடம்பமுத லிய ஆசுரசம்பத்துக்குரியனல்லாய் என்பதாம். ஈண்டு, மூல சுலோகத்தில் 'சுதி ஊதஸ்ய' என்னுமிடத்து 'சுஹிதஸ்ய' என்னும் பாடம் பலபுத்தகங்களிலிருக் கின்றது. அங்ஙனமாயினும் ஸ்ரீமத் பாடியக்காரரும் பாடியவியாக்கியானக்கருத் தராகிய ஸ்ரீ ஆனந்தகிரிசுவாமிகளும் ஸ்ரீ மதுசூதன சுவாமிகளும் 'சுதிஊதஸ்ய' என்னும் பாடத்தை அங்கீகரித்தே வியாக்கியானம் பண்ணியிருக்கின்றார்களாத லின், ஈண்டும் 'சுதிஊதஸ்ய' என்னும் பாடமே எழுதப்பட்டது என்க. (4)

(அ-கை.) ஆண்டுப் பூர்வம் நான்கு சுலோகங்களால் தெய்வீகம் ஆசுரம் என்னும் இருவகைச் சம்பத்துக்களையுமருளிச்செய்தனர். இப்போது ஸ்ரீ பக வான் அதிகாரிகட்கு அவைகளில் பிரவிருத்தி நிவிருத்தியுண்டாதற்பொருட்டு இருவகைச் சம்பத்துக்களுக்கும் வெவ்வேறு பலத்தை அருளிச்செய்கின்றார்.

சு-ம். தெய்வீ ஸம்பத்விமொக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா।
மா ஸுச꞉ஸம்பதம் தைவீ மபிஜாதோஸி பாண்டவ ॥ (5)

ப-ம். 1 தெய்வீஸம்பத் 2 விமொக்ஷாய 4 நிபந்தாய 3 ஸுரீ 5 மதா 11 மா 12 ஸுச꞉ 8 ஸம்பதம் 7 தைவீம் 9 அபிஜாதோ 10 அஸி 6 பாண்டவ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! தெய்வீகசம்பத்து மோக்ஷத்தின் பொருட்டாம் ஆசுரிசம்பத்து பந்தத்தின்பொருட்டாம் என அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஹே பாண்டவ! நீ தெய்வீகசம்பத்தைத் தேடிக்கொண்டு தோற்றியவனதலின் சோக மடையாதே. (5)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! பிராமணர் முதலிய வருணங்களிலும் பிரமசரிய முதலிய ஆசிரமங்களிலும் எவ்வெவ் வருணாசிரமங்களைக்குறித்து வேத பகவானால் பலேச்சையின்றிய சாத்துவிகக்கிரியை விதிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வக்கிரியை அவ்வவ்வருணாசிரமங்களின் தெய்வீகசம்பத்தெனப்படுகிறது. அது சத்துவ சுத்தி பகவத்பக்தி ஞானயோகவியவஸ்திதி என்பது பரியந்தஞ் சித்தித்த இவ்வதிகா ரிக்கு சம்சாரத்தினின்று மோட்சமடைதற் பொருட்டேயாம்; அதாவது அந்தத் தெய்வீக சம்பத்து இவ்வதிகாரிக்குக் கைவல்ய மோட்சத்தையே தருமாதலின் தனது நன்மையைக்கருதிய புருடனால் அந்தத் தெய்வீக சம்பத்தேகொள்ளற் பாலதாம். அந்தவருணாசிரமங்களுக்குள் எவ்வெவ் வருணாசிரமங்களைக்குறித்து வேதபகவானால் பலேச்சை பூர்வகமாகவும் அகங்கார பூர்வகமாகவும் எந்தெந்த ராசஸதாமதக்கிரியைகள் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவ்வந்நிஷித்தக் கிரியைகள் அவ்வவ் வருணாசிரமங்களுக்கு ஆசுரசம்பத்தெனப்படுகின்றன. இதற் குள்ளேயே ராகத்வேஷப்பிரகிருதி அடங்கியதாம். அவ்வாசுரிசம்பத்தோ நியமமாய்ச் சம்சாரவழிவ பந்தத்தின் பொருட்டேயெனச் சாத்திரங்கட்கும் அதை யுணர்ந்த வர்கட்குஞ் சம்மதமாம்; அதாவது சர்வ சாத்திர சாத்திரஞ்ஞர்களால் அவ்வா சுரசம்பத்து அடிக்கடி பிறப்பிறப்பு வழிவ சம்சாரபந்தத்திற்கே காரணமென்று கூறப்படுகின்றது. ஆதலின் நன்மையடையக்கருதிய அதிகாரியால் அது அவசிய மாய்த்தள்ளற்பாலதேயாம். ஆண்டு நான் தெய்விகசம்பத்துடையதே அல்லது ஆசுரசம்பத்துடையதே என்று ஐயமுற்ற அர்ச்சுனனுக்குத் தைரியத்தைக் கொடுத்தருளுகின்றார். 'மாஸுச꞉ ஸம்பத' அர்ச்சுன! நான் அசுர சம்பத்துடை

யவன் என்னுமையத்தால் சோகமடையாதே. எதனாலெனின் நீயும் இத்தே காரம்ப காலத்தில் பூர்வ புண்ணியகருமத்தால் வெளிப்பட்ட சாத்துவிக சுபவாசனையை நினதுள்ளத்தில் பிராதுர்ப்பூதமாகப்பார்த்தே இச்சன்ம மெடுத்தவனுதலின்; அதாவது இச்சன்மத்திற்கு முன்னரும் நீ சுபத்தையே சம்பாதித்தனை பின்னும் உனக்குச் சுபமேயுண்டாகும். இதனால் உன்னிடத்து ஆசுரசம்பத்தின் ஐயத்தாற் சோகமுறல் தகுதியன்று என்பதாம். ஈண்டு, ஹே பாண்டவ என்னுஞ் சம்போதனத்தால் ஸ்ரீ பகவான் இவ்வர்த்தத்தைத் குறிப்பித்தருளினர்: பாண்டு ராஜாவின் வேறு புத்திரரிடத்தும் அத்தெய்வீக சம்பத்து மிக விளக்கமாய்க் காணப்படுமேல் பரமேசுராகிய எமது அனன்யபக்தனாகிய உன்னிடத்தில் தெய்வீக சம்பத்து உள்ளதென்பதிற் கூறற்பாலதென்ன என்பதாம். (5)

(அ-கை.) ஹே பகவன்! ராக்ஷசப்பிரகிருதிக்கு ஆசுரசம்பத்தில் அந்தர்ப்பாவமாகுக; என்னை? சாத்திர நிடேதித்த கிரியாபிமுகத்தன்மை அவ்விரண்டிலுஞ் சமமாதலின் ஓரிடத்தில் அவ்விரண்டையும் வெவ்வேறுப்க்கூறியிருக்கின்றனர். அதுவும் விடயபோகத்தின் பிரதானத்தாலும் சிவஹிம்சையின் பிரதானத்தாலும் சம்பவமாதல் கூடும். ஆனால் இத்தெய்வீக சம்பத்து ஆசுரசம்பத்துக்களின் வேறாய் மூன்றுவது மாநுடப்பிரகிருதியோ பின்னமாம்; என்னை? சுருதியில் அம்மாநுடப்பிரகிருதி பின்னமென்றே கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. த்³வௌ⁴ பூ⁴தஸர்கௌ³ லோகே தை³வ ஆஸுர ஏவ ச ।
விதை³வோ விஸ்தரஶ: ப்ரோக்த ஆஸுரம் பார்த² மே ஶ்ருணு ॥

(போ-ள்.) பிரஜாபதியினின்றுமுண்டாகிய தேவ மநுட அசுரர் என்னு மூவரும் அந்தப்பிரஜாபதியாகிய பிதாவின் சமீபத்தில் பிரமச்சரியத்தைச் செய்தார்கள் என்க. ஆதலின் அந்த மூன்றுவது மாநுடப்பிரகிருதியும் ஆசுரசம்பத்தைப்போலத் தள்ளத்தக்கதிற் கூறப்பட்டதோ அல்லது தெய்வீகசம்பத்தைப்போல கொள்ளத்தக்கதிற் கூறப்பட்டதோ என்னுமாச்சுனன் சங்கையுண்டாக ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். (6)

சு-ம். த்³வௌ பூ⁴தஸர்கௌ³ லோகே தை³வ ஆஸுர ஏவ ச ।
தை³வோ விஸ்தரஶ: ப்ரோக்த ஆஸுரம் பார்த² மே ஶ்ருணு ॥

ப-ம். 4 த்³வௌ 6 பூ⁴தஸர்கௌ³ 3 லோகே 2 தை³வ 7 ஆஸுர 9 ஏவ 8 ச 10 தை³வ: 11 விஸ்தரஶ: 12 ப்ரோக்த: 13 ஆஸுர: 1 பார்த² 14 மே 15 ஶ்ருணு.

(அ-ம்.) ஹே பார்த்த! இவ்வுலகத்தில் பூதசிருட்டி இருவகையேயாம். ஒன்றே தேவசிருட்டி மற்றொன்றே ஆசுர சிருட்டியாம். அவற்றுள் தேவசிருட்டியையே உனக்கு முன்னர் நாம் விரிவாய்க்கூறினேம். இப்போது இரண்டாவதாகிய ஆசுரசிருட்டியை எம்மிடத்தினின்றும் கேட்டி. (6)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இவ்வுலகத்தில் பூதசிருட்டி இருவகையேயாம்; அதாவது இருவகையே மநுடசிருட்டி. அது யாதென்றறியும் வேட்கையுண்டாக அருளிச்செய்கின்றார் ஸ்ரீ பகவான். 'தை³வ ஸுவிஸ்தரஶ:' தேவசிருட்டி அசுரசிருட்டி என்பனவாம். இதற்கயலாய் மூன்றுவதாய யாதொரு ராக்ஷஸசிருட்டியேனும் மநுடசிருட்டியேயனுமின்றும். ஆண்டு, எம்மநுடன், எப்போது சாத்திரசன்ய சம்ஸ்காரத்தின் பிரபலத்தன்மையால் சுபாவசித்தமான ராகத்துவேஷங்களைத் திரஸ்கரித்துக் கேவலம் தருமபராயணராகின்றனரோ அம்மநுடன் அக்

காலத்தில் தேவனெனப்படுகின்றன். எவன் எப்போது சுபாவசித்த ராகத்து வேடங்களின் பிரபலத்தன்மையால் சாஸ்திரசுன்ய சமஸ்காரத்தைத் திரஸ்கரித் துக் கேவலம் அதருமபராயணனே யாகின்றானே அம்மநுடன் அக்காலத்தில் அசுரனெனப்படுகின்றன். இவ்வாற்றால் இருவகைத்தான மநுடசிருட்டியே சித்த மாகின்றது தருமாதருமங்கட்கு வேறுப் மூன்றுவது வரம்பொன்றின்மையின்; மற்றேர் உலகவேதங்களில் தருமாதருமங்களெனும் வரம்பே பிரசித்தமாம். ஆண்டு இருவகைப் பூதசிருட்டி சுருதியிலுங்கூறப்பட்டுளது. (6)

ஆ-சு. ஓயாஹவ்யாஜாவத்யா தெவாஸ்சாஸுராஸ்ச தத:।
தா நீயஹோ னவ தெவாஜ்யாயஸா சஸுராஃ॥

(போ-ள்.) பிரஜாபதியினின்று முண்டானது இருவகைப் பூதசிருட்டியே. ஒன்றே தேவதையாம்; மற்றொன்றே அசுரராம்: அவற்றுள் அசுரரினின்று தேவதை சிறியதாம் தேவதையினின்று அசுரர் பெரியர் என்க. அன்றியும் தமம் தானம் தயை என்பவைகளை விதிக்கப்பட்ட 'தயாஃ வ்யாஜாவத்யாஃ' என்பது முத லிய வாக்கியங்களிலோ தமம், தானம், தயை என்பவைகளின்றிய மநுடனே அசு ரத்தன்மையுடையனாய் யாதானுமொரு தருமசமானத்தால் தேவனெனவும் மநுட னெனவும் அசுரனெனவும் படுகின்றன். ஆதலின் அவ்வாக்கியத்தால் மூன்றுவது பூதசிருட்டி பெறப்படவில்லை. ஆண்டுப் பிரசங்கத்தில் பிரஜாபதியானவர் ஓர்-த-என்னுமிவ்வக்காத்தால் தமமின்றிய மநுடர்கட்கோ இந்தியநிக்கிரகவடிவ தமத் தையுபதேசித்தருளினர். தானமின்றிய மநுடர்கட்கோ தானத்தை யுபதேசித் தருளினர். தயையின்றிய மநுடர்கட்கோ தயையை உபதேசித்தருளினர். இவ் வாறே ஓர் மநுஷ்யத்தன்மைச் சாதியையுடைய மநுடர்களைக்குறித்தே பிரஜாபதி யானவர் அதிகார வேறுபாட்டால் தமம் தானம் தயை என்னுமவைகளை உபதேசித் தனர். அவ்வாக்கியத்தில் ஒன்றற்கொன்று விஜாதீயமான தேவர் அசுரர் மநுட ரென்பவர்களைச் சொல்லக்கருதியதன்று. எதனால் சாத்திரோபதேசத்திற்கு மநுட ரெருவனே அதிகாரியாவனே தேவாசுரர்களல்லர்களோ அதனாலிப்பொருள் பெறப்பட்டது:—ராக்ஷஸ மாநுடப் பிரகிருதிகள் ஆசுரசம்பத்தின்கண்ணே அடங் கியனவைகளாம்; ஆசுரசம்பத்தினின்று அவ்விரண்டும் பின்னங்களன்று. ஆதலின், தேவசிருட்டி அசுரசிருட்டி இருவகையே பூதசிருட்டி என முன்னர்க்கூறியது பொருத்தமுடையதேயாம். அவ்விருவகைச் சிருட்டிகளிலும் முதலாவதாகிய தேவபூத சிருட்டியோ எம்மால் உனக்கு முன்னர்க்கூறப்பட்டது. ஆண்டு, இரண் டாவது அத்தியாயத்திலோ இடப்பிரக்ருன் லட்சணத்திலும், பன்னிரண்டாவது அத்தியாயத்திலோ பகவத்பக்தன் லக்ஷணத்திலும், பதின்மூன்றுவது அத்தி யாயத்திலோ ஞானலக்ஷணத்திலும், பதினான்காவது அத்தியாயத்திலோ குண தீத புருடலக்ஷணத்திலும், இப்பதினாறுவது அத்தியாயத்திலோ 'அஹயம்லக்ஷ ஸ்ம லோகே', என்பது முதலிய வாக்கியங்களாலும் மிக விரிவாய்க்கூறப்பட்டது என்பதாம். இப்போது இரண்டாவதாகிய ஆசுரபூத சிருட்டியை விரிவாய்க்கூறு கிறேம் கேட்டி; அதாவது அதைத் தியாகஞ்செய்தற்பொருட்டு முன்னர் அதை நிச்சயம்பண்ணுதி; என்னை? எந்த அநிட்டவஸ்துவின் ஞானம் வலிதிலுண்டா கின்றதோ அவ்வநிட்ட வஸ்துவே தள்ளத்தக்கது; அப்பொருளின்வடிவ வுணர்ச் சியின்றி அப்பொருளைத் தியாகம்பண்ணல் அமையாது என்பதாம். ஆண்டு, தேவ பார்த்த என்னுஞ் சம்போதனத்தால் ஸ்ரீ பகவான் அர்ச்சுனனிடத்து தமது சம் பந்தித்தன்மையைக் கூறியருளினர். அதனால் அர்ச்சுனவிடயக வுபேட்சை யின்மை குறிப்பித்தருளப்பட்டது; அதாவது யாம் ஒருபோதும் உன்னை யுபேட் சியம் என்பதாம். (6)

(அ-கை.) இப்போது ஸ்ரீ பகவான்! விடத்தக்க ஆசுரசம்பத்தைப் பிராணிகளின் விசேடவடிவமாய் அருளிச்செய்கின்றார். 'தாநஹம் த்விஷதஃ க்ரூரான்' என்னுஞ் சுலோகத்திற்கு முந்தியுள்ள பன்னிரண்டு சுலோகங்களால்.

சு-ம். ப்ரவ்ருத்திஞ்ச நிவ்ருத்திஞ்ச ஜநா ந விது³ராஸுராஃ ।
ந ஶௌசம் நாபி சாசாரோ ந ஸத்யம் தேஷு வித்³யதே ॥ (7)

ப-ம். 3 ப்ரவ்ருத்திம் அ 5 நிவ்ருத்திம் 4 அ 2 ஜநாஃ 6 ந 7 விது³ஃ 1 ஸுராஸுராஃ 10 ந 9 ஶௌசம் 15 ந 14 சாபி 12 அ 13 ஸுராஸுராஃ 17 ந 16 ஸத்யம் 8 தேஷு 11 வித்³யதே.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அசுரசுபாவமுடைய மநுடர்கள் தருமாதருமங்களையுணராதார்கள்; இதனாலே அவர்களிடத்துச் சௌசம் ஆசாரம் சத்தியம் என்பவைகளும் இல்லாதனவாம். (7)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! இடம்பம் தற்பமுதலிய அசுரசுபாவமுடைய மநுடர்கள் பிரவிருத்தியையும் அதற்கு விடயமான தருமத்தையுமுணராதார்கள். ஈண்டு 'ப்ரவ்ருத்திஞ்ச' என்னும் வாக்கியத்திலுள்ள சகாரத்தா (உம்மைபா)ல் அந்தத் தருமத்தைப் பிரதிபாதிக்கும் விதிவாக்கியத்தையுங் கொள்ளவேண்டும்; அதாவது தருமத்தைப் பிரதிபாதிக்கும் விதிவாக்கியத்தையும் அவர்களுணராதார்கள் என்பதாம். அங்ஙனமே அவர்கள் நிவிருத்தியையுமுணராதார்கள்; அதாவது நிவிருத்திக்கு விடயபூதமான தருமத்தையுமுணராதார்கள் என்பதாம். ஈண்டு, 'நிவ்ருத்திஞ்ச' என்னும் வாக்கியத்திலுள்ள சகாரத்தால் அவ்வதருமத்தைப் பிரதிபாதிக்கும் நிடேத வாக்கியத்தையுங் கொள்ளவேண்டும்; அதாவது அதருமத்தைப் பிரதிபாதிக்கும் நிடேதவாக்கியத்தையும் அவர்கள் உணராதார்கள் என்பதாம். இதனாலே அவர்களிடத்து இருவகைச் சௌசங்களும் இல்லாதனவாம். அவற்றுள் மண்ணீர் முதலியவைகொண்டு தேகத்தைத் தூய்மைபண்ணல் பாஹ்ய சௌசமாம். மைத்ரி கருணை முதலியவைகளால் இராகத்துவேட முதலியவைகளின்றிய தன்மை ஆந்தர சௌசமாம். அன்றியும் மநுமுதலிய உத்தம புருடர்களால் தருமசாத்திரத்திற் கூறப்பட்ட ஒழுக்கமும் அவர்களிடத்திராது. இன்சொல் இதச்சொல் உண்மைச்சொல் அவர்களிடத்தில் இராது என்பதாம். அத்தன்மைய சௌசம் ஆசாரம் உண்மை என்பவைகளின்றிய மாயாவியாகிய அசுர மநுடன் இவ்வுலகத்திலும் பிரசித்தனே என்பதாம். (7)

(அ-கை.) ஹே பகவன்! பிரவிருத்தி அப்பிரவிருத்திகட்கு விடயமாகிய தருமாதருமங்களைப் பிரதிபாதிக்கும் வேதவடிவப் பிரமாணம் இருக்கின்றதே அது பிராந்தி பிரமாத முதலிய சர்வ தோடங்களுமின்றியதும் நேரே பரமேசுரனது ஆணைவடிவினதும் உலகங்களனைத்திலும்பிரசித்தமானதுமாம். அன்றியும் அதைத் தழுவிய மிருதி புராணம் இதிகாசம் என்பன முதலியவைகளும் தருமாதருமங்களைப் பிரதிபாதிப்பவைகளா யிருக்கின்றனவே அத்தன்மைய பிரமாணபூத வேதம் ஸ்மிருதி புராணம் இதிகாசம் முதலியவைகள் இருந்தும் தருமாதருமங்களின் அஞ்ஞானமும் அவற்றின் பிரமாணத்தின் அஞ்ஞானமும் எக்காரணத்தாலாம்? அவனுக்குத் தருமாதருமங்களின் ஞானமும் அதைப்போதிக்கும் பிரமாணத்தின் ஞானமுந்தோன்றவே வேதவடிவ ஆக்ஞையைக் கடக்கப்பட்டவர்களைச் சிட்சிக்கும் பரமேசுரருமிருக்கவே வேதங்கூறிய பொருளே அநுட்டியாது சௌசம் ஆசாரங்களு மிலதாந்தன்மை அவர்கட்கு எக்காரணத்தாலுண்டாம்? எதனால் துஷ்டஜனங்களைச் சிட்சிக்கப்பட்ட பரமேசுரரும் வேதத்திலும் உலகத்திலும் பிரசித்தரே யன்றோ என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். சுவஸ்தயுவ்ரதிஷ்டே ஜெ ஜமதூஹுர்ய நீஷ்டுரம் ।
சுவர்வுர்வ ஸ்ம்ஹ்ருதம் க்ஷத்ரயுகுகாஉஹெதாகுழ ॥ (8)

ப-ம். 3 சுவஸ்தயம் 4 சுவ்ரதிஷ்டம் 1 தெ 2 ஜமகு 8 கூஹுர்ய 5 சுநீஷ்டுரம் 6 சுவர்வுர்வ ஸ்ம்ஹ்ருதம் 10 க்ஷம் 9 சுதயுகு 7 காஉஹெதாகம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அவ்வாசுரர்கள் இவ்வுலகத்தை அசத்தியம் அப்பிரதிஷ்டம் அநீசுரம் அபரஸ்பரசம்பூதம் காமகாரணம் எனக்கூறுகின்றார்கள். இவ்வுலகத்திற்கு வேறு யாதொருகாரணமுமில்லை. (8)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அவ்வாசுரர்கள் இவ்வுலகத்தை அசத்தியமெனக் கூறுகின்றார்கள். ஆண்டுக்காட்சி முதலிய அளவைகளால் கெடாத தாத்பரிய விடயத்தையுடைய உண்மைப்பொருளை யுணர்த்தும் வேதவடிவப் பிரமாணம் அதைத்தழுவிய மிருதி புராணம் இதிகாசம் முதலியவைகள் சத்தியமாம் அத்தன்மைய சத்தியமின்றியது அசத்தியமாம். அத்தன்மைய அசத்துவடிவமென இவ்வுலகத்தைக் கூறுகின்றார்கள். இருக்குமுதலிய வேதங்கள் மநுஸ்மிருதி முதலிய மிருதிகள் பாகவத முதலிய பதினெண் புராணங்கள் மஹா பாரதமுதலிய இதிகாசங்கள் காட்சியளவையாற் சித்திக்கின்றவைகள். அத்தன்மைய வேதமுதலியவைகளை நிடேதித்தல் சம்பவியாதாயினும் அவ்வாசுர புருஷர்கள் வேத முதலிய பிரமாணங்களை அங்கீகரித்திலர். ஆதலின் பிரமாணவடிவ விசேடமின்மையின் அத்தப்பிரமாணத்தன்மை விசிஷ்ட வேதமுதலியவைகளின் அபாவங்கூறப்பட்டது. அசத்தியமானதால் இவ்வுலகத்தை அவர்கள் அப்பிரதிஷ்டமெனக் கூறுகின்றார்கள். ஆண்டுத் தருமாதருமவடிவப் பிரதிட்டை விவஸ்தைக்குக் காரணமாகவுடையதாகாதது அப்பிரதிஷ்டமாம். அதாவது அவர்கள் தருமாதருமங்களை இவ்வுலக விவஸ்தைக்குக் காரணங்களெனக் கொண்டிலர் என்பதாம். அவர்கள் இவ்வுலகத்தை அநீசுரம் எனக்கூறுகின்றார்கள். ஆண்டுச் சுபாசுபகருமங்களின் சுகதுக்கவடிவ பலனைக்கொடுப்பதில் ஈசுரனெனும் நியந்தாவை உடையதாகாதது அநீசுரம். இவ்வுலகம் அத்தன்மையதெனக் கூறுகின்றார்கள். கருத்திதுவாம்.— வலியுடைய பாபவடிவப் பிரதிபந்தக வசத்தால் அவர்கள் வேதமிருதி புராண இதிகாசங்களைப் பிரமாணரூபமாய்க் கொண்டிலர். இதனாலே அவர்கள் அவைகள் போதித்த தருமாதருமங்களையும் ஈசுரனையுங் கொண்டிலர். இதனாலே அவர்கள் பயமின்றி நிஷித்த ஆசரணத்தையேசெய்கின்றார்கள். அந்த நிஷித்தாசரணத்தால் அவர்கள் தருமசீமாட்சவடிவப் புருடார்த்தங்களினின்று நழுவியவர்களேயாகின்றார்கள் என்பதாம். அற்றேல் ஹே பகவன்! கேவலம் தூலளவையாலறிதற்குரிய தருமாதருமங்களின் சகாயத்தால் இவ்வுலகனைத்திற்கும் காரணவடிவப் பிரகிருதியின் அதிட்டாதாவாகிய பரமேசுரனை இவ்வுலகத்திற்கு அவர்கள் அங்கீகரியார்களேல் காரணமின்றியதாகவே இவ்வுலகவடிவ காரியோத்பத்தி அவர்கள் மதத்தில் எவ்வாறும் என்னுமாச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார், 'சுவர்வுர்வ ஸ்ம்ஹ்ருதம் ஜகதம் ஆஹி' ஹே அர்ச்சுன! அவ்வாசுரர்கள் இவ்வுலகத்தை ஈசுரரிடத்தினின்று முண்டானதெனக் கொண்டிலர். மற்றே, அபரஸ்பர சம்பூதமெனக் கொண்டிருக்கின்றார்கள். அதாவது விடயவின்ப வேட்கைவடிவக் காமத்தால் பிரேரிக்கப்பட்ட புமான் பூவையர்களின் புணர்ச்சியினின்றே இவ்வுலகமுண்டானது. ஆதலின் இவ்வுலகம் காமத்தைக்காரணமாகவுடையது; அதாவது இவ்வுலகத்திற்குக் காமமேகாரணம் அதனின்வேறுயொரு காரணமுமின்று. அற்றேல் இவ்வுலகோற்பத்தியில் தருமாதருமங்களையுங் காரணமெனக்கொள்ளல்வேண்டும், என்னை, ஒருகால் அவைகளைக் காரணமெனக்கொள்ளாவிலையேல் உலகத்தில் சிலர்கள்

துக்கிகள்; சிலர்கள் சுகிகள்; சிலர்கள் மூடர்கள்; சிலர்கள் பண்டிதர்கள் என்னும் வியவத்தை அமையாது; அங்ஙனங்கொள்ளிலோ அமையும் என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'கிதுஅஸ் ஊதி' அவர்கள் தருமாதருமவடிவ அதிர்ஷ்டத்தை இவ்வுலகத்திற்குக் காரணமெனக் கொண்டிலர்; என்னை? அவ்வதிருஷ்டத்தைக்கொள்ளினும் ஈற்றில் சுபாவத்தின்கண்ணே முடிவுறும்; அச்சுபாவத்தாலே இவ்வுலகத்தில் விசித்திரத்தன்மைகள் சம்பவித்தல் கூடும். அவ்விசித்திரத்தின்பொருட்டு அவ்வதிருஷ்ட கற்பனை எற்றிற்கு? சாத்திரத்திலும் திருஷ்டஞ் சம்பவிக்குமிடத்து அதிருஷ்டகற்பனை அநியாயமாதலின் என்னு நியமமுங் கூறப்பட்டிருக்கிறது. அதாவது காரியோத்பத்தியில் திருஷ்ட காரணஞ் சம்பவிக்குமிடத்து அதிருஷ்டகாரணத்தைக் கற்பித்தல் பொருத்தமுடையதன்று என்பதாம். இதனாலிப்பொருள்பெறப்பட்டது.—காமமே சர்வப் பிராணிகட்குங் காரணம்; அதனின் வேறுக தருமாதருமவடிவ அதிருஷ்டம் ஈசுரன் முதலிய யாதொரு காரணமுமின்று. இவ்வாறு அவ்வாசுரர்கள் இவ்வுலகத்திற்குக் கேவலம் காமமே காரணமெனக் கூறுகின்றார்கள். கூறிப்போந்த இத்திருஷ்டி தேகாண்மவாதியாகிய உலகாயதர்கட்குக் கூறியதாம் என்க. (8)

(அ-கை.) ஹே பகவன்! கூறிப்போந்த உலகாயதர்களின் திருஷ்டியும் சாத்திரதிருஷ்டிபோல இஷ்டரூபமேயாம் என்று மர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அத்திருஷ்டியினின்று முமுட்சுக்களை நீக்குதற்பொருட்டு அதில் அநிஷ்டரூபத்தன்மையை அருளிச்செய்கின்றார்.

சு-ம். வதாம உரவ்டிஸவஷ்டஹ்ய் கஷ்டாதாகொஸ்டுவொ ஜயஃ।
வ்ரஹவஜ்ஜ்ரயுகஸ்டாணஃ க்ஷயாய ஜகதொஸஹிதாஃ॥ (!)

ப-ம். 1 வதாம 2 உரவ்டிம 3 ஸவஷ்டஹ்ய் 4 கஷ்டாதாகஃ 5 ஸ்டுவொ ஜயஃ 10 வ்ரஹவஜ்ஜ்ர 6 உயுகஸ்டாணஃ 9 க்ஷயாய 8 ஜகதஃ 7 ஸஹிதாஃ

(அ-ம்.) ஹே அர்ச்சுன! கூறிப்போந்த திருஷ்டியை ஆசிரயித்து நஷ்டாத்மாக்களும் நிற்றறிவாளிகளுமாகிய உக்கிரகருமமுடைய அந்தச் சத்துருபுருஷர்கள் சர்வப்பிராணிகளையு நாசஞ்செய்தற்பொருட்டு வியாக்கிர சர்ப்பமுதலிய வடிவங்களாக உத்பவிக்கின்றார்கள். (9)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! கூறிப்போந்த இந்த லோகாயதர்களின் திருஷ்டியை ஆசிரயித்து அவ்வாசுரர்கள் நஷ்டாத்மாவாகின்றார்கள். ஆண்டுக்காமக் குரோத லோபமோகம் என்பன முதலிய வடிவ ரசோதமோ தோஷங்களால் நஷ்டமானதனும் மறைக்கப்பட்ட ஆத்மாவெனும் விவேக புத்தியை யுடையவர்கள் நஷ்டாத்மாக்கள்; அதாவது அவர்கள் பரலோகசாதனத்தினின்றும் பிரஷ்டமானவர்கள் என்பதாம். மற்று மெத்தன்மையர்களெனின் அற்பபுத்திகள். ஆண்டு, மிகத்துச்சமான மாலை சந்தனம் மாது என்பன முதலிய விடயபோகங்கள் அற்பமாம். அதிற் புத்தியுடையர்கள் அற்பபுத்திகள்; அல்லது மலம் மாம்சம் உதிரம் அத்தி மச்சை என்பன முதலிய நிந்திதப் பொருள்களின் சமூதாய வடிவ இவ்வுடல் அற்பமாம். அதில் காணையும் புத்தியுடையர்கள் அற்பபுத்திகள்; அதாவது காணப்படும் விடய சுகமாத்திரத்தையுத்தேசித்துப் பிரவிருத்திக்க புத்தியையுடையவர்கள் அற்பபுத்திகள். மற்று மெத்தன்மையரெனின் அவர்கள் உக்கிரகருமர்கள். ஆண்டு உக்கிரமெனும் மிகக்கோரமான கருமத்தை யுடையவர்கள் உக்கிரகருமர்கள்: அதாவது உடலோம்பலாகிய பயனையும் மிகுந்த சிவக்கொலை

யையுமுடைய சாஸ்திரநிர்ணேதத்த கருமங்களேயே செய்பவர்கள் என்பதாம். மற்றுமெத்தன்மையர்களினின் அதிகர்கள்: அதாவது அபகாரஞ்செய்வதின்றியே சர்வப்பிராணிமாத்திரத்திற்குஞ் சத்துருக்கள். இவ்வாறு கூறிப்போந்த உலகாயதர்களின் திருஷ்டியை ஆசையித்து கஷ்டான்மாக்களும் அற்பபுத்திகளும் உக்கிரகருமிகளும் சத்துருக்களுமாகிய அவ்வாசுரர்கள் சர்வப்பிராணிமாத்திரத்தையும் காசஞ்செய்வான் வியாக்கிரசர்ப்பமுதலிய வடிவமாய் உத்பவிக்கின்றார்கள். ஆதலின் பூர்வகர்மாதித்திற்கூறிய உலகாயதர்களின் திருஷ்டி அத்தியந்த அதோகதிக்கே காரணமாம். ஆதலின் மோட்சவேட்கையடையவனுல் எல்லாவாற்றானும் அத்திருஷ்டிகள்ளத்தக்கதன்றாம் என்க. (9)

(அ-கை.) இவ்வாறு வியாக்கிரசர்ப்பமுதலிய தாமத யோனிகளில் வெகுகாலபரியந்தம் சுழன்று அவர்கள் பாதாலுமொருகருமவசத்தால் மநுடயோனியை அடையினும் தமது மோட்சபாயத்திலே பிரவிருத்தியார்கள்; மற்றே, அமோட்சபாயத்திலே பிரவிருத்திப்பார்கள் என்றவர்த்தத்தை ஸ்ரீபகவான் இப்போது அருளிச்செய்கின்றார்.

சு-ம். காமோபபி கதி தூஷ்ஷுரம் தமஸோ கதிதாஸ்தி தாந் ।
மொஹாதூ ஸ்ரீக்ஷ்வாமநுஷாநு பவதுரெஷபாஸ்ரிவ தாந் ॥ (10)

ப-ம். 2 காம 3 ரூபபி கதி 1 தூஷ்ஷுரம் 4 தமஸோ கதிதாஸ்தி தாந் 6 மொஹாத் 8 ஸ்ரீக்ஷ்வா 7 மநுஷாநு பவதுரெஷ 5 ஸுபபாஸ்ரிவ தாந்.

(அ-ம்.) ஈறற அர்ச்சுன! நிறைவிலாக்காமத்தை ஆசையித்து இடம்ப மான மதங்களோடுகூடி அகவினிரதுமுடையவ அவ்வாசுரபுருஷர்கள் விவேகமின்மையால் அசுபநிச்சயத்தைக்கொண்டு ஈவுகுத்திற்குமுரணிய கருமங்களிற் பிரவிர்த்திக்கின்றார்கள். (10)

(வி-ம்.) ஈறற அர்ச்சுன! தூறுகோடி வருடபரியந்தம் விடயங்களே யநுபவித்தும் பூரணமாகாத அவ்வத்திருஷ்டவிடயங்களின் காமவடிவ நிறைவுபடாக்காமத்தை ஆசையித்து அவ்வாசுரர்கள் இடம்பம் மானம் மதம் என்பவைகளோடு கூடியவர்களாகின்றார்கள். ஆண்டு, உள்ளிற்றருமநிட்டையில்லாதிருந்தும் வெளியில் உலகர்களுக்குமுன் தனது தருமான்மத்தன்மையை வெளிப்படுத்தல் இடம்பமாம். உண்மையில் பூர்ணத்தன்மைக்குத் தகுதியாகாதிருந்தும் உலகர்களுக்குமுன் தனது பூர்ணத்தன்மையை வெளிப்படுத்தல் மானமாம். உண்மையில் மிக்கதாந்தன்மையின்றேறலும் தன்னிடத்தில் மிக்கதாந்தன்மையை ஆரோபித்தல் மதமாம். சுகமதரும உத்தபபுருடர்களின் அவமானத்திற்குக் காரணமோ அத்தன்மைய இடம்பம் மானம் மதம் என்பவைகளோடுகூடிய அவ்வாசுரர்கள் கேவலம் அவிவேகத்தால் அசுத்துர்நிரகணத்தைக்கொண்டு, அதாவது இம்மந்திரத்தால் இத்தேவனையை ஆராதித்து நான் இப்பலனை அநுபவிப்பேன்; அங்ஙனமே இம்மந்திரத்தால் இத்தேவனையை ஆராதித்து நான் பெருநிதியைச்சம்பாதிப்பேன்; அங்ஙனமே இம்மந்திரத்தால் இத்தேவனையை ஆராதித்து நான் இப்மாற்றுணக்கொல்லுவேன் என்பனவாய அபாக்கிரகவடிவ அசுப நிண்ணயத்தைக் கேவலம் அவிவேகவடிவ மோகத்தால் கரகித்து அவ்வாசுரர்கள் அசுசிவிரதர்களாகின்றார்கள். ஆண்டு, மயான முதலிய தேசத்தையும் உச்சிஷ்டத்தன்மை முதலிய அவத்தையையும் மதுமாம்சபட்சணம் என்பன முதலிய அசௌசத்தையும் அபேட்சித்துச் சித்தியாகப்பட்ட வாமதந்திரங்கூறிய விரதமுடையவர்கள் அசுசிவிரதர்கள். அத்தன்

மைத்தான ஆசுரர்கள் கேவலம் திருஷ்டபலத்தைத்தரும் அற்ப தேவதைகளின் ஆராதனவடிவ யாதானுமொரு வேதமூரணை கருமத்திலே பிரவிருத்திக்கின்றார் கள். அத்தன்மைத்தான ஆசுரபுருஷர்கள் மரித்து அசுசியான நரகத்தில் விழு கின்றார்கள். இவ்வாறு இச்சுலோகத்தை 'வதஞ்ஜ நரகெஉஸ-ஆள' என்னும் மேற்கூறப்படும் வாக்கியத்தோடு அந்வயஞ்செய்க என்பதாம். (10)

(அ-கை.) இப்போது ஸ்ரீ பகவான் கூறிப்போந்த இவ்வாசுர புருடர்கட்கே மீண்டும் ஆசுரசம்பத்தை அதிக விசேடணங்களாலருளிச்செய்கின்றார்.

சு-ம். ஐஞ்ஞாஉவரிஞெயோ அ ஏ ஞயாஞ்ஞாஉ-வொபபி ஞதா§ ।
காஞொவஹொ ஸவஸுஉ ஸ ஞதாவஜி ஞி ஞிபபி ஞதா§ ॥ (11)

ப-ம். 4 ஐஞ்ஞா ம 3 ஸவரிஞெயோ ம 1 அ 2 ஏ ஞயாஞ்ஞா ம 5 உவொபபி ஞதா§ 6 காஞொ வஹொ ஸவஸுஉ ா§ 7 ஸ ஞதாவஜி§ 8 உஜி 9 ஞிபபி ஞதா§.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! சாங்காறுமூள்ள அளவிலாச்சிந்தனைய யாசரயித் தவர்கள்; சப்தமுதலிய விடயபோகங்களேயே பரமபுருடார்த்தமெனக் கருதியவர் கள்; இவ்விடய சன்ய திருஷ்ட வின்பமேயின்பம் என நிச்சயமுடையவர்கள். (11)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அடையாப் பொருளினடைவுவடிவ யோகம் அடை ந்த பொருளைக்காத்தல்வடிவ க்ஷேமம் என்னுந்தன்மை யோகக்ஷேமங்களின் உபாய சிந்தனவடிவ சிந்தையாம். அது எத்தன்மையதாமெனின் அபரிமேயமாம்: அதா வது கணக்கிலாப்பொருளை விடயந்செய்வதானதால் அச்சிந்தையும் கணக்கற்ற தாம். அது இவ்வளவு கணக்குடையதென நிச்சயித்தற்கேலாதது; மற்றுமெத்தன் மையதினின் அச்சிந்தை பிரளயாந்தமானது. ஈண்டு, மரணம் பிரளயமாம், அந்த மரணவடிவப் பிரளயத்தை அந்தமாகவுடைய பிரளயாந்தமாம்; அதாவது சிவ தசைவரையிலுமிருப்பதாம். அத்தன்மைய அபரிமேய பிரளயாந்தமாகிய சிந்தை யையுடையவர்கள் அவ்வாசுரர்கள். ஈண்டு, 'ஐஞ்ஞாஉவரிஞெயொஞ' என்னும் வாக்கியத்திலுள்ள சகாரமானது கூறிப்போந்த அசுசிவிரதத்தைச் சேர்த்துக் கொள்ளுவித்தற்பொருட்டாம்; அதாவது அவர்கள் கேவலம் அசுசிவிரதமுடை யர்களாய் வேதவிருத்த கருமங்களிற் பிரவிருத்திப்பவர்களன்று: மற்றே, இவ்விதமாகிய சிந்தையை ஆசரயித்தவர்களாகியும் வேதவிருத்த கருமங்களிற் பிரவிருத்திக்கின்றார்கள் என்பதாம். ஹே அர்ச்சுன! அவ்வாசுரர்கள் எப்போ தும் பலவகையான சிந்தையுடையவர்களாயிருந்தும் ஒருபோதும் பரலோகசிந்தை யுடையவர்களலர்; மற்றே காமோபபோக பரமர்களே யாகின்றார்கள். ஆண்டுக் கிருபணர்களின் காமத்திற்கு விஷயமாகிய சப்தமுதலிய விடயங்கள் காமமாம். அவற்றின் உபபோகத்தை பரமவெனும் புருஷார்த்தமாகவும் தரும முதலியவை களை அபுருடார்த்தமாகவு மூடையவர்கள் காமோபபோக பரமர்களாவர்கள்; அதாவது அவர்கள் இவ்வுலகத்தின் மாலைசந்தனவனிதை முதலிய விடயபோகமே பரமபுருடார்த்தமாகவும் தருமமோட்சங்கள் அபுருடார்த்தமாகவும் அங்கீகரித் துள்ளவர்கள். அற்றேல் ஹே பகவன்! அவர்கள் இவ்வுலக விடயசன்ய சுகத்தை யிச்சிக்கின்றதுபோலப் பரலோக வுத்தமசுகத்தை வேட்டிடாதெனினே என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'வஸ்தாவஜி ஞிபபி ஞதா§' ஆண்டு, இவ்வுலகத்தில் சப்தமுதலிய விடயபோகசன்ய திருஷ்ட சுகமே சுகம்; இதனின் வேறாய இத்தேகம் விழுந்தபின்னர் அநுபவிக்கத்தக்க சுகம் யாதொன்றுமில்லை; என்னே, பரலோகத்திற்சென்று அச்சுகத்தை யநுபவிக் கும் போக்தா இத்தூலவுடற்கயலாய் இல்லை; மற்றே, இத்தூலவுடலே போக்தான்

மாவாம்; என்னும் நிச்சயமுடையவர்கள் பரலோக சுகத்தை இச்சியார்கள். இவர்க ளுடைய மதம் பிருகற்பதியால் கூறப்பட்டது.

ஆ-சு. ரெ.அகதயிவபிவஷ§ காயஃ§ பொஸஷ§ காஃஸெவெகஃ§ பொஸஷாய-ழ§ !

(பொ-ள்.) சைதன்யமுடைய தூலவாக்கை ஆன்மாவாம். இவ்வுலக மாலை முதலிய விடயபோகமே பருமடருடார்த்தம் என்பதாம். பிருகற்பதி வைதிகரா யினும் யகமர்களை நிராகரணஞ்செய்தற்கு இத்தன்மையய சூத்திரங்களைச் செய் தனர். இதனாலே வைதிகர்கள் யஜ்ஞத்தைப் பிரமாணமெனக் கொள்வதில்லை. (11)

(அ-கை.) மேலும்,

சு-ம். சூபபாலாபபபபலைதவ-ழ§ காஃகெ்ரயவாயணாஃ§ !
ஸ்ஸஹலைஞ காஃஸெஹாமாய-ழ§ உகதயாயெகாய-ழ§ஸ்ஸஹஅயாகு ॥ (12)

ப-ம். 1 சூபபாலாபபபபலைதஃ§ 2 வாஜாஃ§ 3 காஃகெ்ரயவாயணாஃ§ 7 ஸ்ஸஹலைஞ
4 காஃஸெஹாமாய-ழ§ 5 உகதயாயெக 6 காய-ழ§ஸ்ஸஹஅயாகு.

(அ-ம்.) மேற அச்சுன! ஆசைவடிவ பாசங்களினின் சமூகத்தால் கட்டுப் பட்டுக் காமக்குரோதங்களை ஆசரயித்தவர்களாகிய அவ்வாசுரர்கள் விடயபோகத் தின்பொருட்டே அநியாயமாய்த் திரளிய முதலிய பதார்த்தங்களை இச்சிக்கின்றார் கள். (12)

(வி-ம்.) மேற அச்சுன! எப்பொருளை யடையமுடியாதற் செய்யொணு மேற அப்பொருளை யடையவேண்டுதல் ஆசையாம்; அல்லது எப்பொருட் பிராப்தி யுடையம் கண்முதலானவற்றாலில்லையோ அப்பொருளை அடையவேண்டுதல் ஆசை யாம். அவ்வாசைதான் உலகிலுள்ள கயிறுபோல இப்புருடனைக் கட்டுவதற்குக்காரண மானதால் பாசவடிவமாம். அத்தன்மையய ஆசைவடிவ அநேக பாசங்களால் அதா வது, அநேக கூட்டங்களால் அவர்கள் பந்திக்கப்பட்டவர்கள்; உலகிலுள்ள கயிறு முதலிய பாசங்களால் கட்டப்பட்ட திருடன் முதலிய துட்டபுரு டர்கள் அந்தக் கயிறு முதலிய பாசத்தால் தமது வீடு முதலிய ஸ்தானத்தினின்று வெளிப்பட்டு யாண்டோடா ஆண்டுச் சுழலப்படுகின்றார்கள். அதுபோல ஆசைவடிவ பாசத்தாற்கட்டப்பட்ட ஆசுரர்கள் அப்பாசத்தால் மோட்சவடிவ தமது ஸ்தான த்தினின்றும் வெளிப்பட்டு யாண்டோடா ஆண்டுச் சுழலப்படுகின்றார்கள். மற்று மெத் தன்னையர்களினின், காமக்குரோதபராயணர்கள். ஆனதுக் காமக்குரோதங்கள் பர அயனமெனும் ஆசையால் எவர்கட்டோ அவர்கள் காமக்குரோதபராயணர்கள்; அதாவது பிறர் மனைப்புணர்ச்சிவேட்கையோடும் பிறர்க்குத் தீமைசெய்யவேண்டு மென்னு மிச்சையோடும் பொருந்தியவர்கள். எப்போதும் அத்தன்மைத்தான ஆசாபாசமுடையோர்கள் கேவலம் மாலை சந்தனம் மாது முதலிய விடய போகத்தின் பொருட்டே தனிய முதலிய பதார்த்தங்களைச் சேர்ப்பதற்கிச்சிக்கின்றார்கள். வேறே யாதொரு தருமத்தின்பொருட்டுமன்றும்; மற்றோர், கேவலம் அநியாய மாகவே தனத்தைச் சேர்ப்பதற் கிச்சிக்கின்றார்கள். ஆனுஞ்சலகபடத்தாலேனும் பலாத்காரத்தாலேனும் பிறர் பொருளைக்கைக்கொளல் அநியாயமாம்; அதாவது, சாத்திரமுமெனியாற்றனக்கே தடல் அநியாயமாம். ஈண்டு, 'அயு-ழஸ்ஸஅயாகு' என் னும் பருவசனத்தா (பன்மையா)ல் பூரீ பகவான் அவர்களிடத்து உலோபத்தைக் காண்பித்தருளினார்; எனனை? அவர்கட்கு தனங்கிடைக்கினும் தனதிருஷ்ணை நீங் குவதில்லை; மற்றோர் சாதனதிருஷ்ணை தனங்தனம் மிக்கதாகின்றது. தன முதலிய விடயங்கள் கிடைப்பினும் தனந்தனம் அவ்விடய திருஷ்ணை மிகுதலையே சாத் திரத்திலும் உலகத்திலும் உலோபமென்கின்றார்கள் என்பதாம். (12)

(அ-கை.) ஹே பகவன்! அவ்வாசுரபுருஷர்களின் சித்தத்தில் இவ்விததனதிருஷ்ணையிருக்கின்றதென்பது எவ்வாறுணரப்படுகின்றது என்னுமர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அவர்களின் இத்தன்மைய தாவியதிருஷ்ணையை அவர்களுடைய மனோராஜ்யத்தைக்கூறி வருணித்தருளுகின்றார்.

சு-ம். ஆஜஹ்ய மயா லப்ஜ மிமம் ப்ராப்ஸ்யே மநோரதம் ।
ஆதாஸ்ய தீதமபி மே பவிஷ்யதி புநர்தநம் ॥ (13)

ப-ம். 1 ஆஜம் 2 கதஹ்ய 3 மயா 4 லப்ஜம் 5 இமம் 7 ப்ராப்ஸ்யே 6 மநோரதம் 8 இதம் 10 கதஹ்ய 11 இதம் 13 கதி 9 மே 15 பவிஷ்யதி 14 புநர் 12 தநம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! இத்தாவியம் இக்காலத்தில் என்னலடையப்பட்டது; இம்மனோரதத்தை நான் விரைவிலே அடைவேன்; இத்தாவியம் எனது வீட்டில் முன்னமே யிருக்கின்றது; இத்தாவியம் மேலே வருஷத்தில் மீண்டும் மிருதியாகும். (13)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! அவ்வாசுரபுருஷர்கள் நிரந்தரம் தாவியதிருஷ்ணையோடு கூடியவர்கள். இதனாலே அவர்கள் இவ்வாறுமனோராஜ்யஞ்செய்கின்றார்கள். இத்தாவியத்தை நான் இவ்வுபாயத்தாலடைந்தேன்; இத்தாவியத்தினின்றும் வேறேயும் மனோதிருப்தியைத்தரும் தாவியத்தை நான் இப்போது விரைவிலே அடைவேன்; இத்தாவியம் எனது மனையில் முன்னமே சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; இத்தாவியமும், இவ்வுபாயத்தால் மேலவருடத்தில் மற்றும் மிருதியாயுண்டாகும் என தாவிய திருஷ்ணையோடுகூடிய அவர்கள் அசுரதாகத்தில் வீழ்வார்கள். இவ்வாறு இச்சுலோகத்தை 'வதாவி தாரகைஷ்யாமி' என மேற்கூறும் வாக்கியத்தோடு அந்வயிக்க என்பதாம்.
(13)

(அ-கை.) இவ்வாறு அவ்வாசுர புருஷர்களின் திருஷ்ணைவடிவ உலோபத்தைவர்ணித்து இப்போது அவர்களுடைய கருத்தைக்கூறி அவர்களுடைய குரோதத்தையும் வர்ணித்தருளுகின்றார்.

சு-ம். அஸௌ மயா ஹதஸ்தாவ ஹநிஷ்யே சாபராநபி ।
ஈஸ்வரோஹமஹம் போகீ ஸித்தோஹம் பலவாந் ஸுகீ ॥ (14)

ப-ம். 2 அஸௌ 1 மயா 4 ஹதஹ 3 தாவ 8 ஹநிஷ்யே 5 அ 6 அபராந் 7 அபி 10 ஈஸ்வராஹ 9 அஹம் 11 அஹம் 12 போகீ 14 ஸித்தஹ 13 அஹம் 15 பலவாந் 16 ஸுகீ.

(அ-ம்.) நான் இம்மாற்றானைக்கொன்றேன்; அங்ஙனமே வேறு மாற்றானையுங் கொல்வேன்; நானே ஈசுரன்; நானே போகி; நானே சித்தன்; நானே வலியன்; நானே சுகி. (14)

(வி-ம்.) அத்தியந்தஞ் ஜயிக்கொணாத இத்தேவதத்தனையும் எனது மாற்றானை நான் கொன்றேன். ஆதலின் இப்போது நான் ஆயாசமின்றியே வேறேயும் சத்துருக்களனைவர்களையும் அதம்பண்ணுவேன். என்னிடத்தினின்றும் யாதொரு சத்துருவும் சீவியான். ஈண்டு, 'ஹதஸ்தாவ' என்னும் வாக்கியத்திலுள்ள சகாரத்தால் இக்கருத்துக் குறிப்பித்தருளப்பட்டது.—அச்சத்துருக்களை நான் சேவலம் கொல்கின்றேனலன்; மற்றே, அவர்களுடைய தாவிய முத

லிய பொருள்களையும் நான் பறித்துக்கொள்வேன் என்பதாம். அற்றேல் உனக் கொப்புடையருஞ் உன்னின் மிக்காருமாகிய சத்துருக்கள் இருக்கின்றார்களாதலின் எல்லாச் சத்துருக்களையும் நாசம்பண்ணுவும் வலிமை உன்னிடத்திதக்காணாத்தால் என்னும் அர்க்கனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'ஸ்ரவ ரொஹம் ஜஹி' நான் ஈசுவரன் கேவல மநுடனன்று. மநுடரையினன்றே எனக் கொப்புடையர் என்னின் மிக்கார் யாரேனுமொருவரிருப்பர். அப்ப ஆற்றலுடைய இத்தினர்கள் என்னைக் கொல்வார்கொலோ எல்லாவாற்றலும் எனக்கொப்புளார் ஒருவருமிலர் என்னும் இக்குறத்தால் அவர்கள் தமது ஈசுவரத்தன்மையை வர்ணிக் கின்றார்கள். 'அஹம்ஸ்மராமீ ஜஹி' எதனால் நானே போகியாகின்றேன்; அதாவது விடயபோகங்களின் சர்வ சாதனங்களோடு கூடியவன் நானே; அங்ஙனமே நானே சித்தன்; அதாவது உடன்பிறந்தோர் புத்திரர் மேலேக்காரர் முதலிய சுகா யத்தோடு கூடியவன்; சுயமாயும் நான் பலவான் அத்தியந்தம் ஆற்றலுடை யோன்; நானே சுகி எல்லாவாற்றலும் போகமிலாதேதான்; இதனாலே நான் ஈசு ரனே என்பதாம். (14)

(அ-க.) தனத்தாலேனும் குலத்தாலேனும் யாரேனுமொருவர் உனக் கொப்புளாரானவர் என்னுஞ் சங்கைக்கு அவர்கள் கூறுகின்றார்கள்.

சு-ம். ஆடியோஸ்மி ஜவாகஸ்மி கொகேயாஸ்மி வஜ்ரபோ யோ।
யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய இத்யஜ்ஞாநவிமோஹிதாஃ॥ (15)

ப-ம். 1 ஆடியஃ 2 ஸ்மிஜவாந 3 ஸ்மி 7 கஃ 6 அகயஃ 8 ஸ்மி 5 வஜ்ரபோ 4 யோ
9 யக்ஷ்யே 10 தாஸ்யாமி 11 மோதிஷ்ய 12 இதி 13 அஜ்ஞாநவிமோஹிதாஃ.

(அ-ம்.) நான் தனம் குலம் இவைகளையுடையவன். ஆதலின் எனக்கொப்பு ளோர் மேறையாவர்? நான் யாகதானங்களைச்செய்வேன் அதினின்று இன்ப மடைவேன். இவ்வாறு அவர்கள் அஜ்ஞானத்தால் மோகிதர்களாவார்கள். (15)

(வி-ம்.) இவ்வுலகத்தில் குலமுடையவனும் தனமுடையவனும் நானே. இதனால் இவ்வுலகத்தில் தனகுலங்களில் என்னையொத்தோர் மேறையாவருளர்? மற்றோரு, ஒருவருமிலர். அற்றேல் தனகுலங்களால் உன்னையொத்தோரில்லாதொழிக. அங் ஙனமாயினும் யாகதானங்களால் உன்னையொத்தோரிருப்பரேயெனின் அவர்கள் கூறுகின்றார்கள். 'யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய இதி' நான் எனது பிரதிஷ்டையின்பொரு ட்டு இத்தன்மையை பெரும் யாகத்தைச் செய்வேன் அந்த யாகத்தினாலும் நான் மேறீற யாகஞ்செய்யு மினவரையும் தாழ்த்துவேன். ஆதலின் யாகத்தாலும் எனை யொத்தோரிலர் என்னைப் புகழும் கடன்படன் கடனமாது முதலியோர்களுக்கு நான் பலதானியங்களைக்கொடுப்பேன். அதனால் நான் கடன் முதலியோர்களோடு போரின்பத்தையடைவேன். ஆதலின் தானத்தாலும் என்னையொத்தோரிலர். இவ் வாறு அவர்கள் அஜ்ஞானத்தால் மோகிக்கப்படுவார்கள்; அதா வது அந்த அஜ்ஞானத்தால் அவர்கள் பிராந்தியின் பரம்பரை வடிவ பலவகையான மோகத்தையடைகின்றார்கள் என்பதாம். (15)

சு-ம். அசிந்த்யரூபாகாரோ மோஹராத்ரிமவாப்நுதாஃ।
ப்ரவ்ருத்தாஃ காமபோகேஷு பதந்தி நரகேঽஶுசௌ॥ (16)

ப-ம். 1 அசிந்த்யரூபாகாராஃ 2 மோஹராத்ரிமவாப்நுதாஃ 4 ப்ரவ்ருத்தாஃ 3 காம
போகேஷு 7 பதந்தி 6 நரகே 5 அஶுசௌ.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! பலவகையான துஷ்டசங்கற்பங்களால் பிராந்தர்களாய் மோகவடிவசாலத்தால் மறைக்கப்பட்டவர்களாய் விடயபோகத்தில் மிகப் பற்றுடையர்களாய் அவர்கள் அசுசி நரகத்தில் விழுவார்கள். (16)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! கூறிப்போந்த பலவகைத் துஷ்டசங்கற்பங்களால் பலவகையான பிராந்தியையுடையவர்கள் அநேக சித்தவிப்ராந்தர்கள். அல்லது ஏக வஸ்துவைச் சிந்தனவிடயமாக்காதது அநேகமாம். அநேகமெனும் கூறிப்போந்த அநேக விடயங்களிற்பற்றுடைய சித்தத்தோர் அநேக சித்தர்கள். இக்காரியம் முதலிற் செயற்பாலதோ அல்லது இக்காரியம் முதலிற் செயற்பாலதன்றே என்னும் விசேடமாகப் பிராந்தியுடையவர்கள் விப்பிராந்தர்கள். அநேக சித்தர்களாய் விப்பிராந்தர்களானவர்கள் அநேக சித்தவிப்பிராந்தர்களாவர்கள். இப்போது அதன் பிராப்தியிற் காரணத்தை அருளிச்செய்கின்றார். 'ஸொஹ ஜாயஸ்வதாக் உதி' ஹே அர்ச்சுன! அவர்கள் மோகவடிவ சாலத்தான் மறைக்கப்பட்டவர்களாதலின் கூறிப்போந்த அநேக துஷ்டசங்கற்பங்களால் பலவகையான பிராந்தியையும் அடைகின்றார்கள். ஆண்டு, இப்பொருள் எனது இதசாதனம் இப்பொருள் எனது அஹிதசாதனம் என இதாஹித விவேகஆற்றலின்மை மோஹமாம். அதுவே ஆவரண வடிவத்தான் பந்தகாரணமானதால் உலகத்திலுள்ள வலிபோன்ற வலியாம். அதனல் அவர்கள் நன்கு மறைக்கப்பட்டவர்கள்; அதாவது, காற்புறத்தாஞ் சுற்றப்பட்டவர்கள். கருத்திதுவாம்.—உலகத்திலுள்ள நால்வடிவ வலியால் மீன்முதலிய பிராணிகள் பிறர்வயப்படுகின்றனபோல அம்மோகவடிவ வலியால் அவர்கள் பிறர்வயமாகின்றார்கள். இதனுனே அவர்கள் அநிட்டசாதனமாயிருந்தும் விடயபோகங்களில் மூழ்குகின்றார்கள்; அதாவது எல்லாவாற்றானும் அவ்விடயபோகத்தின் கண்ணே மிகப் பற்றுடையர்களாய் அதனைசத்தியால் ஒவ்வொரு கணத்திலும் பாபத்தைத்தேடி அசுசி நரகத்தில் வீழ்கின்றார்கள். அதாவது மலம் மூத்திரம் கபம் உதிரம் என்பன முதலிய மலின பதார்த்தங்களானிரம்பப்பட்ட வைதரணி முதலிய நரகத்தின்கண்ணே விழுகின்றார்கள் என்பதாம். (16)

(அ-கை.) ஹே பகவன்! அவ்வாசுர புருஷர்களுக்குள்ளும் சிலர்களுக்கு யாகமுதலிய கருமங்களிற் பிரவிருத்தி காணப்படுதலின் அவர்கள் நரகத்தில் விழுவர்களென்பது பொருந்தாது என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். ஆத்மஸம்஭ாவிதாஃ ஸ்தப்தா தநமாந மதாந்விதாஃ ।
ய-ம். யஜந்தே நாமயஜ்ஞைஸ்தே தம்பேநாவிதிபூர்வகம் ॥ (17)

ப-ம். 1 ஆத்மஸம்஭ாவிதாஃ 2 ஸ்தப்தாஃ 3 தநமாநமதாந்விதாஃ 8 யஜந்தே 5 நாமயஜ்ஞைஃ 4 தே 7 தம்பேந 6 அவிதிபூர்வகம்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! தன் பெருமிதம் வணங்காமை தனமானமதம் என்பவைகளோடுகூடிய அவ்வாசுரர்கள் பெயர்மாத்திர யஞ்ஞத்தால் விதிபூர்வகமின்றித தம்பத்தால் வேட்கின்றார்கள். (17)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! மற்றும் எத்தன்மையர்களெனின் அவ்வாசுர புருஷர்கள் தம் பெருமிதர்கள்; அதாவது நான் சர்வ குணங்களோடு கூடியவனதலின் மிகவுயர்ந்தோன் எனத் தம்மாற்றுமை பூஜ்பத்தன்மையை யடைந்தவர்கள். யாதோரு முத்தமர்களாலடைந்தவர்களல்லர் அல்லது தமது மனவிமக்களாலே பூஜ்பத்தன்மையை யடைந்தவர்கள்; பெரியோராலடைந்தவரல்லர். மற்றுமெத்தன்மையர்களெனின் வணங்காதவர்கள்; அதாவது நம்பாவமின்றியவர்கள்

அதிற் காரண மருளிச்செய்கின்றார். 'யகஉகஉஒஙிதாக ஊதி' ஆண்டுச் சுவர்ணம், பசு, அன்னம், மணை, பூமி, என்பன முதலியவைகள் தனமாம். அத் தனத்தைதீய காரணமாகவுடைய கன்னிடத்துப் பூஜ்யத்துவ வடிவ அதிசயாத்தியா சம்மானமாம். அம்மானத்தை நிமித்தமாகவுடைய தமக்கயலான குருமுதலிதீயார் களிடத்திலுள்ள அபூஜ்யத்துவாபிமானம் மதமாம். இவ்வாறு தனநிமித்த மானத் தோடும் மானநிமித்த மதத்தோடுங்கூடிய அவ்வாசார்கள் காமயக்ஞத்தால் வேட் பார்கள். ஆண்டு, காமமாத்திரத்தால் யக்ஞவடிவமாய் உண்மையில் யஞ்ஞ வடிவமாகாது காமயக்ஞமாம். அல்லது யாகஞ்செய்வோருக்குத் தீட்சைபண்ணப் பட்ட சோமயாஜீ என்பது முதலிய காமமாத்திரத்தையே சம்பாதிப்பது வே றொன்றையுஞ் சம்பாதியாதது காமயக்ஞமாம். அத்தன்மைய யக்ஞத்தையும் அவர்கள் விதியோடு செய்பார்கள். மற்றோர், விதியின்றிய அதாவது வேதத்தால் விதிக்கப்பட்ட தீரவியம் தேவதை மந்திரம் தட்சணை என்பனமுதலிய யஞ்ஞாங் கங்களின் பூரணத்தோடு அவர்கள் அத்தயக்ஞத்தைச்செய்பார்கள்; அத்தன்மைய யக்ஞத்தையும் அவர்கள் சிரத்தையோடு செய்பார்கள். மற்றோர், தம்பத்தால் உள் ளே தருமநிட்டையில்லாதிருந்தும் வெளியில் உலகர்களுக்குமுன் தனது தரு மாண்மத்தன்மையை வெளிப்படுத்தல் தம்பமாம். அத்தன்மைய தம்பத்தால் அவர்கள் யக்ஞஞ்செய்வார்கள். இதனாலே அவர்கள் அந்த யக்ஞபலத்தை யடை யார்கள் என்பதாம். (17)

(அ-கை) ஆண்டு, 'யகெஙீ ஓவஸ்ஓஇ' என்னும் வாக்கியத்தாற்கூறப்பட்ட தம்ப அகங்காரங்களை முக்கியமாகவுடைய சங்கற்பத்தாற் பிரவிருத்திக்க அவ்வா சார்கட்குப் பகரங்க சாதனவடிவ தருமங்களும் சித்தியாவெனின் விசாரம் வைராக் கியம் பகவத்பக்தி என்பன முதலிய அந்தரங்கசாதனம் அவர்கட் கெவ்வா றுண்டாம்? மற்றோர், அவர்கட்கொருகாலும் சித்தியா என்பதை ஸ்ரீ பகவான் இப்போது அருளிச்செய்கின்றார்.

சு-ம். சுஹமംகாரം ஙெழும் ஔபஃழம்காரம் கெரோயம்அ வொஂஙிரகாக் । 16-1
ளாஔதவாரடெஹைஷு பரீஷுஞோஃஹயவொஙியகாக் ॥ (18)

ப-ம். 1 சுஹமംகாரம்2 ஙெழும்3 ஔபஃழம்4 காரம்5 கெரோயம்அ 6 வொஂஙிரகாக் 8 ளாம் 7 ஔதவாரடெஹைஷு 9 பரீஷுஞோக் 10 சுஹயவொஙியகாக்.

(அ-ம்.) ஹே அர்ச்சுன! அகங்காரம், பலம், தர்ப்பம், காமம், குரோதம் என்பனவைகளை ஆசரயிக்கப்பட்டவர்களும் தமதுதேகம் பிறர்தேகங்களிலுள்ள பரமேசுவரனாகிய என்னைத் துவேஷிப்பவர்களும் ஆசூயையுடையவர்களுமாகிய அவ்வாசார்கள் நரகத்தின்கண்ணே யிடப்பார்கள். (18)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! ஈசனெனும் அபிமானவடிவ அகங்காரமோ சர் வப் பிராணிகளிடத்திலும் பொதுவாம். ஆதலின் அது ஈண்டகங்கார சப்தத் தாற் கொள்ளத்தக்கதன்று; மற்றோர் தன் மாட்டின்றிய குணங்களைத் தன்னிடத் தாரோபித்து அவ்வாரோபித குணங்களால் தன்னைப் பெரியவனென அபிமானித் தல் அகங்காரமாம். இவ்வாறே தேகத்திலுள்ள காரியஞ் செய்யுமாற்றல்வடிவ பலம் சர்வப் பிராணிகட்கும் பொதுவாமாதலின் அது ஈண்டு பல சப்தத்தாற்கொள்ள த்தக்கதன்று; மற்றோர் அன்யப்பிராணிகளை அமிழ்த்துதற்பொருட்டுத் தேகத்தி லுள்ள சாமர்த்தியவிசேடம் பலமாம். பிறரை மதியாமைவடிவமும் குரு வாசர் முத லியோர்களை உல்லங்கனஞ்செய்வதற்குக் காரணவடிவமுமாகிய சித்த தோடவிசே டம் தர்ப்பமாம். இவ்விடவஸ்துவிடயக அபிலாஷை காமமாம்; அவ்விடவஸ்துவிட யக துவேஷமும் குரோதமாம். ஈண்டு, 'கெரோயம்அ' என்னும் வசனத்திலுள்ள

சகாரத்தால் பிறர் குணங்களின் சகிக்காமைச்சுபாவடிவ மாத்சரியத்தையும் வேறு பெருந்தோடங்களையுங்கொள்ளவேண்டும். அத்தன்மைத்தான அகங்காரம் பலம், தர்ப்பம், காமம், குரோதம், மாத்சரியம் என்பன முதலிய பெருந்தோடங்களை அவர்கள் இடைவிடாது ஆசிரயிக்கின்றார்கள். இதனினை நரகத்திலேயே கிடக்கின்றார்கள். அற்றேல் ஹே பகவன்! இவ்வாறு பதிதர்களாகிய அவ்வாசுரர்கள் பரமேசுராகிய தங்களுடைய பக்தியிலை தூயர்களாக நரகத்திற்கிடவார்கள் என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு அவர்களிடத்துப் பகவத்பக்தி சம்பவியாமையை அருளிச்செய்கின்றார். 'ஊஆத வரஒஹஷ வரஷஷ' என. ஈண்டுத் தேக சப்தத்தை ஆன்மசப்தத்தினீற்றிலும் பரசப்தத்தினீற்றிலும் அந்நவயஞ்செய்வதால் 'ஊஆத ஒஹஷ வரஒஹஷ வரஷஷ' என்னும் வாக்கியஞ் சித்தமாகின்றது. ஆண்டு, 'ஞுத ஒஹஷ' என்னும் பதத்தால் அவ்வாசுரர்களின் தேகத்தைக்கொள்ளவேண்டும். 'வரஒஹஷ' என்னும் பதத்தால் அவர்களது புத்திரர் மனைவி முதலியோர்களின் தேகத்தைக்கொள்ளவேண்டும். ஆதலின் 'ஊஆதவரஒஹஷ வரஷஷ' என்னும் வாக்கியத்திற்கு இப்பொருள் சித்தமாகின்றது.—அவ்வாசுர புருஷர்களின் பிரேமைக்கு விடயமாகிய தமது தேகம் புத்திரன் முதலியோர்களின் சர்வ தேகங்களிலும் அவர்களின் புத்தி கரும முதலியவற்றிற்குச் சாட்சிவடிவமாகவுள்ளதும் நிரதிசயப் பிரீதிக்கு விடயமுமாகிய பரமான்மாவாகிய என்னை யே துவேஷிக்கின்றார்கள். ஆண்டு எனது ஆக்ஞாவடிவ சுருதிஸ்மிருதிகளிற் கூறிய அர்த்தாநுட்டான மின்மையின் அந்தச் சாத்திரவடிவ ஆக்ஞையை உல்லங்ஙனஞ் செய்தலை என்னைத் துவேஷித்தலாம். உலகிலும் அரசர் முதலிய பெரியோரது ஆணையைத்தாண்டுவோரை அவரது துவேஷியனெனக்கூறுகின்றனரன்றே? அத்தன்மைய பரமேசுரத் துவேஷிகளாகிய அவ்வாசுரர்களிடத்துப் பரமேசுர பக்தியுண்டாதல் மிகத்துர்லபமாம் என்க. அற்றேல் ஹே பகவன்! அத்தன்மைய ஆசுரர்களைத் தமது குருமுதலிய பெரியோர்கள் தண்டியாததென்னை என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'சுஹ்ருன்மயகாஃ உதி' ஹே அர்ச்சுன! வேதப் பிரதிபாதித மார்க்கத்திலுள்ள குருமுதலிய பெரியோர்களிடத்துள்ள கருணை முதலிய குணங்களில் அவர்கள் வஞ்சனை முதலிய தோடங்களையே ஆரோபிக்கின்றார்கள். அத்தன்மைய அசூயையுடைய அவர்கட்குக் குருமுதலிய முதியோர்களின் வாக்கியத்திற் சிரத்தையே யுண்டாகாது; ஆகலின் அக்குரு முதலியவர்களும் அவர்களைச் சிட்சியார்கள். இவ்வாறு பதிதங்க அந்தாங்க சாதனங்களின்றிய அவ்வாசுரர்கள் கேவலம் நரகத்தின்கண்ணே கிடப்பர்கள் என்பதாம். அல்லது 'ஊஆத வரஒஹஷ வரஷஷ' என்னும் வாக்கியத்திற்கு வேறிப்பொருள் பண்ணவேண்டும். ஆண்டு, 'ஞுத ஒஹஷ' என்னும் பதத்தால் அவ்வாசுர புருஷர்களின் தேகத்தைக் கொள்ளவேண்டும் 'வரஒஹஷ' என்னும் பதத்தால் பசு முதலியவைகளின் தேகங்களைக் கொள்ளவேண்டும். இதனால் இப்பொருள் பெறப்படுகின்றது. அத்தேகங்களினத்தினுள்ளும் சைதன்ய அம்சத்தாலிருக்கப்பட்ட பரமேசுரனெனிய என்னைத் துவேஷித்து அவர்கள் யாகஞ்செய்கின்றார்கள். ஆண்டுத் தம்ப பூர்வகஞ் செய்யப்பட்ட அந்த யக்ஞங்களில் அவர்கட்குச் சிரத்தையின்மை யின்சிரத்தையின்றிய யக்ஞங்கட்கு வேறே யாதொரு பலனுமில்லை; மற்றோ, தீக்ஷை முதலிய நியமங்களால் அவ்வாசுரர்களின் ஆன்மாவிற்குக் கேவலம் பயனின்றியே துன்பமுண்டாகின்றது. இவ்வாறு பசு முதலியவைகளையும் விதிபின்றிக் கொல்வதால் வேறு பலனுண்டாவதில்லை. மற்றோ, அதனல் கேவலம் சைதன்யத்துரோக மாத்திரமே யுண்டாகின்றது. இவ்வாற்றல் தமது தேகத்திலும் பசு முதலியவைகளின் தேகத்திலுமிருக்கப்பட்ட சைதன்யவடிவப் பரமேசுரனெனிய என்னைத் துவேஷ

ஷித்தே அவர்கள் யாசஞ்செய்கின்றார்கள் என்பதாம். அல்லது, 'ளாதவாஸெ ஹொஷ்ட வுஷ்ணை' என்னும் வாக்கியத்திற்கு மூன்றுவது இப்பொருள்செய்ய வேண்டும். ஈண்டு, 'ஞுதஞெஹொஷ்ட' என்னும் பதத்தால் பரமேசுரனது லீலா விக்கிரகவடிவ இராம கிருஷ்ணாதி நாமமுடைய தேகங்களைக் கொள்ளவேண்டும். 'வாஸெஹொஷ்ட' என்னும் பதத்தால் பிரகலாதன் விபீஷணன் என்பன முதலிய நாம முடைய பக்தர்களின் தேகத்தைக்கொள்ளவேண்டும். இதனாலிப்பொருள் சித்தமாகின்றது. பரமேசுரனுடைய என்னுடைய லீலா விக்கிரகவடிவ வாசுதேவன் முதலிய நாமங்களுடைய தேகங்களில் மறுபடத்துவ புத்திவடிவப் பிராந்தியால் அவ்வாசுரர்கள் என்னைத் துவேஷிக்கின்றார்கள். அங்ஙனமே பிரகலாதன் விபீஷணன் முதலிய பக்தர்களின் தேகங்களில் எப்போதும் ஆவிர்ப்பவித்திருக்கின்ற பரமேசுரனுடைய என்னை அவர்கள் துவேஷிக்கின்றார்கள். இது முன்னர் ஒன்பதாவது அத்தியாயத்தில்,

சுவஜாதனிலாம் ஸுபா ரூஷ்டீம் தநுராஸ்ரிதம் ।
பரம்பாவ மஜாநந்தோ மமாவ்யய மநுத்தமம் ॥
மொகாபபா மொவகரா ஜுணோ மொவ ஜூதாஸி மெதஹி ।
ராக்ஷஸீமாஸுரீம் சைவ ப்ரகுருதிம் மொஹி நீம் ஸ்ரிதாஸி ॥

என்னும் சுலோகங்களாற் கூறப்பட்டது. அங்ஙனமே 'சுவஜந்தும் வஜந்திலாவதாரம் உதயனை ளாஸைபூயஸி' என்னும் வாக்கியத்தாலுங் கூறப்பட்டிருக்கின்றது என்பதாம். இதனாலிப்பொருள்பெறப்பட்டது.—எந்தப் பரமேசுரபக்தியால் அதிகாரிகள் பாவனைபாகின்றார்களோ அப்பரமேசுரனிடத்திலே அவர்கட்குத் துவேடமாம்; அத்தன்மைய துவேஷி புருஷர்களிடத்துப் பரமேசுரனுடைய எனது பக்தியுண்டாதல் மிக வருமையாம்; ஆதலின் அவர்கள் எவ்வாற்றானும் பாவனைமாகார்கள் என்பதாம். (18)

(அனை-கு.) தேவ பகவன்! பரமேசுராகிய தங்களுடைய கிருபையால் அவ்வாசுரர்கட்குங் ஒருகால் கரையேறுதலுண்டாம் என்னு மார்க்கண்டன் சங்கைக்கு அவர்கள் ஒருபோதும் கரையேறார்கள் என உத்தாமருளிச்செய்கின்றார் பரமபகவான்.

சு-ம். தாதமம்ஷ்டிதகி க்ரூரான்ஸம்ஸாரெஷு நராதமான் । 16-16.
க்ஷிபாம்யஜஸ்ரமஷுபா ஆஸுரீஷ்வெவ யொநிஷு ॥ (19)

ப-ம். 6 தாந் 7 அஹம் 1 த்விஷதகி 2 க்ரூரான் 8 ஸம்ஸாரெஷு 3 நராதமான் 9 க்ஷிபாமி 4 அஜஸ்ரம் 5 அஷுபா ஆஸுரீஷு 10 ஞுஸ்ரீஷு 12 வை 11 யொநிஷு.

(அ-ம்.) தேவ அர்ச்சுன! துவேஷிகளும் குரூரர்களும் நராதமர்களும் இடையிடாது பாபகருமத்தைச் செய்பவர்களுமாகிய அவ்வாசுர புருஷர்களைப் பரமேசுரனுடைய நான் நரகத்திற்கேகும் மார்க்கத்திலே தள்ளுகின்றேன். பின்னர் அத்தியந்தங் கோரமான வியாக்ரசர்ப்ப முதலிய யோனிகளிலே தள்ளுகின்றேன். (19)

(வி-ம்.) தேவ அர்ச்சுன! சாஸ்திரப்பிரதிபாதித சன்மார்க்க விரோதிகளாகிய அவ்வாசுரர்கள் எத்தன்மையர்களெனின் பரமேசுரனுடைய என்னையும் சாதுக்களையும் எப்போதுந் துவேஷிக்கப்பட்டவர்கள், குரூரர்கள், அதாவது எப்போதும் சிலவனைதயிற் பிரியுடையவர்கள்; இதனாலே நராதமர்கள், அதாவது

அத்தியந்தம் நிந்திதர்கள்; அசுபர்கள், அதாவது எப்போதும் சாஸ்திரநிஷித்த அசுப கருமத்தையேசெய்பவர்கள். அத்தன்மைய அவ்வாசுரர்களைக் கரும பலனைக் கொடுக்கும் பரமேசுரனுகிய நான் நரகமார்க்கத்தின்கண்ணே தள்ளுகின்றேன். அவர்கள் தமது பாப கருமத்தால் அந்நரகத்தில் பலகாலபரியந்தம் பலவகைத் துன்பங்களை அநுபவித்து நரகத்தினின்றும் வருவர்களேனும் நான் அவர்களை மூந்திய கர்மவாசனையை யநுசரித்து வியாக்கிரசர்ப்பமுதலிய மிகக்கோரயோனிகளில் தள்ளுகின்றேன். அத்தன்மைய பரமேசுரத்துரோகிகளும் சாதுத்துரோகிகளுமாகிய ஆசுரர்களிடத்து எனக்குக் கிருபை ஒருபோதும் உண்டாகிறதில்லை. ஆண்டு, இத்தன்மைய பாபாத்மாவாகிய ஆசுரர்கள் கீழான யோனியையே அடைவார்கள் என்பது சுருதியிலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. சுயகுவ்யுயஸுணா கூஹ்யாஸொ ஹயதே
கவ்யாம் யொநிஷ்வ தெஸுரு।
ஸுயொநிம்வாஸுகூரயொநிம்வா ஆம்பாலுயொநிம்வா ॥

(போ-ள்.) சாஸ்திரநிஷித்த பாபகருமஞ் செய்வோன் விரைவிலே நீசயோனியை யடைகின்றான். ஒருகால் நாய்ச்சண்மத்தை யடைகின்றான். ஒருகால் பன்றிச்சண்மத்தை யடைகின்றான். ஒருகால் சண்டாள யோனியை யடைகின்றான். இது மூதற்கொண்டு வேறெயும் பலவகையான நீசயோனிகளையடைகின்றான் என்பதாம். இவ்வாறு சீவர்களது பூர்வ கர்மாநுசாரமாய்ப் பலத்தைக்கொடுக்கும் ஈசுரனிடத்து விஷமம் நிர்த்தயை என்னுங்தோடங்கள் பொருந்தா. இது ஸ்ரீ வியாசபகவானாலுங் கூறப்பட்டிருக்கிறது.

ஆ-சு. வெஷஜ்ய தெவ்ய-ஜணெ கவாவெஸ்தகவாதயாஹி உபப-யதி।

(போ-ள்.) இவ்வுலகத்தில் சிலர்கள் சுகிகள்; சிலர்கள் துக்கிகள்; சிலர்கள் தனிகர்கள்; சிலர்கள் தரித்திரர்கள்; சிலர்கள் பண்டிதர்கள்; சிலர்கள் மூடர்கள்; இவ்வாறு விஷம சகத்தை யுண்டுபண்ணப்பட்ட ஈசுரனிடத்து விஷமத்தன்மை நிர்த்தயைத்தன்மை என்னுங் தோடங்கள் அவசியமாய்ப்பிராப்தியாம் என்றுசங்கித்துக்கூறுகின்றார். பரமேசுரர் சீவர்களின் புண்ணியபாபகருமங்களையபேட்சித்து இந்த விஷம (மாறுபட்ட) உலகத்தைச் சிருஷ்டிக்கின்றார். அப்புண்ணிய பாபாநுசாரமாகவே சிலர்கள் துக்கிகளாகவும் சிலர்கள் சுகிகளாகவுமாகின்றார்கள். ஆதலின் பரமேசுரனிடத்து அத்தோடங்களின்றும் என்னும் அர்த்தத்தை 'சுயகுவ்யுயஸுணா' என்பது முதலிய சுருதிகள் கூறுகின்றன என்பதாம். அத்தன்மைய உலகனைத்திற்குங் காரணவடிவ அந்தரியாமியாகிய பரமேசுரன் அவ்வாசுரர்களைக் கேவலம் பாபகருமத்தைச் செய்விக்கின்றான்; புண்ணிய கருமத்தைச்செய்வித்திலன். என்னை? அவர்களிடத்துக் கேவலம் பாபகர்ம பீசமேயிருக்கின்றது: புண்ணிய கர்ம பீசம் இல்லை. பீஜத்தை அநுசரித்தே அங்குரோத்பத்தியாம். வேறு பீஜத்தால் வேறு அங்குரோத்பத்தியுண்டாகாது. நிம்பபீஜத்தினின்று நிம்பத்தின் அங்குரமேயுண்டாகின்றதேதயன்றி மாபீஜம் உண்டாகாதது போலவாம். அப்பரமேசுரன் பரமகிருபாலுவாயினும் அவ்வாசுரர்களின் பாபத்தை நாசஞ்செய்திலன்; என்னை? அந்தப் பாபகர்மத்தை நாசம்பண்ணப்பட்ட புண்ணிய கர்மம் அவர்களிடத்தின்மையின் பரமேசுரன் அவர்களுடைய பாபகர்மத்தைத் தொலைத்திலன்; அன்றியும் அவர்களிடத்துப் புண்ணியகர்மஞ் செய்வதற்குத் தகுதியின்மையின் அவன் அவர்களைப் புண்ணிய கருமத்தையுஞ் செய்விப்பதில்லை. எப்புண்ணிய கருமத்தால் அவர்களுடைய பாப நிவிருத்தியாமோ, என்னை? பரமேசுரன் காரியோத்பத்தியிற் சாமர்த்தியமுளனேனுஞ் எப்பொருளில் எக்காரியோத்பத்திக்கு யோக்கியதை

யளதோ அப்பொருளிலே அக்காரியத்தை யுண்டுபண்ணுகிறான்; தகுதியிலாப் பொருளில் அன்றும். கற்களில் சோதுமை அங்குரோற்பத்திக்கு யோக்கியதை இன்மையின் பரமேசுரன் அக்கற்களில் அவ்வங்குரோற்பத்தியை யுண்டுபண்ணுவ தில்லை; மற்றோரு, சோதுமை வித்தின்கண்ணே அச்சோதுமை அங்குரத்தை யுண்டுபண்ணுகின்றான். அதுபோலப் புண்ணிய கருமோற்பத்திக்கு யோக்கியதை யின்றிய அவ்வாசுரர்களிடத்து அவ்வீசுரனும் புண்ணியகருமத்தை யுண்டுபண் ணுவதில்லை. சிலவாதிகள் காரியத்தைச் செய்வதற்கும் செய்யாதிருத்தற்கும் வேறொருவனையாய்ச் செய்தற்கும் ஆற்றலுடையோன் ஈசுரனென்; அத்தன்மைய னதலின் பரமேசுரன் அவ்வாசுரர்களிடத்துப் புண்ணியகருமத்திற்கு யோக்கி யதையின்மேறனும் புண்ணிய கருமத்தின் யோக்கியதையை யுண்டுபண்ணுவதில் சமர்த்தன் எனக் கூறுகின்றார்கள். அஃதுண்மையே. என்னை? அப்பரமேசுரன் சத்தியசங்கற்பனதலின், ஒருகால் இவ்வாசுர புருஷர்களிடத்துப் புண்ணிய கருமத்தின் யோக்கியதை யுண்டாகுக எனச் சங்கற்பிப்பனேல் அவர்களிடத்தும் அதன் யோக்கியதை யுண்டாகுமிடும். ஆனாலோ இவ்வாறு சங்கற்பியான்; என்னை? பரமேசுரனுடைய ஆக்ஞாவடிவ சுருதிமிருதிகளை உல்லங்கனம் பண்ணப் பட்டவரும், பரமேசுரபக்தர்களின் துரோகிகளுமாகிய தூரான்மாக்களாகிய அவ் வாசுரர்களிடத்து அப்பரமேசுரனுக்குச் சந்தோஷமேயுண்டாகிறதில்லை. சந் தோடமின்மேறல் அவ்வனம் எவ்வாறு சங்கற்பிப்பன்; மற்றோரு, ஒருகாலுஞ் சங் கற்பியான். இது சுருதியிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. வைஷ்ணவா வை யஜ்ஞக்ரதவ ஆஸன்னஸுரா இதரே ।
வைஷ்ணவாவாவை யஜ்ஞக்ரதவ ஆஸன்னஸுரா இதரே ॥

(போ-ள்.) இப்பரமேசுரன் சந்தோடமுப் மேலாகிய சுவர்க்கலோகத்திற் குக் கொண்டுபோக இச்சித்தபுருடனுக்குப் புண்ணியகருமத்தைச் செய்விக்கிறான். இப்பரமேசுரன் சந்தோடமிலனைப் நரகமுதலிய கீழுலகத்திற்குக்கொண்டுபோக இச்சித்த புருடனுக்குப் பாபகருமத்தைச் செய்விக்கின்றான் என்பதாம். இதனை லிப்பொருள் பெறப்பட்டது.—பரமேசுரனுடைய பிரசன்னத்திற்குக் காரண மாகிய அவருடைய வேதவடிவ ஆஞ்ஞையைப் பாலிப்பவனிடத்து அவருக்குச் சந் தோஷமுண்டாகிறது அஃதிலானிடத்தில்லை. காரணமுளதாகவே காரியமுண்டா கிறது காரணமிலதாகவே காரியமுண்டாகின்றதில்லை யென்பது உலகத்திலும் பிர கிளக்கமாம். இதில் பரமேசுரனை விஷமத்தன்மை நிர்த்தயைத்தன்மை எவ்வா றடையும்? மற்றோரு, அடையாதாம் என்க. (19)

(அ-கை.) வேறு பகவன்! அத்தன்மைய ஆசுரர்கட்குஞ் முறையாய்ப் பல சன் மத்தினீற்றில் மோட்சமுண்டாம் என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஒருவோது மோக்ஷமுண்டாகாது என உத்தரமருளிச்செய்கின்றார்.

சு-ம். ஸுலுஸீம் யொநிஸாவத்ரா ஜுபாஜந்துநி ஜந்துநி ।
ஸாவ்ரஸைவைவ கௌந்தேய தைதா யாந்ந்யஸாம் மதிம் ॥ (20)

ப-ம். 2 ஸுலுஸீம் 3 யொநிம் 4 ஸுவத்ரா 7 ஜுபா 5 ஜந்துநி 6 ஜந்துநி 8 ஸாம்
9 ஸவ்ரஸை 10 வைவ 1 கௌந்தேய 11 தைதா 14 யாந்தி 12 ஸ்யஸாம் 13 மதிம்.

(அ-ம்.) வேறு கௌந்தேய! எப்போதாயினும் ஆசுரயோனியை யடைந்த வர்கள் சன்மசன்மங்களில் அவிவேகிகளாய் வேதவொறியையே அடையாது அதனினும் கீழானகதியையடைகின்றார்கள். (20)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! எப்போதாயினும் ஆசுரயோனியை யடைந்தவர்கள் சன்மசன்மங்களில் மூடர்களாய்த் தமோகுண மிகுதிப்பாட்டால் விவேகசூனியர்களாய் என்னையடையாது அதாவது நான் கூறியவேத நெறியையடையாது அதனினும் கீழானயோனியை யடைகின்றார்கள். ஈண்டு, 'ஸாஸ வைவ' என்னும் வாக்கியத்தினீற்றிலுள்ள ஏவகாரம் நிரியக்குத் தாவாயோனி முதலியவைகளில் வேதநெறிப்பிராப்தியின் அயோக்கியதையை அறிவுறுத்துகின்றது, அதாவது அந்தக் கீழானயோனிகளில் வேதநெறியடையும் யோக்கியதையே இன்றென்பதாம். இதனலிப்பொருள் பெறப்பட்டது. அத்தியந்தத் தமோகுண மிகுதிப்பாட்டால் அவ்வாசுரர்கள் வேதநெறியை யடைதற்குரித்திலர்களாய்ப் பூர்வ பூர்வ நிகிருஷ்டயோனியினின்று உத்தரோத்தரம் அத்தியந்தம் நிகிருஷ்டமாகிய அதமயோனியையடைவார்கள். வியாக்கிர யோனியினின்றும் சர்ப்பயோனி அதினின்றும் கீடபதங்க முதலிய யோனிகள். அதினின்றும் விருக்ஷயோனிகள் நிகிருஷ்டமாம். ஈண்டு, 'ஸாஸ வைவ' என்னும் வாக்கியத்திலுள்ள 'ஸாஸ' [என்னை] என்னும் பதத்தால் பரமேசுரவடிவ அர்த்தமே பிரதீதியாகின்றது. ஆயினும் பரமேசுரனைக் கொள்ளாது அவனால் உபதேசிக்கப்பட்ட வேதநெறியையே கொள்ளவேண்டும். என்னை? எவ்வஸ்துவில் எவ்வர்த்தம் எவ்விதத்தானும் பிராப்தியாமோ அவ்வஸ்துவின்கண்ணே அவ்வர்த்தம் நிஷேதமாகின்றது. எல்லாவகையானும் அப்பிராப்தமாகிய வர்த்தம் நிஷேதமாவதில்லை. அவ்வாசுர புருஷர்களிடத்துப் பரமேசுரப் பிராப்தியின் சங்கைமாத்திரமுண்டாவதில்லை. எந்தப் பரமேசுரப் பிராப்தியின் நிஷேதம் 'ஸவ்ராவஸ்' என்னும் பதத்தால் செய்யப்படுகின்றதோ அவ்வாசுரர்களிடத்து வேதமார்க்கப் பிராப்தியும் பொருந்தாதேனும் அதன் சங்கைமாத்திரம் ஒருகாலாதலும்கூடும். அவ்வேதமார்க்கப் பிராப்தியே 'ஸவ்ராவஸ்' என்னும் பதத்தால் நிஷேதிக்கப்படுகின்றது. ஆதலின் 'ஸாஸ' [என்னை] என்னும் பதத்திற்கு லட்சணைவிருத்தியால் பரமேசுரன் உபதேசித்த வேதமார்க்கத்தை கவர்தல் தகுதியாம். ஒருசையின்கண்ணே அதற்கு லட்சணைவிருத்தியால் பரமேசுரப் பிராப்திக்குச் சாதனவடிவ அதிகாரி புருஷர்களின் தேகம் கொள்ளப்பட்டது. ஆதலின் இச்சுலோகத்திற்கு இப்பிண்டப்பொருள் சித்தமாகின்றது:—எதனல் ஒரு முறையேனும் ஆசுரயோனியை யடைந்தவர்கட்கு அதினின்றும் உத்தரோத்தரம் நிகிருஷ்டதர நிகிருஷ்டதம யோனிகளே பிராப்தியாகின்றனவோ, அத்தியந்தத் தமோகுணத்தின் மிகுதிப்பாட்டால் அவர்கட்கு அந்தயோனிகளை நீக்கற்கு வலியில்லையோ, அதனனே அதிகாரியாகிய மநுடதேகத்தை இருக்கும்பரியந்தம் பெருமுயற்சியால் மிகத்தாழ்ந்த ஆசுரசம்பத்துக்களை நீக்குவான் சிக்கிரமே மோட்சவேட்கையுடையோன் இயன்றவளவில் தெய்வீகசம்பத்தைச் சம்பாதித்தல்வேண்டும். அங்ஙனமின்றேல் அவ்வசுரசம்பத்து வசத்தால் சர்ப்பமுதலிய நீசயோனிகளை யடைந்தபின்னர் மோட்சசாதனுட்டானத்திற்குத் தகுதியின்மையின் இவன் ஒரு போதுங் கரையேறான். இவ்வாறு அவன் போரான்தையைப்பெறுவன். இது பிறநூலிலுங் கூறப்பட்டுளது.

ஆ-சு. உபைவ தரகவ்யாயெஷ்விதாம் தகுரொதிய8 ।
மஷ்வா நிரளஷயம் ஷ்டாதம் வர்ஜ8 கிம்கரிஷ்யதி ॥

(பொ-ள்.) அசுரசம்பத்துவடிவ நிமித்தத்தாலாய நரகவடிவ வியாதியை நீக்கப்பட்ட தெய்வீக சம்பத்துவடிவ வைத்தியத்தை அதிகாரியாகிய இம்மநுடதேகத்தின்கண்ணே செய்யாத மோகபுருஷன் தெய்வீக சம்பத்துவடிவ ஔடதமின்றியஸ்தானத்தையடைந்து, அந்த நரகவடிவ வியாதியை நிவிருத்திக்கற்பொருட்டு என்னவுபாயஞ்செய்வான். ஆண்டு, யாதொரு வுபாயமுஞ்செய்யான் என்பதாம். (20)

(அ-கை.) வேற பகவன்! ஓம்ஹா ஔவொஷதிஸாகஹ' என்பது முதலிய வாக்கியங்களால் முன்னர்த் தங்களாலருளப்பட்ட அசுரசம்பத்துப் பலவகையாதனின் அவ்வசுர சம்பத்துக்களணைத்தையும் இவனுல் தனதாயுள் முடிவாங்காறு மூயன்றும் நிலைநித்திக்கமுடியாது என்னும் அர்ச்சுனன் சங்கைக்கு ஸ்ரீ பகவான் அவ்வசுரசம்பத்தைச் சுருக்கியருளிச்செய்கின்றார்.

சு-ம். த்ரவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசனமாத்மன: ।
காமஸ் க்ரோதஸ்ததா லோபஸ் தஸ்மாதேதத்த்ரயம் த்யஜேத் ॥ (21)

ப-ம். 4 த்ரிவிதம் 5 நரகஸ்ய 3 இதம் 6 த்வாரம் 2 நாசனம் 1 ஆத்மன: 7 காமஸ் 8 க்ரோதஸ் 9 ததா 10 லோபஸ் 11 தஸ்மாத் 12 ஏதத் 13 த்ரயம் 14 த்யஜேத்.

(அ-ம்.) வேற அர்ச்சுன! காமம் குரோதம் லோபம் என்பனவைகள் இவனுக்கு அதமயோனியைத்தரப்பட்ட மூவகையான நரகத்துவாரங்களாம்; ஆகவின் அவைகள் நீக்கத்தக்கனவாம். (21)

(வி-ம்) வேற அர்ச்சுன! நரகப்பிரவாகத்திற்கு இம்மூவகையானேக துவாரமெனப்படுதல் சாதனமாம். இதனையே கூறிப்போந்த அசுரசம்பத்துக்களணைத்திற்கு மூலஹேதுவும் ஆன்மாவை நாசம்பண்ணப்பட்டதுமாம்; அதாவது தரும மோட்சமுதலிய சர்வபுருடார்த்தத்திற்கும் அயோக்யத்தன்மையைச் சம்பாதிப்பதால் இவனுக்கு அத்தியந்தம் அதமயோனியைத்தருவதாம். ஆண்டு, அம்மூவகை நரகத்துவாரங்களினையை யென்றறியும் வேட்கையுண்டாக அர்ச்சுனனுக்கு ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார். 'காமஸ் க்ரோதஸ்ததா லோபஸ்' ஏற அர்ச்சுன! காமம் குரோதம் லோபம் என்பனவைகளே இவனுக்கு நரகத்தைத்தருவனவாம். அங்ஙனமே வியாக்ரமுதலிய மிகத்தாழ்ந்த யோனிகளையுந் தருவனவுமாம். இம்மூன்றையும் அடைந்தின்னமே இவன் சர்வ அசுர சம்பத்துக்களையுமடைகின்றனன். அருச்சுன! இம்மூன்றும் இவனுக்குச் சர்வானர்த்தங்கட்கு மூலகாரணமாதலின் அதிகாரி இலைகளைப் பரித்தியாகம்பண்ணவேண்டிய தொருதலையாம். இதனையே கூறிப்போந்த அசுரசம்பத்துக்களணைத்தும் பரித்தியாகம் பண்ணப்பட்டதாகின்றனை. சித்தத்திலுண்டாகிய காமக்குரோதலோபங்களின் அனர்த்தப் பிரவிருத்திவழிவ காரியத்திற்கு விவேகத்தாற்றடையாதலும் மீண்டுங் காமாதிகள் உண்டாகாமையுமே காமாதிகளின் பரித்தியாகமாம். ஆண்டுக்காம முதலியவைகளின் சொரூபம் இவ்வத்தியாயத்திலே முன்னர்க்கூறினும். (21)

(அ-கை.) வேற பகவன்! இலைகளைப் பரித்தியாகம் பண்ணினவனுக்கு யாது பலன் கிடைக்கும் என்றர்ச்சுனனுக்கறியும் வேட்கையுண்டாக ஸ்ரீ பகவான் அருளிச்செய்கின்றார்.

சு-ம். யஸ்ஸாஸ்த்ரவிதூக்ருத் கர்மயதஸ்ஸ்வைரசரேத் புமான் ।
ந ஸ ஸித்திமவாப்நோதி ந ஸுகம் ந பராம் கதிம் ॥ (22)

ப-ம். 3 யஸ்ஸாத் 5 விதூக்ருத் 1 கர்மய 2 தஸ்ஸ்வைரசரேத் 4 புமான் 6 ந 9 ஸித்திம் 7 ஸுகம் 8 பராம் 10 கதிம் 13 யாதி 11 பராம் 12 மதிம்.

(அ-ம்.) வேற கௌந்தேய! நரகத்துவாரபூத இக்காமக்குரோதலோபங்களைப் பரித்தியாகம்பண்ணிய இவன் தனது சிரேயசையே சித்தஞ்செய்கின்றன்; அதினின்றும் பரமகதியையடைகின்றன். (22)

(வி-ம்.) வேற அர்ச்சுன! நரகப்பிரவாகத்திற்குச் சாதனவடிவமும் அத்தியந்த அதம யோனியையடைதற்குச் சாதனவடிவமுமாகிய காமக்குரோத லோபங்க

ளின்றியவன் தனது சிரேயசையே சித்திசெய்கின்றான். அதாவது இவ்வதிகாரிக்கு வேதபகவதியால் இதவடிவமாய் விதிக்கப்பட்ட பகவத்பஜனைமுதலிய அர்த்தத்தையே அவன் அநுட்டிக்கின்றான். அர்ச்சுன! காம முதலியவைகளை விடுவதற்கு முன்னர் அவைகளாற்றடைப்பட்டவிவன் தனது சிரேயசைச்சித்தி செய்யான். எதனல் இவனுக்கு மோட்சவடிவப் புருடார்த்தம் பிராப்தியாமோ மாறுபாடாய் இவன தனது அசிரேயசையே தேடுகின்றான். எதனல் இவனுக்கு நரகவீழ்ச்சியே யாமோ அந்தக்காமமுதலியவடிவப் பிரதிபந்தமின்றியவன் தனது அசிரேயசைத் தேடாது சிரேயசையேதேடுதலின் இவ்வுலகசுகத்தை யநுபவித்து மனத்தூய்மை வாயிலாகவும் ஆன்மஞானப் பிராப்திவாயிலாகவும் மோட்சவடிவப் பரமகதியையே அடைகின்றான். ஆதலின் மோட்சவேட்கையுடைய அதிகாரியால் இக்காமாதிகள் அவசியமாய் விடத்தக்கனவாம் என்க. (22)

(அ-கை.) அசிரேயசை ஆசிரியாமைக்கும் சிரேயசை ஆசிரிப்பதற்கும் கேவலம் சாத்திரமே நிமித்தமாம்; என்னை? இவ்விரண்டும் கேவலம் சாத்திரப் பிரமாணத்தானே யுணரப்படுதலின் வேறோரளவையினுமின்றுமாதலின் அச்சாத்திரத்தைப் பரித்தியாகஞ்செய்து தனதிச்சாபூர்வகமாக நடக்கப்பட்டவன் யாதொரு புருடார்த்தத்தையுமடையான் என்பதை ஸ்ரீ பகவான் இப்போது அருளிச்செய்கின்றார்.

சு-ம். யஃஸாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்தத காமகாரதஃ।
ந ஸ ஸித்திமவாப்நோதி ந ஸுகம் ந பராம் கதிம்॥ (23)

ப-ம். 1 யஃ 2 ஸாஸ்த்ரவிதிம் 3 உத்ஸ்ருஜ்ய 5 வர்தத 4 காமகாரதஃ 8 ந 6 ஸ
7 ஸித்திம் 9 அவாப்நோதி 11 ந 10 ஸுகம் 14 ந 12 பராம் 13 கதிம்.

(அ-ம்.) வேறு அர்ச்சுன! எவன் சாத்திரவிதியை விடுத்து தனதிச்சை மாத்திரத்தால் நடக்கின்றானோ அவன் அந்தக்காரணத்தாய்மையையு மடையான்; இவ்வுலகவின்பத்தையும் பெறான்; சுவர்க்கமோட்சவடிவ மேலானகதியையு மடையான். (23)

(வி-ம்.) வேறு அர்ச்சுன! அதிகாரிகட்கு அபூர்வார்த்தத்தை யறிவுறுத்துவது சாத்திரமாம். அத்தன்மைய சாத்திரவடிவ இருக்கு முதலிய நான்கு வேதங்களுடம் அதைத்தழுவிய மிருதி புராணம் இதிகாசம் சூத்திரம் என்பது முதலியவைகளுடம் சாத்திரவடிவங்களேயாம். அவைகளின் விதி, அதாவது இவ்வதிகாரியா லிதுசெய்யற்பாலது இவ்வதிகாரியால் இது செயற்பாலதன்று என்னுங்கர்த்தவ்யாகர்த்தவ்யஞானத்திற்குக் காரணபூதப் பிரவர்த்தக நிவர்த்தக விதி, நிடேத, வாக்கியங்களாம். அவற்றில் 'அஹரஹஃ ஸந்ய்யா முபாஸீத' (பொருள்) மூவர்ணத்தார்களாலு நாடோறும் சந்தியாசெய்யத்தக்கது, என்பது முதலியன விதிவாக்கியங்கள் 'வராஹாரா மமிஷூக' (பொருள்) பிறர் மனையோடுபுணரற்க. என்பன நிடேத வாக்கியங்கள். அத்தன்மைய சாத்திரவிதியை அசிரத்தையால் விடுத்து தனது இச்சைமாத்திரத்தால் நடக்கின்றான். அதாவது சாத்திரம்விதித்த கருமத்தையுஞ் செய்திலன் சாத்திரம் நிடேதித்த கருமத்தைச் செய்கின்றான்; அந்தச்சாத்திரவிதியை விடுபவன் புருடார்த்தப்பிராப்திக்கு யோக்கியதைவடிவ அந்தக்காரணசுத்தியைக் கருமத்தைச்செயினுமடையான், இவ்வுலகவின்பத்தையுமடையான்; சுவர்க்கவடிவ அல்லது மோட்சவடிவ மேலானகதியையுமடையான். மற்றோர், சாத்திரத்தை உல்லங்கனஞ்செய்த அவன் சர்வ புருடார்த்தத்தினின்றும் நழுவுகின்றான் என்பதாம். ஈண்டு, 'யஃ ஸாஸ்த்ரவிதிம்' என்னும் வசனத்தில் ஸ்ரீ பகவான் விதி என்னுஞ் சப்தத்தைக் கூறியருளியது

விதிநிடேதவாக்கியங்களினும் வேறுகிய பிரத்தியகபின்னப் பிரமப்பிரதிபாதக தத்துவமசி அகம்பிரமாஸ்மி என்பன முதலிய வேதாந்தவாக்கியங்களும் சாத்திர ரூபமேயாம் என்னும் அர்த்தத்தைச் சூசிப்பித்தருளுதற் பொருட்டாம்என்க.(23)

(அ-கை.) சாத்தியபாகியத்தைப் தனதிச்சை பூர்வகம் பிரயோகிப்பவன் சர்வ புருடார்த்தங்களினின்றும் நழுவியவனென்றுணர்தலின் இவ்வதிகாரி சாத்திரவிதியிலேல கருமத்தைச்செய்யவேண்டும் என்னுமர்த்தத்தை அருளிச்செய்து ஸ்ரீ பகவான் இப்படினிலைவது அத்தியாயத்தை உபசம்மரித்தருளுகின்றார்.

சு-ம். தஸ்மாத்வமர்ஜுன தே காயாத்காயத்வயவஸ்ரிதள ।
ஜ்ஞாகவா பரார்தியாதேதாகும் கூடத்கூத்ஸ்ரிஹாஹத்ஸ்ரி ॥ (24)

ப-ம். 1 தஸ்மாத் 4 பரார்தம் 5 அர்ஜுன 2 தே 3 காயாத்காயத்வயவஸ்ரிதள
9 ஜ்ஞாகவா 7 பரார்தியாதேதாகும் 8 கூடத் 10 கூத்ஸ்ரி 6 ஹஹ 11 கூஹத்ஸ்ரி.

(அ-ம்.) தீரனே அர்ச்சுன! ஆதலின் உனக்கு காரியாகாரிய வியவஸ்தையில் சாத்திரமே பிரமாணமாம். ஆதலின் இக்கருமாதிகாரபூமியில் சாத்திரவிதானஞ் செய்த கூரியகருமத்தை யுணர்ந்து யுத்தமுதலிய கருமத்தைச் செய்தற்குரியோனாவாய். (24)

(வி-ம்.) தீரனே அர்ச்சுன! சாத்திரவிதியைத்தள்ளித் தனதிச்சாபூர்வகம் பிரயோகிப்பவன் இவ்வுலகபரலோக சர்வ புருடார்த்தங்கட்கும் அதீதனாகின்றான். மோட்சேச்சையுடைய உனக்குக் காரியாகாரிய வியவஸ்தையில் சாஸ்திரமே பிரமாணம்; ஆதலால் எனக்கு யாது செய்யத்தக்கது செய்யத்தகாதது என்னும் கர்த்தவ்யாகர்த்தவ்ய வியவஸ்தைவைச் சாஸ்திரவிதானமே அறிவுறுத்துவதாம். தனது புத்தி யுத்தியாதிகளின் வாக்கியம் அதிற் பிரமாணமன்று. ஆதலின் இக்கருமாதிகாரபூமியில் இவைனைத்து செயற்பாலது இது செய்யற்பாலதன்று என்னும் பிரவர்த்தக நிவர்த்தக வழிவை சாத்திரவிதியாற்கூறப்பட்ட விதிநிடேதகருமங்களே நன்குணர்ந்து சாத்திரம் விதிக்கும் கருமத்தைவிதித்து தனதந்தக்கரணம் தூயதாம்பரியந்தம் சாத்திரம் விதித்த உனது யுத்தமுதலிய கருமங்களையே நீ செய்யத்தக்கவன் என்பதாம். ஆண்டு, இப்படினிலைவது அத்தியாயத்தில் ஸ்ரீ பகவான் இப்பொருளைத் திருவாய்மலர்ந்தருளினார். முன்னர்க்கூறிய தம்பழமுதலிய சர்வ ஐசுவரசம்பத்துகட்குக் காரணவழிவமும் எல்லா அநிசேயசுகளைத்தருவதும் சர்வ சிரேயசிற்குப்பிரதிபந்தமுமாகிய காமம், குரோதம், லோபம், என்னும் பெருந்தோடங்களைப்பரித்தியாகித்து மோட்சவிவட்சையுடைய அதிகாரியானவன் மிகச்சிரத்தையோடும் சாத்திரவணபாயனையும் அச்சாத்திரமுபதேசிக்க அர்த்தாநுட்டானபாயனையும் ஆதல்வேண்டும் என்னுமர்த்தம் ஸ்ரீ பகவானால் தெய்வீக ஐசுவரமென்னு மிருவகைச்சம்பத்துகளையும் வெல்வேறாக அருளிச்செய்து நிண்ணயிக்கப்பட்டதுவென் பதாம். (24)

ஸ்ரீமத் பரமஹம்ச பரிவிராஜகாசாரிய ஸ்ரீ உத்தவாணந்தஜி சுவாமிகளின் பூஜ்யபாத சிஷ்யராகிய ஸ்ரீ சித்சுகணந்தஜி சுவாமிகளாலியற்றியருளிய பிரா கிருதபாஷையெனும் கீதா கூடார்த்ததீபிகையில்,

பதிணேருவது அத்தியாயம் முற்றிற்று.

சுபம்.

பதினேழாவது அத்தியாயம்.

ஓம் ஸ்ரீ கணேசாயநமஃ ஸ்ரீ காசிவிச்வேச்வராப்யாம்நமஃ ஸ்ரீ குருப்யோநமஃ
ஸ்ரீ சங்கராச்சார்யேப்யோநமஃ

(அ-கை) ஆண்டுக் கருமானுஷ்டானஞ் செய்பவர் முத்திறத்தினராவர், சிலரோ, நூல்விதியையுணர்ந்தும் சிரத்தையின்மையினாலே அவ்விதியைவிட்டுத் தமதிச்சைப்படி சிறிது கருமத்தையனுட்டிப்பர். அவர் சர்வ புருடார்த்த அயோக்கியராதலின் ஆசாரராவர். சிலரோ, நூல்விதியையுணர்ந்து அதிசிரத்தையுடையராய் அவ்விதி முறையே நிஷித்தகருமத்தை நீக்கி விதித கருமத்தையனுட்டிப்பர். அவர் சர்வ புருடார்த்த யோக்கியராதலின் தேவராவர். இப்பொருளை 16வது அத்தியாயத்தினீற்றில் நிர்ணயித்தேதம். இனி யாவர் நூல்விதியை ஆலசியாதி தோஷவயத்தால் விடுத்து தம் தந்தையாதி பெரியோரின் விவகாரத்தாலே சிரத்தையோடும் நிஷித்தகருமத்தைவிடுத்து விதிதமாயவற்றை யனுட்டிப்பரோ அவர்பால் ஆசாரதருமமும் தேவதா தருமமும் பொருந்தும்; அவற்றுள் நூல் விதியை விடுத்தல் ஆசாரதருமமாம்; சிரத்தையோடும் விதித்ததைச் செய்தல் தேவதாதருமமாம். அவ்விருதருமத்தோடுங் கூடிய அவர் ஆசாரிலடங்குவரா தேவதைகளிலடங்குவரா? இருதருமங்கள் காணப்படுகின்றமையாலும், ஒரு சோடியை நிச்சயம் செய்விக்கும்பொருட்டாகிசனத்தாலும், ஐயத்தையுற்ற அர்ச்சுனன் ஸ்ரீ பகவான்பால் வினவத் தொடங்கல்.

அர்ச்சுனன் கூறல்.

சு-ம். யெ சாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய யஜந்தெ ச்ரத்தயான்விதாஃ।
தெஷாம் நிஷ்டா து கா கிருஷ்ண ஸத்த்வமாஹொ ரஜஸ்தமஃ॥ (1)

ப-ம். 2 யெ 3 சாஸ்த்ரவிதிம் 4 உத்ஸ்ருஜ்ய 7 யஜந்தெ 5 ச்ரத்தயா 6 அன்விதாஃ 8 தெஷாம் 11 நிஷ்டா 9 து 10 கா 1 கிருஷ்ண 12 ஸத்த்வம் 13 ஆஹொ 14 ரஜஃ 15 தமஃ.

(அ-ம்.) ஹே கிருஷ்ண சுவாமியே! யாவர் நூல்விதியை விடுத்துச் சிரத்தையோடுங் கூடினவராகித் தேவபூசை முதலியவற்றைச் செய்வரோ அவர்க்கு மீண்டும் எவ்வகையாய நிஷ்டைகூடும்? சாத்விகமா, ராஜசமா அல்லது தாமதமா?
(1)

(வி-ம்.) ஹே கிருஷ்ண பகவன்! ஹே சத்திய ஞானக்ருபரே! தேவதா புருடர் சுருதியாதி சாஸ்திர அனுசாரியராவதேபோல யாவர் சாஸ்திர அனுசாரியல்லரோ; மற்றே, சுருதியாதிகளின் விதியை ஆலசியாதியான் விடுத்திடுவரோ; ஆசார் சிரத்தை யற்றவராயிருப்பதேபோல யாவர் சிரத்தை யற்றவராகாரோ; மற்றே, தந்தையாதிய பெரியோரது விவகாரத்தைப் பின்பற்றன் மாத்திரையானே சிரத்தையோடுறுவரோ; அத்தகையர் தேவபூசை செய்யின் அவர் நிஷ்டை யெத்தகையதாம்? அதாவது, சாஸ்திரவிதி யுபேக்ஷகரு விருத்த விவகார

மாத்திரசிரத்தை யென்னு மிரண்டான் யாவர் முன்னத்தியாயத்தின் மொழிந்த தேவ ஆசார்களிலும் விலக்ஷணரோ அவர்தம் சாஸ்திரவிதியவாவற்ற சிரத்தா பூர்வக தேவதூசைவழிவக் கிரியையின் விவஸ்தையெங்ஙனமாம்? சாத்விகமா இராஜ சமா தாமதமா என்பதாம். முதலதாயிலை சாத்விக இயல்பினராதலினவர் தேவ ரேயாவர். இராஜசதாமதமாயிலை கெடி இரு இயற்கையினராதலின், அவர் அசுர ரேயாவர். ஈண்டுச் சத்வம் என்னும் பதத்தாலே அர்ச்சுனன் யுத்தின் ஒரு கோடியைக் கூறினவனுயினன். இராஜஸ்தாமஸ் என்பதனுலே அவ்வையத்தின் மற் றொருகோடியைக் கூறினவனுயினன். இவ்விபாகத்தை யறிவிக்கும்பொருட்டு அவ் விரண்டனிடையில் 'ஆஹோ' என்பதைக் கூறினதலின் சாத்விகீ ராஜஸீ தாமஸீ யென மூக்கோடி ஈண்டுக் கவைத்தக்கதாகாதாம். (1)

(அ-கை.) ஆண்டு யாவர் சாஸ்திரவிதியைவிடுத்துச் சிரத்தையோடும் தேவ தூசை முதலியவற்றைச் செய்வரோ அவர் சிரத்தையின் பேதத்தாலே பேத முடையவரேயாவர். சாத்விக சிரத்தையோடு கூடியவரோ தேவரெனப்படுவர். அவர் சுருதி கூறிய சாதனத்தில் அதிகாரிகளாவர்; அதனுலண்டாம் பயனையு மடைவர். இராஜசதாமத சிரத்தையோடுகூடிய அசுரரோ சுருதிகூறிய சாதனத் திலதிகாரிகளல்லர்; அதனுலாம்பயனையுமடையார். இவ்வாறுபிரித்தருச்சுனனது ஐயத்தை நீக்க இச்சித்தருளிய ஸ்ரீ பகவான் சிரத்தையின் பேதத்தைத் திரு வாய் மலர்ந்தருளல்:—

ஸ்ரீ ஹரிவாக்ய வாசம்.

சு-ம். த்ரயியா ஹவிஷி ப்ரதூ தெஹிதாம் வொ வ்ருஜினாவஜா।
வொத்தீ ராஜஸீ தெவ தாஸஸீ தெஷி தாம் ப்ரணோ ॥ (2)
க
கி

ப-ம். 11 த்ரயியா 13 ஹவிஷி 4 ப்ரதூ 1 தெஹிதாம் 2 வொ 3 வ்ருஜினாவஜா 5 வொ
கீ 7 ராஜஸீ 6 அ 12 வாவ 9 தாஸஸீ 8 அ 10 ஈஷி 14 தாம் 15 ப்ரணோ.
வீ

(அ-ம்.) வேறு அர்ச்சுன! தேதாயிமானிகட்கு அவ்வியற்கையாலுளதாய சிரத்தை சாத்விகீ ராஜஸீ தாமஸியென மூவகைகையாம். அவற்றை நீ கேட்டி. (2)

(வி-ம்.) வேறு அர்ச்சுன! எச்சிரத்தையோடு கூடியவர் சாத்திரவிதியை விடுத்துத்தேவதூசை முதலியவற்றைச் செய்யாநிற்பரோ அவர்க்கு இயற்கையாய்ச் சிரத்தை மூவகையாம். எச்சமஸ்காரங்கள் இப்பிறப்பைப் பயந்தனவோ அத் தகைய மூற்பிறப்பிலியற்றினவாகிய தருமாதருமாதிகளின் சமஸ்காரம் இயற்கை யாம். அது சாத்விக இராஜசதாமதமென மூவகையாம். அம்மூவகையாலாய சிரத் தையும் கெடி மூவகையாம். காரியமியாவும் காரணசமானமாகவே காண்கின்றே மன்றி விலக்ஷணமாக இலாமையின் சாத்விகாதி மூச்சிரத்தைகளாலாக்கப்பட்ட சிரத்தைகள் முறையாக அம்மூப்பெயரையேயடையும். இயற்கை மூவகையாத லின், சிரத்தையும் மூவகையேயெனக் கொள்ளக்கிடந்தது. ஈண்டு, 'ராஜஸீ தெவ' இதன் கண்ணிருக்கும் 'அவாவ' என்னு மிரண்டு சப்தங்களுள் 'அ' என்பதனுலே ஸ்ரீ பகவான் இதனையுணர்த்தியருளினர்:—ஆரம்பித்த பிறப்பிற் கேவலம் சாஸ்திர சமஸ்காரமாத்திரஜன்னிய அறிவுனது சிரத்தை காரண வாக ரூபத்தாலே சாத்விகமேயாகுமன்றி மற்றிரண்டாக வாகாதாம். தேதற்றத் தாலே, சாத்திர அபேக்ஷையிலாத பிராணிமாத்திர சாதாரணமாய் மூன் மொழிந்த இயற்கையாலாம் சிரத்தையே இயற்கையின் மூவகையான் மூவகையா மென அருளினர். 'தாஸஸீ அ' என்பதுள்ளிருக்கும் அகாரம், மூவகையையும்

ஒருமிப்பித்தற்காம். முற்பிறப்பின்வாதனையையழிக்கும் சாஸ்திரஜன்னிய விவேக விஞ்ஞானம் அந்நூல்விதியைத் தாண்டியவர்க்கு உண்டாகாதாதலின் அவருக்கு முன்வாதனைவடிவ இயற்கையானே சிரத்தை மூவகையேயாம்; அம்மூன்றையும் கேட்டி. கேட்பதனானே அவர்பால் தேவபாவத்தையும் ஆசுரபாவத்தையும் நீயே நிச்சயிப்பாய். (2)

(அ-கை.) ஆண்டு முற்சுலோகத்தில் மனத்திருக்கும் முற்பிறப்பின் வாதனைவடிவ நிமித்தகாரணவிசித்திரத்தன்மையானே சிரத்தையின்விசித்திரத்தன்மை கூறியருளப்பட்டது. இப்போது ஸ்ரீ பகவான் அந்தச் சிரத்தையினுடைதான காரணரூப அந்தக்காணத்தின் விசித்திரத்தன்மையாலும் சிரத்தையின் விசித்திரத் தன்மையைக் கூறியருளுகின்றார்:—

சு-ம். ஸத்தாநுரூபாவா ஸ்வ-ஸ்ய ஸ்ரத்தா ஸ்வதி4தா4 ।
ஸ்ரத்3தா4மயோயம் பு4ருஷோ யோ யச்ச்2ரத்3த4꞉ ஸ ஏவ ஸ꞉ ॥ (3)

ப-ம். 3 ஸத்தாநுரூபாவா 2 ஸ்வ-ஸ்ய 4 ஸ்ரத்தா 5 ஸ்வதி4 1 தா4தா 8 ஸ்ரத்தா
ஸ்ய 6 ஸ்யம் 7 பு4ருஷ꞉ 9 ய꞉ 10 யச்ச்2ரத்3த4꞉ 11 ஸ꞉ 13 ஸ்வ 12 ஸ꞉.

(அ-ம்.) ஹே பாரத! எல்லாப் பிராணிகட்கும் தம்மம்தக்காரண அநுரூபமாகவே சிரத்தையாம். இவன் சிரத்தைமயனாதலின் யாவன் எச்சிரத்தை யுடையனோ அவனதற் கொப்பனேயாவன். (3)

(வி-ம்.) ஹே அர்ச்சுன! சத்துவகுணத்தைப் பிரதானமாகவுடைய மூக்குணவடிவ அபஞ்சீகிருத பஞ்ச மகா பூதங்களினின்று முண்டாய அந்தக்காணம் பிரகாச இயற்கையதாமாதலின் சத்வமெனப்படும். அது ஒவ்வொரு தேகத்திலோ வெளிப்பட்ட சத்வகுணமுடையதேயாகும்; தேவதைகளந்தக்காணம்போலும். ஒவ்வொன்றிலோ இரஜோ குணத்தாலழுத்தப்பட்ட சத்வகுணமுடையதாகும். இயக்கர் முதலியோரின் அந்தக்காணமேபோலும். ஒவ்வொன்றிலோ தமோ குணத்தாலழுத்தப்பட்ட சத்வகுண முடையதாகும்; பூதப்பிரேதாதிகளின் அந்தக்காணமேபோலும். மனுடருக்கோ அது பெரும்பான்மையும் கலந்தேயிருக்கும். சாஸ்திரஜன்னிய விவேகஞானத்தானே இரஜ தமோகுணமடிமுறவே உற்றுநோக்க சத்துவகுணி எனப்படுவன். எல்லாப் பிராணிகட்கும் அந்தம தந்தக்காரணத்தை யநுசரித்தே சிரத்தையாம்; அதாவது, அந்தக்காரண விசித்திரத்தானே சிரத்தை யும் விசித்திரமேயாம். சத்துவாதிகள் மூறையே மிருந்த அந்தக்காரணங்களில் சிரத்தையுமப்படியாயினவேயாம். அவர்க்கெவ்வகை நிஷ்டையாமென நீ முன்னர் வினவினையன்றே? அதற்கு விடையினைக்கேட்டி. சாஸ்திரஜன்னிய ஞானமற்றுக் கருமத்தின் அதிகாரியாய முக்குணவடிவ அந்தக்காண விசிஷ்டன் சிரத்தைமய னவன்; அதாவது சிரத்தையின் மிகுதிப்பாட்டை யுடையவனவனென்பதாம். அன்னத்தின் மிகுதிப்பாட்டான் அன்னமய யாகமென்பதேபோலும். சிரத்தை மயனதலினானே சிரத்தையுடையவனவன்; அதாவது யாவன் சாத்விகாதி சிரத்தைகளையுடையவனவனே அதனானுசாரமாகவே அவன் சாத்விகன் இராஜசன் தாமதன் எனப்படுவன். ஆகையால் சிரத்தையினானே அந்நிஷ்டை யறியப்பெறும். மகாபாரதகுலத்திற் பிறந்தவன் பாரதனவன். அல்லது சாஸ்திர ஜன்னியஞானம் பாவனைப்படும், அதில் பிரீதியுடையவன் பாரதனவன். அவ்வினியான் ஸ்ரீ பகவான் அர்ச்சுனன்பால் சுத்த சாத்விகத்தகைமையைக் குறிப்பித்தருளினார். (3)

(அ-கை.) ஹே பகவன்! இவனது சித்தையே இவனது நிஷ்டையை யுணர்த்தும் எனத்தாங்கள் முன்னாருளினீர்கள் ஆஃதுண்மையேயாயினும் அது தான் அறியப்படாததாய் அந்நிஷ்டையை யறிவியாதாம்; மற்றோரு, அறியப் பெற்றே அறிவிக்குமாதலின் சித்தையையே எவ்வுபாயத்தாலேனும் அறிதல் வேண்டும் என அர்ச்சுனனுக்கறியும் வேட்கைவரத் தேவதூஷ முதலிய காரியக்குறியாலே சித்தை யனுமானிக்கப்படும் என்பதாக ஸ்ரீ பகவான் அருளிச் செய்கின்றார்:—

சு-ம். யஜ²ந்தெ வொதிகா தெவாநு ஹூஸ ஹூஸாஂவி ஸாஜ²வொ 1
வை²தாநு ஹோ²தமணாஂப்பூ²தை²ய யஜ²ந்தெ தாஉவொ ஜ²தா 1 (4)

ப-ம். 3 யஜ²ந்தெ 4 வொதி²கா 2 தெவாநு 5 யஹூஸ ஹூஸாஂவி 6 ஸாஜ²வொ 7 வை²தாநு 9 ஹோ²தமணாநு 8 அ 11 சுதை²ய 10 யஜ²ந்தெ 12 தாஉவொ 1 ஜ²தா.

